# தமிழ் ஆவண மாநாடு

Tamil Documentation Conference 2013







# ஆய்வுக் கட்டுரைக் கோவை

NOOLAHAM FOUNDATION

நூலகம் நிறுவன வெளியீடு

# தமிழ் ஆவண மாநாடு
# 2013

## ஆய்வுக் கட்டுரைக் கோவை

NOOLAHAM
FOUNDATION

நூலகம் நிறுவன வெளியீடு

**Copyright © 2013 by Noolaham Foundation**

All text within this publication is available under the Creative Commons Attribution - NonCommercial - NoDerivs license.

For more Information, Visit http://creativecommons.org/licenses/by-nc-nd/3.0/

| | | |
|---|---|---|
| Title | : | Tamil Documentation Conference - 2013<br>Aaivu Kaddurai Kovai |
| First Edition | : | 2014 |
| Published by | : | Noolaham Foundation |
| Printed by | : | Unie Arts (Pvt) Ltd.,<br>48B, Bloemendhal Road, Colombo - 13.<br>Tel : 011 - 2330195 |
| No of pages | : | XVI + 644 |
| No of Copies | : | 300 |
| Size | : | 6.75 x 9.5 |
| Price | : | Rs. 2000.00 |
| ISBN | : | 978-955-4918-00-9 |

**COVER IMAGE CREDITS**

| | | |
|---|---|---|
| Karagattam | : | S. Siva Saravanan |
| Old books on shelves | : | Adam Woolfitt/Corbis |
| Manuscript | : | Vignesh Rana |
| Paddy Field | : | Sudipto Sarkar |
| Farmer | : | Prashanth Baradwaj |

*Cover & Inner Seperation Pages designed By : E. Arjunar*

# ஆலோசனைக் குழு

பேராசிரியர் வ. மகேஸ்வரன்

பேராசிரியர் சி. பத்மநாதன்

பேராசிரியர் சி. மௌனகுரு

பேராசிரியர் சபா. ஜெயராசா

பேராசிரியர் செ. யோகராசா

பேராசிரியர் சி. தில்லைநாதன்

பேராசிரியர் சோ. சந்திரசேகரம்

முனைவர் செல்வி திருச்சந்திரன்

# மலர்க்குழு

மயூரன் சிவநாதன்

பார்கவி காந்திநாதன்

விஷாலினி ஜயராஜன்

ஜனனி அருந்தவரட்ணம்

# மலர்முகம்

இலங்கையின் தமிழ்பேசும் சமூகங்களின் மரபறிவுச்செல்வங்களை ஆவணப்படுத்தல் பேணிப்பாதுகாத்தல் மூலமாக, தற்போதைய, எதிர்கால தலைமுறையினருக்கான அறிவுப் பகிர்வுப் பணியை செவ்வனே செய்து வருகின்ற நூலக நிறுவனம், 2013ம் ஆண்டில் 'தமிழ் ஆவண மாநாடு 2013' ஐ நடாத்தியது. 'ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இம்மாநாடு, ஆவணப்படுத்தல் சார்ந்து இலங்கையில் நடந்த முதல் மாநாடு என்பது குறிப்பிடத்தக்கது.

ஆன்றறிந்த சான்றோர் வழிகாட்ட தமிழ் ஊக்கமுடை நூலகம் நிறுவனத் தன்னார்வலர்கள் உழைப்போடு இரு நாட்கள் - எட்டு அரங்குகள் - நாற்பத்து எட்டு ஆய்வுக்கட்டுரைகள் என இம்மாநாடு நடைபெற்றது

ஒருபுறம் இம்மாநாட்டை கொண்டாட்டம் என தமிழருட் சிலர் எதிர்க்க மறுபுறம் இது இக்காலத்திற்கு அத்தியாவசியமானதொரு தொனிப்பொருள் என பலரும் ஆதரவளிக்க அழகே நடந்து விமர்சகர் தம் கருத்துக் களம் உடன் இனிதே நிறைவடைந்தது. அதன் பிற்பாடு அவ் ஆய்வுக்கட்டுரைகளை தொகுத்து கோவையாக வெளியிடும் பணி ஆரம்பமாயிற்று. தத்தம் தலைமையில் இடம்பெற்ற அரங்குகளில் இடம்பெற்ற கட்டுரைகள் குறித்து பேராசிரியர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் கட்டுரைகள் இக்கோவையில் இடம்பெற்றுள்ளன. இப்பணியில் எம்மை நெறிப்படுத்திய திரு.க.ரகுபரன் அவர்கட்கு எம் நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.

இந்நூல், 'ஆவணப்படுத்தல்' திறக்கப்படாத பல கதவுகளை திறப்பதெப்படி எனக் கூறுகிறது. எழுத்தாவணங்களை பற்றி மாத்திரம் கூறாது புதிய பல வடிவங்களில் ஆவணப்படுத்தும் ஆலோசனைகள் மற்றும் அவர்தம் முன்னெடுப்புக்கள் குறித்தும் ஆய்வாளர்கள் அறிவைப் பகிர்ந்திருந்திருப்பதால் இந்நூலின் சுவையும் செறிவும் கூடியுள்ளது. இதன்மூலம் பயன்பெறும், அம்முயற்சிகளை முன்னெடுக்கும் அனைவருக்கும் எம் வாழ்த்துகள்

எமது இம்முயற்சிக்கு அகரமாயிருந்த அனைவரையும் நினைவு கூறுகிறோம்.

**மலர்க்குழு**

# இயக்குநரின் எண்ணத்திலிருந்து.......



தசாப்தம் ஒன்றை நோக்கிய பயணத்தில் நூலகம் நிறுவனம் கடந்துவந்த மைல்கற்கள் பல. அவற்றுள் 'தமிழ் ஆவண மாநாடு-2013' அனைத்திற்கும் சிகரம் வைத்தாற்போன்று அமைந்தது. 2013ம் ஆண்டில் தனது எட்டாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு 'தமிழ் ஆவண மாநாடு 2013' ஐ நடாத்தியது. 'ஈழத்துத் தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப் பாதுகாத்தலும்' எனும் தொனிப்பொருளில் நடைபெற்ற இம் மாநாடு கடந்த 2013 ஏப்ரல் மாதம் 27, 28 ஆம் திகதிகளில் கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கையில் ஆவணப்படுத்தல் தொடர்பாக நடைபெற்ற முதல் மாநாடு என்ற வகையில் இது தனித்துவம் பெறுகிறது. இம்மாநாடானது தமிழ்நாட்டிலிருந்தும், உலகின் ஏனைய பாகங்களிலிருந்தும் வந்திருந்த ஆய்வாளர்களினதும் இலங்கை ஆய்வாளர்களினதும் பூரண சங்கமமாக காணப்பட்டமை இதன் சிறப்பம்சமாகும்.

இம்மாநாட்டின் மகத்தான வெற்றி, மாநாட்டு மலரை மிகச்சிறந்த முறையில் ஆக்கவேண்டுமென்ற அவாவை எம்முள் விதைத்தது. ஆனால் அது அத்துணை சுலபமாக அமையவில்லை. இலங்கையிலிருந்து வெளிவரும் முதலாவது 'ஆவண மாநாட்டு மலர்' என்ற வகையில் இந்நூல், அபரிதமான முன்னாயத்தங்களையும், ஆய்வுக்கட்டுரையாளர்களுடனான இடையறாத தொடர்பையும், இரவு பகல் பாரா கடின உழைப்பையும் தன் வளர்ச்சிக்கு சன்மானமாக கோரிநின்றது. அந்த வகையில் அரங்கத்தலைமை வகித்தும், மலருருவாக்கத்தை நெறிப்படுத்தியும், ஆக்கமிகு ஆலோசனைகள் வழங்கியும் உதவிய ஆன்றோர்களிற்கும், இன்று இந்நூலை சாத்தியமாக்கிய மலர்க்குழுவினர்க்கும் நூலக நிறுவனம் சார்பான நன்றிகள் பல.

மலரின் தரத்தை மாத்திரமே மனதிலிருத்தி, மலர் உருவாகிவந்தவேளை மலரின் விலை, மலைபோல் குறுக்கே தடைபோட்டது. அம்மலைப்பை அமரர் ஆறுமுகம் தில்லைநாதன் (1955-2011) அவர்களின் நினைவாக திருமதி யோகேஸ்வரி தில்லைநாதன் அவர்கள் வழங்கிய நிதிக்கொடை பாரியளவில் தணித்தது. காலத்தால் செய்த இவ்வுதவியை மனதார நினைவு கூறுகின்றோம்.

வெறுமனே ஆவணப்படுத்தல் அறிவுப்பகிர்தல் என்பவற்றையும் தாண்டி எம் சமூகம் சார்ந்த ஆய்வு நிறுவனமாக நூலகம் நிறுவனமின்று பரிணாமம் அடைந்துள்ள இவ்வேளையில், ஒன்பதாமாண்டு நிறைவு விழாவுடன் கூடியதாக இவ் 'ஆவண மாநாட்டு ஆய்வுக்கட்டுரைக்கோவை' எம்கைகளில் தவழ்வதையெண்ணும்போது மனமெல்லாம் நிறைகின்றது.

அன்புடன்

**சி.சேரன்**

இயக்குனர், நூலகம் நிறுவனம்

# உள்ளடக்கம்

## *அரங்கு - ஆவணப்படுத்தலும் தொழினுட்பமும்*


1. தமிழ்ச் சூழலில் ஓவியங்களை ஆவணப்படுத்தலும் பேணிக்காத்தலும்

   - முனைவர் ந. வேலுசாமி *(பெரியார் பல்கலைக்கழகம், சேலம்)* ........ 01

2. *Significance of digitization in protecting endangered documents*

   - முனைவர். ந.கணேசன் *(பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி)* ........ 11

3. சமுக வரலாற்று ஆவணங்களை எண்ணிமமாக்கலில் புகைப்படக்கலையின் பங்களிப்பு

   - பெ . சந்திரன் *(பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி)* ........ 23

4. பண்டைய கால ஓலை மற்றும் காகித ஆவணங்கள் – பாதுகாத்தலும் பராமரித்தலும்

   - வீ .முத்துக்குமார் *(பிரெஞ்சு ஆய்வு நிறுவனம், புதுச்சேரி)* ........ 31

5. ஈழத்துச் சித்தமருத்துவ ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாத்தலும், ஆவணப்படுத்தலும்

   - சே.சிவசண்முகராஜா *(விரிவுரையாளர், சித்தமருத்துவப் பிரிவு, யாழ். பல்கலைக்கழகம்)* ........ 38


## *அரங்கு - வரலாறு, தொல்லியல், மரபுரிமை*


6. இலங்கைத் தமிழர் மரபுவழிக் கட்டிடச் சூழல்களும் அவற்றை ஆவணப்படுத்தலும்

   - இ.மயூரநாதன் *(கட்டிடக்கலைஞர், ஐக்கிய அரபு அமீரகம்)* ........ 49

7. யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள்காலப் பண்பாட்டுச் செல்வாக்குகள் – ஒரு வரலாற்றுப் பார்வை

   - கலாநிதி. க. அருந்தவராஜா *(விரிவுரையாளர்,வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)* ........ 61

8. மட்டக்களப்புத் தேசத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டுக்களும் கல்வெட்டாய்வின் இன்றைய போக்கும்

   - செல்வி. கௌரி புண்ணியமூர்த்தி *(தற்காலிக கட்டுரையாசிரியர்,வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)* ........ 74

9. வெல்லாவெளிக் கிராமத்தின் வரலாறும் தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும்

   - பொன்னுத்துரை நிலாந்தினி *(தற்காலிக கட்டுரையாசிரியர், வரலாற்றுத்துறை,கிழக்குப் பல்கலைக்கழகம்)* ........ 93

10. பழுகாமத்து சாசனங்களும் வரலாறும்

    - எஸ்.கே.சிவகணேசன் *(விரிவுரையாளர், வரலாற்றுத்துறை ,யாழ். பல்கலைக்கழகம்)* ........ 113


## *அரங்கு - நாட்டாரியல்*


11. கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்தல் – நடந்ததும் நடக்க வேண்டியதும்

    - கோ. குகன் *(கிழக்குப் பல்கலைக்கழகம்)* ........ 125

12. மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளை நெறிப்படுத்தும் பத்ததிகளை ஆவணப்படுத்தல்

    - திரு. வ. குணபாலசிங்கம் *(வருகைதருவிரிவுரையாளர் , கிழக்குப்பல்கலைக்கழகம்)* ........ 137

13. ஈழத்து எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப் பாடல்களை ஆவணப்படுத்துதல்

    - சின்னத்தம்பி சந்திரசேகரம் *(விரிவுரையாளர் , மொழித்துறை ,கிழக்குப் பல்கலைக்கழகம்)* ........ 148

14. மட்டக்களப்புப் பகுதியில் தமிழ், முஸ்லிம் பெண்களிடையே நிலவும் நாட்டார் கதைகள்

    - செல்வி. ம. சுகன்யா ........ 158

## அரங்கு - கலை

**15. சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2011 வரைக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்வுகளை ஆவணப்படுத்தல்**

- செல்வி. ரேவதி கணேஸ் .......... 169

**16. மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்பட்ட வீதி நாடகங்கள்**

- திரு. கிருபைராஜா திருச்செந்தூரன் .......... 192

**17. இராவணேசன் நாடகத்தின் ஒப்பனை, உடையமைப்பு (60கள் தொடக்கம் 2012 வரை)**

- செல்வி. லாவண்யா மகாதேவா .......... 216

**18. கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை நடாத்திய கலை நிகழ்வுகளை ஆவணப்படுத்தல் (1993 - 2005)**

- திருமதி. அபிராமி தர்மேந்திரா.......... 228

**19. மட்டக்களப்பில் உருவான குறும்படங்களும் அவற்றினுடைய போக்குகளும்**

- திரு. நடேசன் நந்தகுமார் .......... 242

**20. கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை சார்ந்த சிறப்புப் பட்டநெறி இறுதியாண்டு மாணவர்கள் சமர்ப்பித்த 1996-2008 ஆய்வுக் கட்டுரைகளையும்** (Dissertation) **பின் பட்டப் படிப்பு நெறி பயின்ற மாணவர்கள் சமர்ப்பித்த பேராய்வு கட்டுரைகளையும்** (Thesis) **அவற்றின் விபரங்களையும் ஆவணப்படுத்தல்**

- பேராசிரியர் சி. மௌனகுரு *(கிழக்குப்பல்கலைக்கழகம்)* .......... 255

## அரங்கு - சமூகம்

**21. ஆரையம்பதி தமிழ்ச் சமூகம்**

- திரு. க. சபாரெத்தினம் .......... 271

**22. தமிழ் வைத்தியத்தை யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதில் பங்காற்றியவர்கள் - ஆவண ஆய்வு**

- ஆவண ஆய்வு - ஸ்ரீ. அன்புச்செல்வி *(விரிவுரையாளர்)*, க. ஸ்ரீதரன் *(மருத்துவர்)*.......... 277

**23. கவிஞர் சுபத்திரன் அவர்களின் கவிதை செயற்பாட்டையும் வாழ்க்கையினையும் ஆவணப்படுத்தல்**

- திரு. நரேந்திரன் நிருசாந்த் .......... 285

**24. 19ஆம் நூற்றாண்டின் இந்திய வம்சாவளித் தமிழரின் இலங்கை நோக்கிய அசைவியக்கமும், உந்தல், இழுவை காரணிகளின் செயற்பாடும்**

- திரு. ரா. நித்தியானந்தன்.......... 297

**25. மட்டக்களப்பு சமூக அமைப்பில் தமிழ் பேசும் வேடர்களின் வழிபாட்டு மரபை ஆவணப்படுத்தல்**

- திரு. கு. ரவிச்சந்திரன் *(விரிவுரையாளர்,நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக் கழகம்)*.......... 314

**26. பெண்களின் பங்களிப்பை ஆவணப்படுத்தலை எதிர்நோக்கும் சவால்கள்: இலங்கையின் முதற் பெண் சஞ்சிகையாளர் மங்களம்மாள் மாசிலாமணியை முன்வைத்து**

- சித்திரலேகா மௌனகுரு *(ஓய்வு பெற்ற பேராசிரியர், நுண்கலைத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்)*.......... 341

**27. ஆவணப்படுத்தலும் திருகோணமலையும்**

- திருமலை நவம் *(மூத்த ஊடகவியலாளர்)* .......... 350

## அரங்கு - தமிழ் மொழியும் இலக்கியமும்


**28. தமிழில் பதிவாகும் சுவர்க் கவிதைகளும் அவற்றின் ஆவணப்படுத்தலும்**

- திரு. சஞ்சீவி சிவகுமார் *(முதுநிலை உதவிப் பதிவாளர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)* .............. 361

**29. ஆவணப்படுத்தப்பட வேண்டிய - ஆவணப்படுத்தத் தவறிய - ஈழத்து ஆரம்பகால இலக்கிய முயற்சிகள்**

- பேராசிரியர். செ. யோகராசா .............................................................................................. 378

**30. ஈழத்தில் தோன்றிய சதக இலக்கியங்கள் - ஓர் ஆய்வு**

- திருமதி. ஜனகா சிவசுப்ரமணியம் .................................................................................... 394

**31. பொலநறுவை மாவட்டத் தமிழ் மக்களின் சிறுவர் விளையாட்டுப் பாடல்களும் ஆவணப்படுத்தலும்**

- திரு. எஸ். வை. ஸ்ரீதர் *(விரிவுரையாளர், மொழித்துறை , சபரகமுவ பல்கலைக்கழகம்)* ................ 409

**32. தமிழில் நூலடைவுகள் : அறிதலும் ஆவணப்படுத்தலும்**

- திரு. இரா. தமிழ்செல்வன் *(ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்)*.............................................. 428

**33. இலங்கையில் சட்டங்களைத் தமிழ்மொழிமூலம் ஆவணப்படுத்தல்: மொழிக் கொள்கையினை முன்னிறுத்திய பார்வை**

- திரு. நவரத்தினம் சிவகுமார் *(முன்னாள் உதவி விரிவுரையாளர், அரசறிவியல்துறை, பேராதனை பல்கலைக்கழகம் )* .... 438

**34. தமிழில் அச்சேறிய முதல் நூல்களும் அவற்றைக் கண்டுபிடித்த தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியும்**

- அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் .................................................................................... 448

**35. ஈழத்து இலக்கண வரலாறு**

- கலாநிதி. செல்வரஞ்சிதம் சிவசுப்ரமணியம் *(முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, யாழ்பல்கலைக்கழகம்)* .... 462

**36. "கிழக்கிலங்கை கிறிஸ்தவ இதழ்கள்: - தொண்டன், வெட்டாப்பு என்பன குறித்த சிறப்பு ஆய்வு"**

- திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ் *(முதுநிலை விரிவுரையாளர், மொழித்துறை, கிழக்கு பல்கலைக்கழகம்)*......471


## அரங்கு - நூலகவியல்


**37. இலங்கையின் உயர்கல்வித்துறையை சர்வதேசத்தரத்திற்கு உயர்த்துவதில் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பின் வகிபங்கு: ஒரு புதிய எண்ணக்கருவை நோக்கிய ஆய்வு**

- திரு. து. பிரதீபன் ............................................................................................................ 501

**38. யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் ஓர் வரலாற்று ஆய்வு**

- திரு. கனேசலிங்கம் ஜெயதீஸ்வரன் *(வருகைதரு விரிவுரையாளர், வரலாற்றுத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)* ... 512

**39. நூல்தேட்டம் : ஓர் மதிப்பீட்டு ஆய்வு**

- அனிதா கிருஸ்னசாமி *(நூலகர், கோண்டாவில் பொது நூலகம்)*
- கல்பனா சந்திரசேகர் *(சிரேஷ்ட உதவி நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)*.......................................... 523

**40. வடமொழி நூல்களில் கிரந்த வரிவடிவத்திலுள்ள நூல்களை ஆவணப்படுத்துதல் - யாழ் பல்கலைக்கழக நூலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு**

- லதா உமாசங்கர் *(சிரேஷ்ட உதவி நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)* ............................................ 529

**41. இலங்கையின் பொதுநூலக முறைமை**

- கலாநிதி மைதிலி விசாகரூபன் *(உதவி நூலகர், யாழ். பல்கலைக்கழகம்)* ...................................... 537

### அரங்கு - பண்பாடு


**42. கலைப்பண்பாட்டு நினைவுகளும் ஆவணப்படுத்தலும்**

- திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் *(முன்னாள் கலாசாரப் பணிப்பாளர் , திருகோணமலை)* .................. 547

**43. யாழ்ப்பாணப்பிரதேசத்தில் பன்னத்தொழிலாளரின் மொழியும் பண்பாடும்**

- சுவர்ணியா சோமசுந்தரம் ........................................................................ 559

**44. மருமக்க(ள்) தாயமும் தாய்வழி முதுசொமும்**

- கவிக்கோ வெல்லவூர்க் கோபால் (சீ. கோபாலசிங்கம்) ........................................ 573

**45. கிறிஸ்தவத்தின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய பன்முகத் தாக்கம்**

- செல்வி. மேரி வினிஃபிரீடா சந்திரசேகர் ........................................................ 587

**46. ஆவணப்படுத்தலின் அத்தியாவசியத்தை அவாவிநிற்கும் உடப்புக் கிராமத்தின் தனித்துவம் மிக்க சித்திரைச் செவ்வாய்ச் சடங்கு நிகழ்ச்சியும் அதன்போது பாடப்படும் பாடல்களும்**

- திருமதி. தேவகுமாரி சுந்தர்ராஜன் *(விரிவுரையாளர், மொழிகள்துறை, சபரகமுவ பல்கலைக்கழகம்)* ...... 602

**47. ஈழத்தில் திரௌபதை வழிபாட்டின் பரவல் சமூக, பண்பாட்டியல் ஆய்வு**

- திரு. பா. சுமன் ........................................................................ 613

**48. யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய உணவு முறைகளும் ஆரோக்கிய வாழ்வும் - மருத்துவ ரீதியான ஆய்வு**

- திருமதி. ச. விவியன் சத்தியசீலன் *(மருத்துவர்)* ........................................ 625


ஆவணப்படுத்தலும்
தொழினுட்பமும்

# தமிழ்ச் சூழலில் ஓவியங்களை ஆவணப்படுத்தலும் பேணிக்காத்தலும்

ந. வேலுசாமி

அறிவியல் யுகத்தில் (Age of Science) நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தமிழர்களின் மரபுக் கலைகளான சிற்பம், கட்டடம், இசை, ஓவியம், ஆகியவற்றைப் பாதுகாத்து வருவதென்பது கடினமான பணியாகும். ஆயினும் அவை அழிந்துகொண்டிருப்பதைப் பார்த்துக்கொண்டு அப்படியே இருந்துவிட முடியாது. இயன்றவரை அவற்றைக் காப்பாற்றி நம் பின்னோர்களுக்கு வைத்துச் செல்ல வேண்டிய தார்மீகக் கடப்பாட்டில் நாம் இருக்கிறோம்.

அழகுக் கலைகள், நுண்கலைகளுள் காண்போரின் கண்ணையும் கருத்தையும் கவர்வது ஓவியக் கலை ஆகும். இன்றைய தமிழ்ச் சூழலில் ஓவியக்கலையை ஆவணப்படுத்துவது எவ்வாறு? பேணிப்பாதுகாப்பது எப்படி? என்பதைப் பற்றிச் சிந்தித்து ஆராய்வதே இங்கு இயல்வது.

**ஆவணம்** (Documentation) என்பது:

பல செய்திகளைப் பதிய வைத்துள்ள, எழுதி வைத்துள்ள பழங்கால ஏடுகள் ஆவணங்கள் எனப்படும். இது எந்த வடிவத்திலும் இருக்கலாம்.

ஆவணம் என்ற சொல் கி.பி. 12 ஆம் நூற்றாண்டிலேயே குலோத்துங்க சோழன் காலத்திலிருந்து தமிழ் நாட்டில் வழங்கி வருகிறது. சேக்கிழார் இயற்றிய பெரிய புராணத்தில் ஆவணம் என்ற சொல் அவரால் பயன்படுத்தப்பட்டுள்ளது.

> "ஆவணம் பறிக்கச் சென்ற
> அளவினில் அந்தணாளன்
> காவணத் திடையே ஓடக்
> கடிது பிந்தொடர்ந்து நம்பி"

என்ற அடிகளே சான்று. ஆவணக் காப்பகத்திற்கு ஆவணக்களரி என்ற பெயரும் உண்டு.

## அறிவியல்வழி ஆவணப்படுத்துதல்

ஆவணப்படுத்துதல் என்பதற்குப் பல பொருள்கள் உண்டு. 'பால் அட்லெட்' (1868-1944) ஹென்றி 'லாஃபான் டெய்ன்' (1854-1945) ஆகியோர் இதைக் களப்பணி என்றும் தொழில் என்றும் வழங்கினார். இது அறிவியல் வழி ஆவணப்படுத்துதல் (Documentation Science) என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு அழைப்பது இன்று பொருத்தமானதாகவும் உள்ளது. 1968 இல் ஆவணப்படுத்தல் தகவல் அறிவியல் (Information Science) என்ற பெயர் மாற்றத்தையும் பெற்றுள்ளது.

ஆவணப்படுத்தலில் நிபுணத்துவ ஆவணப்படுத்தல் (Specializing Documents) என்பது குறிப்பிடத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக கல்வெட்டாய்வில் தனி அறிவு பெற்றவர் அவற்றை ஆவணப்படுத்தமுடியும். ஓலைச்சுவடி ஆராய்ச்சியில் தேர்ந்தவரே ஓலைச்சுவடிகளை ஆவணப்படுத்த இயலும். இவைபோல் ஓவிய வல்லுநரே ஓவியங்களைப் பேணவும் ஆவணப்படுத்தவும் இயலும். நிபுணத்துவ ஆவணப்படுத்தலில் பழுதுபார்த்தல் (Repair) என்பதும் ஒரு கூறு காட்டாக, ஓர் எண்ணெய் ஓவியம் கிழிந்தோ, மயங்கியோ காணப்பட்டால் அதைப் பழுது பார்த்த பின்பே பேணிக்காக்கவும் ஆவணப்படுத்தவும் முடியும்.

## பொதுவாக ஆவணங்களைப் பாதுகாக்கும் முறை:

பழைய ஆவணங்களிலிருந்து அழுக்கையும், அமிலத்தன்மையையும் போக்கி வெண்மையாக்கும் முறைக்கு டிஆசிடி பிகேஷன் (De-acidification of Records) என்று பெயர். இதில் ஈர முறையும் (Wet De- acidification) வறட்சி முறையும் (Dry- De- acidification) உண்டு. இவற்றாலும் பாதுகாக்கப்படும்.

பிறகு, மைக்ரோ பிலிம் என்ற புகைப்படக்கருவி மூலமும் ஆவணங்களைப் புகைப்படம் எடுத்துப் பாதுகாக்கமுடியும். கறையான், காளான், வெண்ணிறப் பூச்சி, தூசு ஆகியனவும் ஆவணத்தின் பகைவர்கள். மேனாடுகளில் குளிர்சாதன முறைகளாலும் ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலத்தில் தமிழ் நாட்டில் இத்துறையில் பலர் முத்திரை பதித்துள்ளனர் என்றாலும் இருவரைச் சிறந்த காப்பாட்சியராக (Curators) நாம் போற்ற முடியும். ஒருவர் ‘ஹென்றி டாட் வெல்’ என்ற ஆங்கிலேயர். அடுத்தவர் டாக்டர் பி.எஸ். பாலிகா என்ற இந்தியர்.

## ஓவியங்களும் ஓவியக் கலைக்கூடங்களும்

நுண்கலைகளில் ஈர்ப்பாற்றல் அதிகம் உள்ள கலை ஓவியக்கலை. உலக அளவிலும் இந்திய அளவிலும் தமிழ் நாட்டளவிலும் ஓவியக் கலையின் நிலை இதுவே எனலாம்.

சுவர்களிலும் விதானங்களிலும் பாறைகளிலும் ஓவியங்கள் காணக்கிடந்தன. சுவரில் ஓவியம் வரையும் பழக்கம் எப்போது முதன்முதலில் தோன்றியது எனக் கூற இயலவில்லை. ஸ்பெயின் நாட்டில் ‘ஆல்டா மீரா’ (Altamira) எனும் இடத்தில் உள்ள குகைகளில் காணப்படும் ஓவியங்கள் அக்கலை சிறந்த நிலை அடைந்த காலத்தின் வரையப்பட்டதாக விளங்குகிறது.

இவ்வோவியங்கள் பழுப்பு, சிவப்பு, கறுப்பு நிற மண் காவிகளைக் கொண்டே வரையப்பட்டவை. இவற்றைப் பொடித்து விலங்குகளின் வச்சிரப் பசைகளுடன் கலந்து வரைந்தார்கள். முதலில் பாறைகளை வெட்டிக்கொண்டு பிறகு வண்ணம் தீட்டியிருக்கிறார்கள்.

இந்தியாவிலும் ஏனைய நாடுகளைப் போலவே முதன்முதலில் வரையப்பட்டவை சுவர் ஓவியங்களே. அதனால்தான் சுவரை வைத்தே சித்திரம் எழுதவேண்டும் என்ற பழமொழி தோன்றிற்று.

தமிழ் நாட்டில் சுவர் ஓவியம் எழுதப்பட்ட மாளிகைகள், சித்திரமாடங்கள் என்று பெயர்பெற்றன. மூவேந்தர்களிடமும் சித்திரமாடங்கள் இருந்தன. இலக்கியங்களிலும் புறநானூறு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றில் சுவரோவியக் குறிப்புகள் உண்டு.

"வெள்ளியன்ன விளங்குஞ் சுதையுரீ,
மணிகண்டன்ன மாத்திர ட்டிண்காழ்
உருவப் பல்லூவொரு கொடி வளை இக்
கருவொடு பெயரிய காண்பின் நல்லில்"

என்பது நக்கீரரின் நெடுநல்வாடை தரும் சித்திர கூட வருணனையாகும்.

தென்னாட்டு ஓவியம் என்பது விந்திய மலையிலிருந்து தெற்கே இலங்கைத் தீவு வரையில் உள்ள ஓவியங்களாகும். இவற்றிற்குத் 'தட்சிண சித்திரம்' என்ற பெயரும் உண்டு.

## தமிழ்நாட்டு ஓவியங்கள்

தமிழகத்தில் உள்ள பழைய பெரிய கோயில்களையெல்லாம் ஓவியக் கலைக்கூடங்கள் எனப் பொதுவாகக் கூறலாம். அவற்றின் மீது தனி அக்கறை செலுத்த மன்னர்களும் தவறவில்லை.

திருப்பரங்குன்றத்தில் (மதுரையை அடுத்துள்ளது) சுவரோவியம் உண்டு. ஓவியச் சாலை என்று இதற்குப் பெயர் 'எழுத்தெழில் அம்பலம்' என்றும் 'எழுதெழில் மண்டபம்' என்றும் இவற்றைப் பற்றிப் பரிபாடல் பகர்கின்றது, இங்குள்ள ஓவியத்தில் அகலிகை சாபம் பெற்றுக் கல்லான கதை ஓவியமாக வரையப்பெற்றுள்ளது.

திருச்சி திருவெறும்பூர்க் கோயிலில் சித்திரக்கூடம் என்ற மண்டபம் உண்டு. இதைத் தென்னிந்திய சாசனத் தொகுதி - மூன்று குறிப்பிடுகிறது.

ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் ஆண்ட மகேந்திரவர்மன் குகைக்கோயில்களை அமைத்தான். அதில் சில சுவரோவியங்களை எழுதுவித்தான். பிறகு இரண்டாம் நரசிம்மவர்மன் காலத்தில் கற்றளிகள் எழுத்தன. இதிலும் சுவரோவியங்கள் வரையப்பெற்றிருந்தன.

சிற்றன்ன வாசல் குகைக்கோயில் ஓவியங்கள் ஏழாம் நூற்றாண்டில் சமணர்களால் வரையப்பெற்றன. தமிழ்நாட்டின் சுவரோவியங்களில் இவையே பழமையானவை. நடன மங்கையர் ஓவியம் உள்ளத்தை அள்ளுவனவாக உள்ளன. ஆனால் அவை இடுப்புக்கு மேல் பகுதியை மட்டும் கொண்டுள்ளன. மற்ற பகுதி அழிந்துவிட்டது.

திருமலைப்புரத்தில் உள்ள சைவக்குகைக் கோயில்கள் மலையடிபட்டியில் உள்ள வைணவக் கோயில்கள் ஆகியன சுவரோவியங்களைக் கொண்டிருந்தன.

காஞ்சிபுரம் கைலாச நாதர் கோயில் முதல் கற்றளிக் கோயிலாகும். இங்கும் ஏராளமான சுவரோவியங்கள் எழுதப்பட்டிருந்தன. தென்னார்காடு மாவட்டத்தில் உள்ள பனை மலைக்கோயில் சுவரோவியங்கள் ஈர்க்கும் வண்ணம் இருந்தன.

தஞ்சைப் பெரியகோயில் கர்ப்பக் கிருகத்தைச் சுற்றியுள்ள சிறிய பிரகாரத்தில் இருவகைச் சுவரோவியங்கள் உண்டு. கி.பி. 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் வரையப்பெற்றவை. சுந்தரமூர்த்தி நாயனாரின் வரலாறு வரையப்பெற்றுள்ளது.

இங்கு காணப்படும் சில ஓவியங்கள் கி.பி. பதினேழாம் நூற்றாண்டிலும், தஞ்சை நாயக்க மன்னர் காலத்திலும் வரையப்பெற்றவை. இவை புராணக்கதைகளை விளக்குகின்றன.

சோழர்கள் காலத்து ஓவியங்களின் மீது சுதை பூசி மறைத்துவிட்டு அவற்றின் மீது நாயக்கர்கள் தம்கால ஓவியங்களை வரையச் செய்த கொடுமையும் நிகழ்ந்துள்ளது. சேரர்களும் அவர்களுக்கு முன்பிருந்த ஆட்சியாளர் வரைந்த ஓவியங்களின் மீது சுதை பூசி மறைத்துவிட்டுத் தங்களின் ஓவியங்களை வரைந்தவர்களே என்பதையும் மறந்துவிடமுடியாது.

மேலும், காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயில் மாடியில் உள்ள அரங்கநாதர் கர்ப்பக் கிரகத்திலும், உத்தர மேரூர் சுந்தர வரதராஜப் பெருமாள் கோயில் மாடியில் உள்ள கர்ப்பக் கிருகத்திலும் சுவரோவியங்கள் இருந்தன.

தஞ்சை திருவலஞ் சுழியில் உள்ள ஈஸ்வரன் கோயில் கர்ப்பக்கிரகத்திலும் சுவரோவியங்கள் உள்ளன. திருநந்திக்கரையில் உள்ள புகழ் வாய்ந்த குகைக் கோயில் உள்ள கணபதி, சிவ-பார்வதி ஓவியங்களும் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பெற்றவை. அஜந்தா சுவர் ஓவியத்தை இவை ஒத்துள்ளன.

எட்டுமானூர் கோயில் நடராஜர் சுவரோவியம் 16 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டவை. இந்தச் சுதை ஓவியம் திராவிட ஓவியங்களுள் மிகப் பழையது என்பார் டாக்டர் ஆனந்த குமாரசாமி

## ஓவியங்களின் வகைகள்

இரு வகைகளில் ஓவியங்கள் தீட்டப்படுகின்றன.

1. சுதை ஓவியம்
2. நெய் ஓவியம்

சுவரோவியங்கள் நெய் ஓவியங்களாகவும் (Oil Paintings) சுதை ஓவியங்களாகவும் (Frescoes) வரைவதுண்டு.

சுவரில் நெய்கொண்டு தீட்டப்படும் அல்லது சுவரில் கிழியை ஒட்டவைத்து அதன் மீது நெய்கொண்டு தீட்டப்படும் ஓவியம் நெய் ஓவியம் (Oil Paintings) ஆகும்.

சுவரில் சுதை பூசி அது உலராமல் ஈரமாக இருக்கும் போதே ஓவியம் வரைவது உண்மையான சுதை ஓவியம் ஆகும். சுதையைக் கவனமாகத் தயாரிக்க வேண்டும். சுண்ணாம்போடு மணல் சேர்த்து இருப்பதே சுதை ஆகும்.

நீண்டநாள் இருப்பது சுதை ஓவியங்கள். நெய் ஓவியம் அவ்வாறு இருக்காது. நெய் ஓவியம் நாளாகும்போது மங்கும் ஆனால் எழுதுவது எளிது. நெய் ஓவியத்தில் மனதுக்கு ஏற்றவாறு திருத்தலாம். சுதை ஓவியத்தை விட நெய் ஓவியத்தில் அதிக விவரங்களைக் காட்ட இயலும்.

## ஓவிய அழிவுகள்

கோயில்களைப் 'பண்பாட்டுத் தொட்டில்கள்'' என அழைக்கப்படுவதற்குக் காரணமே அவற்றில் உள்ள ஓவியங்களே ஆனால், அவைகள் காலப் பழமையாலும் பிறகாரணங்களாலும் அழிந்துவருவது எதார்த்தமான உண்மை.

1. இந்திய ஆவணக் காப்பாளர் சங்கம்
2. பிரிட்டிஷ் ஆவணக் கழகம்
3. அனைத்துலக ஆவண மாற்றம்

ஆகியவை ஆவணம் காக்கும் அமைப்புகளாக இயங்கி வந்தும் ஓவியங்கள் உள்ளிட்ட ஆவணங்களை இயற்கை அழிவிலிருந்தும் செயற்கை அழிவிலிருந்தும் ஓரளவே காக்க முடிகிறது.

1. திருவெறும்பூர் கோயிலின் சித்திர கூடமும் பிற சித்திர மாடங்களும் எழுதெழில் அம்பலங்களும் செங்கல் கட்டடங்கள். அவை நெடுங்காலம் நில்லாம அழிந்துவிட்டன.
2. முதலாம் மகேந்திர வர்மன் (கி.பி. 600-630) காலத்தில் கட்டப்பட்ட சிற்றன்னவாசல் குகைக்கோயில் ஓவியங்கள் காலப் பழமையாலும் ஆடுமாடு மேய்க்கும் சிறுவர்களின் குளறுபடிகளாலும் இங்கு வந்து தங்கிச் செல்வோர்களின் அக்கறையின்மையாலும் அழிந்துகொண்டு வருகின்றன. இதனால் இவற்றைக் காண வருவோர் காணாமலே திரும்பி விடுகின்றனர்.
3. குகை ஓவியங்களைக் கண்டுபிடித்து வெளியுலகிற்குத் தெரிவித்த திருவாளர்கள் கோபிநாதராயர், மூவோதுப்ராய், பேராசிரியர் எஸ்.கே. கோவிந்தசாமி போன்றவர்கள் தோன்றாததாலும் அழிந்து வருகின்றன.
4. திருமலைப்புரத்து சைவக் கோயில்கள் மலையடிப்பட்டியில் உள்ள வைணவக் கோயில்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில், பனமலைக் கோயில் ஆகியவற்றின் அற்புதமான ஓவியங்கள் எல்லாம் சரியான பராமரிப்பின்மையினால் அழிந்துவிட்டன.
5. ஒரு வம்ச அரசர்கள் ஆண்டபோது வரையப்பட்ட ஓவியங்களின் மீது அடுத்து வரும் வம்சத்து அரசர்கள் சுதை பூசி மறைத்துவிட்டுத் தங்கள் ஓவியங்களை அவற்றின் மீது வரையும் இருட்டடிப்புப் பணிகளாலும் மறைந்தன.
6. ஓவியங்களைப் பிரதி எடுக்காமல் விட்டது.
7. ஓவிய ஆர்வலர்களின் கூடுதலான அக்கறை இன்மை.

## அழியாத ஓவியங்கள் : சில காரணங்கள்

காஞ்சி கைலாசநாதர் கோயிலைக் கட்டுவித்தவன் கலைக்கடல், கலைக்காவலன், அத்யந்த காமன் என்றெல்லாம் புகழ்பெற்ற இராஜசிம்மன் எனும் பல்லவ அரசன். அவன் காலத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஓவியங்களின் மீது சுதை பூசப்பட்டு சோழர் கால ஓவியம் தீட்டப்பெற்றிருந்தது. இவை இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் அறிவியல் முறைப்படி நீக்கப்பட்டுக் காலத்தால் பழமையான இராஜசிம்மன் கால ஓவியங்கள் வெளியே கொண்டுவரப்பெற்றன என்பது இங்கு பதிவு செய்யப்பட வேண்டிய ஓர் உண்மையாகும்.

மதுரைக் கூடலகர் கோயில் (கி.பி. பதினோராம் நூற்றாண்டு) சுவரோவியங்கள் (Murals) பல நூற்றாண்டுகளைக் கடந்தும் மெருகு குலையாமல் காட்சியளிப்பதிலிருந்து இவ்வோவியங்கள் தீட்டப் பயன்படுத்திய வண்ணங்கள் இயற்கைப் பொருள்களிலிருந்தும் மூலிகைச் சாறுகளிலிருந்தும் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அறிகிறோம். இவ்வாறு இயற்கைப் பொருள்களால் வரையப்பெற்ற ஓவியத்திற்கு அழிவே இல்லை என்பதும் இங்குப் புலனாகும்.

## பாறை ஓவியங்களும் அவற்றின் பாதுகாப்பு முறைகளும்

ஓவியம் என்றதும் நம் நினைவுக்கு வருவது அஜந்தா ஓவியங்களாகும். ஆங்கிலத்தில் பெயின்டிங்க் என்கிறோம். ஓவியதிற்கு நான்கு அடுக்குகள் உள்ளன. சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் என்ற பழமொழி நமக்குப் புதிதானதல்ல, பல்வேறு தாங்கிகளில் (Support) ஓவியங்கள் தீட்டப்பட்டன. பாறையைத் தாங்கியாகக் கொண்டு தீட்டப்பட்டதுதான் பாறையோவியமாகும். பாறையோவியங்களின் காலம் ஏறத்தாழ கி.மு. 3000 முதல் கி. மு 1000 வரை ஆகும். இந்தியா உலகத்திலேயே அதிக அளவில் பாறையோவியங்கள் உள்ள ஒரு நாடு. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் 1500 க்கும் மேற்பட்ட இடங்களில் 2500 குகைகளில் இந்தியாவில் பாறையோவியங்கள் காணக்கிடக்கின்றன. தமிழ் நாட்டில் மட்டும் 500 க்கும் மேற்பட்ட பாறைகளில் பாறையோவியங்கள் காணப்படுகின்றன.

இந்தியாவில் முதன்முதலாக 1856 இல் அல்மோரா என்ற இடத்தில்தான் பாறையோவியம் தொடர்பான ஆய்வுகள் தொடங்கப்பட்டன. மத்திய பிரதேசத்திலுள்ள மிர்சாபூர் என்ற இடத்தில் 1887 இல் ஜான் காக்பர்ன் மற்றும் ஆர்ச்பால்டு கார்லைல் என்பவர்களால் பாறை ஓவியம் கண்டுபிடிக்கப்பட்டன. வி.எஸ். வகான்கர் என்பவர் பிம்பேட்கா பகுதியில் 754 பாறையோவியங்கள் இருப்பதைப் பதிவு செய்துள்ளார். பாறையோவியங்களைப் பாதுகாப்பது பற்றிய அறிவினைப் பெற பாறைகளைப் பற்றி நன்கு அறிய வேண்டும்.

பாறைகள் மூன்று வகைப்படும். அவை, ஏரிப் பாறைகள், படிவுப் பாறைகள் மற்றும் உருமாற்று பாறைகள் ஆகும். குகைகளில் உள்ள பாறைகளின் தன்மைகளை அறியாமலேயே ஆதிகால மனிதன் பாறையோவியங்களை வடித்தான் என்று தான் சொல்ல வேண்டும். பொதுவாக மணற்பாறை, படிகப்பாறை மற்றும் கருங்கல் பாறைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பதைக் காணமுடியும். இன்றைய வரையில் சுண்ணாம்புக் கற்பாறைகளில் ஓவியங்கள் தீட்டப்பட்டதற்கான தடயங்கள் ஏதுமில்லை.

பாறையோவியங்கள் செங்குத்தான, சாய்வான மற்றும் தொங்கு பாறைகளில்தான் காணப்படுகின்றன. பாறையோவியங்கள் பொதுவாக ஈரவண்ண முறையில்தான் தீட்டப்பட்டுள்ளன. பூமியிலிருந்து பெறப்பட்ட வண்ணங்கள் நீர் மற்றும் கொழுப்புகளோடு சேர்த்து அரைக்கப்பட்டு, மிக மெல்லிய திரவநிலைக்குக் கொண்டு வரப்பட்டு மெல்லிய வேர்த்தூரிகை கொண்டு தீட்டப்பட்டுள்ளன. எவ்விதமான சுண்ணாம்புக் காரையோ அல்லது தளமோ அமைக்கப்படாமல் பாறை எவ்விதத்திலும் சீரமைக்கப்படாமல் இருந்த வண்ணமாகவே வைத்து தீட்டப்பட்டது.

பாறையோவியங்களில் முழுக்க முழுக்க அகரிமப் பொருட்களே பயன்படுத்தப்பட்டுள்ளமை ஆய்வின் மூலம் தெரியவருகிறது, அவை செங்காவி, மஞ்சட்காவி, வெள்ளைக்களிமண் பல்லாண்டுகளாக பாறையோவியங்கள் நிலைத்திருப்பதிலிருந்து தண்ணீரில் அறைத்துத் தீட்டப்பட்ட ஓவியங்கள் பாறையுடன் மிக மெதுவாக வினைபுரிந்த சிலிக்கா துகல்களாக பாறையுடன் அமைந்துவிட்டன என்றே ஊகிக்க வகையுண்டு. இதனால் ஒரு படிவு போன்று ஓவியத்தின் மீது உருவாகியுள்ளதால் தண்ணீரால் பாறையோவியங்கள் பாதிக்கப்படவில்லை.

குகைகளிலும் பாறைச் சரிவுகளிலும் தீட்டப்பட்ட பாறையோவியங்கள் மனிதனின் பார்வைக்குத் தப்பியிருந்தவரை அவை பாதிப்பிற்குள்ளாகவில்லை. எப்பொழுது மனிதன் பாறையோவியங்களைக் கண்டுபிடித்து சுற்றுலாத் தலங்கலாக மாற்றினானோ அன்றிலிருந்து அவை அழிவை எதிர்நோக்கியுள்ளன என்று அறியும் போதுதான் நமக்கு ஒரு வேதனை உருவாகிறது.

தட்ப வெப்ப சூழ்நிலையால் பாறைகள் பொரிவதால் பாறையோவியங்கள் பாதிக்கப்படுகின்றன. உப்புக்கள் ஓவியத்தின் மீது உருவாகுவதும் பாதிப்பை உண்டாக்கும். மழைநீர் வடிவதால் அப்பகுதிகளில் பூஞ்சைகள் வளர்ந்து ஓவியங்கள் பாதிக்கப்படுகின்றன. குளவிகள் களிமண்ணைக் கொண்டு ஓவியங்கள் மீது கூடு கட்டுவதால் ஓவியங்கள் சிதைகின்றன. பெருங்காற்றினால் மண்ணெறியப்படும்போதும் தண்ணீர் அடிக்கடி ஓவியத்தின் மீது வழிந்து ஓடுவதால் அப்பகுதியிலுள்ள ஓவியங்கள் தேய்ந்து, அழிந்து விட ஏதுவாகும். தூசுகள், அழுக்குகள், ஒட்டடை மற்றும் கரித்துகள்கள் படிவதாலும் பாறையோவியங்கள் பாதிக்கப்படுகின்றன.

பாறையோவியங்களைப் பாதுகாப்பது அறிவியல் சார்ந்த ஒரு நடவடிக்கையாகும். பாறையின் தன்மை, வண்ணத்தின் தன்மை, சுற்றுச் சூழல் போன்றவற்றை அறியாமல் பாறையோவியங்களைப் பாதுகாக்கவியலாது.

முதலில் ஓவியங்களைச் சரியான முறையில் புகைப்படமெடுத்தல், அளவிடுதல் போன்ற பதிவுப் பணிகளைச் செய்ய வேண்டும். சரியான முறையில் பாதிப்புகளைப் பதிவு செய்ய வேண்டும். வண்ணங்கள் மீது படிந்துள்ள தூசு மற்றும் அழுக்குகளை நீக்குவது முதல் பணியாகும். அதன்பின் நுண்ணுயிரிகளை அகற்றும் பணியைச் செய்யவேண்டும். இப்பணி ஆல்கஹால் மற்றும் பலவித கரிமக் கரைப்பான்களைக் கொண்டு செய்யலாம். ஓவியங்கள் உரிந்த நிலையிலோ அல்லது வெடித்தோ காணப்படுமாயின் அவற்றைச் சரியான பசைகொண்டு ஒட்டவேண்டும். கடைசியாக பாலிவினைல் அசிட்டேட் அல்லது பாரலாய்டு பி72 என்ற பசைகள் கொண்டு மேற்பரப்பு பாதுகாக்கப்படலாம்.

## சுவரோவியங்களும் அவற்றின் பாதுகாப்பு முறைகளும்

சுவரோவியங்கள் எனப்படும் சுவரைத் தாங்கியாகக் (Support) கொண்டு வர்ணங்களால் தீட்டப்பட்டவையாகும். சுவரோவியங்கள் அமைப்பின் அடிப்படையில் இரு வகையாகப் பிரிக்கலாம். ஒன்று, ஈரச் சுவரோவியம் மற்றது உலர் சுவரோவியமாகும். சுவர் ஈரமாக இருக்கும்போதே வர்ணம் கொண்டு தீட்டுவது ஈரச்சுவரோவியமாகும். காய்ந்தபின் சுவரில்

தீட்டப்படும் ஓவியம் உலர் சுவரோவியமாகும். இரண்டு வகை ஓவியங்களிலும் வர்ணங்கள் ஒரே விதமானவையே. இந்தியாவில் கி.பி. 2 தொடக்கம் கி. பி 7 ஆம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சார்ந்த புத்த மதச் சுவரோவியங்கள் அஜந்தா குகைகளில் காணப்படுகின்றன. சிறந்த சுவரோவியங்கள் தக்காணத்திலுள்ள பாதாமி குகைகள், மகாராஷ்ட்ரத்திலுள்ள எல்லோரா குகைகள், தமிழ் நாட்டிலுள்ள பனமலை, திருப்பருத்திக்குன்றம், சித்தன வாசல், தஞ்சாவூர் ஆகிய இடங்களிலுள்ளவை சிறந்தவை. எல்லோரா, தஞ்சாவூர், லேபாஷி ஆகிய இடங்களிலுள்ளவை இந்து சமயத் தொடர்பானவை.

சுவரோவியங்கள் தீட்ட சுவர் சரியான முறையில் அமைக்கப்படவேண்டும். அதனால்தானே சுவர் இருந்தால்தானே சித்திரம் வரைய முடியும் என நமது முன்னோர்கள் கூறியுள்ளனர். சுவரைச் சரியான முறையில் தயார் செய்ய பல்வேறு முறைகள் கையாளப்படுகின்றன. சுவரை சுண்ணாம்புக் காரை கொண்டு பூசவேண்டும். பின்னர் சுண்ணாம்பு, மணல், சர்க்கரைக் கழிவு ஆகியவற்றைத் தண்ணீருடன் கலந்து உரலிலே வைத்து நன்கு குத்தவேண்டும். மூன்று மாதங்களுக்குப் பின்னர் காரைச் சாந்தை எடுத்து அதனை அம்மிக்கல் போன்ற அரைவை இயந்திரத்தில் வைத்து தயிர்ப் பசை போன்று சர்க்கரைக் கழிவுடன் சேர்த்து அரைக்க வேண்டும். பின்பு கொளுரு வைத்து நன்கு மெருதுவாக இருக்கும்படி பூச வேண்டும். மேலும் மெருகூட்ட சுண்ணாம்பு துகளுடன் இளநீர் மற்றும் சுடுநீர் சேர்த்துப் பசையாக்கி சுவரின் மீது பூசவேண்டும். சில இடங்களில் மண்சுவர்களில் வைக்கோல், காய்ந்த புல் போன்றவற்றைக் கொண்ட வலுப்படுத்தி, மெல்லிய மண்கொண்டு பூசி அதன் மீது சுவரோவியம் தீட்டினார்.

சுவரோவியங்களில் நான்கு அடுக்குகள் உள்ளன. அவை தாங்கியாகிய சுவர், சுண்ணாம்பு அல்லது மெல்லிய மண் பூச்சு ஆகிய தளம் வண்ணக் கலவை ஆகியவையாகும். பெரும்பாலான வண்ணங்கள் பூமியிலிருந்து கிடைக்கும் அகரிமப் பொருட்களாகிய வண்ணப் பொருட்களாகும். சுண்ணாம்பு பயன்படுத்துவதால் காற்றிலுள்ள கார்பன் டை ஆக்ஸைடுடன் வினைபுரிந்து கட்டியாவதால் ஓவியங்கள் பல இடங்களில் பல நூறு ஆண்டுகளாக நிலைத்து நிற்கின்றன.

சுவரோவியங்களின் பாதிப்பு சுற்றுச் சூழல், ஈரம், தூசு, அழுக்கும், மனிதக் கையாளுகை போன்றவற்றால் ஏற்படுபவை ஆகும். சிதைவுகள் எல்லா அடுக்குகளிலோ அல்லது ஏதாவது ஒரு அடுக்கிலோ ஏற்படலாம்.

சுவரோவியங்களைச் சரியான முறையில் அவற்றின் தன்மை, சுற்றுச்சூழல், சுவரின் தன்மை, நீர்க்கசிவும் மழைநீர், மனிதனால் ஏற்படும் பாதிப்புகள் போன்றவற்றை நன்கு ஆய்வு செய்த பிறகே பாதுகாத்திட அறிவியல் முறையில் முடிவெடுத்திட இயலும். சில வேளைகளில் பாதுகாப்புப் பணியினைச் செய்வோராலும் பாதிப்புகள் ஏற்படும்.

ஓவியங்களை ஆய்வு செய்து பதிவு செய்யப்பட்ட பின்பு புகைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அதன் பின்னர் சுவரோவியங்கள் மீது படிந்த தூசுகள், அழுக்குகள் முதலியன எரிசாராயம், கரிமக் கரைப்பான்கள் போன்றவற்றைக் கொண்டு அகற்ற வேண்டும். இதனால் படிந்த அழுக்குகள் அகற்றப்படுகின்றன. மழைநீர்க் கசிவினாலும், ஒழுக்கலினாலும், உப்புக்கள் உருவாகியிருந்தால் அவற்றை காய்த்துவடித்த நீரில் தோய்க்கப்பட்டமை உறிஞ்சும் தாளை ஒட்டி உப்புகளைக் கரைத்து அகற்றலாம்.

சுண்ணாம்புக் கலவையால் பாதிக்கப்பட்ட பகுதிகள் இருக்குமாயின் அதனை மிகக் கவனமாக நுண்ணிய கருவிகொண்டு தேய்த்தோ அல்லது அமிலம் கொண்டு கரைத்தோ அப்புறப்படுத்தலாம். எண்ணெய், எண்ணெய்ப் பசை ஆகியவையிருந்தால் அவற்றை 20 விழுக்காடு அமோனியா அல்லது 10-20 விழுக்காடு நீரில் கரைத்த என்பியூட்டைல் அமின் கொண்டு கரைத்து அகற்றலாம். மெழுகு ஒட்டி இருக்குமாயின் அதனை ட்ரைக்குளோரோ எதிலின் அல்லது கார்பன் டெட்ராகுளோரைடு கொண்டு அகற்றலாம். கரி படிந்த பகுதியில் முதலில் ட்ரை எதனாலமின் தடவி 15 முதல் 20 நிமிடம் வரை காத்திருந்த பின்னர் டொலுாயீன் தோய்த்த பஞ்சு கொண்டு துடைத்து அகற்றலாம். வார்னீஷ் அகற்ற அசிட்டோன், செல்லோசால்வ், அமைல் அசிட்டேட், டை அசிட்டோன் ஆல்கஹால், ஐசோ ப்யூட்டைல் ஆல்கஹால் என் ப்யூட்டைல் ஆல்கஹால் போன்ற கரைப்பான்கள் மிகவும் பயனுள்ளவைகளாக காணப்படுகின்றன. வார்னிஷ் படிந்த இடங்களில் மேற்கூறிய கரைப்பானைப் பூசிக் காத்திருக்க வேண்டும். பின்னர் கரைந்த வார்னிஷ் பஞ்சின் உதவியால் சுழற்சி முறையில் தேய்து வார்னீஸை அகற்றலாம். வார்னீஷ் அகற்றும் போது வண்ணம் கரைவது தெரியவந்தால் உடனடியாக அந்தப் பகுதியில் டர்பன்டைன் ஆயில் ஊற்றவேண்டும். டர்பன்டைன் ஆயில் கரைப்பானின் கரைக்கும் தன்மையை உடனே நிறுத்திவிடும்.

உடைந்த பகுதிகளில் பிளாஸ்டர் கொண்டு பட்டி வைக்க வேண்டும். பட்டி வைத்தது காய்ந்த பின்னர், மெருதுவாகத் தேய்த்து அதன் மீது வண்ணம் தீட்டவேண்டும்.

சீரமைக்கப்பட்ட பின்பு, சூரிய ஒளி படாது பாதுகாக்க வேண்டும். வண்ணங்கள் மங்குவதைத் தவிர்க்க சூரிய ஒளி படாமல் காக்கவேண்டும்.

இதுகாறும் கண்டவற்றிலிருந்து சில கருத்துருக்கள் தோன்றியுள்ளன. அவை

1. ஆவணங்களில் இன்றியமையாதது ஓவியம்.
2. பழந்தமிழ் இலக்கியங்களில் ஓவியங்கள் மிகுதியும் பேசப்பட்டுள்ளன.
3. காலந்தோறும் தோன்றிய மன்னர்கள் கோயில்களைக் கட்டியதோடு அவற்றில் ஓவியங்களையும் வரைந்து சித்திர கூடங்களாகவும் ஆக்கிவைத்துள்ளனர்.
4. ஆவணம் காக்கும் அமைப்புக்களாலும், இந்தியத் தொல்பொருள் துறையினராலும் ஓவியங்கள் காக்கப்பட்டு வருகின்றன.
5. ஓவிய அழிவிற்குத் தொடர்புடைய கோயில்களையும் கட்டங்களையும் சுற்றுலாத் தளங்களாக்கியதும், தனி மனித அக்கறையின்மையும் காலப் பழமையும் காரணங்களாகும்.
6. இன்று பாறை ஓவியங்களும் சுவரோவியங்களும் காக்கப்பட்டு வருகின்றன எனில் அருங்காட்சியகங்கள், ஆவணக் காப்பகங்கள் ஆகியவற்றில் பணியாற்றிய, பணியாற்றி வரும் காப்பாட்சியர் மற்றும் ஊழியர்களின் கடுமையான உழைப்பேயாகும்.
7. ஓவியங்களைப் பாதுகாத்து வைத்தலே அவற்றை ஆவணப்படுத்தியதும் ஆகும். மேலும் இப்பணிகளுக்கு அறிவியல் முறையும் அறிவியல் சாதனங்களும் பெரும் பங்காற்றி வருகின்றன.

**ஆவணம் பிறந்தது**
**அறிவு தெளிந்தது!**
**ஆவணம் காப்போம்**
**அறிவை வளர்ப்போம்**

## Reference


1. **கலைக்களஞ்சியம் தொகுதி 5** தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை
2. **ஆவணத்தின் கதை**, ஜெ.எத்திராஜ், குழந்தை இலக்கியக் கழகம், சென்னை, 1993
3. **தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்,** மயிலை சீனி. வேங்கடசாமி, சென்னை, 2000.
4. **தமிழக கோயிற்கலை வரலாறு**, டாக்டர் அம்பை மணிவண்ணன், 2005
5. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்ற ஆய்வுக் கோவை – முதல் தொகுதி – 2010, மதுரை 'அடாங்க விமானம் ஒருபார்வை' திருமதி சங்கர வேலாயுதம்.
6. Hand book on Conservations in Museums Dr. V. Jayaraj published by Commissioner of Museums,Govt. Museum, Chennai, 2002.
7. Care of Paintings – Dr. V. Jayaraj published by Commissioner of Museums, Govt. Museum, Chennai, 2002.


## Interview

With Dr. V. Jayaraj (Retd.) Curator, Chemical Conservation and Research Laboratory, Govt. Museum, Chennai – 600008.

# SIGNIFICANCE OF DIGITIZATION IN PROTECTING ENDANGERED DOCUMENTS

Dr. N. Ganeshan[1]

## Introduction

The social history of communities can be traced and understood through past records and documents. The digitization of endangered documents is to create an archive of documents of socio-historical relevance to historians, anthropologists, sociologists and linguists. These documents, recorded on paper, palm-leaves and copper plates, provide a rare and unique opportunity to glimpse a variety of aspects of social history of village life in the more remote parts of the Tamil region at a time when new power structures and social identities were being forged both with and against local traditional feudal systems and British colonial legislations (Zoe, 2012).

The documents are scattered in the homes of Tamil villagers, especially the descendants of traditional power holders, who are unaware of the importance of such documents can have for understanding social history. Though unaware of the scholarly value, the document holders are not prepared to part with their forefathers' documents, such as depositing them in the local archives. Digitization of these materials will open a new avenue of analysis at the level of micro-history of rural India, a field for which there is a lack of research material since the colonial Revenue Records as well as the "Village Notes" of the Settlement Surveys does not contain these types of documents (Zoe, 2012). These documents have social significance and historic value.

Endangered Archive Programme 458 (EAP458 – on-going project in French Institute of Pondicherry, funded by British Library and Arcadia) has provided insights in tracing the social history of Tamil agrarian community through identification and digitization of endangered documents recorded in paper, palm-leafs and copper plates. Most of the documents identified for digitization are destined to disappear in the near future given both the very humid climate of southern India and neglected condition in which they are stored. These documents relate to social relations, economic transactions, power relations etc. which reflect the social history of a particular community. These endangered documents with

1 *Dr. N. Ganeshan, Research Associate (Endangered Archives Programme 458), French Institute of Pondicherry, Puducherry – 605 001 INDIA. Email: nganeshan@ifpindia.org*

their exceptional scholarly value are of great scope in understanding the social history of Tamil village life over a period of three centuries. Similarly the social history of any community or interface with other community or issues can be traced through identification and digitization of related documents available. Thus the digitization process provides scope for understanding a community or issues of debate through the identified endangered documents.

Thus, digitization has been done for various official records to provide transparency, knowledge-sharing, fast-retrieval and cost-effectiveness. Similarly digitization process can be applied to protect the endangered documents which would contain specific information related to the objective of project. The value of a digitized records and documents depends on the content, quality of digital image and security measures taken to protect it from tampering and information loss. The present paper will highlight the process involved in digitization of endangered documents as applied for the EAP458 project which will be useful for replication. The paper will detail the procedures, problems and limitations experienced in the digitization process in terms of identification, collection, classification, organization, digitization and retention.

## Identification of document holders:

Identification of the document holders was an important step in the process of collection of endangered documents and digitization. In the first stage, the team carried out an intensive field work in small villages in two traditional territories (Kallar Nadu and Kongu Nadu) searching for documents, few villagers showed a number of different 'old' documents handed down by the villagers' forefathers. Further, these villagers having documents (document holders) were requested to give leads and contacts of the other such document holders (snowball technique). Thus eighty document holders were identified having collections and contact details of these document holders were enlisted.

## Collection of documents:

In the second stage, from this list, the document holders were contacted over phone and introduced about the purpose of the project and also to clarify the availability of endangered documents with them. In this process few of the villagers, those who were contacted, denied having such documents while few found some excuses to inform the non-availability of such documents. Only 40 villagers accepted the availability of documents and consensus were obtained for visit to their home. With this consensus of 40 document holders, their homes were visited for collection of available documents. Thus approximately 10000 documents were collected from the 40 villagers/document holders for digitization. On the ethical point of view, before collecting the documents, consent from the document

holder's were obtained by explaining to them that the document collected from them will be used only for research purpose and will not be used for any other purpose.

## Classification and organization of documents:

Classification of the collected document is an important step to understand the scope and content of the documents. Firstly the collected documents were classified based on the material such as paper documents, palm-leaf manuscripts and copper plates. The collected documents were dusted and examined separately to identify the damaged documents. Additional preservation measures, such as dusting, cleaning, taping of fragile documents, were undertaken at this time. The paper documents that were in tore condition were stick with transparent tape and made proper for digitization. Similarly palmleaf manuscripts that were dwindling and kept inside the bags were opened, dusted and applied lemon gross oil for its preservation; and copper plates were applied with rice flour or "vibuthi" to increase the visibility of letter quality. The collected documents were quickly over-viewed to understand the wider content. These collection contains of varying volume (a few up to a thousand documents) dating from the mid seventeenth century to mid twentieth century. These documents covered a wider scope of interest in not only the transformation and continuity of customary law but also land tenures and revenue collection, kinship patterns, caste relations and power structures. The documents included: genealogical charts, land transactions, religious tax collection, folk tales, loans agreements, honour struggles, temple records, marriage announcements, etc.

## Digitization:

Digitization is the process of converting any physical or analogue item, such as a paper record, photograph or graphic items, into an electronic representation or image that can be accessed and stored electronically. Digitization process converts archival materials from formats that can be read by people (analogue) to a format that can be read only with the help of machines (digital). One advantage digital archives over analogue collection is that digital files may be read, reformatted, compressed, transferred and retrieved over computer networks.

## Planning for Digitization

Documents digitization is a strategy that has been undertaken as part of an overall endangered archive programme. Digitization is not a stand alone initiative. Therefore, number of critical planning issues has been considered before commencement of digitization i.e., determining what documents to be digitized, where, when and how. Given scale of paper documents, palm-leaf manuscripts

and copper plates, most cost-effective and efficient complement of approach and tools (as EAP standard) have been used to achieve the long-term preservation and access to documents.

## Value Assessment for Digitization

Endangered documents digitization programme offers strategic benefits for information sharing and preservation. These benefits form the basis for establishing a value assessment for digitization. The following table offers information on how the digitization plan has been proceeded:

| VALUE ADDED BENEFIT | REQUIREMENT | COMMENTS |
|---|---|---|
| **Enhanced Access and Information Sharing** | The documents are endangered and are of use for research and accessed frequently by many people. | If the documents are frequently accessed and used, digitization can support better information sharing and ease of dissemination electronically. |
| **Preservation and Protection of Archives** | The documents lasting historical value but in a fragile condition.<br><br>The documents are important that must be protected. | Digitization is a strategy that is often used for endangered documents archives that are destined to disappear due to neglected storage condition or to create a digital archives or access copy for endangered documents. |
| **Reduction of Paper Documents and Research Continuity** | Endangered Documents physical storage condition, lack of space.<br>British Library (EAP) is implementing an archive programme that will facilitate increased use of digitized documents. | Digitization can be used in situations when storage of physical documents is either too hot to preserve or unavailable due to lack of space.<br>Documents retention and disposal policy must be applied to digital copy records.<br>Digital copies of hard copy documents can be used for research |

In addition to the above, when undertaking a value assessment of digitization of endangered documents the following issues should be considered:

Depending on the tools available, some documents are more suitable for digitization than others. For example, copper plates, palm-leaf manuscripts or materials that are bound such as books, notebooks, may be more difficult to capture effectively. Photographs, maps and plans can also pose challenges and may require a special kind of digitization technique, software programme and guidelines in terms of resolution and quality. It is also important to consider frail items that may need additional preservation measures such as palmleafs, copper plates that are fading or paper records that are fragile.

The value of a digitised document is dependent on the content, the quality of digital capture and the security measures taken to protect it from tampering and information loss. The systems and requirements are designed to ensure that documents are protected according to the best practices available. The standards required are that documents are to be *authentic*, *complete* and *accessible and* to be relied on as evidence for research purpose.

| TO BE… | ...DIGITAL CAPTURE MUST BE |
|---|---|
| **Authentic** | The product of endangered documents which is under the scope of the project, documented, need for copying. |
| **Complete** | Accurate, legible reproduction of the original that contains all intellectual and physical components of the original without alterations to content. |
| **Accessible** | Available, searchable and readable to all those with a right to access it, for as long as it is required. |

Selection of archival materials for digitization should first be based on a clear understanding of copyright law and rights of ownership. In this regard consent from the document holders were obtained and were done by explaining the importance of the documents that needs protection and its usefulness for historical documentation and research purpose. Though digitization has many benefits it can also present certain risks in relation to the protection of sensitive information. Careful consideration should be given before digitizing documents that are "Confidential", "Top Secret", or those containing sensitive personal information.

During the digitization process these documents should be kept separate and have to get the approval from the document holders for digitization. This is done to ensure that the documents are digitized with the knowledge and due approval by the document holder, in addition to being used for future research purpose.

## Metadata Requirements

All paper, palmleafs and copper plate documents digitized require unique identifiers or metadata elements as per the EAP guidelines. Metadata is the information about documents, such as their date, title, description, security classification, etc. and it will be easier to facilitate and access to documents. The following is a list of image metadata elements required by EAP.

| IMAGE METADATA ELEMENTS | OBLIGATION |
|---|---|
| **Reference** | Collection details |
| **Creator** | EAP team (EAP458) |
| **Place/Address** | Place and Address of the document holder |
| **Date** | Date of digitization |
| **Image file format** | Raw (NEF) |
| **Capture Device (Hardware)** | Nikon D90 camera |
| **Capture Details (Software used etc.)** | Camera Control Pro |
| **Colour (indicate pixel depth)** | sRGB-16 bit |
| **Resolution** | 12.2 mega pixel |
| **Checksum software Used** | MD-5 |

## Technical Requirements

EAP requires that digitised documents meet the minimum technical specifications for image quality based on international standards. Applying technical standards ensures the accurate reproduction of documents while considering the levels of access requirements and the cost of electronic storage. There are three conditions that will determine the quality of digital capture:

- User needs: access, web use and information sharing.
- Archival preservation: long-term storage for permanent records.
- Re-formatting such as document conversion for Optical Character Recognition (OCR).

Digital documents that are to be retained as archives require optimum preservation quality image capture. Digital records to be used for information sharing and web use only, and that will not be retained for an extended period of time, require a lower quality image capture with smaller file sizes for ease of access. Likewise, reformatting or converting files for additional uses such as OCR, can pose an additional set of requirements.

Technical specifications for image quality are made up of four attributes:

- Resolution: the number of elements (dots, lines or pixels) that comprise an image.
- Bit-depth: the number of "colours" or "channels" used to represent tonal values.
- Image mode: defines an image according to its bit-depth and method for "describing" colour.
- File format: the way in which a file is encoded to be read for specific purposes.

For long-term archival preservation, as per EAP requirement, textual documents with additional details such as an official seal, simple graphics pencil and ink markings require a minimum 8-bit depth greyscale or 24-bit depth colour. Documents with extensive graphics and photography will require TIFF (Tagged Image Format) with a minimum bit-depth 8-bit greyscale or 24-bit colour.

## Requirement of Tools and Resources

Digitization in-situ requires a set of tools and resources such as camera with stand, laptop, imaging software, a storage device and available staff. Consider your budget and available resources. The type of camera chosen will depend on the document type and its volume. Capturing and imaging software and file type (RAW - NEF) will also depend on the system one is using and the user needs. Tools required for digitization include:

- Camera (Nikon D90)
- Camera stand (specifically made for digitizing) with lighting set up;

- Laptop with Capturing and Imaging software (Camera Control Pro);
- Storage Device (External Hard Disc);
- UPS for continuous power supply;
- Other tools for dusting and cleaning (scissors, brushes, cotton etc.)
- Document management programme with file plan (RAW-NEF).

## On field (in-situ) Digitization

EAP458 decided that the digitization will be done in on-filed (in-situ) by staff members. There are advantages and disadvantages with this approach. The advantages are that it is the most risk free way of digitizing documents containing sensitive information as there is less risk of unauthorized access to sensitive information. Less risk of damage to documents as they remain on-site. The EAP458 team has complete control over the digitization process.

Disadvantages are that it requires staff to be available full time or for most of the time for digitization. Project management and quality control checking cannot be effectively done by the staff members, often in addition to performing other duties. It requires space for documents to be placed for classification and organization, for equipment and for the staff. Sometime the document holder's presence and interference may affect the continuous flow of the digitization.

## Training Requirements

The final step during the planning stage of digitization is to identify training requirements, particularly if the decision is to do the digitization on filed (in-situ) by the staff members. A training programme should be developed that addresses the following issues:

- Proper use of digitization hardware and software;
- Digital image formats;
- Proper records handling techniques to avoid damage to records;
- The use of a file classification scheme for organizing images;
- Maintaining the documents in their original order;
- Analysing to identify and process documents containing sensitive information;
- Digitization documentation requirements;

- Need to identify and process documents that require specialised digitization techniques, such as copper plates, palm-leafs, photographs or large format documents;
- Standards and procedures for quality control checking;
- Varying work to avoid fatigue from repetition.

## Preparing Physical Files for Digitizing

The following is a list of preparatory tasks that must be undertaken on documents prior to digitization commencing. Any additional preservation measures, such as dusting, cleaning, taping of fragile documents, can be undertaken at this time. Remove the following materials: file clips, staples, plastic sleeves, clips, metal clips, coloured tags and rubber bands. Replace them with the stainless steel paper clips, or replace them with the tag after digitizing it. Remove envelopes from file and place the content/s of the envelope on the file for digitization.

Documents that are clearly duplicates or copies, and not annotated copies, can be removed from the file of disposed of. Please note that this is only worthwhile if it is a value added exercise involving many copies of the same document are found on file.

## Quality Checking and Control

Quality control measures include periodic testing and cleaning of camera lens, imaging calibration (e.g. "focusing" your camera or computer screen to match each other) and verification of authenticity. The details of your quality control measure will depend on your tools, such as software, camera and an electronic document storage system.

Quality control measures for checking digital images should be applied throughout the process, preferably by an assigned staff member who can chart any errors. This can include checking individual files for any errors in arrangement, imaging or classification. For large volumes, it is recommended that random sampling (5% to 10%) should be applied. Image quality of digitised records is a big concern, especially when using low resolution, 1-bit black and white non-continuous tone image mode (also known as line-copy). 1-bit B&W image mode "sees" only black and white, and cannot distinguish greys such as pencil marks from ink type. Quality control of images includes checking for:

- smallest detail legibly captured (digitise smallest type size for text; clarity of punctuation marks, including decimal points);
- completeness of detail (digitise acceptability of broken characters, missing segments of lines);
- dimensional accuracy compared with the original;
- completeness of overall image area (e.g. missing information at the edges of the image area);
- true colour rendition in the case of colour images. Where digitization involves colour as an intrinsic part of the document, you should consider including a standard colour sheet for calibrating your image capture tools.

## Review, Evaluation and Revision of Digitization Processes

As in any other process it is productive to review the digitization process and evaluate how effective it has been. This is an opportunity to identify any redundancies, inefficiencies or problems in the process and revise and enhance the process accordingly. Any changes to the process must be reflected in an updated training programme.

## Testing Access to Digital Images

It is important to test retrievability of and access to digital images that have been captured into database, server or some other electronic storage system. A retrieval exercise involving a sample of digitised documents should suffice.

## Applying Retention Policy to Digital and Hard Copy Documents

Ensure that decisions have been made in relation to the retention and disposition of image copy of the documents have been given to the document holders in the DVDs as in the file format of JPEG. It is also to be noted that hard copies of the documents should be cleaned, organized, filed, compiled and returned back to the document holders because of their historic value and must not be destroyed.

## Contents of Listing Template

The content of listing template contains the following components which gives precise information of the digitized document. Institution of Deposit such

as Name of institution, contact address etc.; Description such as reference, digital folder name, digital file name, title, dates of original material, creation dates of digital copies, physical characteristics, scope and content, languages of material etc.; Details on Individual Family Institution such institution and family name, history or biographical information etc.; and Technical Details such as place and date of images created, file format, capture device, colour, resolution etc. Similarly the format contains technical details for audio and for moving image. The stated listing template was specifically for EAP. Such formatting of template can be customized based on the requirement of the project undertaken and need of the organization.

## Conclusion:

Information is an intangible but invaluable resource for institutions, organizations and individuals, which will benefit them by using it especially if it is well organized and permanently preserved. The goal of digitization initiatives is to cater the multiuser and provide sustainable resources which can be regarded as institutional assets. One important aspect of digitization initiative is to ensure a long-term preservation and continued access to the digitized materials. Therefore, if valid archival records are properly kept and managed, it will provide archival resources to future generations, and provide a glimpse of the past. An immense advantage in converting the endangered documents to a digitized form is its access to even remote location via internet connection, enabling unlimited potential use. The archives of these endangered documents alone could provide a potential for research and be conducted off-site.

The digitization process in terms of identification, collection, classification, organization, digitization and retention of endangered documents (paper, palm-leafs and copper plates) and techniques described in this article have been understood through EAP458 project "Constituting a Digital Archive of Tamil Agrarian History" funded by British Library and Arcadia in the French Institute of Pondicherry. Thus the digitization of endangered documents and the content in the documents provided broader scope for understanding the agrarian community in Tamil Nadu. Similarly the social history of any community or interface with other community or issues can be traced through identification and digitization of related documents available. Thus the digitization process provides scope for understanding a community or issues of debate through the identified endangered documents.

## Acknowledgements:

The author would like to thank Dr. Zoe Headley, Principal Applicant and Mr. Ponnarasu Subramaniam, Co-applicant, Endangered Archive Programme-458 (funded by British Library and Arcadia), French Institute of Pondicherry for the support and discussions on process and procedures of digitization which motivated the author to write this paper.

## References:

Caste, Land and Customs: Rescuing Endangered Documents of Tamil Agrarian History (1650-1950) - http://clac.hypotheses.org/the-project.

Caste, Land and Customs - http://www.ifpindia.org/Caste-Land-and-Custom.html

D. Doermann, J. Liang, and H. Li, 2003. Progress in Camera based Document Image Analysis, *Proceedings of Seventh International Conference on Document Analysis and Recognition*, pp. 606- 610.

Endangered Archives Programme - http://eap.bl.uk/

Xiaofan Lin, 2006. Quality Assurance in High Volume Document Digitization: A Survey, *published in the 2nd International Conference on Document Image Analysis for Libraries*, Lyon, France.

Zoe Headley, 2012. Documenting Crime and Punishment in Tamil Nadu: Fieldwork Report, *ceias-Newsletter*, No. 4. (http://**ceias**.ehess.fr/docannexe.php?id=1972)

# சமுக வரலாற்று ஆவணங்களை எண்ணிமமாக்கலில் புகைப்படக்கலையின் பங்களிப்பு

பெ. சந்திரன்[1]

உலகத்தில் அனைத்து உயிரினங்களும் ஏதோ ஒரு வகையில் தான் வாழ்ந்ததற்கான அடையாளங்களை விட்டுத்தான் சென்று இருக்கின்றன. அவ்வாறான உயிரினங்களில் ஆறறிவு படைத்த மனித இனமும், தான் வாழ்ந்ததற்கான தடயங்களை விட்டுச் சென்றுள்ளது. அவை மற்ற உயிரினங்கள் விட்டுச்சென்ற தடயங்களை விட மேம்பட்டவையாக உள்ளன. உதாரணமாக ஓவியம், கல்வெட்டு, சிற்பம், ஓலைச்சுவடிகள், கட்டடம், தாள்களில் எழுதப்பட்டவை, செப்புப் பட்டயம் மற்றும் கலைப்பொருட்கள் போன்றவற்றை குறிப்பிடமுடியும். இவ்வகை பொருட்களிலிருந்து நாம் நம் முன்னோர்களின் இருத்தலை மட்டுமில்லாமல், அவர்கள் எவ்வளவு செழிப்புடனும், கலாசார கூறுகளுடன் வாழ்ந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.

இந்தவகையில் நம் முன்னோர்கள் விட்டுச்சென்ற தமிழ் சார்ந்த கலைப் பொக்கிஷங்கள் அழியவடையக்கூடிய அபாயத்தை எதிர்நோக்கியுள்ளது. அறிவியற் கண்டுப்பிடிப்புக்கள் பெரிதும் வளர்ச்சியடையாத கடந்த காலங்களில் வரலாற்று ஆவணங்களை எண்ணிமமாக்குதல் (DIGITIZING) என்பது வரலாற்று ஆய்வாளர்களுக்கு மிகவும் கடினமான பணியாகவே இருந்து வந்தது.

இன்றைய நிலையில் வரலாற்று ஆவணங்களை முறையாகவும், விரைவாகவும் மறறும் எளிதாகவும் எண்ணிமப்படுத்த பல வழிகள் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. அவ்வாறான கண்டுபிடிப்புகளிற் சிறந்தது புகைப்படக்கருவி. புகைப்படக்கருவி மூலம் எண்ணிமப்படுத்தும் போது அது எதிர் வரும் தலைமுறைகளுக்குப் பயன்படும்வகையில் அமையும்.

பல வரலாறு கடந்த நிகழ்வுகளை இன்றும் நாம் சுவைக்கிறோம் என்றால் அதற்குக் காரணம் புகைப்படக்கருவியே ஆகும். புகைப்படக்கருவி மூலம் நம் முன்னோர் எண்ணிமமாக்கி விட்டுச்சென்ற புகைப்படத்தின் மூலம் இன்றும் நாம் ரசிக்கும் படியாக பல புகைப்பட வரலாறுகள் சாட்சிகளாக உள்ளன.

அந்நவகையில் EAP 458[2] திட்டம் மூலமாகத் தமிழ் நாட்டில், வரலாற்று ஆவணங்களைப் புகைப்படக்கருவி மற்றும் அதைச் சார்ந்த தொழில் நுட்பக் கருவிகளைக்கொண்டு நாங்கள் எண்ணிமப்படுத்திக் கொண்டு இருக்கிறோம் என்பது குறிப்பிடத்தக்கது.

---

1 P. Chandran,Project Associate [ Photographer]-EAP-458 French Institute of Pondicherry, Puducherry – 605 001 India Email: chandranstills@yahoo.com

2. EAP 458 - constituting a digital archive of Tamil agrarian history in the colonial period funded by British library and Arcadia. Project headed by Dr. Zoe Headley and S.Ponnarasu, Hosted by the French institute of Pondicherry

# EAP 458 (ENDANGER ARCHIVES PROGRAMME)

EAP 458 திட்டத்தின் மூலமாக DSLR (Digital Single Lens Reflect) Nikon D90 Camera மற்றும் Computer மூலமாக Camera Control Pro View NX Software பயன் படுத்தி தமிழ் வரலாறு சார்ந்த ஆவணங்களை, புகைப்படக்கருவியைக் கொண்டு எவ்வாறு எண்ணிமமாக்கிக்கொண்டு இருக்கிறோம் என்பதைப் பார்ப்போம்.

## (DIGITIZING) **எண்ணிமமாக்கல் விளக்கப்படங்கள்**



புகைப்படக்கருவி நிலைப்பாட்டில் புகைப்படக்கருவியைக் கணினி மூலம் இணைக்க வேண்டும், புகைப்படக்கருவி கீழ் பகுதியில் ஆவணங்களைக் கிடத்த வேண்டும். ஆவணங்களைக் கணினி மூலம் சரியாக உள்ளதா என்று பார்த்துக்கொள்ள Camera Control Pro Software மூலமாக ([LV] LIVE VIEW ) OPTION CLICK செய்து ஆவணங்களைக் கணினியில் பார்த்துக்கொள்ள முடிகிறது. இவ்வாறு நாம் பார்ப்பதால் சரியான முறையில் நாம் செய்கிறோமா என்பதைக் கணினி மூலம் அறிய முடிகிறது. நாம் எண்ணிமமாக்கும் இடத்திற்கு ஏற்றவாறு புகைப்படக்கருவியில் OPTION களைக் கணினியில் SET செய்து கொள்ளலாம். இவ்வாறான முறையில் புகைப்படக்கருவி மற்றும் கணினி போன்ற தொழில் நுட்பக்கருவிகள் கொண்டு எண்ணிமமாக்கல் செய்யும் போது மிக விரைவில் செய்துமுடிக்கமுடியும்.



கணினியில் ஏற்கனவே பொருத்தப்பட்டுள்ள CAMERA CONTROL PRO. SOFTWARE மூலமாக LIVE VIEW என்ற OPTION வழியாக ஆவணங்களைக் கணினி வழியாக பார்த்து சரி செய்து கொள்ள உதவுகிறது.

## CAMERA CONTROL PRO. SOFTWARE
## Exposure-1




நாம் எண்ணிமமாக்கும் இடத்தின் Lighting தகுந்தவாறு CAMERA CONTOL PRO SOFTWAREல் Exposure 1 பயன்படுத்தி Shutter Mode – Aperture – Exposure Comp – இவ்வாறான Option களைச் சரி செய்து சிறந்த முறையில் எண்ணிமமாக்கல் செய்ய இந்த Exposure 1 பயன்படுகிறது.

CAMERA CONTROL PRO. SOFT WARE
Exposure-2




நாம் எண்ணிமமாக்கல் செய்யும் பொது Exposure 2 பயன்படுத்தி Focus Point – Metering – ISO Sensitivity – White Balance – Color Temperature  பயன்படுத்தி ஆவணம் செய்வதால், (DIGITIZING) எண்ணிமமாக்கல் மிகச்சரியான முறையில்கணினில் பதிவாகும். புகைப்படக்கருவியில்



பலவகையான Data Format கள் உள்ளன. EAP-க்கு நாங்கள் RAW (12-bit) என்ற Format மூலமாக ஆவணங்களை எண்ணிமமாக்கல் செய்து கொண்டு இருக்கிறோம்.

## CAMERA CONTROL PRO. SOFT WARE
## Mechanical




நமது தேவைக்கேற்றவாறு Mechanical பயன்படுத்தி Release Mode – AF-Area Mode – Focus Mode – இவ்வாறான Option Set செய்து கொள்ளலாம். தேவைக்கேற்றவாறு செய்து கொள்ளலாம்.

## CAMERA CONTROL PRO. SOFT WARE
## Image Processing



நமது தேவைக்கேற்றவாறு Image processing ஐப் 2 பயன்படுத்தி Picture Control - Color space - Option Set செய்து கொள்ளலாம்.

View NX Software



Camera control pro. மூலமாக எண்ணிமமாக்கல் RAW Format File களை View NX Software மூலமாக பார்த்து கொள்ள உதவுகிறது.

View NX Software



எண்ணிமமாக்கல் செய்த ஆவணங்களை RAW File fis View NX மூலமாகச் சரி பார்த்தல். மற்றும் Rotate செய்து கொள்ள முடியும்.

## View NX Software



நாம் எண்ணிமப்படுத்த வேண்டிய RAW FORMAT FILE களை EAP 458 திட்டத்திற்கு View NX Software கொண்டு TIFF(16 Bit) FORMATஆக மாற்றிக்கொள்ள (CONVERT) செய்ய முடியும்.

### முடிவுரை

இவ்வுலகில் பல்வேறு தொழில் நுட்ப கருவிகள் கண்டுப்பிடிக்கப்பட்டு இருந்தாலும், புகைப்படகருவி மூலம் தான் நமது பழங்கால வரலாற்றை திறந்து பார்க்கமுடியும். BRITISH LIBRARY உலகெங்கும் உள்ள வரலாற்று ஆவணங்களை எண்ணிப்படுத்தும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கி வருகிறது. BRITISH LIBRARY யிடம் நிதி உதவி பெற்று நாங்கள் தமிழ் நாட்டில் எங்கெங்கு ஆவணம் உள்ளது என்பதை களப்பணி மூலம் கண்டறிகிறோம். ஆவணம் வைத்திருப்பவர்களை நேரில் சென்று எண்ணிப்படுத்தலின் (DIGITIZING) அவசியங்களையும், எண்ணிப்படுத்தலின் நன்மைகளையும் கூறி ஆவணங்களைப் பெற்று. அவ்வாறு பெற்ற தமிழ் வரலாற்று ஆவணங்களை அவர்களுக்குரிய இடத்திலேயே புகைப்படக்கருவி மற்றும் அதன் தொழில் நுட்ப கருவி கொண்டு சிறந்த முறையில் எண்ணிமமாக்கிக் கொண்டு இருக்கிறோம். அவ்வாறு செய்த அனைத்து ஆவணங்களையும் ஆவணம் கொடுத்தவர்களுக்கு குறுந்தட்டு

(DVD) மூலமாக வழங்குகிறோம். நமது வரலாற்று ஆவணங்கள் பாதுகாக்கப்பட்டுவிட்டது என்பதை எண்ணி அவர்கள் பெரும் மகிழ்ச்சி அடைகின்றனர்.

இவ்வாறான முறையில் இலங்கையில் உள்ள தமிழ் வரலாற்று ஆவணங்களைக் களப்பணி மூலம் ஆய்வு செய்து, அவ் ஆவணங்களை வைத்திருப்பவர்களிடம் நேரில் சென்று எண்ணிமப்படுத்தலின் அவசியங்களையும், நன்மைகளையும் சொல்லி ஆவணங்களைப் பெற வேண்டும். அவ்வாறு பெறும் ஆவணங்களை எண்ணிமமாக்கல் செய்யத் தேவையான பயிற்சிகள் அளிக்க EAP 458 குழு உறுதுணையாக இருக்கும்.

இலங்கையில் உள்ள தமிழ் வரலாற்று ஆவணங்களை எண்ணிமபடுத்துவதால் மனித வாழ்க்கைக்கும், வளர்ச்சிக்கும், பெரும்பங்காக அமையும். எனவே புகைப் படக்கருவி வழியாகத் இலங்கைத் தமிழர்களின் எஞ்சியிருக்கும் பண்பாட்டுச் சின்னங்களை எண்ணிமமாக்குவோம்.

# பண்டைய கால ஓலை மற்றும் காகித ஆவணங்கள் – பாதுகாத்தலும் பராமரித்தலும்

வீ. முத்துக்குமார்*

பண்டைய கால மக்களின் நாகரிகத்தையும் பண்பாட்டுக் கூறுகளையும் பாரம்பரிய கலை வளர்ச்சியையும் ஆன்மீக மற்றும் விஞ்ஞான வளர்ச்சியையும் சமுதாய சூழல்களையும் பற்றி தெரிவிக்கக் கூடிய அறிவுப் பெட்டகங்களாகப் பழங்கால ஓலை மற்றும் காகித ஆவணங்கள் திகழ்கின்றன. பழங்காலத்தில் அரண்மனைகள், கோவில்கள், சமய மடங்கள், கல்வியாளர்களின் இல்லங்கள், முற்கால அரசு அதிகாரிகளின் இல்லங்கள் முதலிய இடங்களில் காணப்பட்ட பண்டைய ஆவணங்கள் இன்று பாதுகாப்பு கருதி நூலகங்கள் மற்றும் அருங்காட்சியகங்கள் போன்ற இடங்களில் பேணப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. இத்தகைய இடங்களில் காணப்படும் பண்டைய ஆவணங்களை இன்றைய தலைமுறையினர் பயன்படுத்திக்கொள்வது மட்டுமல்லாமல் எதிர்காலத் தலைமுறையினரும் பயன்படுத்தும் வகையில் அவற்றை முறையாகப் பேணிப் பாதுகாப்பது என்பது நம் ஒவ்வொருவருடைய தலையாய கடமையாகும்.

அவ்வாறு ஆவணங்களைப் பாதுகாக்கும் பணியினை மேற்கொள்ளும்போது முதலில் ஆவணங்கள் எந்த வகையான பொருட்களின் மீது எழுதப்பட்டுள்ளன என்பதனையும் எந்த வகையான பொருட்களைக்கொண்டு எழுதியுள்ளனர் என்பதனையும், அவற்றின் தன்மை என்ன என்பதனையும் அவை எந்த முறையில் உருவாக்கப்பட்டது என்பதனையும் நாம் தெளிவாக அறிந்து கொண்ட பிறகே ஆவணங்களை பாதுகாக்கும் பணியினை மேற்கொள்ள முடியும். அந்த அடிப்படையில் பழங்கால ஓலை மற்றும் காகித ஆவணங்களின் உருவாக்கப்படி நிலைகள் மற்றும் அவற்றின் தன்மைகள் ஆகியவற்றினைக் காண்போம்.

## ஓலை ஆவணங்கள் தயாரிக்கும் முறைகள்

### ஓலைகளின் வகைகள்

இன்று நமக்கு கிடைக்கக் கூடிய ஓலை ஆவணங்களைப் பொதுவாக மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை நாட்டுப்பனை, சிரிதாளப்பனை, விரிபனை என்பனவாகும்.

### நாட்டுப்பனை

இவை தென்னிந்தியா மற்றும் இலங்கை பகுதிகளில் பரவலாக கிடைக்கக் கூடிய பனைவகையாகும். இவை பெரும்பாலும் 30 அடி முதல் 50 அடி வரை நன்கு வளரக்கூடியதாகும். இதன் மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்படும் ஓலைகள் அதிக அளவாக மூன்று அடி நீளம் கொண்டதாகவும், 1 மி.மீட்டர் தடிமன் கொண்டதாகவும் காணப்படுகின்றன. தென்னிந்தியா மற்றும் இலங்கைப் பகுதிகளில் கிடைக்கும் ஓலை ஆவணங்கள் பெரும்பாலும் நாட்டுப்பனை ஓலைகளிலேயே எழுதப்பட்டுள்ளன.

---

*வீ. முத்துக்குமார், EAPP458 திட்டம், பிரஞ்சு ஆய்வு நிறுவனம், பாண்டிச்சேரி.

## சிரீதாளப்பனை

இவை பெரும்பாலும் இந்தியாவின் வடபகுதிகளில் அதிக அளவில் காணப்படுகின்றன. இப்பனைவகைகள் பெரும்பாலும் 50 அடி முதல் 60 அடி வரை நன்கு வளரக்கூடியவை. இதன் மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஓலைகள் அதிக அளவாக நான்கிலிருந்து நான்கரை அடி வரை நீளம் கொண்டதாகவும், 1 மி.மீட்டர் தடிமன் கொண்டதாகவும் காணப்படுகின்றன. இந்தியாவின் மத்திய பகுதிகளில் கிடைக்கின்ற ஓலை ஆவணங்கள் பெரும்பாலும் சிரிதாளப்பனை ஓலைகளிலேயே எழுதப்பட்டுள்ளன.

## விரீபனை

இவை பெரும்பாலும் தென்னிந்தியாவின் பரவலான இடங்களில் காணப்படுகின்றன. இப்பனைவகைகள் பெரும்பாலும் 60 அடி முதல் 70 அடி வரை நன்கு வளரக்கூடியவை. இதன் மட்டையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஓலைகள் அதிக அளவாக ஐந்திலிருந்து ஆறு அடி நீளம் கொண்டதாகவும் 0.5 மி.மீட்டர் தடிமன் கொண்டதாகவும் காணப்படுகின்றன. தென்னிந்தியா மற்றும் இலங்கையில் கிடைக்கின்ற மதம் சார்ந்த சுவடி நூல்கள் எழுதுவதற்கு விரிபனை ஓலைகளைப் பயன்படுத்தியுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட மூன்று வகையான பனை மரங்களிலிருந்து பெறப்படும் ஓலைகளை எழுதுவதற்கு ஏற்றவாறு பெறுவதற்கு மட்டுமின்றி ஓலைகளை எழுதுவதற்கு முன்பே பல வழிமுறைகளைப் பயன்படுத்தி பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டனர் என்பதனை அறிவது அவசியமானதாகும். அந்த வகையில் ஓலைகளைத் தேர்வு செய்தல், தேய்த்தல், நிழலில் உலர வைத்தல், ஓலை வாருதல், எழுதுதல், மை தயாரித்து எழுதப்பட்ட ஓலைகளில் தடவுதல், காப்புச் சட்டம் இடுதல் மற்றும் கட்டுதல் என்பன அவற்றில் அடங்கும்.

## ஓலைகளைத் தேர்வு செய்தல்

பனைமரத்தின் மேலிருந்து நான்கு முதல் ஆறாவது எண்ணிக்கையில் உள்ள மட்டைகளில் கிடைக்கும் ஓலைகளைத் தேர்வு செய்ய வேண்டும். ஏனென்றால் மேலிருந்து ஒன்று முதல் மூன்று வரை உள்ள மட்டைகள் குருத்துக்களாக விரியாத நிலையில் மிகவும் மெல்லியதாக இருக்கும் எனவே அவற்றை எழுதப் பயன்படுத்தும் பொழுது எளிதில் கிழிந்து விடும் என்பதோடு மட்டுமின்றி நீண்ட காலம் உபயோகத்திலும் இருக்காது. ஆறிலிருந்து அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையுடைய மட்டைகளில் கிடைக்கும் ஓலைகள் முற்றிய நிலையில் காணப்படும். எனவே அவற்றைப் பயன்படுத்தும் போது எழுதுவதற்கு கடினமாக இருப்பதுடன் குறுகிய காலகட்டத்தில் ஓலைகள் முறிந்து வீணாகிவிடும் நிலை ஏற்படும். எனவே நான்கு முதல் ஆறாவது எண்ணிக்கையில் உள்ள மட்டைகளில் கிடைக்கும் ஓலைகள் எழுதுவதற்கு நல்ல நிலையிலும், நீண்ட காலத்திற்குப் பிறகும் நன்கு வளையும் தன்மை கொண்டதாகவும் விளங்கும் என்பதால் அவற்றையே ஓலை எழுதுவதற்கு ஏற்றவையாகத் தேர்வு செய்ய வேண்டும்.

## ஓலைகளைத் தேய்த்தல்

ஓலைகளின் உட்பகுதியில் செல்களுக்கிடையே காணப்படும் இடைவெளிகளை நீக்காவிட்டால் ஓலைகள் காய்ந்த பிறகு ஈரப்பதத்தையும் வெப்பத்தையும் மாற்றி மாற்றி உள்ளிழுத்து வெளிவிடும்

செயல் நடைபெறும். இதன் காரணமாக ஓலையின் தன்மை குன்றி அதன் பயன்பாட்டுக் காலம் குறையும் நிலை ஏற்படும். எனவே தேர்வு செய்யப்பட்ட மட்டையிலிருந்து நரம்பு நீக்கி ஓலைகளை பிரித்து எடுக்க வேண்டும். பிரித்தெடுக்கப்பட்ட ஓலைகளைப் பச்சை நிறம் மாறுவதற்கு முன்பாக சமதரையில் வைத்து கூழாங்கற்களைக் கொண்டு அழுத்தித் தேய்க்கவேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் ஓலையின் உட்பகுதியில் காணப்படும் இடைவெளிகள் நீக்கப்படும். ஓலையின் பயன்பாட்டுக்காலம் நீடிக்கப்படும்.

## நிழலில் உலர வைத்தல்

தேய்த்தெடுக்கப்பட்ட ஓலைகளை சூரிய ஒளி படாத வகையில் பச்சை நிறம் மாறும் வரை (7 முதல் 10 நாட்கள்) நிழலில் உலர்த்த வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் அதிக வெப்பம் இன்றி ஓலை முறுக்கிக் கொள்ளாமலும் அதன் நீடித்து பயன்படும் தன்மை மாறாமலும் விளங்கும்.

## ஓலை வாறுதல்

நிழலில் உலர்த்தப்பட்ட ஓலைகளைத் தேவைக்கேற்ற நீள அகலத்தில் நறுக்கிக் கொண்டு எழுதுவதற்குப் பயன்படுத்தலாம்.

## எழுதுதல்

எழுதுவதற்குத் தேர்வு செய்யப்பட்ட ஓலைகளில் எழுதுவதற்கு எழுத்தாணிகள் பயன்படுத்தப்பட்டன. எழுத்தாணிகளைப் பெரும்பாலும் மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவை குண்டெழுத்தாணி, வாறெழுத்தாணி மற்றும் மடக்கெழுத்தாணி என்பனவாகும்.

குண்டெழுத்தாணி என்பது ஓலையில் எழுதுவதற்கு பழகிக்கொள்ளும் நிலையில் உள்ளவர்கள் பயன்படுத்துவதாகும். இதில் ஒரு முனை கூர்மையானதாகவும் மறுமுனை சிறிய குண்டு வடிவிலும் காணப்படும்.

வாறெழுத்தாணி என்பது ஓரளவு எழுதக் கற்றுக்கொண்ட நிலையில் உள்ளவர்கள் எழுதவும் ஓலைகளை வாரவும் பயன்படுத்துவது. இதில் ஒருமுனை கூர்மையானதாகவும் மறுமுனை கத்தி வடிவிலும் காணப்படும்.

மடக்கெழுத்தாணி என்பது நன்கு எழுதுபவர்கள் பயன்படுத்துவதாகும். இதில் ஒருமுனை கூர்மையானதாகவும் மறுமுனை கத்தி வடிவிலும் காணப்படும். இது மடக்கி எடுத்துச்செல்லும் நிலையில் அமைக்கப்பட்டதாகும்.

## எழுதும் முறை

தேர்வு செய்யப்பட்ட ஓலையில் எழுதும் முறையில் பரவலாக இடத்திற்குத் தக்கவாறு மாறுபடுகின்றன என்றாலும் பெரும்பாலான இடங்களில் பின்பற்றப்பட்ட எழுத்துமுறையானது இடது கையில் ஓலையையும் வலது கையில் எழுத்தாணியையும் வைத்து கீறல் முறையில் எழுதப்பட்டதாகும். பொதுவாக ஓலைகளில் புள்ளியிட்டு எழுதும் பழக்கம் இல்லை என்பதற்கு புள்ளி வைப்பதன் மூலம் ஓலை கிழிந்து விடும் என்ற காரணத்தையே பெரும்பாலும் கூறுவர். ஆனால் உண்மையான காரணம் புள்ளியிட்டு எழுதும்போது தொடர்ச்சியாக எழுதும் பொழுது

எழுத்தாணியை எடுத்து எழுதுவது என்பது வேகம் குறைவதுடன், எழுதும் முறைக்கு ஏற்புடையதாக இருக்காது என்பதே உண்மை.

## மை தயாரித்தல் மற்றும் ஓலையில் தடவுதல்

எழுதப்பட்ட ஓலைகளில் எழுத்துக்கள் நன்றாகத் தெரிவதற்கும், எழுத்தாக உருவான கீறல்களில் மேலும் பாதிப்புகள் ஏற்படாத வகையில் மை அல்லது மஞ்சள் தடவுதல் என்பது பழங்கால நடைமுறைப் பழக்கமாகும். அவ்வாறு தடவப்படும் மை தயாரிப்பதற்கு சில வழிமுறைகள் உள்ளன. விளக்கெண்ணை அல்லது இலுப்பை எண்ணை கொண்டு நிரப்பப்பட்ட விளக்கேற்றி அதன் மேற்புறம் செல்லும் புகையை மறைக்கும் வகையில் குழியான மட்பாண்டத்தை கவிழ்த்து, அதில் படியும் புகைத்துகள்களை எடுத்து கோவையிலைச் சாறு அல்லது ஊமத்தை இலைச் சாற்றுடன் கலந்து உருவாக்கப்பட்ட மையை கொண்டு தடவிப் பாதுகாப்பது வழக்கமாகும்.

## காப்புச் சட்டம் இடுதல் மற்றும் கட்டுதல்

எழுதித் தொகுக்கப்பட்ட ஓலைகளை அவற்றின் நீளத்திற்குத் தகுந்தபடி ஒன்று அல்லது இரண்டு துளைகளை இடுதல் வேண்டும். இரண்டு துளைகள் இடப்பட்ட ஓலைகளில் இடது புறம் உள்ள துளையில் நூலும் வலது புறம் உள்ள துளையில் நாராசமும் இடப்படுதல் வேண்டும். நாராசம் என்பது ஓலைகளில் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அவற்றை தொகுத்து தொய்வின்றி கட்டுவதற்கு பயன்படும் பொருளாகும். இது மூங்கில். உலோகம் மற்றும் தந்தம் போன்றவற்றில் உருவாக்கப்பட்ட குச்சியாகும். இதன் ஒருமுனை நூலுடன் இணைக்கப்பட்டும் மறுமுனை ஓலைகளின் துளைகளில் நுழைப்பதற்கு ஏற்றவகையிலும் அமைக்கப்பட்டிருக்கும். ஓலைகளின் தொகுப்பின் இருபுறமும் அவற்றின் அளவிற்கு தக்க வகையில் அவற்றை காக்கும் வகையில் சட்டங்கள் அமைக்கப்படும். இவை மா, பலா அல்லது மூங்கில் போன்ற மரங்களினாலோ அல்லது செம்பு, இரும்பு, தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களினாலோ உருவாக்கப்பட்டவையாக இருக்கும். இவை ஓலைகளின் ஓரங்கள் முறிந்து விடாமலும் பக்கங்கள் பாதிப்புக்குள்ளாகாத வகையிலும் காத்து நிற்கின்றன.

காகிதத்தின் பயன்பாடே ஓலைகளைப் பயன்படுத்தும் பழக்கம் குறையக் காரணமாக அமைந்தது என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். தாவரப்பொருட்களின் செலுலோஸ் என்ற மூலப்பொருட்களின் கூழிலிருந்து உருவாக்கப்பட்டதே காகிதம் ஆகும். காகிதத்தை மூலமாகக் கொண்டு எழுதப்பட்ட காகிதச்சுவடிகள் ஓலைச்சுவடியின் பாதுகாப்பு வழிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு பாதுகாக்கப்படுகின்றன. ஆனால் காகிதச்சுவடிகளைப் பொருத்தவரை ஓலைச்சுவடிகளைப் போன்று காகிதம் தயாரிக்கும் பொழுதே பாதுகாப்புப் பணிகள் மேற்கொள்வது கிடையாது.

## தீங்கு விளைவிக்கும் காரணிகள்

பழங்கால ஆவணங்கள் வைக்கப்பட்டுள்ள சூழலை அடிப்படையாகக் கொண்டே பாதிப்புக்குள்ளாகின்றன. பொதுவாகத் தாவர ப்பொருட்களாகக் கருதப்படும் ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகள் பௌதீக, வேதிம மற்றும் உயிரியற் காரணிகளால் பாதிப்புக்குள்ளாகின்றன.

## பௌதீகக் காரணிகள்

வெப்பம் - தாவரப்பொருட்களாகக் கருதப்படும் ஓலைச்சுவடிகள் மற்றும் காகிதச் சுவடிகள் சூரிய ஒளி, அதிக ஒளி பொருந்திய மின் விளக்குகள் போன்றவற்றின் நேரடித் தாக்கத்தினால் எளிதில் தேவையான ஈரப்பதத்தை இழப்பது மட்டுமின்றி அதன் தன்மையை இழந்து சுருண்டு விடும் நிலையை அடைகின்றது. மேலும் அதிக வெப்பத்தின் காரணமாக தீப்பற்றிக்கொண்டு எரிந்து சாம்பலாக மாறும் நிலை ஏற்படுகின்றது.

நீர் - வெள்ளப்பெருக்கின் நேரடித் தாக்கத்தினால் அடித்துச்சென்றுவிடுவதன் காரணமாக ஏராளமான ஓலை மற்றும் காகித ஆவணங்கள் அழிந்துவிட்ட நிலையை அறியமுடிகின்றது. மேலும் ஈரப்பதம் அதிகம் உள்ள இடங்களில் சுவடிகளை வைப்பதன் மூலம் பூஞ்சணைகள் உருவாகும் நிலை ஏற்படும். இதன் மூலமாக சுவடிகளின் தன்மை குன்றி எளிதில் பாதிப்பிற்குள்ளாகும்.

## உயிரியல் காரணிகள்

பூஞ்சணைகள் - சுவடிகளில் காணப்படும் ஈரப்பதம் காரணமாகக் காற்றில் உள்ள நுண்ணுயிர்களால் பூஞ்சணைகள் உருவாகின்றன.

பூச்சிகள் - சுவடிகளில் காணப்படும் பூஞ்சணைகளை உண்பதற்காக பல்வேறு வகையான பூச்சிகள் வந்தேறுகின்றன. இவை பூஞ்சணைகளை உண்பதுடன் சுவடிகளையும் சேர்த்து உண்டுவிடுகின்றன. அவற்றில் சுவடிகளை பாதிக்கும் பூச்சிகளாக கருதப்படும் இராமபாண பூச்சி, வெள்ளி மீன், கரப்பான், கறையான் போன்றவையும் எலிகளும் இதில் அடங்கும்.

## வேதியல் காரணிகள்

தூசு - காற்றில் உள்ள தூசுக்கள் சுவடிகளில் உள்ள ஈரப்பதத்துடன் படிவதன் மூலம் சில கால கட்டங்களுக்குப் பிறகு தன்மை குன்றி எளிதில் அழிந்துவிடும் அபாய நிலையை அடைந்து விடுகின்றன.

அமிலம் - காற்றிலுள்ள தூசுகளும் அதனுடன் கூடிய காரத்தன்மை கொண்ட அமிலங்களும் படிவதன் மூலமாக சுவடிகள் சிதைவடையும் நிலையை அடைகின்றன. மேலும் அவற்றில் உள்ள எழுத்துக்களும் அரிக்கப்பட்டு சுவடிகள் சிதிலமைடைகின்றன.

## மனிதனால் ஏற்படும் பாதிப்புகள்

சுவடிகளின் முக்கியத்துவம் அறியாமல் அலட்சியத்தின் காரணமாகவும் எதிர்பாராத விதமாகவும், அவற்றை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றி முறையான பயிற்சி பெறாமல் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கை காரணமாகவும், எப்படிப்பட்ட இடங்களில் சுவடிகளை சேமித்து வைக்கவேண்டும் என்பது தெரியாமலும் தவறான முறையில் கையாளுவதனாலும் பாதிப்புக்குள்ளாகின்றன.

## பாதுகாப்பு வழிமுறைகள்

மேற்கூறப்பட்ட காரணிகளினால் பாதிக்கப்படும் சுவடிகளை எவ்வாறு பாதிப்பு ஏற்படாத வகையில் தடுப்பது மற்றும் பாதிக்கப்பட்ட சுவடிகளை எவ்வாறு மேலும் பாதிப்புக்குள்ளாகாத வகையில் பாதுகாப்பு வழிமுறைகளை மேற்கொள்வது என்பது பற்றிக் காண்போம்.

## சுத்தம் செய்தல்

காகிதம் மற்றும் ஓலைச் சுவடிகளை அவ்வப்போது கட்டுக்களைப் பிரித்துச் சுத்தம் செய்து தூசுகளை அகற்றி வைத்தல் அவசியமான ஒன்றாகும். இவ்வாறு செய்வதன் மூலமாக அவற்றில் உள்ள பூச்சிகளையும் அவற்றின் எச்சங்களையும் அகற்றி பாதிப்பிலிருந்து காக்கலாம்.

மேலும் சுத்தம் செய்யப்பட்ட ஓலைச் சுவடிகளை லெமன் கிராஸ் அல்லது சிட்ரோ நெல்லா போன்ற தாவர எண்ணெய்களைக் கொண்டு பூசுவதன் மூலம் பூச்சிகள் அழிவதுடன் அவற்றின் முட்டைகளும் அழிந்து மேலும் பூச்சிகள் வராத வகையில் பாதுகாக்கப்படும். காகிதச்சுவடிகளை பொறுத்தவரை தூசுகளை சுத்தம் செய்து பேரா-டை-குலோரோ-பென்சின் போன்ற வேதிம பொருட்களைக் கொண்டு பாதுகாப்புப் பேழைகளைப் பயன்படுத்தி பூச்சிகள் வராமல் பாதுகாக்கலாம்.

ஓலைச் சுவடிகளைப் பட்டு நூல் அல்லது பருத்தியினாலான அதிகம் முருக்கேற்றப்படாத நூல்களைக் கொண்டு கட்டிவைத்தல் சுவடிகள் சிதைவிலிருந்து பாதுகாக்க வழிசெய்யும். காகிதம் மற்றும் ஓலைச் சுவடிகளை சிவப்பு அல்லது காவி நிற பட்டு அல்லது பருத்தித் துணிகளைக் கொண்டு சுற்றி வைத்தல் தூசு மற்றும் பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க உதவும். சிவப்பு மற்றும் காவி நிறத்தாலான துணிகள் பூச்சிகளின் பார்வைக்கு வெறுப்பை ஏற்படுத்தும் என்பதனால் இதனை பழங்காலம் முதற்கொண்டே பயன்படுத்தியுள்ளனர்.

உடைந்த ஓலைகளை நூல் கொண்டு தைத்துப் பாதுகாக்கலாம். காகித சுவடிகளை கிழிந்த பகுதிகளில் ஜப்பான் டிஸ்யு பேப்பர் அல்லது துணி மற்றும் டொலின் ஆகியவற்றைக் கொண்டும் photolam sheet போன்றவற்றைக் கொண்டும் ஒட்டிப் பாதுகாக்கலாம்.

## பெட்டிகளில் வைத்தல்

சுவடிகளின் அளவிற்கு ஏற்ற வகையில் காகித அட்டை மற்றும் மரங்களால் ஆன பெட்டிகளை உருவாக்கி அவற்றில் வைப்பதன் மூலம் தூசு, ஒளி மற்றும் ஈரப்பதம் போன்றவற்றிலிருந்து பாதிப்படையாமல் தடுக்கலாம்.

## சேமிக்கும் இடம்

சுவடிகளை வைக்கும் இடம் தரை மட்டத்திலிருந்து நன்கு உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்ட கட்டிடத்தில் இருப்பது நன்று. சூரிய ஒளி எளிதில் ஊடுருவாத வகையில் அமைந்திருத்தல் வேண்டும். மேலும் அதிகம் ஒளிதரக்கூடிய மின்விளக்குகளை பன்படுத்தாது 20 முதல் 30 voltage கொண்ட குழல் மின்விளக்குகளை பயன்படுத்துதல் அதிக ஒளியைக் கட்டுப்படுத்தும். ஒரு சுவடி பாதுகாப்பு அறையில் தட்பவெப்ப நிலையானது 24 முதல் $28^{\circ}C$ வரை என்ற அளவிற்கு மிகாமலும் குறையாமலும் பார்த்துக்கொள்ளுதல் அவசியமானதாகும். காற்றோட்ட வசதி கொண்ட அறைகளை அமைத்தல் அவசியமானது. மேலும் ஈரப்பதம் சுவடி அறையில் 54 முதல் 64 என்ற விகித கட்டுப்பாட்டில் வைத்திருப்பது நீண்ட காலம் சுவடிகளை கொண்டு செல்லும் இடமாக அமையும். சுவடி அறையினுள் உள்ள அலமாரிகள் மரத்தால் ஆனதாக இருத்தல் நன்று. மரத்தாலான அலமாரிகள் வெப்பத்தையும் ஈரப்பதத்தையும் முறைப்படுத்தி உள்ளிருக்கும் சுவடிகளை பாதுகாக்கின்றன.

தற்கால சுவடி பாதுகாப்பு நூலகங்களில் குளிர்சாதன வசதிகளை அமைத்து சுவடிகளை பாதுகாத்து வருகின்றனர். இதன்மூலமாக சுவடி அறையின் காற்று, ஒளி, ஈரப்பதம் போன்றவை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படுகிறது.

மேலும் சுவடிப் பாதுகாப்பு அறையில் தீவிபத்தினைத தவிர்ப்பதற்குத் தீயணைப்பு கருவிகளையும் ஒலி பெருக்கி கருவிகளையும் பயன்படுத்துதல் அவசியமாகும். மேலும் சுவடி பாதுகாப்பு பணியினை மேற்கொள்பவர்கள் தகுந்த சுவடி பாதுகாப்பு பயிற்சி பெற்றவராகவும் பாதுகாப்பு கருவிகளை பயன்படுத்தும் அறிவு பெற்றவராகவும் இருத்தல் இன்றியமையாத ஒன்றாகும்.

ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை சுவடிகளின் நிலை குறித்து சோதனை மேற்கொண்டு பாதுபாப்பு நடவடிக்கைகளை கையாளுவது அவசியமாகும்.

## பழைய முறை

காகிதம் மற்றும் ஓலைச் சுவடிகளை பூச்சிகளிடமிருந்து பாதுகாக்க வசம்பு, கருஞ்சீரகம், வால்மிளகு, வேப்பிலை, மஞ்சள், கற்பூரம், கிராம்பு போன்றவற்றை சம அளவு ஒன்றாகச் சேர்த்து இடித்து பொடி செய்து அவற்றை பருத்தி நூலினாலான துணிகளில் சிறு சிறு முடிச்சுகளாக கட்டி சுவடிகள் உள்ள இடங்களின் அருகில் வைக்கும் பொழுது அவற்றின் மணம் காரணமாக பூச்சிகள் சுவடிகளை பாதிப்புக்கு உள்ளாக்காது.

மேலும் சுவடிகளில் மஞ்சள், கோவை இலை, மற்றும் ஊமத்தை இலை போன்றவற்றின் சாறுகளை தடவி வைப்பதன் மூலம் பூச்சிகளின் பாதிப்புக்கு ஆளாகாது.

வெப்பம் மற்றும் ஈரப்பதத்தினை கட்டுக்குள் கொண்டுவர வீட்டின் சமையல் அறையில் அடுப்பின் மேற்கூரையில் சுவடிகளைச் செருகி வைத்து வந்துள்ளனர். மேலும் மர அலமாரிகளில் வைத்தும் பாதுகாத்து வந்துள்ளனர்.

இவ்வாறாக பழங்கால ஓலை மற்றும் காகித ஆவணங்களை முறையாகப் பாதுகாத்து பராமரிப்பதன் மூலம் அடுத்து வரும் தலைமுறையினருக்கு மூலச் சுவடிகளையும் அவற்றில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் பாதுகாப்பான முறையில் கொண்டு செல்ல ஏதுவாக அமையும்.

# ஈழத்துச் சித்தமருத்துவ ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாத்தலும், ஆவணப்படுத்தலும்

சே. சிவசண்முகராஜா

முற்காலத்தில் தமிழ் இலக்கியம், இலக்கணம், சமயம், சோதிடம் போன்ற பல்வேறு துறை சார்ந்த நூல்களையும் எமது முன்னோர்கள் ஏடுகளில் எழுதிப் பாதுகாத்து வந்தது போலவே, தமிழ் வைத்தியநூல்களையும், வைத்தியமுறைகளையும் ஏடுகளில் எழுதிப் பாதுகாத்து வந்துள்ளனர். பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் காகிதப்பாவனை ஏற்பட்டதைத் தொடர்ந்து, ஏடெழுதும் பழக்கம் படிப்படியாகக் கைவிடப்பட்டது. தற்காலத்தில் ஏடெழுதுவாருமிலர்: ஏடுவாசிப்பாரும் அருமையாகவேயுளர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் அச்சுயந்திரசாலைகள் தோற்றம் பெற்றதையடுத்து ஏட்டுச்சுவடிகளில் இருந்த தமிழ் நூல்களிற்பல அச்சில் பதிப்பிக்கப்பட்டன. தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளும் கணிசமான அளவில் அச்சில் பதிப்பிக்கப்பட்டன. இலங்கையைப் பொறுத்தவரையில் ஏட்டுச்சுவடிகளிலிருந்து அச்சில் பதிப்பிக்கப்பட்ட முதல் வைத்திய நூலாக 'அமுதாகரம்' என்னும் விஷவைத்தியநூல் விளங்குகிறது. இந்நூல் சு.தம்பையாபிள்ளை என்பவரால் 1892 ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்டதாகும்[1] அவரைத் தொடர்ந்து ச.தம்பிமுத்துப் பிள்ளை என்பவரால் நயனவிதி குணமும் மருந்தும்[2], செகராசசேகரம்[3], சுதேசவைத்திய அவுடதத்திரட்டு[4] முதலான நூல்களும், ஐ.பொன்னையா என்பவரால் பரராசசேகரம் (ஏழு பாகங்கள்)[5], அங்காதிபாதம் (வாகடதத்துவத்துடன்)[6], இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம், பதார்த்தசூடாமணி[7], சொக்கநாதர் தன்வந்திரியம்[8], வைத்திய சிந்தாமணி[9], வைத்தியத்தெளிவு[10], வைத்திய பூரணம் - 205 (அகத்தியமுனிவர் அருளிச் செய்தது)[11] ஆகிய நூல்களும் ஏட்டுச்சுவடிகளிலிருந்து அச்சில் பதிப்பிக்கப்பட்டன.

அங்ஙனம் ஏட்டுச்சுவடிகளிலிருந்து சில மருத்துவநூல்கள் அச்சில் பதிப்பிக்கப்பட்டதன் மூலம் அவை பாதுகாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டபோதிலும், அவ்விதம் பயன்படுத்தப்பட்ட ஏட்டுச்சுவடிகள் எதுவும் எவ்விதத்திலும் பாதுகாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படவில்லை. அது மட்டுமன்றி முற்கூறிய நூல்கள் ஏடுகளிலிருந்ததை அப்படியே அச்சில் பதிப்பிக்கப்பட்டவையாக உள்ளனவே தவிர அவை சரிவரத் தொகுக்கப்படவோ, உரையெழுதப்படவோ இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அங்ஙனம் பதிப்பிக்கப்பட்ட மருத்துவநூல்களின் எண்ணிக்கையும் இருபதிற்கும் குறைவாகவேயுள்ளன. எனவே, எமது நாட்டைப் பொறுத்தவரையில் மேலும்பல தமிழ் மருத்துவ நூல்களும், வைத்தியமுறைகளும் இன்னமும் ஏட்டுச்சுவடிகளிலேயே காணப்படுவது கவனத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாகும்.

ஒருகாலத்தில் இலங்கையில் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் பல்லாயிரக்கணக்கில் இருந்துள்ளபோதிலும் தற்காலத்தில் அவை சில ஆயிரக்கணக்காகக் குறுகிப்போய்விட்டன என்றே

கூற வேண்டும். "சுவடிகளின் அழிவு என்று பார்க்கும்போது, கடல் வெள்ளத்தாலும், தீயினாலும், வறுமையாலும், அறியாமையாலும், அந்நியராலும், உற்றவராலும், மற்றவராலும், பூச்சிகளாலும் அழிந்தவை போகத் தற்போது எஞ்சியிருப்பவை சிலவே" என்ற ஏ. வாசுகிதேவியின் கூற்று சாலப் பொருத்தமானது.[12] தமிழ் மருத்துவர்களின் அசிரத்தை, பிறருக்குக் கொடுக்க விரும்பாத தன்னலப்போக்கு, கடந்த மூன்று தசாப்தங்களுக்கு மேலாக இங்கு நடந்த உள்நாட்டு யுத்தம் போன்ற காரணங்களினால் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் சரிவரப்பாதுகாக்கப்படாமையால் அவற்றுட்பல அழிந்தும் எஞ்சியவற்றுட் கணிசமானவை செல்லரித்தும், முனைமுறிந்தும், சிதிலமடைந்தும் போய்விட்டன

"சித்தமருத்துவம் சம்பந்தமான நூற்றுக்கணக்கான பழைய ஓலைச்சுவடிகள் கிராமங்கள் தோறும் வைத்தியர்களிடமும், அவர்களது பரம்பரையினரிடமும் தேங்கிக் கிடக்கின்றன. அவற்றிற் பெரும்பாலானவை பாதுகாப்பற்றும், பயனற்றும் செல்லரித்துக் கொண்டிருக்கின்றன" என்று இ.பாலசுந்தரம் அவர்கள் இங்குள்ள ஏட்டுச்சுவடிகளின் நிலையை எடுத்துக்கூறியுள்ளதும் நோக்கற்குரியது.[13]

எனவே, அழிந்தவைபோக, தப்பிப்பிழைத்துத் தற்போது பல இடங்களிலும் சிதறிக்கிடக்கும் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாத்தலும், அவற்றை உரிய முறையில் ஆவணப்படுத்தித் தற்கால, எதிர்காலச் சந்ததியினருக்குப் பயன்படும்படி செய்ய வேண்டியதும் காலத்தின் கட்டாயமாகும். அவை பற்றி யாழ்ப்பாணப்பல்கலைக்கழக பிரதான நூலகத்திலுள்ள தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரையில் ஆராயப்பட்டுள்ளது.

## ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்தலும், பாதுகாத்தலும்

முற்காலத்தில் அரசர்கள் நூல்நிலையங்களை நிறுவி, ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாத்து வந்துள்ளனர். குறிப்பாக, யாழ்ப்பாண மன்னர் காலத்தில் சரசுவதி மஹாலயம் என்னும் நூல் நிலையம் நிறுவப்பட்டு அங்கு மருத்துவம் உட்பட பல்துறைசார்ந்த ஏட்டுச்சுவடிகள் சேகரிக்கப்பட்டிருந்ததாக யாழ்ப்பாணச்சரித்திரம் கூறுகிறது.[14]

மன்னராட்சிக்குப் பின்னர் மடங்கள், ஆலயங்கள் என்பன ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து வைத்ததில் பெரும்பங்காற்றியுள்ளன. ஆயினும் வைத்திய ஏடுகளிற் பெரும்பாலானவை வைத்தியர்களாலும், அவர்தம் பரம்பரையினராலுமே பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன. அவர்கள் காலத்திற்குக்காலம் பழைய ஏட்டுச்சுவடிகளைப் பிரதி பண்ணியும் (படி எடுத்தும்), வேப்பிலை, மஞ்சள், கற்பூரம் போன்ற கிருமி கொல்லிகளையிட்டும் ஏடுகளைப்பாதுகாத்து வந்துள்ளனர். ஏட்டுச்சுவடிகள் மீது முள்முருக்கமிலையால் அதன் சாறு படும்படி தேய்ப்பதன் மூலம் அவற்றிலுள்ள எழுத்துக்களைத் துலக்கமாக்கி வாசிக்கும் வழக்கமும் தற்காலத்திலும் காணப்படுகிறது.[15] முள்முருக்கிலைச்சாறு கிருமிகொல்லியாக ஓலைகளைப் பாதுகாப்பதிலும் உதவுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக ஏட்டுச்சுவடிகள் அவர்களால் அடிக்கடி படிக்கப்பட்டுப் பயன்பாட்டிலிருந்ததாலும் அவை பாதுகாக்கப் பட்டன.

இந்தியாவைப் பொறுத்தவரையில் ஏட்டுச்சுவடிகளைப் பாதுகாத்து ஆவணப்படுத்தும் நோக்குடன் பல நிறுவனங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தஞ்சை சரசுவதி மஹால் நூலகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம், கேரளப் பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் என்பன அவற்றுட் குறிப்பிடத்தக்கன.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் ஏட்டுச்சுவடிகளைக் குறிப்பாகத் தமிழ் மருத்துவ ஓலைச்சுவடிகளைச் சேகரித்து, பாதுகாத்து ஆவணப்படுத்தல் என்பது இன்னமும் சரிவர மேற்கொள்ளப்படவில்லை என்றே கூறவேண்டும். சில நூலகங்கள் தனியார் வாசிகசாலைகள், என்பன கணிசமான அளவில் ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து வைத்துள்ள போதிலும், அவற்றைச் சரிவரப்பாதுகாத்து, ஆவணப்படுத்தும் செயற்றிட்டங்கள் அவற்றிடம் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஏட்டுச்சுவடிகளைச் சேகரிப்பதற்கான விரிவான திட்டங்களும் வகுக்கப்படாதிருப்பதும் வருத்தத்திற்குரியது.

தற்போது எம்மிடமுள்ள ஏட்டுச்சுவடிகள் 150 – 200 ஆண்டுகளுக்கும் முற்பட்டவையாகவேயுள்ளன. எனவே, அவற்றைத் தட்ப வெப்ப நிலைகளாலும், கரப்பான், இராமபாணம் போன்ற பூச்சிகளாலும் பாதிக்கப்படாமல் பாதுகாத்தலும் அவசியமாகின்றது. கேரள பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலுள்ள ஏட்டுச்சுவடிகள் அங்குள்ள மிகையான தட்ப வெப்பநிலைகளினால் சிதைவடையாமல் இருப்பதற்காகக் குளிர்சாதனம் செய்யப்பட்ட ஓர் அறையில் பாதுகாக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.[15] அவ்விதமே, சென்னை தியாசபிக்கல் சொசைட்டியிலும் குளிரூட்டப்பட்ட அறையில் ஏட்டுச்சுவடிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.[16] ஏட்டுச்சுவடிகளைக் கரப்பன், இராமபாணம் போன்ற பூச்சிகிளிலிருந்து பாதுகாப்பதற்கு நவீன கிருமிநாசினிகள் விசிறலாம் என்றாலும் அவை ஏட்டுச்சுவடிகளை எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டாது என்பதை உறுதிப்படுத்தல் அவசியமாகின்றது. தென்னிந்திய சுவடிகள் ஆய்வாளர் அரங்கராஜ் அவர்களின் ஆலோசனையுடன் சில நூலகங்களில் வேப்பெண்ணெயில் வாழைப்பழத்தை ஊறவைத்து (தேவைப்படின் சிறிது காய்ச்சி) அதனால் ஏட்டுச்சுவடி ஓலைகளைத் துடைத்து சுத்தப்படுத்தி வைப்பதன் மூலம் ஏட்டுச்சுவடிகள் சிறிது காலம் துலக்கமாகவும், சிதைவடையாமலும் பாதுகாப்பாக வைத்திருக்கும் முறை பின்பற்றப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கது.[17]

## ஆவணப்படுத்தல்

ஏட்டுச்சுவடிகள் உரியமுறையில் பட்டியலிடப்பட்டு, அவற்றிலுள்ள விடயங்கள் தெளிவாக அட்டவணைப்படுத்தப்பட்டால்தான் அவை பயனாளிகளுக்கு சிறப்பாகச் சித்தமருத்துவர்களுக்கும், ஆய்வாளர்களுக்கும் பிரயோசனமாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் அதிகபட்சமாக யாழ்.பல்கலைக்கழகப் பிரதான நூலகத்தில் சுமார் 207 ஏட்டுச்சுவடிகள்வரை சேகரிக்கப்பட்டுப் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரங்கள் சி.முருகவேள் அவர்களால் பட்டியலிடப்பட்டு இரண்டு பகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. முதல் பகுதியில்191 – 126 ஏட்டுச்சுவடிகளின் விபரமும், இரண்டாம் பகுதியில்[19] 127 – 207 வரையிலான ஏட்டுச்சுவடிகளின் விபரங்களும் பின்வரும் ஒழுங்கில் தொகுக்கப்பட்டுள்ளன.[20]

1. தலைப்பு (சுவடியில் தலைப்பிடப்படாதவிடத்துப் பொருள் அடிப்படையில் ஒரு இடைக்காலத்தலைப்பு அடைப்புக் குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளது)
2. பிரதி பாடத்தொடக்கம் (முதல் பாடல் வரி அல்லது முதல் வரி)
3. பிரதிப் பாட முடிவு (பிரதியின் கடைசி வரி)
4. ஓலைகளின் எண்ணிக்கை
5. அளவும், பிற பௌதீக விபரங்களும் (ஓலையின் அளவு, நல்லநிலை, சிதிலம் போன்றன)
6. குறிப்புகள்

இத்தொகுப்புமுறையானது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை மாதிரிப் படிவத்தை[21] ஓரளவுக்கு ஒத்திருந்தாலும் சில முக்கிய தகவல்கள் சேர்க்கப்படாமல் இருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. உதாரணமாக, சுவடியின் முழுமை/ குறைவு, அச்சான விபரம், செய்யுளா? உரைநடையா? இரண்டும் கலந்ததா?, செய்யுட்களின் எண்ணிக்கை, நூலின் சிறப்பு / சுருக்கம், நூலின் உட்தலைப்புகள் போன்ற விபரங்கள் இப்பட்டியலில் இடம்பெறவில்லை

யாழ்.பல்கலைக்கழக நூலக ஏட்டுச்சுவடிகள் பட்டியலின்படி அங்குள்ள 207 ஏட்டுச்சுவடிகளில் 102 ஏட்டுச்சுவடிகள் தமிழ் மருத்துவம் சார்ந்தவையாக உள்ளன. அவற்றைவிடச் சில மாந்திரீக நூற்சுவடிகளும், 07 மாட்டு வாகடச் சுவடிகளும் உள்ளன. அச்சுவடிகளும் முற்காலத்தில் தமிழ்மருத்துவத்தின் ஓர் அங்கமாக விளங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், அவை இவ்வாய்வில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

மருத்துவத்துடன் நேரடியாகத் தொடர்புபட்ட 102 ஏட்டுச்சுவடிகளில் நூற்பெயரிடப்பட்டவையாக 30 சுவடிகளும், பெயரிடப்படாதவையாக 72 சுவடிகளும் உள. பெயரிடப்பட்ட சுவடிகள் 30 இல் இலங்கைக்குரிய தமிழ் மருத்துவ நூல்களைக் கொண்டவையாக 09 சுவடிகளும், தென்னிந்திய சித்தமருத்துவ நூல்களைக் குறிப்பனவாக 21 சுவடிகளும் காணப்படுகின்றன. அது மட்டுமன்றி, இச்சுவடிகளில் 75 சுவடிகள் நல்ல நிலையிலும், 27 சுவடிகள் சிதைவடைந்த நிலையிலும் காணப்படுகின்றன.

ஏட்டுச்சுவடிகள் பட்டியலின் உதவியுடன் மேற்படி விபரங்களை அறியக்கூடியதாக இருந்தாலும் இப்பட்டியல்கள் பயனாளி ஒருவர் தமக்குத் தேவையான ஏட்டுச்சுவடி ஒன்றை இலகுவில் அடையாளங்காணக் கூடியமுறையில் விரிவான விபரங்களைக் கொண்டதாக அமைந்திருக்கவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுதல் அவசியமாகின்றது. தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் 102 என்றும், அவற்றுள் நூற்பெயர் குறிக்கப்பட்டவை 30 என்றும் இப்பட்டியல்கள் மூலம் அறியக்கூடியதாக இருந்தாலும் உண்மையில் பெரும்பாலான ஏட்டுச்சுவடிகளில் மேலும்பல நூல்கள் எழுதப்பட்டிருப்பதை அல்லது உள்ளடக்கப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

உதாரணமாக, 29 ஆம் இலக்க ஏட்டுச்சுவடி சர்ப்ப சாஸ்திரம் - செகராய சேகரம் என்று மட்டுமே நூலகப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது.[22] ஆனால் இச்சுவடியில் இந்நூலைத்தவிர, சித்தராரூடம் - தெரிகவி, அமுதாகரம் - சர்ப்பசாஸ்திரம் ஆகிய வேறு இரு நூல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.[23] அவ்விதமே, 169 ஆம் இலக்க ஏட்டுச்சுவடி செகராசசேகரம் - சர்ப்பசாஸ்திரம்

என்று மட்டுமே பட்டியலில் கூறப்பட்டுள்ளது.[24] இச்சுவடியிலும் சித்தராரூடம்-தெரிகவி, அமுதாகரம் ஆகிய இரு நூல்களும் அடக்கப்பட்டுள்ளன. இவ்விரு சுவடிகளும் ஒருவரால் எழுதப்பட்டோ அல்லது ஒன்றைப் பார்த்து மற்றது எழுதப்பட்டோ இருத்தல் வேண்டும்.

சுவடி இலக்கம் 7 நயனவிதி (முதலியன) என்று பட்டியலில் தலைப்பு குறிப்பிடப்பட்டுள்ளதுடன், குறிப்புரையில் 10 நூல்களுக்குரிய ஏடுகள் என்ற குறிப்பு மட்டும் கொடுக்கப்பட்டுள்ளது.[25] அச்சுவடியில் உள்ள நூற்பெயர் விபரங்கள் கொடுக்கப்படவில்லை. இக்கட்டுரையாசிரியரால் அச்சுவடியிலுள்ள நூற்பெயர்கள் வாசித்தறியப்பட்டன. அவை வருமாறு –

1. பரராசசேகர நயனவிதி
2. கண்டிராசபேரில் பாடிய நயனவிதி
3. நயனவிதி
4. அகத்தியர் வைத்தியம் - கடைக்காண்டம் 100
5. அகத்தியசுவாமியார் எண்பது
6. அகத்தியர் பின்னூல் எண்பது
7. வைத்திய சிந்தாமணி
8. ரோமரிஷி நூறு
9. ஆதீதம்.....(தெளிவாக இல்லை)
10. தில்லைமுனி(?)

இவற்றுள் பரராசசேகர நயனவிதி என்பது ஏற்கெனவே குறிப்பிட்ட நயனவிதி குணமும் மருந்தும் என்னும் நூலின் ஒரு பகுதியாகச் ச.தம்பிமுத்துப்பிள்ளை அவர்களாலும், பரராசசேகரம் சிரரோகநிதானத்தில் நயனவிதி என்னும் பகுதியில் ஐ.பொன்னையா அவர்களாலும் பதிப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இக்கட்டுரையாசிரியரால் இந்நூலானது மேற்படி இருவரது அச்சுப்பிரதிகளுடனும் ஒப்பு நோக்கப்பட்டு, பாடபேதங்கள், செய்யுட்களுக்கான உரை என்பன எழுதப்பட்டு அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.[26]

அது போலவே கண்டிராசா பேரில் பாடிய நயனவிதி என்பது ச. தம்பிமுத்துப்பிள்ளை அவர்களால் வெளியிடப்பட்ட நயனவிதி குணமும் மருந்தும் என்னும் நூலிலுள்ள இலங்கைச் சிங்க மன்னன் நயனவிதி என்று இக்கட்டுரையாசிரியரால் இனங்காணப்பட்டுள்ளதுடன் அந்நூலும் ஏட்டுச்சுவடியுடன் ஒப்பு நோக்கப்பட்டு, பாடபேதம், பொருளுரை என்பன எழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.[27]

அடுத்து, பலஏட்டுச்சுவடிகளில் ஆரம்பத்தில் அதாவது முதல் ஓலையில் நூற்பெயர் ஏதும் குறிப்பிடப்படாமல் விடயங்கள் எழுதப்பட்டுள்ளபோதிலும், சுவடியின் இடையில் புதிதாக நூற்பெயர் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. உதாரணமாக, முதலாம் இலக்க ஏட்டுச்சுவடிக்குப் பெயரிடப்படாமையால் ‘கைவாகடம்’ என்று பட்டியலிட்டவர் அடைப்புக்குறிக்குள் தற்காலிக பெயர் கொடுத்துள்ளார்.[28] ஆனால், இச்சுவடியில் 1 – 50 ஓலைகள் வரையும் பல்வேறு மருந்துகள் செய்யும் முறைகள் பற்றி எழுதப்பட்டுள்ளன. 51ஆம் ஓலையில் வைத்திய விளக்கம் என்ற நூற்பெயர் இடப்பட்டுள்ளதுடன் அந்நூல் 121ஆம் ஓலை வரை காணப்படுகிறது. இந்நூல் ஐ.பொன்னையா பதிப்பித்த ‘இருபாலைச் செட்டியார் வைத்திய விளக்கம்’ என்பது கட்டுரையாசிரியரால் அடையாளங் காணப்பட்டுள்ளது.

மேலும், யாழ்.பல்கலைக்கழக நூலகத்திலுள்ள தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, ஈழத்துத் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை மூன்று பிரிவுகளில் அடக்கி ஆவணப்படுத்தல் பொருத்தமுடையது போல் தோன்றுகிறது.

1. ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் எழுதப்பட்ட ஏடுகள் - இவை இலங்கையிலுள்ள சித்தமருத்துவ அறிஞர்களால் இயற்றப்பட்டவையாகும்
2. தென்னிந்திய சித்தமருத்துவ நூல்கள் - இவை சித்தர்களாலும், தென்னிந்திய சித்த வைத்தியர்களாலும் இயற்றப்பட்டு, இங்கு வழக்கிலிருந்த ஏட்டுச்சுவடி நூல்களாகும்.
3. நூற்பெயர் ஏதும் குறிப்பிடப்படாமல் வைத்தியமுறைகள் எழுதப்பட்டுள்ள ஏட்டுச்சுவடிகள். இவை இலங்கை, இந்திய சித்த மருத்துவ நூல்களிலிருந்தும், தமது சொந்த அனுபவங்களிலிருந்தும் வைத்தியர்களால் எழுதப்பட்டவையாகும். இத்தகைய ஏட்டுச்சுவடிகளே இங்கு அதிகளவிற் காணப்படுகின்றன.

ஈழத்துச் சித்தமருத்துவ நூல்களிற் கணிசமானவை முன்னர் குறிப்பிட்டது போல ச.தம்பிமுத்துப்பிள்ளை, ஐ.பொன்னையா போன்றவர்களால் ஏட்டுச்சுவடிகளிலிருந்து அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ள போதிலும், அவை முழுமையான பதிப்புகளாக அமையவில்லை என்றே கூறவேண்டும். உதாரணமாக, செகராசசேகர வைத்தியமானது 4000 பாடல்களைக் கொண்டதாக இயற்றப்பட்டுள்ள போதிலும் சில நூறு பாடல்களே அச்சில் பதிப்பிக்கப்பட்டுள்ளன.[29] அதே வேளை செகராசசேகரம் அச்சுப்பதிப்பில் காணப்படாத பல பகுதிகள் 102 ஆம் இலக்க(பெயரிடப்படாத) சுவடியில் காணப்படுவது இக்கட்டுரையாசிரியரால் கண்டறியப்பட்டுள்ளது. அவை மரணக்குறிகள், நாடிவிதி, குணபாடம் என்னும் தலைப்புகளின் கீழ் இடம்பெற்றுள்ளன. மேலும், 29, 169 ஆம் இலக்க ஏட்டுச்சுவடிகளில் இதுவரை அச்சில் வெளிவராததும், செகராசசேகரத்தைச் சேர்ந்ததாகக் கூறப்படுவதுமான செகராசசேகரம் சர்ப்பசாஸ்திரம் என்னும நூல் இடம்பெற்றுள்ளது. அந்நூல் இக்கட்டுரையாசிரியரால் பரிசீலிக்கப்பட்டு, உரையெழுதப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.[23]

அவ்விதமே பரராசசேகரவைத்திய நூலானது 12,000 பாடல்களைக் கொண்டதாக இயற்றப்பட்டதாகக் கூறப்படுகின்ற போதிலும் சுமார் ஏழாயிரம் பாடல்கள் வரையிலேயே அச்சில் பதிப்பிகப்பட்டுள்ளன.[30] ஏனையவை இன்னமும் ஏட்டுச்சுவடிகளிலேயே உள்ளன. யாழ்.பல்கலைக்கழக நூலகத்திலுள்ள 19 ஆம் இலக்க ஏட்டுச்சுவடியில் பரராசசேகரம் சன்னிரோகத்துக்குரியதும் ஐ.பொன்னையா அவர்களால் பதிப்பிக்கப்பட்ட பரராசசேகரம் சன்னிரோக நிதானத்தில்[31] காணப்படாததுமான பதினைந்து பாடல்கள் வரை காணப்படுவதுடன், பாடபேதங்களும் காணப்படுகின்றன.

ஈழத்துச் சித்தமருத்துவ நூற்பதிப்பில் காணப்படும் மற்றொரு பெருங்குறைபாடு யாதெனில் அவை யாவும் ஏட்டுச்சுவடிகளிலிருந்து அப்படியே பதிப்பிக்கப்பட்டுள்ளமையாகும். அதாவது, பாடல்களுக்கு விளக்கமோ, உரைகளோ எழுதப்பட்டில்லை என்பதுடன் பொருளடக்கம் கூட அப்பதிப்புகளில் இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விடத்தில் தமிழ்பல்கலைக்கழக

ஓலைச்சுவடித்துறையின் நோக்கங்களுள் ஒன்றாக செம்பதிப்புகளை உருவாக்குதல் என்று முனைவர் த.கோ.பரமசிவம் அவர்கள் குறிப்பிட்டுள்ளமை கவனத்திற் கொள்ளத்தக்கது. "ஏற்கெனவே வெளிவந்த பழைய நூல்களை மீண்டும் இன்று கிடைக்கும் சுவடிகளுடன் ஒப்பிட்டு வேண்டிய உரைவிளக்கங்கள், அகராதிகள், பின்னிணைப்புகளுடன் வெளிவருவன செம்பதிப்புகளாகும்"[32] அந்தவகையில் அச்சில் வெளிவந்த ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் பலவும் செம்பதிப்புகளாக வெளிவரவேண்டிய நிலையிலுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே, இதுவரை அச்சில் வெளிவராத ஈழத்துத் தமிழ் மருத்துவ நூல்களை அச்சில் பதிப்பிப்பதற்கும், அச்சில் வெளியான நூல்களைச் செம்பதிப்புகளாக வெளியிடுவதற்கும் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளைச் சேகரித்து, பாதுகாத்துச் சிறந்த முறையில் ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது. எவ்விதம் அச்சில் பதிப்பிக்கப்பட்ட ஒரு நூலை நூலகத்திலிருந்து இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிகிறதோ அது போல, ஏட்டுச்சுவடிகளைப் பாவிப்போர் குறிப்பாக, தமிழ் மருத்துவர்கள், ஆய்வாளர்கள் முதலியோர் தமக்குத் தேவையான ஏட்டுச்சுவடிகளை இலகுவில் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் அவை விளக்கமான முறையில் விடயங்கள் பட்டியலிடப்பட்டு ஆவணப்படுத்தப்படல் வேண்டும். அதாவது, ஒரு சுவடியிலுள்ள விடயங்கள் பற்றிய விபரங்கள் குறிப்பாக, உட்தலைப்புகள் (பெரும்பாலும் ஏட்டின் இடது பக்கத்தில் எழுதப்பட்டிருக்கும். உ-ம் மருந்துகளின் பெயர்) தொடர்ச்சியாக முழுமையாகத் தொகுக்கப்பட்டு அட்டவணைப்படுத்தப்பட்டால் அது பயனாளிகளுக்கு மிகவும் பிரயோசனமானதாக அமையும்.

தென்னிந்தியாவில் உள்ள சுவடிக் காப்பகங்கள் காலத்துக்குக் காலம் சுவடிகள் பற்றிய விபரங்களை அட்டவணைப்படுத்தி வெளியிட்டுள்ளன. அவற்றுள் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை (இரா.நிர்மலாதேவி)[33], கேரளப்பல்கலைக்கழக கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை (சூ.நிர்மலாதேவி)[34], உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை (தி.மகாலட்சுமி)[21] என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் உலகத்தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணையானது (தொகுதி – 1) சித்தமருத்துவம் சம்பந்தமான விடயங்களைச் சற்று விரிவாக எடுத்துக்கூறும் விதத்தில் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவற்றைப் பின்பற்றி இலங்கையிலுள்ள தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை அட்டவணைப்படுத்துவது வரவேற்கத்தக்கது.

ஏட்டுச்சுவடிகளில் உள்ள விடயங்களைப் பாதுகாப்பதற்கு நவீன தொழில்நுட்பவியலைப் பயன்படுத்த வேண்டியதும் காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. அவற்றுள், புகைப்படம் எடுத்தல் (photo scan), மின்வருடுதல் (scan) என்பன சிறந்த முறையாகும். குறிப்பாக, சிதிலமடைந்துவரும் ஏட்டுச்சுவடிகளைக் கட்டாயம் இம்முறையில் ஆவணப்படுத்தல் வேண்டும். சுன்னாகம் பிரதேசசபை நூலகத்திலுள்ள ஏட்டுச்சுவடிகள் அவ்விதம் மின்வருடப்படும் போது பாதுகாக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.[17] ஆயினும் அவற்றுள் தமிழ் மருத்துவ ஏடுகள் ஏதும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. யாழ்.பிரதான நூலகத்திலுள்ள சுமார் இருபது ஓலைச்சுவடிகளும் photo scan முறையில் கணனி மயப்படுத்தத் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## முடிவுரை

இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் காலங்கடந்துவிட்ட இச்சந்தர்ப்பத்திலாயினும் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் காப்பகம் அல்லது நூலகம் ஒன்று தனித்தோ அல்லது யாழ்.பல்கலைக்கழகம், யாழ்.பொது நூலகம் என்பவற்றுடன் இணைந்ததாகவோ சகல வசதிகளுடனும் உருவாக்கப்படல் வேண்டும். அதில் தமிழ் மருத்துவத்தின் தொன்மை, வரலாறு, சிறப்பு என்பவற்றைத் தம்மகத்தே கொண்டு, நீண்டகாலமாக எம்மத்தியில் அங்குமிங்குமாகச் சிதறிக்கிடக்கும் தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகளை இயன்றவரையில் சேகரித்துப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். கிராமசேவகர்களுடாகவும், வைத்தியர்கள்,வைத்திய மாணவர்களுடாகவும் ஏட்டுச்சுவடிகளைச் சேகரிப்பதை ஊக்குவித்தல் வேண்டும்.

அவ்விதம் சேகரிக்கப்பட்ட ஏட்டுச்சுவடிகளை வெறும் காட்சிப்பொருளாக வைத்திருக்காமல், அவ்வேட்டுச்சுவடிகளையும், பிறநூலகங்களிலுள்ள ஏட்டுச்சுவடிகளையும் மின்வருடி, கணனிமயப்படுத்துவதுடன், அவை அனைத்தையும் உள்ளடக்கியதாக விரிவான தமிழ் மருத்துவ ஏட்டுச்சுவடிகள் அட்டவணைகள் தொகுக்கப்பட்டு வெளியிடப்படுதல் வேண்டும். ஆய்வாளர்கள் இச்சுவடிகளை ஆராய்ந்து செம்பதிப்புகளை வெளியிட முன்வரவேண்டும். அப்போதுதான் ஏட்டுச்சுவடிகளில் உள்ள தமிழ் மருத்துவமுறைகள் உரியமுறையில் ஆவணப்படுத்தப்படும்.

## உசாத்துணை நூல்கள்


1. தம்பையாபிள்ளை, சு. (பதிப்பாசிரியர்) *அமுதாகரம்* விக்டோரியா ஜூபி அச்சுக்கூடம், சென்னைப்பட்டினம்.1892
2. தம்பிமுத்துப்பிள்ளை, ச. (பதிப்பாசிரியர்) *நயனவிதி குணமும் மருந்தும்* - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1904
3. தம்பிமுத்துப்பிள்ளை, ச. (பதிப்பாசிரியர்) *செகராசசேகரம்* - அச்சுவேலி ஞானப்பிரகாச யந்திரசாலை, 1932
4. அருளானந்தம் நீ.பி. *யார் இந்த - புலவர் ச.தம்பிமுத்துப்பிள்ளை* – திருமகள் பதிப்பகம். 2010, பக்.23
5. பொன்னையா, ஐ. (பதிப்பாசிரியர்) *பரராசசேகரம் (7 பாகங்கள்)* 1928 – 1936
6. பொன்னையா, ஐ. (பதிப்பாசிரியர்) *அங்காதிபாதம் (வாகட தத்துவத்துடன்)* – ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை 1936
7. பொன்னையா, ஐ. (பதிப்பாசிரியர்) *இருபாலைச்செட்டியார் வைத்தியவிளக்கம், பதார்த்த சூடாமணி*– யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலை, 1927
8. பொன்னையா, ஐ.(பதிப்பாசிரியர்) *சொக்கநாதர் தன்வந்திரியம்* - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, 1933
9. பொன்னையா, ஐ.(பதிப்பாசிரியர்) *வைத்திய சிந்தாமணி* - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, 1932
10. பொன்னையா, ஐ.(பதிப்பாசிரியர்) *வைத்தியத் தெளிவு* - திருமகள் அச்சுயந்திரசாலை, சுன்னாகம். 1930
11. பொன்னையா, ஐ. (பதிப்பாசிரியர்) *வைத்திய பூரணம் - 205 (அகத்திய முனிவர் அருளிச் செய்தது)* - ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலை, 1938

12. வாசுகிதேவி ஏ. *மருத்துவச் சுவடிகளின் அழிவும் பாதுகாப்பும் ஓர் கண்ணோட்டம்* (கட்டுரை) - சித்த மற்றும் பாரம்பரிய மருத்துவ முறைமைகளுக்கான பல நோக்கு அணுகுமுறை பற்றிய கருத்தரங்கு, பாளையங்கோட்டை. 1999.பக்.13
13. பாலசுந்தரம் இ. *பண்பாட்டுப் பாதுகாப்பு* (கட்டுரை) – தாயகம் சஞ்சிகை, 1986, பக்15
14. முத்துத்தம்பிப்பிள்ளை ஆ. *யாழ்ப்பாணச் சரித்திரம்* - நாவலர் அச்சகம், யாழ்ப்பாணம். 1915. பக்.46
15. லலிதா தி. *மருந்து செய்முறைகள்* - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், டி.டி.டி.ஐ தரமணி, சென்னை 600113. 1985. புக். 2
16. வாசுகிதேவி ஏ. *மருத்துவச் சுவடிகளின் அழிவும் பாதுகாப்பும் ஓர் கண்ணோட்டம்* (கட்டுரை) பக். 16
17. சௌந்தரராஜ சர்மா க. –(தகவல்) – நூலகர், சுன்னாகம் பிரதேசசபை நூலகம்.
18. முருகவேள் சி. *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக ஏட்டுச்சுவடிகள் பட்டியல்* (பகுதி -1) , நூலகம், யாழ். பல்கலைக்கழகம் 1992
19. முருகவேள் சி. *யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக ஏட்டுச்சுவடிகள் பட்டியல்* (பகுதி -11) , நூலகம், யாழ். பல்கலைக்கழகம் 1997
20. மேற்படி ஏட்டுச்சுவடிகள் பட்டியல் பகுதி – 1 பக்.ை
21. மகாலட்சுமி தி. *உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடிகள் விளக்க அட்டவணை தொகுதி* – 1 சித்தமருத்துவம் - உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி வளாகம்,தரமணி,சென்னை 600113. 1998. பக். 8
22. யாழ்.பல்கலைக்கழக *ஏட்டுச்சுவடிகள் பட்டியல்* -1 பக். 8
23. சிவசண்முகராஜா சே. *செகராசசேகரம் சர்ப்ப சாஸ்திரம் (மூலமும் உரையும்)* - 2010 பக்.எ
24. யாழ்.பல்கலைக்கழக *ஏட்டுச்சுவடிகள் பட்டியல்* -11 பக். 13
25. யாழ்.பல்கலைக்கழக *ஏட்டுச்சுவடிகள் பட்டியல்* -1 பக். 2
26. சிவசண்முகராஜா சே. *பரராசசேகர நயனவிதி (மூலமும் உரையும்)* 2012.
27. சிவசண்முகராஜா சே. *கண்டிராசா பேரில் நயனவிதி என்னும் இலங்கைச் சிங்க மன்னன் நயனவிதி (மூலமும் உரையும்)* 2012.
28. யாழ்.பல்கலைக்கழக ஏட்டுச்சுவடிகள் பட்டியல் - 1 பக். 1
29. சிவசண்முகராஜா சே. *ஈழத்துச் சித்தமருத்துவ நூல்கள் ஓர் அறிமுகம்* - சித்தமருத்துவ வளர்ச்சிக் கழகம், இலங்கை. 1993. புக். 44
30. மேற்படி பக்.7
31. பொன்னையா ஐ. *பரராசசேகரம்* (மூன்றாம் பாகம்) – ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை. 1932
32. பரமசிவம் த.கோ. *அகத்தியர் வைத்திய காவியம் 1500 (வாழ்த்துரையில்)* - தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர் 1994
33. நிர்மலாதேவி இரா. *தமிழ்ச்சுவடிகள் அட்டவணை - திருவனந்தபுரம்*,கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை. 1983
34. நிர்மலாதேவி சூ. *கேரளப் பல்கலைக்கழக கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவணை* (முதல் தொகுதி) 1985.


வரலாறு
தொல்லியல்
மரபுரிமை

# இலங்கைத் தமிழர் மரபுவழிக் கட்டிடச் சூழல்களும் அவற்றை ஆவணப்படுத்தலும்

இ. மயூரநாதன்

## அறிமுகம்

மரபுவழிக் கட்டிடச் சூழல்கள் (Traditional Built Environment) ஒரு சமுதாயத்தின் தேவைகள், விழுமியங்கள், நம்பிக்கைகள், விருப்பு வெறுப்புக்கள் போன்ற இன்னோரன்ன பண்பாட்டுக் கூறுகளின் பௌதிக வெளிப்பாடாக விளங்குவதுடன், அச்சமுதாயம் எதிர்கொள்ளும் சமூக, பொருளாதார, அரசியல் தாக்கங்களுக்கு ஏற்ப அச்சமுதாயத்தில் ஏற்படும் மாற்றங்களையும் எடுத்துக் காட்டுவதாக உள்ளன. பண்பாட்டு நினைவுகளைத் தம்முள் நீண்டகாலம் பொதித்து வைத்திருக்கும் தன்மை கட்டிடச் சூழல்களுக்கு உண்டு. இதனால் ஒரு சமுதாயத்தின் பண்பாட்டு வரலாற்றை அறிந்து கொள்வதில் கட்டிடச் சூழல்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மரபுவழிக் கட்டிடச் சூழல் என்னும்போது அது மரபுவழியான உயர்குடிக்குரிய செந்நெறிக் கட்டிடச் சூழல்களையும் (Classical Built Environment), சாதாரண மக்களுக்கு உரிய மரபுவழிக் கட்டிடச் சூழல்களையும் ஒருங்கே குறிக்கிறது. மிக அண்மைக்காலம் வரை உலக அளவிலும் கூட, செந்நெறிக் கட்டிடச் சூழல்களே பண்பாட்டுக் கருவூலங்களாகக் கொள்ளப்பட்டு ஆய்வுக்கு உரியனவாகவும், (Rapoport, Amos. 1969, p.1) ஆவணப்படுத்தத் தக்கனவாகவும், பேணிக் காக்கப்பட வேண்டியனவாகவும் கருதப்பட்டு வந்தன. இலங்கைத் தமிழர் பகுதிகளில் பழமையான செந்நெறிக் கட்டிடச் சூழல்கள் ஏறத்தாழ இல்லை எனலாம். இதனால் இலங்கைத் தமிழர் பண்பாட்டு வரலாற்றை ஆய்வு செய்வதில் கட்டிடச் சூழல்களின் பங்கு முற்றாகவே இல்லாமல் இருந்தது.

1960களில் உலகின் பண்பாட்டு வரலாற்றில் சாதாரண மக்களுடைய கட்டிடச் சூழல்களின் பங்கு உணரப்பட்டதுடன், இது குறித்த ஆய்வுகளும் முன்னெடுக்கப்பட்டன.(Rapoport, Amos. 1969) இவ்வளர்ச்சி காரணமாக, சாதாரண மக்களுடைய கட்டிடச் சூழல்களையே அடிப்படையாகக் கொண்டிருந்த இலங்கைத் தமிழர் சூழலில் பண்பாட்டு ஆய்வுகளில் கட்டிடச் சூழல்களை உட்படுத்தக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டன. ஆயினும் நமது சூழலில் இது போதிய ஆர்வத்தையோ விழிப்புணர்வையோ ஏற்படுத்தவில்லை. ஒரு புறத்தில் உலகமயமாக்கத்தின் கூறான பண்பாட்டு ஓரினமாக்கம், சமூக பொருளாதார மாற்றங்கள் என்பன நமது கட்டிடச் சூழல்களில் வேகமான மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருக்க, இன்னொரு புறம் அறியாமை, இயற்கைச் சீற்றங்கள், போர் என்பனவும் நமது மரபுவழிக் கட்டிடச் சூழல்கள் பல சுவடின்றி அழிந்து போவதற்குக் காரணமாயின. இதைத் தடுத்து நிறுத்துவது முடியாது. ஆனால், முடிந்தவரை அவற்றை ஆவணப்படுத்தி வைக்க முடியும். (LeBlanc, Francois. and Eppich, 2005. Rand. p.2)

பண்பாட்டு மரபுக்கான உரிமை, மனித உரிமையின் ஒரு பகுதி என்று கூறும் யுனெஸ்கோவின் ஆலோசனை அமைப்பான "நினைவுச் சின்னங்கள் களங்கள் என்பவை மீதான அனைத்துலக

அவை” (“ஐகோமோஸ்”), எதிர்காலத் தலைமுறையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொருட்டு, பண்பாட்டு மரபுகளைப் பாதுகாப்பதற்கான கடப்பாடும் பொறுப்பும், இன்று நமக்கு இருப்பதை வலியுறுத்துகிறது. (Declaration of ICOMOS, 1998) இதன் அடிப்படையில், நமது பண்பாட்டு மரபுகளின் ஒரு பகுதியான மரபுவழிக் கட்டிடச் சூழல்கள் குறித்த ஆய்வுகளை ஊக்குவிப்பதற்கும், தகவல்களை நமது எதிர்காலத் தலைமுறையினருக்கு விட்டுச் செல்வதற்குமாக அவற்றை ஆவணப்படுத்தல் நமது கடப்பாடும் பொறுப்பும் ஆகும்.

## ஆவணப்படுத்தலுக்கான கட்டிடச் சூழல்கள்

தற்காலத்தில் உலகளாவிய அடிப்படையில் ஏற்பட்டுள்ள சாதாரண மக்களுடைய கட்டிடச் சூழல்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு, சமுதாயங்களின் பண்பாட்டு வரலாற்றைப் புரிந்துகொள்வதில் இத்தகைய கட்டிடச் சூழல்களின் பங்கு குறித்த விளக்கம், ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்கும்போது இலங்கைத் தமிழர் பகுதிகளில் ஆவணப்படுத்தத் தகுந்த கட்டிடச் சூழல்கள் ஏராளமாகவே உள்ளன.



படம்-1
யாழ்ப்பாணத்தில் ஆவணப்படுத்த வேண்டிய சில வீட்டு வகைகள்
1. தாயறை அல்லது வீட்டறை 2. தலைவாசல் 3. அடுக்களை 4. முற்றம்

இவற்றுள் எண்ணிக்கையில் அதிகமானவையும், பல்வகைப்பட்டு அமைவனவும் மக்களுடைய வீடுகளே. இவை இலங்கைத் தமிழர் சமுதாயத்தின் காலமுறைப்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் காட்டுவதுடன், சமூகத்தில் நிலவும் சமூக, பொருளாதாரப் பண்பாட்டு நிலைமைகளையும் வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஒவ்வொரு வகையும் அவை உருவான காலத்து நிலைமைகளைப் பிரதிபலிப்பதுடன், பிற்கால வளர்ச்சிகளின் தாக்கங்களினால் ஏற்பட்ட மாற்றங்களையும் பொதித்து வைத்திருப்பவை. (Mayooranathan, R., 2002. p.21.) இவற்றின் காரணமாக இலங்கைத் தமிழர் பண்பாடு தொடர்பான ஆய்வுகளுக்கு இவ்வீடுகள் முக்கிய ஆய்வுப் பொருட்களாக விளங்கக்கூடியன.

இன்னொரு முக்கிய கட்டிடவகை, வழிபாட்டிடங்கள். இலங்கைத் தமிழர் பகுதிகளில் பெருமளவில் காணப்படும் கட்டிடச் சூழல் வகைகளுள் இவ்வகையும் அடங்குகின்றது. கடந்த 400 ஆண்டுக்காலமாக பல்வேறு சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகள், இவற்றின் உருவாக்கம், வளர்ச்சி ஆகியவற்றின்மீது பெருமளவு தாக்கங்களைக் கொண்டிருந்ததோடு, (சிவத்தம்பி, கார்த்திகேசு., 2000. பக்.133-145.) அவற்றைச் சிறப்பாக வெளிப்படுத்துவனவாகவும் இவை உள்ளன.

மடங்கள் இன்னொரு வகை. தெருவோர இளைப்பாறு மடங்கள், கோயில் மடங்கள், சந்தைகளுக்கு அண்மையில் அமைந்த மடங்கள், சுடலை மடங்கள் போன்ற பல்வேறு வகை

மடங்கள் இவற்றுள் அடங்கும். (சோமசுந்தரக்குருக்கள், குமுதா. 2007. பக்.39.) இவற்றுள் சில வகைகள் தவிர்ந்தவை தற்காலத்தில் பயன்பாடு அற்றுப் போய்விட்டன. சமுதாயத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அம்சங்களின் வெளிப்பாடுகளாகக் காணப்பட்ட இவ்வாறான கட்டிடங்களும் அவற்றோடு தொடர்புடைய கட்டிடச் சூழல்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியவை.

இலங்கைத் தமிழர் பகுதிகளில் உள்ள பல சந்தைகள் பல நூற்றாண்டு காலத் தொடர்ச்சி கொண்டவை. அன்றாடத் தேவைகளையும் பொருளாதாரத் தேவைகளையும் நிறைவேற்றுவதில் முக்கிய பங்காற்றும் சந்தைகள் (Balasundarampillai, 1980.) சமுதாயத்தின் பண்பாட்டில் குறிப்பிடத்தக்க ஒரு அம்சம். வேறு பல கட்டிடங்களும், அவை தொடர்பான கட்டிடச் சூழல்களும் கூட இலங்கைத் தமிழரின் பண்பாட்டு வாழ்க்கையின் இன்றியமையாத அம்சங்களாகத் திகழ்கின்றன. குறிப்பாகப் பாடசாலைகள், வைத்திய சாலைகள், தொடர்வண்டி நிலையங்கள் போன்றவை சமுதாயத்தின் பண்பாட்டு வரலாற்றில் திருப்பு முனைகளாகவும் அமைந்தவை.

மனிதர் உருவாக்கிய சூழல்களான தோட்டங்கள், வயல்கள் போன்றவையும் கட்டிடச் சூழல்களே. இவற்றின் அமைவுத்திசை, அளவு, அயல் காணிகளுடனான தொடர்பு, பிரிக்கும் முறைகள், பாதை, கிணறு, ஆடுகால், வரப்பு, வாய்க்கால், இளைப்பாறுவதற்கான ஒழுங்கு போன்ற பல பௌதீக அம்சங்கள் சமுதாயத்தின் சமூக, பொருளாதார வாழ்க்கை, பண்பாடு என்பவற்றுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவை.

தனித்தனியான கட்டிடங்கள், சிறிய அளவிலான கட்டிடச் சூழல்கள் தவிர ஊர்கள், நகரங்கள் முதலிய கட்டிடச் சூழல்களின் பௌதீகக் கூறுகள் சமுதாயத்தின் வாழ்க்கைமுறையின் பல்வேறு அம்சங்களினால் அமைவு பெறுவதும், அவ்வாறான அமைவுகள் பின்னர் அச் சமுதாயத்தின் வாழ்க்கை முறை மாற்றங்களில் தாக்கம் கொண்டிருப்பதும் பலரால் எடுத்துக்காட்டப்பட்டு உள்ளன. (Brand, Stewart., 1995. p.3) இதனால், சமுதாயத்தின் பண்பாட்டுக் கருவூலங்களைப் பாதுகாப்பதற்கும், பண்பாட்டு வரலாற்றை அறிந்து கொள்வதற்கும் இவற்றை ஆவணப்படுத்தல் அவசியம்.

## இலங்கைத் தமிழரின் மரபுவழிக் கட்டிடங்கள், கட்டிடச் சூழல்கள் குறித்த இன்றைய நிலை.

இலங்கைத் தமிழருடைய மரபுவழிப் பண்பாட்டுக் கருவூலங்களாகக் கொள்ளத் தக்க பல கட்டிடங்களும், கட்டிட வகைகளும், கட்டிடச்சூழல்களும் ஏறத்தாழ முற்றாகவே அழிந்துவிட்டன. வேறு சில வேகமாக அழிவை நெருங்குகின்றன.

ஒரு காலத்தில் இலங்கையின் வட பகுதியில் பல்வேறு இடங்களிலும் இருந்த, வட்டமான தள வடிவமும்,




படம்-2
அழிந்துபோன சில மரபுவழிச் சொத்துக்கள்
1. வண்ணார்பண்ணை நாற்சார் வீடு. 2. யாழ் நகர் கங்கா சத்திரம்
3. வட்ட வீடு. 4. யாழ் பறங்கித்தெருக் கட்டிடங்களோடு அழிந்த ஓவியம்

மண்சுவர்களுடன், பனையோலைக் கூரையும் கொண்ட வட்ட வீடுகள் இன்றைக்கு ஏறத்தாழ முற்றாக இல்லாமல் போய்விட்டன. 1940களில் யாழ்ப்பாண மாவட்டத்திலும், வன்னிப் பகுதியின் பல இடங்களிலும் இவ்வட்ட வீடுகள் காணப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன.( Naish, Richard. Bryant., 1946.) 1970களின் பிற்பகுதியில் அம்பனில் இரண்டு வீடுகள் மட்டும் இருந்தன. தண்ணீரூற்றுப் பகுதியிலும் சில வீடுகள் காணப்பட்டன. தற்போது இவை முற்றிலுமாக அழிந்துவிட்டிருக்கும்.

யாழ்ப்பாணத்து நாட்டுப்புறக் கீழ் மத்தியதர வகுப்பினரின் வாழ்வியலோடு நெருக்கமாகப் பிணைந்திருந்தவை மூவலகு வீடுகள். நாற்புறமும் வேலியால் சூழப்பட்டு, வீடு என அழைக்கப்பட்ட பெரும்பாலும் ஓரறைக் குடிசை, தலைவாசல், அடுக்களை ஆகிய முக்கியமான மூன்று பிரிவுகளைக் கொண்டு இவை அமைந்திருந்தன.(Mayooranathan, R., 1975; அகிலன், பாக்கியநாதன்., 2006.) யாழ்ப்பாண மாவட்டம் முழுவதிலும் மிகப் பரவலாகக் காணப்பட்டவை. தற்காலத்தில் இவற்றைக் காண்பது மிகவும் அரிதாகி விட்டது.

திண்ணைகளுடன் கூடிய நாற்சார், எண்சார் வீடுகள் யாழ் மாவட்டத்தின் நகரப் பகுதிகளில் கூடுதலாகக் காணப்பட்டன. இவ்வகை வீடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகப் பல வீடுகள், யாழ்ப்பாண நகரின் வண்ணார்பண்ணைப் பகுதியில் அமைந்திருந்தன.(Mayooranathan, R. 1975) இவற்றுட் பல, வணிகரான செட்டிமார்களால் கட்டப்பட்டனவாகத் தெரிகிறது. இப்பகுதியில் இருந்த வீடுகளிற் சில 1970களிலேயே பராமரிப்பு வசதிகள் இல்லாமல் அழியத் தொடங்கிவிட்டன. நல்ல நிலையில் இருந்த வீடுகள் பலவும் கூடப் போர்க்காலத்தில் முற்றாக அழிந்துபோய் விட்டன.

பெரும்பாலும் யாழ்ப்பாணப் பகுதியில் காணப்படும் ஒன்று அல்லது இரண்டு அறைகள், விறாந்தைகள், அடுக்களை ஆகியவற்றைக் கொண்ட வீட்டு வகையுள் அடங்குவன “ட” வடிவ வீடுகள். மண்வீடுகள் கல்வீடுகளாக மாறத்தொடங்கிய காலத்தின் ஒரு உற்பத்தியாக இதைக் கருத முடியும். 19ம் நூற்றாண்டின் முடிவுப் பகுதியிலும், 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட சில சமூக பொருளாதார மாற்றங்களின் வெளிப்பாடாக உருவானவை இவ்வகை வீடுகள் எனலாம். இத்தகைய வீடுகளிற் பல சிறிய அல்லது நடுத்தர அளவுள்ளவை. எனினும், இரண்டு மாடிகளைக் கொண்ட பெரிய வீடுகளும் இவ்வகைக்குள் அடக்கக்கூடியனவாக உள்ளன. சில வீடுகளில் மேனாட்டுக் கட்டிடக்கலைத் தாக்கங்களையும் காண முடியும். இவ்வகை வீடுகள் பல இன்னமும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் பரவலாகக் காணப்படுகின்றன.

முன்னர் குறிப்பிட்ட திண்ணைகளுடன் கூடிய நாற்சார் வீடுகளைப் போலன்றிப் பிற்கால நாற்சார் வீடுகள் தளபாடப் பயன்பாட்டுக்கு ஏற்றவகையில் மட்டமான தரையமைப்பைக் கொண்டிருந்தன. முன்புறத் திண்ணைகள் விறாந்தைகளாக மாற்றம் பெற்றன. முன்னைய வகையில் முகப்பு தாழ்வாகப் பணிந்த தோற்றத்துடன் இருக்க, பிற்கால நாற்சார் வீடுகள் நிமிர்ந்த முகப்புகளுடன் அலங்கார வேலைப்பாடுகள் அமைந்து காணப்பட்டன. (Mayooranathan, 2002. P.25) இத்தகைய வீடுகளின் தோற்றம், யாழ்ப்பாணத்தில் இருந்து மலாயா போன்ற நாடுகளுக்கு வேலை பெற்றுச் சென்றவர்களால் உருவான பொருளாதார வளம், அதனால் உருவான புதிய மேல் நடுத்தர வகுப்பாரின் தோற்றம் என்பவற்றுடன் தொடர்பு கொண்டது எனலாம். (சத்தியசீலன்,

ச. 2007. பக். 230-235) யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு வரலாற்றில் முக்கிய இடம்பெறும் இவ்வகை வீடுகளும் இன்றும் குடாநாடு முழுவதும் பரவலாகக் காணப்படுகின்றன. எனினும் இவற்றை இடித்துப் புதிய பாணியில் அமைந்த வீடுகளைக் கட்டிக்கொள்ளும் வழக்கத்தினால் இவை அழிந்துகொண்டு வருகின்றன.

இலங்கைத் தமிழர் பகுதிகளில் குடியேற்றவாத ஆட்சியின் தொடக்கத்துக்கு முந்திய கால வழிபாட்டுக் கட்டிடச் சூழல்கள் ஏறத்தாழ முற்றாகவே அழிந்து போய்விட்டன. எனினும் புதிய சமயத்தின் அறிமுகம், பழைய சமய வழிபாடுகளை மறைவாக நடத்தவேண்டிய தேவை என்பன புதிய வழிபாட்டுக் கட்டிடச் சூழல்கள் உருவாகக் காரணமாயின. (சிவலிங்கம், மூ., 2004. பக். 04, 40-41.) தற்காலத்திலும், பல்வேறு சமூக மாற்றங்கள், சமஸ்கிருதமயமாக்கம் (சண்முகலிங்கன், என்., 2004. பக். 38 - 40.) முதலியவற்றால் பல்வேறு மரபுவழி வழிபாட்டு முறைகள் மாற்றமடைவதன் மூலம் அல்லது முற்றாகவே கைவிடப்படுவதன் மூலம் அவற்றுக்குரிய கட்டிடச் சூழல்களும் அடையாளம் காண முடியாதபடி மாறிவருகின்றன. இதனால் எதிர்கால ஆய்வுகளுக்குப் பயன்படும்படி இவற்றை முறைப்படி ஆவணப்படுத்த வேண்டியது அவசியம்.

அழிந்துவரும் கட்டிட வகைகளில் முக்கியமான இன்னொன்று மடக் கட்டிடவகை ஆகும். 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை தெருவோர மடங்கள் யாழ்ப்பாணப் பகுதியில் பரவலாகக் காணப்பட்டன. அடிப்படையில் தெருவோர மடத் தொகுதிகள் மெதுவாக நகர்ந்த போக்குவரத்துச் சூழலின் உற்பத்தி என்றே கூற வேண்டும். எனவே தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாகப் போக்குவரத்தின் வேகம் அதிகரித்துச் சென்றபோது ஒரு கால கட்டத்தில் இவற்றுக்கான தேவை இல்லாதொழிந்ததுடன், மடக் கட்டிடங்கள் பலவும் கவனிப்பாரற்று அழிந்து போயின. கோயில் மடங்களைப் பொறுத்தவரை சில மடங்கள் கால மாற்றங்களோடு தொடர்புடைய காரணங்களால் பயன்பாடற்றுப் போய் அழிந்தன. ஆனால் வேறு சில இடங்களைப் பொறுத்தவரை கோயில் சார்ந்த மடங்களுக்கான தேவை இன்னமும் இருந்துவருவது கண்கூடு. சில சிறந்த மரபுவழிக் கட்டிடங்களுடன் கூடிய மடங்கள் போர்ச் சூழலில் அழிந்து போய்விட்டன.

மடக் கட்டிட வகையுள் இன்னொரு துணை வகையாக அமைவது சந்தைகளுக்கு அருகில் அமைந்த மடங்கள். பொதுவாக இவை வணிகர்களின் பயன்பாட்டுக்கானவை. யாழ் நகரப்பகுதியில் அமைந்திருந்த “கங்கா சத்திரம்” (Chandrahasan, A., 2007. 28) இவ்வகைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கியது. சில ஓவியங்களையும் (Chandrahasan, A., 2007. 33) கொண்டிருந்த இது ஒரு அரிதான பண்பாட்டுக் கருவூலமாகவும் கொள்ளத்தக்கது. நூறாண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்ததாகவும், யாழ்ப்பாணப் பண்பாட்டின் கடந்துபோன காலகட்டம் ஒன்றின் நினைவுச் சின்னமாகவும் திகழ்ந்த அதைப் பாதுகாத்து வைத்திருந்திருக்க வேண்டும். ஆனால், நாமே அதனை அழித்துவிட்டோம்.

## இலங்கைத் தமிழர் மரபுவழிக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்துவது தொடர்பிலான சில முன்முயற்சிகள்

1960 களில் உலக அளவில் சாதாரண மக்களுடைய கட்டிடச் சூழல்கள் குறித்து உருவான ஆர்வத்தின் தொடர்ச்சியாக, 1970களின் நடுப்பகுதியில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின்

கட்டுப்பெத்தை வளாகத்தில் கட்டிடக்கலைத்துறைத் தமிழ் மாணவர்கள், தமது இறுதியாண்டுத் தேர்வுக்காகச் சாதாரண மக்களின் கட்டிடச் சூழல்கள் தொடர்பான தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதினர். "யாழ்ப்பாணத்து மரபுவழி நார்சார் வீடுகள்", "குடியேற்றவாதச் செல்வாக்குக்கு உட்பட்ட யாழ்ப்பாணத்து நாற்சார் வீடுகள்", "யாழ்ப்பாணத்து இளைப்பாறு மடங்கள்", "யாழ்ப்பாணத்து ஒல்லாந்தர் வீடுகள்", "வட மாகாணத்து வட்ட வீடுகள்" போன்ற தலைப்புக்களில் கட்டுரைகள் எழுதப்பட்டன. இத் தொடக்ககாலக் கட்டுரைகளுக்காகக் குறிப்பிடத் தக்க அளவில் கள ஆய்வுகளும் இடம் பெற்றன. மரபுவழிக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்த முயன்றதில் இக் கட்டுரைகளின் பங்கு மிகவும் முக்கியமானது. எனினும், இந்த முன்னோடிச் செயற்பாடுகளின் விளைவுகள் சமுதாயத்துக்குப் பயன்படும்படி முழுமையாகப் பாதுகாக்கப்படாமல் போனது கவலைக்குரியது.

இலங்கைத் தமிழரின் மரபுவழிக் கட்டிடச் சூழல் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் ஒரு முயற்சியாக, 2002 ஆம் ஆண்டு முதல் 2009 வரை "யாழ்ப்பாணத்து மரபுவழிக் கட்டிடங்கள்" (Traditional Buildings of Jaffna) என்னும் தலைப்பிலான ஆங்கில மொழி இணையத்தளம் ஒன்று இயங்கியது. அக்காலத்தில் இத்துறையில் புதிய ஆர்வம் ஏற்படுவதற்கு இது தூண்டுகோலாக இருந்தது.

இலங்கைக் கட்டிடக்கலைஞர் சங்கத்தின் , செப்டெம்பர் 2002 - பெப்ரவரி 2003 காலப் பகுதிக்கான ஆய்விதழிலும் யாழ்ப்பாணக் கட்டிடக்கலை தொடர்பான சில ஆங்கிலக் கட்டுரைகள் வெளிவந்தன. 2002 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் யாழ்ப்பாணக் கட்டிடக்கலைப் பாணிகளும் அம்சங்களும் தொடர்பான கருத்தரங்கு ஒன்றும் இடம் பெற்றதுடன் இது தொடர்பான பல ஆய்வுக் கட்டுரைகளும் வாசிக்கப்பட்டன. இதே காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலரும் மரபுவழிக் கட்டிடங்கள் குறித்து ஆய்வு நடத்தினர். இதன் விளைவுகள் அச்சிலும் வெளிவந்தன. (அகிலன், பாக்கியநாதன். 2006 சோமசுந்தரக்குருக்கள், குமுதா. 2007.)

## இலங்கைத் தமிழர் மரபுவழிக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்தல்

பொதுவாகக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்தல் பற்றிச் சிந்திக்கும்போது அவ்வாவணங்களின் வடிவம், அவற்றின் உள்ளடக்கம் ஆகிய இரண்டு விடயங்களைக் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். கட்டிடச் சூழல்களில் பொதிந்துள்ள தகவல்களை வெளிப்படுத்துவது அவற்றின் பௌதீகக் கூறுகளே. அவற்றின் வாயிலாகவே சமூகத்தின் பண்பாட்டு வரலாற்றை நாம் அறிந்துகொள்ள முயல்கிறோம். எனவே கட்டிடச் சூழல் குறித்த ஆய்வுகளுக்கு அடிப்படையானவை பௌதீகத் தகவல்களே இவ்வாறான பௌதீகத் தகவல்களை அடிப்படையில் இரண்டு வடிவங்களில் பெற்றுக்கொள்ள முடியும். ஒன்று ஒளிப்படங்கள். இரண்டாவது அளவு வரைபடங்கள். எனவே, கட்டிடச் சூழல் தொடர்பான உடனடி ஆய்வுத் தேவைகளுக்காயினும், எதிர்காலத் தேவைகளுக்காக ஆவணப்படுத்தும் நோக்கத்துக்காயினும் மேற்படி வடிவங்களில் கட்டிடச் சூழல்களைப் பதிவு செய்துகொள்வது ஒரு இன்றியமையாத செயற்பாடாக இருந்துவருவதைக் காணலாம். (Carter, Thomas and Elizabeth Collins Cromley, 2006. p.28)

கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்துவதில் ஒளிப்படங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. பல்வேறு கோணங்களில் ஒளிப்படங்களை எடுப்பதன் மூலம் கட்டிடச் சூழல்களின் தோற்றத்தைப் பெருமளவுக்குப் பதிவு செய்துகொள்ள முடியும். தவிரவும், சாதாரண மக்கள் ஒளிப்படங்களை இலகுவில் புரிந்து கொள்வர் என்பதனால், கட்டிடச் சூழல் குறித்த நூல்கள், பிற வெளியீடுகள் போன்றவற்றில் பயன்படுத்துவதற்கும், கண்காட்சிகளில் வைப்பதற்கும் மிகவும் பொருத்தமானவை. தற்காலத்தில் ஒளிப்படங்களைப் பிடிப்பதற்கு அதிக செலவோ நேரமோ தேவையில்லை. எண்ணிம ஒளிப்படக் கருவிகளின் வளர்ச்சி தரமான ஒளிப்படங்களை எடுப்பதற்கு வழிவகுத்துள்ளதுடன், ஓரளவு பயிற்சியுடன் நல்ல ஒளிப்படங்களை எடுப்பதும் சாத்தியமாகி உள்ளது. எனினும், எண்ணிம ஒளிப்படங்கள் குறித்த சில பாதகமான அம்சங்களையும் கவனத்துக்கு எடுத்துக்கொள்வது அவசியம். இவற்றுள் முக்கியமானது இவற்றை நீண்டகாலம் சேமித்து வைப்பதில் உள்ள பிரச்சினை. இவற்றைச் சேமித்து வைக்கும் ஊடகங்கள் வேகமாக வழக்கொழிந்து போவதும், தற்காலத்தில் உள்ள ஊடகங்களில் ஒப்பீட்டளவில் நீண்ட காலத்துக்குச் சேமித்து வைக்க முடியாமையும் இவற்றுள் அடங்கும். எனினும் இவற்றை முறையாகப் பேணுவதன் மூலம் இவற்றின் பயன்படு காலத்தை நீட்டிக்கொள்ளலாம்.(Robin Letellier, 2011. p.46) கட்டிடச் சூழல்களின் எல்லாப் பௌதீக அம்சங்களையும் ஒளிப்படங்கள் மூலம் பதிவு செய்ய முடியாது. எடுத்துக்காட்டாகக் கட்டிடங்களின் அளவுகள், பல்வேறு அறைகளுக்கு இடையிலான தொடர்புகள், பல்வேறு கூறுகளின் கட்டுமான விபரங்கள் போன்றவற்றை ஒளிப்படங்கள் மூலம் காட்டுவது சாத்தியம் இல்லை.( D’Ayala, D., and P. Smars. 2003. p 26) இதனாலேயே அளவு வரைபடங்கள் கட்டிடச் சூழல்களைப் பதிவு செய்வதில் இன்றியமையாதவையாக உள்ளன.

முறையாகத் தயாரிக்கப்பட்ட அளவு வரைபடங்களைப் பயன்படுத்தி மீண்டும் அதே போன்ற கட்டிடம் ஒன்றைக் கட்டிக்கொள்ள முடியும். அல்லது, உரிய மென்பொருட்களைப் பயன்படுத்தி கணினியில் முப்பரிமாண மாதிரிகளை உருவாக்கிக்கொள்ளலாம். வரைபடங்களை வாசிப்பதில் பயிற்சிபெற்ற ஒருவராயின் வரைபடங்கள் மூலமாகவே அக்கட்டிடத்தின் முப்பரிமாண அமைப்பையும் அதன் பல்வேறு பௌதீக அம்சங்களையும் சரியாகக் கற்பனை செய்துகொள்ளலாம். இது கட்டிடச் சூழல்களைப் பதிவு செய்வதில் அளவு வரைபடங்களின் இன்றியமையாமையை நமக்கு உணர்த்துகிறது. கட்டிட வரைபடங்கள் வரைவது பற்றிய அறிவும் திறனும் உள்ளவர்களே இதனைச் சரியாகச் செய்ய முடியும். அத்தோடு இதற்கு அதிக நேரமும் செலவிடவேண்டியிருக்கும். (English Heritage, 2006. p.8) எவ்வளவுக்கு எவ்வளவு நுணுக்கமான, துல்லியமான தகவல் தேவைப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதிக நேரமும் தேவைப்படும். அளவு வரைபடங்களைத் தயாரிப்பதற்காகக் கட்டிடச் சூழல்களை அளக்கும்போது, அவற்றை உருவாக்குவதில் பயன்பட்ட கட்டிடப் பொருட்கள், பல்வேறு காலகட்டங்களூடாக அவை வளர்ச்சி அடைந்த விதம் போன்றவற்றையும் அறிய முயலவேண்டும். கையால் அளவெடுக்கும் முறையில் கட்டிடச் சூழல்களின் பகுதிகளை நெருக்கமாகக் கவனிக்கும் வாய்ப்புக் கிடைப்பதால், மேற்படி விடயங்களை அறிந்துகொள்வது இலகுவானது.

அண்மைக் காலத்தில், கட்டிடச் சூழல்களைப் பதிவு செய்வதற்குப் பயன்படக்கூடிய தொழில்நுட்பங்களும், கருவிகளும் பெருமளவு வளர்ச்சியடைந்துள்ளன. ஒளிப்பட அளவியல், லேசர் துருவல், உலக நிலைகாட்டு முறைமை, திருத்திய ஒளிப்பட முறை போன்ற பல

தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தும் கருவிகள் இன்று பயன்படுத்தப்பட்டு வருகின்றன.(Eppich, Rad. and Chabbi, Amel., 2007. p.5-8) இவற்றைப் பயன்படுத்தித் துல்லியமான விளைவுகளைப் பெற முடியும். ஆனாலும் இத்தகைய முறைகள் அதிக செலவு பிடிக்கக்கூடியன. இலங்கைத் தமிழர் சூழலில் பெரும்பாலான வேளைகளில் மேற்சொன்ன பதிவுகளைத் தயாரிப்பதற்கு எளிமையானதும், அடிப்படையானதுமான கருவிகளே போதுமானவை. எனினும் திருத்திய ஒளிப்பட முறை, சில எளிமையான ஒளிப்பட அளவியல் முறைகள் போன்றவற்றை அதிக செலவின்றி முன்னர் குறிப்பிட்ட அடிப்படை முறைகளுடன் சேர்த்துப் பயன்படுத்த முடியும். (Almagro, Antonio, 1999)

மரபுவழிக் கட்டிடச் சூழல்களின் உருவாக்கமும், அவற்றில் ஏற்படுகின்ற மாற்றங்களும் தொடுபுலனாகும் (Tangible), தொடுபுலனாகாப் (Intangible) பெறுமானங்களின் ஊடுதொடர்புகள் சார்ந்த வழிமுறைகளினாலேயே ஏற்படுகின்றன.(Karakul, Ozlem., 2007. p.151.) இதனால், இச்சூழல்களை விளங்கிக்கொள்வதற்கு இவ்விருவகைப் பெறுமானங்கள் குறித்த அறிவும் அவசியம். ஆகவே, மரபுவழிக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்தும்போது தொடுபுலனாகும் அம்சங்களை மட்டுமன்றி, தொடுபுலனாகா அம்சங்களையும் கவனத்துக்கு எடுப்பது முக்கியமானது. (Karakul, Ozlem., 2007. p.159-162.; ICOMOS Charter. 1996.)

ஒரு சமுதாயத்தின் தொடுபுலனாகா அம்சங்கள் பொருளாதாரச் செயற்பாடுகள், அன்றாட வீட்டுச் செயற்பாடுகள், சமூகச் செயற்பாடுகள் போன்ற பண்பாட்டுச் செயற்பாடுகள் ஊடாகவும், உட்பொருள், குறியீடு, ஆக்கத்திறன் போன்ற பண்பாட்டு வெளிப்பாடுகள் ஊடாகவும் வெளிப்படுகின்றன. இவற்றின் தாக்கங்களைக் கட்டிடச் சூழல்களில், அமைவிடம், குடியிருப்பு வடிவுரு, வெளிசார் ஒழுங்கமைவு, வெளிசார் இயல்புகள், கட்டிடக்கலைக் கூறுகள், அலங்காரக் கூறுகள், தளபாடங்கள், நிறம், வடிவம், பாணி, கட்டிடப்பொருட் பயன்பாடு போன்ற பலவற்றினூடாக அறிய முடிகின்றது.(Karakul, Ozlem., 2007. p.158-159)

இவ்வாறான அம்சங்கள் தொடர்பான தகவல்களைக் கள ஆய்வுகளின்போது குறிப்பான அவதானிப்புக்கள் மூலமாகவும், நேர்காணல்கள் ஊடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். எனவே இவை குறித்து முறையான கவனம் செலுத்தவேண்டியது அவசியம். இவ்வாறான தகவல் திரட்டலுக்குக் கட்டிடக்கலை, பொறியியல், நகரப் புவியியல், வரலாறு, சமூகவியல், மானிடவியல் போன்றவற்றை உள்ளடக்கிய பல்துறை அறிவு தேவைப்படுவது தெளிவு.

## சில இடர்ப்பாடுகள்

இலங்கைத் தமிழர் சூழலில் இவ்வாறான ஆவணப்படுத்தலில் எதிர் நோக்கக்கூடிய இடர்ப்பாடுகள் பல.

கட்டிடச்சூழல் தொடர்பிலான தகவல் சேகரிப்பு, ஆவணப்படுத்தல் என்பவற்றை உரிய முறையில் திட்டமிடுவதற்கான பல்துறை அறிவு இலங்கைத் தமிழர் பகுதிகளில் போதிய அளவு இல்லை. எடுத்துக்காட்டாக, கட்டிடக்கலைத்துறை தொடர்பான பாடநெறிகள் இலங்கைத் தமிழர் பகுதிப்

பல்கலைக்கழகங்களில் இல்லாமையும், கட்டிடக்கலைத் தொழில்துறை இப்பகுதிகளில் வளர்ச்சி அடையாமல் இருப்பதும் இத்துறை தொடர்பான உள்ளீடுகளைப் பெறுவதில் இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது.

தகவல் திரட்டலில் நேரடியாக ஈடுபடுபவர்களுக்குக் கட்டிடச் சூழல்கள் குறித்த அடிப்படைத் தொழில்நுட்ப அறிவும், அச்சூழல்களில் தாக்கங்களை உண்டாக்கும் தொடுபுலனாகாப் பண்பாட்டுக் கூறுகள் குறித்த அறிவும், அவற்றுக்கு இடையிலான தொடர்புகள் குறித்த விளக்கமும் ஓரளவுக்குத் தேவை. அத்துடன், கட்டிடச் சூழல்களை அளத்தல், வரைபடங்களைத் தயாரித்தல், ஒளிப்படங்களை எடுத்தல், சில நவீன தொழில்நுட்பங்களைக் கையாளுதல் போன்றவற்றுக்கும் குறிப்பிடத்தக்க திறன் தேவை. இத்தகைய திறன்களைத் தேடிப் பெறுவதும் ஒரு முக்கியமான இடர்ப்பாடு.

மரபுவழிச் சொத்துக்களை ஆவணப்படுத்தும் முயற்சிகள் வெற்றி பெறுவது இதன் தேவை குறித்த சமுதாயத்தின் விழிப்புணர்வில் பெரிதும் தங்கியுள்ளது. இது இலங்கைத் தமிழர் பகுதிகளில் மிகவும் குறைவு. குறிப்பாக, மரபுவழிக் கட்டிடச்சூழல் குறித்த விழிப்புணர்வு மிக மிகக் குறைவு. அத்துடன், பல்வேறு காரணங்களால் கட்டிடச் சூழல்களை அளத்தல், ஒளிப்படம் எடுத்தல் போன்றவற்றுக்கு அனுமதி பெறுவதில் உரிமையாளர்களின் ஒத்துழைப்பைப் பெறுவதும் பல வேளைகளில் கடினமாகவே உள்ளது.

மரபுவழிக் கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்தவதில், பல்வேறு கருவிகள், துணைப் பொருட்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வது, பயிற்சி பெறுவது, வெளிச்சேவைகளைப் பெறுவது போன்றவற்றுக்கு நிதி ஆதாரங்கள் தேவை. தவிர ஆவணப்படுத்தலின் விளைவுகளை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதற்கான நடவடிக்கைகளும், விழிப்புணர்வு நடவடிக்கைகள், பயிற்சியளித்தல் போன்றனவும் நிதி ஆதாரங்களை வேண்டி நிற்பன.

## இன்றைய தேவை

இக்கட்டுரையில் இதுவரை எடுத்தாளப்பட்ட விடயங்கள் இலங்கைத் தமிழர் பகுதிகளில் கட்டிடச் சூழல்களின் நிலை, அவற்றை ஆவணப்படுத்துவது தொடர்பிலான சாத்தியங்கள், குறைபாடுகள் போன்றவற்றை ஓரளவுக்கு எடுத்துக் காட்டியுள்ளன. குறைபாடுகளை நீக்கிச் சாத்தியங்களின் அடிப்படையில் ஆவணப்படுத்தல் செயற்பாட்டை முன்னெடுத்துச் செல்வது ஒரு சிலரால் மட்டும் முடியக்கூடிய இலகுவான விடயம் அல்ல. இதில் பங்களிக்கக்கூடிய அமைப்புக்களையும், தனிப்பட்டவர்களையும் இனங்கண்டு முறையான கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது அவசியம். இத்துறையில் முன்னேறிய பல நாடுகளை எடுத்துக்காட்டுகளாகக் கொண்டு பார்க்கும்போது, அரசாங்களுக்குப் புறம்பாகப் பல பல்கலைக்கழகங்களும், கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்துதலிலும் அவற்றைப் பாதுகாப்பதிலும் அக்கறை கொண்டவர்கள் கூடி உருவாக்கிய சங்கங்களும், வேறு தனியார் அமைப்புக்களும் சிறப்பாகப் பங்காற்றி வருவதை அறிந்துகொள்ள முடியும்.

ஆவணப்படுத்தல் முயற்சிகளில் மாணவர்களை ஈடுபடுத்தல், பயிற்சி வழங்கல், வன்பிரதி ஆவணங்களைப் பாதுகாத்து வைத்தல், ஆய்வுகளை ஊக்குவித்தல், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களின் உதவி பெறுதல் போன்ற செயற்பாடுகளில் இலங்கைத் தமிழர் பகுதிகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் சிறப்பாக ஈடுபட்டு முன்னணியில் நின்று செயற்பட முடியும். இவற்றோடு இப்பகுதிகளில் உள்ள, நில அளவையாளர், படவரைஞர்கள், ஒளிப்படப் பிடிப்பாளர் ஆகியோரைப் பயிற்றுவிக்கும் தொழில்நுட்ப நிறுவனங்களும் இணைந்து செயலாற்றுவது சாத்தியம்.

பல்கலைக் கழகங்களுக்கு வெளியே கட்டிடச் சூழல்கள் தொடர்பில் அறிவு பெற்ற பல்துறை அறிஞர்கள் சேர்ந்து ஒரு அமைப்பை உருவாக்கிக் கொள்வது மிகவும் பயன் தரக்கூடியது. உள்நாட்டு, வெளிநாட்டு வளங்களை ஒருங்கிணைப்பதற்கு இது வசதியாக அமைவதுடன், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது, திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவது, வெளிநாடுகளில் உள்ள இது போன்ற அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவது, யுனெஸ்கோ போன்ற அமைப்புக்களின் உதவி பெறுவது போன்றவற்றுக்கு இது வாய்ப்பாக அமையலாம். கட்டிடச் சூழல்களை ஆவணப்படுத்தல் தொடர்பிலான பல்வேறு செயற்பாடுகளுக்கான வழிகாட்டிகளை உருவாக்கி வெளியிடுதல், பன்னாட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் ஆவணப்படுத்தலுக்கான நியமங்களை உருவாக்குதல் போன்றவற்றிலும் மேற்படி அமைப்பு ஈடுபட முடியும். ஆவணப்படுத்தலில் ஈடுபடும் பல்வேறு தரப்பினர் உரிய முறையில் பதிவுகளை மேற்கொள்ளவும், உருவாகும் ஆவணங்கள் பன்னாட்டுத் தரத்துக்கு நிகராக அமைவதற்கும் இது வழி வகுக்கும்.

## உசாத்துணைகள்


அகிலன், பாக்கியநாதன்., *யாழ்ப்பாணத்து மூவலகு வீடுகள்,* யாழ்ப்பாணம்: மொழியும் வாழ்வும் - ஓர் அறிமுகக் கையேடு, கோகுலம் வெளியீடு, 2006.

சண்முகலிங்கன், என்., *யாழ்ப்பாணத்தில் அண்ணமார் வழிபாடு,* இலங்கை-இந்திய மானிடவியல் - சமயம் சமூகம் பற்றிய ஆய்வுகள், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2004.

சத்தியசீலன், சமாதிலிங்கம்., *மலாயக் குடிபெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்,* அயோத்தி நூலக சேவை, ஐக்கிய இராச்சியம், 2006.

சிவத்தம்பி, கார்த்திகேசு., *யாழ்ப்பாணத்து இந்து மக்களிடையே சமூக மேல்நிலைப்பாட்டு அசைவியக்கமும் வழிபாடும்,* யாழ்ப்பாணம்: சமூகம், பண்பாடு, கருத்துநிலை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு. 2000.

சிவலிங்கம், மு., *சீரிணுவைத் திருவூர்,* சைவத் திருநெறிக் கழகம், இணுவில், 2004.

சோமசுந்தரக்குருக்கள், குமுதா., *யாழ்ப்பாணத்துப் பண்பாட்டில் மடமும் மடக்கட்டிடக்கலையும்,* குமரன் புத்தக இல்லம், கொழும்பு. 2007.

Almagro, Antonio., *Photogrametry for Everybody,* XVII CIPA International Symposium on Architectural Phogrametry, Recife (Brasil), October 1999.

Balasundarampillai, P., *Markets and Fairs of Northern Sri Lanka*, Proceedings of the Fourth International Conference Seminar of Tamil Studies – Volume Two, Jaffna, 1980.

Brand, Stewart., *How Buildings Learn: What Happens After They're Built,* Penguin Books, 1995

Chandrahasan, A., *Resting Places and Resting Halls in Jaffna*, unpublished dissertation submitted to Department of Architecture, University of Sri Lanka,1978.

Carter, *Thomas and Elizabeth Collins Cromley, Invitation to Vernacular Architecture: A Guide to the Study of Ordinary Buildings and Landscapes*. Knoxville, University of Tennessee Press, 2006.

D'Ayala, D., and P. Smars *Minimum requirements for metric use of non-metric photographic documentation,* University of Bath. 2003.

Declaration of ICOMOS marking the 50th Anniversary of the Universal Declaration of Human Rights. 1998.

Eppich, Rad. and Chabbi, Amel. (ed), *Recording, Documentation, Information Management for the Conservation of Heritage Places, Vol. 2 Illustrated Examples,* Section 1, 2007.

ICOMOS Charter, *Principles for the Recording of Monuments, Groups of Buildings and Sites,* 1996.

Karakul, Ozlem., *Folk Architecture in Historic Environments: Living Spaces for Intangible Cultural Heritage,* Milli Folklor, Year 19, Number 75, Autum 2007.

LeBlanc, Francois. and Eppich, Rand., *Documenting Our Past for the Future,* Newsletter 20.3 Fall 2005, The Getty Conservation Institute, 2005.

Mayooranathan, R., *Traditional "Nalusar" or Courtyard Houses of Jaffna,* unpublished dissertation submitted to Department of Architecture, University of Sri Lanka,1975.

Mayooranathan,R., *Understanding the Architectural Traditions of Jaffna,* The Journal of the Sri Lanka Institute of Architects, September 2002 – February 2003 Vol:104.No.01, Sri Lanka Institute of Architects, Colombo, 2002.

Naish, Richard. Bryant., *Circular Houses in Ceylon*. Antiquity 20(80) Dec.1946: 205-209.

Rapoport, Amos. House, *Form and Culture,* Englewood Cliffs: Prentice-Hall, 1969.

Robin Letellier, *Recording, Documentation, Information Management for the Conservation of Heritage Places, Vol. 1 Guiding Principles* with contributions from Werner Schmid and Francois Leblanc, 2011.

Sivapalan, K., *Resting Places and Resting Halls in Jaffna,* unpublished dissertation submitted to Department of Architecture, University of Sri Lanka,1978.

# யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள்காலப் பண்பாட்டுச் செல்வாக்குகள் – ஒரு வரலாற்றுப் பார்வை

க. அருந்தவராஜா

### அறிமுகவுரை

இலங்கையில் தனித்துவமான வரலாற்றினைக் கொண்ட பிராந்தியங்களில் யாழ்ப்பாணக் குடாநாடும் ஒன்றாகும். 16ஆம் நூற்றாண்டின் பின்பாக போர்த்துக்கேயர்கள், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள் போன்ற ஐரோப்பிய இனத்தவர்களின் ஆதிக்கத்தின் கீழ் தொடர்ச்சியாக இலங்கை இருந்தது மட்டுமன்றி யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் அவர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்ததன் பின்னணியில் இப்பகுதிகள் ஐரோப்பியர்களது பண்பாட்டுச் செல்வாக்கிற்கு உட்பட்ட பிராந்தியங்களாக மாறிக்கொண்டன. அந்தவகையில் இந்துமதத்திலும் இந்துப் பண்பாட்டிலும் ஊறிப்போயிருந்த யாழ்ப்பாண மக்களுக்கு கல்வியினையும், சலுகைகளையும், சில சந்தர்ப்பங்களில் பலாத்காரத்தினைப் பிரயோகிப்பதன் வாயிலாகவும் தங்களது அரசியல் நடவடிக்கையினை மட்டுமன்றிக்கூடவே யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள் தங்களது பண்பாட்டுச் செல்வாக்கினையும் ஏற்படுத்தினர். இத்தகைய பண்பாட்டுச் செல்வாக்கானது மதம், மொழி, இலக்கியம். கலை, வாழ்க்கைமுறை போன்ற வடிவங்களில் ஏற்படுத்தப்பட்டன. இவற்றில் சில அம்சங்கள் பின்னர் வந்த ஆங்கிலேய ஆட்சியாளர்களால் அழிக்கப்பட்ட நிலையில் காணப்பட பல அம்சங்கள் இன்றுவரை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவர்களின் ஆட்சியின் முக்கியத்துவத்தினையும் சிறப்பினையும் எடுத்துக்கூறுகின்ற வகையில் தலைநிமிர்ந்து காணப்படுகின்றன. அதாவது போர்த்துக்கேயர்களது பண்பாட்டு அம்சங்களை அழித்தோ அல்லது அவர்களது வாழ்க்கை முறையில் மாற்றங்களை ஏற்படுத்தியோ டச்சுக்காரர்கள் அவற்றில் தங்களது செல்வாக்கினை இலங்கையில் நிலைநாட்டியது போன்று பின்வந்த ஆங்கிலேயர்கள் டச்சுக்காரர்களைப் போன்று மோசமாக நடந்துகொள்ளாமையின் விளைவாகவே பல டச்சுக்காரர்களின் பண்பாட்டு எச்சங்கள் அவர்களின் செல்வாக்கினை யாழ்ப்பாணக் குடாநாட்டில் இன்றுவரை இனங்காட்டி நிற்கின்றன எனலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலப்பகுதி தொடர்பாகப் பல்வேறு வகையான தகவல்கள் கிடைக்கப்பட்டு வந்தாலும் அவை ஒருங்கிணைக்கப்பட்டு அக்காலப் பகுதியிலேற்பட்ட பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பான விடயங்கள் ஆழமாக ஆராயப்படவில்லை. அத்துடன் டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பாகவும் அவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகவும் இக்கட்டுரை ஆராய்கின்றது. டச்சுக்காரர்களின் ஆட்சியில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட புதிய பண்பாட்டம்சங்களைக் கண்டறிவதும் அவை எந்தளவுக்குப் பாரம்பரிய யாழ்ப்பாணப் பண்பாட்டில் மாற்றங்களை ஏற்படுத்தின? அவை தற்காலத்திலும் தொடர்கின்றனவா? என்பதனை ஆராய்வதும் அவற்றினை ஆவணப்படுத்துவதும் சமுதாயத்தின் கட்டாய தேவையுமாகும். எனவே இத்தகைய நோக்கங்களை ஓரளவிற்காவது நிறைவேற்றுவதனை இவ்வாய்வு நோக்கமாகக் கொண்டுள்ளதெனலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குத் தொடர்பாகத் தனித்து எவரும் தற்காலம்வரை ஆய்வினை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அதேநேரத்தில் டச்சுக்காரர்கள்கால யாழ்ப்பாணத்தினைப் பற்றிப் பல்வேறு நூல்களும் கட்டுரைகளும் ஆராய்ச்சியாளர்களினால் எழுதப்பட்டு வெளிவந்துள்ளன என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவற்றிலும்கூட யாழ்ப்பாணக் குடாநாட்டுப் பண்பாடு பற்றிய செய்திகள் விரிவாக காணப்படவில்லையென்றே கூறுதல் வேண்டும். குறிப்பாக P.E.Pieris எழுதிய Ceylon and the Hollanders (1658 – 1796), K.M.de, Silva. & W.G.M, Beumer ஆகியோர்கள் எழுதிய Illustrations and Views of Dutch Ceylon (1602 – 1796) , K.M.de, Silva எழுதிய A History of Sri Lanka, S. Arasaratnam எழுதிய The Dutch Power in Ceylon 1658 – 1687) S.G.Perera எழுதிய History of Ceylon, செ. கிருஸ்ணராஜாவின் இலங்கைவரலாறு மற்றும் பேராசிரியர் சி.பத்மநாதன், கலாநிதி மு.குணசிங்கம் போன்றவர்களது நூல்களும் கட்டுரைகளும்கூட அவர்களது பரந்த ஆய்வில் ஒரு குறிப்பிட்ட வரையறைக்குள்ளேயே யாழ்ப்பாணக் குடாநாட்டில் டச்சக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குச் சம்மந்தமான விடயங்களைக் கூறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஆய்வில் வரலாற்று ரீதியான அணுகுமுறை பின்பற்றப்பட்டுள்ளது. சமகாலத்தில் மதம் பரப்புரைக்காக வந்த புரட்டஸ்தாந்துக் குருமார்கள் எழுதிய குறிப்புக்கள், நெதர்லாந்து சென்று யாழ்ப்பாணந் தொடர்பான சான்றுகளைச் சேகரித்து எழுதப்பட்ட நூல்கள் மற்றும் கட்டுரைகள், டச்சுக்காரர்கள்கால நினைவுச் சின்னங்கள், அழிபாடுகள் போன்றன பிரதான முதல்தர ஆதாரங்களாக ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் ஆய்வுக்குத் தேவையான இரண்டாந்தரச் சான்றுகள் வரிசையில் டச்சுக்காராரர்களது காலந்தொடர்பாக பிற்பட்ட காலங்களில் எழுதப்பட்ட நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள், இத்துறையில் ஈடுபாடு கொண்ட அறிஞர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்றவர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்கள் என்பன இக்கட்டுரைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## டச்சுக்காரர்களின் இலங்கை வருகை

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியின் காரணமாக ஏகாதிபத்திய நோக்குக்கொண்ட சில அரசுகள் ஆதிக்க விஸ்தரிப்புக்கான முயற்சிகளில் இறங்கிக்கொண்டன. *(Perera,S.G,1948,P.245)* இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்ட நாடுகளில் போர்த்துக்கல், ஸ்பெயின், ஒல்லாந்து, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகள் ஆசிய, ஆபிரிக்க, வடஅமெரிக்க, தென்னமெரிக்க மற்றும் அவுஸ்ரேலிய நாடுகளைத் தங்களது குடியேற்றங்களாகக் கொண்டிருந்ததுடன் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் காணப்பட்ட பௌதீக மற்றும் மனித வளங்களைத் தங்களது நாட்டின் நலன்களுக்காகவும் இவை பயன்படுத்திக்கொண்டன. *(குணராசா,க.,கமலா,கு,2008,பக்.252-254)* மேலும் இந்நாடுகள் தங்களது நிர்வாக முறைகளை கைப்பற்றிக் கொண்ட நாடுகளில் அறிமுகப்படுத்திக் கொண்டதன் மூலமாக அப்பகுதிகளின் மக்களைத் தங்களது விசுவாசிகளாக குறுகிய காலப்பகுதியில் மாற்றிக்கொள்வதற்கான செயற்பாடுகளிலும் ஈடுபட்டன. இந்நாடுகள் குடியேற்ற நாடுகளில் கிறிஸ்தவத்தினைப் பரப்புதல், தம்நாட்டவரை அங்கே குடியேற்றுதல் என்பனவற்றின் மூலமாகவும் அவர்களது கொள்கையினைக் கைப்பற்றப்பட்ட நாடுகளில் விரிவுபடுத்தியும் கொண்டன. இத்தகைய காலனித்துவ ஆட்சியாளர்களிலொருவரான போர்த்துக்கேயர்கள் 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கீழைத்தேய நாடுகள்மீது தங்களது கவனத்தினைச் செலுத்த ஆரம்பித்தனர் *(Silva,K.M.De.,1981,pp.98-99).*

தொடர்ந்து போர்த்துக்கேயர்கள் வந்த தடத்தினைப் பின்பற்றி கீழைத்தேயங்களில் செல்வாக்குச் செலுத்தியவர்கள் டச்சுக்காரர்கள். நெதர்லாந்தின் வடபகுதியில் காணப்பட்ட சிறிய அரசுகள் இணைந்து 1581இல் ஐக்கிய மாகாணக் குடியரசினைத் தாபித்துக்கொண்டன *(இளையதம்பி.மு.,1969,ப.172).* ஸ்பெயினிடமிருந்து சுதந்திரத்தினைப் பெற்றுக் கொண்ட டச்சுக்காரர்கள் நாளடைவில் கைத்தொழில் மற்றும் வர்த்தகத்தில் முன்னேற்றங் கண்டனர். பட்டேவியாவினைத் தங்களது கீழைத்தேய நாடுகளின் தலைமையகமாக ஆக்கிக் கொண்ட டச்சுக்காரர்கள் இலங்கையில் காணப்பட்ட கறுவாவினால் கவரப்பட்டனர். அதுமட்டுமன்றி தென்னிந்தியத் துறைமுகங்களைத் தங்களது கட்டுப்பாட்டின்கீழ் வைத்திருப்பதன் மூலமாக அவர்களின் ஆதிக்கச் செயற்பாடுகளை விஸ்தரித்துக் கொள்ளலாமென்ற எண்ணமும்கூட டச்சுக்காரர்கள் இலங்கைமீது கவனத்தினைத் திருப்புவதற்கான காரணங்களிலொன்றாகும் *(Arasaratnam. S,1958, p.106*). 1602இல் முதன் முதலாக இலங்கையுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்ட டச்சுக்காரர்களுக்கு கண்டி மன்னர்கள் அனுசரணை வழங்கினர் (Gunasingam. M, 2005, 227). குறிப்பாக அக்காலப்பகுதியில் கண்டியரசன் இரண்டாம் இராஜசிங்கன் போர்த்துக்கேயர்களை இந்நாட்டிலிருந்து விரட்டுவதற்கு டச்சுக்காரர்களின் உள்நோக்கத்தினை ஆராய்வதனை விடுத்து அவர்களது உதவியினைப் பெற்றுக்கொள்வதிலேதான் அதிகளவுக்கு அக்கறை காட்டியிருந்தான் *(ஐடினை).*

1652இல் ஐரோப்பாவில் போர்த்துக்கேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்குமிடையிலே சமாதானம் நீங்கிய நிலையில் இலங்கையில் முழுமையான அளவில் தங்களது ஆதிக்க விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு டச்சுக்காரர்களுக்குச் சந்தர்ப்பம் கிட்டியது *(அரசரட்ணம்,சி.,1959,82).* தொடர்ந்து இலங்கையின் கரையோரப் பகுதிகளை ஒவ்வொன்றாகக் கைப்பற்றி வந்த இவர்கள் 1658இல் வான்கோன்ஸ் *(Van Goens)* தலைமையில் பெரிய படையொன்றுடன் புறப்பட்டு முதலில் மன்னாரையும் நான்கு நாட்களின் பின்பாக யாழ்ப்பாணக்குடாநாட்டினையும் அதனுடன் சேர்ந்த பகுதிகளையும் போர்த்துக்கேயர்களிடமிருந்து மீட்டுத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். டச்சுக்காரர்களின் செல்வாக்கினுள் கொழும்பு வந்தமையின் பின்னராகவும் வடபிரதேசம் போர்த்துக்கேயர்களின் ஆதிக்கத்தின் கீழேதான் காணப்பட்டது. இதனால் அவர்களது வட ஆள்புலத்து அதிகாரத்திற்கு ஆதாரமாக விளங்கிய மன்னார், ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணக் கோட்டைகளைக் கைப்பற்ற வேண்டியிருந்தது *(குணராசா,க.,2001,ப.48).* மன்னாரில் விளைந்த முத்துக்களும் யாழ்ப்பாணத்தின் யானை வர்த்தகமும் டச்சுக்காரர்களை இலங்கையின் வடக்குநோக்கி நகர்வதற்கு அடிப்படையான காரணமாக இருந்திருக்குமென்பதில் இருவேறுபட்ட கருத்துக்களுக்கு இடமில்லை.

## பண்பாட்டுச் செல்வாக்கு

பொதுவாகப் பண்பாடென்பதனை மிகத்தெளிவாக வரையறுத்துக் கூறுவது கடினமானதாகும். மனிதர்கள் மட்டுமே பண்பாடு என்ற சொல்லோடு தொடர்புடையவர்கள். மேலும் இது மட்டுமே மனிதர்களைப் பிற விலங்கினங்களிடமிருந்து வேறுபடுத்தியும் காட்டுகிறது. பண்பாடு என்னும் கருத்து இலக்கியவியல், வரலாற்றியல், உளவியல். சமுதாயவியல், மானிடவியல் போன்ற பல துறைகளில் பல நிலைகளில் பயன்படுத்தப்படுவதால் அதற்கு வரையறையும் பலவாறாக உள்ளது. அதாவது பண்பாடு பற்றிய வரையறை ஏறத்தாள 160க்கும் மேலாகக் காணப்படுகின்றமை

குறிப்பிடத்தக்கது. எனவே டச்சக்கார்களது ஆட்சியின் பயனாக யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட மாற்றங்களில் பண்பாடு தொடர்பான மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை.

16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து இலங்கையுடன் நேரடியான உறவுகளை ஏற்படுத்திக்கொண்ட போர்த்துக்கேயர்களுக்கு யாழ்ப்பாணத்துடனான அவர்களது உறவு காலந்தாழ்த்தியே ஏற்பட்டது *(Silva,Cosme., ,1994,p.15).* அந்தளவுக்கு அவர்களுக்கு இப்பகுதி அவசியப்படவில்லை. அதனால் அவர்கள் தங்களுக்குச் சாதகமான ஆட்சியாளர் ஒருவரை யாழ்ப்பாணத்தில் அரசராக்குவதுடன் மட்டும் நின்றுகொண்டனர். அது சரிவராத சந்தர்ப்பங்களிலெல்லாம் யாழ்ப்பாணத்தின்மீது தாக்குதல்களை மேற்கொண்டு அச்சுறுத்தியும் வந்தனர். இருப்பினும் யாழ்ப்பாணத்தின் மீதான அரசியல், பொருளாதாரச் செல்வாக்குகள் ஆகியன இலங்கையின் பிற பகுதிகளில் போர்த்துக்கேயர்கள் தங்களது ஆதிக்கத்தினை ஏற்படுத்திக்கொண்டிருக்கையில் யாழ்ப்பாணத்திலும் ஏற்பட்டு விட்டது. ஆனால் பண்பாட்டுச் செல்வாக்கானது யாழ்ப்பாணத்தின்மீது போர்த்துக்கேயர்களது நேரடியான ஆட்சி ஏற்படுத்தப் பட்டதன் பின்பாகவே இடம்பெற்றதெனலாம். ஆனால் டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை போர்த்துக்கேயர்களிடமிருந்து 1658இல் இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றியபோதே யாழ்ப்பாணக்குடாநாடும் அவர்களது செல்வாக்கிற்கு உட்பட்டுவிட்டது. இதனால் அரசியல் செல்வாக்கும் பண்பாட்டுச் செல்வாக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஏற்பட்ட சமகாலத்தேய செல்வாக்குகளாகக் காணப்பட்டன.

## சமயம்

டச்சுக்காரர்கள்கால பண்பாட்டுச் செல்வாக்குகளில் இன்றுவரை நீடித்துத் தொடர்ந்து வருகின்ற செல்வாக்கு அவர்களால் இலங்கையில் பரப்பப்பட்ட புரட்டஸ்தாந்து சமயம். டச்சுக்காரர்களின் கைகளுக்கு யாழ்ப்பாணம் சென்ற சமயத்தில் இங்கே இந்துமதம், இஸ்லாமியமதம், கத்தோலிக்க சமயம் போன்ற மதங்கள் காணப்பட்டன. அந்த வகையில் பன்முகச் சமூகப் பண்பாடானது புதிய வடிவத்தினைப் பெற்றிருந்த காலமாக அக்காலப்பகுதி அமைந்திருந்தது *(கிருஸ்ணராஜா,செ.,2000,ப.237).* இவற்றுள் கத்தோலிக்க சமயந் தவிர்ந்த ஏனைய சமயங்கள் நலிவுற்ற நிலையிலேயே காணப்பட்டு வந்தன. போர்த்துக்கேயர்களின் ஆட்சியில் பல்வேறு அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டிருந்த இவை டச்சுக்காரர்களின் ஆட்சியில் மற்றொரு நெருக்கடியினையும் சந்திக்க வேண்டியிருந்தது.

குறிப்பாக டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்களது வர்த்தக மற்றும் புரட்டஸ்தாந்து மதப்பரப்புச் செயற்பாடுகளுக்கு அக்காலப்பகுதியில் பலமான நிலையில் காணப்பட்டு வந்த கத்தோலிக்க மதமானது பெரிய தடையாகக் காணப்படுகின்றதெனக்கருதி அம்மதத்தினை யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமன்றி இலங்கை முழுவதிலுமிருந்தே அகற்றுவதற்கு முற்பட்டனர் *(மேலது).* இப்பின்னணியில் போர்த்துக்கேயர்களின் மதப்பண்பாட்டின் வடிவங்களினையும் வழிபாட்டம்சங்களையும் அகற்றுவதற்கான நடவடிக்கைகளில் இவர்கள் இறங்கினார்கள். போர்த்துக்கேயர்களை முற்றாக ஒழிக்க வேண்டுமாயின் கடல்வலிமையையோ அல்லது வர்த்தகத்தினையோ மட்டும் ஒழித்தால் போகாது. கத்தோலிக்க சமயத்தினையும் அவற்றுடன் சேர்ந்த வகையில் ஒழிக்க வேண்டியிருந்தது. காரணம் கத்தோலிக்கமும் வர்த்தகமும்

போர்த்துக்கேயர்களுக்கு கீழைத்தேச நாடுகளில் வலிமையினைக் கொடுத்திருந்தன. (*Arasaratnam,S.,1965,pp.1-13).*

இதனால் டச்சுக்காரர்கள் இலங்கையினைக் கைப்பற்றிய உடனேயே கத்தோலிக்க சமயத்தினைத் தடைசெய்வதற்கான பல சட்டங்களை இயற்றினர். குறிப்பாக 1658இல் இயற்றப்பட்ட சட்டமொன்றின் பிரகாரம் கத்தோலிக்க சமயம் அனுட்டிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டது. கத்தோலிக்க குருமார்களை மறைத்து வைத்திருப்பவர்களுக்கும் ஆதரவளிப்பவர்களுக்கும் மரணதண்டனை விதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது (*Arasaratnam,S., 1982, pp.191-205).* கத்தோலிக்கச் சடங்குகள் புரட்டஸ்தாந்து திருச்சபைகளில் நடக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மரணவரி புரட்டஸ்தாந்து மதத்தவர்களுக்கு நீக்கப்பட்டது.

கத்தோலிக்க சமயத்திலிருந்த மூடநம்பிக்கைகளை யாழ்ப்பாண மக்களுக்கு எடுத்துக்காட்டி அவர்களை இலகுவாகச் சீர்திருத்தமதமாகிய புரட்டஸ்தாந்து மதத்திற்கு மாற்றிவிடலாமென டச்சுக்காரர்கள் எண்ணினர் *(குணசிங்கம்,மு.,2008,ப.243).* இதன் விளைவாகவே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கை முழுவதும் புரட்டஸ்தாந்து மத்தினை உடனடியாகப் பரப்புவதற்கான நடவடிக்கையில் இறங்கினர். அந்தவகையில் டச்சுக்காரர்களின் ஆரம்பகால மதமாற்ற நடவடிக்கையில் முக்கிய பங்காற்றியவர் போல்தேயு (Rev. Baldaeus) சுவாமிகள் என்பவரே. 1656இல் இலங்கை வந்த இவர் டச்சுக்காரர்கள் போர்த்துக்கேயர்களிடமிருந்து இலங்கையினைக் கைப்பற்றுகின்ற இறுதி முயற்சியில் ஈடுபட்ட சமயத்தில் அவர்களுக்கு ஆன்மீகவழிகாட்டியாகச் செயற்பட்டவரென்ற கருத்து நிலவுகின்றது. புரட்டஸ்தாந்து சமயத்தினைப் பரப்பவதற்கு யாழ்ப்பாணம் சிறந்த இடமெனக் கண்ட டச்சுக்காரர் மேலிடமானது தொடர்ந்து இவர் இலங்கையினைவிட்டுச் செல்கின்ற வரை கத்தோலிக்க சமயத்தின் செல்வாக்கினை யாழ்பாணக்குடாநாட்டிலிருந்து மட்டுமன்றி இலங்கையிலிருந்தே அகற்றி டச்சுப்புரட்டஸ்தாந்து மதத்தினை இலங்கையில் செல்வாக்குப் பெறச் செய்கின்ற முயற்சியிற்கு இவரைப் பயன்படுத்தியது *(மேலது).*

டச்சுக்காரர்கள் தங்களது காலப்பகுதியில் போர்த்துக்கேயர்களின் காலத்தில் அவர்களால் அமைக்கப்பட்ட ஆலயங்களையும் பாடசாலைகளையும் அப்படியே மதமாற்றச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தினர். யாழ்ப்பாணத்திருந்த சபையானது காலி, கொழும்பு, மன்னார் போன்ற பகுதிகளிலிருந்த சபைகள் போன்று பிரதான புரட்டஸ்தாந்து திருச்சபையின் உறுப்பினராக இயங்கியது *(Arasaratnam,S.,1965,pp.1-13).* இவற்றில் போதகர் ஒருவரும் அதிகாரிகள் பலரும் அங்கத்துவம் பெற்றிருந்தனர். போர்த்துக்கேயர்கள் தங்களது காலப்பகுதியில் சமயத்தினைப் பரப்புவதற்குக் கையாண்ட வழிமுறைகளையே இவர்களும் கையாண்டனர். வினாவிடைகளைத் தயாரித்து அவற்றின் மூலமாகச் சமயத்தினைப் பரப்பினர். சுதேச மொழிகளை இதன் பொருட்டுக் கற்று அவ்வழியே சமயத்தினைப் பரப்பினர். தொழில் ரீதியான சலுகைகள், மேலைத்தேய கல்விமுறைகள் என்பன உயர் வகுப்பினர்களை மதமாற்றஞ் செய்யத் தூண்டியது. இவற்றினைவிடச் சாதிக்கட்டுப்பாடுகள், கொடுமையான சீதன முறைகள் என்பனவும் அதிகளவானவர்களை யாழ்ப்பாணக் குடாநாட்டில் மதமாற்றம் செய்யத்தூண்டியதெனலாம். புரட்டஸ்தாந்து மத அடிப்படைக் கோட்பாடுகள் தமிழுக்கு மொழி பெயர்க்கப்பட்டன. இவர்கள் இலங்கையில் சமயப்

போதகர்களைத் தெரிவு செய்யும் நோக்குடன் யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் இரண்டு செமினரிகளைத் திறந்தனர் *(அருமைநாயகம், க.,1967, ப.37).*

மேலும் போர்த்துக்கேயர்களைப் போலன்றி டச்சுக்காரர்கள் தங்களது ஆட்சியின் இறுதிக்காலப்பகுதியில் இலங்கையர்களுக்கு மதச் சுதந்திரத்தினை வழங்கினர். இப்பின்னணியில் இந்து ஆலயங்கள் பல திருத்தப்பட்டன. பிராமணர்கள் இந்தியாவிலிருந்து வருகை தந்து கிரியைகளை நடாத்தினர். இதற்குக்காரணம் டச்சக்காரர்கள் சுதேச மக்களது எதிர்ப்புக்களைச் சந்திக்க விரும்பாமல் இருந்திருக்கலாம். காரணம் அவர்களின் பிரதான இலக்கு சமயம் பரப்புவதனைவிடுத்து வணிகத்தினைப் பெருக்குவதாகக் காணப்பட்டதனால் இவற்றினைச்சிறப்பாக மேற்கொள்வதற்கு நாட்டு மக்களின் ஆதரவு அவசியமென்பதனை அறிந்திருக்க வேண்டும். இதன் காரணமாகச் சைவசமயத்தின் மறுமலர்ச்சிக்காலமாக டச்சக்காரர்களின் இறுதிக்காலத்தினைக் கூறலாம். ஆனால் கலாநிதி குணசிங்கம் டச்சக்காரர்களின் ஆரம்ப காலப்பகுதியில் சைவசமய மறுமலர்ச்சி ஏற்பட்டதாக கூறுகின்றார் *(குணசிங்கம்,மு., 2008,ப.245).* ஆனால் இது தவறென்பதனை பல்வேறு சான்றுகள் மூலமாக அறிய முடிகின்றது. ஆரம்பகாலங்களில் இவர்களும் போர்த்துக்கேயர்களைப் பின்பற்றி யாழ்ப்பாணத்தில் சுதேச மதங்களின் மீது கட்டுப்பாடுகளையும் கலையழிவுக் கொள்கையினையுமே மேற்கொண்டு வந்தனர். மேலும் இவரும் அதே நூலில் மற்றொரு இடத்தில் சைவமக்களும் தங்களது சமயத்தினை மறைவான பிரதேசங்களில் அனுட்டித்ததாகக் குறிப்பிடுகின்றமை ஆய்வாளர் இவ்விடயமாகக் கொண்டிருந்த முரண்பட்ட கருத்தினை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது *(மேலது).*

1680இல் டச்சு அதிகாரிகளினால் எடுக்கப்பட்ட புள்ளிவிபரங்களின்படி யாழ்ப்பாணப் பிரதேசத்தின் மக்கள் தொகையானது 169,299ஆகக் காணப்பட்டது. இவர்களில் 85 சதவீதமான மக்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வாழ்ந்துள்ளனர். 1664இல் புரட்டஸ்தாந்து கிறிஸ்தவமதம் தொடர்பான அறிக்கையானது யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மன்னாரிலும் காணப்பட்ட புரட்டஸ்தாந்து கிறிஸ்தவர்களின் தொகையானது 130,000 எனவும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இவர்களின் தொகை 104,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது *(Hague Arch.,VOC, Inv.1246.f.19, மே.கோ. குணசிங்கம், மு.,2008,ப.230).* 1671இல் வெளிவந்த மற்றொரு அறிக்கையில் குடாநாட்டில் 142,357 தொகையான மக்கள் வாழ்ந்ததாகவும் அவர்களில் 141,456பேர் கிறிஸ்தவர்கள் எனவும் கூறுகின்றது *(ஐடினை.இ Inv.1280.ff127-244, மே.கோ. குணசிங்கம், மு.,2008,ப.231).* ஆனால் இத்தகைய தரவுகள் டச்சக்காரர்களால் எடுக்கப்பட்ட தகவல்களாக இருப்பதனால் பெருமளவிற்கு நம்பகத்தன்மை அற்ற தரவுகளாகவே இவை உள்ளன. இறுதியாகப் பெறப்பட்ட அறிக்கையினை நோக்கினால் சைவர்களோ அல்லது இஸ்லாமியர்களோ குடாநாட்டில் முற்றாக வாழவில்லையென்ற நிலையே காணப்படுகின்றது. அக்காலப்பகுதியில் வெளியுலகத்திற்கு கிறிஸ்தவர்களாகவும் வீட்டில் இந்துக்களாகவும் பலர் வாழ்ந்துள்ளனர் என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால் பகலில் தேவாலயங்களுக்குச் செல்பவர்களை வைத்துக்கொண்டு கணிப்பிடுதல் தவறானது. மேலும் டச்சுக்காரர்கள் தங்களது ஆட்சிக்காலத்தின் இறுதியில் சமயச்சுதந்திரத்தினை வழங்கினார்களென்றால் சைவர்கள் எனப்பட்ட ஒரு குறிக்கப்பட்ட தொகையினர் காணப்பட்டதன் பின்னணியில் அவர்களின் ஆதரவினைப் பெறுவதற்காகவே என்பதனையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் மன்னாரிலும் புரட்டஸ்தாந்து சமயம் பரப்பப்பட்ட அளவிற்கு வன்னிப் பகுதிகளில் பரப்பப்படவில்லை. காரணம் இப்பிரதேசங்களில் இவர்களது செல்வாக்கு அதிகளவில் ஏற்படவில்லை. அதுமட்டுமன்றி அக்காலப்பகுதியில் வன்னிப்பகுதி மக்கள் தங்களின் மதங்களில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவர்களாகவும் விளங்கினர். ஆரம்பத்தில் டச்சுக்காரர்களின் மதம் பரப்புகின்ற நடவடிக்கைகள் இலங்கையில் வெற்றியடைந்தது போன்று காணப்பட்டாலும்கூட அது நிலையானதாக அமையவில்லை. காரணம் அவர்களது ஆட்சியானது நாட்டினை விட்டு அகன்றதுமே அம்மதத்தினைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்பட்டது.

டச்சக்காரர்களின் சமயப் பிரச்சார நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெறாமைக்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. இலங்கையில் மக்கள் தொகையில் மிகவும் குறைவாகக் காணப்பட்ட பறங்கியர்கள் மத்தியிலேதான் தனித்துச் செல்வாக்குப் பெற்ற மதமாக இவர்களது மதம் காணப்பட்டது, விவிலிய நூல்களை ஆதாரமாகக்கொண்ட இச்சமயத்தினை விளங்குவதற்கு அக்கால யாழ்ப்பாண மக்களிடையிலே போதிய கல்வியறிவு காணப்படவில்லை. மேலும் விக்கிரக ஆராதனைகளை புரட்டஸ்தாந்து மதம் கொண்டிருக்கவில்லை. கத்தோலிக்க சமயத்தின் சில அனுட்டான முறைகள்கூட சைவமக்களின் பண்பாட்டுடன் ஒத்தவகையில் அமைந்திருந்தன. சைவத்தமிழ்ப் பண்பாட்டில் ஊறிய மரபு முறைமைகள் கத்தோலிக்க சமய வாழ்வுமுறைமையிலும் வழிபாட்டு மரபிலும் இயல்பாகவே இணைக்கப்பட்டன *(சுந்திரகாந்தன்,ஏ,ஜே.,1993,ப.76).* எல்லாவற்றினைவிட வர்த்தகமே அவர்களின் பிரதான நோக்கமாக விளங்கியது. இவ்விடயமாக இவர்கள் பல சட்டங்களைப் பிறமதங்களுக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டபோதும்கூட அவற்றினை நடைமுறையில் இவர்களால் செயற்படுத்த முடியவில்லை *(அருமைநாயகம், க.,1967, ப.38).*

பொதுப்பட பார்த்தால் டச்சுக்காரர்கள் யாழ்ப்பாணத்தில் விட்டுச் சென்ற முக்கியமான பண்பாட்டுச் செல்வாக்குகளிலொன்றாக அவர்களது புரட்டஸ்தாந்துமதம் காணப்படுகின்றது. கத்தோலிக்கர்களுடன் ஒப்பிடுகின்றபோது இவர்களது எண்ணிக்கை குறைவாகக் காணப்பட்டாலும் இன்றுவரை அழிக்கமுடியாத பண்பாட்டுச் செல்வாக்காக யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்றது.

## புரட்டஸ்தாந்து தேவாலயங்கள்

டச்சுக்காரர்களின் பிரதான நோக்கம் வணிகம் என்பதாகக் காணப்பட்டதனால் மதம் பரப்புதலுக்குப் போர்த்துக்கேயர்களைப் போன்று வெறித்தனமான செயல்களில் ஈடுபடவில்லை. இதற்காகப் போர்த்துக்கேயர்களைப் போன்று செலவுகளும் அதிகம் செய்யவில்லை. போர்த்துக்கேயர்களின் தேவாலயங்களையே பெருமளவிற்குத் தங்களுடைய மதவழிபாட்டுத் தலங்களாக மாற்றிக்கொண்டனர். அல்லது சமயப்பிரச்சாரத்துக்குத் தேவையான திருச்சபைகளை போர்த்துக்கேயரது திருச்சபைகள் காணப்பட்ட இடங்களில் டச்சுக்காரர்கள் அமைத்துக் கொண்டனர்.*(Pieris,P.,1995,p.59-64).*

டச்சுக்காரர்களின் காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் 32 தேவாலயங்களும் இலங்கை முழுவதும் 240 தேவாலயங்களும் காணப்பட்டதாக டச்சுக்காரர்களின் ஆவணங்களில் குறிப்புக்கள் காணப்படுகின்றன *(சி.டி.வேலுப்பிள்ளை,1964, ப.23).* சிறிய கோயில்களாயினும்

கற்களைக்கொண்டு மிக நேர்த்தியான முறையில் அவை வடிவமைக்கப்பட்டிருந்தன. கத்தோலிக்க தேவாலயங்கள் காணப்பட்ட இடங்கில் தங்களது ஆலயங்களை அமைத்தோ அல்லது அவற்றினை அழித்தோ அல்லது அப்படியே தமது வழிபாட்டிடங்களாகவோ மாற்றியோ தங்களது வழிபாட்டிடங்களை அமைத்திருந்தனர். இந்த ஆலயங்களில் அரசாங்கத்தின் கட்டளைக்குப் பயந்து தினமும் ஆயிரக்கணக்கானோர் வழிபாட்டுக்காக வந்து சென்றனர். மல்லாகத்தில் போர்த்துக்கேயர்கள் கட்ட ஆரம்பித்த ஆலயத்தினை டச்சுக்காரர்கள் கட்டி முடித்தனர். சங்கானை. மணற்காடு, மயிலிட்டி, அச்சுவேலி, வட்டுக்கோட்டை, சாக்கோட்டை, சாவகச்சேரி, முகமாலை, பண்டத்தரிப்பு போன்ற பல இடங்களிலும் டச்சுக்காரர்களினால் பல கிறிஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டன *(மேலது).* போர்த்துக்கேயர்களைப்போலவே இவர்களும் கல்வியினை சமயத்தினைப் பரப்புவதற்கான ஒரு கருவியாகப் பயன்படுத்தினர். இதன்காரணமாகவே திருச்சபையினை அண்மித்தவகையில் பாடசாலைகளும் அவர்களால் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சைவஆலயங்கள்

டச்சுக்காரர்களின் ஆட்சியின் இறுதியில் சுதேச சமயங்களுக்கு விதிக்கப்பட்டிருந்த தடைச்சட்டங்கள் நீக்கப்பட்டமையினால் பிற்காலத்தில் இந்து சமயம் எழுச்சியடைவதற்கான சூழ்நிலை ஏற்பட்டது. தொடர்ந்து ஈழத்து இந்துக்கள் நீண்டகாலமாக செல்வாக்கற்றிருந்த இந்து சமயத்தை மீளக் கட்டியெழுப்புகின்ற பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். அந்நியர் ஆட்சியில் சிதைவுற்றிருந்த கோயில்களை புனருத்தாரணம் செய்தல், புதிய கோயில்களைக் கட்டுதல் போன்றவற்றில் ஈடுபட்டனர். *(பேராசிரியர் புஷ்பரட்ணம்,ப.,நேர்காணல்)* டச்சுக்காரர்களினால் வழங்கப்பட்ட சமயச்சுதந்திரத்தின் தாக்கத்தினை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்து ஆலயமொன்றில் காணப்பட்டுள்ள கோபுரம் பறைசாற்றுகின்றது. இங்கு அமைந்துள்ள கைலாசநாதர் ஆலயத்தில் காணப்படுகின்ற விமானத்தின் சிற்பங்களில் உள்ள உருவங்கள் டச்சுக்காரர்களின் ஆடைகளையும் அவர்களது தலை அலங்காரங்களையும் கொண்டு காணப்படுவதனை அவதானித்துக்கொள்ள முடிகின்றது. இது இந்துசமய வளர்ச்சியானது டச்சுக்காரர்களின் இயல்புகளை உள்வாங்கிய வகையில் எழுச்சியடைந்தமையினை உணர்த்துகின்றது.

ஆலயப்புனரமைப்பு மற்றும் ஆலயங்களை அமைக்கின்ற பணிகளுக்கு அரசின் அனுமதியை இக்காலத்தில் இந்துக்கள் பெறவேண்டியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அந்தவகையில் வண்ணார்பண்ணையில் இருந்த பெரும் செல்வந்தரான வைத்திலிங்கச் செட்டியார் கி.பி 1787இல் வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோயிலைக் கட்ட உத்தரவுபெற்று 1791இல் அக்கோயிலைக் கட்டி முடித்து கும்பாபிசேகமும் செய்துகொண்டார் *(இராசநாயகமுதலியார்,1933, ப.186).* மேலும் யாழ்ப்பாணத்திலமைந்துள்ள பெருமாள் கோயிலும் இக்காலப்பகுதியிலே அமைக்கப்பட்ட கோயிலே. தென்னிந்தியாவிலிருந்து வந்த சோனியச்செட்டிகள் தாங்கள் வழிபாடு செய்ய வேண்டி இக்கோயிலை அமைத்தனர். *(மேலது)* மேலும் நயினை நாகபூசணி அம்மன் கோயில், மாவிட்டபுரம் கந்தசாமி கோயில், போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்ட நல்லூர் கந்தசாமி கோயில் போன்றனவும் இக்காலத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டவையே. இவைதவிர நீராவியடியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம், வீரமாகாளி அம்மன் ஆலயம், வண்ணார்பண்ணை மேற்கு

பிள்ளையார் ஆலயம், வேம்படிப் பிள்ளையார் கோயில் என்பனவெல்லாம் டச்சுக்காலத்தைச் சேர்ந்தவையே *(சைவசமயக்கோயில்கள் பற்றிய பதிவு, 1898).*

## கல்வி

போர்த்துக்கேயர்களைப் போலவே இவர்களும் சமய நோக்குடன் கல்விப்பணியில் ஈடுபட்டுக்கொண்டாலும் நாளடைவில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட பல பாடசாலைக்கல்வி முறையினை உருவாக்கிக்கொண்டனர். டச்சுக்காரர்களைப் பொறுத்தவரை அவர்கள் போர்த்துக்கேயர்களைப் போன்று தங்களின் கல்விச்செயற்பாட்டினை முழுவதுமாக சமயக்குழுக்களின் பொறுப்பில் விடாமல் அரச முகாமைத்துவத்தின் கீழேயே அதனை வைத்திருந்தனர். சமுதாயத்தின் தேவையினைக் கருத்தில் கொண்டு கல்வியினை அவர்கள் மாற்றியமைத்தனர். இதனை டச்சுக்காரர்கால கல்வி நடவடிக்கையின் சிறப்பான அம்சங்களிலொன்றாகக்கூடக் கொள்ளலாம். அந்தவகையில் இவர்கள் இலங்கையில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கல்வியினை உருவாக்குவதற்கு முயன்றவர்கள் என்ற வகையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர் *(Sasikala,K.,2001,p.83).* இவர்கள் போர்த்துக் கேயர்களைப் போன்று மக்களை மதம் மாற்றுகின்ற நிறுவனமாகப் பாடசாலையினையே பயன்படுத்தினர். யாழ்ப்பாணம் உட்படத் தமது ஆட்சிக்குட்பட்ட கரையோரப் பிரதேசங்களில் கோயிற்பற்றுப் பாடசாலைகளை அமைத்தனர். (*Hague Arch., Inv, 326 3ff 677 – 678, மே.கோ. குணசிங்கம், மு.,2008,ப.231).*

1690இல் நல்லூரில் தமிழ்ச் செமினரி நிறுவப்பட்டது. இது டச்சக்காரர் அமைத்த முதலாவது உயர்கல்வி நிறுவனமாகக் காணப்பட்டது *(குணசிங்கம்,மு.,2008,ப.250).* 1769களில் வலிகாமம், வடமாராட்சி, தீவுப்பகுதிகள் போன்றவற்றிலும் பல பாடசாலைகள் டச்சக்காரர்களின் நிர்வாகத்தின் கீழ் சிறப்பாக இயங்கி வந்தன. வண்ணார்பண்ணையில் 50 மாணவர்களுடன் இயங்கிய டச்சுப்பாடசாலை பற்றியும் சிலாபத்தில் 80 மாணவர்களுடன் இயங்கிய தமிழ்பாடசாலை தொடர்பாகவும் குறிப்புக்கள் உள்ளன (*Hague Arch., Inv, 326 3ff 677 – 678, மே.கோ. குணசிங்கம், மு.,2008,ப.231).* 1663இல் மன்னாரிலும் யாழ்ப்பாணத்திலும் காணப்பட்ட பாடசாலைகளில் 15012 மாணவர்கள் கற்றுவந்துள்ளனர். இது இரண்டு வருடங்களில் 18,000 ஆக உயர்ந்து கொண்டது. *(ஐடினை)* 1756இல் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு போன்றவற்றில் கல்வி கற்றுவந்த மாணவர்களின் தொகையானது 30859ஆகக் காணப்பட்டதனைப் புள்ளிவிபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன *(கிருஸ்ணராஜா,செ.,2000,ப.237).* முன்னைய காலங்களுடன் ஒப்பிடுமிடத்து டச்சுக்காரர்கள் அறிமுகப்படுத்திய கட்டாயக் கல்வியின் காரணமாக பெண்கல்வியானது ஓரளவுக்காவது வளர்ச்சி கண்டதெனலாம். கட்டைவேலி கோயிற்பற்றுப்பாடசாலை, புலோலி, காரைநகர் கோயிற்பற்றுப் பாடசாலைகள் டச்சுக்கார்களால் ஆரம்பித்து நடத்தப்பட்ட கோயிற்பற்றுப்பாடசாலைகளில் முக்கியமானவை.

## இலக்கியங்கள்

டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்தில் சுதேச இலக்கியங்கள் பல வளர்ச்சி கண்டன. இவற்றினை டச்சு ஆவணங்களின் மூலமாகத் தெரிந்துகொள்ள முடிகின்றது. காரணம் தங்களது மதப்போதனையின் நிமித்தமாக அவர்கள் தமிழைக் கற்கவும் அம்மொழியினைப்

பற்றி தெரிந்துகொள்ளவும் முனைந்தனர். இத்தகையதொரு பின்னணியில்தான் அவர்களின் மதசார்பான படைப்புக்கள் தமிழில் மொழி பெயர்கப்பட்டு வெளியிடப்பட்டன. எடுத்துக்காட்டாக போல்டேயஸ் சுவாமிகள் ‘Beschrgving Van Malabar en Coromandel' என்ற தன்னுடைய சொந்தப் படைப்பினை 1671இல் வெளியிட்டிருந்தார் *(Baldaeus,p.,1672,pp.190-191).* மேலும் இக்கால தமிழர்களின் வரலாற்றினைக் கூறுகின்ற யாழ்ப்பாண வைபவமாலை என்ற நூலினை மயில்வாகனப்புலவர் 17ஆம் நூற்றாண்டின் இறுதியில் எழுதி வெளியிட்டார். உறுதியானகாலம் சரியாகத் தெரியவில்லை. இது டச்சுத்தேசாதிபதி மக்ரா என்பவரின் வேண்டுகோளுக்கிணங்க எழுதப்பட்டது. இக்காலப்பகுதியில் எழுந்த மற்றொரு முக்கியத்துவம் வாய்ந்த படைப்புத் தேசவழமை என்ற நூலாகும். தேசாதிபதி சைமனுடைய முயற்சியினால் 1707இல் டச்சு அரசாங்கத்தினால் இது பிரகடனப்படுத்தப்பட்டது *(கிருஸ்ணராஜா, செ., 2002, 250).*

சின்னத்தம்பிப்புலவரினால் எழுதப்பட்ட கல்வளையந்தாதி என்ற பிரபந்தமும் மறைசையந்தாதி என்ற நூலும் இக்காலத்திற்குரியதே. சேனாதிராய முதலியாரினால் நல்லைவெண்பா, நல்லையந்தாதி என்பனவும் எழுதப்பட்டன. மேலும் டச்சுக்காரர்களின் காலத்தில் நாடகங்கள் பல எழுதப்பட்டன. கணபதி ஐயரினால் அலங்காரரூபநாடகம், அதிரூபவதி விலாசம், வாலபீக நாடகம் என்பன எழுதப்பட்டன. முத்துக்குமாரசாமிப்புலவரினால் தேவசகாய நாடகம் இயற்றப்பட்டது *(மேலது).* இத்தகைய இலக்கியங்களெல்லாம் டச்சுக்காரர்களின் ஆட்சியின் நடுப்பகுதியிலோ அல்லது மதச்சுதந்திரம் வழங்கப்பட்டதன் பின்னணியிலோதான் தோன்றியிருக்க வேண்டும்.

## மொழி

டச்சுக்காரர்களின் ஆட்சியானது பல ஆண்டுகள நீடித்து வந்தமையின் பின்னணியில் அவர்கள் யாழ்ப்பாணத்தில் விட்டுச் சென்ற முக்கியமான பண்பாட்டுச் செல்வாக்காக அவர்களுடைய மொழி காணப்படுகின்றது. இவர்கள் யாழ்ப்பாண மக்களுக்குப் புதியதாக அறிமுகப்படுத்திய ஆட்சிமுறை, தொழில், சமயம், உணவு, உடை, வாழ்க்கைமுறை போன்றவற்றினைக் குறிக்கின்ற டச்சுமொழிச் சொற்கள் தமிழில் காணப்படுகின்றன.

உலாந்தா, பிசுக்கால், சக்கடத்தார், நொத்தாரிசுலாச்சி, பீறோ, பேத்தல், வக்கு, தாச்சி, பக்கூசு, போச்சி, துட்டு, வங்குறோட்டு போன்ற டச்சுமொழிச் சொற்களை இதற்கு எடுத்தக்காட்டாகக் குறிப்பிடலாம். யாழ்ப்பாண மக்களுடன் இவர்கள் நெருங்கிப் பழகியமையினால் டச்சுமொழிச் சொற்கள் யாழ்ப்பாணத்தில் அதிகம் பேசப்படுகின்ற சொற்களாயிற்று. அதேநேரத்தில் இவர்களின் காலத்தில் தமிழ்மொழியானது கிறிஸ்தவ சிந்தனைகளுக்கும் அனுட்டானத்துக்கும் சிறந்த கருவியாக மாறியதென்பதனையும் மறுப்பதற்கில்லை. போல்டேயஸ் சுவாமிகளே தமிழ் மொழியினைக் கற்று மற்றைய போதகர்களுக்கு வழிகாட்டியாக விளங்கினார்.

## கோட்டைகள்

டச்சுக்காரர்கள் கட்டிடக்கலையில் சிறப்புற்று விளங்குகின்றனர். ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்களால் அமைக்கப்பட்டிருந்த கோட்டைகளை இவர்கள் புனர்நிர்மாணம் செய்து நவீனமுறைகளில் தங்களுக்கேற்ற வகையில் பாதுகாப்பான ஏற்பாடுகளுடன் கட்டினர். யாழ்ப்பாணக்கோட்டை, ஊர்காவற்றுறையில் அமைந்துள்ள கோட்டை, பூநகரிக்கோட்டை,

மன்னார்கோட்டை போன்ற கோட்டைகளை இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட கோட்டைகளுக்கு எடுத்துக்காட்டுக்களாகக் குறிப்பிடலாம். போர்த்துக்கேயர்களிடமிருந்து கைப்பற்றிய கோட்டை களெல்லாம் ஐங்கோண வடிவத்தில் மாற்றியமைக்கப்பட்டன. *(சசிதா, கு., 2010, பக்.111-113).* வரணி மற்றும் நெடுந்தீவு போன்ற பகுதிகளிலும் டச்சுக்காரர்கள் அமைத்த கோட்டைகளின் எச்சங்கள் இருப்பதாகப் பேராசிரியர் கிருஷ்ணராஜா தன்னுடைய இலங்கை வரலாறு பாகம் 2 நூலில் குறிப்பிட்டாலும் நிரூபிப்பதற்கு மேலதிக ஆதாரங்கள் வேண்டியுள்ளது. இத்தகைய கோட்டைகளை போர்த்துக்கேயர்கள் எத்தகைய நோக்கங்கள் கருதிக் கட்டினார்களோ அத்தகைய நோக்கங்களே இவர்களது நிர்மாணத்திலும் காணப்பட்டது. அந்நியரிமிருந்து பாதுகாப்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை முகாமைப்படுத்துதல் என்பன இவற்றின் முக்கிய நோக்கங்களாக விளங்கின.

இவர்கள் கோட்டைகளைப் புனருத்தாரணம் செய்து அமைத்தபோது 17ஆம் நூ ற்றாண்டில் நவீன முறைகளில் விசாலமான கொத்தளங்களோடும் பீரங்கிகளை வைத்துச் சுலபமாக வெடிக்கக்கூடிய மாதிரிக் கோட்டையின் முடக்குகளில் முனைப்புக்களையும் அமைத்துக்கட்டப்பட்ட கோட்டை கட்டுகின்ற முறைகளைப் பின்பற்றினர். டச்சுக்காரர்களின் ஆட்சிக்காலத்திற்குப் பின்வந்த ஆங்கிலேயர்களின் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட கோட்டைகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணக் கோட்டையில் தற்போது அழிந்த நிலையில் காணப்படுகின்ற இராணிமாளிகை ஆங்கிலேயர்களால் அமைக்கப்பட்டதே. சில பகுதிகள் கோட்டைகளில் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறைக்கோட்டை மட்டுமே பெருமளவிற்கு டச்சுப்பாணியில் இன்றும் காணப்படுகின்றது. இக்கோட்டைகளின் பலமே பலருக்கு யுத்தகாலங்களில் பாதுகாக்கின்ற அரணாகப் பயன்பட்டது.

## வாழ்விடங்கள்

டச்சுக்காரர்களின் கட்டிடக்கலையின் பாணியானது யாழ்ப்பாண மக்களின் வீடுகட்டுகின்ற அமைப்பிலும் காணப்படுகின்றன. கடற்கரையிலிருந்து எடுக்கப்பட்ட கோரல் கற்களினால் வீடுகளையும் கோட்டைகளையும் அமைக்கின்ற முறையினை இலங்கையருக்கு இவர்கள் அறிமுகப்படுத்தினர். அகண்ட விறாந்தைகள், உயர்வான முகடுகள், தனித்துவமான வளைவுகள், சிறப்பான கொரிந்தியன் தூண்கள், முகப்பின் இருமருங்கிலும் இலச்சினைகள் என டச்சுக்காரர்களின் இல்லங்கள் காணப்பட்டன. யாழ்ப்பாணக்குடாநாட்டில் கட்டிட மூலப்பொருட்களுக்கான தட்டுப்பாடு காணப்பட்டதனால் இவர்கள் கட்டிடத்தேவைகளுக்காக கடலிலிருந்து எடுக்கப்பட்ட முருகைக்கற்கள் அல்லது கடற்பவளக் கற்களைப் பயன்டுத்தியிருந்தனர். வீடுகளின் தளங்களுக்கு இறக்கமதி செய்யப்பட்ட மாபிள் கற்கள் பதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணக்குடாநாட்டின் மத்தியிலுள்ள ஐந்தாம் குறுக்குத் தெருப்பகுதிகளிலுள்ள வீடுகள், கடற்கரைப் பகுதியிலுள்ள சில வீடுகள் டச்சுக்காரர்களின் பாணியிலியே இன்றுங் காணப்படுகின்றன.

## வீதிகள்

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் டச்சுக்காரர்களினால் அமைக்கப்பட்ட வீதிகள் அவர்களது பெயர்களைச் சொல்லுகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து பல பகுதிகளுக்கும் இத்தகைய

தெருக்கள் அமைக்கப்பட்டிருந்தன. பல வீதிகள் இன்று அவர்களை ஞாபகப்படுத்துகின்ற வகையில் அவர்களது பெயரினாலேயே அழைக்கப்பட்டு வருகின்றன.

## வைத்தியசேவைகள்

வைத்தியதுறையில் மறுமலர்ச்சி ஏற்பட்ட காலப்பகுதியாக டச்சுக்காரர்களின் ஆட்சிகாலத்தினைக் குறிப்பிடலாம். மூலிகைத் தோட்டங்கள் அமைப்பதில் டச்சு நிர்வாகம் அக்கறை காட்டியது. இவர்களின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்தியசாலைகளும் வைத்தியமுறைகளும் நன்கு வளர்ச்சியடைந்தன. யாழ்ப்பாணத்திலுள்ள வைத்தியசாலை, மயிலிட்டியிலுள்ள காசநோய் வைத்தியசாலை போன்றவைகளெல்லாம் டச்சுக்காரர்காலத்தில் நிறுவப்பட்டவைகளே *(கிருஸ்ணராஜா,செ., 2002, ப.262).*

## நிறைவுரை

1602இல் இலங்கையின் கரையோரங்களில் காலடி பதித்த டச்சுக்காரர்கள் 1658இல் யாழ்ப்பாணம் உட்பட இலங்கையின் கரையோரங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். தொடர்ந்து இவர்களின் ஆட்சியின் விளைவாக பல மாற்றங்கள் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டன. அத்தகைய செல்வாக்குகளில் பண்பாட்டுச் செல்வாக்கும் குறிப்பிடத்தக்க வகையில் காணப்படுகின்றன. இவை மக்களின் நாளாந்த வாழ்வுடன் பிணைந்த வகையில் இன்று உள்ளன. யாழ்ப்பாண மக்கள் தெரிந்தோ தெரியாமலோ இவற்றுக்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். டச்சுக்காரர்கள் நாட்டினை விட்டு அகன்று பல வருடங்கள் கடந்த பின்னரும் அவர்கள் யாழ்ப்பாணக்குடாநாட்டு மக்களின் பண்பாட்டில் ஏற்படுத்திய செல்வாக்கு தொடர்ந்தும் இன்று அவர்கள் பெயர் சொல்கின்ற வகையில் காணப்படுகின்றன.

## உசாத்துணை நூல்கள்

### தமிழ்

1. அரசரட்ணம், சி. “இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்”, *இளங்கதிர்* (கொழும்பு : தமிழ்ச்சங்கம், இலங்கைப் பல்கலைக் கழகம்,1959).
2. அருமைநாயகம், க. “இலங்கையில் ஒல்லாந்தர் பின்பற்றிய சமயக்கொள்கை”, *சிந்தனை,* இதழ் 4 (யாழ்ப்பாணம்: பல்கலைக்கழகம்,1967).
3. இராசநாயகமுதலியார்,செ. *யாழ்ப்பாணச் சரித்திரம்* (யாழ்ப்பாணம் : 1936).
4. இளையதம்பி, மு. *இலங்கைச் சரித்திரமும் ஐரோப்பியச் சரித்திரமும்* (யாழ்ப்பாணம் சிறிலங்கா புத்தகசாலை, 1969).
5. கிருஸ்ணராஜா. செ, *இலங்கைவரலாறு,* பாகம்-02 (யாழ்ப்பாணம்: பிறைநிலா வெளியீடு, 2000).
6. குணசிங்கம், மு. இலங்கையில் தமிழர் ( சிட்னி : எம்.வி. வெளியீடு, 2008).
7. குணராசா, க. *யாழ்ப்பாண வைபவமாலை - ஒரு மீள்வாசிப்பு* (யாழ்ப்பாணம் : கமலம் பதிப்பகம், 2001).
8. குணராசா,க., கமலா, கு., *இலங்கைச்சுருக்கவரலாறு* (யாழ்ப்பாணம் : கமலம் பதிப்பகம், 2008).

9. நடராசா,வ. (ப.ஆ), வரலாற்று உலா, யாழ்ப்பாணம் : யாழ்ப்பாணம் :சிவத்தமிழ் மானிட விடியற் கழகம், 2010).
10. பத்மநாதன். சி, *இலங்கைத் தேசவழமைகளும் சமூக வழமைகளும்* (கொழும்பு : குமரன் புத்தக இல்லம், 2001).
11. பத்மநாதன். சி, *யாழ்ப்பாண இராச்சியம்* (கொழும்பு: குமரன் புத்தக இல்லம், 2011).
12. வேலுப்பிள்ளை,சி,டி. *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்* (சுண்ணாகம் : 1964).

## English

13. Arasaratnam, S. "Dutch Sovereignty in Ceylon A Historical Survey of its Problems in Ceylon", *Journal of Historical and Social studies* (Peradeniya : University of Peradeniya,1958).
14. Arasaratnam, S. *The Dutch Power in Ceylon 1658 – 1687* (New Delhi : 1958).
15. Arasaratnam,S., J.H.O. *Paulusz on the 1638 Westerwolt treaty in Ceylon: A rejoinder (*Bijdragen tot de Taal-, Land- en Volkenkunde 138 1982).
16. Arasaratnam, S. "The Administrative Organisation of the Dutch East India Company in Ceylon",*The Ceylon journal of Historical and Social Studies*, January-December, Vol-8,1965.
17. Baldaeus,p., *Beschrijving der oost-Indiscche Kusten, Malabar en Choromandel* (Amsterdams, 1672
18. Brohier, R,l. *Changing Face of Colombo* (Colombo : Lake House Investments Ltd, 1984).
19. Gunasingam, M. *Primay Sources for History of the Sri Lankan Tamils* (Sydney : M.V. Publications, 2005).
20. Jeffries. Charles, *Ceylon - The Path to Independence* (London: Pall mall Press, 1962).
21. Marashall,R. Singer. *The Emerging Elite( Study of political leadership in Ceylon)* Cambridge: Cambridge Massachusetts Institute of Technology press, 1981).
22. Perera,S.G. *History of Ceylon* (Colombo : *Lake house*, 1948).
23. Perera,S.G., *The Jesuits in Ceylon* (Madurai: Denobili press, 1941).
24. Pieries,P,E. (ed) *The Dutch Power in Ceylon,1602-1670* (London : Corzonprees,1929).
25. Robrecht Boudens, "The Catholic Church in Ceylon frpm 1658 to 1687", *The Ceylon Historical Journal,* Vol-II, 1953.
26. Sasikala, K. *Origin and Development of the Education of Jaffna Women,* Master of Philoshopy, (Jaffna : University of Jaffna, 2001).
27. Silva.K.M.de, *A History of Sri Lanka* (Delhi: Oxford University Press, 1981).

# மட்டக்களப்புத் தேசத்தில் கண்டறியப்பட்ட கல்வெட்டுக்களும் கல்வெட்டாய்வின் இன்றைய போக்கும்

கௌரி புண்ணியமூர்த்தி

இலங்கைத் தமிழர் பூர்வீக காலம் முதலாக செறிந்து வாழ்ந்த பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பு தேசமும் ஒன்றாகும். இங்கு மட்டக்களப்பு தேசம் என நாம் குறிப்பிடுவது கிழக்கிலங்கையில் வடக்கே வெருகலாற்றையும் தெற்கே குமுக்கன் நதியையும் எல்லைகளாகக் கொண்ட தற்போதைய மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு மாவட்டப் பிரிவுகளையுமேயாகும். குறித்ததொரு சமூகத்தின் அல்லது பிரதேசத்தின் வரலாற்றை நம்பத்தகுந்த முறையில் வெளிக்கொண்டுவருவதற்குச் சாசனங்கள் முதன்மையானவையாக அமைகின்றன. சாசனங்கள் கல்வெட்டுக்கள், செப்பேடுகள் என இருவகைப்படும். இவ்வாய்வானது கல்வெட்டுக்களை மட்டுமே ஆய்வுப் பொருளாகக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பு தேசம் எனப் பூர்வீக காலம் முதலாகக் கருதப்படுகின்ற பிரதேசத்தை மையப்படுத்தியதாக இவ்வாய்வு அமைகின்றது. வெருகலின் தென் எல்லை முதல் குமுக்கன் ஓயா வரையுள்ள பிரதேசமே இதுவாகும். 1962ம் ஆண்டு இந்நிலப்பரப்பு மட்டக்களப்பு, அம்பாறை எனும் இரு நிர்வாக மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஆயினும் பூர்வீக காலத்தைக் கருத்திற் கொண்டு பழைய மட்டக்களப்பின் அனைத்துப் பகுதிகளையும் இவ்வாய்வு உள்ளடக்கியுள்ளது.

இலங்கையின் ஆரம்பகால வரலாறானது ஐதீகங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. எனினும் தொல்லியலில் ஏற்பட்ட வளர்ச்சி இந்நிலையில் மாற்றங்களை உண்டுபண்ணி ஆதாரங்களுடனான வரலாற்றைக் கட்டியெழுப்பியுள்ளது. அந்தவகையில் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலம் முதலாக ஈழத்தில் எழுத்தறிவுமிக்க மனித சமுதாயமொன்று வாழ்ந்தமைக்கு இங்கு கிடைக்கின்ற சாசனங்களே சான்றாகின்றன. பிரதேசம் ஒன்றின் உண்மைத் தன்மையான வரலாற்றை எழுதுவதற்கு இலக்கியச் சான்றுகள் மட்டும் போதுமானவையன்று. அவ்விலக்கியங்களில் கூறப்படுகின்ற விபரங்கள் சமகாலத்து ஆவணங்களுடன் ஒத்துப் போகின்ற போது அவ்வரலாறு உறுதி பெறுகின்றது. மட்டக்களப்பு வரலாற்றைக் கூறுகின்ற பிரதான மூலமாக மட்டக்களப்பு பூர்வ சரித்திரமே விளங்குகின்றது. இதனை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மட்டக்களப்பின் வரலாற்றை ஆதாரபூர்வமாகக் வெளிக்கொண்டுவர முடியாது.

பொதுவாக வரலாற்று நூல்களில் நூலாசிரியரின் மனோபாவத்திற்கேற்ப திரித்தும் மாறுபட்டும் கருத்துக்களைக் கூறலாம். ஆனால் கல்வெட்டுக்கள் அவ்வாறன்று. அவை சமகாலத்து ஆவணங்களாகும். அவற்றில் காணப்படும் விவரங்கள் பெரும்பாலும் அவை எழுதப்படும் காலத்து நிகழ்ச்சிகள் பற்றியவை. இலக்கிய நயம் கருதி விவரங்களை மிகைப்படுத்திக் கூறும் பண்பு நூல்களிற் போன்றளவில் அவற்றில் காணப்படுவதில்லை. வரலாற்று ஆய்வில் காலம்

பற்றிய ஆய்வு இன்றியமையாததாகும். எனவே கல்வெட்டுக்களின் காலத்தை அளவிடுகின்ற போது அது பெருமளவு நம்பகத் தன்மை வாய்ந்ததாக இருக்கும். இதனால் உண்மைத் தன்மைமிக்க விவரங்களை அறிந்து கொள்வதற்கான மிக முக்கியமான ஆவணங்களாக இவை விளங்குகின்றன.

கல்வெட்டுக்கள் பல வகைப்படும். சில கல்வெட்டுக்கள் நீளமாக, அதிக விவரங்களை உள்ளடக்கியுள்ள அதேநேரம் சில, அதிலும் குறிப்பாக பிராமிச் சாசனங்கள் மிகச்சிறியனவாகக் காணப்படுகின்றன. இவை யாவற்றிலும் பொதுவாக அரசன் முதலான உயர்நிலையில் உள்ளோரின் பிரகடனங்கள், அவர்களும் சமூகத்தின் ஏனைய நிலைகளில் உள்ளோரும் வழங்கிய தானங்கள் தொடர்பான செய்தியைப் பதிவு செய்கின்றன. எனினும் இவற்றிலிருந்து அக்கால அரசியல், பொருளாதாரம், சமூகம், சமயம், மொழி, எழுத்து வளர்ச்சி முதலான பல்வேறு விடயங்களையும் தெரிந்து கொள்ள முடிகின்றது. எனவே ஒரு தேசத்தின் வரலாற்றை வெளிக் கொண்டு வருவதில் கல்வெட்டுக்களின் பங்கு மிக முக்கியமானதாகும். இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்வு காலத்தின் தேவையாக உள்ளது.

இதுவரை மட்டக்களப்பில் முழுமையான தொல்பொருள் ஆய்வுகள் நடத்தப்படாத நிலையில் இப்பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்கள் சிறப்பானவையாகும். ஏனெனில் இவற்றை மூலமாகக் கொண்டு மட்டக்களப்பின் பூர்வீகத்தை உறுதிப்படுத்துவதுடன் இப்பகுதிக்குரிய பூர்வீக குடிகள் யார் என்பதை வெளிப்படுத்த முடியும்.

கல்வெட்டுக்கள் தொடர்பான அறிவு வரலாற்றாசிரியர்கள் மற்றும், வரலாற்றாய்வாளர்களிடையே காணப்படுகின்ற போதிலும், அப்பிரதேசத்திற்கே உரிய பொதுமக்களிடம் மிக அரிதாகவே உள்ளது. இதன் காரணமாக அவற்றில் பல கவனிப்பாரற்றுச் சிதைவடைந்துள்ளன. குகைத் தளங்களில் எழுதப்பட்ட பிராமிச் சாசனங்கள் பெருமளவில் கல்லுடைத்தல் முதலான தொழிலின் மூலம் பெரும் அழிவைச் சந்தித்துள்ளன. இன்னும் சில எமது சமூகத்தினரிடையே காணப்படுகின்ற மூடநம்பிக்கைகளினால் வெளிக்காட்டப்படாது மூடி மறைக்கப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் அவற்றின் முக்கியத்துவம் மக்கள் மத்தியில் உணர்த்தப்படாமையே ஆகும். இந்த அன்னியப்பட்ட தன்மை விலகி கல்வெட்டுத் தொடர்பான விழிப்புணர்வு பாமர மக்கள் முதல் கல்வியறிவுடைய உயர் மட்டம் வரை ஏற்படுத்தப்படல் வேண்டும். அதன் மூலமே எமது சமூகத்தின் பிரதான ஆவணமான கல்வெட்டுக்கள் வெளியுலகத்தின் பார்வைக்குக் கொண்டு வரப்படும். அத்துடன் அவை கவனித்தற்குரிய பொருளாக்கப்படும். இதன் மூலம் மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றைத் தெளிவாக்க முடியும். கல்வெட்டுத் தொடர்பான ஆய்வுகளும் அவற்றின் அவசியமும் எமது சமூகத்தால் முழுமையாக உணரப்படாத நிலையில் மட்டக்களப்பு தேசத்தின் கல்வெட்டாய்வின் நிலை தொடர்பில் ஆராயவேண்டியது இன்றியமையாதவொன்றாகும்.

இவ்வாய்வானது மட்டக்களப்புத் தேசத்தின் தொன்மையைத் தெளிவாக்கல், அங்கு கண்டு பிடிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டுள்ள பிராமிச் சாசனங்களையும் ஏனைய கல்வெட்டுக்களையும் அடையாளப்படுத்தல், அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் மட்டக்களப்பின் வரலாற்றம்சங்களை எடுத்துரைத்தல், அண்மைக்கால ஆய்வு முயற்சியின் மூலம் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுக்களை

அடையாளப்படுத்தலும் அவை மூலம் தெளிவாகும் தேச வரலாற்றினை எடுத்துரைத்தலும் ஆகிய நோக்கங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றது.

இவ்வாய்வானது வரலாற்று நூல்கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டமையால் இது ஓர் வரலாற்று ஆய்வாகக் காணப்படுகின்றது. இவ்வாய்வுக்காக நேரடியாகப் பெறப்பட்ட முதன்நிலைத் தரவுகளுடன் ஆய்வுப் பிரதேசத்தின் கல்வெட்டுக்கள் பற்றிய குறிப்புக்கள், நூல்கள், கட்டுரைகள் முதலான இரண்டாம் நிலைத் தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## 1. பிராமிக் கல்வெட்டுக்கள்

கி.மு. மூன்றாம் நூற்றாண்டு முதல் கி.பி நான்காம் நூற்றாண்டு வரை தென்னாசியத் துணைக்கண்டத்தில் எழுதப்பட்டுள்ள ஆவணங்கள் எல்லாம் பிராமி எனும் வகைக்குரிய வரிவடிவங்களில் எழுதப்பட்டுள்ளன. தமிழகத்தில் வழங்கிய இந்த எழுத்து முறையில் தமிழுக்குச் சிறப்பான எழுத்துக்கள் அமைந்திருந்தமையால் அது தமிழ் பிராமி என்று அழைக்கப்பட்டது.

இலங்கையில் 2000க்கு மேலான பிராமி சாசனங்கள் உண்டு. இவை பெரும்பாலும் மலைகளிலும் பெருங்கற்பாறைகளிலும் குகைத்தளங்களிலும் வெட்டப்பட்டுள்ளன. இவற்றிலே காணப்படும் சொற்களும் சொற்றொடர்களும் பெரும்பாலும் பொதுவானவை. இவற்றில் பெரும்பாலானவை ஓரிரு வரிகளில் பௌத்த குருமாருக்கு, பௌத்த சங்கத்திற்கு அக்காலச் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள் அளித்த நிலம், கால்வாய், குகை, கற்படுக்கை, உணவு போன்ற தானங்கள் பற்றிக் கூறுகின்றன. இவற்றில் பலவற்றில் தானமளித்தவர் பெயரோடு அவரின் வம்சம், பட்டம், பதவி, தொழில், சமயம், இனம் போன்றவையும், அவர்கள் வாழ்ந்த இடம், ஊர் போன்ற செய்திகளும் கூறப்படுகின்றன.[1]

இக்கல்வெட்டுக்களில் இரு படைகள் உள்ளன. ஒன்று தமிழகம், ஈழம் ஆகிய பகுதிகளில் வழக்கிலிருந்த பழைய பிராமி வடிவம். இது திராவிடி அல்லது தமிழி எனப்படும். இரண்டாவது பிராமிக் கல்வெட்டுக்களின் அடித்தளமாக விளங்கிய இவற்றின் மீது பௌத்தத்துடன் வடஇந்தியாவிலிருந்து வந்த பிராமி வடிவம் செல்வாக்குச் செலுத்திய போது ஏற்பட்ட வடிவமாகும்.[2] இவற்றில் பிராந்திய வழக்கான மொழிச் சொற்கள் பல கலந்துள்ளன. இக்கல்வெட்டுக்கள் இலங்கையின் குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய மொழி, எழுத்து, சமயம், பண்பாடு, சமூகம், இடப்பெயர் என்பவற்றை அறிந்து கொள்ளவும், சமகாலப் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றின் நம்பகத் தன்மையை மதிப்பிடவும் உதவுகின்றன.

## 2. மட்டக்களப்பில் 1970களிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் உள்ள இடங்களை அடையாளப்படுத்தல்

மட்டக்களப்பு தேசத்தில் முழுமையான தொல்லியலாய்வுகள் நடத்தப்படாத போதிலும் தொல்பொருள் திணைக்களத்தினூடாகவும், வரலாற்றுத் துறை சார்ந்தோராலும் கல்வெட்டுக்கள் பல கண்டறியப்பட்டுள்ளன. அவ்வாறு கண்டறியப்பட்ட பிராமிச் சாசனங்களை கலாநிதி

செ.பரணவிதான அவர்கள் 'Inscription of Ceylon' எனும் நூலில் தொகுத்து வெளியிட்டுள்ளார். (1970) இந்நூலின் முதலாந் தொகுதியில் உள்ள 180 கல்வெட்டுக்கள் கிழக்கு மாகாணத்தில் உள்ளன. அதில் 14 கல்வெட்டுக்கள் மாத்திரமே திருகோணமலை மாவட்டத்தில் உள்ளன. ஏனைய 166 சாசனங்கள் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்திற்குரியவையாகக் காணப்படுகின்றன. இப்பிராமிக் கல்வெட்டுக்கள் குறிப்பாக கோரளைப் பற்று, ஏறாவூர் பற்று, விந்தனைப் பற்று, மண்முனைப் பற்று, வேவகம் பற்று, சம்மாந்துறைப்பற்று, அக்கரைப் பற்று முதலான இடங்களில் காணப்படுகின்றன.

குசலன்கந்த (குசலான் மலை), களுதுபொத்தான, நியன்டரவகல, உமுனகல, நுவரகல, வேகரகல, ஹனேன்னேகல, மியுன்குணா வெஹர, திஸ்னலேகம, ரஜகல, உஹண, வலகம, மல்வத்த, அம்பாறை, வதினாகல, பரகாகல, உஹபிடகல்கே, தமண, குடுவில், முல்லைக்குளம்பு மலை (அக்கரைப்பற்று), கலிஓடே, மொட்டயகல, சங்கமண்கண்டி, றொட்டகுலம, நிலகிரிசாய, நவலர் குளம், பணம, கிரலண, குடும்பிகல, பம்பரகஸ்தலாவ, கிரிபொகுன ஹெல, விஹரேகல, விகரகல்கந்த, கொங்கல, வோவட்டாகல முதலான முப்பத்தைந்து இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.[3]

## 3.0 பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாகும் வரலாற்றுண்மைகள்

### 3.1 அதிகமான பிராமிக் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை.

ஈழத்தின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் அதிகமான பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (முழுமையான ஆய்வு நடைபெறவில்லை). இதன் மூலமாக கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே எழுத்தறிவுமிக்க மனித சமுதாயமொன்று இப்பகுதியில் வாழ்ந்துள்ளமை தெளிவாகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளை விட குகைத் தளங்களில் அன்றி தரையில் அமைந்த பெருங்கற் பாறைகளிலும் சாசனங்கள் எழுதப்பட்டுள்மை சிறப்பானது.

### 3.2 தமிழ் பௌத்தம் பற்றிய விபரங்களைத் தெளிவாக்குகின்றது.

பொதுவாக பிராமிக் கல்வெட்டுக்கள் பௌத்த, சமணச் சார்புடையனவாகக் காணப்படுகின்றன. தமிழகத்தில் சமண சமயம் சார்ந்ததாக உள்ளன. இலங்கையில் இவை பொதுவாக பௌத்த சங்கத்தாருக்கு வழங்கப்பட்ட தானங்களை பற்றிக் கூறுகின்றன. இங்கு பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் கருத்து அவதானத்திற்குரியது. "ஆரம்ப காலத்தில் பௌத்த சமயம் இலங்கையிற் பரவிய போது புத்த பிரான் அமைத்த விதிகளுக்கு ஏற்ப சங்கத்தார் குடியிருப்புகளுக்குச் சற்றுத் தூரத்திலேயே வாழ விரும்பினர். அதனால் மலையடிவாரங்களில் இயல்பாக அமைந்த குகைகளில் வாழ்ந்தனர். துறவறம் மேற்கொண்ட சங்கத்தார் இல்வாழ்வோரான உபாசகர்களிலே தங்கியிருக்க நேர்ந்தது. உணவு, உடை, உறைவிடம், மருந்து ஆகியவற்றைச் சங்கத்தாருக்கு வழங்குவது உபாசகரின் தலையான தர்மங்கள் என்று கருதப்பட்டது. எனவே இலங்கையில் உள்ள வெவ்வேறு மொழிகளைப் பேசுகின்ற பல்லின மக்களிடையே பௌத்தம் பரவிய பொழுது நாட்டின் பல பகுதிகளிலும் வாழ்ந்த மக்கள் சங்கத்தாருக்கு குகைகளை இருப்பிடங்களாக வழங்கினர். சங்கத்தாருக்கு வழங்குவது ஒரு புண்ணிய கருமமாகக் கொள்ளப்பட்டது."[4]

மட்டக்களப்பிலும் பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவாக சங்கத்தாருக்கு குகைகள் தானமாக வழங்கப்பட்டமை பற்றிய தகவல்களைத் தருகின்றன. இவற்றின் மூலம் மட்டக்களப்பு பகுதிகளிலும் 2000 வருடங்களுக்கு முன்னரே பௌத்த சமயம் நிலைபெற்றுள்ளது என்பது புலனாகின்றது. இருந்த போதிலும் இது இலங்கையின் இன்றைய நிலை போன்று சிங்கள பௌத்தமாகவன்றி தமிழ் பௌத்தமாகவே நிலைபெற்றுள்ளது. ஏனெனில் இப்பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவழக்கான பிராகிருதத்திலும் தமிழுக்கே உரித்தான சிறப்பு எழுத்து வடிவங்களையும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

திராவிட மொழிப் பிராந்தியமான ஆந்திராவிலும் கர்நாடகத்திலும் சுதேச மொழிகள் இருந்தும் கி.பி ஐந்தாம் நூற்றாண்டு வரை அங்கு பிராகிருதமே கல்வெட்டு மொழியாக இருந்துள்ளது. மிக அரிதாகவே இவற்றிலே சுதேச மொழிச் சொற்கள் காணப்படுகின்றன. ஏனெனில் பிராகிருதம் பௌத்த சமயத்திற்குரிய மொழியாகக் காணப்பட்டமையால் அம்மொழியிலேயே கல்வெட்டுக்கள் எழுதப்பட்டன. அதே போன்று மட்டக்களப்பிலும் பௌத்தத்திற்குரிய பிராகிருத மொழியில் இக்கல்வெட்டுக்கள் எழுதப்பட்டாலும் தமிழரிடையே பௌத்தம் நிலவியமையால் தமிழ்ச் சொற்கள் ஏராளமாகக் கலந்துள்ளன. புராதன தமிழரிடையே பௌத்தம் நிலவி வந்துள்ளது என்பதை பிராமிக் கல்வெட்டுக்கள் மூலம் தெளிவாக்கிக் கொள்ள முடிகின்றது.

மட்டக்களப்பின் குசலன் கந்த(குசலான் மலை) எனுமிடத்திலுள்ள கல்வெட்டுக்களில் "பத$_3$ புஸ பு$_3$திய லெணே ஸக$_3$ஸ(390), மனோரமே லெணே ப$_3$த கு$_3$தென கரிதே ஸக$_3$ஸ(391)" என்றவாறு எழுதப்பட்டுள்ளது. இதில் "லெணே" என்பது குகை என்பதையும் "ஸக$_3$ஸ" என்பது சங்கத்தாரையும் குறிக்கப் பயன்படும் பிராகிருதச் சொற்களாகும். இந்த தமிழ் பௌத்தத்தின் எச்சமாக எம்மிடையே சான்றாக நிலவி நிற்கின்ற வழிபாட்டு முறையாக கண்ணகி வழிபாடு அமைகின்றது.

ஈழத் தமிழரில் ஒரு பிரிவினர் பௌத்தர்களாக இருந்ததை எடுத்துக் கூறும் வரலாற்று மூலாதாரங்களில் பிராமிக் கல்வெட்டுக்கள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றில் வரும் அபயன், சுமணன், சுமன், பருமகன், பருமகள். மாற, நாக, பரத, வேள் போன்ற பெயர்கள் தமிழர்களும் பௌத்தர்களாக இருந்தனர் என்பதற்குச் சான்றாக அமைகின்றன. இன்று இலங்கையில் தமிழ்ப் பகுதிகளில் பௌத்த சமயம் சார்ந்த தொல்பொருள் தடயங்களோ அது பற்றிய கல்வெட்டுக்களோ கிடைக்கின்ற போது அது ஒரு சமயத்தின் பண்பாட்டுச் சின்னமாகப் பார்க்கப்படாது முன்பொரு காலத்தில் சிங்கள மக்கள் வாழ்ந்தமைக்கான எச்சமாக நோக்கப்படுகின்றமை வரலாற்று மரபறியாதோர் விடுகின்ற மிகப்பெரும் தவறாகக் காணப்படுகின்றமை கவலைக்குரியது.

### 3.3 மட்டக்களப்பில் இந்து சமயம் நிலைபெற்றிருந்தமைக்கான சான்றுகள்

பிராமிக் கல்வெட்டுக்கள் பொதுவாக பௌத்த சமயத்திற்குக் கொடுக்கப்பட்ட தானங்கள் பற்றிக் கூறுவதால் இவை பௌத்த சமய வரலாற்றிற்குரிய சான்றுகள் மட்டுமே என்று முன்னர் கருதப்பட்டது. ஆனால் தானம் வழங்கியோரின் பெயர்களை நோக்குகின்ற போது பௌத்தர்களாக மாற முன்னர் இவர்கள் வைதீக, பௌராணிக வழிபாட்டு நெறிகளைக் கடைப்பிடித்திருந்தனர் என்பது தெளிவாகின்றது.[5]

மட்டக்களப்பு பிராமிக் கல்வெட்டுக்கள் பலவற்றில் சிவ வணக்கத்தைக் குறிக்கும் ‘சிவ’ (ஸிவ) என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. இதிலிருந்து தான் “சிவன்” என்ற வடிவம் உருப் பெற்றிருக்க வேண்டும்.[6] அரசர், இளவரசர், வணிகர், கிராமவாசிகள், தலைவர், கஹபதி என்னும் குடும்பத் தலைவர் முதலானோர் “சிவ” என்ற பெயரைக் கொண்டிருந்தனர். இதன் மூலம் சிவனைப் போற்றி வழிபடும் மனப்பாங்குடையோர் நாட்டின் பல பாகங்களிலும் வாழ்ந்துள்ளனர். என்பதும் பல இனங்களைச் சேர்ந்தவர்களும் பல சமூகப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் சிவனை வழிபட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.[7]

நியன்டரவகல (401,402), ரஜகல (431,443,449,450), தமண (478), பம்பரகஸ்தலாவ (518), விகரகல்கந்த (537) முதலான கல்வெட்டுக்களில் ‘சிவ’ என்ற பெயர் இடம்பெற்றுள்ளது. நியன்டரவகல கல்வெட்டு சுத, சிவ எனும் இருவர் இணைந்து சங்கத்தாருக்கு வழங்கிய தானம் பற்றிக் கூறுகின்றது. ரஜகல கல்வெட்டுக்களில் (431,449,450) பௌத்த சமயத் துறவிகளான சங்கத்தார் சிவ என்ற பெயரைச் சூடியிருந்தமை பற்றிய குறிப்புண்டு. பம்பரகஸ்தலாவ கல்வெட்டில் (1178) வரும் ‘உபஸிக சிவல’ என்பதன் மூலம் பௌத்த சமய பெண் விசுவாசியின் பழைய சமய நம்பிக்கையாகிய சிவ வழிபாடு பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது. உபாசகனான சிவ (உபாஸக சிவ - 478) பற்றி தமணக் கல்வெட்டுக் கூறுகின்றது. இவன் பௌத்த மதத் துறவியான மித்தவின் தந்தையாக இக்கல்வெட்டில் குறிப்பிடப்படுகின்றான். சிவ ரக்கித (557), சிவ பூதிய (443) என்போர் பத குலத்தைச் சேர்ந்தவர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர், சிவ பூதிய(443) -சிவனின் அருள் பெற்றவன், சிவ ரக்கித, சிவ குத்த- சிவனால் பாதுகாக்கப்பட்டவன், சிவ தத்த- சிவனால் அளிக்கப்பட்டவன் என்றவாறு கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளது. கஹபதி சிவ, உபாசக சிவ, உபாசிகா சிவ, சிவ தேர, பத சிவ, நந்தி தேர, பருமக நந்தி என்றவாறு சிவ என்னும் பெயர் இணைந்து வருகின்றது. இவற்றிலிருந்து மட்டக்களப்பின் தொன்மையான வழிபாடுகளுள் ஒன்றாக பௌத்தம் இலங்கையில் அறிமுகமாக முன்னர் சிவ வழிபாடு நிலைபெற்றிருந்தமை புலனாகின்றது.

மாயோன் (கண்ணன்) வழிபாடும் முற்கால மக்களிடையே பேணப்பட்டுள்ளது. விகாரெகலவில் உள்ள இரு கல்வெட்டுக்களில் (531,532) பருமக கண என்று எழுதப்பட்டுள்ளது. இங்கு வருகின்ற கண என்பது கண்ணன் என்பதன் பிராகிருத மயமாக்கமே ஆகும்.[8] மியுண்குணாவெகெரக் கல்வெட்டில் (420) ‘உபஸிக கண’ என்றும், மற்றுமொரு கல்வெட்டில் (415) ‘அபி கண’ எனவும் வருகின்றது. அத்துடன் முருகனைக் குறிக்க பயன்படும் ‘விசாகன்’ என்பது மியுண்குணாவெகெரக் கல்வெட்டில் (413) ‘விஸாஹ’ என வருகின்றது. இதன் மூலம் முருக வழிபாடும் நடைபெற்றுள்ளன எனக் கொள்ள முடியும்.

### 3.4 கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்திலேயே இப்பகுதிகளில் தமிழர் வாழ்ந்தமைக்கான சான்று

இலங்கைத் தமிழரின் சமூகப் பண்பாட்டு வரலாற்றை மீட்பதற்கான அடிப்படை மூலங்கள் என்றவகையில் பிராமிச் சாசனங்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. ஈழத்தின் பிராமிக் கல்வெட்டுக்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டிருப்பினும் அதில் பல தமிழ் மொழிச் சொற்களும் சில திராவிடச் சொற்களும் காணப்படுகின்றன. அவற்றிலே பருமக(ன்), பருமகள(பருமகள்), மருமகன(மருமகன்), மருமான, மருகமாற, ஐ, வேள(வேள்), ப(ர)ளி முதலான பல தமிழ்ச்

சொற்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்ச் சொற்கள் பிராகிருத மொழியில் எழுதப்பட்டமையினால் அம்மொழியினது இலக்கண மரபுகளுக்கு ஏற்ப அவற்றை எழுதியுள்ளனர். பிராகிருதத்தில் சொற்கள் மெய்யெழுத்தில் முடிவதில்லை. அவை பொதுவாக உயிரேறி வரும். எனவே மருமகன், மருமான், பருமகள் எனும் சொற்கள் முறையே மருமகன, மருமான, பருமகள என்று எழுதப்படும்.[9]

இந்தப்போக்கை மட்டக்களப்பு பிராமிக் கல்வெட்டுக்களிலும் காணலாம். அவற்றிலும் பருமக, மருமக, அபய, நாக, தேவநம்பிய, காமின திஸ, உதி, உதய, சிவ, வேள், ராஜ, விஸாக, சுமண குத்த, நாக பவத்த முதலான பல்வேறு சொற்கள் இடம்பெறுகின்றன. இதில் தமிழ்ப் பெயர்கள் பிராகிருத மயப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. தமிழகக் கல்வெட்டுக்களில் சில பிராகிருதப் பெயர்கள் அப்படியே எழுதப்பட்டிருக்கும் போது அதே பெயர்கள் இலங்கைப் பிராமிக் கல்வெட்டுக்களில் தமிழ் மயமாக்கப்பட்டுள்ளன. தமிழக வரலாற்று மூலங்களில் பிற்காலத்திற்குரியதாக வரும் சில தமிழ் உறவுப் பெயர்கள் இலங்கையில் பண்டு தொட்டு இருந்தமைக்கான சான்றுகள் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. தென்னாசியாவில் பௌத்த சமயம் பரவிய நாடுகளில் எல்லாம் அச்சமயத்திற்குரியதான பிராகிருதமே கல்வெட்டு மொழியாகக் காணப்படுகின்றது. இருப்பினும் மட்டக்களப்பில் பொதுவாக இலங்கையில் பிராகிருத மொழியில் தமிழ் மொழியின் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டமை தமிழ் பேசியோர் இப்பகுதியில் வாழ்ந்தமையை உறுதிப்படுத்துவதாகக் உள்ளன.

அதுமட்டுமின்றி தமிழுக்கே உரித்தான எழுத்துக்களான ள,ன,ற,ழ என்பனவும் தமிழ் மொழிக்கே சிறப்பான ஈ, ம என்ற எழுத்துக்களும் மட்டக்களப்புக் கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றன. தமிழ் நாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ள இவ்வெழுத்துக்கள் சமகாலத்தில் தமிழ் நாட்டிற்கு வெளியே இலங்கையில் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பொதுவாக ஒரு மொழி உருவாக்கம் பெற்று நீண்ட காலத்தின் பின்னரே அம்மொழிக்குரிய எழுத்துக்கள் தோன்றின என்பது வரலாற்றுண்மை. அவ்வாறாயின் தமிழ் மொழிக்குரிய எழுத்துக்கள் கி.மு மூன்றாம் நூற்றாண்டு முதல் பாவனையில் உள்ளதால் இக்காலத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழி பேசிய மக்கள் வாழ்ந்தனர் என்பதை சான்றுகளுடாக நிருபிக்க முடிகின்றது.

அக்கரைப்பற்று குடுவில் (480)எனுமிடத்தில் கிடைத்துள்ள சாசனம் முக்கியத்துவம் வாய்ந்தது. இது கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரியதாகும். ‘ திகவாபி ரன வணிகன .. .. ... .. .. .. ய புதன ப$_3$ரியய த$_3$மேட திஸய லெனே’ என இதில் எழுதப்பட்டுள்ளது. ‘தமிழர்’ என்பது ‘தமேட’ என பிராகிருதமயப்படுத்தப்பட்டு இங்கு எழுதப்பட்டுள்ளமை சிறப்பானது. அதாவது தீகவாபி எனுமிடத்தில் வாழ்ந்துள்ள தமிழர் பற்றி இச்சாசனம் குறிப்பிடுகின்றது. தமிழர் மட்டக்களப்பு தேசத்தில் பூர்வீககாலமாக வாழ்ந்துள்ளமைக்கு இது மற்றுமொரு சான்றாகும்.

### 3.5 மட்டக்களப்பில் குறுநில அரசர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளமைக்கான சான்றுகள்

மட்டக்களப்பின் பல பாகங்களிலும் கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் சிற்றரசர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றன. இதன் மூலம் கிறிஸ்துவிற்கு முற்பட்ட காலத்தில் அதிகாரமானது ஒரே மையத்தில் குவிந்திராது வெவ்வேறு பிராந்தியங்களில்

சுதந்திரமான பல அமைப்புக்கள் இருந்துள்ளன என்பதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இவை புரதான காலம் பற்றி மகாவம்சம் கூறும் தகவலுக்கு முரணானவையாகக் காணப்படுகின்றன. இந்நூல் ஆரம்ப காலம் முதலாக லங்கா தீபம் ஒரு இராச்சியமாக இருந்தது என்றும் அனுராதபுர மன்னர்களே எங்கும் ஆட்சி செலுத்தினார்கள் என்றும் கருதத்தக்க வகையில் இலங்கையின் வரலாற்றினை அமைத்துள்ளது. ஆனால் பிராமிச் சாசனங்களின் மூலம் இவ்விடயம் தொடர்பில் தெளிவாக்கம் ஒன்றைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. சமகாலத்தில் அனுராதபுரத்தை மையமாகக் கொண்ட ஒரு ஆட்சி நடைபெற்ற அதேநேரம் நாட்டின் பல பாகங்களிலும் சுதந்திர சிற்றரசுகள் நிலவியுள்ளது.

இலங்கையில் உள்ள 21 கல்வெட்டுக்களில் 'வேள்' என்ற பதம் காணப்படுகின்றது. மட்டக்களப்பில் முள்ளிக்குளம் மலை(481), விகாரகல(விகார கல்)(529) ஆகிய கல்வெட்டுக்களில் இச்சொல் காணப்படுகின்றது. முள்ளிக்குளம் மலை கல்வெட்டில் 'உபாசக தனக வேள தனே' என வருகின்றது. ஆனால் செ. பரணவிதான அவர்கள் அதனை 'வேளு' என வாசித்துள்ளமை கவனத்திற்குரியது. ஆனால் இது சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்த 'வேளிர்' எனப்படும் குறுநில அரசர்களைக் குறிக்கப் பயன்படும் சொல் என்பது தெளிவு. இது ஒரு பட்டப் பெயராகும். பெரும்பாலும் ஆளும் வர்க்கத்துடன் தொடர்புடைய பட்டப் பெயராகவே இவை காணப்படுகின்றன. எனவே வேள் எனப்படும் சிற்றரசர் ஆட்சி மட்டக்களப்பு பகுதிகளில் நடைபெற்றுள்ளமை தெளிவாகின்றது.

உதி, உபரஜ நாக எனும் பெயரைக் கொண்ட குறுநில அரசர்களும் இப்பகுதிகளில் ஆட்சி செலுத்தியுள்ளனர். உதி என்பது ஆரம்பத்தில் வம்சத்தைக் குறித்து நின்று காலப் போக்கில் இயற்பெயராக மாறியது என சங்க நூலை ஆராய்ந்தோர் குறிப்பிடுகின்றன.[10] அத்துடன் 'திஸ' என்ற பெயரில் சமூகத்தின் பலதரப்பட்ட மக்கள், மன்னர்கள், சிற்றரசர்கள், குறுநிலத்தலைவர்கள் எனப் பலர் இருந்ததைக் கல்வெட்டுக்கள் மட்டுமின்றி சமகால பாளி இலக்கியங்களும் கூறுகின்றன. இது திஸ, திச, திஸ்ஸ, திஸஹ, திஸய, திசஸ. திஸிய, திஸிஹ ஆகிய பெயர்கள் கல்வெட்டுக்களில் இடம்பெற்றுள்ளன. 'அபய' எனும் பெயரும் பரவலாகக் காணப்படுகின்றது. சிற்றரசர்களாகவும் தலைவர்களாகவும் இவர்கள் அறிமுகமாகின்றார்கள். (396, 550,535,389,429).

அய - (ஐயன்-அய்யன் என்பதற்குச் சமமானதாகும்) (422,423), அபி$_3$(427)(அயவின் பெண்பால் வடிவம்) என்னும் சொற்கள் ரஜகல கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றன. இவை முறையே உயர் நிலையில் உள்ள ஆண்களையும் பெண்களையும் குறிக்கும் சிறப்புப் பெயர்களாகும்.[11]

ரஜ, கமனி எனும் பட்டத்துடன் பலரின் பெயர்கள் கல்வெட்டுக்களில் வருகின்றன. உபரஜ நாக(389,487), ரஜ அபய(389), மஜிமரஜ(406), தே$_3$வநபிய மஹரஜ(422,423,428), அபய மஹரஜ(429), தமரஜ(549,551), உதி ரஜ (550) போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவை அரசர்களைக் குறிக்க பயன்படுத்தப்பட்டவையாகும். உபரஜ நாக என்பவனைக் கதிர்காம சத்திரிய வம்சத்தின் பத்து சகோதரர்களுள் இளையவனாக குணவர்த்தன அவர்கள் அடையாளங் காண்கின்றார்.[12]

மஜிம, மஜிமரஜ என்பவை 'மீனவன்' என்ற பதத்தைக் குறிக்கும் பாளிச் சொற்களாகும். மீனவன் என்பது தமிழகத்தின் பாண்டியரைக் குறிக்கப் பயன்படும் பெயராகும். எனவே இவர்களை பாண்டியர் வம்சத்தவர்களாக அடையாளங் காணமுடிகின்றது.[13]

## 3.6 மட்டக்களப்பின் பூர்வீக குடியான நாகர்

இலங்கையின் பூர்வீக குடிகளாக இயக்கர், நாகர் என்போர் கருதப்படுகின்றனர். இவர்களில் நாகர் மட்டக்களப்பில் வாழ்ந்தமைக்கான சான்றுகள் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. 'நாக' என்ற பெயரைச் சூடிய பலர் பௌத்த சமயத்திற்கு வழங்கிய கொடை பற்றி இவை கூறுகின்றன. மட்டக்களப்பு மாவட்டத்திற்குரிய மூன்று கல்வெட்டுக்களிலும் அம்பாறை மாவட்டத்திலுள்ள 5 கல்வெட்டுக்களிலும் இப்பெயர் வருகின்றது. இது தனிப்பெயராகவும், 'நாக' என்ற பெயரைத் தாங்கிய குறுநில அரசரின் பெயராகவும் இவற்றில் உள்ளது. பாளி நூல்களிலும் தமிழ் நூல்களிலும் நாக அரசர்கள் பற்றிக் காணப்படும் ஐதீகங்கள் இதற்குச் சான்றாகின்றன.[14] மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்திலும் நாகர் பற்றிய தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

அம்பாறை பம்பரகஸ்தலாவ(507) எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் அரசனது அரண்மனையிற் சமையற்கூட மேற்பார்வையாளனான பருமக என்ற பட்டத்தைச் சூடிய நாக குலத்தைச் சேர்ந்த ஒருவனைப் பற்றிக் கூறுகின்றது. இங்குள்ள மற்றுமொரு கல்வெட்டில் (522) 'நகபவத'(நாகபப்பத) என வருகின்றது. இது 'நாகபர்வத' (நாகமலை) என்ற பதத்திலிருந்து மருவியிருக்கலாம்.[15] மட்டக்களப்பு குசலன்கந்த கல்வெட்டில்(389) குறிப்பிடப்படும் 'உபரஜ நக'(உபராஜ நாக), 'ரஜ அபய'(ராஜ அபய), 'ரஜ கமணி திஸ' (ராஸகாமணி திஸ) எனவரும் பெயர்கள் துட்டகைமுனுவின் முன்னோர்களாக மகா நாக, கோத்தபய, காக்க வண்ண திஸ ஆகியோரையே குறிக்கிறது என பரணவிதான அவர்கள் கருத்து தெரிவித்துள்ளார்.[16] இதனை ஆராய்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர். மொட்டயகல்லு எனுமிடத்திலுள்ள கல்வெட்டில் (487)உபரஜ நக, ரஜ அபய, ரஜகமணி திஸ ஆகிய மூன்று சந்ததியினர் குறிப்பிடப்பட்டுள்ளனர். முன்னர் இருந்த பரணவிதான அவர்களின் வாசிப்பான 'தசபதிகரண ஜவகண்ய உபரஜ நக' என்பது திருத்தப்பட்டு 'தசபதிகரண சககணய உபரஜ நக' என மீள குணவர்த்தன அவர்களால் வாசிக்கப்பட்டது. அவ்வாறாயின் அதன் பொருள் பத்துச் சகோதரர்களுள் இளையவனாகிய உபராஜ என்பதாகும். இதனால் தேவநம்பிய தீஸனின் தம்பியாகிய உபராஜ மகாநாக திஸமகாராமவில் மட்டும் அரசோச்ச, கதிர்காமச் சத்திரியர்களின் இளைய சகோதரனாகிய மகாநாகவின் ஆட்சி மட்டக்களப்பு தேசத்தில் பரந்திருந்தது எனக்கொள்ளமுடியும்.[17]

## 3.7 மட்டக்களப்பில் இருந்த இனக்குழுக்கள்

பிராமிச் சாசனங்களில் பல இனங்களைச் சேர்ந்த சமூகங்களின் பெயர்களும் சமுதாயங்களின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன. தமிழர், நாகர் எனும் இனப்பெயர்கள் அவற்றிலுண்டு. இலங்கையில் ஐந்து பிராமிச் சாசனங்களில் தமிழர் பற்றிச் சொல்லப்படுகின்றது. இரண்டு சாசனங்கள் வவுனியா மாவட்டத்தின் புளியங்குளத்திலும், மற்றுமொன்று திருகோணமலையின் சேருவில எனுமிடத்திலும் கிடைத்துள்ளது.[18] மற்றுமொரு சாசனம் அக்கரைப்பற்று குடுவில் (480) எனுமிடத்தில் கிடைத்துள்ளது. 'திகவாபி ரன வணிகன .. .. ... .. .. .. ய புதன ப$_3$ரியய த$_3$மேட திஸ ய லெனே' என இதில் எழுதப்பட்டுள்ளது. 'தமிழர்' என்பது 'தமேட' என பிராகிருத மயப்படுத்தப்பட்டு இங்கு எழுதப்பட்டுள்ளமை சிறப்பானது.

இவற்றை விட ‘பத’ எனும் பெயர் முக்கியமானது. இது மட்டக்களப்பு தேசத்தில் உள்ள 21 கல்வெட்டுக்களில் இடம்பெறுகின்றது. இலங்கையின் ஏனைய பிராந்தியங்களுடன் ஒப்பிடுகையில் இச்சொல் இங்கு அதிகமாகக் காணப்படுகின்றது. நாட்டின் ஏனைய பகுதிகளில் ‘பரத(ர்)’ எனும் சமூகப் பிரிவினரின் பெயர் காணப்பட்ட போதிலும் இங்கு கிடைத்துள்ள கல்வெட்டுக்களில் இப்பெயரைக் காணமுடியவில்லை. எனினும் பத, பரத இரண்டும் ஒரே இனக்குழு அல்ல என்பது பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் கருத்தாகும். மட்டக்களப்பு தேசத்தில் உள்ள எந்தவொரு சாசனமும் பத என்னும் பெயரைக் குறிப்பிடும் இடத்து பருமக என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. எனவே பருமக என்னும் சொல் ஆதியில் பத என்னும் குழுவினரிடையே வழங்கவில்லை என்றே கருதலாம். பத என்போர் தமிழ் மொழி வழங்கும் பகுதிகளில் பிராகிருதமும் பரவுவதற்கு முன் இலங்கையில் வாழ்ந்த பூர்வீகக் குடிகளின் ஒரு பகுதியினர் என்று கொள்வதே பொருத்தமானது.[19]

### 3.8 சமுதாயத்தின் தலைமையாளரான பருமகன்

‘பருமக’ என்பது நிர்வாகத்தில் நாட்டினது முதுகெலும்பாக விளங்கிய செல்வச் செழிப்புடைய ஒரு வகுப்பினர் சூடியிருந்த விருதே இதுவாகும். இப்பதத்துடன் இதன் பெண்பால் வடிவமாகிய ‘பருமகள’ (பருமகள்) என்ற பதமும் பிராமிக் கல்வெட்டுக்களில் பரவலாகக் காணப்படுகின்றது. பரணவிதான அவர்கள் இதனை பருமகளு என வாசிக்கின்றார். பருமக, பருமகள என்பன பழைய சிங்களச் சொல் எனவும், வடமொழியிலுள்ள ‘பிரமுக’ என்பதன் வழிவந்த சொல்லெனவும் கூறியுள்ளதோடு பாளி மொழிச் சொற்களான பமுக்கோ, பாமொக்கோ ஆகியவற்றுக்கும் இதற்கும் தொடர்புண்டு எனவும் கூறுகின்றார்.[20] ஆனால் ‘பிரமுக’ என்ற சொல்லுக்கும் பருமக என்ற சொல்லுக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்பதை தகுந்த விளக்கத்துடன் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் அவர்கள் தனது யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு எனும் நூலில் விளக்கியுள்ளார்.

‘பருமக’(பருமகன்) என்போர் பெரும்பாலான கல்வெட்டுக்களில் குறிப்பிடப்படுகின்றனர். இது தலைமையாளரைக் குறிக்கவே பயன்பட்டுள்ளது. அதாவது இது வெவ்வேறு சமுதாயப் பிரிவுகளின் தலைமைப் பதவியைக் குறிக்கும் சொல்லாகும். இவர்கள் நாக, வேள் போன்ற குறுநில அரசர்களின் நிர்வாகத்திற்கு பங்கு கொண்டோராவர்.[21] பருமக எனும் பட்டத்தை தாங்கிய நாக என்பவன் கொதிமத என்ற இன்னொருவனோடு சேர்ந்தளித்த குகை பற்றி பம்பரகஸ்தலாவ(507) கல்வெட்டுக் கூறுகின்றது. குசலன்கந்த (393), களுதுபொத்தான(397), உமுனகல(403), ரஜகல(435), சங்கமண்கண்டி(488), பணம(495), கிரலண(496,497), குடும்பிகல(498), பம்பரகஸ்தலாவ (507,515,516), கொங்கல(547) முதலான இடங்களில் உள்ள கல்வெட்டுக்களில் இது இடம்பெற்றுள்ளது.[22] பருமக அகி, பருமக வேலே, பருமக வராலி முதலான பல பெயர்கள் பருமக என்னும் பதத்துடன் இணைந்து வருகின்றது.

### 3.9 ஆரியத் தெய்வங்கள் பற்றிய விபரங்கள்

பிராமிச் சாசனங்களில் ஆரியத் தெய்வங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளதாக பேராசிரியர் சி.க சிற்றம்பலம் அவர்கள் கூறுகின்றார். மட்டக்களப்பு தேசத்திற்குரிய கோன்கலக் கல்வெட்டு (542) உபாசகனான ‘இந்த குத்த’ பற்றிக் கூறுகின்றது. இதில் வரும் ‘இந்த’ என்பது இந்திரரைக்

குறிக்கின்றது. அத்துடன் ரஜகல கல்வெட்டுக்களில (457,458) குகையின் பெயராக 'இதசால' (இந்திரசாலா) காணப்படுகின்து. இத்துடன் இங்குள்ள மற்றுமொரு கல்வெட்டில்(468) இடிக, மகிந்த என வரும் பெயர்கள் முறையே இந்திரன், மகிந்திரன் ஆகிய பெயர்களின் பிராகிருத வடிவமாகும்.[23]

## 4.0 பிராமிச் சாசனங்களின் அண்மைக்கால கண்டுபிடிப்புகள்

அண்மைக்காலத்தில் மட்டக்களப்பில் பல ஆய்வு முயற்சிகள் நடைபெற்றுள்ளன. அந்தவகையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகைசார் ஓய்வு நிலைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களின் தலைமையிலான குழுவினர் கடந்த வருடம் ஐப்பசி மாதத்தில் மேற்கொண்ட ஆய்வு முயற்சி குறிப்பிடத்தக்கதாகும். இது மட்டக்களப்பின் வெல்லாவெளி, குசலான் மலை முதலான இடங்களில் நடைபெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையோடு இந்தியாவிலிருந்து வந்த பேராசிரியர்கள், முனைவர்கள் இலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஆகியோரும் இதில் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மட்டக்களப்பு மாவட்டத்தின் காயன்குடா, அம்பாறை மாவட்டத்தின் பழவெளி முதலான இடங்களிலும் புதிதாக கல்வெட்டுக்கள் கண்டறியப்பட்டுள்ளன.

இவற்றுடன் பல்கலைக்கழக வரலாற்றுத் துறை மாணவர்கள் மேற்கொண்ட சில ஆய்வு முயற்சிகளும் குறிப்பிடத்தக்கன. அவை மட்டக்களப்பு மாவட்டத்தின் கோரளைப் பற்று பிரதேசத்தில் உள்ள முருக்கன் தீவு, குடும்பி மலை முதலான இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. முருக்கன் தீவில் ஒரு பிராமிக் கல்வெட்டு இவ்வாய்வாளராலும் குடும்பி மலையில் இரு கல்வெட்டுக்கள் கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவனான அ.சதானந்தன் என்பவராலும் அடையாளங் காணப்பட்டுள்ளன. அவற்றினை வாசிக்கும் முயற்சி இன்னும் பூரணத்துவமடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கதிரவெளியிலும் கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

### 4.1 புதிதாகக் கண்டறியப்பட்டுள்ள கல்வெட்டுக்களின் மூலம் தெளிவாகும் வரலாற்றுண்மைகள்

#### 4.1.1 மட்டக்களப்பில் தமிழ் பௌத்த பள்ளி

வெல்லாவெளியில் உள்ள ஆயிரங்கால் ஆலமரம் எனுமிடத்தில் கி.மு இரண்டாம் நூற்றாண்டுக்குரிய கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பெரும்பண, பெரும்பண், பெரும்பாண, பெரும்பாண் என நான்கு விதமாக இதனை வாசிக்க முடிந்தபோதிலும், இதனை 'பெரும்பாண்' என கருதுவதே பொருத்தமானது என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் கருதுகின்றார். இச்சொல்லானது பௌத்த இலக்கியத்தின் சில பகுதிகளை மனனம் செய்து இசையோடு படிக்கும் சங்கத்தாரைக் குறிக்கின்றது. அவ்வாறு படிப்போரை '$ப_3$ணக' என்று குறிப்பிடுவது வழக்கம் என்பதை இலங்கைப் பிராமிச் சாசனங்கள் சிலவற்றின் மூலம் அறிய முடிகின்றது. 'மஜ்ஜிம' நிகாயத்தைப் பண்ணோடு பாடுபவரை 'மஜிம $ப_3$ணக' என்றும் 'அங்குத்தர' நிகாயத்தைப் படிப்பவரை 'ஏகோத்தர $ப_3$ணக' என்றுங் குறிப்பிட்டனர். வெல்லாவெளியிலே $ப_3$ணக என்ற பிராகிருத - மயமான சொல்லுக்குப் பதிலாக 'பெரும்பாண்' என்ற தூய தமிழ்ச் சொல்லை பயன்படுத்தியுள்ளனர். அவ்வாறு குறிப்பிடப்படும் தேரர் தமிழராதல் வேண்டும். எனவே அங்கிருந்த பள்ளி தமிழ்ப் பௌத்தப் பள்ளியாகும்.[24]

குசலான் மலையிலுள்ள சாசனமொன்றில் பண்பாணன் என்ற சொற்றொடர் தெளிவாகத் தெரிகின்றது. வெல்லாவெளிக் கல்வெட்டிற் பெரும்பாண் என்பது சாசனத்தின் முழு வடிவமாய் அமைந்துள்ளது. குசலான்மலையிற் பண்பாணன் ஒரு வசனத்தில் அமைந்த தொடராயுள்ளது. அதிலே முன்னயதிலுள்ள பெரும் என்ற தமிழ்ச் சொல்லுக்குப் பதிலாக பண் என்ற தமிழ்ச் சொல் வருகின்றது. பாண் என்பதற்குப் பதிலாக பாணன் என்ற சொல் வருகின்றது. பண்ணோடு பாடுகின்ற பாணனே பண்பாணன். அது பிராகிருத வழக்கிலே ப$_3$ணக என்று சொல்லப்படும். தலத்திலுள்ள எல்லாச் சாசனங்களையும் பிராகிருத மொழியில் எழுதியவர்கள் பௌத்த தர்மம் பற்றிய பிரதான பகுதியொன்றினை இசைப்பாங்கிற் படிப்பவரைத் தமிழ்ச் சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். பௌத்த சமயம் ஆதியில், இலங்கையிலே தமிழையும், வேறு மொழியினையும் பேசியவர்களிடையே பரவியதென்பதை முன்னே குறிப்பிட்டோம். குசலான் மலையில் இருந்த சங்கத்தார் பெரும்பள்ளி பல துறவிகள் வாழ்ந்த பள்ளி. நெடுங்காலம் நிலவிய பள்ளி. அது தமிழரான பௌத்த துறவிகள் வாழ்ந்த பள்ளி என்பதும் தமிழ்ச் சமூகங்களுக்குரிய பள்ளி என்பதும் இப்பொழுது தெரியவருகின்றது.[25]

### 4.1.2 மட்டக்களப்பில சமண சமயம் நிலைபெற்றிருந்தமை

வெல்லாவெளியின் புள்ளபுடிச்சான் மலையின் மேலுள்ள கல்வெட்டொன்று இலங்கை வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தது. காலத்தாற் பிற்பட்ட அது சமண சமயம் தொடர்பானது. அதனை இலங்கையிற் கிடைத்த முதலாவது தமிழ்ப் பிராமிச் சாசனமென்று பேராசிரியர் கருதுகின்றார். அது பிராகிருதம் கலந்த தமிழ்ச் சாசனம். சமணம் தொடர்பான சாசனம் என்பதால் அதனைத் தமிழ் மொழியில் எழுதியுள்ளனர்.

தமிழகத்துப் பிராமிச் சாசனங்கள் எல்லாம் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன. அவை பெரும்பாலும் சமணம் தொடர்பானவை. இச்சாசனம் கி.பி மூன்றாம், நான்காம் நூற்றாண்டுகளுக்குரியதாகும். 'சிப்புக$_3$ல க$_3$மி குரத்தி மீ குரத்தி வேமி பெருவணிக' என அது எழுதப்பட்டுள்ளது. இச்சாசனம் சமண சமயத்துப் பெண் துறவியரைப் பற்றியது. குரத்தி, குரவர் என்ற சொல்லின் பெண்பால் வடிவமாகும். இதற்குக் காலத்தாற் பிற்பட்ட தமிழகத்துக் கல்வெட்டுக்களிற் பத்தினிக் குறத்தியார் முதலான பெண் துறவியர் பலரைப் பற்றிய குறிப்புக்கள் உண்டு. தமிழகத்துப் பிராமிச் சாசனங்களிற் காணப்படும் பம்மிதி போன்ற சொற்கள் சமணப் பெண் துறவியரைக் குறிப்பிடுவன என்பதும் இங்கு குறிப்பிடற்குரியதாகும். முதன்மை, தலைமை, மேன்மை என்பவற்றை மீ என்ற ஓரெழுத்துச் சொல் குறிக்கும். மீ என்பது தமிழ் வழக்கிலே, காலவேறுபாடின்றி, ஆதிமுதல் இன்றுவரை வழங்கும் சொல்லாகும். குறத்திகள் குழுவொன்றின் நாயகியினையே சாசனத்தில் மீ குறத்தி என்று குறிப்பிட்டுள்ளனர்.

இந்தச் சாசனம் காணப்படும் மலையின் மேற் குகை காணப்படுவதற்குப் பதிலாக புராதனமான செங்கற் கட்டுமானத்தின் எச்சங்கள் காணப்படுகின்றன. செங்கற்கள் அளவிற் பெரியனவென்றும் தமிழகத்திலுள்ள கி.பி முதலாம், மூன்றாம் நூற்றாண்டுகளுக்கு உரியனவற்றைப் போன்றன என்றும் தென்னிந்தியத் தொல்லியலாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். மலையிலே காணப்படும் தொல்பொருட் சின்னங்கள் அங்கு சமணரான பெண் துறவியரின் பள்ளியொன்று இருந்தமைக்கான அடையாளங்களாகும். பெருவணிக என்று சாசனம் குறிப்பிடுபவர்

குறத்திகளுக்கான பள்ளியை அமைத்துக் கொடுத்தவராதல் கூடும். சமணருக்கு உறைவிடங்களை அமைத்துக் கொடுத்தவர்களில் வணிகரும் முதன்மையானவர்கள் என்பதைத் தென்னிந்திய பிராமிச் சாசனங்கள் மூலமாகப் அறியமுடிகின்றது.[26]

### 4.1.3 வயல்வெளி தொடர்பான செய்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்கே கோரளைப்பற்று தெற்குப் பிரதேசத்திற்குட்பட்ட கிராமமான முருக்கன் தீவில் கிடைத்த சாசனத்தை வாசிக்க முற்பட்டபோது அதனை முழுவதுமாக எம்மால் வாசிக்க முடியவில்லை. கீழ்வருமாறு அவற்றை அடையாளம் காண முடிந்தது.



இவ்வெழுத்துக்கள் ஓரளவு தெளிவாகத் தெரிந்தது. அதிலும் குறிப்பாக  (மருதம்) எனும் சொல்லை மற்றைய எழுத்துக்களை விடத் தெளிவாக வாசிக்க முடிந்தது. 'மருதம்' என்பது வயலும் வயல் சார்ந்த பிரதேசத்தையும் குறிக்க பழந்தமிழ் இலக்கிய காலம் முதல் பயன்படுத்தப்பட்டு வந்த சொல்லாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்குகின்ற போது வயல்கள் நிறைந்த பகுதியில் கிடைத்துள்ள இச்சாசனம் வயலுடன் தொடர்புடைய ஏதோவொரு நிகழ்ச்சியை குறிப்பிடுகின்றது என நாம் கருதலாம். இதனைப் பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களும் ஒப்புக்கொண்டுள்ளார். ஆதியில் வயல்களை உருவாக்கி அவற்றை உடைமையாக்கிக் கொண்டவர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டிருத்தல் கூடும் என அவர் ஊகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எனினும் சாசனத்தின் ஏனைய எழுத்துக்கள் தெளிவாகத் தெரியாத நிலையில் அந்நிகழ்ச்சி பற்றிய விவரங்களை தெளிவாக வெளிப்படுத்த முடியவில்லை.

## 5.0 மட்டக்களப்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள பிற்காலக் கல்வெட்டுக்கள் அவற்றின் மூலம் தெளிவாகும் வரலாற்றுண்மைகளும்

13ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட கால கல்வெட்டுக்கள் மூன்று திருக்கோயில் சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலில் உள்ளன. அத்தோடு வெருகல், கொக்கட்டிச்சோலை, பழுகாமம், வீரமுனை, களுதாவளை முதலான பல இடங்களிலும் பிற்காலக் கல்வெட்டுக்கள் பல அடையாளங் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### 5.1 இடைக் காலத்தில் கோயில்களுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளமை

திருக்கோயில் சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலில் மூன்று கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுக்களில் ஒன்று ஸ்ரீ சங்கபோதி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ விஜயபாகு தேவருடைய பத்தாவது ஆட்சியாண்டிலே தை மாதம் 20ஆம் நாள் எழுதப்பட்டுள்ளது. இக்கல்வெட்டு சிவஞான சங்கரர் கோயிலிற்கு வோவில் என்ற இடத்தை யாரோ மானியமாக அளித்ததைப் பதிவு செய்கின்றது. இது பதின்மூன்றாம் நூற்றாண்டிற்கு பிந்தியவையாகவே கருதப்படுகின்றது. மற்றைய கல்வெட்டும் ஸ்ரீ சங்கபோதி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகளின் எட்டாம் ஆட்சியாண்டில் எழுதப்பட்டுள்ளது. ஆயினும் நடைபெற்ற திருப்பணி தொடர்பில் அறிய முடியாதபடி கல்வெட்டு சிதைவடைந்துள்ளது. திருக்கோயில் கல்வெட்டுக்கள்

குருநாகல் அரசிலிருந்து அரசாண்ட ஐந்தாம் விஜயபாகு, பதினாறாம் நூற்றாண்டிலே கோட்டை நகரிலிருந்து அரசாண்ட ஆறாம் விஜயபாகு ஆகியோரின் காலங்களைச் சேர்ந்தனவாயிருத்தல் வேண்டும்.[27]

மற்றுமொரு கல்வெட்டில் ஒரு நெல் வயலின் அரைவாசி எல்லையை குறிப்பிடுவதனால் கல்வெட்டு பொறிக்கப்பட்ட தூண் ஓர் எல்லைக் கல்லாக அடையாளங் காணப்பட்டுள்ளது. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் அரசர்கள் கோயில்களுக்கு மானியங்கள் வழங்கியமை பற்றிய விவரங்களை இடைக்காலக் கல்வெட்டுக்களின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது.

### 5.2 கோயில்களுக்கு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளமை.

வெருகற் சித்திரவேலாயுதர் சுவாமி கோயிலிற் சாசனமொன்று கிடைக்கப் பெற்றுள்ளது. அச்சாசனத்தை முதன் முதலில் ஹியூநெவில் (Hugh Neville) கி.பி 1887 இல் வாசித்தார். எனினும் அவரது வாசிப்பிற் சில திருத்தங்களை கா.இந்திரபாலாவும் ஆ.வேலுப்பிள்ளையும் மேற்கொண்டுள்ளனர். இச்சாசனத்திலே அது எழுதப்பட்ட காலம் பற்றிய எவ்வித குறிப்பும் இடம்பெறவில்லை. எனினும் சாசனத்தின் வரிவடிவங்கள் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளுக்கு உரியவை. எனவே அது 17ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட ஒரு சாசனமென்று கொள்வதே பொருத்தமான முடிபாகலாம்.[28]

சித்திரவேலாயுதர் சுவாமி கோயிற் திருப்பணிகள் நடைபெற்ற பொழுது அதன் மதில்கள் கட்டப்பட்டமை பற்றி இச்சாசனத்திற் கூறப்படுகின்றது. மேற்குப் புற மதிலை திமரசர் மகன் பழையிற் சிதம்பரப்பிள்ளை என்பவர் அமைத்துள்ளார் என்பது இதன் மூலம் புலனாகின்றது. கோயில் மதில்களைஅமைத்தவர்களிற்கயிலாயவன்னியனார்பெயரும்இடம்பெறுகின்றது.இவர்கோயிலின் தெற்குத் திசையிலுள்ள மதிலை அமைத்துள்ளார். மட்டக்களப்பு மக்கள் மற்றும் நீர்கொழும்பைச் சேர்ந்த கரையூரவர்கள் என்போரால் மேற்குப்புற மதில் அமைக்கப்பட்டுள்ளது. தேசத்துக் கோயில் என்று பாராட்டப் பெற்ற வெருகலுக்கு இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சைவர்கள் யாத்திரை போகும் வழக்கம் நிலவியதொரு காலத்திலே இந்தச் சாசனம் எழுதப்பட்டுள்ளது. மட்டக்களப்பின் வடக்கு எல்லையின் அருகே வெருகல் ஆலயம் அமைந்துள்ளதால், மட்டக்களப்பு தேசத்து இந்து மக்கள் இவ்வாலயத்தின் மீது கொண்ட ஆர்வத்தினை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. வடக்குப் புற மதிலைச் செட்டிகள் அமைத்துக் கொடுத்துள்ளனர். இவர்கள் கோயிலுடன் நெருங்கிய தொடர்புடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

### 5.3 கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலுள்ள கல்வெட்டு

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் பிற்காலத்தைச் சேர்ந்த கல்வெட்டொன்று உள்ளது. துண்டமாக்கப்பட்டுள்ள இக்கல்வெட்டானது இருநூற்றைம்பது ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கலாம் என பேராசிரியர் சி.பத்மநாதன் குறிப்பிடுகின்றார். கற்பக்கிரகத்தோடு இணைந்த சில கட்டுமானப் பணிகள் 'வெங்கட ராமன் சாமி சேகர்' என்பவரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள தகவலை இதிலிருந்து பெற முடிகின்றது.

### 5.4 வீரமுனைக் கல்வெட்டு

ஆலயத்தின் இடப்புற மூலையில் கிடையாக வைக்கப்பட்டுள்ள துண்டமான கற்சாசனத்தின் மூன்றுபக்கங்களிலும்வாசகங்கள்எழுதப்பட்டுள்ளன.'திருநந்தாவிளக்கு'தொடர்பானசெய்திஇதில்

கூறப்பட்டுள்ளது என பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்களால் அடையாளங் காணப்படுகின்றது. இச்சாசன வாசகங்கள் அடங்கிய கற்றூண் முறையாகப் பாதுகாக்கப்படாமையால் எழுத்துக்கள் தேய்வடைந்திருந்தமையை அவதானிக்க முடிந்தது.

### 5.5 நடுகல் வைக்கும் முறை

தமிழ் கிராமங்களில் ஒன்றான பழுகாமம் மாவேற்குடாவில் மூன்று கற்றூண்கள் வயல்வெளியில் நடுகற்களாக நிறுத்தப்பட்டுள்ளன. இதிலே மரணச்செய்தி பற்றிய வாசகங்கள் கூறப்பட்டுள்ளன. கணபதிப்பிள்ளை என்பவர் 1919 ஆம் ஆண்டு தைமாதம் 27ஆம் திகதி பரமபதம் அடைந்தார் எனவும் மற்றுமொரு கற்றூணிலே கந்தப்பன் (1908) மற்றும் கந்தவேள்(1927) ஆகியோரும் தெய்வீக மரணமடைந்த செய்தியும், 1890ஆம் ஆண்டுக்குரிய கல்வெட்டில் நாகையா என்பவருக்குத் தானம் கொடுக்கப்பட்டுள்ள செய்தி பற்றிய குறிப்பும் காணப்படுகின்றது. இதன் மூலம் இறந்தோருக்கு நடுகல் வைக்கும் மரபு மட்டக்களப்பு பிரதேச மக்களிடையே நிலவியது எனக் கொள்ள முடிகின்றது.

இவ்வாய்வில் பின்வரும் முடிவுகள் பெறப்பட்டன. ஈழத்தின் ஏனைய பகுதிகளைக் காட்டிலும் அதிகமான பிராமிக் கல்வெட்டுக்கள் மட்டக்களப்பு தேசத்தில் கண்டறியப்பட்டுள்ளன. இற்றைக்கு இரண்டாயிரத்து நூறு வருடங்களுக்கு முன்னர் இப்பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தமைக்கும், தமிழ் மொழியின் செல்வாக்கு ஏற்பட்டிருந்தமைக்கும் இச்சாசனங்கள் உறுதியான சான்றுகளாகின்றன. அத்துடன் மட்டக்களப்பில் குறுநில அரசர்களின் ஆட்சி நடைபெற்றுள்ளது. இந்து சமயம் நிலைபெற்றிருந்தமைக்குச் சான்றுண்டு. குறிப்பாக தமிழர் மத்தியில் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் முற்காலத்தில் நிலைபெற்றிருந்தமைக்கான ஆதாரபூர்வமான சான்றுகளை பிராமிக் கல்வெட்டுக்களில் கண்டுகொள்ள முடிகின்றது. வயல் நிலம் தொடர்பான தகவல்களும் கல்வெட்டுக்களாக வெட்டப்பட்டிருந்தன என்ற விவரத்தையும் அறிந்து கொள்ள முடிகின்றது. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் அரசர்கள், வன்னியர், பொதுமக்கள் ஆகியோர் கோயில்களுக்கு மானியங்கள் வழங்கியமை பற்றிய விவரங்களை இடைக்காலக் கல்வெட்டுக்களின் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. மட்டக்களப்பின் வரலாற்றம்சங்களை வெளிப்படுத்துகின்ற இத்தகைய சாசனங்களைக் கண்டுபிடித்து, அவற்றைப் பாதுகாப்பது ஒவ்வொருவரதும் கடமையாகும்.

## அடிக்குறிப்புகள்

1. Paranavitana.S, Inscription of Ceylon, vol-01, Colombo, 1970
2. சிற்றம்பலம்.சி.க, ஈழத்து இந்துசமய வரலாறு, யாழ்ப்பாண பல்கலைக்கழகம் - திருநெல்வேலி, 1996, ப-37
3. Inscription of Ceylon, 1970
4. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996
5. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 38
6. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 38
7. பத்மநாதன்.சி, இலங்கையில் இந்துசமயம், அகில இலங்கை இந்து மாமன்றம் - குமரன் புத்தக இல்லம், 2005
8. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 238
9. பத்மநாதன்.சி, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்-கொழும்பு, 2006

10. Dorai Rangaswamy.MA, The surname of the cankam age Literary and Tribal, (Madras), 1968, pp-39,43
11. பத்மநாதன்.சி, மே.கூ.நூ, 2006, ப -XXX
12. சிற்றம்பலம்.சி.க, யாழ்ப்பாணம் - தொன்மை வரலாறு, யாழ்ப்பாண பல்கலைக் கழக வெளியீடு, 1993, ப-112
13. தங்கேஸ்வரி.க, கிழக்கிலங்கை பூர்வீக வரலாறு, மணிமேகலைப் பிரசுரம், 2007, ப- 102
14. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 123
15. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 125
16. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 125
17. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப- 199
18. பத்மநாதன்.சி, மே.கூ.நூ, 2006, ப-ஒஓஔளைை
19. www.puthinappalakai.com
20. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1993, ப-110
21. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1993, ப-111
22. Paranavitana.S, Inscription of Ceylon, vol-01, Colombo, 1970
23. சிற்றம்பலம்.சி.க, மே.கூ.நூ, 1996, ப - 300
24. www.puthinappalakai.com
25. www.puthinappalakai.com
26. www.puthinappalakai.com
27. பத்மநாதன்.சி, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் புத்தக இல்லம், 2004
28. பத்மநாதன்.சி, மே.கூ.நூ, 2004

## கல்வெட்டுக்கள்

391



443



507



531



529



550



389



480



457



பிராமிக் கல்வெட்டுக்கல்



வெல்லாவெளிக் கல்வெட்டு





வெல்லாவெளி புள்ளபுடிச்சான் மலைக் கல்வெட்டு



முருக்கன் தீவில் கிடைத்த சாசனம்



குடும்பி மலைக் கல்வெட்டு



வெருகல் கல்வெட்டு



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில் கல்வெட்டு

| | | |
|---|---|---|
| 1. ஶ்ரீ சங் | 14. தில் லை | 27. நம் செ |
| 2. கபோ | 15. மா தம் | 28. தானுவி |
| 3. தி பத்ம | 16. டைய தியதி | 29. ல் கெங் |
| 4. ராஜதி | 17. சிவஞான | 30. கைக் க |
| 5. திபுவன | 18. சங்கரகர் | 31. ரையில் |
| 6. ச்சக்கிர | 19. கொ வி | 32. காராம்ப |
| 7. வத்திக | 20. னுக்கு | 33. சு வைக் |
| 8. ன் ஶ்ரீ வி | 21. கொடுத் | 34. கொந்ர |
| 9. சய வா | 22. த வொ | 35. பாவத் தை |
| 10. கு தேவ | 23. வில் இ | 36. தகொன் |
| 11. ற்கு ஆ | 24. ந்த தல் | 37. னக்கடவ |
| 12. ண்டு ப | 25. மத்துக் | 38. ாருகவும் |
| 13. த் தாவ | 26. கு ஆகி | |

# வெல்லாவெளிக் கிராமத்தின் வரலாறும் தொல்லியல் எச்சங்களை ஆவணப்படுத்தலும்

நிலாந்தினி பொன்னுத்துரை

## அறிமுகம்

இலங்கைத் தமிழர் பூர்வீக காலம் முதலாக செறிந்து வாழும் பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பும் ஒன்றாகும். மத்திய காலத்தில் மட்டக்களப்பு தேசம் என்ற சொல்வழக்கு உருவாகியிருந்தது. அது வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் வரையறையான எல்லைகளைக் கொண்ட நிலப்பகுதியாக அமைந்திருந்தது.

கிழக்கிலங்கையிலே வடக்கே வெருகலாற்றையும் தெற்கே குமுக்கன் நதியினையும் எல்லைகளாகக் கொண்டுள்ள நிலப்பகுதி மட்டக்களப்பு தேசம் என்று முற்காலங்களில் வழங்கியது. ஆனால் தற்போது இதன் தெற்கெல்லையானது கட்டாகாமம்வரை வியாபித்துள்ளது என மட்டக்களப்பு வரலாறு என்ற நூலிலே தகுந்த சான்றுகளுடன் சீ.கோபாலசிங்கம் குறிப்பிட்டுள்ளார். அரசியல் முறைகளிலும் சமுதாய வழமைகளிலும் முக்குவரின் செல்வாக்கு மேலோங்கியிருந்தமையால் அதனை ‘முக்குவதேசம்’ என்றுஞ் சொல்வதுண்டு.

மட்டக்களப்பு தேசம் என்பது உணர்ச்சி பூர்வமானது. அது பிராந்தியத்திற்கும் அங்கு வாழ்ந்த மக்களுக்கும் இடையிலான தொடர்புகளையும் அடிப்படையாகக் கொண்டவொன்றாகும். மட்டக்களப்பு முழுவதும் முற்காலங்களில் ஒரு தனியான நிர்வாகப் பிரிவாகவோ ஆட்சிப் புலமாகவோ அமைந்திருக்கவில்லை. அதிற் கோரளைப்பற்று, வாகரை, மட்டக்களப்பு, மண்முனை, எருவில், போரதீவு, பழுகாமம், நாடுகாடு, சம்மாந்துறை, பானமை என்னும் பிரிவுகள் இருந்தன. அவற்றில் வன்னியர் என்னும் சிற்றரசரின் ஆட்சி ஏற்பட்டிருந்தது. அவர்களின் ஆட்சி பரம்பரை வழியானது. பொலன்னறுவை, கோட்டை, கண்டி போன்ற இராசதானிகள் பலமுற்றிருந்த காலங்களில் வன்னியர் அவற்றின் மேலாதிக்கத்தை ஒப்புக் கொண்டு அங்குள்ள அரசருக்குத் திறை செலுத்தினார்கள். ஏனைய காலப்பகுதிகளில் அவர்கள் சுதந்திரமாக ஆட்சி புரிந்தனர்.

இப்பிராந்தியமானது அரசியலின் அடிப்படையிலே பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தபோதும் அவை அனைத்தும் ஒரு பொதுவான தேசத்தின் அம்சங்களானவை என்ற உணர்வு வலுப்பெற்றிருந்தது. அந்தவகையில் காடும் சுனையும் கவின்தரு சோலையும் கழனியும் கொண்ட தேசமாக மட்டக்களப்பு விளங்குகின்றது.

இத்தேசத்தில் அண்மைக்காலமாக களவாய்வுகளை மேற்கொண்டு மரபுரிமைச் சின்னங்களையும் தொல்லியல் எச்சங்களையும் ஆவணப்படுத்தும் பணியில் வரலாற்றாய்வாளர்கள் ஈடுபட்டு

வருகின்றனர். ஆங்காங்கே உதிரிகளாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளினூடாக வரலாற்றின் தொன்மையான விடயங்களை அறியமுடிகின்றது. இருப்பினும் இவை முழுமை பெறவில்லை. இருள்சூழ்ந்த இத்தேச வரலாற்றில் வரலாற்று அம்சங்களை வெளிக்கொணரும் வகையில் மேற்கொள்ளப்படும் இந்த ஆவணப்படுத்தல் மாநாடு காலத்தின் தேவையாக அமைகின்றது.

அந்தவகையில் தமிழர்கள் வாழ்ந்த பழந்தேசங்களில் ஒன்று வெல்லாவெளிக் கிராமமாகும். இதற்கு இங்குள்ள தொல்லியல் எச்சங்கள் உறுதியான சான்றுகளாக அமைகின்றன. அவற்றினை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே இவ்வாய்வு அமைகின்றது.

வெல்லாவெளிக் கிராமமானது மாநகரின் தெற்குநோக்கி சுமார் 33 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. அதாவது களுவாஞ்சிக்குடியிலிருந்து பட்டிருப்பு பாலத்தினூடாக கோயில் போரதீவுக் கிராமத்தை ஊடறுத்துச் செல்லும் மண்டூர் பாதையில் நாதனைச் சந்தியென நீண்டகாலமாக அழைக்கப்படுகின்ற அம்பிலாந்துறை, பக்கி எல்லை, மண்டூர் சந்தியை மையப்படுத்தியதாக அமைகின்றது. இது வடக்கே கோவில் போரதீவுக் கிராம எல்லையினையும் தெற்கே கருடன் ஆற்றினையும் கிழக்கே மட்டக்களப்பு வாவியினையும் மேற்கே தும்பாலை ஆற்றினையும் எல்லைகளாகக் கொண்ட கிராமமாகும். இக்கிராமத்திலே அம்மன்குளம், நாதனை, கோவில்தீவு, குளத்து வட்டை என நான்கு குடிசனங்களைக் கொண்டதாகக் காணப்பட்டது.

ஆய்வின் அணுகுமுறையானது இலக்கியச் சான்றுகளினூடாக ஆராய்தல், அங்குள்ள தொல்லியற் தடயங்களை ஆவணப்படுத்தல், தொல்லியற் தடயங்களினூடாக அதன் தொன்மையை அறிதல், வெல்லாவெளிக் கிராமம் தொன்மைமிக்க ஓர் வரலாற்றுப்பிரதேசம் என்பதை உறுதிப்படுத்தல் என்பதாக அமைகின்றது. முதலாவதாக இக்கிராமத்தின் வரலாற்றினை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், நாடுகாடுப்பற்று, நாதனைப்பற்று போன்ற இலக்கியக் குறிப்புக்களினூடாக அறிந்து கொள்ளலாம்.

- ## வெல்லாவெளி கிராமத்தின் வரலாறு பற்றி இலக்கியச் சான்றுகளினூடாக ஆராய்தல்

### I. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்

மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றம்சங்களைத் தொகுத்துக் கூறும் நூலாக மட்டக்களப்பு பூர்வசரித்திரம் காணப்படுகின்றது. இது சென்ற நூற்றாண்டின் ஏழாவது தசாப்தம் வரை ஏட்டுவடிவில் முடங்கியிருந்தது. இந்நூலின் ஏட்டுப்பிரதிகள் பலவற்றைச் சோதித்த வித்துவான் எவ்.எக்ஸ்.சி நடராசா அதனை 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் பெயருடன் வெளியிட்டார். அந்தப்பெயர் பதிப்பாசிரியர் நூலுக்கு வழங்கிய பெயர். அது மூலப்பிரதிகளிற் காணப்படாதவொன்று.

பூகோள அமைப்பு, மொழிவழிப் பாரம்பரியம், அரசியல் வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பிராந்திய உணர்வினைப் பிரதிபலிப்பதே 'மட்டக்களப்பு தேசம்' என்ற கோட்பாடு. மட்டக்களப்பு தேசத்தின் வரலாற்றை வகுத்துக் கொள்வதற்கென வந்ததே 'மட்டக்களப்பு மான்மியம்' என்னும் மட்டக்களப்பின் பூர்வசரித்திரம்.

‘பூர்வசரித்திரம்’ வசன நடையிலும் செய்யுள் நடையிலுமுள்ள பகுதிகளைக் கொண்ட நூலாகும். மட்டக்களப்பின் மகிமை பெருமைகளை எடுத்துக்கூறும் மட்டக்களப்பு மான்மியம், மாவட்டத்தில் அமைந்து கிடக்கின்ற பல கிராமங்களின் பெயர், வரலாறு, சாதிப்பிரிவுகள், ஆலயங்கள், கல்வெட்டுக்கள், குடுக்கை கூறும் விபரம் முதலியவற்றை முறைப்படுத்திப் பதிவு செய்கின்றது.

வெல்லாவெளிக் கிராமத்தின் வரலாறு பற்றி இலக்கியக் குறிப்புக்களினூடாக ஆராய்கின்றபோது அதன் தொன்மையை அறியமுடியவில்லை. வெல்லாவெளி என்பது ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின்போது நடைமுறைக்கு வந்தபெயராகும். கி.மு மூன்றாம் நூற்றாண்டில் இக்கிராமம் எப்பெயரால் அழைக்கப்பட்டது என்பதை இதுவரை அறியமுடியவில்லை. ஆனால் கி.பி 11ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர் இது நாதனை எனும் பெயரால் அழைக்கப்பட்டது என்பதற்கு ‘மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்’ சான்றாக அமைகின்றது.

மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தினை மூலமாகக் கொண்டு ஆராய்கின்றபோது கி.பி 11ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் மட்டக்களப்பின் ஆட்சியாளனாகவிருந்த மதிசுதன் என்பவன் ஆயிரம் அவணம் நெல் விதைக்கத்தக்க கழனியை உருவாக்கி தனது மகன் நாதன் பெயரில் தற்போது நாதனை ஆறு என அழைக்கப்படும் ஆற்றின் குறுக்காக அணையொன்றினைக் கட்டி அதில் அந்நீரைக்கொண்டு அக்கழனிகளுக்கு பாசனம் செய்வித்தான் எனவும் அக்காணிகளை தற்போது கோவில்போரதீவு என அழைக்கப்படும் போர்முனை நாடு சித்திரவேல் ஆலயத்திற்கு வழங்கினான் எனவும் வயற்காணிகளுக்கு ‘வேலர்வெளி’ எனவும் கட்டிய அணைக்கு ‘நாதன் அணை’ எனவும் பெயரிட்டான் எனவும் கூறப்படுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது நாதனை எனும் பெயர் உருவாக்கம் சுமார் தொளாயிரத்து ஐம்பது ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக்கூறலாம்.

## 2. நாடுகாடுப்பற்று (கலிங்க மாகோன் ஆட்சிக்காலம்)

நாடுகாடுப்பற்று மட்டக்களப்பின் பழைய பிரிவுகளில் ஒன்றாகும். இதன் வட்டார உணர்ச்சியின் காரணமாக எழுந்ததே நாடுகாடு பரவணிக்கல்வெட்டு எனலாம். இதிலே வயல்வெளிகள், ஊர்கள் பலவற்றின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக அதில் பட்டியவத்தவளை, வாடிமுனை, பாமங்கை, கல்மடு, கோயில்மடு, பட்டிமேடு, மேட்டுவெளி, பள்ளவெளி, வேகாமம், வல்லிப்பத்தான்சேனை, கடவத்தைவெளி, திவிவானைவெளி, பொத்தானைவெளி, வம்மியடிவயல், பட்டிப்பளை, அணுக்கன்வெளி, சிங்காரவத்தை, நாதனை போன்ற இடங்கள் குறிப்பிடப்படுகின்றன. இதிலே நாதனை என்றே வெல்லாவெளி குறிப்பிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பூர்வசரித்திரத்திலே வர்ணிக்கப்படும் இலங்கை அரசர்களைப் பற்றிய விபரங்களில் மாகோனைப் பற்றியவை மிகவும் விரிவானவை. மாகோனைக் ‘கலிங்கமாகோன்’ என்று அந்நூல் குறிப்பிடுகின்றது. அத்தோடு மட்டக்களப்புச் சமுதாய அமைப்பின் பிரதான அம்சமாகிய குடிமுறை மாகோனால் வகுக்கப்பட்டது. மட்டக்களப்பு முக்குவ வன்னிமைகள் அவனால் உருவாக்கப்பட்டவை. மட்டக்களப்பு தேசத்து ஆலயத்தொழும்புகள் இவனால் வகுக்கப்பட்டவை.

கி.பி 13ஆம் நூற்றாண்டில் மாகோன் ஆட்சிக் காலத்தில் (1215-1255) உருவாக்கப்பட்ட நாடுகாடுப்பற்றின் வடக்கு எல்லையாக நாதனை குறிப்பிடப்படுகின்றது. இதுபற்றி மட்டக்களப்பு வாழ்வும் வளமும் (தொகுப்பு எவ். எக்ஸ். சி. நடராசா) என்றநூலில் கீழ்வருமாறு கூறப்பட்டுள்ளது.

*நாடுகாட்டு எல்லைகள் : இதற்கு இப்போது வடக்கு நாதனையடிப்பா, வேடர் குடியிருந்த தோட்டம். எழுவான்மூலை துலிக்கிமணல், சங்கத்தான் பள்ளம், கருவேப்பங்காடு. தெற்கு கதிர்காமத்து மலை. மேற்கு ஏழுவனமுட்பட கொலுசாப்பழை, சுல்லக்கை ஆறு, குறுவளையாறு, இந்த நான்கு எல்லையும் ஆளப்பட்ட பகுதியானது ஆண்டனுபவித்திருந்து பட்டங்கட்டின முதலிமார் ஒன்பது பேர் பட்டங்கட்டாத முதலிமார் நாலுபேர் தலைமைசெய்த போடிமார் ஏழுபேர். இப்படியிந்தப் பகுதியாண்டிருந்தவர்கள். பூருவ பரவணி முற்றும்.*

சுமார் 770 வருடங்களுக்கு முற்பட்டு நாடுகாடுப்பற்று உருவானதாகக் கொள்ளலாம். பொதுவாக நாடுகாடுப்பற்று எல்லை குறித்த ஆய்வுகளில் வடக்கே நாதனையும் தெற்கே கதிர்காம மலையும் குறிப்பிடப்படுவதைக் காணலாம். கண்டியரசன் கீர்த்திசிறி ராஜசிங்கனின் ஆட்சிக் காலத்தில் (1747-1782) எழுதப்பட்டதாகக் கொள்ளப்படும் நாடுகாடுப்பற்று பரவணிக் கல்வெட்டில் நாதனை வில்லை கட்டிச் சடங்கினை குறிப்பிடும் அம்சங்கள் வரலாற்றுப் பதிவுக்குள் உள்வாங்கத்தக்கவையாகும். அக்கல்வெட்டில் முக்கியப்படுத்தப்படுகின்ற இராசபக்ஷ முதலியாரை பேராதனை அப்பு என்பான் பேய்களை ஏவிக் கொன்றதாகவும் இதனை அறிந்த மட்டக்களப்பின் ஏழு வன்னியமாரும் ஒன்பது முதலிமாரும் கூடிப்பேசி பேராதனை அப்புவைக் கொல்லத் திட்டமிட்டதாகவும் இதனை அறிந்த பேய்கள் இத்தகவலை பேராதனை அப்புவிடம் தெரிவிக்க அவன் அவர்கள் அனைவரையும் கொல்லுமாறு பேய்களைப் பணித்ததாகவும் இதனை இராசகுல தெய்வமானது நாதனை வில்லைகட்டிச் சடங்கில் நின்று அறிந்துகொண்டதாவும் வில்லைகட்டிச் சடங்கு முடிந்ததும் அத்தெய்வம் யானை உருவெடுத்துச் சென்று பேராதனை அப்புவை அடித்துக்கொன்றதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இத்தகவல் பழமை வாய்ந்த நாதனை வில்லைகட்டிச் சடங்கினை அறிந்துகொள்ளும் முதல் தகவலாகும்.

### 3. நாதனைப் பற்று

ஆங்கிலேயர் ஆட்சியின் தொடக்ககாலத்தே நாடுகாடுப்பற்று பிரிக்கப்பட்டு வேகம் மற்றும் விந்தனைப் பற்றுக்களும் நாதனைப்பற்றும் உருவாக்கப்பட்டது. இக்காலம் சரியாகக் கண்டறியப்படவில்லையெனினும் இலங்கையின் முதலாவது குடிசன மதிப்பீட்டுக்கு(1824) முன்னரேயே இப்பற்றுக்கள் உருவாகியுள்ளமையை அவ்வறிக்கைகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. சுமார் 200 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இக்காலத்தை குறிப்பிடலாம். நாதனைப்பற்று இன்றைய மண்முனை தென் எருவில், மண்முனை தென்மேற்கு, போரதீவு, உகனை மற்றும் மகோயாப் பகுதிகள் உட்பட ஊவா மலைத்தொடர்வரை நீண்டிருந்தது. நாதனைப் பற்று வன்னியர்கள் தொடர்பில் அவர்களது பெயர் விபரங்கள் சரியாகக் கண்டறியப்படவில்லை. எனினும் இரண்டு வன்னியர்கள் நாதனை வன்னிமையாக கடமையாற்றிய தகவல்கள் கிடைக்கின்றன. இரண்டாவது வன்னியனே வெல்லாவெளி வாழைச்சேனையை தனது வாசஸ்தலமாகக் கொண்டிருந்தான். அவ்வில்லம் தற்போது அழிபாடுற்றுக் காணப்படுகின்றது. இவனுக்கும் படையாட்சிகுல வன்னி நாச்சியாருக்கும் வாரிசுகள் இல்லையெனும் தகவல் வெல்லாவெளியில்

இடம்பெறும் படையாட்சி குடியினரின் முன்னோருக்கான பிதிர்க்கடன் வழிபாட்டில் வைக்கப்படும் வன்னிச்சி மடைமூலம் பெறப்படுவதைப் பார்க்கலாம். இது குறித்து கவிக்கோ வெல்லவூர்க் கோபால் எழுதிய தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும் என்ற நூலில் (விபுலம் வெளியீடு -2003, பக்கம்: 76, 77) மேல்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்புத் தேசத்தில் தொடக்க நிலையில் (கலிங்க மாகோன் காலம்) செயல்பட்ட வன்னியச் சிற்றரசுகள் சில பிற்பட்ட அரசியல் சூழ்நிலையில் பூபால கோத்திரப் படையாட்சியிலிருந்து வேறு பிரிவினரிடம் மாற்றம் பெற்றபோதும் சில தொடரவே செய்தன. ஆங்கிலேயர் காலத்து தொடக்க காலத்தில் நாதனையில் (மட்டக்களப்பு - வெல்லாவெளி) இருந்த படையாட்சி வன்னிமை பற்றி பல ஆய்வாளர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர். அக்கிராமத்துப் படையாட்சி குடியினர் வருடந்தோறும் மேற்கொள்ளும் மறைந்த முன்னோருக்கான பிதிர்க்கடன் நினைவுச் சடங்கு நம் கவனத்தையீர்க்கின்றது. மரணித்த தம் உறவினர்களை நினைவுகூர்ந்து ஏனைய குடிமரபினர் நான்கு மடை (படையல்) வைக்க படையாட்சி குடியினர் மாத்திரம் ஐந்து மடை (வன்னிச்சி மடை) வைப்பார்கள்.

அதில் தாய்வழியினருக்கான மடை, தந்தை வழியினருக்கான மடை, தாயின் தந்தை வழியினருக்கான மடை, தந்தையின் தாய்வழியினருக்கான மடை, வன்னிச்சிமடை என்பனவாகும். இவ்வன்னிச்சி மடை பற்றி ஊர்ப்பெரியார்களிடம் வினாவியபோது அவர்கள் மேல்வருமாறு கருத்துத் தெரிவித்தனர். நாதனையிலிருந்த கடைசி வன்னியனார் அவருக்கு வாரிசு இல்லாதிருந்ததால் தனது வயோதிப நிலையில் அக்கிராமத்துப் படையாட்சி குலத்தவரை அழைத்து ஒரு வேண்டுகோளினை வைத்தார். தனது மறைவுக்குப் பின்னர் தனது அன்பு மனைவியை கவனமாகப் பார்த்துக்கொள்ளுமாறும் அவர் மரணமானதும் அதற்கான சடங்குகள் அனைத்தையும் முறையாக மேற்கொள்ளுமாறும் வேண்டிக்கொண்டார். வன்னியனாரின் மரணத்துக்குப் பின்னர் அம்மக்கள் வன்னி நாச்சியாரை நன்கு கவனித்துக்கொண்டனர். தனது இறுதிக் காலத்தை வாழைச்சேனை (வெல்லாவெளி) இல்லத்தில் கழித்த அவர் கல்லடி ஐங்கரனை தவறாது வழிபட்டுவந்தார். நாச்சியார் கல்லடி என்றே அப்போது அது அழைக்கப்படலாயிற்று. நாச்சியார் கல்லடி மருவிப் பின்னர் நாச்சிமார் கல்லடியாயிற்று என தங்கள் கிராமத்தினது மரபுவழிப் பண்பாட்டுப் பெருமையினைக் கூறினார்கள்.

மேலும் நாதனையின் முதலாவது வன்னியனார் பற்றிய தகவலை கவிக்கோ வெல்லவூர்க் கோபால் எழுதிய மட்டக்களப்பு வரலாறு - ஒரு அறிமுகம் என்ற நூலிலிருந்து அறிந்து கொள்ளமுடிகின்றது.

*"நாதனை முதலாவது வன்னியன் ஆட்சிக் காலத்தில் களுதாவளைப் பிள்ளையார் ஆலயம் கட்டப்பட்டுக் கொண்டிருந்தபோது அதனைப் பார்வையிடவந்த வன்னியனுக்கு கதிர்காம யாத்திரை மேற்கொண்டிருந்த யாழ்ப்பாணக் குழுவில் இருந்த ஒரு அழகிய பெண் கதிர்காமம் நோக்கிப் பயணித்தபோது களுதாவளை ஆலயத்துக்கு வடக்கே பருவம் அடைந்ததால் கதிர்காமம் செல்லமுடியாது தனது பெற்றோருடன் களுதாவளை பிள்ளையார் ஆலயத்தை ஊடறுத்துச் செல்லும் பாதையின் வடபால் களுதாவளைக்கும் தேற்றாத்தீவுக்கும் இடையில்*

*தங்கவைக்கப்பட்டிருந்த தகவல் தெரிவிக்கப்பட்டதாகவும் பின்னர் அங்கு சென்ற வன்னியன் அவளைக்கண்டு ஆசைகொண்டதாகவும் அவர்களை தான் திரும்பிவரும்வரை அங்கேயே தங்கவைக்குமாறு கட்டளையிட்டு நாதனைக்கு (வெல்லாவெளி) திரும்பியதாகவும் பின்னர் சிலநாட்கள் கழித்துவந்து அவளைத் தனது இரண்டாவது தாரமாக்கி களுவாஞ்சிக்குடியில் வைத்திருந்ததாகவும் அவள் மூலம் பிறந்த பிள்ளைகளை பட்டணக் குடியினர் எனக் குறிப்பிட்டு அவர்களுக்கு களுவாஞ்சிக்குடியின் வாவிக்கு அண்மித்த பகுதியில் வயல் காணிகளை வழங்கியதோடு கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் முன்னீட்டு உரிமையும் கொடுத்ததாகவும் தகவல்கள் பெறப்படுகின்றன".*

இதன்போது களுவாஞ்சிக்குடியின் முக்கிய குடிவழியினராக விளங்கிய பெரிய கவுத்தன் மற்றும் சின்னக் கவுத்தன் எனும் அண்ணன் தம்பி வழிவந்த இரு குடியினருக்கும் நாதனை வன்னியனால் காணிகள் வழங்கப்பட்டதோடு கோவில்போரதீவு சித்திரவேலாயுதர் ஆலயத்தில் வண்ணக்கராக பணியாற்றும் சிறப்புரிமையும் வழங்கப்பட்டதாக கள ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## • வெல்லாவெளி கிராமத்தின் வரலாற்றினை அறியக்கூடிய தொல்லியற் தடயங்கள்

வெல்லாவெளி கிராமத்தின் வரலாற்றினை அங்குள்ள தொல்லியற் தடயங்களினூடாக ஆவணப்படுத்தலில் குடவரைக் கல்வெட்டு, தொட்டத்து மலை, சுவாதியம்மன் குன்று வழிபாட்டு முறையும், கோவில் தீவு சிவன்கோயில் பற்றிய ஆய்வு, கிடாரம் போட்ட பள்ளம், மரத்துறை, ஆணைக்காரன் வெளி, உச்சந்தீவு தீர்த்தக்கரையும் சோமசுந்தரர் இறக்கத்தடியும், ஆயிரம் விழுது ஆலமரம், மேற்கு மலைத்தொடரில் கண்டெடுக்கப்பட்ட கற்சிற்பமும் கல்லுரலும் வன்னியர்வீடு, நாதனையாறு போன்ற தொல்லியற் சான்றுகளை ஆவணப்படுத்தி இக்கிராமத்தின் தொன்மையையும் சமூக பண்பாட்டம்சங்களையும் அறிந்து கொள்ளலாம்.

### I. குடைவரைக் கல்வெட்டு

பண்டைய வரலாற்றை அறிய உதவும் தொல்லியற் சான்றுகளுள் கல்வெட்டும் ஒன்றாகும். பண்டைக் காலத்தில் நீண்ட காலம் அழியாதிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட செய்திகள் கற்களில் வெட்டப்பட்டன. இவ்வாறு கல்லில் பொறிக்கப்பட்ட செய்தியே கல்வெட்டு எனப்படுகின்றது. பெரும்பாலும் மன்னர்களின் ஆணைகள், அவர்கள் செய்த பணிகள் போன்றவை கல்வெட்டுக்களாகப் பொறிக்கப்பட்டன. இவை தவிர வீரர்கள், பிரபுக்கள், அதிகாரிகள் போன்றோர் தொடர்பிலும் முக்கிய நிகழ்வுகள் தொடர்பிலான செய்திகள் கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுக்கள் பெரும்பாலும் பொதுமக்களின் பார்வைக்காக நிறுத்தப்படுவதனால் அவை பொது இடங்களிலே அதிகம் காணப்படுகின்றன. கோயில்கள், குகைகள், பொது மண்டபங்கள், போரில் வெற்றியீட்டிய இடங்களில் நிறுவப்பட்ட வெற்றித்தூண்கள், நடுகற்கள் எனப்படும் இறந்தோர் நினைவுக் கற்களை நிறுத்திய இடங்கள் போன்ற பல பகுதிகளிலும் காணப்படுகின்றன.

கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்ட பின்னர் பெரும்பாலும் எந்த மாற்றத்தினையும் அடைவதில்லை. இலக்கியங்களில் ஏடு பெயர்த்து எழுதுபவரால் பல மாற்றங்களுக்குள்ளாகும் வரலாற்றுக் குறிப்புக்கள் போன்று இவை எந்த மாற்றங்களையும் அடைவதில்லை. கல்வெட்டுக்களில் இன்னுமொரு சிறப்புத்தன்மை அவற்றின் உலகியல் சாராத மிகைப்படாத நடையாகும். எனவே எம்முன்னோர்கள் இக்கற்களை மட்டுமின்றி பொன், செம்பு, செங்கல், மட்பாண்டங்கள் போன்ற பொருட்களிலும் எழுதியுள்ளனர்.

வரலாற்றாய்வில் காலம் இன்றியமையாத ஒரு தேவையாகும். காலத்தைக் கண்டறிவதில் கல்வெட்டுக்கள் பெரும் பங்கு வகிக்கின்றன. இதனால்தான் இக்கல்வெட்டுக்கள் ஒவ்வொரு காலத்திலும் நிலவி வந்த அரசியல், சமுதாய, பொருளாதார வரலாற்றைப் பிரதிபலிக்கும் சான்றாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. குறிப்பாக வட இலங்கையில் பூநகரி, கந்தரோடை, ஆனைக்கோட்டை போன்ற இடங்களிலே கிடைத்துள்ளன. கிழக்கிலங்கையைப் பொறுத்தவரையில் இக்கல்வெட்டுக்கள் புராதன ஆலயங்களிலும் ஏனைய பிற இடங்களிலும் காணப்படுகின்றபோதும் அவற்றினை வாசித்தறிந்து அதன் முக்கியத்துவம் கருதி பேணிப்பாதுகாப்பது தொடர்பான சிந்தனைகள் தற்போது மக்கள் மத்தியில் உருவாகி வருவதன் காரணமாக அவை இனிமேலும் இருள்சூழ்ந்த பகுதியாகாது எனக்கூறலாம்.

எனவேதான் கல்வெட்டுக்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி தென்னாசியாவின் தலைசிறந்த கல்வெட்டறிஞர்களில் ஒருவராக பேராசிரியர் சுப்பரயாலு அவர்கள் கூறிய கருத்து நோக்குதற்குரியது.

> *கல்வெட்டுக்களைப் பொறித்தவர்கள் அவற்றை வரலாற்று மூலாதாரங்களாகக் கொள்ளவில்லை. பழைய செய்திகளைப் காலமுறைப்படுத்தி சொல்வதோ, பொருளாதார, சமுதாய செய்திகளை முறையாக விபரிப்பதோ அவர்களின் முக்கிய நோக்கமல்ல. இக்கால வரலாற்றாய்வாளர்களே இவற்றை வரலாற்று மூலங்களாகப் பயன்படுத்துகின்றனர்...........*

இலங்கையில் கிடைத்துள்ள கல்வெட்டுச் சான்றாதாரங்களில் மிகவும் பழமை வாய்ந்த கல்வெட்டாக குடைவரைக் கல்வெட்டு சிறப்புப் பெறுகின்றது. ஏனெனில் கி.மு 2300 வருடங்களுக்கு முன்னர் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சான்றாக இது அமைகின்றது. இதனை வெல்லாவெளிப்பிரதேச மக்கள் நகரம் எழுதிய கல் என அழைக்கின்றனர். இதனை நாம் இருவிதமாக நோக்க முடியும். ஏனெனில் தங்கள் பிரதேசத்தினைப் பற்றியும் அங்குள்ள பூர்வீக குடியிருப்புக்களைப் பற்றியும் கூறுகின்ற ஆவணமாக இதனைக் கொண்டு பண்டுதொட்டு இந்த மக்கள் நகரம் எழுதிய கல் என அழைத்திருக்கக்கூடும். மற்றொரு விதமாகப் பார்க்கின்றபோது தமிழ் மொழிக்குரிய சிறப்பு எழுத்து **னன்னகரமாகும்.** இதனை அடிப்படையாகக் கொண்டு **னகரம்** எழுதிய கல் எனக் குறிப்பிட்டிருக்கலாம்.

பொதுவாகப் பிராமி எழுத்துக்கள் வரிவடிவமாகவும் பிராகிருதம் அவர்களது பேச்சு மொழியாகவும் நிலவி வந்துள்ளது. பிராமி எழுத்துப் பொறித்த சாசனங்கள் இலங்கையில் பெரும்பாலும் மலை முகடுகளிலும் மக்கள் குடியிருப்பு பிரதேசங்களான மலையடிவாரங்களிலும்

கிடைத்துள்ளன. தமிழ் பிராமிக்குரிய சிறப்பு எழுத்துக்கள் பழங்கால பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றது. இதனை அடித்தளமாகக் கொண்டு ஆய்வினை மேற்கொள்ளுகின்றபோது புராதன ஈழத்தமிழர்கள் வாழ்ந்த பிரதேசங்களில் பிராகிருத மொழி பேசிய இனக்குழுக்கள் கலப்புற்றுள்ளன. இதன்காரணமாக தமிழ் பிராமியோடு பின்னைய மொழி வடிவங்கள் கலப்புற்றுள்ளன என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

தென்னிந்திய தமிழரைப்போல் இலங்கைத் தமிழருக்கு 2000ஆண்டுகளுக்குக் குறையாத தொன்மையான வரலாறு உண்டு என்பதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதனை நிரூபிக்கக்கூடிய சான்றுகள் உறுதியான முறையில் கிடைக்கவில்லை. இக்குறைபாட்டை வெல்லாவெளிச் சாசனம் நிறைவு செய்கின்றது. பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையிலானகுழு வெல்லாவெளிச் சாசனங்கள் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு முன்வைத்த கருத்து மேல்வருமாறு அமைகின்றது.

வெல்லாவெளிச் சாசனங்கள் வெல்லாவெளியிலே மலையொன்றிலும் பெருங்கற் பாறையிலுள்ள குகையொன்றிலும் அமைந்துள்ளன. ஆயிரம்விழுது ஆலமரம் என்பதன் எதிர்ப்புறத்திலுள்ள கற்பாறையின் மேற்புறத்தில் இரு சாசனங்கள் வெட்டப்பட்டுள்ளன. அவற்றின் ஒன்றிலே **பறுமகன் ஸமுத** என்று எழுதப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள பிராமிச் சாசனங்கள் பிராகிருத மொழியிலமைந்தவை. அவற்றிலுள்ள பிராகிருதம் ஒரு கலப்புமொழி. இந்திய பிராமிச் சாசனங்களில் காணப்படாத பல சொற்கள் அவற்றிலே காணப்படுகின்றன. அவற்றிலே மருமகன், மருக, வேள், வேல், வேலு, கல், ஐ, அபி, பாளி போன்றவை தமிழ்ச் சொற்கள். பிராகிருத மொழி இலக்கண விதிகளுக்கு ஏற்ப பிராகிருதமாகிய வடிவத்திலே காணப்படும். இவ்விதமாக வரும் தமிழ்ச் சொற்களில் **பருமக** என்பது மற்றொன்று. அது இருநூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட கல்வெட்டுக்களில் வருகின்றது.

'பருமக' என்பது பெருமகன் என்பதன் மாற்றுவடிவான பருமகன் என்பதன் பிராகிருத வடிவம். பருமகன் எனும் சொல்லின் பெண்பால் வடிவமாக பருமகள் என்ற சொல் இலங்கை பிராமிச் சாசனங்களில் கையாளப்படுகின்றது. எனவே பருமக என்பது பருமகன் என்ற தமிழ்ச் சொல்லின் மாற்று வடிவம் என்பது தெளிவாகின்றது. வெல்லாவெளிச் சாசனம் இதனை உறுதிப்படுத்துகின்றது. அதிலே பருமக என்பதற்குப் பதிலாக பறுமகன் என்ற தமிழ்ப் பெயர்ச்சொல் காணப்படுகின்றது. தமிழையும் வேறொரு மொழியினையும் பேசியவர்கள் வாழ்ந்ததற்கு வெல்லாவெளிச் சாசனம் தக்கதோர் உதாரணமாகும். அத்துடன் தமிழ்ப் பிராமி வரிவடிவங்கள் வட பிராமியோடு கலப்புற்றமைக்கும் இச்சாசனம் ஒரு உறுதியான ஆதாரமாகின்றது. அதிலே காணப்படும் ற(𑀶), ம(𑀫), ன(𑀷) என்பவை தமிழ்ப் பிராமிக்கு சிறப்பான வரி வடிவங்களாகும். இங்கு மட்டும்தான் ற, ன என்னும் தமிழ் வரி வடிவங்கள் தென்னிந்தியத் தமிழ்ப் பிராமிச் சாசனங்களில் உள்ளவாறு உருமாறாத கோலத்தில் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. அநுராதபுர மாவட்டத்தில் மிகிந்தலைப் பிரதேசத்திலுள்ள ஆண்டியகலை என்னுமிடத்து பிராமிக் கல்வெட்டொன்றிலே பருமக என்பதற்குப் பதிலாக அதன் இயல்பான பருமகன் என்ற தமிழ்ச்சொல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன் பொருள் பெருந்தலைவன் ஒருவனுக்கு எல்லோருடைய சம்மதத்தின் பேரிலும் செய்து கொடுக்கப்பட்ட குகை என்பதாகும்.

வெல்லாவெளிச் சாசனம் மிகுந்த வரலாற்று முக்கியத்துவம் கொண்டது. இதுவரை வெளியிடப்பட்ட பிராமிச் சாசனங்கள் தொடர்பான கருத்துக்களை மறுபரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இதனால் உணரப்படுகின்றது. இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூறு (2300) ஆண்டுகளுக்கு முன்னர் வெல்லாவெளியிலே தமிழ்மொழி வழங்கியமைக்கு அது ஆதாரமாகின்றது. நீண்டகால வரலாற்றுக்குரிய இச்சாசனம் இலங்கைத் தமிழரது வரலாற்றில் மிக முக்கியத்துவம் பெறுவதாகவே அமையும்.

எனவே கல்வெட்டாய்வும் அதனைப் பாதுகாப்பதன் அவசியமும் இன்றைய காலத்தேவையாக உள்ளது. அவற்றை நாம் தெரிந்தோ தெரியாமலோ அழிவுக்குட்படுத்துகின்றபோது எம்தேசத்தின் வரலாற்று அம்சங்கள் இருள்சூழ்ந்ததாக மாறிவிடுகின்றது. எனவே இனியும் நாம் இதற்கு இடங்கொடுக்கக்கூடாது. வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

### 2. தொட்டத்து மலை

ஒவ்வொரு கிராமத்திற்கும் சில நம்பிக்கைகள், பண்பாட்டு மரபுகள் தனித்துவமான பண்பாட்டுக் கோலங்களோடு பின்னிப்பிணைந்து காணப்படுகின்றன. அந்தவகையில் இருபக்கமும் தொடராக அமைந்துள்ள தொட்டத்துமலைக் குன்றுகளும் அதில் காணப்படும் பொறிப்புக்களும் இடைப்பட்ட பகுதியில் தென்படும் சிகிரியாக் குன்றில் அமைந்துள்ள கற்படிவுகளைப் போன்ற நடைபாதையும் கட்டட அழிபாடுகள் மற்றும் நீர்ச்சுனைகளை அவதானிக்கின்றபோது அது மக்கள் பரவலாகக்குடியிருக்கின்ற பகுதி என்பதும் நன்கு புலப்படுகின்றது.

அத்தோடு இம்மலையடிவாரத்தில் வணக்க வழிபாடுகளும் நிலவி வந்துள்ளமையும் பலரிடம் வாய்மொழியாகக் கேட்டும் நேரடியாகக் களஆய்வினை மேற்கொண்டும் அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக நாதனை ஆற்றினைத் தொட்டவாறு உள்ள இச்சிறு குன்றின் அடிப்பாகத்தே கருங்கல்லினால் செதுக்கப்பட்ட அழகிய விநாயகர் சிற்பம் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வதனமாரின் வழிபாட்டிலிருந்த இவ்விடம் நாதனை வன்னிமைகளின் வழிபாட்டிலிருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. இக்குன்றின் பிளவுக்குள் தெய்வீகச்சிலையொன்று இருப்பதாக ஐதீகம்.

மாரியம்மன் ஆலய வருடாந்த உற்சவத்தின் ஏழாம்நாள் நிகழ்வில் அக்குன்றின் மேலேறி அதற்குக் குடம் குடமாக பாலாபிசேகம் செய்து வழிபடுவார்கள். அத்தோடு நாள்தோறும் பிரதேச மக்களால் பொங்கல் செய்யப்படுவதையும் வழிபாட்டின்போது மோதகம் படையல் செய்து வழிபடுவதையும் காணமுடிகின்றது.

### 3. சுவாதியம்மன் குன்றும் வழிபாட்டுமுறையும்

தனித்துவமான பண்பாட்டு அம்சங்களையும் வழிபாட்டு மரபுகளையும் தன்னகத்தே கொண்டவர்கள் மட்டக்களப்பு மக்கள். அதிலும் குறிப்பாக வெல்லாவெளிக் கிராமத்தில் சுவாதியம்மன் வழிபாடு மரபுவழிப்பட்ட நீண்டகால வரலாறாகியுள்ளது. இங்கு மரத்தடி, மலையடி மற்றும் குளத்தடி வழிபாடுகளே பொதுவாகப் பழமைமிக்க வழிபாடாக அமைகின்றன. சுவாதியம்மன் குன்று மலையடி வழிபாடாகும். இங்கு சுய ஆதி அம்மனே சுவாதியம்மனாக

மருவியதென்பர். இதனை அண்டிய பண்டைய குடியிருப்பானது அம்மனின் பெயரைக்கொண்டு அம்மன் குளம் எனப் பெயர் பெறலாயிற்று. குளமென்ற ஈற்றுப் பெயரினைக் கொண்ட இடப்பெயரும் பழமையையே அடையாளப்படுத்தும்.

சுவாதி அம்மன் குன்றுக்கு எதிர்புறமாக தென்படுகின்ற சிறிய பாறையே வதனமார் பாறையாகும். இங்கு வதனமார் வழிபாடு மிகச் சிறப்பாக இடம்பெற்று வந்துள்ளது. இதனை எஸ்.ஓ.கனகரெத்தினம் எழுதிய 'Monograph of Batticaloa District' எனும் நூலினூடாக அறிந்து கொள்ளமுடிகின்றது.

மட்டக்களப்பு தேசத்தில் மாரியம்மன், காளியம்மன், கண்ணகி அம்மன் போன்ற தெய்வங்களுக்குச் சடங்கு செய்வது போல எருமை மாடுகளின் பாதுகாவலனாக விளங்கும் வதனமாருக்குச் சடங்கு செய்வதும் தொன்று தொட்டே நடைபெற்று வந்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளின் முன்புவரை இவ்வழிபாடு நிலைபெற்றுள்ளது. தற்போது எருமை மாட்டுப்பட்டிகள் அருகிவிட்டதன் காரணமாகவும் போடிமுறை அமைப்பு சிதைவுற்றதன் காரணமாகவும் வதனமார் சடங்கும் இடம்பெறுவதில்லை. பழங்காலத்தில் போடிகளிடம் மாட்டுப் பட்டிகள் நிறைந்திருந்ததன் காரணமாக வதனமார் சடங்கும் தவறாது வருடம்தோறும் இடம்பெற்று வந்துள்ளது. இவ்வதனமார் சடங்கு இந்திய வழிபாட்டு மரபில் இருந்து வந்ததாக ஆய்வுகளின் மூலம் அறியமுடிகின்றது.

இச்சடங்கு வெளிமடைப்பத்ததி முறை, துளிமடைப்பத்ததி, முறைவில்லை கட்டுப்பத்ததிமுறை என மூன்று வகைப்படுத்தப்படுகின்றது. இச்சடங்குமுறை மட்டக்களப்பில் புராதனகாலம் தொட்டே நடைபெற்று வந்துள்ளதனை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக திருக்கோயில், நாதனை ஆகிய பிரதேசங்களைக் குறிப்பிடலாம்.

இந்த வதனமார்கள் உமை அம்மாளின் ஒரு தோற்றமான சுவாதி அம்மன் மூலமாகவே தோற்றம் பெற்றதாகக் கூறப்படுகின்றது. இவர்கள் முற்காலங்களில் மக்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த யானைகளை அடக்கிப்பிடித்தல், குழுமாடுகளைப் பிடித்தல் முதலிய வேலைகளில் ஈடுபட்டு மக்களுக்கு உதவி புரிந்தமையால் இவர்கள் தெய்வமாகப் போற்றப்பட்டார்கள்.

வதனமார் சடங்குமுறை மட்டக்களப்பில் வெல்லாவெளிக்கு அருகில் உள்ள நாதனை எனுமிடத்திலே பழங்காலத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்துள்ளது. வன்னியர்கள் தலைமை தாங்கி இச்சடங்கினை நடாத்தி வைப்பது வழமையாகியுள்ளது. குறிப்பாக படையாட்சிகுல வன்னியர் மற்றும் நாதனையில் ஆட்சிபுரிந்த பூபாலகோத்திர வன்னிமை போன்றோரைக் குறிப்பிடலாம்.

நாதனையில் இயற்கை வளங்கள் நிறைந்த பகுதியாகக் காணப்பட்டமையால் மந்தை வளர்ப்பும் எருமை வளர்ப்பிற்கும் ஏற்ற புல்நிலங்களும் நீர்நிலைகளும் காணப்பட்டதனால் இச்சடங்கு வெல்லாவெளியில் உள்ள பிள்ளையாரடி எனும் இடத்தில் சிறப்புப் பெற்றிருந்தது. வதனமாரின் தாயாகிய சுவாதியம்மன் வாழ்ந்து இங்குள்ள பெரியகல் ஒன்றினுள் அடங்கியதாகக் கூறப்படுகின்றது. இங்குதான் வதனமாரும் இறுதியாக வாழ்ந்து மறைந்ததாகக் கூறப்படுகின்றது.

எனவே எம்மூதாதையர் காலம் காலமாக வழிபட்டு வந்த இவ்வழிபாட்டு மரபுகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டியதுடன் அதனை ஆவணப்படுத்துவதன் மூலம் எமது எதிர்கால சந்ததியினருக்கும் விட்டுச் செல்லாம்.

ஊர் மக்கள் தொடர்ந்தும் இக்குன்றில் பொங்கல் படைத்து வழிபாடியற்றி வருகின்றனர். வருடம்தோறும் இடம்பெறும் வெல்லாவெளி மாரியம்மன் சடங்கின் ஏழாம் நாளில் வதனமார் சடங்குமுறை இங்கு மிகச் சிறப்பாக இடம்பெறும். அந்தவகையில் சுவாதியம்மன் குன்றும் வழிபாட்டுமுறையும் இன்றுவரை தமிழக ஆய்வுகளையும் இலங்கைத் தமிழரது பழமையையும் பாரம்பரிய வரலாற்றுத் தொடர்புகளையும் தனித்துவத்தினையும் அடையாளம் காட்டி நிற்கின்றன.

## 4. அழிக்கப்பட்ட கோயில்தீவு சிவாலயம் பற்றிய ஆய்வு

பண்டைக்காலம் முதலாக ஈழத்துத் தமிழ் மக்களது பண்பாட்டிலே சைவமும் அதனோடு தொடர்புடைய வாழ்வியற் கூறுகளும் பிரதான பங்கு வகிக்கின்றன. சைவசமயம் ஆலயங்களோடு பின்னிப்பிணைந்ததாகும். எனவேதான் ஈழத்தமிழரது வரலாற்றை ஆராய முற்படுவோருக்கு முக்கிய ஆய்வுக் களங்களில் ஒன்றாக தேவஸ்தானங்கள் அமைகின்றன. அந்தவகையில் வெல்லாவெளி இக்கிராமத்தில் அழிக்கப்பட்ட கோயில்தீவு சிவாலயம் பற்றி அடுத்து நோக்குவோம்.

கலிங்கமாகனின் ஆட்சிக்காலத்திலே (1215-1255) கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்திலே வீரசைவம் அதிக செல்வாக்குப் பெற்றிருந்தது. இவன் சைவசமயத்திற்குப் பேராதரவு அளித்தான். இவனை மட்டக்களப்பு மான்மியம் 'மகாலிங்கவாசன்' (வீரசைவன்) எனக் குறிப்பிடுகின்றது.

சைவசமயத்தின் முக்கிய உட்பிரிவுகளில் ஒன்றான வீரசைவம் வேதத்தை மூலமாகக் கொள்ளாதவொன்று. இதனை வைதிக சமயங்களுள் ஒன்றாக வரிசைப்படுத்த முடியாது. வைதிகத்துக்கு எதிரான இச்சமயப்பிரிவு கர்நாடக மாநிலத்திலே தோன்றி வளர்ச்சி அடைந்தாலும் அது ஈழத்திலும் பரவிச் செல்வாக்குப் பெற்றது. வீரசைவ நெறியும் அது பற்றிய வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பு தேசத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டவை. உதாரணமாக பழம் பெருமை வாய்ந்த சிவாலயமான கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் வழிபாட்டுமுறைகள் இவ்வீரசைவ நெறியோடு சேர்ந்தே வளர்ச்சியடைந்தது. இன்றும் அதன் செல்வாக்கைக் காணமுடிகிறது.

மட்டக்களப்பு மாநிலத்தில் இருந்த முக்கியத்துவம் வாய்ந்த சைவக் கோயில்களெல்லாம் குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் வீரசைவ ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்க வேண்டும். மண்முனையில் இருந்த சிவாலயத்தின் அழிபாடுகள் கிடைக்கப் பெற்ற இட்டலிங்கம் அவ்வாலயம் வீரசைவத்தைச் சார்ந்தது என்பதற்குச் சான்றாய் உள்ளது. நாதனையில் இருந்து அழிந்து போன சிவாலயமும் வீரசைவத்தைச் சார்ந்ததென ஊகிக்க இடமுண்டு.

வெல்லாவெளிச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாகச் செல்லும் மத்திய வீதியில் சுமார் 100 யார் தூரத்தில் கோயில் தீவு அமைந்துள்ளது. இப்பகுதி வெல்லாவெளியின் நடுப்பகுதியாகும். இங்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பு சிறப்புடன் விளங்கிய சிவாலயம் அமைந்துள்ளது. கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்பதற்கிணங்க வெல்லாவெளிக்கிராம மக்கள் சிவாலயம் அமைத்து தங்களது வாழ்வியற் கருமங்களையும் பண்பாட்டம்சங்களையும் ஆலயத்தினை மையமாகக் கொண்டு மேற்கொண்டு வந்தனர். இங்கு சிவன்கோயில் அமைந்துள்ளது. அது போரத்துக்கீசரால் அழிக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது. ஆனால் தற்போது இவ்விடத்தில் நிலவிய சிவாலயம் குறித்தோ அல்லது அது தொடர்பிலான இலக்கியக் குறிப்புக்களோ எமது கைகளுக்குக் கிடைக்காமை பெரும் குறைபாடாகும். இதனால்தான் தொல்லியல் சான்றுகளினூடாக ஆலய வரலாற்றினை அறிய வேண்டியுள்ளது.

அந்தவகையில் போர்த்துக்கீசரால் இடிக்கப்பட்டபோது கோவிலிலிருந்து பெறப்பட்ட கல்லாலான கதவு நிலைகள் தற்போது வெல்லாவெளிப் பிள்ளையார் கோவிலின் இரு வாசல்கள் மற்றும் மூலஸ்தானம் போன்றவற்றில் பொருத்தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமல்லாது கோவில் வளவில் கிடைத்த ஆசனக் கல்லும் வளவின் தென்கிழக்கு மூலையில் அழிபாடுற்றுக்கிடந்த பெரிய மரக்கொட்டு பதித்து சுற்றிவரச் சதுர அமைப்பில் கட்டப்பட்டிருந்த தீர்த்தக் கிணறும் சுமார் இரண்டடி சதுர வடிவிலான பல கற்துண்டங்களும் இவ்வாலய இருப்புத் தொடர்பில் முக்கிய தொல்லியற் சான்றுகளாக அமைகின்றன. அண்மையில் இங்கு தொலைத்தொடர்புக் கோபுரம் அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்தபோது நிலத்தின் அடியிலிருந்து சிதைந்த பல கற்துண்டங்கள் பெறப்பட்டுள்ளன.

எனவே இப்பகுதியில் தொல்லியல் சார்ந்த முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்படின் இக்கோவில் சார்ந்தும் அங்கு இயற்றப்பட்ட வழிபாடு சார்ந்தும் பல்வேறு தகவல்களை வெளிக்கொணரமுடியும். ஆனால் கோவில்தீவு சிவன்கோவில் வளவில் தற்போது தொலைத் தொடர்புக் கோபுரம் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று ஆலயம் இருந்த இடத்தின் தென்கிழக்காக சதுர வடிவிலான ஒரு கற்கிணறு பாழடைந்த நிலையில் காணப்பட்டது. இது அன்றுதொட்டு இன்றுவரை தீர்த்தக்கிணறு என மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றது. பின்னர் 1958இல் இக்கிராமத்தின் முன்னேற்றச்சங்கம் ஒரு குடிநீர்க் கிணற்றை அமைத்துள்ளது. ஆனால் இப்புதிய கிணற்றை கட்ட இவ்விடத்தினை ஆழப்படுத்தியபோது அங்கே பழைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும் அவற்றின் பெறுமதி தெரியாமல் அது எடுக்கப்பட்ட குறித்த மக்களால் பாதுகாக்கப்படவில்லை.

மேலும் மட்டக்களப்புத் தேசத்தின் பண்டைய ஆலயங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற் கொண்டுவரும் திரு.என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்களின் வெல்லாவெளி கோவில்தீவு சிவன்கோவில் தொடர்பிலான ஆய்வுக்கட்டுரையில், இந்தியாவைச் சேர்ந்த கொங்கண முனிவர் இலங்கைக்கு தலயாத்திரை வரும்போது தான் கொண்டுவந்த லிங்கங்களில் ஒன்றை இப்பகுதியில் வைத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டுவந்ததாகவும் இப்பகுதியில் வாழ்ந்த ஆதிவேடர் குலத்தவரால் தொடர்ந்து இந்த லிங்கம் பூஜிக்கப்பட்டு வந்ததாகவும் கூறிப்பிட்டுள்ளார். கி.பி 10ஆம் நூற்றாண்டு

தொடக்கம் 13ஆம் நூற்றாண்டு வரையான காலங்களில் சிறப்புற்றிருந்த ஆலயங்களில் இதுவும் ஒன்றாக விளங்கியுள்ளது. பூபால கோத்திர வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த இப்பகுதிகளில் அவர்களாலும் இவ்வாலயம் பரிபாலிக்கப்பட்டிருந்ததாகக் கூறிப்பிட்டுள்ளார்.

சிவாலயம் அமைந்திருந்த இடத்திற்கு அருகில் வாழ்கின்ற மக்களிடம் தொடர்பு கொண்டு வினாவியபோது ஆலயம் இருந்த இடத்தில் நிலம் அகழப்பட்டபோது அங்கு தடிப்பான செங்கற்கட்டிகள், கருஞ்சிவப்பு நிறமுடைய புராதன சொறிக்கற்கள் வெளிப்பட்டதனையும் காணமுடிந்தது என்று குறிப்பிட்டனர். எனவே உரியமுறையில் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றபோது ஆலய வரலாறு பற்றிய பல விடயங்களை வெளிக்கொணரமுடியும்.

எனவே இவற்றைத் தொகுத்து நோக்குகின்றபோது பண்டைக்காலம் முதல் மட்டக்களப்பு தேசத்தில் பல சமயங்களும் அவற்றின் வழிபாட்டு முறைகளும் மக்களால் போற்றப்பட்டு வந்துள்ளன. இத்தகைய சமயப்பிரிவுகளில் ஒன்றாக குறிப்பிடத்தக்க தனித்துவம் கொண்டது வீரசைவம். சைவசமயத்தின் முக்கிய உட்பிரிவுகளில் ஒன்றான வீரசைவம் கர்நாடக மாநிலத்தில் தோன்றி வளர்ச்சியடைந்திருந்தாலும் அது ஈழத்திலும் பரவிச் செல்வாக்குப் பெற்றது. குறிப்பாக மட்டக்களப்பு மாநிலத்தில் இருந்த முக்கியத்துவம் வாய்ந்த சைவக்கோயில்கள் எல்லாம் குறிப்பிட்ட ஒரு கால கட்டத்தில் வீரசைவ ஆதிக்கத்தின் கீழ் இருந்திருக்க வேண்டும். இதற்கு இன்றுவரை தக்க சான்றாய் அமைவது கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயமாகும்.

அதுமட்டுமல்லாது தற்போது மண்மேடாகக் காட்சியளிக்கும் மண்முனையில் கோயில்குளம் என்ற இடத்தில் அமைக்கப்பட்ட காசிலிங்கேஸ்வரர் ஆலயம் வீரசைவநெறிக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாக சமகாலத்தில் இருந்திருக்க வேண்டும் என்பது ஆய்வாளர்களின் முடிவாகும். இவற்றை வைத்துப் பார்க்கின்றபோது வெல்லாவெளி கோவில் தீவு சிவன் கோயிலும் கி.பி 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பதோடு வீரசைவநெறிக்குட்பட்டிருக்க வேண்டும் என்று அனுமானித்துக் கொள்ள முடிகின்றது. இருப்பினும் மிகப் பழங்காலத்தில் இங்கு சிவலிங்க வழிபாடு நிலவி வந்த மட்டக்களப்புத் தமிழகத்திலிருந்த ஏராளமான இந்து ஆலயங்கள் ஐரோப்பியர் காலத்தில் அழிக்கப்பட்டன. இவற்றில் கோவில்தீவு சிவன்கோவிலும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

எனவே ஆலயம் தொடர்பாக மேலதிகமான எந்தவிதமான தகவல்களையும் கிராமவாசிகளிடம் இருந்து அறிந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் தொல்லியல் எச்சங்களாக ஆலய இடிபாட்டின் கற்சிதைவுகள், அழிக்கப்பட்ட கோவிலின் முன்பக்கக் கல்லாலான கதவு, மூலஸ்தானத்து கல்லாலான கதவு, தீர்த்தக்கிணறு, பீடக்கல், ஆசனக்கல் என்பன உறுதியான சான்றாகின்றன. எது எவ்வாறிருந்தபோதிலும் ஆலயம் இருந்தமைக்கான தடயங்களையும் கற்சிதைவுகளையும் இன்றுவரை அடையாளம் காண முடிகின்றது. எனவே தொகுத்து நோக்குமிடத்து மட்டக்களப்பு தேசத்திலே வீரசைவம் பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தது என்பதில் ஐயமில்லை. அங்குள்ள வீரசைவத்தின் செல்வாக்கு புராதனமானது. அது 13ஆம், 14ஆம் நூற்றாண்டுகளிலே ஏற்பட்டதென்று கொள்ளுவதற்கு ஏதுக்கள் உண்டு. எனவே மட்டக்களப்பு தேசத்திலே சிவவழிபாடு மேலோங்கியிருந்தது. அத்துடன் வீரசைவத்தொடர்புகளும் ஏற்பட்டிருந்ததை அறிய முடிகின்றது.

## 5. கிடாரம் போட்ட பள்ளம்

வெல்லாவெளி மக்கள் நாதனை ஆற்றினைத் துணையாகக் கொண்டு தங்களது வாழ்வியற் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டனர். ஏனெனில் ஊரின் மையப்பகுதியில் ஓடும் நாதனை ஆறு பூவல் என்றே அழைக்கப்படுகின்றது. இவ்வாற்றின் கரைப்பகுதியில் பூவல் எனப்படும் சிறு குழிகளைத் தோண்டிமக்கள் குடிநீருக்காகப் பயன்படுத்தினர். இதுவே மக்களுடைய சுத்தமான குடிநீராகியது. அது பூவலாறு என்றே அழைக்கப்படுகின்றது. இவ்வாற்றில் முன்னைய சிவன்கோயிலுக்கு சரிநேராக உள்ள இடமே கிடாரம் போட்ட பள்ளம். இது இன்றுவரை கிடாரம் போட்ட பள்ளம் என்றே அழைக்கப்படுகின்றது. அதாவது போர்த்துக்கேயர் ஆலயங்களை இடித்து அங்குள்ள பொன் பொருட் திரவியங்களைக் கொள்ளையிட்டுவந்தபோது ஆலயத்தின் பெறுமதியான செல்வங்களை பெரிய கிடாரம் ஒன்றில் இட்டு ஆற்றில் போட்டு பாதுகாப்பாக ஒழித்து வைத்ததாகக் கூறப்படுகின்றது. இதனை பூதம் காவல் செய்கின்றது என்றும் ஆற்றின் நடுப்பிரதேசத்திற்கு செல்பவர்கள் உயிருடன் திரும்புவதில்லை என்பதும் ஐதீகம்.

## 6. மரத்துறை

இயற்கையின் காரணமாக மட்டக்களப்பில் எழுவான்கரை, படுவான்கரை என்னும் இரு பெரும் பிரிவுகள் அமைந்து விட்டன. வெல்லாவெளிக் கிராமம் அமைந்துள்ள எழுவான்கரைப் பிரதேசம் குடிசனப் பெருக்கமும் பட்டினப் பாக்கங்களும் நிறைந்த பகுதியாகக் காணப்படுகின்றது. பழங்காலம் முதலாக வாணிப நிலையங்களும் வணிக சமூகத்தவரின் குடியிருப்புக்களும் அப்பகுதியில் விருத்திபெற்று வந்துள்ளன. மீனவர் குடியிருப்புக்களும் ஆங்காங்கே அமைந்துள்ளன. அங்கு மிகப் பரந்த வயல்வெளிகள் காணப்படுகின்றன. அதிகமான நெல் அங்கு விளைந்தமையால் முற்காலங்களில் வியாபாரிகள் திருகோணமலை, யாழ்ப்பாணம், மாத்தறை முதலான இடங்களுக்கு நெல்லை விற்பனைக்கு ஏற்றிச் சென்றனர்.

வயல்களுக்கப்பால் படர்ந்துள்ள காடுகளில் முதிரை, தேக்கு, கருங்காலி முதலிய மரங்கள் ஓங்கி வளர்ந்துள்ளன. அவற்றை வெட்டி தூர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்தனர். தேன், மெழுகு, யானைக்கொம்புபோன்றபொருட்களைச்சேகரித்தவேடர்கள்பண்டமாற்றுமுறைமூலம்விற்பனை செய்தனர். அப்பொருட்கள் மன்னனுக்குத் திறையாகக் கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனால்தான் மட்டக்களப்பின் இயற்கைவளம் குறித்து பதினேழாம் நூற்றாண்டில் 'கேறோஸ் பாதிரியார்' கூறுகையிலே, மட்டக்களப்பின் இயற்கைவளம் ஐரோப்பியர் சிலரைப் பெரிதும் கவர்ந்தது என்றும் அங்குள்ள சுவாத்திய நிலைகள் மிகவுஞ் சாதகமானவை என்றும் அங்கு போல் இலங்கையில் வேறெங்கும் உணவுப் பொருட்களும் ஆடுமாடுகளும் மலிவாகக் கிடைப்பதில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். மட்டக்களப்பின் நாட்டுவளம் பற்றி புலவர்மணி கூறிய கருத்தினையும் இவ்விடத்தில் கூறுதல் பொருத்தமானது.

**தேமல் முதிரை கருங்காலிகளுண்டு - வளர்**
**தேக்குண்டு வனத்தினிற் தேனுமுண்டு**
**பால்மலி பசுவுமுண்டு மேதிகளுண்டு - தமிழ்ப்**
**பாட்டிற்கு நல்லயானைப் பரிசுமுண்டு**

வெல்லாவெளிக் கிராமமும் இதற்கு விதிவிலக்கில்லாமல் முதிரை, கருங்காலி, தேக்கு, சமுளை போன்ற மரங்களைத் தன்னகத்தே கொண்ட சோலையாகக் காணப்பட்டது. இம்மரங்கள் மக்களது வாழ்வாதாரத் தேவைகளுக்காவும் வர்த்தக நோக்கம் கருதியும் வெட்டப்பட்டன. ஆனால் இவற்றை உரிய இடங்களுக்கு ஏற்றிச் செல்வதற்குரிய போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை.

எனவே மரத்துறை என்ற ஊரின் புறம்பாகக் காணப்பட்ட மட்டக்களப்பு வாவியின் தொடுவாவியொன்றின் ஒதுக்குக் குடாவினூடாகப் பாரிய மரங்களையும் ஏற்றிச் சென்றனர். குறிப்பாக பாதை வசதிகள் குறைவான அக்காலத்திலே முஸ்லீம் வர்த்தகர்களும் ஏனைய வியாபாரிகளும் தங்களது சிறுசிறு நாவாய்களிலும் பாய்மரம் பொருந்திய வள்ளங்களிலும் பொருட்களை ஏற்றி வந்து விற்பனை செய்யும் இடமாக இம்மரத்துறையினைப் பயன்படுத்தினர். அத்தோடு இவர்கள் நாவாய்களையும் வள்ளங்களையும் திருப்பிச் செல்லும்போது இங்கு உற்பத்தி செய்யப்படும் நெல், செங்கல் மற்றும் இக்காடுகளில் பெறப்படும் முதிரை, கருங்காலி, தேக்கு, சமுளை போன்ற மரங்களையும் ஏற்றிச் கொண்டு செல்வர்.

மரங்களை ஏற்றிச் செல்லும் போது அவற்றை நீருள்போட்டு வள்ளங்களின் இருபக்கமும் நீளப்பாட்டில் கட்டுவர். அதிகளவு மரங்கள் இங்கிருந்து ஏற்றப்பட்டதால் இத்துறையைச் சூழ அறுத்த மரங்கள் குவிக்கப்பட்டிருக்கும். இதனாலேயே இக்குடா மரத்துறை என அழைக்கப்பட்டது. ஆனால் இப்பிரதேசத்தின் பெரும்பகுதி தற்போது பெருமரங்கள் அழிக்கப்பட்டு வயல்நிலங்களாகக் காட்சியளிப்பதையே களஆய்வின்போது அவதானிக்க முடிந்தது.

### 7. ஆனைக்காரன் வெளி (ஆனைக்காரன் குளம்)

சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தே பணிக்கர் ஒருவர் வெல்லாவெளியில் வாழ்ந்துள்ளார் என்பதற்கான சான்றாக ஆனைக்காரன்வெளி அமைகின்றது. இது வெல்லாவெளியின் வடகிழக்குப் பக்கமாக அமைந்த வயல்பிரதேசமாகும். இவ்விடம் புல்தரையும் சிறு பற்றைகளும் கொண்ட பரந்த சதுப்பு நிலமாக அன்று அமைந்திருந்ததெனக் கூறப்படுகின்றது. அதற்குப் பக்கத்திலுள்ள சிறு குளமே ஆனைக்காரன் குளமாகும்.

இப்பணிக்கர் வெல்லாவெளியின் மேற்குப் பிரதேசத்து வனப்பகுதியில் நடமாடும் யானைகளைப் பிடித்து அவற்றை நன்கு பயிற்றுவித்து விற்பனை செய்வதை தொழிலாகக் கொண்டிருந்தார். யானையை இன்றும்கூட ஆனையென அழைக்கும் இப்பிரதேச சாதாரண குடிமக்கள் அவரை ஆனைக்காரன் என்றே அழைத்து வந்தனர். இவர் தன்னிடமிருந்த பயிற்றுவிக்கப்பட்ட கொம்பன் யானையின் உதவியுடன் நறுபுளிய நாரால் திரிக்கப்பட்ட பாரிய திருக்குக் கயிறைக் கொண்டு காட்டில் நடமாடும் யானைகளைப் பிடித்து பரந்த வெளியிலிருந்த பெரிய புளியமரத்தில் கட்டிய இடமே வெல்லாவெளியின் மேற்கெல்லைக்கப்பாலுள்ள ஆனைகட்டிய வெளியெனக் கூறப்படுகின்றது. அங்கு பிடித்துக் கட்டும் யானைகளைப் பின்னர் இங்கு ஆனைக்காரன் வெளிக்கு கொண்டு வந்து தங்கவைத்து பழக்குவாராம். பக்கத்தில் யானைகளுக்கு நீர் பருகவும் குளிப்பாட்டவும் உருவாக்கிய குளமே ஆனைக்காரன் குளம் என்பர். யானைகளை நன்கு பழக்கிய பின்னர் மட்டக்களப்புக்குக் கொண்டுபோய் விற்பனை செய்வாராம். அவர் பெயரைத் தாங்கிய ஆனைக்காரன் வெளி இன்று வளம்மிக்க சிறுபோக (காலபோக) வயல்வெளியாகவும் ஆனைக்காரன் குளம் இன்று அவ்வயலுக்கு நீர் பாய்ச்சும் குளங்களில் ஒன்றாகவும் காட்சிதருகின்றது.

## 8. உச்சந்தீவு தீர்த்தக் கரையும் சோமசுந்தரர் இறக்கத்தடியும்

புராதன காலத்தில் ஆலய உற்சவங்கள் நடைபெற்று தீர்த்தமாடுகின்றபோது சுவாமி உரியமுறையில் தீர்த்தக்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டு கரையில் கட்டப்பட்ட இறக்கத்தடியில் வைத்து பூசைகள் நடாத்தப்பட்ட பின்னர் சுவாமி தீர்த்தமாடுவதும் வழக்கமாகக் கொள்ளப்பட்டது. இதனைப் பிரதிபலிப்பதாகவே இன்றுவரை இக்கிராம மக்களால் உச்சந்தீவு தீர்த்தக் கரை என்றும் சோமசுந்தரர் இறக்கத்தடி என்றும் குறித்த பகுதிகள் அழைக்கப்பட்டு வருகின்றன.

ஊரின் கிழக்குப்புறமாக உச்சந்தீவு என்னும் வயல்பரப்பை தொட்டதாக அமைந்த வாவித்தொடுவையே முன்னர் கோவில் சடங்கு மற்றும் விசேட நிகழ்வில் சுவாமி தீர்த்தமாடும் இடமாக இருந்தது. அந்த இடத்தில் சிவனும் பார்வதியும் உலாவரும் ஏடகம் எனும் சிறுதேர், அம்மன் உலாவரும் சிங்க வாகனம், முருகன் உலாவரும் மயில் வாகனம் என்பவற்றை இறக்கி வைப்பதற்காக மூன்று அழகிய பீடங்கள் அமைக்கப்பட்டிருந்தன. காலப்போக்கில் தொடுவைக்குடா சேறும் களியும் படிந்துபோனதால் தீர்த்தமாடும் இடத்தை நாதனைப் பிள்ளையாரடிக்கு(நாதனை ஆறு) மாற்றவேண்டியேற்பட்டது. எனினும் பழைய இடம் நீண்டகாலமாக தீர்த்தக்கரையென்றே அழைக்கப்படலாயிற்று. அண்மைக் காலத்தில் அம்மூன்று பீடங்களும் அழிக்கப்பட்டு தடயங்கள் இல்லாதுபோனாலும் இவ்விடம் இன்றுவரை தீர்த்தக்கரை என்றே அழைக்கப்படுகின்றது.

நாதனைப் பாலத்திற்கு கிழக்காக சுமார் நூறு மீற்றர் தொலைவிலும் கோவில்தீவு சிவன் கோவில் வளவுக்கு நூறுமீற்றர் தெற்கிலுமாக நாதனையாற்றின் கரையில் அமைந்துள்ள இடமே சோமசுந்தரர் இறக்கத்தடி. ஆற்றிலிறங்குவதற்கு வசதியாக இறங்குபடி வெட்டப்பட்டாற் போன்ற அமைப்பில் இது அமைக்கப்பட்டிருந்தது.

கோவில்தீவு சிவன்கோவில் மூலமூர்த்தி சோமசுந்தரர் எனும் பெயரால் அழைக்கப்பட்டதாகவும் இவ்வாலய தீர்த்தோற்சவம் உட்பட விசேட நிகழ்வுகளில் இங்கு தீர்த்தமாடப்பட்டதாகவும் அக்காலத்தே இது சோமசுந்தரர் இறக்கம் எனும் பெயரைத்கொண்டிருந்தது. பிற்பட்ட காலத்தே அப்பகுதி மக்களின் நீராடும் இடமாக இருந்தது. ஆனால் கடந்த முப்பதாண்டுகால போர்ச்சூழலால் அது அழிக்கப்பட்டுவிட்டது. தற்போது நீர்த்தாவரங்கள் நிறைந்த பகுதியாகக் காட்சி தருகின்றது.

## 9. ஆயிரம் விழுது ஆலமரம்

ஒவ்வொரு ஊருக்கும் பொதுவாக மரங்கள் விருட்சமாக வளர்ந்து நிழல் பரப்பி நிற்பது மட்டுமல்லாது அவற்றின் காலத்தொன்மையையும் பறைசாற்றி நிற்கின்றன. அதுபோலவே வெல்லாவெளி ஊருக்கு சிறப்புச் சேர்த்து விருட்சம் அளிப்பது இந்த ஆயிரம் விழுது ஆலமரம். இவ்ஆல மரம் வயல்வெளி வழியாக சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திலும் வெல்லாவெளி விவேகானந்தபுரம் பாதையில் சுமார் இரண்டு கிலோமீற்றர் தூரத்திலும் அமைந்துள்ளது. ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் விழுதுகள் ஓடி கிளைபரப்பி நிற்கும் இவ்ஆல மரம் பலநூறு ஆண்டுகள் பழமைமிக்கதென கூறப்படுகின்றது. அன்று நூற்றுக்கணக்கில் தென்பட்ட விழுதுகளில் அனேகமானவை தற்போது அடியழிந்துபோயும் போர்க்காலச் சூழலில் எரிக்கப்பட்டும் காணப்படுகின்றன. கோவில் அமைப்பில் அமைந்திருந்த விழுதுகளும் அழிந்துபோய்விட்டன. இருப்பினும் ஆயிரம் விழுது ஆலமரம் என்ற பெயர் மட்டும் நிலைபெறவே செய்கின்றது. இங்கு வைரவர் வழிபாடும் நாகதம்பிரான்

வழிபாடும் இடம்பெறுகின்றது. மிக நீண்டகாலத்திலிருந்தே இங்கு வழிபாடுகள் ஆற்றப்பட்டு வந்துள்ளதாக ஊர்ப்பெரியவர்கள் தெரிவித்துள்ளனர். இவ்வாலமரத்திலிருந்து மேற்காக சுமார் 100 மீற்றர் அண்மையில் அமைந்துள்ள குடைவரைக் கல்வெட்டாய்வின்படி கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இப்பகுதியில் மக்கள் வாழ்ந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளமையால் அம்மக்கள் திராவிடப் பிரிவினரான நாகரின மக்களே எனக் கருதவேண்டியுள்ளது. இவ்வழிபாடுகளை அவர்களே முன்னெடுத்திருப்பரெனவும் நம்பவும் முடிகின்றது.

### 10. மேற்கு மலைத்தொடரில் கண்டெடுக்கப்பட்ட கற்சிற்பமும் கல்லுரலும்

நாகர்கள் இலங்கையின் ஆதிக்குடிகள். இதனால்தான் இலங்கை ஆரம்பத்தில் நாக நாடு, நாகதீபம் என அழைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இதனையே பரணவிதான கூறுகையில், 'இப்போது சிங்களம், தமிழ் மொழி முதலிய மொழிகளைப் பேசுவோர் இயக்கர், நாகர் வழித்தோன்றல்களே' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவகையில் வெல்லாவெளியின் தொட்டத்து மலைத் தொடரிலும் மற்றும் படலைக்கல், பழனியர் வட்டைப் பகுதிகளிலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம்முதலே நாகர் சமூகம் வாழ்ந்துள்ளமை பல்வேறு தகவல்களால் உணரப்பட்டதாகும். அப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட கற்சிற்பம் அவர்களது வழிபாட்டுக்குரியதாக விளங்கியிருக்கவேண்டுமென பொதுவாக நம்பப்படுகின்றது. கல்லுரல் அவர்களது பாவனையிலிருந்திருக்க வேண்டும்.

### 11. வன்னியர் வீடு

இலங்கை வரலாற்றிலே பத்தொன்பதாம் நூற்றாண்டு வரை வன்னிமைகள் எனும் சிற்றரசுகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைப் பெறுகின்றனர். மட்டக்களப்புப் பிராந்தியத்தில் அமைந்திருந்த வன்னிமைகளைப் பற்றி மட்டக்களப்பு மான்மியம், நாடுகாடுப் பரவணிக் கல்வெட்டு என்பன மூலம் அறிய முடிகின்றது.

குறிப்பாக வாழைச்சேனை குடியிருப்பில் இறுதியாக வன்னிநாச்சியார் வாழ்ந்த மூன்று அறைகளைக்கொண்ட வன்னிய வீடு அமைந்திருந்தது. அப்போது சற்று பழுதுற்றதாகத் தென்பட்டாலும் வாழ்வதற்கு உகந்ததாகவே அமைந்திருந்தது. பின்புறமாக இருந்த இன்னுமோர் குடியிருப்பு அப்போதே அழிந்துபோய்க் காணப்பட்டது. அக்கால கட்டத்தே சேதுப்பிள்ளை அம்மா குடும்பத்தினர் வாழ்ந்த வன்னிய வீட்டின் முன்புறத் திண்ணையின் தேக்குமரத் தூண்களும் வீட்டின் மூன்று கதவுகளும் அழகிய வேலைப்பாடுகள் மிக்கனவாக விளங்கின. போர்க்காலச் சூழலில் இது முற்றாக அழிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது.

### 12. நாதனை ஆறு

'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்ற முதுமொழிக்கு இணங்க வெல்லாவெளிக் கிராமத்தினை அழகு செய்வது நாதனை ஆறாகும். இயற்கையான நீர்ப்பெருக்கையும் நிலையான போக்கினையும் கொண்டு நிலத்தில் பாய்ந்து செல்லும் இவ்வாறு இக்கிராமத்தின் செல்வ வளமாகக் காணப்படுகின்றது. இது மக்களது போக்குவரத்திற்கும் வாணிகத்திற்கும் மட்டுமல்லாது அவர்களது

அன்றாட வாழ்வியலுக்குத் தேவையான நீரும் இதிலிருந்தே பெறப்படுகின்றது. தொன்மையான நாகரிகங்கள் ஆற்றுவெளிகளை அண்டிய பிரதேசங்களிலே தோன்றி வளர்ச்சி பெற்றன. குறிப்பாக சிந்துவெளி, கங்கை, யமுனை, காவிரியாறுகள் இந்திய நாகரிகத்தின் தொன்மைக்கு வழிகாட்டி வளம் பெருக்கி நிற்கின்றன. இதனால்தான் இந்த நாதனை ஆற்றின் வளத்தினால் இக்கிராமம் பெறும் சிறப்பினைக் கிராமிய மணங்கமழும் பாடலினூடாக வெளிப்படுத்துகின்றனர் வெல்லாவெளிக்கிராம மக்கள்.

**வெல்லாவெளி யென்பதெங்கள் ஊரே - அதனை**
**விரும்பி யடைபவர்கள் இன்பப்பேறே**
**நாதனை யாறெங்கள் நதியே - அது**
**நவகிரியிலுள்ள ஒரு கிளையே**
**பாதலம் சூழும் தடங்களிலே - நல்ல**
**பாசவம் மிக்க மீன்கள் வாழ்வதுண்டு**
**நாலுபுறமும் சூழ வயல் நிலங்களுண்டு - இங்கு**
**நலன்பெற உழைத்திட நல்லேரிகளுண்டு**
**தெங்கு பனை கமுகு நாட்டிலுண்டு - இளம்**
**சேய்கள் பழம்பறிக்கச் சோலைகளுண்டு**
**பட்டி பட்டியாகப் பசுக்களெல்லாம் - இங்கே**
**வட்டமிட்டுத் திரியும் நிலங்களுண்டு**

இயற்கை வனப்பு மிக்க அழகிய பிரதேசம் ஒருபக்கம் குறிஞ்சியும் ஏனைய பிரதேசம் மருத நிலப்பரப்பாலும் சூழப்பட்டுள்ளது. இக்கிராமத்தை காலந்தோறும் வளப்படுத்திக் கொண்டிருப்பது நாதனை ஆறாகும். மேற்கே தும்பாலை மேடுவரை சுமார் 2கிலோமீற்றர் நீளத்திற்கு நீண்டு செல்லும் ஆற்றின் இருபக்கமும் மரங்கள் குளிர்ச்சியூட்டி நிற்கின்றது.

மேலும் சுமார் 3000 ஏக்கருக்கும் மேற்பட்ட வயல் நிலங்களுக்குத் தேவையான நீர் இதிலிருந்தே பாய்ச்சப்படுகின்றது. குறிப்பாக நாதனைக் கண்டம், ஏத்தாலைப் பகுதி, கிண்ணையடிப் பள்ளம், வட்ட வளைக் கண்டம், வட்டவான், புத்தடிமேட்டுப் பகுதிகளைக் குறிப்பிடலாம். அதுமட்டுமன்றி மக்கள் தங்களது அன்றாட தேவைகளுக்கான நீரையும் இங்கேபெற்றுக் கொள்ளுகின்றனர். ஆற்றின் இருபக்கமும் பூவல் எனும் சிறு குளிகள் வெட்டியும் மரக் கொட்டுக்களைப் பதித்தும் குடிநீரைப் பெற்றனர். இப்பகுதியில் பூவல்கள் பரவலாகத் தென்பட்டதால் இதனை பூவலாறு என்ற பெயராலும் அழைத்தனர்.

ஆற்றோடு இணைந்தவாறு சிறுசிறு ஓடைகளும் ஏரிகளும் குட்டைகளும் சிறு குளங்களும் அங்குமிங்குமாகப் பரவிக் கிடக்கின்றன. இவ்வேரிகளைச்சுற்றி சமதரையான புற்தரைகளும் நிறைந்துள்ளன. இதனால் இங்கு கால்நடைகளுக்குத் தேவையான உணவுத் தேவையும் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடிவதனால் கால்நடை வளர்ப்பும் இவர்களது தொழிலாகியது.

அதுமட்டுமல்லாது மீன்பிடித் தொழிலிலும் இப்பிரதேச மக்கள் ஈடுபட்டனர். அத்தோடு ஆற்றின் கரைப்பகுதி சதுப்பு நிலங்களில் வளரும் கற்பன், சாப்பை போன்ற புல் வகைகளால் பாய்கள்

பின்னப்பட்டதோடு மக்களுக்கான சிறுகைத்தொழிலாகவும் அமைந்தது. மேலும் ஆற்றின் கரைப்பகுதியின் சதுப்பு நிலத்தை அண்டியவாறு தென்படும் இறுகிய களிமண்ணைக் கொண்டும் ஓடைகள் சங்கமிக்கும் பகுதிகளிலும் கோடை காலத்தில் ஆற்றின் ஆழமற்ற பகுதிகளில் தென்படும் திட்டுக்களிலுள்ள மணலைக் கொண்டும் ஏத்தாலை மற்றும் புத்தடிமேட்டுப் பகுதியில் மிக நீண்ட காலமாக செங்கல் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டு வந்தது. எனவே இந்த நாதனையாறானது வெல்லாவெளிக் கிராமத்தின் அழகினை மட்டுமல்லாது ஆயிரக்கணக்கான மக்களுக்கு தொழிலீந்தும் உணவூட்டியும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

- **நேர்காணல்**

சைவமும் தமிழும் இரண்டறக் கலந்து மிளிரும் விழுமியங்களால் ஆழமாகப் பிணைக்கப்பட்டுள்ளன வெல்லாவெளி மக்களிடம் இருந்து பெறப்பட்ட நேர்காணல் குறிப்புக்களையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன்.

இம்மக்கள் தனித்துவமான பண்பாட்டு அம்சங்களையும் வழிபாட்டு முறைகளையும் கொண்டு காணப்படுகின்றனர். ஏலவே குறிப்பிட்ட வதனமார் சடங்கு மற்றும் மாரியம்மன் வழிபாடு, விநாயகர் வழிபாடு, சிவவழிபாடு என்பன இங்கு சிறப்பான வழிபாட்டு முறைகளாகக் காணப்பட்டன.

மேலும் இந்தமக்கள் தங்களது வாழ்வியற் கருமங்களையும் மரபுவழி பிறழாது நடாத்தி வந்துள்ளனர். குறிப்பாக பூப்புனித நீராட்டு விழா, திருமணச் சடங்கு, சிசுப்பிறப்பு மற்றும் மரணவீட்டுச் சடங்கு முறைகள் என உரிய விதிப்படி தங்களது வாழ்வியற் கருமங்களை இக்கிராம மக்கள் நிறைவேற்றி வந்தனர்.

'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரமென்ப' என்ற தொல்காப்பிய கூற்றுக்கிணங்க மந்திரக்கலையானது இக்கிராமத்தில் சிறப்புப் பெற்றிருந்தது. இம்மக்கள் மிக நீண்டகாலம் தொடக்கம் பரம்பரை வழியிலும் சீடர்முறையிலும் மந்திரக்கலை நிபுணர்கள் வாழ்ந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் மக்களின் நன்மை கருதியே செயற்பட்டனர். அத்தோடு சாத்திரம், சகுணம் போன்ற சம்பிரதாய வழக்காறுகளும் நிலவி வந்துள்ளன.

இதேபோன்று வெல்லாவெளிக்கிராம மக்கள் தங்களது கலையம்சங்களையும் பேணிவந்துள்ளனர். மக்களின் வாழ்வில் சமயமும் கலையும் இரட்டைக் குழந்தைகளாகப் பரிணமித்துள்ளன. பொதுவாக இம்மக்களினுடைய கலைப்படைப்புக்கள் ஆலயங்களை மையமாகக் கொண்டு வளர்த்தெடுக்கப்பட்டன. ஏனெனில் ஆலய வருடாந்த உற்சவ தினங்களிலும் வேறு களியாட்ட நிகழ்வுகளிலும் கும்மி, வசந்தனாட்டம், செம்பாட்டம், காவடியாட்டம், நாட்டுக்கூத்துக்கள், மேடை நாடகங்கள், குரவை அயர்தல் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

அத்தோடு இங்கு பாடலுடன் ஆடப்பட்டுவந்த கிராமிய விளையாட்டுக்களும் குறிப்பிடத்தக்கன. அவற்றில் சாய்ந்தாடுதல், சப்பாணி கொட்டுதல், ஆணையாடுதல், ஆடைகடைதல், ஆலாப்பறத்தல்,

கைவீசுதல், கிள்ளிக் கிள்ளிப் பிறாண்டி, கீச்சு மாச்சுச் சம்பலம், பாட்டன் குத்து, பறையன் குத்து, கண்கட்டிவிளையாட்டு, பல்லாங்குழிவிளையாட்டு, சுரக்காய் இழுத்தல், நாயும் இறைச்சித் துண்டும், பிள்ளையார் கட்டை, சில்லுக்கோடு, பாடுகாவடி, கோபுர வாசல், நாயும் புலியும், வார் அடித்தல், தட்டு மறித்தல், மட்டைப்பந்து, கிட்டிப்புள்ளு, ஊஞ்சல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். எனவே இவ்வரிய கிராமிய விளையாட்டுக்கள் மற்றும் கலையம்சங்களினூடாக வெல்லாவெளிக்கிராம மக்களின் தனித்துவமான வாழ்வியற் கோலங்களையும் பண்பாட்டம்சங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

## முடிவுரை

எனவே தொகுத்து நோக்குகின்றபோது மட்டக்களப்பு வரலாற்றினை ஆராய முற்படுவோருக்குப் பாரிய சவாலாக அமைவது தொல்லியற் சான்றுகள். ஆனால் வெல்லாவெளியில் கண்டெடுக்கப்பட்ட குடைவரைக்கல்வெட்டு மட்டக்களப்பு வரலாற்றில் மட்டுமல்லாது ஈழத்தமிழர் வரலாற்றில் தனித்துவம் மிக்கதாக விளங்குகின்றது. ஏனெனில் இக்கல்வெட்டுச் சான்றின்மூலம் கி.மு.2300 வருடங்களுக்கு முதல் தமிழர்கள் வாழ்ந்துள்ளமை உறுதியாகின்றது.

மேலும் இக்கிராமத்தின் அழகிற்கும் செல்வச்செழிப்பிற்கும் நாதனையாறு வளம்பெருக்கி நின்றது. தனித்துவமான வழிபாட்டு முறைகளையும் பண்பாட்டம்சங்களையும் கொண்ட இம்மக்கள் காலவோட்டத்தாலும் யுத்தசூழலாலும் பல இடப்பெயர்வுகளையும் இன்னல்களையும் சந்தித்த வேளையிலும் தங்களது பண்பாட்டம்சங்களையும் மரபுகளையும் விலக்கி வைக்கவில்லை. மாறாக இன்றுவரை இக்கிராமத்தில் காணப்படும் தொல்லியற் சான்றுகளும் கிராமிய வழிபாட்டம்சங்களும் அவற்றை வெளிப்படுத்தி நிற்கின்றன. எனவே இப்பண்பாட்டு அம்சங்களும் தொல்லியற் சான்றுகளும் எம்மூதாதையர் விட்டுச் சென்ற சொத்துக்கள். அவற்றை நாம் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாது அவற்றைப்பேணி எம் அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்ல வேண்டிய பாரிய பொறுப்பு தேசத்து மக்களுக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது.

## உசாத்துணை


- நடராசா F.X.C., மட்டக்களப்பு பூர்வசரித்திரம், மட்டக்களப்பு கலாசாரப்பேரவை, 1998.
- பத்மநாதன். சி, ஈழத்து இலக்கியமும் வரலாறும், குமரன் பதிப்பகம், 2004.
- கோபாலசிங்கம். சீ, வெல்லாவெளி வரலாறும் பண்பாடும், வெல்லாவெளி கலைமகள் மகாவித்தியாலய மாணவர் மன்ற வெளியீடு, 2013
- கோபாலசிங்கம். சீ, மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம், 2005.
- கந்தையா வி. சி, மட்டக்களப்புத் தமிழகம், ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம், 1964.
- புஷ்பரட்ணம். ப, *தொல்லியல் நோக்கில் ஈழத்தமிழரின் பண்டையகால மதமும் கலையும்*, குமரன் புத்தக இல்லம், 2000.
- மகேஸ்வரலிங்கம். க, *மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்*, கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடு, 2008.
- களஆய்வும் நேர்காணலும்

# பழுகாமத்து சாசனங்களும் வரலாறும்

எஸ். கே. சிவகணேசன்

மட்டக்களப்பு தேசத்துக்கென தனித்துவமான பண்பாடு, கலாசாரம், மரபுகள், வரலாறு உண்டு. 'மட்டக்களப்பு தேசம்' என்ற பெயர் மத்திய காலம் முதல் வழங்கப்பட்டு வந்தது.[1]தற்போதய அம்பாறை மாவட்டம் மற்றும் தற்போதய பொலனறுவை மாவட்டத்தின் பல பிரதேசங்களை உள்ளடக்கியே மட்டக்களப்பு தேசம் அமைந்திருந்தது. பின்னர், திட்டமிட்ட வகையில், மட்டக்களப்பு தேசத்தின் பல பிரதேசங்களையும் ஒன்றிணைத்து அம்பாறை மாவட்டம் உருவாக்கப்பட்டது. (1962) அதுமட்டுமல்லாமல், மட்டக்களப்பு தேசத்தின் வடக்கே இருந்த பல பிரதேசங்களையும் ஒன்றிணைத்து வடமத்திய மாகாணம் உருவாக்கப்பட்டது. இவையெல்லாம் வரலாறு காட்டும் சம்பவங்கள்.

மட்டக்களப்பு தேசத்தின் எல்லை, புவியியல் சிறப்புகள் பற்றிய பின்வரும் கூற்று நோக்கத்தக்கது.

> "மகாவலி கங்கையின் ஒரு கிளையான வெருகல் கங்கைப் பெரியாறு தொடக்கம் தெற்கே குமுக்கன் ஆறு வரையும் பரந்து நீண்டு கிடக்கும் வளமார்ந்த, செழுமை நிறைந்த நிலப்பகுதியாய் இந்த நாடு திகழும். சுமார் நூற்றிமுப்பது மைல்கள் நீண்டு, கிழக்கு மேற்காய், முறையே நெய்தலும் மருதமும் முல்லையும் குறிஞ்சியும் அணிபெற அமைந்தது. ஏறக்குறைய எழுபது மைல் அகன்று கிடப்பது இந்த நாடு"[2] என விபரிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பின் இயற்கைச் சிறப்பினை சுவாமி விபுலானந்தர் பின்வருமாறு விபரித்துள்ளார்.

> "காவும் பொலிலும் கழிமுகமும் புன்னணிந்த
> ஏரியும் மல்கி இரத்தினத் தீவென
> ஆரியர் போற்றும் அளிசால் இலங்கையிலே
> சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர்புகழும்
> ஏராலியனற் செந்நெலின் சுவைத்தீங்க கன்னலொடு
> தெங்கு னிளநீரும் தீம்பலவின் அள்ளமிர்தும்
> எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
> மட்டக்களப் பென்னும் நாடு'[3] என அதன் இயற்கை வனப்பை சிறப்பித்து கவி வடித்துள்ளார்.

இவ்வாறு சிறப்பிக்கப்படுகின்ற தேசத்தில் அமையப்பெற்ற பழம்பெரும் கிராமங்களில் ஒன்றுதான் பழுகாமம். "சிங்காரக் கண்டி" எனச் சிறப்பிக்கப்படும் பழுகாமம் மட்டக்களப்பு நகரில் இருந்து தென்மேற்கே சுமார் 40 மைல் தூரத்தில் அமையப் பெற்றுள்ளது.

மட்டக்களப்பு தேசத்தின் பிரதான அம்சம் அதன் நடுவன் அமைந்துள்ளதும் 50 மைல் நீளம் கொண்டதுமான வாவியாகும். இதன் காரணமாகவே, மட்டக்களப்பு என உண்டானது எனக் கொள்ளப்படுகின்றது. நாட்டின் வனப்புக்கும் வளத்திற்கும் வாவி ஏதுவாகவுள்ளது.இயற்கையின் காரணமாகவே மட்டக்களப்பில், “எழுவான்கரை”, “படுவான்கரை” என்னும் இருபிரிவுகள் அமையப் பெற்றுள்ளது. வாவியின் மேற்கில் அமைந்துள்ள பகுதி படுவான் கரை எனப்படும்.[4] இந்தப் பிரதேசத்தில்தான் பழுகாமம் அமைந்துள்ளது.

## பழுகாமம்

‘பழுகாமம்’ இன்று, “திருப்பழுகாமம்” என்றழைக்கப்பட்டு வருகின்றது. ‘பழுகாமம்’ என்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் உண்டு. “பழுகாமம்” என்பது,“பாழுகமம்” என்ற சொல்லில் இருந்து தோன்றியிருக்க கூடும். அதாவது பாழ்போன கிராமத்தை சிங்கள மக்கள் “பாழுகம” என்பர். “பாழுகம” என்ற சொல் மருவி, பின்னாளில் “பழுகாமம்” ஆகியிருக்க வேண்டும்.[5]இன்னொரு காரணமும் உண்டு. விந்தனைக் காட்டில் வாழ்ந்த ஆதிக்குடிகளுள் ஒருவனான ‘பழுவன்’ என்பவன் வாழ்ந்த, இப்பகுதி ‘பழுவன்கமம்’ என இருந்து, பின்னாளில் மருவி ‘பழுகாமம்’ என்றாயிற்று.[6]இன்று ‘திருப்பழுகாமம்’ என அழைக்கப்பட்டு வருகின்றது. இங்குள்ள வயல்வெளியில் பல சாசனங்கள் காணப்படுகின்றன.

### *சாசனம் - 1*

இந்தக் சாசனக் குறிப்பில் இரு வேறு காலப்பகுதியில் இறந்த, இரண்டு பேரின் மரணச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கந்தப்பன் (1908) மற்றும் கந்தவேல் மகள் சின்னப்பிள்ளை (1927) என்பவரும் தெய்வீக மரணமடைந்தனர் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கல்வெட்டின் மற்றொரு பக்கத்தில் ‘பொ.கு.கு.சண்முகம்’ எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பெயர், இக்கல்வெட்டைப் பொறித்தவருடையதாக இருக்கலாம். (படம் 1)

### *சாசனம் - 2*

இப்பிரதேசத்தில் காணப்படும் மற்றொரு சாசனத்திலும் மரணச்செய்திதான் குறிப்பிடப்பட்டுள்ளது. கணபதிப்பிள்ளை என்பவர் 1919 ஆம் ஆண்டு தை மாதம் 27ஆம் திகதி பரமபதவியடைந்தார் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. சாசனத்தின் ஆரம்பத்தில் கும்பம் பொறிக்கப்பட்டுள்ளது. இந்துக்கள் மத்தியில் மங்கலம், அமங்கலம் இரண்டுக்கும் கும்பம் வைக்கும் வழக்கம் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ( படம் - 2)

### *சாசனம் - 3*

இச்சாசனங்கள் காணப்படுகின்ற இடத்துக்கு கிழக்குப் பக்கம் பிரதான வீதியின் மறு கரையில் மற்றொரு சாசனம் நாட்டப்பட்டுள்ளது. அதன் எழுத்துக்கள் தெளிவில்லாமல் சிதைவடைந்துகாணப்படுகின்றது. ஆனால் அச்சாசனம் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது.

அந்த சாசனத்தின் தற்போதய நிலையைப் படத்தில் காணலாம். இச்சாசனத்தில் காணப்படும் எழுத்துக்கள் தெளிவில்லை; சிதைவடைந்துள்ளன. ஆனாலும் இச்சாசனமும் மரணச்செய்தியைதான் காட்டுகின்றது. அதாவது பழுகாமத்தைச் சேர்ந்த கணபதி, கற்பகநாதன்

என்பவரின் மரணம் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. ஆண்டு தெளிவில்லை. ஆனால் சாசனத்தின் ஆரம்பத்தில் 3ஆம் பிறை வடிவான அடையாளம் பொறிக்கப்பட்டுள்ளது. ஏனையசாசனத்தில் நிறைகுடம் காணப்பட்டபோதிலும் இக்கல்வெட்டில் மட்டும் பிறை பொறிக்கப்பட்டுள்ளது. (படம் -3 )

## வரலாற்றில் பழுகாமம்

மட்டக்களப்பு தேசத்தின் இனவுருவாக்கம் பழுகாமம் பிரதேசத்திலும் ஏற்பட்டிருந்தது. இதனை, அண்மைக் கால தொல்லியல் கண்டுபிடிப்புகள் உறுதிப்படுத்துகின்றன. மத்திய காலத்தின் பின்னர்தான் எழுவான் கரைப் பிரதேசம் பட்டிணப்பாங்குடன் கூடியதாக வளர்ச்சியடைந்து கொண்டது. அதற்கு முன்னர் மக்களின் பிரதான வாழ்விடத்தளமாக படுவான்கரைப் பிரதேசம் அமைந்திருந்தது.

பழுகாமம் பிரதேசத்தில் அமையப் பெற்ற வெல்லாவெளி - நாதனைப் பிரதேசத்தில் மூன்று குகைச் சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (படம் - 4) அவை கி.மு. 2ஆம் நூற்றாண்டுக்கு முந்தியவைகளாகும். இந்த சாசனங்கள் பற்றி, தகைசார் பேராசிரியர் சி. பத்மநாதன் பின்வருமாறு கூறியுள்ளார்.

> “இற்றைக்கு 2100 வருடங்களுக்கு முன்பு வெல்லாவெளியில் தமிழ் பேச்சு மொழியாக விளங்கியமைக்கு அங்குள்ள கல்வெட்டுத் தக்க சான்றாகும். பிராகிருத மொழிச் செல்வாக்கு பௌத்த சமயம் மூலமாகப் பரவியது என்பதற்கும் அடையாளம் ஆகும்.”[7]

எனவே, பழுகாமம் அமைந்துள்ள, படுவான் கரைப் பிரதேசம் மிகப் புரதான கிராமங்களை கொண்டது.

அத்துடன், மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்ற நூலிலே மட்டக்களப்பு தேசத்தில் நாகர் சிறிய பல இராச்சியங்களை அமைத்திருந்தமை பற்றிய குறிப்புகள் வருகின்றன. அக்குறிப்பு பின்வருமாறு.

> “கலி கடந் தெண்ணூற்றாண்டில் கருதிய
> இலங்கை தன்னில்
> வலிய வரியக்கரோடு கலந்தவர் மர
> பென்றாகி
> நலிவில்லா நிருபஞ்செய்து நகரெலா
> மிறைகளென்ன
> ஒலிவள ருகந்தத மென்றும் நகரதிலு
> றைந்தார்
> நாகர்”[8]

என்ற வரிகள் நாகர் இயக்கரோடு கலப்புற்று நாகர் பலம் பெற்றனர் என்பதனை வெளிப்படுத்துகின்றது. மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் குறிப்பிட்டுள்ள, மட்டக்களப்பு தேசத்தில்

ஆதிக்குடிகளின் உருவாக்கம் தொடர்பிலான கருத்துக்களை வெல்லாவெளி - பிராமிச் சாசனங்கள் உறுதிப்படுத்துகின்றன. இது பழுகாமம் உள்ளிட்ட படுவான்கரைப் பிரதேசத்தின் பெருங் கற்காலப் பண்பாட்டின் உருவாக்கத்தை உறுதிப்படுத்துகின்றது.[9]

அதுமட்டுமல்ல, மட்டக்களப்பு தேசத்தின் செங்கலடி - காயான்குடா, அம்பாறை - பழுவெளி ஆகிய இடங்களில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட பிராமிச் சாசனங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.[10] அவை, தமிழர்களின் தொன்மையை உறுதிப்படுத்த உதவுகின்றன. எனவே, பழுகாமம் உள்ளிட்ட படுவான்கரைப் பிரதேசம் ஆதிக்குடிகளின் வாழ்விடத்தளமாக விளங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இராஜரட்டை நாகரிகம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் அந்த மன்னர்களுக்கு கட்டுப்பட்டு திறைசெலுத்தும் அரசுகளாக மட்டக்களப்பு தேசத்து அரசுகள் இருந்திருக்க வேண்டும். இப்பிராந்தியத்தில் காணப்பட்ட குறுநில அரசுகள் பற்றி, குறிப்புகள் மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் வருகின்றன. புரதான, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தளமாக பழுகாமம் விளங்கியிருக்க வேண்டும். இக்கிராமத்துக்கு அண்மையிலுள்ள திக்கோடை என்ற இடத்தில் கிடைத்த மூன்று நாணயங்கள் பொலனறுவைக் காலத்திற்கு உரித்தானவை. எனவே, கி.பி.9ஆம், 10ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வர்த்தக வியாபார நடவடிக்கைகள் இப்பிரதேசத்தில் இடம்பெற்று வந்ததை நாணயங்கள் உறுதிப்படுத்தகின்றன. (படம் .5)

மட்டக்களப்பு தேசத்தோடு கலிங்கமாகன் ஏற்ப்படுத்தியிருந்த தொடர்புகளை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் விபரிக்கின்றது. இங்கு நிலவும் ஜாதகக் கதைகளிலும் மாகன் பழுகாமத்தோடு ஏற்படுத்தியிருந்த தொடர்புகள் விபரிக்கப்படுகின்றன. மாகன் பற்றி மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில், “தினசிங்கள் சரித்திரம்”, “சுகதிரன் சரித்திரம்”, “குடிப்பிரிவுகள்”, “குளிக்கல்வெட்டு” என்ற பிரிவுகளில் மாகன் பற்றிய குறிப்புகள் வருகின்றன.

> “...பட்டிருப்புக்கு அருகாமையிலுள்ள போரதீவு சித்திரவேலாயுத சுவாமி கோவிலை இவனே புதுப்பிகிறான். இக்கோவிலுக்கும் கொக்கட்டிச்சோலைக் கோவிலுக்கும் நெல்வயல்கள் பலவற்றை வழங்கிய இம்மன்னனது பிரதான அரசிருக்கை பழுகாமம் என்னும் ஊராகும். மத்திய மலைநாட்டிலிருந்து பழுகாமத்துக்கு வந்த நீண்ட வழியான ‘கண்டி அதர்’ இவன் காலத்திலே பெரும் பழக்கம் உறலாயிற்று”[11]

மத்திய காலத்தில் மட்டக்களப்பு தேசத்தில் பல வன்னிச் சிற்றரசுகள் காணப்பட்டன. மட்டக்களப்பு, மண்முனை, பழுகாமம், போரதீவு, சம்மாந்துறை, நாடு, காடு, பாணமை என்பன அவற்றுள் பிரதானமானவை. அவற்றின் உற்ப்பத்தியை ஆராய்ந்து அறிந்து கொள்வதற்கு போதிய ஆதாரங்களில்லை.[12] போர்த்துக்கேயரான கேறொஸ் எழதியுள்ள நூலில் குறிப்பிடப்பட்டுள்ள குறிப்புகளில் பழுகாமத்தில் இருந்த வன்னியர் ஆட்சி பற்றி அறிந்து கொள்ள முடிகின்றது.[13]

கண்டி இராச்சியம் நிலைபெற்றிருந்த காலப்பகுதியில் பழுகாமம் சிறப்புற்றிருந்தது. ஜயவீர பண்டாரனுக்கு எதிராக போரிடுவதற்கு முதலாம் விமலதர்மசூரியனுக்கு 5890 படைவீரர்களைப்

பழுகாமத்து வன்னிமை கொடுத்துதவினான் என ஒல்லாந்தப் பாதிரியான பிலிப் வோல்டையர் குறிப்பிட்டுள்ளார். பழுகாமத்து வன்னிமைகள் கண்டி இராச்சியத்தோடு ஏற்படுத்திய தொடர்புகள் பற்றிய செய்திகள் பல நூல்களில் வருகின்றன.

> "....மண்டூரிலிருந்தும் பழுகாமத்திலிருந்தும் வந்த 'கண்டி அதர்' ஊவா மாகாணத்தின் எல்லையினைச் சார்ந்துள்ள 'கண்டியன் கட்டு' என்னும் இடத்தில் வீரமுனை வழியோடு ஒன்றுபட்டன...."[14]

என்ற மற்றொரு குறிப்பும் இங்கே எடுத்துக் காட்டத்தக்கது.

> " பண்டையப் புகழ்மிக்க பழுகாமம் ஆதியில் கண்டியரசர்களின் கோடைக்கால வாசஸ்தலமாக இருந்தது. 'சிங்காரக் கண்டி', 'அமைச்சர் பிட்டி' என்னும் சின்னங்கள் இன்னும் வழக்கிலுள்ளன. அரசப் பிரதிநிதி ஒருவர் இங்கிருந்தார். பல பண்டகசாலைகளும், அவற்றில் வேலை செய்யும் பண்டாரங்களும் பல ஏவலாளர்களும், பாதுகாவலர், படைவீரர்களும் இங்கு தங்கியிருந்தனர். இவர்கள் சம்பு நாவற்பதிச் சித்திர வேலரையும், ! ஸ்ரீ மாவேற்குடாவில் ஆலயங் கொண்டிருந்த மாவேற்குடையாரையுமே வணங்கி வந்தனர் "[15]

வேறு பல நூல்களிலும் பழுகாமம் கண்டியரசர்களின் கிழக்கு மாகாண தளங்களில் ஒன்றாக இருந்து வந்துள்ளமை பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.[16] எனவே, பழுகாமத்தை ஆட்சி செய்த வன்னிமைகள் கண்டி இராச்சியத்தோடு நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலும் வன்னிமைப் பதவிகள் தொடர்ந்தன.[17] திரௌபதி அம்மன் ஆலயத்தைச் சுற்றி நாட்டப்பட்டுள்ள கற்றூண்கள் வெறும் காவற் தூண்கள் அல்ல. அவை அனைத்தும் கல்வெட்டுகள். நூற்றுக்கணக்கான வருடங்களாக தொடர்ச்சியாக சுண்ணாம்பை அடித்து வந்ததினால் பொறிப்புகள் முற்றாக மறைந்துவிட்டன. இரசாயனக் கலவையைப் பயன்படுத்தி சுண்ணாம்பை அகற்றினால் மத்திய கால வரலாறு தொடர்பான பல தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்கிறார் பேராசிரியர் பத்மநாதன். (படம் 6)

கிழக்கையும் மேற்கையும் இணைப்பதில் களுதாவளை - பழுகாமத்து துறை ஆதிகாலம் முதல் முக்கியத்துவம் பெற்றிருந்தது. வன்னிமை ஒருவரின் இறப்பைக் கூறும் சாசனம் ஒன்று பழுகாமத்தின் மறுகரையிலுள்ள களுதாவளையில் துறையடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (படம் 7) மத்திய காலத்தின் பிற்பகுதியைச் சேர்ந்தது. அத்துடன் களுதாவளையில் உள்ள ஒரு வீதிக்கு "வன்னியனார் வீதி" எனப்பெயரிடப்பட்டுள்ளது. இந்த வீதியில் பழுகாமத்து வன்னிமையின் நிர்வாக வாசல்தலம் ஒன்று இருந்துள்ளது. இதனால் இப்பெயர் வழங்கப்படலாயிற்று.

பழுகாமத்துக் குளக்கரையில் நீளமான நடுகல் ஒன்றுள்ளது. அது மத்திய காலப்பகுதிக்குரியது என்ற கருத்து இருந்தாலும் நடுகல் வழிபாடு காலத்தால் முந்தியது. (படம் 8)

எனவே, இவ்வாறு தொன்மையான வரலாற்றுப் போக்கைக் கொண்ட பழுகாமத்தில் கண்டுபிடிக்கப்பட்ட சாசனங்கள் தொடர்பில் பின் வரும் விடயங்களை என்னால் தெரிவிக்க முடியும்.

1. பழுகாமம் - மாவேற்குடா பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மூன்று சாசனங்களிலும் மரண அறிவித்தல்கள் பொறிக்கப்பட்டுள்ளன. நான்காவது சாசனம் சிதைவடைந்துள்ளது; வாசிக்க முடியவில்லை. இவை நடுகற்களாகவே காணப்படுகின்றன. சாசனங்கள் காணப்படும் பிரதேசம் மக்கள் போக்குவரத்து பாதையாக இருந்திருக்க வேண்டும். இதனால்தான் இங்கு, இந்த நடுகல் அறிவித்தல்களை மக்கள் பார்வைக்காக நட்டு வைத்திருக்கலாம். மத்திய காலத்திற்கு முன்பிருந்தே கண்டியோடு ஏற்படுத்தப்பட்ட தொடர்புகள் பழுகாமம் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தன. கண்டிக்கும் பழுகாமத்துக்கும் இடையிலான போக்குவரத்துப்பாதை 'கண்டி அழி', 'கண்டியக் கட்டு' , 'கண்டி அதர்' என பலவாறு இன்றும் மக்களால் அழைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இப்பிரதேசத்தின் ஊடாக அப்பாதை இருந்திருக்க வேண்டும் என எண்ணத்தோன்றுகின்றது. அத்துடன் பழுகாமம் வரலாற்றுப் போக்கில் முக்கியத்துவம் வாய்ந்த தளமாக இருந்துள்ளது. இதனை, அங்கு காணப்படும் தொல்லியல் எச்சங்களும் மரபுக்கதைகளும் உறுதிப்படுத்துகின்றன.

2. இந்தக் கல்வெட்டுக்கள் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திற்குரியன. அதாவது 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதிக்குரியன. இச்சாசனங்களில், சமகால வழக்கிலுள்ள தமிழ்மொழி திருத்தமாகப் பொறிக்கப்பட்டுள்ளது. ஆண்டுகள் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

3. இந்த சாசனங்கள் மிகப்பழைமையானவை என்ற கணிப்பு தவறானது. முதலாவது சாசனம் 103 வருடங்கள் பழமையானது. இரண்டாவது 94 வருடங்கள் பழமையானது. 3ஆம் சாசனம் ஆண்டுகள் தெளிவாகக் காணப்படவில்லை. இருந்த போதிலும் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள வரிவடிவத்தைக் கொண்டு பார்க்குமிடத்தில் அச்சாசனமும் 20ஆம் நூ ற்றாண்டின் முற்பகுதிக்குரியது என்பது குறிப்பிடத்தக்கது

4. தற்கால வரலாற்றை அறிந்து கொள்ள ஏராளமான சான்றுகள் இருந்த போதிலும், இச்சாசனங்கள் முக்கியத்துவமற்றதாகிவிடாது. இச்சானங்களைக் கொண்டு குறித்த காலச் சமூக நிலை பற்றி அறிந்து கொள்ளமுடியும்.

5. கல்வெட்டுக்கள் காணப்படுகின்ற பிராந்தியம் வரலாற்றுப் பழமையும் சிறப்பும் கொண்டிருந்தது என்பதனை மறுக்கமுடியாது. எதிர்காலச் சந்ததியினருக்காக இவற்றைப் பாதுகாக்க வேண்டியது எமது வரலாற்றுக் கடமையாகும். வரலாற்று ஆவணங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வு மட்டக்களப்பு தேசத்தில் வாழுகின்ற ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். எம்மவர் மத்தியில் அந்த உணர்வைக் கட்டி எழுப்ப நாம் அனைவரும் பாடுபடவேண்டும்.

6. இவ்வாறு வரலாற்றுச் சிறப்புமிக்க பழுகாமத்தின் வரலாற்றாதாரங்களை கிரமமான முறையில் தேடவேண்டும். தொல்லியல் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். அதன் மூலம் எமது தேசத்தின் தொன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் என நம்புகின்றேன்.

## அடிக்குறிப்புகள்


1. பத்மநாதன். சி. பேராசிரியர்."ஈழத்து இலக்கியமும் வரலாறும்" குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 2004. ப.89.
2. 50th Anniversary of Sri Lanka's Independence – North – East Provincial Council, 1958 – 1990, Trincomalee, 1998. g.33
3. விபுலானந்தர், சுவாமி "யாழ் நூல்" பாயிரவியல், தஞ்சாவூர், 1974. ப-7
4. பத்மநாதன்.சி. பேராசிரியர்."ஈழத்து இலக்கியமும் வரலாறும்" குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை, 2004. ப.87.
5. நடராசா. எவ்.எச்.சி. மட்டக்களப்பு இடப்பெயர் வரலாறு, தேவனக் காட்சி மலர், மட்டக்களப்பு - 1970. ப. 2.
6. கணேசராசா.மு. 'போரதீவுப் பற்று மக்களின் கலாசாரம் அன்றும், இன்றும்", மருதம், வெல்லாவெளி, 2011. ப.10.
7. பத்மநாதன்.சி. பேராசிரியர். "சுயாட்சி அமைப்புக்களான கிழக்கிலங்கை வன்னியரசுகள்", வீரகேசரி, 2012.09.06. ப.28.
8. கமலநாதன். க, கமலா கமலநாதன் - மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், மட்டக்களப்பு. 2004.ப.3
9. பத்மநாதன்.சி. பேராசிரியர். "திருகோணமலை வன்னியரும் கோணேசர் கோவில் வழமைகளும்", வீரகேசரி, 7.9.2012, ப.22
10. பத்மநாதன்.சி. பேராசிரியர்."மட்டக்களப்பு தொல்லியலும் தமிழ் மொழியின் தொன்மையும்", வீரகேசரி, 13.1.2013, ப.19
11. கந்தையா. வி.சீ.,மட்டக்களப்பு தமிழகம், (இரண்டாம் பதிப்பு) மட்டக்களப்பு, 2002, பக். 404 - 405
12. பத்மநாதன். சி. பேராசிரியர். "மட்டக்களப்பு தேசத்து வன்னிமைகளின் வரலாற்று அம்சங்கள்" வீரகேசரி, 8.9.2013, ப.32

    Piers.R , "Administrtion of Justice and Revenue in the Island of Ceylon Under the Dutch Government" Journal of the Ceylon Branch of the Royal Asiatic Society ,New Series ,Vol.3, Colombo.1954 .PP.125 -160.
13. மேலது
14. கந்தையா.வி.சீ.,மட்டக்களப்பு தமிழகம்,(இரண்டாம் பதிப்பு) மட்டக்களப்பு, 2002,ப.157
15. கந்தையா.வி.சீ. மட்டக்களப்பு சைவக் கோவில்கள், மட்டக்களப்பு,1991, ப.101
16. Kanagaratnam.S.O. Monograph of Batticaloa District, Colombo,1921. P.80
17. பத்மநாதன்.சி. பேராசிரியர். "மத்திய கால மட்டக்களப்பு தேச வரலாற்றை சீராக ஆராய்வதற்குதவும் வீரமுனை, பழுகாமத்து திரௌபதி அம்மன் கோயில் சாசனங்கள், வீரகேசரி, 11.9.2013, ப.22


சாசனம் -01




சாசனம் -3






**வெல்லாவெளி – பிராமிச் சாசனங்கள்**

படம் - 5

திக்கோட்டை - நாணயங்கள் (பொலநறுவைக் காலம்)



படம் - 6



திரௌபதி அம்மன் கோவில்-
கற்றூண்களில் ஒன்று



வன்னிமைச்
சாசனம்

படம் - 8





# நாட்டாரியல்

# கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்தல் – நடந்ததும் நடக்க வேண்டியதும்

கோ.குகன்

## 1. அறிமுகம்

நாட்டாரியல் ஆய்வுகள் இன்று உலகளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றன. இவ்வாய்வுகளின் மூலம் உலகில் காணப்பெறும் பல்வேறு இனக் குழுவினரும் தங்களின் பண்பாட்டு வேர்களைத் தேடுகின்றனர். இவ்வகையில் இலங்கையிலும் தமிழர் வாழ் பிரதேசங்களில் இவ்வகை ஆய்வுகள் இன்று பெரு முக்கியத்துவமுடையனவாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வுகளுக்குச் சவாலாகவிருப்பது முறையான ஆவணப்படுத்தல்களின் போதாமையாகும். முறையான ஆவணப்படுத்தல்களின்றி மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் தரமற்றவையாகவும் ஆய்வு முடிவுகள் பலவீனமானவையாகவும் அமையும் என்பதைப் பல ஆய்வாளர்களும் சுட்டிக்காட்டியுள்ளனர். இவ்வகையில் கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகள் குறித்த அறிவியல் ஆய்வுகளுக்கு முதல் தேவையாக அமையக் கூடிய விதத்தில் நாட்டார் கதைத் தொகுப்பின் அவசியம் உணரப்படுகின்றது. அத்தொகுப்பு ஆய்வாளனுக்குத் தேவையான அனைத்து விபரங்களையும் வழங்கக்கூடியதாக இருக்க வேண்டும். அவ்விபரங்கள் நம்பிக்கைக்குரியவையாக இருக்க வேண்டும். பிறரால் சிதைக்கப்படாமலும் மாற்றப்படாமலும் ஆய்வாளருக்குக் கிடைக்கும் தகவல்கள் நம்பிக்கைக்குரியவையாகும்.[1]

கிழக்கிலங்கை, வரலாற்றுக் காலம் தொடக்கம் மட்டக்களப்பு, திருகோணமலை என்ற இரு நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கியதாகவிருந்தது. 1962 இல் மட்டக்களப்பின் ஒரு பகுதி அம்பாறை எனப் பிரிக்கப்பட்ட பின்பு மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை எனும் மூன்று மாவட்டங்களை உள்ளடக்கியதாகக் கிழக்கிலங்கை உள்ளது.[2] இங்கு தமிழர், முஸ்லிம், பறங்கியர், சிங்களவர் என்ற நான்கு இன மக்கள் வாழ்கின்றனர். இதில் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழரும் முஸ்லிம்களும் பறங்கியரும் பெரும்பான்மையினர். இவர்கள் சமய, சமூக, பண்பாட்டு ரீதியான தனித்துவங்களைக் கொண்டுள்ளனர். அதேநேரம் அருகருகே அமைந்த கிராமங்களில் ஒற்றுமையாகக் கூடி வாழ்ந்தவர்களாகவும் உள்ளனர். எவ்வாறெனினும் இவ்வாய்வு இம்மூன்று சமூகங்களையும் கருத்திற்கொள்கிறது.

தமிழ் நாட்டாரியல் ஆய்வுகள் வெறுமனே ரசனை முறை ஆய்வுகளாகவன்றி கோட்பாட்டடிப்படையிலான ஆய்வுகளாக அமைய வேண்டும் என்பதும் அவ்வகை ஆய்வுகள் புதிய கோட்பாடுகளை உருவாக்குவதற்கான அடிப்படைகளாக அமைய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்படுகின்றது.[3] இவ்வகை ஆய்வுகளுக்கு கிழக்கிலங்கை தமிழ் நாட்டார் கதைகளை

ஆவணப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதுமானவை அல்ல. இந்நிலையில் இதுவரை கிழக்கிலங்கையில் வெளிவந்த நாட்டார் கதைத்தொகுப்புக்களின் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டுவதும் அறிவியல் ஆய்வுக்கு அடிப்படையாக அமையத்தக்க விதத்தில் காலந்தாழ்த்தியேனும் இன்றைய சூழலில் நாட்டார் கதைகளை எவ்வாறு ஆவணப்படுத்தலாம் என்று சிந்திப்பதும் இக்கட்டுரையின் நோக்கங்களாகும்.

## 2. கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள்

'மட்டக்களப்பு மாநில உபகதைகள்'[4], 'இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்'[5] என்ற இரண்டு தொகுப்புக்களும் கிழக்கிலங்கை நாட்டார் கதைகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டுள்ளன. 'ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள்'[6] என்ற தொகுப்பு இலங்கையின் பல பிரதேசங்களின் நாட்டார் கதைகளையும் உள்ளடக்கியது. 'வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக....'[7] என்ற நூலில் உள்ள சில கட்டுரைகளில் சில கிழக்கிலங்கைக் கோயில்களைப் பற்றிய நாட்டார் கதைகள் இடம்பெற்றுள்ளன. 'கிழக்கிலங்கைக் கிராமியம்'[8] என்ற நூலில் மூன்று நாட்டார் கதைகள் இடம்பெற்றுள்ளன. 'மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு'[9] என்ற நூலில் ஒரு நாட்டார் கதை இடம்பெற்றுள்ளது. தவிர 'களப்பு'[10] என்ற சஞ்சிகை நான்கு நாட்டார் கதைகளைப் பதிவு செய்துள்ளது.

எஸ்.எதிர்மன்னசிங்கம் தொகுத்த மட்டக்களப்பு மாநில உபகதைகள் என்ற தொகுப்பில் மொத்தம் 17 நாட்டார் கதைகள் இடம்பெற்றுள்ளன. இவற்றுக்குத் தலைப்புகளிடப்பட்டுள்ளன. அவை வகைப்படுத்தப்படவில்லை. தகவலாளர் விபரம் தரப்படவில்லை. மொழிநடை மாற்றப்பட்டு நாட்டார் கதைகள் தரப்பட்டுள்ளன. உண்மையில் இந்நூலின் பெயரில் உள்ள 'உபகதைகள்' என்ற தொடரின் விளக்கத்தை அறிய முடியாதுள்ளது. சுருக்கமாகச் சொன்னால் ஞாபகத்திலிருந்த நாட்டார் கதைகள் ரசனை நோக்கில் எழுதப்பட்டுள்ளன என்பதும் நாட்டாரியல் சிந்தனைகள் பரவாத காலத்தில் இக்கதைகள் தொகுக்கப்பட்டுள்ளன என்பதும் கவனத்திற்குரியன.

எஸ். முத்துமீரான் தொகுத்த 'இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்' என்ற தொகுப்பில் மொத்தம் 35 நாட்டார் கதைகள் உள்ளன. இவற்றுக்குத் தலைப்புகளிடப்படவில்லை. அவை வகைப்படுத்தப்படவுமில்லை. 'இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள்' என்று இந்நூலுக்குப் பெயரிட்டிருந்தாலும் இத்தொகுப்பில் முஸ்லிம் சமூகப் பின்னணி அல்லாத பொதுவான சில கதைகளும் உள்ளன. அதேவேளை அம்பாறை மாவட்டத்திலிருந்து மட்டுமே நாட்டார் கதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இதனால் அம்பாறை மாவட்டத்து முஸ்லிம்களின் பேச்சு மொழியில் நாட்டார் கதைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. நாட்டார் கதைகளின் இறுதியில் தகவலாளியின் பெயர், இடம், வயது, கல்வி என்பவற்றைக் குறிப்பிட்டு இறுதியாக 'மண்வளச் சொற்கள்' என்ற தலைப்பில் பேச்சு மொழிச் சொற்களுக்கான விளக்கங்கள் தரப்படுகின்றன.

கி. விசாகரூபன் தொகுத்த 'ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள்' யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட 128 நாட்டார் கதைகளை உள்ளடக்கியது. இக்கதைகள்

தெய்வக் கதைகள், பேய்க் கதைகள், மந்திரக் கதைகள், மனிதப் பண்புக் கதைகள், அரச கதைகள், விலங்குக் கதைகள் என்று ஆறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இதில் கிழக்கிலங்கையில் சேகரிக்கப்பட்ட நாட்டார் கதைகள் 33 இடம்பெற்றுள்ளன. இவை 1987 தொடக்கம் 2007 வரையான 20 ஆண்டு காலப்பகுதியில் சேகரிக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டார் கதையின் அடிக்குறிப்பிலும் தகவலாளர் பெயர், முகவரி போன்ற விபரங்கள் தரப்பட்டுள்ளன. இயல்பான பேச்சு வழக்கில் இவை எழுதப்பட்டுள்ளன. எழுத்து வழக்கில் கொண்டு வருவதற்குக் கடினமான பேச்சொலிகளும் எழுத்து வழக்கில் கொண்டு வரப்பட்டுள்ளன. அதேநேரம் நாட்டார் கதையின் அடியில் சில பேச்சு வழக்குச் சொற்களுக்கான விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளமை நாட்டார் கதையில் இடம்பெறும் மொழி தொடர்பில் காட்டப்பட்டுள்ள ஈடுபாட்டை எடுத்துக்காட்டுகின்றது. நாட்டார் கதைகளில் நாட்டார் நம்பிக்கைகள் வருகின்ற போது அவற்றை அடிக்குறிப்பில் சுட்டிக்காட்டியிருப்பதும் விளக்கமளித்திருப்பதும் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

'வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக...' என்ற நூலில் இடம்பெற்றுள்ள 'ஊர்களின் அடையாளப்படுத்தலில் கோயில்கள்: மட்டக்களப்பு நாவலடி கடலாச்சியம்மன் அறிமுக ஆய்வு'[11] என்ற கட்டுரையும், 'வாய்மொழி மரபுகளும் வரலாறும்: புன்னைச்சோலைக் காளியம்மன் கோயிலைச் சூழவுள்ள சமூகப் பின்புலத்தையும் சமூக மாற்றங்களையும் விளங்கிக் கொள்வதற்கான அறிமுக ஆய்வு'[12] என்ற கட்டுரையும், 'சமூகமும் சமயப் பொறுமையும்: சமூக உறவைப் பேணுவதில் அமிர்தகழி கப்பலேந்தி மாதா கோயில்'[13] என்ற கட்டுரையும் குறித்த ஆய்வுகளுக்கு அடிப்படை மூலங்களாக குறித்த கோயில்களைப் பற்றிய நாட்டார் கதைகளைப் பயன்படுத்தியுள்ளன. அவ்வகையில் குறித்த கோயில்களைப் பற்றிய நாட்டார் கதைகள் தகவலாளர் விபரத்தோடு பதிவு செய்யப்பட்டுள்ளன.

றமீஸ் அப்துல்லாஹ்வின் 'கிழக்கிலங்கைக் கிராமியம்' என்ற நூலில் ஜின் கதை, கௌசிக் கதை, ஸதகா (தர்மம்) கொடுக்காத கதை என்ற தலைப்புகளில் மூன்று நாட்டார் கதைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. தகவலாளர் பெயர் மட்டும் தரப்பட்டுள்ளது.

தி. சதாசிவ ஐயரின் மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டில் அடிக்குறிப்புப் பகுதியில் நரேந்திரசிங்கனைப் பற்றிய ஒரு நாட்டார் கதை இடம்பெற்றுள்ளது.

தவிர மட்டக்களப்பு மாவட்ட செயலகம் வெளியிட்ட 'களப்பு' என்ற சஞ்சிகை சனிபகவானின் கொடை, ஆக்காண்டியும் பாம்பும், காகமும் பாம்பும், ஏழு கடல் தாண்டி வரம் கேட்டுப்போன கதை என்ற தலைப்புகளில் நான்கு நாட்டார் கதைகளைப் பதிவு செய்துள்ளது. இதில் தகவலாளர் பற்றிய எவ்வித குறிப்புகளும் இல்லை.

எஸ். விஜேசூரிய, ஏ.ஜெ.குணவர்த்தன, பெ. கணநாதபிள்ளை ஆகியோரால் சிங்களத்திலும் தமிழிலும் தொகுக்கப்பட்டது 'இலங்கை நாட்டார் கதைகள்' என்ற தொகுப்பாகும்.[14] இது மூன்று தொடர்களாக வெளிவந்திருக்கின்றமையை அறிய முடிகின்ற போதும் இரண்டாவது தொடர் மட்டுமே பார்வைக்குக் கிடைக்கின்றது. இத்தொடரிலுள்ள 25 கதைகளில் 5 தமிழர்களிடம் சேகரிக்கப்பட்ட கதைகளாகும். கதையின் அடியில் தரப்பட்டுள்ள தகவலாளர் பெயரை வைத்தே

தமிழரா, சிங்களவரா என்று அடையாளம் காண வேண்டியுள்ளது. இவ்வைந்து கதைகளும் யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் எழுதப்பட்டுள்ளன.

இதுவரை அவதானித்தவற்றிலிருந்து கிழக்கிலங்கை தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்துவதில் சில முன்முயற்சிகளே நடைபெற்றுள்ளன எனலாம். குறிப்பாக முஸ்லிம்களின் நாட்டார் கதைகளைத் தொகுக்கின்ற முயற்சி பெரும்பாலும் அம்பாறை மாவட்டத்தை மட்டும் அடிப்படையாகக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 3. கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்த மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள்

கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆய்வு செய்கின்ற ஓர் ஆய்வாளனுக்கு முழுமையாகப் பயன்படக்கூடிய நாட்டார் கதைத் தொகுப்பு அல்லது தொகுப்புகள் இன்றைய தேவையாகும். அது குறித்து ஆய்வாளன் எதிர்பார்க்கின்ற அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இதற்காகப் பின்வரும் விடயங்களைக் கருத்திற்கொள்வது பயனுடையதாகும்.

### 3.1. கிழக்கிலங்கையின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகக் கள ஆய்வு அமைய வேண்டும்

இலங்கையைப் பொறுத்தவரை பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெறுவதற்காக நாட்டார் கதைகளை ஆய்வுப்பொருளாகத் தேர்ந்தெடுப்பவர்கள் பிரதேசத்தை வரையறுத்துக் கொண்டு அதிலும் சுட்டிப்பாகச் சில கிராமங்களை மட்டும் குறிப்பிட்டுக் கள ஆய்வு செய்து தமது ஆய்வை நிறைவு செய்கின்றனர். குறுகிய கால இவ்வாய்வுகளின் போது குறித்த பிரதேசம் முழுவதற்கும் தனிப்பட்ட ஒருவர் சென்று கள ஆய்வு செய்தல் ஆய்வு நெறிப்பட்டதாக அமையாது என்பதால் இது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனைத் தெரிவு செய்யும் முறை (Sampling Method) என்று குறிப்பிடுகின்றனர்.[15] குறிப்பிட்ட கிராமங்களில் கள ஆய்வு மேற்கொண்டு அதன் மூலம் பெறும் கருத்துக்களை அப்பிரதேசம் முழுவதற்கும் பொதுக்கோட்பாடாகக் காட்டுவதே இவ்வாய்வு நெறியாகும். ஆய்வு முடிவுகள் பலவீனமானவையாக அமைவதற்கும் புதிய கோட்பாடுகளை உருவாக்க முடியாமைக்கும் இத்தகைய பலவீனங்களே காரணங்களாகும்.

கிழக்கிலங்கைத் தமிழ் நாட்டார் கதைகளை ஆவணப்படுத்தும் போது இத்துறையில் ஆர்வம் கொண்ட பலரும் குழுவாகச் செயற்படுவதும் தேவைக்கேற்பக் காலத்தை வரையறுத்துக் கொண்டு ஒரு கிராமத்தானேனும் விடுபடாத வகையில் கள ஆய்வு நடத்தப்படுவதும் அவசியமாகும். இதன் போது நகர்ப்புறம் கிராமப்புறம், புதிய கிராமம், பழைய கிராமம், சிறிய கிராமம், பெரிய கிராமம், தமிழ்க் கிராமம், முஸ்லிம் கிராமம் என்ற வேறுபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் நாட்டார் கதைகள் இத்தகைய வேறுபாடுகளையெல்லாம் கடந்தும் பரவக்கூடியவை.

### 3.2. சமகாலத்தில் உருவாகிய நாட்டார் கதைகளும் சேகரிக்கப்பட வேண்டும்

நாட்டார் கதைகள் சமூக மாறுதல்களுக்கேற்ப மறையும் அல்லது மாற்றமடையும். அத்துடன் புதிதாகவும் தோன்றும்.[16] அண்மைக் காலத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரனர்த்தத்தின் போது மக்கள் மத்தியில் பல நாட்டார் கதைகள் உருவாகின. அதேபோல போராட்ட சூழ்நிலையிலும் பல நாட்டார்

கதைகள் உருவாகியுள்ளன. துன்பங்களைத் தாங்க முடியாத மனித மனம் இத்தகைய கதைகளை உருவாக்கி அமைதியடைவது இயல்பு. இவ்வாறான நாட்டார் கதைகளைச் சேகரிப்பதும் ஆய்வு செய்வதும் ஒரு சமூகத்தின் குறிப்பிட்ட கால வரலாற்றை அறிவதற்கு உதவும்.

## 3.3. பாலியல் கதைகளும் சேகரிக்கப்பட வேண்டும்

பெரும்பாலான ஆய்வாளர்கள் பாலியல் கதைகளைச் சேகரிப்பதில் அக்கறை காட்டுவதில்லை. அவற்றைச் சொல்பவர்களும் கேட்பவர்களும் கெட்டுவிடுவார்கள். அதனால் அவை சொல்லப்படக்கூடாதவை. மொத்தத்தில் அவை ஆபாசமானவை என்ற எண்ணங்களே இதற்குக் காரணங்களாகும். எனினும் பாலியல் கதைகள் அவற்றின் பாலியல் தன்மைகளையும் தாண்டி வெளிப்படுத்துகின்ற வேறுபல செய்திகளும் உண்டு. கதைக்கட்டுமானம், கற்பனை, விடயம், மொழிப்பிரயோகம், மொழி இலாவகம், மனித மனம் என்பவற்றை அறிந்துகொள்ள இவை உதவுகின்றன.[17] இதனால் இவற்றை அறக்கழிவான கதைகள் என்று ஒதுக்கத் தேவையில்லை. நாட்டார் கதைகளில் உயர்வு, தாழ்வு என்ற விழுமியம் தேவையில்லை.[18] எனவே அவற்றையும் முறைப்படி சேகரிக்க வேண்டும். இதன்போது தகவலாளி தன் விபரங்களைக் கூறத் தயங்கக்கூடும். இவ்வாறான சந்தர்ப்பங்களில் சேகரிப்பாளர் இரகசியம் பேண வேண்டிய அவசியம் உண்டு.

## 3.4. அறிவியல் ரீதியாகக் கதைகள் சேகரிக்கப்பட வேண்டும்

சிறுவர்கள் தாத்தாவின் மடியிலும் பாட்டியின் மடியிலும் இலாவகமாக உட்கார்ந்து அற நீதிக் கதைகளைக் கேட்ட சூழ்நிலையை இன்று காணமுடியாது. அவற்றின் பயில்நிலை இன்று மாறிவிட்டது. நாட்டார் கதைகளைத் தெரிந்தவர்கள் தேவை ஏற்படும் போது மட்டுமே அவற்றைச் சொல்லுகின்றனர். இதனால் அவற்றை இயற்கைச் சூழலில் சேகரிப்பது சாத்தியமற்றதாகிவிட்டது. எனினும் கள ஆய்வில் அறிவியல் அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும் என்பதைப் பலரும் வலியுறுத்துகின்றனர். சேகரிப்பாளன் எப்போதும் தன் பணியில் அக்கறை கொண்டவனாக இருந்தால் தற்செயலாக எதிர்பாராத வகையில் சில நாட்டார் கதைகளைச் சேகரிக்கும் வாய்ப்புக் கிட்டும்.[19] கள ஆய்வு உண்மையை அடிப்படையாகக் கொண்டதேயன்றி ஆய்வாளரின் கற்பனையைச் சார்ந்திருக்கக் கூடாது. அது குணவியல்பு அடிப்படையில் புறவயமானது. அகவயமானது அல்ல.[20] எனவே நாட்டார் கதை சேகரிப்பாளர் நல்ல கதை சொல்லிகளை அடையாளம் காண வேண்டும். கதை சொல்லுதல் கேட்டலுக்கான இயற்கைச் சூழலை உருவாக்க வேண்டும். இதற்காகச் சேகரிப்பாளர் பலமுறை களத்திற்குச் சென்று வருவது அவசியமாகும். தகவலாளிகளுடன் உரையாடி நெருங்கிப் பழகுவதன் மூலம் கதைகளைச் சொல்லுதல் கேட்டலுக்கான சூழலை இயன்ற வரை உருவாக்கிய பின் கதைகளைச் சேகரிப்பது உண்மையான தகவல்களைப் பெற உதவும். தகவலாளருடைய பெயர், இடம், வயது, சமயம், தொழில், கல்வி, சாதி போன்றனவும் கதை சொன்ன நாள், நேரம் என்பனவும் சேகரிக்கப்பட வேண்டும். அதேநேரம் சொல்லப்பட்ட கதையின் பெயர், சொல்லப்பட்ட சூழல், சொல்லப்பட்ட முறை, கதை சொல்வதில் தயக்கம் காட்டப்பட்டதா, அதற்கான காரணம், தகவலாளி இக்கதையை எப்பொழுது தெரிந்து கொண்டார், எங்கு வைத்து, யார் மூலம், ஊர், தொழில், சாதி போன்ற விபரங்களும் சேகரிக்கப்பட வேண்டும். இவற்றையெல்லாம் சேகரிப்பாளர் அவதானத்துடன் ஒலிநாடாவில் பதிவு செய்து பின் எழுதிக் கொள்வது நேரத்தை மீதப்படுத்தவும், கதை சேகரிப்பில் தடங்கலைக் குறைக்கவும், இயல்பான சூழலை உருவாக்கவும் உதவும்.

## 3.5. சேகரிக்கப்பட்ட நாட்டார் கதைகள் தலைப்பிடப்பட்டு வகைப்படுத்தப்பட வேண்டும்

நாட்டார் கதைகளைச் சேகரிப்பவர்கள் தகவலாளிகள் குறித்த கதைகளுக்கு என்ன பெயரிடுகின்றனர்? அவற்றை எவ்வாறு வகைப்படுத்துகின்றனர்? என்ற தகவல்களைப் பெறுவது அவசியமாகும். சிலவேளை தகவலாளர்கள் நாட்டார் கதைகளைப் பற்றிய எவ்விதமான அறிமுகமுமின்றி நாட்டார் கதைகளை மட்டும் கூறக்கூடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் சேகரிப்பாளர் கதைகளுக்குப் பொருத்தமான பெயரிடுவதும் அறிவியல் முறைப்படி அவற்றை வகைப்படுத்துவதும் முக்கியமாகும். நாட்டார் கதைகளை வகைப்படுத்துதல் சாதாரணமாகச் செய்துவிடக்கூடிய விடயமல்ல. இதற்கு உள்ளடக்கம், வடிவம், அமைப்பு, செயல்பாடு, சூழல் போன்ற பல அடிப்படைகள் உள்ளன. எனினும் பெரும்பாலானோர் பொருள் அடிப்படையிலேயே வகைப்படுத்தியுள்ளனர். ஒரு நாட்டார் கதையைப் பல தடவைகள் கருத்தூன்றிப் படித்து அதன் உட்பொருளை விளங்கிய பின்னரே அதை எவ்வகைக்குள் அடக்குவது என்ற முடிவுக்கு வர வேண்டும். எனவே நாட்டார் கதைகள் தொடர்பான ஆய்வில் வகைப்படுத்தல் என்பது அடிப்படை ஆய்வாக அமைகின்றது.

## 3.6. நாட்டார் கதைகளில் கையாளப்படும் பேச்சு மொழி மாற்றப்படக்கூடாது

நாட்டார் கதைகள் பேச்சு மொழியில் அமைந்தவையாகும். பேச்சு மொழியின் அமைப்பு, பேச்சுச் சந்தம், வாக்கிய அமைப்பு, உரையாடல் முறை, வட்டாரச் சொற்கள், ஒலிப்பு முறைகள் முதலியவற்றை அறிய நாட்டார் கதைகள் துணை செய்கின்றன.[21] இதனால் நாட்டார் கதைகளைச் சேகரிக்கின்ற போது அதன் மொழி தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் வாய்மொழிக் கதைகளில்தான் மொழி தன் வேர்களை ஊன்றி நிற்கிறது.[22] ஒரு தொடரின், பேச்சின் அர்த்தம் மொழி சார்ந்தது மட்டுமல்ல பண்பாட்டோடு மிகத் தொடர்புடையதுமாகும்.[23] எனவே ஒரு சமூகத்தின் மொழி வரலாற்றை அறிவதற்கும் அதனூடாகப் பண்பாட்டு வரலாற்றைக் கட்டமைப்பதற்கும் நாட்டார் கதைகளில் கையாளப்படும் மொழியைச் சரியாகக் கையாண்டு தொகுக்க வேண்டியது அவசியமாகும். சிலவேளை தன் பிரதேசம் சார்ந்த நாட்டார் கதைகளைத் தொகுப்பவர்கள் அலாதியான பிரதேச உணர்வு காரணமாக தன் பிரதேச மொழி தொடர்பில் அளவுக்கதிகமான அக்கறை காட்டும் போது நாட்டார் கதைகள் தன் இயல்பான நிலையை இழந்துவிடுகின்றன. விளங்கிக்கொள்ள முடியாத ஒரு பாடமாகிவிடுகின்றன. இதனால் நாட்டார் கதைகளில் காட்டப்படுகின்ற மொழி அக்கறைகூட அளவு கடந்துவிடாமல் இருக்க வேண்டும். ஒரு மனிதன் பேசுகின்ற இயல்பான பேச்சு வழக்கே அதிலும் இருக்க வேண்டும். மாறாகத் தொகுப்பாளர் நாட்டார் கதைகளுக்குள் பேச்சு வழக்குச் சொற்களைத் திணிக்கக் கூடாது.

## 3.7. நாட்டார் கதைகளில் இடம்பெறுகின்ற நம்பிக்கைகள் குறிப்பிட்டுக் காட்டப்படுதல் வேண்டும்

நம்பிக்கைகள் சமூகத்துக்குச் சமூகம் வேறுபட்டவை. ஒரு சமூகத்திலிருக்கும் நம்பிக்கைகள் இன்னொரு சமூகத்திலிருக்காது. எனவே குறித்த நாட்டார் கதைகள் வழங்குகின்ற பிரதேசம் சார்ந்த நம்பிக்கைள், பழக்க வழக்கங்கள், வரலாற்றுப் படிமங்கள் என்பன அவற்றில் இடம்பெறுகின்ற போது தொகுப்பாளர் அவற்றை அடிக்குறிப்பிட்டுக் காட்ட வேண்டியது அவசியமாகும். இல்லையேல் குறித்த நாட்டார் கதைகளை ஆழமான ஆய்வுக்குட்படுத்தும் ஆய்வாளர்களுக்கு அக்கதைகள் பயன்படாமல் போகும்.

## 3.8. நாட்டார் கதைகளின் மாற்று வடிவங்களும் தொகுக்கப்படுதல் வேண்டும்

ஒரு நாட்டார் கதையைப் பல தகவலாளர்களும் அறிந்திருப்பர். அதனால் ஒரே நாட்டார் கதை பலராலும் சொல்லப்பட வாய்ப்புகளுண்டு. சேகரிப்பாளர் அலட்சியமின்றி அவற்றைச் சேகரிக்க வேண்டும். இவ்வாறு சேகரித்த நாட்டார் கதைகளில் அதிகமாக ஒற்றுமை இருக்கின்ற மாற்று வடிவங்களைத் தவிர்த்து அடிப்படையில் வேறுபாடுகளையுடைய மாற்று வடிவங்களைத் தொகுத்தல் வேண்டும். இருவேறு பண்பாடுகளைச் சேர்ந்த - மேற்போக்கான தோற்றத்தில் ஒரேமாதிரிக் காணப்படுகின்ற இரண்டு கதைகளை நுணுகி ஆராயும் பொழுது அவற்றின் அடிநாதமாக விளங்கும் கருத்துக்கள் மாறுபட்டு விளங்குகின்றன.[24] எனவே மாற்று வடிவங்களைத் தவிர்க்கின்ற போது ஆழமாகச் சிந்தித்தல் வேண்டும்.

ஒரு நாட்டார் கதை பல மாற்று வடிவங்களில் காணப்படலாம். அவையனைத்தும் ஒரு காலத்தில் ஓரிடத்தில் ஒருவரால் தெரிந்து படைக்கப்பட்ட கதையிலிருந்து கிளைத்ததாகவும் இருக்கலாம். பின் அக்கதை தான் தோன்றிய இடத்திலிருந்து பல்வேறு இடங்களுக்குப் பரவிச் சென்று ஊடுருவும் போது எளிதாக அவ்விடங்களுக்கேற்ப மாற்றமடைந்திருக்கலாம். சிலவேளைகளில் அவை எழுதப்பட்டும் அச்சிடப்பட்டும் இருப்பினும் நில எல்லை கடந்து அவை பரவிச் செல்லும் போது மாற்றமடைந்தே தீரும்.[25] எனவே நாட்டார் கதைகளின் மாற்று வடிவங்களைத் தொகுப்பதால் ஆய்வாளர்கள் அவற்றை ஒப்பிட்டாராய முடியும். மாற்று வடிவங்களுக்கான தலைப்புகள் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் தொடர்பான நாட்டார் கதை மட்டக்களப்பு மாநில உபகதைகள் என்ற தொகுப்பிலும் ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள் என்ற தொகுப்பிலும் இடம்பெறுகின்றது. இவ்விரு மாற்று வடிவங்களையும் நூலில் உள்ளவாறே அவதானிக்கின்ற போது ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள் என்ற தொகுப்பு நாட்டார் கதைகளைத் தொகுப்பதில் எத்தகைய சீரிய நெறிமுறைகளைக் கையாண்டுள்ளது என்பதைக் காணலாம்.

## மட்டக்களப்பு மாநில உபகதைகள்[26]

### கல்லு மாடு புல்லுத் தின்ற கதை

போர்த்துக்கீசர் கரையோரங்களைத் தம்வயப்படுத்தி இலங்கையின் ஆட்சியில் தமது முத்திரையைப் பதித்த காலத்துக் கதையிது.

மட்டக்களப்பின் ஆலயங்கள் புராதன காலத்தவை. அவற்றுள் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயம் அதிக சிறப்பு வாய்ந்தது. நுட்ப வேலைப்பாடுடைய பண்டைத்தேர் ஒன்றிங்குண்டு. இத்தேரின் தொன்மையே இவ்வாலயத்தின் பழமைக்குச் சாட்சி பகரும்.

சைவ ஆலயங்களிலே பொன்னும், பொருளும், நவமணியும் பொதிந்திருப்பது வழக்கம். திருடர்கள் தொடப்பயப்படுவர். அப்படிப்பட்ட ஆலயங்களில் போர்த்துக்கீசர் நுழைந்து அப்பொருட்களைச் சூறையாடுவதும், ஆலய சிற்பங்களை அடித்துடைப்பதும், உலோக விக்கிரகங்களைக் கவர்ந்து சென்று உருக்கி ஆயுதங்கள் செய்வதும் உண்டு.

பொருள் கவரும் நோக்கோடு மாத்திரமல்ல விக்கிரக ஆராதனையை முற்றாக ஒழிப்பதும் தம் சமயக் கருத்துக்களை அதிகாரத்தோடு புகுத்துவதும் அவர்களது நோக்கமாக இருந்தது.

இதன்பேறாக மட்டக்களப்பில் உள்ள ஆலயங்களிலும் அவர்களது அட்டூழியங்கள் பரவியிருந்தன.

அவ்வாறான ஒரு படைப்பிரிவினர் கொக்கட்டிச்சோலை ஆலயத்தில் நுழைந்தனர். அப்போது அங்கு மதிய பூசைக்கான ஒழுங்குகள் நடந்துகொண்டிருந்தது. பூசகர் பூசைக்கான ஏற்பாடுகளில் மும்முரமாக இருந்தார்.

அதேவேளை, காலில் சப்பாத்து அணிந்து ஆயுதங்களைத் தாங்கி கோயிலுள் போர்த்துக்கீசர் நுழைந்தனர். பூசகர் பயந்தோடவில்லை. அவர்களின் எதிரே போய் நின்றார்.

அப்போது ஒருவன் அங்கே கல்லால் செய்யப்பட்ட நந்தி உருவத்தைப் பார்த்து "இது என்ன" என்று கேட்டான்.

"இது நந்தி" என்றார்.

"நந்தி என்றால் என்ன?"

பக்கத்தில் நின்ற துவிபாஷிகர் 'மாடு' என்று மொழிபெயர்த்தான்.

"ஓகோ இது கல்லு மாடு புல்லுத் தின்னுமா" என்றான்.

பூசகர் உறுதியாக "ஆம்" என்றார்.

"சரி புல்லைக் கொடு பார்ப்போம" என்றான் பரிகாசத்துடன்.

பூசகர் ஒருபிடி புல்லை எடுத்து, பயபக்தியுடன் "நந்திப் பெருமானே இந்த அறுகம் புல்லைச் சாப்பிடப்பா" என்று சொன்னார்.

கல்லு மாட்டுடன் பூசாரி கதைப்பதைப் பார்த்ததும் போர்த்துக்கீசத் தளபதி கெக்கைகொட்டிச் சிரித்தான். அதேவேளை கல்லால் செய்த நந்தி துள்ளி எழுந்து "அம்மா" என்றது. பூசாரி கொடுத்த புல்லைத் தின்று சாணமும் போட்டது. அதனைக் கண்ட தளபதி தன் படை வீரர்களையும் கூட்டிக்கொண்டு பறந்து போனான்.

நந்தி பழையபடி படுத்துக் கல்லாகிற்று. அது போட்ட சாணமும் கல்லாகிவிட்டது.

## நந்தி புல் தின்ற கதை

மட்டக்களப்பிலுள்ள கொக்கட்டிச்சோலை என்னும் கிராமத்தில் மிகவும் பழம் பெருமையும், புகழும் வாய்ந்த தான்தோன்றீஸ்வரர் என்னும் ஒரு கோயில் உண்டு. அந்தக் காலத்திலே வெள்ளையர்* இங்கிருந்த போது ஒரு நாள் ஒரு பறங்கியன் அந்தக் கோயிலுக்குச் சென்றான். அந்தச் சிவன் கோவிலைத் தரைமட்டமாக்குவதே அவனது நோக்கமாக இருந்தது. கோவிலின் கொடிமரத்துக்குப் பக்கத்தில் நந்தியொன்றிருந்ததைக் கண்ட பறங்கியன் அங்கு பூசையிலிருந்த அம்பலவாண ஐயரிடம், “இந்த மாடு புல்லுத் தின்னுமா?” என ஏளனமாகக் கேட்டானாம். ஐயரும் ஆத்திரத்தில் “இன்று தின்றுவிட்டது இனி மூன்றாம் நாள்தான் தின்னும்” எனவே அவனும் “அப்படியானால் நான் மூன்றாவது நாள் இங்கு வருவேன். இந்த மாடு புல்லைத் தின்ன வேண்டும். இல்லாவிட்டால் இக்கோவில் தரைக்குள் இருக்கும். உன்னையும் சுட்டு விடுவேன்” என்று சொல்லிவிட்டுப் போய்விட்டானாம். குருக்களோ மனங்கலங்கத் தொடங்கிவிட்டார். மூன்றாவது நாளில் இக்கோவில் இடிபட்டால் ஊர் மக்கள் என்னை என்னவென்று நினைப்பார்கள்? கோவிலைப் பராமரிக்கத் தெரியாதவன் கோவிலைப் பறிகொடுத்து விட்டானே என்றெல்லாம் திட்டுவார்களே என்றெண்ணிக் குமுறியபடியே மூன்று நாட்களாகத் தெய்வ சந்நிதானத்தில் முற்றாகப் பழி கிடந்தார்.

“கடவுளே, நீதான் இந்தத் தொந்தரவிலிருந்து என்னைக் காக்க வேண்டும். நான் செத்தாலும் பரவாயில்லை. தீராப் பழியும் பாவமும் என்னைச் சேராத படி இந்தக் கோவிலைக் காத்துவிடு அப்பனே நீதான் எனக்குத் துணை” என்று வேண்டிக் கொண்டே இருந்தார். மூன்று நாட்பொழுதும் கழிந்தது. மூன்றாவது நாள் பறங்கியன் வந்தான். குருக்களும் தெய்வத்தின் மேல் பாரத்தைப் போட்டு** விட்டு தெய்வ நம்பிக்கையுடன் பாலில் அறுகம் புல்லை நனைத்து நந்தியின் முன்னே நீட்டினார். பறங்கியனோ ஏளனமாகப் பார்த்த படியே நின்றான். ஆனால் அங்கே ஒரு அற்புதம் நடந்தது. நந்தி புல்லை வாய் திறந்து உண்டு விட்டுப் பின் எழுந்து நின்று சாணியும் இட்டுவிட்டு மீண்டும் பழைய படி கல்லாகி விட்டதாம். இந்த திடீர் அற்புதத்தைக் கண்டு பயந்து விட்ட பறங்கியன், தமிழனின் கடவுள் உண்மையானதுதான் என்று சொல்லிக் கொண்டே தன் கால் பிடரியில் முட்ட விரைவாக ஓடிப்போனானாம். ஐயரோ தன்னையும் கோவிலையும் காத்தருளிய பெருமானது செயலை எண்ணியெண்ணி ஆனந்தக் கூத்தாடினாராம். இன்று வரை அந்நந்தி இட்ட சாணம் கல்லாகவே இருக்கிறது எனக் கருதப்படுகிறது. ஆண்டு தோறும் கொக்கட்டிச்சோலைக் கோவில் திருவிழாவுக்கு ஈழத்தின் பல பாகங்களிலிருந்தும் பக்தர்கள் வந்து குவிந்து கொண்டே இருப்பர். ஈழத்தின் பிரசித்தி பெற்ற கோவில்களுள் இதுவும் ஒன்று. நந்தி புல் தின்ற கதை இங்கிருந்து கிழக்கிலங்கைப் பாகம் முழுவதும் வாய்மொழிக்கதையாகப் பரவி வருகின்றது.

கதை கூறியவர்: செல்வி க. கதிரேசன், கடற்கரை வீதி, காரைதீவு.

---

* வெள்ளையர் - ஆங்கிலேயர்

** பாரத்தைப் போடுதல் - பொறுப்பாக்குதல்

இவ்விரு வடிவங்களும் ஒரே அடிக்கருத்தைக் கொண்டுள்ளன. நாட்டார் கதைத் தலைப்பில் சிறு மாற்றம் உள்ளது. முதலாவது வடிவத்தைவிட இரண்டாவது வடிவம் சிறிது நீளமானது. முதலாவது வடிவத்தில் நாட்டார் கதை தன்மை நிலையில் கூறப்படுகின்றது. இரண்டாவது வடிவத்தில் படர்க்கை நிலையில் கூறப்படுகின்றது. தவிர முதலாவது வடிவத்தின் ஆரம்பத்தில் தேவையற்ற பிரச்சாரம் இடம்பெறுகின்றது. மொழிநடை இயல்பான பேச்சு வழக்கில் இருந்தாலும் அவற்றுக்கான விளக்கங்கள் கொடுக்கப்படவில்லை (எ-டு: கெக்கைகொட்டிச் சிரித்தல், துவிபாகூஷகர்). தகவலாளர் விபரம் தரப்படவில்லை. இரண்டாவது வடிவத்தில் இக்குறைபாடுகள் தவிர்க்கப்பட்டுள்ள அதேநேரம் நாட்டார் கதையில் இடம்பெறும் வெள்ளையர், பாரத்தைப் போடுதல் என்ற இரண்டு சொற்களுக்குமான விளக்கங்கள் அடிக்குறிப்பில் தரப்பட்டுள்ளன. எனவே ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் நாட்டாரியல் சிந்தனைகளுக்கு அறிமுகமாகி அதை ஒரு கல்விப் புலமாக ஆரம்பித்து ஆவணப்படுத்தல்களையும் ஆய்வுகளையும் முன்னெடுக்கின்ற சூழலில் தமிழ் நாட்டார் கதைகளை அவ்வழியில் அணுகும் முதல் முயற்சியாக ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள் என்ற தொகுப்பைக் கருத முடியும்.

### 3.9. ஆய்வுரைகள் இடம்பெறுதல் வேண்டும்

நாட்டார் கதைகளைச் சேகரித்து தொகுத்து வகைப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாட்டில் அவற்றை ஒரு தொகுப்பாகவோ அல்லது பல தொகுப்புக்களாகவோ வெளியிடுகின்ற போது அவற்றைப் பற்றிய ஒரு ஆய்வுரையாக அமையக்கூடிய முன்னுரை இடம்பெறுவது சிறந்தது. கள ஆய்வின்றி ஆவணப்படுத்திய நாட்டார் கதைகளைத் தமது ஆய்வுகளுக்கு அடிப்படை மூலங்களாகக் கொள்கின்ற ஆய்வாளர்களுக்குக் கள ஆய்வு அனுபவமோ, தொகுக்கின்ற வகைப்படுத்துகின்ற அனுபவங்களோ இருக்காது. எனவே இவற்றையெல்லாம் உள்ளடக்குகின்ற ஓர் ஆய்வுரை கட்டாயம் தேவையானதாகும். நாட்டார் கதைகளைச் சேகரிக்கின்ற போது எதிர்கொண்ட பிரச்சினைகள், தொகுக்கின்ற போது ஏற்பட்ட குழப்பங்கள், வகைப்படுத்தலின் அடிப்படைகள் என்பவற்றையெல்லாம் இது உள்ளடக்கியிருக்க வேண்டும். அது ஆய்வாளர்களை கள ஆய்வுச் சூழலுக்கு கொண்டு சென்று பின் ஆய்வுக்குள் வழி நடத்தும்.

## 4. முடிவுரை

தொகுத்து நோக்குகின்ற போது கிழக்கிலங்கையில் இதுவரை ஆவணப்படுத்தப்பட்ட நாட்டார் கதைகள் எண்ணிக்கையில் மிகக் குறைவானவையாகும். 'ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள்' என்ற தொகுப்பில் உள்ள நாட்டார் கதைகளை அறிவியல் ஆய்வுக்கு ஓரளவு அடிப்படை மூலங்களாகக் கொள்ள முடிந்தாலும் ஏனையவை அத்தகைய பயனுடையவை அல்ல. காரணம் போதிய நுணுக்க விபரங்கள் இல்லாமலிருப்பதாகும். இதனால் அறிவியல் ஆய்வுக்கு அடிப்படை மூலங்களாக அமையக் கூடிய நாட்டார் கதை ஆய்வுப் பதிப்புகள் மேற்படி நெறிமுறைகளைப் பின்பற்றுதல் சிறந்தது. இத்தகைய நுணுக்க விபரங்களை உள்ளடக்கிய பதிப்புகளை அடிப்படை மூலங்களாகக் கொண்ட நாட்டார் கதை ஆய்வுகள் புதிய கோட்பாடுகளை உருவாக்க உதவும். மேற்கத்தேயத்தில் உருவான பெரும்பாலான நாட்டாரியல் கோட்பாடுகள் நாட்டார் கதை ஆய்வுகளால் உருவானவையாகும்.[28] இத்தகைய ஆவணப்படுத்தல்களும் ஆய்வுகளும் இலங்கை முழுவதும் நடைபெற வேண்டும். இவ்வாறு இம்முயற்சிகள் விரிவுபடுத்தப்படுகின்ற போது உலகத்து நாட்டார் கதைகள், உலகத்து நாட்டார் கதை ஆய்வுகள் என்ற பொதுத்தளத்துக்குள் இலங்கை நாட்டாரியல் பிரவேசிக்க முடியும்.

## அடிக்குறிப்புகள்

1. முத்தையா ஒ. முனைவர், (கட்.) 'நாட்டுப்புறவியல் கள ஆய்வு நெறிமுறைகள்', இராம குருநாதன் முனைவர், ஞானசேகரன் தே. முனைவர் (தொகுப்பாசிரியர்கள்), 2005, நாட்டுப்புறவியல், கலைஞன் பதிப்பகம், சென்னை. பக். 32
2. பத்மநாதன் சி. பேராசிரியர், தினக்குரல் - தினசரிப் பத்திரிகை, 27.01.2013 (ஞாயிறு), (கட்) 'கிழக்கில் இப்போதும் பாவனையிலுள்ள தமிழகத்தில் வழக்கற்றுப் போன சொற்கள்' பக். 19
3. சுப்பிரமணியன் பெ. பேராசிரியர், 2009, தமிழக நாட்டுப்புறவியல் ஆய்வுகள், காவ்யா, பெங்களூர். பக். 205-212
4. எதிர்மன்னசிங்கம் எஸ்., மட்டக்களப்பு மாநில உபகதைகள், மாவட்ட கலாசார பேரவை, மட்டக்களப்பு
5. முத்துமீரான் எஸ்., 2011, இலங்கைக் கிராமத்து முஸ்லிம்களின் வாய்மொழிக் கதைகள், தணல் பதிப்பகம், சென்னை
6. விசாகரூபன் கி. கலாநிதி, 2009, ஈழத்துத் தமிழ் நாட்டுப்புறக் கதைகள், மலர் பதிப்பகம், யாழ்ப்பாணம்
7. சித்திரலேகா மௌனகுரு பேராசிரியை (பதிப்பாசிரியர்), 2004, வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக.., மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்
8. றமீஸ் அப்துல்லாஹ், மார்ச் 2001, கிழக்கிலங்கைக் கிராமியம், மல்லிகைப் பந்தல், கொழும்பு -13. பக். 68,69
9. சதாசிவ ஐயர் தி. (தொகுப்பாசிரியர்), 1940, மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு, திருமகள் அழுத்தகம், சுண்ணாகம், பக். 43,44
10. மலர்ச்செல்வன் த., 2011, 'களப்பு' முதலாவது ஆண்டு மாவட்ட மக்கள் கலை இலக்கிய விழாச் சிறப்பு மலர், மாவட்ட செயலக பண்பாட்டுப் பிரிவு, மாவட்ட செயலகம், மட்டக்களப்பு
11. அம்மங்கிளி முருகதாஸ், (கட்.) 'ஊர்களின் அடையாளப்படுத்தலில் கோயில்கள்: மட்டக்களப்பு நாவலடி கடலாச்சியம்மன் அறிமுக ஆய்வு', சித்திரலேகா மௌனகுரு பேராசிரியை (தொகுப்பாசிரியர்), 2004, மு.கு.நூ. பக். 172-185
12. நதிரா மரியசந்தனம், (கட்.) 'வாய்மொழி மரபுகளும் வரலாறும் : புன்னைச்சோலைக் காளியம்மன் கோயிலைச் சூழவுள்ள சமூகப் பின்புலத்தையும் சமூக மாற்றங்களையும் விளங்கிக் கொள்வதற்கான அறிமுக ஆய்வு', சித்திரலேகா மௌனகுரு பேராசிரியை (தொகுப்பாசிரியர்), 2004, மு.கு.நூ. பக். 155-171
13. றூபி வலன்ரினா (கட்.), 'சமூகமும் சமயப் பொறுமையும்: சமூக உறவைப் பேணுவதில் அமிர்தகழி கப்பலேந்தி மாதா கோயில்', சித்திரலேகா மௌனகுரு பேராசிரியை (தொகுப்பாசிரியர்), 2004, மு.கு.நூ. பக். 186-209
14. விஜேசூரிய எஸ்., குணவர்த்தன ஏ.ஜெ., கணநாதபிள்ளை பெ., (பதிப்பாசிரியர்கள்), இலங்கை நாட்டார் கதைகள் (சிங்களம் - தமிழ்), பங்களிப்பிலான அபிவிருத்திக் கழகம், (ஆதரவு) இலங்கை கனடா அபிவிருத்தி நிதியம், கனடிய லூதரன் உலக உதவி.
15. பாலசுந்தரம் இ. கலாநிதி, 2005, ஈழத்து நாட்டார் பாடல்கள் - ஆய்வும் மதிப்பீடும், மணிமேகலைப் பிரசுரம், சென்னை. பக்.33

16. ஸ்டீபன் ஞா. பேராசிரியர், 2009, தமிழ்ச் சமூகத்தில் வாய்மொழிக் கதைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை. முன்னுரை
17. ராஜநாராயணன் கி., 1992, வயது வந்தவர்களுக்கு மட்டும், நீலக்குயில், சென்னை. முன்னுரை
18. பிச்சை அ. முனைவர், 2003, தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம். பக்.43
19. லூர்து தே. டாக்டர், 1986, நாட்டார் வழக்காற்றியல் - கள ஆய்வு, பாத்திமா அச்சகம், பாளையங்கோட்டை. பக்.96
20. தேக்கமலை சீ.செ. முனைவர், (கட்.) 'நாட்டுப்புறவியல் கள ஆய்வில் அறிவியல் அணுகுமுறை', இராமநாதன் ஆறு. முனைவர் (தொகுப்பாசிரியர்) 1990, நாட்டுப்புறவியல் ஆய்வு முறைகள், சமூகவியல்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். பக். 24
21. சுப்பிரமணியன் பெ. முனைவர், (கட்.) 'நாட்டுப்புறக் கதைகள்', இராம குருநாதன் முனைவர், ஞானசேகரன் தே. முனைவர் (தொகுப்பாசிரியர்கள்), 2005, மு.கு.நூ. பக். 78
22. தேவதாஸ் சா. (தொகுப்பும் மொழியாக்கமும்), 1999, கதாசாகரம், விஜயா பதிப்பகம், சென்னை. முன்னுரை. பக். 15
23. சரசுவதி வேணுகோபால், 1991, நாட்டுப்புறவியல் கோட்பாட்டு ஆய்வுகள்..., தாமரை, மதுரை. பக். 151
24. சரசுவதி வேணுகோபால், 1991, மே.கு.நூ. பக். 60,61
25. இராமநாதன் ஆறு. முனைவர், (கட்.) 'வரலாற்று நிலவியல் ஆய்வு முறை - தோற்றமும் வளர்ச்சியும்', சண்முகசுந்தரம் சு. முனைவர் (ஆசிரியர்), டிசம்பர் 2000, தன்னனானே (கோட்பாட்டுச் சிறப்பிதழ்), காவ்யா, பெங்களூர். பக். 15,16
26. எதிர்மன்னசிங்கம் எஸ், மு.கு.நூ. பக். 16,17
27. விசாகரூபன் கி. கலாநிதி, 2009, மு.கு.நூ. பக். 19,20
28. ஸ்டீபன் ஞா. பேராசிரியர், 2009, மு.கு.நூ., என்னுரை

# மட்டக்களப்பு தேசத்து வழிபாட்டு மரபுகளை நெறிப்படுத்தும் பத்ததிகளை ஆவணப்படுத்தல்

வ. குணபாலசிங்கம்

## அறிமுகம்

ஒரு சமுதாயத்தின் அல்லது ஓர் இனக்குழுமத்தின் பண்பாடுகளையும், சமுதாய வழமைகளையும், அறிந்து கொள்வதற்கு அச்சமுதாயத்தின் வழக்கிலுள்ள தொன்மங்கள் உதவுகின்றன. இத்தொன்மங்கள் சில வேளைகளில் வரலாற்று மூலங்களாகவும் அமைவதுண்டு. இத்தொன்மங்கள் பற்றிய வகைமைக்குள் அடங்கும் ஒரு சிறப்பம்சம்தான் பத்தாசிகள் எனப்படும் பத்ததிகள். இப்பத்திகள் பற்றிய பின்புலத்தினை அறிந்து கொள்ள வேண்டுமாயின் மட்டக்களப்பு தேச பண்பாடுகள் பற்றி புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் தமிழர் செறிந்து வாழும் பிராந்தியங்களில் மட்டக்களப்பு தேசம் தனித்துவமான ஒரு பிரதேசமாகும். இத்தனித்துவத்திற்கு பலம் சேர்ப்பது மட்டக்களப்புப் பண்பாடாகும். மட்டக்களப்பு தேச பண்பாடு பல்வகைமைத் தன்மை கொண்டது. இங்கு பல்வேறு இனங்கள் கூடி வாழ்வதனால் அவரவர் சமுதாய வழமைகளுக்கு ஏற்ப பண்பாடுகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இப்பண்பாடுகள் ஒன்றிலிருந்து ஒன்று கொண்டும் கொடுத்தும் வளர்ந்து வந்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட மக்களின் பண்பாடு பல்வகைத் தன்மை கொண்டது. இங்கு இந்து மதம், இஸ்லாமிய மதம், கிறிஸ்தவ மதம் ஆகிய மதங்களைச் சார்ந்த மக்கள் வாழ்கின்றனர். இதன் காரணமாக ஒரு மதத்தின் பண்பாட்டுத் தாக்கம் இன்னொரு மதத்தில் காணப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மட்டக்களப்புப் பண்பாட்டு முறைகளைப்பற்றித் தெளிவாக அறிந்து கொள்வதற்கு இங்கு நிலவும் இந்துமதம் சார் வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும் துணை புரிகின்றன.

ஓர் உயிரி வாழும் காலம் முதல் தொடர்ந்து பல அம்சங்களை இழந்து கொண்டும், புதியனவற்றை ஈர்த்துக் கொண்டும் இருக்கும் வேளையில் கூட ஒரு குறிப்பிட்ட அளவில் அந்த அமைப்பு கட்டிக்காக்கப்படுகின்றது. இவைதான் இந்த அமைப்பின் தொடர்ச்சி (Structural continuity) என அழைக்கப்படுகின்றன.[1] காலத்துக்குக் காலம் இங்கு ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புகள், அரசியல் மாற்றங்கள், குடியேற்றங்கள் என்பனவற்றிக்கியைய இப்பிரதேச இந்துப் பண்பாடு மாற்றமடைந்ததாயினும், பண்டைய வழிபாடு தொடக்கம் அண்மைக்கால வழிபாடு வரை அத்தனை வழிபாடுகளையும் மட்டக்களப்பு தேச இந்துப் பண்பாட்டில் காணமுடிகின்றது.

இலங்கையின் ஆதிக் குடிகளைக் கண்டறிவதற்குக் கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால இலங்கையின் வரலாற்றுத் தகவல்களும், இலக்கியங்களும் எமக்கு உதவுகின்றன. தீபவம்சம், மகாவம்சம்

போன்றனவும், இவை பற்றிய தகவல்களை முன்வைக்கின்றன. புத்தரின் இலங்கைக்கான விஜயங்களின் போது தொடர்புபடுத்தப்படும் பிரிவினர் தான் இயக்கர் எனும் வம்சத்தினர் ஆவர்[2] மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளாக கருதப்படும் வேடுவர்களுக்கும், இவர்களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்புகள் இருந்தமையை வாகரைப் பிரதேசத்தில் வாழும் ஒரு பகுதி மக்களின் வாழ்வியல், வழிபாட்டு மரபுகளை கூர்ந்து நோக்குபவர்களுக்கு புலப்படும்.

மேலும் இங்கு முக்குகரின் வருகையும் அவர்களின் பண்பாட்டு நடைமுறைகளும், தொடர்ந்து இங்கு வந்து குடியேறிய சோழ, சேரநாட்டவரின் பழக்க வழக்கங்கள் மற்றும் காலனித்துவவாதிகளான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோரின் பண்பாடுகளும் மட்டக்களப்புப் பண்பாட்டில் கலக்கலாயின.

பண்பாடு என்பது ஏதோ சில கூறுகளைக் கொண்ட ஒரு தொகுப்பு என்றோ, சில நடவடிக்கைகளுக்காகச் செயற்படும் ஒரு கூறு என்றோ கருதமுடியாது. பண்பாடு என்பது மிகவும் இணக்கமுற்று ஒருங்கிணைந்த ஓர் ஒன்றியமாகும். அதனுள் உள்ள கூறுகள் அனைத்தும் செயல் நிலையில் ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுகின்றன. ஒவ்வொரு கூறும் பண்பாடு எனவும் மிகவும் ஏற்றநிலையில் பொருத்தப்பட்டிருக்கின்றது. மட்டக்களப்புப் பண்பாடும் இத்தகையதே அதாவது இப்பிரதேசப் பண்பாடு ஒரு குறிப்பிட்ட இன மத சாதி வர்க்கங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அதன் தன்மை பரந்துபட்டது; பல்வகைமையுடையது. காலத்துக்குக் காலம் அங்கு வந்து குடியேறியவர்களின் பண்பாடும், ஏற்கனவே அங்கு வாழ்ந்த சுதேசிகளின் பண்பாடும் வெவ்வேறானவை. ஆனால் அவை இரண்டும் ஏதோ ஒரு வகையில் கூட்டிணைவைப் பெறுகின்றன.

இலங்கையின் இந்துப் பண்பாட்டு மரபில் வழிபாட்டு மரபுகளுக்கும் சமுதாய வழமைகளுக்கும் முக்கியத்துவமுண்டு. இலங்கைத் தமிழரிடையே பயில் நிலையிலுள்ள வழிபாட்டுப் பாரம்பரியங்கள் பல. அவற்றுள் ஆகம சிற்ப சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடுகள், ஆகம வரையறுக்குள் அடங்காத பத்ததி வழிபாடுகள், பாரம்பரியங்களையும் சமுதாய வழமைகளையும் இணைத்துக் கொண்டு இயற்றப்படும் வழிபாடுகள் என்பன பிரதானமானவை. இவ்வகை வழிபாடுகளில் செல்வாக்குள்ள (Dominate) வழிபாடாக கருதப்படுவது, ஆகம சிற்ப சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடுகள் ஆகும். இங்கு ஏனைய வழிபாடுகளின் பிரசித்தம் குறைவு. ஆனால் மட்டக்களப்பு தேசத்தைப் பொறுத்தவரையில் இந்நிலை சற்று வித்தியாசமானது. ஆகம விதிக்குட்படாத பத்ததி வழிபாடுகளே இங்கு பிரசித்தமானவை. தமிழ் நாட்டில் வழிபடும் ஆகமம் சாராத வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் தொகையுடன் மட்டக்களப்பில் வழிபடப்படும் இத்தெய்வங்களை ஒப்பிட்டு நோக்குகின்ற வேளையில் மட்டக்களப்பில் வழிபடப்படும் தெய்வங்களின் எண்ணிக்கை குறைவு. இருப்பினும் இலங்கையில் வேறு எந்த பிராந்தியங்களிலும் இல்லாத அளவு இத்தெய்வங்களுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

மட்டக்களப்பு தேசத்தவர்களின் இந்துப் பண்பாட்டு வழமைகளில் மரபுசார் வழிபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் மரபுசார் பத்ததி வழிபாடுகளை சடங்கு எனக் கூறுவது மரபு. மட்டக்களப்பில் சடங்குகள் என்பவை மதத்தோடு அல்லது மந்திரத்தோடு

சம்பந்தப் பட்டவையாகும். இவை மரபினால் தீர்மானிக்கப்பட்ட நிகழ்வுகள், செயற்பாடுகளின் தொகுதி என்று கொள்ளலாம். மட்டக்களப்பு தேச மரபு சார் வழிபாடுகள் சமூக, பொருளாதார, கலை மரபுகள் ஆகிய தளங்களைச் சார்ந்திருப்பதுடன் மீளச் செய்தல் என்ற சுழற்சியின் அடிப்படையில் அமைந்துள்ளன.

மட்டக்களப்பு தேச மரபு சார் வழிபாட்டுச் சடங்குகள் பயம் காரணமாகவும் இயற்றப்படுகின்றன. இங்கு வழிபடப்படுகின்ற தெய்வங்கள் இரட்டை நிலைத்தன்மையுடன் காணப்படுகின்றன. அதில் அமைதியான நிலை, அகோர நிலை என்பன முக்கியமானவை. தெய்வங்கள் அகோர நிலையில் கட்டுக்கடங்காத ஆவேசத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்தும். இத்தகைய அகோர நிலை கொண்ட தெய்வங்களை வணங்காமல் புறக்கணித்தால் அத்தெய்வங்களின் கோபத்திற்கு ஆளாகிக் கடுமையான இன்னல்களை சந்திக்க நேரிடும் என நம்புகின்றனர். இதன் காரணமாக நேர்த்திக்கடன் செய்து பள்ளயம் நிறைவேற்றினால் அகோரம் தணிந்து சாந்தமான நிலைக்கு மாறும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மட்டக்களப்பில் தெய்வங்களை வழிபடுகின்றனர்.

மட்டக்களப்புத் தமிழரின் இந்துப் பண்பாட்டு, சமய வாழ்வில் புவியியல் பின்னணி, சமுதாய அமைப்பு, வழிபடு தெய்வங்கள் ஆகிய மூன்று தனிப்பட்ட தளங்கள் ஒரு கருத்தியல் சட்டகத்தில் இணைவு பெறுகின்றன. இங்குள்ள ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாக பிரிகின்றனர். இந் நிலையில் மட்டக்களப்பு சமூக உருவாக்கம் என்பது குடும்பம், குலம், சாதி என்னும் வரிசையில் விரிந்து செல்லுகின்றது. ஒரு குடும்பத்தின் உறுப்பினர் இணைந்து தமக்கு வாலாயமான தெய்வங்களை வழிபட, இரத்த உறவால் தொடர்புடைய பங்காளிகள் இணைந்து குல தெய்வத்தை வழிபட, பல கூட்டங்கள் இணைந்து ஒரு பொதுத் தெய்வத்தை வழிபட இந்த வரிசை முழுமை பெற்று சமூக உருவாக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றன. சமுதாய அமைப்பில் சில தெய்வங்கள் அவரவர் வாழும் குடியிருப்புக்களுடன் இணைவு பெறுகின்றன. மட்டக்களப்பு தேசத்தில் நடைமுறையிலுள்ள இத்தெய்வ வழிபாடுகளை நெறிப்படுத்தும் ஆவணங்கள் இரண்டு உள்ளன. அவற்றிலொன்று சடங்குப் பாடல்கள் மற்றையது பத்ததி.

**பத்ததிகள்**

மட்டக்களப்பு தேச வழிபாட்டிக்குரிய பூசை விதி முறைகளையும் அதற்கான மந்திரங்களையும், பாவனைகளையும் தொகுத்துக் கூறும் ஆவணமே பத்ததி எனப்படும். பத்ததி என்பதை பத்தாசி எனவும் அழைப்பர். பத்தாசி எனும் சொல் மட்டக்களப்பு தேசத்து மக்கள் மத்தியில் பயில் நிலையில் உள்ள பிரதேச வழக்காற்றுச் சொற்பதமாகும். வசதி கருதி இங்கு பத்ததி எனும் சொல்லே எடுத்தாளப்படுகின்றது. சைவத் திருக்கோயில் கிரியை நெறிகளை வடமொழி ஆகமப் பத்ததிகள் நெறிப்படுத்துவது போன்று மட்டக்களப்பு தேசத்து பாரம்பரிய வழிபாடுகளை நெறிப்படுத்துபவை தமிழ்மொழியில் அமைந்த பத்தாசிகள் எனப்படும் பத்ததிகளாகும். இவ்விரு பத்ததிகளும் கோயில் வழிபாடுகளை கூறுவதில் பொதுமைப்பட்டிருப்பினும், அவைகளின் உள்ளடக்கம் சார் விடயங்களில் தனித்தன்மைகளை கொண்டிருப்பது உளங்கொள்ளத்தக்கது.

பத்ததிகள் பெரும்பாலும் எத்தெய்வத்தின் பூசை விதி முறைகளை கூறுகின்றனவோ அத்தெய்வத்தின் பெயராலேயும், வேறு பெயர்களாலேயும் அழைக்கப்படுகின்றன.

மாரியம்மனுக்குரிய வழிபாடுகளை கூறுகின்ற பத்ததி மாரியம்மன் பத்ததி எனவும் காளியம்மனுக்குரிய வழிபாடுகளை கூறுகின்ற பத்ததி கும்பப் பத்ததி, அடையல் பத்ததி எனவும், பேச்சியம்மனுக்குரிய வழிபாடுகளை கூறுகின்ற பத்ததி பேச்சியம்மன் பத்ததி எனவும், கண்ணகையம்மனுக்குரிய வழிபாடுகளை கூறுகின்ற பத்ததி கூனற் பலகை பத்ததி, தேவேந்திரன் பத்ததி, குளக்கட்டுப் பத்ததி, கொம்புப் பத்ததி, கன்னிமார் பத்ததி, வேடப் பத்ததி எனவும், கடலாச்சியம்மனுக்குரிய வழிபாடுகளை கூறுகின்ற பத்ததி கடலாச்சியம்மன் பத்ததி, பரமநயினாருக்குரிய வழிபாடுகளைக் கூறுகின்ற பத்ததி பரம நயினார் பத்ததி எனவும், பெரியதம்பிரானுக்குரிய வழிபாடுகளைக் கூறுகின்ற பத்ததி பெரிய தம்பிரான் பத்ததி அழைக்கப்படுகின்றன.

இப்பத்தாசிகளில் பல உப பிரிவுகளும் காணப்படுகின்றன. காளியம்மன் பத்ததியில் கும்பத்ததியும், அடைக்கலப் பத்ததி (அடையல்பத்ததி) எனும் இரு பிரிவுகளைக் காணலாம். இவைகளில் பத்திரகாளிபூசை, வடபத்திரகாளிபூசை, வீரமகாகாளிபூசை, கங்கைகாளிபூசை, சுடலைக்காளிபூசை, உருத்திராகாளிபூசை, நரசிங்ககாளிபூசை என பூசை விதிமுறைகள் வகுக்கப்பெற்ற தொகுப்பாகவும் சில தனித்தனியான பிரிவுகளாகவும் வழங்குவதை காணக்கூடியதாக உள்ளது. அடைக்கலப்பத்ததி முறைப்படி ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலயத்திலும், பெரியபோரைதீவு காளியம்மன் ஆலயத்திலும் பூசைகள் நடைபெறுகின்றன.[3]

கண்ணகையம்மன் பத்ததியில், தெய்வேந்திரன் பத்ததி, கூனற்பத்ததி, முனிபத்ததி, கொம்புப்பத்ததி என உபபிரிவு பத்ததிகளும் காணப்படுகின்றன. கொம்புப்பத்ததி கொம்பு முறித்தல் தொடர்பான கண்ணகை வழிபாட்டுத் தன்மையுடன் செய்யும் விதி முறையினையும் நடைமுறைகளையும் மட்டும் தெரிவிப்பன. ஏனைய பத்ததிகள் கண்ணகையம்மன் வழிபாட்டு நெறிமுறைகளையும் மந்திரங்களையும் உள்ளடக்கியனவாக காணப்படுகின்றன. பேச்சியம்மன் வழிபாட்டுக்குரிய பத்ததியில் பள்ளயப்பேச்சி பத்ததி, சுடலைப் பேச்சி பத்ததி என வகுக்கப்பட்டுள்ளன. ஆகாசப்பேச்சுக்குரிய பூசை விதிமுறைகள் இவ்விரு பத்ததிகளிலும் காணப்படுகின்றன.[4]

மாரியம்மனுக்குரிய வழிபாட்டுப்பத்ததியில் கும்பப்பத்ததி, முத்துமாரிப்பத்ததி, பிரம்புப்பத்தி, அமுதகலசப்பத்ததி என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. இப்பத்ததிகளை அடியொற்றியே கும்பத்துமாரி, முத்துமாரி, கருமாரி முதலிய தெய்வங்களுக்கு வழிபாடுகள் இயற்றப்படுகின்றன. இருப்பினும் மட்டக்களப்பு பிரதேசத்தில் கும்பத்துமாரி, சிவமுத்துமாரி வழிபாடுகள் பெரும்பான்மையாகவும் கருமாரி, ஆனந்தமாரி வழிபாடுகள் சிறுபான்மையாகவும் செய்யப்படுகின்றது.[5]

மேலும் கடல்நாச்சியம்மன் பத்தாசியில், திரைசேர்மடந்தைப் பத்ததி, கும்பப்பத்ததி என இருவகையுண்டு இதில் கோட்டைக்கல்லாறு கடலாச்சியம்மன் ஆலயத்தில் திரைசேர் மடந்தைப்பத்ததியும் நாவலடி கடலாச்சியம்மன் ஆலயத்தில் கும்பப்பத்ததி முறையிலும் பூசைகள் நடைபெறுகின்றன.[6]

திரௌபதியம்மன் வழிபாட்டுக்கென பத்ததி வகைகள் எதுவும் இருப்பதாக தெரியவில்லை. இதற்கு திரௌபதையம்மன் விதிநூல் என்ற வழிபாட்டு நூல் பயன்படுத்தப்படுகின்றது. இவ்வழிபாடு பாண்டவர் கதையைத் தழுவியதாக காணப்படுகின்றது.[7]

மட்டக்களப்பு தேசத்தில் இயற்றப்படுகின்ற பாரம்பரிய வழிபாடுகளுக்கு ஆதாரமாக விளங்குகின்ற பத்ததிகள் பெரும்பாலும் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியனவாக காணப்படுகின்றன. வழிபாட்டிடம் அமைக்கும் முறை, மண்டபம் காவல் செய்யும் முறை, அம்மனுக்கு அடுக்குச் சாத்தும் முறை, அம்மனை கும்பத்தில் வைத்தலும் அவைகளுக்கான மடைப்பிரிவுகளும், அம்மனுக்கு இணை, துணை, பரிவாரத்தெய்வங்களை நிறுத்தும் இடம் பற்றியவையும் அவைகளுக்கான மடைப்பிரிவுகளும் மந்திர, யந்திரங்களும், அம்மனை ஆராதிக்கும் முறைகள், பூசை செய்பவர் கைக்கொள்ள வேண்டிய அனுட்டான முறைகள் முதலிய விதிகளும் பிறவும் அடங்கும்.

**பத்ததிகளை ஆவணப்படுத்தல்**

பத்ததி வழிபாடுகள் காலம் காலமாக சமூக வாழ்வியலில் ஒரு பகுதியாக இங்கு கடைப்பிடிக்கப்பட்டு வருவதனால் அவற்றை ஒரு வாழும் பண்பாடாகவே கருத வேண்டும். சமூக வாழ்வியலில் பல்வேறு விழுமியங்களையும் தாங்கிய பத்ததி வழிபாடுகள் சமகால சமூகச் செயற்பாட்டில் தமது முக்கியத்துவத்தை இழந்து வருகின்றன. பத்ததிகள் ஆரம்ப காலம் முதல் வாய்மொழி மரபாகவே பயிலப்பட்டு வந்திருக்கின்றன. தம் பரம்பரை சாராத ஏனையோருக்கு போய்ச்சேரக் கூடாது என்ற எண்ணம் காரணமாக இவைகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளன. வெளியுலகிற்கு அவை பற்றிய தெளிவும், விளக்கமும் இல்லை. இவ்வாறான ஒரு சூழலில் அவைகளின் முக்கியத்துவம் வெளிக்கொணரப்படுதல் வேண்டும். வெளிக்கொணரப்படுதலுக்கு இவைகளை ஆவணப்படுத்துவது அவசியமாகும்.

மட்டக்களப்பு தேசத்தின் வழிபாட்டுக்குரிய பத்ததிகள் ஆரம்ப காலத்தில் வாய்மொழி மரபாகப் பேணப்பட்டு வந்துள்ளன. பின்னர் அவைகளில் சில ஏடுகளில் எழுதி வைக்கப்பட்டன. காலவோட்டத்தில் இப்பத்ததிகள் உருக்குலைந்து போகலாயின. பாரம்பரிய வழிபாடுகளின் பொக்கிசமாக விளங்கும் பத்ததிகளை

1. கையெழுத்துப் பிரதிகள்
2. செப்புப்பட்டயப் பதிவுகள்
3. அச்சுப் பிரதிகள்
4. ஒலி நாடாப் பதிவுகள்
5. இறுவட்டுப் பதிவுப் பிரதிகள்
6. கணணிப் பதிவுகள்
7. இணையத்தளப் பதிவுகள்

முதலிய முறையியல்களில் ஆவணப்படுத்தலாம்.

இவ்வாறு பத்ததிகள் ஆவணப்படுத்தப்படும் போது பத்ததிகளின் வகைமைகளை அறிந்து கொள்ளவும் இப்பத்ததிகளுக்கு இடையேயான பொதுமைகளையும், தனித்தன்மைகளையும் இனங்கண்டு கொள்ளவும் அத்துடன் பத்ததிகளின் உபபிரிவுகளை அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும். அத்துடன் பத்ததிகளின் மொழிப்பயன்பாடு, அமைப்பு, ஓசை, வித்துவத்தன்மை முதலியவைகளையும் இனங்காணமுடியும்.

சமூக மாற்றத்திற்கேற்ப பண்பாடுகளும் மாறும் இயல்பினது. மட்டக்களப்பு தேசத்தின் இந்துப்பண்பாட்டிற்கும் இது பொருந்தும். எனவே மாறும் பண்பாட்டில் பத்ததிகள் நிலைத்திருக்கும் என்பது நிச்சயம் அல்ல. இந்நிலையில் பத்ததிகளின் ஆவணப்படுத்தல் முக்கிய செயற்பாடாகின்றது. அந்த வகையில் மட்டக்களப்பு தேசமெங்கும் விரவிக் காணப்படுகின்ற இவ்வழிபாடுகளை கூர்ந்து அவதானிக்கும் போது இவ்வழிபாடுகளின் தனித்தன்மைகளை அறிய முடிகின்றது. அத்துடன் இவ்வழிபாட்டுக்கு ஆதாரமாக விளங்குகின்ற பத்ததிகளை பார்வையிடுவதற்கும் அதிலுள்ள அம்சங்களை அறிவதற்கும் இடர்பாடுகள் பல உள்ளன. இருப்பினும் சிலர் பத்ததிகளை போட்டோ பிரதி தந்துதவியமை குறிப்பிடத்தக்கது. அவைகளை அடிப்படையாகக் கொண்டு பத்ததிகள் ஆவணப்படுத்தும் முயற்சி தொடர்கின்றது. மட்டக்களப்பில் பல பத்ததிகள் வாய் மொழி மரபாகவும், கையெழுத்துப் பிரதியாகவும் காணப்படுகின்ற வேளையில் முதன் முதலில் கண்ணகையம்மன் பத்ததியும் பாடல்களும் என்ற தலைப்பில் கன்னன் குடாவைச் சேர்ந்த க. ஆறுமுகம் என்பவர் அச்சில் வெளியிட்டுள்ளமை பத்ததிகளை ஆவணப்படுத்தலுக்கு ஓர் முன்மாதிரியாகும். பின்வரும் கோயில்களின் பத்ததிகள் ஆவணப்படுத்தப்படுகின்றன.

**காளிகோயிற் பத்ததி – ஏறாவூர்**

பத்ததிகளை ஆவணப்படுத்தும் முயற்சியில் ஏறாவூர் காளிகோயிலின் வழிபாடுகளைக் கூறுகின்றபத்ததிமுக்கியத்துவம்பெறுகின்றது. இப்பத்ததிஅடையல்பத்ததிஎனவழங்கப்படுகின்றது. இப்பத்ததியை ஏறாவூரைச் சேர்ந்த ஶ்ரீகந்தராஜா. எஸ் (வயது - 50) என்பவர் தந்துதவினார்.

ஏறாவூர் காளி கோயிலின் பத்ததியில் முதல் தலைப்பு கிரியா பாகம் என அமைந்துள்ளது. அடுத்து சடங்கு முறை, அம்மன் கொலுமுறை, மடை முறை, வீரகம்பம் வெட்டும் கிரியை, வாழைக்குலை பழுக்கப்போடல், நோர்ப்பு முறைக் கிரியை, யாக முறை, சக்தி பூசை, நோர்ப்புக் கட்டும் கிரியை, கடல் குளிப்பு, ஊர்க்காவல், பெரும் கரியை, தீக்குழி மூட்டல், மது கொடுக்கும் முறை, ஆயுத பூசை, வைரவர் வேள்வி முறை முதலிய செய்முறைகளும் அவற்றிற்குரிய எந்திரங்கள் பலவும் உள்ளன.

அவை கதவு திறத்தலுக்குரிய எந்திரம், பிள்ளையார் எந்திரம், நோர்ப்பு வைக்கும் இடத்துக்குப் போடும் எந்திரம், நோர்ப்புக் கட்டுவதற்குரிய நெல்லுக் குற்றுவதற்கு உரல் நடுவதற்குரிய எந்திரம், அடுப்பு எந்திரம், நோர்ப்பு இலையில் கண்ணால் போடல் எந்திரம், ஒன்பது கும்ப எந்திரம், நோர்ப்பு சீலையில் போடும் எந்திரம், நோர்ப்பு சீலை முடிந்த பின் போடும் எந்திரம், சக்தி பூசை எந்திரம், யாக பூசை எந்திரம், மது மடைச் சீலை எந்திரம், மது மூடும் சீலை எந்திரம், மதுச் சிரட்டைக்குள் போடும் எந்திரம், மதுப் பிடிக்கும் மனிதனின் கையில் எந்திரம், ஆயுத பூசை எந்திரம், பட்டாணி மடை எந்திரம், கடல் குளிப்பு எந்திரம், வாணிப காயத்திரி எந்திரம் முதலியனவும் இப்பத்ததியில் உள்ளன.

அத்துடன் சடங்குச் செயல்முறைகளுக்குப் பாவிக்கப்படும் மந்திரங்கள் கிரியா பாக மந்திரங்கள் என்ற தலைப்பின் கீழ் மேலும் பல உப தலைப்புக்களுடன் காணப்படுகின்றன. கதவு திறக்கும் மந்திரம், ஜலம் அரட்டல் மந்திரம், பிள்ளையார் பூசை மந்திரம், துவார பூசை மந்திரம், காப்புக் கட்டும் மந்திரம், அபிசேக மந்திரம், அம்மன் கொலுமுறை என்ற தலைப்பின் கீழ் குடத்துக்கு நீர்

வார்க்கும் மந்திரம், விநாயகர் மடை மந்திரம், தேங்காய் உடைக்கும் மந்திரம், பஞ்ச கர்த்தாக்கள் மந்திரம், அம்மன் அழைப்பு மந்திரம், வீரபத்திரர் மந்திரம், அம்மனின் முன்னிறுத்தும் ஒன்பது கும்ப மந்திரம், அம்மன் பூசை மந்திரம், அம்மன் உள்ளூ சுற்று மடை பூசை மந்திரம், கன்னிமார் மந்திரம், இடது புறம் இருளன் மந்திரம், வலது புறம் மருளன் மந்திரம், வெளிச்சுற்று அட்ட திக்கு பாலகர் மந்திரமும் காணப்படுகின்றன.

பூரண ஆகுதி என்ற தலைப்பின் கீழ் தேங்காய் வெட்டி 24 குண்டத்துள் போடல், சக்தி பூசை, நோர்ப்பு

மேலும் பரிவாரத் தெய்வங்கள் என்ற தலைப்பின் கீழ் பல தெய்வங்களுக்குரிய மந்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றில் வைரவர் மந்திரம், வீரபத்திரர் மந்திரம், மாரியம்மன் மந்திரம், பேச்சியம்மன் மந்திரம், சிங்கநாத வைரவர் மந்திரம், காடேறி மந்திரம், வதனமார் மந்திரம், பிரித்தியங்கிரிக் காளி மந்திரம், பிடாரி அம்மன் மந்திரம், ஐந்து தேங்காய் வெட்டும் முறை மந்திரம், அம்மனுக்கு தீபம் காட்டும் மந்திரம், அம்மனுக்கு அர்ச்சனை செய்யும் மந்திரம் முதலியன காணப்படுகின்றன.

வீரகம்பம் வெட்டும் மந்திரம் என்ற பிரதான தலைப்பின் கீழ் பிள்ளையார் பூசை மந்திரம், காடேறி மந்திரம், கம்பளி வைரவர் பூசை மந்திரம், நூல் கட்டல் மந்திரம், வெட்டும் பலி மந்திரம் முதலியனவும் வாழைக்குலை அழைப்பு என்னும் தலைப்பின் கீழ் பிள்ளையார் மந்திரம் அத்துடன் நோர்ப்பு நெல் குற்றும் உரல் மந்திரம், அகோர மந்திரம், இரண்டு யாக கும்ப மந்திரம், யாக மந்திரம், நெய்வார்த்தல் மந்திரம், விநாயகர் மந்திரம், சிவன் மந்திரம், காளி சக்தி அம்மன் மந்திரம், தீ வளர்த்தல் மந்திரம் முதலியனவும் காணப்படுகின்றன.

பூரண ஆகுதி எனும் தலைப்பின் கீழ் தேங்காய் வெட்டி 24 குண்டத்துள் போடல், சக்தி பூசை என்பனவும், நோர்ப்பு கிரியை மந்திரங்கள் எனும் தலைப்பில் அமுது வைக்க அமிர்த காயத்திரி மந்திரம், கறி வைக்க, தயிர் வைக்க, மடை வைக்க, தேங்காய் வெட்ட, மந்திர வாக்கியம், கடல் குளிப்பு மந்திரம், எண்ணெய் ஓத வாணிப காயத்திரி மந்திரம், மது மந்திரம், மதுப்பலி மந்திரம், நோர்ப்பு எறியும் மந்திரம், ஆயத பூசை, தேங்காய் வெட்டல், மடை ஒப்புக் கொடுக்கும் பாடல், தாலாட்டு முதலிய அம்சங்களுடன் ஏறாவூர் காளி கோயில் பத்ததி முற்றுப் பெறுகின்றது.

**கூனற்பலகை விதிமுறை – கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததி**

எமக்குக் கிடைத்த மேலுமொரு பத்ததி கன்னன் குடா கண்ணகையம்மன் கோயில் சடங்குகளை நெறிப்படுத்தும் கண்ணகையம்மன் பத்ததியில் கூனற்பலகை விதிமுறையாகும். இப்பத்ததியினை கன்னன்குடாவைச் சேர்ந்தவரும் கோயிற் பூசகருமான திருவாளர். சின்னவிப்போடி கிருஸ்ணப்பிள்ளை (வயது-72) என்பவர் தந்துதவினார்.

கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதி முறையில் முதலாவது தலைப்பாக கன்னிக்கால் வெட்ட என்று அமைந்துள்ளது. அதன் கீழ் மந்திரமும் செயல் முறையும் அமைந்துள்ளன. பஞ்ச கௌவியம் கூட்ட, கெங்கை விரட்ட, சாபம் நீக்க, கதவு திறக்க, படிகடக்க,

அக்கினி பூசை, பிள்ளையார் பூசை, அம்மனுக்கு மடைகட்டி திருமுழுக்குப் பண்ண, சிங்காசனம் வைக்க, அகோரமெழுப்ப, முந்நூறு வெற்றிலை அர்ச்சனை பண்ண, அம்மனுக்கு மூன்று மடை கட்ட, கும்ப தானம், பிராண மந்திரம், கும்பத்துக்கு மஞ்சள், சந்தனம், பத்திர புஸ்பம் சாற்ற, கும்பம் எடுக்க மந்திரம்,காயத்திரி மந்திரம், வயிரவர் விதி முறை, பந்தல் போட கிரியை, ஓமம் வளர்க்கும் மந்திரம், அம்மனுக்கு வேள்வி நடத்தும் மந்திரம், பானைக்கு நூல் சுற்றல் மந்திரம், நிலங்கட்ட மந்திரம், பொங்கல் பானை மன்றாடி அடுப்பில் வைக்க மந்திரம், பால் வார்க்க மந்திரம், அரிசி போட மந்திரம், தடுத்த பானை பொங்க மந்திரம், புவனேஸ்வரி சிவம், சந்திர நமஸ்காரம், சூரிய நமஸ்காரம், காளி செபம், விறுமா செபம், விஸ்ணு செபம், உருத்திர செபம், ஈசுர செபம், கணபதி செபம், அனல் தணிக்க, தியானம், தேவி மந்திரம், அமிர்தம் ஒப்புக் கொடுக்க, முதலிய செயல் முறைகளும், அவற்றிற்குரிய மந்திரங்களும், எந்திரங்களும் காணப்படுகின்றன.

பங்சாட்சரம் என்னும் பிரதான தலைப்பின் கீழ் வருண பஞ்சாட்சரம், பத்தினி பஞ்சாட்சரம், லெட்சுமி பஞ்சாட்சரம், சக்தி பஞ்சாட்சரம் முதலிய மந்திரங்களும், நீறணிய, அக்கினி பூசை, பிராணம், ஆசனத்திலேற்ற, புண்ணியா ஆவேசம், நவக்கிரக ஆராதனை, அம்மன் கலசமாட, அர்ச்சனை மந்திரம், பூசை ஒப்புக் கொடுக்க, கணபதி தோத்திரம், அகோரந் தணிக்க, காளிக்கு கும்பம் வைக்க, காத்தவராயனுக்கு கும்பம் வைக்க மந்திரம் எனும் செயல்முறை, மந்திரம், எந்திரம் முதலியவைகளுடன் கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதிமுறை முற்றும் என உள்ளது.

அத்துடன் தேவேந்திரன் விதி, குளுத்தியின் வரலாறு, கும்ப மந்திரம், ஆலாத்தி ஏந்த, தீர்த்தம் எடுக்க, மன்றாட்டு முறையுடன் சடங்குகளுக்குரிய தனியான எந்திரங்கள் இதிலுள்ளன. கும்பச் சடங்கு எந்திரம், பூரண கும்பம் வைக்க எந்திரம் முதலியன இப்பத்ததி ஏட்டில் உள்ளன.

**மாரியம்மன் பத்ததி**

மேற்குறித்த கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததியின் கூனற்பலகை விதி முறை தந்துதவிய சின்னவிப்போடி கிருஸ்ணப்பிள்ளை அவர்களே மாரியம்மன் பத்ததி ஒன்றினையும் தந்துதவினார்.

மாரியம்மன் பத்ததியில் தீர்த்த சட்டி எடுக்க, மணி எடுக்க, தீபக்கால் எடுக்க மந்திரமும் அவற்றிற்குரிய செயல்முறைகளும் கூறப்பட்டுள்ளன. அத்துடன் சிங்காசனத்தில் பத்திரம் போட, விளக்குக்கு மடை வைக்க, சந்தனம் தெளிக்க, பொரி வைக்க, தேங்காய் உடைக்க, நெய்வேத்தியம் பண்ண என தலைப்பிட்டு அவற்றிற்குரிய செயல்முறைகளுடன் மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன.

கும்ப விதி என தலைப்பிட்டு அவற்றில் பல உப பிரிவுகளும் அவற்றின் செயல் முறைகளும் மந்திரங்களும் விரவிக் காணப்படுகின்றன. அவற்றில் முடடி கழுவி நூல் சுற்றி வைக்க, தண்ணீர் வார்க்க, கும்பத்துக்கு ஆவாகனம் பண்ண, கும்பத்துக்கு தீபம் காட்ட, கும்பத்துக்கு தூபம் கொடுக்க, கூன்று கும்பம் உருப்பண்ணி வைக்க, அடுத்து மடை வைத்தல் பற்றிக் கூறப்படுகின்றது. விஸ்ணுவுக்கு கும்பத்தின் இடப்பக்கத்தில் ஒரு மடை, வள்ளியம்மனுக்கு ஒரு மடை, தெய்வானையம்மனுக்கு ஒரு மடை, பாண்டிமா தேவிக்கு ஒரு மடை, மாரியம்மனுக்கு

மடை, வீரபத்திரருக்கு மடை, பேச்சியம்மனுக்கு மடை, காத்தவராயனுக்கு மடை, பூங்கமல மங்கைக்கு மடை, தாமரை மங்கைக்கு மடை, அக்கினி மாலைக்கு ஒரு மடை, ஆலாத்திக்கன்னி தொடங்கி ஆட்டுக்கன்னி ஈறாக முப்பத்தைந்து கன்னிகளுக்கு மடை முதலிய கருமங்கள் இப்பத்ததியில் பயின்று வருகின்றன.

அத்துடன் தீர்த்தம் தெளிக்க மந்திரம், பிராண மந்திரம், முகம் கழுவி திருநீறு சாத்த மந்திரம் முதலியவைகளுடன் அவைகளுக்குரிய எந்திரங்களும் இதிலுள்ளன. மாரியம்மன் கும்ப அட்சரம், பிள்ளையார் அட்சரம், ஸ்ரீ முருகப் பெருமான் அட்சரம் ஆகியவைகளுடன் மாரியம்மன் பத்ததி முற்றிற்று என வருகின்றது. இப்பத்ததி எந்த மாரியம்மன் கோயிலுக்குரியது என அறிய முடியவில்லை.

**பரமநயினார் பத்ததி – தாழங்குடா**

தாழங்குடாவிலுள்ள பரமநயினார் கோயில் வழிபாடுகளைக் கூறுகின்ற பத்ததி பரமநயினார் பத்ததியாகும். இப்பத்ததி ஏட்டுப்பிரதியாக உள்ளது. இவ்வேட்டின் இருபது ஓலைகளில் இரு பக்கமும் எழுதப்பட்டள்ளன. இவ்வேடு 22 செ.மீ நீளத்தினையும், 3 செ.மீ அகலத்தினையும் உடையது. இதனைத்தந்துதவியவர் தற்காலம் மட்டக்களப்பு நகரில் வசிப்பவரும் தாழங்குடா பரமநயினார் கோயில் பூசகருமான திருவாளர் மாணிக்கப்போடி தங்கராஜா (வயது - 70) என்பவர்.

கும்பம் வைத்தல் என்னும் பிரதான தலைப்பின் கீழ் மண்டபம் காவல் பண்ணல், பிள்ளையாருக்கு கும்பம் வைத்தல், அகோர மாரியம்மனுக்கு கும்பம் வைத்தல்,அதற்குரிய மந்திரமும் செயல்முறையும் மடைவைத்தல் எனும் தலைப்பின் கீழ் மங்கலருக்கு மடை, பாலவதனனுக்கு மடை, வீரபத்திரருக்கு மடை, அனுமாருக்கு மடை, நீலாசோதயனுக்கு மடை, வைரவருக்கு மடை, பூதத்துக்கு மடை, பத்தரகாளிக்கு வட்டாமடை, சுவாதியம்மனுக்கு மடை, பரசுராமருக்கு மடையும் கும்பமும், அட்டபாலகர்களுக்கு எட்டு மடை, ஏழு கன்னிமாருக்கு ஏழு மடை, பிள்ளையாருக்கு வட்டாமடை, விறுமனுக்கு ஆறு மடை, பட்டாணிக்கு ஒரு மடை முதலியனவும் இன்ன திசையில் பந்தலிட்டு இன்ன தெய்வத்திற்கு இவ்வாறு மடை வைக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

சடங்குகளுக்குரிய மந்திரங்கள் கூறப்பட்டுள்ளன. காப்புக் கட்டும் மந்திரம், நோர்ப்புக் கட்டும் மந்திரம், நெல்லுக்குற்றும் மந்திரம், தூபம் காட்டும் மந்திரம், சாடிக்கு நூல் வளையும் மந்திரம், அடுப்பு வைப்பதற்குரிய மந்திரம், நோர்ப்புச் சோறு கரைத்தெறிய மந்திரம், கொலு நித்தாட்ட மந்திரம், பொங்கல் பானை எழுப்ப, படுகளம் எழுப்ப, அபிசேகம் பண்ணும் முறை, உக்கிர வீர கத்தி வெட்டு முதலிய சடங்கு முறைகளும் அவைகளுக்குரிய மந்திரங்களும் பாவனைகளும் கூறப்பட்டுள்ளன. திருநீறு போடல் என்னும் தலைப்பில் பத்ததி முற்றுப்பெற்றுள்ளது.

**பெரியதம்பிரான் பத்ததி – தாழங்குடா**

தாழங்குடாவில் உள்ள பெரியதம்பிரான் கோயில் சடங்கு முறைகளைக் கூறும் பத்ததி பெரியதம்பிரான் பத்ததி ஆகும். இப்பத்ததி ஏட்டுருவிலுள்ளது. 30 செ.மீ நீளமும், 3 செ.மீ அகலமும் உடையது. ஏட்டின் இரு பக்கங்களிலும் எழுதப்பட்டுள்ளன. இப்பத்ததியினைத் தந்துதவியவர் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்த சி.இராசேந்திரம் (வயது - 55 ) என்பவர். தற்காலம் அமரத்துவம் அடைந்துவிட்டார்.

இப்பத்ததியில் முதலில் சிவனுக்கு எந்திரமும் மடையும் என்னும் தலைப்பு உள்ளது. அடுத்து பிள்ளையாருக்கு எந்திரமும் மடையும், நீலாசோதயனுக்கு எந்திரமும் மடையும், விறுமா தேவனுக்கு மடை, கட்டாடிமாருக்கு மடை, கந்தசாமிக்கு சக்கரமும் மடையும், சக்திக்கு சக்கரமும் மடையும், வீரபத்திரருக்கு சக்கரமும் மந்திரமும் மடையும், அம்மன் கும்ப சக்கரம் என்பனவும் உள்ளன.

மடை வைத்தல் என்னும் பிரதான தலைப்பின் கீழ் 71 தெய்வங்களுக்கு மடைவைத்தல் முறையும் அவைகளுக்குரிய மந்திரங்களும் பாவனைகளும் கூறப்பட்டுள்ளன.

எந்திரமும் மந்திரமும் என்னும் தலைப்பில் அடுப்பு வைக்கும் எந்திரம், பானைக்கு நூல் சுற்றும் மந்திரம், தீர்த்தம் ஓதி வார்க்கும் மந்திரம், பானை பொங்க வைக்கும் மந்திரம், பால் வார்க்கும் மந்திரம், படுகளம் எழுப்பும் மந்திரம் முதலியனவும் அவற்றிற்குரிய பாவனைகளும் காணப்படுகின்றன.

இப்பத்ததியின் சிறப்பம்சம் இப்பத்ததியினை எழுதியவரது பெயர், எழுதப்பட்ட ஆண்டு, எழுதிய இடம் முதலியன இவ்வேட்டுப் பிரதியில் காணப்படுகின்றது. இவ்விபரம் வருமாறு

*கலியுக வருடம் ஆயிரத்து தொளாயிரத்து அஎ ஆண்டு கக மாதம் கஊ திகதி திங்கட்கிழமை தாளங்குடாவில் வசிக்கும் சின்னத்தம்பி காளிக்குட்டி ஆகிய நான் பெரியதம்பிரானுக்கு பத்தாசி தெய்வத்துடைய அருளைக் கொண்டு எழுதி முடித்தேன்* என எழுதப்பட்டுள்ளது.

**பெரியதம்பிரான் பத்ததி – ஆறுமுகத்தான் குடியிருப்பு**

ஆறுமுகத்தான் குடியிருப்பில் அமையப் பெற்றள்ள பெரியதம்பிரான் கோயிலுக்குரிய வழிபாட்டு முறைகளைக் கூறகின்ற பத்ததி பெரிய தம்பிரான் பத்ததி ஆகும். இப்பத்ததி ஏட்டு வடிவில் அமைந்துள்ளது. இவ்வேடு 15 செ.மீ நீளமும் 2 1/2 செ.மீ அகலமும் உடையது. இவ்வேடு இருபக்கங்களிலும் குற்று வைக்காத எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது. இதனைத் தந்துதவியவர் ஆறுமுகத்தான் குடியிருப்பைச் சேர்ந்தவரும் அவ்வூரிலுள்ள பெரிய தம்பிரான் கோயிலில் பரம்பரையில் வந்த பூசாரியுமாகிய திருவாளர் கணபதிப்பிள்ளை சேகரம் (வயது - 59) என்பவராவர்.

இப்பத்ததியின் முன்னுள்ள சில ஓலைகள் சிதைவடைந்துள்ள. சிதைவடைந்தவை போக எஞ்சியுள்ள ஓலைகளில் குற்றம் பொறுத்தருள வேண்டும் என்னும் பிராயச்சித்த விதி காணப்படுகின்றது. தொடர்ந்து கடற்கரையில் பூசை முடித்து தேங்காய் உடைத்து மண்ணெடுக்க மந்திரம், தீர்த்தம் எடுக்கும் மந்திரம், தீர்த்தம் தெளிக்கும் மந்திரம், அடுத்து வீரபத்திரன் மடைகட்ட சக்கரம், பெரியதம்பிரான் மடை கட்ட அட்சரம், துடக்க வைக்கும் மந்திரம், புடவை விரிக்க மந்திரம், துாபம் புகைக்க மந்திரம், கணபதி பூசை முதலிய சடங்குகளும் அட்சரமும் மந்திரமும் பாவனைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிள்ளையாருக்குரிய மடையும் மந்திரமும் பாவனையும், மடைக்கு தண்ணீர் எறியும் மந்திரம், மஞ்சட் தண்ணீர் எறியும் மந்திரம், மடை பிரிக்கும் மந்திரம், கந்தசாமிக்கு 12 மடைக்கச் சக்கரம், அம்மன் மடைச்சக்கரம், சாடி எழுப்ப சக்கரமும் மந்திரமும் மடையும்,

அடுப்புக்கு சக்கரமும் மந்திரமும் மடையும், மாரியம்மனுக்கு சக்கரம், நீலாசோதயனுக்கு மடையும், மந்திரமும் சக்கரமும், கும்பத்திற்குரிய அட்சரங்கள், மடைக்கு தீர்த்தம் தெளிக்கும் மந்திரம், படுகளம் எழுப்பும் மந்திரம், பானை வைக்க மந்திரம், பானைக்கு பத்திரம் எரிக்க மந்திரம், பால்வார்க்க மந்திரம், நூல் ஓதிக்கட்ட மந்திரம், பானைக்கு பத்திரம் சாத்த மந்திரம், பொங்கல் எழுப்ப மந்திரம், வெற்றிலை வைக்க மந்திரம், பூ ஓதிக்கட்ட மந்திரம், அட்டமானாக மந்திரக்கட்டு, கடலுள் பால் வார்க்க, செவ்வாய்ச்சடங்கு செய்யும் வகை, கோவலன் படுகளம் என பல்வேறு சடங்கு முறைகளும் அவைகளுக்குரிய மந்திரங்களும் அட்சரங்களும் செய்முறைகளும் இவ்வேட்டில் விரவிக்காணப்படுகின்றன. மேலும் இவ்வேட்டில் படுகளம் எழுப்ப என ஒன்பது இடங்களில் மந்திரமும் பாவனையும் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நிறைவாக

மட்டக்களப்பு தேசமெங்கும் பரந்து காணப்படும் பத்ததி வழிபாடுகள் இப்பிராந்திய மக்களின் பண்பாடுகள் மட்டுமன்றி வரலாற்று மூலங்களும் கூட. இவ்வழிபாட்டை நெறிப்படுத்துகின்ற அரிய பத்ததிகள் பல இன்று சிதைவடைந்துள்ளமையுடன் காணாமற் போயுமுள்ளன. பத்ததிகளை பராமரிப்போர் சரியான முறையில் அவைகளைக் கையாளாமையின் காரணமாக உருக்குலைந்துள்ளன. எமக்கு கிடைத்துள்ள பத்ததி ஏடுகளும், கையெழுத்துப் பிரதிகளும் கணணிப்பதிவாக்கும் செயற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பத்ததிகளை ஆவணப்படுத்தும் செயற்பாடு இன்றைய சூழலுக்கு இன்றியமையாதது.

## அடிக்குறிப்புகள்

1. பக்தவத்சலபாரதி, பண்பாட்டு மானிடவியல் இ ப.151
2. சிற்றம்பலம்,சி.,ஈழத்து இந்துசமய வரலாறு,ப.246
3. குணபாலசிங்கம்,வ., ம்டக்களப்பு மாவட்டத்தில் ஆகமம் சார்ந்த ஆகமம் சாராத சக்தி வழிபாடு - ஓர் ஒப்பீட்டாய்வு,.ப.160 (அச்சில் வராதது)
4. குணபாலசிங்கம்,வ., மு.கு.நூல்.,ப.161
5. குணபாலசிங்கம்,வ., மு.கு.நூல்.,ப.161
6. குணபாலசிங்கம்,வ., மு.கு.நூல்.,ப.162
7. குணபாலசிங்கம்,வ., மு.கு.நூல்.,ப.163

## உசாத்துணை மூலங்கள்


1. ஏறாவூர் காளிகோயில் பத்ததி - கையெழுத்துப் பிரதி
2. கன்னன்குடா கண்ணகையம்மன் பத்ததி கூனற்பலகை வதிமுறை (கை.எ.பி)
3. மாரியம்மன் பத்ததி - கையெழுத்துப் பிரதி
4. தாழங்குடா பரமநயினார் பத்ததி - ஏட்டுப்பிரதி
5. தாழங்குடா பெரியதம்பிரான் பத்ததி - ஏட்டுப்பிரதி
6. ஆறுமுகத்தான் குடியிருப்பு பெரியதம்பிரான் பத்ததி - ஏட்டுப்பிரதி

# ஈழத்து எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப் பாடல்களை ஆவணப்படுத்துதல்

சி. சந்திரசேகரம்

பல்வேறு மொழிகளிலும் இலக்கியத்தை எழுத்திலக்கியம், வாய்மொழி இலக்கியம் என்ற இரு வகைப்பாட்டின் அடிப்படையில் ஆய்வாளர்கள் பகுத்து நோக்குவர். ஆனால் தமிழ் இலக்கிய வரலாற்றை அவ்வாறு பகுப்பதில் சிக்கல்கள் உண்டு. ஏனெனில் தமிழில் வாய்மொழி மரபின் பண்புகளும் எழுத்து மரபின் பண்புகளும் கலந்ததும் இரண்டிற்கும் இடைப்பட்டதுமான மொழியாடல் முறையுள்ள பாடல் மரபொன்று நீண்டகாலமிருந்து நிலவிவந்துள்ளது. ஆனால் இத்தகைய பாடல்கள் இலக்கியங்களாக மதிக்கப்படவில்லை.

வாய்மொழி இலக்கிய மரபுகள் வலுவாக வேரூன்றியிருந்த சமூகச் சூழல்களில் எழுத்து மரபு அறிமுகமானதன் விளைவாகவே இப்பாடல்கள் உருவாயின. அதாவது எழுத்து மரபு அறிமுகமானபோது வாய்மொழி மரபுகளுக்குப் பரிச்சயமான மக்கள் தமது வாய்மொழிப் பாடல்களை எழுத்திலே உருவாக்கினர். குறிப்பாக அதிகம் எழுத்தறிவினைப் பெறாத கிராமியப் புலவர்கள் இத்தகைய பாடல்களை எழுதி அவற்றை மக்கள் மத்தியிலே அளிக்கை செய்கின்றனர். அவை எழுத்திலே உருவாக்கப்பட்டன. கையெழுத்துப் பிரதி, அச்சுப்பிரதி என்ற இரு வடிவங்களிலே இப்பாடல்கள் உள்ளன. அச்சுப்பிரதிகள் பெரும்பாலும் 4-12 பக்கங்கள் கொண்ட சிறு நூல் வடிவிலே உள்ளன. சில பாடல்கள் துண்டுப் பிரசுரங்களாகவும் உள்ளன. இவ் அச்சுப் பிரதிகளை கிராமியப் புலவர்கள் மக்கள் கூடும் இடங்களிலே பாடிக்காட்டி விற்பனை செய்கின்றனர். இவை எழுத்திலே உருவாக்கப்பட்டாலும் வாய்மொழி மரபில் காலூன்றியவையாக அமைந்தன. இப்பாடல்கள் பெரும்பாலும் வாய்மொழிகவே பரிமாற்றம் செய்யப்படுகின்றன. அளிக்கையே அப்பாடல்களின் மையமாக அமைந்தது.

கிராமிய மக்களுக்காக கிராமிய மக்களால் படைக்கப்பட்ட இலக்கியங்களாக அவை விளங்கின. தமது கிராமங்களில் அன்றாடம் நடக்கும் முக்கிய சம்பவங்கள், அனர்த்தங்கள், கொலைகள், சொந்தப் பிரச்சினைகள், சமூகச் சீர்கேடுகள், கோயில் வரலாறுகள் முதலானவை பற்றி இப்புலவர்கள் அதிகம் பாடினர்.

தமிழகத்திலே இத்தகைய பாடல் மரபு பரவலாக நிலவிவந்துள்ளது என்பதை இரா. வேங்கடாசலபதியின் முச்சந்தி இலக்கியம் என்ற நூல் எடுத்துக்காட்டுகின்றது. பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதிய சில கட்டுரைகளும் இந்த மரபு பற்றி எடுத்துக்காட்டுகின்றன.

ஈழத்தில் தமிழர் வாழ்கின்ற பல்வேறு பிரதேசங்களிலும் இந்தப் பாடல் மரபு நிலவிவந்துள்ளது. எனினும் மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய பிரதேசங்களிலே இப்பாடல்கள் இன்றுவரை வலுவானதொரு மரபாக நிலவிவருகின்றது. நீண்டகாலமாக இப்பிரதேச மக்களின்

முக்கியமானதொரு இலக்கியச் செயற்பாடாகவும் அவர்களது வாழ்வியல் இயக்கத்திற்கு முக்கிய பங்களிப்புச் செய்வனவாகவும் இப்பாடல்கள் இருந்துவந்தபோதும் அவை ஆவணப்படுத்தப்பட வில்லை. அதனால் அவை தொடர்ந்து அழிவடைந்துகொண்டு செல்வனவாக உள்ளன. இவ்வாறு அழிவடைவதைக்கு முக்கியமாக இரு காரணங்கள் அடிப்படையாக உள்ளன.

1. இப்பாடல்கள் இலக்கியங்களாகக் கருதப்படாமை: இதனால் இவை எவ்வித கவனிப்புக்கும் உட்படவில்லை. அவற்றை உருவாக்கும் படைப்பாளிகள் புலவர்களாகவோ கவிஞர்களாகவோ மதிக்கப்படுவதில்லை.
2. இப்பாடல்கள் கையெழுத்துப் பிரதிகளாகவும் எளிய தாள்களில் அச்சிடப்பட்ட சிறிய அச்சுப் பிரதிகளாகவும் காணப்படுவதனால் குறுகிய காலத்தினுள் அழிந்துபோகக் கூடியனவாக உள்ளன. அதிகமான பாடல்கள் குறிப்பிட்ட புலவனின் மறைவின் பின் பேணுகை அற்று அழிந்துபோகின்றன.

இப்பிரதேசங்களில் எழுத்து மரபுசார்ந்த வாய்மொழிப் பாடல்களை எழுதுகின்ற பல கிராமியப் புலவர்கள் 19 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் வாழ்ந்துள்ளனர். ஆனால் அவர்களது பாடல்கள் கிடைக்கவில்லை அல்லது ஒருசில பாடற் பகுதிகள் மட்டுமே கிடைக்கின்றன. 20ஆம் நூ ற்றாண்டிலேயே அதிகமாக கிராமியப் புலவர்கள் வாழ்ந்துள்ளனர். ஆனாலும் அவர்களில் பலரின் பாடல்களின் ஒருசில பகுதிகள் மட்டும் வாய்மொழியாக நிலவுகின்றன. எனவே இவை தொடர்ந்து அழிவடைந்து செல்வதைத் தடுப்பதற்காக முறையாக ஆவணப்படுத்துவது அவசியமாகும். அப்போதே இப்பிரதேசங்களது இலக்கிய வரலாற்றை முழுமையுறச்செய்யலாம். இதனைக் கருத்திற் கொண்டு மட்டக்களப்பு - அம்பாறைப் பிரதேசங்களில் 2010-2011 காலப்பகுதியில் ஆய்வாளர் நேரடியாக மேற்கொண்ட கள ஆய்வுகள் ஊடாக எழுத்து மரபு சார்ந்த பல பாடல்களும் அவை தொடர்பான தகவல்களும் திரட்டப்பட்டன. இப்பாடல்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு பொருள் அடிப்படையில் பின்வருமாறு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

1. சமூகப் பிரச்சினை பற்றிய பாடல்கள்
2. அரசியல் சார்ந்த பாடல்கள்
3. சமயப் பாடல்கள்

இந்தப் பிரிவுகள் ஒவ்வொன்றினுள்ளும் பல்வேறு உப பிரிவுகள் அடங்குகின்றன.

எழுத்து மரபுசார்ந்த வாய்மொழிப் பாடல்கள் பெரும்பாலும் சமூகப் பிரச்சினை பற்றியனவாகவே அமைந்துள்ளன. இந்த வகைப்பாட்டினுள் இயற்கை அனர்த்தங்கள், மரணங்கள், குடும்பப் பிரச்சினைகள், வெளிநாட்டிற்குப் பணியாட்களாகச் செல்லுதல், சமூகச் சீரழிவுகள் எனப் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய பாடல்கள் அடங்கும்.

சமுகப்பிரச்சினை பற்றிய பாடல்களில் அதிகமானவை இயற்கை அனர்த்தங்கள் பற்றியனவாகும். இவை பெரும்பாலும் நூல் வடிவில் வந்தவையாகவும் உள்ளன. இப்பகுதியில் 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, 1978 ஆம் ஆண்டு எற்பட்ட சூறாவளி, 2004

இல் ஏற்பட்ட சுனாமி ஆகிய இயற்கை அனர்த்தங்கள் பற்றிய பாடல்கள் அடங்குகின்றன. இவை அவ்வனர்த்தங்கள் ஏற்பட்ட பின்னர் நிலவிய துன்பியல் சூழலில் பாடப்பட்டவையாகும். இப்பாடல்கள் காவியம், அம்மானை, கும்மி ஆகிய வடிவங்களில் பாடப்பட்டவையாகும். குறிப்பிட்ட அனர்த்தங்களின்போது தமது பிரதேச மக்கள் எதிர்கொண்ட அவலங்களையும் அழிவுகளையும் பற்றிய வரலாற்றுப் பதிவுகளாகவே இப்பாடல்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

1. சூறாவளியின் கொடுமையினையிட்டுப் பாடப்பட்ட கும்மிப்பாட்டு : மண்டூர் கோ. நாராயணபிள்ளையால் பாடப்பட்டது. 56 பாடல்களையும் 8 பக்கங்களையும் கொண்டது.
2. சூறாவளித் துயர் அம்மானை: மண்டூர் மா. பொன்னன் என்பவரால் பாடப்பட்டது. எட்டு அடிகளால் ஆன 39 பாடல்களையும் 9 பக்கங்களையும் கொண்டது
3. புயல் காவியம்: சேனைக்குடியிருப்பு நா.வினாயகமுர்த்தி என்பவரால் பாடப்பட்டது. நான்கடிகளால் ஆன 72 பாடல்களைக் கொண்டது. 9 பக்கங்களைக் கொண்டது
4. சூறாவளி அம்மானை: கோட்டைக்கல்லாறு மு. காசுபதியால் பாடப்பட்டது. இந்நூல் 8 பக்கங்களையும் 216 அடிகளையும் கொண்டது.
5. புயல் காவியம்: கன்னன்குடா மா.சிதம்பரப்பிள்ளையால் பாடப்பட்டது. எட்டடிகளால் ஆன 23 பாடல்களையும் 5 பக்கங்களையும் கொண்டது.
6. சூறாவளி துயரக் காவியம்: ஏறாவூர் சீனிமுகம்மது அண்ணாவியால் பாடப்பட்டது. நான்கடிகளால் ஆன 51 பாடல்களைக்கொண்டது. துண்டுப்பிரசுரமாக வெளிவந்தது.
7. சூறாவளி அம்மானை: முதலைக்குடா ந.மா. கேதாரபிள்ளையால் பாடப்பட்டது. 250 இற்கும் மேலான அடிகளைக்கொண்ட கையெழுத்துப் பிரதி.
8. 1957 ஆம் ஆண்டு வெள்ளக் காவியம்: மருதமுனை அகமது லெவ்வை முகம்மது இஸ்மாயில் என்பவரால் பாடப்பட்டது. நான்கடிகளால் ஆன 70 பாடல்களைக் கொண்ட கையெழுத்துப் பிரதி.
9. 1957 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பாடல்: மருதமுனை அகமது லெவ்வை முகம்மது இஸ்மாயிலால் பாடப்பட்டது. நான்கடிகளால் ஆன 34 பாடல்களைக்கொண்ட கையெழுத்துப் பிரதி.
10. 1957 ஆம் ஆண்டு பெருங்காற்று மழையால் ஏற்பட்ட பெருவெள்ளத்தம்மானை: சித்தாண்டி த. சுப்பிரமணியம் என்பவரால் பாடப்பட்டது. கையெழுத்துப் பிரதியாக இருந்த இந்நூல் 2006 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது. 86 ஈரடிப் பாடல்களைக் கொண்டது.
11. ஆழிப்பேரலையின் அனர்த்த காவியம்: சேனைக்குடியிருப்பு வை. கணேசன் என்பவரால் பாடப்பட்டது. நான்கடிகளால் ஆன 76 பாடல்களையும் 14 பக்கங்களையும் கொண்டது.
12. சுனாமி அம்மானை: வலையிறவு கா.சித்திரவேல் என்பவரால் பாடப்பட்டது. 317 அடிகளையும் 10 பக்கங்களையும் கொண்ட நூல்.
13. சுனாமி கடல் கொந்தளிப்புக் காவியம்: ஏறாவூர் எம்.எம்.எம். இஸ்மாயில் என்பவரால் பாடப்பட்டது. 11 பக்கங்களையும் 87 நான்கடிப் பாடல்களையும் கொண்டது.
14. சுனாமியலை கடல் கொந்தளிப்புத் துயரக் காவியம்: ஏறாவூர் சீ. இல்யாஸ் என்பவரால் பாடப்பட்டது. தட்டச்சுப் பிரதியாக உள்ளது.நான்கடிகளால் ஆன 70 பாடல்களைக் கொண்டது.
15. சுனாமி ஒப்பாரி: மருதமுனை அ.றஹ்மத்தும்மாவால் பாடப்பட்டது. 20 கவிகளைக் கொண்ட கையெழுத்துப் பிரதியாகும்.

மரணங்கள் பற்றிய பாடல் பகுதியில் தமது கிராமங்களில் ஏற்பட்ட பரிதாபகரமான மரணங்கள், கொலைகள் என்பன பற்றிய பாடல்கள் அடங்குகின்றன. இவற்றில் கொலைகள் பற்றிய பாடல்கள் கதைப்பாடல்களாகவே அமைகின்றன. அதாவது குறித்த சம்பவம் பற்றிய விபரிப்புக்களாக இவை அமைகின்றன. ஆனால் பரிதாபகரமான மரணங்கள் பற்றிய பாடல்களில் அவ்வாறன்றி புலவனின் துன்பியல் உணர்ச்சி வெளிப்பாடு முக்கியம் பெறுகின்றது. இவை பெரும்பாலும் ஒப்பாரிப் பாடல்களின் அமைப்பைக் கொண்டவை. அத்தகைய பாடல்கள் பின்வருமாறு:

1. மாவில் அம்மானை: கதிரவெளி ச. அரசுமணி என்பவரால் பாடப்பட்டது. மாவில் என்ற இடத்தைச் சேர்ந்த வேலாயுதம் என்பவர் 1967 ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட போது இப்பாடல் பாடப்பட்டது. வேலாயுதத்தின் வாழ்க்கை வரலாற்றையும் கொலைசெய்யப்பட்ட வரலாற்றையும் கூறும் கதைப்பாடலாக உள்ளது. 250 அடிகளுக்கு மேற்பட்ட அடிகளைக்கொண்ட இப்பாடல் கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
2. இறந்த மகன்மீது ஒப்பாரி: வலையிறவு ஏ.கந்தசாமி என்பவரால் பாடப்பட்டது. தனது மகன் திடீர் நோயுற்று இறந்தபோது தன் வேதனையை இறைவனிடம் சொல்லிப் புலம்புவதாக அமையும் இப்பாடல் 75 அடிகளைக் கொண்டது.
3. ஆஷ்ரப் ஒப்பாரி: மருதமுனை அ.றஹ்மத்தும்மாவால் பாடப்பட்டது. 170 கவிகளால் ஆனது. ஒப்பாரியின் பல்வேறு பொருளமைப்புக்களையும் கொண்டது. கையெழுத்துப் பிரதியாகவும் ஒலிப்பதிவுப் பிரதியாகவும் உள்ளது.
4. கோடைப்பூ பறிக்கச் சென்று இறந்த பிள்ளை மீது பாடிய அம்மானை: பழுகாமம் வே.சின்னத்தம்பி என்பவரால் 1980களில் பாடப்பட்டது. 50 இற்கும் மேலான அடிகளைக் கொண்ட இப்பாடல் கையெழுத்துப் பிரதியாகவும் வாய்மொழியாகவும் உள்ளது.

எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப் பாடல்களில் குடும்பப் பிரச்சினை பற்றிய பாடல்கள் மிகப் பிரதானமானவை. முக்கியமாக முஸ்லிம் பெண்கள் தமக்குக் குடும்பத்திலே ஏற்படும் பிரச்சினைகளையும் துயரங்களையும் கவிகளாக எழுதும் வழக்கைக் கொண்டள்ளனர். இத்தகைய கவிகளிலே பெண்களின் இயல்பான வேதனை உணர்வுகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய கவித் தொகுதிகள் பின்வருமாறு:

1. மூத்த மகளுக்குப் பாடிய கவிகள்: முக்குமுத்தும்மா என்பவரால் பாடப்பட்டது. இதில் 116 கவிகள் உள்ளன. கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
2. இளைய மகளுக்குப் பாடிய கவிகள்: முக்குமுத்தும்மாவால் பாடப்பட்ட இக்கவித் தொகுதியில் 48 கவிகள் உள்ளன. கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
3. ராத்தாவுக்குப் பாடிய துயரக்கவிகள்: நஜீபா என்னும் பெண் தனது ராத்தாவுக்குப் பாடி அனுப்பிய இக்கவித் தொகுதியில் 63 கவிகள் உள்ளன.
4. கணவனால் கைவிடப்பட்ட ஒரு இளம் பெண்ணின் கவிகள்: அக்கரைப்பற்றைச் சேர்ந்த ஒரு பெண்ணால் 1970 களில் பாடப்பட்டது. 190 இற்கு மேலான கவிகள் அடங்கும் இத்தொகுதி கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
5. பிள்ளைத் தவம் : ஏறாவூரைச் சேர்ந்த மைமுநாச்சி என்பவரால் தனக்குப் பிள்ளை இல்லை என்ற வேதனையால் 19ஆம் நூற்றாண்டில் பாடப்பட்டது. தற்போது வாய்மொழியில் நிலவுகின்றது. 30 இற்கும் மேலான கவிகளைக் கொண்டது.

6. நோயுற்றவருக்குப் பாடிய இரப்புத் துவா: அ. மீராஉம்மாவால் பாடப்பட்டது. கையெழுத்துப் பிரதி
7. நோய்தீர்க்கும் ஒப்பாரி: அ. மீராஉம்மாவால் பாடப்பட்டது. கையெழுத்துப் பிரதி
8. பிரிந்த குடும்பத்தைச் சேர்க்கும் பிரார்த்தனை: அ. மீராஉம்மாவால் பாடப்பட்டது. கையெழுத்துப் பிரதி

குடும்பப் பிரச்சினை பற்றிய பாடல்கள் எல்லாம் கையெழுத்தில் அல்லது வாய்மொழியிலேயே உள்ளன. சில புலவர்கள் குடும்பத்தில் மட்டுமன்றி வேறு பிரச்சினைகளால் தமக்கு ஏற்படுகின்ற துயரங்களைப் பொருளாகக் கொண்ட பாடல்களை எழுதி அவற்றை அச்சிட்டு மக்கள் மத்தியிலே விற்பனையும் செய்கின்றனர். அவற்றில் சில நூல்கள் பின்வருமாறு:

1. தென்கதிரை முருகன் பேரில் சிறைமீட்ட கும்மி: ந.மா.கேதாரபிள்ளையால் தனது சிறை மீட்புப் பற்றி இறைவனிடம் வேண்டிப் பாடப்பட்டது. 70 பாடல்களைக் கொண்ட 10 பக்க நூலாகும்.
2. சின்னக்குளத்து காளியம்மன் சிறைமீட்ட காவியம்: ந.மா.கேதாரபிள்ளையால் தனது சிறை மீட்புப் பற்றி இறைவனிடம் வேண்டிப் பாடப்பட்டது. இந்நூல் எட்டு அடிகளால் ஆன 30 பாடல்களைக் கொண்டது.
3. செல்லப்பா சிறைமீண்ட திருப்பதிகம்: செல்லப்பா என்பவரால் 70 களில் பாடப்பட்டு அச்சாக்கப்பட்டது. தனது சிறைவாழ்வு, சிறை மீட்பு என்பன பற்றிப் பாடப்பட்டது. இந்நூல் எட்டு அடிகளால் ஆன 27 சிந்துப் பாடல்களைக் கொண்டது.

அடுத்து கிராமப்புறங்களில் மக்கள் மத்தியகிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புக்காகச் செல்வது தொடர்பாக பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.அவற்றைப் பொருளாகக் கொண்டு பல நெடும்பாடல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இப்பாடல்கள் அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதை முக்கிய இலக்காகக் கொண்டுள்ளன. அத்தகைய சில பாடல்கள் பின்வருமாறு:

1. வெளிநாடு போன வெள்ளம்மா: சீ.இல்யாஸ், எம்.எம்.எம். இஸ்மாயில் ஆகியோரால் 1986 இல் பாடப்பட்டது. இக்கதைப்பாடல் 10 பகுதிகளைக் கொண்டது. 70 இற்கும் மேலான பாடல்களைக் கொண்ட இப்பிரதி தட்டச்சுப் பிரதியாகவும் ஒலிப்பதிவுப் பிரதியாகவும் உள்ளது.
2. சத்தாரும் சௌதாவும்: எம்.எம்.எம். இஸ்மாயில் என்பவரால் எண்பதுகளின் பிற்கூற்றில் பாடப்பட்டது. 9 பகுதிகளைக் கொண்ட இக்கதைப்பாடலில் 56 பாடல்கள் உள்ளன.
3. கட்டார் போன கலா: கன்னன்குடா கி.அருளம்பலம் என்பவரால் 1990 களில் எழுதப்பட்டது. வெளிநாடு போன வெள்ளம்மாவைப் பின்பற்றி கூத்துப்பாடல் அமைப்பில் எழுதப்பட்டுள்ளது. கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
4. வட்டிநாச்சி பொட்டகப்போடி: கி.அருளம்பலத்தால் 2012 இல் எழுதப்பட்டது. கூத்துப் பாடல் அமைப்பில் பாடப்பட்ட இப்பாடல் கையெழுத்துப் பிரதியாக உள்ளது.

இப்பாடல்கள் மத்திய கிழக்கு நாடுகளில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், முகவர்களால் ஏழைகள் ஏமாற்றப்படுதல், குடும்பச் சீரழிவு, கணவன்மாரின் ஊதாரித்தனம் ஆகிய நடைமுறைப் பிரச்சினைகளை எடுத்துக்காட்டுவனவாக உள்ளன.

இனமுரண்பாடுகளும் போராட்டமும் நிலவிய காலகட்டங்களில் அவற்றைப் பொருளாகக் கொண்டு அதிகமான பாடல்களைக் கிராமியப்புலவர்கள் பாடியுள்ளனர். அந்தவகையில் ஆரம்பகாலங்களில் இனமுரண்பாட்டைப் பொருளாகக் கொண்ட பல பாடல்கள் உருவாயின. ஆயினும் நாட்டின் சுதந்திரமற்ற சூழல் காரணமாக அவை பேணப்படாமல் அழிந்துவிட்டன. ஒருசில பாடல்களே கிடைக்கப்பெற்றன. எடுத்துக்காட்டாக,

1. திருக்கோயில் சித்திரவேல் செம்மல் பேரில் தமிழ்மொழி அனுதாபப் பத்து: இந்நூலை திருக்கோயிலைச் சேர்ந்த வ. இராசையா என்பவர் பாடினார். 1956 இல் கல்லோயாச் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டபோது அதற்கு எதிரான உணர்வுகளை வெளிப்படுத்தி அதே ஆண்டு இச்சிந்துப் பாடலை அவர் பாடினார். இந்நூல் எட்டு அடிகளால் ஆன 16 பாடல்களையும் 4 பக்கங்களையும் கொண்டது.

இதன் பின் இனப்போராட்டம் நடைபெற்ற சூழலில் கிராமியப் புலவர்களின் பாடல்களில் இரு போக்குகள் காணப்பட்டன.

1. இன விடுதலை சார்ந்த பாடல்கள்
2. போரின் அவலங்ளைச் சித்திரிக்கும் பாடல்கள்.

முதலாவது வகைக்குப் பின்வரும் பாடல்களைக் கூறலாம்:

1. தோல்வி நிச்சயம்: இது கூத்துப் பாடல் அமைப்பில் எழுதப்பட்டது. நையாண்டித் தன்மையான கதைப்பாடலாக அமையும் இது கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
2. வாராயென் தோழா, சிங்கள அரசே நில்லு, வீரம் வீரம் வீரம் என்னடா வீரம், ஆறுமா மனம் ஆறுமா: ஆகிய பாடல்களை சி.யோகநாதன் என்பவர் எழுதியுள்ளார். இவற்றை அவரே இசையமைத்தும் பாடினார்.
3. தனிநாடு கேக்கிறாண்டா, எல்ரிரிகாறன் புள்ள புடிக்கான்: இப்பாடல்களை த.கதிர்காமத்தம்பி என்பவர் பாடியுள்ளார்.

எனினும் இக்காலகட்டத்தில் உருவாகிய அரசியல் சார் பாடல்களில் அதிகமானவை போரின் கொடூரங்களையும் மக்கள் அனுபவித்த அவலங்களையும் பாடுபொருளாகக் கொண்டன. குறிப்பாக இடப்பெயர்வு, அகதிவாழ்வு என்பன முக்கியமாகப் பேசப்பட்டன. பின்வரும் பாடல்கள் இத்தகைய அவலங்களை வெளிப்படுத்துவன.

1. அகதிகளின் அநியாயத் துயர வரலாற்று அம்மானை: கா. சித்திரவேலால் 2007 ஆம் ஆண்டு பாடப்பட்டது. இப்பாடல் இரு பகுதிகளைக் கொண்டதாக அமைந்தது. முதலாவது பகுதி இனப்பிரச்சினையின் வரலாறு கூறுவதாகவும் இரண்டாவது பகுதி 2007 ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வு, அகதிவாழ்வு என்பன பற்றிப் பேசுவதாகவும் அமைந்தது.
2. தமிழ் அகதிகளுக்காக மாமாங்கப்பிள்ளையார் தோத்திரம்: ந.மா.கேதாரபிள்ளையால் 2007 ஆம் ஆண்டு பாடப்பட்டது. எட்டடிகளால் அமைந்த 40 பாடல்களைக் கொண்டது. இப்பாடல்கள் சிந்து வடிவத்தில் அமைந்துள்ளன.

3. அகதி அம்மானை: கி. அருளம்பலத்தால் 2007 இல் பாடப்பட்டது. நான்கடிகளால் அமைந்த 141 பாடல்களைக் கொண்ட இத்தொகுதி கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
4. அகதிகள் ஒப்பாரி: அக்கரைப்பற்றைச் சேர்ந்த இ.மு.அகமது லெவ்வை என்பவரால் பாடப்பட்டது. கையெழுத்துப் பிரதியாக உள்ள இத்தொகுதியில் 30 கவிகள் உள்ளன.
5. வன்செயல் கட்டுப் பாடல்: செ.தம்பிராசா என்பவரால் 1991 இல் பாடப்பட்டது. எட்டு அடிகளால் ஆன 10 சிந்துப் பாடல்களைக் கொண்டது. கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
6. முருகன் பத்திப் பதம்: செ.தம்பிராசா என்பவரால் 1990 இல் பாடப்பட்டது. எட்டு அடிகளால் ஆன 10 சிந்துப் பாடல்களைக் கொண்டது.கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
7. இலங்கையின் கோலத்து அம்மானை: ந.மா. கேதாரபிள்ளையால் பாடப்பட்டது. 1998 ஆம் ஆண்டில் இருந்து 2000 ஆம் ஆண்டு வரை எழுதப்பட்டது. இனமுரண்பாடுகளையும் போராட்டச் சூழலையும் வரலாற்று ஓட்டத்தில் பாடும் இப்பாடல் 300 இற்கும் மேலான அடிகளைக் கொண்டது. கையெழுத்துப் பிரதியாகவே உள்ளது.
8. எங்கட நாட்டுக்குள்ள என்னடாப்பா, செல்லப்போட்டு அடிச்சி அடிச்சி, பாலம் பாக்கப் போவம், கப்பல் நிண்டு அடிக்கிறது: ஆகிய பாடல்களை த.கதிர்காமத்தம்பி என்பவர் பாடினார்.

கிராமியப் புலவர்களின் பாடல்களில் கணிசமானவை தமது பிரதேசக் கோயில்கள் பற்றிய வரலாற்றுப் பாடல்களாகவும் வழிபாட்டுப் பாடல்களாகவும் அமைந்தன. இவ்வழிபாட்டுப் பாடல்கள் பெரும்பாலும் வளம் வேண்டுவனவாகவே அமைந்தன. அத்தகைய பாடல்கள் பின்வருமாறு:

1. கன்னன்குடா கண்ணகி அம்மன் பேரில் காவடிப் பாட்டு: கன்னன்குடா மா.சிதம்பரப் பிள்ளையால் 1984 இல் பாடப்பட்டது.
2. புளியடிமடு வடபத்திரகாளி அம்மன் காவியம்: மா.சிதம்பரப்பிள்ளையால் 1986 இல் பாடப்பட்டது. 12 பாடல்களையும் 4 பக்கங்களையும் கொண்டது.
3. புளியடிமடு வடபத்திரகாளி அம்மன் காவடிப் பாடல்களும் காவியப் பாடல்களும்: கி.அருளம்பலம் என்பவரால் 2010 ஆம் ஆண்டு பாடப்பட்டது. 12 காவியப் பாடல்களையும் 12 காவடிச் சிந்துப் பாடல்களையும் கொண்டது.
4. சின்னக்குள ஈச்சநகர் காளியம்மன் தலவரலாறு காவிய கும்மி: ந.மா.கேதாரபிள்ளையால் 1999 இல் பாடப்பட்டது. 30 காவியப் பாடல்களையும் 60 கும்மிப் பாடல்களையும் கொண்டது.
5. மட்டக்களப்பு அமிர்தகழிப் பிள்ளையார் அகவல் வினாயகர் தோத்திரம்: ந.மா. கேதாரபிள்ளையால் 1998 இல் பாடப்பட்டது. 16 காவடிச் சிந்துப் பாடல்களைக் கொண்டது.
6. தாந்தாமலை வரலாற்று அம்மானை: ந.மா.கேதாரபிள்ளையால் 2004 இல் பாடப்பட்டது. 360 அடிகளைக் கொண்டது.
7. மண்டூர் லிங்கநகர் நாவலடி நாகதம்பிரான் அம்மானை: மண்டூர் மா. பொன்னனால் 1981 இல் பாடப்பட்டது. எட்டு அடிகளால் ஆன 28 பாடல்கள் கொண்டது.
8. காளியம்மன் பேரில் காவடிச் சிந்து: கா.சித்திரவேல் பாடினார். கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
9. சித்தாண்டி முச்சந்திப் பிள்ளையார் காவடிப் பாடல்கள்: சி. பிரசாத் என்பவரால் 2010 ஆம் ஆண்டு பாடப்பட்டது. 13 பாடல்களைக் கொண்ட கையெழுத்துப் பிரதியாக உள்ளது.
10. கன்னன்குடா கண்ணகி அம்பாள் ஆலயத்தில் கள்வர் பிடிபட்ட காவியம்: மா. சிதம்பரப்பிள்ளையால் பாடப்பட்ட இந்நூலில் 14 பாடல்கள் உள்ளன.

11. கன்னன்குடா கண்ணகி அம்மன் மழைக்காவியம்: கன்னன்குடா நோஞ்சிப்போடி என்பவரால் பாடப்பட்ட இந்நூல் 20 பாடல்களைக் கொண்டது.
12. கன்னன்குடா கண்ணகி அம்மன் காவடிப் பாடல்: கி. அருளம்பலம் 2010 ஆம் ஆண்டு பாடிய இந்நூலில் 32 சிந்துப் பாடல்கள் உள்ளன.
13. சித்தாண்டி முத்துமாரியம்மன் காவியமும், தாலாட்டும்: வி.சிகண்டிதாசன் என்பவரால் பாடப்பட்டது. இந்நூல் 34 காவியப்பாடல்களையும் 22 தாலாட்டுப் பாடல்களையும் கொண்டுள்ளது.

இப் பாடல்கள் எதுவும் ஆவணப்படுத்தப்படவில்லை. இவற்றை ஆவணப்படுத்துவது எமது பிரதான கடனாகும். அதனூடாகவே எமது இலக்கிய வரலாற்றை முழுமையுறச் செய்யமுடியும். இத்தகைய ஆவணப்படுத்தலைச் செய்ய முன்னர் இப்பாடல் மரபினை நியமமான வாய்மொழிப் பாடல்களாகக் கொள்வதா அல்லது தனியானதொரு வாய்மொழிப் பாடல் வகையாகக் கொள்வதா என்ற பிரச்சினைக்குத் தீர்வு காணுதல் வேண்டும். ஏனெனில் ஈழத்தில் மட்டுமன்றி தமிழகத்திலும் இதுபற்றிய குழப்பநிலை உண்டு.

ஈழத்துவாய்மொழிப்பாடல்களைத்தொகுத்தவர்களும்ஆய்வுசெய்தசிலரும்இப்பாடல்களையும் நியமமான வாய்மொழிப் பாடல்களையும் பிரித்தறியாது ஒன்றாக நோக்கியுள்ளனர். ‘இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல்’ தொகுதியில் கலையரசி சின்னையா பின்வருமாறு கூறுவார்:

> *“ஈழத்தில் வழங்கும் நாட்டுப் பாடல்கள் எனத் தொகுத்து வெளியிட்டுள்ள பாடல்களில் சில இவை சாதாரண கல்வி அறிவற்ற மக்களின் வாயிலிருந்து தோன்றியனவா? என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றன. வசந்தன் கவித்திரட்டில் உள்ள பாடல்கள் பலவும் எண்ணெய்ச் சிந்து என்ற வகையில் ஈழத்தில் வழங்கும் பாடல்களும் வன்னிப் பிரதேசத்தில் வழங்கும் குருவிப் பள்ளு, பண்டிப் பள்ளு சிந்துகள் என்பனவும் இவற்றுட் சில “*(1980:249)

எனக் கூறுகின்றார். ஆயினும் அண்மைக் காலங்களில் கா.சிவத்தம்பி, மௌ.சித்திரலேகா, செ.யோகராசா ஆகியோர் இப்பாடல்களை தனியானதொரு இலக்கியத் தொகுதியாகக்கொண்டு சில கட்டுரைகளை எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இப்பாடல்களின் பிரதான பண்புகளாகிய எழுத்திலே உருவாக்கப்படுதல், ஆசிரியரின் பெயரைக் கொண்டிருத்தல் அல்லது கூட்டுநிலை ஆசிரியத் தன்மை இன்மை, உருவாகும் காலத்தைக் கொண்டிருத்தல் ஆகியவை இப்பாடல்களை நியமமான வாய்மொழிப் பாடல்களில் இருந்து வேறுபட்டவை என்பதைக் காட்டுகின்றன. அதேவேளை வாய்மொழிப் பரிமாற்றமுறை, வாய்மொழி இலக்கிய உற்பத்திக் கூறுகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருத்தல் ஆகியவற்றின் அடிப்படையில் வாய்மொழிப் பாடல்களாக உள்ளன. எனவே இப்பாடல்களை வாய்மொழிப் பாரம்பரியத்தில் தனியானதொரு வகைப்பாடாக அங்கீகரிப்பதும் அதனை ஏற்றுக் கொள்வதும் அவசியமாகும்.

இவ்வாறு தனியானதொரு பகுதியாகக் கொள்ளும்போது அதனைச் சுட்டுவதற்குப் பொருத்தமானதொரு பெயரை இடுவதும் அவசியமாகும். இது பற்றி இலக்கிய அறிஞர்கள் மத்தியில் வாதங்கள் இடம்பெறவேண்டும். ஆனால் இதுவரை அத்தகைய வாதங்கள் எதுவும் இடம்பெறவில்லை. இப்பாடல்கள் பற்றிக் கட்டுரைகள் எழுதியவர்களும் இது பற்றிச்

சிந்திக்கவில்லை. கா.சிவத்தம்பி, செ.யோகராசா ஆகியோர் அரைவாய்மொழி, பாதி வாய்மொழி, ஓரளவு வாய்மொழி, எழுத்துநிலைபெற்ற வாய்மொழிப் பாடல்கள் என்றெல்லாம் குறிப்பிடுவது சற்றும் பொருத்தமானதாக அமையவில்லை. இம்மரபைச் சுட்டும் சொல் எழுத்து மரபினதும் வாய்மொழி மரபினதும் இணைவு, வாய்மொழிப் பாரம்பரியத்தின் பகுதியாக அமைதல் ஆகிய பண்புகளை வெளிப்படுத்துவதாக அமையவேண்டும். இவற்றைக் கருத்திற்கொண்டு 'எழுத்து மரபு சார்ந்த வாய்மொழிப் பாடல்கள்' என்ற தொடர் சற்றுப் பொருத்தமானது எனக் கருதி அத்தொடரே இக்கட்டுரையில் பயன்படுத்தப்படுகிறது. எனினும் இது முழுமையானதல்ல. இது பற்றி வாதங்கள் இடம்பெற வேண்டும்.

ஆபிரிக்காவில் இத்தகையதொரு இலக்கிய மரபை Orature என அழைப்பர். அதாவது Oral, Literature ஆகிய சொற்களின் இணைவாக அச்சொல் உருவாக்கப்பட்டு அது ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளமை இவ்விடத்தில் சுட்டிக்காட்டத்தக்கது.

ஆகவே இதுவரை காலமும் கவனிக்கப்படாமல் இருந்த இத்தகைய பாடல் மரபை ஒரு இலக்கியத் தொகுதியாக ஏற்றுக்கொள்வதும் ஆவணப்படுத்துவதும் இலக்கிய வரலாற்றிற்கு நாம் புரிகின்ற முதன்மைப் பணியாகும்.

## 1. உசாத்துணை:


1. கலையரசி,சி.இ 1980,'வாய்மொழி இலக்கியம், எழுத்திலக்கியம் பரஸ்பர பாதிப்புக்கள்' சிவத்தம்பி,கா (பதி), இலங்கைத்தமிழ் நாட்டார் வழக்கியல், தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.


## 2. கள ஆய்வில் தகவல் வழங்கியோரின் விபரங்கள்:

பெயர், வயது. கல்வி, தொழில், ஊர், சந்தித்த நாள் என்ற ஒழுங்கில் தரப்படுகிறது.

1. அருளம்மா,சு., 65, தரம் 7, ஆயுள்வேத வைத்தியர், அக்கரைப்பற்று. 06.11.2010.
2. அலியார்,க., 47, தரம் 3, கூலி, சம்மாந்துறை, 12.01.2011.
3. அஹமதுலெவ்வை,மு.இ, 84, எஸ்.எஸ்.சி, ஓய்வுபெற்ற அதிபர், அக்கரைப்பற்று, 23.01.2012.
4. அஜிவத்,எம்.எம்.எம்., 65, எஸ்.எஸ்.சி. ஆசிரியர், ஏறாவூர், 04.02.2010
5. ஆதம்லெவ்வை, எம்.ஏ., 62, தரம் 4, விவசாயம், இறக்காமம்,12.05.2010.
6. ஆனந்தராசா,இ., 68, தரம் 8, விவசாயம், திருக்கோயில், 14.11.2010.
7. இப்ராலெவ்வை,மொ.கா., 84, தரம் 1, அண்ணாவி, மருதமுனை, 04.08.2010.
8. இராசதுரை,கா., 73, எஸ்.எஸ்.சி, விவசாயம், தம்பிலுவில், 15.11.2010.
9. இஸ்மைல், எஸ்.எம்., 73, தரம் 4, விவசாயம், சம்மாந்துறை, 10.08.2010.
10. கக்கீம்,கலைதாசன், 46, தரம் 10, நெசவு, மருதமுனை, 18.07.2010.
11. குணராசா, 48, இல்லை, கூலி, கதிரவெளி, 03.02.2011.
12. குணரெத்தினம்,வை., 59, க.பொ.த.சாதாரண தரம், விவசாயம், நாவற்காடு, 29.06.2010.
13. கோவிந்தராசா,செ., 52, தரம் 5. பூசகர், அம்பிளாந்துறை, 15.07.2010.

14. சண்முகநாதன்,நோ., 53, இல்லை, அண்ணாவி, கன்னன்குடா, 04.02.2010.
15. சாந்தி முகைதீன்,அ.லெ., 68, தரம் 5, வியாபாரம், காத்ததன்குடி, 27.06.2010
16. சிவப்பிரகாசம்,சி., 63, தரம் 10, பூசகர், பண்டாரியாவெளி, 15.07.2010.
17. சிவப்பிரகாசம்,த., 67, க,பொ.த.சாதாரண தரம், ஆசிரியர், பழுகாமம், 27.10.2010.
18. சிவலிங்கம்,செ., 73, வகுப்பு 4, வட்டவிதானை, கதிரவெளி,03.02.2011.
19. சுக்கூர்,சீ.மொ.அ., 48, க.பொ.த.சாதாரண தரம், மௌலவி, அட்டாளச்சேனை, 23.01.2012
20. சுபைர்,எம்.ஐ.எம்., 56, க.பொ.த. சாதாரண தரம், இல்லை, காத்தான்குடி, 12.03.2010
21. செல்லத்துரை,க., 62, தரம் 6, பூசகர், சித்தாண்டி, 20.09.2-10.
22. செல்வராசா,செ., 73, வகுப்பு 4, விவசாயம், வம்மிவட்டவான், 18.09.2010.
23. ஞானதேசிகன்,சோ., 53, பட்டப்படிப்பு, ஆசிரியர், மண்டூர், 18.03.2010.
24. தாமோதரம்,ந., 63, இல்லை, விவசாயம், சித்தாண்டி, 04.11.2010.
25. தாலிப்,ஐ.எம்., 33, பட்டப்படிப்பு, விரிவுரையாளர், ஏறாவூர், 05.01.2012.
26. நல்லதம்பி, வ., 73, வகுப்பு 5, விவசாயம், கதிரவெளி, 04.02.2011.
27. நல்லலிங்கம்,த., 72, எஸ்.எஸ்.சி., ஓய்வுபெற்ற அதிபர், ஆரையம்பதி, 18.06.2010.
28. நூர்யு யன்னா, 42, க.பொ.த.சாதாரண தரம், வீட்டு வேலை, ஏறாவூர், 20.02.2011.
29. பரசுராமன்,கோ., 72, தரம் 5. விவசாயம், வம்மிவட்டவான், 17.09.2010.
30. பிரசாத்.சி., 22, தரம் 10, விவசாயம், சித்தாண்டி, 17.09.2010.
31. புவிக்குமார்,க., 26, க.பொ.த.உயர்தரம், கூத்துக்கலைஞர், கன்னன்குடா, 19.06.2012.
32. மகேந்திரா,த., 67, எஸ்.எஸ்.சி, கோயில் வண்ணக்கர், தம்பிலுவில்இ 06.11.2010.
33. மாணிக்கன்,சி., 62, தரம் 5, வாகன ஓட்டுநர், கோளாவில், 05.11.2010.
34. மீராலெவ்வை,த.லெ., 66,க.பொ.த.சாதாரண தரம், ஓய்வுபெற்ற ஆசிரியர், ஏறாவூர், 15.06.2010.
35. முருகேஸ்பிள்ளை,சி., 62, க.பொ.த.உயர் தரம், ஆசிரியர், பழுகாமம்,20.03.2010.
36. முஸ்தபா,அலிமுகம்மது, 67, எஸ்.எஸ்.சி., ஓய்வுபெற்ற ஆசிரியர், ஏறாவூர், 04.02.2010.
37. முஜாஹித்,எ.எல்.எம்., 29. பட்டப்படிப்பு, விரிவுரையாளர், ஏறாவூர், 05.01.2012.
38. மூர்த்தி,ச., 53, வகுப்பு 6, விவசாயம், கதிரவெளி, 04.02.2011.
39. யோகச்சந்திரன்,கு., 52, தரம் 10, மேசன், அக்கரைப்பற்று, 28.10.2010
40. ராசப்பு, த., 51, தரம் 8, கடல்தொழில், திருக்கோயில், 14.11.2010.
41. வடிவேல்,க., 70, தரம் 5, பதிவாளர், ஆலையடிவேம்பு, 05.11.2010.
42. வல்லிபுரம்,க., 53, தரம் 5, மீன்பிடி, வம்மிவட்டவான், 17.09.2010
43. வாலலெட்சுமி,க., 70, தரம் 9, வீட்டு வேலை, மண்டூர், 19.03.2010.
44. விமலேஸ்வரி,இ., 63, தரம் 7. வீட்டுவேலை, தம்பிலுவில், 23.01.2012
45. ஹனிபா,எம்., 45, பட்டப்படிப்பு, உதவிக் கல்விப் பணிப்பாளர், அக்கரைப்பற்று, 27.10.2010.
46. ஜயந்திரா,இ., 56, க.பொ.த.சாதாரண தரம், வங்கி முகாமையாளர்,திருக்கோயில், 13.11.2010.

# மட்டக்களப்புப் பகுதியில் தமிழ், முஸ்லிம் பெண்களிடையே நிலவும் நாட்டார் கதைகள்

சுகன்யா மகாதேவன்

## நாவற்குடா, பூநொச்சிமுனைக் கிராமங்களை மாத்திரம் உள்ளடக்கியதான ஆவணப்படுத்தல்

## அறிமுகம்

உலகெங்கிலும் உள்ள வரலாறுகள் அனைத்தும் அதிகாரத்திலுள்ளவர்களால் அவர்களது வெற்றிகளை மாத்திரமே மையப்படுத்தியதாகக் கட்டமைத்து வந்த சூழலில், இவ் வரலாறுகளில் இடம்பெறாத ஆதிக்கத்தின் கீழ் அகப்பட்டுக்கொண்ட மக்கள் சார்ந்து பொது வெளியில் பேசுவது, சிந்திப்பது, அதற்கமைவாக செயற்படுவது அவசியமாகும்.

இதனடிப்படையிலே நாட்டார் எனக் கருதப்படுகின்ற தம் அடுத்த தலைமுறையினருக்கு வாய் மொழி மூலமாகத் தமது அனுபவ அறிவுகளைக் கடத்துகின்ற மக்கள் பற்றிய பகிர்வுகளானது இன்று பல்வேறு வடிவங்களுடாகப் பரவலாக்கப்பட்டு வருகின்றது. இதற்கு வலுச்சேர்ப்பனவாக நாட்டாரியல் ஆய்வுகளும், நாட்டாரியல் துறையும் தமது அளப்பெரிய பங்களிப்பினை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நாட்டாரியலிலே பெண்களின் பங்கு முக்கிய வகிபாகத்தினைக் கொண்டிருக்கின்றது. பெண்ணை நிலத்துடனும், வளமையுடனும் தொடர்புபடுத்திச் செய்யப்படுகின்ற சடங்குகளாகட்டும், பெண்ணை முதன்மைப் படுத்தியதும் ஒரு சில இடங்களில் மையப்படுத்தியதுமான நாட்டார் பாடல்கள், கதைகள், பழமொழிகள், மற்றும் விடுகதைகளாகட்டும் இவற்றிலெல்லாம் பெண்களின் உலகம் சார்ந்த பார்வை, சூழல் சார்ந்த புரிதல், கருத்தாளம் மிக்க உணர்வுகள், வடிகாலாக விளங்கும் ஆசைகள், எண்ணிலடங்கா ஆற்றல்கள், விரிந்து செல்லும் கற்பனைகள், மற்றும் எதிர்பார்ப்புகள், என அனைத்தும் தெளிவாக பதிவு செய்யப் பட்டிருக்கும்.

எனவே இவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைவதும், நாட்டாரியல் கூறுகளில் ஒன்றாக விளங்குவதுமான நாட்டார் கதைகளைக் குறிப்பாக மட்டகளப்புப்பகுதியிலே வாழ்ந்து வருகின்ற தமிழ், முஸ்லிம் பெண்களிடம் நிலவும் நாட்டார் கதைகளை நாவற்குடா மற்றும் பூநொச்சிமுனைக் கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு அறியப்படுத்துவதே இவ் ஆவணப்படுத்தலின் நோக்கமாகும்.

## நாட்டாரியல் பற்றிய விளக்கம்

1846 ஆம் ஆண்டு folklore என்னும் ஆங்கிலச் சொல்லினை முதன்முதலில் பயன்படுத்தியவர் வில்லியம் தாமஸ் ஆவார். folklore என்னும் ஆங்கிலச் சொல்லிற்கான தமிழ் அர்த்தத்தினை நாட்டாரியல் என ஈழத்திலும், நாட்டுப்புறவியல், நாட்டார் வழக்காற்றியல் என தமிழ் நாட்டிலும் அத்துறை சார்ந்து ஆராய விளையும் ஆய்வாளர்கள் வரையறை செய்துள்ளனர்.

இன்று வரையிலும் ஒவ்வொருவரும் தம் புரிதலின் அடிப்படையிலேயே இச் சொற்பதத்தினைக் கையாண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

Folk என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்கின்ற மக்கள் குழுவினைக் குறிக்கும். இம் மக்கள் குழுவினை நாட்டார் என அழைப்பர். இங்கு நாட்டார் எனக் குறிப்பிடப்படுவோர் யார்? என்கின்ற வினா எழுகின்றது. "கிராமங்களுக்கேயுரிய மரபு-பாரம்பரியம், பண்பாட்டு கலச்சாரம், பழக்கவழக்கங்கள், இறை வழிபாட்டு முறைகள், தொழில் முறைக்கேற்ப வாழுகின்ற சமூகக் குழுக்கள்"[1] எனக் குறிப்பிடலாம். Lore என்பது அறிவு ஆகும். எனவே ஒரு குறிப்பிட்ட இடத்தில் வாழ்கின்ற மக்கள் கூட்டம், அவர்களது அறிவுகள் பற்றி ஆராய்கின்ற இயல் ஆகையால் நாட்டாரியல் என அழைப்பது பொருத்தமாக இருக்கும்.

நாட்டாரியலானது மானிடவியல், மொழியியல், சமூகவியல், உளவியல் போன்ற துறைகளுடன் நெருங்கிய ஊடாட்டத்தினைக் கொண்டிருக்கின்றது. இனவரைவியல் ஆய்வுகளை முழுமையாக்குவதில் நாட்டாரியலின் பங்கு மகத்தானது. மானிடவியலாளர்களின் பார்வையில் நாட்டாரியல் குறிப்பிட்ட மக்களினது பண்பாட்டில் ஒரு முக்கியமான அங்கமாகக் கருதப்படுகின்றது.

"உலகில் தெரிய வந்துள்ள எந்தப் பண்பாட்டிலும் நாட்டார் வழக்காறுகள் இல்லாமல் இல்லை. அந்த அளவிற்கு நாட்டார் வழக்காறுகள் முக்கியத்துவமும், உலகப் பொதுமையும் வாய்ந்தவை. ஒரே மாதிரியான கதைகள், பழமொழிகள், போன்ற நாட்டார் வழக்காறுகள் எழுத்தறிவுள்ள, எழுத்தறிவற்ற அனைத்து சமுதாயங்களிலும் காணப்படுவதால் நாட்டார் வழக்காறுகளை வெவ்வேறுபட்ட பண்பாடுகளை இணைக்கும் பாலமாகக் கருதலாம். அதுமட்டுமின்றி நாட்டார் வழக்காறுகள் சமய, சமூக, அரசியல், பொருளாதார நிறுவனங்களுக்கு அங்கீகாரம் அளிக்கின்றன. நியாயப்படுத்துகின்றன. மேலும் அவற்றை ஒரு தலைமுறையிலிருந்து இன்னொரு தலைமுறைக்கு கொண்டு செலுத்தும் ஒரு கல்விக்கருவியாகவும் கூட நாட்டார் வழக்காறுகள் செயற்படுகின்றன"[2].

இத்தகைய நாட்டாரியலினை வில்லியம் ஜான் தாமஸ் என்பவர் " பழங்கால நடத்தைகள், வழக்கங்கள், சடங்கு முறைகள், மூடநம்பிக்கைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள் போன்றவை"[3] என வரையறுக்கின்றார்.

## நாட்டார் கதைகள் ஓர் அறிமுகம்

இவ்விதமாக நாட்டாரியலின் ஒரு கூறாக அமைந்திருப்பது நாட்டார் கதைகளாகும். வாய்மொழி வழியாக ஒருவரின் அனுபவங்களினை மற்றவருக்கு கூறுவதிலிருந்து ஆரம்பமான இக்கதைகள் பின்னர் படிப்படியாக வளர்ச்சியுற்று நாட்டாரின் அறிவு, நுணுக்கம், கருத்துக்கள், எண்ணம், கற்பனைகள், வாழும் சூழல் சார்ந்த புரிதல் ஆற்றல்கள் கொண்டதொரு களஞ்சியமாக முழுமை பெற்றது. பல தலைமுறைகளாக வாய்மொழி மூலமாகவே இக்கதைகள் கடத்தப்படுவதினால், சில இடங்களில் கதைகள் திரிபடைந்தும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபட்டும் காணப்படும் தன்மையும் இக் கதைகளுக்கு உண்டு.

சு. சண்முகசுந்தரம் நாட்டார் கதைகளை நான்கு பெரும் பிரிவாக நாட்டாரியல் அறிஞர்கள் பிரிப்பர் எனக் குறிப்பிடுகின்றார்.

- மனிதக் கதைகள்
- மிருகக் கதைகள்
- மந்திரக் கதைகள்
- தெய்வக் கதைகள்

மேலும், தே. லூர்த்து நாட்டார் வழக்காறுகளுள் நாட்டார் கதைகள் பழமரபுக் கதைகள், புராணக் கதைகள் போன்றவைகளும் அடங்கும். இத்தகைய வாய்மொழி இலக்கியங்கள் முறையாகத் தொகுக்கப்படவும் இல்லை. ஆய்வு செய்யப் பெறவுமில்லை எனக் குறிப்பிடுகின்றார்.

நாட்டார் கதைகள் ஒரு அமைப்பிற்குள் உட்பட்டவை என்கிறார் ரஷ்ய அறிஞர் விளாடிமீர் பிறாப். இவர் கதைகளினது குறை - குறைநீக்கம், தடை, மீறுதல், விளைவு என்கிற ஒரு வாய்ப்பாட்டு நிலை உள்ளமையை எடுத்துக் காட்டினார்.

1936ல் ஸ்டித் தாம்ப்சன் கதை வகைகளை ஆய்வு செய்யத் தொடங்கினார். இதற்கு முன்னரே ஆண்டி ஆர்னே என்கின்ற பின்னிய அறிஞர் ஐரோப்பிய கதைவகை அடைவு (tale type index) ஒன்றினை வெளியிட்டார். வரலாற்று நிலவியல்க் கோட்பாடு ஏற்படுத்திய தாக்கத்தினால்த்தான் ஸ்டித் தாம்ப்சன் கதை வகை அடைவினை உருவாக்கினார். இவரது நாட்டார் கதைவகை அடைவு (the types of the folktale), நாட்டார் இலக்கியக் கதை கூறடைவு (motif index of folk literature) எனும் ஆறு தொகுதிகளாலான ஆய்வு நாட்டாரியலில் ஆவணக் காப்பகங்களின் உருவாக்கத்திக்கு பெரிதும் உதவியது. உட்லி என்பவரின் நாட்டார் கதைகளின் இடப்பெயர்ச்சி பற்றிய ஆய்வு மிக முக்கியமானதாகும்.

தமிழகச்சூழலில் நாட்டார்கதைகள் தொடர்பான விடயம்களில் ஆர்வம் கொண்டு அவற்றினை தேடிச்சேகரித்து, வகைப்படுத்தி, தொகுத்து ஆய்வு செய்தவர்களில் கோ.கேசவன், ஏ.என். பெருமாள், ஆறு. இராமநாதன், கி. ராஜநாராயணன் போன்றோர் முக்கியமானவர்கள்.

இலங்கையில் நாட்டார் இலக்கிய ஆய்வுக்கூறுகளில் நாட்டார் பாடல்கள் தவிர்த்து ஏனையவற்றில் இன்னும் சரியான தொகுப்புகள்கூட வரவில்லை என்றே குறிப்பிட வேண்டும். இருப்பினும் நாட்டார் இலக்கியம் தொடர்பான அனேக ஆய்வுகளில் ஒரு பகுதியாகவே நாட்டுபுறக்கதைகள் ஆராயப்பட்டுள்ளன. குறிப்பாக பல்கலைகழகங்களுக்கு சமர்பிக்கப்படுகின்ற ஆய்வுகளிலும், தனிப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளிலும் இவை பற்றிய விபரங்களை அறியலாம்.

மட்டக்களப்பில் நாட்டார்கதைகளை உபகதைகள் என்றே அழைப்பர். ஓர் ஊரிலே என்று ஆரம்பிக்கின்ற இவ் உபகதைகப்பண்பு ஆனது கதைசொல்பவர்களின் அனுபவ அறிவுக்குத்தகுந்தாற்போன்று பல்வேறு வகைகளில் கையாளப்படுகின்றன.இவை பற்றி விரிவாக அறிவது அவசியமாகும்.

## மட்டக்களப்புப் பிரதேசத்தில் உள்ள நாவற்குடா, பூநொச்சிமுனை கிராமங்கள் பற்றிய அறிமுகம்.

மட்டக்களப்பு நகரத்திலிருந்து சுமார் ஐந்து கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள நாவல் மரங்களை ஒரு காலத்தில் ஏராளமாகக் கொண்டிருந்த அழகிய சிறிய கிராமம் நாவற்குடா ஆகும். இங்கே ஆரம்ப காலங்களில் தமிழ் மக்களும், நாவற்குடா கிழக்குப் பகுதியில் அண்மைய

காலங்களில் இடம்பெட்ட குடியேற்றங்களின் காரணமாக முஸ்லிம் மக்களும் ஒன்றாக இணைந்து வாழ்ந்து வருகின்றனர். நாவற்குடாவிற்கு அருகாமையில் அமைந்துள்ள நொச்சி மரங்கள் நிறைந்த காட்டுப் பகுதியாக முன்னொரு காலத்தில் விளங்கிய பூநொச்சிமுனைக் கிராமம் முற்றிலும் முஸ்லிம் இனத்தவர்கள் இணைந்து வாழும் ஒரு பிரதேசமாகும்.

இவ்விரு கிராமங்களிலும் வாழ்கின்ற மக்கள் கடல், ஆறு போன்ற கரையோரங்களை அண்டி வாழ்கின்றமையினால் மீன் பிடித்தல், மீன் கூடு இளைத்தல், தச்சு வேலை, மேசன் வேலை, வீட்டுத் தோட்டம் செய்தல், மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்லுதல், சுய தொழில்களை மேற்கொள்ளல் மற்றும் அரசாங்க, தனியார் நிறுவனங்களில் தொழில் புரிதல் எனத் தமக்கான தொழில் வகைகளைத் தேர்வுசெய்து தமது வாழ்வினை மகிழ்ச்சியாக நடாத்துகின்றனர். இந்து மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாமிய மதத்தினர் இங்கே இணைந்து வசிக்கின்றனர். யுத்த காலங்களின் போதும் சுனாமியினாலும் தமது குடும்பத்திலுள்ள ஆண்களை இழந்தவர்கள் பெண் தலைமைத்துவம் கொண்ட குடும்பங்களாக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்கிராமத்தவரிடையே ஏராளமான நாட்டாரியல் கூறுகள் அவர்களது வாழ்வியலுடன் இணைந்துள்ளமையினை அவதானிக்கலாம். பத்தாசி முறை என்று அழைக்கப்படுகின்ற நாட்டார் தெய்வ வழிபாட்டு முறை, முஸ்லிம் மக்களிடம் காணப்படுகின்ற கவி பாடுதல், நாட்டார் மருத்துவம் (மருத்துவிச்சி, கை வைத்தியம்), நாட்டார் விளையாட்டுகள், பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் பாடல்கள், நட்டார் கதைகள் என கிராமங்களுக்கே உரித்தான அழகியல்களோடு இம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

## பெண்களிடம் நிலவுகின்ற நாட்டார் கதைகள்.

- வாளமீன் கதை
- நாய்க் கதை
- மாதவிடாய்க் கதை
- பென்ணலை ஆணலைக் கதை
- பன்றிக் கதை
- நரிக்கதை
- பேய்க்கதை
- கரடிக்கதை

இவற்றிலே ஐந்து கதைகள் மாத்திரம் விரிவாகக் கீழே அறியத்தரப்படுகின்றது. இக்கதைகள் அனைத்தும் அக்கதைகளைச் சொன்ன பெண்களின் மொழியிலேயே ஆவணப்படுத்தப்பட்டுள்ளது.

### வாள மீன் கதை

ஒரு தங்கச்சிக்கு 7 அண்ணன்மாராம். அந்த ஏழு அண்ணன்மாரும் காலையில விடியிறதுக்கு முன்னாலேயே எழும்பி ஆத்தக்கடந்து வேலைக்குப் போயிருவாங்களாம். அப்ப இந்தத் தங்கச்சி தானாம் ஆத்தக் கடந்து போய் அண்ணன்மாருக்கு சாப்பாடு கொடுத்துட்டு வாற. ஆத்தக் கடந்து

போறதுக்கு வாளமீன் தானாம் அவக்கு உதவி செய்யிற. ஒவ்வொரு முறையும் ஆத்தக் கடந்து போகக்குள்ள தங்கச்சி வாள மீனுட்ட பொய் சொல்லி ஏமாத்திப் போட்டுப் போறதாம். ஒருநாள் வாளமீன் என்ன செஞ்சுதாம் ஒவ்வொரு முறையும் நம்மள ஏமாத்திப் போட்டுப் போறாள் இந்த முறை இவள விடக் கூடாது எண்டு நினைச்சித்து வாளமீன் முதுகில தங்கச்சி எறினதான் தாமதம் நல்லா உடம்பு முழுவதும் தண்ட முள்ளால கிழிச்சிப் போட்டு சாப்பாட்டையும் வேண்டி எடுத்துத்து ஆத்துக்குள்ள பாஞ்சி பொய்ற்றாம். தங்கச்சிக்கு என்ன செய்யிற எண்டு தெரியாம போய் பொய் சொல்லிட்டாளாம் சின்னண்ணன் முளுச்சாப்பாட்டையும் வாங்கிச் சாப்பிட்டுப் போட்டு எனக்கும் அடிச்சிப் போட்டான் எண்டு. உடனே மத்த அண்ணன்மாரெல்லாம் ஒண்டாச் சேர்ந்து சின்னண்ணன அடிச்சே கொண்டு போட்டானுகளாம். இப்பிடியே இருக்கக்குள்ள அந்த தங்கச்சிக்கு மாப்பிளை பார்த்து கல்யாண நாளும் வந்திச்சாம். கலியாணத்தில அண்டு எல்லா இடமும் பூ தேடித் திரிஞ்சா ஒரு இடமும் பூ கிடைக்கலையாம். ஒரே ஒரு இடத்தில நிறைய அலரிப்பூ பூத்துப் போய் கிடந்திச்சாம். அப்ப அங்க போய் பூவைத் தொட்டதுதான் தாமதம்

வாள கிழிக்கல்ல
வடதெரு போகையில
சின்னண்ணன் அடிச்சான் எண்டு
சொன்னாளே நெட்டூரி

எண்டு ஒரு பாட்டுக் கேட்டுச்சாம். உடனே தங்கச்சி நடந்த உண்மைகளெல்லாம் சொல்லி சின்னண்ணன் எந்த தப்பும் செய்யல நான் தான் பொய் சொல்லிட்டன் என்னைய மன்னிச்சிக் கொள்ளுங்க அண்ணா எண்டு கதறி அழுதாளாம். உடனே சின்னண்ணனும் தங்கச்சிய மன்னிச்சிட்டாராம். அவர புதச்ச புதையல் மேல இருந்த பூ மரத்தில அங்க இருந்தவங்க எல்லாம் பூவ ஆஞ்சிட்டுப் போய் தங்கச்சி கல்யாணத்த நல்ல படியா நடத்தி வச்சாங்களாம்.

கதைசொன்னவர் - நல்லம்மா (சீனியாச்சி)
வயசு - 83
இடம் - நாவற்குடா

**நாய்க் கதை**

ஒரு புள்ளத்தாச்சிப் பொம்பிள, அவக்கு கொட்டக் கஞ்சி காச்சிக் குடிக்க ஆச. அதே நேரம் ஒரு நாயும் குட்டித்தாச்சி. அதுவும் எண்ணுது என்னவெண்டா இவள் கஞ்சி காச்சித் தின்டுத்து இலைய எண்டாலும் போடுவாள், நாம அத நக்கித் தின்னுவம் எண்டு. இவள் படுபாவி எல்லாத்தையும் ஆக்கித் திண்டுபோட்டு இல கில எல்லாத்தையும் மடுவ வெட்டித் தாட்டுப் போட்டாள். மடுவ வெட்டித் தாட்ட உடனே நாய் கடவுள்ட்ட கேட்டிச்சி கடவுளே அவள்ட வயித்துக்குள்ள இருக்கிறது என்ட வயித்துக்குள்ளையும், என்ட வயித்துக்குள்ள இருக்கிறது அவள்ட வயித்துக்குள்ளையும் போகோணும் எண்டு. இவ மாதமும் திங்களும் செண்டு பெத்தா ரெண்டு நாய்க்குட்டி. அது மாதமும் திங்களும் செண்டு பெத்திச்சி ரெண்டு புள்ளக்குட்டி. உடனே இது புள்ளைகள் ரெண்டு போரையும் கொண்டுபோய் காட்டுக்குள்ள வச்சி வளத்திச்சி. நாள் போகப் போக புள்ளைகள் நல்லா வளந்திடாங்க. நாய் சாப்பாடு எல்லாம் கவ்வித்து வந்து புள்ளைகளுக்கு குடுத்து, இப்பிடியே வளர்த்திட்டு வருது. இவங்களுக்கு உடமானம் ஒண்டும் இல்ல, இவங்க இப்பிடியே இருக்காங்க. இருந்தா, ஒரு நாள் வழிப்பாட்டால ரெண்டு அரசனுகள் வாரானுகள். அப்ப அந்த ரெண்டு புள்ளிகளும் உடம்ப மறைச்சி தலைய மட்டும் வெளியால நீட்டி எட்டிப் பாத்திச்சிதுகள். அரசகுமாரனுகள் பாத்தானுகள்

நல்ல வடிவான பிள்ளைகள். இதுகளக் கொண்டு போகனும். இவனுகள் என்ன செய்தானுகள் தாங்க போட்டிருந்த உடுப்பெல்லாம் கலட்டி ரெண்டு புள்ளைகளுக்கும் குடுத்தானுகள். ரெண்டு புள்ளைகளும் அந்த உடுப்ப போட்டுத்துக. பிறகு ரெண்டு போரையும் குதிரையில எத்தி எடுத்திட்டு கொண்டு போறானுகளாம். போக்குள்ள என்ன செய்யிது இளைய புள்ள கோத்த முறிச்சி போட்டுப் போட்டுப் போகுது வழிப்பாடு நெடுக. மூத்த புள்ள என்ன செஞ்சிச்சி நாம ஒருத்தனிட்ட வாச்சிட்டம் எண்டு நினச்சி சந்தோசமாப் போகுது.இளைய புள்ள கவலையில போகுது. நாம தாய உட்டுட்டு வந்திட்டமே நம்மளத் தாய் பராமரிச்சதே இவ்வளவு நாளும். நமக்கு நாயப்போல எண்டாலும் ஒரு தாய் எலுவா. அதால நாம கோத்த முறிச்சிப் போடுவம், அந்த வழியால தாய் வரட்டும் எண்டு நினச்சி குளறிக்கொண்டு போகுது. இஞ்ச வந்து நாய் பாத்திச்சி புள்ளைகள் இல்ல. கொத்து முறிச்சிப் போட்டிருக்கு, போய் மணம் புடிச்சிப் புடிச்சி மூத்த மகள்ட ஊட்டதான் போய் சேர்ந்திச்சி. அடி அடி நாயே, நீ எங்க வந்தா நாயே, போ நாயே எண்டு மூத்த மகள் திரத்திப் போட்டாள். நாய் குழறிட்டு இளைய மகள்ட ஊட்ட போகுது. போன உடனே தாய் வந்திருக்கா எண்டு ஓடிப் போய் கட்டிப்புடிச்சிக் கத்தி, கழுவித் துடச்சி, சாப்பாடு குடுத்து ராசா படுக்கிற கட்டில்ல கொண்டு போய் படுக்க வச்சாச்சி. ராசா வார நேரமாகுது தாய ஒழுப்பி வேற இடத்துல மாத்துவம் எண்டு போய் புள்ள எழுப்பிச்சி.நாய் தங்கமா போச்சுது. அப்பிடியே புடவையால போத்தி புள்ள தாய வச்சிட்டு. ராசா வந்தவுடனே நடந்த எல்லாத்தையும் சொல்லிச்சி. இத கேள்விப் பட்டு மூத்த மகளும் அவள்ட புருசனும் என்ன செஞ்சாங்க எண்டா வழிப்பாடால போன ஒரு நாயப் புடிச்சி வந்து அடிச்சிக் கட்டில்ல வளத்தாட்டித்தாங்க. மூணு நாள் மட்டிலும் நாய் கட்டில்ல படுக்குது. அப்ப நாய் என்ன செய்யும் அழுகிப் போகும். மூணு நாளைக்குப் புறகு பொய் துறந்து பாத்தா நாய் புழுத்து சரியான நாத்தம். அதுக்குத்தான் சொல்றது நாயப் போல எண்டாலும் தாய் தாய் தான்.

கதைசொன்னவர - சுலைமான்ஆச்சி
வயசு - 63
இடம் - பூநொச்சிமுனை

**மாதவிடாய் தோன்றிய கதை**

நபி எண்டு சொல்லுறாக எலுவா அவக மகள் பாத்திமா அவங்க 12 வயசிப் புள்ள. இவ ஒருநாள் தொழ எழுப்பல. அப்ப மகள் தொழ எழுப்பலையே எண்டு வாப்பா எழுப்பினாரு.இவங்க வாசல்ல செம்பருத்தியம் பூ நிண்டிச்சி. பிச்சித்து வந்து உடனே காட்டினாக. அப்ப தாயத்தான் சீரத்துப் போயிட்ட மகள் நீங்க தலைய முழுகிட்டு மாளிகைக்குள்ள பூருங்க எண்டாக. உடனே அவங்க தலைய முளுகினாங்க. உடனே போய் மாளிகைக்குள்ள இருந்திட்டாங்க. வானலோகத்திலிருந்து இறங்கி வந்த கூரானிகள் எண்டு சொல்லுவாக, அந்தப் பெண்கள் இறங்கி வந்து இவங்கள ஏழு அண்டைக்கு குளிப்பாட்டிப் போட்டு, அவங்க பொயித்தாங்க. அதோட இவங்களுக்கு மாதவிடாய் வரல.புறகு அலியார் அவங்க எண்டு சொல்லி ஒரு ஆள் இவங்களக் கல்யாணம் முடிச்சார். பொம்புளைக்கு ஆகாமல் வரல தானே அதால அவைக்கு ஆண்மூச்சுத்தான். அப்ப இவட புரிசனாரு யுத்தத்துக்கு போற, போர்க்களத்துக்குப் போற அப்ப இவ வாளுகிட்டக் கேக்கிற இண்டைக்கு எத்தின பேர நீ சைதாக்கினாய்? எத்தின பேர நீ விடுதலையாக்கினாய்? எண்டு. இவ கேக்கிற அந்த வாள் இவவோட கதைக்கிற. இப்புடி இருக்ககுள்ள அந்த ஊட்டுக்காரி, இந்த ஊட்டுக்காரி எல்லாம் சொல்ற, பாத்திமா யாரோடையோ கதச்சிட்டு இருக்காள். பாத்திமா அலியார் அவகை போன மட்டுல யாரோடையோ கதைச்சிட்டு இருக்காள் எண்டு பிறகு அலியார் அவங்கட்ட சொன்னாக. உங்கட மனிசி யாரோடையோ கதச்சிட்டி இருக்காங்க நீங்க போன மட்டில, அதால என்ன எண்டு ஒருக்காப் போய்ப் பாருங்க.எண்டதும் இவங்க ஒருநாள் பாத்திமாகிட்ட வெளியால

பொய்த்து வாறன் எண்டு சொல்லிப்போட்டு, தள்ளி நிண்டு பாத்துத்து இருக்காங்க. ஒருவரையும் காணல. கடைசியாக நிலையடிக்கு வந்தாக. ஓம் பாத்திமா யாரோடையோ கதைக்கிற, அப்ப கதவத் திறந்து பத்தாக.வாளோட தான் கதைக்கா. நீ யாரோட கதைச்ச பாத்திமா? நான் வாளோட தான் கதைச்ச. அப்ப வாள் பேசு என்னோட. வாள் பேசினாதான் நான் உண்மையென நம்புவன். அப்ப வாழ் சொல்லிச்சி ஓம் நான் தான் கதைச்ச பாத்திமாவோட எண்டு. இதுக்கு ஏன் சந்தேகம்? சந்தேகம் கொள்ள வேணாம். அதுலதான் இவக சொன்னாக பொம்பிளை ஏன்டா ஆம்பிளைக்கு ஆகாதவனா ஆக்கு. ஆம்பிளை எண்டு சொன்னா பொம்பிளைக்கு ஆகாதவனா ஆக்கு எண்டு சொன்னாக. பொம்பிள எண்டா பொம்பிளைக்கி புள்ளக்குடல் இறங்கு. ஆம்பிள எண்டா சூலாவ இறக்கு எண்டு சொன்னாக. இப்படியா ஒரு நாள் இவங்க உடுப்புத் தைக்காங்க. போர்வை மாறி மாறி பிஞ்சிட்டே இருக்கு அதனால போர்வையத் தைக்கிறதுக்காக இவக கதவ அடைச்சிட்டு இருக்காக. அப்ப அலியார் அவக வந்திட்டாங்க . கதவத் திறக்கப் போக உடனே பேரு விரலால கதவ ஊண்டிப் புடிச்சாங்க. அலியார் அவங்களால கதவத் திறக்க ஏலாமப் போயிட்டு. ஆண்டவனே, நீ பாத்திமாட மூச்சக் குற எண்டு ஆண்டவனிட்டக் கேட்டாக. உடனே அவங்களுக்கு சுகமில்லாம வந்திட்டுது. அப்ப அவங்கட கால் என்ன செஞ்சிச்சு தானே சொர்ந்துகிட்டு விழுந்துட்டு. உடனே கதவு துறபட்டுத்து. அப்ப பொம்பிளைகளுக்கு மூச்சுக் குறஞ்சதால தான் மாதவிடாய் வாறது.

கதைசொன்னவர் - சுலைமான்ஆச்சி,
வயசு - 63
இடம் - பூநொச்சிமுனை.

**பெண்ணலை ஆணலைக் கதை**

ஒரு மனிசி என்ன செஞ்சாவாம் மாதாழம் பழமொண்ட உடச்சாவாம். அதுக்குள்ளே பாத்தா ஒரு புள்ள இருந்திச்சாம். நல்ல வடிவான ஒரு பொம்புளப் புள்ளயாம்.உடனே மனிசி என்ன செஞ்சாவாம் புள்ளைய எடுத்து கரியப் பூசி புள்ளயக் கறுப்பாகிப் போட்டு நெல்லுப் பாய்க்கி காவல் வச்சிட்டாவாம். மக்கள் எல்லாம் வந்தாக. இது யாரெண்டு கேக்க இது நான் நெல்லுப் பாய்க்கி காவலுக்கெண்டு கூலிக்குப் புடிச்சிட்டு வந்திருக்கன் எண்டு சொன்னாக. மக்கள் எல்லாம் வெளியால போன மட்டில புள்ளைய கழுவி வடிவாக வச்சிருக்கிற. புறகு மக்கள் திரும்பி வார நேரத்தில கரியப் பூசி வச்சிருக்கிற. இப்படியா இருக்கக்க மக்கள்ள ஒருவன் கேட்டான் இவளவு நாளும் இந்தப் புள்ள இங்க தான் தங்குதா? இந்த புள்ள ஆர்ட புள்ள? இவக்கு ஒண்டும் செய்ய ஏலாமப் போயிட்டு. இவ சொன்ன நம்மட புள்ளதான் எண்டு. புறகு புள்ளைய கழுவித் துடச்சி வடிவான புள்ளையா மாதாளம் பழத்துக்க இருந்த புள்ள போல வச்சிருந்தா. அப்ப இதப் பாத்த மக்கள்ள ஒருத்தன் என்ன செய்தான் ஏன்டா இந்த புள்ளைய எனக்கு கல்யாணம் முடிச்சித் தா எண்டு கேட்டான். இவன் ஆசப் படுவான் எண்டுதான் அவ கரியப் பூசி புள்ளைய வச்சிருந்த. இனிக் கல்யாணம் முடிகோனும், ஊரெல்லாம் கூட்டி எல்லோருக்கும் சொல்லியாச்சி. அப்ப இந்த புள்ள என்ன சென்ச்சிது புன்னங்கொட்டையப் புறக்கி நாட்டிப்போட்டு. இவன் மாப்பிள்ளையா இருக்கான், பொண்ண சோடிச்சி வச்சிரிக்கி. புள்ள என்ன செஞ்சிச்சி பின்னால ஒண்டுக்குப் பொய்த்து வாறன் எண்டு போன புள்ள பாக்குது புன்னக்கொட்ட முளச்சிரிக்கி. நானும் பத்தினி தாயும் பத்தினி எண்டு சொல்ல புன்ன மரம் முளச்சி எழும்பிச்சி. உடனே புள்ள புன்ன மரத்தில எறிச்சி. அவனும் புறகாலேயே ஏறித்தான். புள்ளையும் எரினதான் அவனும் பின்னாலேயே ஏரினதான். இப்படியா புன்னமரமே புன்னமரமே இன்னொரு முழம் கொண்டு ஓடு எண்டதும் அது இன்னொரு முழம் வளந்திச்சி. இப்படியா மேல மேல போய் கடைசியாக கடலுக்குள்ள புன்னைமரம் சவண்டு போக புள்ள கடலுக்குள்ள குதிச்சிட்டு . அப்ப புறகால்ல அவனும் குதிச்சிட்டான். ஆணல, பெண்ணல எண்டு வருகுதெல்லுவா? அது அவங்க ரெண்டுபேரும் தானாம்.

கதைசொன்னவர் - சுலைமான்ஆச்சி,
வயசு - 63
இடம் - பூநொச்சிமுனை.

**பன்றியும் அக்காவும்**

ஒரு ஊரில ஒரு அக்கா இருந்தாவாம். அவ ஒவ்வொரு நாளும் அவங்கட வீட்டு வாசல்ல நெல் அவிச்சி காயவைகிறதாம். இத ஒளிஞ்சிருந்து பாத்திட்டு அக்கா வீட்டுக்குள்ள போன உடனே பன்றி ஒண்டு வந்து ஒரே காயவச்ச நெல் எல்லாத்தையும் தின்டுட்டு போயிர்ரதாம். ஒரு நாள் இந்த பன்றியைக் கையும் களவுமாப் பிடிக்க வேணுமெண்டு அந்த அக்கா நினச்சுத்து, நெல்ல வழமை போல காய வச்சிட்டு உள்ளுக்குள்ள போற மாதிரிப் போய் ஒளிஞ்சி நிண்டு பாத்தாவாம். பன்றி என்ன நினைச்சுதாம் அக்கா வீட்டுக்குள்ள போய்ட்டா தானே எண்டு நினச்சிட்டு வந்து நெல்லு விரிச்சிருந்த பாயில வாய வச்சி சாப்பிடக்குள்ள அக்கா ஓடி வந்து பன்றியப் பிடிச்சி சரியான அடி அடியென அடிச்சிப்போட்டாவாம். இதனால பன்றிக்கு சரியான கோபமாம் அந்த அக்காவில. ஒரு நாளைக்கு சரியான பாடம் கற்பிக்க வேணும் இந்த அக்காவுக்கு எண்டு மனதில நினச்சித்து பன்றி இருக்கக்க அந்த நேரமாப் பாத்து அந்த அக்காக்கு அவங்கட அம்மா மாப்பிள்ள பாத்திட்டு இருந்தாவாம். அந்த அக்காட அம்மா கொஞ்சம் வயசான கிழவியாம். கண்ணும் சரியாத் தெரியாதாம். காதும் கேக்காத செவிட்டு மனிசியாம். அந்த மனிசிட்ட போய் பன்றி சொல்லிச்சாம் நம்மட அக்காக்கு நல்லதொரு மாப்பிள பாத்திருக்கன், இரவைக்கு மாப்பிளைய வீட்டுக்குக் கூட்டித்து வருவன், அக்காவ வடிவா சோடிச்சு வை எண்டு சொல்லித்து பன்றி போய்ட்டாம். கிழவியும் அக்காவ வடிவா சோடிச்சி வச்சி இரவைக்கு பன்றி மாப்பிளையக் கூட்டித்து வருமெண்டு நினச்சிட்டு பார்த்துக்கொண்டு இருந்தாவாம். அப்ப பன்றி வந்து சொல்லிச்சாம் மாப்பிள்ள வெக்கப்பர்றார் அதனால அவர் வீட்டுக்குள்ள இருக்காராம் அக்காவ நாம வீட்டுக்குள்ள அனுப்பி வைப்பம் கலியாணம் முடிச்சித்து அக்க வீட்டுக்குள்ள இருக்கட்டும் நாம வெளியில இருப்பம் எண்டு. கிழவியும் பன்றி சொன்னத நம்பி அக்காவ வீட்டுக்குள்ள அனுப்பிட்டு வெளியால படுத்துத்தாவாம். கொஞ்ச நேரத்தால வீட்டுக்குள்ள இருந்து அக்கா அம்மாவக் கூப்பிர்ராவாம்.

அக்கா : அம்மலக்கா அம்மலக்கா எண்ட கால் முழுதும் போகுது கா
கிழவி : பேசாமப்படு மாப்பிள்ள காலுக்கு கொலுசு போர்றார்
அக்கா : அம்மலக்கா அம்மலக்கா எண்ட இடுப்பளவும் போகுது கா
கிழவி : பேசாமப்படு மாப்பிள்ள ஒட்டியாணம் கட்றார்.
அக்கா : அம்மலக்கா அம்மலக்கா எண்ட கழுத்தளவும் போகுது கா
கிழவி : பேசாமப்படு மாப்பிள்ள தாலி கட்றார்

கொஞ்ச நேரத்தால பாத்தா அக்காட சத்தம் இல்லையாம். கிழவி நினச்சிதாம் அக்கா நித்திர கொண்டுத்தாவ் எண்டு. வெள்ளன விடிஞ்சும் அக்க எழும்பலையாம். என்னடா சத்தத்தக் காணல எண்டு கிழவி கிடந்து கூப்பிட்டுப் பாத்திச்சாம். சத்தம் கித்தம் ஒண்டையும் காணலையாம். கதவத் தட்டினா துறக்கலையாம். கிழவி கிடந்தது ஒப்பாரி வச்சி கத்து கத்தெனக் கத்திச்சாம். இந்த சத்தத்தக் கேட்டுப் பக்கத்து வீட்டில இருக்கிறவங்க எல்லாம் ஓடி வந்து என்ன நடந்த எண்டு கேட்டாங்களாம், கிழவி நடந்த எல்லாத்தையுமே அவங்கட்ட சொன்னாவாம். உடனே வீட்டுக்கு மேல ஏறி கூரையைப் பிரிச்சிப் பாத்தா அக்காவ முழுசா விழுங்கிப் போட்டு பாம்பு ஒண்டு மூலையில சுருண்டு படுத்திருக்காம். பிறகு வீட்டுக்குள்ள இறங்கி பாம்ப அடிச்சிக் கொண்டுபோட்டு பாம்புட வயித்த வெட்டி உள்ளுக்குள்ள இருந்த அக்காவ எடுத்தா அக்கா செத்துப் போய்த்தாவாம்.

பிறகு ஓடிப் போய் இதுகெல்லாம் காரணமான பன்றியத் தேடிப்புடிச்சி அடிச்சிக் கொண்டுபோட்டு வந்தாங்களாம்.

கதைசொன்னவர் - கோமளாதேவி
வயசு - 59
இடம் - நாவற்குடா

## முடிவுரை

எனவே இக்கதைகளை அறிந்து கொள்வதன் மூலம் மட்டக்களப்புப் பகுதியில் தமிழ், முஸ்லிம் பெண்களிடம் எவ்வகையான நாட்டார் கதைகள் நிலவுகின்றன என்கின்ற புரிதலினைப் பெறுவதுடன், அவை சார்ந்த காத்திரமான ஆய்வுகளை வருங்காலங்களில் ஏனையோர் மேற்கொள்வதற்கு இவ் ஆவணப்படுத்தல் உறுதுணை புரியும் எனலாம்.

## அடிக்குறிப்புகள்

1. வயலட் சரோஜா (க.ஆ), சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு 2011 கட்டுரைக்கோவை, பக்கம் 13.
2. செல்லப்பெருமாள்.ஆ, நாட்டார் வழக்காற்றியல், பக்கம் 166.
3. மேலது, பக்கம் 166.

## சான்றாதாரங்கள்

❖ **நூல்கள்**


- செல்லப்பெருமாள். ஆ, நாட்டார் வழக்காற்றியல் தொகுதி 3, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுக்கழகம், திருநெல்வேலி, 1989-1991.
- லூர்த்து.தே, நாட்டார் வழக்காற்றியல் கள ஆய்வு, திருநெல்வேலி பாரிவேள் பதிப்பகம், 1986.
- சண்முகசுந்தரம்.சு, நாட்டுப்புற இயல் ஓர் அறிமுகம், சென்னை இலக்கிய மாணவர் வெளியீடு, 1975.
- இராமநாதன்.ஆறு, நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம்,சிதம்பரம், 1986.
- முத்துச்சிதம்பரம்.ச, தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள், தமிழ் புத்தக ஆலயம், சென்னை, 1998.
- அருணாச்சலம்.க., மலையகத் தமிழ் இலக்கியம், தமிழ் மன்றம், இலங்கை, 1994.
- சிவசுப்பிரமணியம்.வ, மட்டக்களப்பு நாட்டாரியல், இலங்கை, 24.
- அப்துல்லா ரமீஸ், கிழக்கிலங்கை கிராமியம், மல்லிகைப் பந்தல்,இலங்கை, 21


❖ **நேர்கண்டோர் விபரம்**

1. கதைசொன்னவர் - நல்லம்மா (சீனியாச்சி)
   வயசு - 83
   இடம் - நாவற்குடா .
2. கதைசொன்னவர் - சுலைமான் ஆச்சி
   வயசு - 63
   இடம் - பூநொச்சிமுனை
3. கதைசொன்னவர் - கோமளாதேவி
   வயசு - 59
   இடம் - நாவற்குடா


கலை

# சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 2011 வரைக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்வுகளை ஆவணப்படுத்தல்

**ரேவதி கணேஷ்**

## முன்னுரை

ஆவணப்படுத்தல் என்பது ஒன்றைப்பற்றி அறிவதற்குத் தேவையான ஆவணங்களைப் பெறுதல் அல்லது உருவாக்குதல், ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், பகிர்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிக்கின்றது. ஆவணப்படுத்தல் ஆவணங்கள், நூல்கள், சாசனங்கள், ஒலிப்பதிவுகள், நிகழ்படங்கள், படங்கள், வாய்மொழித்தகவல்கள், பொருட்கள், எனப்பல வடிவங்களில் இருக்கலாம். பல துறைகளிலும் ஆவணப்படுத்தல் மிக முக்கிய ஒரு செயற்பாடாகும்.

எமது இன்றைய செயற்பாடுகளை நாம் மட்டுமன்றி எமக்கடுத்த தலைமுறையினரும் தெரிந்து கொள்வதற்கும் அதன் மூலமான கற்றலைப் பெறுவதற்கும் ஆவணப்படுத்தல் துணைபுரியும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான நோக்கங்களின் அடிப்படையில் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இன்று வரைக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்வுகளை ஆவணப்படுத்தல் எனும் இக்கட்டுரை அமைகின்றது. இக்கட்டுரையை முழுமையாக விளங்கிக் கொள்வதற்கு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைக் நிறுவகத்தின் வரலாறு பற்றியும், அங்குள்ள கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்த விதம் பற்றியும் குறிப்பாக நாடகமும் அரங்கியலும் கற்கை பற்றியும் தெளிவு ஏற்படுவது அவசியமாகும். இத்தெளிதலானது இக்கட்டுரையின் மூலம் ஆவணப்படுத்தப்படுகின்ற விடயங்கள், இவ்ஆவணப்படுத்தலின் அவசியம் என்பவற்றைத் தெளிவுபடுத்தும்.

## சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் (அறிமுகம்)

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் பற்றி நோக்கும் போது இது மட்டக்களப்பு நகரிலிருந்து மூன்று கிலோ மீற்றர் தெற்கே உள்ள கல்லடி எனும் ஊரில் அமைந்துள்ளது. இந்நிறுவகமானது ஆரம்பத்தில் அதாவது 1982 ஆம் அண்டு தொடக்கம் 2001 ஆம் ஆண்டு வரை "சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரி" எனும் பெயரில் இயங்கி வந்தது. அத்துடன் இக்கல்லூரியானது கலாச்சார திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்தது. இதன்போது இக்கல்லூரி வழங்கிய பட்டங்களைக் கல்வி அமைச்சு அங்கீகரிக்கவில்லை. அதனால் அப்பட்டங்களுக்கு பெறுமதி இல்லாமற் போய்விட்டது. அதனால் பலரின் வேண்டுகோளுக்கிணங்கவும், பல போராட்டங்களின் பின்பும் 1999 இல் சுவாமி விபுலானந்த இசை நடனக்கல்லூரியை கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கும் முயற்சியை கிழக்குப் பல்கலைக்கழகம் மேற்கொண்டது. இதன் பயனாக 20.04.2001 அன்று இக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் சம்பிரதாய பூர்வமாக "சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்" எனப் பெயர் சூட்டப்பட்டு இணைக்கப்பட்டது.

மேற்படி இணைக்கப்பட்டதன் பின் மேலும் இதனை தரமுயர்த்துவதற்காக சிலரை கிழக்குப் பல்கலைக்கழகம் நியமிக்கின்றது. ஆரம்பத்தில் பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ் இதன் இணைப்பாளராக வருகை தருகின்றார். அதன்பின் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களை இப்பணிக்கு நியமிக்கின்றது. அதன்போது அங்கு பட்டப்படிப்பு வகுப்பு ஆரம்பிக்கப்படுகின்றது. அதாவது அக்கல்லூரியில் டிப்ளோமா சான்றிதழ் பெற்ற மாணவர்களை இப்பட்டப்படிப்பில் இணைத்துக் கொள்வதோடு அவர்களுக்கு இரண்டு வருட நிறைவில் பட்டம் வழங்குதல் என்ற செயற்பாடு மேற்கொள்ளப்படுகிறது. இவ்வேளையில் அங்கு பல நிகழ்வுகள் நடைபெற ஆரம்பிக்கின்றன. அதில் ஒன்றுதான் “கிழக்கிசை”. கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையும், சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தினரும் இணைந்து சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே அந்நிகழ்வை நடாத்தியிருந்தனர். அதில் அதிகமாக பங்கு பற்றியோர் விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திள்ள விரிவுரையாளர்களும் மாணவர்களுமேயாகும். “கிழக்கிசை” நிகழ்வை நெறிப்படுத்தியிருந்தவர் போராசிரியர் சி.மௌனகுரு, உதவி நெறியாளராக திரு.விமலராஜ் அவர்கள் செயற்பட்டிருந்தார். அந்நிகழ்வானது ரூபவாகினி பொங்கல் விழாவில் ஒளிபரப்பானதுடன், வவுனியாவிலும் அரங்கேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். இதனையடுத்து நிறுவகத்திலே “லயம்” நிகழ்வு நடைபெறுகின்றது. இதனை வடிவமைத்து, தயாரித்து, ஒழுங்கமைத்திருந்தவர் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களேயாகும். அத்துடன் இதற்கு உதவி நெறியாளர்களாக விரிவுரையாளர் பாலசுகுமார் மற்றும் விமல்ராஜ் ஆகியோர் செயற்பட்டிருந்தார்கள். இந்நிகழ்வும் கிழக்கிசை போன்றே நடைபெற்றது.

இவ்வாறான நிகழ்வுகள் 2005 களிலே சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அக்காலகட்டத்தில் அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் ஆய்வுக்கட்டுரை எழுத ஆரம்பிக்கின்றனர். அதன்போது கிராமிய கலைகள் பற்றி ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்கும் அனுமதி அளிக்கப்படுகிறது. எனினும் இந்நிறுவகத்தின் செயற்பாடுகள் குறைவாகக் காணப்பட்டதனால் நிறுவகத்தின் அன்றைய இணைப்பாளராகவிருந்த பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் இசை, நடனம், ஓவியம், சிற்பம், புகைப்படம், சினிமா முதலான தொழில்நுட்பக் கலைகளையும் பாடநெறிகளாக்கி சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தை நுண்கலைப் பல்கலைக்கழகமாக மாற்றும் பொருட்டும், பரந்த அறிவையும் ஆராய்ச்சி மனப்பாங்கினையும் மாணவர் பெறும் பொருட்டும் துறைசார் அறிஞர்களின் துணையுடன் புதிய பாடத்திட்டத்தை தயாரிக்க முன்வருகிறார். இதனடிப்படையில் புதிய பாடத்திட்டமொன்றை பேராசிரியர் சி.மௌனகுரு தயாரிக்க இதற்கு முழுவடிவம் கொடுக்கிறார் பேராசிரியர் தட்சணாமூர்த்தி அவர்கள். இப்பாடத்திட்டம் மூதவையால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. இதனையடுத்து நான்கு வருட பட்டப்படிப்பையும், நான்கு வருட முடிவில் ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றினையும் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பாடத்திட்டமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டு அனுமதி பெறப்படுகின்றது. இத்துடன் இசைத்துறை, நடன நாடகத்துறை, கட்புலத் தொழில்நுட்பத்துறை எனப்புதிய துறைகள் ஆரம்பிப்பதற்கான அனுமதிகளும், வாய்ப்பு வசதிகளும் பெறப்படுகின்றன. இத்துடன் இந்நிறுவகம் பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் 2005.06.03 அன்று 1395/22 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் இசைத்துறை, நடன நாடகத்துறை, கட்புல தொழில்நுட்பத்துறை ஆகிய துறைகள் ஆரம்பிக்கப்பட்டன. இசை, நடனம்,

நாடகம், கட்புலக்கலைகள் என்பவற்றில் மாணவர்கள் ஒன்றை நான்கு வருடங்களுக்குச் சிறப்புப் பாடமாக கற்க வேண்டும். இதனைக் கற்று வெளியேறும் போது இளம் நுண்கலைமானி (BFA) எனும் பட்டத்தினை பெற்றுக் கொள்வர். இப்பட்டத்துடன் கற்கைநெறிப்பாடம் அடைப்புக் குறிக்குள் இடப்படும் உதாரணமாக BFA (நாடகமும் அரங்கியலும்) இவ்வாறு அமையும்.

மேற்படி சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகமானது ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வந்திருகின்றது. இவ்வளர்ச்சியானது அங்கு நடைபெற்ற, நடைபெறுகின்ற பல நிகழ்வுகளின் மூலமும் வெளிப்பட்டு நிற்கின்றது. அதாவது கிழக்கிசை, லயம் போன்ற நிகழ்வுகளில் ஆரம்பித்து இன்று வரை பல முக்கிய நிகழ்வுகளை இந்நிறுவகம் கண்டு வருகின்றது. இந்நிகழ்வுகள் ஒவ்வொன்றும் வரலாற்றில் பதியப்பட வேண்டியதும், ஆவணப்படுத்தப்பட வேண்டியதுமாகும். எனினும் இக்கட்டுரையானது நாடகமும் அரங்கியலும் கற்கை நெறியினால் நடாத்தப்பட்ட நிகழ்வுகளையே ஆவணப்படுத்த முன்வருகின்றது. அந்தவகையில் இங்குள்ள நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி பற்றி நோக்கி இது 2008 தொடக்கம் 2011 வரை நடாத்திய நிகழ்வுகளே இங்கு ஆவணப்படுத்தப்படுகின்றன.

அந்த வகையில் அழகியற் கற்கைகள் நிறுவகத்திலுள்ள நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி பற்றி நோக்கும் போது இவ்விசேட கற்கை நெறிக்காக முதன் முறையாக 2006/2007 கல்வியாண்டிற்காக 50 மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்வியாண்டிற்கும் 50 மாணவர்கள் வீதம் உள்வாங்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு தெரிவாகும் மாணவர்களுக்கு அதிகளவிலான செய்முறைக் கற்பித்தலும், கோட்பாட்டு ரீதியான கற்பித்தலும் வழங்கப்படுகின்றது. அதுமட்டுமல்லாது நாடகத்துறையில் தேர்ச்சி பெற்ற பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஏனைய மொழிக்கலைஞர்கள் எனப்பலரையும் கொண்டும், பிற இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்றும் கற்பதற்கான, பயிற்சிப்பட்டறைகளில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பு வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டும் வருகின்றன. அத்தோடு ஈழத்தமிழர்களின் பாரம்பரியக் கூத்துக்களை இங்குள்ள நாடகத்துறை மாணவர்கள் பாடமாகப் பயின்று ஆற்றுகைகளையும் நடத்தி வருவதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு இந்நிறுவகத்திலுள்ள ஏனைய கற்கை நெறி மாணவர்களுடன் கலைகளை பகிர்ந்து கொண்டும் பல நிகழ்வுகளை நடாத்தி வருகின்றார்கள். ஒட்டு மொத்தமாக நோக்கும் போது நாடகக் கற்கைநெறி வழங்குகின்ற அதிகளவிலான செய்முறை ரீதியான கற்பித்தலும், நாடகத்துறை இணைப்பாளர், நாடகத்துறை பேராசிரியர், விரிவுரையாளர்களினதும், மாணவர்களினதும் உழைப்புக்களே பல தனித்துவமான நிகழ்வுகள் நாடகத்துறையால் நடாத்தப்படுவதற்கு காரணமாக அமைகின்றன. இவ்வாறாக நடைபெற்ற நிகழ்வுகளே இக்கட்டுரையின் மூலம் ஆவணப்படுத்தப்படுகிறது.

## நிகழ்வுகள் – 2008

2007.11.12 அன்று சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகமும் அரங்கியலும் பாடநெறிக்குரிய முதல் தொகுதி மாணவர்கள் உள்ளெடுக்கப்படுகின்றனர் எனினும் 2008 ஆம் ஆண்டு இவர்களது அரையாண்டு கற்கை நெறியின் அனுபவத்தோடும் அப்போது அங்கு கடமையாற்றிய விரிவுரையாளர் அ.விமல்ராஜின் அயராத முயற்சியினாலும் மற்றும் நாடகத்துறை விரிவுரையாளர் திருமதி ஜெயரஞ்சினி ஞானதாஸின் ஓய்வின்றிய பயிற்சியினாலும் இரு முக்கிய நிகழ்வுகள் நடந்தேறியது. அதாவது சுவாமி விபுலானந்தர் நினைவு விழா மற்றையது "தண்ணீர்" குறும்பட விழாவாகும்.

சுவாமி விபுலானந்தர் நினைவு தின விழா பற்றி நோக்கும் போது இந்நிறுவகத்திலே நாடகத்துறையின் ஏற்பாட்டில் இங்குள்ள அனைத்து கற்கைநெறியினரையும் இணைத்துக்கொண்டு நடாத்தப்பட்ட மாபெரும் விழாவாகும். இந்நிகழ்வு 17.12.2008 - 21.12.2008 வரை நடைபெற்றது. இதனை முன்னின்று நடாத்தியவர் நாடகத்துறை விரிவுரையாளர் திரு.அ.விமல்ராஜ் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விழாவானது ஐந்து நாட்களைக் கொண்டதாக அமைந்ததுடன் இவ் ஐந்து நாட்களும் காலை அரங்கு, மாலை அரங்கு என்ற அடிப்படையில் பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் கொண்டதாக அமைந்திருந்தது. அத்துடன் ஆரம்பவிழா, இறுதிநாள் விழாவுடன் ஒவ்வொரு கற்கை நெறிக்கும் அவர்களது நிகழ்வுகளுக்காக ஒவ்வொரு நாள் ஒதுக்கப்பட்டிருந்தது. அத்துடன் பாரம்பரிய கலைகளின் ஆற்றுகைகளும் இவ்விழாவை அலங்கரித்தது மட்டுமல்லாது மாணவர்கள், விரிவுரையாளர்களினதும் பல ஆற்றுகைகளும் இவ்விழாவில் அரங்கேறின. இதற்கும் அப்பால் இந்நிகழ்விற்காக இந்தியாவிலிருந்து நாடகத்துறைப் பேராசிரியரும், இந்தியத் தமிழ் நாடகத்தின் தந்தை என அழைக்கப்படும் இராமானுஜம் மற்றும் தமிழ் இசைத்துறையில் மிகப்பிரபலமான சங்கீதபூசணம் அரிமளம் பத்மநாதன் போன்றோர் வரவழைக்கப்பட்டிருந்தனர். அத்துடன் இந்நிறுவகத்திலே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட விபுலானந்தர் சிலை ஆரம்பவிழாவிலே திறந்து வைக்கப்பட்டது மட்டுமல்லாது பாடசாலை மட்டக் கலைப் போட்டிகளை நடாத்தி பரிசில்களும் வழங்கப்பட்டது. மேலும் நிறுவகத்திலே பணியாற்றும் மூத்த விரிவுரையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டதோடு கலைஞர்களுக்கு உயரிய விபுலானந்தர் விருதும் வழங்கப்பட்டது. விபுலானந்தர் தின விழாவை பின்வரும் நிகழ்வுகள் அலங்கரித்திருந்தன.

### சுவாமி விபுலானந்தர் நினைவு தின தொடக்கவிழா – காலை அரங்கு –17.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 09.00 | விபுலானந்தர் சிலை திறந்து வைத்தல். |
| 09.05 | விபுலானந்தர் பாடல். |
| 09.10 | அதிதிகள் கௌரவம். |
| 09.15 | விபுலானந்தர் சமாதியிலிருந்து பிரதம அதிதிகளை மண்டபத்திற்கு அழைத்து வரல். |
| 09.20 | மங்கல விளக்கேற்றல். |
| 09.25 | தமிழ் வாழ்த்து<br>வரவேற்பு நடனம் - நடனத்துறை மாணவர்கள். |
| 09.30 | வரவேற்புரை<br>திருமதி. ஜெயந்தி திசாநாயக்கா, இணைப்பாளர், கட்புலக்கலை, சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.35 | ஆசியுரை<br>தலைவர், இராமகிருஷ்ணமிஷன் சுவாமிகள். |
| 09.40 | தலைமையுரை<br>பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

| | |
|---|---|
| 09.45 | அறிமுகவுரை<br>திரு.அ.விமல்ராஜ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.50 | சிறப்புரை<br>பேராசிரியர்.சி.மௌனகுரு, தலைவர், நுண்கலைத்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம். |
| 09.55 | பிரதம அதிதியுரை<br>சிவநேசதுரை சந்திரகாந்தன், முதலமைச்சர், கிழக்கு மாகாணம். |
| 10.10 | விபுலானந்தர் பாடல்களின் இசை இறுவட்டு வெளியீடு. |
| 10.25 | சிறப்பு அதிதியுரை<br>பதிவாளர், கிழக்குப்பல்கலைக்கழகம். |
| 10.30 | "அசைவுப் படிமம்" இறுவட்டு வெளியீடு. |
| 10.45 | ஓவியக்கண்காட்சி<br>சிறப்புரையும் இரசனைப்பகிர்வும். |

## இலக்கியக் கருத்தரங்கு – மாலை அரங்கு –17.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 02.00 | மங்கல விளக்கேற்றல். |
| 02.05 | தமிழ்மொழி வாழ்த்து. |
| 02.10 | வரவேற்புரை<br>திருமதி.வானதி பகிரதன். |
| 02.15 | தலைமையுரை<br>கலாநிதி செ.யோகராசா, மொழியியற்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம். |
| 02.35 | ஆய்வுக்கட்டுரை - 01<br>பேராசிரியர் செல்வராசா, கல்வியியற்துறை, கிழக்குப்பல்கலைக்கழகம். |
| 02.55 | கலந்துரையாடல். |
| 03.10 | தாளவாத்திய இசை<br>எஸ்.சிறிதரன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 03.30 | ஆய்வுக்கட்டுரை - 02<br>கலாநிதி,க.நாகேஸ்வரன்,தலைவர்,மொழியியற்துறை, சப்பிரகமுவப் பல்கலைக்கழகம். |
| 03.50 | கலந்துரையாடல். |
| 04.05 | ஆய்வுக்கட்டுரை - 03<br>முனைவர் அரிமளம் பத்மநாதன், செம்மொழி நிறுவனம், சென்னை. |
| 04.25 | கலந்துரையாடல். |

| | |
|---|---|
| 04.35 | ஆய்வுக்கட்டுரை - 04<br>ப.இரகுபரன், சிரேஷ்ட விரிவுரையாளர், தென்கிழக்குப்பல்கலைக்கழகம். |
| 04.55 | கலந்துரையாடல். |
| 05.10 | நன்றியுரை<br>திருமதி.ஜெயந்தி விக்னராஜன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

## இசை விழா – காலை அரங்கு– 18.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 09.00 | சுவாமி விபுலானந்தர் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்தல். |
| 09.05 | பிரதம அதிதிகளை மண்டபத்திற்கு அழைத்துவரல். |
| 09.10 | மங்கல விளக்கேற்றல். |
| 09.15 | விபுலானந்தர் பாடல். |
| 09.20 | வரவேற்புரை<br>செல்வி.சரவஸ்தி சுப்ரமணியம், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.25 | தலைமையுரை<br>திருமதி.பாலாம்பிகை இராஜேஸ்வரன், பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.30 | வயலின் இசைவிருந்து<br>வாத்திய இசைநிகழ்ச்சி, விரிவுரையாளர்கள், மாணவர்கள்,<br>சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.10 | இசையரங்கு<br>இரண்டாம் வருட இசைத்துறை மாணவர்கள், சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.40 | வயலின் இசைக்கச்சேரி<br>செல்வி.சரஸ்வதி சுப்ரமணியம், சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.45 | சிறப்பு அதிதியுரை<br>செல்வி.ரஜனி நடராஜா, உதவிக்கல்விப்பணிப்பாளர், அழகியற்கல்வி,<br>மட்டக்களப்பு. |
| 11.05 | கௌரவ அதிதியுரை<br>கலாபூசணம் திரு.ஜீவன்யோசப் |
| 11.10 | இசைக்கச்சேரி<br>திருமதி.பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

| | |
|---|---|
| 11.40 | பிரதம அதிதியுரை<br>கலாபூசணம் திருமதி.இராஜேஸ்வரி தட்சணாமூர்த்தி<br>முன்னைநாள் அதிபர், சுவாமி விபுலானந்தா இசைநடனக்கல்லூரி |
| 11.50 | இசைக்கச்சேரி<br>திருமதி.வத்சலா சங்கரநாராயணன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 12.20 | நன்றியுரை<br>திருமதி.அனுசியா பிரைட், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

## இசை விழா – மாலை அரங்கு – 18.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 02.30 | மங்கல விளக்கேற்றல் |
| 02.35 | வரவேற்புரை<br>திருமதி.கௌரிமலர் மகேந்திரன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 02.40 | தலைமையுரை<br>திருமதி பாலாம்பிகை இராஜேஸ்வரன், பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 02.45 | வீணை இசை<br>வாத்திய இசை நிகழ்ச்சி, விரிவுரையாளர்களும் மாணவர்களும் சு.வி.அ.க.நிறுவகம். |
| 03.05 | இசைக்கச்சேரி<br>செல்வி சியாமளங்கி கருணாகரன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 03.35 | வயலின் இசைக்கச்சேரி<br>திருமதி.பாலாம்பிகை இராஜேஸ்வரன், பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 04.05 | முனைவர் அரிமளம் பத்மநாதனைப் பற்றிய அறிமுகவுரை<br>திரு. வேல்முருகு சிறிதரன், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 04.10 | இசைக்கச்சேரி<br>முனைவர் அரிமளம் பத்மநாதன், செம்மொழி நிறுவனம், சென்னை. |
| 06.10 | நன்றியுரை<br>திருமதி பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், இசைத்துறை, சு.வி.அ.க.நிறுவகம். |

## நடன விழா – காலை அரங்கு – 19.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 09.00 | பிரதம அதிதிகளை வரவேற்றல். |
| 09.05 | மங்கல விளக்கேற்றல். |
| 09.10 | விபுலானந்தர் பாடல் |
| 09.15 | வரவேற்புரை<br>செல்வி.தாக்ஷாயினி கோபாலசிங்கம், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.20 | தலைமையுரை<br>திருமதி.பாலாம்பிகை இராஜேஸ்வரன், பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.25 | கணேசவந்தனம் - நடனவடிவமைப்பு, திருமதி.ஷார்மிளா றஞ்சித்குமார், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.40 | லிங்கசமர்ப்பணம்<br>நடனவடிவமைப்பு, செல்வி.தாக்ஷாயினி கோபாலசிங்கம், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.55 | ஒயிலாட்டம்<br>நடன வடிவமைப்பு, செல்வி.உஷாந்தினி துரைராஜா, வருகை விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.10 | பஞ்ச வாத்திய சங்கமம்<br>நடன வடிவமைப்பு, திருமதி.ஷார்மிளா றஞ்சித்குமார், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.30 | சிறப்பு அதிதியுரை<br>கலைமாமணி, திருமதி.இராஜகுமாரி சிதம்பரம், உதவிக்கல்விப் பணிப்பாளர், அழகியற்கலை, அக்கறைப்பற்று. |
| 10.35 | வர்ணஜால நடனம்<br>நடன வடிவமைப்பு, செல்வி.தாக்ஷாயினி கோபாலசிங்கம், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 10.55 | புத்தாக்க நடனம்<br>நடன வடிவமைப்பு, திருமதி.ஷார்மிளா றஞ்சித்குமார், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

| | |
|---|---|
| 11.05 | செந்தமிழ்நாடு<br>நடன வடிவமைப்பு, செல்வி.தாக்ஷாயினி கோபாலசிங்கம், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 11.15 | பிரதம அதிதியுரை<br>திருமதி.உஷா கனகசுந்தரம், ஆசிரியை, வின்சன்ட் தேசிய பாடசாலை. |
| 11.20 | சங்கமம்<br>திருமதி.ஷார்மிளா றஞ்சித்குமார், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 11.45 | தில்லானா<br>நடன வடிவமைப்பு, செல்வி. தாக்ஷாயினி கோபாலசிங்கம், விரிவுரையாளர், சு.வி.அ.க. நிறுவகம். |
| 12.00 | மங்களம் |
| 12.10 | நன்றியுரை<br>திருமதி ஷார்மிளா றஞ்சித்குமார், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

## நாடக விழா காலை அரங்கு – 20.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 09.00 | பிரதம அதிதிகளை வரவேற்றல் |
| 09.05 | மங்கல விளக்கேற்றல் |
| 09.10 | சுவாமி விபுலானந்தர் பாடல்<br>இசைத்துறை மாணவர்கள் |
| 09.15 | வரவேற்புரை<br>திருமதி.ஜெயரஞ்சினி ஞானதாஸ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.20 | தலைமையுரை<br>திரு.அ.விமல்ராஜ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 09.25 | பிரதம அதிதியுரை<br>பேராசிரியர் இராமானுஜம், தமிழ்நாடு. |
| 09.30 | கௌரவ அதிதியுரை<br>தர்மசிறி பண்டாரநாயக்க, பணிப்பாளர், ட்றைக்கோன் ஆட்ஸ் சென்ரர். |
| 09.35 | ஒளிபடும் காலம்<br>1ம் வருட மாணவர்களின் அரங்க ஆற்றுகை<br>நெறியாள்கை:திருமதி.ஜெயரஞ்சினி ஞானதாஸ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |

| | |
|---|---|
| 10.05 | பறைமேளக் கூத்து<br>மாமாங்கம் குழுவினர், பிலாலி வேம்பு, வெல்லாவெளி. |
| 10.25 | வசந்தன் கூத்து<br>தேற்றாத்தீவு வசந்தன் கூத்து ஆற்றுகைக் குழுவினர். |
| 11.00 | வெளிநாட்டுப்பெண்<br>கலந்துரையாடல்: 2ம் வருட நாடகத்துறை மாணவர்கள்,<br>நெறியாள்கை: திருமதி ஜெயரஞ்சினி ஞானதாஸ், விரிவுரையாளர்,<br>சு.வி.அ.க.நிறுவகம். |

## நாடகவிழா – மாலை அரங்கு – 20.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 02.00 | தூங்கிகள்<br>நெறியாள்கை: திரு.அ.விமல்ராஜ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 02.30 | கன்ரீன்<br>2ம் வருட நாடகத்துறை மாணவர்கள்<br>நெறியாள்கை: திரு.அ.விமல்ராஜ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 03.15 | ஆடலசைவு அரங்கு<br>சு.வி.அ.க.நிறுவக மாணவர்கள்,<br>நெறியாள்கை: திருமதி.ஜெயரஞ்சினி ஞானதாஸ், விரிவுரையாளர்,<br>சு.வி.அ.க.நிறுவகம். |

## நாடக விழா – இரவு அரங்கு – 20.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 06.00 | வரவேற்புரை<br>திரு.அ.விமல்ராஜ், விரிவுரையாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 06.05 | கூத்து அறிமுகம் |
| 06.10 | வடமோடிக் கூத்து - ஆற்றுகை நிகழ்வு |
| 08.10 | தென்மோடிக் கூத்து - ஆற்றுகை நிகழ்வு |

## இறுதி நாள் நிகழ்வுகள் – மாலை அரங்கு – 21.12.2008

| நேரம் | நிகழ்வுகள் |
|---|---|
| 02.00 | சுவாமி விபுலானந்தர் திருவுருவச் சிலைக்கு மலர்மாலை அணிவித்தல். |
| 02.15 | அதிதிகளை சுவாமி விபுலானந்தர் சமாதியிலிருந்து அழைத்து வரல். |
| 02.30 | மங்கல விளக்கேற்றல். |

| | |
|---|---|
| 02.35 | வரவேற்புரை<br>செல்வி.சியாமளாங்கி கருணாகரன். |
| 02.40 | தமிழ்மொழி வாழ்த்து - இசைத்துறை மாணவர்கள். |
| 02.45 | விபுலானந்தர் பாடலிசைத்தல் - இசைத்துறை மாணவர்கள். |
| 02.50 | தலைமையுரை<br>உபவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம். |
| 03.00 | சிறப்புரை, பணிப்பாளர், சு.வி.அ.க.நிறுவகம். |
| 03.10 | சிறப்பு நிகழ்ச்சி<br>பணிப்பாளரின் சிறப்பு ஆய்வு - "சுவாமி விபுலானந்தரின் நீரர மகளிர் இன்னிசை" நாட்டிய நாடகம். |
| 04.10 | சுவாமி விபுலானந்தர் நினைவு தினத்தையொட்டி நடைபெற்ற பாடசாலை மட்ட போட்டிகளின் வெற்றி பெற்றவர்களுக்கான விருது வழங்கல். |
| 04.20 | கௌரவ அதிதியுரை |
| 04.30 | சுவாமி விபுலானந்தர் இளம் விருது வழங்கல். |
| 04.40 | பிரதம அதிதியுரை<br>விநாயகமூர்த்தி முரளிதரன், பாராளுமன்ற உறுப்பினர் |
| 05.00 | சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் பணி புரியும் மூத்த கலைஞர்களை கௌரவித்தல். |
| 05.10 | சுவாமி விபுலானந்தர் உயரிய விருது வழங்கல். |
| 05.15 | நன்றியுரை. |

சுவாமி விபுலானந்தர் நினைவு தின விழாவையடுத்த இவ்விழாவுக்கு இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட நாடகத்துறைப் பேராசிரியரான இராமனுஜம் அவர்களைக் கொண்டு மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறையும் நடாத்தப்பட்டது.

அடுத்து சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகத்துறையினரால் 2008.11.27 அன்று "தண்ணீர்" குறும்பட விழா நடைபெற்றது. இக்குறும்படத்தை திரு.அ.விமல்ராஜ் (விரிவுரையாளர்) நெறிப்படுத்தியிருந்ததுடன் நாடகத்துறை மாணவர்கள் பலர் இதில் நடித்தும் திரைக்கும் பின்னாலுள்ள செயற்பாடுகளில் பங்கு பற்றியும் இருந்தனர். இத்திரைப்படமானது "நீர் இன்றி அமையாது உலகு" எனும் கருத்தை புலப்படுத்துவதாக அமைந்திருந்தது. குறுந்திரைப்பட செயற்பாடுகளில் ஈடுபட்டது மட்டுமல்லாது அத்திரைப்பட விழாவையும் ஒழுங்குபடுத்தி நடாத்திய

நாடகத்துறை மாணவர்களுக்கு குறுந்திரைப்படத் துறையில் அனுபத்தை வழங்கியது. தண்ணீர் குறுந்திப்பட விழாவில் “மனிதநேயம்” குறுந்திரைப்படமும் திரையிடப்பட்டதுடன் அதுபற்றிய உரையை பேராசிரியர் சி. மௌனகுரு வழங்கியதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## நிகழ்வுகள் – 2009

2009 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நாடகத்துறையால் அதிகளவான நிகழ்வுகள் நடாத்தப்பட்டுள்ளது. இவை கற்கைநெறி நிகழ்வுகள், கலை நிகழ்வுகள் எனப்பிரிக்கக்கூடியதாகவும் உள்ளது.

## கற்கைநெறி நிகழ்வுகள் – 2009

இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களுக்கு 90 மணித்தியாலங்கள் கொண்ட செய்முறைப்பாடமாக ஈழத்தமிழரது பாரம்பரிய அரங்க வடிவமான வடமோடிக்கூத்து அறிமுகப்படுத்தப்பட்டது.

வசந்தன் கூத்தின் ஆடல் முறைகளையும், பாடல்களையும் மீளுருவாக்கம் செய்யும் முயற்சியை 10.02.2009 இல் நாடகத்துறை முன்னெடுத்தது. மட்டக்களப்பின் பாரம்பரிய அரங்க வடிவமான வசந்தன் கூத்தை மாணவர்கள் கற்கும் நோக்கிலும், மீண்டும் மக்கள் மத்தியில் புதுப்பொலிவுடன் விளங்க வைக்கும் நோக்கிலும் வசந்தன் கூத்தை மீளுருவாக்கம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அதற்காக மட்டக்களப்பிலுள்ள தேற்றாத்தீவு, வந்தாறுமூலை ஆகிய கிராமங்களுக்கு மாணவர்களை விரிவுரையாளர் அ.விமல்ராஜ் அழைத்துச் சென்று அங்குள்ள வசந்தன் கூத்துக்களைப் பார்வையிடச் செய்வதோடு அந்நிகழ்த்துகைக் கலைஞர்களோடும் கலந்துரையாடி அந்நிகழ்வுகளைக் கொண்டு விபரணப்படம் ஒன்றினையும் உருவாக்கினர். அத்தோடு வசந்தன் கூத்து பாடல்களைச் செம்மையாக்கும் நிகழ்வு விரிவுரையாளர்களான திருமதி பிரியதர்சினி ஜெகதீஸ்வரன், திரு.த.பிரதீபன் ஆகியோரைக் கொண்டு நடாத்தப்பட்டது.

பாரம்பரிய தமிழ் வாத்தியங்களைக் கொண்டதும், பாரம்பரிய ஆடல் வடிவங்களை உள்ளடக்கிய இன்னிய அணி ஒன்றை (பாரம்பரிய பேண்ட் வாத்தியக்குழு) விரியுரையாளர்களான மோகனதாசன், உமா சிறிசங்கர் ஆகியோர் மாணவர்களை கொண்டு உருவாக்கினார்.

27.05.2009 அன்று “இலங்கையின் குறும்படங்களும் இன்றைய போக்கும்” என்ற தலைப்பில் ஆய்வரங்கு நடைபெற்றது. இந்நிகழ்வில் அ.விமல்ராஜின் “கிச்சான்”, கே.ரதிதரனின் “வெட்டை”, “The Come From” என்கின்ற திரைப்படங்கள் திரையிடப்பட்டதுடன் அது பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது.

நாடகத்துறை மாணவர்களுக்கு நாடக எழுத்துரு எழுதுவது (Script writing) எனும் பாடத்திட்டத்துக்கு அமைவாக சிறுகதை ஆசிரியர்கள், சிறுகதை ஆய்வாளர்கள் என்போரைக் கொண்டு பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன. அந்த வகையில் 16.06.2009 அன்று சிறுகதை ஆய்வாளரான பேராசிரியர் செ.யோகராசா அவர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. அதேபோல் 17.06.2009 அன்று பிரபல நவீன சிறுகதை எழுத்தாளரான திரு.வி.கௌரிபாலன்

அவர்களைக் கொண்டு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. மற்றுமொரு பிரபல நவீன நாடக எழுத்தாளரான திரு. மலர்ச்செல்வன் என்பவரைக் கொண்டு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது. அன்று மாலை "நானும் கோடீஸ்வரன்" எனும திரைப்படம் திரையிடப்பட்டு கலந்துரையாடலும் இடம்பெற்றது.

22.06.2009அன்று கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை விரிவுரையாளரான திரு. சி.ஜெயசங்கர் அவர்கள் மூலமாக "கூத்தின் இன்றை நிலை" என்கின்ற தலைப்பில் ஆய்வரங்கு ஏற்பாடு செய்யப்பட்டு நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

24.06.2009 அன்று மட்/வந்தாறுமூலை மகாவித்தியாலயத்தில் க.பொ.த உயர்தரப் பிரிவில் நாடகத்தை ஒரு பாடமாக பயில்கின்ற மாணவர்களுக்கு பரீட்சைக்கு உதவும் நோக்கில் அம்மாணவர்களை நிறுவகத்திற்கு அழைத்து அவர்களுக்கு நாடகப் பயிற்சிப்பட்டறை ஒன்றினை காலை 8.30 தொடக்கம் மாலை 4.30 மணி வரை நாடகத்துறை விரிவுரையாளர்களும், மாணவர்களும் நடாத்தினர்.

திரு. கௌரீசன் அவர்களால் இரண்டாம் நாடகத்துறை மாணவர்களுக்கு காலனித்துவம், நவீன சிந்தனைகள், நவீனத்துவம், பின் நவீனத்துவம், நவகாலனித்துவம், உலகமயமாதல் போன்ற தலைப்புக்களில் 01.07.2009 அன்று கருத்தரங்கு நிறுவகத்திலே நடாத்தப்பட்டது.

18.11.2009 - 24.11.2009 வரை நாடகத்துறையின் ஏற்பாட்டில் 'மக்கள் களரி' (கொழும்பில் உள்ள தொழில் முறைக் கலைஞர்களைக் கொண்ட நாடகக்குழு) நாடகக் குழு கலைஞர்களைக் கொண்டு நாடகத்துறை மாணவர்களுக்கு நாடகத்திற்கான பயிற்சிப்பட்டறையும், நாடகத் தயாரிப்பும் என்ற தொனிப் பொருளிலான பயிற்சிப்பட்டறை நடைபெற்றது. இதனூடாக நாடக நடிப்புப் பயிற்சி மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அதன் மூல் சிறிய நாடகம் ஒன்றும் அளிக்கை செய்யப்பட்டது.

## கலை நிகழ்வுகள் – 2009

03.03.2009 அன்று நாடகத்துறையால் மட்டக்களப்பு நூலகத்தினால் ஒழுங்குபடுத்தப்பட்ட நூலக வாரத்திற்காக வாசிப்பின் முக்கியத்துவத்தை மக்களுக்கு எடுத்துக் காட்டும் விதத்தில் வீதி நாடகம் ஒன்ற தயாரிக்கப்பட்டு மட்டக்களப்பின் பல இடங்களிலும் மேடையேற்றப்பட்டது.

தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்திட்ட பணியகம் (National Integration Programme Unit) அரசியலமைப்பு அலுவல்கள் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சின் "பல்லின பண்பாட்டு விழா" (Multi Cultural Show – 2009) 04.05.2009 அன்று விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கிலே சிறப்பாக நடைபெற்றது. அந்நிகழ்விலே தமிழப் பாரம்பரிய நடனங்களை மாணவர்களைக் கொண்டு வடிவமைத்து ஆற்றுகை செய்திருந்தனர். குறிப்பாக கிழக்கிலங்கைத் தமிழ் மக்களின் முதுசமான வடமோடிக் கூத்தின் ஆடல்களையும், பாடல்களையும், தாளக்கட்டுக்களையும் அடிநாதமாகக் கொண்டு பலதையும் இணைத்த "போர்க்களம்" எனும் புத்தாக்க நிகழ்வு மேடையிடப்பட்டது. இது பேராசிரியரின் படைப்பாக்கமாகும். அத்துடன் போர்க்கள ஆற்றுகைக்கான மேற்பார்வை, ஆலோசனை, பாடல்கள் என்பனவற்றுக்கு

பேராசிரியர் பொறுப்பாகவிருந்தார். இதற்கான ஆடற்பயிற்சியை க.மோகனதாசன், திருமதி. உமா சிறிசங்கர் (நாடகத்துறை விரிவுரையாளர்கள்) ஆகியோர் வழங்கியிருந்தனர். இதனைத் தயாரித்திருந்தவர் விரிவுரையாளர் திரு.விமல்ராஜ் ஆவார். இதேபோல் பல தமிழ், முஸ்லிம், சிங்கள பாரம்பரிய அரங்க அளிக்கைகள் இந்நிகழ்விலே இடம்பெற்றது. இந்நிகழ்வு மூலம் சிங்களவர்களுக்கு தமிழ் கலைவடிவங்களைப் பார்ப்பதற்கான சந்தர்ப்பமும், தமிழர்களுக்கு சிங்களக் கலைவடிவங்களை பார்ப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது.

03.06.2009 அன்று நாடகத்துறை மாணவர்களால் நிறுவகத்திலே "இசைவும் அசைவும்" எனும் தலைப்பில் தமிழ் கிராமிய நடனங்கள் நிகழ்த்தப்பட்டன. அதில் முதலாம் வருட நாடகத்துறை மாணவர்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வு மூலம் நாடகத்துறை மாணவர்களுக்கு ஆடல், பாடல் பயிற்சிகளும் தமிழர் பாரம்பரிய நிகழ்த்துகைக்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டது. இதன்போது இசைவும் அசைவும் என்ற விதத்தில் நகைச்சுவைப் பாணியில் திருமணக்காட்சி நாடகத்துறை மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்டது. பார்வையாளர்களாக நிறுவகத்திலுள்ள விரிவுரையாளர்கள், மாணவர்கள் பங்கு கொண்டனர்.

இந்தியாவில் பரத நாட்டிய மேற்படிப்பை மேற்கொண்டிருக்கும் இலங்கையரான மோகனப்பிரியனை நிறுவகத்திற்கு அழைத்து அவரது ஆற்றுகை நிகழ்வு ஒரு நாள் விழாவாக அரங்கேற்றப்பட்டது. அதில் மோகினி ஆட்டம், குச்சுப்பிடி ஆட்டம், பரத நாட்டியம் அத்துடன் பரதத்தில் நவீன முறையைக் கையாண்டு இணைப்பு நடனம் போன்றவை நிகழ்த்திக் காட்டப்பட்டன.

29.07.2009 அன்று அரங்க நிகழ்வாக முதலாம் வருட நாடகத்துறை மாணவர்களால் "பண்பும் பயனும்", "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" ஆகிய இரு நாடகங்கள் மேடையிடப்பட்டதுடன் அரங்கப்பாடல்களும் அளிக்கை செய்யப்பட்டது.

18.08.2009 அன்று இரண்டாம் வருட 45 மாணவர்களும், விரிவுரையாளர்களும் இணைந்து ஐந்து நாட்கள் கொண்ட கல்விச் சுற்றுலா நிகழ்வு இடம்பெற்றது. இச்சுற்றுலாவை திட்டமிட்டுக் கொடுத்ததோடு அதற்கான ஒழுங்குகளையும் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் ஏற்படுத்தியிருந்தார். அத்தோடு சுற்றுலாவுக்குரிய அனைத்து ஒழுங்குகளையும் நாடகத்துறை இணைப்பாளர் திரு.விமலராஜ் அவர்கள் மேற்கொண்டார். இந்நிகழ்வானது அதிகளவிலான கலை நிகழ்வுகளையும் அதே நேரம் கற்கை நோக்கத்தையும் அடிப்படையாக் கொண்டமைந்திருந்தது. இதன்போது பிரபல சிங்கள நாடகக் கலைஞரான தர்மசிறி பண்டாரநாயக்காவினது 'ட்ரைக்கோன்' நாடகக்குழுவினருடன் சந்திப்பும், கலந்துரையாடல்களும், நிகழ்த்துகைகளும் இடம்பெற்றமை. ஆற்றுகை செய்யக் காரணமாக அமைந்தது. அதனையடுத்து பராக்கிரம நெரியல்ல அவர்களது மக்கள் களரி நாடகக் குழுவினருடனான சந்திப்பு இடம்பெற்றது. அதில் மக்கள் களரி நாடகக்குழுவின் ஆற்றுகைகளும், சிங்கள பாரம்பரிய அளிக்கைகளும், விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களினதும் அரங்க அளிக்கைகள் இடம்பெற்றன. இச்சந்திப்பே சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களைக் கொண்டு "மிருச்சகடிகம்" நாடகத்தை மக்கள் களரி அரங்கேற்ற காரணமாக அமைந்தது. தமிழ் சிங்கள நாடகத்துறையினர் இணைய இச்சுற்றுலா பாலமாக அமைந்தது. அத்தோடு அடுத்து பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களைச்

சந்தித்து கலந்துரையாடும் நிகழ்வும் இடம்பெற்றது. இதன்போது பேராசிரியரது ஆசிர்வாதங்களை சுற்றுலா சென்ற மாணவர்கள் பெற்றுக்கொண்டனர். அதுமட்டுமல்லாது அச்சுற்றுலாவின் போது கொழும்பிலுள்ள பிரபல அரங்குகளான லயனல் வென்ற், லும்பினி அரங்கு, கிராமிய கலை அரங்கு ஆகிய அரங்கு பார்வையிட்டதுடன் கிராமிய கலை அரங்க மாணவர்களுடன் இணைந்து நிகழ்த்துகைகளிலம் ஈடுபட்டனர். இக்கல்விச் சுற்றுலாவானது நாடகத்துறை மாணவர்களுக்கு மிகவும் பயனுள்ள விதமாக அமைந்திருந்தது.

12.08.2009 அன்று இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களால் அவர்களது நாடக எழுத்துரு பாடத்திற்கு அமைவாக மாணவர்களால் எழுதப்பட்டு தயாரிக்கப்பட்ட "ஏக்கம்", "சிறைச்சாலை", "வெற்றிடம்" போன்ற நாடகங்கள் மேடையிடப்பட்டன.

22.09.2009 அன்று நவராத்திரி விழாவை முன்னிட்டு நிகழ்ந்த கலை நிகழ்வுகளில் நாடகத்துறை விரிவுரையாளரான திரு.க.மோகனதாசன் அவர்களால் பேராசிரியர் மௌனகுரு அவர்களின் சிறுவர் நாடகமான "வேடனை உச்சிய வெள்ளைப் புறாக்கள்" நாடகம் நெறியாள்கை செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டது. இதில் நாடக மாந்தர்களாகவும், பாடகர்களாகவும் இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்கள் பங்கு கொண்டிருந்தனர்.

இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களின் கலை நிகழ்வொன்று 23.09.2009 அன்று நிறுவகத்திலே நடைபெற்றது. அதில் "அந்தப்புர ரகசியம்" எனும் மனோரதிய பாணியிலான நாடகம் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு மேடையிடப்பட்டது. அதேபோல் 24.09.2009 அன்று நாடகத்துறை மாணவர்களால் "கற்க கசடற" எனும் நாடகம் மேடையிடப்பட்டது.

02.12.2009 அன்று இந்தியத் தமிழ் நாடகக் கலைஞரான பிரளயன் என்பவரது புதிய நாடக உருவாக்கமான "பாரிபடுகளம்" எனும் நாடகம் திரையிடப்பட்டு அதன் பின்னர் அந்நாடகம் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது.

09.12.2009 அன்று நாடகத்துறை மாணவர்களது கற்றல் செயற்பாட்டிற்காக சேக்ஸ்பியரின் "ஒதல்லோ" நாடகத்தை திரைப்படமாகவும், நாடகமாகவும் இருவேறு விதமாக உருவாக்கப்பட்ட விதம் பற்றிய இரு திரைப்படங்கள் மேடையிடப்பட்டு அதன் பின்னர் அத்திரைப்படங்கள் பற்றிய கலந்துரையாடலும் இடம்பெற்றது.

## நிகழ்வுகள் – 2010

## கற்கைநெறி நிகழ்வுகள் – 2010

2010 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே முதல் நிகழ்வாக இடம்பெற்றது ஒரு கற்கை சார்ந்த நிகழ்வே ஆகும். அதாவது 08.02.2010 அன்று பிரித்தானியாவிலுள்ள "Fun For Life" எனும் நாடகக்குழுவைச் சேர்ந்த ஐந்து கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அழகியற் கற்றைகள் நிறுவகத்திற்கு வருகை தந்து இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை ஒன்றினை நடாத்தியிருந்தனர். அவர்களுடன் மட்டக்களப்பு திருமறைக்கலாமன்ற நிறுவகரும் (திருவள்ளுவன், றதிவதனி) அவரது குழுவினரும் கலந்து

கொண்டு நாடகப்பயிற்சிப் பட்டறையை மேற்கொண்டனர். இப்பயிற்சிப் பட்டறையானது பிற்பகல் 2.00 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5.30க்கு நிறைவுற்றது.

13.02.2010 அன்று "Fun For Life" நாடகக்குழுவினரின் ஆற்றுகைகள் இடம்பெற்றது. அத்துடன் இவர்கள் பலே நடனம், மேடைப்பொருட்களைக் கையாளும் விதம், குரல் பயிற்சி, மேடை அசைவுகள் என்பன போன்ற விடயங்களை இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களுக்கு பயிற்றுவித்தனர்.

2010 ஆம் ஆண்டு உலகப் புகழ் பெற்ற நாடகக் கலைஞரும், இந்தியாவின் கல்கத்தாவைச் சேர்ந்த நாடகக்காரராகிய "பாதல் சர்க்கார்" - அவர்களுடைய மாணவரும், அவருடைய நாடகங்களில் பங்கு பற்றி அனுபவங்களைப் பெற்றவருமான "பிரணாப் முகர்ஜி" அவர்கள் வருகை தந்து இரண்டு நாட்கள் கொண்ட நாடகப் பயிற்சிப் பட்டறையை நாடகத்துறை மாணவர்களுக்கு மேற்கொண்டார் இதன்போது தனி நடிப்பின் மூலம் எவ்வாறு சமூகத்தில் உள்ள அடக்கு முறைகளுக்கு எதிராக அரங்கச் செயற்பாட்டின் மூலம் குரல் கொடுப்பது என்பன போன்ற பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. அது மட்டுமல்லாது பிரணாப்முகர்ஜியின் இரு ஆற்றுகைகளும் இடம்பெற்றதுடன் அது பற்றிய கலந்துரையாடல்களும் நடைபெற்றது.

2010 ஆம் ஆண்டிலே சிங்கள கண்டிய நடனக் கலைஞரும், சிங்கள கண்டிய நடன பெர வாத்திய கலைஞருமான "கர்ஷ" என்பவரின் இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை நாடகத்துறை, நடனத்தறை மாணவர்களுக்கும் சேர்த்து நிறுவகத்திலே நடைபெற்றது. அதன்போது கர்ஷ அவர்களினால் கண்டிய நடனத்தின் ஆரம்ப பயிற்சிகள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டதுடன் கர்ஷ அவர்களது ஆற்றுகைகளும் இடம்பெற்றது.

சீன ஒபேராவின் பயிற்சியும், நிகழ்த்துகையும் எனும் நிகழ்வு 2010 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நடைபெற்றது. அது யப்பானில் இருந்து வருகை தந்திருந்த ஒரு ஒபேராக்கலைஞரால் நாடகத்துறை மாணவர்களுக்காக நிகழ்த்தப்பட்டது. இதன் மூலம் நாடகத்துறை மாணவர்கள் சீன நாட்டின ஒபேராவை நேரடியாக காணும் வாய்ப்பையும் அதில் சிறிதளவேனும் பயிற்சியை பெறுவதற்கும் சந்தர்ப்பமாக அது அமைந்தது.

25.06.2010 தொடக்கம் 27.10.2010 வரை க.பொ.த உயர்தர வகுப்பில் நாடகத்தை ஒரு பாடமாக பயிலும் மாணவர்களுக்காக உயர்தர வகுப்பு நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்ட கருத்தரங்கு விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவக நாடகத்துறையால் மட்/களுதாவளை மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. அதில் அப்பிரதேசத்திலுள்ள பத்திற்கும் மேற்பட்ட அதிகமான மாணவர்கள் கொண்டனர்.

03.07.2010, 04.07.2010 ஆகிய இரு தினங்களில் மட்டக்களப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு அவர்களது நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சியும், கருத்தரங்கும் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் நாடகத்துறையால் நடாத்தப்பட்டன. இதற்கு நிறுவக மாணவர் ஒன்றியமும் ஆதரவு வழங்கியது.

05.08.2010 அன்று மட்/சிவானந்தா தேசிய பாடசாலையில் க.பொ.த உயர்தர வகுப்பில் நாடகத்தை பயிலும் மாணவர்களுக்கு நாடகத்துறை இணைப்பாளர் திரு.அ.விமல்ராஜ் மற்றும் நாடகத்துறை மாணவர்களும் இணைந்து பயிற்சிப்பட்டறையை நடாத்தினர் அதில் அப்பாடசாலையிலுள்ள நாடகத்தை பயிலும் 50 மாணவர்கள் பங்கு பற்றினர்

## நிகழ்வுகள் – 2010

24.02.2010 அன்று யப்பானிய பாரம்பரிய நாடக வடிவமான "நோ" நாடகம் திரையிடப்பட்டது. அனைத்து வருட நாடகத்துறை மாணவர்களும் அந்நிகழ்வில் பங்கு கொண்டதுடன் திரையிடப்பட்ட "நோ" நாடகம் பற்றிய கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

03.03.2010 மற்றும் 17.03.2010 ஆகிய இரு தினங்களில் நாடகத்துறையினர் அரங்க ஆற்றுகையாக "விடியலைத்தேடி", "அடையாளம்", "சாக்கடைக்குள் முத்து", "காவோலை" ஆகிய நாடகங்களை மேடையிட்டனர்.

27.03.2010 அன்று சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நாடகத்துறையின் ஏற்பாட்டில் "உலக நாடக தின விழா" சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர், மற்றும் சிறப்பு அதிதியாக பேராசிரியர் சி.மௌனகுரு ஆகியோர் கலந்து கொண்டனர். அந்நிகழ்விலே மூத்த நாடகக் கலைஞரான மூனா.கா. என்பவருக்கு மூத்த நாடகக் கலைஞருக்கான கௌரவிப்பு இடம்பெற்றது குறிப்பிடத்தக்க விடயமாகும். அத்துடன் உலக நாடக தின விழாச் செய்தியும் வாசிக்கப்பட்டதுடன், கீழ்வரும் நாடகங்களும் மேடையிடப்பட்டது.

| நாடகம் | நெறியாளர் | தயாரிப்பு | நாடகக்கரு |
|---|---|---|---|
| மகாகவி காளிதாசரின் அபிக்ஞானசாகுந்தலம் | திருமதி. ஜெயரஞ்சனி ஞானதாஸ் | இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்கள் | துஸ்யந்த மகாராஜா சகுந்தலையை காந்தர்வமணம் புரிந்ததை மறந்தமையினால் ஏற்பட்ட விளைவுகள். |
| புத்தாக்கம் | ம.லாவண்யா, வ.நிர்மலகாந்தன் | ம.லாவண்யா, வ.நிர்மலகாந்தன் | மூன்று விதமான நடனங்கள் (வடமோடிக்கூத்து, கிராமிய நடனம், பரத நாட்டியம்) ஒரே இசைக்கு ஆடப்படுகின்றது. |
| தலைவிதி (வடமோடிக் கூத்து) | இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்கள். | | காதலின் பின்பும் சீதனக்கொடுமை |

| | | | |
|---|---|---|---|
| பாடுகளின் கதை (தனியாள் நடிப்பு) | பிறேம்நிஷாந், 2ம் வருட நாடகத்துறை மாணவன். | பிறேம்நிஷாந், 2 ஆம் வருட நாடகத்துறை மாணவன். | குடும்பத்தில் ஏற்படும் சோகங்கள். |
| வேலுசரவணனின் "தேவலோக யானை" | திரு.க.மோகனதாசன், திருமதி.உமாசிறிசங்கர் (நாடகத்துறை விரிவுரையாளர்கள்) | 3 ஆம் வருட நாடகத்துறை மாணவர்கள் | சோம்பேறித்தனமான ஒருவனின் நிறைவேறாத கனவுலக வாழ்க்கை. |

உலக நாடக விழாவையடுத்து சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நாடகத்துறையினரால் கல்விச்சுற்றுலா ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் நாடகத்துறை இணைப்பாளர் விமல்ராஜ், இசைத்துறை விரிவுரையாளர் செல்வி.சரஸ்வதி சுப்பிரமணியம் ஆகியோரும், 3 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களும் பங்கு கொண்டனர். அக்கல்விச் சுற்றுலாவானது ஐந்து நாட்கள் கொண்டதாக அமைந்திருந்தது. அதற்கான காரணம் யாதெனில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மக்கள் களரி நாடக்ககுழுவின் நாடக விழாவை பார்வையிடுவதாக அமைந்திருந்தது. அத்துடன் மக்கள் களரி ஒப்பனைக் கலைஞர் மூலமாக ஒப்பனைப் பயிற்சியையும் மாணவர்கள் அங்கு பெற்றுக் கொண்டனர். மேலும் அக்கல்விச் சுற்றுலாவின் போது யாழ் பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்களுடனும், விரிவுரையாளர்களுடனும் கலந்துரையாடலிலும் ஈடுபட்டனர்.

2010 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளின் வரிசையில் குறிப்பிடத்தக்க அரங்க ஆற்றுகைகளில் ஒன்றாக பாரதியார் பாடல்களுக்கு இசையமைத்து பாடல்களாகவும், நடனமாகவும் மேடையேற்றம் செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. அதேபோல் தமிழ் கிராமியப் பாடல்களை கொண்டு தயாரிக்கப்பட்ட நிகழ்வுகள் திருகோணமலையில் இடம்பெற்ற கலாச்சார நிகழ்விலும், மட்டக்களப்பில் நடைபெற்ற கலாச்சார நிகழ்விலும் மேடையேற்றப்பட்டன. இதில் நாடகத்துறை, இசைத்துறை, நடனத்துறை மாணவர்கள் பங்கு பற்றினர்.

பிரபல சிங்கள நாடகக்கலைஞரும், தயாரிப்பாளருமான தர்மசிறி பண்டாரநாயக்காவினது நெறியாள்கையிலும், அவரது நாடகக் குழுவின் ("ட்ரைக்கோன்") தயாரிப்பிலும் உருவான "வேதாளம்" எனும் பிரமாண்டமான சிங்கள மொழியிலான நாடகம் 2010 ஆம் ஆண்டு நாடகத்துறையின் ஏறப்பாட்டில் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக இராசதுரை அரங்கிலே அரங்கேறியது. அந்நிகழ்விலே மட்டக்களப்பு அரசாங்க அதிபர், கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் மற்றும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் பங்கு கொண்டார்கள்.

2010 ஆம் ஆண்டு இறுதி நிகழ்வாக மாபெரும் குறுநாடகவிழா நாடகத்துறையால் விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நடாத்தப்பட்டது. இது 08.11.2010 - 12.11.2010 வரை நடைபெற்றது. இந்நாடக விழாவானது இலங்கைத் தமிழ் நாடகப் பரப்பில், நாடக வரலாற்றிலே முதல் முறையாக 41 நாடகங்களைத் தயாரித்து நெறிப்படுத்தி மிகவும் சிறப்பான

முறையிலும், நவீன அரங்கப் பரிமாணங்களுடன் 3ஆம் வருட நாடகத்துறை மாணவர்களால் ஆற்றுகை செய்யப்பட்டன. நாடகங்களை நெறிப்படுத்துவது தொடர்பான கற்பித்தலும், பயிற்சிகளும் நான்கு மாதங்களுக்கு மேலாக மாணவர்களுக்கு வழங்கப்பட்டன. குறுநாடக விழாவில் அளிக்கை செய்யப்பட்ட ஒவ்வொரு நாடகமும் 25-30 நிமிடங்களைக் கொண்டதாக அமைந்தது. அந்நாடகங்களுக்கான முழுப்பொறுப்பையும் நாடகத்துறை இணைப்பாளர் திரு.அ.விமல்ராஜ் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார். அந்நிகழ்வானது காலை மாலை எனத் தொடர்ச்சியாக ஐந்து நாட்கள் நடைபெற்றது. இலங்கை பூராகவும் குறுநாடக விழாவிற்கான அழைப்பிதழ் அனுப்பப்பட்டது. அத்துடன் நாடகங்கள் பற்றிய விளம்பரப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டது. தினமும் 500க்கு மேற்பட்ட பார்வையாளர்கள் பல இடங்களிலும் இருந்து வருகை தந்திருந்தனர். அந்நிகழ்வு குறுநாடக விழாவாக மட்டுமன்றி 3 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களுக்கான நாடக நெறியாள்கைக்குரிய பரீட்சையாகவும் அமைந்திருந்தது. நாடகம் ஒன்றை தெரிவு செய்து ஆற்றுகை முதல் அனைத்து பயிற்சியையும் அனுபவத்தையும் நாடகத்துறை மாணவர்கள் குறுநாடக விழா மூலம் பெற்றுக்கொண்டனர் என்பது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும். குறுநாடக விழா நாடகப்பட்டியலானது பின்வருமாறு நேர வரையறைக்குள் திட்டமிடப்பட்டு அரங்கேற்றப்பட்டது.

## குறுநாடக விழா – 2010 (40 நாடகங்களின் ஆற்றுகை)

## முதலாம் நாள் நிகழ்த்துகைகள் – 08.11.2010

### காலை அரங்கு

| நேரம் | நாடகம் | நெறியாளர் |
|---|---|---|
| 09.00 - 09.45 | தாத்தா சொன்ன கதை | ஏ.எல்.அனன்சியா அவுட்ஸ்கோன் |
| 09.45 - 10.30 | கோமாளிகளின் விடுதி | வ.நிர்மலகாந்தன் |
| 10.30 - 11.15 | ஒரு ரூபாய் | சா.அசோக்குமார் |
| 11.15 - 12.00 | பாறையும் கசிவும் | நே.இந்துஜா |

### மாலை அரங்கு

| | | |
|---|---|---|
| 04.00 - 04.45 | புனரபி ஜனனம் புனரவி மரணம் | இ. நிஷாந்தினி |
| 04.45 - 05.30 | சாத்திரம் எதுக்கடி | கு.கிஷாந்தி |
| 05.30 - 6.15 | உறுதி மனம் | இ.லலிதரூபன் |
| 06.15 - 7.00 | தர்மம் | யோ.டிலக்ஷனா |

## இரண்டாம் நாள் நிகழ்த்துகைகள் – 09.11.2010

| நேரம் | நாடகம் | நெறியாளர் |
|---|---|---|
| 09.00 - 09.45 | சீதா | த.தேவமலர் |
| 09.45 - 10.30 | கூட்டியக்கம் | மு.ஜெயக்குமார் |
| 10.30 - 11.15 | பிள்ளை அழுத கண்ணீர் | சி.ஜிவோஜினி |
| 11.15 - 12.00 | வாழ்க்கை எனும் பாதையிலே | ர.கோகுலன் |

## மாலை அரங்கு

| | | |
|---|---|---|
| 04.00 - 04.45 | உயிர் தேடும் ஜடங்கள் | அ.ரிஷ்வினி |
| 04.45 - 05.30 | மங்கையராய் பிறப்பதற்கே | சி.சிவமதி |
| 05.30 - 06.15 | கோதுடைக்கும் குஞ்சுகள் | சி.அனோஜா |
| 06.15 - 07.00 | கரடி | ந.நந்தகுமார் |

## மூன்றாம் நாள் நிகழ்த்துகைகள் – 10.11.2010 – காலை அரங்கு

| நேரம் | நாடகம் | நெறியாளர் |
|---|---|---|
| 09.00 - 09.45 | முன்னொரு காலத்திலே | பே.லோஜினி |
| 09.45 - 10.30 | நிராகரிக்க முடியாதபடி | ர.பவித்திரா |
| 10.30 - 11.15 | ஆச்சி சுட்ட வடை | க.ரேவதி |
| 11.15 - 12.00 | சத்திய சோதனை | சி.சாந்தலக்ஷி |

## மாலை அரங்கு

| | | |
|---|---|---|
| 04.00 - 04.45 | சம்புகன் | தி.அபிராமி |
| 04.45 - 05.30 | ஓயுமா அலைகள் | ர.செல்வராஜ் |
| 05.30 - 06.15 | கங்கை நதிக்கரை | ம.லாவண்யா |
| 06.15 - 07.00 | கடலின் அக்கறை போவோர் | க.திருச்செந்தூரன் |

## நான்காம் நாள் நிகழ்த்துகைகள் – 11.11.2010 – காலை அரங்கு

| நேரம் | நாடகம் | நெறியாளர் |
|---|---|---|
| 09.00 - 09.45 | மான் | து.காஞ்சனா |
| 09.45 - 10.30 | விடியலைத்தேடி | கு.சுஜிபன் |
| 10.30 - 11.15 | பாலுக்குப் பாலகன் | கி.கலைராதா |
| 11.15 - 12.00 | சாம்பல் விதைப்புக்கள் | க.லக்ஷலா |

## மாலை அரங்கு

| | | |
|---|---|---|
| 04.00 - 04.45 | உறுதி | இ.அபர்னா |
| 04.45 - 05.30 | என்ன செய்யலாம் | சு.தபேதினி |
| 05.30 - 06.15 | பொருளற்ற கிறுக்கல் | ர.ராகவன் |
| 06.15 - 07.00 | இனியும் வேண்டாம் | லே.பிறின்சிலி |

## ஐந்தாம் நாள் நிகழ்த்துகைகள் – 12.11.2010 – காலை அரங்கு

| நேரம் | நாடகம் | நெறியாளர் |
|---|---|---|
| 09.00 - 09.45 | நித்திய நிதர்சனமும் நாளைய தர்சனமும் | த.சோபனா |
| 09.45 - 10.30 | நான் விரும்பும் பள்ளிக்கூடம் | த.மோகனப்பிரியா |
| 10.30 - 11.15 | இப்படிக்கு உணர்வுகள் | யோ.கோபிநாத் |
| 11.15 - 12.00 | யானையும் சிட்டுக் குருவியும் | ரா.தர்ஷன் |

## மாலை அரங்கு

| | | |
|---|---|---|
| 04.00 - 04.45 | பெண்களும் மனிதர்களும் என்றுணர | பா.நிறோஜினி |
| 04.45 - 05.30 | கிரிஜா | ச.டிலக்சனா |
| 05.30 - 6.15 | திசை தெரியாத நாடோடிகள் | ப.டினேஸ்குமாரி |
| 06.15 - 7.00 | இடிகரை மண் | க.கமலதாஸ் |
| 07.00 - 07.45 | ஏகலைவன் | த.கயூரியா |

## நிகழ்வுகள் – 2011

2009, 2010 ஆம் ஆண்டுகளைப் போல் 2011 ஆம் ஆண்டிலே நாடகத்துறையின் நிகழ்வுகள் குறைவாகவே நடைபெற்றுள்ளன. அதன் காரணமாக கற்கைநெறி நிகழ்வுகள், கலைநிகழ்வுகள் என்றில்லாமல் 2011 நிகழ்வுகள் எனும் பொதுவான தலைப்பின் கீழ் நிகழ்வுகள் ஆராயப்படுகின்றன.

23.02.2011 அன்று புதன்கிழமை நிகழ்வாக குறும்படங்கள் திரையிடலும் அது பற்றிய கலந்துரையாடலும் எனும் நிகழ்வு நடைபெற்றது. அந்நிகழ்வானது பிற்பகல் 1.30 தொடக்கம் 4.00 வரை நடைபெற்றது. அதன்போது “கிச்சான்” “காதலை சொதப்புவது எப்படி” என்ற இரு குறுந்திரைப்படங்கள் திரையிடப்பட்டு அது பற்றிய கலந்துரையாடலும் நடைபெற்றது. நல்ல சினிமாவுக்கான அறிமுகம் என்ற தொனிப்பொருளிலான நிகழ்வுகளே முழுநீள திரைப்படங்கள், குறுந்திரைப்படங்கள் நாடகத்துறையினரால் மேற்கொள்ளப்பட்ட திரைப்படங்களை திரையிட்ட நிகழ்வும், அதுபற்றிய கலந்துரையாடலும் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

09.03.2011 அன்று முதலாம் வருட நாடகத்துறை மாணவர்களின் கிராமியப் பாடல்கள் நிகழ்வு இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து இரண்டாம் வருட நாடகத்துறை மாணவர்களான ஜெயசீலன், ரெஜினா ஆகியோரது நிகழ்த்துகை இடம்பெற்றது. அது “ந”டிகனுக்கு உடல், குரல், மனம் என்பன இன்றியமையாதது” எனும் தலைப்பில் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெற்றது.

2011 ஆம் ஆண்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே, மக்கள் களரி நாடகக்குழு உறுப்பினரான காளிதாஸ் என்பவருடைய “அரங்கியல்” சஞ்சிகை வெளியீட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் பேராசிரியர் சி.மௌனகுரு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சஞ்சிகைக்கு மதிப்புரை வழங்கினார்.

15.03.2011 அன்று நிறுவகத்திலே மக்கள் களரி உறுப்பினர்களான சிவநேசன், லீலாவதி ஆகியோர் அனைத்து வருட நாடகத்துறை மாணவர்களையும் உள்ளடக்கிய வகையில் பயிற்சிப் பட்டறையை மேற்கொண்டனர். அதற்கு அடுத்த நாள் அதாவது 16.03.2011 அன்று மக்கள் களரியின் இயக்குனரான பராக்கிரமநெரியல்ல அவர்களும் இன்னும் சில மக்கள் களரி உறுப்பினர்களும் இணைந்து பயிற்சிப்பட்டறையை முன்னெடுத்தனர். அப்பயிற்சிப்பட்டறையானது "களிமண் வண்டி" நாடகத்தயாரிப்புக்கான நடிகர்களையும், பாடகர்களையும் தேர்வு செய்யவதற்கான பயிற்சிப்பட்டறையாக அமைந்தது.

17.03.2011 அன்று நிறுவகத்திலே "மிருச்சகடிகம்" நாடக தமிழ்மொழி பெயர்ப்பான "களிமண் வண்டி" நாடகத்திற்கான ஒப்பந்தமும் தொடக்க விழாவும் நடைபெற்றது. அந்நிகழ்வானது ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் மிக முக்கியமான நிகழ்வாக கணிக்கப்பட்டது. சிங்கள நாடகக்கலைஞர்கள் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவக மாணவர்களைக் கொண்டு அவர்களுக்கு முழுமையான நாடகத் தயாரிப்புக்கான பயிற்சிகளை வழங்கி "களிமண் வண்டி" நாடகத்தை மாணவர்களையும், விரிவுரையாளர்களையும் வைத்து மக்கள் களரி நாடகக்கழு நெறிப்படுத்தி ஆற்றுகை செய்வதற்கான ஒப்பந்தம் பல்கலைக்கழக நிருவாகத்துடனும் நாடகத்துறையினருடனும் மேற்கொள்ளபப்பட்ட நிகழ்வாக அமைந்தது. இந்நாடகத்திற்கான நெறியாளராக மக்கள் களரி இயக்குனரான 'பராக்கிரம நெரியல்ல' அவர்களும், நிறைவேற்ற இயக்குனரான பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் காணப்பட்டனர். மேலும் இந்நிகழ்வின் போது பயிற்சிப்பட்டறை மூலம் "களிமண் வண்டி" நாடகத்திற்கான பாத்திரங்கள் தெரிவுசெய்யப்பட்டு தமிழ்பாரம்பரிய முறைப்படி நாடக பாத்திரங்கள் ஒவ்வொன்றும் மாணவர்களுக்கு கையளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து களிமண் வண்டி நாடகத்திற்கான பயிற்கள் முறையாக ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றன.

2011 ஆம் ஆண்டு நாடகத்துறை பயிற்சிப்பட்டறையை ஒழுங்குபடுத்தி நடாத்துதல் எனும் பாடத்திற்கமைவாக மட்டக்களப்பு பிரதேசத்திலுள்ள அமிர்தகழி சித்தி விநாயகர் மகா வித்தியாலயம், மட்டக்களப்பு மத்திய கல்லூரி, மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரி, மட்டக்களப்பு இந்துக்கல்லூரி, ஆரையம்பதி மகா வித்தியாலயம், கிரான்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு மூன்று நாட்கள் கொண்ட பயிற்சிப்பட்டறையை ஒழுங்குபடுத்தி நடாத்துவதற்காக இறுதி வருட நாடகத்துறை மாணவர்களை ஆறு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் ஒவ்வொரு பாடசாலைகளுக்கு அனுப்பியிருந்தனர். அப்பயிற்சிப்பட்டறையின் மூலம் மாணவர்களை பாடசாலை மாணவர்களுக்கு பயிற்சி வழங்கி அதற்கூடாக உருவாக்கிய நாடகங்களை ஒளிப்பதிவு செய்து பரீட்சையின் போது கையளித்தனர். அந்நிகழ்வானது நாடகத்துறை மாணவர்களுக்கு நாடகப் பயிற்சிப்பட்டறையை ஒழுங்குபடுத்தி நடாத்துவதற்கான முழு அனுபவத்தையும் பயிற்சியையும் அளித்தது.

28.12.2011, 29.12.2011 ஆகிய இரு தினங்களிலும் நாடக விழாவொன்று நாடகத்துறையால் நடாத்தப்பட்டது. அது இறுதி வருட நாடகத்துறை மாணவர்களின் இறுதி ஆற்றுகை பரீட்சையை நோக்கமாக கொண்டிருந்தது. எனினும் நாடகவிழாவாகவும் நடாத்தப்பட்டது. இதன் போது நான்கு நாடகங்கள் நாடகத்துறையின் மாணவர்களின் நெறியாள்கையிலும், தயாரிப்பிலும் ஆற்றுகை செய்யப்பட்டன. அந்நாடகங்கள் ஒவ்வொன்றும் ஒரு மணித்தியால நேர அளவைக் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு நாடகங்களும் வெவ்வேறு பாணிகளையும் கொண்டு காணப்பட்டன. மேடையிடப்பட்ட நாடகங்களைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தலாம்.

| காலம் | நாடகம் | தயாரிப்பு | நெறியாள்கை |
|---|---|---|---|
| 28.12.2011 | பஞ்ச வர்ண நரியார் | 4 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களின் குழு-01 | அனன்சியா |
| 28.12.2011 | அபசுரம் | 4 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களின் குழு-02 | ஜெயக்குமார் |
| 29.12.2011 | கருஞ்சுழி | 4 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களின் குழு-03 | திருச்செந்தூரன் |
| 29.12.2011 | விழிப்பு | 4 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களின் குழு-04 | நந்தகுமார் |

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்திலே நாடகத்துறைஆரம்பிக்கப்பட்டதிலிருந்து2011வரைபலமுக்கியமானநிகழ்வுகள்இடம்பெற்றுள்ளன. இதனைக் கருத்திக் கொண்டு அந்நிகழ்வுகளை ஆவணப்படுத்தும் முயற்சியாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்வுகளுக்கான ஆவணங்கள் அனைத்தும் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்கப்படும் போது கையளிக்கப்படும். 2012 தொடக்கம் இனிவரும் காலங்களிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு இக்கட்டுரை துணையாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

## சான்றாதாரங்கள்


1. நேர்காணல், மௌனகுரு.சி, பேராசிரியர்.
2. நேர்காணல், உமாசறிசங்கர், விரிவுரையாளர், நாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம்.
3. நேர்காணல், மோகனதாசன்.க, இணைப்பாளர், நடன நாடகத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம்.
4. நேர்காணல், விமல்ராஜ்.அ.
5. நேர்காணல், திருச்செந்தூரன்.கி.
6. நேர்காணல், லாவண்யா.ம.
7. நேர்காணல், அபிராமி.தி.
8. நடனநாடகத்துறை காலாண்டறிக்கை, சுவாமி விபுலானந்த அழகியற்கற்கைகள் நிறுவகம்.
9. லோஜினி.பே, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தில் 2010இல் ஆற்றுகை செய்யப்பட்ட குறுநாடக விழா" பற்றிய ஆய்வு, 2001.
10. நிகழ்வுகளின் போது வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள், கையேடுகள், பிரதிகள்.
11. புகைப்படங்கள்.

# மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்பட்ட வீதி நாடகங்கள்

கிருபைராஜா திருச்செந்தூரன்

## அறிமுகம்

உலக அரங்க வரலாற்றின் ஓட்டத்தில், நவீன அரங்கு தோன்றிய பிற்பாடு, கோட்பாடுகளுடன் கூடிய பல அரங்க வடிவங்கள் உருவாகத் தொடங்கின. அவற்றுள் ஒன்றுதான் வீதி நாடகம். மக்களை மையப்படுத்திய, மக்களோடு மக்களாக நிகழ்த்தக்கூடிய மக்களின் அரங்கு என்பது இவ்வரங்கின் தனித்துவம். நவீன நாடகத்தின் கோட்பாடு என்னவென்றால் மக்கள் பற்றிய விடயங்கள் பேசு பொருளாக இருக்க வேண்டும் என்பதாகும். அது போன்றே வீதி நாடகங்களின் பேசு பொருளும் அமைந்திருக்கும். இவ்வரங்கின் தோற்றத்தில் "ஒகஸ்தாபோலின்" பங்கு முக்கியமானது. இவரே அரங்கை முதன் முறையாக மக்களுக்காக பயன்படுத்தியவர். ஆரம்ப காலங்களில் அதிகார வர்க்கத்தின் அடக்கு முறைக்கு எதிராகவும், அநியாயங்களுக்கு எதிராகவும் சாதாரண மக்கள் எதிர்ப்புக் குரல்களை எழுப்ப சிறந்த ஊடகமாக வீதி நாடகம் இருந்தது.

நவீன நாடகங்களில் மக்கள் பற்றிய பிரச்சினைகள் அனேகமாக அடைக்கப்பட்ட படச்சட்ட மேடைகளிலே பேசப்பட்டன. அதனை உடைத்தெறிந்து வீதிநாடகம் மூலமாக அரங்கு வீதிக்குக் கொண்டுவரப்படுகின்றது. மக்கள் செறிந்து வாழ்கின்ற குடியிருப்புக்கள், கோயில், சந்தை, விளையாட்டு மைதானம், வணிக மையங்கள், ஊர்வலங்கள், வைத்தியசாலைகள் என மக்கள் காலடிக்கு வருகின்றது அரங்கு. கூடுதலாக வீதிகளில் இந்நாடகம் ஆற்றுகை செய்யப்பட்டன. இதன் காரணத்தினால் தான் வீதி நாடகம் அல்லது தெருவெளி அரங்கு (Street Drama / Street Play / Street Theatre) என பெயர்கள் உருவாகியிருக்கின்றது.

இவ்வரங்கின் பார்வையாளர்களாக சிறுவர் முதல் பெரியவர்கள் வரையிலான அனைத்துத் தரப்பினரும் உள்வாங்கப்படுவர். இதில் எந்த வரைமுறையும் இருக்காது. சொல்லப்படும் செய்தி அனைத்துத் தரப்பினருக்கும் சென்றடைய வேண்டும் என்பது இவ் அரங்கின் நோக்கமாகும். வீதிகளின் வேகத்திற்கு ஏற்ப நேரச்சுருக்கத்தினைக் கடைப்பிடிப்பர். ஏனென்றால் வீதிகளில் செல்பவர்கள், ஏனைய பொது இடங்களுக்கு வருபவர்கள் அதிக நேரம் ஓர் இடத்தில் செலவிட விரும்ப மாட்டார்கள். அதனைக் கருத்தில் கொண்டு இருபது தொடக்கம் முப்பது நிமிடத்துக்குள் நிறைவடையக் கூடிய வகையில் நாடகத்தினை வடிவமைத்துக் கொள்வர்.

பார்வையாளர்களை விரைவில் கவரக்கூடியதாகவும், வியப்பூட்டக் கூடியதாகவும், சொல்லப்படும் கருத்துக்கள் இலகுவில் உள்வாங்கக் கூடியதாகவும், விறுவிறுப்பாகவும் ஆற்றுகை அமைந்திருக்கும். மேலும் பங்கு கொள்கின்ற நடிகர்கள், பார்வையாளர்களை ஈர்க்கக் கூடிய வகையில் உடல் மொழியினைப் பயன்படுத்துவர். குரலினை ஏற்ற இறக்கங்களுடன் தெளிவாகப்

பயன்படுத்துவர். எளிமையான முறையில் வண்ண மயமான ஆடைகளும், காட்சிப் பொருட்களும் பயன்படுத்தப்படும். ஆடல், பாடல்களைக் கையாண்டு பேசு பொருளுக்கு வலுவூட்டுவதாக இசை அமைக்கப்பட்டிருக்கும்.

மொத்தத்தில், வீதி நாடகங்களில் சொல்லப்படும் விடயங்கள் ஊடாக சமூகத்தில் மாற்றங்களைக் கொண்டு வரவேண்டும். அப்பொழுதுதான் இவ்வரங்கின் முக்கியத்துவம் உணரப்படும். இதற்காகவே ஆற்றுகைக்குப் பின்னர் பார்வையாளர்களை மேலும் சிந்திக்கத்தூண்டும் வகையில் பேசு பொருள் பற்றிய உரையாடல்கள் இடம்பெறும். இவ் உரையாடல் ஊடாக சுமுகமான பல தீர்வுகள் எட்டப்படும். அல்லது அது பற்றி சிந்திக்கக்கூடிய சூழல் உருவாகும். இச் செயற்பாடுகள் மூலமாகத்தான் ஒரு வீதி நாடகம் முழுமைபெறும்.

## மட்டக்களப்பில் வீதி நாடகம்.

1990க்கு பின்னரே மட்டக்களப்பில் வீதி நாடகம் அறிமுகமானது. நவீன நாடக வருகையுடன் இதுவும் தொற்றிக் கொள்கின்றது. அந்த வகையில் மட்டக்களப்பில் முதன் முறையாக **1992**ஆம் ஆண்டு வெ. தவராஜா அவர்களால் “சகதி” என்னும் வீதி நாடகம் நெறிப்படுத்தப்பட்டு அரங்கேறியது. இந் நாடகத்தினை மட்டக்களப்பு வாசகர் வட்டம் தயாரித்து வழங்கியது. வாசகர் வட்டத்தின் உறுப்பினரான திரு.ஆனந்தனின் வேண்டுகோளின் பெயரிலே தவராஜா நெறிப்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.[1] இதன் பின் 1996 இல் பாலசுகுமார் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ‘பாரதி பிடித்த தேர் வடம்’ எனும் வீதி நாடகத்தினையும், 1998 இல் சி.ஜெய்சங்கர் மட்டக்களப்பு Y.M.C.A நிறுவனத்திற்காக ‘நஞ்சினில் விளையவோ?’ எனும் வீதி நாடகத்தினையும் நெறிப்படுத்தினார்கள்.[2]

மட்டக்களப்பின் வீதி நாடகங்களின் தோற்றத்திற்கு யாழ்ப்பாண வீதி நாடகச் சூழல் கைகொடுத்திருக்கின்றது என்ற உண்மை வரலாற்றினூடாக தெரிய வருகின்றது. அதாவது இங்கு வீதி நாடகங்களை அறிமுகம் செய்த வெ.தவராஜா மற்றும் சி.ஜெய்சங்கர் ஆகியோர் யாழ்ப்பாணத்தில் கல்வி கற்ற காலத்தில் வீதி நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர். பின் இங்கு வந்தும் அச்செயற்பாடுகளில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.

2000ற்குப் பிறகு மட்டக்களப்பில் பரவலாக எல்லாப் பகுதிகளிலும் வீதி நாடகங்கள் இடம்பெறத் தொடங்கின. முக்கியமாக ஆயுதப் போராட்ட இயக்கங்கள் தங்கள் போராட்டக் கொள்கைகளை மக்களிடம் பிரச்சாரம் செய்ய வீதிநாடகம் எனும் ஊடகத்தினைப் பயன்படுத்தி, 2002ஆம் ஆண்டு தொடக்கம் 2006 ஆம் ஆண்டு வரை மட்டக்களப்புப் பூராகவும் அதிகளவான வீதி நாடகங்களைத் தயாரித்து வழங்கின. யுத்த காலம், சுனாமி போன்ற அனர்த்தங்களுக்குப்பின் அதிகளவான அரச சார்பற்ற நிறுவனங்கள் மட்டக்களப்பில் குடி கொண்டதனால், அவைகள் மூலமாகவும் பாரிய அளவில் வீதி நாடகச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதாக ஆதாரங்கள் பறை சாற்றுகின்றன. இன்று மட்டக்களப்பின் அனைத்துப் பிரதேசங்களிலும் பல்வேறு தேவைகளுக்காக பலரும் இந் நாடகச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## ஆற்றுகையின் பேசு பொருள்

மட்டக்களப்பில் இடம்பெற்ற ஆற்றுகைகள், அதிகாரத்திற்கு எதிராகக் குரல் கொடுக்கவும், சவால்கள், உணர்வுகள் போன்றவற்றை வெளிப்படுத்தவும், சமகால விடயங்களைப்

பிரச்சாரப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டன. பெண்ணியம், சிறுவர், சுகாதாரம், பொருளாதாரம், போதைவஸ்து போன்ற விடயங்களுள் உள்ளடங்கும் பல்வேறு அம்சங்கள் தனித்தனியாக, வீதி நாடகங்களில் பேசு பொருளாகப் பேசப்பட்டன.

பெண்ணியம் பற்றிய வீதி நாடகங்களில் பெண்களுக்கெதிரான வன்முறைகளான, பாலியல் துஸ்பிரயோகம், குடும்ப வன்முறை, சீதனக் கொடுமை, அடக்கு முறைகள் பற்றிப் பேசியதோடு அதற்கான தீர்வு பற்றிய கலந்துரையாடல்களும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

சிறுவர்கள் தொடர்பான வீதி நாடகங்களில் சிறுவர் உரிமைகள், சிறுவர் கல்வி முறை, சிறுவர் தொழிலாளர்கள், துஸ்பிரயோகம், பாலியல் வன்முறை, சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள், எனப் பல விடயங்களை எடுத்துக்காட்டி, அதற்கான தீர்வுகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

சுகாதாரம் பற்றிய வீதி நாடகங்களில் டெங்கு, எயிட்ஸ், ஏனைய நோய்கள் பற்றிய விழிப்புணர்வு, போசாக்கு, சுத்தமாக வாழ்தல், சிறந்த உணவுப் பழக்க வழக்கங்கள் போன்ற விடயங்கள் காட்டப்பட்டன.

பொருளாதாரம் பற்றிய வீதி நாடகங்களில் விலையுயர்வு, இயற்கை விவசாயம், உள்ளூர் உற்பத்திகளை மேம்படுத்துதல். செயற்கை இரசாயனங்களை பயன்படுத்துவதனால் ஏற்படும் விளைவுகள் எனப் பல விடயங்கள் பேசப்பட்டன.

போதைவஸ்து பற்றிய வீதி நாடகங்களில், மது, புகைப்பிடித்தல் பாவனைகளால் ஏற்படும் பிரச்சினைகள், நோய்கள், உயிர் இழப்புக்கள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்துக்கள் அதிகமாக இடம் பெற்றிருந்தன. அத்தோடு அரசியல், போர், கல்வி, வாசிப்பை வளர்த்தல், இயற்கைப் பாதுகாப்பு, இலஞ்ச ஊழல், பாகுபாடு போன்ற பொது விடயங்களும் பேசப்பட்டன.

நாடகங்களின் அனைத்துப் பேசு பொருள்களும், மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நல்ல மாற்றங்களை உருவாக்குவதினூடாக, ஆரோக்கியமான சூழலைக் கட்டியெழுப்பலாம் என்ற நோக்கில் அமைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

## வீதி நாடகச் செயற்பாட்டாளர்கள்

மட்டக்களப்பில் பல்வேறு தரப்பினரும் வீதி நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதனைக் காணமுடிகின்றது. ஆரம்பத்தில் நாடகத்துறையோடு தொடர்புடைய நபர்களும், அமைப்புக்களும் முன்னெடுத்தனர். தற்பொழுது அந்த நிலை மாறி வருவதனை அவதானிக்க முடிகின்றது. இதில் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஆதிக்கமே அதிகமாக உள்ளது. அதிலும் மேற்கூறியது போன்று சுனாமிக்குப்பின் வருகை தந்த நிறுவனங்கள் அதிக கவனம் செலுத்தி வருகின்றன. குறிப்பாக பெண்கள், சிறுவர் பற்றிய வேலைத்திட்டங்களை மேற்கொள்ளும் நிறுவனங்கள் அதிகளவிலான வீதி நாடகங்களைத் தயாரித்து வருகின்றன.

மேலும், பல்கலைக்கழகங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், பிரதேச செயலகங்கள், மாநகரசபை எனப் பல அரச நிறுவனங்கள், இதர நாடகக் குழுக்கள் தனிப்பட்ட ரீதியிலும்,

அரச சார்பற்ற நிறுவனங்களோடு இணைந்தும் வீதி நாடகங்களைத் தயாரித்திருக்கின்றனர். மட்டக்களப்பில் இடம்பெற்ற எழுபத்தைந்து வீதமான நாடகங்களுக்கு நிதி உதவியினை அரச சார்பற்ற நிறுவனங்களே வழங்குகின்றன என்பது இங்கு நோக்கத்தக்கது.

மட்டக்களப்பில் வீதி நாடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டவர்களின் பட்டியல் பின்வருமாறு..

**அரச சார்பற்ற /தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்**

- Care International
- World Vision
- Unicef
- Save The Children
- Esco
- Kaviya - Self Women's Development Center
- சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
- IRD
- ZOA
- Y.M.C.A - கிறிஸ்தவ வாலிபர் சங்கம்
- Umcore
- USAID
- Women's in Need
- NEHRP
- Oxfam GB
- Psycho social service
- Lions Club
- மன்று
- மாதர் சங்கங்கள்

**கல்வி நிறுவனங்கள்**

- கிழக்குப் பல்கலைக்கழகம் - நுண்கலைத் துறை
- சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக நாடகத்துறை
- Diploma நாடகக் கற்கைகள் மாணவர்கள்
- மட்/வின்சன்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை
- மட்/சிசிலியா பெண்கள் பாடசாலை
- மட்/இந்துக் கல்லூரி
- மட்/மகாஜானாக் கல்லூரி
- மட்/கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலை

**கலை / நாடகக் குழுக்கள்**

- மூன்றாவது கண் - உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டு நண்பர் குழு
- நெய்தல் ஊடக தரிசனம்
- நுண்கலைக் கழகம்
- மட்டக்களப்பு வாசகர் வட்டம்
- திருமறைக்கலாமன்றம்
- கதிரவன் கலைக் குழு

**அரச நிறுவனங்கள்**

- ❖ மட்டக்களப்பு வைத்தியசாலை
- ❖ வாழைச்சேனை வைத்தியசாலை
- ❖ மாநகர சபை - மட்டக்களப்பு
- ❖ மட்டக்களப்பு நூலகம்.
- ❖ பிரதேச செயலகங்கள்

மட்டக்களப்பு நாடகத்துறை, சார்ந்த சாராத மாணவர்கள், பயிற்சிப் பட்டறைகள் மூலம் பயிற்றப்பட்ட இளைஞர், யுவதிகள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களில் தொழில் புரியும் ஊழியர்கள், இதர அமைப்புக்களில் வேலை செய்யும் நபர்கள் போன்றவர்களே இவ்வீதி நாடகங்களில் பங்கு பற்றிய கலைஞர்களாகக் காணப்படுகின்றனர்.

**மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்பட்ட வீதி நாடகங்கள்**

மட்டக்களப்பில் ஆற்றுகை செய்யப்பட்ட வீதிநாடகங்கள், நாடகத் தலைப்பு, கதை, நெறியாள்கை, தயாரிப்பு, ஆற்றுகை செய்த இடம், காலம், பங்குபற்றிய கலைஞர்கள், இசை, உடை, ஒப்பனை, நாடகத்தின் தாக்கம் போன்ற தகவல்களோடு பட்டியல் இடப்படுகின்றன.

**குறிப்பு** – பல்வேறு அசாதாரண சூழ்நிலை காரணமாக ஆற்றுகை செய்யப்பட்ட சில வீதி நாடகங்கள் பற்றி அறியப்படாமலும், அறியப்பட்ட சில வீதி நாடகங்களின் தகவல்களை முழுமையாகப் பெற முடியாமலும் உள்ளமை குறிப்பிடத்தக்கது. இருந்த போதும் கூடியளவு எவ்வளவு தரவுகளைப் பெற முடியுமோ அந்த அளவிற்கு தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**01. "சகதி"**

**கதை** : வேலையில்லாத் திண்டாட்டம், பொருளாதாரப் பிரச்சினை போன்ற காரணங்களால் ஓர் இளைஞன் தற்கொலை செய்ய முயற்சிக்கின்றான். அப்பொழுது அங்கு வரும் இருவர் அவனைத் தடுக்கின்றனர். பின்னர் அவனுக்கு உதவுவதாகக் கூறி மக்களிடம் பணம் திரட்டுகின்றனர். அந்த இளைஞன் இருவரின் வாக்குறுதியை நம்பி இறங்கி வந்து பார்க்கின்றான், பணம் திரட்டிய இருவரும் அவ்விடத்தில் இல்லை.இறுதியில் அவனை சாகவும் விடவில்லை, வாழவும் விடவில்லை

**நெறியாள்கை** : வெ.தவராஜா

**தயாரிப்பு** : வெ.தவராஜா, மட்டக்களப்பு வாசகர் வட்டம்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: மட்டக்களப்பு சால்ஸ் மண்டப முன்றல் - 1992

**பங்கு பற்றியவர்கள்** : தயாநந்தா, தேவகாந்தன், ஜீவா, நல்லதம்பி மற்றும் ஏனைய வாசகர் வட்ட உறுப்பினர்கள்.

பாடல்களில் கிராமிய மெட்டுக்கள் கையாளப்பட்டன. சாதாரண உடைகளுடன், தொப்பி, முகமூடி போன்றன பயன்படுத்தியிருந்தனர். ஒப்பனையாக முகத்தில் கறுப்பு, வெள்ளை நிறங்கள் சரிபாதியாகப் பூசி இருந்தனர்.

முதன் முறையாக வீதி நாடகம் பார்த்திருக்கின்றோம், இதன் மூலம் வித்தியாசமான நாடக அனுபவம் கிடைத்ததென்றும், சொல்லப்பட்ட விடயங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன என்றும் பார்வையாளர்கள் கூறினர்.[3]

### 02. “பாரதி பிடித்த தேர் வடம்”

**1996ம்** ஆண்டு காலப்பகுதியில் கிழக்குப் பல்கலைக்கழகத்தில், நுண்கலைத்துறை மாணவர்களை வைத்து, விரிவுரையாளர் பாலசுகுமார் இந் நாடகத்தினை நெறியாள்கை செய்ததாக தகவல்கள் கூறுகின்றன.[4]

### 03. “நஞ்சினில் விளையவோ?”

**கதை** : செயற்கை இரசாயனப்பொருட்களை விவசாயத்தில் பயன்படுத்துவதினால் ஏற்படும் பின் விளைவுகள், அதனை எவ்வாறு நிவர்த்தி செய்யலாம் என்பது பற்றியதான விழிப்புணர்வு விடயங்கள் பேசப்பட்டன.

**நெறியாள்கை** : சி. ஜெய்சங்கர்

**தயாரிப்பு** : Y.M.C.A (கிறிஸ்தவ வாலிபர் சங்கம்), மட்டக்களப்பு

**ஆற்றுகை செய்த இடங்கள், காலம்**

: மட்டக்களப்பு நகர் - 1998

- April 2000 - கிழக்குப் பல்கலைக்கழக நாடக விழாவில் ஆற்றுகை செய்யப்பட்டது.

**பங்கு பற்றியவர்கள்** : உதவி - அ.விமலராஜ், Y.M.C.A யில் வேலை செய்த இளைஞர்களே ஆற்றுகையில் பங்கெடுத்தனர்.[5]

### 04. “இது எமது படைப்பு”

**கதை** : பெண் உரிமை பற்றியது. பெண்களின் படைப்புக்கள், அவர்களின் உரிமைகள் ஆண்களாலும், ஏனைய சமூகங்களாலும் முடக்கப்படுகின்றன. இதற்கு எதிராக பெண்கள் குரல் கொடுத்து, விழிப்புணர்வை ஏற்படுத்தி உரிமை கோருகின்றனர்.

**நெறியாள்கை** : பயிற்சிப் பட்டறை ஊடாக சி. ஜெயசங்கர் நெறிப்படுத்தினார்.

**தயாரிப்பு** : சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம், மட்டக்களப்பு[6]

**ஆற்றுகை செய்த இடங்கள், காலம்**

: ஐப்பசி - 2000 - சனசமூக நிலையம் குமாரபுரம்,
சூரியா முன்றல், நாவற்குடா பெண்கள் அபிவிருத்திச் சங்கம், காந்தி சேவை சங்கம், திருகோணமலை

- கார்த்திகை - 2000 - காந்தி சிலையடி, மட்டக்களப்பு
- மார்கழி - 2000 - விபுலானந்தா கல்லூரி, அக்கறைப்பற்று
- பங்குனி - 2001 - அன்னையர் தின விழா - மெதடிஸ்த திருச்சபை தேவாலயம், நாவற்குடா, உலக நாடகதின விழா கிழக்குப் பல்கலைக்கழகம்.

**பங்குபற்றியவர்கள்** : செ.மல்லிகா, பு.விஜிகலா, வா.உதயராணி, ஆ.கில்டாரூபினி, தே.அருட்கவிதா, நீ.ஜெயராணி, இ.அருள்ஜோதி, இ.அமுதா, கோ.பிரவாஜினி, க.லூர்த்து ஜீவகா, ஜெ.ஆ.ஜெஸ்மின் பேகன், அ.இலக்கேஸ்வரி, த.ஜெயந்தி, சி.ஜீவலதா.

வசந்தன் பாடல் மெட்டுக்கள், கிராமிய இசை போன்றவற்றினைப் பயன்படுத்தி பாடல், ஆடல்களை மேற்கொண்டிருந்தனர். சாதாரண ஒப்பனை மேற்கொள்ளப்பட்டது.

சொல்லப்பட்ட விடயங்கள் பார்வையாளர்களிடம் இலகுவாகச் சென்றடைந்திருந்ததாகவும். இனி இவை பற்றி சிந்திப்பதாகவும் கூறினார்.[7]

## 05. "நாட்டின் வளம் கண்டிடுவோம்"

**கதை** : வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புத் தேடிப் போவதனால் அங்கு பல துன்பங்களுக்கு ஆளாகின்றனர். உயிரைப் பறிகொடுக்கும் நிலை உருவாகின்றது. ஆதலால் வெளிநாடுகளுக்குப் போகாமல், நம் நாட்டிலே கணிசமான வளங்கள் இருக்கின்றன அதனைப் பயன்படுத்தி சந்தோஷ மாக வாழலாம் என்பதனை எடுத்துக் கூறுகின்றது.

**நெறியாளர்** : ஸ்ரான்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : YMCA - கிறிஸ்தவ வாலிபர் சங்கம், மட்டக்களப்பு.

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: மட்டக்களப்பு நகர் - 2001

**பங்கு பற்றியவர்கள்** : உதவி - திலகநாதன், பாடல் - சங்கீதா, நிர்வாகம் - யசிந்தா சசிகலா, கிருசாந்தி, டிவதர்சினி, பிரதீப், பவநந்தி, Y.M.C.A உறுப்பினர்.

ஆடல், பாடல், கிராமிய மெட்டுக்கள் போன்றன அதிகமாகக் கையாளப்பட்டுள்ளன. நீளமான மேல் சட்டை(Top), ஜீன்ஸ், சோல்ட் போன்றன உடைகளாக அணிந்தனர். பல வர்ணக் கோடுகள் முகத்தில் கீறப்பட்டன.

முதல் தடவையாக வீதி நாடகம் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. வியப்பாக இருந்தது எனப் பார்வையாளர்கள் கூறினர். இலகுவாக உள்வாங்கக் கூடியதாக இருந்ததெனக் கூறினர்.[8]

## 06. "பச்சைப் பூமி வீட்டினிலே"

**கதை** : இயற்கையான வளங்களை உதறித்தள்ளி விட்டு செயற்கையான உற்பத்திகளை பயன்படுத்துவதும், அதனால் ஏற்படும் தீவினைகள் பற்றியும் சொல்லுகின்றது.

**நெறியாள்கை** : சி. ஜெயசங்கர்

**தயாரிப்பு** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கிழக்குப் பல்கலைக்கழக வாளாகம் - 2001

**பங்கு பற்றியவர்கள்** : சந்திரகுமார், தயாபரன், கௌரீஸ்வரன், மோகனதாஷன், வாவணி, வளர்மதி

தாளம், பறை, போன்ற வாத்தியங்கள் பயன்படுத்தப்பட்டன. கூத்து, மெட்டுக்கள் பயன்படுத்தி இருந்தார்கள், உடை நீளமான மேல் சட்டை(Top), கறுப்பு ஜீன்ஸ், சாதாரண ஒப்பனை.[9]

**07. “சிறுவர் மற்றும் மது பாவனை பற்றிய நாடகம்”**

**கதை** : கிராமத்தில் வாழ்கின்ற சிறுவர்களின் உரிமைகள், பராமரிப்பு, சிறுவர் கல்வி, மது பாவனை போன்ற பல பிரச்சினைகளை மையப்படுத்தி, சிறு சிறு சம்பவங்களூடாக வெளிப்படுத்தல்.

**நெறியாள்கை** : ஸ்ரன்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : Y.M.C.A

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: சத்துருக்கொண்டான், மச்சந்தொடுவாய் - 2002 - 2003

**பங்கு பற்றியவர்கள் :** சத்துருக்கொண்டான், மஞ்சந்தொடுவாய், சிறுவர் கழக மாணவர்கள்

கிராமிய மெட்டுக்கள், கூத்து தாளக்கட்டுக்களுடன் கூடிய இசையும், சாதாரண ஒப்பனையும், பெருங்காட்சிப்பண்பும் இந்நாடகத்தில் காணப்பட்டன.

இதில் பங்குபற்றிய சிறுவர்கள் எதற்கும் தயங்காமல் முன்வரும் இயல்பு உருவானது. அத்தோடு அவர்கள் தானாகவே புதியவகையான நாடகங்களை சுயமாக தயாரிக்கும் தன்மை உருவாகியது.[10]

**08. “கன்னி வெடி பற்றிய விழிப்புணர்வு நாடகம்”**

**கதை** : கன்னி வெடி பற்றிய அறிவுறுத்தல்களுடன், எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும், எவ்வாறான இடங்களில் பாதுகாப்பாக நடக்கவேண்டும் என்பது பற்றியதான விழிப்புணர்வுப் பிரச்சாரம்.

**நெறியாள்கை** : பங்கு பற்றிய கலைஞர்களின் கூட்டுருவாக்கம்.

**தயாரிப்பு** : சர்வோதயா - மட்டக்களப்பு

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: வந்தாறுமூலைச் சந்தை. சத்துருக்கொண்டான் - 2003

**பங்கு பற்றியவர்கள்** : சந்திரகுமார், தயாபரன், கௌரீஸ்வரன், மோகனதாசன்.

இசை வாத்தியங்களாக பறை, மத்தளம், தாளம் பயன்படுத்தப்பட்டன. ஒப்பனையாக முகத்தில் வர்ணக்கோடுகள் போடப்பட்டன, கன்னிவெடி படங்களுடன் கூடிய உடைகளை அணிந்திருந்தனர்.

சொல்லப்பட்ட விடயங்களை பார்வையாளர்கள் இலகுவாக உள்வாங்கிக் கொண்டார்கள் என அறியமுடிகின்றது.[11]

**09. “புகைப் பிடித்தலுக்கு எதிராக” புகைத்தல் எதிர்ப்பு தினத்தில் செய்யப்பட்ட விழிப்புணர்வு நாடகம்.**

**கதை** : மனிதன் எவ்வாறு புகைப்பிடித்தலுக்கு அடிமையாகின்றான், அதனால் உண்டாகும் நோய்கள், குடும்பப் பிரச்சினைகள், இவைகளில் இருந்து மீளுவதற்கான வழிமுறைகள் போன்ற விடயங்களை முன்வைத்துக் கதை பின்னப்பட்டுள்ளது.

**நெறியாள்கை** : திரு.ரவீந்திரன்

**தயாரிப்பு** : காத்தான்குடி கலாச்சார மத்திய நிலையம்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: காத்தான்குடி - 2003

**பங்கு பற்றியவர்கள்** : நடிப்புப் பயிற்சி பெற்ற காத்தான்குடி கலைக்குழுக் கலைஞர்கள்.

பார்வையாளர்களை ஒன்று சேர்க்க மாத்திரம் ரபான் இசைக்கருவி பயன்படுத்தப்பட்டுள்ளது. சமூகத்தில் உள்ள சாதாரண மனிதர்கள் நாடகப் பாத்திரங்கள் என்றபடியால் யதார்த்தமான உடைகள், ஒப்பனை மேற்கொள்ளப்பட்டன.

நகைச்சுவை உணர்வுடன் நாடகத்தினைப் பார்த்ததாகவும், இன்று தான் இப்படியான தினம் உள்ளதை அறிந்ததாகவும் பார்வையாளர்கள் கூறியுள்ளார்கள்.[12]

## 10. "வேண்டாம் என்று சொல்கின்றோமே"

**கதை** : பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிராக, அதனை இல்லாதொழிக்கும் வகையில் ஆண்கள் செயற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

**நெறியாள்கை** : கமலா வாசுகி, சி.ஜெயசங்கர் நடத்திய களப்பயிற்சினூடாக உருவாக்கப்பட்டது.

**தயாரிப்பு** : மூன்றாவது கண் - உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டு நண்பர்கள் குழு

**பங்கு பற்றியவர்கள்** : மூன்றாவது கண் நண்பர்களான, கௌரீஸ்வரன், கருணேந்திரா, சோதீஸ்வரன், குகதாஸ், வனுஜன், தனுஜா, வினோஜா, ஸ்ரெல்லா, யோண்சன், சுகந்தன்.

**ஆற்றுகை செய்த இடம்**
: சீலாமுனை, களுவன்கேணி, மண்டூர், பாலையடித்தோணா, மயிலங்கரச்சை. பாலையடிவெட்டை, சின்னவத்த, கிரான், தியாவட்டவான் மற்றும் வவுனியா, மன்னார் மாவட்டங்களிலும் இவ்வாற்றுகை நிகழ்த்தப்பட்டுள்ளது.

**காலம்** : 2005 பங்குனி யில் இருந்து 2012 வரை நிகழ்த்தப்பட்டுள்ளது.

பாரம்பரிய இசையும், வாத்தியங்களும் பாவிக்கப்பட்டன. ஆரம்பத்தில் கறுப்பு ரிசேட்டும், ஜீன்சும் அணிந்தனர், பிற்காலத்தில் கைத்தறி ஆடைகளை அணிந்தனர். சாதாரண ஒப்பனை.

பல வீட்டு வன்முறைகள் வெளியே தெரிய வந்தன. ஒரு அம்மா நாடகத்தினைப் பார்த்து உருவெடுத்து ஆடியதாகக் கூறப்படுகின்றது.[13]

## 11. "சுனாமிக்குப் பின்"

**கதை** : ஒன்றாக இணைந்து வாழ்ந்த சமூகம் சுனாமிக்குப்பின் நிறுவனங்களின் நிவாரணங்களினால் எவ்வாறு சிதறடிக்கப்படுகின்றனர் என்பது பற்றிய விழிப்புணர்வு.

**நெறியாள்கை** : திரு. து. கௌரீஸ்வரன்

**தயாரிப்பு** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: கிழக்குப் பல்கலைக்கழக வளாகம். ஆனி - 2005[14]

**பங்கு பற்றியவர்கள்** : மோகனதாசன், குயலவன், உமா, சுகன்யா, துஸ்யந்தி, கலைமகள்

கூத்தின் இசையும், ஆடல்களும் பயன்படுத்தப்பட்டன. மரூண் மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும், நிற சால்வையும் உடைகளாகப் பயன்படுத்தினர். சாதாரண ஒப்பனையுடனே நடித்தனர்.[15]

### 12. "நாளைய விடிவெள்ளி"

**கதை** : சுனாமியினால் மனநிலை பாதிக்கப்பட்டு அகதி முகாம்களில் வாழ்கின்றவர்களை வழமையான நிலைக்கு கொண்டுவரும் நோக்கில் உருவாக்கப்பட்ட கதை

**நெறியாள்கை - தயாரிப்பு**
: திரு. ஸ்ரன்லி பிரபாகரன்

**ஆற்றுகை செய்த இடம்**
: சிங்கள மகாவித்தியாலய அகதிமுகாம், களுவன்கேணி அகதிமுகாம், பாண்டிருப்பு அகதிமுகாம்

**காலம்** : 2005-2006

**பங்கு பற்றியவர்கள்** : நெறியாளரின் உளவியல் கற்கைநெறி மாணவர்கள்

கதையின் உணர்வுகளுக்கு ஏற்ப பாடல்கள் பயன்படுத்தப்பட்டன. நீல மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும், நிற சால்வையும் உடைகளாகப் பயன்படுத்தினர். ஒப்பனை - முகத்தின் அரைவாசிப்பகுதிக்கு பச்சை, வெள்ளை, நீல நிறங்களைப் பூசினர்.

இந்த ஆற்றுகையின் பின்னர் பாதிப்பில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக மீண்டதாகவும், ஆற்றுகை செய்தவர்களுடன் புது உறவுகளை ஏற்படுத்தியதாகவும் அறிய முடிகின்றது.[16]

### 13. "உண்மையைத் தேடி"

**2006ல்** சூழலைப் பாதுகாப்போம் எனும் கருப்பொருளில் மட்/கல்லடி விவேகானந்தா பெண்கள் பாடசாலை தரம்-10 மாணவிகளைக் கொண்டு **து.கௌரீஸ்வரனின்** நெறியாள்கையில் ஆற்றுகை செய்யப்பட்டது.[17]

### 14. "அன்பை நிறைத்திடுவோம்"

**கதை** : பெண்களுக்கு எதிரான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்ற பிரச்சாரம்

**நெறியாள்கை** : சி.ஜெயசங்கர்

**தயாரிப்பு** : care international GBV Project, மூன்றாவது கண்

**பங்கு பற்றியவர்கள்** : மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய அரங்க ஆற்றுகைக் குழு

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: திருப்பெருந்துறை, சத்துருக்கொண்டான் - 2007, 2008

பாரம்பரிய இசையும், வாத்தியங்களும் பாவிக்கப்பட்டன. நீளமான கைத்தறி ஆடைகளை அணிந்தனர். சாதாரண ஒப்பனையுடன் நடித்தனர்.[18]

**15. "சுத்தமாகுவோம் சுத்தமாக்குவோம்"**

**கதை** : முகாம்களில் வாழ்கின்றவர்கள் சுத்தத்தினை கடைப்பிடிக்காவிட்டால் ஏற்படும் விளைவுகளை, நுளம்பு, கரப்பான்பூச்சி, இலையான் நோயாளி போன்ற பாத்திரங்கள் மூலம் எடுத்துக்காட்டுவதோடு, சுத்தமாக இருக்கும் வழிமுறைகளையும் கூறுகின்றன.

**நெறியாள்கை** : பேரா.சி.மௌனகுரு

**தயாரிப்பு** : IRD, கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**பங்கு பற்றியவர்கள்** : ரவிச்சந்திரன், மோகனதாசன், பிரதீபன், உமா, சுகன்யா, துஸ்யந்தி, கலைமகள் மற்றும் ஜீவஜோதி இல்ல மாணவர்கள்.

**ஆற்றுகை செய்த இடம்**

: பாலமீன்மடு அகதிமுகாம், சத்துருக்கொண்டான் அகதிமுகாம், அமிர்தகழி அகதிமுகாம்

**காலம்** : 2007

கூத்து, மெல்லிசைப் பாடல் மெட்டுக்களை கையாண்டனர். மத்தளம், ஹார்மோனியம், தாளம் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன. நுளம்பு, கரப்பான்பூச்சி, இலையான் போன்ற பாத்திரங்களுக்கேற்ப உடை ஒப்பனை மேற்கொள்ளப்பட்டன.

நாடகத்தில் சொல்லப்பட்டது போன்று எங்களது சூழலை சுத்தமாக வைத்திருப்போம் என ஒப்புக் கொண்டனர். நகைச்சுவை உணர்வுடன் பார்த்து ரசித்தார்கள்.[19]

**16. "மரங்களை நடுவோம்"**

**சுற்றாடலை சுத்தமாக வைத்திருப்போம்** என்னும் கருப்பொருளில் மட்டக்களப்பு மாநகர சபை, கனேடிய மாநகர சபை ஒன்றியம் ஆகியவற்றின் அனுசரணையுடன், மட்/இந்துக் கல்லூரி மாணவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டது. இதனை **ச.சந்திரசேகரம்** நெறிப்படுத்தியிருந்தார். 2007ல் மட்டக்களப்பு நகரில் ஆற்றுகை செய்யப்பட்டது.[20]

**17. "நாறாத நகரில் வாழ"**

**கதை** : சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். அதுவே ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் என்பதை வலியுறுத்தல்.

**நெறியாள்கை** : து. கௌரீஸ்வரன், த. விவேகானந்தராசா

**தயாரிப்பு** : மட்டக்களப்பு மாநகர சபை, கனேடிய மாநகர சபை ஒன்றியம்

**பங்கு பற்றியவர்கள்** : மகாஜனக் கல்லூரி மாணவர்கள், உடை, ஒப்பனை - ச.சந்திரசேகரம்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: மட்டக்களப்பு நகர் - 2007

கூத்து மெட்டில் பாடல்கள் அமைந்திருந்தன. நீளமான மேற்சட்டையும், கறுப்பு ஜீன்சும், சால்வையும் உடுத்தியிருந்தனர். குறியீட்டு ஒப்பனை போட்டிருந்தனர்.[21]

**18. "மரமே மரமே"**

**கதை** : சூழலில் காணப்படும் கண்டல் தாவரங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. இச்செயற்பாட்டால் இயற்கை வளங்கள் அழிந்து போகின்றன. அத்தோடு உயிரினங்களின் பெருக்கமும் தடைப்படுகின்றன. இவ்வழிவை அனைவரும் தடுக்க வேண்டும்.

**நெறியாள்கை** : திரு.கு.ரவிச்சந்திரன்

மட்/சிசிலியா பெண்கள் உயர்தரப் பாடசாலை தயாரிப்பில் A/L நாடகத்துறை மாணவர்களைக் கொண்டு அங்கே 2007 காலப்பகுதியில் ஆற்றுகை செய்யப்பட்டது.[22]

### 19. "மொட்டுக்கள் மலர"

**கதை** : சிறுவர் இல்லங்களில் வாழும் சிறுவர்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறல்.

மூன்றாவது கண் நண்பர்கள் குழுவின் களப்பயிற்சி ஒழுங்கமைப்பில் இவ்வாற்றுகை சிறுவர் நன்னடத்தை திணைக்களம், amicidi bambani (INGO) மூன்றாவதுகண் நண்பர்கள் இணைந்து மேற்கொண்ட சிறுவரில்லச் சிறுவர்களுடனான கலையாக்கச் செயற்றிட்டத்தின் போது 2007 இல் உருவாக்கப்பட்டது. இதில் மட்டக்களப்பின் பல்வேறு சிறுவரில்லங்களையும் சேர்ந்த சிறுவர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.[23]

### 20. "எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வு நாடகம்"

**கதை** : கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், இந் நோய் பற்றிய விளக்கம், நோய் பரவும் முறைகள். எவ்வாறு பாதுகாப்பாக இருக்க வேண்டும் போன்ற விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

**நெறியாள்கை** : திரு. ஸ்ரன்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : World Vision

**ஆற்றுகை செய்த இடம்** : படுவான்கரைப் பிரதேசங்களான தாண்டியடி, கொக்கட்டிச்சோலை

**காலம்** : 2007

**பங்கு பற்றியவர்கள்** : உதவி நெறியாள்கை - தேவ அலோசியஸ், நடன அமைப்பு - டிவதர்சினி, யசிந்தா சசிகலா, தயான், பிரதீப், இமைக்சன், கௌசிகன்.

பறை, தாளம் போன்ற வாத்தியங்களோடு, ஒப்பாரி, தாலாட்டுப் பாடல் மெட்டுக்களை உணர்வுகளுக்கு ஏற்றால் போல் கையாண்டனர். பாத்திரங்களின் தன்மைகளுக்கு ஏற்ப முகத்தில் வர்ணம் பூசப்பட்டன. அனைவரும் நீல நிற மேற்சட்டையும், கறுப்பு ஜீன்ஸ்ம் உடுத்தியிருந்தனர். ஜிம்னாஸ்டிக் முறையிலான பாத்திர அசைவுகள் மேற்கொள்ளப்பட்டன.

பார்வையாளர்களுக்கு எயிட்ஸ் பற்றிய அறிதல் உண்டாக ஏதுவாக அமைந்தது.[24]

### 21. "சமத்துவம் காண்போம்"

care international GBV செயற்றிட்டத்தின் கீழ் திருகோணமலை மூதூர் பிரதேச இளைஞர் யுவதிகளை உள்ளடக்கிய அரங்க ஆற்றுகைக் குழுவொன்றினை உருவாக்கி அதனூடாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு எதிரான பிரச்சாரத்தினை மேற்கொள்ளும் நோக்குடன் இந்நாடகம் தயாரிக்கப்பட்டது. இதற்கான வளவாளராக மூன்றாவதுகண் குழுவைச் சேர்ந்த து.கௌரீஸ்வரன் அவர்கள் பங்குபற்றியிருந்தார். இவ்வாற்றுகை 2007, 2008 வருடங்களில் திருகோணமலை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் ஆற்றுகை செய்யப்பட்டது.[25]

### 22. "ஆரோக்கிய வாழ்வு"

**கதைச்சுருக்கம்** : இயற்கை விவசாயத்தினை மேற்கொள்ள வேண்டும் என்பதனை வலியுறுத்தும் வகையில் செயற்கை இரசாயனப் பயன்பாட்டினால் ஏற்படும் தீமைகளை எடுத்துக்காட்டுதல்.

**நெறியாள்கை** : த.விவேகானந்தராசா, ச.சந்திரசேகரம், ஆர்.தனுஜா

**தயாரிப்பு** : சர்வோதயா

**பங்கு பற்றியவர்கள் :** விவசாயக் குடும்பத்தில் உள்ள இளைஞர்கள்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: அம்பாறை பிரதேசம் - 2008

இசை வாத்தியங்களாக பறை, தாளம் பயன்படுத்தப்பட்டன. சாதாரண உடைகளை அணிந்திருந்தனர். குறியீட்டு ஒப்பனை போடப்பட்டிருந்தது, கைப் பொருட்கள் பெரிதாக வடிவமைக்கப்பட்டன (உ-ம்) தக்காளிப் பழம்.

ஆற்றுகை நடைபெறும் இடத்தில் கதையோடு தொடர்புடைய பதாதைகள் தொங்கவிடப்பட்டு ஆற்றுகை வெளியையும், ஆற்றுகையாக மாற்றி அதன் மூலமாகவும் செய்தி சொல்லப்பட்டமை புதுமையாக இருந்தது. சொல்லப்பட்ட விடயங்கள் மக்கள் மத்தியில் இலகுவாக சென்றடைந்திருந்தன.[26]

### 23. "பெண்களுக்கெதிரான வன்முறைகளை ஒழிப்போம்"

**கதை** : குடும்பங்களில் பெண்கள் ஆண்களால் வன்முறைக்காளாகும் சந்தர்ப்பங்கள், அத்தோடு சிறுவர், போதைவஸ்து பற்றிய பிரச்சினைகள், அவைகளை தடுக்கும் வழிமுறைகள் போன்ற சம்பவங்களைத் தொகுத்துக் கூறுகின்றது.

**நெறியாள்கை** : திரு.கி.சேயோன், திரு.முரளிதாஸ்

**தயாரிப்பு** : Oxfam GB, World Vision

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: மட்டக்களப்பின் பெரும்பாலான பகுதிகளில் ஆற்றுகை செய்யப்பட்டன. - 2008

**பங்கு பற்றியவர்கள் :** முரளிதாஸ், மணிமாறன், சியாமினி, ரூபா, சங்கீதா. விநாயகமூர்த்தி

ஆடல், பாடல்களோடு டோல்கி, பறை, ரபான் போன்ற வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டன, சாதாரண உடை, ஒப்பனையிலே நடித்தனர்.

நாடகம் மூலமாகச் சொல்லப்பட்ட விடயங்கள் மக்கள் மத்தியில் மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றதா? என்பதனை இந் நாடகக் குழுக்கள் தொடர்ந்தும் அவதானித்து வந்தன, அப்பொழுது அவர்களிடம் மாற்றங்கள் ஏற்பட்டதனை அவதானிக்க முடிந்திருக்கின்றது.[27]

### 24. "பள்ளி செல்ல..."

Action Aid, W.W.D.F ஆகிய நிறுவனங்களின் வாழ்வாதார செயற்றிட்டத்தின் கீழ் பாடசாலை செல்லாது இடைவிலகி வாழ்கின்ற சிறுவர்களை மீளவும் பாடசாலை செல்லத் தூண்டுவதற்கான ஆற்றுகையாக இது உருவாக்கப்பட்டது.இதற்கான வளவாளராக மூன்றாவதுகண் நண்பர்கள்

குழுவைச் சேர்ந்த **து. கௌரீஸ்வரன்** அவர்கள் செயற்பட்டிருந்தார். இந்நாடகம் 2008 இல் மட்டக்களப்பின் பல்வேறு கிராமங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.[28]

**25. "புத்தகமே புத்தகமே"**

**கதை** : மாணவர் மத்தியில் வாசிப்பினைத் தூண்டும் வகையில், அதன் முக்கியத்துவங்கள் எடுத்துரைக்கப்பட்டன.

**நெறியாள்கை** : திரு. கு. ரவிச்சந்திரன்

மட்/சிசிலியா பெண்கள் உயர்தரப் பாடசாலை தயாரிப்பில் O/L நாடகத்துறை மாணவர்களைக் கொண்டு அங்கே 2008 காலப்பகுதியில் ஆற்றுகை செய்யப்பட்டது.[29]

**26. "இலவச வீடுகள் வழங்கலில் உள்ள குளறுபடிகள் பற்றிய விழிப்புணர்வு"**

**கதை** : இலவசமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன, ஆனால் அதிகாரத்தில் உள்ளவர்கள் அச்சலுகைகளை உரியவர்களுக்குக் கொடுக்காமல் மோசடி செய்கின்றனர். இது பற்றி பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரியாமலும், சலுகைகள் கிடைக்காமலும் போகின்றன. இவ் உண்மைகள் மக்களுக்கு சொல்லப்படுகின்றன.

**நெறியாள்கை** : டிவதர்சினி

**தயாரிப்பு** : NEHRP

**பங்கு பற்றியவர்கள்** : தீபன், மதிராஜ், பிரசாந்தினி, நிருசாந், வினோஜினி, ஊர்மிளா, விக்கினபிரதாப்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: புல்லுமலைப் பிரதேசம் - 2009

கூத்து பாடல் மெட்டுக்களும், தவிலும் பயன்படுத்தப்பட்டன. full face make-up போடப்பட்டன. அனைவரும் செம்மஞ்சள் நிற மேற்சட்டையும், ஜீன்சும் உடுத்தியிருந்தனர்.

பிரச்சினைகள் அறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதன் விளைவாக, அப் பிரதேச மக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.[30]

**27. "வாசிப்பின் அவசியம்" பற்றி நூலக வாசிப்பு வாரத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்."**

**கதை** : நமது சமூகம் வாசிப்பு இன்மையால் எவ்வாறன பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றன, என்பதனை பாடசாலை மாணவர்கள், சமூகத்தில் உள்ள சில நபர்கள் போன்றோரை அடிப்படையாகக் கொண்டு ஒரு சில சம்பவங்களூடாக எடுத்துக்காட்டப்படுகின்றன.

**நெறியாள்கை** : திரு.அ.விமலராஜ், திரு.த.விவேகானந்தராசா, பங்கு கொண்ட மாணவர்கள் ஆகியோரின் கூட்டுருவாக்கம்

**தயாரிப்பு** : பொது நூலகம் மட்டக்களப்பு

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: கல்லடி நூலகம் முன்றல், புதூர் நூலகம் முன்றல் - 2009

**பங்கு பற்றியவர்கள்** : சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக 2ஆம் வருட நாடகத்துறை மாணவர்களான திருச்செந்தூரன், ராகவன், நந்தகுமார், சந்திரவர்ணன், லாவண்யா, அபர்ணா, லக்சலா, தபோதினி, இந்துஜா, காஞ்சனா, டிலக்சனா

இசை வாத்தியங்களாக பறை, தாளம் பயன் படுத்தப்பட்டன. பாடல், ஆடல் மூலமாக அசைவுகளை மேற்கொண்டனர். உடைகளாக பச்சை T-shirt, கறுப்பு Jeans அணிந்தனர், சாதாரண ஒப்பனை போடப்பட்டன.

பார்வையாளர்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். சொல்லப்பட்ட விடயங்களை உள்வாங்கிக் கொண்டு பலரும் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.[31]

### 28. "டெங்கு"

**கதை** : டெங்கு நுளம்பினால் அதிகமான உயிர்ச்சேதங்கள் ஏற்படுகின்றன. இது எப்படியான இடங்களில் பெருகுகின்றன. அதனை எவ்வாறு தடுக்கலாம் போன்ற விடயங்களை மக்களுக்குத் தெளிவு படுத்தல்.

**நெறியாள்கை** : திரு.கு. ரவிச்சந்திரன்

**தயாரிப்பு** : கிழக்குப் பல்கலைக்கழகம், லயன்ஸ் கிளப், Psycho social service.

**பங்கு பற்றியவர்கள்** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களான நிசாந்தன், திலகன், சங்கர், கிருஸ்னவேணி, சரண்யா, நிரோஜினிதேவி, யாழினி, கோமிதா, பவானி, அனுஜா, சன்சியா, திலகரூபி, தமிழினி, கஜேந்தினி, சிந்துசா, நிறோஜினி, கங்காதரன், டிமாலினி, கிருபாகரன், நிசாந்தராஜா.

**ஆற்றுகை செய்த இடம்**

: ஓட்டமாவடி தொடக்கம் திருக்கோவில் வரை

**காலம்** : 2009 - 2010 காலப்பகுதி

கூத்தின் இசை, அசைவுகளுடன், மத்தளம், பறை, மேளம், ஓகண் போன்ற வாத்தியங்களும் பாவித்திருந்தனர். நுளம்பு, நோயாளி, வைத்தியர் என்ற பாத்திரங்களின் தன்மைகளுக்கு ஏற்ப உடை, ஒப்பனை வடிவமைக்கப்பட்டிருந்தன.

ஆற்றுகையின் பின்னர் காத்தான்குடி, கரடியனாறு போன்ற பகுதிகளில் சிரமதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.[32]

### 29. "கட்டுண்ட மொட்டுக்கள்"

**கதை** : தற்கால நவீன கல்வி முறையினால் சிறுவர்கள் எவ்வாறு பாதிக்கப் படுகின்றார்கள். மேலதிக வகுப்புக்கள், பரீட்சைகள் என்று எவ்வாறு கட்டுப்படுத்தப் படுகின்றார்கள் என்பவைகளை சித்தரிக்கின்றன.

**நெறியாள்கை** : திரு.த. விவேகானந்தராசா, Diploma மாணவர்கள்

**தயாரிப்பு** : தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மட்டக்களப்பு

**பங்கு பற்றியவர்கள்** : Diploma நாடகமும் அரங்கியலும் கற்கை மாணவர்கள்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கல்லடி - வேலூர் - 2010

கூத்து, கிராமிய மெட்டுக்களும், மாணவர்களின் புத்துருவாக்கப் பாடலும் இடம்பெற்றன, பறை, தாளம், ரபான் ஆகிய வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டன. வெள்ளை சேட், சல்வார், கறுப்பு ஜீன்ஸ் ஆகிய உடைகளை அணிந்திருந்தனர்.[33]

### 30. "மனிதம்"

**கதை** : மன நோயானது அனைவருக்கும் வரக்கூடிய ஒரு வியாதி. அவ் வியாதியை கட்டாயம் குணப்படுத்தலாம். அதற்கான வைத்திய சிகிச்சைப்பிரிவு இயங்கி வருகின்றது. ஆகவே பாதிக்கப்பட்டவர்களை கட்டாயம் சிகிச்சைக்கு கொண்டுவர வேண்டும் என்பதைத் தெளிவு படுத்துகின்றது.

**நெறியாள்கை** : திரு.கு.ரவிச்சந்திரன்

**தயாரிப்பு** : சுகாதார உளவியல் பிரிவு, வாழைச்சேனை.

**பங்கு பற்றியவர்கள்** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள்.

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: வாகரை தொடக்கம் மட்டக்களப்பு வரை - 2010 - 2011

கிரேக்க கோரஸ் தன்மையான இசையோடு தபேலா, பறை பாவிக்கப்பட்டன. உடைகளாக மஞ்சள் மேல் சட்டையும், பச்சை ஜீன்சும், கறுப்பு சால்வையும் உடுத்தியிருந்தனர். பாத்திர ஒப்பனை போடப்பட்டிருந்தது.

ஆற்றுகைக்குப் பின்னர் மன நோயினால் பாதிக்கப்பட்ட பலர் சிகிச்சைக்காக வந்து குணப்படுத்தப்பட்டதாக வைத்தியர் தெரிவித்திருக்கின்றார்.[34]

### 31. "மதுபாவனை பற்றியது"

**கதை** : சமூகத்தில் ஆண்கள் மது அருந்துகின்றனர். இதனால் குடும்பத்தில் உள்ள பெண்களும், சிறுவர்களும் தினமும் எதிர் நோக்கும் பிரச்சினைகள்

**நெறியாள்கை** : திரு.ஸ்ரன்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : World Vision

**பங்கு பற்றியவர்கள்** : துஸ்யந்தி, இமைக்சன், கௌசிகன், சசிகலா, பற்றிமா, சுரேஸ்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கிரான் - 2011

பாடல்கள் கிராமிய மெட்டில் அமைந்திருந்தன. அனைவருக்கும் பொதுவான மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும், நிற துணித்துண்டுகளும் உடைகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஒப்பனை - பச்சை, வெள்ளை, நீல நிறங்களை முகம் பூராகவும் பூசியிருந்தனர்.[35]

### 32. "பசுப்பால்"

**கதை** : உள்ளூர் பசுப்பால் பாவனையை ஊக்குவித்தல்

**நெறியாள்கை தயாரிப்பு**

: மூன்றாவது கண் நண்பர்கள் குழு[36]

2011ல் வெபர் மைதானம் - மட்டக்களப்பு வர்த்தகக் கண்காட்சியிலும், குறிஞ்சாமுனை, வவுனதீவு சந்தை ஆற்றுகை செய்யப்பட்டன. 2011 இலிருந்து இன்று வரை நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

**பங்கு பற்றியவர்கள்** : மூன்றாவது கண் நண்பர்களான, கௌரீஸ்வரன், சோதீஸ்வரன், குகதாஸ், நிரோசினிதேவி, சிந்துசா, நிசானந்தராஜா, வாகிசன், நிரோஜினி, ராஜதிலகன், துஸ்யந்தராஜ், சதார்த்தன்.[37]

### 33. "மனிசன் இருக்கிறான் மனிசி எங்கே?"

**கதை** : சமூகம் ஆணாதிக்கத்தினால் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதனால் பெண்களின் உரிமைகள் மறுக்கப்படுகின்றன, அவர்களுக்கான இடம் கேள்விக் குறியாகியுள்ளது. ஆகவே அவர்களுக்கும் சம உரிமை கொடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தல்.

**நெறியாள்கை** : திரு. எஸ். சந்திரகுமார்

**தயாரிப்பு** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கிழக்குப் பல்கலைக்கழக வளாகம் - 2011

**பங்கு பற்றியவர்கள் :** கிழக்குப் பல்கலைக்கழக 2 ஆம் வருட கலைத்துறை மாணவர்கள்

கூத்தின் தாளக்கட்டுக்களும், பறை, மேளம், மத்தளம், தாளம் போன்ற வாத்தியங்களும் பயன்படுத்தப்பட்டன. பாத்திரத்தின் தன்மைக்கு தகுந்த உடையிலும், சாதாரண ஒப்பனையிலும் காணப்பட்டனர்.[38]

### 34. "பெண்களுக்கெதிரான பாலியல் பிரச்சினைகள்"

**கதை** : பெற்றோர்கள் வெளிநாடு செல்வதற்காக பெண்பிள்ளைகளை உறவினர் வீடுகளில் பாதுகாப்புக்காக விட்டுச் செல்கின்றனர். ஆனால் அவ்வீடுகளில் வாழ்கின்ற ஆண்களால் பாலியல் துஸ்பிரயோகங்களுக்கு ஆளாக்கப்படுகின்றார்கள்.

**நெறியாள்கை** : வாணி

**தயாரிப்பு** : திருமறைக் கலாமன்றம், மட்டக்களப்பு.

**பங்கு பற்றியவர்கள்** : செந்தூரன், மதிராஜ், ரூபன், தர்சினி, கோபி

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: மட்/சிசிலியா பெண்கள் உயர்தரப் பாடசாலை - 2011

மோடிமைப்படுத்தப்பட்ட இசையை கையாண்டனர். சாதாரண உடையிலும், ஒப்பனையிலும் நடிகர்கள் தோன்றினர்.[39]

### 35. "மௌனங்கள் மொழியானால்"

**கதை** : சிறுவர்கள் சொந்த வீட்டில் பெற்றோரால் தண்டிக்கப்பட்டும், கவனிப்பாரற்றும் வாழ்கின்றனர், உறவினர்களின் வீடுகளில் வாழ்கின்றவர்கள் எவ்வாறு துஸ்பிரயோகங்களுக்கு உட்படுகின்றனர், பாடசாலைகளில் எவ்வாறு ஒதுக்கப்படுகின்றனர் போன்ற சிறு சிறு சம்பவங்கள் மூலமாக கதை சொல்லப்படுகின்றது.

**நெறியாள்கை** : திரு.க.மோகனதாசன், திருமதி.உமா சிறிசங்கர், மற்றும் பங்கு கொண்ட மாணவர்கள் ஆகியோரின் கூட்டுருவாக்கம்

**தயாரிப்பு** : மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை, Unicef

**ஆற்றுகை செய்த இடம்**

: மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேச செயலகங்கள், வைத்தியசாலைகள், மட்டக்களப்பு மற்றும் கிரான் சந்தைகள். (கிட்டத்தட்ட முப்பதுக்கு மேற்பட்ட ஆற்றுகைகள் செய்யப்பட்டுள்ளன)

**காலம்** : 2011-2012 காலப்பகுதி

**பங்கு பற்றியவர்கள்** : சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவக, விரிவுரையாளர்களான திரு.க.மோகனதாசன், திருமதி.உமா சிறிசங்கர், 4 ஆம் வருட நாடகத்துறை மாணவர்களான திருச்செந்தூரன், நந்தகுமார், லாவண்யா, சந்தலக்ஸி, டிலக்சனா, காஞ்சனா, அபிராமி, ஜிவோஜினி, தேவமலர், லோஜினி, சிவமதி, அனன்சியா, கலைராதா, ரேவதி, றொஜன், அனல் தர்சன்.

சூழ்நிலைக்கும், உணர்வுகளுக்கும் ஏற்ப பாடல், இசை போன்றன கையாளப்பட்டன. டோல்கி, ஹார்மோனியம், தாளம் ஆகிய கருவிகள் பயன்படுத்தப்பட்டன. செம்மஞ்சள் மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும், மரூன் சால்வையும் உடைகளாகப் பயன்படுத்தினர். அனைவரும் சாதாரண ஒப்பனையில் காணப்பட்டனர்.

பார்வையாளர்கள் மனம் நெகிழ்ந்து பார்வையிட்டனர், உரையாடலின் போது பல உண்மைச் சம்பவங்களை அழுதுகொண்டு கூறினர், சொல்லப்பட்ட விடயங்கள் பற்றி கவனத்தில் எடுப்பதாகவும் கூறினர், இந் நாடகம் பல தரப்பினரிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றிருந்தது.[40]

### 36. "பள்ளி செல்வோம்"

கல்குடா வலயக் கல்வி அலுவலகத்தின் மாணவர்களை பாடசாலைக்குச் செல்லத் துாண்டும் பிரச்சாரத்திற்காக மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுக்காக நாடக ஆசிரியர் து.கௌரீஸ்வரன் அவர்களால் இந்நாடகம் உருவாக்கப்பட்டது. 2011 இல் இந்நாடகம் வாகனேரி, காயான்கேணி, இறாலோடை ஆகிய கிராமங்களில் ஆற்றுகை செய்யப்பட்டது.[41]

### 37. "முடிச்சுக்கள்"

**கதை** : வீட்டில் அப்பா குடிப்பதனால் தடம் மாறும் பெண்கள், இள வயதுத் திருமணம், வெளிநாடுகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் போன்ற பெண்கள் வன்முறைக்காளாகும் சந்தர்ப்பங்களின் தொகுப்பு.

**நெறியாள்கை** : திரு.அ.விமலராஜ், மற்றும் பங்கேற்ற கலைஞர்கள் ஆகியோரின் கூட்டுருவாக்கம்

**தயாரிப்பு** : காவியா - Self Woman's development center, Batticaloa, நெய்தல் ஊடக தரிசனம்,

**ஆற்றுகை செய்த இடம்** : வவுனதீவு, கரடிபுவல், பத்தரைக்கட்டை, புதூர்

**காலம்** : 2011 - 2012 காலப்பகுதியில்

**பங்கு பற்றியவர்கள்** : நெய்தல் ஊடக தரிசன உறுப்பினர்களான திருச்செந்தூரன், நந்தகுமார், காஞ்சனா, சிவமதி, அனன்சியா, ராதா ஜெகதா, குகன், பிரசன்னா, சீலன், லீனஸ், சுதர்சன், தனேஸ்வரன், ரகுமான், நிருசாந், நிசாந்தினி, காயத்ரி, பிரகாஸ், கோபி, பயஸ், சுதா,

நாடக உணர்வுகளுக்கு ஏற்ப பாடல்களை பயன்படுத்தினர். வெள்ளை சேட், சல்வார், கறுப்பு ஜீன்ஸ் போன்றன உடுத்தினர். சாதாரண ஒப்பனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சொல்லப்பட்ட கருத்துக்கள் மக்கள் மத்தியில் சென்றடைந்ததோடு, நாடகம் நல்ல வரவேற்பையும் பெற்றிருந்தது.[42]

### 38. "பெண்களும் மனிதர்கள் என்றுணர"

திருப்பெருந்துறை சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் பால்நிலைச் சமத்துவ பிரச்சாரத்திற்காக து.கௌரீஸ்வரன் அவர்களால் இந்நாடகம் உருவாக்கப்பட்டது. 2011 இல் இந்நாடகம் மட்டக்களப்பில் பல்வேறு இடங்களிலும் ஆற்றுகை செய்யப்பட்டது.[43]

### 39. "போசாக்கான சமூதாயத்தை நோக்கி"

**கதை** : கருவுற்ற தாய்மாருக்கான போசாக்கின் அவசியம் பற்றியது. தாய் கருவுற்ற காலத்தில் முறையான போசாக்குள்ள உணவு உண்ணாமலும், வைத்தியசாலைக்குச் சென்று வைத்திய ஆலோசனைகளைப் பின்பற்றாமலும் இருப்பதனால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் எவ்வாறான குறைபாடுகளுடன் பிறக்கின்றனர், பின்னர் என்ன பிரச்சினைகளை எதிர் நோக்குகின்றனர் பற்றியும், அதனால் கருவுற்ற தாய் எவ்வாறான முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது பற்றியும் சொல்லப்படுகின்றது.

**நெறியாள்கை** : திரு.அ.விமலராஜ், மற்றும் பங்கேற்ற கலைஞர்கள் ஆகியோரின் கூட்டுருவாக்கம்

**தயாரிப்பு** : வாழைச்சேனை MOH, World Vision, நெய்தல் ஊடக தரிசனம்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: வாழைச்சேனை வைத்தியசாலை, நாசிவந்தீவு கல்குடா, விநாயகபுரம், கிண்ணையடி - 2012

**பங்கு பற்றியவர்கள்** : நெய்தல் ஊடக தரிசன உறுப்பினர்களான திருச்செந்தூரன், நந்தகுமார், காஞ்சனா, சிவமதி, ஜெகதா, பிரசன்னா, தனேஸ்வரன், நிருசாந், நிசாந்தினி, காயத்ரி, பிரகாஸ், கோபி

கிரமிய நடன, பாடல் இசையோடு டொல்கி, ஹார்மோனியம் பாவிக்கப்பட்டன. உடைகளாக இளம் நீல மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும், சிவப்பு சால்வையும் உடுத்தியிருந்தனர். சாதாரண ஒப்பனை போடப்பட்டிருந்தது.

தாய்மார்களுக்கு கட்டாயமான விடயங்கள், இந் நாடகம் அனைத்துப் பகுதிகளிலும் கட்டாயம் போடப்பட வேண்டும் என்று கூறியதோடு நடிப்பினையும் பாராட்டினார்கள்.[44]

### 40. "கொஞ்சம் யோசியுங்கோ"

**கதை** : ஆண்கள் மது அருந்திவிட்டு தவறான முடிவெடுப்பதால் குடும்பப் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகள்.

**நெறியாள்கை** : தேவ அலோசியஸ்

**தயாரிப்பு** : World Vision, நுண்கலைக் கழகம்

**பங்கு பற்றியவர்கள்** : உதவி - டிவதர்சினி, இசை - செல்வக்குமார், பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்ட பொத்துவில் மாணவர்கள்

**ஆற்றுகை செய்த இடம்**

: தாண்டியடி, கோமாரி, பொத்துவில், சங்கமன்கண்டி

**காலம்** : **பங்குனி - 2012**

கிரமிய நடன, பாடல் இசையோடு பறை, டொல்கி பாவிக்கப்பட்டன. உடைகளாக செம்மஞ்சள் நிற மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும் உடுத்தியிருந்தனர். ஒப்பனை - பல நிறங்களிலும் கோடுகள் போடப்பட்டிருந்தன.[45]

### 41. "அம்மா சும்மா இருக்கிறா"

**கதை** : பொதுவாக ஆண்கள் மாத்திரம்தான் வேலை செய்பவர்கள். ஆனால் பெண்கள் செய்யும் வீட்டு வேலைகளை எவரும் கவனத்தில் எடுப்பதுமில்லை. ஆனால் அவைகளும் மதிக்கப்பட வேண்டும்.

**நெறியாள்கை** : திரு. கு. ரவிச்சந்திரன்

**தயாரிப்பு** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கிழக்குப் பல்கலைக்கழக வளாகம், கொம்மாதுறை - 2012

**பங்கு பற்றியவர்கள்** : கிழக்குப் பல்கலைக்கழக 2ம் வருட நுண்கலைத்துறை மாணவர்கள்.

மேளம், பறை, தாளம் பாவிக்கப்பட்டன. நீல நிற மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும் அணிந்திருந்தனர், சாதாரண ஒப்பனையில் நடித்தனர். கருத்தினை உள்வாங்கிக் கொண்டு உரையாடினர்.[46]

### 42. "மீனவனின் துயரம்"

**கதை** : மீனவர்களின் உண்மையான உழைப்பு எவ்வாறு இடைத் தரகர்களால் சுரண்டப்படுகின்றது என்றும், தங்கூசி தூண்டில் போன்றவற்றால் மீன் பிடிப்பதால் ஏற்படும் பாதகங்கள் பற்றியும் சொல்லப்படுகின்றன.

**நெறியாள்கை** : திரு.கு.ரவிச்சந்திரன்

**தயாரிப்பு** : கடற்றொழில் அதிகார சபை, மட்டக்களப்பு.

**பங்கு பற்றியவர்கள்** : கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள்

**ஆற்றுகை செய்த இடம், காலம்**

: கடற்றொழில் அதிகார சபை, மட்டக்களப்பு - 2012

மீனவர் பாடல் மெட்டு, கூத்து பாடல் மெட்டு, பறை, எடுக்கு, தபேலா, மத்தளம் போன்றன இசைக்காக பயன்படுத்தப்பட்டன. நீல நிற மேல் சட்டையும், கறுப்பு ஜீன்சும் அணிந்திருந்தனர், சாதாரண ஒப்பனையில் நடித்தனர்.

தாங்கள் இவ்வாறான பிரச்சனைகளுக்க உண்மையாகவே முகம் கொடுக்கின்றோம், இதற்கான தீர்வுகளை பெற்றுத்தர வேண்டும் என மீனவர்கள் கூறினர்.[47]

### 43. "அனர்த்தங்களுக்கு முன் ஆயத்தம் செய்தல்"

**கதை** : தற்போதய சூழலில் இயற்கை அனர்த்தங்களான சுனாமி, வெள்ளப்பெருக்கு, சூறாவளி மற்றும் போர் அனர்த்தங்கள் திடீர்

என ஏற்படுகின்றன. அவைகளில் இருந்து நம்மையும், நமது உடமைகளையும் பாதுகாப்பதற்கான முன் ஆயத்தச் செயற்பாடுகள்.

**நெறியாள்கை** : திரு.ஸ்ரன்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : எகட்

**பங்கு பற்றியவர்கள்** : கிங்சிலி, பற்றிமா, சுரேஸ், கௌசிகன், ஜெரால்ட், ஸ்ரீபன், வினி ப்ரிடா

**ஆற்றுகை செய்த இடம், காலம்**
: கல்முனை, பாண்டிருப்பு - 2012 கார்த்திகை

பாடல், ஆடல்களோடு ஜிம்னாஸ்டிக் உடல் அசைவுகளையும் பயன்படுத்தி ஆற்றுகையை வெளிப்படுத்தினர். வழமை போல் நீல மேல் சட்டையும், கறுப்பு ஜின்சும், நிற துணித்துண்டுகளும் உடைகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஒப்பனை - முகத்தின் பச்சை, வெள்ளை, நீல நிறங்களால் கோடுகள் வரைந்திருந்தனர். பார்வையாளர்களுக்கு முன்னாயத்தம் பற்றிய அறிதல் ஏற்பட ஏதுவாக அமைந்தது.[48]

### 44. "சிறுவர் பாதுகாப்பு"

**கதை** : சிறுவர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வன்முறைகளுக்கும், துஸ்பிரயோகங்களுக்கும் ஆளாகி சீரழிந்து சின்னா பின்னமாகின்றார்கள். அவர்களை நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து மீட்டெடுத்து பாதுகாப்பான வாழ்க்கையை வழங்க வேண்டும்.

**நெறியாள்கை** : திரு. ஸ்ரன்லி பிரபாகரன்

**தயாரிப்பு** : Offer, எகட்

**பங்கு பற்றியவர்கள்** : ஜெரால்ட், ஸ்ரீபன், கிரீசன், தரினா, தயான், கமல் காந்

**ஆற்றுகை செய்த இடம்**
: ஆயித்தியமலை, பாவற்கொடிச்சேனை

**காலம்** : 2013 தற்பொழுது வரை

ஒப்பாரி, தாலாட்டுப் பாடல் மெட்டுக்களை கதையின் உணர்வுகளுக்கு ஏற்ப பயன்படுத்தினர். நீல மேல் சட்டையும், கறுப்பு ஜீன்ஸ், நிற துணித்துண்டுகளும் உடைகளாகப் பயன்படுத்தப்பட்டன. ஒப்பனை - முகத்தின் பச்சை, வெள்ளை, நீல நிறங்களால் கோடுகள் வரைந்திருந்தனர்.

நாடக முடிவில் பார்வையாளர்களின் பெரும்பாலானோர் ஆர்வத்துடன் உரையாடலில் கலந்து கொண்டனர். சொல்லப்பட்ட விடயங்கள் எமது ஊர்களிலும் இடம் பெறுகின்றன, அது பற்றி கவனம் செலுத்த வேண்டும் என்றனர்.[49]

- ❖ மேற்குறிப்பிட்ட நாடகங்களோடு எந்தத் தகவலும் கிடைக்காத நாடகங்கள், நாளைய செல்வம், விருட்சம், காற்றே சாட்சியாக, ஒரு பிடி அன்பு ஆகியன.[50] மேலும் ஆய்வின் மூலம் கிடைக்கும் தகவல்கள் இணைக்கப்படும். அத்தோடு தகவல் பெறப்பட்ட ஆவணங்களும் இணைக்கப்படும்.

## தொகுப்புரை

மட்டக்களப்பில் வீதி நாடகமானது சமூகப் பிரச்சினைகளை மக்களுக்கு வெளிப்படுத்தி, தீர்வு காண்பதற்கான காத்திரமிக்க, சிறந்த ஊடகமாக உள்ளமையை வரலாற்றினூடாக அவதானிக்க முடிகின்றது. அனேகமாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலே மேற்கொள்ளப்பட்டு வருவதனையும் அவதானிக்க முடிகின்றது. ஆரம்ப காலத்தினை விட தற்பொழுது பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது.

மட்டக்களப்பில் இடம்பெற்ற வீதிநாடகங்களின் கருப்பொருள் மிகவும் காத்திரமானதாக காணப்படுகின்றன. சமகாலத்தில் நிலவுகின்ற பெண்ணியம், சிறுவர், என தற்கால விடயங்கள் பல நாடகங்களூடாகப் பேசப்படுகின்றன. அதன் மூலமாகத் தீர்வினை எட்டலாம் என நம்புகின்றனர். பேசு பொருள் கலைநயத்துடன் சொல்லப்படுவதனால் மக்கள் இலகுவாக உள்வாங்குகின்றனர். இந்த நிலைமையானது ஏனைய நாடுகளில் உள்ள வீதி நாடகங்களில் இருந்து எமது நாடகங்களைத் தனிமைப் படுத்திக் காட்ட உதவுகின்றது.

இவ் நாடகங்களில் அவதானித்த சிறப்பான விடயம், ஆற்றுகைக் களத்தினையும், ஆற்றுகை வடிவமாக மாற்றுகின்ற முறைமை. இது மட்டக்களப்பில் பரவலாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. உதாரணமாகப் பெண்கள் பற்றிய வீதி நாடகமென்றால் ஆற்றுகை செய்யும் வெளியில் பேசு பொருள் தொடர்பான பல பதாகைகள், பெண்களின் ஆக்கங்கள் போன்றவற்றைக் காட்சிப்படுத்துதல்.

பெரும்பாலான நாடகங்கள் பயிற்சிப்பட்டறையில் பங்கு கொண்டவர்களின் கூட்டுருவாக்கமாக ஆற்றுகை செய்யப்பட்டிருக்கின்றன. அத்தோடு பல நாடகங்கள் தொடர்ச்சியாக வருடக்கணக்கில் ஆற்றுகை செய்யப்பட்டு வருவதனைக் காணமுடிகின்றது. இவை மட்டக்களப்பு வீதி நாடகங்களின் சிறப்பைப் பறைசாற்றுகின்றன.

இடம்பெற்ற ஆற்றுகைகளை ஒட்டுமொத்தமாகப் பார்க்கின்ற போது, அனைத்து நாடகங்களும் ஒரே விதமான கட்டமைப்பில் காணப்படுகின்றன. உதாரணமாக பாடல், மெட்டுக்கள், ஆடல், கூத்துத் தாளக்கட்டுக்கள், உடையமைப்பு போன்ற விடயங்கள் இன்னமும் மாற்றமில்லாமல் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ்வாறான நிலைமை தொடர்ந்தால் வீதி நாடகத்தில் பார்வையாளர்களுக்குச் சற்றுச் சலிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது.

வீதி நாடகத் தயாரிப்பில் அதிகமாக அரச சார்பற்ற நிறுவனங்களே கவனம் செலுத்துகின்றன. இதனால் சில நிறுவனங்களில் கதை, மற்றும் ஏனைய விடயங்களை அவர்களே தீர்மானிக்கின்றனர். இதனால் நெறியாளர்களுக்கும் பங்குபற்றும் கலைஞர்களுக்குமாக சுதந்திரம் தடைப்படுகின்றது. உதாரணத்திற்கு நெறியாளர் கதையில் தனது முழுமையான பங்களிப்பினைச் செலுத்த முடியாமல் போகின்றது. இந்த நிலைமை ஏற்படாமல் தடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முயற்சிக்க வேண்டும்.

அத்தோடு இந் நாடகச் செயற்பாடுகளில் ஈடுபடுபவர்கள் வீதி நாடகம் பற்றிய புதிய விடயங்களைக் கற்று, அறிந்து, புதிய வெளிநாட்டு நாடகங்களைப் பார்வையிட்டு நாடகங்களைப் படைக்கின்ற போது இன்னும் அதிகமான பலன்களைப் பெறலாம்.

ஆகவே எமது சாதக பாதக தன்மைகளைக் கவனத்தில் கொண்டு, வீதி நாடகங்களை மட்டக்களப்பில் காத்திரமான அரங்கப்படைப்பாக வெளிப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும். இதனூடாக நமது சமூகத்தை இன்னும் ஆரோக்கியமானதாக மாற்றலாம்.

## அடிக்குறிப்புக்கள்
## தகவல்

1. தவராஜா. வெ, வயது - 49, பிரதேச செயலாளர், நொச்சிமுனை, 2013.03.09
2. விமலராஜ். ஆ,வயது - 41, நாடக விரிவுரையாளர் மட்டக்களப்பு, 2013.02.09
3. தவராஜா. வெ, வயது - 49, பிரதேச செயலாளர், நொச்சிமுனை, 2013.03.09
4. விமலராஜ். ஆ,வயது - 41, நாடக விரிவுரையாளர் மட்டக்களப்பு, 2013.02.09
5. சி.ஜெயசங்கர். சி, வயது - 48, நாடக விரிவுரையாளர், இருதயபுரம், 2013.02.25
6. மேலது
7. சூரியா பெண்கள் நிலைய ஆவணத்தொகுப்பு
8. ஸ்ரன்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03
9. சந்திரகுமார். எஸ், வயது - 36, நாடக விரிவுரையாளர், செங்கலடி, 2013.03.06
10. ஸ்ரன்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03
11. சந்திரகுமார். எஸ், வயது - 36, நாடக விரிவுரையாளர், செங்கலடி, 2013.03.06
12. ரவீந்திரன். எஸ், வயது - 42, கலாச்சார உத்தியோகத்தர், மட்டக்களப்பு, 2013.02.27
13. கருணேந்திரா. ஜெ, வயது - 32, மூன்றாவது கண் நண்பர், மட்டக்களப்பு, 2013.03.10
14. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08
15. உமா சிறிசங்கர், வயது - 33, நாடக விரிவுரையாளர், பெரிய உப்போடை, 2013.02.25
16. ஸ்ரன்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03
17. சந்திரசேகரம். ச, வீதிநாடக அரங்கின் அழகியலும், அரசியலும், மட்டக்களப்பு, 2007
18. கருணேந்திரா. ஜெ, வயது - 32, மூன்றாவது கண் நண்பர், மட்டக்களப்பு, 2013.03.10
19. உமா சிறிசங்கர், வயது - 33, நாடக விரிவுரையாளர், பெரிய உப்போடை, 2013.02.25
20. சந்திரசேகரம். ச, வீதிநாடக அரங்கின் அழகியலும், அரசியலும். மட்டக்களப்பு, 2007
21. விவேகானந்தராசா. த, வயது - 31, நாடகச் செயற்பாட்டாளர், கல்லடி, 2013.03.02
22. ரவிச்சந்திரன். கு, வயது - 38, நாடக விரிவுரையாளர், மட்டக்களப்பு, 2013.03.06
23. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08
24. ஸ்ரான்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03
25. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08
26. விவேகானந்தராசா. த, வயது - 31, நாடகச் செயற்பாட்டாளர், கல்லடி, 2013.03.02
27. சேயோன். கி, வயது - 28, தன்னார்வத் தொண்டர், சந்திவெளி, 2013.03.01
28. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08
29. ரவிச்சந்திரன். கு, வயது - 38, நாடக விரிவுரையாளர், மட்டக்களப்பு, 2013.03.06
30. டிவதர்சினி வயது - 29, நாடகச் செயற்பாட்டாளர், ஊறணி, 2013.02.20

31. நாடக இறுவட்டு, புகைப்படங்கள்

32. ரவிச்சந்திரன். கு, வயது - 38, நாடக விரிவுரையாளர், மட்டக்களப்பு, 2013.03.06

33. விவேகானந்தராசா. த, வயது - 31, நாடகச் செயற்பாட்டாளர், கல்லடி, 2013.03.02

34. ரவிச்சந்திரன். கு, வயது - 38, நாடக விரிவுரையாளர், மட்டக்களப்பு, 2013.03.06

35. ஸ்ரான்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03

36. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08

37. கருணேந்திரா. ஜெ, வயது - 32, மூன்றாவது கண் நண்பர், மட்டக்களப்பு, 2013.03.10

38. சந்திரகுமார். எஸ், வயது - 36, நாடக விரிவுரையாளர், செங்கலடி, 2013.03.06

39. டிவதர்சினி வயது - 29, நாடகச் செயற்பாட்டாளர், ஊறணி, 2013.02.20

40. நாடக இறுவட்டு

41. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08

42. திருச்செந்தூரன். கி, வயது - 25,

43. கௌரீஸ்வரன். து, வயது - 33, ஆசிரியர், சீலாமுனை, 2013.03.08

44. நாடக இறுவட்டு, புகைப்படங்கள்

45. நாடக இறுவட்டு

46. ரவிச்சந்திரன். கு, வயது - 38, நாடக விரிவுரையாளர், மட்டக்களப்பு, 2013.03.06

47. மேலது

48. ஸ்ரான்லி பிரபாகரன், வயது - 49, நாடகச் செயற்பாட்டாளர், இருதயபுரம், 2013.03.03

49. மேலது

50. சந்திரசேகரம். ச, வீதிநாடக அரங்கின் அழகியலும், அரசியலும். மட்டக்களப்பு, 2007

# இராவணேசன் நாடகத்தின் ஒப்பனை, உடையமைப்பு. (60கள் தொடக்கம் 2012 வரை)

ம. லாவண்யா

## இராவணேசன் பற்றிய அறிமுகம்

இராவணேசன் மரபு தழுவிய ஒரு கூத்துருவ நாடகமாகும். 1964 இல் முதல் முதலாக இராவணேசன் வடமோடி நாடகமானது பேராசிரியர் சு.வித்தியானந்தனினால் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேடையிடப்பட்டது. இது முற்றிலும் கூத்தம்சங்களை உள்ளடக்கிய ஒரு வடமோடி நாடகமாகவே எழுதப்பட்டு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது. அதாவது 60 களில் இராவணேசனானது வடமோடிக் கூத்தாக மேடையிடப்பட்டு, பிற்காலத்தில் படிப்படியாக தன்னகத்தே வடமோடிக் கூத்தின் அம்சங்களான ஆடல், பாடல், என்பவற்றை மாத்திரம் உள்வாங்கி அத்துடன் நடிப்பு என்பதையும் உட்புகுத்தி வளர்ச்சியுற்றது எனலாம். நாட்டுக் கூத்தினை ஆட்ட நிலையிலிருந்து நாடக நிலைக்கு கொண்டு சென்ற பெருமை இராவணேசன் நாடகத்திற்கு உண்டு. உருவச் செம்மையினையும், நவீன நாடகப் பண்புகளையும் தன்னகத்தே கொண்டமைந்ததுவும் இந்நாடகத்திற்கும், அதனது வெற்றிக்கு உறுதுணையாய் அமைந்தது எனலாம். இந் நாடகமானது 1964 , 1969 , 1970 களின் நடுப்பகுதிகள், 2000 , 2003 , 2010 , 2012 வரை மேடையிடப்பட்டு வருகின்றது.

இராவணேசனில் இராவணன் துன்பியல் நாயகனாக (tragedy hero) சித்திரிக்கப்பட்டுள்ளான். இங்கு வீர உணர்வே பிரதான அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. எதிரி முன்பணியாது, சுற்றம் அனைவரையும் இழந்தும், இறுதியில் வீர உணர்வு உந்தலினால் இராமனுடன் போரிட்டு போர்க்களத்திலேயே உயிர் நீக்கின்றான். இராவணனது வீரத்தினை மையமாக வைத்தே இந் நாடகமானது எழுதப்பட்டுள்ளது.

இதனது கதைச் சுருக்கத்தினை எடுத்து நோக்கினால், சீதையை விடுமாறு அங்கதன் இராவணனிடம் தூதுவருகின்றான். இராமனது தூதை அலட்சியம் செய்து இராவணன் அங்கதனை அனுப்பி விடுகின்றான். இதனைக் கேட்ட இராமன் இராவணனுடன் போருக்கு வருகின்றான். இருவருக்குமிடையில் இடம்பெறும் சண்டையில் இராவணன் தோற்கின்றான். அத்துடன் சளைத்துவிடாது இராமனை தோற்கடிக்குமாறு தனது தம்பி கும்பகர்ணன், மகன் இந்திரஜித் ஆகியோரையும் போருக்கு அனுப்புகிறான். இராமனுடனான போரில் கும்பகர்ணன், இந்திரஜித் இருவரும் உயிரிழக்கின்றனர். இறுதியாக இராவணனே இராமனுடன் போரிட்டு போர்க்களத்தில் மடிகின்றான். இதுவே இராவணேசன் நாடகத்தின் கதைச் சுருக்கமாகும்.

இதிலிடம்பெறும்முக்கியபாத்திரங்களாகஇராவணன், மண்டோதரி, இந்திரஜித், கும்பகர்ணன், அனுமான், அங்கதன், நீலன், இராமன், இலக்குமணன் ஆகியோரைக் குறிபிடலாம். இது தவிர

ஆலவட்டம், குடைபிடிப்போர் எடுத்துரைஞர்கள், தட்டிதாங்குவோர், தேரோட்டி, முரசறைவோர், பிற்பாட்டுக்காரர் ஆகியோரையும் பாத்திரங்களாகக் கொள்ளமுடியும். இங்கு பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல்கள் இடம் பெறுகையில் அங்கு முரண்பாடுகளும் தோன்றுகின்றன. ஆரம்பத்தில் சீதையை விட்டு விடுமாறு அங்கதனுக்கும் இராவணனுக்கும் இடையிலான உரையாடலில் முரண் ஆரம்பமாகின்றது. அதனைத் தொடர்ந்து பல இடங்களில் இராவணன் - மண்டோதரி , இராவணன் - கும்பகர்ணன், இராவணன் - இந்திரஜித், இந்திரஜித் - இலக்குமணன், இராவணன் - மண்டோதரி - இந்திரஜித் ஆகியோரிற்கிடையிலான உரையாடல்கள் மூலமாக ஏற்படும் முரண்பாடுகள் நாடகத்தின் கதையோட்டத்தில் பல திருப்பு முனைகளை ஏற்படுத்துகின்றன.

இராவணேசன் நாடகமானது 1960, 1969, 1970 களில் பேரா.சு.வித்தியானந்தனினால் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மேடையிடப்பட்டதைத் தொடர்ந்து பேரா. சி. மௌனகுரு அவர்களினால் கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு 2000, 2003, 2010, 2012 வரை மேடையிடப்பட்டு வருகின்றது.

## ஒப்பனை, உடையமைப்பு பற்றிய அறிமுகம்.

ஒரு அரங்க ஆற்றுகையைத் திறம்பட நிகழ்த்தி முடிப்பதற்கு ஓரிரு அம்சங்கள் மாத்திரம் ஒன்றிணைந்தால் மாத்திரம் போதாது. பலவகைப்பட்ட அரங்கு சார்ந்த அம்சங்கள் அதற்கு உள்ளீடாக வேண்டும். ஒரு நாடகமொன்றை மேடையேற்றுவதற்கு வெறுமனே நடிகர், மேடை மாத்திரம் போதாது. ஏனைய அரங்க மூலகங்களான ஒப்பனை, உடை, ஒளி, ஒலி, காட்சி என்பன ஒன்றிணையும் போதுதான் அது ஒரு முழுமைபெற்ற நாடகமாகத் திகழும். ஏனைய அரங்க மூலகங்கள் எந்தளவு தனித்துவம் பெற்று விளங்குகின்றதோ அந்தளவு ஒப்பனையும் தன்னகத்தே தனித்துவமான அம்சங்களைக் கொண்டு விளங்குகின்றது. பாத்திரமாக நடிகனை மாற்றுவதிலும், பாத்திரத்தினுடைய சமுதாயப் பின்னணியைக் கொண்டுவருவதற்கும், பொருளாதாரம், காலம், இடம், கருவி ஆகியவற்றை தொளிவாகப் புலப்படுத்துவதிலும், நிஜவாழ்வை விட பெரிதுபடுத்தி பரந்ததாகக் காட்டுவதிலும் வகை மாதிரிப் பாத்திரங்களை மேடையில் கொண்டு வருவதிலும், ஒப்பனையின் பங்கு அவசியமாகின்றது.

ஒப்பனையானது பொதுவாக நாடகங்களில் நான்கு வகையாகப் பிரித்து இடப்படுகின்றது. இயல்பு ஒப்பனை, குறியீட்டு ஒப்பனை, விலங்கு ஒப்பனை, வரிக்கோட்டு ஒப்பனை என்பனவே ஆகும். இயல்பு ஒப்பனையுள் பாத்திர ஒப்பனையும் அடங்கும். நாடகங்களின் பாணிக்கேற்ப (style) ஒப்பனையும் இடப்படும்.

நாடகம் ஒன்றிற்கு ஒப்பனை எந்தளவு அவசியமோ அதேயளவு ஆடையும் அவசியமாகின்றது. நாடகத்தினுடைய கதையை ஓரளவு அனுமானிப்பதற்கு ஆடை பெரிதும் துணைபுரிகின்றது. ஒரு நாடகத்திற்கென ஆடையினைத் தேர்ந்தெடுக்கும் போது அதற்கென சில விதிமுறைகள் உண்டு. இதனது பொறுப்பு ஆடை விதானிப்பாளரையே சாரும். வடிவமைக்கப்படும் ஆடையானது. பாத்திரத்திற்கேற்றவாறு அமைதல் வேண்டும். அதே நேரம் நடிகரது உடலமைப்பிற்கேற்றதாகவும்

அவரது நிறத்திற்கேற்றதாகவும் உடை வடிவமைக்கப்பட்டிருக்க வேண்டும். அது மட்டுமின்றி நடிகரது நிறத்திற்கேற்ப இளம் வர்ணம், கடும் வர்ணம் சார்ந்து போதிய அறிவு இருத்தல் வேண்டும். அவ்வாறு இருந்தால் மட்டுமே ஆடையினை வடிவமைக்க முடியும். அத்துடன் நாடகத்திற்கென வடிவமைக்கப்படும் ஆடை நாடகத்தின் ஒளியமைப்புடன் பொருந்தி காணப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் ஆடைகள் பாத்திர ஒப்பனையோடு மட்டுமன்றி நாடகத்தின் போக்கு , உயிர் நாடிக்கேற்றவாறும் பொருந்திக் காணப்படல் வேண்டும். அத்துடன் நடிகரிடத்தில் காண்பியப் பண்பு மாற்றத்தை வேடஉடை ஏற்படுத்தும். உடை விதானிப்பாளர் முதலில் எழுத்துருவை நன்றாக விளங்கிக் கொள்ள வேண்டும். பின் பாத்திரத்தின் பௌதீகப் பண்புகளான பால், வயது, அளவு , வாழ்ந்த காலம் , இடம் , தொழில், குணாம்சங்கள், அந்தஸ்து, சாதி என்பவற்றை கவனத்திற் கொண்டே உடையினை வடிவமைக்க வேண்டும். வேட உடையானது தயாரிப்பின் மோடியை (style) நிலைநிறுத்த உதவும். நாடக மோடி பற்றி பார்ப்பவற்கு தகவல் கொடுக்கும்.

**அணிகலன்கள்**

ஒப்பனை ஆடை என்பவற்றிற்க்கு அடுத்தபடியாக குறிப்பிட்டுக் கூறக்கூடியது அணிகலன்களாகும். இது ஒப்பனையினுள் அடங்குகின்ற ஒரு பகுதி எனினும் தனித்து பிரித்து நோக்க வேண்டியது அவசியம். ஏனெனில் ஒரு நாடகத்தில் பாத்திரங்கள் சிறப்பாக தோன்றி மேடை முழுவதும் பாத்திரமாக நிற்பதற்கு அணிகலன்களது பங்கு மிகவும் துணை புரிகின்றது. நாடகத்தின் அரங்க மூலகங்கள் என்னும் போது ஒப்பனை ஆடை என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பது போன்று அணிகலன்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படல் வேண்டும். ஏனெனில் அணிகலன்கள் ஒப்பனையினுள் அடங்குகின்றமையினால் அதற்கு சமனான பங்கினை தன்னகத்தே கொண்டுள்ளது.

அணிகலன்களை பாத்திரத்திற்கேற்ப தெரிவு செய்வது ஒப்பனை கலைஞரது பொறுப்பு. அவர் எழுத்துருவை நன்றாக வாசித்து விளங்கிக்கொண்ட பின்னரே அணிகலன்களை வடிவமைக்க திட்டமிடல் வேண்டும். இதன் போது வண்ணங்கள், வண்ணக்கலப்புகள், பொருத்தப்பாடுகள், மூலப்பொருள் (material) என்பவற்றில் உத்திகளைக் கையாள்வது அவசியம். பாத்திரங்களின் அழகைக் கூட்டுவதிலும், பாத்திரப் பண்பைப் புலப்படுத்தவும், சாதி, சமய, பொருளாதார சூழ்நிலைகளை வெளிப்படுத்தவும், காலம், நாகரீகம் என்பவற்றைக் கண் முன் கொண்டுவரவும் அணிகலன்கள் உதவுகின்றன. சில நாடகங்களில் அணிகலன்களே பாத்திரமாக செயற்படும். சிலப்பதிகாரத்தில் சிலம்பு, இராமாயணத்தில் சீதையின் சூடாமணி, இராமனின் கணையாழி, சாகுந்தலத்தில் மோதிரம், மகாபாரதத்தில் கவச குண்டலம் என்பன இதற்கு சிறந்த உதாரணங்களாகும். அணிகலன்களின் வடிவமைப்பு, தன்மையினை, அளவினை வைத்தும் அது முதல்நிலைப் பாத்திரமா? அல்லது கடை நிலைப் பாத்திரமா? என்பதை அறிந்து கொள்ளமுடியும். அந்தளவிற்கு அணிகலன்களின் வகிபாகம் நாடகத்தில் மிக முக்கியமாகின்றது.

இராவணேசன் நாடகமும் இவ்வாறான அரங்க மூலகங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கத் தவறவில்லை. கை தேர்ந்த, அனுபவமிக்க கலைஞர்களால் உடை, ஒப்பனை, அணிகலன்கள் என்பன வடிவமைக்கப்பட்டு இன்று வரை சிறப்பான முறையில் ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது.

60களில் இராவணேசன் ஆற்றுகை செய்யப்பட்டு வந்த போதும், அரிதார ஒப்பனை முறையைப் பயன்படுத்தாமல், மென்மையான, நுணுக்கமான ஒப்பனை உபகரணங்களையும், நவீன ஒப்பனை உத்திகளையும் ஒன்றிணைத்து, ஒரு நாட்டுக் கூத்திற்கான தன்மையிலிருந்து வேறுபடுத்திக் காட்டப்பட்டது. இன்று வரைக்கும் அத்தன்மை பேணப்பட்டு வருகின்றது. ஆனாலும் 6கள் தொடக்கம் இன்று வரைக்கும் மேடையிடப்படும் இராவேணசனின் ஒப்பனை, உடை ஆகியவற்றில் காணப்படும் வளர்ச்சிப் போக்குகளையும், ஒரு சில மாற்றங்களையும் காணலாம்.

அணிகலனானது ஒப்பனையின் ஒரு வகைக்குள் அடங்கும் எனினும், அதனை வேறாக நோக்க வேண்டிய கடப்பாடு எமக்குண்டு. இராவணேசனில் பயன்படுத்தபட்ட அணிகலன்களானது ஆரம்ப காலகட்டங்களில் வடமோடிக் கூத்திற்கேயான தன்மைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டிருந்தாலும், அதற்குப் பின்னரான (2000 களில்) ஆற்றுகைகளில் முழுக்க முழுக்க வடமோடிக் கூத்துக்களின் தன்மையைக் கொண்டிராது வடிவமைக்கப்பட்டிருந்தது. அதாவது வடமோடிக் கூத்துக்களுக்கேயான பாரமான முடி, பளபளக்கும் உடை, மிகவும் ஆடம்பரமான வடிவமைப்புக்களினாலான அணிகலன்கள் என்பவற்றிலிருந்து மாறுபட்டு, கவர்ச்சியான நிறங்களில் அமைந்த, சாதாரணத் துணிகளாலான பாரம் குறைந்த உடை, மிகவும் எளிய ஆனால் அர்த்தத்தைத் தரக்கூடிய ஒப்பனை, இலகுவாகக் கிடைக்கக் கூடிய பொருட்களிலிருந்து செய்யப்பட்ட அணிகலன்கள் என்பன பயன்படுத்தப்பட்டிருக்கும்.

60களில் பேரா.சு.வித்தியானந்தனினால் மேடையிடப்பட்ட இராவணேசனில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பனை, உடை, அணிகலன் என்பவற்றிகும், 2000 ஆம் ஆண்டு தொடக்கம் பேரா. சி. மௌனகுருவினால் மேடையிடப்பட்ட இராவணேசனின் ஒப்பனை, உடை, அணிகலன்கள் என்பவற்றிற்கும் நிறைய வேறுபாடுகள் காணப்படுகின்றன. 60களில் மேடையிடப்பட்ட இராவணேசனில் ஒப்பனை, உடை, அணிகலன்கள் என்பன பாரம்பரியத் தன்மைகளைத் தன்னகத்தே கொண்டமைந்தது எனினும், 2000 க்குப் பிறகு மேடையிடப்பட்ட இராவணேசன் நாடகத்தில் அது முற்றிலும் வேறுபட்டது. 60களில் குறைவான பாத்திரங்களே இடம்பெற்றன. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் , மண்டோதரி, இராமன், இலக்குமணன், அங்கதன் ஆகிய முக்கிய பாத்திரங்களும், எடுபார்போர் (பிற்பாட்டு) மாத்திரமே காணப்பட்டனர். ஆனால் 2000 க்குப் பிறகு இதே பாத்திரங்களுடன் இன்னும் மேலதிகமாக எடுத்துரைஞர்கள், ஆலவட்டம் பிடிப்போர், குடை பிடிப்பவர், முரசறைவோர், தேரோட்டிகள், தட்டி தாங்குவோர் ஆகிய பாத்திரங்களும் இணைக்கப்பட்டன.

இராவணேசனில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பனை, உடை, அணிகலன்கள் என்பவற்றினைத் தனித்தனியாகப் பிரித்து நோக்க வேண்டிய அவசியம் உண்டு. ஆகையினால் முதலாவதாக ஒப்பனை பற்றி நோக்குமிடத்து, இங்கு பயன்படுத்தப்பட்ட ஒப்பனை ஓர் அழகியல் தன்மையினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. முகப் பூச்சுக்களும், அதன் மேல் வரையப்படும் கோடுகளும், கையாளப்படும் நிறங்களும் அழகியல் சார்ந்ததாகவே காணப்படுகின்றன.

### 60 களில் பேரா.சு.வித்தியானந்தனினால் தயாரிக்கப்பட்ட இராவணேசனில் உடை, ஒப்பனை.

60 களில் மேடையிடப்பட்ட இராவணேசனில் உடை, ஒப்பனை ஆகியவற்றினை பேரா. சு. வித்தியானந்தனின் மனைவியான கமலா வித்தியானந்தன் அவர்கள் வடிவமைத்திருந்தார். எனினும் வித்தியானந்தன், சிவத்தம்பி, கமலா வித்தியானந்தன் ஆகியோர் குழுவாகச் சேர்ந்து

இவ் வடிவமைப்பில் ஈடுபட்டனர். இதற்கான ஒப்பனையை நா. சுந்தரலிங்கம், கா. சிவத்தம்பி ஆகியோரே மேற்கொண்டனர். முதலில் முக ஒப்பனையை எடுத்து நோக்கினால் base எனப்படும் அடிப்பூச்சு இடப்பட்ட பின் colour stick எனப்படும் ஒரு வகையான cream போன்ற பூச்சினை தேவைக்கேற்ப முகத்தில் பூசிக்கொண்டனர். பல வர்ணங்கள் அந்த colour stick இல் காணப்படும். பாத்திர வேறுபாட்டிற்கேற்ப தேவையான வண்ணங்களைப் பயன்படுத்தி ஒப்பனையை மேற்கொண்டனர். நடிகரது முகத்தில் ஒரு பளபளப்புத் தன்மையை இந்த colour stick ஏற்படுத்தியது. மீசை, கன்னக் கதுப்புக்களில் பூசப்பட்ட சிவப்பு நிறம், முகத்தில் ஆங்காங்கே பூசப்பட்ட மஞ்சள் நிறம் என்பன இதன் மூலமாகவே முகத்தில் இடப்பட்டது. இராவணன் பிரதான பாத்திரம் ஆகையால் புருவங்களும், மீசையும் கும்பகர்ணன், இந்திரஜித் ஐ விட சற்று வித்தியாசமாக வரையப்பட்டிருந்தது. கண்கள் கறுப்பு நிறத்தால் தடிப்பாக வரையப்பட்டு, புருவங்கள் மேல் நோக்கி வளைவாக வரையப்பட்டிருந்தது. இதனது நோக்கம் யாதெனில் இராவணன் ஒரு வீரம் பொருந்தியவன் என்றும் அவன் கோபக்காரன் என்பதையும் புலப்படுத்தி நிற்கின்றது. மேலும் அவன் ஒரு சிவ பக்தன் என்பதைப் புலப்படுத்த நெற்றியிலும், கைகளிலும் திருநீறு பூசப்பட்டிருந்தது. நெற்றியின் நடுவில் சிவப்பு நிற வட்டப் பொட்டு வைக்கப்பட்டிருந்தது. கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோருக்கு புருவமும் மீசையும் இராவணனை விட சற்று சிறியதாக வரையப்பட்டிருந்தது. அவர்களுக்கும் நெற்றியில் திருநீறு பூசப்பட்டிருந்தது. மேலும் மண்டோதரிக்கும் சாதாரண ஒப்பனை இடப்பட்டிருந்தது. இராமன், இலக்குமணன், அங்கதன் ஆகியோருக்கு கண்களும் புருவங்களும் தடிப்பாக வரையப்பட்டிருந்தது. நெற்றியில் நாமமிடப்பட்டிருந்தது. முகத்தில் ஆங்காங்கே மஞ்சள் நிறம் பூசப்பட்டிருந்தது. இது தவிர பிற்பாட்டுக்காரர்கள் எட்டுப் பேரில் ஆண்கள் நால்வரும், பெண்கள் நால்வரும் மேடையின் பின்புறமாக இரு பக்கமும் நிறுத்தி வைக்கப் பட்டிருந்தனர். அவர்களுக்கும் சாதாரண ஒப்பனையே இடப்பட்டிருந்தது. இங்கு ஒப்பனைக்காக colour stick, pancake, eyebrow pencil, lipstick என்பன பயன்படுத்தப்பட்டன.

இங்கு அணியப்பட்டிருந்த அணிகலன்கள் பற்றி நோக்குகையில், இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோர் யக்ஷ குலத்தவர்கள் ஆகையால், இவர்கள் மூவருக்கும் ஒரே தன்மையையுடைய அணிகலன்கள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இவர்கள் மூவரும் வீரம் பொருந்தியவர்கள் என்பதைப் புலப்படுத்தும் வகையில் மூவருக்கும் உடலின் மேற் பகுதியில் மார்புக் கவசம் அணியப்பட்டது. இராவணன் பிரதான கதாபாத்திரம் ஆகையினால் சற்று அலங்காரங்கள் கூடிய மார்புக் கவசமும், ஏனைய இருவருக்கும் (கும்பகர்ணன், இந்திரஜித்) சற்று அலங்காரம் குறைந்த மார்புக் கவசமும் அணியப்பட்டது. இந்த கவசங்கள் அனைத்தும் சாதாரண கடதாசி மட்டையினாலேயே வெட்டி வடிவமைக்கப்பட்டன. பேரா. மௌனகுரு அவர்களே இதனை வடிவமைத்திருந்தார். மார்புக் கவசம் போன்றே கைகளில் கட்டப்பட்டிருந்த கைவங்கியும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இராவணனுக்கு சிறப்பாகவும், கும்பகர்ணன் இந்திரஜித்துக்கு இராவணனை விட சற்று வேறுபட்டதாகவும் வடிவமைக்கப்பட்டது. மார்புக் கவசமானது சாதாரண கடதாசி மட்டையினால் வடிவத்திற்கேற்ப வெட்டி எடுக்கப்பட்டு, அதற்கு மேலால் தகதகக்கும் தங்க நிறக் கடதாசி ஒட்டப்பட்டிருந்தது. இது பார்ப்பதற்கு ஒரு பிரமாண்டத் தன்மையினையும், உண்மைத் தன்மையினையும் வெளிப்படுத்தி நின்றது. காதுகளில் அணியப்பட்டிருந்த குண்டலங்கள் புன்னைக்காய்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதாவது புன்னைக்காய்களுக்கு மேலால் தங்க நிற கடதாசி ஒட்டப்பட்டிருந்தது. முடியினை எடுத்து நோக்கினால், இங்கு மரபு தழுவிய கூத்து முடி பயன்படுத்தப்பட்டது. என்னதான் அது மரபு தழுவியதாக காணப்பட்டாலும் தன்னகத்தே ஒரு stylized தன்மையினைக் கொண்டிருந்தது எனலாம். இராவனனுக்கான முடி அதி சிறப்பு வாய்ந்ததாக, வேலைப்பாடுகள் கூடிய, தங்க நிறத்தினால் வடிவமைக்கபட்டிருந்தது. 60களில் மாத்திரம்

இடம்பெற்ற ஆற்றுகையில் இராவணனுக்கு இரண்டு விதமான முடிகள் பயன்படுத்தப்பட்டன. கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோருக்கும் தங்க நிறத்தாலான ஆனால் இராவணனை விட சற்று அலங்காரங்கள் குறைந்த, அளவில் சிறியதுமான முடிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோர் கழுத்தில் அணிந்திருந்த மாலை முழுக்க முழுக்க வெள்ளை நிற முத்துக்களாலேயே வடிவமைக்கப்பட்டிருந்தது. இந்த முத்துக்களுடைய சிறப்பம்சம் என்னவென்றால், எந்த நேரத்திலும் அந்த முத்துக்களை மாலையிலிருந்து வேறாகப் பிரித்து எடுத்து மீண்டும் கோர்க்க முடியும். தற்போதைய முத்துக்கள், ஒரு மாலையிலுள்ள ஒரு முத்து தேவையற்றது என்றால் அதனை வேறாக்குவதற்கு மாலை முழுவதிலுமுள்ள முத்துக்களையும் பிரிக்க வேண்டும். பின்னர் தேவையற்றதை எடுத்து விட்டு மீண்டும் கோர்க்க வேண்டும். ஆனால் அத்தன்மை இங்கு இல்லை.

இதே போன்று இராமன், இலக்குமணன் ஆகியோர்க்கான அணிகலன்கள் என்னும் போது அவர்கள் வனவாசம் செய்வதற்கு அறிகுறியாக முற்றுமுழுதாக பூக்களினாலான அணிகலன்களையே அணிந்திருந்தனர். அதாவது வெள்ளை நிறத்திலமைந்த கடதாசியினால் செய்யப்பட்ட பூக்களினால் மாலை, கைப்பட்டிகள், கொண்டைப்பட்டி, கால்ப்பட்டி என்பன வடிவமைக்கப்பட்டிருந்தன. இவர்களுக்கான காதணிகளும் புன்னைக் காய்களாலேயே வடிவமைக்கப்பட்டிருந்தன. அங்கதனுக்கு இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித்க்குப் போன்று தலைக்கு முடி அழகாக வடிவமைக்கப்பட்டிருந்தது. தங்க நிறக் கடதாசியினால் அழகாக ஒட்டப்பட்டு நடுவில் கூம்பு போன்ற அமைப்பு பொருத்தப்பட்டது. கழுத்தில் கடதாசி மலர்களாலான மாலை மாத்திரம் அணிவிக்கப்பட்டிருந்தது. காதில் புனைக்காய்களால் செய்யப்பட்ட காதணி இடப்பட்டிருந்தது. இதேபோன்று மண்டோதரி நெற்றிச்சுட்டி , சிமிக்கி, வளையல்கள், முத்துமாலை, கழுத்தோடு ஒட்டிய சிரியமாலை, ஒட்டியாணம் என்பனவற்றினையும் அணிந்திருந்தார். இப்பாத்திரத்துக்கு ஒரு அரசி எவ்வாறு அணிகலன்கள் அணிந்திருப்பாரோ அதனை மனதில் வைத்துக் கொண்டு அணிகலனானது வடிவமைக்கப்பட்டிருந்தது. தலைக்கு கொண்டை போட்டு அதனைச் சுற்றி பூ வைக்கப்பட்டிருந்தது.

ஏனைய பாத்திரங்களான பிற்பாட்டுக்காரர்களில் ஆண்கள் வெறும் சால்வையால் மாத்திரம் உடலைப் போர்த்தியபடி, இன்னுமொரு சால்வையால் தலையில் தலைப்பாகை கட்டியிருந்தனர். பெண்கள் நெற்றிச்சுட்டி வைத்து, சிமிக்கி, மாலை, வளையல் என்பன அணிந்திருந்தனர். அத்துடன் கொண்டை போட்டு அதனைச் சுற்றிப் பூ வைத்திருந்தனர். அத்துடன் இங்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய இன்னுமொரு அம்சம் இராவணேசன் நாடகத்தில் பயன்படுத்தப்பட்ட கதாயுதங்கள், வில், அம்புகள் ஆகியவை அனைத்தும் மட்டக்களப்புக் கூத்துக்களில் பயன்படுத்தப்பட்ட கூத்துக் கதாயுதங்களும், கூத்து வில் அம்புமாகும். 60 களில் இராவணேசன் ஆற்றுகையினைத் தொடர்ந்து மட்டக்களப்பில் 70 களுக்கு பின்னர் மேடையிடப்பட்ட சில கூத்துக்கள் தமது உடை ஒப்பனையில் இராவணேசன் நாடகத்தின் உடை ஒப்பனையைப் பின்பற்றியதாகத் தெரியவருகின்றது.

60 களில் மிகவும் எளிமையானதாகவும், இலகுவானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இராவணன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோருக்கு பளபளப்புத் தன்மை கொண்ட cotton சேலைகளினாலும், இராமன், இலக்குமணன், அங்கதன் ஆகியோருக்கு சாதாரண cotton சேலைகளினாலும் உடை வடிவமைக்கப்பட்டிருந்தது. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோருக்கு நீளமாக பாவாடை (skirt) போன்று தைக்கப்பட்டு, நேராக அல்லாமல்

ஒரு பக்கமாக பல சுருக்கங்கள் வைத்து தைக்கப்பட்டிருந்தது. இதனை அப்படியே எடுத்து பாவாடை போன்று போட்டு விட வேண்டியதுதான். அதற்கு மேலால் இடுப்பில் ஒரு சால்வை கட்டப்பட்டது. இராமன், இலக்குமணனுக்கு காவி நிற cotton சேலையால் தார்பாச்சி கட்டப்பட்டு, இடுப்பில் சால்வை கட்டப்பட்டது. இதே போலவே அங்கதனுக்கும் கட்டப்பட்டது. மண்டோதரிக்கு பளபளப்பான cotton சேலையால் அமைந்த நீளமான பாவாடை, மேல்சட்டை, மேல்த்துண்டு என்பன வடிவமைக்கப்பட்டது. இது தவிர பிற்பாட்டுக்காரர்களில் ஆண்கள் நால்வரும் வேட்டியும், சால்வையும், தலையில் தலைப்பாகையும் கட்டியிருந்தனர். பெண்கள் பச்சை நிறத்தில் cotton சேலை கட்டியிருந்தனர். இதுவே 60 களில் உடை ஒப்பனை என்பன வடிவமைக்கப்பட்டிருந்த விதமாகும்.

### 2000களில் பேரா. சி. மௌனகுருவினால் தயாரிக்கப்பட்ட இராவணேசனில் ஒப்பனை, உடை

இது ஒரு யதார்த்தவிரோத நாடகப்பாணியில் தயாரிக்கப்பட்ட ஒரு நாடகமாகையால் இதனது ஒப்பனையும் மோடிப்படுத்தப்பட்டதாகவே இருக்கும். இங்கு இயல்பு ஒப்பனைக்குள் உள்ளடங்கும் பாத்திரஒப்பனையும் விலங்குஒப்பனையும் சாதாரணஒப்பனையும் பயன்படுத்தப்பட்டன. அரசகுடும்பங்களுக்கேயான பாத்திரஒப்பனை இராவணன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியபாத்திரங்களுக்கு இடப்பட்டதுடன், வனவாசம் செய்யும், இராமன், இலக்குமன் ஆகியோருக்கும் பாத்திரஒப்பனையே இடப்பட்டிருந்தது. வானரப்படைகளான அனுமான், அங்கதன், நீலன் ஆகியோருக்கு விலங்குஒப்பனை இடப்பட்டிருக்கும். இது தவிர ஆலவட்டம், குடை, முரசறைவோர், தட்டிதாங்குவோர், எடுத்துரைஞர், தேரோட்டி ஆகியபாத்திரங்களுக்கு சாதாரணஒப்பனை இடப்பட்டிருந்தது.

இங்கு ஒப்பனைக்காக பயன்படுத்தப்பட்ட நிறங்களாக சிவப்பு, மஞ்சள் ஆகிய இரு நிறங்களுமே கையாளப்பட்டது. இது தவிர கபிலம், இளஞ்சிவப்பு, இளம்மஞ்சள், கறுப்பு வெள்ளை ஆகிய நிறங்களும் பயன்படுத்தப்பட்டன. இங்கு ஒவ்வொரு பாத்திரத்திற்கும் அடிப்பூச்சு (base) பூசப்பட்டு, அதற்குமேல் வண்ணங்கள் தேவைக்கேற்பவும் பாத்திரத் தன்மையினை புலப்படுத்தும் வகையிலும் கையாளப்பட்டிருந்தன. வெறுமனே ஒரு பாத்திரத்திற்கு ஒரு நிறத்தை மாத்திரம் பயன்படுத்தாமல் பலநிறங்களை உபயோகிதது ஒப்பனை செய்யப்பட்டிருந்தது. இது நிச்சயமாக ஒப்பனையாளரின் உத்தி என்றே குறிப்பிட வேண்டும். 2000 களுக்குப் பிறகு பேரா. சி. மௌனகுருவினால் மேடையிடப்பட்ட இராவணேசனில் உடை, ஒப்பனையினை வடிவமைத்திருந்தவர் திருமதி. வாசுகி. ஜெயசங்கர்.

இங்கு இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், மண்டோதரி ஆகியோர் யக்ஷ குலத்தவர்கள் ஆகையால் அதற்கென தனித்துவமான ஒப்பனை கையாளப்பட்டிருந்தது. இராவணன், கும்பகர்ணனுக்கு கண்கள் கறுப்பு நிறத்தால் தடிப்பாக தீட்டப்பட்டு, புருவங்கள் தடிப்பாகவும், உயர்ந்ததாகவும் வரையப்பட்டிருந்தது. இருவருக்கும் கண்களுக்குகீழ் சிவப்புவண்ணம் கடுமையாக தீட்டப்பட்டிருக்கும். இது அவர்களுக்குள் இருக்கும் கோபக்குணத்தையும் அசுரகுணத்தையும் காட்டுகின்றது. 60கள் தொடக்கம் 2003 வரையான ஆற்றுகைகளில் தொடர்ந்து மீசை வரையப்பட்டு வந்து 2010, 2012 ஆற்றுகைகளில் மீசை ஒட்டப்பட்டிருந்தது. தேவை ஏற்பட்டமையினால் ஒரிருபாத்திரங்களுக்கு மாத்திரம்

தாடி ஒட்டப்பட்டது. இராவணன், கும்பகர்ணன் ஆகிய பாத்திரங்களுக்கு இடையிடையே மஞ்சள்நிறம், கன்னம், மூக்கு ஆகியபகுதிகளில் பூசப்பட்டிருந்தது. இது அவர்களிடத்தே உள்ள சாத்வீக குணத்தினைக் காட்டுகின்றது. இராவணன் சிவபக்தன ஆகையால் நெற்றியில் திருநீறு பூசப்பட்டிருந்தது. பின்னராகவந்த ஆற்றுகைகளில் சிவப்பு, மந்சள், வெள்ளை ஆகிய மூன்று நிறங்களைப் பாவித்து பிறை போன்ற வடிவில் பொட்டுமாத்திரம் இடப்பட்டிருந்து. இந்திரஜித் சற்று வயதுகுறைந்தவனாகவும் ஆனால் கம்பீரதன்மை கொண்டவனாகவும் சித்திரிக்கப்பட்டமையால் கண்களுக்குகீழ் சிவப்புவண்ணம் பூசப்படவில்லை. கண்களும் புருவங்களும் தடிப்பாக கறுப்புவண்ணத்தினால் தீட்டப்பட்டிந்தது. மண்டோதரிக்கு அரசிக்குரிய ஒப்பனை இடப்பட்டிருந்தது. புருவங்கள் சற்று வளைவாக தீட்டப்பட்டிருந்தது. முகத்தில் மஞ்சள் நிறம் அதிகமாகவே பூசப்பட்டிருந்தது. இராமன், இலக்குமன் ஆகியோர் வனத்தில வாழ்ந்தாலும் உயர் வர்க்கத்தினர் என்பதை புரிந்துகொள்ளும் விதத்தில் ஒப்பனை இடப்பட்டிருந்தது. முகத்தில் தாராளமாக மஞ்சள் நிறம் பயன்படுத்தப்பட்டிருந்தது. இது அவர்களிடத்தில் காணப்படும் சாத்வீககுணத்தைக் காட்டுகின்றது. புருவங்கள் வில் போன்று வளைக்கப்பட்டு அதற்கு மேலால் வெள்ளைநிற கோடு வரையப்பட்டிருந்தது. இவர்களுக்கு இளம்நிறங்களே பயன்படுத்தப்படும். வானரப்படைகளான அனுமன் அங்கதன் நீலன் ஆகியோருக்கு விலங்கு ஒப்பனை இடப்பட்டிருந்தது. கபிலம், மஞ்சள், வெள்ளை ஆகியநிறங்கள் பயன்படுத்தப்பட்டு குரங்கு போன்ற ஒப்பனை முகத்தில் வரையப்பட்டிருந்தது. முகத்தில் உள்ளகோடுகள் பெரும்பாலும் வெள்ளை, மஞ்சள் ஆகிய நிறங்களினாலே வரையப்பட்டிருந்தது. கண்கள் தடிப்பாக தீட்டப்பட்டிருந்தது. மேலும் எடுத்துரைஞர்கள் இருவருக்கும் தாடி,மீசை என்பன ஒட்டப்பட்டு சாதாரண ஒப்பனை இடப்பட்டிருந்தது.

தேரோட்டி ஆலவட்டம், முரசறைவோர், தட்டிதாங்குவோர் ஆகியோருக்கு சாதாரண ஒப்பனை இடப்பட்டிருந்தது. இங்கு ஒப்பனைக்காக அடிப்பூச்சு எனப்படும் (base) பயன்படுத்தப்பட்டது. இதனை pancake என்று கூறலாம். இலக்கம் 29, 30 பயன்படுத்தப்பட்டது. பெண் பாத்திரத்திற்கு மாத்திரம் foundation இட்டபின் pancake பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணம் முகத்தில் ஒருபளபளப்புத் தன்மையை கொண்டுவருவதற்காகும். மேலும் சிவப்பு, மஞ்சள், வெள்ளை கபில், கறுப்பு ஆகிய வர்ணங்களுக்கு colour plate எனப்படும் ஒருவகை oil paint பயன்பட்டிருந்தது. மீசை, தாடி ஆகியவற்றை grape hair எனப்படும் ஒருவகை செயற்கை முடியினை பயன் படுத்தி அதனை அளவிற்கேற்ப வெட்டியெடுத்து sprit gum எனப்படும் பசையினால் முகத்தில் ஒட்டப்பட்டது. இது பார்ப்பதற்கு உண்மைத் தன்மையை வெளிப்படுத்திநிற்கிறது. இது தவிர eye brow penஉடை, உதட்டுச் சாயம் shadow, eye liner, sponch என்பனவும் பயன்படுத்தப்பட்டன.

இது வரை நடந்த ஆற்றுகையிலேயே 2010, 2013 ஆம் ஆண்டு ஆற்றுகையிலே மாத்திரம்தான் அதி சிறப்பு வாய்ந்த டோப்பாக்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், இராமன், இலக்குமணன், அனுமன், அங்கதன், நீலன், எடுத்துரைஞர் ஆகிய பாத்திரங்கள் அனைத்தும் இந்த டோப்பாவினை அணிந்திருந்தனர். 2010 ஆம் ஆண்டு ஆற்றுகையின் ஒப்பனையினை கொழும்பு மக்கள் களரியின் ஒப்பனையாளர் பாலித அபேலால் அவர்கள் மேற்கொண்டிருந்தார். 2000, 2003 ஆற்றுகைக்குப் பின் மேடையிடப்பட்ட 2010 ஆற்றுகையின் ஒப்பனை சற்று வித்தியாசமானது. மீசை, தாடி என்பன ஒட்டப்பட்டது. கறுப்பு நிறத்தால் புருவங்கள் தீட்டப்பட்டு, அதற்கு மேலால் மஞ்சள், வெள்ளை ஆகிய நிறங்களில்

நீளமாகவும், வளைவாகவும் வரையப்பட்டிருந்தது. பாத்திரங்களது முகத்தில் குறிப்பாக இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித், ஆகியோரது முகங்களில் சிவப்பு, மஞ்சள், கறுப்பு, பச்சை, கபிலம் ஆகிய வண்ணப் பயன்பாடு கையாளப்பட்டிருந்தது. இதே ஒப்பனை முறையே 2013 இலும் காணப்பட்டது.

அணிகலன்கள் பற்றி நோக்குகையில் மிகவும் இலகுவாக கிடைக்கக் கூடிய பொருட்களினால் செய்யப்பட்ட அணிகலன்களே இங்கு பயன்படுத்தப்பட்டிருந்தன. பார்ப்பதற்கு மிகவும் கவர்ச்சியானதாகவும், உயர் பார்வையைக் கொண்டதாகவும் அமையப்பெற்றிருந்த இவ் அணிகலன்களது மூலதனம் மிகக் குறைவானதே. கடதாசிமட்டையினையும், புன்னைக்காய் எனப்படும் ஒருவித காய்களிலிருந்தும், துணிகள் பலவற்றைப் பயன்படுத்தியும், முத்துக்கள் சிலவற்றை சேர்த்தும் இவ் அணிகலன்கள் தயாரிக்கப்பட்டன. மட்டையினை நீளமாகவெட்டி, அதனை உருட்டி, ஒட்டி அதற்கு gold மற்றும் silver spray பண்ணி நெஞ்சுப்பதக்கம், இடுப்புப்பட்டி, கைவங்கி, கழுத்தணி என்பன செய்யப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு ஏதோ ஒரு நீளமான முத்துப்போன்று காட்சிதந்தாலும் அது வெறும் பாரம் குறைந்த மட்டையேயாகும். புன்னைக்காய்களுக்கும் spray பண்ணப்பட்டு இராவணன், மண்டோதரி ஆகியோர்களுக்கு அணிகலன்களாக இடப்பட்டிருந்தது. இராவணன், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோர் கடதாசி மட்டையினால் செய்யப்பட்ட முத்தாலான மார்புக்கவசம், இடுப்புப்பட்டி, கழுத்தணி, கைவங்கி என்பவற்றினை அணிந்திருந்தனர். இவர்களுக்கான காதணிகள் தடிப்பான பெரிய பாரம் குறைந்த வளையல்களால் வடிவமைக்கப்பட்டிருந்தது. பாரம் குறைந்த பலகையினால் செய்யப்பட்ட வளையல்களின் மேல் தங்க நிற, வெள்ளி நிற நூல்கள் சுட்டப்பட்டிருந்தது. இராவணனது அணிகலன்கள் முழுக்க முழுக்க தங்க நிறத்தாலும், கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோரது அணிகலன்கள் வெள்ளி நிறமாகவும் காணப்பட்டது. மண்டோதரி முழுமையாக தங்க ஆபரணங்களைப் போன்று காட்சி தரக்கூடிய அணிகலன்களை அணிந்திருந்தார். புனைக்காய்களாலான காதணி, மாலை, கைவங்கிகள், கடதாசி முத்துக்களால் செய்யப்பட்ட நெற்றிப்பட்டி, இடுப்புப்பட்டி, வளையல்கள் என்பன இவருக்கு வடிவமைக்கப்பட்டிருந்தது. தலையின் உச்சியில் ஒரு பக்கமாக கொண்டை போடப்பட்டு கொண்டைக்கு கீழ் அழகான ஒரு டோப்பா வைக்கப்பட்டிருந்தது. கொண்டையில் முத்துக்களினாலான அணி பொருத்தப்பட்டிருந்தது. நெற்றியில் சிவப்பு நிறப் பொட்டு இடப்பட்டிருந்தது. இராவணன், மண்டோதரி ஆகியோர் தமது ஒரு கால்களில் மாத்திரம் தண்டை அணிந்திருந்தனர். இது எவ்வாறு வடிவமைக்கப்பட்டது எனின், வெள்ளை நிற cotton கயிறினை பெரியதும் சிறியதுமாக இரண்டாக மடித்து சிறிய கயிற்றுத் துண்டின் மேல் பெரிய கயிற்றுத் துண்டை இறுக்கமாகவும், தடிப்பாகவும் சுற்ற வேண்டும். இது நீளமான தடி போன்று காணப்படும். அதன் இரு மூலைகளையும் இணைத்து gold spray பண்ணப்பட்டது.

இராமன், இலக்குவன், அனுமான், அங்கதன், நீலன் ஆகியோருக்கு ஆர்ப்பாட்டம் இல்லாமல் சாதாரண துணியினாலே அனைத்து அணிகலன்களும் வடிவமைக்கப்பட்டிருந்தது. இராமன், இலக்குமன் ஆகியோரது காதணிகள் பச்சைவர்ணத்திலும் கொண்டைப்பட்டி, கழுத்துமாலை, கைப்பட்டிகள் என்பன மஞ்சள், செம்மஞ்சள் ஆகிய நிறங்களில் தயாரிக்கப்பட்டிருந்தது. பார்ப்பதற்கு எளிமையாகவும் அழகியல் உணர்வோடும் இரு வண்ணங்களில் பின்னப்பட்டிருந்தது. இவர்களது காதணிகள் வடிவத்தில் மட்டையில் வெட்டப்பட்டு, அதற்கு மேல் பச்சை நிறத் துணி ஒட்டப்பட்டிருந்தது. வானரப்படைகளுக்கு அனைத்து அணிகலன்களும் முழுக்க முழுக்க

கபிலநிறத்தில் துணிகளாலும் பலகையினாலும் தயாரிக்கப்பட்டிருந்தது. காதணி, மாலைப்பதக்கம் என்பன சிரட்டைபோன்ற மெல்லிய பலகையினால் தயாரிக்கப்பட்டு கபிலநிறம் பூசப்பட்டிருந்தது. தேரோட்டி இளம் மஞ்சள் நிறத்துணியாலான அணிகலன்களையும், தட்டிதாங்குவோர் சாம்பல், சிவப்புதுணியாலான அணிகலன்களையும், எடுத்துரைஞர்கள் பச்சைதுணியாலான அணிகலன்களையும் அணிந்திருந்தனர். இதுதவிர பிரதான பாத்திரங்களான இராவணன, கும்பகர்ணன், இந்திரஜித், இராமன், இலக்குமனன், அனுமான், அங்கதன், நீலன் ஆகியோர் தமது கழுத்திலும் இடுப்பிலும் ஏகாவடம் எனும் ஒரு அணிகலன் அணிந்திருந்தனர். இது முற்றுமுழுதாக துணியினாலே பின்னல் போன்ற அமைப்பில் மூன்று நிறங்களில் பின்னப்பட்டிருந்தது. நிற வித்தியாசத்தைத் தவிர ஒரே முறையில் வடிவமைக்கப்பட்டிருந்தது. இதனுடன் பொருந்தக் கூடியவிதத்தில் தலைக்கிரீடமும் துணியினாலே செய்யப்பட்டிருந்தது. இராவணனுக்கு பச்சை, குங்குமநிறம், செம்மஞ்சள் ஆகிய மூன்று நிறமும் பயன்படுத்தி ஏகாவடம், கிரீடம் செய்யப்பட்டது. கும்பகர்ணனுக்கு சாம்பல் + மஞ்சள் நிறம் சேர்த்த ஏகாவடம், கிரீடமும், இந்திரஜித்துக்கு இளஞ்சிவப்பு, இளமஞ்சள், இளநீலம் சேர்ந்த ஏகாவடம், கிரீடமும் செய்யப்பட்டது. இராமன், இலக்குவணனுக்கு வனவாசத்தைக் குறிப்பதற்காக பச்சையுடன் கபிலம் சேர்ந்த ஏகாவடம் தயாரிக்கப்பட்டது. வானரப் படைகளுக்கு வெறுமனே கபில நிறத்தாலான ஏகாவடமும், தலைப்பட்டியும் வடிவமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாத்திரத்தினுடைய ஆடையமைப்பிற்கும், நிறத்திற்கும் பொருந்தக்கூடியவாறு இவ் அணிகலன்கள் தயாரிக்கப்பட்டிருக்கும். மிகவும் பாரம் குறைந்ததாக, துணியினால் செய்யப்பட்ட இவ் அணிகலன்கள் பல வண்ணக் கலப்புக்களாக பார்ப்பதற்கு ஓர் அழகியல் தன்மையுடையதாக விளங்குகின்றன. தனியாக ஒரு வண்ணத்தை மாத்திரம் பயன்படுத்தாமல், இரண்டு, மூன்று வண்ணங்களை ஒன்றிணைத்து, தயாரித்தது ஆடைவடிவமைப்பாளரின் உத்தி. இது பாத்திரத் தன்மையையும், அதனது குணாம்சத்தையும், வாழும் சமூகப் பின்னணியினையும் வெளிப்படுத்தி நிற்கின்றது எனலாம்.

ஒப்பனை, அணிகலன்கள் எந்தளவு பெரியதொரு மூலகங்களாகத் திகழ்கின்றதோ, அதே அளவு உடையமைப்பும் முக்கியம் பெற்று விளங்குகின்றது. ஒரு நாடகத்தில் இடம்பெறும் பாத்திரங்கள் அவை அணிந்திருக்கும் உடை மூலம் அவற்றின் முழுமையான பின்னணியை வெளிப்படுத்தி நிற்கும். இராவணேசனிலும் இத்தன்மை கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இங்கு வடிவமைக்கப்பட்டிருக்கும் உடை, அதன் நிறம், material, என்பன பாத்திரப் பின்புலத்தை சுட்டி நிற்கின்றது எனலாம்.

இராவணேசனில் அனைத்து பாத்திரங்களின் உடைகளும் பட்டுக் கலந்த cotton சேலைகளால் வடிவமைக்கப்பட்டிருந்தன. இராவணேசன், மண்டோதரி, இந்திரஜித், கும்பகர்ணன் ஆகிய பாத்திரங்கள் மாத்திரம் பட்டுக் கலந்த cotton சேலைகளால் வடிவமைக்கப்பட்ட உடையை அணிய, ஏனைய பாத்திரங்கள் யாவும் தனி cotton சேலைகள் மூலம் வடிவமைக்கபட்ட ஆடைகளையே அணிந்திருந்தனர்.

ஆடைகளிலும் ஒரு வண்ணம் மாத்திரம் பயன்படுத்தப்படாமல், வண்ணக் கலப்புகள் இடம்பெற்றிருந்தன. சிவப்பு, பச்சை, வெள்ளை, மஞ்சள், கபிலம், சாம்பல், இளஞ்சிவப்பு,

இளமஞ்சள், இளநீலம், செம்மஞ்சள் ஆகிய பிரகாசமான நிறங்கள் உடையமைப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டது. அனைத்து பாத்திரங்களுக்குமே பாவாடை, மேல்த்துண்டு, குறுக்குத்துண்டு என மூன்றாகப் பிரிக்கப்பட்ட ஆடையினையே அணிந்திருந்தனர். இது கரப்புடுப்புப் பாணியில் வடிவமைக்கப்பட்டிருந்தது. அதாவது வடமோடிக் கூத்தில் சேலையினை சுற்றிச் சுற்றிக் கட்டுவர். இதுவே கரப்புடுப்பு எனப்பட்டது. ஆனால் 2000களுக்குப் பின்னர் வந்த ஆற்றுகைகளில் பயன்படுத்தப்பட்ட ஆடையானது கரப்புடுப்பு போன்று சேலையினை வெட்டி, மூன்று சுற்றுக்கள் (தட்டுக்கள்) வரும்படியாகத் தைத்து பாவாடை போன்று வடிவமைக்கப்பட்டது. இது பார்வைக்கு கரப்புடுப்பின் உண்மைத்தன்மையினை வெளிப்படுத்தி நிற்கின்றது.

இராவணனுக்கு பச்சை, சிவப்பு, இளமஞ்சள் சேர்ந்த ஆடையும், கும்பகர்ணனுக்கு சாம்பல், இளமஞ்சள் சேர்ந்த ஆடையமைப்பும், இந்திரஜித்துக்கு இளஞ்சிவப்பு, இளமஞ்சள், இளநீலம் ஆகியவை சேர்ந்த ஆடையமைப்பும், மண்டோதரிக்கு செம்மஞ்சள், கபிலம் சேர்ந்த ஆடையமைப்பும், இராமன், இலக்குமணன் மற்றும் வானரப்படைகளான அனுமான், அங்கதன், நீலன் ஆகியோருக்கு கபில நிற (dark & light) ஆடையமைப்பும் வடிவமைக்கப்பட்டது. மேலும் எடுத்துரைஞருக்கு பச்சை நிற ஆடையும், தேரோட்டி, ஆலவட்டம் பிடிப்போர், குடை பிடிப்போன், முரசறைவோன் ஆகியோருக்கு சிவப்பு, பச்சை, கபிலம் சேர்ந்த ஆடையமைப்பும், தட்டி தாங்குவோருக்கு சாம்பல், சிவப்பு கலந்த ஆடையும் வடிவமைக்கப்பட்டிருந்தது. பாத்திரங்களுக்கிடையிலான பொருத்தப்பாடுகள் இவ் ஆடை வடிவமைப்பின் மூலம் தெட்டத் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. அதாவது யக்ஷ குலத்தவர்களான இராவணன், மண்டோதரி, கும்பகர்ணன், இந்திரஜித் ஆகியோரது உடையில் பயன்படுத்தப்பட்ட வண்ணங்கள் ஒன்றோடொன்று தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. அதே போன்று இராமன், இலக்குமணன், அனுமான், அங்கதன், நீலன் ஆகியோரது உடையில் பயன்படுத்தப்பட்ட வண்ணங்களும் ஒன்றோடொன்று தொடர்புபட்டுக் காணப்படுகின்றன. இரு குழுக்களும் உடையமைப்பின் மூலம் வேறுபடுத்திக் காட்டப்பட்டாலும், ஒன்றுடனொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தது எனலாம். இராவணன் குடும்பத்தார் அரச குடும்பத்தினர் என்பதற்கு சான்றாக பிரகாசமான, கவர்ச்சியான நிறங்களும், இராமன் குழுவினர் வனவாசத்தினர் என்பதைக் குறிக்குமுகமாக இயற்கையோடு சேர்ந்த சாதாரண நிறங்களும் மிகவும் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. திருமதி. வாசுகி ஜெயசங்கர் அவர்கள் உடையமைப்பினை வடிவமைத்திருந்தார். உடை விதானிப்பாளரது கை வண்ணமும், கை தேர்ந்த உத்தியும் இன்று இராவணேசன் நாடகம் உயர் நிலை பெற்று விளங்குவதற்கு காலாய் அமைந்துள்ளது.

கம்ப இராமாயணத்தில் ஒரு பகுதியான யுத்த காண்டத்தினை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட இந்த இராவணேசன் வடமோடி நாடகமானது வடமோடிக் கூத்தில் ஒரு பரிசோதனை என்றும் கூறலாம். அந்தளவிற்கு பாத்திர உருவாக்கம், குணாதிசய வளர்ச்சி, தனித்துவமான ஒப்பனை, மரபு தழுவிய ஆனால் நவீன சிந்தனை சார்ந்து தயாரிக்கப்பட்ட உடையமைப்பு என்பவற்றினைத் தன்னகத்தே உள்ளம்சமாகக் கொண்டு சிறப்புற்று 60 கள் தொடக்கம் 2013 வரை ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றது எனலாம்.அதே நேரம் இராவணேசனானது தன்னகத்தே கொண்டுள்ள ஒப்பனை, உடை ஆகியவற்றில், ஆரம்ப காலம் தொட்டு இன்று வரை

அதன் வண்ணம், வடிவமைக்கபட்ட விதம் சார்ந்து இந்திய அரங்குகளினுடைய ஒரு தாக்கத்தைக் கொண்டிருப்பதுவும் , ஒரு நாடக நோக்கு சார்ந்த அரங்க கண்ணோட்டத்தை மையமாக வைத்து நாடக நெறியாளரும், ஓவியரும் இணைந்து செயற்பட்டிருப்பதுமே இதனது வெற்றியாகும்.

## சான்றாதாரங்கள்


❖ புத்தகங்கள்

- இராவணேசன்(வடமோடி நாடகம்) - மௌனகுரு.சி.- விபுலம் வெளியீடு- 1998.
- அரங்கவியல் - சக்திப்பெருமாள், சரோஜா.வே - காவ்யா பதிப்பகம் - 1998.

❖ நேர்கண்டோர்

- பேரா.சி.மௌனகுரு அவர்களுடனான கலந்துரையாடல்.
- ம. சுகன்யாவுடனான கலந்துரையாடல்.
- விரிவுரையாளர் சந்திரகுமாருடனான கலந்துரையாடல்.

❖ பேரா.சி.மௌனகுருவின் மூலமாகத் திரட்டப்பட்ட புகைப்படங்கள்.

❖ 2010, 2012 ஆற்றுகைகளில் பங்குபற்றிய எனது அனுபவம்.

❖ 2010, ஜனவரி பாலித அபேலால் அவர்களால் நடாத்தபட்ட ஒப்பனை பற்றிய பயிற்சிப்பட்டறை.

❖ 2010 ஆம் ஆண்டு திருமதி வாசுகி ஜெயசங்கர் அவர்களால் உடை வடிவமைக்கப்பட்ட போது, உதவியாளராக இருந்த எனது அனுபவம்.

# கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை நடாத்திய கலை நிகழ்வுகளை ஆவணப்படுத்தல் (1993 – 2005)

அபிராமி தர்மேந்ரா

## கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வரலாறு

கிழக்கிலே உள்ள உயர் கல்வி நிலையங்களில் கிழக்குப்பல்கலைக்கழகம் மிகவும் முக்கியமானது. இது மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலையில் அமைந்துள்ளது. இது 1981ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இன்று வரை இயங்கி வருகின்றது. கிழக்குப்பல்கலைக்கழக உருவாக்கத்தில் முன்னாள் அமைச்சர் C.W. தேவநாயகம் அவர்கள் மிகவும் முக்கியமானவர். ஆரம்பத்தில் கிழக்குப்பல்கலைக்கழகமானது வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் பல்கலைக்கழக கல்லூரியாக ஆரம்பிக்கப்பட்டது. அப்போது இது தனிப் பல்கலைக்கழகமாக இயங்காமல் பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த பல்கலைக்கழகமாக செயற்பட்டது. இங்கு விவசாய பீடம், விஞ்ஞான பீடம் ஆகிய இரு பீடங்களுமே ஆரம்பப் பீடங்களாக இருந்து பின்னரே 1986ம் ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாக கிழக்குப்பல்கலைக்கழகம் எனும் பெயரில் இயங்குகின்றது.

1960 களிலேயே திருகோணமலை நிலாவெளிப் பகுதியில் கிழக்கிலங்கையில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவுவதற்கு இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் முயற்சித்த போதும் நிதிப்பிரச்சனையால் கைவிடப்பட்டது.

கிழக்குப்பல்கலைக்கழகத்தினைப் பொறுத்த மட்டில் நிதி மற்றும் வளவாளர்கள் பற்றாக்குறை காணப்பட்டாலும் கிழக்கில் உள்ள ஒரு முக்கியமான ஆய்வு மையமாக விளங்குகின்றது. மேலும் இங்கு தமிழ், ஆங்கில மொழியில் விரிவுரைகள் இடம்பெறுகின்றன.

இன்று விவசாய விஞ்ஞான பீடம், விஞ்ஞான பீடம், கலை கலாச்சார பீடம், வர்த்தக முகாமைத்துவ பீடம், சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடம் ஆகிய பீடங்களைக் கொண்டு கிழக்குப்பல்கலைக்கழகமானது செயற்பட்டு வருகின்றது.

இன்று திருகோணமலை வளாகம், சுவாமி விபுலானந்தா அழகியற்கற்கைகள் நிறுவகம், மருத்துவ பீடம் ஆகிய போதனைப் பீடங்களாக ஆக்கப்பட்டு இன்றுவரை தமிழ், சிங்களம், முஸ்லிம் இனத்தவர்கள் இணைந்து கற்கின்ற ஒரு பல்கலைக்கழகமாக செயற்பட்டு வருகின்றது.

## கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் வரலாறு

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையானது 1991ம் ஆண்டு இயங்க ஆரம்பித்தது. முதலாவது நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள். இதனூ டே கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையானது தனது வளர்ச்சிப் பாதையில்

பயணிக்க ஆரம்பித்தது. 1991ம் ஆண்டு கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளராக அருந்ததி அவர்கள் நியமிக்கப்பட்டார். ஆரம்பத்தில் பேராசிரியர் சி.மௌனகுருவும் அருந்ததியுமே நுண்கலைத்துறைசார் விரிவுரையாளர்களாக விளங்கினர். பின்னர் 1992ம் ஆண்டு திரு.பா.சுகுமார் உதவி விரிவுரையாளராக இணைக்கப்பட்டார். இவரைத் தொடர்ந்து பாலசறோஜினியும் இணைக்கப்பட்டார். அடுத்த கட்டமாக கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை 1995ம் ஆண்டு திரு.சி.ஜெய்சங்கரையும் உதவி விரிவுரையாளராக இணைத்துக்கொண்டது. திரு.பா. சுகுமாரும், திரு. சி. ஜெய்சங்கரும் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பாலசுகுமார் தமிழ் மொழித்துறை மாணவர். ஜெய்சங்கர் நுண்கலைத்துறை மாணவர். இவர்கள் இணைக்கப்பட்ட பின்னரே கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை தனது நாடக செயற்பாடுகளில் துரித வளர்ச்சி கண்டது.

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையானது 1993ம் ஆண்டு தொடக்கம் 1998ம் ஆண்டு வரை இருவருடம் பொதுக் கற்கை நெறியாகவும் இரண்டாம் வருடம் சிறப்புக் கற்கை நெறியாகவும் அமையப்பெற்றிருந்தது. 1998ம் ஆண்டுக்குப் பின்னர் முதலாம் வருடம் பொதுக்கற்கை நெறியாகவும் இரண்டாம் வருடத்தில் தகுதி அடிப்படையில் சிறப்புக் கற்கைக்கு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர். இதனடிப்படையில் 1996ம் ஆண்டு நுண்கலைத்துறையில் சிறப்புப் பட்டம் பெற்ற முதலாவது மாணவர் தொகுதி வெளியேறியது.

நுண்கலைத்துறைப் பாட நெறிக்குரிய பாடத்திட்டமானது யாழ் பல்கலைக்கழக நுண்கலைத்துறை பாடநெறியையும் களனி நுண்கலைத்துறை பாடநெறியையும் அடிப்படையாக் கொண்டே தயாரிக்கப்பட்டது. இப் பாடத்திட்டங்களை யாழ் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு ஆகிய இருவரும் இணைந்து தயாரித்தனர். ஆரம்ப காலத்தில் நுண்கலைத்துறை விரிவுரையாளஉகள் பற்றாக்குறை காரணமாக நுண்கலையும் நாடகமும் அரங்கியலும் இணைந்த பாட நெறியாகவே இடம் பெற்றது. பேராசிரியர் சி. மௌனகுரு நாடகமும் அரங்கியலையும் அருந்ததி நுண்கலையுடன் இணைந்த பாடங்களையும் கற்பித்தனர். ஆரம்ப காலகட்டத்தில் நுண்கலைத்துறையில் கோட்பாட்டு ரீதியான கற்பித்தல் முறையே இடம்பெற்றது. கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையானது நுண்கலைத்துறையில் சிறப்புப் படிப்பினை மேற்கொண்ட மாணவர்களது தகுதி அடிப்படையில் அவர்களை உதவி விரிவுரையாளர்களாக இணைத்துக் கொண்டது. அதனடிப்படையில் 1996ம் ஆண்டு சு. சிவரெத்தினம், வ. இன்பமோகன் போன்றோர் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் முதலாவது உதவி விரிவுரையாளர்களாக சேர்க்கப்பட்டனர். 1998ம் ஆண்டு நுண்கலைத்துறையானது முதுகலைமானி கலாநிதிப் பட்டப்படிப்பு நெறியினை அறிமுகப்படுத்தியது. இதற்கூடாக சி. ஜெய்சங்கர், ரவிச்சந்திரா, கை.திலகநாதன் போன்றோர் தமது முதுகலைமானி பட்டத்தினை பூர்த்தி செய்து கொண்டனர்.

பேராசிரியர் சி. மௌனகுருவினைத் தொடர்ந்து 2004ம் ஆண்டு சிரேட்ட விரிவுரையாளராகக் கடமையாற்றிய பாலசுகுமார் அவர்கள் நுண்கலைத்துறைத் தலைவராக செயற்பட்டு பல நுண்கலைத்துறை சார்ந்த செயற்பாடுகளை முன்னெடுத்தார்.

இன்று கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவராக கலாநிதி சி.ஜெய்சங்கர் செயற்பட்டு வருகின்றார். கலாநிதி வ.இன்பமோகன், கு. ரவிச்சந்திரன், சு. சந்திரகுமார், பா.துஷ்யந்தி ஆகியோர் இவரிற்கு கீழ் நிரந்தர விரிவுரையாளர்களாக இணைக்கப்பட்டு செயற்பட்டு வருகின்றனர்.

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையில் பட்ட மேற்படிப்பு அலகுகளும் உருவாக்கப்பட்டுள்ளது. இதில் நாடகமும் அரங்கியலும், நுண்கலையியல் பாடங்களும் முதுமானி (MA), முதுதத்துவமானி (Mphil), கலாநிதி (Phd) பட்ட ஆய்வுகளும் முன்னெடுக்கப்படுகின்றன. அத்தோடு இத் துறை சார்ந்த பல காத்திரமான செயற்பாடுகளையும் முன்னெடுத்து வருகின்றது.

## கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் நாடக செயற்பாடுகள்

நுண்கலைத்துறையினரின் நாடக செயற்பாடுகள் பற்றி நோக்குகையில் அதனை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களது நாடக செயற்பாடுகள், திரு. பா. சுகுமார் அவர்களது நாடக செயற் பாடுகள் திரு.சி.ஜெய்சங்கர் அவர்களின் நாடக செயற்பாடுகள், உதவி விரிவுரையாளர்களது நாடக செயற்பாடுகள் என நோக்கலாம்.

அந்த வகையில் பேராசிரியர் சி.மௌனகுரு கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறைக்கூடாக கண்ணகி குளிர்த்தி (1993), புதியதொரு வீடு (1994), கிழக்கு நடனம் (1995), இன்னிய அணி (1998), இராவணேசன் நாடகம் (2001), கிழக்கிசை (2001), வடமோடி தென்மோடி ஆட்ட அறிமுகம் (2002), கூத்துக்கச்சேரி, மேளப்பேச்சு (2002), கிழக்கிசைக் கோலங்கள் (2003), லயம் (2005) போன்ற நிகழ்வுகளை நிகழ்த்தியுள்ளார்.

திரு.பா.சுகுமார் அவர்கள் நுண்கலைத்துறைக்கூடாக பாரதி பிடித்த தேர்வடம் (1995), புழுவாய் பிறக்கினும் (1995), செம்பவளக்காளி (1997), ஆற்றைக்கடத்தல் (1998), கருஞ்சுளி, அநீதிகள் (1998), கொங்கைத்தீ (1999), குறிஞ்சிப்பாட்டு (2005) போன்றவற்றை நிகழ்த்தியுள்ளார்.

திரு.சி.ஜெய்சங்கர் அவர்கள் நுண்கலைத்துறைக்கூடாக விளையாட்டு(1998), நவீன பஸ்மாசூரன் (2000), The flightless butter flies (2001), Tears of the child (2002), நிராகரிக்க முடியாதபடி போன்றவற்றைத் தயாரித்துள்ளார்.

உதவி விரிவுரையாளர்களது நாடக செயற்பாடுகள் பற்றி நோக்குகையில் சு. சீவரெத்தினம் தீர்வு (2000), அ. விமலராஜ் அவளுக்கென்று (2000), கு. ரவிச்சந்திரன் தேவலோகயானை (2002), நே. பிரியந்தினி மீண்டும் தொடங்கும் மிடுக்கு (2002), சி. தயாபரன் எவடம் எவடம் (2005), து. கௌரீஸ்வரன் சுனாமிக்குப் பின் (2005), சு. சந்திரகுமார் அரசனின் வருகை (2005) போன்ற தயாரிப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

நுண்கலைத்துறையானது இவை தவிர்ந்த பயிற்சிப்பட்டறைகள், கருத்தரங்குகள், கண்காட்சிகள், வெளியீடுகள், வார நிகழ்வுகள் போன்ற நிகழ்த்துகை சார்ந்த செயற்பாடுகள் நிகழ்த்துகை சாராத செயற்பாட்டிலும் ஈடுபட்டு வந்தமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## பேராசிரியர் சி. மௌனகுருவும் நுண்கலைத் துறை சார்ந்த செயற்பாடுகளும்

பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் 1991ம் ஆண்டு இணைந்து செயற்படத் தொடங்கினார். இவரே முதலாவது நுண்கலைத்துறைத் தலைவருமாவார். இவர் கலை கலாச்சாரப்பீடப் பீடாதிபதியாக இருந்த (1996ம்) ஆண்டிலே உலக நாடக தின விழாவானது முதன் முறையாக கிழக்குப்பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினரால் கொண்டாடப்பட்டது. முதலாவது உலக நாடக தின விழாவிற்கு தலைமை தாங்கியவரும் இவரே.

நுண்கலைத்துறையினரின் தயாரிப்புக்களாக பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் பாரிய தயாரிப்புக்களை மேற்கொண்டுள்ளார்.

1. கண்ணகி குளிர்த்தி - 1993
2. புதியதொரு வீடு -1994
3. கிழக்கு நடனம் -1995
4. இராவணேசன் நாடகம் - 2001 ஆம் ஆண்டு
5. கிழக்கிசை - 2001 ஆம் ஆண்டு
6. வடமோடி தென்மோடி ஆட்ட அறிமுகம் - 2002 ஆம் ஆண்டு
7. மேளப்பேச்சு - 2002 ஆம் ஆண்டு
8. லயம் - 2005 ஆம் ஆண்டு

### கண்ணகி குளிர்த்தி

கண்ணகி அம்மன் சடங்கில் பாடப்படும் பாடல்களை ஓர் ஒழுங்கமைப்பிற்குள் கொண்டு வந்து அதற்காக உடுக்கு சல்லரி மத்தளம் சிலம்பு வயலின் போன்ற இசைக்கருவிகளையும் ஒன்று சேர்த்து இசைத்து வழங்கப்பட்ட தொகுப்பே கண்ணகி குளிர்த்திப் பாடல்கள் ஆகும்.

### புதியதொரு வீடு

பேராசிரியர் மௌனகுரு அவர்களால் 1994 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட நாடகமாகும். இதில் பா.சுகுமார், கிருபாகரன் போன்ற பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் நுண்கலைத்தறை மாணவர்களும் நடித்திருந்தனர். இதுவே மட்டக்களப்பில் மேடையேற்றப்பட்ட முதலாவது ஒயிலாக்க நாடகமாகும்.

### கிழக்கு நடனம்

கிழக்குப் பிராந்தியத்தில் ஆடப்படும் பறைமேளம், வசந்தன், மகிடி, வடமோடி, தென்மோடி போன்ற ஆட்டக்கோலங்களை ஒன்று சேர்த்து ஒரு தொகுப்பாக உருவான நடனமே கிழக்கு நடனமாகும். இம் முயற்சியானது 1995ம் ஆண்டு முன்னெடுக்கப்பட்டது.

### இன்னிய அணி

1998ம் ஆண்டு தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்தும் வகையில் பல்கலைக்கழக மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அணியே இன்னிய அணியாகும். இது 1999ம் ஆண்டு பட்டமளிப்பு விழாவிற்கே முதன்முறையாக ஆடை வடிவமைப்புக்களுடன் வாத்தியங்கள்

இசைக்கப்பட்டு அளிக்கை செய்யப்பட்டது. உலக நாடக தின விழாவின் தொடக்க நாள் நிகழ்வாகவும், இறுதி நாள் தலைக்கோல் விருது கௌரவிப்பின் போதும் பாரம்பரிய இன்னிய அணி இசைக்கப்படும்.

**இராவணேசன் நாடகம்**

பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1964 களில் தயாரித்த நாடகமே இராவணேசன் ஆகும். இதில் பிரதான கதாபாத்திரமான இராவணன் வேடம் தரித்தவர் பேராசிரியர் சி.மௌனகுரு இவர் 2001 ஆம் ஆண்டில் ஆடல், பாடல், நடிப்பு, உணர்வு வெளிப்பாடு, நாடக அளிக்கை முறை போன்றவற்றில் இராவணேசன் நாடகத்தினை இன்னொரு தளத்திற்கு முன்னேற்றும் முயற்சியாக இதைத் தயாரித்தார்.

**கிழக்கிசை**

2001 ஆம் ஆண்டு உலக நாடக தின விழாவில் ஈழத்தில் கிழக்குப் பகுதியில் பாரம்பரியமாக வழக்கில் உள்ள இசை வடிவத்தின் தொகுப்பாக இது அமைந்தது. சடங்கு, தொழில், பொழுதுபோக்கு, வசந்தன், வடமோடி, தென்மோடி, கூத்திசைகளையும் தொகுத்து ஓரிடத்தே சுவைபட அளிக்கை செய்யப்பட்டது. இதில் காவியம், உருவேற்றம், மாரியம்மன் நடை, மாரியம்மன் சிந்து, மாரியம்மன் வீதி உலா, காத்தவராயன் கும்மி, காவடிப்பாடல், ஏர்ப்பாடல், விளையாட்டுப்பாடல், வேடிக்கைப்பாடல், கொம்பு விளையாட்டுப்பாடல், முசுத்துவசந்தன் பாடல், காதல் பாடல், நொண்டி நாடப்பாடல், வடமோடிக் கூத்துப்பாடல், வாழிபாடல் போன்ற பாடல்களின் தொகுப்பாக அமைந்தது.

**வடமோடி தென்மோடி ஆட்ட அறிமுகம்**

2002 ஆம் ஆண்டு உலக நாடக தின விழாவில் வடமோடி, தென்மோடி ஆட்டங்களுக்குரிய தாளக்கட்டுக்களை அறிமுகம் செய்த பின்னர் ஒவ்வொரு தாளக்கட்டுக்குரிய ஆட்டமுறைகள் ஆடிக் காட்டப்பட்டன. இதில் நுண்கலைத்துறை விரிவுரையாளர்களும் மாணவர்களும் பங்கேற்றனர்.

**மேளப்பேச்சு**

2002 ஆம் ஆண்டு உலக நாடக தின விழாவில் இடம் பெற்ற நிகழ்வாகும். தோல்வாத்தியங்களான பறை, தப்பட்டை, மத்தளம், உடுக்கு, என்பனவற்றன் இசையும் சல்லரி, சிலம்பு போன்ற கஞ்சக் கருவிகளின் இசையும் ஒன்றோடு ஒன்று இணைந்து ஒலிக்கும் நிகழ்வாக இடம்பெற்றது.

**லயம்**

2005 ஆம் ஆண்டு உலக நாடக தின விழாவில் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்தும் நோக்கில் கிறிஸ்தவ தவக்கால வியாகுலப் பிரசங்கம், இஸ்லாமியரின் பக்கீர்பைத், திருக்கல்யாணப் பாடல்கள், இன்னிய அணி, தமிழ்மக்களின் பாரம்பரிய இசைவடிவங்கள், பாரம்பரிய நடனங்கள், தொழிற்பாடல்கள், பொழுதுபோக்கு இசை, விளையாட்டுப் பாடல்கள், மேளப் பேச்சு, பறைமேள முளக்கம், வடமோடித் தாளத்தில் சிங்கள மக்களின் கண்டிய நடனம், பாதரட்ட நடனம், தமிழரின் பரதம், இஸ்லாமியரின் கழிகம்பு நடனம், தென்மோடி ஆட்டம் ஆகியன இணைந்து ஆடும் வகையில் லயம் நிகழ்த்துகை அளிக்கை செய்யப்பட்டது.

இத்தகையதான கலைச் செயற்பாடுகள் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களால் நுண்கலைத்துறையோடு இணைந்து படைக்கப்பட்டவையாகும். இத்தகைய செயற்பாடுகளில் பேராசிரியரோடு உறுதுணையாக திரு.பா.சுகுமார், திரு.ஜெய்சங்கர் போன்றோர் இருந்தனர்.

## திரு.பா.சுகுமார் அவர்களும் நுண்கலைத் துறை சார்ந்த செயற்பாடுகளும்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவராகவும் கலை கலாசார பீடாதிபதியாகவும் இவர் கடமையாற்றினார். திரு.பா.சுகுமார் அவர்கள் 1992ம் ஆண்டு உதவி விரிவுரையாளராக கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டார். உலக நாடக தினமானது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கொண்டாடப்படுவதற்கு மூலவிதையாய் இருப்பவர் இவராவார்.

நுண்கலைத்துறையினூடாக இவர் மேற்கொண்ட தயாரிப்புக்கள்

1. பாரதி பிடித்த தேர்வடம் - (1995)
2. புழுவாய் பிறக்கினும் - (1997)
3. செம்பவளக்காளி - (1997)
4. ஆற்றைக் கடத்தல் - (1998)
5. அநீதிகள் - (1998)
6. கொங்கைத் தீ - (1999)
7. குறிஞ்சிப்பாட்டு - (2005)

### பாரதி பிடித்த தேர்வடம்

வீதி நாடகமாக அரங்கேற்றப்பட்ட இந் நாடகமானது உடலியல் சார்ந்த இயக்கத்திற்கு முக்கியத்துவம் அளிப்பதாக அமைந்திருந்தது.

### புழுவாய் பிறப்பினும்

யுத்தம் எத்தகைய பாதிப்புக்களை, காயங்களை மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றி பேசும் நாடகமாகும். அதாவது யுத்தத்தினால் எமது நாட்டு மக்கள் எத்தகைய துன்பமடைந்தனர் என்பதை சித்தரிப்பதாகும்.

### செம்பவளக்காளி

இந்திய மரபிலான தாசி குலத்தவரின் பிரச்சனைகள் கூறும் நாடகமாகும்.

### ஆற்றைக் கடத்தல்

பெண் விடுதலை பேசுவதாக அமைந்த நாடகமே ஆற்றைக் கடத்தல் ஆகும். பெண்கள் எத்தகைய தடைக்கற்களை தாண்டுவதாக அமையப் பெற்றுள்ளது என்பதனை வெளிப்படுத்தும் நாடகமாகும்.

### அநீதிகள்

மனித உரிமைகள் தினத்திற்காக மேடையேற்றப்பட்ட குறியீட்டு நாடகமாகும்.

**கொங்கைத் தீ**

பத்தினித் தெய்வமாகிய கண்ணகியினை அடிப்படையாகக் கொண்ட நாடகமாகும். யுத்தமும், துன்பமும், பயமும் நிறைந்த வாழ்வில் எதிர்த்து நிற்கும் எழுச்சிக் குரலாக, அநீதிக்கு எதிர் குரலாக செயற்படும் பெண்ணை மையப்படுத்திய நாடகமாகும்.

**குறிஞ்சிப்பாட்டு**

தமிழர் பாரம்பரியத்தின் தொன்மை வாய்ந்த நாடக மரபுகளை வெளி உலகிற்கு காட்டும் முயற்சியாக குறிஞ்சிப்பாட்டு அமைகின்றது.

## திரு. சி. ஜெய்சங்கர் அவர்களும் நுண்கலைத் துறை சார்ந்த செயற்பாடுகளும்.

இன்றைய நுண்கலைத்துறைத் தலைவராக விளங்கும் கலாநிதி சி.ஜெய்சங்கர் அவர்கள் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் நாடக செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க பங்காற்றியவர். இவர் விரிவுரையாளராக கடமையாற்றிய கால கட்டங்களில் உலக நாடக தின விழாவிற்கான நாடக தயாரிப்புகளில் ஈடுபட்டிருந்தார். இந்த வகையில் இவர் உலக நாடக தின விழாவிற்கு தயாரித்த நாடகங்கள்.

1. விளையாட்டு - 1998 ஆம் ஆண்டு
2. நவீன பஸ்மாசூரன் - 2000 ஆம் ஆண்டு
3. நஞ்சினில் விளையவோ - 2000 ஆம் ஆண்டு
4. The flightless Butterflies - 2001 ஆம் ஆண்டு
5. Tears of the child - 2002 ஆம் ஆண்டு

**விளையாட்டு**

படித்து பட்டம் பெற்று வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளின் மனப் போராட்டங்களும் அதனது வெளிப்பாடுகளையும் சித்தரிப்பதாக விளையாட்டு நாடகம் அமைகின்றது.

**நவீன பஸ்மாசூரன்**

இரசாயன ஆயுதங்களால் சமூகத்திற்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கூறும் மோடிமைப்பாணியில் அமைந்த நாடகமாகும்.

**நஞ்சில் விளையவோ**

கிருமி நாசினிகளின் பாவனைகளை தவிர்த்து உள்ளூர் உற்பத்திகளை ஊக்கப்படுத்தும் கருப்பொருளைக் கொண்டது.

### The flightless butterflies

“நீ அழைத்தது போல் ஒரு ஞாபகம்” எனும் து.கௌரிபாலன் அவர்களது சிறுகதையினை நாடகமாக தயாரிக்கப்பட்டது.

### Tears of the Child

இது “பிள்ளை அழுத கண்ணீர்” நாடகத்தின் ஆங்கில வடிவமாகும். மக்கள் மத்தியில் மரநடுகை பற்றியதான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நாடகமாகும். இது சிறுவர் நாடக வகையைச் சார்ந்தது.

## உதவி விரிவுரையாளர்களது நுண்கலைத்துறை சார்ந்த செயற்பாடுகள்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை உதவி விரிவுரையாளர்கள் பல படைப்புக்களை உருவாக்கினர். ஒவ்வொருவரும் தாம் பெற்ற அனுபவங்களின் ஊடு ஒவ்வொரு நாடகங்களை நெறிப்படுத்தியிருந்தனர். அதனடிப்படையில்

சு. சிவரத்தினம் - 2000 ஆம் ஆண்டு "தீர்வு"
அ. விமலராஜ் - 2000 ஆம் ஆண்டு "அவளுக்கென்று"
க. ரவிச்சந்திரன் - 2002 ஆம் ஆண்டு "தேவலோகயானை"
நே. பிரியந்தினி - 2002 ஆம் ஆண்டு "மீண்டும் தொடங்கும் மிடுக்கு"(நடனம்)
சி. தயாபரன் - 2005 ஆம் ஆண்டு "எவடம் எவடம்"
து. கௌரீஸ்வரன் - 2005 ஆம் ஆண்டு "சுனாமிக்குப் பின்"
சு. சந்திரகுமார் - 2005 ஆம் ஆண்டு "அரசனின் வருகை"

### தீர்வு

சு.சிவரத்தினம் அவர்கள் இந்திரா பார்த்தசாரதியின் நாடகப்பிரதியை அடிப்படையாக வைத்து இலங்கையின் சமகால அரசியல் விடயங்களுக்குப் பொருந்தும் வகையில் நாடகம் தயாரித்திருந்தார். இது யதார்த்த பாணியில் அமைந்த நாடகமாகும்.

### அவளுக்கென்று

அ. விமலராஜ் அவர்கள் தயாரித்த நாடகமாகும். இது பெண்ணியம் சம்பந்தான பிரச்சனை கூறும் யதார்த்த நாடகமாகும்.

### தேவலோகயானை

கு. ரவிச்சந்திரன் அவர்கள் தயாரித்த நாடகமாகும். இது வேலு சரவணனின் நாடக பிரதியாகும். இந்நாடகமானது சிறுவர்களுக்காக வளர்ந்தோர்களால் நடிக்கப்பட்ட சிறுவர்நாடகமாகும். இந்நாடகத்தில் சிறுவர்களது ஆளுமையைத் தூண்டுவதாக கருப்பொருள் அமைந்தது.

### மீண்டும் தொடங்கும் மிடுக்கு

நே.பிரியந்தினி அவர்களால் மகாகவி பாரதியாரின் கவிதை வரிகளுக்கு புதிய ஆக்கத்தை வெளிப்படுத்தும் நிருத்தியநாடகமாகும். வேதனைகள், சோதனைகள் என்பவற்றை வெல்ல முயற்சிக்கும் மனிதனின் முயற்சி பற்றி வெளிப்படுத்தும் ஆக்கமாகும்.

### எவடம் எவடம்

சி. தயாபரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட நாடகமாகும். இது திரு.பா.சுகுமார் அவர்களின் நாடகமாகும். மனித நேயத்தினைத் தேடுவதாக விளையாட்டினூடு கதை சொல்லப்பட்டது.

### சுனாமிக்குப் பின்

து.கௌரீஸ்வரன் அவர்களால் தயாரிக்கப்பட்ட நாடகமாகும். இது ஓர் வீதி நாடகமாகும். சுனாமிக்குப் பின் ஏற்பட்ட அனுபவங்களுக்கூடாக தயாரிக்கப்பட்டது. சோதனைகளுக்கு உட்பட்ட போதும் மனித சமூகம் திருந்தாமல் இருப்பதை இந்நாடகம் சொல்லியது.

**அரசனின் வருகை**

சு. சந்திரகுமார் அவர்களது நெறியாள்கையில் உருவான நாடகமாகும். சமூகத்தில் நிலவும் வாழ்வியல் பிரச்சினைகள், சமகால நாட்டு நிலைமைகள் என்பவற்றினை கோமாளி பாத்திரங்களுக்கூடாக வெளிக்காட்டப்பட்டது.

பொதுவாக பார்க்கையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறைசார் நாடக அளிக்கைகளுக்கூடாக நவீன நாடகம், யதார்த்த நாடகம், பாரம்பரிய முறையில் அமைந்த நாடகம், சிறுவர் நாடகம், போன்ற நாடக வகைகளைப் பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாது ஈழத்து தமிழரின் நடப்பியல் பிரச்சனைகள், அரசியல் பிரச்சனைகள், மாணவர் பிரச்சனைகள், பெண்கள் பிரச்சனைகள் என பலதரப்பட்ட சமூகப்பிரச்சனைகளை வெளிக்காட்டவும் நாடக அளிக்கைகள் தவறவில்லை.

## கண்காட்சிகள்

கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் உலக நாடக தின விழா நிகழ்வின் ஒரு முக்கியமான தனி அம்சமாக திகழ்வது கண்காட்சி ஆகும். நுண்கலைத்துறையினரின் முதலாவது உலக நாடக தின விழாவிலும் கண்காட்சி இடம் பெற்றது. இக்கண்காட்சியில் நாடக நூல்கள், சஞ்சிகைகள் என்பன காட்சிக்கும் விற்பனைக்குமாக வைக்கப்பட்டிருந்தன. உலக நாடக தின விழாவில் கண்காட்சியின் ஆரம்பம் இவ்வாறாகவே அமைந்திருந்தது.

1998ம் ஆண்டு உலக நாடக தின விழாவில் கண்காட்சியானது தொடர்ந்து ஐந்து நாட்களுக்கு (23.03.98 - 27.03.98) இடம் பெற்றது. அதாவது அரங்கியல் தொடர்பான பொருட்காட்சியும் புத்தக கண்காட்சியும் இடம்பெற்றது. இதில் முகமூடிகள், ஒப்பனைகள், கூத்தில் பயன்பட்ட முடிகள் போன்ற பொருட்களும் புகைப்படங்கள், புத்தகங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

2000ம் ஆண்டு உலக நாடக தின விழாவின் போது முதலாம் நாள் தொடக்க விழாவின்போது கண்காட்சியானது திருமதி.தவமணிதேவி அருள்நந்தி (நூலகர், கிழக்குப்பல்கலைக்கழகம்) அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

2001ம் ஆண்டு 26.03.2001 தொடக்கம் 30.03.2001 வரை நுண்கலைத்துறைக் கலைக்கூடத்துள் அவைக்காற்றுகைக் கலைகள் தொடர்பான படக்காட்சி இடம்பெற்றது. இதற்கு பொறுப்பாளராக திரு.பா.சுகுமார் அவர்கள் காணப்பட்டார். திரைப்படக்கண்காட்சியினைப் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் திறந்து வைத்தார்.

2005ம் ஆண்டு நாடக அரங்கியல் கண்காட்சியினை பேராசிரியர் கே. குணசேகரன் (தலைவர், சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப்பள்ளி, புதுவைப் பல்கலைக்கழகம், பாண்டிசேரி, இந்தியா) அவர்கள் தொடக்கி வைத்தார்.

நுண்கலைத்துறையினரால் நடாத்தப்படும் அரங்கப்பொருட்களின் கண்காட்சியானது மாணவர்களது கைவண்ணங்களை வெளிப்படுத்தவும், அவர்கள் கோட்பாட்டு ரீதியாக அறிந்த விடயங்களை அனுபவம் மூலம் அறியவும் வாய்ப்பாய் அமைந்தது. ஈழத்துத் தமிழ் நாடக அரங்குடன் தொடர்புடைய அரங்கப் பொருட்கள், புகைப்படங்கள், அரங்கமாதிரிகள், வேடமுகங்கள், வாத்தியக்கருவிகள், நாடகநூல்கள், சஞ்சிகைகள் போன்ற பலதரப்பட்ட அம்சங்களின் தொகுப்பாக கண்காட்சி அமைந்திருந்தது.

அரங்கமாதிரிகள் என்னும் போது கீழைத்தேய, மேலைத்தேய அரங்கமாதிரிகள் இடம்பெற்றன. அதாவது கீழைத்தேய அரங்கமாதிரிகள் எனும் போது நாடக வரலாற்றுடன் தொடர்புடைய வகையில் புராதன மக்கள் இரவில் ஒன்று கூடி தீ மூட்டி அதனைச் சுற்றிவர நின்று ஆடிப்பாடி மகிழ்ந்த "புராதன அரங்கு" பாரம்பரிய மக்களின் கலையாக நிகழும் வடமோடி, தென்மோடி , பறைமேளக் கூத்து, நிகழ்த்தப்படும் " வட்டக்களரி" சோழர் கால தமிழ் நடன, நாடகங்கள் இடம்பெற்ற "தமிழ் அரங்கு" நாட்டிய சாத்திர விதிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கப்பட்ட "சமஸ்கிருத அரங்கு" சீன ஜப்பானிய அரங்குகளான நோ, பீஜிங் ஒபேரா, கபுக்கி போன்ற கீழைத்தேய அரங்கு மாதிரிகளும் மேலைத்தேய அரங்க மாதிரிகள் எனும்போது "கிரேக்க அரங்கு", கிரேக்கத்திலிருந்து வளர்ச்சி பெற்று விளங்கும் "உரோம அரங்கு" "எலிசபெத்தியன் அரங்கு" நவீன அரங்கான மூன்று பக்கம் அடைக்கப்பட்ட ஒரு பக்கப் பார்வையாளர்களைக் கொண்ட "படச்சட்ட அரங்கு" போன்ற அரங்க மாதிரிகள் றெஜிபோமினால் காட்சிக்காக செய்து வைக்கப்பட்டது.

அரங்கப் பொருட்கள் எனும் போது பாரம்பரிய வடமோடி கூத்துக்களுக்கு பயன்படுத்தும் கிரீடம், ஆயுதங்கள், போன்றனவும் வேடமுகங்கள் களி, காகிதம், பிளாஸ்ரோபரிஸ் போன்றவற்றினால் செய்யப்பட்டு வண்ணங்கள் பூசப்பட்டிருந்தன. இவை தவிர சிறுவர் நாடகங்களுக்குப் பயன்படுத்தப்படும் பறவைகள், மிருகங்கள் போன்ற உருவ அமைப்பிலும் வேடமுகங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டது. அத்தோடு தெருக்கூத்து, கதகளி, பாத்திரங்களது தன்மையிலான வெளிப்படுத்தும் வகையில் முகமூடிகளுக்கு ஒப்பனை செய்யப்பட்டு காட்சிக்கு வைக்கப்பட்டது.

கண்காட்சியில் நுண்கலைத்துறையானது ஆரம்பிக்கப்பட்டது முதல் இடம் பெற்ற நிகழ்வுகளின் ஆவணங்களான புகைப்படங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டது. இவற்றோடு பாரம்பரிய வாத்தியங்களான பறை, உடுக்கு, மத்தளம், சவணிக்கை, மேளம், கொம்பு, சங்கு, சல்லரி, சலங்கை, நட்டுவமேளம், தப்பட்டை போன்ற இசைக்கருவிகளும் கண்காட்சியில் இடம்பெற்றது.

இக்கண்காட்சியானது பல்கலைக்கழக மாணவரையும், பாடசாலை மாணவரையும் அதிக பயனடைய வைத்தது. ஒவ்வொரு மாணவனும் கண்காட்சிக்கான வேலைகளில் ஈடுபடுகையில் தன்னிடம் உள் தனித்திறமைகளை வெளிக்காட்டவும், திறமைகளை உள்வாங்கிக் கொள்ளவும் வாய்ப்பாய் அமைந்தது. அதனடிப்படையில் களரி கட்டும் அனுபவம், கோலம் போடுதல், அரங்கம் வடிவமைக்கும் விதம், அளவுப் பிரமாணம், அரங்க வரலாறு போன்ற பல்வேறு விடயம் தொடர்பான அறிவினைப் பெற வாய்ப்பாய் அமைந்தது. பாடசாலை மாணவர்களுக்கும் இது ஓர் அரிய வாய்ப்பாய் அமைந்தது. கோட்பாட்டு ரீதியான அறிவினை உடையவர்களுக்குப் பார்த்து அனுபவித்தல் ஊடாக தெளிவினையும் மனப் பதிவினையும் பெற வாய்ப்பளித்தது.

## கருத்தரங்கு

கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரின் உலக நாடக தின விழா நிகழ்வானது 1996ம் ஆண்டு கருத்தரங்கு நிகழ்வுடனே ஆரம்பமானது. கருத்தரங்கு உலக நாடக தின விழாவில் ஓர் அம்சமாக இடம்பெற ஆரம்பித்தது.

1996ம் ஆண்டு "நவீன அரங்கும் ஈழத்தமிழர் அரங்கும்" எனும் தலைப்பில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும், "நவீனத்துவமும் தமிழ் நாடகமும்" எனும் தலைப்பில் திரு.

சி.ஜெய்சங்கரம், "சிறுவர் நாடகமும் தமிழ் நாடகச் சூழலும்" எனும் தலைப்பில் திரு.பா.சுகுமார் அவர்களும், "மாற்று அரங்கும் பெண்ணியமும்" எனும் தலைப்பில் பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு அவர்களும் கருத்துரை வழங்கினர்.

1999ஆம் ஆண்டு இடம் பெற்ற கருத்தரங்கில் "மரபும் மாற்றமும்" எனும் தலைப்பில் பேராசிரியர் கா.சிவத்தம்பி தளவுரையினையும், "மரபும் மாற்றமும் தத்துவநோக்கில்" என்ற தலைப்பில் பேராசிரியர் சோ.கிருக்ஷ்ணராஜா அவர்களும், "ஈழத்து தமிழ் பா நாடகங்கள்" எனும் தலைப்பில் கலாநிதி எம்.ஏ.நுஃமான் அவர்களும், "மரபு மாற்றத்தில் பெண்நிலை அரங்கு" எனும் தலைப்பில் பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு அவர்களும் கருத்துரைகளை வழங்கினர்.

2000ஆம் ஆண்டு "21ஆம் நூற்றாண்டில் ஈழத்துத் தமிழ் அரங்கு எதிர் கொள்ளும் சவால்கள்" எனும் தலைப்பில் 6ஆம் நாள் நிகழ்வாக மட்டக்களப்பு BIRPP மண்டபத்தில் கருத்தரங்கு இடம்பெற்றது. இதில் பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு, திரு.க.சிதம்பரநாதன், திரு.க.சிறிகணேசன், திரு.சி.ஜெய்சங்கர், திரு.பா.சுகுமார், திரு.வெ.தவராஜா, திரு.இரா. நாகலிங்கம் (அன்புமணி), திருமதி.வாசுகி ஜெய்சங்கர் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

2005ஆம் ஆண்டு உலக நாடக தின விழாவில் "21ஆம் நூற்றாண்டை எதிர்கொள்வதில் அரங்கு ஆற்ற வேண்டிய பங்கு" எனும் தலைப்பில் கருத்தரங்கு இடம்பெற்றது. இத் தலைப்பில் இரு நாள் கருத்தரங்கு இடம்பெற்றது. 1ஆம் நாள் பேராசிரியர் சி.மௌனகுரு தலைமை தாங்கினார். கருத்தரங்க அறிமுக உரையினை திரு.சி.ஜெய்சங்கர் அவர்கள் நிகழ்த்தினார். சிறப்புரையினை திரு. பா. சுகுமார் அவர்கள் நிகழ்த்தினாா். கருத்துரைகளை திரு.இ.கிறிஸ்ரி, திரு.இதிரிஸ் A.P.M, செல்வி. விஜிகலா புவனேந்திரன், திரு. எஸ். தவராஜா ஆகியோர் வழங்கினர்.

2ஆம் நாள் கருத்தரங்கிற்கு சமூகவிஞ்ஞானத்துறை தலைவர் திரு.கிருஸ்ணமோகன் அவர்கள் தலைமைதாங்கினார். அறிமுகவுரையினை திரு. சி. ஜெய்சங்கர் அவர்களும் திறப்புரையினை பேராசிரியை சித்ரலேகா மௌனகுரு அவர்களும் சிறப்புரையினை பேராசிரியர் கே.ஏ.குணசேகரன் அவர்களும் நிகழ்த்தினார். கருத்துரைகளை திரு. அ. விமலராஜ், திரு. க. ரதிதரன், திரு. க. விஜயசேகர், திரு. இ. ராஜேந்திரன், திரு . ஜோன்சன் ராஜ்குமார், திருமதி. ஜெயரஞ்சினி ஞானதாஸ் ஆகியோர் வழங்கினர்.

பொதுவாக பார்க்கையில் கால மாற்றத்தின் போக்கில் கலைகள், பண்பாடுகள், சமூகம் என்பனவற்றின் போக்குகள் பற்றி பேசப்படுவதாக இக்கருத்தரங்குகள் காணப்பட்டன.

## கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறையினரால் நடாத்தப்பட்ட உலக நாடக தின விழா ஆற்றுகைகள்

### 1996ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்

- கண்காட்சியும் கருத்தரங்கும்.
  - "நவீன அரங்கும் ஈழத் தமிழர் அரங்கும்" - கலாநிதி சி.மௌனகுரு.
  - "நவீனத்துவமும் தமிழ் நாடகமும்" - திரு.சி.ஜெய்சங்கா்.
  - "சிறுவா் நாடகமும் தமிழ் நாடகச் சூழலும்" - திரு.பா.சுகுமாா்.
  - "மாற்று அரங்கும் பெண்ணியமும்" - திருமதி. சித்திரலேகா மௌனகுரு.

**1997ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- பறைமேளக் கூத்து
- கரகம்
- Hamlet – புனித மிக்கேல் ஆண்கள் உயர்தரப் பாடசாலை

**1998 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- பறைமேளக் கூத்து - களுதாவளை ஆனைக்குட்டி குழுவினர்
- கர்ணன் போர் - களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவினர்
- பிள்ளை அழுத கண்ணீர் - வந்தாறுமூலை கனிஸ்ட வித்தியாலயம்
- காட்டுக்குள்ளே திருவிழா - களுதாவளை மகா வித்தியாலயம்
- ஒற்றுமையின் சின்னம் - சிசிலியா பெண்கள் பாடசாலை
- முயலார் முயல்கிறார் - மகாஜனாக்கல்லூரி
- தென்மோடிக்கூத்து (அல்லி அர்ச்சுணா) - கன்னங்குடா கூத்துக் குழுவினர்
- Sperading the news - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- Hamlet - புனித மிக்கேல் ஆண்கள் உயர்தரப் பாடசாலை
- Riders of the sea - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- விளையாட்டு - கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத் துறை
- மங்கயராய்ப் பிறப்பதற்கே - படி கலாச்சார வட்டம் மட்டக்களப்பு
- ஆற்றைக் கடத்தல் - கிழக்குப்பல்கலைக்கழகம்

**1999ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- பறை மேளக் கூத்து - ஆனைக்குட்டி குழுவினர்
- வசந்தன் கூத்து - வந்தாறுமூலை கலைஞர்கள்
- மகிடி - வந்தாறுமூலை கலைஞர்கள்
- கவி - ஆரையம்பதி இராமகிருஷ்ண வித்தியாலயம்
- கரகம் - ஆரையம்பதி மகாவித்தியாலயம்
- மனிதன் தேடும் மனிதம் - சிவானந்தா வித்தியாலயம்
- புழுவாய் மரமாகி - விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயம்
- தாயுமாய் நாயுமானார் - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- Antegone - வின்சன்ட் மகளிர் பாடசாலை
- Chalk circle - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- Mad man on the roof - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- Othello - புனித மிக்கேல் ஆண்கள் உயர்தரப் பாடசாலை
- ஆரவல்லி நாடகம் - களுவன்கேணி பாரதி கலாச்சாரக்குழு
- வீமன் கமலக்கண்ணி கல்யாணம் (கூத்து) - களுதாவளை இந்து இளைஞர் மன்றக் கலைக்குழு
- Romeo & Juliet - அல்பியோன் அவைக்காற்று கலைக்கழகம்
- கொங்கைத் தீ - கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை

**2000 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- பறைமேளக் கூத்து - மாமாங்கம் குழுவினர், பிலாலிவேம்பு, வெல்லாவெளி
- பறைமேள தாளங்கள் - மாமாங்கம் குழுவினர்
- இராம நாடகம்(வடமோடி) - பழைய மாணவர் கலா மன்றம் மண்டூர்
- காவடி - திருகோணமலை சண்முகா வித்தியாலயம்
- நம்மைப் பிடித்த பிசாசுகள் - திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி
- லட்சுமி - கீழைத் தென்றல் கலா மன்றம் திருகோணமலை
- நஞ்சினில் விளையவோ(வீதி நாடகம்) - YMCA மட்டக்களப்பு
- கெங்கை அம்மன் - கிருஸ்ணா கலைக்கழகம் புதுக்குடியிருப்பு
- நிவாரணம் - நுண்கலைக்கழகம் மட்டிக்கழி மட்டக்களப்பு
- நாடகங்கள் - சூரியா கலாச்சாரக் குழு
- மாதொரு பாகம் - நாவலடி நாமகள் வித்தியாலயம்
- இருளும் விடிந்தது (நவீன நாட்டுக்கூத்து) - நாகஜோதி கலாமன்றம்
- Thakur's well - வின்சன்ட் மகளிர் தேசிய பாடசாலை
- Chalk circle - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- Hamlet - புனித மிக்கேல் ஆண்கள் உயர்தரப் பாடசாலை
- Deth is a dream - அல்பியோன் அவைக்காற்று கலைக்கழகம் மட்டக்களப்பு
- அவளுக்கென்று - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்
- தீர்வு - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்
- நவீன பஸ்மாசூரன் - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்

**2001 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- பறைமேளக் கூத்து - களுதாவளை பரசுராமன் குழுவினர்
- பண்பாட்டு இசை - கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை
- கழிகம்பு - அபுசாலி தற்காப்புக் குழு, ஏறாவூர்
- கபறிங் பைலா - பேகர் ஒன்றியம். மட்டக்களப்பு
- இது எமது படைப்பு (வீதி நாடகம்) - சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்
- காமன் கூத்து - புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு, பொகவந்தலாவை
- அருச்சுனன் தபசு - புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு, பொகவந்தலாவை
- பொன்னர் சங்கர் - புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு, பொகவந்தலாவை
- நாட்டார் இசை - புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு, பொகவந்தலாவை
- நவீன நாடகம் - புதிய பண்பாட்டு அளிக்கைக்குழு, பொகவந்தலாவை
- தாடகை வதம் - இந்துக்கல்லூரி, மட்டக்களப்பு
- விவாதம் - செங்கலடி மகா வித்தியாலயம்
- பார முறி விளையாட்டு - களுதாவளை இராமகிருஷ்ண வித்தியாலயம்
- கிழக்கிசை (இசை ஆரம்பம்) - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்
- The ploug and stars - புனித சிசிலியா பெண்கள் பாடசாலை
- The truth prevails - மீரா பாலிக்கா வித்தியாலயம், காத்தான்குடி
- The flightless butterflies - நுண்கலைத்துறை .கிழக்குப்பல்கலைக்கழகம்

- ❖ ஏன் இந்த விதியோ - மீரா பாலிக்கா வித்தியாலயம், காத்தான்குடி
- ❖ இராவணேசன் (வடமோடி நாடகம்) - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்

**2002 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- ❖ மேளக்கச்சேரி
- ❖ கூத்து
- ❖ பாடசாலை நாடகம்
- ❖ சிறுவர்நாடகம்
- ❖ மீண்டும் தொடங்கும் மிடுக்கு - நுண்கலைத்துறை
- ❖ தேவலோக யானை - நுண்கலைத்துறை
- ❖ மேளப்பேச்சு - நுண்கலைத்துறை
- ❖ வடமோடி தென்மோடி ஆட்ட அறிமுகம் - நுண்கலைத்துறை
- ❖ Tears of the child - நுண்கலைத்துறை, ஆங்கில போதனா பிரிவு

**2004 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- ❖ பறைமேள மத்தள முழக்கம்

**2005 ஆம் ஆண்டிற்கான ஆற்றுகைகள்**

- ❖ பறை மேளக்கூத்து - களுதாவளை பரசுராமன் குழு
- ❖ வாளவீமன் நாடகம் (தென்மோடி) - கண்ணகி கலைக்கழகம், கன்னாங்குடா
- ❖ சீதை சூப்பனகை வதை (மீளுருவாக்கிய வடமோடி கூத்து) - மட்டக்களப்பு சீலாமுனைக் கலைக்கழகம், மூன்றாவது கண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக்குழு
- ❖ வேண்டாம் என்று சொல்கின்றோம் (வீதி நாடகம்) - மூன்றாவது கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு
- ❖ கண்ணி வெடி கவனம் மக்காள் - செங்கலடி மத்திய கல்லூரி
- ❖ தேடய மங்கலம் (நடனம்) - சுவாமி விபுலாநந்த இசை நடனக் கல்லூரி
- ❖ நடன நாடகம் - சுவாமி விபுலாநந்த இசை நடனக் கல்லூரி
- ❖ இசைக்கோலங்கள் - சுவாமி விபுலாநந்தா இசை நடனக் கல்லூரி
- ❖ புதிதளித்தல் நடிப்பு (Improvisation Acting) - நுண்கலைத்துறை
- ❖ எவடம் எவடம் - இரண்டாம் வருட நுண்கலைத்துறை
- ❖ சுனாமிக்குப் பின் - மூன்றாம் வருட நுண்கலைத்துறை
- ❖ அரசனின் வருகை - நான்காம் வருட நுண்கலைத்துறை
- ❖ இசை நாடகம் (அரிச்சந்திர மயான காண்டம்) - இரண்டாம் வருட நுண்கலைத்துறை
- ❖ குறிஞ்சிப்பாட்டு - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்
- ❖ லயம் - நுண்கலைத்துறை கிழக்குப்பல்கலைக்கழகம்

பொதுவாக நோக்குகையில் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையானது பல்வேறு வகைப்பட்ட கலை நிகழ்வுகளை முன்னெடுத்து வருகின்ற ஒரு கல்வி நிறுவனமாக திகழ்கின்றது.

இது தொடர்பான புகைப்படங்கள் இறுவெட்டுக்கள் பத்திரிகைக்குறிப்புக்கள் அழைப்பிதழ்கள் போன்ற ஆவணங்கள் கட்டுரை சமர்ப்பிக்கப்படும் போது என்னால் வழங்கப்படும்.

# மட்டக்களப்பில் உருவான குறும்படங்களும் அவற்றினுடைய போக்குகளும்

நடேசன் நந்தகுமார்

இன்று நவீன தொழில்நுட்பத்தின் விருத்தியும் அவற்றின் விரிவான போக்குகளும் நமது அனைத்துச்செயற்பாடுகளிலும் ஊடுருவியுள்ளது. குறிப்பாக சினிமாவில் அதன் தாக்கம் அளப்பரியதாக அமைகின்றது. 20ம் நூற்றாண்டின் சிறந்த வெளிப்பாட்டுச்சாதனமான சினிமா 1895ல் Lumiere சகோதரர்களினால் சிறந்த வெளிப்பாட்டுச் சாதனமாக அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் தமிழ்நாட்டில் வன்மையான ஊடகமாக 1931இல் பரிணமிக்கின்றது. இத்தகைய செயற்பாடுகளினூடாக இந்தியச்சினிமாக்களே இலங்கை தமிழ் சினிமாவினை ஆக்கிரமிக்கின்ற சூழல் காணப்பட்டமையினால் தமிழில் சினிமாக்களினை தயாரிப்பதற்கான ஈடுபாடு எதுவும் அற்ற நிலையிலேயே இலங்கைத்தமிழ்ச் சூழல் காணப்பட்டது. ஆயினும் 1952ல் இலங்கையில் தமிழ்சினிமா தயாரிக்கப்படுவதுடன் 1962, 1963இல் சமூதாயம், தோட்டக்காரி போன்ற குறும்படங்களும் வெளிவருகின்றன.

காலனித்துவ, பின்காலனித்துவ அதனோடு இணைந்த உலகமயமாக்கல் செயற்பாடுகள் மக்களை நவீன தொழில்நுட்பத்தினை நுகரும் ஒரு நுகர்வுப்பண்டமாக உருவாக்கியுள்ளது. இதனால் எங்கள் தேவை, திறன் என்பவற்றினை தொழில்நுட்பச்செயற்பாட்டினுள் எவ்வாறு இணைத்துக்கொள்ளலாம் என்று சிந்திப்பாரற்ற நிலையிலேயே நாம் தொழில்நுட்பங்களை பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கமராவின் பாவனை, தொழில்நுட்பம் என்பன சகலமட்டங்களினாலும் பிரயோகிக்கப்படுகின்ற சூழலில் இலங்கையிலும் அதன் பயன்பாடு தீவிரமடையத் தொடங்குகின்றன. இதுவரைகாலமும் மக்களின் பிரச்சினைகளினைப் பேசுவதை பெரும்பான்மையாகத் தவிர்த்து வியாபாரநோக்கத்தினை முதன்மையாகக்கொண்டு பேசிவந்த இந்தியச்சினிமாக்களினை மக்கள் நிராகரிக்கின்ற சூழல் உருவாகின்றது. இதனால் எங்கள் அடையாளங்கள், பிரச்சினைகள், இருப்புக்கள் சார்ந்து சிந்திக்கவேண்டிய சூழல் உருவாகுவதுடன் மாற்றுச்சினிமா தொடர்பான சிந்தனை மேல்எழுகின்றது. இதன்போதுதான் குறும்படங்களினை தயாரிக்கின்ற சூழல் உருவாகியது.

இவ்வாறானதொரு சூழ்நிலையில்தான் மட்டக்களப்பிலும் குறும்படங்களின் தாற்பரியம் உணரப்பட்டு மட்டக்களப்பு சமூகத்தின் பல்வேறுபட்ட நெருக்கடி நிலைமைகளை கவிதை, நாவல், இலக்கியம், ஓவியம், நாடகம் போன்றவற்றினூடாக வெளிப்படுத்திய மரபுடன் சினிமாவினூடாக சித்தரிக்கின்ற புதியமரபு 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் உருவாகத்தொடங்குகின்றது. தொழில்நுட்பம் சார்ந்தோ, அரச ஊக்குவிப்புக்கள் சார்ந்தோ எந்த ஆதரவுகளும் இன்றி தனிப்பட்டவர்களின் தனிப்பட்ட முயற்சியின் அடிப்படையில் எவ்வித இலாபத்தினையும் கருதாது முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இச்செயற்பாடுகள் கவனிப்பிற்குரியதாகின்றன.

அத்துடன் அவைகூறவரும் செய்திகளும் பேசுபொருள்களும் மட்டக்களப்பு சமூகச்சூழலில் எந்தளவுதூரம் பொருத்தப்பாடுடையதாக அமைகின்றதென்பதனையும் மட்டக்களப்பு சமூகமக்களின் வாழ்வியலுடன் இணைந்திருப்பதனையும் இவ் ஆவணப்படுத்தல் வெளிப்படுத்த முனைகின்றது. குறிப்பாக இனிவரும் காலங்களில் மட்டக்களப்பின் அடையாளப்படுத்தலையும், தனித்துவத்தினையும் எவ்வாறு முன்கொண்டு செல்லப்போகின்றோம் என்பதற்கான ஒரு சிந்தனையை கொடுப்பதாகவும் இது அமைவதுடன் எதிர்கால தலைமுறையினர் மட்டக்களப்பில் உருவாக்கம்பெற்ற குறும்படங்களை அறிந்துகொள்வதற்கான ஒரு செயற்பாடாகவும் விளங்குகின்றது.

## பிரதேச அறிமுகம்

மட்டக்களப்பு பிரதேசம் என்பது பல்லின மக்களின் இணைப்பினை கொண்டமைந்த பிரதேசம் என்பதோடு, கடலும் ஆறும்சேர்ந்த ஒரு களப்புப்பிரதேசமாகும். ஆயினும் மட்டக்களப்பிற்கு தனியான ஒரு வரலாற்றுப்பாரம்பரியம் உண்டு. பதியப்பட்ட வரலாறு தெளிவாக இல்லாவிட்டாலும் கர்ணபரம்பரைக் கதைகள், செப்பேடுகள், கல்வெட்டுக்கள் மட்டக்களப்பு பூர்வ சரித்திரம், மட்டக்களப்பு மான்மியம், மகாவம்சம் முதலிய நூல்களினூடாக இதனை அறிந்துகொள்ள முடிகின்றது.

புராதன மட்டக்களப்பு தேசமானது வடக்கே வெருகலாறு தொடக்கம் தெற்கே குமுக்கன் நதியினையும் எல்லைகளாகக் கொண்ட பெருநிலப்பகுதி மட்டக்களப்பு தேசமாக விளங்கியது. தற்போது இது துறைநீலாவணையுடன் மட்டுப்படுத்தப்படுகின்றது. தற்போதைய மட்டக்களப்பின் சமூக அமைப்பினை நிலமானிய அமைப்பின் பெயரால் அழைக்கலாம். பல்லாயிரக்கணக்கான ஏக்கர் பரப்புள்ள விளைச்சல் நிலங்களை தன்னகத்தே கொண்டுள்ள மட்டக்களப்பில் விவசாயமே முக்கிய தொழிலாக இருப்பதால் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட நிலமானிய சமூக அமைப்பே இங்கு விளங்குகின்றது. ஆயினும் ஆங்கிலேயர்களின் வருகை சமுதாய மட்டத்தில் அகச்சிதைவுகளினை ஏற்படுத்தியதோடு மத்தியதர வர்க்கத்தின் உருவாக்கம் நகரங்களினை அண்டியும் இடம்பெறத்தொடங்குகின்றது. இவை பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்றவை என்பது முக்கியமானதாகும்.

20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட நவீன கல்விக்கொள்கைகள் மற்றும் வெகுஜன ஊடகங்களின் வருகை யாவும் தொழில்நுட்பநோக்கு ரீதியான சிந்தனைகளுக்கு வித்திட்டன. இதுவரைகாலமும் றொயிற்றர் போன்ற பெருநிறுவனங்களின் பயன்பாட்டில் இருந்துவந்த Digital தொழில்நுட்பம் அனைத்து தரப்பினருக்கும் சென்றடைய பெருநிறுவனங்களினூடாக, பீற்றாகமராக்களினை பயன்படுத்திவந்த பெரும்முதலாளிகள் இனங்காட்டத்தவறிய, பேசமுற்படாத விடயங்களினை குறும்படங்களினூடாக பேசுகின்ற சூழல் உருவாகின்றன. இவ்வாறானதொரு பரவலாக்கம் சஞ்சிகைகள், பயிற்சிப்பட்டறைகள் மூலமாக அறிமுகப்படுத்தப்பட மட்டக்களப்பிலும் குறும்பட தயாரிப்பிற்கான சூழல் உருவாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் வாசிப்புக்கள் உரையாடல்கள் மூலமாக கதை, திரைக்கதை எழுதுவதற்கான திறமை காணப்பட்டதே தவிர தொழில்நுட்பம் சார்ந்து பிரயோகிக்கின்ற, பயன்படுத்துகின்ற அறிவுகளும், சந்தர்ப்பங்களும் இல்லாத சூழலிலே மட்டக்களப்பினுடைய குறும்படச்செயற்பாடுகள் மெதுவாக உருவாகத்தொடங்குகின்றன. இப்பின்புலத்தினூடாகவே மட்டக்களப்பு குறுந்திரைப்படச் செயற்பாட்டினை புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

இன்று வரையும் முன்னெடுக்கப்பட்டுவரும் குறுந்திரைப்படச் செயற்பாடுகள் இளைஞர்கள் மத்தியில் மிகவும் முக்கியமான செயற்பாட்டுத்தளமாக அமைகின்றது. இதனால் அனைத்து தரப்பினரும் இணைந்து ஆக்கபூர்வமான செயற்பாடுகளினை முன்னெடுப்பதோடு இதுவரைகாலமும் பேசத்தவறிய, பேசவேண்டிய விடயங்களினை முன்னெடுப்பதனூடாக மட்டக்களப்பு சமூகத்திற்கும், ஏனைய பிரதேசங்களுக்கும் பொருத்தமுடைய குறும்படங்களினை வெளிப்படுத்துவது பொருத்தமுடையதாகும்.

## ஆவணப்படுத்தலில் உள்ளீர்க்கப்படும் விடயம்

மட்டக்களப்பில் உருவாக்கம் பெற்ற குறும்படங்களினை ஆவணப்படுத்தலுக்கு உள்ளாக்கும்போது சில விடயங்களினை கருத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது. குறிப்பாக குறும்படங்களினை நேரஅடிப்படையில் வகைப்படுத்தும் போக்கு உள்ளது. இதன் அடிப்படையில் இங்கு 30 நிமிடத்திற்கு உட்பட்டதாக தயாரிக்கப்பட்ட குறும்படங்களினையே பிரதானமாக கருத்தில் கொள்ளப்படுகின்றது. இவ்ஆவணப்படுத்தல் ஒரு குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் மட்டுப்படுத்தப்படுவதால் மட்டக்களப்பு பிரதேசத்தினைச் சார்ந்தவர்களின் படைப்புக்களும் மட்டக்களப்பு பிரதேசத்தினை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டவைகளும் பிரதானமாக கருத்தில் கொள்ளப்படுகின்றது. இவ்ஆவணப்படுத்தலுக்கு உள்ளீர்க்கப்படும் குறும்படங்கள் திரைப்படத் தணிக்கைச்சபையின் அனுமதியினை பெற்றிருத்தல் என்பது கருத்தில் கொள்ளப்படவில்லை. ஏனெனில் மட்டக்களப்புச் சூழலில் குறும்படங்களினைத் தயாரிக்கும் போக்கு தற்போதுதான் ஓரளவுக்கு பரவலாக்கமடையத் தொடங்கியிருப்பதால் மட்டக்களப்பில் வெளியாகியுள்ள அனைத்து குறும்படங்களும் உள்ளடக்கப்படுகின்றன.

ஆயினும் மட்டக்களப்புச் சூழலினை பொறுத்தவரையில் காத்திரமான குறுந்திரைப்படச் செயற்பாட்டில் ஈடுபடும் கலைச்செயற்பாட்டாளர்கள் மற்றும் தங்களது பிரச்சினைகளினை, உணர்வுகளினை எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும் எனும் நோக்கில் ஈடுபடும் செயற்பாட்டாளர்களும் காணப்படுவதால் இவ்விரு செயற்பாட்டாளர்களின் வெளிப்படுத்தலினூடாக வெளிவந்த குறும்படங்கள் கவனிப்பிற்குரியதாக அமைகின்றன. அத்துடன் அவர்களினால் தயாரிக்கப்பட்ட சிறிய அளவிலான முயற்சிகளும் இணைத்துக்கொள்ளப்படுகின்றன. ஒவ்வொரு குறும்படங்களினதும் நேரம், தயாரிப்பு, மூலக்கதை, இயக்குனர், ஒளித்தொகுப்பு, படத்தொகுப்பு, கதைச்சுருக்கம் போன்ற விடயங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றது.

## ஆவணப்படுத்தப்படும் குறும்படம் பற்றிய விபரம்

மட்டக்களப்பில் திரைப்படச்செயற்பாடுகள் என்பது Digital தொழில்நுட்பத்துடன் 1990களின் பின்னர் ஆரம்பமாகின்றன. மட்டக்களப்பு தேற்றாத்தீவு பிரதேசத்தை சேர்ந்த நா.யோகேந்திரன் இயக்கத்திலும், எழுத்துருவிலும் 1995ம் ஆண்டு புதையல் என்கின்ற ஒரு மணித்தியாலயமும் ஒரு நிமிடத்தினையும் கொண்டதான முழுநீளப்படம் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இது குறும்படம் அல்லாவிட்டாலும் அக்காலத்தில் நடைபெற்ற முக்கியமான செயற்பாடாக இதனை குறிப்பிடவேண்டியுள்ளது. ஆயினும் மட்டக்களப்பில் குறுந்திரைப்படச் செயற்பாடுகள் குறிப்பாக 2000ஆம் ஆண்டுகளுக்கு பின்னரே ஆரம்பமாகின்றன.

### பிளவுகள் – 2002

2002ல் Fine Arts Creation ஊடாக 25 நிமிடங்களினை கொண்டதாக **பிளவுகள்** எனும் குறும்படம் மட்டக்களப்பினைச் சேர்ந்த தேவஅலோசியஸ் அவர்களின் எழுத்துரு,

இயக்கத்தில் உருவாக்கம் பெறுகின்றது. தயாரிப்பு: ஆர்.ரவீந்திரன், ஒளித்தொகுப்பு: போதிலால் கமகே. இதனுடைய திரைக்கதை மட்டக்களப்பில் சாதி அமைப்பு என்பது மிக இறுக்கமாக பின்பற்றப்படுகின்ற ஓர் விடயம். இதனை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தில் கல்விபயிலும் உயர்சாதி பெண்ணுக்கும் முடிவெட்டும் தொழிலை மேற்கொள்ளும் சாதி அமைப்பில் உள்ள ஆணுக்கும் இடையே உருவாகும் காதலும் எடுத்துக்காட்டப்படுகின்றது. ஆனால் இருவருக்கும் சாதியமைப்பு தடையாக இருக்கின்றது. எனவே இருவரும் வீட்டைவிட்டு வெளியேறி திருமணம் செய்துகொள்வோமா என உத்தேசிக்கிறார்கள்.

இது அவர்களுக்கு தவறாக அமைய அவ்இளைஞன் தனது அப்பாவிடம் தான் உயர்சாதி பெண்ணைக் காதலிப்பதாக தெரிவிக்கிறான். ஆனால் அவனது தந்தையோ அவர்களது சாதி என்ன? எங்களது சாதி என்ன? நான்போய் அவர்களிடம் அந்த உயர் மனிதனிடம் போய் பெண்கேட்பதா என தன் மகனிடம் முரண்பட்டுக் கொள்கின்றார். இறுதியில் அவனது தந்தை சுகவீனமுற்று இருக்கும் சந்தர்ப்பத்தில் தன் மகனிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கிறார். நீ காதலித்த பெண்ணின் பிள்ளைக்கு இண்டைக்கு தலைமுடி எடுப்பதற்கு என்ன வரச்சொல்லியிருக்கிறாங்க ஆனா என்னால போகமுடியாது நீ போய் அந்த காரியத்த செய்துவிட்டுவா எனக் கூறுகிறார். ஆனால் அந்த இளைஞனோ சாதியில் தாழ்ந்த எங்களுக்கு என்ன வெட்கம் எனக்கூறிக்கொண்டு முடிவெட்டும் பொருட்களை எடுத்துக்கொண்டு அவன் செல்வதாக திரைக்கதை அமைகின்றது. ஒரு இளைஞனுக்குள் சாதியமைப்பு எவ்வாறான மனப்போராட்டமாக இருக்கின்றது என்பதனையே இது பேசமுற்படுகின்றது.

### இறக்கை – 2004

2004 இல் 25 நிமிடங்களினை கொண்டதான **இறக்கை** எனும் குறுந்திரைப்படம் தயாரிக்கப்படுகின்றது. மூலக்கதை : பாமா, இயக்கம் : எம்.ஐ.ஜாபீர் (என்.ஆத்மா), (தயாரிப்பு : சனல் ஐ (ரூபவாகினி). மட்டக்களப்பினுடைய யுத்த சமூக அமைப்பு பல்வேறு விடயங்களினை சிதைவுக்கும், இழப்பிற்கும் உள்ளாக்கியது.) இதன்அடிப்படையில் யுத்தத்தினால் தந்தையினையும், தாயினையும் இழந்த சிறுவனை மையமாகக்கொண்டு தயாரிக்கப்பட்டிருக்கின்றது. தனது அம்மம்மாவின் அரவணைப்பில் வாழும் சிறுவனை பாடசாலையில் சேர்ப்பதும் விடுதி ஒன்றில் தங்கிநின்று கல்வி கற்கும் சிறுவன் அதன்பால் நாட்டமன்றி இருப்பதும் அவனை எப்படியாவது கல்விகற்க வைக்கவேண்டும் எனும் நாட்டம் கொள்ளும் ஆசிரியரும் என கதை தொடர்ந்து செல்கின்றது.

### கிச்சான் – 2005

2005 இல் Naithal Media Vision உருவாக்கத்தில் மட்டக்களப்பில் தயாரிக்கப்பட்டதும் இலங்கை மற்றும் சர்வதேச அளவுகளில் திரையிடப்பட்டதும், பேசப்பட்டதுமான குறுந்திரைப்படமாக **கிச்சான்** விளங்குகின்றது. 26 நிமிடங்களினை கொண்ட இக்குறும்படத்திற்கான மூலக்கதை: ரியாஸ் அகமட் (அம்ரிதா ஏயம்) என்பவரின் “கிருஸ்ணபிள்ளை” விலங்குகளின் நடத்தை தொகுதியிலிருந்து பெறப்பட்டது. தயாரிப்பு : காரை.கு.விக்னேஸ்வரன். திரைக்கதை, வசனம், இயக்கம்: அ.விமல்ராஜ், ஒளிப்பதிவு: தயா சூரியாராச்சி, படத்தொகுப்பு: மஞ்சுளா நிசாந்த, திலுப்பணசிரியந்த, லக்ஷ்மிசங்கர், பாலன். இசை உதவி: டி.சில்வா, பாடல்: யுகபாரதி, சின்மை.

கலைவடிவமைப்பு: குலராஜ் போன்றோரின் இணைப்பால் உருவாக்கம் பெற்றதே கிச்சான். சிறுவர் உரிமை தொடர்பாகவும், சிறுவர் துஸ்பிரயோகம் தொடர்பாகவும் பேசுகின்றது இக்குறும்படம். 1990களில் இலங்கை இராணுவத்தால் தமிழர்கள் கைதுசெய்யப்படுவதும் அதனால் தனது தந்தையை இழக்கும் சிறுவன் தனது குடும்பபொறுப்பிற்காக வெளிநாடு செல்கிறாள் தாய். அதன் நிமிர்த்தம் தனது அம்மம்மாவின் துணையுடன் வாழும் சிறுவன் அவனது குடும்பச்சூழல் காரணமாக பாடசாலைக்கல்வியை கற்கமுடியாத சூழல் உருவாக பல்கலைக்கழக சிற்றுண்டிச்சாலையில் தொழிலுக்காக அமர்த்தப்படுகின்றான். அங்கு அவன் அனுபவிக்கும் துன்பகரமான சம்பவங்களினை எடுத்துக்காட்டுவதோடு யுத்தகால மட்டக்களப்பு சமூகத்தினையும் இக்குறும்படம் பேசமுனைகின்றது. சிறந்ததொரு திரைக்கதை ஓட்டத்தின் ஊடாக அக்காலத்தில் மிகவும் பேசப்பட்ட ஒரு குறும்படமாகவே இது விளங்குகின்றது. இதற்கு 2005ம் ஆண்டு விம்பம் சர்வதேச விருதுவிழாவில் சிறந்த குறும்படம், சிறந்த எழுத்துரு என்பவற்றிற்கு விருதுகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

### புகலிடம், புரிதல் – 2005

2005ல் SIM தயாரிப்பில் வாழைச்சேனை மீராவோடையினை சேர்ந்த முகைதீன் ஹஸன் அவர்களின் எழுத்துருவிலும், இயக்கத்திலும் **புகலிடம்** எனும் குறும்படம் உருவாகின்றது. கதை: மீரா, ஒளிப்பதிவு: எஸ்.எம்.ஏ. காதர், படத்தொகுப்பு: Visual Dimersion, தயாரிப்பு: காவத்தமுனை முஸ்டீன் போன்றோரின் பங்களிப்பில் உருவாகின்றது. குடும்பபெண்கள் பொருளாதார நோக்கினை மையமாகக்கொண்டு வெளிநாடுகளுக்கு படையெடுக்கின்ற சூழலில் அவர்களது பிள்ளைகளின் கல்வி, பாசம், அரவணைப்பு வளர்ப்புமுறை என்பன எவ்வாறு வீணடிக்கப்படுகின்றது என்பதனை முன்னிறுத்தி முஸ்லீம் சமூகத்தினை மையமாகக்கொண்டு வெளிவருகின்றது. பொறுப்பற்றமுறையில் நடக்கும் மாமன் அதனால் பாதிக்கப்படும் பெண் என்றும் தொடரும் கதையில் ஆதரவளிக்கும் ஆசிரியர், கடைக்காரர் என மனிதநேய வட்டத்தினை நோக்கி புகலிடம் சுழல்கிறது. இவரால் தயாரிக்கப்பட்ட இன்னொரு குறும்படமாக **புரிதல்** அமைகின்றது. ஒரு சிறுவன் மீன்பிடிக்கச்செல்வதும் அவன் அங்கு வழமையாக மீன்பிடிப்பவர்களால் விரட்டப்படுகின்றான் அதனால் தான் தனியாகசென்று இன்னொரு இடத்தில் மீன்பிடிக்கிறான். இக்கதை நகர்வானது அச்சிறுவனுக்குள்ள ஆற்றலினையும், தன்னம்பிக்கையினையும் வெளிப்படுத்துவதாகவே அமைகின்றது.

### கிழக்கு வானம் – 2006

2006 இல் Fine Arts Creation ஊடாக தேவஅலோசியஸ்சின் எழுத்துருவாக்கத்திலும், இயக்கத்திலும் 22 நிமிடங்களினை கொண்டதான **கிழக்கு வானம்** எனும் குறும்படம் வெளிவருகின்றது. ஒளித்தொகுப்பு: உதயகுமார், படத்தொகுப்பு: வினி வீடியோ, இசை: செல்வகுமார். இது பெண்ணியம் சார்ந்த உரையாடலைத் தருவதாகவே அமைகின்றது. கடற்கரை சமூகத்தினை மையமாகக்கொண்டு கடற்தொழிலுக்காகக் கடலுக்குச்செல்லும் ஒருவர் கண்வோட்டின் தாக்குதலில் மரணமடைய அன்றாட வருமானத்தினை நம்பியிருந்த அவனது குடும்பத்தினை சித்தரிப்பதாக அமைகின்றது. கணவனை இழந்தபெண் தனது பிள்ளைகளை வளர்த்து உருவாக்குவதற்காகவீட்டுவேலைகள் செய்து தனது அன்றாடவாழ்வை கழிப்பதனைச் சுட்டுவதோடு அவளது சமூகம் அவள் பற்றிய பிற்போக்கான எண்ணங்களினை கொண்டிருப்பதனையும்

இது பேசுகின்றது. இக்குறும்படத்தினூடாக குறிப்பாக மட்டக்களப்பில் சில குடும்பங்கள் பெண் தலைமைத்துவ குடும்பங்களாக இருப்பதனையும் அறியமுடிகின்றது. இக்குறும்படத்திற்கு 2006ல் இலங்கையில் சிறந்த குறும்படத்திற்கான தமிழியல் விருது கிடைக்கப்பெற்றமை குறிப்படத்தக்கதாகும்.

**பெரியபள்ளி பேஸ்இமாம் – 2007**

2007 இல் காத்தான்குடியைச் சேர்ந்த ரமீஸ் என்பவரால் **பெரியபள்ளி பேஸ்இமாம்** என்கின்ற குறும்படம் தயாரிக்கப்பட்டுள்ளது. முஸ்லீம் பண்பாட்டில் ஒன்றான சுன்னத்து கலாச்சாரத்தினை ஒட்டியதானதாகவே அமைகின்றது. எங்களது சமூகஅமைப்பில் முடிதிருத்துனர், சலவைத்தொழிலாளிகள் போன்று முஸ்லீம்கள் மத்தியில் உள்ள சுன்னத்துசடங்கு முக்கியமாகின்றது. ஆரம்பத்தில் பிள்ளை பிறந்தவுடன் மேற்கொள்ளப்படும் இது பின்னர் 10,12 வயதுகளில் மேற்கொள்ளப்படும் ஒன்றாக மாறத்தொடங்குகின்றது. இதனால் இத்தொழிலையே நம்பியிருந்த சமூகஅமைப்பினர் தங்களது பொருளாதாரத்தினை ஈட்டிக்கொள்வதற்கு 10,12 வருடங்களிற்கு காத்திருக்க வேண்டியிருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் பொருளாதார சிக்கலினை பேசுவதாக அமைகின்றது.

**ஆத்மநேயம் – 2008**

2008ல் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள் பயிற்சிநெறியில் தயாரிக்கப்பட்ட 3குறும்படங்கள் வெளிவருகின்றது. முதலாவதாக சிவாஜி மற்றும் மின்னொளி ஆகியோரின் இயக்கத்தில் 7 நிமிடங்களினை கொண்டதான **ஆத்மநேயம்** எனும் குறும்படம் வெளிவருகின்றது. படத்தொகுப்பு: மோகன் (AV தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) கண்பார்வையற்ற விசேடதேவையுடைய ஒரு மாணவன் பல்கலைக்கழக விடுதியில் இருந்து பல்கலைக்கழக விரிவுரைக்காக தனது வெள்ளைப்பிரம்பின் உதவியுடன் நடந்து செல்கின்றான். அவன் செல்லும் வழியில் அங்கு கல்விகற்கும் மாணவர்களும் அம்மாணவனைப்பற்றி எவ்வித அக்கறையும் கொள்ளாமல் அவனைகடந்து செல்கிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் வீதியை கடப்பதற்காக காத்துக்கொண்டு நிற்கிறான். ஆனால் அவனுக்கு யாரும் உதவுவதாக இல்லை. இறுதியில் அவனுக்கு உதவுவது சரியாக நடக்கமுடியாத இன்னுமொரு விசேடதேவையுடைய ஒருமாணவனே அவனுக்கு உதவுகின்றான். இதுவே திரைக்கதை தரும் செய்தியாகும். "தேவை தூய்மையான ஓர் இதயம்" என்பதை உணர்த்துவதாக அமைகின்றது.

**வாய்ப்புகள் – 2008**

இரண்டாவதாக ஏ.மகேஸ்வரன் மற்றும் எஸ்.பத்மநாதன் இருவரின் இயக்கத்தில் 5 நிமிடங்களினை கொண்ட **வாய்ப்புகள்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. இதற்கான படத்தொகுப்பு: மோகன் (AV தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) இதனுடைய திரைக்கதை ஆங்கிலபாட விரிவுரையினை மேற்கொள்வதற்கு விரிவுரையாளர் விரிவுரை மண்டபம் நோக்கி செல்கிறார். ஆனால் மாணவர்களோ அவரைக்கண்டவுடன் ஒழிந்துகொள்கின்றனர். விரிவுரை மண்டபத்தற்கு செல்கிறார் அங்கு மாணவர்கள் எவரும் இன்றி மண்டபம் காட்சியளிக்கின்றது. தனது விரிவுரை நேரம் முடியும் வரையும் காத்திருந்துவிட்டு கவலையுடன் வெளியேறுகிறார்.

இவ்வாறாக இக்குறும்படம் அமைகின்றது. வாய்ப்புகள் கனிந்து வரும்போது அதன் தேவைகள் உணரப்படுவதில்லை தேவைகள் உணரப்படும்போது........ எனும் செய்தியை தருவதாக அமைகின்றது.

### கற்பது இப்பிடியுமா – 2008

மூன்றாவதாக சு.வசந்தன், டி.காயத்திரி ஆகியோரின் இயக்கத்தில் 9 நிமிடங்களினை கொண்டதான **கற்பது இப்பிடியுமா** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. படத்தொகுப்பு: மோகன் (AV தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்) நூலகத்தில் புத்தகங்களினை தேடி கஷ்டப்பட்டு Tuite எழுதுகிறாள் ஒரு மாணவி. ஆனால் ஏனைய மாணவர்களோ அவளது Tuite இனை வாங்கி பார்த்து எழுதி விரிவுரையாளரிடம் ஒப்படைக்கின்றார்கள். அங்கு அந்தபெண்ணின் Tuite இனை வாங்கி எழுதியவருக்கோ அப்பெண்ணைவிட அதிகபுள்ளி கிடைக்கின்றது. ஒருவர் கஸ்டப்பட்டு ஒருவிடயத்தினை மேற்கொள்ள பலபேர் அதில் வாழ்ந்துகொண்டு செல்கிறார்கள். இது எங்களது வாழ்வில் எம்மோடு இணைந்துள்ள மனிதர்களின் வெளிப்படுத்தல்களை சித்தரிக்கின்றது. இம்மூன்று படங்களும் கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை தயாரிப்புகளாகும்.

### தண்ணீர் – 2009

2009 இல் Naithal Media Vision உருவாக்கத்தில் **தண்ணீர்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. கதை, திரைக்கதை, வசனம், இயக்கம் அ.விமல்ராஜ். ஒளித்தொகுப்பு: தயா சூரியாராச்சி, படத்தொகுப்பு: நெல்சன், இசை: காவியன், கலைவடிவமைப்பு: குலராஜ் ஆகியோரின் பங்குகொள்ளலில் 20 நிமிடங்களினை கொண்டதாக வெளிவருகின்றது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் சிறுவனது கடந்தகால சம்பவங்களே திரைக்கதையாக நகர்கின்றது. வயல்வெளிகளின் சேற்றினுள் நண்பர்களுடன் விளையாடுவதும், அசுத்தமான நீரோடையினை பயன்படுத்துவதும், அவ்நீரை அருந்துவதுமாக காட்சிகள் சித்தரிக்கப்பட்டு உயிரை இழக்கும் நிலைக்கு தள்ளப்படுகின்றான். இச்சம்பவங்களினூடாகவே கதையமைப்பினை சித்தரிப்பதோடு சுத்தமான குடிநீரைப் பருகுவதன் முக்கியத்துவத்தினை நோக்காகக்கொண்ட வகையில் இக்குறும்படம் அமைகின்றது.

### சாம்பல் – 2010

2010ல் முகைதீன் ஹஸனின் எழுத்துருவாக்கத்திலும், இயக்கத்திலும் **சாம்பல்** எனும் குறும்படம் வெளியாகியுள்ளது. இது பாடசாலை செல்லும் சிறுவன் அவனது குடும்பச்சூழலின் தனிமைப்படுத்தல் காரணமாக போதைவஸ்துக்கு அடிமைப்படுவதை சித்தரிப்பதாக இது அமைகின்றது. புகைப்பது இறுதியில் சாம்பலாகவே செல்லும் என்பதனை இது எடுத்துக்காட்டுகின்றது. இவரின் மற்றுமொரு படைப்பாக **மனிதன் வந்தான்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. வை.அஹமத் என்பவரின் மூலக்கதையிலிருந்து இது பெறப்பட்டதாகும். இரு வளையம் உருட்டும் சிறுவர்களின் கதையினை மையமாகக்கொண்டு அவரது திரைக்கதையில் சிறுவர்கள் கிரிக்கட் விளையாடும்போது அவர்களது பந்து பஞ்சர் ஆகின்றது. இதனால் இரு குழுவினருக்குமிடையே வரும் முரண்பாடுகள் சித்தரிக்கப்படுவதோடு பின்னர் பிழையினை செய்தவர் பிழையினை ஒத்துக்கொள்கின்ற ஒரு சூழலில் ஆத்மார்த்தமான உணர்வு அவர்களிடையே பகிரப்படுவதை இது வெளிப்படுத்துகின்றது.

**நானும் – 2010**

2010 இல் களுவாஞ்சிகுடியை சேர்ந்த நா.விஜயதாஸின் எழுத்துரு, இயக்கம், ஒளித்தொகுப்பு, படத்தொகுப்பு ஆகியவற்றின் இணைப்பால் 3 நிமிடங்களினைக் கொண்டதான **நானும்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. தந்தை செய்கின்ற ஒவ்வொரு செயல்களினையும் தந்தையுடன் இணைந்து செய்யும் மகன் ஒரு சந்தர்ப்பத்தில் தந்தை புகைபிடிப்பதற்காக சிகரட்டினை தூ க்குகின்றபோது மகன் நானும் என கேட்கிறான் இதுவே இக்குறும்படம் தரும் செய்தியாக அமைகின்றது. இதனை அவரது குறும்படத் தயாரிப்பின் ஆரம்ப முயற்சிகளாக குறிப்பிடமுடியும்.

**அம்மா – 2011**

2011 இல் Fine Arts Creation ஊடாக தேவஅலோசியஸ்சின் எழுத்துருவாக்கத்திலும், இயக்கத்திலும் **அம்மா** எனும் குறும்படம் 20 நிமிடங்களினைக் கொண்டதாக வெளிவருகின்றது. ஒளித்தொகுப்பு: நந்தகோபால் மற்றும் பகீரதன், படத்தொகுப்பு: மைக்கல் டிபீற்றர்ஸ், இசை:செல்வகுமார். மட்டக்களப்பின் நெருக்கடிமிக்க யுத்த சூழகஅமைப்பினைப் பேசுவதாகவும் தவறுதலான செய்திப்பரிமாற்றம் ஏழ்மையான குடும்பத்தினை பாதிக்கச்செய்வதாகவும் அமைகின்றது. அதாவது மகனை படிப்பித்து ஒரு நல்லநிலைக்கு உருவாக்க வேண்டும் எனும் மனோபலத்துடன் வளர்க்கும்தாய் அவனை நகர்ப்புற மாணவர் விடுதி ஒன்றில் தங்கிப்படிப்பதற்காக சேர்க்கிறாள். அங்கு கல்விகற்றுவரும் வேளையில் அவனது தாய் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காவதோடு அவர்களது இருப்பிடம் தீயிட்டு கொழுத்தப்படுகிறது. இவ்வேளை தாய் சுகவீனமுற்றிருப்பதாகக் கடிதம் மூலம் தகவல் அறிந்து வீடு நோக்கி மகன் வருகின்றான். அங்கு தனது தாயின் நிலையினைக் கண்டு மிகவும் மனநிலை பாதிக்கப்பட்டவனாக அவன்மாறுவதும் அவனுக்கான சிகிச்சைகள் நடைபெறுவதுமாகத் திரைக்கதை அமைகின்றது.

**வீரன் – 2011**

2011 இல் Fine Arts Creation ஊடாக அலெக்ஸ் தேவரஞ்சன் அவர்களின் எழுத்துரு, தயாரிப்பிலும், தேவ அலோசியஸ் அவர்களின் இயக்கத்திலும் 20 நிமிடங்களுக்குள் உட்பட்டதான **வீரன்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகிறது. இதற்கான ஒளித்தொகுப்பு: பகீரதன், படத்தொகுப்பு: கோபி ரமணன், இசை: செல்வகுமார். புலம்பெயர் மக்களின் எண்ணப்பாட்டினை வலியுறுத்த முற்படுகின்றது. வீரனது அக்கா அழுதவாறு வீட்டிற்குள் வருகின்றாள் காரணம் அவளது வகுப்பு நண்பர்கள் அவளை கிண்டல் செய்தமையே காரணம். இதனை தட்டிக்கேட்பதற்காக வகுப்பு நடைபெற்ற இடம்நோக்கி செல்கிறான் வீரன். அங்கு தனது அக்காவை கிண்டல் செய்தவர்களுடன் முரண்பட்டு சண்டையிடுகின்றான். அங்கு அவர்களால் தாக்கப்பட்டு காயங்களுடன் வருகிறான் வீரன். ஒரு சந்தர்ப்பத்தில் வீரனது குடும்பத்தினர் அனைவரும் கனடா நோக்கி புலம்பெயர்கின்றனர். ஆனால் வீட்டைக் கவனிப்பதற்காக வீரனை மாத்திரம் விட்டுச்செல்கின்றனர். இச்சந்தர்ப்பங்களில் வீரன் தனது வீட்டில் தங்கியிருக்கும் வேளைகளில் தனது அக்காவிற்காக சண்டையிட்ட நண்பர்கள் வீரனைத் தாக்கிச் செல்கின்றனர். ஆனால் அவனது குடும்பமோ வீரன் பற்றி எவ்வித அக்கறையும் இல்லாத நிலையில் வெளிநாடுகளில் சொகுசாக வாழ்ந்து கொண்டிருப்பதனைப் பேசுவதாகத் திரைக்கதை அமைகின்றது. இத்திரைக்கதையில் மறைமுகமாக பேசவரும் செய்தி ஈழவிடுதலைப் போரட்டத்தில் தங்களை அர்ப்பணித்து, கஷ்டப்பட்டுப் போராடுகின்றபோது இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் இங்கு போராடியவர்கள் பற்றி எவ்வித

சிந்தனையும் இன்றி அங்கு சொகுசாக வாழ்ந்துகொண்டிருப்பதை சுட்டுவதோடு அவர்களுக்கான ஒரு சிந்தனையைக் கொடுப்பதாக அமைகின்றது.

### முற்றுப்புள்ளி – 2011

2011 இல் கோபிரமணனின் கதை, திரைக்கதை, இயக்கம், ஒளித்தொகுப்பு, படத்தொகுப்பு யாவற்றின் இணைப்பில் 7 நிமிடங்களினைக் கொண்ட **முற்றுப்புள்ளி** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. 2011 இல் மட்டக்களப்பில் இடம்பெற்ற கிறீஸ் மனிதன் செயற்பாட்டினை வெளிப்படுத்தும் வகையில் கதை அமைகின்றது. மாலைநேரத்தில் வகுப்பு முடிந்து வீட்டிற்கு செல்வதற்காக ஆண்கள், பெண்கள் நிற்கின்றனர். கிறீஸ்மனிதன் பிரச்சனைக்கு ஏதாவது செய்ய வேண்டும் எனநினைத்து அனைவரும் சேர்ந்து ஒரு திட்டமிட்டு முடிவெடுக்கின்றனர். அதாவது ஒரு ஆண் பெண் உடையினை அணிந்துகொண்டு கிறீஸ்மனிதன் நடமாட்டம் உள்ள இடத்தில் செல்கிறான். கிறீஸ்மனிதனோ நடந்துசெல்வது பெண் என நினைத்து அவனை பிடிக்கிறான். அச்சந்தர்ப்பத்தில் அந்தஇளைஞன் விசில் அடித்து அனைவரையும் அழைத்து கிறீஸ்மனிதனை மடக்கிபிடிப்பதாக அமைகின்றது. 'விவேகம் நல்லது வன்முறை வேண்டாம்' எனும் தொனிப்பொருளினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

### ஆசை – 2012

2012 இல் Fine Arts Creation ஊடாக தேவஅலோசியஸ்சின் இயக்கத்தில் 2 நிமிடங்களினை கொண்டதான **ஆசை** என்கின்ற குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. படத்தொகுப்பு, இசை: மைக்கல் டிபீற்றர்ஸ் இது ஒரு பெண்ணியம் சார்ந்த கதைக் கருவாகவே அமைகின்றது. சிறுவயதில் பெண் தனது தந்தையால் எவ்வாறு கட்டுப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்றும் பின்னர் இளம்பெண்ணாக இருக்கும்போது தனது அண்ணனால் எவ்வாறு கட்டுப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றாள் எனவும் பின்னர் திருமணமாகிய பின்னர் வேலைக்குச் செல்லக்கூடாது என கணவனால் கட்டுப்படுத்தப்படுகிறாள் இதன்போது அவள் ஒரு கடிதம் ஒன்றினை எழுதுகிறாள் நானும் ஒரு மனிதர் எனக்கும் சில ஆசைகள், பாசங்கள் இருக்கு என்னையும் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும் அவ்வாறு என்னை புரிந்துகொண்டால் என்னைத் தேடிவாருங்கள் என கடிதம் ஒன்றினை எழுதிவிட்டு அவள் வீட்டைவிட்டு வெளியேறுகிறாள். இவ்வாறாகவே கதை நகர்த்தப்படுகின்றது. இக்குறும்படம் இலங்கையில் நடைபெற்ற குறும்படவிழாவில் கலந்துகொண்டு வெற்றிபெற்றதென்பதும் குறிப்படத்தக்கது.

### என் உயிர் நண்பன் – 2012

2012 இல் மட்டக்களப்பினைச் சேர்ந்த வேணுதரனின் கதை, திரைக்கதை, இயக்கம், படத்தொகுப்பு ஆகியவற்றின் இணைப்பில் 19 நிமிடங்களினைக் கொண்டதான **என் உயிர் நண்பன்** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. இன்றைய மட்டக்களப்புச் சூழலில் காதல், மது போன்றவை இளைஞர்கள் மத்தியில் கொலையினை செய்ய தூண்டுவதற்குரிய காரணிகளாக மாறியிருப்பதை வெளிப்படுத்த முனைகின்றது. (தனது காதலுக்காக தனது நண்பனைக் கொலை செய்கின்ற கருத்தியலை இது கொடுக்கின்றது. இரு கல்லூரி நண்பர்கள் ஒரு பெண்ணை காதலிப்பதும் தனது காதலுக்கு அவனது நண்பன் இடையூறாக இருப்பதனால் இருநபர்களுக்குமிடையே நடைபெறும் சண்டை எதிர்பாராதவிதமாக அவர்கள் மரணமடைய, தான் இந்தக் கொலைக்கு காரணியாக அமைவேன் என எண்ணி அவர்களைக் கடலில் தூக்கிப்போட்டு விடுகின்றான்.) இதனை அறிந்த இறந்தவர்களது நண்பன் தொலைபேசியில் அவனது காதலி பேசுவது போன்று பேசி குறிப்பிட்ட இடத்திற்கு கொலைசெய்த அவனது நண்பனை வரவழைத்து அவனைக்

கொலைசெய்கின்றான். தனது உயிர் நண்பனை இழந்த சோகத்தால் கொலை செய்வதை மையமாகக்கொண்டு திரைக்கதை நகர்கின்றது. காட்சியினுடைய களங்கள் கல்லூரி, கடற்கரை, வீதி, வீடு எனச் செல்கின்றது. திரைப்படத்தின் காட்சி நேர்த்தி, தயாரிப்பு என்பன ஓரளவிற்கு ஒழுங்காக அமையப்பெற்றிருப்பினும் கதையினுடைய கரு தற்கால மட்டக்களப்பு சமூகத்திற்கு எந்தளவு பொருத்தப்பாடுடையது என்கின்ற கேள்வியை எழுப்புவதாக அமைகின்றது. இச்சம்பவத்தின் செயற்பாடு கொலையினை செய்யத்தூண்டுவதற்குரிய காரணியாகவும் அமையலாம். எவ்வாறாயினும் கூறவந்த செய்தியை அக்கலைஞன் கூறிச்செல்வதாக அமைகின்றது.

**எனக்குள் ஒருவன் – 2012**

2012 இல் மட்டக்களப்பு கிழக்குப்பல்கலைக்கழக வர்த்தக முகாமைத்துவபீட மாணவர்களால் 25 நிமிடங்களினை கொண்டதான **எனக்குள் ஒருவன்** குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. இக்குறும்படத்தின் கதை: ஆர்.கிசோ, இயக்கம்: க.சுதன், படத்தொகுப்பு: ஜோகிதாஸ் போன்றோரின் இணைப்பால் உருவாக்கம் பெறுகின்றது. பல்கலைக்கழகத்தினை மையமாகக்கொண்டே திரைக்கதை தொடர்கின்றது. பல்கலைக்கழக வாழ்க்கையில் பலருக்கு தங்களது இன்பதுன்பங்களினைப் பகிர்ந்துகொள்ள பலபேர் நண்பர்களாக இருப்பார்கள் ஆனால் சிலருக்கு தான் சேர்ந்து கூடித்திரியும் நண்பர்களைத்தவிர வேறுயாரும் இருக்கமாட்டார்கள்.

இந்நிலையில் தனது நண்பர்கள் எல்லோருக்கும் பெண் நண்பிகள் இருக்கிறார்கள் தனக்குமட்டும் இல்லை என்கின்ற ஏக்கமும், தவிப்பும் குட்டியின் கதையாக அமைகின்றது. குட்டியின் கவலையினை தீர்ப்பதற்கு அவனது நண்பன் ஒருபெண்ணின்பெயரில் Face BooK உருவாக்கி குட்டியுடன் chat பண்ணுகிறான். தன்னை ஒரு பெண்காதலிக்கிறாள் என குட்டி உணர்கிறான். இறுதியில் அவையாவும் பயனற்றுப்போக தற்கொலை செய்வதாக திரைக்கதை செல்கின்றது. இறுதியில் தற்கொலைக்குச் சென்ற குட்டியை அவனது நண்பன் காப்பாற்றுகின்றான் ஆனால் காப்பாற்றிய நண்பன் இறக்கின்றான். இறுதியில் நடந்த உண்மைகள் தெரியவருகின்றது. காதலால் நட்பை இழந்தவர்கள் உண்டு. ஆனால் நட்பால் காதலை இழந்தவர்கள் இல்லை என்ற செய்தியைத் தருவதாக இக்குறும்படம் அமைய புதியபடைப்புகளும் புதியமுயற்சிகளும் மனப்போராட்டங்களும் எங்களை ஒன்றிக்கச்செய்கின்றன.

**பாஸ்மாக்ஸ் – 2012**

2012 இல் 13 நிமிடங்களினை கொண்டதான **பாஸ் மாக்ஸ்** எனும் குறும்படம் பிரான்ஸிஸ் சேவியர் அவர்களின் தயாரிப்பில் உருவாகின்றது. எழுத்துரு, இயக்கம்: வி.திரிக்ஷான், படத்தொகுப்பு: துக்ஷாந், குரு, சிந்து, கலைவடிவமைப்பு: செல்வகுமார் போன்றோரின் தொகுப்பாக அமைகின்றது. பரீட்சையில் எப்பிடியாவது பாஸ்மாக்ஸ் பெற்றிடவேண்டும் என அச்சிந்தனையாகவே வாழும் ஒரு பாடசாலை மாணவனும் அது பற்றிய எண்ணமும், சிந்தனையும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் திரியும் அவனுடைய நண்பர்களும் என இதனுடைய கதை திரைக்கதையூடாக நகர்கின்றது.

**கொள்ளை – 2012**

2012 இல் மட்டக்களப்பினைச் சேர்ந்த நண்பர்களின் இணைப்பால் சுயதயாரிப்பில் 16 நிமிடங்களினைக் கொண்டதான **கொள்ளை** எனும் குறும்படம் வெளிவருகின்றது. இக்குறும்படத்தின் எழுத்துரு, இயக்கம்: றொசான், படத்தொகுப்பு: பரணி, இசை: செந்தூரன்.

அண்மைக்காலமாக இலங்கையிலும் குறிப்பாக மட்டக்களப்பிலும் சட்டவிரோதமாக அவுஸ்ரேலியா செல்வதென்பது நடைபெறுகின்ற ஓர்விடயமாகும். இதனைக் கொள்ளை என்பதுடன் தொடர்புபடுத்தி இக்குறும்படத்திற்கான திரைக்கதை அமைக்கப்பட்டுள்ளது. தனது தங்கையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக தனது கிட்னியை விற்று பணம் பெற்றுக்கொள்ளும் அவ்இளைஞன் ஒரு சந்தர்ப்பத்தில் பணத்துடன் செல்லும் வேளையில் பணம் பறிமுதல் செய்யப்பட்டு கொலை செய்யப்படுகின்றான். இதற்கு காரணம் அவனோடு இணைந்திருந்த நண்பன் அவுஸ்ரேலியா செல்லும் ஆசையில் தனது இன்னுமொரு நண்பன் வழியாக அவனது நண்பனைக் கொலைசெய்து அப்பணத்தினைப் பெற்றுக்கொள்வதோடு இறுதியில் அவர்கள் கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவதாக கதை அமைகின்றது. ஏமாற்றுபவர்களும், ஏமாறுபவர்களும் எம்முடனேயே இருப்பதாக அதனது செய்தி அமைகின்றது. இது மட்டக்களப்பில் நிலவுகின்ற கொள்ளை, சட்டவிரோதமாக வெளிநாடு செல்லல் போன்றவற்றினை சமூகப்பிரச்சினையாக இனங்காட்டி நிற்கின்றது.

### நானும் ஒரு தாய் – 2012

2012 இல் மட்டக்களப்பினைச் சேர்ந்த கோவர்த்தனின் எழுத்துரு, இயக்கத்தில் உருவாக்கம் பெற்றதே 11 நிமிடங்களினைக் கொண்ட **நானும் ஒருதாய்** குறும்படமாகும். இக்குறும்படம் முற்றுமுழுதாக இந்தியாவில் தயாரிக்கப்பட்டதோடு இந்தியக் கலைஞர்களின் உருவாக்கத்தில் வெளிவந்ததாகும். இந்திய இயக்குனர் பாலுமகேந்திராவின் பயிற்சிப்பட்டறையினூ டாக வெளிவந்திருப்பினும் மட்டக்களப்பினை சேர்ந்தவரின் படைப்பாக இருப்பதால் இவ் ஆவணப்படுத்தலினுள் உள்ளடக்கப்பட்டுள்ளது. தயாரிப்பு: பத்மநாதன், படத்தொகுப்பு: ஜெயராஜ், ஒளிப்பதிவு: கார்த்தி, கதை: மேனகா போன்றோர் பங்கெடுத்துள்ளனர். ஒரு பெண் கர்ப்பமாக இருக்கும்போது அவள் அனுபவிக்கும் துன்பங்கள், கஷ்டங்களினை ஆண்களாலும், குறிப்பாக கணவனாலும் உணர்ந்துகொள்ள முடிவதில்லை. அதனை ஒரு புறநடையில் வைத்து பார்க்கின்ற சூழல் உண்டு. இவ்விடயப்பொருளினை ஒரு ஆண்கர்ப்பமாக இருந்தால் எவ்வாறான உணர்வுகளையும், துன்பங்களினையும் அனுபவிக்க நேரிடுகின்றது எனும் விடயப்பொருளினை ஒரு திரைக்கதையோட்டத்தினூடாக கூறமுற்படுகிறார். இறுதியில் அவளது வீட்டுவேலைகளிலும், செயற்பாடுகளிலும் தன்னை இணைத்துக்கொள்ளும் கணவனாக கதையின் முடிவு அமைகின்றது.

### வலி – 2012

2012 இல் மட்டக்களப்பினைச் சேர்ந்த துக்ஷி என்பவரின் கதை, திரைக்கதை, ஒளிப்பதிவு இயக்கத்தில் 11 நிமிடங்களினைக் கொண்டதான **வலி** எனும் குறும்படம் தயாரிக்கப்படுகின்றது. பாடல்: கரி, படத்தொகுப்பு: நிறோ, துக்ஷி. கல்விகற்று பட்டதாரி கல்வியினை நிறைவுசெய்த ஒரு இளைஞனின் கதையினையே இக்குறும்படம் பேசுகின்றது. தான் கல்விகற்றும் தனக்கு ஒரு தொழில் கிடைக்காததன் விரக்தியும், எத்தனையோ வேலைகளுக்கு விண்ணப்பித்தும் எதுவும் பலன் தராதசூழலில் இனி வாழ்வதில் அர்த்தமில்லை என்று எண்ணி நஞ்சினை அருந்துகிறான். அவ்வேளை தொலைபேசி மூலமான தொழிலில் இணைவதற்கான அழைப்பு வருகின்றது. அடுத்தகணமே அவன் உயிரை விடுகிறான். தற்காலச் சூழலுக்குப் பொருத்தமான கதை என்றே கூறமுடியும். ஏனெனில் அவன்கற்ற கல்வி அவனை தற்கொலை

செய்வதற்குரிய சிந்தனையினைத்தான் கொடுத்ததே தவிர அதிலிருந்து விடுபடுவதற்குரிய சூழலினை கொடுக்கவில்லை. காரணம் எங்களது கல்விமுறைமை விமர்சனநோக்கிலும், பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்குமான முறைமையினை விடுத்து எதையும் தாங்கமுடியாத மனிதர்களை உருவாக்கிக் கொண்டிருப்பதையே இக்குறும்படம் மறைமுகமாக உணர்த்துகின்றது. திறந்தவெளிகளும், கடற்கரைச்சூழலும் குறும்படம் நகரும் களங்களாக அமைகின்றது.

## முடிவு

மட்டக்களப்பு சமூகச்சூழலில் குறுந்திரைப்படச்செயற்பாடு இன்று பரவலாக எல்லோராலும் முன்னெடுக்கப்படுகின்ற ஒன்றாகவே காணப்படுகின்றன. ஆனால் குறும்படங்கள் அதன் முழுவீச்சிலும் முழுப்பரிணாமத்திலும் முன்னெடுக்கப்படுகின்றதா என்பதும் அவை சினிமாவின் தரத்திற்குரியதாக அமைகின்றதா ? என்பது விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டியுள்ளது. ஆயினும் இதுவரைகாலமும் குறுந்திரைப்படச் செயற்பாட்டில் ஈடுபட்டுவந்தவர்களின் பணி கவனிப்பிற்குரியதாகும். முழுநீளபடங்களினூடாக பேசமுடியாத விடயங்களை குறும்படங்களினூடாக பேசமுனைகின்றபோது அவை வன்மையானதாகவே அமையவேண்டும். மட்டக்களப்பு பிரதேசத்தில் கமரா, தொழில்நுட்ப பாவனை தொடர்பாக நாங்கள் இன்னும் பரீட்சயப்படுகின்ற சூழல் அவசியமாகின்றது.

ஏனெனில் சினிமாத் தொழில்நுட்பத்தினைப் பிரதானப்படுத்திய கலைவடிவமாக குறும்படங்கள் அமைவதால் அதில் கூடிய கவனம் செலுத்துதல் அவசியமாகின்றது. இன்று உலகமயமாதல் செயற்பாடு மனிதரை மனிதர் அன்னியப்படுத்தி விஷக்கொடுக்குகளுக்குள் தள்ளுகின்ற நிலையில் மட்டக்களப்பின் தனித்துவத்தினை அடையாளப்படுத்துகின்ற சில விடயங்களினையும் பேசவேண்டியது குறுந்திரைப்படச் செயற்பாட்டாளர்களின் முக்கிய கடமையாகின்றது. மட்டக்களப்பில் போர்க்கால சமூக அமைப்பிலும் போருக்குப்பின்னரான சூழலிலும் பல்வேறு விடயங்கள் பிரச்சினைகள் பற்றிப் பேசவேண்டியது அவசியமாகின்றது. இதற்கு குறுந்திரைப்படச் செயற்பாடுகளே பொருத்தமான ஊடகமாக அமைகின்றன. வெறுமனே பொழுதுபோக்குச் சினிமாவிற்குள் தங்களை அறியாமல் திணிக்கப்பட்டுள்ள மக்களை எவ்வாறு இக்குறும்படங்களினூடாக எவ்வாறு எங்களது சமூகம் சார்ந்த சிந்தனைக்குக் கொண்டு செல்லப்போகின்றோம் என்பது எம்மத்தியில் உள்ள பாரிய சவாலாகும். எனவே இது குறித்தும் நாங்கள் செயற்படுவதோடு கமரா தொழில்நுட்பங்கள் சார்ந்தும் ஈடுபட்டு காத்திரமான குறுந்திரைப்படச் செயற்பாட்டில் ஈடுபடுவது அவசியமாகும்.

ஆவணப்படுத்தலில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உண்மைத் தன்மைகளாக அமைவதுடன் முடிந்தவரையில் மட்டக்களப்பில் வெளியான குறும்படங்களினையும், அவற்றின் உள்ளடக்கங்களினையும் இணைத்துக் கொண்டதாகவே ஆவணப்படுத்தலின் விடயங்கள் அமையப்பெறுகின்றன. சில குறும்படங்களின் இறுவட்டுக்கள் பாவனைக்கு உதவாதவையாக இருப்பதால் சில குறும்படங்களின் விபரங்களினை முழுமையாக தரமுடியவில்லை என்பதனைக் குறிப்பிடுவதுடன் இது தொடர்பான விபரங்களினை முழுமையாக பெறுவதில் ஈடுபட்டுள்ளேன்.

| ஆண்டு | குறும்படத்தின் பெயர் | நேரம் | இயக்குனர் |
|---|---|---|---|
| 2002 | பிளவுகள் | 25 நிமிடம் | தேவஅலோசியஸ் |
| 2004 | இறக்கை | 30 நிமிடத்திற்குள் | எம்.ஐ.ஜாபீர் (என்.ஆத்மா) |
| 2005 | கிச்சான் | 26 நிமிடம் | அ.விமல்ராஜ் |
| 2005 | புகலிடம் | 30 நிமிடத்திற்குள் | முகைதீன் ஹஸன் |
| 2005 | புரிதல் | 30 நிமிடத்திற்குள் | முகைதீன் ஹஸன் |
| 2006 | கிழக்குவானம் | 22 நிமிடம் | தேவஅலோசியஸ் |
| 2007 | பெரியபள்ளி பேஸ் இமாம் | 30 நிமிடத்திற்குள் | ரமீஸ் |
| 2008 | ஆத்மநேயம் | 3 நிமிடம் | சிவாஜி, மின்னொளி |
| 2008 | வாய்ப்புகள் | 5 நிமிடம் | ஏ.மகேஸ்வரன், எஸ்.பத்மநாதன் |
| 2008 | கற்பது இப்பிடியுமா | 9 நிமிடம் | சு. வசந்தன், தி.காயத்திரி |
| 2009 | தண்ணீர் | 20 நிமிடம் | அ. விமல்ராஜ் |
| 2010 | நானும் | 3 நிமிடம் | நா. விஜயதாஸ் |
| 2010 | சாம்பல் | 30 நிமிடத்திற்குள் | முகைதீன் ஹஸன் |
| 2010 | மனிதன் வந்தான் | 30 நிமிடத்திற்குள் | முகைதீன் ஹஸன் |
| 2011 | அம்மா | 20 நிமிடம் | தேவஅலோசியஸ் |
| 2011 | வீரன் | 20 நிமிடம் | தேவஅலோசியஸ் |
| 2011 | முற்றுப்புள்ளி | 7 நிமிடம் | கோபிரமணன் |
| 2012 | ஆசை | 2 நிமிடம் | தேவஅலோசியஸ் |
| 2012 | என் உயிர் நண்பன் | 19 நிமிடம் | வேணுதரன் |
| 2012 | எனக்குள் ஒருவன் | 25 நிமிடம் | க. சுதன் |
| 2012 | பாஸ் மாக்ஸ் | 13 நிமிடம் | வி. திரிக்ஷான் |
| 2012 | கொள்ளை | 16 நிமிடம் | றொசான் |
| 2012 | நானும் ஒரு தாய் | 11 நிமிடம் | கோவர்த்தனன் |
| 2012 | வலி | 11 நிமிடம் | துக்ஷி |

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை சார்ந்த சிறப்புப் பட்டநெறி இறுதியாண்டு மாணவர்கள் சமர்ப்பித்த 1996–2008 ஆய்வுக் கட்டுரைகளையும் (Dissertation) பின் பட்டப் படிப்பு நெறி பயின்ற மாணவர்கள் சமர்ப்பித்த பேராய்வு கட்டுரைகளையும் (Thesis) அவற்றின் விபரங்களையும் ஆவணப்படுத்தல்

சி. மௌனகுரு

1986 இல் ஆரம்பிக்கப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையின் செயற்பாடுகள் 1992 இலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன. நுண்கலையில் விசேட கற்கைநெறிகள் 1992 இலிருந்து ஆரம்பிக்கப்படுகின்றன. பின்னாளில் நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தில் விசேட கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டது. விசேட கற்கை நெறியைப் பின்பற்றும் மாணவர்கள் தமது இறுதி ஆண்டில் தட்டச்சு வடிவில் 100 பக்கத்திற்குக் குறையாத ஒரு பெரும் ஆய்வுக் கட்டுரை (Dissertation) சமர்ப்பிக்க வேண்டும். நுண்கலைத் துறையில் விசேட கற்கைநெறி பயின்ற முதல் தொகுதி மாணவர்கள் 1997இல் வெளியேறுகின்றனர்.

1999 களில் பட்டப் படிப்பு நெறிகள் (M.A,M.Phil,Ph.D.) ஆரம்பிக்கப்பட்டன. அதிற் பயின்ற மாணவர்களும் பேராய்வுக் கட்டுரைகள் (Thesis) சமர்ப்பித்தனர். 1997 இலிருந்து 2008 வரை ஏறத்தாழ 80 பெரும் ஆய்வுக் கட்டுரைகள் மாணாக்கரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாய்வுக் கட்டுரைகளில் 90 விகிதமானவை குறிப்பாக இலங்கை தமிழர் பண்பாட்டிலும், சிறப்பாக கிழக்கு மாகாணத் தமிழர் பண்பாட்டிலும் செய்யப்பட்டவையாகும். உள்ளூர் கலைகளில் கவனம் செலுத்துமாறு மாணவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

இவ்வாய்வுகள் ஓவியம், சிற்பம், கட்டிடம், அவைக்கு ஆற்று கலைகள் (நாடகம், கூத்து, இசை, நடனம்), கிராமியக் கலைகள் சடங்குகள், கோவில்கள், வழிபாட்டு முறைகள், விளிம்பு நிலை மக்கள் கலைகள் போன்ற பல்வேறு பொருள்களில் செய்யப்பட்டுள்ளன.

பட்டப்படிப்பு மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வின் ஆரம்ப நிலையில் உள்ளனவாயினும் முறையியலுக்கூடாக ஆய்வு செய்யப் பயிற்றப்பட்ட மாணவர்களினால் செய்யப்பட்டமையினால் பெறுமதி மிக்க தரவுகளைக் கொண்டுள்ளன. இத் தரவுகள் இத்துறையில் மேலும் ஆய்வு செய்பவர்களுக்கு மிகுந்த துணை புரிவன.

பட்டப்படிப்பு மாணவர்களின் பேராய்வுக்கட்டுரைகள, முறையியலுக்கூடாக செய்யப் பட்டமையினால் மிகப் பிரயோசனமானவை. இவ்வாய்வுக் கட்டுரைகளை ஆவணப்படுத்தலும் அறிமுகப்படுத்தலும் மிக அவசியமாகும்.

1996 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரை கிழக்குப் பல்கலைக்கழக நுண்கலைத்துறை விசேட கற்கை மாணவர்கள் (BA Hons ) சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளின் தலைப்புக்களும் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டுகளும்,

## 1996 ஆம் ஆண்டு

1. முல்லைத்தீவு மாவட்டத்தில் கோவலன் கூத்து - பு. புஸ்பராணி
2. செட்டிபாளைய கண்ணகை அம்மன் ஆலய சமயச் சடங்கு - ஒரு நாடக நிலை நோக்கு - வடிவேல் இன்பமோகன்
3. வெல்லாவெளி மாரியம்மன் கோவில் சடங்கு - ஒரு நாடக நிலை நோக்கு - சுந்தரம்பிள்ளை சிவரத்தினம்
4. பட்டிருப்புத்தொகுதி பொன் தொழிலாளர் செய்கின்ற தங்க நகைகளின் செய் முறையும் அழகியல் அம்சமும் - வனிதா அரசரத்தினம்
5. மட்டக்களப்பு தேவாலயக் கட்டிடக் கலையும் மேற்கத்தேய தாக்கமும் - றோச் ஸ்டான்லி பிரபாகரன்
6. மட்டக்களப்பு தாமரைக் கேணி மாரி அம்மன் கோவில் சடங்குகளும் அதில் காணப்படும் நாடகத்தன்மைகளும்
7. செட்டிபாளையம் வசந்தன் கூத்து - சதாகரன்
8. புன்னைச்சோலை காளியம்மன் கோவில் சடங்கு - ஒரு நாடக நிலை நோக்கு - அன்பழகன்

## 1997 ஆம் ஆண்டு

9. *மட்டக்களப்பில் நவீன நாடகம் ஒரு வரலாற்று நோக்கு - சுப்பிரமணியம் மகேந்திரன்*

   இக்கட்டுரையில் மட்டக்களப்பில் இருந்த பாரம்பரிய அரங்கு அதன் பின்பு மட்டக்களப்பிற்கு வந்த டிறாமா மோடி நாடகம், அதன் பின்பு வந்த சினிமாப் பாணி நாடகம் அதன் பின்பு பேராசிரியர் வித்தியானந்தனின் கூத்தின் மீள்கண்டுபிடிப்பின் தாக்கம், பாடசாலைகளில் அரங்கு, கிழக்கு பல்கலைக்கழகத்தின் வருகையினால் மட்டக்களப்பில் ஏற்பட்ட நாடகத்தாக்கம், இன்று மட்டக்களப்பின் நவீன நாடகத்தின் நிலை ஆகியனபற்றிக் கூறப்படுகின்றன.

10. *மட்டக்களப்பில் இந்து சிற்பப் பாரம்பரியம் - கலைவாணி கந்தசாமி*

    இக்கட்டுரையில் மட்டக்களப்பில் காணப்படுகின்ற மதம் சார்ந்த சிற்பங்களும், மதம் சாரா சிற்பங்களும் கண்டறிப்படுவதுடன் சிற்ப பாரம்பரியத்திற்கு ஏற்ப இச்சிற்பங்கள் ஆராயப்பட்டுள்ளன.

11. *மட்டக்களப்பில் பனம்பொருள் கைவினைப் பாரம்பரியம் ஒரு நுண்கலை நோக்கு - சறோஜாதேவி நாராயணன்பிள்ளை*

    இக்கட்டுரையில் மட்டக்களப்பின் பனம்பொருள் கைவினைகள் அறிமுகப்படுத்தப்படுவதுடன் இக்கைப்பணிகளின் கலை அம்சங்களும், நவீன பனம்பொருள் கைப்பணிகளின் கலை அம்சங்களும் விளக்கப்படுகின்றன.

12. *மட்டக்களப்பில் ஓவியக்கலை - கந்தவனம் உதயகுமார்*
    இக்கட்டுரையில் மட்டக்களப்பு ஓவியர்கள் பற்றியும், மட்டக்களப்பில் பாடசாலைகளில் ஓவியப்பயிற்சி பற்றியும், சித்திர ஆசிரியர்கள் பற்றியும் தகவல்கள் தரப்படுவதுடன் மட்டக்களப்பு மாவட்ட ஓவிய வளர்ச்சிக்கு என்னென்ன செயற்பாடுகள் மேற்கொள்ளப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

## 1998 ஆம் ஆண்டு

13. *மட்டக்களப்பில் மதம் சாரா கட்டிடக்கலை - பிரசாந்தி மகாலிங்கசிவம்*

இக்கட்டுரையில் மட்டக்களப்பில் கிராமப்புறம் சார்ந்த இல்லங்கள், நகர்புறம் சார்ந்த இல்லங்கள், பொதுக் கட்டிடங்கள், கல்விசார் கட்டிடங்கள், வர்த்தக நிலையங்கள், தொழிற்சாலைக் கட்டிடங்கள், பொது மண்டபங்கள் போன்றவற்றின் விபரங்கள் தரப்பட்டு இக்கட்டிடங்களில் காணப்படும் தமிழர் கட்டிடக்கலை அமைப்பு, இஸ்லாமிய கட்டிடக்கலை அமைப்பும் விளக்கப்பட்டுள்ளது. அத்துடன் மட்டக்களப்பின் கட்டிடப் பொறியியல் தன்மையும் விளக்கப்பட்டு கட்டிடக்கலை சம்மந்தமாக எழும் பிரச்சினைகளும் ஆராயப்பட்டுள்ளன.

14. *மட்டக்களப்பில் இசை - ஆறுமுகம் சிறிதரன்*

இக்கட்டுரையில் மட்டக்களப்பின் வரலாறு சமூக அமைப்பின் பின்னணியில் இசை பயில்முறை ஆராயப்படுகிறது. மட்டக்களப்பில் வழங்குகின்ற இசைகளின் பகுப்பும் இங்கு செயற்படுகின்ற இசை நிறுவனங்களின் தகவல்களும் தரப்படுகின்றன.

## 1999 ஆம் ஆண்டு

15. *தமிழ் இசை ஓர் ஆய்வு - அழகையா விமல்ராஜ்*

இக்கட்டுரையில் தமிழ் இசை வந்ததுக்கான காரணங்களும், தமிழ் இசை உணர்வுக்கான காரணங்களும், வரலாறும் தரப்பட்டு தமிழ் இசையின் இன்றைய போக்குகளான பண்ணிசை, கர்நாடக இசை, நாட்டாரிசை, சினிமா இசை, கலப்பிசை என்பன பற்றி ஆராயப்பட்டுள்ளன.

16. *பழுகாமம் திரௌபதை அம்மன் ஆலயச் சடங்கு - ஒரு நாடக நிலை நோக்கு - இராமலிங்கம் ஜெகநாதன்*

இக்கட்டுரையில் பழுகாமம் திரௌபதை அம்மன் ஆலயச் சடங்கு பற்றிய விபரங்கள் தரப்படுவதுடன் அரங்க அம்சங்கள் கொண்ட திரௌபதை சடங்குகளும் அதன் அரங்கியல் கூறுகளும் ஆராயப்படுகின்றன. அத்தோடு நவீன அரங்க முயற்சிகளுக்கு பழுகாமம் திரௌபதை அம்மன் சடங்கில் காணப்படும் அரங்க அம்சங்கள் உதவும் விதங்களும் கூறப்படுகின்றன.

## 2000 ஆம் ஆண்டு

17. *மட்டக்களப்பு கூத்து மரபில் ஏற்பட்ட மாற்றம் (மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடி, தென்மோடி கூத்துக்களின் மேடை, உடை, ஒப்பனை என்பனவற்றை மையம் கொண்ட ஓர் ஆய்வு) - தங்கத்துரை நிவேதா*

இக்கட்டுரையில் மட்டக்களப்பில் ஆடப்படும் வடமோடி தென்மோடி கூத்துக்களின் மரபும் அதில் ஏற்பட்டு வந்த மாற்றங்களும் கூறப்படுவதுடன் உடையமைப்பு, ஒப்பனை, மேடையமைப்பு, நடிகர்கள் கையாளும் ஆயுங்கள் என்பனவும், இவை காலம் தோறும் எவ்வாறு மாறி வந்தன என்பனவும் ஆராயப்படுகின்றன.

18. *கிழக்கு மாகாணத்தில் பரதக்கலை (திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களை மையப்படுத்திய ஆய்வு) - பிரியந்தினி சுப்பிரமணியம்*

இக்கட்டுரையில் இவ்விரு மாவட்டங்களிலும் உள்ள பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் மன்றங்களிலும் இடம்பெறுகின்ற பரதக்கலை பற்றி விளக்கப்படுவதுடன் தனிப்பட்ட முறையில் பரதக்கலைக்காக உழைத்த, உழைக்கின்ற கலைஞர்களின் விபரமும் தரப்பட்டுள்ளன.

19. *கிழக்கு மாகாணத்தில் கர்நாடக சங்கீதம் - கீதாதேவி தங்கலிங்கம்*

இக்கட்டுரையில் கிழக்கு மாகாணத்தில் கர்நாடக இசை பரவிய முறையும் சமூகப்பின்னணியும் தரப்பட்டு விபுலானந்த இசை நடனக்கல்லூரி, மட்டக்களப்பிலுள்ள பாடசாலைகள், தனியார் நிறுவனங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றில் கர்நாடக சங்கீதத்திற்கு உள்ள இடம் நோக்கப்படுகிறது.

## 2001 ஆம் ஆண்டு

20. *மட்டக்களப்பு பிரதேசத்தில் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் அமைந்துள்ள தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தை மையப்படுத்தி எழுந்த கலைகள் - பரமேஸ்வரி சிவகுரு*

இதில் கொக்கட்டிச்சோலை கிராமத்தின் அமைவிடமும் மக்கள் வாழ்வு முறைகளும் சமூக பின்னணிகளும் தரப்பட்டு அதன் பின்னணியில் எழுந்த கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை என்பன நோக்கப்பட்டு, அத்தோடு தான்தோன்றீஸ்வரர் ஆலத்திற்கும் சமூக அமைப்பிற்கும் இடையே உள்ள ஈடாட்டமும் கலையும் எவ்வாறு கலை பண்பாட்டு அம்சங்களை மையமாகவும், பொருளாதார மத்தியஸ்தானமாகவும் விளங்குகிறது என்பதும் இவ்வாலயத்தின் ஆரம்ப கால வழிபாட்டு முறைகளும் தற்போதுள்ள தன்மைகளும் வழிபாட்டு முறைகளும் விளக்கப்படுகின்றன.

21. *மட்டக்களப்பு நகர மாரியம்மன் கோயில்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் - தர்மதாஸ சுரமஞ்சரி*

இதில் மட்டக்களப்பில் வழிபடப்பட்டு வருகின்ற ஆகமம் சார்ந்த, சாராத என வழிபாட்டு முறைகள் பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றன. கோட்டமுனை புன்னையம்பதி மகா மாரியம்மன் கோயில், ஊரணி கொக்குக்குளத்து மாரியம்மன் கோயில், கோட்டமுனை தாமரைக்கேணி முத்துமாரியம்மன் கோயில், மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் ஆகியன விளக்கப்பட்டு அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் விளக்கப்படுகின்றன. அத்தோடு மாற்றத்திற்கான காரணங்களும் ஆராயப்படுகின்றன.

## 2002 ஆம் ஆண்டு

22. *அம்பாறை மாவட்ட தமிழ் விவசாயிகள் மத்தியில் காணப்படும் சடங்கு முறைமைகள் பற்றிய ஓர் ஆய்வு - இரத்தினசிங்கம் குணசீலன்*

இக்கட்டுரையில் அம்பாறை மாவட்ட தமிழர்கள் பற்றிய அறிமுகமும் அவர்களது சமூக அமைப்பும் பொருளாதார நிலையும் தரப்படுவதுடன் சிறப்பாக விவசாயிகளின் வாழக்கை முறை விவசாயத்தோடு சேர்த்து விளக்கப்படுகிறது. இச்சடங்குகளை வாழ்வியல் சடங்குகள் வேளாண்மைச் சடங்குகள், கோயில் சடங்குகள் என்று மூன்று வகையினதாக பார்க்கின்றார் ஆய்வாளர்.

23. *முல்லைத்தீவு மாவட்டத்தில் இசை மரபு - ராஜினி கந்தையா*

இதில் முல்லைத்தீவு மாவட்ட மக்களின் வரலாறு, சமூக பொருளாதார அமைப்பு என்பனவற்றின் பின்னணியில் நோக்கப்படுகிறது. அம்மக்கள் மத்தியில் பயிலப்படும் இசையை மரபு வழி நாடக இசை, நாட்டார் இசை, கர்நாடக இசை, போர்க்கால இசை என வகுத்து தருகிறார் ஆய்வாளர். பாடசாலைகள், உயர் தனியார் நிறுவனங்கள், மன்றங்கள், அமைப்புக்கள் என்பனவற்றில் வழங்கும் இசைவடிவங்களின் இன்றைய நிலையும் அடுத்த கட்ட வளர்ச்சிக்கு எவ்வாறாக தயாராக வேண்டியுள்ளது என்பன போன்ற விடயங்கள் இவ்வாய்வில் கருப்பொருளாய் அமைந்துள்ளன.

24. *மட்டக்களப்பு பிரதேசத்தில் மண்டூர் கிராமத்தில் அமைந்துள்ள மண்டூர் கந்தசாமி ஆலயத்தை மையப்படுத்தி எழுந்த கலை வடிவங்கள் - குமுதினி ஜெயசிங்கம்*

இதில் மட்டக்களப்பு பிரதேசத்தில் உள்ள மண்டூர் கிராமத்தின் அமைவிடமும் அதன் சமூக அமைப்பு அவைகள் பண்பாடும் அறிமுகப்படுத்தப்படுவதுடன் அவற்றின் அடியாக பிறந்த மண்டூர் கந்தசாமி ஆலயத் தோற்றமும் தரப்படுகிறது. இக்கோயிலை மையப்படுத்திய கட்புல செவிப்புல கலைகளும் அவைக்காற்றுக் கலைகளும் தரப்படுவதுடன் மண்டூர் கந்தசாமி கோயிலுக்கும் சமூகத்துக்கும் உள்ள தொடர்பு விளக்கப்பட்டு ஆரம்ப காலங்களில் இவ்வாலயத்தில் காணப்பட்ட கலையம்சங்களும் காலப்பின்னணியில் கூறவும்படுகின்றது.

## 2003 மற்றும் 2004 ஆம் ஆண்டு

25. *மேல் நிலையாக்கமும் செட்டிபாளையம் கண்ணகியம்மன் ஆலயமும் - ராஜினிதேவி முருகையன்*

இதில் மட்டக்களப்பு செட்டிபாளைய கண்ணகியம்மன் ஆலய அமைவிடம், ஆலய வழிபாடு, வரலாறு, சாதி அமைப்பும் செல்வாக்கும் என்பன கூறப்படுவதுடன் செட்டிபாளைய கண்ணகியம்மன் கோயில் கலைகளிலும் வழிபாடுகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் ஏனைய மாற்றங்களும் அதற்கான காரணங்களும் ஆராயப்பட்டுள்ளன.

26. *மட்டக்களப்பு சிறுவர் நாடகங்கள் - சிவசம்பு.தயாபரன்*

இதில் மட்டக்களப்பில் அளிக்கை செய்யப்பட்ட சிறுவர் நாடகங்களின் அறிமுகமும் அதன் பட்டியலும் தரப்படுவதுடன் முக்கியமான சிறுவர் நாடக ஆளுமைகளும் அவர்கள் நிகழ்த்திய நாடகங்களும் தரப்பட்டு 1990 களில் இருந்து 2003 வரை நடைபெற்ற சிறுவர் நாடகங்களின் மதிப்பீடும் தரப்பட்டுள்ளது.

27. *மட்டக்களப்பு மாவட்டத்தில் மாறி வரும் பண்பாடு : புன்னைச்சோலை காளியம்மன் கோயிலை மைப்படுத்திய ஓர் ஆய்வு - சுந்தரலிங்கம் சுந்திரகுமார்*

இதில் புன்னைச்சோலைக் கிராமத்தின் அமைவிடம், வரலாறு என்பன தரப்படுவதுடன் காளியம்மன் கோயிலை 1980 க்குப் முன்னர், 1980 க்குப் பின்னர் எனப்பிரித்து ஆலய வழிபாட்டு முறைகள், உற்சவங்கள், நிர்வாக முறைகள் என்பன தரப்படுகின்றன. ஆலயத்துடன் தொடர்புபட்ட கலைகளால் ஏற்பட்ட மாற்றங்களால் அங்கு ஏற்பட்ட மாற்றங்களும் கூறப்படுகின்றன. புன்னைச்சோலை பத்திர காளியம்மன் கோயிலில் மாற்றங்கள் ஏற்பட்டதற்கான உள்ளார்ந்த வெளியார்ந்த காரணங்களும் அலசப்படுகின்றன

## 2005 ஆம் ஆண்டு

28. *வடகொழும்பு தமிழ் நாடகப்பாரம்பரியம் (1940 களிலிருந்து) - வாவனி கிருஷ்ணன்*

இதில் வடகொழும்பு தமிழர்களின் சமூக பொருளாதார நிலையும் தரப்படுவதுடன் கால அடிப்படையில் நாடகங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நாடக மன்றங்களின் ஊடாகவும் நாடகச் செயற்பாடுகள் கூறப்படுவதுடன் நிகழ்த்துகை அடிப்படையில் நாடகங்கள் நிகழ்த்தப்படுவது கூறப்பட்டு இனங்களுக்கிடையிலான ஒற்றுமையும் வலியுறுத்தப்படுகிறது.

29. *கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையினரின் கலைச்செயற்பாடுகள் ஓர் பார்வை - மேனகா சோமசுந்தரம்*

இதில் கிழக்குப் பல்கலைக்கழகத் தோற்றம், வளர்ச்சி, நுண்கலைத்துறையின் கலைச்செயற்பாடுகளும் கூறப்பட்டுள்ளன. நுண்கலைத்துறையினர் நடாத்துகின்ற நாடக விழா பற்றிய அறிமுகமும் விளக்கப்படுகின்றது. அத்தோடு கற்பித்தல் முறையினூடாக மாணவர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சிகளும் மாணவர் செயற்பாடுகளும் தரப்படுகின்றன.

30. *சித்தாண்டி சித்திரவேலாயுத ஆலயம் ஓர் சமூக பண்பாட்டு நோக்கு - நடராஜா திவ்வியராணி*

இதில் சித்தாண்டி கிராமத்தின் அமைவிடமும் அதன் சமூக, பொருளாதார, பண்பாட்டு வளங்களின் பின்னணியும் தரப்பட்டு இவ்வேலாயுத சுவாமி ஆலயத்திற்கும் இக்கலைச் செயற்பாடுகளுக்கும் உள்ள உறவு தேடப்படுகிறது. அத்தோடு வாழ்வியல் சார் பண்பாட்டு நிகழ்வு, தொழில்சார் பண்பாட்டு நிகழ்வு என்பனவும் கூறப்படுகின்றன. சமூகத்தின் மிகப்பெரும் நிகழ்வுகளான கொம்பு முறித்தல், சூரன் போர், சித்திரைக்கதை, புதிர் எடுத்தல் என்பன விளக்கப்படுகின்றன.

31. *இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் வர்த்தக தேசிய சேவைகளில் ஒலிப்பதிவான நாடகங்கள் - உதயதேவி நாகராஜா*

இதில் இலங்கை வானொலி பற்றி ஓர் அறிமுகம் தரப்படுகிறது. அதன் பின்னர் இலங்கை வானொலி தேசிய சேவை, வர்த்தக சேவை என்பனவற்றில் ஒலிபரப்பான நாடகங்களின் பட்டியலும் தரப்படுகிறது. இதை விட வானொலி நாடக எழுத்துரு நாடகத்தயாரிப்பாளர்கள் கவனிக்க வேண்டிய விடயங்கள், நாடக ஒத்திகை தொழில்நுட்ப உத்திகள் என்பன பேசப்பட்டு வானொலி நாடகங்களின் இன்றைய நிலையும் கூறப்படுகின்றது.

32. *கிழக்கு மாகாணத்தில் அச்சில் வெளிவந்த நாடக நூல்கள் - மோகனா குழந்தைவேல்*

இதில் கிழக்கு மாகாணத்தில் 1964 இன் பின் அச்சில் வெளிவந்த நாடக நூல்களின் விபரம் அவை கூறுகின்ற விடயங்கள் என்பன கூறப்பட்டு அந்நாடகங்கள் வகைப்படுத்தப்பட்டு அவை பற்றிய மதிப்பீடுகள் தரப்படுகின்றன.

33. *ஆரையம்பதியின் கலைப்பாரம்பரியம் - கவிதா இராசையா*

இக்கட்டுரையில் மட்டக்களப்பின் புவியியலமைப்பும் அதில் ஆரையம்பதி ஸ்தானமும் தரப்படுவதோடு ஆரையம்பதி கலை வடிவங்கள் பற்றிய அறிமுகமும் கூத்துக் கலை பற்றிய ஒரு நோக்கும் ஆரையம்பதியில் நடைபெறுகின்ற பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்களும் விழாக்களும் கொண்டாட்டங்களும் பதியப்பட்டுள்ளன.

34. *சுனாமி அனர்த்தமும் அதனால் பாதிக்கப்பட்ட கோரளைப்பற்று வடக்கு வாகரைப்பற்று பிரதேசக் கலைகளும் - கணபதிப்பிள்ளை பரமேஸ்வரன்*

இக்கட்டுரையில் வடக்கு வாகரைப் பிரதேச தொழில்கள், கலைகள் என்பன தரப்படுவதுடன் சுனாமிஅனர்த்தத்தினால்பாதிப்பிற்குள்ளானகலைஞர்களின்கருத்துக்களும்உளநிலைகளும் பதியப்பட்டுள்ளன. அத்தோடு சுனாமியின் பின் சமூகக் கட்டமைப்பிலும் கலைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் தரப்பட்டு, கோரளைப்பற்று வடக்கு, வாகரைப் பிரதேசத்தில் பாதிப்பிற்குள்ளான மக்களின் உளநிலைகள் அவர்களை மன அழுத்தங்களில் இருந்தும் இழப்பு குறித்தான வேதனைகளில் இருந்தும் எவ்வாறு விடுவிக்கலாம் என்பதும் கூறப்படுகிறது.

35. *வித்தியானந்தனுக்குப் பிறகு கூத்தியல் ஆய்வுகள் (அச்சில் வெளிவந்த கூத்தாய்வு நூல்களை உள்ளடக்கிய ஆய்வு) - கந்தசாமி மோகனதாசன்*

இக்கட்டுரையில் கூத்தாய்வுகள் வளர்ந்து வந்த விதமும் கூத்து வளர்ந்து வந்த விதமும் தரப்படுவதுடன் கூத்தாய்வு நூல்களில் தெரிந்தெடுக்கப்பட்ட நூல்களும் அவை தரும் விடயங்களும் தரப்பட்டு கூத்தாய்வுக்கும் கூத்து நிகழ்த்துகைக்கும் உள்ள தொடர்பு விமர்சன ரீதியாக ஆராயப்படுகிறது.

36. *திருகோணமலை நாடகப்பாரம்பரபியம் - துரைவீரசிங்கம் வான்மதி*

இக்கட்டுரையில் திருகோணமலை மாவட்டத்தின் தொழில் சமூகக் கட்டமைப்பு என்பன தரப்படுவதோடு திருகோணமலை மாவட்டத்தின் ஆரம்ப கால நாடக வளர்ச்சி 1900 தொடக்கம் 2005 வரை காணப்பட்ட நவீன நாடகங்கள் நாடக மன்றங்கள் ஆகிய தகவல்களும் பாடசாலைகளில் ஆரம்ப காலத்திலும் 1990 களுக்கு பின் பாடசாலை நாடக வளர்ச்சிப் போக்குகளும் தரப்பட்டு திருகோணமலை நாடக இலக்கியங்களின் விபரங்களும் தரப்படுகின்றன.

## 2006 ஆம் ஆண்டு

37. *கன்னன்குடா அண்ணாவிமார்களின் ஆற்றுகைச் செயற்பாடுகள் - தர்மலிங்கம் குயலவராஜா*

இக்கட்டுரையில் கன்னன்குடா பற்றிய அறிமுகமும் அங்கு வாழும் மக்களின் சமூக அமைப்பு, சாதி அமைப்பு, குடிமுறைகள் என்பன தரப்பட்டு கன்னன்குடாவில் அண்ணாவிமார்களின் இடமும் முக்கியத்துவமும் விபரமாக தரப்படுகிறது. கூத்துருவாக்கத்தில் அண்ணாவிமார்களின் செயற்பாடுகளும் அவர்களைப் பற்றிய பழைய கதைகளும் தரப்படுவதோடு மாறி இன்றைய நிலையில் அண்ணாவிமார்களின் நிலையும் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களும் கூறப்படுகின்றன.

38. *பரதமும் கூத்தும் (மட்டக்களப்பு வடமோடி கூத்தை மையப்படுத்திய ஓர் ஆய்வு) - துஷ்யந்தி பாலசுந்தரம்*

இக்கட்டுரையில் பரதமும் கூத்தும் விரிவாக அறிமுகம் செய்யப்படுவதுடன் இவற்றின் இடையே உள்ள ஒற்றுமைகள் எடுத்துக் கூறப்படுகின்றன. ஒவ்வொரு வடித்திலும் காணப்படும் தனித்துவங்கள் இனங்காணப்படுவதுடன் பரதத்தையும் வடமோடியையும் ஆடல், பாடல், ஆகாரியம், அளிக்கை, மேடையமைப்பு என்ற வகையில் ஒப்பிட்டு ஆராய்ந்து அதன் ஒற்றுமைகளும் கூறப்படுகின்றன. இவ்வாய்வு கூத்தையும் குறிப்பாக வடமோடியையும் பரதத்தையும் விளங்கிக் கொள்வதுடன் அவ்விரண்டையும் இணைத்து புதிய வடிவங்களை உருவாக்கும் முயற்சியையும் விளக்குகிறது.

39. *கூத்துக்களின் இன்றைய நிலையும் இவை எதிர் கொள்ளும் சவால்களும் (கூத்துக்கள் பயின்ற, பயிலப்பட்டு வருகின்ற கிராமங்களான அமிர்தகழி, சீலாமுனை ஆகிய ஊர்களை ஆதாரமாகக் கொண்ட ஆய்வு) - குணரெட்ணம் உமா*

இவ்வாய்வில் மட்டக்களப்பு வரலாறு சமூகம் கூத்து பற்றி வந்த நூல்கள் தரப்பட்டு மட்டக்களப்பு சமூகத்தில் கூத்து உருவாகும் முறையும் மட்டக்களப்பில் ஏற்பட்ட மாற்றங்களினால் கூத்து அளிக்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்களும் அதற்கான காரணங்களும் தரப்படுகிறது. இப்பின்னணியில் அமிர்தகழியில் ஆடப்பட்ட கூத்துக்களும் சீலாமுனையில் ஆடப்பட்ட கூத்துக்கள் பற்றிய விபரங்கள் தரப்பட்டு அமிர்தகழியில் கூத்து விடப்பட்டமைக்கும் சீலாமுனையில் கூத்து தொடர்ந்தமைக்கான காரணங்களும் சீலாமுனை கூத்து மீளுருவாக்கம் பற்றி அவ்வூர் மக்களது சாதக பாதகமான அபிப்பிராயங்களும் தரப்பட்டுள்ளது. மேலும் கூத்துக்களின் இன்றைய நிலையும் அவை எதிர்கொள்ளும் சவால்களும் தரப்படுகின்றது.

40. *சுனாமியின் பின் அம்பாறை மாவட்டச் சிறுவர்களின் உளநல அபிவிருத்தியில் அரங்கு பெறுகின்ற இடமும் அதன் பணிகளும் (அம்பாறை மாவட்டக் கரையோர சிறுவர் நிலையங்களை மையமாகக் கொண்ட ஆய்வு) - பரமானந்தன் பிரேமானந்தன்*

இக்கட்டுரையில் அனர்த்தங்களும் அவை ஏற்படுத்துகின்ற விசேடமான தாக்கங்களும் தரப்பட்டு அனர்த்தங்களால் தாக்கப்பட்டவர்கள் உள்ள மையப்படுத்தப்பட்ட நிலையங்களை இனங்கண்டு அங்கு நடைபெறுகின்ற அரங்க விளையாட்டுக்கள் வரிசைப்படுத்தப்பட்டு அவை எவ்வாறு சிறுவர்களின் உளநல விருத்திக்கு எவ்வாறு உறுதுணையாகின்றன என்று கூறப்படுகிறது. இதன் வெற்றிகளும் தோல்விகளும் விவாதிக்கப்படுகின்றன.

41. *மட்டக்களப்பு தமிழ்ச் சமூகத்தில் பறங்கி இனத்தவரின் பண்பாட்டுத் தாக்கங்கள் - துஷாந்தினி தர்மராஜா*

இதில் அருகி வரும் ஒரு சமூகமாக மட்டக்களப்பில் வாழும் பறங்கி இனச்சமூகம் இனம் காணப்பட்டு அவ் இனத்தினரின் மதம், மொழி, வாழ்க்கை முறைகள், தொழில்முறைகள், கலை வடிவங்கள் என்பன விளக்கப்பட்டு இவை எவ்வாறு தமிழ்ச் சமூகத்தின் பண்பாட்டில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளன என்பது கூறப்படுகிறது.

42. *கல்வியியல் அரங்கு - நாவற்குடா (கிழக்கு) சிறுவர்களுடான பங்கு கொள் அரங்க செயற்பாட்டு ஆய்வு - கலைமகள் கிருஷ்ணமூர்த்தி*

இவ்வாய்வு ஒரு பங்குகொள் ஆய்வாகும். நாவற்குடாவின் சிறுவர்களை தெரிவு செய்து அவர்களுடன் தொடர்ச்சியான உரையாடல்களிலும் நாடக ஈடுபாடுகளிலும் ஈடுபட்டு கல்வி அரங்கு மூலமாக அவர்களின் ஆளுமை விருத்தியினை உருவாக்கும் முயற்சி இவ்வாய்வில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பங்குகொள் செயற்பாட்டில் கிடைத்த மாணவர்கள் வரைந்த ஓவியங்கள், அவர்கள் எழுதிய பாடல்கள் ஆய்வாளருடன் இணைந்து நாவற்குடா சிறுவர் குழுவினால் உருவாக்கப்பட்ட அரங்க அளிக்கையான நாடகம் என்பன இவ்வாய்வில் உள்ளெடுக்கப்பட்டுள்ளன.

43. *மட்டக்களப்பு சிறுவர் இல்லங்களின் கலைச் செயற்பாடுகள் - தவராஜா சுஜிரேகா*

இக்கட்டுரையில் மட்டக்களப்பிலுள்ள சிறுவர் இல்லங்களின் எண்ணிக்கை தரப்பட்டு அதில் தெரிந்தெடுக்கப்பட்ட இல்லங்களான இராமகிருஷ்ண மிஷன், மங்கையற்கரசி மகளிர் இல்லம், ஜீவஜோதி மகளிர் இல்லம், ஓசாணம் இல்லம், அனாதை சிறுவர் பராமரிப்பு இல்லம் என்பனவற்றில் உள்ள சிறுவர்களின் உளரீதியான வளர்ச்சிகளும் கலை செயற்பாட்டு ரீதியான வளர்ச்சிகளும் இம்முயற்சிகள் அவர்களின் உளவளர்ச்சிக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதும் ஆராயப்பட்டுள்ளன.

44. *வெகுசன ஊடகமான சினிமாவும் தமிழ்ச் சமூகமும் (சமீப காலத் தமிழ்ச் சினிமாப் படங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வு) - சுகன்யா மகாதேவா*

இதில் தமிழ் சினிமாவின் சுருக்கமான வரலாறு தரப்பட்டு அது தமிழர்களின் பண்பாட்டிலும் அரசியலிலும் ஏற்படுத்திய தாக்கங்கள் கூறப்படுவதுடன் விருமாண்டி, தவமாய் தவமிருந்து, ஆயுத எழுத்து, சிவகாசி, அன்னியன், சந்திரமுகி ஆகிய படங்களை அடிப்படையாகக் கொண்டு வெகுசன ஊடகம் என்ற முறையில் அது எவ்வாறு தமிழ்ச் சமூகத்தை பாதித்தது என்பதனை இக்கட்டுரை ஆராய்கிறது.

45. *மாறிவரும் தமிழ் சினிமாவின் கதாநாயகி விம்பம் - தனேந்திரராஜன் நகுலேஸ்வர*

இதில் தமிழ்ச் சினிமாவின் தோற்றம், வளர்ச்சி பற்றி கூறப்படுவதுடன் 1931 தொடக்கம் 1990 வரை கதாநாயகி விம்பம் ஒன்று காலத்தினூடாக எவ்வாறு வளர்ந்து வந்தது என்பதை இக்கட்டுரை ஆராய்கிறது. முக்கியமாக 1990 தொடக்கம் கதாநாயகி விம்பம் வித்தியாசமான முறையில் வளர்ச்சியடைவதால் 1990 க்குப் பிந்திய கதாநாயகி விம்பத்தில் இவ் ஆய்வுக்கட்டுரை விசேட கவனம் செலுத்தியது.

## 2007 ஆம் ஆண்டு

46. *ஈழத்து தமிழர் மத்தியில் கல்வியியல் அரங்கு*
வடக்குக் கிழக்கு மாகாணப் பாடசாலைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு - விவானந்தராஜா

47. *மட்டக்களப்பு வீதி நாடகங்களில் அரசியல் - அழகியல் - சேகர்*

48. *மட்டக்களப்பு, பட்டிருப்புப் பிரதேச கைவினைப் பொருட்கள் - ஜெயராணி*

49. *மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடிப் பிரதேச கலைப் பாரம்பரியம் - நிகிலா*

50. *யாழ்ப்பாண இசை நாடகப் பாரம்பரியத்தில் நடிகமணி வி வி வைரமுத்து - சுஜானந்தி*

51. *தமிழ் சிங்கள அரங்குகளில் உடையும் ஒப்பனையும் - கிரிசாந்தினி*

52. *அனுருத்திரன் (தென் மோடி நாடகப்பிரதி ) அலங்கார ரூபன் (தென் மோடி) நாடகப் பிரதி ஓர் ஒப்பு நோக்கு - தயானா*

## 2008 ஆம் ஆண்டு

53. *குழந்தை சண்முகலிங்கத்தின் சிறுவர் நாடகங்கள் - ஜோதி பாலா*

54. *காத்தவராயன் நாடகப்பிரதியும் கந்தன் கருணை நாடகப் பிரதியும் - ஓர் ஒப்பீட்டாய்வு - புனிதா*

55. *மட்டக்களப்பு ஓவியர்கள் கமலநாதன், வாசன், கிக்கோ ஆகியோரை மையப்படுத்திய ஆய்வு - விஜயபுரவி*

## 2009 ஆம் ஆண்டு

56. *சித்தாண்டி மகிடிக் கூத்து பற்றிய ஓர் ஆய்வு - சூரியகுமார்*

57. *பிக்காசோவின் ஓவியங்களில் கியூபிச அணுகுமுறையின் வெளிப்பாடு - சிவாஜி*

58. *சமூக வலிமைப்பாடும் மரபு வழி நிகழ்த்து கலைகளும் ,யாழ்ப்பாணம் வலிகாமம் வடக்குப் பிரதேச வசந்தன் கூத்து, ஒயிலாட்டம் பற்றிய ஓர் ஆய்வு - சுகுணேந்திரன்*

59. *மட்டக்களப்பு வடமோடிக் கூத்துக்கு செல்லையா அண்ணாவியாரின் பங்களிப்பு - வி.நிசாந்தன்*

## முதுகலைமானி (நுண்கலை) 2008

60. *கோரளைப்பற்று தெற்குப் பிரதேச கலைகளும் கைவினைகளும் - கந்தசாமி சசிதரன்*

இக்கட்டுரையில் மட்டக்களப்பின் கோரளைப்பற்றின் கலைகள், கைவினைகள், ஆகியவற்றின் விபரங்களும் கலைஞர்கள், கைவினைஞர்கள் ஆகியோரின் விபரங்களும் இப்பகுதியில் கலை வளர்த்த நிறுவனங்களின் விபரங்களும் தரப்படுவதுடன் கலையினூடாக காணப்படுகின்ற கோரளைப்பற்றின் பண்பாட்டு கோலங்களும் கூறப்படுகின்றன.

61. *மட்டக்களப்பு பிரதேசத்தில் தமிழ் முஸ்லீம் மக்களின் வாழ்வியல் சடங்குகள் (ஆரையம்பதி, காத்தான்குடி) - விஸ்வராணி விஸ்வலிங்கம்*

இதில் கிழக்கிலங்கை மட்டக்களப்பு மாவட்டத்தின் புவியியல் வரலாறும் கலாச்சார பின்னணிகளும் தரப்படுவதோடு தமிழர் மத்தியில் வழங்குகின்ற வாழ்வியல் சடங்குகள், குழந்தை பிறப்புச் சடங்கு, பூப்பு நீராட்டுச்சடங்கு, திருமணச்சடங்கு, மரணச்சடங்கு என்பனவும் முஸ்லீம்கள் மத்தியில் வழங்குகின்ற வாழ்வியல் சடங்குகள், குழந்தை பிறப்புச் சடங்கு, விருத்த சேதன சடங்கு, பூப்பு நீராட்டுச்சடங்கு, திருமணச்சடங்கு, மரணச்சடங்கு என்பனவும் தரப்பட்டு இவ்விரண்டு சமூகத்திற்கும் இடையே உள்ள சடங்குகளை ஒப்பு நோக்கி ஆராய்கின்றது.

62. *சிலப்பதிகாரத்தில் இசை - தேவஇரக்கம் இளங்கோவன்*

இக்கட்டுரையில் சிலப்பதிகாரம் பற்றி அறிமுகம் தரப்படுவதுடன் அது காட்டும் செவ்வியல் இசை கிராமிய இசை, நாட்டுப்புற இசை என்பனவும் சிலப்பதிகாரத்தில் கூறப்படும் இசைக்கருவிகள் இசைக்குற்றங்கள் என்பனவும இன்றைய இசைத்துறையில் சிலப்பதிகார பாடல்கள் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதும் ஆராயப்படுகின்றது.

63. *பெண்களின் நுண்கலைத் திறனை வெளிக் கொண்டு வர ஏற்படுத்தப்பட்டுள்ள வாய்ப்புக்கள் (வவுனியா மாவட்டத்தில் தெற்குத் தமிழ் பிரதேசத்தினை அடிப்படையாக் கொண்ட ஆய்வு).- விஜயலக்ஷி ராஜமனோகரன்*

இக்கட்டுரையில் வவுனியாவின் வரலாறும் சமூக அமைப்பும் பெண்களின் நிலையும் தரப்படுவதுடன் அங்குள்ள பெண்களுக்கான அரச அமைப்புக்கள் தனியார் அமைப்புக்கள் என்பனவும்பெண்கள்வளர்ச்சிக்காகஏற்படுத்தப்பட்டுள்ளபாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் தனியார் நிறுவனங்கள் என்பனவும் பெண்களும் இடம்பெறுகின்ற வானொலி நிகழ்ச்சிகள், மேடை நிகழ்ச்சிகள், போட்டி நிகழ்ச்சிகள் என்பனவும் ஆராயப்படுகின்றன. நுண்கலையை வளர்ப்பதில் உள்ள தடைகளும் தடைகளுக்கான காரணங்களும் ஆராயப்படுகின்றன.

64. *திருக்குற்றாலக் குறவஞ்சி நாடகப்பனுவலை அவைக்காற்றுகைக்குரிய பிரதியாக்குதல் - மாதுமையாள் வரதராஜன்*

இதில் குற்றாலக் குறவஞ்சியின் நாடக அமைப்பும் நாடகப்போக்கும் பாத்திரங்களின் தன்மையும் தரப்படுவதுடன் பரத நாட்டியத்தை அடிப்படையாகக் கொண்ட நடன நாடகத்தின் கள அமைப்பு, நாடகப்போக்கு என்பன விளக்கப்பட்டு அதன் பின்னணியில் குற்றாலக் குறவஞ்சி பிரதியைத் தயாரிக்கும் முறை அக்குறவஞ்சிக்கான ஜதிகள், அவைக்காற்று முறை, மேடையமைப்பு, ஒளியமைப்பு பக்க வாத்திய இருக்கை, புதிய யுத்திகள், ஒளி அமைப்புகள் என்பனவும் கூறப்படுகின்றன.

## முதுகலைமானி (நாடகமும் அரங்கியலும்) – 2008

65. *நாவிதன் வெளி பிரதேச கண்ணகியம்மன் ஆலய சமயச்சடங்கு ஓர் நாடக நோக்கு - இரத்தின சிங்கம் குணசீலன்*

இக்கட்டுரையில் நாவிதன்வெளி பிரதேசம் பற்றிய சகல விபரங்களும் தரப்படுவதுடன் அங்கே உள்ள இந்து மக்களின் சடங்குகளும் தரப்படுகின்றன. கிராமத்தில் முன்னுரிமை பெறும் கண்ணகி அம்மன், திரௌபதை அம்மன், மாரியம்மன் என்பனவும் சிறுபெண் தெய்வங்களான காளியம்மா, பேச்சியம்மா என்பனவும் கூறப்பட்டு இக்கோயில்களில் நடைபெறும் சடங்குகளும் ஆலயச் சடங்குகளில் காணப்படும் நாடக அம்சங்களும் எடுத்துக் கூறப்படுகின்றன.

66. *யாழ்ப்பாண தென்மோடி நாட்டுக் கூத்து - எஸ்.எப்.சேவியா*

இக்கட்டுரையில் யாழ்ப்பாணத்து தென்மோடி நாட்டுக்கூத்து நடாத்தப்பட்ட முறைமை கூறப்படுகிறது.

67. *நாட்டிய சாஸ்திர அரங்க கட்டமைப்பும் மட்டக்களப்பு அரங்க கட்டமைப்பும் - ஓர் ஒப்பீடு- திருப்பிரசாந்தி இளங்கோவன்*

இக்கட்டுரையில் நாட்டிய சாஸ்திரம் தருகின்ற அரங்க கட்டமைப்பு தொடர்பான சகல தகவல்களும் தரப்படுகிறது. அரங்க மண்டபம் அமைத்தல் பற்றி விசேடமாக கூறப்படுகிறது. அத்தோடு மட்டக்களப்பின் நாடக அரங்குகள் பற்றியும் கூறப்பட்டு இரண்டு கட்டமைப்புக்களுக்கும் ஒற்றுமை வேற்றுமைகள் ஆராயப்படுகிறது.

68. *மட்டக்களப்பு மாவட்டத்தில் வடமோடி தென்மோடி கூத்துக்களின் ஒப்பனை முறைமை - குமரப்போடி தவராசா*

இதில் மட்டக்களப்பு வடமோடி, தென்மோடி கூத்துக்கள் பற்றி அறிமுகம் தரப்படுவதுடன் இரண்டு மோடிகளிலும் நடிகர் கையாளும் ஆயுதங்கள், உடையலங்காரம், உடல் அலங்காரம் என்பனவும் கூறப்படுகின்றன.

69. *ஆரையம்பதி பிரதேச நாடக மரபுகள் - தங்கராசா மலர்ச்செல்வன்*

இதில் ஆரையம்பதி மரபுவழி நாடகங்களான தென்மோடி, வடமோடி கூத்துக்களும் இசைநாடகமும் கூறப்பட்டு அது பற்றிய பாடல் ஆட்ட முறைகள் தாளக்கட்டுக்கள் என்பனவும் தரப்படுகின்றன. ஆரையம்பதி நவீன நாடக முயற்சிகள் 1945 - 1960 வரையான காலப்பகுதி 1960 - 1970 வரையான காலப்பகுதி 70 க்கு பின்னரான காலப்பகுதி எனப்பிரிக்கப்பட்டு அந்நாடகங்கள் பற்றிய மதிப்பீடும் விமர்சனமும் தரப்படுகிறது.

70. *பள்ளு குறவஞ்சி இலக்கியங்களுக்கிடையே காணப்படும் நாடக அம்சங்கள் - வீ. குணபாலா*

இதில் பள்ளு, குறவஞ்சி ஆகிய இரு நாடக வடிவங்களை எடுத்துக் கொண்டு அவற்றிற்கிடையே காணப்படுகின்ற நாடக அம்சங்கள் தரப்பட்டுள்ளன.

71. *மட்டக்களப்பு மாவட்ட பாடசாலைகளில் வித்தியானந்தன் பாணியிலான நாடகங்கள் - சுந்தரலிங்கம் சந்திரகுமார்*

இக்கட்டுரையில் மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளில் 1960களுக்கு பின்னர் வித்தியானந்தன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தயாரித்த வடமோடி, தென்மோடி நாடகங்களின் தாக்கம் எந்தளவு இருந்தது என்பது ஆராயப்பட்டுள்ளது.

72. *பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகப்பணி - கணபதிப்பிள்ளை அன்பழகன்*

இதில் தமிழ் நாடக மரபில் பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகப்பணி பற்றி ஆராய்கிறது.

73. *போரதீவுப்பற்று நாட்டுக்கூத்து கலைஞர்களும் அவரது படைப்புக்களும் - மூத்ததம்பி சிவானந்தராஜா*

இக்கட்டுரையில் போரதீவுப்பற்றின் நாட்டுக்கூத்துக் கலைஞர்கள் இனங்காணப்பட்டு அவரது படைப்புக்கள் பற்றிய மதிப்புரை இடம்பெறுகிறது.

74. *குழந்தை சண்முகலிங்கத்தின் நவீன நாடகப்பயணம் அவரது மூன்று நாடகங்களை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு - கந்தையா சிறிகந்தவேள்*

இக்கட்டுரையில் ஈழத்து நவீன நாடக மரபுக்கு குழந்தை சண்முகலிங்கத்தின் பங்களிப்பு பற்றி அவரது மூன்று முக்கிய நாடகங்களான மண்சுமந்தமேனியர், அன்னையிட்ட தீ, ஏந்தையும் தாயும் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்படுகிறது.

75. *பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகங்களில் நாடகவாக்க முறைமைகள் - கு.ரவிச்சந்திரன்*

இக்கட்டுரையில் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நாடகவாக்க முறைமைகள், நாடக கோட்பாடுகளுக்கிணைய ஆராயப்படுகின்றது.

## முதுதத்துவமானி (M.Phil) நாடகமும் அரங்கியலும் – 2004

76. *ஈழத்து கூத்து முறைமையும் கூத்து வழிவந்த அரங்க வளர்ச்சியும் - முத்துராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா*

இக்கட்டுரையில் 1980 களுக்கு பின்னர் கூத்தில் ஏற்பட்ட கவன ஈர்ப்பும் அது ஈழத்து தமிழர் அடையாளமாக கொள்ளப்பட்டதையும் கூத்தை அடிநாதமாகக் கொண்டு எழுந்த நாடக வளர்ச்சியையும் ஆராய்கிறார். கூத்தின் மீளுருவாக்கத்திற்கும் கூத்து வளர்ச்சிக்கும் ஈழத்து அரசியல் போக்கும் முக்கியமாக ஈழத்து தமிழரின் உரிமைப் பேராட்டமும் எவ்வாறு பின்புலமாக அமைந்தன என ஆராயும் இவர், கூத்து நாடமாகியதையும், கூத்தின் சில கூறுகள் நவீன நாடகங்கட்கும் பயன்படுத்தப்பட்டமையும் விபரமாக ஆராய்கிறார். கூத்தின் வழி வரும் அரங்க வளர்ச்சியை விளக்கும் இவர் கூத்தின் அடிநாதமான சடங்குகள் எவ்வாறு ஈழத்து நாடக வளர்ச்சியில் ஓர் அரங்க முறையாக மாறியுள்ளன என்பதை ஆராய்கிறார். நம்பிக்கையின் மையமான சடங்குகளில் பெறப்படும் உணர்வு நிலையினை நவீன சடங்கு அரங்கப் பார்வையாளரும் பங்காளரும் பேதமற இணைந்து பெறும் வகையினையும் தன் ஆய்விற் புலப்படுத்துகிறார் ரவிச்சந்திரா.

77. *Reformulation of Community Theatre Based on Kooththu ( Traditional Theatre of the Tamils of Sri Lanka) Participatory action research Vadamoody kooththu in Seelamunai, Batticaloa - சிவஞானம் ஜெயசங்கர்*

கூத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக அரங்கினை மீளுருவாக்கம் செய்தல் என்பது இவரது ஆய்வு மையம். இலங்கைத் தமிழரின் பாரம்பரிய அரங்காகக் கூத்தைக் காணும் இவர், கூத்து மீளுருவாக்கத்தை இன்னொரு வகையில் அணுகுகிறார். சீலாமுனை எனும் கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அங்கு வாழும் மரபுவழிக் கலைஞர்களுடனும், அக்கிராம மக்களுடனும் இணைந்து தம் ஆய்வை இவர் மேற்கொண்டுள்ளார். கூத்து மீளுருவாக்கம் என்பது காலங்காலமாகக் கூத்தை ஆடிவருபவர்களுடன் இணைந்து கூத்தை சமகாலத்திற்குரியதாக ஆக்குவதாகும். இங்கு கூத்து என்பது செயற்பாடக முன்னெடுக்கப்படுகிறது. கூத்தில் ஏற்படுத்தும் மாற்றம் அதை ஆடிவரும். சமூகத்தில் ஏற்படுத்தும் மாற்றத்துடன் தொடர்புபடுகிறது. கூத்து இங்கு கலை என்பதற்கும் அப்பால் தொடர் கலைச் செயற்பாடாகிறது. சமுதாய அரங்காக மீளவும் மிளிர்விக்கப்படுகிறது. சுயாதீனமான சமூக உருவாக்கத்திற்கான கலை வழிச் செயற்பாடாகப் பரிணமிக்கிறது. இவ்வகையில் இவர் ஆய்வு கூத்துப் பற்றிய ஓர் செயற்பாட்டு ஆய்வாக அமைகிறது.

78. *தமிழ் நாட்டில் அரங்கக் கட்டுமானம்*

(13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழ் அரங்கை மையமாகக் கொண்ட ஓர் ஆய்வு)
இக்கட்டுரையில் கி.பி. 13 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதியை மையமாக வைத்துக கிடைக்கும் இலக்கிய,கல்வெட்டு ஆதாரங்களையும் சிற்ப ஓவியங்களில் கிடைக்கப்பெறும் சான்றுகளையும் துணையாகக் கொண்டு உலகஅரங்கக் கட்டிடக் கலைவரலாற்றின் பின்னணியில் தமிழ் அரங்கக் கட்டிடக் கலையின் வரலாற்றையும் பண்புகளையும் வெளிக்கொணர முயன்றுள்ளார் ஆய்வாளர்.

## கலாநிதிப்பட்ட ஆய்வு (Ph.D) 2009

79. *மாறிவரும் சமூகப் பண்பாட்டில் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்கள் - முத்துராஜா பிரேம்ராஜ் ரவிச்சந்திரா*
இக்கட்டுரையில் 1980 களுக்கு பின்னர் மட்டக்களப்பின் சமூக அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்களும் அம்மாற்றங்கள் மட்டக்களப்பு மரபு வழி நாடகங்களில் ஏற்படுத்திய மாற்றங்களும் வெளிக்கொணரப்படுகின்றன

## இவ் ஆய்வுகளின் குறிப்பிடத்தக்க அம்சங்களாவன:

1. கலைத்துறைசார் ஆய்வுகள் செந்நெறி கலைமரபுகளை ஆராய்வதிலிருந்து வேறுபட்டு செந்நெறி சாராத குறிப்பாக மக்கள் கலைகளை சிறப்பாகக் கிராமியக் கலைகளை நோக்கி மையம் கொண்டமை.
2. விளிம்பு நிலை மக்கள் எனக்கருதப்பட்ட பறையடிப்போர், சலவைத்தொளிலாளர்கள், தமிழ்பேசும் வேடர்கள் ஆகியோர் பற்றியும் அவர்களது வரலாறு, வாழ் முறைகள், வழிபாட்டு முறைகள், பண்பாடுகள் போன்றவை பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டமை.
3. இதுவரை பேசப்படாத, கவனிக்கப்பட்டாத கூத்துக் கலைஞர்கள், அண்ணாவிமார்கள் போன்றோர் பற்றிய தகவல்கள் வெளிக்கொணரப்பட்டமை.
4. மட்டக்களப்பு என்றதும் கூத்து தான் முதன்மைப்படுத்தப்படும். இங்கு கூத்துடன் மட்டக்களப்பில் இதுவரை கவனம் செலுத்தப்படாத கட்டிடக் கலைகள், கைவினைக்கலைகள், மதம் சாராக்கலைகள், சடங்குக்கலைகள் ஆகியவற்றை ஆய்வுப் பொருளாகக் கொண்டமை
5. கவனிக்கப்படாத ஆளுமைகள் சில கவனிக்கப்பட்டமை.
6. பெண்கள் நிலை நின்று கலைப் பாரம்பரியங்கள் அணுகப்பட்டமை.
7. மட்டக்களப்பில் இயங்கி வந்த சமூகச் செயற்பாட்டு குழுக்களின் சமூக எழுச்சிசார்ந்த செயற்பாடுகள் கவனத்தில் எடுக்கப்பட்டமை.
8. உளத்தாக்கத்திலிருந்து தாக்கமுற்றவர்களை விடுவிக்க மட்டக்களப்பில், நடைபெற்ற கலை முயற்சிகள் கவனத்தில் எடுக்கப்பட்டமை. அவற்றை இனங் கண்டமை. அவற்றை வெளிக்கொணர்ந்தமை.
9. கலைஞர்களுடன் பங்கு கொண்டு பங்குகொள் செயற்பாட்டு ஆய்வாகச் செய்யப்பட்டமை.
10. நவீனத்துவ, பின் நவீனத்துவ, பின்காலனித்துவப் பெண்ணிய கோட்பாடுகளைப் பிரயோகித்தமை.


சமூகம்

# ஆரையம்பதி தமிழ்ச் சமூகம்

ஆரையம்பதி க. சபாரெத்தினம்

## முன்னுரை

தமிழ் பேசும் நல்லுலகில் ஈழத்தின் வகிபாகம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும். அதிலும் வடக்கு, கிழக்கு மாநிலங்கள் அவற்றின் தொன்மையாலும் பண்பாட்டு வளங்களாலும் அதி சிறப்புப் பெற்ற பிரதேசங்கள் எனலாம். இங்கே தமிழரும் தமிழ்பேசும் முஸ்லீம்களும் பெரும்பான்மையாக உள்ளனர். தமிழர்கள் மத்தியில் குலங்கள், கோத்திரங்கள், வருணங்கள் என்று பல பிரிவினர் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலர் இலங்கையின் பூர்வீகக் குடிகளாகத் தோற்றம் பெற்ற இயக்கர், நாகர் என்போரின் வழித்தோன்றல்களாகவும், வேறும் சிலர் தென் இந்திய நாட்டு தமிழ் மன்னர்கள் இலங்கையைக் கைப்பற்றி அரசாட்சி செய்து வந்த காலத்தில் அவர்களுக்கு அரச ஊழியம் செய்ய வந்தவர்களாகவும் படைவீரராக சேவகம் புரியவந்தவர்களாகவும் இங்கு வந்து நிரந்தரமாகத் தங்கிவிட்டோரின் பரம்பரையினராகவும் இருக்கின்றனர்.

இவ்வாறான குல விருதினர்களில் சிலர் அடையாளம் காணப்பட்டு ஒரு குறிப்பிட்ட சாதியமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் வேறும் சிலர் அவர்களது பூர்வீக சுய அடையாளம் மறைக்கப்பட்ட அல்லது வெளிப்படுத்தப்படாத நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சமூகத்தினர் சனத்தொகையில் குறைவானவர்களாகவும் ஏனையவர்களால் வேண்டுமென்றே மறைக்கப்பட்ட வரலாற்றினைக் கொண்டவர்களாகவும் இருந்து வருவதனால் இவர்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு அறிக்கை ஆவணப்படுத்தப்பட வேண்டியதும் அவசியமாகின்றது.

இராவணன் ஆட்சி நிறைவடைந்த பின்னர் இலங்கையில் இயக்க வம்சத்தில் வந்த குவேனி அரசு செய்து கொண்டிருந்த காலை கி.மு.543ல் இந்தியாவின் வங்காளதேசத்திலிருந்து விரட்டி அடிக்கப்பட்ட விஜயனும் அவனது தோழர்கள் எழுநூறு பேரும் பாய்கப்பல்கள் மூலம் இலங்கையின் மாதோட்டம் என்னும் தம்பபன்னியில் கரைதட்டி வந்திறங்கினர் என்பது வரலாறு.

இதன் பிறகு கி.மு.2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.12ம் நூற்றாண்டு வரையான காலப் பகுதியில் தென் இந்திய தமிழ் அரசர்களான சேர, சோழ, பாண்டியரின் படையெடுப்பு அடிக்கடி இடம்பெற்று வந்ததோடு அவர்கள் இலங்கையில் இராசதானிகளை அமைத்து அரசாண்டும் சிற்றரசர்களுக்கு முடிசூட்டி விட்டு தாயகம் திரும்பிச் சென்றுமுள்ள வரலாறுகள் வேறு கிடைக்கப் பெறுகின்றன.

தமிழ் அரசதானிகள் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டபோது யுத்தத்தில் தோற்றோடிச் சென்ற சிங்கள மன்னர்கள் தஞ்சம் புகுந்த இடமாக இலங்கையின் தென்பகுதி குறிப்பாக மாகம போன்ற நகரங்கள் விளங்கின. இங்கிருந்து பொலநறுவை,

அநுராதபுரி ஆகிய இடங்களைச் சென்றடைவதற்கு அப்போது அவர்களுக்கு தாழ்சமவெளியான மட்டக்களப்பு மாநிலம் சிறந்ததோர் பாதை ஊடகமாக அமைந்திருந்தது.

இதனால் மட்டக்களப்புப் பிரதேசத்தின் வாவியை அண்மித்த நீர் நிலைப் பகுதிகளான ஆரையம்பதி, கல்லாறு, அமிர்தகழி ஆகிய இடங்களில் தென்னிந்திய சேர, சோழ பாண்டிய மன்னர்களால் அவர்களது பாதுகாப்புக் கருதி "இருமுனை ஆற்றுக்காவல் படை" நிறுவப்பட்டு அங்கே இரவு பகலாக காவற்படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் காலப்போக்கில் அவ்வவ்விடங்களிலேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டதோடு அவற்றையே வாழ்விடங்களாக்கிக் கொண்டனர்.

இலங்கையின் பூர்வீகக் குடிகளைச் சாராமலும், இடைநிலை சிங்களச் சமூகத்தைச் சாராமலும் மற்றுமொரு தனித்துவமான குழுமமாக தொடர்ந்து வாழ்ந்து வந்த இவர்கள் ஆற்றோரம் தங்கள் குடியிருப்புக்களை அமைத்து வாழ்ந்து வந்ததனாலும் அவர்களது மூலவரலாற்றுப் பின்னணி தெரியாததனாலும் ஏனையோரால் வெறுமனே "கரையார்" என்று அழைக்கப்பட்டு வந்ததனாலும் பின்னாளில் கரையார் என்போர் மீன்பிடித்து வாழ்ந்து வரும் சமூகத்தினர் என்ற கருத்தினை மாற்றியமைத்து விட்டது.

உண்மையிலயே இந்தக் கரையார் என்பவர்கள் காலத்திற்குக் காலம் இந்தியத் தமிழ் மன்னர்களுடன் படையெடுத்து வந்தோரில் அரசசேவகம் புரியவந்தவர்களே என்பது உண்மையாகும். மட்டக்களப்பு மான்மியம் போன்ற கிழக்கின் வரலாற்றை உணர்த்தவென்று உருவாக்கப்பட்ட நூல்கள் ஒரு தலைப்பட்சமாக ஆய்வினை மேற்கொண்டதன் பயனாக முக்குவர் தவிர்ந்த ஏனைய சாதியினருக்கு சமூக இருட்டடிப்பை ஏற்படுத்தி விட்டது. ஆயினும் அத்தகைய மறைப்பு அல்லது இருட்டடிப்பை மீறியும் ஓர் இரு வெளிப்பாட்டை நழுவவிட்டதனால் அதன் மூலம் இத்தகையோரின் உண்மை வரலாற்றைக் கண்டுணர முடிகிறது.

## மட்டக்களப்பு மாநிலத்தின் தொன்மை வரலாறு

முதலில் மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய நிலப்பரப்பினையும் அங்கே செறிந்து வாழ்ந்து வந்த குடிப்பரம்பல்களையும் பற்றி சிறிது ஆராய்வது அவசியமாகும்.

மட்டக்களப்பு என்ற பெயர் 1952ம் ஆண்டிற்கு முந்திய காலப்பகுதியில் தெற்கே குமுக்கன் ஆறு தொடக்கம் வடக்கே வெருகல் வரையும் மேற்கே பதுளைக் குன்றுகளையும் கிழக்கே வங்காள விரிகுடா கடலையும் எல்லைகளாக்கி கொண்டிருந்த ஒரு பரந்து விரிந்த தமிழர் தாயகமாகும். 1952ம் ஆண்டிற்குப்பின்னர் தான் படிப்படியாக அதன் நிலப்பிரதேசங்கள் சுவீகாரம் செய்யப்பட்டு மாநிலம் குறுநிலமாக மாற்றமடையத் தொடங்கியது. சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்டு ஏற்படுத்தப்பட்டு மாவட்ட அலகுகளாகப் பிரித்தகற்றப்பட்டன.

இராவண ஊழிக் காலத்தின் பின்பு இலங்கை நாடு தூர்ந்து போனதோர் வனப்புக்குன்றிய காடாகவே சில காலம் காட்சியளித்தது. இராவணனின் வழித்தோன்றலாக வந்த குவேனி என்ற இயக்க அரசியை கி.மு.544ம் ஆண்டில் வங்க தேசத்து இளவரசனான விஜயன் காதலித்து

திருமணம் செய்யும் வரை இங்கு வாழ்ந்து வந்த சுதேசி இனங்களாக இயக்கரும் நாகருமே இருந்திருக்கிறார்கள். விஜயனின் சதித்திட்டத்தால் சின்னாபின்னமாகச் சிதறுண்டு காடுறைந்த இயக்க சமுகம் தமது இருப்பிடமான தம்பவன்னிக்கு அப்பால் சென்று ஒளிந்து வாழ வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளானது.

விஜயனின் வருகை இலங்கையில் சிங்கள வம்சத்தை மட்டும் தோற்றுவிக்க உதவவில்லை. மாறாக சுதேசிகளான இயக்கரின் வாழ்க்கைச் சரித்திரத்தையே புரட்டிப்போட்டு விட்டது எனலாம். இராவண மன்னன் காலத்தில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்து வந்த இவ்இயக்கர் குலம் விஜயனின் கொடுங்கோன்மைக்கஞ்சி நாகரீகமிழந்துபோன வேடுவர்களாக காடுகளிலும் தாழ் சமவெளிகளிலும் அச்சத்துடன் வாழ்ந்து வரவேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டது. இதனால் இவர்கள் தம்பவன்னியில் இருந்து இரகசியமாக வெளியேறி தென்கிழக்குத் திசையாக நகர்ந்து ஈற்றில் தாழ் சமவெளியாகக் கிடந்த மட்டக்களப்பு மாநிலம் நோக்கி விரைந்தனர். இவர்களே பின்னாளில் முக்குவர் என்ற வம்சத்தை தோற்று வித்தவராவார் என்று இலக்கிய கலாநிதி ஈழத்து பூராடனார் திரு. க. தா. செல்வராச கோபால் அவர்கள் நிருபித்திருக்கின்றார். இது நிகழ்ந்த காலம் கி.மு.543ம் வருடம்.

மட்டக்களப்பு மாநிலத்தின் தொன்மை வரலாறு மற்றும் இங்கு இடம்பெற்றிருந்த இராச்சிய பரிபாலனங்கள் பற்றிய தகவல்கள் என்பவற்றை வெளிக்கொணரும் ஆவணங்கள் மிகக் குறைவாகவே காணப்படுகின்ற போதிலும் மட்டக்களப்பு மான்மியம் என்ற கல்வெட்டு/ செப்பேட்டுச் சான்றாதாரம் மற்றும் அறிஞர் எஸ். ஓ. கனகரெத்தினம் என்பவரால் எழுதப்பட்ட மட்டக்களப்பு சரிதம், வித்துவான் வி.சீ.கந்தையா அவர்களது மட்டக்களப்பு தமிழகம் என்பனவும் வேறுசில உதிரிச் செய்திகள் அடங்கிய வெளியீடுகளும் மட்டுமே கிடைக்கப் பெறும் நிலையில் மட்டக்களப்பு மக்களின் வாழ்வும் அரசாட்சியும் இராவணன் ஊழிக்காலத்தின் பின்னிருந்தே தகவல்களாகப் பெறக் கூடிய சாத்தியம் நிலவுகின்றது. அதன் காரணமாக மட்டக்களப்புத் தமிழகத்தின் ஆதிக்குடிகள் இந்த வேடுவர்களாக வாழ்ந்து வந்த இயக்கர் அல்லது கால மாற்றத்தால் கலந்து, கரைந்து நாகரீகமடைந்த முக்குவர் என்படும் சாதியினர் என்பது தெளிவு. இந்த முக்குவர் என்ற சாகியத்தார் மட்டக்களப்பின் எழுவான் கரைப்பகுதியின் சில இடங்களிலும் மேற்கே படுவான் கரையின் பல இடங்களிலும் பரவி வாழ்ந்து வந்த போதிலும் வாவியின் சேய்மையாக நீர் பிரிக்கும் இரு முனை ஆற்றுக்கடவைகளில் குடியேற வில்லை. இதற்கு அன்றைய ஆட்சியில் நிலைத்திருந்த தமிழ்நாட்டு மன்னர்களின் பாதுகாவல் சம்பந்தப்பட்ட ஆணையாக இருக்கலாம்.

## ஆற்றுக்காவல் படையினர்

கி.மு. 2ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி.12ம் நூற்றாண்டு வரை அவ்வப்போது இந்தியாவிலிருந்து சேர, சோழ, பாண்டிய கலிங்க மன்னர்கள் இலங்கை மீது படையெடுத்து வருவதும் இங்கு ஆட்சி புரிந்து வந்த சிங்கள மன்னர்களை விரட்டியடித்து விட்டு தனது ஆட்சியை சில காலம் நிலைநிறுத்துவதுமாக இருந்திருக்கிறார்கள்.

இந்த காலகட்டங்களில் அவர்களது ஒவ்வொரு படையெடுப்புகளின் போதும் அல்லது தேவைப்பட்டவிடத்தும் படை வீரர்களாகவும் கப்பலோட்டும் மாலுமிகளாகவும் இந்திய நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பலர் இங்கு வந்துள்ளதோடு இவர்கள் அரசசேவகர்களாகவும் பணிபுரிந்துள்ளனர். தமிழரின் அநுராதபுரம், பொலநறுவை ஆட்சிக் காலங்களின் போது

தோற்றோடிச்சென்ற சிங்கள மன்னர்கள் மறைந்து வாழ்ந்த அல்லது தஞ்சம் புகுந்த இடமாக இலங்கையின் தென்பகுதி குறிப்பாக மாகம போன்ற இடங்களே இருந்திருக்கின்றன. அங்கே இருந்து கொண்டுதான் அவர்கள் படைதிரட்டிக்கொண்டு மீண்டும் யுத்தத்தை முன்னெடுக்க வருவதுண்டு. துட்டகாமினி எனப்படும் கெமுனு மன்னன் இதற்குச் சான்று. இவ்வாறான யுத்த ஆயத்த நடவடிக்கைகளின் போது விரைவாகவும் வசதியாகவும் இலகுவாகவும் அநுராதபுர அல்லது பொலநறுவை இராச்சியங்களைச் சென்றடைவதற்கு சிறந்த ஊடகமாக மட்டக்களப்பு தாழ் சமவெளியே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. சிங்கள மன்னர்களின் இந்த சாணக்கியத்தை முறியடிப்பதற்கு மட்டக்களப்பு வாவியின் இருகரை நீர் பிரிக்கும் கடவுகளில் இரு முனை ஆற்றுக்காவல் படை ஒன்றினை தமிழ் மன்னர்கள் நிறுத்தியிருந்தனர். இவர்கள் ஆற்றுக்காவல் படையாகவும் உழவுப்படையாகவும் செயல்பட்டு வந்தனர். இக்கடமையில் ஈடுபடுத்தப்பட்ட வீரர்கள் ஒரே காலத்தில் ஒரே பகுதியில் இருந்து வந்தவர்கள் அல்லர். இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் கொண்டு வரப்பட்டவர்களாவர். இத்தகையோர் காலத்திற்கு காலம் பதவி மாற்றம் செய்யப்பட்டும் புதிய நியமனங்கள் செய்யப்பட்டும் நிலையானதொரு காவற்களமாக செயற்பட்டு வந்தனர். இன்றைய Coast Guards போன்றே அன்றும் இவர்களது பணி அமைந்திருந்தது.

எதிர்பாராத விதமாக எதிரிகள் சூழ்ந்து முற்றுகையிட்டு இராசதானி வீழ்ச்சியுறும் போது வேறு வழியின்றி அரச குடும்பமும் மந்திரி பிரதானிகளும் ஓடி ஒளிந்து விடுமிடத்து அல்லது யுத்தத்தில் மாண்டு மடிய நேரிட்டபோது ஆற்றுக்காவலில் இருந்து வந்த படைவீரர்கள் அப்படியே மறைந்து வாழ்ந்து தமக்காக மற்றொரு அரசு பதவி ஏற்றும் வரை காத்திருப்பர். அது வரை இவர்கள் சாதாரண பிரஜைகள் போன்றே தங்கள் சீவனோபாயத்திற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வாழ்ந்திருப்பர். அந்த வகையில் தம்வசம் இருந்த நாவாய், தோணி, படகுகளை பாவித்து மீன்பிடித்தல், பயணிகளை ஏற்றி இறக்கல், மேற்குக்கரையில் விவசாய உற்பத்தியில் ஈடுபடல் ஆகிய முயற்சிகளில் இறங்கினர். படுவான்கரை என்று கூறப்படும் வாவியின் மேற்குக் கரையில் அமைந்து கிடக்கும் நெற்காணிகள் பல வற்றிற்கு ஆரையம்பதி மக்கள் சொந்தக் காரர்களானதற்கு இதுவே காரணம்.

ஆரையம்பதியில் வாழ்ந்து வரும் தமிழ் சமூகமும் இவ்வாறானதொரு வாழ்வியல் பாரம்பரியத்தைக் கொண்டே உருவானதாகும். இவர்கள் ஏனைய வம்சத்தார் பெயரிட்டழைப்பது போன்று மீனவ வம்சத்தினர் அன்று. வாவியின் கரையோரமாக வாழ்ந்து வரவேண்டிய கடமைப்பாடு கொண்டவர்களாக இருந்தமையாலும் எண்ணிக்கையில் குறைவானதோர் குழுமமாக இருந்தமையாலும் இவர்களது பூர்வீக வரலாற்றினை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் வாய்ப்பு இல்லாததினால் அல்லது இருட்டடிப்பு செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினால் மட்டக்களப்பு மான்மியம் போன்ற மட்டக்களப்பின் தொன்மை வரலாற்று ஆவணங்களில் தெளிவுபடுத்தத் தவறிவிட்டனர். பெரும்பான்மையாக வாழ்ந்து வந்த முக்குவர் சமூகம் தம்மையே சிறப்பானதெனக் காட்ட இந்த உத்தியை கூட கடைப்பிடித்திருக்கலாம்.

1988ம் ஆண்டு வாக்கில் சமாதானப் படையாக இலங்கையை வந்து சேர்ந்த இந்தியப் படையினர் 1989 நவம்பர் வரை இங்கு தங்கி இருந்ததும் அவர்கள் வாழ்ந்து வந்த பாடி வீடுகளில் சாதாரண வாழ்வியல் முயற்சிகளில் ஈடுபட்டு வந்ததும் இதற்கு ஓர் உதாரணம் எனலாம்.

குறிப்பிட்ட இந்த ஆரையம்பதிச் சமூகத்தினரை ஏனையோர் கரையார் என்று வெறுமனே அழைத்ததற்கு காரணமாக பின்வருவனவற்றைக் கருதலாம்.

1. வாவிக்கரை ஓரமாக வாழ்ந்து வருபவர்கள்.
2. குல, இன, மத பேதம் தெரியாத அயல் நாட்டிலிருந்து இங்கு வந்து வாழ்ந்து வருபவர்கள்.
3. இங்கு நிலை பெற்றிருந்த முக்குவர், வேளாளர் என்ற பிற சாதியினருனருடன் கலந்து சுயம் கரைந்து போகாமல் வாழ்ந்து வருபவர்கள்.
4. தம்மைவிட குல வரிசையில் கூடியவர்களாக இருப்பதை அறிந்தும் அதனைத் தெரியப்படுத்த விரும்பாத ஒரு மனநிலையால் இவ்வாறு பொதுமையில் வைத்த பெயராகவும் இருக்கலாம்.

"கரையார்" என்று பொருள் விளங்கா நிலைநின்று விழிக்கப்படும் இச்சமூகத்தினர் நிச்சயமாக சாதாரண மீனவ மரபினைச் சாராதவர்கள் என்பதற்கு ஆதாரமாக பின்வரும் ஏதுக்களை சான்றாக முன்வைக்க முடியும்

1. வாவிக்கரையை அண்மித்த நிலப்பரப்பில் பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்து வருகின்ற போதிலும் இவர்கள் தங்கள் குடியிருப்புகளில் இருந்து அரை கிலோ மீற்றர் தொலைவில் பரந்து விரிந்து கிடக்கும் வங்காள விரிகுடா கடலில் மீன்பிடி தொழில் முயற்சியினை மேற்கொள்ளும் மனப்பாங்கற்று இருப்பது. அதே சமயம் ஏனைய குல மரபினரான முக்குவர் முஸ்லீங்கள் என்போர் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் விருத்தி கண்டு வருகின்றனர்.
2. ஒரே பிரதேசத்தில் ஒன்றாக வாழ்ந்து வருகின்ற போதிலும் பிறசமூகங்களான முக்குவர், முஸ்லீங்கள் என்போரது பேச்சு மொழி வழக்கிற்கும் ஆரையம்பதி வாழ் குருகுலத்தினர் உபயோகப்படுத்தும் மொழி வழக்கிற்கும் இடையே அதிக வேறுபாடுகள் இருப்பது. உச்சரிப்பில் மிகத்தெளிவும் பொருள்கோடலில் மதுரை மாவட்ட மக்களின் மொழி வளமும் இவர்களது பேச்சில் கலந்து ஒலிப்பது.
3. கல்வியிலும், வீரத்திலும் கொள்கைப்பற்றிலும் விடாப்பிடியான பாரிய முன்னேற்றம் அல்லது அதிக முயற்சி வெளிக்காட்டப்படல். இச்சமூகத்தை சேர்ந்த ஓரிருவர் நாசா என்று சொல்லப்படும் ஆய்வு மையம் வரை சென்று பணியாற்றி வருகிறார்.
4. இம்மக்களிடையே நிலவிவரும் குடிகோத்திர வழி முறைகளை எடுத்து நோக்கும் போது அவை இந்தியாவின் பல்வேறு மாநிலங்களையும் சேர்ந்த மக்களை உள்ளடக்கியவையாக காணப்படுகின்றன. உதாரணமாக ஆறுபட்டி குடி, வங்காளர், திருவிளங்கம் குடி, மன்றுளாடிகுடி, பொன்னாச்சிகுடி, பத்தினாச்சிகுடி, புலவனார்குடி, வீரமாணிக்கன்குடி. இவை ஒவ்வொன்றும் இந்திய துணைக்கண்டத்தின் சகல பிரிவுகளையும் உள்ளடக்கிய பான்மையில் பெயர் விரிவு பெற்றுள்ளன.

## முடிவுரை

விளையும் பயிரை முளையில் தெரியும் என்பார்கள். ஆம். அந்த சிறு விதையினுள் குறித்த அந்தத் தாவரத்திற்கான (Potential energy) அதாவது உள்நில ஆற்றல் முழுமையும் நிறைந்திருப்பது உண்மை. அன்றைய கால கட்டத்தில் கூட வீழ்ச்சியுற்ற அரசபரம்பரையினைச் சார்ந்த உறுப்பினர்களை அவரவர்கள் வெளிக்காட்டும் பண்பு பழக்கவழக்கங்களைக் கொண்டே

அனுமானிப்பார்கள். சமூகம் எப்போதும் நடுநிலை நின்று செயல்படுவதில்லை. பக்கம் சார்ந்தே சில கருமங்களை ஆற்றி விடும். ஆயினும் உண்மை எப்போதும் ஒளிந்து மறைந்து போய்விடுவதில்லை காலம் அவற்றுக்கான கனிவை பெற்றுத்தந்தே ஆகும்.

## உசாத்துணை நூல்கள்


1. மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்
   - கலாநிதி க.தா.செல்வராச கோபால் (ஈழத்துப்பூராடனார்)
2. மட்டக்களப்பு மான்மியம் (தொகுப்பு) வித்துவான் ஏப். எக்ஸ். சி. நடராசா
3. மட்டக்களப்பு தமிழகம் - வித்துவான், பண்டிதர் வி. சீ. கந்தையா (BOL)
4. கர்ணபரம்பரை வரலாறும் ஐதீகங்களும்

# தமிழ் வைத்தியத்தை யாழ்ப்பாணத்தில் வளர்ப்பதில் பங்காற்றியவர்கள் – ஆவண ஆய்வு

க. ஶ்ரீதரன்
ஶ்ரீ. அன்புச்செல்வி

## அறிமுகம்:

யாழ்ப்பாணத்தில் தமிழ் வைத்தியம் தோன்றிய காலத்தை தெளிவாக வரையறுக்கமுடியாமல் இருந்தாலும் தமிழ் அரசர்களும், பின் தோன்றிய வைத்தியர்களும் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுத்துள்ளார்கள். ஆரம்பகாலத்தில் சிங்கைநகர் அரசர்களின் ஆட்சிக்காலம் மிகமுக்கிய பங்கு வகிக்கிறது. பல்லவ அரசர்களின் புகழ், வீரம், கொடை, தமிழ்புலமை உலகில் பரவியிருந்த காலம் சிங்கை ஆட்சிக்காலமாகும். இக்காலத்தில் சிங்கை அரசர்கள் பலரும் மருத்துவத்துறையில் தேர்ச்சியும், திறமையும் கொண்டு விளங்கினார்கள். கி.பி. 14ஆம் நூற்றாண்டில் சிங்கையரசு செகராசசேகரம் எனும் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தியினால் முதலில் ஆளப்பட்டு வந்தது. இக்காலத்தில் செகராசசேகரம் எனும் மருத்துவநூல் இயற்றப்பட்டது. மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டு தமிழ் மருத்துவம் சிறப்பிடம் பெற்று வளர்ந்து வந்தது. பரராசசேகர மன்னனும் இப்பணியில் தொடந்து சென்றான். அந்நியரின் ஆட்சியினால் தமிழ் வைத்தியம் அழிந்து சென்றாலும் தனிப்பட்ட சில வைத்தியர்களால் வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாய்வானது இக்காலகட்டங்களில் தமிழ் வைத்தியத்தை வளர்த்த சில அறிஞர்களின் சேவையையும் அவர்களின் புகைப்படத்தையும் ஆவணப்புடுத்தலுமே முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது.

### மன்னர்கள் காலத்தில் வளத்தெடுத்த அறிஞர்கள்:

**சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி : செகராசசேகரன், பரராசசேகரன்**



செகராசசேகரன்



பரராசசேகரன்

கி.பி. 1467 இற்குப்பின் நல்லூர் இராசதானியை கனகசூரியனின் பிள்ளைகளான செகராசசேகரன், பரராசசேகரன், ஆகிய இருவரும் கைப்பற்றி பரராசசேகரன் அரசாட்சியை நடத்த கல்வியில் சிறந்த மகாபண்டிதனான செகராசசேகரன் ஊர்தோறும் பாடசாலையை அமைத்து கல்வி பயிற்றுவித்தான். சோழ, பாண்டிய, தொண்டை மண்டலங்களிலிருந்து பண்டிதர்களை வரவழைத்து ஈழநாட்டில் உள்ள புலவர்களோடு நல்லூரில் ஒரு தமிழ்ச்சங்கம் அமைத்தான். யாழ்ப்பாணத்திலிருந்து சரஸ்வதி மடாலயத்தில் இல்லாத வடமொழி, தென்மொழி

நூல்களையெல்லாம் வரவழைத்தான். அநேக நூல்களைப் பண்டிதர்களைக் கொண்டு புதிதாக இயற்றுவித்தான். அவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்துள்ளான். பரராசசேகரன் வைத்திய அறிவிலே சிறந்து விளங்கினான். போரிலே இறக்கும் வீரர்களின் உடலைக்கீறி ஆராய்ந்து உடல்கூறுகள் பற்றிய அறிவைப் பெற்றுக் கொண்டான். செகராசசேகரன் தன் தமையன் பெயரில் பரராசசேகரம் எனும் வைத்தியநூலையும், செகராசசேகரம் எனும் வைத்தியநூலையும் எழுதுவித்தான். கிராமங்கள் தோறும் வைத்தியசாலைகளை நிறுவி வைத்தியம் செய்வித்தான். சிறந்த வைத்திய நூல்களையும் எழுதியதுடன் சிறந்த வைத்தியர்களின் உதவியுடன் பல வைத்தியர்களை உருவாக்கினான். வைத்தியசாலைக்கு வேண்டிய மருந்துகளை தன் அரண்மனையிலிருந்து காலந்தோறும் அனுப்பினான். இதற்காக அரண்மனைக்கு அருகே ஒரு மூலிகைத் தோட்டத்தை அமைத்து இமயமலையிலிருந்து மூலிகைகளை எடுத்து இங்கு வளர்த்து வந்தான். இந்த மூலிகைத் தோட்டத்திற்கு “மருந்துமலை” எனப் பெயரிட்டான். இத்தோட்டம் கல்வியங்காட்டில் இருந்ததாக யாழ்ப்பாணச் சரித்திரம் எழுதிய ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை கூறுகிறார். கி.பி.1620 இல் சங்கிலிய மன்னன் போர்த்துக்கேய தளபதி விலிப்தே ஒலிவரா என்பரினால் பிடிபட்டு மரணமடைந்த பின் நல்லூர் இராசதானி களவாடப்பட்ட நிலையில் இங்கு வேலை செய்தவர்களினால் ஏடுகள் களவாடப்பட்ட பின் தமிழ் வைத்தியம் அழிவடையத் தொடங்கியது. சிலர் தமது குடும்பச் சொத்தாக ஏடுகளை வைத்திருந்து அழிந்து போகக் காரணமாகவிருந்தார்கள். இதன் பின்னர் இவ்வைத்தியம் தனிப்பட்ட சில வைத்தியர்களின் முயற்சியினால் வளர்த்தெடுக்கப்பட்டது. கி.பி. 1620- கி.பி 1800 வரை சித்த வைத்தியத்தை வளர்த்த அறிஞர்களின் விபரங்களை அறிய முடியவில்லை.

**இருபாலைச்செட்டியார் :**

இவருடைய காலப்பகுதி கி.பி. 1830 எனக்கருத இடமுண்டு. இவரின் இயற்பெயர் அறியமுடியவில்லை. மீசாலையில் பிறந்த வேளாண்செட்டி வம்சத்தைச் சேர்ந்தவர் இருபாலையில் தங்கியிருந்ததால் இருபாலைச்செட்டியார் எனப்பெயர் பெற்றார். தமிழில் சிறந்த வித்துவானான இவர் வைத்திய நூல்களான பதார்த்தசூடாமணி, வைத்தியவிளக்கம் எனும் நூல்களை இயற்றினார். மருந்து ஆராய்ச்சியில் சிறந்து விளங்கியவர்.

**பெரியபரியாரியார் பரம்பரை:**

கடந்த 23 தலைமுறையாக உள்ள பரம்பரை யாழ்ப்பாணத்தில் மிகவும் கீர்த்தி பெற்று விளங்கிய குலசேகர மகாராஜாக்கள் வம்சம் எனக்கருதப்படுகிறது. இவர்கள் சுழிபுரத்தை வசிப்பிடமாகக் கொண்டு வைத்தியம் செய்தார்கள். சிறப்பான சிகிச்சையைக் கொண்டு சென்றவர்கள். ஆங்கில வைத்தியத்தை யாழ்ப்பாணத்திலே வைத்தியர் கிறீன் அவர்கள் பரப்பியபோது அதற்கு சளைக்காது தமிழ் வைத்தியத்தைக் கொண்டு சென்றவர்கள்.



**இராஜா குலசேகரம் கி.பி 1854 - 1910**



**இராஜா இராசசிம்மன் கி.பி 1911 - 1920**

ஆவரங்கால் தாமோதரம்பிள்ளைக்கு வைத்தியம் கற்பித்தவர்களும் இவர்களே. இவர்களின் காலத்தில் சிறப்பான வைத்தியம் செய்தாலும் கூட சிறப்பான மருத்துவ முறைகளை புத்தகவடிவிலோ அல்லது பொதுவான வைத்தியப் பயிற்சியையோ மற்ற வைத்தியர்களுக்கு வழங்கியதாக அறிய முடியவில்லை.

**சில்லாலை வைத்திய மரபு:** சில்லாலை வைத்தியத்தின் ஆணிவேர் மதுரையில் இருந்து மாதகல் வந்த காசிநாதர் குலசேகரம்பிள்ளை இவர்களின் வைத்தியம் 400 ஆண்டுகளுக்கு சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இதில் தனிநாயகம் அரசரெத்தினம் அந்தோனிப்பிள்ளை பின் அந்தோனிப்பிள்ளை வாரித்தம்பி சுவாம்பிள்ளை பின் சுவாம்பிள்ளை இன்னாசித்தம்பி பின் இன்னாசித்தம்பி அந்துக்குட்டி ஆகிய ஐந்து பரம்பரையினர் மாதகலிலும், அத்துக்குட்டி இன்னாசித்தம்பி சில்லாலையில் குடியேறி வைத்தியத்தை தொடர்ந்தார்.



**இராசவைத்தியர் அந்துக்குட்டி இன்னாசித்தம்பி**

இருபாலைச் செட்டியாரிடம் கல்வி பயின்றவர். “எல்லோரும் கைவிட்டால் சில்லாலைத்தம்பி” என்ற பழமொழி ஏற்படக்காரணமாக இருந்தவர்.



**ஏழாவது தலைமுறை சூசைப்பிள்ளை இன்னாசித்தம்பி**

ஐரோப்பிய சிகிச்சைகளால் குணமாகாத அநேகர் இவருடைய வைத்தியத்தால் குணமுற்றார்கள்.



**எட்டாந் தலைமுறை சுவாம்பிள்ளை இன்னாசித்தம்பி**

ஈழத்தில் ஓர் சுதேச வைத்தியக்கல்லூரியும், வைத்திய சாலையும் அடியிட வேண்டுமென்று குரல் எழுப்பி பணியை ஆரம்பித்து வைத்தவர். 1930 இல் அகில இலங்கைச் சித்த வைத்திய சங்கத்தின் முதல் தலைவரும் இவரே.

**ஒன்பதாம் தலைமுறை எமில் இன்னாசித்தம்பி**



வடஇலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சம்மேளனத்தின் முதல் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டவர். ஆயுர்வேத சித்த டிப்ளோமா பட்டதாரிகளுக்கு விரிவுரையாளராக நியமனம் பெற்றார். அகில இலங்கை சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தலைவராக இருந்து செயற்பட்டவர். வடஇலங்கை ஆயுள்வேதக் கல்லூரி பரிபாலனக் குழுவின் இயக்குநராக செயற்பட்டவர். ஆயுர்வேத மருத்துவசபையின் சித்த, யுனானிக் குழுவின் அங்கத்தவராகச் செயற்பட்டவர். யாழ் ஆயுர்வேதக் கல்லூரியின் இறுதியாண்டு பரீட்சகர்களில் ஒருவராகச் செயற்பட்டவர். “சித்த வைத்திய விசாரத்” என்ற மதிப்பு வாய்ந்த பட்டம் பெற்ற முதலாவது தமிழருமாவார். இலங்கை சுதேச வைத்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராகவும் செயற்பட்டவர்.



**பத்தாம் தலைமுறை றெஜினோல்ட சுகந்தன் இன்னாசித்தம்பி :**

இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்புச் சேவையில் சித்த வைத்தியம் மூலமாக மக்களுக்கு ஏற்படும் குறைகளுக்கு நிவாரணம் வழங்கினார். லங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியின் அதிபராக இருந்ததுடன், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் யாழ் மாவட்ட ஆணையாளராகவும் பதவி வகித்தார்.



**ஐ.பொன்னையா அவர்கள் சித்த மருத்துவத்துறையில் ஆற்றிய சேவைகள்:**

ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர் இவர் சித்தவைத்தியம், ஆன்மீகம் இரண்டையும் அடிப்படையாக வைத்தே செயற்பட்டு வந்தார். சமயம், பிரசங்கம், கட்டுரையாக்கம், கவிபுனைதல், ஆலயத் தொண்டு, புராணபடலம், கூட்டுப் பிராத்தனை முதலிய செயற்பாடுகள் மூலம் ஆன்மீகச் செயற்பாட்டில் ஈடுபட்டுவந்தார். வைத்தியப்பணி, வைத்திய நூல்களைப் பதிப்பித்தலுக்கு அச்சு இயந்திரம் தேவைப்பட்டது.

1930 இல் திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையை அமைத்து கலாவல்லி எனும் சஞ்சிகையை சிறந்த ஆக்கங்களுடன் வெளியிட்டார். இக்காலத்தில் அருளானந்தசிவம் எனும் தீட்சாநாமம் பெற்றுக்கொண்டார். இவர் இலங்கையில் சித்தவைத்திய நூல்களைப் பதிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும், வன்னிப் பிரதேசத்திலும் தேடி ஏடுகள், கையெழுத்துப் பிரதிகளை பெற்றுக் கொண்டு சித்த வைத்தியத்துறையில் மிகுந்த பற்றும், சமூக நோக்கங்கொண்டு இவற்றை சித்தவைத்திய நூல்களாக வெளியிடத் தொடங்கினார். யாழ்ப்பாணத்து வைத்திய நூல் வெளியீடு என்று ஆரம்பித்து பதின்மூன்று வைத்திய நூல்களை வெளியிட்டார். இவர் பதிப்பித்த நூல்களாவன:

1. 1927 இல் இருபாலைச் செட்டியாரால் இயற்றப்பட்ட வைத்திய விளக்கம் எனும் அமிர்தசாகரம், பதார்த்தசூடாமணி ஆகிய நூல்களையும், ஐ.பொன்னையா அவர்களால் யாழ்ப்பாணம் சைவப் பிரகாச அச்சுயந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டார்.

2. 1930 இல் வைத்தியத் தெளிவு (அனுபந்தத்துடன்) பொன்னையா அவர்களால் திருமகள் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது. 500 செய்யுட்களைக் கொண்ட இந்நூலில் 202 செய்யுள்களே பெற்றுக் கொள்ளப்பட்டிருந்ததால் அவற்றைப் பாதுகாக்கும் நோக்குடன் பதிப்பிக்கப்பட்டது.

3. 1932 இல் வைத்திய சிந்தாமணி எனும் நூல் ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

4. 1933 இல் சொர்க்கநாதர் தன்வந்திரியம் எனும் நூல் ஏழாலை திருஞானசம்பந்தர் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

5. 1936 இல் அங்காதிபாதம் எனும் நூல் பரராசசேகர நூலைச் சார்ந்தது. இவ்வாண்டில் இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளது.

6. 1938 இல் வைத்திய பூரணம் -205 (அகத்திய முனிவர் அருளிச் செய்தது) ஐ.பொன்னையா திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை, மல்லாகத்தில் பதிப்பிக்கப்பட்டது. பரராசசேகரம் எனும் நூலானது 1930ஆம் ஆண்டு முதல் 1936ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஏழு பாகங்களாக வெளியிடப்பட்டுள்ளது.
7. முதலாம் பாகம் - சிரரோக நிதானம்
8. இரண்டாம் பாகம் - கெர்ப்பரோக நிதானம்
9. மூன்றாம் பாகம் - சத்திரோக நிதானம்
10. நான்காம் பாகம் - வாத, பித்த, சிலேற்பன ரோக நிதானம்
11. ஐந்தாம் பாகம் - மேகரோகம், பிளவைரோகம், பவுத்திரரோக நிதானம்
12. ஆறாம் பாகம் - உதரரோக நிதானம்
13. ஏழாம் பாகம் - மூலம்,அதிசாரம், கிரகணி, கரப்பான், கிரந்தி, குட்டரோக நிதானங்கள்

1948 இல் தைமாதம் 30 ஆந் திகதி இறைபதம் எய்தினார்.



### ஜே. பஸ்தியாம்பிள்ளை

மலேசியாவில் வைத்தியத் தொழில் செய்துவிட்டு யாழ்ப்பாணம் வந்து நல்லூர் கோயில் வீதியில் 1920 ஆண்டு ஒரு வைத்தியசாலையும், ஆயுர்வேத வைத்திய மாணவர்கள் சிலருக்கு போதனையும் நடாத்தி வந்தார். பின் இவ்வைத்தியசாலை இராசாவின் தோட்டம் எனும் பகுதிக்கு மாற்றப்பட்டு தமிழ்நாடு சென்னையில் 1924 இல் ஆயுர்வேதக் கல்லூரி உருவானதையடுத்து 1925 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இவரால் ஸ்ரான்லி வீதியில் இலங்கையில் முதலாவது ஆயுள்வேதக் கல்லூரி உருவானது.



### லங்கா சித்த ஆயுள்வேதக் கல்லூரி

இக்கல்லூரிக்கு 1925- 1933வரை பஸ்தியாம்பிள்ளை அவர்கள் அதிபராக கடமை யாற்றினார்.

பண்டித் எச் .எஸ். ஐயங்கர் கடமை யாற்றினார். இவர் இந்தியாவில் இருந்து இங்கு வந்து கடமையாற்றியவர்.



H. ஸ்ரீநிவாச ஐயங்கர் லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் 1928 - 1941 வரை கடமையாற்றியவர்.





R.E.W . ஜெகோரட்ணம் ( 1967- 1975)     S.A. இராசையா (1941- 1967)





A.V. இராசரட்ணம் (1975- 1989)　　　　பூ. உரோமகேஸ்வரன் ( 1989-1991)

பூ. உரோமகேஸ்வரன் வடக்கு கிழக்கு மாகாண பணிப்பாளராகவும், யாழ் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினராகவும் கடமையாற்றியவர்.

ஆயுர்வேத விசாரணை ஆணைக்குழு செய்த முடிவின்படி யாழ்ப்பாணத்தில் சித்த மருத்துவமனையும், சித்த மருத்துவக் கல்லூரியும் நிறுவுவது என்ற தீர்மானத்தின் பயனாக 1967 ஆம் ஆண்டு அத்திவாரமிடப்பட்டு கட்டப்பட்டு தற்போது யாழ் பல்கலைக்கழகத்தின் ஒரு பிரிவாக சித்த மருத்துவப் பிரிவு இயங்கிவருகிறது.





**கைதடி சித்த போதனா வைத்தியசாலை**

## முடிவுரை:

யாழ்ப்பாணத்தில் தமிழ் வைத்தியம் ஆரம்பகாலத்தில் மன்னர்களால் பாதுகாக்கப்பட்டு வளர்க்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் தமிழ்வைத்தியம் பெருவளர்ச்சி கண்டுள்ளது. மன்னர்களே வைத்தியர்களாக இருந்து மருத்துவ அறிவை வளர்ப்பதற்கு தமிழ்ச்சங்கம் அமைத்து பண்டிதர்களை வரவழைத்து ஏடுகளை எழுதி வைத்துள்ளனர். எனினும் அன்னியரின் படையெடுப்பாலும், மதமாற்றத்தாலும் மேலைத்தேய வைத்தியம் இங்கு புகுத்தப்பட தமிழ் வைத்தியம் சீர்குலைந்தது. எனினும் சில தனிப்பட்ட வைத்தியர்களாலும், வைத்தியக் குடும்பங்களாலும் தமிழ் வைத்தியம் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் அழிந்து போன ஏடுகள் தவிர்ந்து சில ஏடுகள் சில தனிப்பட்டவர்களால் கடின முயற்சியின் பின் நூல்களாக வெளிவந்துள்ளது. இவை இன்றும் சித்த மருத்துவத்தின் தனித்துவத்தை பறை சாற்றுகின்றது.

## உசாத்துணை நூல்கள் :


- அடைக்கலமுத்து. ச, காக்கும் கரங்கள் இன்னாசித்தம்பி வைத்திய பரம்பரை, சில்லாலை, 1983.
- அன்புச்செல்வி. ஸ்ரீ, யாழ்ப்பாணத்தில் சித்தமருத்துவம் அன்றும் இன்றும் ஓர் வரலாற்று ஆய்வு, யாழ்ப்பாணம், 2007.
- இராஜசேகரம், சிங்கை அரசர்களின் அறுவை மருத்துவம், கொழும்பு, 2010.
- இந்திராணி. மு, ஏழாலைக் கிராமத்தின் நவமணிகள், ஏழாலை. 2012.
- சித்த மருத்துவ வெள்ளிவிழா மலர் 1984- 2009 யாழ். பல்கலைக்கழகம், கைதடி 2011.
- பவளவிழாமலர்1925- 2000 லங்காசித்த ஆயுர்வேதமருத்துவக்கல்லூரி, யாழ்ப்பாணம். 2003.
- வடஇலங்கை சித்த ஆயுள்வேத மருத்துவமலர், யாழ்ப்பாணம், 1978.

# கவிஞர் சுபத்திரன் அவர்களின் கவிதை செயற்பாட்டையும் வாழ்க்கையினையும் ஆவணப்படுத்தல்

நரேந்திரன் நிருசாந்த்

## ஆவணப்படுத்துவதன் அவசியம்

இன்று வரலாற்றினை ஆவணப்படுத்தல் என்பது மிக முக்கியமான ஒரு விடயமாகும். பல நிகழ்வுகள், பல மனிதர்களின் உன்னத வாழ்க்கை அனுபவங்கள் சரியாக ஆவணப்படுத்தப்படாமலே போனதால் பல நல்ல அனுபவங்களையும் வாழ்க்கை தரவுகளையும் நாம் அறியாமலே போய் விட்டோம். அதன் இழப்புக்கு ஏதும் ஈடாகாது. நம்மோடு வாழ்ந்த அற்புத மனிதர்கள் பற்றிய நினைவுகள் நம்மோடே மறைந்து போய்விடக்கூடாது. அவர்களின் வாழ்க்கை நம் சந்ததியினருக்கு என்றும் வழிகாட்டிகளாக இருக்க வேண்டும். அந்த வகையில் இந்த ஆவணப்படுத்தலும் முக்கியமான ஒன்றாகும். நான் கூறப்போவது உலகத்தையே தன் சர்வாதிகாரத்தின் கீழ் அடக்க நினைத்த உரோமா புரியின் பேரரசர் சீசரை பற்றியோ இல்லை சிறுவயதிலேயே உலகையே பிடிக்கப் புறப்பட்ட மாவீரன் அலெக்ஸ்டாண்டரை பற்றியோ இல்லை தமிழன் கொடிகளை இலங்கை முதல் பர்மா வரை பறக்கவிட்ட ராஜராஜ சோழனை பற்றியோ இல்லை. இவர்கள் மட்டும் தானா வரலாற்று நாயகர்கள் இல்லை தன்னலம் மறந்து பிறநலத்தை நினைத்து வாழ்வோர் எல்லோரும் இந்த உலகின் நாயகர்கள் தான் அப்படி மட்டக்களப்பு மண்ணில் வாழ்ந்து மறைந்த கவிஞர் சுபத்திரன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை ஆவணப்படுத்தும் சிறிய முயற்சியே இதுவாகும்.

கவிஞர் சுபத்திரன் அவர்களின் வாழ்க்கை வரலாறு ஆவணப்படத்தப்பட வேண்டியதன் அவசியம் என்னவென்றால். இவர் தன் வாழ்நாளை தனக்காக செலவு செய்ததைவிட மக்களுக்காக செலவு செய்ததே அதிகம். தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்வில் ஒளி ஏற்ற பல முயற்சிகளை செய்தார். இவரின் வாழ்க்கை ஓட்டம் மிக சுறுசுறுப்பானதும் பல சுவாரஸ்யங்கள் நிறைந்ததும் ஆகும். தன் பாதையில் பல தடைகள் இடர்கள் கஷ்டங்கள் எல்லாவற்றையும் பார்த்தும் சற்றும் சலிப்படையவும் இல்லை, தன் கொள்கையில் இருந்து விலகிக்கொள்ளவும் இல்லை. இவரைப் பற்றி நான் அறிந்ததே எதிர்பாராத சந்தர்ப்பத்திலே எனது நாடக வழியின் தந்தை பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களின் அரங்க ஆய்வு கூடத்தில் அவருக்கு ஒய்வு கிடைக்கும் நேரத்தில் எல்லாம் தன் வாழ்க்கை அனுபவம் பற்றியும் தான் கண்ட அற்புத மனிதர்களை பற்றியும் பேசிக்கொண்டு இருப்பார். அப்படி தான் அன்றொரு நாள் மாலைப் பொழுதிலே நாம் உரையாடிக் கொண்டிருக்கும் போது கவிஞர் சுபத்திரன் அவர்களை பற்றியும் பேச தொடங்கினார். சில வார்த்தைகளிலேயே அம்மனிதர் மேல் மதிப்பும் மரியாதையும் என்னுள் வந்து விட்டது. வாழ்வை அற்பமாக வாழ்ந்து தன்னோடு முடித்துக் கொள்ளும் அற்ப மானிடர்களின் முன் கவிஞர் சுபத்திரன் அவர்களின் வாழ்வு விருட்சம் விட்டு பரந்துகிடக்கும் ஆலமரம் போல எனக்கு தென்பட்டது.

உலகில் தினமும் பல ஆயிரம் பேர் பிறக்கின்றனர் இறக்கின்றனர் எல்லோரும் தன் வாழ்வை முழுமைப்படுத்துவதில்லை அப்படி வாழ்வோர் ஒரு சிலரே அதில் இவரும் ஒருவர் ஆலமரம்

இருக்கும் வரை பலருக்கு நிழல் கொடுத்து பல உயிர்கள் தன்னைச் சுற்றி வாழவழி செய்யும் அது இறந்தாலும் பலருக்குப் பயன்படும். அப்படிப்பட்ட மனிதர் தான் இவரும். இவர் இருக்கும் போது பலருக்காக வாழ்ந்து அவர்களுக்கு வழிகாட்டியாக இருந்தார். அவர் இறந்த போதும் அவர் தனது நண்பர்கள், உற்றார், மாணவர்கள் நினைவுகளிலும் கவிதை வழியிலும் வாழ்க்கையின் விழுமியங்களை சொல்லிக் கொண்டுதான் இருக்கிறார். இவரைப் போன்ற அற்புத மனிதர்களின் வாழ்க்கையை நமது சந்ததியினர் அறியாமலே போய்க்கொண்டு இருக்கிறார்களே என்ற கவலை எனக்கு எழுந்தது. அப்போது சிந்தித்தன் விளைவே இவ் ஆய்வுக் கட்டுரையாகும். இதைப்பற்றி பேராசிரியரிடம் கூறினேன் அவர் எனக்கு முழு ஒத்துழைப்பும் தந்து வழிகாட்டினார். அவர் எழுதிய கவிதைகள், அவரைப்பற்றி வந்த கட்டுரைகள் முக்கியமாக அவரோடு உறவாடிய நண்பர்கள் மூலம் அவரின் வாழ்வில் சில சுவடுகளை அறிந்து கொண்டேன். மேலும் அறிந்து கொண்டிருக்கிறேன். இப்போது கிடைத்த தகவல்களைக் கொண்டு இந்த ஆவணத்தை தொகுத்து இருக்கிறேன். மேலும் தகவல்கள் கிடைக்கும் பட்சத்தில் இவ்ஆவணப்படுத்தல் மேலும் விரிவாக்கப்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

## சுபத்திரன் பற்றிய அறிமுகம்

இவர் 1935.04.16 ஆம் திகதியன்று மட்டக்களப்பு மண்ணில் பிறந்தார். இவரின் இயற்பெயர் க.தங்கவடிவேல் தந்தை திரு.க.கந்தையா, தாய் திருமதி.க.தெய்வானைப்பிள்ளை ஆகும். மட்டக்களப்பு மெதடிஸ் மத்திய கல்லூரியில் தனது கல்விச் செயற்பாட்டில் ஈடுபட்டு கல்வி அறிவை வளர்த்துக் கொண்டார். இவர் ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியர். யாழ்ப்பாணத்து நல்லூரைச் சேர்ந்த சுபத்திரா அவர்களை விரும்பி எல்லோரின் சம்மதத்திலும் திருமணம் செய்து கொண்டார். தன்மனைவி மீது இருந்த அன்பின் காரணமாகவே சுபத்திரன் என்னும் புனைப்பெயரில் கவிதைகளை எழுதினார். இவர்களது வாழ்வுக்கு அர்த்தம் சேர்ப்பதாக வள்ளுவன், இராகுலன், மகாசேனன், மாதுாங்கன், ஆதவன் ஆகிய ஐந்து புதல்வர்கள் பிறந்தனர். வாழ்க்கை ரொம்ப அழகானது எனத் தனக்காகவும் பிறருக்காகவும் வாழும் போது அதை உணர்ந்து கொள்ள முடியும். சுபத்திரன், குடும்பம் எனும் குறுகிய வட்டத்துக்குள் வாழ ஆசைப்படவில்லை. அப்படி வாழ்ந்திருந்தால் அவர் இன்று உயிரோடு இருந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி வாழவில்லை. எல்லோரும் சமம். எல்லோரும் எல்லாம் பெற்று நல்ல படியாக வாழ ஆசைப்பட்டவர். அதற்காக தன் வாழ்வையும் அர்ப்பணித்த மனிதர்.

இவர் பிறந்து வாழ்ந்த காலம் இலங்கை பல முக்கிய அரசியல் சமூக மாற்றங்களையும் நெருக்கடிகளையும் கண்ட காலகட்டமாகும். இலங்கையில் மட்டுமல்ல உலகிலேயே பல புரட்சிகளும், விடுதலைக்குரல்களும் எழுந்த காலப்பகுதியாகும். மக்களுக்கும் அரசுக்குமான போராட்டம், கறுப்பு இன, வெள்ளை இனப் போராட்டம் எனப் பல விடுதலை விதைகள் வீசப்பட்டன. பல புரட்சியாளர்களும் உலகிலேயே தலை நிமிர்ந்தனர். அதில் ஒருவர் தான் 'மாஓ' ஆவார். இவரின் கொள்கையில் மிகவும் கவரப்பட்டவராக சுபத்திரன் காணப்பட்டார். அவர் இறக்கும் வரை அவர் சிந்தனையில் இருந்து விடுபடவில்லை. மேற்கு நாட்டில் எழுந்த புரட்சி விதை இலங்கையிலும் வேர்விட ஆரம்பித்தது. இதை இவரது பல கவிதைகள் வெளிப்படுத்திக் காட்டின.இவரது கவிதைகள் தனி சிறப்பு வாய்ந்தனவாகும்.

### சுபத்திரனின் கவிதை செயற்பாடும் அவை பேசிய தளங்களும்

அறுபதுகளின் ஆரம்பம், வர்க்கப் போராட்டக் கருத்துக்கள் உச்சமடைந்து புரட்சிகரப் பாதையா?, பாராளுமன்ற பாதையா? என விவாதம் கண்டு அணி பிரிந்த காலமாகும்.

அதேவேளையில் சுபத்திரன் புரட்சிகர பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டில் நின்று உணர்வு மிக்க கவிதைகளை எழுதினார். தமிழ் மக்கள் மத்தியில் யாழ்ப்பாணத்தில் 1960களில் நடைபெற்ற தீண்டாமைக்கெதிரான வெகுஜனப் போராட்டத்தில் கவிஞர் சுபத்திரன் படைத்த கவிதைகள் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு உத்வேகம் ஊட்டின. ஒடுக்கு முறைக்கு எதிராக நடைபெற்ற எல்லாப் போராட்டத்திலும் கலந்து கொண்டு கவிதை முழக்கத்தை இவர் நிகழ்த்தினார். அவரின் பாடல்கள் பிற கவிஞர்களால் இசைக்கப்பட்டன. தமிழ் மக்கள் மத்தியில் ஈழத்தில் நடைபெற்ற முதலாவது ஜனநாயகப் போராட்டமென கணிக்கப் பெறும் ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் விடுதலைப்போரில் சாதியின் பேரால் இரண்டுபட்ட தமிழர்களை ஒன்று படுத்திய பேரணியில் முன்னின்று உழைத்த தோழர்களுடன் கவிஞர் சுபத்திரன் நின்று தன் கவிதை வழியிலும் செயல் வழியிலும் களத்தில் நின்று உழைத்தார்.

இவரது கவிதைகள் பல நூல் வடிவம் பெற்றுள்ளது. 1997 இல் கவிஞர் சாருமதி பூவரசுகள் அமைப்பின் சார்பில் இவரது கவிதைகளை தொகுத்து 'சுபத்திரன் கவிதைகள்' என்ற நூலாக வெளியிட்டார். இதில் 91 கவிதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் மரணம் அடைந்து 18 வருடத்தின் பின்னரே இந்த கவிதைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. பின்னாளில் பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் தொகுப்பட்ட 'கவிஞர் சுபத்திரன் கவிதைகள்' என்ற நூலில் மேலும் அவரின் சுவையான கவிதைகள் வெளிவந்தன. சுபத்திரன் அவர்கள் நிறைய கவியரங்கங்களில் பங்கு பற்றியவர். ஆயினும் அவரது வாழ்வின் இறுதிக் காலத்தில் வீசிய குடும்ப சூறாவளியில் அவை சிதைக்கப்பட்டு விட்டன. அவற்றில் பல கவிதைகள் கைக்கு கிடைக்காமல் போய்விட்டன. கிடைத்த கவிதைகளையும், நண்பர்களிடம் இருந்த கவிதையினையும் சேர்த்து இந்த கவிதை தொகுப்பு நூல்களும் வெளிவந்துள்ளன. அக்கவிதைகள் எதிர்காலத்தில் கிடைக்கும் சமயத்தில் இவை மேலும் நூல் வடிவம் பெறக்கூடும்.

இலங்கையின் தமிழ்க்கவிதை உலகைப் பொறுத்தவரை முற்போக்கு இலக்கிய பாரம்பரியத் தோற்றத்தினை 1940 களில் இனங்காணக் கூடியதாக இருந்தாலும் 1960 களிலே அதன் எழுச்சியினையும வளர்ச்சியினையும் நாம் பார்க்க முடியும். இந்த எழுச்சியால் பாதிக்கப்பட்ட இலக்கியப் படைப்பாளிகளில் சுபத்திரனும் ஒருவர். 1960களின் முற்பகுதியில் தன்னை ஒரு முற்போக்கு கவிஞராக அடையாளம் காட்டிக் கொண்ட சுபத்திரன் தான் இறுதி மூச்சை விடும் வரை தன் கொள்கையில் இருந்து சற்றும் தளரவில்லை. மக்கள் எங்கெல்லாம் ஒடுக்கப்படுகிறார்களோ அவர்களின் உரிமை எங்கு பாதிக்கப்படுகிறதோ சாதியின் பெயரில் எங்கு மனிதன் சிதைக்கபடுகிறானோ அங்கெல்லாம் சுபத்திரன் சென்றார் தன் கவிதை வழியில் குரல் கொடுத்தார். கவிதை முழக்கம் செய்தார். இவர் கவிதைகள் ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்களாக ஒலித்தன. அவர்களின் வலியும் கோபமும் அவரின் வரிகளில் புலப்பட்டன.

இவரின் கவிதைகளை நாம் நான்காக வகுத்து பார்க்க முடியும்.

1. கட்சிக் கவிதைகள்
2. அரசியல் கவிதைகள்
3. பொதுவான கவிதைகள்
4. அக உணர்வுக் கவிதைகள்

கட்சிக் கவிதைகள் என்பன கட்சியின் தேவை கருதி கட்சிப் பத்திரகைகளில், கட்சி அணிகளுக்காக எழுதப்பட்டன. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையாகிய 'தொழிலாளியிலே' இத்தகைய கவிதைகள் அதிகம் வெளிவந்தன.

இவரின் அரசியல் கவிதைகள் மிகவும் இறுக்கமான தன்மையினைக் கொண்டு காணப்பட்டன. பல விதத்திலும் அரசியலை அவை பேசின. அவரின் சாதி ஒடுக்குமுறைக்கெதிரான கவிதைகளையும் அரசியல் கவிதைகளுக்குள்ளேயே வைத்துப் பார்க்க வேண்டும். இவரின் கவிதையினுள் இவை மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றன. சுபத்திரன் அவர்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர். 1960 களின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சாதிக்கும், தீண்டாமைக்கும் எதிரான போராட்டம் உச்சமடைந்தது. அப்போது அங்கு சென்று நேரடியாக மக்களுடன் இணைந்து, கவிதை மூலமாகப் போராடியவர் சுபத்திரன் அவர்கள். இவரின் சாதி எதிர்ப்பு கவிதை அடங்கிய தொகுப்பாக 'இரத்தக்கடன்' எனும் கவிதை தொகுதி வெளியிடப்பட்டது. இத்தனைக்கும் சுபத்திரன் அவர்கள் உயர் வேளாளர் குடியைச் சேர்ந்தவராக இருந்தபோதும் தாழ்த்தப்பட்ட மக்களில் ஒருவனாக தன்னையும் கருதி சாதி எதிர்ப்பு கவிதைகளை எழுதினார். சுபத்திரன் அவர்கள் ஏற்றுக் கொண்ட மாக்ஸிச வழிச் சித்தாந்தமே இதற்கு காரணமாகும்.

பொது வாசகர்களுக்காக எழுதிய கவிதைகளில் அவரின் கவிதைச்சிறப்பு புலப்படுகின்றது. அந்தக்கவிதைகள் குறைவாகவே கிடைக்கப்பட்டுள்ளது நமது துர்பாக்கியமாகும். இக்கவிதைகளில் அவர் கையாளும் லாவகம் மிக சிறப்பாகக் காணப்படும்.

அக உணர்வுக்கவிதைகள் பெரும்பாலானவை அவரின் மரணத்துக்கு அண்மித்த காலப்பகுதியிலேயே கிடைக்கப்பட்டுள்ளன. அவை இறுதிக் காலத்தில் அவர் எவ்வகையான மனக்குழப்பத்திற்கு உள்ளாகி இருந்தார் என்பதற்கு உதாரணமாக உள்ளது. சுபத்திரனின் கவிதைகளில் உள்ள மிகச் சிறப்பு அம்சம் என்னவென்றால் அவர் எவர் பொருட்டு அக்கவிதையினை எழுதுகிறாரோ அவர்களின் ஒருவனாக தன்னை நிறுத்தியே தனது குரலை அவர் கொடுத்துள்ளார். சாதி கொடுமை கவிதைகளில் 'பாரதத்தாய் விழித்தெழுவாள் ............' என்ற கவிதைகளில்

*'வீரமிருக்கும் பாரதத்தாய்*
*விழித்தெழுந்தெம்*
*வீர வரலாற்றைப்*
*படிக்கப் போகின்றாள்'*

கவிதையில் தானும் அதில் ஒரு அங்கமாகவே மாறி விடுகின்றார். இப்படி தான் எழுதிய எல்லா கவிதையிலும் தானும் ஒன்றாக மாறி கவிதையினை படைப்பது இவரது சிறப்பு இதை எல்லாக் கவிதைகளிலும் பார்க்க முடியும். இவரின் கவிதைகள் யாருக்காக எழுதினார் என்பதில் இருந்தே அவருடைய கவிதைகளில் வடிவமும் அமைந்துள்ளன. இவ்வாறு இவரால் எழுதப்பட்டு நூல் வடிவம் பெற்ற கவிகளின் ஊடாக இவரின் கவித்துவத்தையும் வெளிப்பாட்டையும் நம்மால் பார்க்க முடியும். இவரின் கவிதைச் செயற்பாட்டையும் விட்டு இவரின் அரசியல் செயற்பாட்டையும் இவரின் வாழ்க்கை அனுபவத்தையும் பதிவு செய்தல் என்பது மிக முக்கியமான ஒரு அம்சமாகும்.

**சுபத்திரனின் வாழ்க்கையும் அதில் அவர் சந்தித்தவையும்**

சுபத்திரன் அவர்கள் 1950களில் தமிழரசுக்கட்சியின் பால் ஈடுபாடு கொண்டு அக் கட்சியின் தீவிரபிரச்சாரராக கூட செயற்பட்டார். சுபத்திரன் தமிழரசு கட்சியில் இருக்கும் போது மேற்கொண்ட சத்தியாகிரக போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டு பொலிசாரால் தாக்கப்பட்டு மட்டக்களப்பு சுடுகாட்டின் அருகே வீசப்பட்டுக்கிடந்த சம்பவமும் நடைபெற்றுள்ளது. பின்னாளில் ஒடுக்கப்படுகின்ற மக்களின் பிரச்சனைகளை நேர்மையுடன் இவர் அணுகிய போது தமிழரசுக் கட்சியுடன் முரண்பட்டு அறுபதுகளின் ஆரம்பத்தில் விலகிக்கொண்டார். மட்டக்களப்பில் தமிழரசு கட்சியின் கொடி உயர்ந்து காணப்பட்ட போது கேரளத்தை சேர்ந்த கிருஸ்ணகுட்டி கம்யூனிஸ்ட் கட்சியின் வழியில் நிற்பதாக கூறிக் கொண்டார். இவரை சுற்றி ஒரு இளைஞர் குழாம் தம்மை இடதுசாரிகளாக இனம் காட்டிக் கொண்டனர். இவர்களில் ஒருவராக சுபத்திரனும் இணைந்து கொண்டார். மாஓவின் கருத்தில் கவரப்பட்டு சுபத்திரன் அவரின் சிந்தனைகளைப் பின்பற்றத் தொடங்கினார். கம்யூனிஸ்ட் கட்சியை இவர் விரும்பக்காரணம் அவர்கள் கட்சியில் எந்தப்பாகுபாடும் இல்லை எல்லோரும் சமம். சாதி, இனம், மொழி என்ற வேறுபாடு இல்லை. எல்லோரையும் தோழர்கள் என்று தான் அழைப்பார்கள். ‘வணக்கம் தோழரே’, ‘சாப்பிடுங்கள் தோழரே’ என்று தான் பேசிக்கொள்வர்கள். பல மணிநேரம் உரையாடி பல விவாதங்கள் நடக்கும். நாட்டு நடப்புக்கள் உலகின் நிலவரங்கள் எல்லாவற்றையும் பற்றிப் பேசிக்கொண்டே இருப்பார்கள். சுபத்திரன் அரசியல் கட்சியில் இருந்தாலும் ஒரு அதிருப்தியாளராகவே இருந்தார். போலித்தனம் அநீதி ஆகியவற்றை எப்போதும் அவர் வெறுத்தார்.

கம்யூனிஸ்ட் இரண்டாக பிரிந்து காணப்பட்டது ஒன்று இலங்கை, மொஸ்கோ சார்பான கம்யூனிஸ்ட் கட்சி (இது ரஸ்யாவுக்கு சார்பானது) அடுத்து இலங்கை மாக்சிச லெனின் கம்யூனிஸ்ட் கட்சி இது சீன சார்பானது. இது மாஓவின் கொள்கையை ஆதரிப்பதாக இருந்தது. இதன் தலைவராக சண்முகதாசன் காணப்பட்டார்.இக் கட்சியில் சுபத்திரன் 10 வருடங்களுக்கு மேலாக செயற்பட்டு தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்காகப் பாடுபட்டார். இவர் கம்யூனிஸ்டாக இருக்கும் போது குறிப்பிட்ட ஒரு வருடத்தில் மே தினம் கொண்டாட கூடாது என அரசாங்கத்தால் தெரிவிக்கப்பட்ட போது யாழ்பாணத்தில் இதனை கொண்டாட நினைத்த இவர்கள் யாழ்பாண திரையரங்கில் படம் முடியும் நேரத்தை எதிர்பார்த்து படம் முடிய வெளிவந்த மக்களை வைத்து திடீர் என்று மேதினக் கொண்டாட்டத்தை தொடங்கி பொலிசாரிடம் அடி வாங்கிய நிகழ்வுகளும் நடைபெற்றுள்ளது. இதனால் பல கஷ்டங்களையும் இடர்களையும் தன் சொந்த வாழ்விலும் அனுபவித்தார். பின்னர் சண்முகதாசனின் தலைமையில் இருந்து கட்சி செயலிழக்கின்றது. சுபத்திரனும் கட்சி செயற்பாடுகளில் அதிருப்தியடைந்து பின்னர் விலகிக் கொண்டார். ஆனால் தன் கொள்கையில் இருந்து அவர் இறக்கும் வரை அவர் மாறவில்லை. பிற்காலத்தில் ‘கீழைக்காற்று’ என்று இயங்கிய இயக்கத்துக்கு இவர் வெளியில் நின்று தனது ஆதரவை வழங்கினார்.

அவரின் பொதுநல வாழ்வும் செயலும் அவரின் சொந்த வாழ்வில் மெல்ல மெல்ல புயலை வீசத்தொடங்கியது. யாழ்பாணத்து நல்லூரை சேர்ந்த சுபத்திராவை மனம் விரும்பி திருமணம் செய்து அழகான ஐந்து புதல்வர்களையும் பெற்று மகிழ்ச்சியுடன் ஆரம்பத்தில் அவர் இருந்தாலும் அது தொடரவில்லை. இவர் பொது செயற்பாடுகளில் அதிகமாக ஈடுபட்டதால் அவர் வேலைக்கு பாதிப்பு ஏற்பட்டது. குடும்பத்தை முழுமையாக கவனிக்க முடியாததால் அது குடும்பத்தினுள்ளும்

பிரச்சனையை கொண்டு வந்தது. பொருளாதாரப் பிரச்சனையும் அவரை மையம் கொண்டது இதனால் அவரிடம் இருந்த வயல் நிலங்களை எல்லாம் இழக்க நேரிட்டது. கணவன் மனைவி உறவில் சற்று விரிசலும் உருவாகியது. எல்லோருக்கும் சம உரிமை வரவேண்டும் என்ற கனவு நிறைவேறுமா? என்ற எதிர்பார்ப்பு குடும்பப்பிரச்சனை வேறு இவை எல்லாம் சுபத்திரனை கடைசிக் காலத்தில் மனஉளச்சலுக்கு உள்ளாக்கியது. உலகிலே தன்னலம் விட்டு பிறர் நலத்துக்காக வாழ்ந்தோர் எல்லோரும் அனுபவித்த வேதனையையே இவரும் அனுபவித்தார். இவரின் துயரின் போது இவருக்கு ஆதரவாக இருந்தவர்கள் இவரின் சில நண்பர்களே ஆகும்.

சுபத்திரன் கம்யூனிஸ்ட்டாக முன்னர் இவரின் நண்பர் வட்டாரமாக கவிஞர் காசி ஆனந்தன், பேராசிரியர் சி.மௌனகுரு, பாலுமகேந்திரா, வெலிங்டன், வடிவேலு, போன்றோரையும். இவர் கம்யூனிஸ்ட் ஆன பின்னர் பல நண்பர் வட்டாரம் இவருக்கு இருந்தது. குறிப்பாக துரைரட்ணம் (ரணசிங்கம்), சிவராசா, யோகநாதன் (கவிஞர் சாருமதி), கனகசுந்தரம், நேசராஜா போன்றோரையும் குறிப்பிடலாம். உலகில் நடக்கும் பல விடயங்களையும் பல மணி நேரம் தனது நண்பர்களுடன் பேசிக் கொண்டே இருப்பார். இவர் உலக நடப்பு பற்றி பேசத் தொடங்கினால் இரவு கழிவது கூட இவருக்குத் தெரியாது. வீதியோர விளக்குகளின் அருகில் இருந்து சீனப்புரட்சி முதல் இலங்கை நிலவரம் வரை பேசிக் கொண்டு இருப்பாராம். நண்பர்களின் திறமையினை ஊக்கு வித்து அவர்களை செயற்பட வைத்தார். குறிப்பாக நேசராஜாவின் திறமையை அறிந்து அவரை கவிஞனாக்கிய பெரும் பங்கு இவரையே சாரும்.

இவர் நண்பர் வட்டாரத்துடன் இருக்கும் போது நடந்த ஒரு சம்பவம் சுவாரசியமானது உணர்ச்சி கவிஞர் என்று சொல்லப்பட்ட காசி ஆனந்தனின்

*'சத்தை இளந்த தமிழ் சாதி வாழ*
*பத்தாயிரம் கவி சாற்றாமல்*
*சாவேனோ?'*

எனும் கவிதையை 'சுதந்திரன்' பத்திரிகையில் பார்த்த சுபத்திரனுக்கு சிரிப்பு வந்து விட்டது. 'சந்தம் நல்லா இருக்கு. எதுகை மோனையும் நல்லா இருக்கு. உணர்ச்சி ஏற்படுத்திறபோல வரியும் இருக்கு. ஆனா ஒரு கவிஞன் பத்தாயிரம் கவி சாற்றினால் தமிழ் சாதி வாழும் அதற்கு எதிராக இன்னொரு கவிஞன் பதினொறாயிரம் கவி சாற்றினால் அப்போது தமிழ்ச்சாதி அழிந்து விடுமா?' என்று கேட்டார். அப்போது நண்பர் வட்டாரம் இதற்கு பதில் சொல்வதாக ஒரு கவி எழுதுமாறு கேட்டதுக்கு 'சரி இந்தா எழுதி கொள்'என்று சொல்லத் தொடங்கினார்.

*'ஒரு கோடிக் கவிதைகளால்*
*உலகம் போற்றும்*
*பெருங்கவிஞன் என நாமம்*
*பெற்றாலும் அது*
*ஒரு சொட்டு இரத்தத்தை*
*உரிமைப் போரில்*
*தருபவனின் புகழ் முன்னே*
*தூசு தூசு'*

அப்படி உருவான கவிதையே இது. எல்லோரின் பாராட்டையும் அன்று பெற்றுக்கொண்டது. இந்த கவிதையினை பிரேம் போட்டு வீடுகளில் மாட்டி வைத்தவர்களும் உள்ளனர். இப்படி இவரைச் சுற்றி ஒரு அழகிய நண்பர் வட்டாரம் காணப்பட்டது. இவர் எந்த வித பாகுபாடும் இன்றி உண்மையாக பழகியதால் கிடைத்த உறவுகள் இவையே. இன்றும் இவர்கள் மனதில் சுபத்திரன் வாழ்ந்து கொண்டு இருக்கிறார் என்றால் அவர் உண்மை வாழ்வுக்கு கிடைத்த அர்த்தமே ஆகும்.

சுபத்திரன் ஆரம்பத்தில் கொழும்பில் ஆசிரியராகக் கடமையாற்றி பின்னர் மட்டக்களப்பின் கிராமங்களான கன்னங்குடா மகாவித்தியாலயம், மட் புதூர் வித்தியாலயம், கிரான்குளம் மகாவித்தியாலயம், ஏறாவூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை போன்ற பாடசாலையில் தன் கல்விசார் சேவையை ஆற்றினார். இவர் பெறுவாரியாக மக்களுக்காக வேலை செய்த இடங்களாக மட்டக்களப்பின் கன்னங்குடா, படுவாங்கரை, மண்டபத்தடி பகுதிகள் மற்றும் வாழச்சேனை காகித தொழிற்சாலையின் தொழிற்சங்க போராட்டத்திலும் கலந்து கொண்டு அவர்கள் பிரச்சனைக்காகக் குரல் கொடுத்தார். குறிப்பாக அங்கு வேலை செய்த சத்தியசீலன் மின்சாரம் தாக்கி இறந்த போது அவரின் மரணத்துக்காக கேள்வி கேட்டு 'சத்திய சீலன் இறந்தது இயற்கையா? செயற்கையா?' என கவிதை எழுதினார். அவரின் அரசியல் ஆயுதம் அவரின் கவிதைகளே ஆகும்.

இலங்கையில் எங்கெல்லாம் முற்போக்கு கூட்டம் நடை பெற்றாலும் அங்கெல்லாம் சென்று தனது ஆதரவை தனது செயல் வழியிலும் கவிதையிலும் வெளியிட்டார். மலை நாட்டில் நடைபெற்ற தொழிலாளர்களின் கூலி உயர்வுப் போரட்டத்திலும் யாழ்பாணத்தில் இடம் பெற்ற ஒடுக்கப்பட்ட மக்களின் சாதிக்கெதிரான போரட்டத்திலும் கலந்து கொண்டு தனது கவிதை முழக்கங்களை நிகழ்த்தி ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை உலகுக்கு பறை சாற்றினார். இலங்கை மட்டும் அல்ல எங்கெல்லாம் மக்கள் ஒடுக்குதலுக்கு உள்ளாகின்றனரோ அங்கெல்லாம் இவர் குரல் கவிதையாக ஒலித்தது வியட்நாமரின் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்குக் கெதிரான விடுதலைப் போராட்டம் எல்லாவற்றுக்கும் தனது ஆதரவை கொடுத்தார்.அன்றைய அரசியல் தலைவர்களான கிருஸ்ணகுட்டி, சண்முகதாசன், பிரேம்லால் குமரசிறி, மார்ட்டின் விக்கிரமசிங்க, விஜயவீர, கார்த்திகேசன், பீற்றர் கெனமன் போன்றோருடன் இணைந்து செயற்பட்டுள்ளார்.

அன்று ஒடுக்கப்பட்ட மக்களாக கருதப்பட்ட வண்ணார், சக்கிலியர், நளவர், அம்பட்டர், கடையர், பறையர், நகர சுத்திசெய்வோர் என எல்லோருடனும் நேரடியாக சென்று பழகி அவர்கள் பிரச்சனையை அறிந்து அவர்கள் பிரச்சனைக்கு தீர்வுகாண பல முயற்சிகளை மேற் கொண்டார். அரசியல் நோக்கத்துக்காக அவர்களை பயன்படுத்தும் அரசியல் வாதிகளை போல் அவர் அவர்களுடன் பழகவில்லை. அன்றைய காலத்தில் அவர்களை வீடுகளுக்குள் எடுப்பதும் இல்லை. அவர்கள் வீடுகளுக்கு யாரும் போவதும் இல்லை. ஆனால் சுபத்திரன் அதை எதையும் பொருட்படுத்தாமல் அவர்க்ள் வீடுகளுக்குச் சென்று பழகி உறவாடி அவர்கள் கொடுக்கும் உணவை உண்டு அவர்கள் பிரச்சனையை கண்ணூடாக கண்டு அவர்கள் வாழ்வில் ஒளி வீசவைக்க பல சிரமங்களை மேற்கொண்டவர். அன்றைய காலத்தில் நகரசுத்தி செய்யும் தொழிலாளர்கள் வீடுகளுக்குச் சென்று மனிதக்கழிவுகளை அகற்றும் வேலையினைச் செய்தனர். அவர்களை யாரும் வீடுகளுக்குள்ளேயே எடுப்பதில்லை ஆனால் தனது வீட்டுக்கு கழிவுகள் அகற்றவரும்

ராமன் என்ற தொழிலாளியுடன் நண்பராக பழகியது மட்டுமல்லாது தனது பிள்ளைகளை ராமன்மாமா என்று அவரை கூப்பிட சொல்லியே பழக்கினார்.அந்த காலத்தில் அந்த துணிவு எல்லோருக்கும் ஏற்படவில்லை. அந்த நேரத்தில் அத்தொழிலாளருள் ஒருவனை யாரோ அடித்து விட்டான் என்பதை அறிந்து அவர்களுக்காக குரல் கொடுத்து போரடியவர்.

யாழ்ப்பாணத்தில் சாதிவெறி உச்சம் பெற்று ஒடுக்கப்பட்ட மக்கள் இனியும் பொறுப்பதில்லை என்று வெகுண்டு எழுந்த போராட்டம் சங்கானைப் போராட்டமாகும். இதை பற்றி இவர் எழுதிய கவிதை அவர்களின் வாழ்க்கை வலியை உலகுக்கு எடுத்துக்காட்டியது. 'சங்கானைக்கு என் வணக்கம்' என்ற பாடலில் சங்கானையும் வியட்நாமையும் ஒன்றாகக் காண்கிறர் சுபத்திரன்

*'குச்சிக் குடிசைக்குள்*
*கொலுவிருக்கும் கோபத்தை*
*மெச்சுகிறேன்- சங்கானை*
*மண்ணுள் மலர்ந்த*
*மற்ற வியட்நாமே....'*

இவரது கவிதைகள் எல்லாம் அன்றைய தேசாபிமானி, தொழிலாளி ஆகிய கம்யூனிஸ்ட் பத்திரிகையில் அதிகம் வெளிவந்தது. பல கவியரங்கத்தில் பல விதமான உரைகளை நிகழ்த்தி உள்ளார். மாத்தளை கவியரங்கம், மட்டக்களப்பு வைரவர் கோவில் கவியரங்கம், ஏறாவூர் காளி கோவில் கவியரங்கம், ஏறாவூர் வீரபத்திரர் கவியரங்கம், பாட்டாளி புறத்தில் நடைபெற்ற சண்முகதாசன் கூட்டத்தில் தலைமை ஏற்று ஆற்றிய உரை என பல உரைகளை நிகழ்த்தி இருக்கிறார்.

**சுபத்திரன் பற்றி அவருடன் உறவாடிய ஒரு சில நண்பர்களின் வார்த்தைப் பதிவுகள்**

சுபத்திரன் பற்றி பேசும் எல்லோரும் சொல்லும் விடயம் ஒன்றுதான் அவர் நல்ல மனிதர் தன் சொந்த வாழ்வை விட மக்களின் நலத்துக்காக வாழ்ந்தவர். அவர் நண்பர்கள் அவரைப் பற்றி பேசும் போதும் அவர்கள் வாயில் இருந்து வரும் வார்த்தை ஒவ்வொன்றிலும் தெரிகின்றது சுபத்திரன் அவர்களின் வாழ்வின் தாற்பரியம். பேராசிரியர் சி.மௌனகுரு அவரின் நல்லதொரு நண்பர் பல விடயங்களையும் கலந்துரையாடுவர். சுபத்திரன் எழுதிய கவிதையை இவரிடம் படித்துக் காட்டுவார் இருவரும் அதை பற்றி விரிவாக பேசிக் கொண்டு இருப்பர். பேராசிரியர் சி. மௌனகுரு அவர்கள் சுபத்திரனைப் பற்றி பேசுகையில் சுபத்திரன் இழப்பின் வலி அவர் வார்த்தையிலும் கண்ணிலும் புலப்பட்டதை நான் பார்த்தேன். இறந்த பின்னும் வாழ்வோரே உண்மை மனிதர்கள்.

பேராசிரியர் சி.மொனகுரு இவர் பற்றி கூறுகையில், 'சுபத்திரன் வாழ்வு மிகுந்த தீவிர போக்குடைய ஒருவனின் வாழ்வாகவே நான் கருதுகின்றேன். இலங்கையில் சோசலிசப்புரட்சி வரும் என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அதற்காக உள்ளும் புறமும் தன் வாழ்வை அர்ப்பணம் செய்து உழைத்த ஒருவன் அவன். புரட்சிக்காரனான சுபத்திரன் மிகுந்த மனித நேயமும் இரக்க சுபாவமும் இளகிய மனமும் கொண்டவன். தன்னலம் என்பது அவன் வாழ்வில் கடுகளவும் இருந்தது இல்லை. கவிதையினை அவன் ஒரு அரசியல்

ஆயுதமாகவே கருதினான். சாதி இன வர்க்கத்தின் பெயரால் எந்த உருவிலும் அடக்கப்படும் மக்கள் பக்கம் அவன் குரல் ஓங்கி ஒலித்தது. மக்களே அவனுக்கு முக்கியம் மற்றதெல்லாம் அவனுக்குப் பின்னாலே என்பது அவன் நம்பிக்கை

*'எல்லாம் வல்ல மனிதனேயுன்னை*
*வெல்லுதற் கிந்தப் பிரபஞ்சத்துள்*
*எதுவுமேயில்லை' என்று கூறுவான்*

இவன் கவிதை எல்லாவற்றையும் படிக்கும் போதே சுபத்திரனிடம் உள்ள கவித்துவத்தைப் புரிந்து கொள்ள முடியும். நிறைந்த சிந்தனையாளன் நிறையவே செய்ய எண்ணியவன் 'எழுதும் கவிதை ஆயிரம் என்றால் எழுத மறந்தது கோடி எனலாம்' என்று ஒரிடத்தில் குறிப்பிட்டுள்ளான். 1958இல் சுபத்திரனுடன் மலர்ந்த நட்பு அவன் இறக்கும் வரை தொடர்ந்தது. சுபத்திரனை இன்றைய தலைமுறையினர் அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்' என்றார்.

இவரை பற்றி சித்திரலேகா மௌனகுரு அவர்கள் தன் நினைவுகளை பகிர்ந்து கொள்ளும் போது '1973 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஒரு நாள் அதிகாலை வேளையில் நாம் அப்போது வசித்த கொழும்பு பாமன்கடை ஒழுங்கை வீட்டு கதவை யாரோ அவசரமாக தட்டுகிறார்கள் என திறந்து பார்த்தால் கையில் சிறிய பயணப்பையுடன் கவிஞர் சுபத்திரன் 'என்ன திடீரென்று?' என மௌனகுரு கேட்டதுக்கு என்னை விட்டு கொழும்பில் புரட்சி நடந்து விடுமோ என்ற பயத்தில் ஓடோடி வந்தேன்' என்று சொல்லி சிரித்துக் கொண்டே உள்ளே வந்தார். அவரை பற்றி நினைத்ததும் எனக்கு அதுதான் ஞாபகம் வருகின்றது. சுபத்திரனின் ஆளுமையாற்றலையும் புரட்சிகரமான செயல் வாதத்தையும் அறிந்து கொள்ள இது அடையாளமாக உள்ளது. 1970 களின் முற்பகுதி இலங்கை அரசியல் சமூக வரலாற்றில் மிகவும் முக்கியமானதாகும்.

1971 இல் சித்திரை கிளர்ச்சி இதனை அடுத்து 1973,74 களில் முற்போக்கு இடதுசாரி கொள்கை உடைய ஆனால் கம்யூனிஸ்ட் கட்சியைச் சாராத பொதுவாக நகர்சார்ந்த இளைஞர் குழாத்தினர் ஜனவேகய எனும் ஒரு ஒழுங்கமைப்பை உருவாக்கினர். அக்காலத்தில் ஆட்சியில் இருந்த இலங்கை சுதந்திர கட்சியின் முற்போக்கு அணியும் இக்குழுவுடன் பரஸ்பர ஆதரவுடன் இயங்கியது. மார்க்சீய தத்துவார்த்த மரபில் மாஓவின் தத்துவார்த்த சிந்தனைகளை ஆதரிப்போராக இருந்த இக்குழுவினர் இலங்கை மக்களின் வாழ்வில் முற்போக்கான மாற்றங்களை ஏற்படுத்தும் திட்டங்களை உருவாக்கினர். 'ஜனவேகம்' என தமிழிலும் 'ஜனவேதய' எனச்சிங்களத்திலும் பத்திரிகைகள் வெளிவந்தன. பல கலந்துரையாடல்களும் கூட்டங்களும் நடைபெற்றன அவற்றை பத்திரிகை மூலமாக பார்த்த சுபத்திரன் கொழும்பில் என்ன நடக்கிறது என அறிய நேரடியாக வந்த சம்பவமே முதற்கூறியதாகும் இப்படி தன் வாழ்நாளை ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவுக்காக வாழ்ந்த மனிதர் இவர் என்றார்.

சுபத்திரன் கம்யூனிஸ்டான பிறகு நண்பராகி கடைசிவரை இருந்த சிவராசா கூறுகையில் "அவர் ஒரு சிறந்த மனிதர் அவரோடு நாம் பழகிய காலங்கள் மிக்க அற்புதமான காலங்கள். ஒரு நாள் கூட்டத்தை முடித்து விட்டு ஏறாவூர் பிரதான வீதிக்கு பஸ் ஏறுவதற்காக வந்தோம் பஸ்சுக்கு காத்திருந்த நேரத்தில் பேச்சில் இறங்கினார் சுபத்திரன் இரவில் தொடங்கிய பேச்சு அதிகாலை

விடியும் வரை தொடர்ந்தது உலக நடப்பையே அவர் அறிந்து வைத்திருந்தார். இவரை போல் மனிதர்களை பார்ப்பது மிகவும் கடினம். ஆசிரியராக தனது கடமையையும் செய்து கொண்டு பட்டி தொட்டி எல்லாம் சென்று மக்கள் பிரச்சனையை அறிந்து அவர்கள் பிரச்சனைக்காகப் போராடியும் தன் குடும்பத்தையும் கவனித்து இடையில் பல இடர்கள் கஷ்டங்கள் ஏற்பட்டும் சலிக்காது தன் பயணங்களைத் தன் கொள்கையிலே மேற்கொண்டவர்.அவர் நினைவுகளே இப்போது இருக்கும் பரிசு" என்றார்.

### சுபத்திரன் அவர்களின் வாழ்வின் கடைசி கால அனுபவங்கள்

மாவோவின் மரணம் சுபத்திரனை ஆழ்ந்த துயரத்துக்கு உள்ளாக்கின்றது. அவரை எண்ணி கண்ணீர்மல்கக் கவிதையும் வடித்துள்ளார் '... மா ஓ என்ற மாபெரும் மனிதனின்....' மற்றும் '1977 ஆகஸ்ட்' வன்முறை ஏற்படுத்திய ஏமாற்றமும் விரக்தியும் சுபத்திரனை ஒன்றாக தாக்கியுள்ளன. 1977 ஏற்பட்ட கலவரம் தமிழர் மீதான வன்முறையின் உக்கிர வடிவமாகும். தெற்கில் தமிழர் மீது வன் முறை ஏவப்பட்டு சொத்துக்கள் எல்லாம் சேதப்படுத்தப்பட்டது. சுபத்திரனை இது மிகவும் கலவரப்படுத்தியது. இனம் கடந்த தோழமையைப் பேணி அதில் நம்பிக்கை வைத்திருந்த சுபத்திரன் தமிழருக்கு மீதான வன்முறையில் எதுவும் செய்ய முடியாத தென்பகுதி சிங்கள இடதுசாரிகளின் நிலையினால் ஏமாற்றமுற்றார். தன் சொந்த வாழ்விலும் ஏற்பட்ட குழப்பங்கள் எல்லாம் சுபத்திரனை மன அழுத்தத்துக்கு உள்ளாக்கின. இறுதியில் அந்த நல்ல மனிதர் 1979.10.30 தனது உயிரை தானே இந்த உலகத்தை விட்டு விடுவித்துக் கொண்டார். வாழும் காலங்களை மக்களின் நலனை நினைத்து அவர்களுக்காக வாழ்ந்த நல்ல மனிதர் இந்த கவிஞர் சுபத்திரன். ஏதோ பிறந்து விட்டோம் இந்த வாழ்வை எப்படியும் வாழமுடியும் என்று வாழும் மனிதர்கள் இவர் முன் வெறும் தூசு... இந்த உலகையும் பிறரையும் நேசித்த நல்ல உள்ளம் இந்த சுபத்திரன். அவர் வாழ்ந்த காலத்தில் அவருடன் வாழும் சந்தர்ப்பம் எனக்கு கிடைக்கவில்லை என்ற கவலை இருந்தாலும் அவரின் வாழ்வின் சில சுவடுகளைப் பதிவு செய்யும் வாய்ப்பை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். என்னால் முடிந்த தகவல்களைப் பெற்று இக்கட்டுரையினை உருவாக்கி உள்ளேன். மேலும் விபரங்கள் கிடைக்கும் சந்தர்ப்பத்தில் இது இன்னும் விரிவுபடுத்தப்படும் என்பதை கூறிக்கொள்கின்றேன். இவரை பற்றி அறிய உதவிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

### ஆவணப்படுத்தல்

1. கவிஞர் சாருமதி அவர்களால் தொகுக்கப்பட்டு பூவரசுகள் அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட "சுபத்திரன் கவிதைகள்" என்ற நூல்.
2. பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் தொகுப்பட்ட 'கவிஞர் சுபத்திரன கவிதைகள்' என்ற நூல்.
3. சுபத்திரனின் கவிதைகளை யோகநாதன் (சாருமதி) தனது M.A பட்டத்திற்கான ஆய்வு பொருளாக எடுத்துச் செய்தமை.
4. சுபத்திரன் கவிதைகள் வெளிவந்த பத்திரிகைகள்

    தேசாபிமானி

    தொழிலாளி

    ஜனவேதம்

    சுதந்திரன்

    வசந்தம்

    குமரன்

5. சுபத்திரன் உரை நிகழ்த்திய கவியரங்கம்

மாத்தளை கவியரங்கம்

மட்டக்களப்பு வைரவர் கோவில் கவியரங்கம்

ஏறாவூர் காளி கோவில் கவியரங்கம்

ஏறாவூர் வீரபத்திரர் கவியரங்கம்

6. சுபத்திரன் உறவாடிய அரசியல் தலைவர்கள்

கிருஸ்ணகுட்டி

சண்முகதாசன்

பிரேம்லால் குமரசிறி

மார்ட்டின் விக்கிரமசிங்க

விஜயவீர

கார்த்திகேசன்

பீற்றர் கெனமன்

7. சுபத்திரன் கடமையாற்றிய பாடசாலைகள்

கன்னங்குடா மகாவித்தியாலயம்

மட்/புதூர் வித்தியாலயம்

கிரான்குளம் மகாவித்தியாலயம்

ஏறாவூர் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை

8. சுபத்திரன் நண்பர் வட்டாரம்

சுபத்திரன் கம்யூனிஸ்ட்டாக முன்னர்

கவிஞர் காசியானந்தம்

பேராசிரியர் சி.மௌனகுரு

பாலுமகேந்திரா

வெலிங்டன்

வடிவேலு

இவர் கம்யூனிஸ்ட் ஆன பின்னர் நட்பு வட்டத்தில் இணைந்தவர்கள்

துரைரட்ணம் (ரணசிங்கம்)

சிவராசா

யோகநாதன் (கவிஞர் சாருமதி)

கனகசுந்தரம்

நேசராஜா

9. இவர் பழகிய சாதியின் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்கள்

வண்ணார்

சக்கிலியர்

நளவர்

அம்பட்டர்

கடையர்

பறையர்

நகர சுத்திசெய்வோர்

10. சுபத்திரன் செயற்பட்ட அரசியல் கட்சிகள்
    தமிழரசுக்கட்சி
    கம்யூனிஸ்ட் கட்சி
11. சுபத்திரனின் ஈடுபட்ட முக்கிய போராட்டங்கள்
    யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சங்கானை போராட்டம்
    மலையகத்தில் இடம் பெற்ற தொழிலாளர் சம்பள ஊதிய போராட்டம்.

இக்கட்டுரைக்கான தரவுகளை பெற்றுக் கொண்டது.

- கவிஞர் சாருமதி அவர்களால் தொகுக்கப்பட்டு பூவரசுகள் அமைப்பின் சார்பில் வெளியிடப்பட்ட 'சுபத்திரன் கவிதைகள்' என்ற நூலில் இருந்து.
- பேராசிரியர் சி. மௌனகுரு அவர்களால் தொகுப்பட்ட 'கவிஞர் சுபத்திரன் கவிதைகள்' என்ற நூலில் இருந்து.
- 'முற்போக்கு இலக்கியத்தில் கவிதைச் சுவடுகள்' என்ற நூலில் சித்திரலேகா மௌனகுரு அவர்களால் சுபத்திரன் கவிதை பற்றிய கட்டுரையில் இருந்து
- பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களுடனான நேர்காணல் மூலம்.
- சித்திரலேகா மௌனகுரு அவர்களுடனான நேர்காணல் மூலம்.
- சுபத்திரனின் கம்யூனிஸ்ட் நண்பர் சிவராசா அவர்களுடனான நேர்காணல் மூலம்.

# 19ஆம் நூற்றாண்டின் இந்திய வம்சாவளித் தமிழரின் இலங்கை நோக்கிய அசைவியக்கமும், உந்தல், இழுவை காரணிகளின் செயற்பாடும்

ரா. நித்தியானந்தன்

உலக வரலாற்று ஒழுங்குகளில் குடிபெயர்வானது சமூக நாகரிகங்களின் வளர்ச்சிக் கட்டங்களை ஏதோ ஒரு வகையில் குறித்து நிற்கின்றது. கி.மு. 6 ஆம், 7 ஆம் நூற்றாண்டுகளில் மத்திய ஆசியாவின் கஸ்பியன் கடலை சுற்றியிருந்த ஸ்டெப்ஸ் புல்வெளியிலிருந்து ஆதி மனிதன் குடியேறத் தொடங்கியதோடு மனித நாகரிகத்தின் ஒரு பகுதி ஆரம்பமானது. அம்மக்கள் அடிப்படையில் பௌதிக, பொருளியல் காரணிகளை மையமாகக் கொண்டு உலகில் வளமான பிரதேசங்களை நோக்கி தமது குடிப்பெயர்வை ஆரம்பித்தனர். தமக்கிடையில் ஏற்பட்ட கோத்திரங்களின் முரண்பாடுகளும் ஒரு குழுவினர் மற்றக் குழுவினரை அடக்கியாள முற்பட்டமையும் அவர்களை அதைவிட சுதந்திரமுள்ள பொருளாதார வளங்களை நோக்கி நகரச் செய்தது. எனவே இவ்வாறான குடிப்பெயர்வானது உந்தல் இழுவைக் காரணிகளின் அடிப்படையில் செயற்பட்டது என்பது தெளிவானது. பொதுவாக ஒரு நாட்டின் குடியகல்வு குடிறேற்றம் என்ற நிகழ்வுகளில் உந்தல் இழுவை காரணிகள் தான் சிறப்பான காரணிகளாக அமைகின்றன. இந்த உந்தல் இழுவைக் காரணிகளில் சமூக, பொருளாதார, பௌதீக காரணிகள் பிரதான காரணிகளாகும். உந்தல் என்பது மக்கள் வெளியேறிச் செல்கின்ற நாடுகளின் சமூக, பொருளாதார காரணியாகும். இழுவைக்காரணி என்பது குடியேறிச் செல்கின்ற நாடுகளின் சாதகமான பின்னணி காரணியாகும். உந்தற் காரணி செயற்படுகின்ற நாடுகளில் மிகச் சிறப்பாக சனத்தொகை அதிகரிப்பு பொருளியல் சந்தர்ப்பங்களை இழத்தல் மற்றும் சமூகக் காரணிகள் பின்னணியாக செயற்படும். இழுவைக்காரணி செயற்பாடு பின்னணியாக இயங்கும் நாடுகளில் கைத்தொழில் வளர்ச்சி, வர்த்தக ரீதியான வளர்ச்சி, உயர் ஊதியம் அல்லது பொருளாதார வாயப்புகள் என்பன காரணிகளாக அமையும்[1] மற்றும் அரசியல், கலாச்சார, சமூக, சூழற்காரணிகளும் இதனை நிர்ணயிக்கின்றன.[2] இழுவைக் காரணிகளில் கவர்தன்மைகளில் சமய சுதந்திரமும் நிர்ணயகரமான காரணிகளாக அமைகின்றன.[3] 19 ஆம் நூற்றாண்டு மற்றும் 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பம் என்பவற்றில் இந்தியாவின் தமிழ் நாட்டு மக்கள் இலங்கை நோக்கி வருகைதர இக்காரணிகளின் செயற்பாடுகள் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியுள்ளன.

இந்திய வம்சாவளித் தமிழரின் வரலாற்றுப் பின்னணியினை அறிய வரும் நாம் அச்சமூகத்தின் இலங்கை நோக்கிய வரவு, சமூக இருப்பு என்பதாக மட்டும் அதனை கண்டுகொள்ளாமல் மேற்படி "இழுவை உந்தற்" காரணிகளின் அடிப்படையில் எவ்வாறு இப்போக்கானது நிகழ்வு பெற்றது,[4] அத்துடன் இதே காரணிகள் அவர்கள் இலங்கையில் குடியேறிய பின்னரும் கூட அவர்களின் பல்வேறு சமூக மாற்றங்களுக்கும் வர்க்க ரீதியான மாற்றங்களுக்கும் எவ்வாறு இட்டுச் சென்றன என்ற அடிப்படையில் ஆராய்வது பொருத்தமானது.

கீழைத்தேயத்தை நோக்கிய ஆங்கிலேயரின் வருகையே இந்திய வம்சாவளி தமிழரென்ற இனக்குழு இலங்கையில் தோற்றம் பெறவும் அவர்களின் வாழ்வாதார பிரச்சினைகள் புதிய பரிமாணங்களைப் பெறவும் காரணமாகியது. கீழைத்தேயத்தை நோக்கி ஐரோப்பியர் வருகை முதல் இந்திய தொழிலாளர்கள் குடியேற்ற நாடுகளை நோக்கி பரவிச் சென்றமை தொடக்கம் இம்மக்கள் வாழ்வில் ஏற்பட்ட பல்வேறு மாற்றங்கள் "இழுவை, உந்தற்" காரணிகளின் செயற்பாடுகளினால் நிகழ்ந்த சமூக பரிமாற்றங்களாகும்.

பிரித்தானியாவின் நிலத்தோற்றம், காலநிலை என்பனவே அந்நாட்டவரை மத்திய காலப்பகுதியில் புதிய நாடுகாண் பயணங்களில் ஈடுபடச்செய்யவும் குடியேற்ற நாடுகளை உருவாக்கவுமான தூண்டற் காரணிகளாயின. குடியேற்ற நாடுகளில் அவர்களுக்குக் கிடைத்த மூலதனங்களும் மூலவளங்களும் மீள் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு வழி சமைத்துக் கொடுத்தன. எனவே இந்நாடுகளின் மூலதனத்தைச் சுரண்டவும் மூலவளங்களைத் திரட்டவும் உலக நாடுகளில் புதிய சந்தைகளை உருவாக்கி இலாபமீட்டவும் உழைக்கும் தொழிலாளர் வர்க்கம் அவர்களுக்குத் தேவைப்பட்டது. முதலாளித்துவ அடிப்படையிலான வர்த்தகப் பயிர்ச்செய்கை போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டமை மனித உழைப்புக்கான அவர்களின் தேவைகளை இந்நாடுகளே பூர்த்தி செய்தன.[5]

மறுபுறம் தமது உற்பத்தியை மேம்படுத்தவும் தமது நிகர இலாபத்தை ஈட்டவும் இந்தியா போன்ற குடியேற்ற நாடுகளின் சுதேச உற்பத்தி பொருள்களின் ஏற்றுமதி தமது நோக்கத்துக்குத் தடையாக இருக்கின்றதென அவர்கள் முதலில் உணர்ந்தனர்.[6] எனவே அதற்கெதிரான இருவகையான செயற்பாடுகளில் அவர்கள் ஈடுபட்டனர்.

1. குடியேற்ற நாடுகளின் உற்பத்திப் பொருள்களுக்கு முற்றாக தடை விதித்தல்
2. செயற்கையாகவேனும் வறுமையை உருவாக்கி தொழிலாள வர்க்கமொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல்

இந்த நோக்கத்தின் அடிப்படையிலேயே முதலில் இந்திய கைத்தறி உற்பத்தி முறை திட்டமிட்டு வீழ்ச்சியுறச் செய்யப்பட்டது.[7] இந்தியரால் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தியும் அதற்கான வளங்களும் ஆங்கிலேய உற்பத்தி முறைக்கு ஏற்ப மாற்றப்பட்டன.[8]

இவ்வாறு ஆங்கிலேயரின் நடவடிக்கையால் குடியேற்ற நாடுகளில் அவர்கள் மேற்கொண்ட பணப்பயிர் உற்பத்திக்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் ஏற்றுமதி செய்யப்பட்டார்கள். மறுபுறம் இந்திய பொருட்களுக்கான பிரித்தானிய சந்தைகள் வேண்டுமென்றே மூடப்பட்டன.[9] மாறாக பிரித்தானிய பொருட்களுக்கான சந்தைகளை தமது நாட்டில் மாத்திரமல்லாமல் சகல குடியேற்ற நாடுகளிலும் உருவாக்கிக் கொண்டனர். எனவே இந்நிலையில் இந்தியா பொருட்களை உற்பத்தி செய்த நாடு என்ற நிலையிலிருந்து மூலப்பொருட்களை விநியோகிக்கும் நாடு என்ற நிலைக்கு மாற்றம் பெற்றது.[10] இதன் காரணமாக குடியேற்ற நாடுகளில் தோற்றம் பெற்ற புதிய வர்த்தக வகுப்பினர் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களைக் கொண்டு தமக்கு தேவையான வாய்ப்பு வசதிகளை உருவாக்கிக் கொண்டனர். அது பற்றி குறிப்பிட்ட ஜவஹர்லால் நேரு "இப்புதிய

வகுப்பினர் கிழக்கிந்திய கம்பனியினைத் தம் வசப்படுத்துவதற்கு பிரித்தானிய பாராளுமன்றத்தில் தமது செல்வாக்கினை பிரயோகித்தனர்" என்று கூறுகிறார்.[11]

## வரியும் வறுமை உருவாக்கலும்

முன்கூறப்பட்டது போல 17 ஆம் 18 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியா முதலாளித்துவத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. ஆங்கிலேயரின் வருகையோடு 1674/96 ஆம் ஆண்டுகளில் இந்திய பொருட்களின் இறக்குமதி இங்கிலாந்து முதலாளித்துவக் கைத்தொழிலுக்கு அழிவினை ஏற்படுத்தும் என அந்நாட்டு பாராளுமன்றத்திற்கு பல மனுக்கள் அனுப்பப்பட்டன.[12] இங்கிலாந்து வர்த்தகர்களால் அனுப்பப்பட்ட இம்மனுக்களுக்கு செவிசாய்த்த பிரித்தானிய அரசாங்கம் இந்திய பருத்தியின் மீது 1677 இலும் இந்திய பட்டின் மீது 1696 இலும் கடுமையான சுங்க வரியை விதித்தது.[13] 1720 ஆம் ஆண்டு இப்பொருட்களின் இறக்குமதி முற்றாகத் தடை செய்யப்பட்டது.[14] இதுவே இந்தியாவின் வளர்ச்சி தடைப்பெறவும், வறுமை வளர்சசி பெறவும் மூலகாரணமாகியது. இது இவ்வாறிருக்க மறுபுறம் இந்தியாவின் உள்நாட்டு உற்பத்திக்கு உயர்ந்த வரி விதிக்கப்பட்டது. பிரித்தானியாவின் புடைவைகளை இந்தியாவில் இறக்குமதி செய்வதற்கு 2 முதல் 3.5 சத வீதம் வரை வரி விதிக்கப்பட்ட போது இந்தியர்களினால் ஏற்றுமதி செய்யப்பட்ட பொருட்களுக்கு 20 முதல் 30 சதவீத வரி விதிக்கப்பட்டது.[15] இவ்வாறாக ஆங்கிலேயரின் வருகையால் இந்தியாவின் வளர்ச்சி அதன் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டது. பிரித்தானியர் கடைப்பிடித்த இவ்வாறான கடுமையான போக்கு இந்தியாவின் சுதேச உற்பத்தியை முற்றாக ஸ்தம்பிதம் அடையச்செய்தன. பல உள்நாட்டு உற்பத்தி நிறுவனங்கள் மூடப்பட்டன. விவசாய கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்த விளைநிலங்கள் கைவிடப்பட்டன. வேலையற்ற ஊழியப்படையொன்று வேகமாக உருவாகியது. இதுவரை தொழிற் பட்டினங்களாக விளங்கிய இந்தியக் கைத்தொழில் நகரங்கள் பாழடைந்தன. ஆங்கிலேயரின் மேற்படி நடவடிக்கை மக்களை மீண்டும் நகரத்தில் இருந்து கிராமத்துக்குத் துரத்தியது. இதுபற்றிக் குறிப்பிடுகின்ற நேரு "எல்லா முன்னேறிய நாடுகளிலும் கடந்த நூற்றாண்டுகளில் சனத்தொகையானது விவசாயத்திலிருந்து கைத்தொழிலுக்கும், கிராமத்திலிருந்து நகரத்துக்கும் இடம் மாறியது. ஆனால் இந்தியாவில் மட்டும் பிரித்தானிய கொள்கையின் விளைவாக இது மறுதலையாக இடம்பெற்றது" என்கின்றார்.[16] எனவே இந்தியர்கள் புதிய தொழில்களை நாடி வெளிநாடுகளுக்கு குடியகல்வதற்கான சூழ்நிலை 18ம் நூற்றாண்டிலேயே ஆங்கிலேயர் உருவாக்கினர்.[17] 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இது மிகவும் உக்கிரமடைந்தது. [18]

## ஆங்கிலேயரின் நில வரிக்கொள்கையும் தூண்டற்காரணியும்

18 ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய அரசாங்கம் இந்தியாவில் தமது நில வருமானத்தை அதிகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. குறிப்பாக சென்னை மாகாணத்தில் கிராமிய நிலவுடைமையாளர்களிடமிருந்து ஆங்கிலேயர் நில வாடகையை அதிகரித்தனர். சென்னை மாகாணத்தில் விளைச்சலில் அரைப்பங்கு நில வரியாக அறவிடப்பட்டது.[19] இவ்வாறு கொடுமையான நில வரி முறை இக்காலப்பகுதியில் எந்தவொரு ஐரோப்பிய நாட்டிலோ அல்லது ஆசிய நாடுகளிலோ இடம்பெற்றிருந்ததாக வரலாறு இல்லை. வாடகை செலுத்தாத நிலங்கள் ஆங்கிலேயரால் பலவந்தமாக பறிமுதல் செய்யப்பட்டன. பழைய ஜமீன்தார் முறைக்கு பதிலாக நவீன ஜமீன்தார் முறைகள் ஆங்கியேரால் ஏற்படுத்தப்பட்டன. பழைய ஜமீன்தார்கள் வாடகையை

செலுத்தாத பட்சத்தில் அவர்கள் அந்நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு நவீன ஜமீன்தார்களிடம் அந்நிலங்கள் ஒப்படைக்கப்பட்டன.[20] நிலவுடைமைச் சட்டத்தில் சில மாற்றங்களைச் செய்து அந்நிலங்களை இலகுவாக விற்பதற்கு ஏற்பாடு செய்து கொடுத்தனர். சிறு நில விவசாயிகள் தமது கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாத போது தமது விவசாய நிலங்களை ஆங்கிலேயரிடம் அவர்கள் இழந்தனர்.[21] ஆங்கிலேயரின் இந்நடவடிக்கைகளினால் பண்ணைகளிலும் சிறு நிலங்களிலுமிருந்த விவசாயிகள் வேலைவாய்ப்பற்றவர்களாக அநாதரவாக்கப்பட்டார்கள். இக்காரணங்களினால் இந்தியர்கள் தமது நாட்டை விட்டு பிற நாடுகளில் குடிபெயர்ந்தனர் என்பதை விளங்கிக் கொள்ள முடியும்.

மக்கள் தொகை அதிகரிப்பும் பயிரிடும் நிலங்களின் வரையறையும், விவசாய உற்பத்திப் பொருட்களின் விலை அதிகரிப்பும் இதற்கிடையில் நிலத்தை பங்கிட்டுக் கொடுத்தால் தமது குடும்ப வருமானத்தைப் பாதித்துவிடும் என்ற அச்சமும் விவசாயிகள் தம் பிள்ளைகளுக்கு தமது நிலத்தைப் பங்கிட்டுக் கொடுக்க முடியாமல் திணறியதற்கான காரணங்களாகும். 19ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட நிலத்தட்டுப்பாடு, சென்னை மாகாண மக்கள் குடிபெயர்ந்தமைக்கு முக்கியமான காரணமாகியது.[22]

**வரி கொடுமையும் குடியகல்வும்**

1793 ஆம் ஆண்டு வங்காளத்தில் ஆங்கிலேயர் கொண்டுவந்த 'சாசுவத வரியைப்' போல தென்னிந்தியாவில் 'ராயத்து வரிமுறை' (Ryotwari system) அறிமுகம் செய்யப்பட்டது. இவ்வரியினை செலுத்த முடியாத ஜமீன்தார்களும் அதிகமான குடியானவர்களும் தம் நிலத்தின்மீது கொண்டிருந்த அற்ப சொற்ப உரிமையைக்கூட இழந்தார்கள்.[23] விவசாயிகளுக்கு சொந்தமாயிருந்த சிற்றுடைமை நிலங்களுக்குக்கூட அதிக வரி விதிக்கப்பட்டது. 1800 ஆம் ஆண்டு பிரான்ஸிஸ் புக்கான் மேற்கொண்ட ஆய்வொன்றில் இவ்வகையான கட்டாய வரி வசூல், விவசாயிகளை மிகத் துன்பகரமாக ஆக்கிவிட்டதை அவர் சுட்டிக்காட்டுகிறார்.[24] 1808 ஆம் ஆண்டு 2000 ஏக்கர்களுக்கு ஆண்டு வரியாக ரூபா 818/- வசூலிக்கப்பட்டு பின்னர் 1823 ஆம் ஆண்டு ரூபா 2121/- ஆக அதிகரிக்கப்பட்டது.

மறுபுறம், இந்தியாவின் நிலம் ஒரு சாதியினருக்கு அல்லது ஒரு பிரிவினருக்கு மட்டுமே சொந்தமாக இருந்தது. அவை என்றுமே அரச உடைமைகளாகக் கருதப்படவில்லை.[25]ஆனால் பிரிட்டிஷ் ஆட்சியாளர் எல்லா நிலங்களுக்கும் உடைமையாளரானார்கள். உழவர்கள் வரி பணம் செலுத்தத் தவறினால் அவர்கள் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். அந்நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நவீன பண்ணைகளிடம் ஒப்படைக்கப்பட்டன. ராயத்து வரிமுறை மூலம் நிலத்தில் வரும் விளைச்சல் மீதான வரி என்ற வகையில் வரிகள் அறவிடப்பட்டன.[26] 1820 க்கும் - 1830 க்கும் இடைப்பட்ட காலத்தில் குடியானவர்களின் குடியுரிமைப் பத்திரங்கள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு வரித்தொகை உயர்த்தப்பட்டது.[27] எனவே நிலத்தின் மீதான முதலீடுகள் மிக வேகமாக குறையலாயின. 1717 ஆம் ஆண்டு 40 ஏக்கராக இருந்த சராசரி நிலவுடைமை 1810 ஆம் ஆண்டு 17 ஏக்கராக வீழ்ச்சியடைந்து. 1820 - 1840 ஆம் ஆண்டுகளுக்கும் இடையில் அது 7 ஏக்கராக குறைந்தது.[28] இவ்வாறு காலனித்துவ முறைக்கே உரித்தான ஓர் ஏற்பாட்டின் மூலம் இந்தியாவை ஒரு வறுமையுடைய நாடாக இவர்கள் செயற்கையாக உருவாக்கினர். இவ் ஏற்பாடுகள் எல்லாம் மிகவும் சிக்கலான

சட்டங்களால் நிறைவேற்றப்பட்டன.[29] இத்தகைய நடவடிக்கைகளினால் 51 % ஆன நிலப்பரப்பு சென்னை மாகாணத்தில் மட்டும் பிரித்தானியரின் நேரடியான ஆட்சியின் கீழ்க்கொண்டு வரப்பட்டன. இந்திய நிலவுடைமை வீழ்ச்சியே இத்தகைய நிலைமைக்குக் காரணம் எனக் கூறப்பட்டாலும் இதற்கு எதிராக குடியானவர்கள் எந்த விதமான போராட்டங்களிலும் ஈடுபடவில்லை. இதற்கு உண்மையான காரணம் இந்திய நிலவுடைமை கொடுமையிலிருந்து தாம் விடுதலைப் பெறுவதற்கு பிரித்தானியர் ஏற்படுத்திக் கொடுத்த ஒரு வழியென அவர்கள் இதனை சாதகமாக எண்ணினர். நிலக்கொடுமைக்குப் பின் உணவு பஞ்சம், அரிசியின் விலை அதிகரிப்பு அவர்களை மேலும் துன்பத்திற்குள்ளாக்கின. 1848 ஆம் ஆண்டு ஒரு ரூபாய்க்கு 40 புசலாக இருந்த அரிசியின் விலை 1850 ஆம் ஆண்டு 30 புசலாகவும் 1862 ஆம் ஆண்டு 27 புசலாகவும் 1911 ஆம் ஆண்டு 15 புசலாகவும் 1922 ஆம் ஆண்டு 5 புசலாகவும் குறைந்தது.[30] இக்காலப்பகுதியில் இந்தியாவில் அடிக்கடி உணவு பஞ்சம் ஏற்பட்டது. 1861 ஆம் 1880 ஆம் 1890 ஆம் ஆண்டுகளில் இந்தியா முழுவதுமே கொடிய பஞ்சம் நிலவியது.[31] ஆனால் தென் மாநிலங்களில் 1800 க்குப் பின்னரே கொடிய பஞ்சம் ஆரம்பமாயிற்று. தென் மாநிலங்களில் தானியக் களஞ்சியம் எனக் கருதப்பட்ட தஞ்சாவூரில் கூட கொடிய பஞ்சம் நிலவியது. 1799 ஆம் 1834 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் பலமுறை பஞ்சங்கள் ஏற்பட்டன. 1833/34 ஆம் ஆண்டுகளில் குண்டூர் பகுதியில் மட்டும் பஞ்சத்தால் 30% - 40% ஆனவர்கள் இறந்து போயினர். இக்காலப்பகுதிகளில் 40 இலட்சம் மக்கள் இப்பஞ்சத்தால் மடிந்து போனதாக மதிப்பிடப்பட்டது. இப்பஞ்சங்களின் விளைவாக இந்திய மக்கள் பல்வேறு பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். தமிழர்கள் ஐதராபாத், அஸ்ஸாம் முதலிய இடங்களுக்கும் பின்னர் படிப்படியாக வெளிநாடுகளை நோக்கி தொழில் தேடிச் சென்றனர்.[32] ஏனெனில் 1804 - 1877 ஆண்டுகளில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் மிகப்பெரிய உணவு பஞ்சம் ஏற்பட்டது. டப்ளியு. எஸ். ஷில்லி என்பவர் அதிகாரபூர்வ மதிப்பீடுகளின் ஆதாரத்துடன் பஞ்ச சாவுகளின் எண்ணிக்கையானது 1975க்கும் 1900 ஆண்டுகளுக்கிடையில் 1,500,000 க்கும் மேலாகக் காணப்பட்டது என கூறுகின்றார்.[33] குறிப்பாகச் சேலம், திருச்சி, தென்ஆர்காடு, செங்கற்பட்டு, புதுவை, சென்னை பகுதிகளில் மக்கள் பஞ்சத்தால் பெரிதும் பாதிப்புற்றனர். பொதுவாக எல்லா மாநிலங்களுமே பஞ்சத்தால் பாதிக்கப்பட்டன.

**நிலத்தட்டுப்பாடும் தமிழர் குடியகல்வும்**

மறுபுறம் தமிழ்நாட்டு குடிப்பெருக்கம் காரணமாக குடியானவனின் பிள்ளைகள் நில தேவையை எதிர்நோக்கியிருந்த போதிலும் தன் சந்ததிக்கு நிலத்தை அவன் கூறு போட விரும்பவில்லை. இவ்வாறு நிலத்தை துண்டாடுவது தமது விவசாயத்தைப் பாதிப்பதுடன் குடும்ப வருமானத்தையும் பாதிக்குமென அவன் கருதினான். எனவே தனது பிள்ளைகளின் குடியகல்வை அவன் உற்சாகப்படுத்தினான். குடியகல்வு சில இடங்களில் நிலத்துக்கு எழுந்த தேவையை குறைத்தது. 1931ம் ஆண்டு அறிக்கையின்படி திருச்சி, காவேரி, ஆர்காட்டு பகுதிகள்[34] என்பவற்றில் நிலப்பற்றாக்குறை உச்சநிலை பெற்றுக் காணப்பட்டது. எனவே இப்பகுதிகளின் குடியகல்வு ஒரு நாளாந்த நடவடிக்கையாக இடம்பெற்றது. இதுவும் அவர்கள் குடியகல்வதற்கான காரணங்களில் ஒன்று.

**வட்டிக்கடனின் கொடுமைகள்**

மறுபுறம் வட்டிக் கடைக்காரர்களின் கொடுமையின் காரணமாக தமிழ் நாட்டு மக்கள் அல்லலுற்றனர். இந்திய சமூக வழக்கத்தையே மாற்றி வட்டிக்கடைக்காரர்கள் கடன்பட்டோர் நிலத்தை பறிமுதல் செய்வதும் பாராதீனப்படுத்துவதும் அதற்கான உரிமையை அவர்கள்

ஆங்கிலேயரின் ஆட்சியில் சட்டபூர்வமாக பெற்றுக்கொண்டதும் இடம்பெற்றன. வட்டிக் கடைக்காரர்கள் பிரித்தானிய ஆட்சியில் கொடுங்கோலர்களாக மாறினர். எழுத வாசிக்கத் தெரியாத உழவர்களின் நிலத்தைப் போலிப் பத்திரங்களைக் காட்டி பறிமுதல் செய்தனர்.[35] குத்தகை என்ற பெயரில் பெரும் பணத்தொகையை அறவிட்டனர். இவ்வாறான காரணங்களும் குடியகல்வைத் தூண்டுவதற்கான காரணங்களாகின. எனவே இலங்கையில் கிடைக்கப்பெற்ற வேலை வாய்ப்புக்கள்தான் இந்தியர்கள் இலங்கைக்கு வருவதற்குக் காரணம் எனக் கூறுவதைவிட அவர்கள் தமிழ்நாட்டில் துன்பமுற்ற சூழ்நிலையே இலங்கையை நோக்கித் தள்ளி விடப்பட்டமைக்குக் காரணமாகும்.[34.]

**சாதிக் கொடுமையும் குடியகல்வும்**

இந்தியத்தமிழ் நாட்டு குடிகள் இலங்கை மற்றும் துார கிழக்கு ஆசிய நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றமைக்கான பிரதான காரணிகளில் ஒன்று இந்திய சாதி அமைப்பும் அதன் தீண்டாமையுமாகும். சாதி அமைப்பானது அம்மக்களின் வாழ்க்கையில் நீண்ட நெடுந்துயராக தொடர்ந்து வந்தது. இந்தியாவுக்கு வெளியே குடியேற்ற நாடுகளை நாடிச்சென்றோர் பெரும்பாலும் தாழ்ந்த சாதியைச் சார்ந்த குடியானவர் ஆவர். 1931ம் ஆண்டு சென்னை குடிசன மதிப்பீட்டு அறிக்கையின்படி நாட்டை விட்டு சென்றவர்களில் அரைவாசிக்கும் கூடுதலானவர்கள் தாழ்ந்த சாதியைச் சேர்ந்த ஹரிசனங்களே. அதிலும் சாதிக் கொடுமையும் பிராமண ஆதிக்கமும் தொடர்ச்சியாக நிலவிய பிரதேசம் தமிழ்நாடு ஆகும். இன்றும் இதன் வரலாற்று எச்சங்கள் இங்கு மிகுதியாகவே காணப்படுகின்றன. காலனித்துவ ஆட்சிக்காலப்பகுதியில் சாதி அடக்குமுறையின் காரணமாக குறித்த மக்கள் அடிமைகளாகவே நடாத்தப்பட்டனர். தாழ்ந்த சாதியைச் சேர்ந்த குடியானவர்கள் நிலபிரபுக்களின் நிலங்களில் கட்டுண்டு கிடந்தனர். கடன் நிலுவை காரணமாக இவர்களில் பலர் நிலத்துடன் பிணைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஹரிசனங்களாகிய சேருமார்களும் புலையர்களுமாவர்.

நிலப்பிரபுத்துவத்துக்கு எதிரான ஆரம்ப காலப்பகுதியில் ஆங்கிலேயரே சாதியை முன்னின்று ஒழிப்பதில் முனைப்புக் காட்டினர். ஆனால் இந்நிலப்பிரபுத்துவ அமைப்பும் அதன் சாதி கட்டமைப்பும் தமது சுரண்டலுக்கு சிறந்த கருவியென பின்னர் உணர்ந்து கொண்டதனால் இந்திய நிலப்பிரபுத்துவ அமைப்பினை தமது சுரண்டலுக்கு ஏற்ற அமைப்பாக அவர்கள் பயன்படுத்திக் கொண்டார்கள். உயர்ந்த சாதி பண்ணையாளனைக்கொண்டு நவீன ஜமீன்தார் முறையினைத் தோற்றுவித்தனர். எனவே சென்னை மாகாண மக்கள் ஒரு புறம், பழைய நிலப்பிரபுத்துவம் மறுபுறம், நவீன பண்ணையாளர் கொடுமையை அனுபவித்ததோடு ஆங்கில ஆட்சியாளரின் நேரடியான கொடுங்கோன்மை மற்றும் சாதியம் என்பவற்றாலும் அவர்கள் அல்லலுற்றனர். எனவே இந்த அடக்குமுறையிலிருந்து விடுதலை பெற கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகவே சென்னை மாகாணத்தின் தாழ்ந்த சாதி குடியானவர் இலங்கை மற்றும் துார கிழக்கு நாடுகளை நோக்கி குடியேறுவதில் ஆர்வம் கொண்டனர்.

இந்திய சமூகக் கட்டமைப்பு 3 கருத்துருவங்களில் காட்டப்பட்டிருந்தது.

1. கிராம ராஜ்ய சமூகம்
2. சாதியம்
3. கூட்டுக்குடும்பம் [38]

சாதியமைப்பில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த இக்குடும்பங்கள் பழகுவது, வாழ்வது உறவுகளை வளர்ப்பது ஒரு கலாச்சாரமாக பின்பற்றப்பட்டது.[39] மேற்கூறிய மூன்று அமைப்புகளும் சாதிக் கட்டமைப்பை அடிப்படையாகக் கொண்டிருந்தது. எனவே அம்மக்கள் வர்க்கம் என்பதை விட சாதி அமைப்பிலேயே பெரிதும் தங்கியிருந்தனர். எனவே, அச்சமூகத்தில் குறித்த பிரிவினர் குடியகல்வது, எஞ்சியவர்களைத் தனிமைப்படுத்தியது. எனவே எஞ்சியவர்கள் உயர்ந்த சாதியினரால் மேலும் நசுக்கப்பட்டார்கள். அவர்களின் வாழ்க்கையில் உறவுமுறைத் திருமணம், மரணம், பாரம்பரிய நிகழ்ச்சிகள் நடைபெறும் போது தாம் தனித்து விடப்பட்டிருப்பதை அவர்கள் உணர்ந்தனர். பின்னர் கிராமிய ராஜ்ய சமூகமே சாதிய கட்டமைப்புக்கு உட்பட்டிருந்ததனால்[40] முழு கிராமிய சமூகமும் புலம் பெயர ஆரம்பித்தது. எனவே தான், சென்னை மாகாண புலம்பெயர்ச்சி என்பது குடும்பம் குடும்பமாக இடம்பெற்றது. மதம் என்பது தனியான அமைப்பாகவும் சாதி என்பது மதத்திலிருந்து வேறுபட்ட அமைப்பாகவும் காணப்பட்டமை இவ்வாறான புலப்பெயர்ச்சிக்குக் காரணமாயின.

எனவே தான் சென்னை மாகாணத் தமிழர் தமது சமூக விடுதலைக்காகவும் பொருளாதார வீச்சுக்காகவும் இலங்கை மற்றும் தூர ஆசிய நாடுகளை நோக்கி படையெடுத்தனர்.[41] மறுபுறம் தமிழ் நாட்டில் கூலித் தொழிலாளியாக ஆக்கப்பட்டிருந்த இவர்கள் ஆங்கிலேயரின் நடவடிக்கைகளால் வேலையற்ற தொழிலாளர்களாக மாற்றப்பட்ட போது அச்சமூக அமைப்பிலிருந்து விடுதலையை துரிதகதியில் அடைந்துகொள்ள விரும்பினர். பொதுவாக இங்குள்ள குடியானவன் விரைவாக தாழ்வுற்று செல்லும் போக்கினைக் கொண்டவனாகக் காணப்பட்டான். இத்தாழ்வுரு நிலைக்கான காரணங்களை தாக்கி அழிப்பதை விட தன்னிலையில் உயர்ந்து செல்லும் வழியே அவனுக்குத் தேவைப்பட்டது. இந்திய சமூக அமைப்பில் சாதி அமைப்பும் அதனுடன் இயைவான பொருத்தமற்றதும், பிற்போக்கானதும், கட்டுப்பாடுடையதுமான மேற்குறித்த அம்சங்கள் முன்னேற்றத்துக்குத் தடையென இவர்கள் உணர்ந்தனர்.[42] கார்ல்மாக்ஸ் “இந்திய சமூகங்கள் சாதி பேதங்களாலும் அடிமை தனத்திலும் நோயுற்றவை என்பதையும் அது மனிதனை சூழ்நிலை மீது ஆதிக்கம் செலுத்தும் வல்லவனாக அல்லாமல் சூழலுக்கு அடிமைப்படுத்தின” என்கின்றார்.[43]

இதுதவிர, தமிழ் நாட்டின் காலநிலை, வரட்சி, மழையின்மை என்பன விவசாயிகளுக்கு பாதகமாக அமைந்தன. இது அவர்களின் பொருளாதார வாழ்வை மேலும் பாதித்தன. வேறு துறைகளில் ஈடுபடுவதற்கு கல்வி அறிவோ அனுபவமோ மிகக் குறைவாக இருந்தமையால் அவர்கள் நிலத்தை மாத்திரம் நம்பியிருக்க வேண்டியவர்களாக இருந்தனர். ஆண்டுக்கு நான்கு மாதங்களுக்கு மட்டுமே வேலை கிடைத்தது. ஏனைய காலங்களில் வேலையற்று வறுமையுற்றனர்.

எனவே, மேற்கூறிய விளக்கத்திலிருந்து இந்தியா ஒரு வறுமையான நாடு என்பதை விட வறுமையுடைய நாடாக ஆங்கிலேயரால் ஆக்கப்பட்டது என்பது தெளிவாகிறது. அத்தோடு நிலப்பிரபுத்துவத்தின் கொடுமைகளும் ஜமீன்தார் முறைமைகளின் கொடுமைகளும், கடன் பளுவும் சாதியமைப்பின் கொடுமைகளும் வரட்சியான காலநிலையும் கிராமிய ராஜ்ய முறையும் அவர்கள் இலங்கை, மற்றும் தூர கிழக்கு நாடுகளுக்கு குடியேறுவதற்கு காரணமாயின. எந்தவொரு சமூகமும் தாம் வாழும் நிலைக்கு பாதிப்பேற்படும் போதும் தமது வாழ்வாதாரங்கள் மாற்றமடையும் போதும் அந்நிலையிலிருந்து மீட்சியடைவதற்காக தொழில்வாய்ப்பினைத் தேடி அல்லது

வேறு இருப்பிடங்களைத் தேடி அல்லது பாதுகாப்பைத் தேடி அல்லது அடக்குமுறையிலிருந்து விடுதலையைத் தேடி அதைவிட உகந்த இடமொன்றை நோக்கி குடியேறுவது இயல்பானது.

### தமிழ்நாட்டு மக்கள் இலங்கை நோக்கி வருவதற்கான இழுவை காரணிகளின் செயற்பாடு

மேற்குறித்த காரணிகளினால் தமிழக மக்களிடமிருந்து ஒரு குடிபெயர்வு இயக்கமே இடம்பெற்றது என்பது பொருத்தமானது. குடிபெயர்வென்பது தன்னிச்சையாக இடம்பெறும் ஒன்றல்ல. சமூக பொருளாதார பண்பாட்டுக் காரணிகளால் உந்தப்படும் மனித இயக்கமே இவ்வாறு குடிபெயர்வாக இடம்பெற்றது.[44] குடிபெயர்வென்பது எல்லா கால கட்டங்களிலும் மனித வாழ்வில் இடம்பெற்ற அம்சம்தான். அது மனித இயல்பு நோக்கில் மேல்நோக்கியதொரு தள்ளலாக அல்லது அசைவாக இடம்பெறலாம். ஆனால் மறுபுறம் இக்குடிப்பெயர்வினை கவர்ந்திழுக்கக் கூடிய இழுவை காரணிகள், எதிர் கணியமாக சமநிலையில் செயல்படும் போதே ஒரு சமூகவியல் ரீதியான புலப்பெயர்ச்சி சர்வதேச அரங்கில் இடம்பெறுகிறது. இறைமையுள்ள நாடொன்றிலிருந்து அதே மாதிரியான வேறொரு நாட்டுக்கு மக்கள் இடம்பெயர்ந்து செல்வதுண்டு. அதே போல ஒரே நாட்டு எல்லைக்குள்ளும் இதே போன்ற இடப்பெயர்ச்சி நிகழ்வதுண்டு. பிரித்தானிய சாம்ராஜ்ய இறைமைக்குட்பட்ட இரு தேசங்களில் இடம்பெற்ற இடம்பெயர்வானது ஒரு வகையில் சட்டபூர்வமான தன்மை பெற்றதே.

### இலங்கையின் புவியியல் அமைப்பும் குடி வருகையும்

இலங்கை தமிழ்நாட்டுக்கு அண்மிய இடத்தில் அமைந்துள்ளது. காலா காலமாக இந்தியத் தமிழர்கள் இலங்கைக்கு வருவதற்கும் இலங்கையர் இந்தியாவுக்குச் செல்வதற்கும் ஏதுவாக அது அமைந்திருக்கிறது. இதன் காரணமாகவே போர்த்துக்கேயர் ஒல்லாந்தர் காலப்பகுதியில் கூட பல வழிகளில் குடிவருகை இங்கு இடம்பெற்றுள்ளது. சிறிய கடற்பரப்பொன்றை கடப்பது பற்றித் தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த பயமுறுத்தலுக்குள்ளாகி இருக்கவில்லை. எனவே தான் 16 ஆம் நூற்றாண்டிலேயே தமிழர்கள் இங்கு குடியேறியமைக்கு சான்றுகள் பல உண்டு.[45] ஆனால் ஆங்கிலேயர் ஆட்சியின் போது, இலங்கையில் இந்திய தமிழரின் வருகை வேகமாக இடம்பெற்றது. இதே சமயம் இந்திய பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்து செல்லும் போது அம்மக்கள் தமிழ்நாட்டை விட அதிக வருவாய் தருகின்ற இலங்கையை நோக்கி நகர்ந்தது இயல்புந்தலாகவே காணப்பட்டது.[46]

### இலங்கைக்கு இந்திய தமிழர் வருகையும் கண்டிய மக்களின் வாழ்வியலும்

ஆங்கிலேயரால் இலங்கையில் குடியேற்றப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையின் மீது தமது தனிப்பட்ட பொருளாதார நம்பகத் தன்மை கொண்டவர்களாகக் காணப்பட்டனர். தாங்கள் ஒரு குழுவினராக, இனக்கலப்பு அற்றவர்களாக, தனித்துவமாக, மதம், மொழி, சாதி, உறவுமுறை என்பவற்றின் அடிப்படையில் வாழலாம் என்ற நம்பிக்கை அவர்களிடம் ஏற்பட்டிருந்தது.[47]

ஏறக்குறைய 160 வருடங்களுக்கு மேற்பட்ட கால வரலாற்றைக் கொண்டிருக்கின்ற இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் காலனி ஆட்சியாளர்களின் ஏற்றுமதி பொருளாதார கொள்கையின் காரணமாக இலங்கையில் குடியேற்றப்பட்டவர்களாவர். ஆரம்பத்தில் ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளில் சிங்கள விவசாயிகள் ஈடுபட்டு உதவினர் என்பது உண்மையே. ஆனால் அது

ஓரளவுக்கு மட்டுமே எல்லைப்படுத்தப்பட்டிருந்தது. மரம் வெட்டுதல், காடழிப்பு, கொட்டில்கள் அடித்தல் என்பவற்றில் அவர்கள் ஓரளவு ஈடுபட்டனர்.[48] அந்த நிலையிலிருந்து எதிர்கால வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்ற எண்ணம் அவர்களிடம் காணப்படவில்லை. பெருந்தோட்ட விவசாயத்துக்கு சிங்கள தொழிலாளர்களைக் கவரும் நோக்கமாகவே ராஜகாரிய முறையினை கோல்புரூக் குழுவினர் இல்லாதொழித்தனர். ஆனால் அது கோப்பிப் பெருந்தோட்டத்துக்கான தொழிலாளர்களைக் கவர்ந்து வரவில்லை.[49] அதன் பின்னும் சிங்கள கிராமிய விவசாயிகள் தமது குத்தகை நிலங்களை உழுது தமது சீவன உபாயத்தைக் கழிக்கவே விரும்பினர். மறுபுறம் ஒவ்வொரு கண்டிய விவசாயிக்கும் ஒரு துண்டு சிறு நிலமாவது தாம் உழுது பயிரிடுவதற்குச் சொந்தமாகக் காணப்பட்டது. அல்லது குத்தகை நிலத்தில் உழுவதற்கு அவன் உரிமை பெற்றிருந்தான். எனவே பருவ காலங்களில் முழு நேர ஊழியர்களாக அவர்கள் வயல் நிலங்களில் வேலை செய்தனர்.[50] பெருந்தோட்டங்களில் சென்று வேலை செய்வதற்கு இவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை. இவ்வாறான காரணிகள் ஆங்கிலேயர் ஆரம்பித்த பெருந்தோட்டங்களில் இந்திய தமிழர்களுக்கான வேலை வாய்ப்பு அதிகரித்தது. இதுவே தென்னிந்திய தமிழர்கள் இலங்கை வருவதற்கு வழி சமைத்தது.

### பொருளாதார சார்பு நிலையும் இழுவைக் காரணிகளும்

பல வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதைப் போல ஆங்கிலேயர் அத்தமிழ் தொழிலாளர்களை இலங்கைக்குக் கொண்டு வந்தமையும் ஏமாற்றி வேலை வாங்கிய நடைமுறைகளும் பல அடக்குமுறைகளும் துன்பங்களும் நிறைந்ததாகக் காணப்பட்டது. ஆனால் அதற்கு மத்தியிலும் தமிழ் தொழிலாளர்களின் இலங்கை நோக்கிய வருகை தொடர்ச்சியாக இடம்பெற்ற வண்ணமே இருந்தன. இதன் காரணிகள் இங்கு ஆய்வுக்குரிய ஒன்று. அதன் உட்பதம் இலங்கையை நோக்கிய குடிவருகையும் இலங்கையில் அவர்களின் வாழ்க்கை முறையும் தமிழ் நாட்டில் அவர்கள் இதுவரை அனுபவித்த துன்பங்களுக்கு ஈடாகாது. அதற்கு மறுதலையாக நடைமுறையில் பல சாதகங்கள் இலங்கையில் அவர்கள் வாழ்வதற்கான சார்பக காரணிகளாக அமைந்தன .

இலங்கையில் இந்தியத் தமிழர் குடிபெயர்ந்து வரத்தொடங்கிய போது அக்குடும்பங்களை நோக்கி அவர்களை நம்பியிருந்த இந்தியத் தமிழ் குடும்பங்களின் வருகை அதிகரித்திருந்தது. 1860க்கும் 1870 க்கும் இடைப்பட்ட காலத்தில் பெண்களின் வருகை அதிகரிக்க ஆரம்பித்தது.[51] பெருந்தோட்டங்களில் காணப்பட்ட வாழ்க்கை முறையின் ஒருவித கவர்ச்சி காரணமாகவே தொழிலாளர் தமது குடும்பங்களையும் இலங்கைக்கு அழைத்து வரத் தொடங்கினர்.[52] இவ்வாறான காரணிகளே 1871ம் ஆண்டு 1901, 1931ம் ஆண்டுகளில் பெருமளவு குடிவரவு அதிகரிப்பதற்கு ஏதுவாக அமைந்தன. இலங்கையில் பெருந்தோட்ட பொருளாதார செழிப்புத் தன்மை அல்லது மந்த நிலைக்கேற்பவே குடிவருகையின் விகிதாசாரம் காலாகாலம் வேறுபட்டது. தொழிலாளர் வரவினை ஊக்குவிக்குமுகமாக 1889ம் ஆண்டு இயற்றப்பட்ட தோட்டத்தொழிலாளர் சட்டம், சேவை ஒப்பந்தம், ஊழியம் தொடர்பான ஏற்பாடுகள், குறிப்பாக தொழிலாளர்களின் ஒரு மாதத்திற்குரிய ஊழியம் அடுத்து வரும் மாதத்தில் 10ம் திகதியில் வழங்கப்பட வேண்டுமென்ற சட்டம், பெருந்தோட்ட விவசாய வளர்ச்சியை உறுதியாக ஏற்படுத்த தோட்ட தொழிலாளரின் பொருளாதார நலன்களை பாதுகாப்பதில் ஆங்கிலேயர் ஆர்வம்கொண்டமை, என்பன தமிழ் நாட்டு தொழிலாளர்களைக் கவர்ந்திழுக்கக்கூடிய இழுவைக் காரணிகளாயின.

குடியேறிய தொழிலாளர்கள் குறுகிய காலப்பகுதியிலேயே தமது குடும்ப வருமானத்தை அதிகரித்துக் கொண்டனர். இந்நாடுகளில் 3 அல்லது 4 ஆண்டுகள் தொழில் புரிந்தாலேயே ஓரளவு சேமிப்புடன் அவர்கள் நாடு திரும்பக்கூடியதாக இருந்தது. தங்க ஆபரணங்களை பெண்கள் தமது சொத்துக்களாக வைத்திருந்தனர். பலர் சிறியதொரு நிலத்துண்டை வாங்குமளவிற்கு பொருளியல் தகுதி பெற்றிருந்தனர். கூடுதலான தேயிலையை பறித்த பெண் தொழிலாளர்களுக்குக்கூட தங்கப் பவுண்கள் வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. திருச்சிராப்பள்ளி ஆட்சித் தலைவர் பிரதேசத்திலிருந்து வருகை தந்த தொழிலாளாகள் 15, 20 மாதங்களுக்குள் 80 - 150 ரூபாவை தமது சேமிப்பாக வைத்திருந்தனர். தென் ஆர்காட்டு ஆட்சித் தலைவர் "இலங்கையில் வழங்கப்பட்ட சம்பளம் தமது மாவட்டத்தில் வழங்கப்பட்ட சம்பளத்தைவிட 3 மடங்கு அதிகமாக இருந்ததெனக்" கூறுகிறார்.[53] இலங்கையிலிருந்து திரும்பியவர்கள் 50 இலிருந்து 200 ரூபா வரையும் சிலவேளைகளில் 500 ரூபா வரையும் சேமிப்பாக வைத்திருந்தனர். இந்நிலைமை அவர்கள் வாழ்ந்த சொந்த கிராமங்களில் இளைஞர்களையும் யுவதிகளையும் பெருமளவு இலங்கையை நோக்கி கவர்ந்திழுத்தது. இதற்கு மறுதலையாகக் குடியகன்று திரும்பியவர்கள் புதிய பயிர்ச்செய்கை முறையை அறிந்தவர்களாகவும் சாதி கட்டுப்பாட்டுக்குட்பட விரும்பாதவர்களாகவும் காணப்பட்டனர். இவ்வாறான மாற்றங்கள் தாழ்ந்த சாதி குடியினர் என்று கருதப்பட்ட பிரிவினரிடம் அதிகளவு காணப்பட்டன. புதிய வாழ்க்கை முறையையும் அனுவங்களையும் பெற்றுக் கொண்ட இவர்கள், சுய நம்பிக்கை சுய கௌரவம் வாய்க்கப் பெற்றவர்களாக மீண்டும் தமிழ்நாட்டில் தாம் பாரபட்சமாக நடாத்தப்படுவதற்கு இடமளிக்கவில்லை.

தென்னிந்திய பொருளாதார நிலை வீழ்ச்சியடைந்த போதெல்லாம் அங்குள்ள தமிழ் மக்கள் தம் நாட்டை விட அதிக வருவாய் தருகின்ற இலங்கை போன்ற நாடுகளுக்குக் குடிபெயர்ந்து சென்றனர்.[54] இந்திய அரசாங்கம் அவர்களுக்கெதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்க முன்வரவில்லை. 1847ம் ஆண்டு வரை இந்தியா குடியகல்வு மீதான எவ்விதமான தடையையும் விதிக்கவில்லை. ஆனால் மேற்படி ஆண்டில் விதிக்கப்பட்ட தடையானது இலங்கைக்கெதிராக விதிக்கப்பட்டதென்பதற்கு போதிய ஆதாரம் கிடையாது. [55]

பிற்காலத்தில் தொழிலாளர் வருகையை கவர்ந்திழுப்பதற்காக காலனித்துவ நிர்வாகம் தோட்டப்புறங்களில் பல உட்கட்டமைப்பு அம்சங்களை விருத்தி செய்தன. போக்குவரத்து, சுகாதாரம், பாதையமைத்தல், தோட்டப்புறக்கல்வி, பிள்ளை மடுவங்கள் அமைத்தல், தோட்டத்தொழிலாளர் திடீரென சுகயீனமடையும் போது வாகன வசதிகள் செய்து கொடுத்தமை போன்ற பல காரணிகள் தமிழ் தொழிலாளாகள் இலங்கையில் குடியேறவும் நிலையான தமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவும் காரணிகளாயின.

**கங்காணி முறையும் இழுவை காரணியின் செயற்பாடும்**

அப்போது இந்திய தமிழர்களின் வருகை என்பது முற்றுமுழுதுமாக கங்காணிமார்களின் பொறுப்பிலேயே தங்கியிருந்தன. ஆரம்பத்தில் கங்காணிமார்களின் உறவினர்கள் சுற்றத்தவர்களே இங்கு குடியேற்றப்பட்டார்கள். 25 அல்லது 30 பேர் கொண்ட ஒரு குழுவுக்கு ஒரு கங்காணி தலைமை தாங்கினான். பெருந்தோட்ட நிர்வாகத்திற்கு ஆட்கள் தேவைப்படும் போதெல்லாம் இவனே ஆட்களைத் திரட்டி வந்து இலங்கை பெருந்தோட்டங்களில் சேர்த்தான். பல குழுக்களின்

கங்காணிகளுக்கு தலைமை கங்காணிகள் காணப்பட்டனர்.[56] இக்கங்காணிமார்களின் கவர்ச்சியான பேச்சு பல வாக்குறுதிகள் என்பன தொழிலாளர்களை இங்கு வர ஈர்த்தன. கங்காணி முறையில் உறவினர் அல்லது சாதியைச் சேர்ந்தவன் கிராமத்தை சேர்ந்தவன் என்ற அடிப்படையில் தென்னிந்திய தமிழ் தொழிலாளர்களுக்கு அவன் மீது மிகுந்த நம்பிக்கை தோன்றியிருந்தது. இந்திய குடும்பத்தவர்களுக்கு செய்திகளை அனுப்பவும் சுக துக்கங்களை விசாரித்துக் கொள்வதற்கும் தொடர்பூடக மனிதனாக கங்காணி விளங்கியது மாத்திரமல்லாமல் தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தற்காலிகத் தீர்வாளனாக தொழிலாளியின் பல கடன் பிரச்சினைகளைத் தீர்த்தான். தோட்டப்புறங்களில் கைமாத்து (உடனடி கடன்) பெறுவதற்கிருந்த ஒரே நபர் இந்த கங்காணியே. இலங்கையில் தொழிலாளர்களைக் குடியேற்றுவதில் கங்காணிமார்களின் தனிப்பட்ட உந்தற் காரணிகள் செயற்பட்டன. இலங்கைக்குக் கொண்டு வரப்படும் ஒவ்வொரு தொழிலாளிக்கும் 5 ரூபா அல்லது 10 ருபாவை தோட்ட நிர்வாகம் தலைக்குரிய இனாமாக கங்காணிக்கு வழங்கியது. எனவே கங்காணி ஆள் திரட்டும் முயற்சியில் உற்சாகமாக ஈடுபட்டான். அத்தோடு ஆள் திரட்டுவதற்கான முற்பணமாக திரட்டுப் படியை பெற்றுக் கொண்டமை போன்ற நடவடிக்கைகள் கூடுதலான தொழிலாளரை இலங்கைக்கு அழைத்து வரக் காரணமாகியது.

**கோப்பிப் பயிர்ச்செய்கைக் கால இந்தியத் தமிழ் தொழிலாளர்களின் வருகை**

இலங்கையில் கோப்பி பயிர்ச்செய்கை இடம்பெற முன்னரே பாதை அமைத்தல, துறைமுக வேலை, தெரு சுத்தம் மற்றும் இன்னோரன்ன வேலைகளுக்காக தமிழ் தொழிலாளர்கள் இறக்குமதி செய்யப்பட்டார்கள். ஆளுநர் பிரட்ரிக் நோர்த் (1798 - 1815) பொது வேலைக்காக உள்ளுர் தொழிலாளர்களைத் திரட்டிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் தென்னிந்தியத் தமிழ்த் தொழிலாளர்களை முதன்முதலில் இங்கு கொண்டு வந்தார்.[57] இவர்கள் கொழும்பு, கண்டி, திருகோணமலை, காலி போன்ற இடங்களில் பாதைகளை அமைப்பது மற்றும் கம்பளை, கட்டுகஸ்தோட்டை, களுத்துறை, விக்டோரியா ஆகிய இடங்களில் பாலங்களை அமைப்பது போன்ற வேலைகளுக்கு பயன்படுத்தப்பட்டனர்.[58] பின்னர் இவர்கள் நகரங்களில் அல்லது நகர்சார் இடங்களில் நிரந்தரமாக வாழ ஆரம்பித்துவிட்டனர்.

இத்துடன் கோப்பிப்பயிர்ச் செய்கையை கவரச் செய்வதற்காக உற்பத்தியில் ஐரோப்பியர் என்போரை ஈடுபடுத்துவதற்காக 1827 ஆம் ஆண்டில் அப்போதைய தேசாதிபதி பான்ஸ் கோப்பிப் பயிர் ஏற்றுமதிக்கான வரியை நீக்கியதுடன் பின்னர் கோப்பிப்பயிர்ச் செய்கை பண்ணப்படுகின்ற நில வரியையும் நீக்கினார். 1833 ஆம் ஆண்டு பிரித்தானிய காலனித்துவ அடிமை முறையை ஒழிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டமையும் மறுபுறம் பிரித்தானிய அரசாங்கமும் தன் நாட்டுக்கு இறக்குமதியாகும் கோப்பிக்கான இறக்குமதி வரியை குறைத்தமையும் இலங்கையில் மேலும் கோப்பிப் பயிச்செய்கைக்கான துாண்டற் காரணியாகின. எனவே தான் ஏற்கனவே கூறப்பட்டது போல, தென்னிந்திய தமிழத் தொழிலாளர்களை இங்கு கொண்டு வருவது தவிர்க்க முடியாத ஒன்றாயிற்று. எனவே 1834 இல் 40 ஏக்கராக ஆரம்பித்த கோப்பிப் பயிர்ச்செய்கை 1845 இல் 19,062 ஏக்கரானது.[59]

இலங்கையும் ஏனைய நாடுகளும் வழங்கிய உறுதி மொழியின் பேரில் 1847ம் ஆண்டு குடியகல்வு தடைச்சட்டம் நீக்கப்பட்டது. ஆனால் இந்தியத்தமிழ் தொழிலாளர்கள் ஒழுங்காக

கவனிக்கப்படுகின்றார்கள் என்பதை உறுதிசெய்ய 24 சட்டங்களை இலங்கை அரசாங்கம் இயற்றியது. இக்காலத்தில் இலங்கையில் இயங்கிய 'விவசாய சங்கம்' என்ற அமைப்பு தொழிலாளர்கள் அனுபவித்த கடற் பயண துன்பங்கள், காலநிலை மாற்றங்கள் மற்றும் உடல் துன்பங்களை எடுத்துக் கூறியது. எனவே அரசாங்கம் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு வழங்குவதாக பல உறுதி மொழிகளை வழங்கியது.

இந்தியத் தொழிலாளர்களுக்கு சார்பாக 'இங்கிலாந்து சுவிஷேச இயக்கத்தினர்' மேற்கொண்ட இயக்கத்தின் காரணமாக பிற்பட்ட காலத்தில் காலனித்துவ அரசும் கிழக்கிந்திய கம்பனியும் தொழிலாளர் நலனில் அக்கறை காட்டின.[60] ஆனால் அது அவ்வளவு துாரம் தொழிலாளர் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. மேற்படி தொழிலாளர் வரவு, பராமரிப்பு என்பவற்றில் பல துன்ப சம்பவங்கள் இடம்பெற்ற போதும் தொழிலாளர் வருகையில் குறைவு ஏற்படவில்லை. இந்திய அரசாங்கம்தான் அவர்களின் வருகையை தடை செய்ய முற்பட்டதே ஒழிய, தொழிலாளர் தொடர்ச்சியாக வரவே முற்பட்டுள்ளனர். இதற்கு அடிப்படைக் காரணம் இழுவை காரணிகளின் செயற்பாடுகளாகும். ஆனால் 1872 க்குப்பின் பல மருத்துவ வசதிகள் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டன. இதற்கான சட்டபூர்வ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1880,81,82,1912 ஆகிய ஆண்டுகளில் மருத்துவ வசதிகள் பற்றிய கட்டளைகள் பல பிறப்பிக்கப்பட்டன.[61] ஆனால் 1921 - 1938க்கும் இடைப்பட்ட காலக் கணிப்பீடுகளில் 98.6 வீதமான தென்னிந்திய தமிழர்களும் வந்தனர். இதன்படி 1911ம் ஆண்டு இந்திய தமிழர்களின் தொகை 530,984 ஆக விளங்கியது. 1921ம் ஆண்டில் இது 602735 என்று அதிகரித்துள்ளது.[62] இந்தியத்தமிழ் மக்களை அவர்களின் பிரதேசத்தை அடிப்படையாகக் கொண்டு 2 பிரிவினராக அடையாளம் காணலாம்.

1. பெருந்தோட்டங்களில் வேலை செய்வோர்
2. பெருந்தோட்டங்களில் வேலை செய்யாதோர்[63]

இவர்களின் தொகை முறையே 589,302 பேர் பெருந்தோட்டங்களில் வேலை செய்வோர் 46864 பேர் பெருந்தோட்டங்களில் வேலை செய்யாதோர். இதனைத் தொடர்ந்து இந்திய வம்சாவளி தமிழர்களின் குடிப்பரம்பலானது பெருந்தோட்டங்களைச் சார்ந்தோர் பெருந்தோட்டங்களைச் சாராதோர் என்ற அடிப்படையில் காட்டப்படுகின்றன. இது தொடர்பாக சரியான குடிப்பரம்பல் கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படாத போதும் பெறப்பட்ட தகவல்களின்படி பெருந்தோட்டங்களைச் சார்ந்த இந்திய தமிழர் 1926 இல் 820,000 என்றும் பெருந்தோட்டங்களை சாராதோர் 1927 இல் 825,000 என்ற வகையில் வாழ்ந்து வந்துள்ளனர்.

### பெருந்தோட்டம் சாரா இந்திய தமிழர்

பிற்காலத்தில் பெருந்தோட்டங்களிலிருந்து சமூக பெயர்வு மற்றும் இட பெயர்வடைந்தவர்களும் இப்பெருந்தோட்டம் சாராத இந்தியத் தமிழருடன் ஒன்றிக் கலந்து விட்டனர். சுதந்திரத்துக்கு பிற்பட்டகால அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளும் பெருந்தோட்ட மக்களில் பலரை இந்தச்சமூகப் பிரிவினருக்குள்ளேயே கவர்ந்திழுத்திருக்கின்றன. 1949 களுக்குப் பின்னரும் 1964ம் ஆண்டு சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் 1971 ஆம் ஆண்டு இந்திரா - சிறிமா ஒப்பந்தம் போன்ற பல குடியுரிமை பெற்ற பலர் இந்த சமூகத்தில் கலந்துவிட்டனர். பின்னர் இடம்பெற்ற

தேசியமயமாக்கல் நடவடிக்கைகள் காரணமாக இந்த பெருந்தோட்டம்சாரா இந்திய தமிழரின் குடித்தொகையை அதிகரிக்கச் செய்துள்ளது. ஆனால் இலங்கை வந்த பெருந்தோட்டம் சாரா தமிழ் மக்களின் குடிவரவானது பெருந்தோட்டம் சார்ந்த தமிழ் மக்களின் குடிவரவுக்குச் சமமானதாகும்.[64] இவ்வாறு இலங்கை வந்த பெருந்தோட்டம் சாரா இந்தியத் தமிழ் மக்கள் பெரும்பாலும் சுயமாக வேலைவாய்ப்புத் தேடியும் எவ்வித மானியமும் பெறாமல் அரச மற்றும் ஏனைய தாபனங்களின் உதவியின்றி இலங்கைக்கு வந்துள்ளார்கள்.

தென்னிந்தியாவில் பல மாநிலங்களிலிருந்து இவர்கள் வருகை தந்ததன் காரணமாக பல்வேறு சமூக வேறுபாடுகளைக் கொண்டவர்களாக இவர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர்கள் நாட்டுக்கோட்டை செட்டிமார்களாவர். வாணிக நோக்கம் கருதியே இவர்கள் இலங்கை வந்தார்கள். இவர்களில் பெரும்பான்மையினர் நகரங்கள், சிறு நகரங்கள், பெருந்தோட்டம் என்பவற்றை அண்டியே வாழ ஆரம்பித்தனர். பெருந்தோட்டங்களில் இவர்களின் தொடர்பு நெருக்கமாகக் காணப்பட்டது. இவர்களில் பலர் பெருந்தோட்டம் சார்ந்த நகரங்களில் பலசரக்கு மற்றும் புடவைக் கடைகளை நடாத்தினர். தமிழ் நாட்டில் செட்டிமாரும், ஜைன மதத்தினரும், சென்னை வர்த்தகர்களும் நாளடைவில் தரகு வியாபாரிகளாகவும் ஆங்கில வர்த்தகர்களின் முகவர்களாக மாறி விட்டவர்களாகக் காணப்பட்டமையால்[65] இலங்கையில் இவர்கள் செல்வாக்கு பெற்றவர்களாகக் காணப்பட்டனர். அரிசி போன்ற உள்நாட்டு நுகர்வு பொருட்கள் இவர்களால் இறக்குமதி செய்யப்பட்டன. பல செட்டிமார் தலைமைக் கங்காணிமாராகச் செயற்பட்டனர்.

இவர்களைவிட, நகை வியாபாரிகள், மொத்த சில்லறை வியாபாரிகள், பொட்டணி வியாபாரிகள், மணிப்பெட்டி வியாபாரிகள், தரகர்கள் என்போரும் தொழில் நிமித்தம் இலங்கையில் குடியேறி நகரங்கள் சார்ந்து வாழ ஆரம்பித்தனர். இவர்களைவிட கடைகளில் சிப்பந்திகளாக வேலை செய்வதற்கும் எடுபிடியாளர்களாக கடமையாற்றுவதற்கும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களுக்கு உதவியாளர்களாகவும் பலர் இலங்கை வந்திருக்கின்றனர். இது தவிர, அரசாங்க சேவை புரிவதற்கும் உத்தியோகப்பூர்வமான அந்தஸ்த்தை பெற்றவர்களும் சிற்றூழியர்களும் இலங்கையில் குடியமர்ந்துள்ளனர். தொழிலாளர்களில் இன்னொரு பிரிவினராகிய துறைமுகத் தொழிலாளர், புகையிரத சேவைத் தொழிலாளர்கள், பல்வேறு திணைக்களங்களில் தொழில் புரிவதற்கான தொழிலாளர்கள், ரிக்ஷா இழுப்போர், தோட்டிகள் என்ற பலரும் இவர்களுக்குப் புறம்பாக ஆசிரியர்கள், கலைஞர்கள், நடிகர்கள் என்பவர்களும் இலங்கைக்கு வந்து நிரந்தரமாக தமது வாழ்க்கையை ஆரம்பித்துள்ளனர்.[66]

### குடியகல்வு பரிமாற்றமும் இலங்கையில் நிரந்தரமாக தங்கிய இந்தியத் தமிழர்களும்

ஒரு சமூக அமைப்பில் குடியகல்வு என்பது குடும்பமாக அல்லது பால் சமநிலை அடிப்படையில் இடம்பெறுமானால் அந்நாட்டின் குடிவருகை அந்நாட்டின் நிரந்தர குடிஅமைவாக இடம்பெற வாய்ப்புண்டு. (இந்தியாவிலிருந்து ஆண்களுக்கு சமனான பெண்களும் குழந்தைகளும் குடி வருகையில் ஈடுபட்டமை இந்நாட்டில் நிரந்தர குடியமைவை உட்கொள்ள காரணமாகியது). இந்தியத் தமிழர் இலங்கை நோக்கிய வருகையை வரையறை செய்யும் சோ. சந்திரசேகரன் அவர்கள் 1830 க்கும் 1879 க்கும் இடைப்பட்ட காலத்தில் கோப்பிச் செய்கையின் வளர்ச்சி

இத்தொழிலாளர்களை கவர்ந்திழுத்ததெனக் கூறுகிறார். 1880 - 1889 ஆண்டுகளுக்கிடைப்பட்ட காலங்களில் கோப்பிப் பயிர்ச் செய்கையின் வீழ்ச்சி இந்தியத் தொழிலாளர் வருகையை குறைத்தது. 1890 - 1930 தேயிலை மற்றும் இறப்பர் பயிர்ச்செய்கையின் எழுச்சி மீண்டும் இந்தியத் தொழிலாளர்களின் வருகையை அதிகரிக்கச் செய்தது. 1930 க்கும் 1942 க்கும் இடைப்பட்ட காலத்தில் பெருந்தோட்டங்களின் வீழ்ச்சி காரணமாக மீண்டும் தொழிலாளர் வருகை குறைந்தது. 1942 க்கும் 1944 க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 2ம் உலக போரின் போது ஜப்பான் குண்டு வீச்சு நிகழ்த்தியமை இந்தியர் பலர் குடியகல காரணமாகியது. 1945க்குப்பின் இந்தியத் தொழிலாளர் வருகையில் பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமையால் தொழிலாளர் வருகை படிப்படியாகக் குறைந்தது. இலங்கையில் தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பமானதோடு இந்திய மக்கள் பெருமளவில் இலங்கையில் குடியேறுவதற்கு இடமளித்தது. 1890 க்கும் 1930 க்கும் இடைப்பட்ட 40 ஆண்டுகளில் தேயிலை இறப்பர் தோட்டங்கள் வளர்ச்சியடைந்த போது 7 ஆண்டுகளில் ஆண்டுக்கு 2 இலட்சம் பேருக்கு மேற்பட்டவர்களும் இலங்கைக்கு வந்தனர்.

இதில் நாம் காணக்கூடிய முக்கியமான அம்சங்கள் என்னவெனில் தொழிலாளரின் இலங்கை நோக்கிய வருகையானது பெருந்தோட்டங்களின் எழுச்சி வீழ்ச்சிக்கான இழுவைக் காரணிகளின் அடிப்படையிலேயே நிகழ்ந்ததென்று கூறலாம். அத்தோடு தோட்ட உரிமையாளர்கள், இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் நிரந்தரமாகத் தங்குவதை விரும்பினர். 19 ஆம் நூற்றாண்டு பிற்பகுதியில் குடும்பங்களாக வருவோரின் தொகை அதிகரித்தமையால் நிரந்தரமாக வசிப்போரின் தொகையும் அதிகரிக்கலாயிற்று. தேயிலைப் பயிர்ச்செய்கை ஆரம்பமான காலப்பகுதியில் நிரந்தரமாக குடியேறி வேலை செய்யும் தொழிலாளர்களே இலங்கைக்குத் தேவைப்பட்டார்கள்.

## முடிவுரை

மேற்படி இந்தியத் தமிழர்களின் இலங்கை நோக்கிய வருகையும் இலங்கையில் குடியமர்ந்தமையும் உந்தல் இழுவை காரணிகளின் அடிப்படையில் அமைந்ததென்பது மிகத்தெளிவானது. எவ்வாறு ஐரோப்பிய ஆதிக்குடிகள் பொருளியல் மற்றும் சமூகக் காரணிகளால் இந்தியாவை நோக்கி இடம்பெயர ஆரம்பித்தனரோ அதனை போன்ற காரணிகளாலே தமிழர்களும் தமிழ் நாட்டிலிருந்து இலங்கையை நோக்கித் தள்ளப்பட்டனர். ஆனால் அவ்வாறு தள்ளப்படுவதற்கு செயற்கையான ஒரு சூழ்நிலையினை ஏற்படுத்திக் கொடுப்பதில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர். தமிழக சமூக சூழலும் நிலமானிய ஒடுக்குமுறைகளும் அதனை துரிதப்படுத்தியதென்பதும் இலங்கையில் ஆங்கிலேயர்கள் பெருந்தோட்டங்களை ஆரம்பித்தமையும் தமிழ்நாட்டைவிட சாதகமான பொருளியல் காரணிகள் இலங்கையில் செயற்பட்டமையும் தமிழர்கள் இலங்கையில் குடியேறவும் நிரந்தரமாக தமது குடியமர்வினை ஏற்படுத்திக் கொள்ளவும் காரணிகளாயின.

## அடிக்குறிப்புக்கள்:

1. System Administration (02.05.012) – Migration Push and Pull factors
2. Ibid
3. Chris Riley - Study Note
4. வி. நித்தியானந்தன் நடேச ஐயர் காலம் முதல் இலங்கைப் பெருந்தோட்டத்துறையின் சமூக பொருளாதார உருமாற்றம் மார்க்கம் இதழ் 1 (1992 பக். 24)

5. சோ. சந்திரசேகரன் - இலங்கை இந்தியர் வரலாறு - பக்கம் 9
6. Marx & Angels on colonialism p.35
7. Ibid p. 35 -36
8. S.Nadesan A history of the up-country plantation people in Sri Lanka -p.9
9. Javaharlal Nehru p.276
10. Ibid
11. Ibid – Page 276
12. சோ. சந்திரசேகரன் இலங்கை இந்திய வரலாறு – பக் 12
13. Ibid
14. Kondapi Indian Overseas Madrass (1951) p. 3
15. கொ. அ. அன்தோனாவா - இந்தியாவின் வரலாறு – பக். 80 மொழி பெயர்ப்பு பூ. சோமசுந்தரம்
16. javaharlal Nehru – Discovery of India p. 277
17. சோ. சந்திரசேகரன் - இலங்கை இந்திய வரலாறு – பக் 13
18. கொ.அ. அன்தோனவா - இன்றைய இந்தியா – பக் 266
19. Ibid, பக் 301
20. Ibid, பக். 294
21. Ibid, பக். 294
22. S. Nadeson – History of the Up-country – p. 10 Tamil People in Sri Lanka
23. Ibid
24. கோ.அ. அன்தோனவா, பக் 291
25. சு.முகர்ஜி - இந்தியாவின் நிலப் பிரச்சினை – பக் 16
26. கோ.அ. அன.தோனவா - இன்றைய இந்தியா பக் 301
27. Ibid, பக் 292
28. கோ. அ. அன்தோனவா - இன்றைய இந்தியா பக்
29. ரஜனி பாமி தத் - இன்றைய இந்தியா – பக் 294
30. Dharma kumar – Land & Caste in South India Cambridge University Press (1965) – Page 188
31. சோ. சந்திரசேகரன்
32. ரஜனி பாமி தத்
33. Dharma kumar – Land & Caste in South India Cambridge University
34. சோ. சந்திரசேகரன் - பக் 70
35. ரஜனி பாமி தத் - பக் 320
36. S.Rajaratnam – Plantation Labour in Ceylon Young Socialist – No.3 Oct/Dec (1961) – page 110
37. Ibid
38. Javaharlal Nehru – Discovery of India
39. Ibid, பக் 308
40. Ibid

41. India Hindu Muslim Question p. 10
42. நீல் குருப்பு - இனதுவமும் சமூக மாற்றமும்
43. Karl Marx – British rule inIndia
44. கலாநிதி குகபாலன் - குடித்தொகை பிரயோகமும் கோட்பாடுகளும் - பக் 173.
45. ஆ.ஞ. மூக்கையா - இன்றைய மலையகம் - பக் 1
46. பீ. தங்கராஜா – பக்கம் 18
47. G.S.T. J. Orde Browns – Labour condition in Ceylon – p.8
48. K.M.De.Silva
49. Ibid
50. D.M Forrest p.7
51. சோ. சந்திரசேகரன் - பக் 70
52. Ibid
53. Ibid
54. Ibid
55. Ibid
56. Oddvar Hollup – p.39
57. R.Jeyaram – p.28
58. R.Jeyaram – Migration Figure for the years 1839 - 1959
59. சோ. சந்திரசேகரன் - பக்கம் 83
60. சோ. சந்திரசேகரன் - பக்கம் 83
61. Dr. N. வேல்முருகு – பக்கம் 18
62. பி.பி. தேவராஜ் - இனத்துவமும் சமூக மாற்றமும் - பக் 224
63. Ibid
64. N.K. Sankar – page 178
65. ஆர்நாட்டு வேளாளர் சங்க தசாப்த மலர் 1992 – பக். 113
66. R. Jeyaram – p.41

## துணை நூல்கள்


1. Bastian Sunil -
   Indian Tamils' Emerging IssuesCeylon Seasonal Paper XVIII – Report of the committee citizenship by descent – Appendix
2. Dharmakumar
   Land and caste in South India Cambridge University Press – 1965
3. Forrest 100 years of Tea 1867 – 1967
4. Fernando Nimal AContinually change in Plantation Agriculture – A study of Sri Lanka – Land Reform Programme on the Tea Plantation
5. G.St. J. Orde Browns Labour condition in Ceylon Maurits and Malaya Report by Major Crid. 6423 – London 943
6. India Hindu Muslim Question Immigration Commissioner Report 1938

7. Ivor Jenning, University of Ceylon –Review
8. Jeyaram R. Caste continuities in Ceylon Popular Prakashan Private Ltd.
9. Kodikara S. Indo Ceylon Relation since Independence
10. K.M.de Silva Social Policy – Minority Organization in Ceylon 1840 – 1855 – London
11. Ludo – Owyk EFC The modern history of Ceylon
12. Marx, Angles On Colonialism
13. Marx Karl , Notes on Indian History
14. Marx Karl, Capital Vol.3 – Progress Publisher 1974 Moscow
15. Oddvar Hollup , Bonded Labour Caste and cultural Identity among Tamil Plantation Workers in Sri Lanka
16. Indian Economic & Social History Review Vol.3 – No.1 – March 1966
17. S. Nadeson, A history of the up-country Tamil People in Sri Lanka
18. S. Rajaratnam, Plantation Labour in Ceylon Young Socialist No.3 Oct/Dec. 1961
19. Wilson A.J Electoral Politics in an emergence State
20. ஏ. நித்தியானந்தன் பெருந்தோட்டத்துறையில் சமூக, பொருளாதார உருமாற்றம் - மார்க்கம் இதழ் ஐ 1992
21. சோ. சந்திரசேகரன் இலங்கை இந்திய வரலாறு
22. கொ அ. அந்தோனாவா இந்தியாவின் வரலாறு மொழி பெயர்ப்பு
23. சோ. சந்திரசேகரன் -இந்திய தமிழர் வரலாறு
24. ஆர். முகர்ஜி இந்தியாவின் நிலப்பிரச்சினை
25. சாதியமும் அதற்கெதிரான போராட்டமும் வெகுஜனன் - இராவணா, புதிய பூமி வெளியீடு - 1966 ஒக்டோபர்
26. நீல் குருப்பு இலங்கையில் இனவாதமும் தொழிலாளர் இயக்கமும் இலங்கையின் இனத்துவமும் சமூக மாற்றமும், 1979
27. ஏ. எஸ். பெக்மன் - ஜி. சி. மென்டிஸ் நம் முன்னோர் அளித்த அருஞ்செல்வம்
28. பி. தங்கராஜ், இலங்கை இந்திய வரலாற்றுச் சுருக்கம்
29. எம். எஸ. மூக்கையா, இன்றைய மலையகம் - கட்டுரை தொகுப்பு
30. பி. பி. தேவராஜ், இலங்கை இந்திய தமிழர் தனித்துவ உறுதிபாடும் இனங்களுக்கிடையிலான சமத்துவமும் இனத்துவமும் சமூக மாற்றமும்
31. டியுடர் சில்வா, கே. யாத்திரை பெருந்தோட்ட மக்களின் இனப்பிரச்சினை
32. ரஜனி பாமி தத், இன்றைய இந்தியா, நியூ சென்சரி ஹவுஸ் பிரைவேட் லிமிடட், சென்னை.
33. ந. வேல்முருகு, மலையக மக்களின் சமய நம்பிகைகைகளும் சடங்கு முறைகளும்
34. கலாநிதி கா. குகபாலன், குடித்தொகை - பிரயோகங்களும் கோட்பாடுகளும்
35. System Administration (02.05.012) –Migration Push and Pull factors
36. Chris Riley - Study Note –Push and Pull Factors behind Migration

# மட்டக்களப்பு சமூக அமைப்பில் தமிழ் பேசும் வேடர்களின் வழிபாட்டு மரபை ஆவணப்படுத்தல்

கு. ரவிசந்திரன்

மட்டக்களப்பு சமூக அமைப்பு மிகப்புராதன வரலாற்றுப் பின்புலத்தைக் கொண்டது. இதன் ஒரு பகுதியாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ் பேசும் வேடர்களின் வழிபாட்டு மரபை ஆவணப்படுத்தல் என்ற தலைப்பு அமைந்துள்ளது. இவ்வாய்வு மட்டக்களப்பு சமூக அமைப்பில் வாழ்ந்த வேடர் இனத்தின் வழிபாட்டு மரபை மையமாக கொண்டுள்ளது. இத்தகைய ஆய்வு இதுவரை வெளிவராத போதிலும் வேடர் இனத்தை பற்றி கலாநிதி யு.வி.தங்கராசா அவர்களும், பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் சில ஆய்வுகளைச் செய்துள்ளனர். இதுவரை காலமும் மட்டக்களப்பில் ஆதிக் குடிகளாக இருக்கும் வெள்ளாளர்கள், முக்குவர்கள் அவர்களோடு தொடர்புடைய தெய்வங்களான கண்ணகியம்மன், மாரியம்மன், திரௌபதி அம்மன்,பேச்சியம்மன் போன்ற தெய்வங்களும் அத்தெய்வங்களுக்குச் செய்யும் சடங்குகளுமே ஆய்வுப் பொருளாக இருக்கின்றன. மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கின்ற வேடர், பறையர், பள்ளர், குறவர்கள் பற்றிய ஆய்வுகள் மிக குறைவாகவுள்ளன. இதனைக் கருத்திற்கொண்டு இதில் ஒரு பகுதியினராக இருக்கின்ற தமிழ்பேசும் வேடர்கள் பற்றியதாக இவ்வாய்வு அமைகின்றது.

இவர்கள் ஈழத்தில் மிகப் புராதன குடிகளுள் ஒருவரான இயக்கரின் எச்சங்களாகவும், அவர்களது வழிபாட்டு முறைகளின் எச்சங்களைப் பின்பற்றி இன்னும் வைத்திருப்பவர்களாகவும் உள்ளனர். தமக்கேயுரிய மொழியும் பண்பாடும் வழிபாடும் கொண்டிருந்த இம்மக்கள் சிங்கள,தமிழ் மக்களுடன் இணைந்து சிங்களம் பேசும் வேடர்களாகவும்,தமிழ் பேசும் வேடர்களாகவும் இன்று மாறிவிட்டனர். சிங்களம் பேசும் வேடர்கள் பற்றிய ஆய்வுகள் நிறைவாக வெளிவந்துவிட்டன. தமிழ் பேசும் வேடர்கள் பற்றிய ஆய்வுகள், நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந்துள்ளன. க.தா. செல்வராசா கோபால் அவர்களும் வி.தங்கராசா அவர்களும் “மந்திரவாதியே தெய்வமா அபிநயிக்கும் சமயச்சடங்கு” என்ற கருத்துருவில் பேராசிரியர் சி.மௌனகுரு அவர்களும் “வேடர் மத்தியிலும் மாந்திரிகம்” பற்றி கலாநிதி வடிவேல் இன்பமோகன் அவர்களும் குறிப்பிட்டு உள்ளனர்.

விளிம்பு நிலை மக்கள் பற்றிய ஆய்வுகள் பிரதான நெறியாக மேற்கிளம்பியுள்ள இக்காலகட்டத்தில் இத்தகைய ஆய்வு மிகவும் அவசியமான ஒன்றாக உணரப்படுகின்றது. இந்த ஆய்வு மூலம் மட்டக்களப்புச் சமூக அமைப்பில் வாழ்ந்த தமிழ் பேசும் வேடர்களின் வழிபாடு பற்றியும், குறிப்பாக குமாரதெய்வச் சடங்கு பற்றிய முழுமையான தெளிவும் அதன் ஆவணப்படுத்தலையும் இவ்ஆய்வு வெளிப்படுத்தும் எனலாம்.

## வேட வெள்ளாளர் சாதியினர் பற்றிய வரலாற்றுப் பார்வை.

இலங்கையில் பூர்வீகக்குடிகள் பல வாழ்ந்ததாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். அதில் “வேடர்” எனப்படுபவர்களும் அடங்குவர். இருப்பினும் இவர்களின் வரலாறு பற்றிய ஆய்வுகள்

பெரிதாக இதுவரையில் இடம் பெறவில்லை. சிங்கள மொழியில் சில ஆய்வுகள் தொகுப்பாக வெளிவந்துள்ளன. தமிழில் இதுபற்றிய கவனம் அதிகம் செலுத்தப்படவில்லை. இருப்பினும் திரு. செல்வராசா கோபால் “வேடர்” பற்றிய ஒரு நூலினை எழுதியுள்ளார். கலாநிதி யு. வி. தங்கராசா களுவன்கேணியை மையமாக வைத்து ஒரு ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டுள்ளார். பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் “ஈழத்துத் தமிழ் நாடக அரங்கில் மதகுருவே தெய்வமாக ஆடும் சமயச் சடங்கில் வேடரின் வழிபாட்டு முறை” பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

வேடர்களை விஜயன், குவேனியுடன் தொடர்புபடுத்தும் ஐதீகக் கதையும் உண்டு. குவேனியின் பிள்ளைகளே வேடர்கள் என்று இக்கதை கூறுகின்றது. “வேடர்” என்ற காரணப்பெயர் பெற்று ஏனையோருக்கு இன்று ஏளனப் பொருளாக உருமாறி விட்டனர். இருப்பினும் நாங்கள் விஜயனின் பிள்ளைகளின் பரம்பரையில் உருவானவர்கள் என்று கூறிக்கொள்வதில் வேடுவர்கள் பெருமையடைகின்றனர். விந்தனைப் பற்றிலும், களுவன்கேணிப் பகுதியிலும் இந்தக்கதையை நிரூபிக்கப் போதிய சாட்சிகள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

பொலநறுவை யுகத்தின் போது மகாபராக்கிரமபாகு மன்னன் தனது படைப்பிரிவில் வேடுவப் படையொன்றை வைத்திருந்ததாக மகாவம்சத்தில் குறிப்பிடப்படுகின்றது. இதிலிருந்த வேடுவர்கள் பராக்கிரமபாகுவின் இராச்சிய வீழ்ச்சிக்குப் பின்னர் மட்டக்களப்பு நோக்கி நகர்ந்திருக்கலாமென நம்ப இடமுண்டு.

நாடுகாட்டுப் பரவணிக் கல்வெட்டு, செல்லாபத்து வேடர்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. சீதவாக்கை நகருக்குப்போய் **நிலமை** - ஈறலையும், அவரது மனைவியையும், சனங்களுமாக நகருக்குத் திரும்பி செல்லாபத்து வழிப்பாதையில் செல்லும்போது ஒரு வேடுவிச்சி ஒரு பெண்பிள்ளையைப் பெற்று அநாதரவாக அவ்விடத்திலே போட்டுவிட்டுப்போக, அதை எடுத்து வளர்த்து முக்குவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கின்றார்கள். அவர்கள் 16 பெண்பிள்ளைகளைப் பெற்றார்கள் என்றும் அந்த சந்ததிகளுக்கூடாக வந்தவர்களே வேட வெள்ளாளர் என்றும் தகவல் உண்டு.

கள ஆய்வின் போது வேட வெள்ளாளர்களாக இனங்காணப்பட்டவர்கள் தங்களின் சந்ததியினர் வேடர்கள் என்றும் வேடர்கள் என்பது தாழ்த்தப்பட்ட சாதியென கருதப்பட்ட போது மட்டக்களப்பில் வெள்ளாளர்கள் எனப்படும் சாதியினர் உயர்வானவர்களாக கணிக்கப்பட்டிருப்பதை அவதானித்து தாங்களும் ஓர் உயர்ந்த அந்தஸ்த்தில் நோக்கப்பட வேண்டும் என்பதற்காக வேட வெள்ளாளர் என அழைக்கும் மரபை ஏற்படுத்தினோம் என்றும் கூறினர். (தகவல் தளவாய் திரு.க. காத்தமுத்து, வே. நாகன்)

களுவன் எனப்படும் ஒரு வேட பரம்பரை களுவன்கேணிப் பகுதியில் வாழ்ந்ததால் அப்பெயர் வந்ததாகவும், களுவன்கேணியை மையப்படுத்தியே ஏனைய அயல் கிராமங்களுக்கும் இவர்கள் ஊடுருவிக் குமார தெய்வத்தை வழிபட்டு வேட வெள்ளாளர்களாக வாழ்கின்றார்கள் எனவும் களுவன்கேணியைச் சேர்ந்த மாரியார் என்பவர் கூறினார்.(தகவல் க.மாரியார்)

சிங்கள மக்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த வேடர்கள் சிங்கள மொழியையும், தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதியில் இருந்த வேடர்கள் தமிழ் மொழியையும் பிற்பட்ட காலங்களில் கற்றுக்கொண்டு அவர்கள் சிங்களவர்களாகவும், தமிழர்களாகவும் மாறியிருப்பது கள ஆய்வின் போது அவதானிக்கத்தக்கதாக இருந்தது. வேடுவர்களுக்குரிய தனித்துவங்கள் இருப்பினும் அவர்களின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், நடைமுறைகள் இன்றுவரை பேணப்படுகின்றன. சிங்கள மொழி பேசும் வேடர்களுக்கும், தமிழ் மொழி பேசும் வேடர்களுக்கும் இடையில் பல ஒற்றுமையான பழக்கவழக்கங்கள் உள்ளன. இவற்றையெல்லாம் அவதானிக்கின்ற போது வேடர்கள் மட்டக்களப்பில் ஆதிக்குடியினராக இருந்திருக்க வேண்டும் என்பதும், வேட வெள்ளாளர்களாக இன்றைய சாதி அமைப்புக்குள் இருக்கின்ற வர்க்கத்தினர் வேடர்களின் பரம்பரை என்பதும் புலனாகின்றது.

## மட்டக்களப்பு மாவட்டத்தின் வேட வெள்ளாளர் வாழ்கின்ற இடங்களும், அவர்களது சமூக பொருளாதார நிலமைகளும்

மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட வெள்ளாளர் பின்வரும் கிராமங்களில் வாழ்கின்றனர்.

1) மட்டக்களப்பு (முகத்துவாரம்)
2) வேடர் குடியிருப்பு (குடியிருப்பு)
3) தளவாய்
4) களுவன்கேணி
5) சித்தாண்டி
6) கிரான்
7) சந்திவெளி
8) வாழைச்சேனை (கல்குடாப்பகுதி)
9) நாசிவன்தீவு
10) இரால் ஓடை
11) வாகரை
12) பொண்டுகன்சேனை
13) கோங்கனை
14) பால்ச்சேனை
15) திராய்மடு
16) வாகனேரி
17) முறுத்தானை

18) காயன்கேணி

19) கட்டுமுறிவு

20) பழுகாமம்

21) கொக்கட்டிச்சோலை (படுவான்கரைப் பகுதிகள்)

**மட்டக்களப்பு மாவட்டத்தின் வேட வெள்ளாளர் வாழ்கின்ற இடங்களை கீழ்வரும் விளக்கப்படம் காட்டுகின்றது.**



இங்கு வாழ்பவர்கள் வேடுவ வழிவந்த சந்ததியினர் என்று குறிப்பிட்டாலும் தற்போதைய நிலையில் பல சாதியினரின் கலப்பு இவர்களுக்குள் ஊடுருவி இருப்பதை அவதானிக்கலாம். இவர்களின் சமூகப் பொருளாதார நிலமைகளைப் பார்க்கின்ற போது இவர்கள் சமூக ரீதியில் மட்டக்களப்பின் பிரதான சாதியினராக இருக்கும் முக்குவர், வெள்ளாளர் போன்ற சாதியினருக்கும், அவர்களது அந்தஸ்த்துகளிலிருந்தும் தாழ்ந்தவர்களாக இருக்கின்றார்கள்.

இவர்கள் பண்பாட்டு ரீதியில் சில தனித்துவமான பண்பாட்டினை வைத்திருந்தாலும், சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டு ஊட்டாட்டம் காரணமாக ஏனைய சாதியினரின் பண்பாட்டிலிருந்து பெரிய மாறுபாட்டை இவர்களிடம் காணமுடிவதில்லை. இருப்பினும், முறுத்தானை, கோங்கானை போன்ற காடுகளை அண்டிய பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கிடையே பழைய வேடுவர்களுடைய பண்புகள் சில காணப்படுகின்றன. உதாரணமாக அவர்களது உடையமைப்பு, அவர்களின் வீட்டின் அமைப்பு, அவர்களுடைய முகபாவனைகள், அவர்களுடைய பேச்சு, அவர்களுடைய நடவடிக்கைகள் என்பன பழைய வேடுவர்கள் பற்றிய எண்ணக்கருவை நிரூபிப்பவனாக இருக்கின்றன.

இவர்களிடையே நிலவும் உறவுமுறைகள் இன்று மட்டக்களப்பில் வழக்கத்தில் உள்ள உறவு முறைகளை ஒத்தவையாக இருக்கின்றன. திருமண முறையிலும் மச்சான், மச்சாளை திருமணம் செய்தல் போன்ற பண்புகள் காணப்பட்டாலும் வேறு சாதிக்கலப்புக்களும் தவிர்க்க முடியாதவையாகவே இருக்கின்றன. பெண்பிள்ளை பூப்பெய்தல் சடங்கும், இறந்தவர்களுக்கு செய்யும் சடங்கும் இவர்களிடம் காணப்படுகின்றன. இதனை ஈமச்சடங்கென அழைப்பார்கள். இவர்களின் சமூக அமைப்பினை அவதானித்தபோது இவர்களிடம் குடிமுறையில்லை. இதனை "பரம்பரை" என்றே அழைக்கின்றனர். இதனை இன்று தளவாய், களுவன்கேணிப் பகுதிகளில் காணலாம்.

மேலும் களுவன்கேணியில் தந்தை வழிவந்த சந்ததியினர் தங்களது சந்ததியின் முதலாவது வாரிசின் பெயரைக்கொண்டு அந்த சந்ததியினரை அழைக்கும் முறையை கள ஆய்வின் போது அவதானிக்க முடிந்தது. அவை,

களுவப்பர் பரம்பரை
உக்குனுமார் பரம்பரை
கினுச்சர் பரம்பரை
பணிக்கர் பரம்பரை
கல்கொட்டவர் பரம்பரை
தேவக் குட்டியர் பரம்பரை
மாரியார் பரம்பரை

போன்றவை ஆகும். களுவன்கேணியில் தந்தைவழிப் பரம்பரைகள் ஏழு இனங்காணப்பட்டது. தளவாய்ப் பகுதியிலும் மேற்கூறிய தந்தைவழிப் பரம்பரையினரே செல்வாக்குச் செலுத்துபவர்களாக இருக்கின்றனர்.

முறுத்தானைப் பகுதியில் வேடர்கள் தங்களிடம் ஏழு வேட பரம்பரை இருப்பதாக குறிப்பிடுகின்றனர். இதில் ஐந்து பரம்பரையினைத்தான் தெரியும் என்றும் இரண்டு பரம்பரை பிற்பட்ட காலங்களில் அழிந்து போனதாகவும் கூறுகின்றனர். இப்பரம்பரை தந்தைவழி மரபையே காட்டுகின்றது. அவையாவன,

பணவள வேடர்
பட்டியடி வேடர்
செல்லாப்பத்து வேடர்
திருக்காக்கணி வேடர்
கட்டநூறு வேடர் (தகவல் முறுத்தானை திரு. த. வீமன்)

என்பனவாகும். எனவே, வேட வெள்ளாளர்களின் சமூக அமைப்பினில் தந்தை வழியே பிரதானமாக இடம்பெறுகின்றது. இவர்களது பொருளாதார நிலைமைகளை நோக்கும் போது இவர்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றவர்களாகவே இருக்கின்றனர். இவர்களது பிரதான தொழில் தற்பொழுது விவசாயம் மற்றும் மீன்பிடியாக இருக்கின்றன. விவசாயம் எனும்போது நெல் உற்பத்தி கவனத்தில் கொள்ளப்படுகின்றது. நெல்லுற்பத்தி என்னும் போது சொந்த வயல்கள் குறைவானதாகவே இவர்களிடம் இருக்கின்றன. கூடுதலானவர்கள் போடிமாரின் வேளாண்மைக்கு காவற்காரர்களாகவே இருக்கின்றனர். மற்றும் களுவன்கேணி, தளவாய்ப் பகுதிகளில் மீன்பிடித் தொழிலை அதிகமானவர்கள் செய்கின்றனர். முறுத்தானை பகுதியில் உள்ளவர்கள் பொந்துத்தேன் எடுக்கின்ற தொழிலைச் செய்து வருகின்றார்கள். விறகு வெட்டுதல், மீன்பிடித்தல், குடிசைக் கைத்தொழில் போன்றவைகளும் இவர்களின் தொழில் முயற்சிகளாக இருக்கின்றன.

இவர்களது சமூகப் பொருளாதார அபிவிருத்தியில் வெளிநாட்டு நிறுவனங்கள் கவனம் செலுத்திவருகின்றன. உதாரணமாக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross), ஒக்ஸ்பாம் (Oxfam), இநோறாட் (Norad), கேயார் (Care) போன்ற நிறுவனங்கள் மருத்துவ வசதி, குடிநீர் வசதி, மலசலகூட வசதிகள் போன்றவற்றை இவர்களுக்கு இலவசமாகச் செய்து உதவி நல்குவதைக் காணலாம்.

அரசின் சமுர்த்தி செயற்றிட்டம் இவர்களது பொருளாதார நிலைமைக்கு ஓரளவு கைகொடுக்கும் ஒன்றாக இருக்கின்றது. கல்வி அறிவு, சுகாதாரவசதி என்பவற்றைப் பொறுத்தவரையில் இப்பிரதேசங்கள் சிலவற்றில் குறிப்பாக பிரதான வீதியை மையப்படுத்திய கிழக்குத்திசையை நோக்கிய கிராமங்களில் இவ்வசதிகள் மிகக் குறைவாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். முறுத்தானை, கோங்கானை போன்ற இடங்களில் இவ்வசதிகள் கிடைக்கவில்லை. இது தொடர்பாக இலங்கை அரச நிருவாகமும் கவனம் செலுத்தவில்லை.

### வரலாற்றுப் பின்னணியில் குமார தெய்வத்திற்கும் வேட வெள்ளாளருக்குமான தொடர்புகள்

வேட பரம்பரைக்கூடாக வந்த வேட வெள்ளாளர் சமூகத்தினரின் பிரதான தெய்வம் குமாரராகும். “குமாரர்” என்பது புராணங்களில் பேசப்படும் “முருகன்” தெய்வத்தைக் குறிக்கின்றது. “குமாரன்” என்பது அழகு, இளமை என்ற அர்த்தத்தைத் தருகின்ற சொல்லாகும்.

மட்டக்களப்பில் தெய்வங்களைப் பொறுத்தவரையில் மூன்று வகையாக நோக்கலாம்.

1. ஆகம முறை சார்ந்த தெய்வங்கள்
2. ஆகம முறை சாராத மந்திர முறை சார்ந்த தெய்வங்கள்
3. வேண்டுதல் வழிபாட்டோடு தொடர்படைய தெய்வங்கள்.

வேடர்கள் தங்களது மொழியில் மேற்கூறிய முதலாவது வகைத் தெய்வத்தினை "தமிழ்க்கலைத் தெய்வம்" எனக் குறிப்பிடுகின்றனர். அத்தோடு இரண்டாவதாக குறிப்பிட்ட மந்திர வகையோடு தொடர்பான தெய்வ வணக்க முறையையும் வேடர்கள் "தமிழ்க்கலையென" குறிப்பிடுகின்றனர். இதில் பிள்ளையார், விஷ்ணு, சிவன், பார்வதி ஆகிய தெய்வங்களும் காளி, பேச்சி, நாச்சி, கண்ணகி, மாரி, திரௌபதி என்பனவும் அடங்கும். ஆனால் வேடர்கள் தங்களது வேடக்கலைத் தெய்வத்திற்கும் மேற்கூறிய தெய்வங்களிற்கும் இடையில் தொடர்பு இல்லையென குறிப்பிடுகின்றார்கள்.

வேடக்கலைத் தெய்வங்களாக இவர்கள் தங்களது தெய்வங்கள் அனைத்தையும் குறிப்பிடுவர். இவர்கள் இதனை "பன்னிரண்டாயிரம் பரிகலங்கள்" எனக் குறிப்பிடுவர். குமாரர், பத்தினியம்மாள், தெய்கிரியம்மாள், ஒட்டிப்பட்டு, ஓரப்பட்டு, இந்திமல்நாச்சி, தெவுத்தன் தெய்வம், மாறாத் தெய்வங்கள், செம்பகநாச்சி, கரடித்தெய்வம் எனப்பல தெய்வங்கள் இவர்களிடம் இனங்காணப்படுகின்றன. இவர்கள் தங்களிடம் கோடித்தெய்வங்கள் இருப்பதாகக் கூறுகின்றனர். இந்த அடிப்படையில் வேட வெள்ளாளர்கள் கூடுதலாக வேட கலைத் தெய்வங்களையே வழிபடுகின்றனர். இதில் குமாரர் இவர்களின் தலைத்தெய்வமாக (முதலாவது) விளக்குகின்றது.

புராணக்கதைகளில் வருகின்ற முருகன் எனப்படும். தெய்வமே வேட வெள்ளாளர்களால் குமாரர் என அழைத்து வழிபடுகின்றனர் என்பது தெரிகின்றது. வேடருக்கும் முருகனுக்குமான தொடர்பை ஸ்கந்த புராணத்தில் அவதானிக்கலாம். விஷ்ணுவின் மகளான வள்ளியும், தெய்வானையும் முருகனையடைய தவமிருந்ததாகவும், முருகனின் அருளால் தெய்வானை பூவுலகில் இந்திரனின் மகளாகவும், வள்ளி மானின் வயிற்றில் பிறந்து வேடர்களின் வளர்ப்பு மகளாக வளர்வதையும் ஸ்கந்த புராணத் தகவல்கள் காட்டுகின்றது.

இதில் வள்ளி மலைக்கருகில் வேடர்கள் வாழ்கின்ற பகுதியில் பெண் மானின் வயிற்றில் வள்ளிக்கிழங்கு பிடுங்கிய பின் உருவாகிய குழிக்குள் பிறந்து கிடந்தாள் என்றும் வள்ளி மலைப்பகுதியில் வேடர்கள் கூட்டமாக வாழும் சீரூர் என்று அழைக்கப்படும் ஊரினை ஆண்டுவந்த வேடுவத் தலைவன் நம்பிராஜனால் இவள் வளர்க்கப்பட்டாள் என்றும் வள்ளியை முருகன் திருமணம் செய்தமையால் வேடர்களுக்கு முருகன் மச்சானானான் என்றும் புராணக்கதைகள் கூறுகின்றன.

புராணக்கதையின் அடிப்படையில் மட்டக்களப்பிலுள்ள வேட வெள்ளாளர்களும் முருகன் எனப்படும் குமாரனை தங்களின் மச்சானாகக் கருதுகின்றனர். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு மட்டக்களப்பில் பிரசித்தி பெற்ற சித்தாண்டி முருகன் ஆலயத்தில் "மயில்கட்டு" எனும் திருவிழா நாளன்று வேடர்கள் தேன், திணைமா, இறைச்சி போன்றவற்றை கொண்டு வந்து அன்றைய நாள் நடக்கும் முருகனுக்கும் வள்ளிக்குமான திருமணப் பூசையில் கலந்துகொள்கின்றனர்.

இன்றுவரையும் இது நடைமுறையில் உள்ளது. முறுத்தானை, வாகரை போன்ற இடங்களில் வாழ்கின்ற வேடர்களும் இப்பூசைக்கு வருவதை அவதானிக்கலாம்.

சித்தாண்டி முருகன் ஆலயத்திற்கருகில் குமாரர் கோயில் ஒன்றுள்ளது. இந்தக் குமாரர் கோயிலுக்கும் முருகன் கோயிலுக்குமான தொடர்பு பற்றி அங்குள்ள மூதாதைகளிடம் வினவியபோது முதல் முதலாகக் குமாரர் கோயிலே அங்கிருந்ததாகவும் அது மிகமிகப் பழைமை வாய்ந்ததெனவும் பின்னரே அவ்விடத்தில் முருகன் கோயில் கட்டப்பட்டதாகவும் பிற்பட்ட காலங்களில் தான் முருகன் ஆலயம் சமஸ்கிருத மயமானதாகவும் கூறினார்கள்.

சித்தாண்டி முருகன் கோயிலுக்கு அண்மையிலுள்ள குமாரர் கோயில் பூசை கப்புகர் வழிவந்த வேட வெள்ளாளரினால் தான் நடத்தப்படுகின்றது. இது ஆகம முறையிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. இத்தகைய சான்று வேடர் வழிவந்த வெள்ளாளருக்கும் குமாரர் எனப்படும் தெய்வத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதை தெளிவாகக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்தில் நானிலத் தெய்வங்களுள் குறிஞ்சி நில மக்களுக்குரிய தெய்வம் “மலைவாணர்” என்று முருகன் குறிப்பிடப்படுகின்றான். மலைவாழ் மக்களுள் வேடர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இதனால் வேட வெள்ளாளருக்கும் குமார தெய்வத்திற்கும் தொடர்பு இருப்பதை ஊகிக்க இடமுண்டு. முருகனைப் போற்றும் கூத்தாகிய வாட வள்ளியும் குறிஞ்சி நிலப் பாடல்களும், பத்துப்பாட்டின் முதற்பாடக்கிய திருமுருகாற்றுப் படையும், பரிபாடலில் செவ்வேளை பற்றிய பாடல்களும், சங்க இலக்கியங்களில் முருகனைப் போற்றுவதாக இருக்கின்றது. இப்பாடல்களில் கூறப்படும் கருத்துக்களும் அதில் வெளிப்படுகின்ற விடயங்களும் மட்டக்களப்புக் குமாரர் தெய்வச்சடங்கு முறையில் வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

வீரயுக காலத்தில் (கி.மு 600) கரணம் சம்பந்தமாக நடைபெற்ற ஆடலில் வெறியாட்டு இருந்தமை பற்றி ஆய்வுகள் கூறுகின்றது. வெறியாட்டு என்பது நோய்தீர்ப்பதற்காக ஒரு தெய்வத்தை மனித உடலிலே வரச்செய்து அதன் மூலம் நோய் தீர்க்கும் கரணமாகும். இவ்வாட்டத்தில் கையில் வேலைக்கொண்டு கூத்தாடும் ஒருவன் வேலனென அழைக்கப்படுகின்றான். இங்கு பெரிய கூறல், கழங்கு பார்த்தல் என்பனவும் நடைபெறும்.

இந்த வெறியாட்டிற்கும் அல்லது வெறியாட்டத்திற்கும் குமாரச் சடங்கில் குமார சடங்கில் குமார தெய்வம் கப்புகனின் உடலில் குமாரராக உருவேறி ஆடும் முறைக்கும் தொடர்புண்டு. வீரயுகக் காலத்தில் இந்த வெறியாட்டு மரபு அக்கால இனக்குழுக்களிடம் இருந்தமை இலக்கிய ஆய்வுகள் மூலம் பெறப்படும் தகவலாகும். இதே போலவே இக்குழுவின் பரம்பரையாக வந்த வேடர் எனப்படும் வேட வெள்ளாளர்களும் குமாரருக்குச் செய்கின்ற சடங்கை வெறியாடல் போல நிகழ்த்துவது குமாரருக்கும் வேட வெள்ளாளருக்குமான தொடர்பைக் காட்டுகின்றது.

இன்று மட்டக்களப்பில் பிரபல்யமாக விளங்குகின்ற ஆலயங்களான அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் கோயில், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயில், மண்டூர் கந்தசுவாமி கோயில், சித்தாண்டி முருகன் கோயில், திருக்கோயில் முருகன் கோயில்

என்பவற்றின் வரலாற்றுப் பின்னணியைப் பார்க்கும் போது வேடர்களுக்கும் இக்கோயில் உருவாக்கத்துக்குமிடையில் ஒரு நெருங்கிய தொடர்பும் வரலாறும் உண்டு எனத் தெரிகின்றது. அமிர்தகழி, மாமாங்கப்பிள்ளையார் கோயிலில் வேடர்களே வேல் வைத்து வழிபாடு செய்ததாகவும்,பிற்பட்ட காலத்தில் இது பிள்ளையாராக மாறியதாகவும் ஐதீகக் கதைகள் உள்ளன.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோயிலும், மண்டூர் கந்தசுவாமிக் கோயிலும் இதைப்போன்று வேடர்களால் வேல் வைத்து வணங்கப்பெற்ற கோயில்கள் என்பதனைக் கர்ண பரம்பரைக்கதைகள் தெளிவுபடுத்துகின்றன. வெருகல் சித்திரவேலாயுத சுவாமி கோயில், திருக்கோயில் முருகன் கோயில் என்பனவும் வேடர்களால் வழிபாடு நடாத்தப்பட்ட பழைமை வாய்ந்த கோயில்களாகும். எனவே இவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்துப் பார்க்கின்றபோது ஆரம்பத்தில் வேடர்களின் வாழ்க்கை முறையே மட்டக்களப்பில் பல பாகங்களிலும் இருந்திருக்கின்றன என்பதும் இவ்வணக்க முறைக்கும் இன்று வேடவெள்ளாளர் மத்தியில் உள்ள வணக்க முறைக்கும் தொடர்பு இருப்பதோடு மட்டக்களப்பு வரலாற்றில் முக்கிய இடம் வேடவெள்ளாளர்களுக்கும், அவர்களது சடங்குகளுக்கும் இருக்கின்றன என்பதும் தெளிவாகின்றன.

**வேடர்கள் மத்தியில் இனங்காணப்பட்ட தெய்வங்களும் அவற்றின் இயல்புகளும், கையாளப்படும் சடங்கு முறைகளும்**

மட்டக்களப்பின் இனக் குழுமங்களில் வேடர்கள் அதன் வழிவந்த வேட வெள்ளாளர்கள் இனங்காணப்பட்டிருப்பிப்பினும் அவர்களது தெய்வங்கள், வழிபாட்டு முறைகள் போன்றன ஆராயப்பட்ட கனதி குறைவாகவே இருக்கின்றன. இந்தக் கட்டுரை வேடர் வழிவந்த வேடவெள்ளாளர் மத்தியில் இனங்காணப்பட்ட தெய்வங்களையும், அதன் இயல்புகளையும் அதற்குச் செய்யும் சடங்கு முறைகளையும் விளக்குவதாக அமைகின்றது.

**மட்டக்களப்பு சிறுதெய்வ வணக்க முறைக்குள் வேடர்களின் இடம்**

மட்டக்களப்பு வாழ் தமிழர்களிடையே நிலவுகின்ற தெய்வங்களையும், வழிபாட்டு முறைகளையும் நோக்குகின்றபோது இரண்டு வகையான பிரிவுகள் அவதானிக்கப்படுகின்றன. இதனைப் பெரும் தெய்வங்கள், சிறுதெய்வங்கள் எனப் பிரிப்பர். பெரும் தெய்வங்கள் என்பது மட்டக்களப்பு நகரை அண்டிய பகுதிகளில் ஆகமமுறை தழுவிய வணக்க முறைகளுக்குள் வரும் தெய்வங்களைக் குறிக்கும். சிறு தெய்வங்கள் மட்டக்களப்பின் கிராமப் புறங்களையும், காடுகளையும் அண்டிய பகுதியில் நிலவும் மந்திரத்தோடும், வேண்டுதல் வழிபாட்டோடும் தொடர்புடைய தெய்வங்களைக் குறிக்கும்.

மட்டக்களப்பில் மிகவும் பெரும்பான்மையான வணக்கமுறையாக சிறுதெய்வங்களுக்குச் செய்யும் வணக்கமுறையே கருதப்படுகின்றது. வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவு சிறுதெய்வச் செல்வாக்கை இங்கு காணலாம்.

இன்றைய மட்டக்களப்புச் சூழலில் சிறு தெய்வ வணக்க முறையாக இருக்கின்ற மந்திரங்களோடும், பூசாரியோடும் காவியங்களோடும் தொடர்புபட்டிருந்த மாரியம்மன், காளியம்மன், கண்ணகயம்மன், வைரவர், வீரபத்திரர் போன்ற பல தெய்வங்களும், அதன் வழிபாடுகளும் இன்று ஆகம முறைசார்ந்த குருக்கள்மாரிடம் சென்றிருப்பது அவதானிக்கதக்க

ஒன்று. இன்று மட்டக்களப்பில் பிரபல்யம் பெற்றிருந்த சிறுதெய்வ வணக்க முறைக்கு உட்பட்டிருந்த ஆலயங்கள் பல இன்று சமஸ்கிருதமயமாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

கொத்துக்குளத்து மாரியம்மன் கோயில், ஏறாவூர் வீரபத்திரர் கோயில், போரதீவு காளிகோயில், காரைதீவு கண்ணகியம்மன் கோயில், மகிழடித்தீவு கண்ணகி அம்மன் கோயில், கோட்டமுனை மாரியம்மன் கோயில் போன்றவை மரபுவழி வழிபாட்டு முறைகளைக் கைவிட்டு ஆகம முறையான பூசை முறைகளைக் கடைபிடித்தும் பூசாரியிடமிருந்து குருக்கள்மார்களின் செல்வாக்கிற்குள் உட்பட்டிருப்பதையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம். இத்தகைய போக்கு மட்டக்களப்பின் பழைமை, மரபு, தனித்துவம் என்ற போக்கை சிதைப்பதாக இருக்கின்றது. இருப்பினும் இன்றைய மட்டக்களப்பின் சமூக அமைப்பில் பழைமை, மரபு, தனித்துவம் என்பன பேணப்படும் வழிபாட்டு முறைகளாகவும் சிறுதெய்வங்களாகவும் இருப்பது வேடர்கள் மத்தியில் நிலவும் தெய்வங்களும் வழிபாட்டு முறைகமே ஆகும்.

மட்டக்களப்பு என்று சொன்னதும் மந்திரவித்தான்மை எவர் மனதிலும் முதல் தோன்றும், இச்சிறு தெய்வங்களை மந்திரத்தில் உச்சரித்து கட்டுதல், வெட்டுதல் போன்ற பல நடைமுறைகளையும், சூனியம் செய்தல், வளவைக் காவல்பண்ணல், களிப்புக்கு செய்தல் போன்றவற்றின் அடிப்படை மூலமாகவும் மந்திரமே விளங்குகின்றது. ஆனால், இச்சிறுதெய்வங்களின் வரிசையில் இனங்காணப்பட்ட வேடர்களின் தெய்வங்களும் , அதன் வணக்கமுறைகளும் வித்தியாசமானவை. இங்கு மந்திரமோ, கட்டுதல், வெட்டுதர், சூனியம் செய்தல் என்கின்ற விடயங்களோ இவர்களிடம் இல்லை. இவர்கள் தெய்வத்தை மன்றாடி கூப்பிட்டு தமது உடலில் வரவழைத்து தெய்வமாக உருமாறி ஆடி தெய்வவாக்கு சொல்லும் முறைமையை தமது வழிபாட்டு முறையாகக் கருதுகின்றனர். இதனை “வேண்டுதல் வழிபாடு” எனவும் அழைப்பர்.

இத்தகைய சிறுதெய்வ வழிபாட்டு முறைக்குள் அடங்கியுள்ள வேடர்களும், அவர்களது வழிபாட்டு முறைகளும் மட்டக்களப்பின் பாரம்பரிய வழிபாட்டு முறைகளுள் முக்கியமாக பேணப்பட வேண்டியவை. மட்டக்களப்பின் வரலாற்றில் மிகவும் பழமையான வழிபாட்டு முறையைக் காட்டும் நிகழ்வுகளாக வேடர்களின் மத்தியில் உள்ள தெய்வங்களும் வழிபாட்டு முறைகளுமே இருக்கின்றன.

இத்தகைய செல்வாக்குடைய வேடர்களும், அவர்களது தெய்வங்களும், வழிபாட்டு முறைகளும் வேடர்களது தொழில் முறைமையோடும் அவர்களது சமூக நடைமுறையோடும் தொடர்புபடுகின்றது. தொழில்ரீதியாக அவதானிக்கும்போது வேட்டையாடுதல், அதன் பண்புகளுக்கும் ஏற்ப குமார கலைகளை வேடருக்குரிய தெய்வமாக அழைப்பர். இதனை காட்டுத் தெய்வம் என்று அழைக்கும் வழக்கம் இப்பொழுதும் இவர்களிடம் உண்டு.

தேனெடுத்தல் என்பது இவர்களது பிரதானமான தொழிலாகும். இதற்காக இவர்கள் மாறாத் தெய்வங்களை குறிப்பாக, தேன் பூச்சி மாறாவை அழைப்பதும், மந்தை வளர்ப்பை பிரதானப்படுத்தி வதனமாறா தெய்வத்தை அழைப்பதும் வழக்கம். கரடித் தெய்வமும் பணிக்கமாறா எனும் தெய்வமும் ஆனைகட்டுதலோடும் தொடர்புபடுகின்றது. இவை அனைத்தையும் அவர்கள்

வழிபடுவதனால் தொழில் நன்கு நடைபெறும் என்று தொழிலுக்கு போகும் போது எந்த இடையூறும் வராது என்றும் இவர்கள் நம்புகின்றனர்.

இதே போன்று சமூகரீதியாக நோயின்றி வாழுதல், வீட்டில் அமைதி நிலவுதல், பாதுகாப்போடு இருத்தல், எதிர்ப்புக்களை வெல்லுதல் என்பன இத்தெய்வங்களின் கருணையினால் நிகழ்வன என்ற நம்பிக்கையும் இவர்களிடம் இருக்கின்றன. இத்தகைய சமூகம் நோக்கிய தேவையோடு வேடர்கள் தங்களது தெய்வங்களை போற்றி, ஆதரித்து அதற்கு சடங்கு நடத்துவது இன்றுவரை பரம்பரையாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.

**வேடர்களிடையே இனங்காணப்பட்ட தெய்வங்களும் அதன் இயல்புகளும்**

வேடர்களிடையே பல தெய்வங்கள் இருப்பதைக் காணலாம். இதனை வேடகலைத் தெய்வங்கள் அல்லது காட்டுத் தெய்வங்கள் என அழைக்கும் மரபே காணப்படுகின்றது. இத் தெய்வங்கள் அனைத்தும் ஆண் தெய்வங்களாகவும், பெண் தெய்வங்களாகவுமே இருக்கின்றன. இவர்கள் பல்லாயிரம் தெய்வங்கள் தங்களிடம் இருப்பதாக குறிப்பிடுகின்றனர். இருப்பினும் கள ஆய்வின்போது பின்வரும் தெய்வங்களே இனங்காணப்பட்டன. அவற்றை விளக்குவதன் வாயிலாகவும் வேடகலை தெய்வங்கள் பற்றி அறிந்து கொள்ள முடியும்.

**குமாரகலை தெய்வங்கள்:**

இதுவே இவர்களது தலைத்தெய்வம், குமாரகலைகள் ஆதிக்குமாரர், கொம்புக்குமாரர், அழகுக்குமாரர், கண்டிக்குமாரர், புள்ளிக்குமாரர், காலிக்குமாரர் எனப் பிரித்து வருவதாக குறிப்பிடுகின்றனர் கண்டி, காலி, கொழும்புக் குமாரர்கள் அவ்விடங்களில் இருந்து இவர்களிடம் வருவதாகவும் நம்புகின்றனர். குமாரர் காட்டைக் காப்பவனாகவும் வேட்டைக்கு உதவுபவனாகவும் அனைத்து வேடத் தெய்வங்களையும் கட்டுப்படுத்துபவனாகவம் கருதப்படுகின்றான். குமாரர் அவரது சடங்கு பற்றி விரிவான தகவல் மூன்றாம் அத்தியாயத்தில் இடம் பெறுகின்றன.

**கடல் பகுதி கலைகள்:**

மாணீலி, குடாணீலி, அயோத்தியா, குருவிலி, மறமுந்த, ஒந்தமலைக்காரி, ஓட்டிப்பாட்டு, ஓறம்பட்டு, நளப்பட்டு, குறப்பட்டு , சிறியபாப்பட்டு, வில்லப்புப்பட்டு, மூடப்பட்டு, துள்ளாட்டுக்காரி, அக்கால தொன்னாந்து, நங்கிலதென்னாத்து, ஆமாலகாரி, இந்திமலுநாச்சி, முதுமனுநாச்சி, கிக்குறும்புமனு, எரிக்கலேயம்பூமனு, உடந்தாவளமனு, (திராய்) பன்னத்தாவள், அந்தும் குமாரி,) (அந்தும் குமாரியை குமாரின் தாயாகக் கருதுகின்றனர்)

வேட வெள்ளார்களின் கடற் தொழிலோடு, தொடர்புபடுத்தும் வகையில் கடல் ஆபத்துக்களில் இருந்து தங்களை இத்தெய்வங்கள் காப்பாற்றும் என்றும், இவை கடற்பகுதியில் கப்பல்களில் நடமாடும் என்றும் மீன்கள் இருக்கும் இடத்தைத் தங்களுக்குத் தெரிவிக்கும் என்றும் நம்புகின்றனர். இவை மிகவும் ஆபத்தான தெய்வங்களாகக் கருதுகின்றனர். மேலும் கொடிய நோய்களோடு இத்தெய்வம் தொடர்புபடுவதனால் இவற்றை வழிபடுவதன் மூலம் நோய்களில் இருந்து தப்பமுடியும் என்ற நம்பிக்கையின் விளைவாக இத்தெய்வங்களைப் போற்றுகின்றனர்.

இத்தெய்வங்கள் ஒரு சந்ததியின் பரம்பரைகள் என்றும் இதில் அந்தும்குமாரியும், மாணீலியுமே கடல்பகுதி தெய்வங்கள் என்றும் இதில் இருந்து பிரிந்தவைகளே மேற்கூறியவைகள் என்றும் குறிப்பிடுகின்றனர். இத் தெய்வங்கள் வில்,அம்பு எடுத்து கடற் பகுதியால் விளையாடி

வரும் என்றும் மணல்காட்டு வேடர்களே இதனைக் கூடுதலாக ஆதரித்து வந்திருந்தனர். இது கப்பலில் வரும் என்ற நம்பிக்கையினால் இதனை கப்பல் தெய்வம் என்றும் அழைக்கும் போக்கு இவர்களிடம் நிலவுகின்றது.

இவற்றில் சில பறவைகளின் வடிவில் வருவதாகவும் சிலர் குறிப்பிட்டனர். இது வரும் வழியில் சிறுபிள்ளைகள் குறுக்கிட்டால் அப்பிள்ளைகளுக்கு கொடிய நோய்களை கொடுத்துவிட்டுச் செல்லும் என்றும் இது ஏற்படுத்தும் நோய்களை குமாரர்தான் தீர்க்க வேண்டும் என்றும் குறிப்பிடுகின்றனர். இவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது நோய்க்கும், துன்பத்திற்கும் பயந்து இவற்றை தெய்வமாகப் போற்றியிருக்கின்றார்கள் என்பது தெரியவருகிறது.

**மாறாத் தெய்வங்கள்**

மாறாத் தெய்வங்கள் இவர்கள் மத்தியில் பின்வரும் கலைகளாக இனங்காணப்படுகின்றன. இவை தோறணமாறா, தேன்பூச்சி மாறா, புளியம் புள்ளி மாறா, கித்துள் மாறா, கித்துள் பெனி மாறா, எளிந்திரு மாறா, பனிக்க மாறா, வதன மாறா என்கின்ற தெய்வங்கள் மாறாத் தெய்வங்களாக கருதப்படுகின்றன. இது இவர்களது தொழில் முயற்சியோடு தொடர்புடைய தெய்வங்களாகும். தேனெடுத்தல், ஆனை கட்டுதல், மாடு பிடித்தல் என்பவற்றுக்கு இந்த மாறாத் தெய்வங்கள் உதவுகின்றன என கருதுகின்றனர். இத்தெய்வங்கள் இவர்களுக்கு எந்தத் தீமையும் செய்யாத தெய்வங்கள் என்றும் இவை இவர்களுக்கு நன்மையான காரியங்களைச் செய்யும் தெய்வங்கள் என்றும் கருதுகின்றனர்.

**தெவுத்தன் தெய்வம்:**

தெவுத்தன் தெய்வங்களின் வருகை புள்ளிக்காரன் என்ற தெய்வத்தோடு தொடர்புபடு கின்றது. புள்ளிக்காரன் தெவுத்தன் கலையின் முதலாவது தெய்வம். இது பின்வரும் கலைகளாக வரும். பானங்காவல தெவுத்தன், குருமுகுந்த தெவுத்தன், குருநாகல தெவுத்தன், பொல்லுக்காரன், மாத்தள தெவுத்தன், பொம்பல் தெவுத்தன், கல்லால தெவுத்தன், புள்ளி நாச்சி, கருத்தானியன் போன்றன. தெவுத்தன் தெய்வத்தின் இயல்பு நோயைக் குணப்படுத்துதலாகும். இது பக்தர்களுக்கு ஏற்படுத்தும் நோய்களை இனங்கண்டு, நோய் உள்ளவர்கள் எனக் கருதப்படுபவர்களை அழைத்து தனது கையில் இருக்கும் வேல் பொல்லு, தென்னம்பாளை என்பவற்றால் அமர்த்தி முகத்துக்குத் தண்ணீர் அடித்து “நோய் தீரும்” என்று சொல்லி நூல் கட்டி விடும். இத்தெய்வங்களால் நோய் குணமடைந்தோர் எனக் கருதப்படுவர்கள் நேர்த்தியாகக் கொடுக்கும் பொருட்களை வாங்கி அவ்விடத்திலே பாவனைப்படுத்தி ஆடிச்செல்லும் இது பார்ப்பதற்கு சுவாரசியமாக இருக்கும்.

**நாச்சிமார் கன்னிமார்:**

நாச்சிமார், கன்னிமார் எனப்படுபவர்கள் பெண்களுக்கு ஏற்படும் நோய்களோடு தொடர்புடையவர்கள். பெண்களின் கருவளத்தோடு சம்பந்தமான நோய்கள் என்பனவற்றில் கூடியளவு தொடர்புபடும் தெய்வங்களே இவைகளாகும். இவை பின்வரும் கிளைகளாக இனங்காணப்பட்டன.

செண்பக நாச்சி, இந்திமல் நாச்சி, தெய்யாநாச்சி, முத்துமள் நாச்சி, நாமன் நாச்சி, போமல்நாச்சி, எனவும் கன்னியராக செம்புக்கன்னி, செந்தாமரைக்கன்னி, வில்லுக்கன்னி, விசாரக்கன்னி, கடற்கன்னி, குளக்கன்னி, அக்கினிக்கன்னி, சக்கரக்கன்னி. குங்குமக்கன்னி, கயாங்கன்னி, மொக்காட்டுக்கன்னி எனப் பிரிவுபட்டு வருவன. இவற்றின் நோக்கம் குறிபார்த்து பிரச்சினைகளைச் சொல்லுதல். இந்த தெய்வத்தினை கப்புகா் வில்லில் அழைத்து பக்தர்களுக்கு உள்ள பிரச்சினையைக் கேட்டால் அந்தப் பிரச்சினை தொடர்பான விளக்கத்தை இந்த நாச்சிமாரும் கன்னிமாரும் கப்புக்கருக்குச் சொல்லுவர். இப்பிரச்சினை எந்த தெய்வத்தால் வந்தது. இப்பிரச்சினையைத் தீர்க்க எந்த தெய்வத்தை நாடவேண்டும் என்பதை இந்த நாச்சிமார், கன்னிமாருமே சொல்லுவர் என்று நம்புகின்றனர்.

**மொட்டாக்கு தெய்வம்:**

இவை மிகவும் பயங்கரமான தெய்வங்களாகும். ஆட்களின் உயிரைக்கூட கொல்லும் வல்லமை இத்தெய்வங்களின் பார்வைக்கு இருப்பதாக நம்புகின்றனர். பல அதிர்ச்சி மிகுந்த நடவடிக்கையை இந்தத் தெய்வங்கள் செய்யும். கொதிக்கும் எண்ணைக்குள் கையை விட்டு பலகாரத்தை வடித்தல் என்ற நிகழ்வு குறிப்பிடத்தக்கது. இத்தெய்வங்கள் இன்று வேடர்கள் மத்தியில் வீடுகளில் வைத்து வழிபாடு செலுத்தப்படுவதை அவதானிக்கலாம். இத்தெய்வம் இருக்கும் வீட்டில் எந்த தீய சக்தியும் அணுக முடியாது. தீய சக்திகளின் செயல்கள் இத்தெய்வத்தினால் அழிக்கப்படும். இத்தெய்வத்தை எதிர்பபவர் கொடூரமான நோய்க்கு ஆளாகி இறக்கக்கூட நேரிடலாம் என்று குறிப்பிடுகின்றனர். இந்த தெய்வங்கள் கல்லத்தாவிலி கிரியம்மா, கொல்லாத்தாவிலி கிரியம்மா, தெல்கிரியம்மா, அடலங்கா தெல்லம்மா, மாகப்புறா, குடாகப்புறா, மறமுந்தா என்பனவாகும்.

**பெரியசாமி :**

வேடர்கள் வைரவரை பெரியசாமி எனக் கருதுகின்றனர். வயல்களையும், குடிமனைகளையும், கடலை, பட்டியடிகளையும் (மந்தை வளர்ப்பிடம்), பல சேனைகள் என்பனவற்றைக் காவல் செய்பவராக இவரைக் கருதுகின்றனர். இவர் சுடலை வைரவர், கெங்க வைரவர், சுடலை காளி, கொங்காளி, நரசிங்க வைரவர், ஆதி வைரவர் என்பனவாறு உருமாறி வருவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

**பட்டாணி :**

இது முஸ்லிம் இனத்தவரோடு தொடர்புடையது. இதனை மொக்காட்டுத்தெய்வம் என்றும், வறாகி கலை எனவும் குறிப்பிடுகின்றனர். இது முஸ்லிம் இனத்தவரின் பாடலுடன்தான் ஆடிவருகின்றது. இதன் பாடல் அடி

"அல்லால...... கில்லல்லா, மோதிலா" என்ற வசன அயில்தான் பாடுகின்றனர்.

இது முஸ்லிம் இனத்தவர் வேட கலையில் நம்பிக்கை கொண்டபோது அவர்களுக்காக உருவாக்கப்பட்டது என்ற கருத்தும் இவர்களிடம் இருக்கின்றது. இதனைத் தெவுத்தன் கலையுடன் தான் வைக்கின்றார்கள். இது கப்புகரில் முறப்பட்டு முஸ்லிம் இனத்தவர் தொடர்பான பிரச்சினைகளையும், நோய்களையும் தீர்த்துவைக்கும் என்று நம்புகின்றனர்.

இவை தவிர பல தெய்வங்கள் இவர்களிடம் இருந்ததாகவும் இவர்களது, முன்னைய சந்ததிகள் இத்தெய்வங்களை வைத்திருந்ததாகவும் இவர்கள் இறந்தற்குப் பிறகு அத்தெய்வங்கள் சில சடங்கில் இனங்காணப்படுவதில்லை என்றும் அவை அவர்களோடு மறைந்து போயிற்று என்றும் கூறுகின்றனர். மேற்கூறிய தெய்வங்கள் அனைத்தும் கள ஆய்வின் போது இனங்காணப்பட்டன. இவை மட்டக்களப்பில் சிறு தெய்வங்கள் பற்றிய ஆய்வில் முழுமையாக ஆராயப்படாதவைகளாகும்.

**வேட தெய்வங்களுக்குரிய கோயில்களும் செய்யப்படும் சடங்கு முறைகளும்**

வேட கலைத் தெய்வங்களைப் பொறுத்தவரைக்கும் கோயில் கல்லால் கட்டப்பட்டது அல்ல. மரங்களாலும், இலை குழைகளாலும் அலங்கரிக்கப்பட்ட சிறு பந்தல்களே வேடர்களின் தெய்வங்கள் வாழும் இடமாக இருக்கும். இத்தெய்வங்கள் பெரிய கல் கட்டிடத்தில் வாழ்வது இல்லையென்ற நம்பிக்கையும் இவர்களிடம் உண்டு இதனால் இவர்கள் கற்கட்டிடத்தை விரும்பவில்லை. கற்கட்டிடம் இல்லாத காரணத்தினாலேயே இது பிரபல்யம் பெறவில்லை. இருப்பினும் இன்று மட்டக்களப்பில் சில குமாரர்களுக்குரிய பந்தல்கள் நேர்த்தியை நிறைவு செய்யும் முகமாக கல்லால் கட்டப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாலயங்கள் வேடர்கள் கூட்டமாக வாழ்கின்ற பகுதியில் ஆலயத்திற்கு என்று ஒதுக்கப்பட்ட ஒரு இடத்தில் அமைந்திருக்கும். எல்லா வேடர்களுக்கும் பொது ஆலயம் ஒன்று இருக்கும். இது பெரும்பாலும் குமாரரைத் தலைத் தெய்வமாகக் கொண்ட ஆலயமாகவே இருக்கும். இது தவிர வீடுகளில் வைத்து ஆதரிக்கும் தெய்வங்களும் இவர்களிடம் இருக்கின்றன. குமார தெய்வச் சடங்கு மூன்றாவது அத்தியாயத்தில் விளக்கப்படுவதால் இது வீடுகளிடம் வைத்து ஆதரிக்கும் தெய்வங்களை பற்றிய விபரங்களை தருவதாக இப்பகுதி அமைகின்றது.

ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட இம்மாவட்டத்தில் வேடர்கள் மத்தியில் இன்றுவரை சில தெய்வங்களை தாங்கள் இருக்கும் வளவிற்குள் ஒரு பகுதியில் தெய்வங்களுக்கு என சிறு பந்தல்(குடில்) அமைத்து அதற்குள் தங்களது குலதெய்வங்களை வைத்திருப்பதாக கூறுகின்றனர். இது ஆகம முறைக்கு முற்றிலும் எதிரான போக்கிலே இருக்கின்றது. ஆலயம் அமைந்திருக்கும் இடத்தில் புலால் உண்ணுதல், பிணம் கொண்டு போதல், பெண்கள் எல்லா நேரங்களிலும் அனுமதிப்பதில்லை போன்ற விடயத்துவங்கள் இவர்களிடையே கருத்தில் கொள்ளப்படுவதில்லை. இறைச்சி, மீன் உண்ணுதல், மீன்வெட்டுதல் எல்லாம் ஆலயத்திற்கு பக்கத்தில் இடம்பெறுகின்றது. இது மட்டக்களப்பில் இனங்காணப்பட்ட பல வழிபாட்டு முறைகளை கேள்விக்குள்ளாக்கும் நடைமுறையாகக் கருதப்படுகின்றது. இத்தகைய பின்னணியில் தான் வேடர்களின் தெய்வங்களும் அதன் அமைவிடமும் இருக்கின்றன.

அவர்கள் ஆண்டுக்கு ஒரு முறை தங்களது தெய்வங்களுக்கு சடங்கு செய்கின்றனர். இச்சடங்கு குமாரருக்குச் செய்யும் சடங்குமுறை போன்று இருப்பினும் அவர்கள் வைக்கின்ற மடைகளில் பூ, காய், கனி, உணவுப் பண்டங்களில் நிறைய வேறுபாடு காணப்படுகின்றது. பூசை முறையிலும் சிறிது வேறுபாடுகளைக் காணலாம். இந்த ஆய்வின் போது என்னால் அவதானிக்கப்பட்ட சில சடங்குகளை உதாரணங்காட்டி இதனை விளக்கலாம் என நினைக்கின்றேன்.

கொம்பர் சுப்பிரமணியம்(வயது 67) இவர் வேட வழிவந்த சமூகத்தினைச் சேர்ந்தவர். இவர் களுவன்கேணி எனும் கிராமத்தில் தனியே உத்தியாக்களை வழிபடும் போக்கை மட்டும் வைத்திருக்கின்றார். இவர் குறிப்பிடும் போது "எனக்கு ஒன்றும் தெரியாது நான் எனது மூதாதைகளான "செடிவாங்கிகளை (இறந்தவர்களை) அழைத்து அவர்களிடம் கேட்டே பக்தர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்க்கின்றேன். செடிவாங்கிகளான எனது மூதாதைகள் (உத்தியாக்கள்) என்னில் முற்பட்டு அதற்கான விளக்கத்தையும் தருகின்றனர் என்று கூறுகின்றனர்" எனக்கூறினார். இதில் அவர் செடிவாங்கிகளான மூதாதைகள் விரும்பி உண்ணும் உணவுப் பண்டங்களையும், குடிபானங்களையும் வைத்து (பாட்டு)

"இந்தா பெடியப்பா கமகமதோ இனியதே முறுத்தானை
சாரணி பொடிசிங்க கப்புகா.......வா.....வா..
சங்கடவே..... சங்கடவே..... யப்பானே யப்பானே
இருஙாறே வெல்லிச்சே வெல்லங்கிரியே வாடி வா.....வா...."

என்று பாடி கொட்டு அடிக்க அவர்கள் இவரிடம் வருவதாகவும் அவர்களுக்கு மதிப்பளித்து அவர்களின் ஆசீர்வாதத்தில் வாழ்கின்றேன். எனக்கு வேடக்கலை தெய்வங்கள் உதவினாலும் அதனை என் மூதாதைகளே அவர்களிடம் இருந்து வாக்குதலைப் பெற்றுத் தருகின்றார்கள் என்று குறிப்பிடுகின்றார். இவரது இந்த வழிபாட்டு முறை மூதாதைகளுக்கு மதிப்பளிப்பதோடு மட்டக்களப்பில் இறந்தவர்களுக்கு கோயில் வைத்து வழிபடும் ஒரு புதிய வழிபாட்டு முறையை அறிமுகப்படுத்துவதாக இருக்கின்றது.

களுவன்கேணியில் ராசமணி (வயது 67) இவர் பெண் மொட்டாக்கு தெய்வத்தை தனது வீட்டின் அருகில் சிறிய பந்தலை அமைத்து ஆதரித்து வருகின்றார். இவர் காட்டுப்பூ, குளத்துப் பூ போன்றவற்றைக் கொண்டு மடைவைத்து பலகாரத்தை தெய்வமே எண்ணெய்க்குள் போட்டு கையால் வடித்து மடையில் வைக்கும் நிகழ்வு இந்த ஆலயத்தில் இடம்பெறுகின்றது. இந்த பெண்ணில்தான் தெய்வம் முற்படுகின்றது. இவருக்குக் கல்லத்தாவிலி கிரியம்மா, பொல்லத் தாவிலி கிரியம்மா என்ற இரு தெய்வம் தான் கூடுதலாக முற்படும் என்றும் இத்தெய்வத்தின் மூலமாக தன்னிடம் வரும் மக்களின் நோய் பிணிகள் தீர்ப்பதாகக் குறிப்பிடுகின்றார். இந்த தெய்வத்தை அழைக்கும் போக்கு ஆரம்பகால வேடர்கள் மத்தியில் நிலவிய வழிபாட்டுடன் ஒத்தாக இடம்பெறுவதும், அன்று வரை இச்சடங்கை நிகழ்த்தி வருவதும் குறிப்படத்தக்கது.

களுவன்கேணியை சேர்ந்த பால்குடியார் (வயது 85) இன்று வரை தனது வீட்டில் மொட்டாக்கு தெய்வத்தின் கிளைகளான மாகப்புறா, குடாகப்புறா என்ற தெய்வத்தை வைத்து சடங்கு செய்து வருகின்றார். இவரே களுவன்கேணியில் இருக்கும் மிகப் பழமையான வேடர் குடியில் இருந்து வந்தவர். இவர் சடங்கில் இவரினால் நோய் குணப்படுத்தப்பட்டவர்கள் என்று கருதிய 100க்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து கலந்துகொண்டதை அவதானிக்க முடிந்தது. களுவன்கேணியில் இருந்து மட்டுமல்ல பல ஊர்களிலும் இருந்தும் இவரது சடங்கிற்கு பக்தர்கள் வந்திருந்ததையும் அவர்கள் நேர்த்தியாக பல பொருட்களைக் கொண்டு வந்ததையும் அவதானிக்க முடிந்தது.

இவரது சடங்கின் சிறப்பு என்னவெனின் இவரே ஆதி வேடர் மாதிரி தனது உடல் அமைப்பை கொத்து குழைகளால் கட்டி எந்தத் துணியும் இல்லாமல் உடம்பைக் குழையினால் மறைத்துக் ஆடி ஆடி வாக்கு சொல்வதையும்,உரட்டி சுடும் ஒரு வித்தியாசமான முறையையும் அவதானிக்க முடிந்தது. உரட்டியை நன்கு அகலமாக சுளகில் வைத்து தட்டை ஆக்கி ஓர் இடத்தில் கட்டைகளைப் போட்டு தீயை மூட்டி மண்டாடாமல் தீ மூடப்பட்ட இடத்தில் மண்ணைன் கையால் கிண்டி உரட்டியை அவ்விடத்தில் வைத்து மூடி பின்னர் அவ்விடத்தில் மீண்டும் தீக்கட்டையைப் போட்டு எரித்து உரட்டி நன்கு வெந்ததும் மீண்டும் மண்ணைத் தோண்டி எடுத்து கம்பில் உரட்டியைக் குத்தி கற்பூரத்தை அதில் வைத்து எரித்து அதை கையில் குடை பிடிப்பது போன்று பிடித்து ஆடி வருவார். இது ஒரு புதுமையான நிகழ்வாகவே இருக்கின்றது.

களுவன்கேணியைச் சேர்ந்த கிட்ணப்பிள்ளை (வயது 60) இவர் குமாரையும், நாச்சிமார் கன்னிமாரையும் வைத்து வழிபாடு செய்கின்றார். இவர் செண்பகநாச்சி என்ற தெய்வத்தின் கூடாக குறிபார்த்தல், நோய் குணப்படுத்தல் போன்ற காரியங்களை செய்கின்றார். இவரைப் போன்று காத்தமுத்து சின்னத்தம்பி (வயது 63) பதின்மூன்று வேடகலைத் தெய்வங்களைத் தனது பந்தலில் வைத்து ஆதரிப்பதாக குறிப்பிடுகின்றார். எந்தநேரம் அழைத்தாலும் தன்னிடம் இத்தெய்வங்கள் வருவதாக குறிப்பிட்டார். குமாரருக்கு செய்யும் சடங்கை போன்றே இவரது சடங்கும் நடைபெறுகின்றது.

நாகன் வேலுப்பிள்ளை (வயது 55) இவர் கற்குடா பட்டியடிச்சேனை என்னுமிடத்தில் வாழ்பவர். இவர் தனது வீட்டின் பக்கத்தில் வேடகலைத் தெய்வங்களை வைத்து ஆதரிக்கின்றனர். இவரது சடங்கு பழைய வேடகலைத் தெய்வத்திற்கு செய்யும் சடங்கினை ஒத்ததாக இருக்கின்றது. குமாரகாவியம் இவரது சடங்கில் படிக்கப்படுகின்றது. சந்திவெளி என்னும் ஊரில் குமாரர் ஆலயம் இருக்கின்றது. இது வீடுகளில் அல்லாமல் காட்டை அண்டிய பகுதியில் இருக்கின்றது. இதில் வடிவேல் என்னும் கப்புகர் சடங்கை நடத்துபவராக இருக்கின்றார்.

கிரான் என்னுமிடத்தில் பல குமாரர் ஆலயங்கள் இனங்காணப்படுகின்றன. சித்தாண்டியில் நாகப்பன் (வயது 71) குமாரகலைகளை ஆதரித்து வருகின்றார். உக்குவணன் கந்தையா (வயது 68) சேனை (சந்தண மடு ஆற்றுக்கு அருகில்) உள்ள வயல் பிரதேசத்தில் வாடியில் வாழ்பவர். இவரது தாய் வள்ளிப்பிள்ளை, வள்ளிப்பிள்ளையின் தகப்பன் அப்புகாமி என்றும் இவர்கள் ஆரம்பத்தில் காநாந்தனையில் வாழ்ந்து தற்பொழுது விவசாயம் செய்வதற்காக இங்கு வாழ்கின்றனர். இவர் இவரது தாய் தந்தையர் அவர்களின் தாய் தந்தையர் ஆதரித்த தெய்வங்கள் அனைத்தையும் அழைக்கின்றார். இவரது சடங்கில் முக்கிய நிகழ்வு குமாரருக்கு இறைச்சி, தேன் வைக்கின்ற நிகழ்வாகும்.

எனவே இவற்றை எல்லாம் ஒருங்குசேர்த்து பார்க்கின்றபோது மட்டக்களப்பின் ஆரம்ப வரலாற்றில் வீடுகளே கோயில்களாக இருந்திருப்பதும் புலனாகின்றது.

**குமார தெய்வச் சடங்கு:**

மட்டக்களப்பு பாரம்பரிய வழிபாட்டு முறைகளுள் குமார தெய்வ வழிபாடு அடங்கும். இது இம்மாவட்டத்தில் வாழ்கின்ற வேடர்களின் பரம்பரையில் இருந்து வந்த வேட வெள்ளாளர் மத்தியில்

நிலவும் பிரதான வழிபாட்டு முறையாகும். இவ்வழிபாடு சடங்காகவே நிகழ்த்தப்படுகின்றது. இச்சடங்கு குமார தெய்வத்தோடு மட்டும் இத்தெய்வங்களின் தலைத் தெய்வமாக இருப்பதனால் இச்சடங்கை இத்தெய்வத்தின் பெயரைக் கொண்டே அழைக்கின்றார்கள்.

இச்சடங்குகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் வேட வெள்ளாளர்கள் வாழ்கின்ற பகுதிகளில் நடைபெறுகின்றன. இக்கட்டுரை மூன்று கிராமங்களிலும் நடைபெற்ற சடங்குகளை அடிப்படையாகக் கொண்டு குமார தெய்வச் சடங்கினை விளக்குவதாக அமைகின்றது.

இம்மூன்று கிராமங்களும் மட்டக்களப்பு திருமலை வீதியில் இருந்து மேற்குத் திசை நோக்கியும், கிழக்குத்திசை நோக்கியும் அமைந்திருக்கின்றன. முறுத்தானை இவ்வீதியிலுள்ள கிரான் என்னும் கிராமத்திலிருந்து மேற்குத்திசை நோக்கிச் செல்லும் புலிபாய்ந்தகல் வீதியில் பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் உள்ளது. தளவாய் களுவன்கேணி என்னும் கிராமம் இவ்வீதியிலிருந்து கிழக்குத்திசையில் உள்ளது. இதில் தளவாய் ஏறாவூர் கிராமத்திற்கூடாகச் செல்லும் புன்னக்குடா வீதியில் ஆறு கிலோமீற்றர் தூரத்தில் அமைந்திருக்கின்றது. களுவன்கேணி இவ்வீதியில் வந்தாறுமூலை என்னுமிடத்தில் இருந்து ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் இருக்கின்றது.

இம்மூன்று கிராமங்களில் நடைபெற்ற சடங்குகளும் ஒற்றுமைத்தன்மை உடையதாகவும் ஒரே மாதிரியான பாணியில் நடைபெற்றதையும் அவதானிக்க முடிந்தது. இருப்பினும் சடங்கு நடைபெறும் காலமே மாறுபடுகின்றது. முறுத்தானையில் ஆடி மாதத்தின் கடைசியிலும், தளவாய் ஆவணி மாத்தின் முதல் பூரண தினத்திலும் சடங்குகள் நடைபெற்றன. இக்கிராமம் மூன்றில் ஐந்து நாள் சடங்கே இடம்பெற்றது. தளவாயில் சடங்கு ஆரம்பத்தில் ஏழு நாட்கள். நடைபெற்றதாகவும் பின்னர் ஐந்து நாட்களாக குறைக்கப்பட்டது என்பதும் கள ஆய்வின் போது தெரியவந்தது.

இச்சடங்கு ஆகமமுறை சாராத சடங்காகவும், மந்திரமுறை சாராத சடங்காகவும் இருக்கின்றது. இது வேண்டுதல் வழிபாட்டோடு தொடர்புடைய சடங்காக இருக்கின்றது. பேராசிரியர் சி.மௌனகுரு அவர்கள் "மதகுருவே தெய்வமாக ஆடும் சமயச்சடங்கு" என இதனைக் குறிப்பிட்டுள்ளார். இச்சடங்கு செய்யும் பூசகர் "கப்புகன்" என அழைக்கப்படுகின்றார். இரண்டு அல்லது மூன்று கப்புகர்கள் இருப்பார்கள். ஒருவர் மீது தெய்வம் வந்தால் மற்றவர் பூசகராக மாறுவார். கப்புகன் பரம்பரையாக வருகின்றார். தந்தையின் தெய்வம் மகனுக்கு வரும் என்ற நம்பிக்கை இவர்களிடம் உண்டு.

இங்கு நடைபெறும் ஐந்துநாள் சடங்கையும் பின்வருமாறு பிரிக்கலாம்.

1. முதலாம்நாள் சடங்கு : ஆலய அமைப்போடு தொடர்புடைய சடங்கு
2. இரண்டாம் நாள் சடங்கு : உத்தியாக்களுக்குரிய சடங்கு
3. மூன்றாம் நாள் சடங்கு : சாதாரண சடங்கு
4. நான்காம் நாள் சடங்கு : கூடாத நோய்களை ஏற்படுத்தும் துட்ட தெய்வங்களுக்குரிய சடங்கு

5. ஐந்தாம் நாள் சடங்கு : தேனெடுத்தல், ஆனைகட்டுதல் போன்ற நிகழ்வுகளில் இடம் பெறும் சடங்கு

இவ்வொழுங்கு முறையில் சடங்கை நோக்கும்போது குமார தெய்வச்சடங்கு பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

இச்சடங்கின் போது வெளிப்படும் தெய்வங்கள் ஒவ்வொன்றும் அதன் இயல்புக்கு ஒப்ப ஆண் தெய்வங்கள் பனையோலை, குருத்தோலை என்பனவற்றை கழுத்திலும், இடுப்பிலும் கட்டி அவருக்குரிய ஆயுதங்களுடன், சலங்கை கட்டி ஆடி வருவர். பெண் தெய்வங்கள் பெண்களின் உடையமைப்பில் வருவர். சடங்கின் ஆரம்பத்திலிருந்து இறுதி நாள் வரை இது நடைமுறையில் இருக்கும். சடங்கின் போது ஒவ்வொரு தெய்வத்திற்கும் பாட்டு வேடபாசையில் பாடப்படும். அப்பாட்டுடன் கொட்டு எனப்படும் தாளம் பறையில் இசைக்கப்படும். ஒவ்வொரு தெய்வத்தின் வருகைக்கும் எத்தனை கொட்டு என கொட்டு வாசிப்போருக்குத் தெரியும். இக்கொட்டு வாசிப்போரும் சந்ததியின் கையளிப்பாக வருகின்றனர்.

**முதலாம்நாள் சடங்கு**

இச்சடங்கு ஆலய அமைப்போடு தொடர்புடைய சடங்காகும். சடங்கு ஆரம்பித்தலுக்கு முன் கோயில் இருக்கும் இடம் அல்லது வளவு துப்பரவு செய்யப்படுகின்றது. பின்னர் மறுநாள் காலை கப்புகன் (பூசாரி) வீட்டிலிருந்து தெய்வங்கள் சிலைகள், தெய்வங்கள் பாவிக்கும் ஆயுதங்கள் (வில், அம்பு,வாள், ஈட்டி, மாதிரியான தடிகள் சலங்கை) உள்மடைக்குரிய இடத்தில் கோயிலுக்கு முன்பாக வைப்பர். பின்னர் அவ்விடத்தில் பனையோலைப்பாய் விரிக்கப்பட்டு அதன் மேல் வண்ணான் வெள்ளை விரிக்க அந்த வெள்ளையின் மேல் விளக்கு ஒன்று வைக்கப்பட்டு அந்த விளக்கு தலைமைக் கப்புகனால் கொழுத்தப்படும். பின்னர் அவ்விடத்தில் கன்னிமாருக்கு என்று மூன்று மடை வைக்கப்பட்டு கன்னிமாருக்குரிய வேலைகள் முடிந்ததும் பெட்டி தலைமைக் கப்புகனால் (பூசாரி) தூக்கப்பட்டு கோயில் இருக்கும் வளவைக் சுற்றிவந்து அவ்விடத்தில் உடனே புதிதாக நாட்டப்பட்ட பந்தலில் பெட்டி வைக்கப்படும். இப்பெட்டிக்கு அருகில் ஐந்து மடைகள் வைக்கப்பட்டு அவ்விடத்தில் மீண்டும் ஒருவிளக்கும் விளக்குக்கு அருகே ஒரு மடையும் வைக்கப்படும். பின்னர் குமாரருக்கு அவ்விடத்தில் ஒருமடை வைக்கப்பட்டதும் கொட்டு எனப்படும் பறை இசைக்கப்பட அம்மடையை வைத்த பிரதான கப்புகரில் குமாரர் என்கின்ற தலைத்தெய்வம் முற்பட்டு ஆடத்தொடங்கும். இவர் ஆடத்தொடங்கியதும் ஏனைய கப்புகன்மார் பாடத்தொடங்குவர். உதாரணமாகப் பின்வரும் பாடலைக் குறிப்பிடலாம்.

"ஈந்தா கேடோ ஏ கமோ ஈ மெணாய்
முந்தே கணமாய் ஏ ஏகாம்ப வணங்கிலாதோ
அம்மையே கண் பூஜ தெய்யோ டொதுங்கா
ஏ ஏ...... மலசுவத்தில் பிள்ளேவோ நலுனங்
ஏ.......வாவாப்பு காணங்"

**ஆலாத்தி தெய்வம்**

“இந்தா வேடோ உங் ஏ ஏ கமேண கமணாய்
ஆலயத்திப் பட்டினமாகு
திருக்குணாமலை , திருக்கோயில் கிட்டுவாரம்
தானதந்தே தனோண குமணாய்”

எனப்படுவார். பின் குமாரர் எந்தெந்த இடத்தில் எந்தப் பந்தல் போடவேண்டும். எந்த பந்தலுக்குள் எந்த தெய்வத்தை வைக்க வேண்டும் என ஏனைய கப்புகன்மார்களுக்கு சொல்லும். சில வேலைகளை பார்வையாளராக இருக்கும் பக்தர்கள் சிலரை ஆடிச் சென்று பிடித்து அவர்களுக்கு கொடுக்கும். வேலை கொடுக்கப்பட்டதும் அந்த வேலையை பொறுப்புடன் அந்த பக்தர்கள் செய்து முடிக்கின்றனர். பின் குமாரர் மீண்டும் ஆடி வந்து வண்ணானிடம் ஒரு துண்டை வாங்கி அத்துண்டை ஒரு பந்தலில் மேல் எறியும் அதன் பின்பே வண்ணான் வெள்ளை கட்டத் தொடங்குவார். பின் இத்தெய்வம் சென்றுவிடும்.

பந்தல் வேலைகள் மடைக்குரிய காய், கனி, பூ என்பன ஒழுங்குபடுத்தப்பட்டு வெட்டவேண்டியது அனைத்தும் வெட்டபட்டு கழுவி எடுக்கப்பட்டு தெய்வம் கூறியதற்கு இசைய உரிய இடங்களில் உள்ள தெய்வத்தின் முன் மடைவைக்கப்படும். குமாரசிலையும் ஒரு அம்மன் சிலையும் ஒரு வைரவர் சூலமும் மாத்திரமே மடையில் வைக்கப்பட்டிருந்தது. ஏனைய தெய்வங்களுக்கு சிலை இருக்கவில்லை. மடை மட்டும் இருந்தது. அந்த மடைக்குரிய தெய்வத்தை அவர்கள் பெயர் சொல்லி அழைக்கும் மரபே காணப்பட்டது.

ஆரம்பத்தில் முதன் முதலாக வரும் குமாரர் சடங்கு நல்லா நடக்கும் எல்லாத் தெய்வங்களும் வரும் பூசைகளை இன்ன மாதிரி செய்யுங்கள் என்று கூறிச் செல்லும். மடைக்குரிய வேலை பந்தல் அலங்காரம் அனைத்தும் முடிந்ததும் குமாரர் தெய்வம் வந்த தலைக்கப்புகரில் ஆலாத்தி என்னும் தெய்வம் முறப்பட்டு கையில் தீப்பந்தம் கொண்டு எல்லாப் பந்தலையும் தீபங்காட்டுவதைப் போன்று காட்டிச் செல்லும்.

ஆலாத்தி தெய்வம் ஆலாத்தி எடுத்து முடிந்ததும் அடுத்து இந்த தெய்வம் வரும் என்று சொல்லி குமாரபந்தலுக்கு செல்லும் அதன்பின் வேறு சில தெய்வங்களும் கப்புகர்களில் முறப்படும். இத்தகைய நிகழ்வு நள்ளிரவு ஒன்றரை தொடக்கம் இரண்டு மணிவரை தொடர்ந்து நடைபெறும். அன்றைய தினம் வரவேண்டிய தெய்வங்கள் அனைத்தும் வந்ததும் அன்றைய நாட்சடங்கை முடிப்பர்.

ஒவ்வொரு தெய்வமும் வரும்போது முதலில் குமார பந்தலில் இருந்தே கப்புகரில் முறப்பட்டு ஆடிவரும். பின்னர் எல்லாப் பந்தலையும் தரித்து கடைசியாக பந்தலுக்கு சென்று ஆடி பக்தர்களுக்கு வாக்கு சொல்லத் தொடங்கும். இது ஒரு பொதுவான நடைமுறையாக இருக்கின்றது.

குமாரர் ஆலய அமைப்பையும், சடங்கு நடைபெறும் ஒழுங்கையும் கீழ்வரும் விளக்கப்படம் காட்டுகின்றது.



1) குமாரர் கோயில்
2) கொழும்புக் குமாரர் பந்தல்
3) செம்பகநாச்சிக்குரிய பந்தல்
4) உத்தியாக்களுக்குரிய பந்தல்
5) இந்துமல் நாச்சிக்குரிய பந்தல் (கன்னிமார்)
6) கரடித் தெய்வத்துக்குரிய பந்தல் (கரடிக் குத்தி)
7) கடற் பகுதி மாறாக்கள் பந்தல்.
8) செவ்வாக்குத்தி
9) பணிக்காரனுக்குரிய பந்தல்
10) புள்ளிக்காரனுக்குரிய பந்தல்
11) பெரிய சாமி பந்தல் (வைரவர்)
12) அம்மன் கலைப் பந்தல்
13) தெல்கிரியம்மா பந்தல்
14) ஆலய முன்றல்
15) தோரண மாறா (தென் பூச்சிமாறா தேனெடுக்கும் தோரணம்)

**இரண்டாம் நாள் சடங்கு**

இந்த நாள் சடங்கு உத்தியாக்களுக்குரிய சடங்காகும். இச்சடங்கின்போது முதலாம் நாள் வைக்கப்பட்ட மடைகள் அனைத்தும் கலைக்கப்பட்டு புதிய மடை வைக்கப்படும் பின்னர் தெய்வங்களுக்கு அபிடேகம் செய்வார். ஆலாத்தி தெய்வம் அன்றுவராது. உத்தியாக்களே முதலாவதாக வரும். உத்தியாக்கள் என்போர் அக் குழுவில் இறந்த தாய், தந்தை, தந்தையின் தந்தை ஆகிய முன்னோர்களாவர். மட்டக்களப்பில் "பிதிர்" வழிபாட்டை உத்தியாக்களுக்குச் செய்தல்" என்று கூறுவர். [2]

உத்தியாக்களுக்குரிய தாளம் கொட்டில் இசைக்கப்பட தலைமைக் கப்புகனார் மீது உத்தியாக்கள் வெளிப்படத் தொடங்குவர். பின்னர் ஏனைய கப்புகனார் உத்தியாக்களுக்குரிய பாடலைப் பாடுவர். பின் உத்தியாவாக முன்பாடுபவர் வில் அம்புடன் அபநயித்து ஆடிவருவர். வில்ீ அம்புடன் அபிநயித்து ஆடும் காட்சி பார்ப்பதற்கு நாடக தன்மையாக இருக்கும் இதில் "சுவாரஸ்யம்" என்னவென்றால் தாங்கள் யார் என்பதனை இரண்டாவது கப்புகனாரிடம் சொல்ல அவர் வரும் உத்தியாவின் உறவினருக்கு சொல்லுவார்.

அவ் உறவினர்கள் தங்களது மூதாதைகளை அக்கப்புகரில் காணப்ர். இவ்வேளை தனது மூதாதையானவர் விரும்பி உண்ணும் உணவு வகை, குடியான வகைகள் என்பவற்றை ஒரு பெட்டியில் வைத்து வெள்ளைச் சீலையால் மூடிக் கையில் வைத்த வண்ணம் நிற்பர். உத்தியாவாக வரும் நபர் பந்தலின் முன் போடப்பட்டிருக்கும் உரலில் அமர்ந்து விடுவார். பின்னர் சட்டியில் இருக்கும் தண்ணீரை எடுத்து அவரது உறவினரைக் கூப்பிட்டு பக்கத்தில் இருத்தி நலன் விசாரித்து அவர்களுடன் கதைத்து அவர்கள் பெட்டியில் வைத்திருக்கும் பொருட்களை தனது முகத்தினால் முகர்ந்து பின் அந்த பெட்டியில் இருக்கும் பொருட்களை எடுத்து உண்டும், குடித்தும் அதை மற்றவர்களுக்கும் தனது உறவினர்களுக்கும் கொடுத்து பின் தனது வாரிசுகளைக் கட்டியணைத்து முகர்ந்து விட்டுச் செல்வர்.

இந்த வழிபாட்டு முறை மட்டக்களப்பின் ஏனைய சடங்கு முறைகளில் காணப்படாத வேட வெள்ளாளர்களிடம் மட்டும் காணப்படும் ஒரு முறையாகும். சடங்கின் உத்தியாக்கள் பிரசன்னமாகி ஆடினால் தான் ஏனைய தெய்வங்கள் ஒழுங்காக வரும் என்பது இவர்களது நம்பிக்கை. இந்தச் சடங்கில் குமார தெய்வத்தை வழிநடத்திய இவர்களது பழைய மூதாதைகள் அனைவரும் பிரசன்னமாவர்.

உத்தியாக்கள் வந்ததற்குப்பிறகு கப்புகர் மீது குமாரக்கலை, அம்மன்கலை, தெவுத்தன்கலை, மாறாக்கள், நாச்சிமார் போன்ற பல தெய்வங்கள் வெளிப்படும் ஒவ்வொரு தெய்வமும் வாக்குச் சொல்லுதல், நூல் போடுதல் ஆகிய பணிகளைச் செய்யும் பின்னர் குமாரர் மீண்டும் வந்து ஆலயத்தை ஒப்பெடுத்ததும் இன்றைய நாள் சடங்கு முடியும்.

**மூன்றாம் நாள் சடங்கு :**

இச்சடங்கை சாதாரண சடங்கு எனக் குறப்பிடுகின்றனர். இச்சடங்கின் போது இவர்களது மூதாதைகள் “ஆதரித்த தெய்வங்கள்” எனக்கருதப்படும். வேட கலைத் தெய்வங்கள் அனைத்தும் கப்புகர்களில் பெறப்படும். இத்தெய்வங்கள் பல வடிவத்தில் வருவதாக கூறுகின்றனர்.

**குமாரர் :**

கொழும்புக்குமாரர், கண்டிக்குமாரர், அழகுக்குமாரர், காலிக்குமாரர் எனவும் மாறாத் தெய்வம், தோரணமாறா, கித்துள் மாறா, கித்துள் பெனிமாறா என்பவரும் தெவுத்தன் கல்லடதெவுத்தன், பானகாவலதெவுத்தன், குருநாகலதெவுத்தன், பொல்லுக்காரன், மாத்தளை தெவுத்தன், பொல்மல்தெவுத்தன், கருத்தானியன் என உருமாறி இச்சடங்கில் முறற்படுவர். இச்சடங்கில் தெய்வங்கள் அனைத்தும் முறற்பட்டு அனைத்து பக்தர்களுக்கும் உள்ள குறை நிறைகளை அவர்களிடம் சொல்வதை இந்த நாள் சடங்கின்போது அவதானிக்கலாம். இந்த நாள் சடங்கிலே பக்தர்கள் வாக்குக் கேட்பதற்காக பல இடங்களில் இருந்தும் வருவார்கள். இந்த நாளில் பல சாதியைச் சேர்ந்தவர்களும் பல இனத்தவரும் வந்து கட்டுக்கேட்டு, நூல் போடுவதனை அவதானிக்கலாம்.

இந்த நாள் சடங்கில் கட்டுச் சொல்லுதல், நூல் போடுதல் என்ற பல நிகழ்வுகள் இடம்பெறும். கட்டுச் சொல்வதை வாக்குச் சொல்லுதல் எனக் குறிப்பிடுவர். பக்தர்களுக்கு நடந்தது, நடக்க இருப்பது போன்ற விடயங்களைத் தெய்வங்கள் கப்புகரில் முறற்பட்டு வந்து சொல்லும். கட்டுச் சொல்லும் முறையை விபரிப்போமாயின், பக்தர்களாக நின்று கொண்டிருப்பவர்களில் இருந்து ஒருவரை தண்ணீர் சட்டியில் இருக்கும் தண்ணீரை எறிந்து கூப்பிட்டு தெய்வத்திற்கு அருகாமையில் நிறுத்தி அவர்களுக்கு அவர்களது பிரச்சினையை சொல்லும். இவை உரையாடலாக இடம்பெறும் இருப்பினும் பக்தர்கள் இதனை விளங்கிக் கொள்ளல் சிரமமாக இருக்கும். இதனால் ஏனைய கப்புகர் அந்த விடயத்தை பக்தர்களுக்கு விளங்கப்படுத்துவர். பின் தெய்வம் தண்ணீர் சட்டிக்குள் இருக்கும் வெற்றிலையை எடுத்துப் பார்த்து கீழ் எறிந்து அதனை உற்றுப்பார்த்து வெற்றிலை பாதத்தில் விழுந்தால் பிரச்சினை சுலபமாகத் தீராது என்றும், வெற்றிலை நேராக விழுந்தால் பிரச்சினை இலகுவாகத் தீரும் என்றும் இது அர்த்தப்படுமாம். சடங்கில் இடம் பெறும் கட்டுச் சொல்லும் முறைக்கு ஓர் உதாரணம் கீழே தரப்படுகின்றது. (குமாரர் என்னும் தெய்வம் ஆடி வந்து

பூசாரியாக இருக்கும் ஏனைய கப்புகன் ஒருவரை தண்ணீர் எறிந்து கூப்பிட்டு)

**குமாரர்:**

ஆண்டுக்காண்டு தேவாதிகளின் திருவிளக்கு ஆலயத்தில் வைக்கப்பட்டால், மக்களுக்கு எந்த விக்கினமும் வராது. ஆண்டுக்காண்டு தேவாதிகள் அனைவரும் இந்த ஆலயத்தில் முறப்பட்டு மக்கள் குறை போக்குவார்கள்.

**கப்புகன்:**

ஆண்டுக்காண்டு உன்னுடைய சடங்கை நாங்கள் எங்களால் இயன்ற அளவு செய்வோம். செண்பக நாச்சி என்ற தெய்வம் சொன்ன வாக்கு (ஒரு பெண்ணை இத் தெய்வம் தண்ணீர் எறிந்து கூப்பிட்டு)

**செண்பக நாச்சி:**

நீ கவலையோடு தேவாலயத்திற்கு முறப்பட்டு இருக்கின்றாய் நீ உன்னுடைய குஞ்சானுக்கு (பிள்ளைக்கு) வந்திருக்கும் வினை(நோய்) பற்றிய கவலையோடு இருக்கின்றாய் இல்லையா?

பெண் : ஆம் தாயே

**செண்பக நாச்சி:**

நான் உன்னுடைய குஞ்சானுடைய வினையை அறுத்தெறிவன் அடுத்த ஆண்டுக்கு ஆலயத்திற்கு வந்து இத் திருவிளக்கில் முறப்பட்டு எனக்கு ஒரு பட்டாடை தரவேண்டும்.

பெண் : ஆம் தாயே தருவேன்.

**நான்காம் நாள் சடங்கு :**

இச்சடங்கு மூன்றாம் நாள் சடங்கு போலவே இடம் பெறும். இன்றும் வாக்குச் சொல்லுதலே இடம்பெறும். ஆனால் இன்றைய நாளில் கப்புகரில் முறப்படும் தெய்வங்கள் பயங்கரமான தெய்வங்களாகவே இருக்கும். இதில் குறிப்பாக நீலிக் கூட்டம் எனப்படும். மானீரலி, அயோத்தியா, குருவிலி, மருமுந்தா, ராஜிகராஜா, ராஜபனிக்கா, அயோத்தியா, மாமந்தியா, எரிகனுமுந்தா, போன்ற சிறு பிள்ளைகளின் நோயோடு சம்பந்தப்பட்ட தெய்வங்களும் வரும். இத் தெய்வங்கள் பறவை வடிவில் வருவதாக குறிப்பிடுகின்றனர்.

இத் தெய்வங்களோடு மூன்றாம் நாள் சடங்கில் வந்த தெய்வங்களும் வரும் தெய்வங்களும் புதிதாக வரும் தெய்வங்களும் வந்து முறப்படும் மேற்சொன்ன மிகவும் பயங்கரமான நோயை ஏற்படுத்தும் தெய்வங்களைக் குமார தெய்வம் கட்டுப்படுத்தும் என்றும் மேற்கூறிய தெய்வங்கள் ஏற்படுத்தும் நோயை குமாரர் தீர்த்துவைப்பர் என்றும் நம்புகின்றனர்.

**இறுதி நாள் சடங்கு**

இந்த நாளில் நடைபெறும் சடங்கு நிகழ்வுகளே மிகவும் நாடகத் தன்மை பொருந்திய நிகழ்வுகளாகும். இச்சடங்கின் முக்கிய நிகழ்வு மாறாத் தெய்வத்தோடு தொடர்புபடும் தோறணமாறா, தேன்பூச்சிமாறா, பனிக்கமாறா, வதனமாறா போன்ற தெய்வங்கள் தோன்றி வேடர்களின் பழைய

தொழில் முயற்சிகளான தேன் எடுத்தல், ஆனைகட்டுதல், மாடுபிடித்தல் போன்ற தொழில் ரீதியான நிகழ்வுகளை அபிநயித்துக் காட்டும் நிகழ்வுகள் சடங்காக இடம்பெறும்.

இறுதிச்சடங்கிற்கு முதல் நள்ளிரவு விநாயகப்பானை எழுந்தருளப் பண்ணுவர். அன்றிரவு பலகாரம் வடிக்கும் தெய்வம் முறப்படும். அதற்கு பலகாரம் வடிப்பர். மாவைப் பிரட்டி ஆட்கள் அடுப்பில் எண்ணெயை கொதிக்க வைத்து காத்திருக்க இத்தெய்வம் முதலாவது கப்புகரில் முறப்பட்டு மாவை பிசைந்து கொதிக்கும் எண்ணெய்க்குள் கையை விட்டு ஒவ்வொரு பலகாரமாக மூன்றுமுறை எடுத்து மடையில் வைக்கும் இது ஒரு வியப்பை தரும் செயலாக இருந்தது.

தெய்வம் பலகாரத்தை எடுத்ததற்கு பிறகு ஏனையோர் பலகாரத்தை வடிக்கத் தொடங்குவர். அதன்பின் இரவு மூன்றரை மணியளவில் விநாயகப்பானை இரண்டாவது கப்புகரினாலும் இன்னொரு பானை மூன்றாவது கப்புகரினாலும் வடிக்கப்படும். பெண்கள் அனைவரும் குரவை போட்டு பானையை சுமந்தபடி ஆலயத்தில் உள்ள எல்லா தெய்வப் பந்தல்களையும் வளைய வருவர். அத்தோடு குமார தெய்வமும் முறப்பட்டு ஆடிவருவார். பானைக்கு காவலாக இருகம்பு அவரிடம் இருக்கும் அதைக் குறுகலாக ஓ வடிவில் வைத்து மெல்ல மெல்ல நடந்து வருவார். பின்னர் பானை பொங்கியதும் பானையை ஒப்பெடுக்க குமாரர் மீண்டும் வருவார். பின் பால் பொங்கிய பானையை மூடியதும் அன்றிரவு நிகழ்வு முடியும்.

அடுத்த நாள் காலை பத்துமணி தொடக்கம் இறுதிநாள் சடங்கு நடைபெறும். காலைவேளை மாறாதெய்வம் கப்புகரில் முறப்படும். முதலில் தோறணமாறா என்ற தெய்வம் முறப்படும் அங்கு போடப்பட்டிருக்கும் தோறணத்தை ஆடி ஆடிப் பார்த்து பிழை சரி செய்து வரும்.பின்னர் தேன்பூச்சி மாறாத்தெய்வம் தோறணத்தில் ஏறி தேன் எடுப்பதனை அபிநயித்துக் காட்டும் இது மிகவும் சுவாரசியமான நாடக நிகழ்வு போன்று நிகழ்த்தப்படும். இந்நிகழ்வுக்கென இருபது அடி உயரம் வரையான பெரிய மரம் நாட்டப்பட்டு, குறுக்காக கொடி கட்டப்பட்ட கம்புகளை வைத்துக்கட்டி, குருத்தோலை, குழைகளால் அலங்கரிக்கப்பட்டு உச்சியில் மூன்று கும்ப குடங்களும் வைக்கப்பட்டு, அடியில் மடை வைக்கப்பட்டு, தோரணமானது அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

**தேன் எடுக்கும் நிகழ்வு**

இந்நிகழ்வில் பிரதான கப்புகனார் மீது மாறாத்தெய்வம் வெளிப்பட்டு பக்தர்களாகிய பார்வையாளர்களிடம் அதிக பக்தி கொண்டோர் என நினைக்கும் பக்தர்களிடம் தேன்பூச்சி இருக்கிறதா? என்றும் கேட்டு இல்லை என்றால் இந்த வழியில் சென்றால் பூச்சி கிடைக்கும் என மாறாத்தெய்வம் கோடரியையும் பெட்டியையும் கொடுத்து அனுப்பி வைக்கும். அவர் பூச்சியுடன் திரும்பி வந்து பெட்டியையும் கோடரியையும் மடையில் வைத்த பின்னரே மாறாத்தெய்வம், கப்புகனில் முறப்பட்டு ஏறும். ஏறிப்பார்த்து விட்டு இறங்கும். பின்னர் மீண்டு பூச்சி பெட்டியுடனும் கோடரியுடனும் மற்றொரு பக்கமாக தோரணத்தில் ஏறி உச்சிக்கு செல்வர். உச்சிக்கு சென்றதும் தனது கையில் இருக்கும் பூச்சிகளை எறிந்து விளையாடுவார். அதன் பின் உச்சியில் வைக்கப்பட்டிருக்கும் மூன்று கும்பக் குடங்களையும் கோடரியால் கொத்தி கீழே வீழ்ந்தும் மாறாத்தெய்வம் பந்தலில் இருந்து கீழ் இறங்கி வந்ததும் கீழே ஏற்கனவே நின்று கொண்டிருந்த(முதல் முதலாக ஏறி இறங்கிய மாறா) இதனை “படுகிடைமாறாத் தெய்வம்”

என்பர். அது தென்னம் பாளையின் பூவால் எறிய இறங்கும் மாறாபூச்சி குத்தயது போல அபிநயம் செய்யும். பின்னர் இறங்கி தரையில் விழுந்து படுத்துவிடும். இது பூச்சிகுத்தி மயங்கிவிழுவதைக் காட்டுகின்றதாம். பின்பு விழுந்த மாறாத் தெய்வத்தை குமாரர் இருக்கும் பந்தலுக்கு முன் வளத்தாட்டிவிடுவர்.

**ஆனை கட்டும் நிகழ்வு:**

இறுதி நாள் சடங்கில் நடைபெறும் நிகழ்வுகளில் இதுவும் குறிப்பிடத்தக்கது. இது மூன்றாவது கட்டாடி (கப்புகன்) மீதே பணிக்கமாறா என்னுந் தெய்வம் பிரச்சன்னமாகும். இத்தெய்வம் ஆனைகட்டும் தொழிலைச் செய்யும் தெய்வமாகும். இங்கு ஒரு பக்தர் ஆணையாக அபிநயித்து அதனை தேடித்திரிபவராகவும், ஒரு பணிக்கர் (கட்டாடிதான் பனிக்கராக வருவார்). அபிநயித்து ஆடிவருவார். பின்னர் பனிக்கருக்கு ஆடுபவர் யானையை எய்வது போல அபிநயிப்பர். இன்னொரு பனிக்கருக்கு ஆடிவருபவன் யானையைக் கட்ட வருவார். அப்போது அலியன்யானை குட்டி யானையைக் கட்டவிடாது அப்போது இரண்டாவதாக ஆனையைக் கட்டவந்த பனிக்கர் அங்கும் இங்கும் பார்த்து அலியிக் யானையைக்கண்டு பயந்தவர் போல் அபிநயித்து மறைவார். பின்னர் எய்கின்ற பணிக்கருக்கு ஆடுபவர் வில்லுடன் வந்து அலியன் யானையை எய்து கொன்றுவிடுவான். பின் முதன் முதலாக ஆனையைத் தேடி வந்த பணிக்கமாறாவாக வந்தவர் யானைக்குட்டியைக் கட்டி இழுத்து யானைக்கு புல், தண்ணீர் எல்லாம் கொடுத்து இவ்யானை குமாரருக்கு என்று சொல்லி ஆடச்சொல்லும்.

**கரடி தெய்வம் முற்படல்**

ஆனைகட்டும் நிகழ்வுக்கு பின்னர் இவ்வாலயத்தின் முற்றத்தில் கரடித்தெய்வத்திற்கு என அமைக்கப்பட்ட இடத்தில் இரண்டாவது கப்புகரில் கரடித்தெய்வம் முற்படும். இத்தெய்வம் பெண்ணின் உடை உடுத்து ஆடிவந்து கரடிக்குரிய இடமான கரடிக்குற்றி நாட்டப்பட்டு இருக்கும் இடத்தில்(இக்குற்றி ஐந்து அடி நீளமான கட்டை ஒன்று நாட்டப்பட்டு கரடியின் அமைப்பு போல அலங்கரிக்கப்பட்டிருக்கும்) குத்தியின் மேல் ஏறி இருந்து கரடி என்றும், மிருகத்தின் அபிநயங்களை இத்தெய்வம் செய்யும் இதைப்பார்த்துக் கொண்டு நிற்கும் இன்னொரு கப்புகர் “கரடிக்கு பசிக்கின்றது வயிறு எல்லாம் காஞ்சி போய்க்கிடக்குது சாப்பாடு எதுவும் கொடுங்க” என்று சொல்ல பக்தர்கள் வாழைப்பழம், இளநீர் என்பனவற்றை கரடி குற்றியில் இருக்கும் கரடித் தெய்வத்திற்கு கொடுப்பர். அதை இத்தெய்வம் வாங்கி உண்ணும் பின் அக்குற்றியிலிருந்து இறங்கி ஒருமுறை கரடிபோல் அபிநயித்து ஆடி குமாரப் பந்தலுக்குச் செல்லும்.

**சடங்கு நிறைவு:**

மேற்கூறிய நிகழ்வுகள் நிறைவு பெற்றதும் கன்னிமாருக்கு சடங்கு நடைபெறும். கன்னிமாராக சிறுபிள்ளைகள் 7 பேரை வேடமிட்டு அவர்களை கன்னிமாருக்குரிய பந்தலுக்குள் அமர்த்திவைப்பர். பின் அம்மன் கலைத் தெய்வங்கள் பிரதான கப்புகரில் வந்து முற்பட்டு கன்னிமாருக்குரிய பூசையைச் செய்யும். இதில் கன்னிமாருக்கு ஒவ்வொருவருக்கும் விளக்கு வைத்து அவர்களுக்கு பஞ்சாமிர்தம் கொடுத்து பின்னர் அவர்களுக்கு மடைவைத்து கன்னிமாருக்குரிய காரியங்களை அம்மன் கலைத்தெய்வம் செய்யும். பின்னர் அக்கன்னிமாரிடம் பக்தர்கள் மடிப்பிச்சை எடுப்பர். பின்னர் கன்னிமாரை இத்தெய்வம் தீர்த்தச்சட்டி இருக்கும் இடத்துக்கு கொண்டு

சென்றுவிட்டுவிட்டு அம்மன் கலைத்தெய்வம் குமார பந்தலுக்குள் சென்றுவிடும். பின் இறுதியாக குமாரர் முற்பட்டு ஆடிவந்து தண்ணீர்சட்டிக்கு அருகில் நின்று தண்ணீரை அள்ளி எல்லோருக்கும் படக்கூடியவகையில் எறிவர். இது சடங்கின் இறுதி நிகழ்வாக கருதப்படும். பின்னர் எல்லாப் பக்தர்களும் தீர்த்தச்சட்டிக்குக் கிட்ட வருவார்கள். தெய்வம் எறியும் தண்ணீர்த் துளியில் ஒரு துளியாவது தன் உடலில் படச்செய்ய முயல்வருவர். பின்னர் சட்டியிலுள்ள தண்ணீரை ஏனைய கப்புகர்களும் வந்து நின்று வீசுவர். இது தீர்த்த உற்சவத்தை நினைவுபடுத்துவதாக இருப்பதோடு ஐந்து நாள் நிகழ்வும் தண்ணீர் தெளிக்கும் நிகழ்வோடு நிறைவுபெறும். பின்னர் சடங்கு முடிந்து மூன்று நாட்களுக்குப் பிறகு பூச்சடங்கு ஒன்று செய்து கப்புகரின் வீட்டில் இருந்து எடுத்துவந்த சாமான்களை மீண்டும் கொண்டு செல்வர்.

## துணை நூல் பட்டியல்


1. அழகப்பன், சூ. தமிழ் நாடகம் தோற்றமும் வளர்ச்சியும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்-1987
2. இளங்கோ, சு. சு பாரதிதாசன் நாடகங்கள் ஓர் ஆய்வு சென்னை-1990
3. ENCYCLOPEDIA – Britanica University of Chicago volume-15
4. கண்காணிப்பு முன்னேற்ற மீளாய்வுப் பகுதி திட்டச் செயற்படுத்துகை பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, ஐந்து வருட சமூக பொரளாதார முன்னேற்றம் மட்டக்களப்பு மாவட்டம். ஜனாதிபதி செயலகம், கொழும், நவம்பர்-1999
5. குனகரெத்தினம், எஸ்.ஓ. Monograph of the Batticaloa District of the Eastern Province Ceylony Cey-1921
6. சிவசுப்பிரமணியம், ஆ."மந்திரம்" நாட்டார் வழக்காற்றியல், தொகுதி -1.1987
7. சிவசுப்பிரமணியம், ஆ."மந்திரம்" சடங்குகள், சென்னை-1990
8. சித்திரலேகா மௌகுரு மட்டக்களப்பு நாட்டார் வழக்காற்றியல் கரண அடிப்படைகளும், சமூக பொருளாதார முக்கியமும்,இலங்கை தமிழ் நாட்டார் வழக்காற்றியல் பதிப்பு-கார்த்திகேசு, சிவதம்பி, தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்-1980
9. சிவசண்முகம், ஞா. மட்டக்களப்பு குகன் குல முற்குகர் வரலாறும் மரபுகளும், விபுலம் வெளியீடு மட்டக்களப்பு, ஏப்ரல்-2000
10. செல்வராஜகோபால், க. தா. யார் இந்த வேடர்கள், ஜீவா பதிகம், தேத்தாத்தீவு
11. சேரன், மு. இந்திய நாடகம் ஓர் கூர்ந்த கண்ணோட்டம், சென்னை -1996
12. தாம்சன் ஜோர்ஜ், மனித சமூக சாரம், சென்னை-1990.
13. நடராஜா,எப். எக்சி. சி. மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு மாவட்ட கலாசாரப் பேரவை மட்டக்களப்பு நவம்பர்-1998
14. நடராஜா,எப். எக்சி. சி. மட்டக்களப்பு வரலாறுச் சுருக்கம், மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்க்கையும், தொகுப்பு எப்.எக்சி. சி. நுடராஜா மட்டக்களப்பு-1980
15. வெள்ளைவாரணர், க.சங்க இலக்கியத்தின் சமய நோக்கு, சங்க இலக்கிய கட்டுரைகள், கருத்தரங்கம்-தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஏப்ரல்-1984.
16. மௌனகுரு, சி. சடங்கிலிருந்து நாடகம் வரை, யாழ்ப்பாணம்-1988

17. மௌனகுரு, சி. நடிப்பு முறை பற்றிய எண்ணக்கருக்கள், சுவாமி விபுலானந்தா நினைவுப் பேருரை-03, கிழக்குப் பல்கலைக்கழகம்-1996
18. மௌனகுரு, சி. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள், விபுலம் வெளியீடு மட்டக்களப்பு, ஏப்ரல்-1998
19. மௌனகுரு, சி, சிவத்தம்பி. கா, திலகநாதன், க, அரங்கு ஓர் அறிமுகம், அமரர் பற்குணம். சி, நினைவு மலர் குழு திருகோணமலை, மே-1999.

## தகவல் வழங்கியோர் விபரம்

1. அப்புகாமி, கானந்தன
2. உக்குவண்டன் கந்தையா, இலுக்குசேனை
3. உசனார் ஹஜ்ஜீ முகம்மது, பட்டாணி தெய்வத்தை வைத்து ஆதரிப்பவர், புகாரிப் பள்ளியடி, ஏறாவூர்.
4. கந்தசாமி, சு. (கொட்டு வாசிப்பவர்), பாழையடித் தோணா, சந்திவெளி
5. காத்தமுத்து, க.(கப்புகன்) முறுத்தானை.
6. காத்தமுத்து, தளவாய்.
7. கிட்ணபிள்ளை, களுவன்கேணி
8. குமாரசாமி, கு. (குமார காவியம் பாடுபவர்), வந்தாறுமுலை.
9. சின்னான், பெ, வந்தாறுமுலை.
10. சுப்பிரமணியம், கொ, களுவன்கேணி
11. தம்பிப்பிள்ளை, கு. (கொட்டு வாசிப்பவர்), களுவன்கேணி.
12. துரைச்சாமி, சு.(குமாரருக்கு ஆடுபவர்), குமாரர் ஆலய வீதி கிரான்.
13. தெய்வநாயகம், சு. (குமாரர் கோயில் கப்புகன்), பாழையடித் தோணா, சந்திவெளி.
14. நாகன், வே, தளவாய்.
15. நாகன், வே. (கப்புகன்), பட்டியச்சேனை, கற்குடா, வாழைச்சேனை.
16. நாகப்பன், சி. சித்தாண்டி
17. பால்குடியர், அ. களுவன்கேணி
18. ராசமணி, ஆ. (பெண்), களுவன்கேணி
19. வள்ளிப்பிள்ளை, கானந்தனை
20. வீமன், து. (கப்புகன்), முறுத்தானை
21. மாரியர், களுவன்கேணி

# பெண்களின் பங்களிப்பை ஆவணப்படுத்தலை எதிர்நோக்கும் சவால்கள்: இலங்கையின் முதற் பெண் சஞ்சிகையாளர் மங்களம்மாள் மாசிலாமணியை முன்வைத்து

சித்திரலேகா மௌனகுரு

எழுத்துத் துறையில் ஈடுபட்ட பெண்களையும் அவர்களது படைப்புகளையும் பற்றிப் புதிய வகையில் அறிதலும் அவர்களை மீள்கண்டுபிடித்தலும் அவர்களது ஆக்கங்களைப் பிரசுரிப்பதும் இன்று இலக்கிய வரலாற்றெழுதியலில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. 20ம் நூற்றாண்டில் குறிப்பாக எழுபதாம் ஆண்டுகளில் ஏற்பட்ட அபூர்வமான ஒரு விருத்தியின் விளைவாகவே தற்காலத்தில் பெண்களது இலக்கிய வரலாறு பற்றிய அறிவு உருவாகியது. மறக்கப்பட்ட, காணாமல்போன, புறக்கணிக்கப்பட்ட, பின்தள்ளப்பட்ட எழுத்தாளிகளை மிளக் கண்டுபிடிப்பது தொடஉபாக கல்விப் புலத்தில் இக்காலத்தில் ஏற்பட்ட அக்கறையும் ஆர்வமும் இதற்கு வழி வகுத்தன. அத்துடன் மரபு வழிப்பட்ட இலக்கிய வரலாற்றெழுத்தியல் பற்றிய விமர்சனம், பெருங்கதையாடல் மரபைச் சார்ந்த எடுத்துரைப்புகள் பற்றிய மறுபரிசீலனை முதலியவை இதற்குக் காரணமாகின. மரபுரீதியான இலக்கிய வரலாற்றில் பால்நிலை, சாதி, வர்க்கம் போன்ற காரணங்களுக்காக இடம் மறுக்கப்பட்ட எழுத்தாளர்களைக் கண்டுபிடித்து உட்சேர்க்கும் கடினமான கல்விப் பணியானது தற்கால இலக்கிய வரலாற்றில் முக்கியமானதோர் இடம் வகிக்கிறது.

இப்பணியானது ஆய்வு, மீள்மதிப்பிடல், மீள விளங்கிக் கொள்ளல் ஆகியவற்றை முக்கியப்படுத்தியது. இதளால் நீண்ட காலமாக வரலாற்றெழுதியல்சார் புறக்கணிப்புக்கு உள்ளாகிய இத்தகைய எழுத்தாளர்களின் கருத்துகளும் ஆக்கங்களும் பற்றிய தகவல்களைக் கண்டுபிடித்தலும் சேகரித்தலும் அதிகரித்துள்ளன.

இத்தகைய பெண்நிலை ஆராய்சசியின் ஒரு விளைவாகவே இலங்கையில் தமிழில் முதலாவது பெண்கள் சஞ்சிகையை ஆரம்பித்த மங்களம்மாள் மாசிலாமணி பற்றிய தேடல் உருவாகியது.

மங்களம்மாள் ஒரு பத்திரிகையாளர். அத்துடன் சமூக, அரசியற் செயல்வாதியாகவும் விளங்கினார். யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்றி இந்தியாவில் தமிழ்நாட்டிலும் அவர் செயற்பட்டுள்ளார். இலங்கையில் வெளிவந்த முதலாவது பெண்கள் சஞ்சிகையின் ஆசிரியையும் மங்களம்மாளே தமது கருத்துகள் வெளியிடுவதற்கு ஒரு சாதனமாகவே அவர் தமிழ் மகள் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கினார்.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து தென்னாசிய நாடுகளில் சமூக ஜனநாயக இயக்கங்களில் பல பெண்கள் ஈடுபட்டு உழைக்கத் தொடங்கினர். இவர்கள் பெண்கள் சமூக அரசியல் வாழ்வில் ஈடுபடுவதைக் கட்டுப்படுத்திய வைதீகக் கருத்துக்களுக்கு எதிராகவும் பெண்கள்

உரிமைகளுக்காகக் குரலெழுப்பியும் செயற்பட்டும் வந்தனர். இலங்கையிலும் இந்தியாவிலும் இந்நிலைமையைப் பொதுவாகக் காணலாம். பண்டிதை ரமாபாய், கமலாதேவி சட்டோபாத்யாய, முத்துலெட்சுமி போன்றோரை உதாரணமாகக் கூறலாம். இலங்கையிலும் நகரப் பகுதிகளைச் சார்ந்த பெண்கள் பலர் கல்வி கற்று மருத்துவஉகளாகவும், உயர்தொழில் வகிப்பபோராகவும் விளங்கியது மாத்திரமன்றி சமூக அரசியற் செயல்வாதிகளாகவும் விளங்கினர். கலாநிதி குமாரி ஜயவர்த்தனா அவர்கள் இவ்வாறு செயற்பட்ட தென்னிலங்கைப் பெண்கள் பற்றி எழுதிய நூல்கள் இவ்விடத்தில் குறிப்பிடற்குரியனவாகும்.

எனினும் இலங்கையின் தமிழ்பேசும் மக்கள் வாழ்கின்ற வடக்கு, கிழக்கு, மத்திய பகுதிகளைச் சேர்ந்த பெண்கள் பற்றிய ஆவணங்களோ நூல்களோ குறிப்பிடத்தக்க வகையில் இதுவரை வெளியாகவில்லை. தமிழ் பேசும் பெண்கள் மத்தியில் சமூக ஜனநாயகச் சிந்தனைகளும் பெண்நிலை உணர்வுகளும் செயற்பாடுகளும் மிகச் சமீபகாலத்திலேயே உருவாகின எனப்பலர் கருதுகின்றனர். இத்தகைய எண்ணப்போக்கு உருவாவதற்கு முக்கிய காரணம் பெண்களின் செயற்பாடுகள் பற்றிய ஆவணங்களும் தகவல்களும் சேகரிக்கப்படாமையும் அவை பாதுகாக்கப்படாமையும் ஆகும். இதனால் கருத்துக்களை உருவாக்குவதற்கு அடிப்படையான தகவல்கள் தெரியாதுள்ளன.

இலங்கையின் தமிழ்பேசும் பெண்களின் செயல்வாதம், இயக்கம் தொடர்பான வரலாற்றைக் கட்டமைக்கும் முயற்சிப் பாதையிலேயே மங்களம்மாள் பற்றிய தகவல் சேகரிப்பும் ஆவணமயப்படுத்தலும் ஆய்வும் முக்கியம் பெறுகின்றது.


தமிழ் மகள்.

பெண்கட்கேற்ற ஓர் இனிய தமிழ் மாதாந்தப் பத்திரிகை.

கடவுள் வணக்கம்.

மங்களம்மாள் நீண்டகாலம் ஆசிரியையாகச் செயற்பட்ட தமிழ்மகளின் சகல இதழ்களும் இன்றைய நிலையில் எவருக்கும் கிடைக்கவில்லை. மங்களம்மாள் பற்றி எழுதிய பத்மா சோமகாந்தன், செல்வி திருச்சந்திரன் முதலியோர் தமிழ்மகள் சஞ்சிகையின் இறுதி இதழை மாத்திரம் பார்த்தே மங்களம்மாள் பற்றிய கருத்துக்களைக் கூறியுள்ளனர் போலத்தெரிகிறது. . யாழ்ப்பாணப் பெண்களின் கல்விநிலை பற்றி எழுதிய வள்ளிநாயகி இராமலிங்கம் மங்களம்மாள் குறித்து சில தகவல்களைத் தருகிறார். எனினும் 1963 - 64 இலும் 1970 - 71 இலும் வெளியான இரு இதழ்கள் மாத்திரமே வள்ளிநாயகி இராமலிங்கத்துக்குக் கிடைத்துள்ளன. தனது முதுமாணிப்பட்டத்திற்காக மங்களம்மாள தொடர்பான தகவல்கதைத் திரட்டிய வள்ளிநாயகியும் அவர் அனுபவித்த பல இடப்பெயர்வுகள் காரணமாக அவற்றை இழக்க நேரிட்டது. எனினும் அவர் திரட்டிய தகவல்கள், எமக்கு மேலதிகமாகக் கிடைத்த தமிழ்மகள் இதழ்கள் ஆகியவற்றை வைத்து அவரது குடும்பம், வாழ்வு பற்றி முக்கியமான விடயங்களை அறியலாம். அதே சமயம் அவர் பற்றிய தகவல்கள் தொடர்பாகக் காணப்படும் இடைவெளிகளையும் இனம் காணலாம்.

**மங்களம்மாளின் குடும்பம்**

மங்களம்மாள் 1884 ஆம் ஆண்டு பங்குனி மாதம் பிறந்தார் என அறிகிறோம். (இராமலிங்கம்: 2006: 135) மங்களம்மாளின் குடும்பம் யாழ்ப்பாண நகரை அண்டியுள்ள வண்ணார் பண்ணையைச் சேர்ந்தது. இக்குடும்பத்தினர் நன்கு படித்தவர்கள். அக்காலத்து காலணித்துவ அரசாங்கம் அளித்த கல்வி வாய்ப்புகளை நன்கு பயன்படுத்திக் கொண்டனர் எனத் தெரிகிறது.

மங்களம்மாளின் தகப்பனார் கதிரவேற்பிள்ளை யாழ்ப்பாணத்தில் சட்டத்தரணியாகத் தொழில் புரிந்தார். தாயாரின் மூத்த சகோதரர் பொன்னம்பலப்பிள்ளை இந்தியாவில் திருவனந்தபுரத்தில் பொலிஸ் திணைக்களத்தில் உயர் அதிகாரியாகப் பணி புரிந்தார். இன்னோர் மூத்த சகோதரரான செல்லப்பாப்பிள்ளை திருவனந்தபுரத்தில் நீதிபதியாகக் கடமை ஆற்றினார்.



கணவராகிய மாசிலாமணி இவரது தாயாரின் தமையனாராகிய பொன்னம்பலப் பிள்ளையின் புதல்வர். மங்களம்மாளின் தகப்பனார் திருவனந்தபுரத்தில் கல்வி கற்றார் எனத் தெரிகிறது. மங்களம்மாள் வசித்த தெருவான பீ.ஏ தம்பி ஒழுங்கைக்கு அப்பெயர் வரக் காரணம் கதிரவேற்பிள்ளையின் பட்டமாகும். அக் காலத்தில் பீ.ஏ பரீட்சையில் தேறிப் பட்டம் பெற்றமையால் அவரை பீ.ஏ தம்பி என்று அயலவர்கள் அழைத்தார்கள் எனவும் பின்னர் அவர்கள் வசித்த தெருவுக்கு அதுவே பெயராகிவிட்டது எனவும் கூறப்படுகிறது. அவரது கணவரும் கல்வி கற்று மிகுந்த ஆங்கிலப் புலமையுடையவராக விளங்கினார், கொழும்பில் வெளிவந்த

“Morning Leader” என்ற பத்திரிகையுடன் தொடர்புடையவராயிருந்தார். பின்னர் 1920ஆம் ஆண்டு மாசிலாமணி “The People Magazine” என்ற ஆங்கிலப் பத்திரிகையையும் 1922 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் “தேசாபிமானி” என்ற பத்திரிகையையும் தொடங்கியதாக அறிகிறோம்.

கல்வி கற்று உயர் தொழில் புரிந்த குடும்பத்தில் பிறந்திருந்த மங்களம்மாள் முறையாகப் பாடசாலைக் கல்வி கற்கவில்லை. ஆனால் வீட்டில் கல்வி கற்றார். இவரது ஆரம்பக் கல்வி எங்கு நடைபெற்றது என்பது திட்டவட்டமாக அறியமுடியவில்லை. அக்காலத்தில் பெண்களுக்கு இந்துக் கல்லூரிகள் இல்லை. கிறிஸ்தவக் கல்லூரிகள் இவரைப் பழைய மாணவியாக அடையாளம் காட்டவில்லை. உயர்குடும்பத்தினர் பெண்களை கிறிஸ்தவப் பாடசாலைக்கு அனுப்புவதில்லை. மதமாற்றம் செய்யப்பட்டு விடுவார்களென்ற பயம் மாத்திரமமல்ல. கிறிஸ்தவர்கள் புனிதம் கெட்டவர்கள் எனவும் வெள்ளைக்காரர்கள் தம்மிலும் தாழ்ந்த சாதியினர் எனவும் அவர்கள் கருதினர். எனவே மற்றும் பலரைப்போல் இவருக்கும் வீட்டிலேயே கல்வி பெற ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். (இராமலிங்கம் வள்ளிநாயகி 2006: 135 - 136) அவரது எழுத்துக்களைப் பார்க்கும் போது தமிழிலும் ஆங்கிலத்திலும் ஒரு சேரப் புலமை கொண்டிருந்தார் எனத் தெரிகிறது.

இவரது கணவர் திருவனந்தபுரத்தில் வாழ்ந்தபடியால் அக்காலத்தில் அங்கு செழித்திருந்த மாக்சிய இயக்கங்களால் அவர் கவரப்பட்டிருக்கக் கூடும். அவர் நடத்திய பத்திரிகைகளின் பெயர்களான “தேசாபிமானி” The People Magazine ஆகியவை இத்தகைய ஒரு கருத்து நிலைச் சாய்வை தெரிவிக்கின்றன. இத்தகைய ஒரு சூழலில் வாழ்ந்த மங்களம்மாள் சமூக உணர்வு உள்ளவராக வளர்ந்ததில் வியப்பில்லை. பத்திரிகைச் சூழலால் யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் நடைபெறும் விடயங்களை அறியும் வாய்ப்பும் மங்களம்மாளுக்கு இருந்தது. தேசபக்தன், இந்து சாதனம், ஈழகேசரி, Hindu Organ முதலிய பத்திரிகைகளில் அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் கடிதங்களையும் கட்டுரைகளையும் எழுதியதிலிருந்து இவரது உலக அறிவும் சமகால உணர்வும் தெரிகிறது.

செல்வந்தக் குடும்பங்களில் பிறந்து பாடசாலையிலோ அல்லது வீட்டிலோ கல்வி பெற வாய்ப்புக் கொண்டிருந்த பெண்கள் சமூக செயற்பாட்டாளர்களாகவும், எழுத்தாளிகளாகவும் உருவாகினர். இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் இத்தகைய ஒரு நிலைமையை அவதானிக்கலாம்.

தமிழ்நாட்டில் வெளிவந்த பெண்கள் சஞ்சிகைகளின் ஆசிரியைகளும் இத்தகைய பின்னணி கொண்டிருந்தவர்களே. 1913 இல் வெளிவரத் தொடங்கிய பெண் கல்வி பத்திரிகையின் ஆசிரியை ரேவு தாயாரம்மா. 1923 இலிருந்து வெளிவந்த “சிந்தாமணி சஞ்சிகை” ஆசிரியை பாலாம்மாள், “ஜகன்மோகினி” ஆசிரியை கோதைநாயகி அம்மாள் போன்றோர் உதாரணங்களாவர்.

### தமிழ் மகள் சஞ்சிகை

இச்சஞ்சிகை 1924ஆம் ஆண்டு வெளிவர ஆரம்பித்ததாக அறிய முடிகிறது. 1920களில் தமிழ் நாட்டிலிருந்து பாலாமணி அம்பாள் ஆசிரியையாகச் செயற்பட்ட சிந்தாமணி என்ற பெண்கள் சஞ்சிகையொன்றில் தமிழ்மகள் பற்றிய குறிப்பும் இப்பத்திரிகை கிடைக்குமிடம் மானேஜர்,

தமிழ்மகள், யாழ்ப்பாணம் என்ற அறிவித்தலும் காணப்படுகிறது. சிந்தாமணியின் புத்தக மதிப்புரைப் பகுதியிலேயே இத்தகவல்கள் காணப்படுகின்றன.

"தமிழ்மகள் என்ற தமிழ் மாதாந்தப் பத்திரிகை வரப் பெற்றோம். தேசாபிமானி பத்திராதிபரான சிறிமான் மாசிலாமணிப் பிள்ளையவர்களின் பாரியை சிறிமதி. மங்களம்மாளை ஆசிரியையாகக் கொண்டு இப்பத்திரிகை வெளிவருவதாகும். பெண் மக்கள் விடயமாகப் பெரிதும் கட்டுரைகள் வரப்பெற்றிருக்கின்றன. இவ்வாறு பெண் மக்களுக்குரிய பத்திரிகை தற்காலம் மெத்த அவசியமாகவும் உபயோகமாகவும் தற்காலம் மெத்த அவசியமாகவும் உபயோகமாகவும் இருப்பதை தமிழர் நன்கறிந்து ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (சிந்தாமணி - செப்டம்பர், 1924, பக் 71)

எனினும் தமிழ் மகள் சஞ்சிகையின் சகல இதழ்களும் எமக்குக் கிடைக்கவில்லை. 1927, 28 ஆம் ஆண்டுகளில் பிரசுரமான 5 இதழ்களும் அவர் இறந்த பின்னர் அவரது புதல்வியாகிய புவனேஸ்வரிதேவியால் வெளியிடப்பட்ட இதழுமே கிடைத்தன. இவற்றில் 1928ஆம் ஆம் ஆண்டு மே, ஜூன் மாத இதழ்களுக்கு அவரது மூத்த புதல்வியாஉ மகேஸ்வரி இணை ஆசிரியையாகச் செயற்பட்டார்.

1969 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மங்களம்மாள் இறந்தபின் 1970 - 1971 எனத் திகதியிடப்பட்டு ஒரு இதழ் வெளிவந்துள்ளது. அவரது இறுதி நாட்களில் இந்த இதழின் தயாரிப்பில் ஈடுபட்டிருந்ததாக அதிலுள்ள குறிப்பால் அறிய முடிகிறது. இறுதியாக வெளிவந்த இந்த இதழுக்கு மங்களம்மாளும் அவரது புதல்வி புவனேஸ்வரிதேவியும் இணை ஆசிரியைகளாக இருந்துள்ளனர்.

இந்த இதழ்தான் இறுதியாக வெளிவந்த தமிழ்மகள் இதழ் என நினைக்கிறேன். இதில் சிலம்பு 17 என்றும் பரல் 1 என்றும் இலக்கமிடப்பட்டுள்ளது. 1927, 28இல் வெளிவந்த இதழ்கள் சிலம்பு 3 என்றே இலக்கமிடப்பட்டுள்ளன. எனவே இடையில் 14 தொகுதிகள் வெளிவந்திருக்க வேண்டும். ஆனால் எத்தனை இதழ்கள் என்பது தெரியவில்லை. இந்தக் கட்டரையை வாசிப்போர் எவராவது ஆர்வமுற்று தமக்குத் தெரிந்த தகவல்களால் காணப்படும் இடைவெளியை நிரப்பக்கூடும் என எதிர்பார்க்கிறேன்.

1969ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மங்களம்மாள் இறந்தார். அவரது மூத்த புதல்வியும் கலைப்புலவர் நவரத்தினத்தின் மனைவியுமாகிய மகேஸ்வரி 1974 இல் இறந்து விட்டார். இவர்கள் இருவருமே தமது பரம்பரை வீடான வண்ணார் பண்ணை பி.ஏ தம்பி லேன் வீட்டில் வசித்தவர்கள். இருவரினதும் மரணத்துக்கும் பின்னர் வண்ணார் பண்ணையிலிருந்த அவரது வீட்டில் இருந்த சஞ்சிகைப் பிரதிகள், ஏனைய பத்திரிகைகள், ஆவணங்கள் ஆகியவற்றைத் தேவையற்றவை எனக் கருதி வீட்டைச் சுத்தம் செய்தவர்கள் எரித்துவிட்டதாக அறிகிறேன். மங்களம்மாளின் புதல்வராகிய பாஸ்கரன் இதை எனக்குத் தெரிவித்தார்.

"அம்மாவும் அக்காவும் இறந்தபின் - வீட்டை Clean பண்ணி இருக்கிறான். அதுக்குள்ளை கன Valuable Documents எல்லாம். Paper cuttings அதுகள் எல்லாத்தையும் எரிச்சு போட்டான். அதெல்லாம் Waste papers என்றும் ......" (துனிப்பட்ட கடிதம் - 12.08.93)

பெண்களது ஆக்கங்கள், அவர்களது செயல்வாதம் பற்றிய தகவல்கள், ஆவணங்கள் ஆகியவை எவ்வளவு இலகுவாகவும் எவ்வித அக்கறையுமின்றியும இன்று அழிந்து போகின்றன என்பதற்கு மங்களம்மாள் பற்றிய இவ்விடயம் மிகச் சிறந்த உதாரணமாகும். இது பெண்கள் பற்றிய வரலாறு எழுதுவோருக்கு மிகுந்த சவாலை ஏற்படுத்தும் விடயமுமாகும்.

எனக்கு எதிர்பாராத வகையில் தமிழ்மகள் சஞ்சிகையின் 5 இதழ்கள் கிடைத்தன. இவை 1927ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1928 ஜுன் மாதம் வரை தமிழ்நாட்டில் வெளிவந்தவையாகும். இவை கிடைத்தவிதம் சுவாரசியமானது. 2008ஆம் ஆண்டு நான் பெண் எழுத்தாளர் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் இலக்கியத் துறைக்கு விமர்சகர் வேதசகாயகுமார் வந்திருந்தார். இலங்கைத் தமிழ் இலக்கியம் பற்றிய அவருடனான நீண்ட உரையாடலின் போது 20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் பெண்கள் நடத்திய சஞ்சிகைகள் பற்றிய கதை வந்தது. மங்களம்மாள் பற்றிக் குறிப்பிட்டு அவரது தமிழ்மகள் சஞ்சிகை இதழ்களை நான் தேடிக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். பழைய தமிழ்நாட்டுச் சஞ்சிகைகளைச் சேகரித்துத் தொகுத்து வைத்திருக்கும் ரோஜா முத்தையா நூல் நிலையத்திலும் தமிழ்மகள் இல்லாதது பற்றிக் குறிப்பிட்டேன். ஆனால் ஆச்சரியம்! சேதசகாயகுமார் தன்னிடம் சில இதழ்கள் இருப்பதாகவும் அவற்றின் பிரதிகளை திருவனந்தபுரத்தில் பல்கலைக்கழக நூலகத்திலிருந்து பிரதியெடுத்ததாகவும் குறிப்பிட்டார். மங்களம்மாளின் இளமைக்காலப் புகைப்படம் அதில் பிரசுரமாகியிருப்பது பற்றியும் கூறினார். திரு.வேதசகாயகுமார் அவர்களே அவரிடமிருந்த 5 இதழ்களின் பிரதிகளையும் பின்னர் எனக்கு அனுப்பி வைத்தார்.

இவ்வாறே தமிழ்மகள் சஞ்சிகையின் 5 இதழ்கள் எனக்குக் கிடைத்தன. அவையாவன,

சிலம்பு III பரல் 1 டிசம்பர் 1927
சிலம்பு III பரல் 2 பெப்ருவரி 1928
சிலம்பு III பரல் 2 ஏப்ரல் 1928
சிலம்பு III பரல் 4 மே 1928
சிலம்பு III பரல் 5 ஜீன் 1928

சிலம்பு III என இலக்கமிடப்பட்ட இதழுக்கும் 17 என இலக்கமிடப்பட்ட கடைசி இதழுக்கும் இடையில் எத்தனை இதழ்கள் வெளிவந்தன என்பதும் தெரியாது. இதன் இணையாசிரியையாகச் செயற்பட்ட தி.புவனேசுவரதேவியும் இறந்து விட்டார். இந்தச் சஞ்சிகையை மாதாந்தப் பத்திரிகையாக வெளியிடும் நோக்கமே மங்களம்மாளுக்கு இருந்தது. “பெண்களுட்கென ஓர் இனிய தமிழ் மாதாந்த பத்திரிகை” என சஞ்சிகைத் தலைப்பின் கீழ் அவர் எழுதியுள்ளார். ஆனால் இறுதி இதழின் “பெண்கள் முன்னேற்றங் கருதி வெளிவருவதோர் **இனிய தமிழ் வருடாந்தப் பத்திரிகை** என அவ்வாசகம் மாறியுள்ளது. இந்த மாற்றம் ஏன் நிகழ்ந்தது என்பதும் எப்போது மாதாந்தச் சஞ்சிகை வருடாந்தச் சஞ்சிகையாக மாறியது என்பதும் தெரியவில்லை.

### தமிழ் நாட்டிலிருந்து தமிழ்மகள் சஞ்சிகை

தமிழ் நாட்டிலிருந்து சஞ்சிகை வெளிவந்தபோது அதன் சிறப்பம்சமாகக் குறிப்பிடக் கூடியது அதில் வெளிவந்த புகைப்படங்களாகும். இக்காலகட்டத்தில் வெளியான ஏனைய

பெண்கள் சஞ்சிகைகளில் புகைப்படங்கள் இடம்பெறவில்லை. தமிழ்மகளில் தொடஉந்து இவை பிரசுரிக்கப்பட்டுள்ளன. இவை இடங்கள், நிகழ்ச்சிகள், நபர்கள் தொடர்பான புகைப்படங்களாகும்.

தனிநபர்களின் புகைப்படங்களில் பல பெண்களுடையவையாகும். உயர்கல்வி கற்று பரீட்சையில் சித்தியெய்தியோர், உயர் பதவிகள் பெற்றோர், கட்டுரைகள் எழுதியோர் முதலியோரது புகைப்படங்கள் இடம்பெற்றுள்ளன. ஏற்கனவே தமிழ் மகளை வெளியிடுவதில் நிதி நெருக்கடியை எதிர்கொள்வதாக அடிக்கடி அவர் கூறியபோதும் பணச் செலவைப் பொருட்படுத்தாமல் துணிந்து இதனைச் செய்தமை வாசகர்களைக் கவர்வதற்காக மாத்திரம் அல்ல, இவ்வாறு முன்னுக்கு வரும் பெண்கள் பாராட்டப்பட வேண்டும். அவர்களை சமூகத்தில் நிலைநிறுத்தல் வேண்டும் என்ற ஆவலும் காரணம் எனலாம்.

மங்களம்மாளுக்குத் தமிழ்மகளை வெளியிடுவதில் நிறைந்த பணக்கஷ்டங்கள் இருந்துள்ளன. எனக்குக் கிடைத்த சகல இதழ்களிலும் சந்தாப் பணத்தை நினைவுறுத்திக் குறிப்புகள் எழுதியுள்ளார். டிசம்பர் 1927 ஆம் ஆண்டு இதழில் எனது பத்திரிகை என்ற தலைப்பில் எழுதியுள்ள தலையங்கம் இது தொடர்பாக அவர் மிகுந்த மனவருத்தம் கொண்டிருந்தததை வெளிப்படுத்துகிறது.

“பொதுவே எமது நாட்டினதும் நாட்டு மக்களதும் முக்கியமாகப் பெண்மக்களது முன்னேற்றத்தைக் கருதியே இப்பத்திரிகை ஆரம்பிக்கப் பட்டது. அக்காலத்தில் என்னிடம் போதிய பொருள் இல்லாதிருந்தும் இத்தொண்டிற்கு எனது சகோதர சகோதரிகள் தங்களால் இயன்ற உதவி புரிவார்கள் என்ற முழு நம்பிக்கையுடனேயே எனது கைவசமிருந்த சிறுதொகைப் பொருளை இதற்காகச் செலவழித்தேன். அதன்பின் எனதெண்ணமும் நம்பிக்கையும் பொய்யாயிற்றென உணரலானேன.... எனது கஷ்டமும் நஷ்டமும் நான் தாங்கக் குடாத விதமான பாரமுடைய தென்பதைக் கண்டேன்..... நண்பர்கள் சந்தாத் தொகையை அனுப்புவதுடன் நில்லாது தங்கள் சினேகிதருள் ஒருவரையேனும் தமிழ்மகட்குச் சந்தாதாரராகச் சேரும்படி செயது அவரது சநதாப் பணத்தையும் முற்பணமாக அனுப்பி வைப்பின் அது எனக்குச் சொலற்கரிய பேருதவியாக முடியும். தமிழ்மகளும் தனது தொண்டைத தளராது ஆற்றி வருவாள்.”

மங்களம்மாள் மாசிலாமணி குடும்பம் 1925 ஆம் ஆண்டிலிருந்து 1928 வரை சென்னையில் வசித்ததாக அறிய முடிகிறது. இவர்கள் சென்னையில் புரசைவாக்கம் என்ற புதுநகர்ப் பகுதியில் வசித்தனர். இக்காலகட்டத்தில் மங்களம்மாளின் மூத்தபுதல்வி மகேஸ்வரி சாந்தி நிகேதனத்தில் கல்வி கற்றார். அங்கு இசை பயின்ற மகேஸ்வரி பிற்காலத்தில் கலைப்புலவர் நவரட்ணத்தைத் திருமணம் செய்தார். தமிழ்மகளில் இவரது கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. 1928 ஆம் ஆண்டின் மே, ஜூன் மாத தமிழ்மகள் இதழ்களுக்கு மங்களம்மாளும் மகேஸ்வரியும் இணை ஆசிரியைகளாக இருந்துள்ளனர்.

இக்காலகட்டத்தில் மங்களம்மாள் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்ததுடன் அதன் குழு உறுப்பினராகவும் இருந்தார் என அறிகிறோம். 1927 ஆம் ஆண்டு சேதுபாக்கத்தில் நிகழ்ந்த காங்கிரஸ் மகாநாட்டில் மங்களம்மாள் உரையாற்றினார். அத்துடன் 1928ஆம் ஆண்டு

சென்னை கார்ப்பொரேஸன் (மாநகரசபை) தேர்தலில் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்டதாகவும் அறிய முடிகிறது. எழும்பூர் தொகுதியிலேயே இவர் போட்டியிட்டார். ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த இன்னொருவரும் போட்டியிட்டதாகவும் மங்களம்மாளை தேர்தல் போட்டியிலிருந்து விலகும்படி அக்கட்சியைச் சார்ந்தவர்கள் கேட்டதாகவும் மங்களம்மாள் மறுத்தாகவும் அவரது புதல்வர் பாஸ்கரன் தெரிவித்தார்.

**ஆவணப்படுத்துதலிலும் வரலாற்றெழுத்தியலிலும் புதிய முறையியலின் தேவை**

பெண்களது ஆக்கங்களோ கருத்துகளோ அவர்களது சமூக அரசியற் செயற்பாடுகளோ பற்றிய அறிதல் புதிய ஒரு முறையியலை வேண்டி நிற்கிறது. சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட மக்கள், சாதி, பால் அடிப்படையில் இரண்டாவதாகக் கருதப்பட்டு புறந்தள்ளப்பட்டுள்ள பகுதியினர் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கபடபடுவதோ அவை வரலாற்றில் சேர்க்கப்படுவதோ என்றும் தவறிக் கொண்டே உள்ளன. வரலாறு எழுதுவோரின் கருத்து நிலையும் அதன் காரணமாக அவர்கள் கையாளும் முறையியலும் இதறகுக காரணமாகும். மரபு வழிப்பட்ட முறையியலைப் பயன்படுத்தி மரபு ரீதியான வரலாற்றை உருவாக்கும் போது அதற்குள் சமூகத்தின் சகல பகுதியினரும் பல்வேறு குழு மக்களும் உள்ளடக்கப் படுவதில்லை. சமூகத்தில் அதிகாரம்பெற்றிருக்கும் பகுதியினர் பற்றிய தகவல்களும் அவற்றை ஆதாரமாகக் கொண்ட அவர்களது வரலாறுமே உருவாக்கப்படுகிறது. இவ்வகையில் பால் அடிப்படையில் இரண்டாம் பட்சமானவராகக் கணிக்கப்படும பெண்களின் ஆக்கங்கள், செயற்பாடுகள் போன்றவை கருத்தில் கொள்ளாமல் விடப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளமை ஒரு பொதுப் போக்காகக் காணப்படுகிறது.

இவ்வகையில் ெப்ண்களின செயற்பாடுகள் அவை தொடர்பான தகவல்களை மரபு ரீதியான தகவல் திரட்டு முறையியபை பயன்படுத்தித் தேடமுடியாது. 1980களில் இந்தியாவில் உருவாகிய விளிம்புநிலை ஆய்வுகள் (subaltern studies) பெண்கள் போன்ற ஓரங்கட்டப்பட்ட மக்களின் வரலாறுகளை மீள உருவாக்குதல் தொடர்பான பல விவாதங்களையும் முன்வைத்தது.

வாய்மொழிக் கதைகள், நேர்காணல்கள், தனிப்பட்டோரது கடிதங்கள் தனிநபர்களின் நூல் சேகரிப்புகள் போன்ற மரபு வழிசாரா முலங்களைப் பயன்படுத்துவதன் ஊடாகவே இம்மக்களது வரலாற்றை உருவாக்கலாம்.

பெண்கள் தொடர்பான ஆவணப் பதிவுகள் செய்யும்போது இத்தகைய வழியையே பின்பற்ற வேண்டி வருகிறது. பெண்களது வரலாற்றை எழுதுவது எவ்வாறு என்ற விவாதம் வலுவாக நிகழ்கிறது. பார்தா சட்டர்ஜி, காயத்ரி ஸ்பீவக் போன்ற ஆய்வாளர்களின் இவ்விடயம் தொடர்பான கருத்துகள் மனங்கொள்ளத்தக்கவை.. "சுயசரிதைகளில் தவறவிடப்பட்ட சான்றுகளிலிருந்தே பெண்களின் வரலாறுகளைக் கட்டியெழுப்பலாம்" (Histoies of women can be written only out of the evidence left behind in autobiographies) என்ற பார்தா சட்டர்ஜியின் கருத்து இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.

மங்களம்மாள் மாசிலாமணியின் வாழ்க்கை, அவரது சமூக அரசியற் செயற்பாடுகள், அவர் வெளியிட்ட தமிழ்மகள் சஞ்சிகை ஆகியவை தொடர்பான விடயங்களை அறிவதற்கும்

ஆவணப்படுத்துவதற்கும் ஆதாரங்களைச் சேகரிப்பதிலும் காணப்படும் சிக்கல்களையும் இடைவெளிகளையும் கையாள்வதற்கு நான் மேலே சுட்டிக்காட்டியுள்ள முறையியல் பயன் தரும்.

இவ்வகையில் இந்த ஆவணப்படுத்தலுக்காக பின்வருவனவற்றை முடியும் வரை தேடுதல் வேண்டும்.

1. தமிழ்மக்கள் சஞ்சிகை இதழ்கள் - தமிழ்நாட்டிலும் திருவனந்தபுரத்திலும் உள்ள தனிப்பட்ட, நிறுவன நூல்நிலையங்களில் இவற்றைத் தேடலாம்.
2. 1900- 1971 ஆண்டு காலங்களில் இலங்கையில் வெளிவந்த ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியான - பத்திரிகைள், சஞ்சிகைகள்.
   தமிழ்நாட்டின் மங்களம்மாள் வாழ்ந்த காலப் பகுதியில் 1927-1929 இடையில் வெளியான பத்திரிகைகள், சஞ்சிகைகள்.
3. மங்களம்மாள் பற்றித் தெரிந்த, அவரது வாழ்வின் பிற்காலத்தில் அவருடன் பழகியோரின் நினைவுகள்.
   இவ்வழியின் தகவல்களைத் தேடி ஆவணப்படுத்தினால் மங்களம்மாள் பற்றியும் தமிழ்ம்கள் பற்றியும் பல்வேறு புதிய புரிதல்களுக்கு வழிவகுக்கக் கூடிய தகவல்களைப் பெறமுடியும்.

# ஆவணப்படுத்தலும் திருகோணமலையும்

**திருமலை நவம்**

ஈழத்தின் கிழக்கு என்று வர்ணிக்கப்படுகின்ற திருகோணமலைப் பிரதேசம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வனப்பும் வளமும் கொண்ட பிரதேசமாகும். வரலாற்றை தொட்டுக் காட்டிப் பேசப்படுகின்ற எல்லா ஆதாரங்களையும் தன்னிடத்தே கொண்டு, புராண இதிகாசப் பாரம்பரியங்களால் மிக நீண்டகாலத்திற்கு முன்பே பேசப்பட்டு, பல வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக இது விளங்கியிருக்கின்றது.

வடக்கு கிழக்குப் பிராந்தியங்களின் நடுநாயகமாகவும் இங்கு வாழும் மக்களின் வாழ்க்கைக் கோலங்களையும் பண்பாட்டு அடையாளங்களையும் இணைத்துக் காட்டும் பாலமாகவும் வடக்கின் வாழ்வியல் கலந்ததாகவும் காணப்படுவதே இதன் தனித்தன்மையாகும்.

இப்பிரதேசத்தின் முக்கிய அடையாளங்களாக சுட்டிக்காட்டப்படும் திருக்கோணேச்சரம், கன்னியா வெந்நீரூற்று, கங்குவேலி அகஸ்தியர் தாபனம், கந்தளாய்க் குளம், தம்பலகாமம் ஆதிகோணேச்சரர் ஆலயம், வெருகலம்பதி, கந்தளாய் சோழீஸ்வரம், திரியாய் விகாரை, வெல்கம் விகாரை, இலங்கைத்துறை முகத்துவாரம் போன்ற இன்னோரன்ன வரலாற்று புராண இதிகாச சின்னங்கள் இப்பிரதேசத்தின் தொன்மை பாடுபவையாகும்.

திருகோணமலை பிரதேசத்தின் பண்பாடு, கலை மற்றும் இலக்கியம் ஆகியவற்றின் நதிமூலமாகவும் ரிஷிமூலமாகவும் கூறப்படுவது திருக்கோணேச்சர ஆலயமாகும். கோணேசர் ஆலயத் தொன்மங்கங்களிலிருந்துதான் பண்பாடு, கலை மற்றும் இலக்கியங்கள் முகிழ்விடத் தொடங்கியுள்ளன என்பதை இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டதாக ஆதாரம் காட்டப்படும் 'கைலாசபுராணம்' (1887), 'கோணாசலபுராணம்', 'கோணேசர் கல்வெட்டு' (1916), 'திருகோணமலை புராணம்' (1909), 'திருக்கரசைபுராணம்' (1891), 'வெருகல் சித்திரவேலாயுதர் காதல்' (1886), 'கோணமலை அந்தாதி' (1806) போன்ற நூல்கள் வாயிலாக அறிந்து கொள்ளக்கூடியதாகவுள்ளது.

பிரதேசமொன்றின் பண்பாடு, விழுமியங்கள், வரலாற்று அம்சங்கள் மற்றும் வாழ்வியல் இருப்புக்கள் அனைத்தையும் அறிவு ரீதியான பதிவுகளாக கொள்பவை அங்கிருந்து வெளிப்படும் நூல்களாகும். நூல்கள் காலங் காலமாக மேற்கொண்டு வந்த அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பதிவுகள் எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலைமுறைக்கும் அடுத்துவரும் தலைமுறைக்கும் காவிச் செல்லும் வல்லமை படைத்தன. (நூற்தேட்டம் முன்னுரை என்.செல்வராசா நூ.தே 01)

அந்தவகையில் இவை முறையாக ஆவணப்படுத்த வேண்டுமென்பது நவீன தேவையாக இருக்கின்றது. ஆரம்பகாலத்தில் ஆவணப்படுத்தல் என்பது எழுத்து மூலப் பிரதிகளையே சேமித்தல் என்ற கருத்து நிலைப்பாடு கொண்டதாக இருந்த போதிலும் தற்பொழுது அவை பரந்தளவில் பார்க்கப்படுகின்றன. அதாவது,

1. நூல்கள், எழுத்து மூல ஆவணம்
2. காட்சி ஆவணப்படுத்தல்
3. ஒலி ஆவணப்படுத்தல்
4. குறியீடுகளும் சங்கேதங்களும்

எனப் பரந்தளவில் இன்று பேசப்படுகின்றன. பொதுவாகவே தரவுகளை பாதுகாத்து சேமித்தல் என்பது ஆவணப்படுத்தல் என அடையாளப்படுத்தப்படுகின்றது.

இலங்கை சார் ஆவணப்படுத்தலென்பதுஇ குறிப்பாக தமிழர் தம் தரவுகளை ஆவணப்படுத்தல் என்பது நலிவுத்தன்மை கொண்டதாகவுள்ளதென விமர்சிக்கப்படுகிற அதேவேளை திருகோணமலை போன்ற பல்லின மக்கள் வாழ்கின்ற பிரதேசத்தில், தமிழ் மக்களின் நூல்சார் ஆவணப்படுத்தல் உட்பட சகல விடயங்களுமே மிக மிக குறை போக்குக் கொண்டதாகவே காணப்படுகின்றது.

திருகோணமலைப் பிராந்தியத்தின் மரபுசார் ஆவணப்படுத்தலை தொகுதிவாரியாக இவ்வாறு குறிப்பிடலாம்.

1. கல்வெட்டுக்கள்
2. நூல்கள்
3. போர்கால தரவுகள்
4. காட்சி ஆவணங்கள்
5. நிர்வாக ரீதியான ஆவணங்கள்
6. ஏனையவை

இவற்றில் எழுத்து மூலமான ஆவணங்களான நூல்களை, குறிப்பாக அவற்றை ஆவணப்படுத்தலும் திருகோணமலையும் என்ற விடயத்தையே கருத்தில் கொள்ள விரும்புகிறேன். கல்வெட்டுக்கள்இ போர்கால தரவுகள் பற்றியதுமான விடயங்களை தேவை கருதி ஆங்காங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திருகோணமலைப் பிராந்தியத்தின் நூல்கள், கலைகள், பண்பாட்டு விழுமியங்கள், வரலாறுகள் என்பன பல கிளை வகைப்பட்டதாக இருந்தபோதிலும் நூல்கள் என்ற வகையில் என்னால் அடையாளப்படுத்திக் காட்டப்படுவது,

1. புராண நூல்கள்
2. நவீன இலக்கியங்கள் (ஆரம்ப கால இலக்கியங்கள்)
3. தற்கால இலக்கிய கலை விபரங்கள்

என்பவையே ஆகும். இவற்றை இன்னுமொருவகையில் கால அடிப்படையில் இவ்வாறும் சொல்லிக் கொள்ளலாமென நினைக்கிறேன்.

1. ஆரம்பகால நூல்கள்
2. இடைக்கால நூல்கள்
3. தற்கால நூல்கள்

திருகோணமலையின் ஆரம்பகால நூல்கள் என அடையாளமிட்டுக் காட்டப்படுபவை, புராண இதிகாச நூல்களாகும். இதில் மேலே என்னால் எடுத்துக்காட்டப்பட்ட புராண இதிகாச நூல்களில் காலத்தால் முந்தியதாக எடுத்துக் கூறப்படும் 'தட்சணகைலாயபுராணம்' (1887), 'கோணேசர் கல்வெட்டு' (1916), 'திருகோணமலைபுராணம்' (1909), 'திருக்கரசைபுராணம்' (1891), 'வெருகல் சித்திரவேலாயுதர் காதல்' (1885), 'கோணமலை அந்தாதி' (1806) என்பன திருகோணமலைப் பிராந்திய நூல்களை ஆவணப்படுத்தலில் முதன்மை பெறுகின்ற நூல்களாகும்.

ஈழத்தில் எழுந்த சுமார் 40 புராண நூல்களிலும் மூத்த புராணமாக 'தட்சணகைலாயபுராணம்' மதிக்கப்படுகின்றது. திருக்கோணேச்சரம் உன்னதமான நிலையில் அமைந்திருந்த காலத்தில் அதனை களமாகக் கொண்டு தலத்தின் தோற்றம், ஆதிவரலாறு, பற்றிய இதிகாசக் கதைகளைக் கொண்டதாக இது காணப்படுகின்றது.

இந்நூல் எழுந்த காலம் பற்றியும் எழுதிய நூலாசிரியர் பற்றியும் மாறுபட்ட கருத்துக்களும் ஆய்வுகளும் காணப்படுகின்றன. க.சிதம்பர ஐயர் அவர்களின் பதிப்பில் (1887) இது யாழ்ப்பாண மகாவித்துவான் சிங்கை செகராசசேகரன் (1380-1414) இயற்றியது எனக் கூறப்பட்டுள்ளது. இதன் பின்பு வெளிவந்த பு.பொ.வைத்தியலிங்கதேசிகர் அவர்களின் பதிப்பில் (1916) பிரம்மஸ்ரீ பண்டிதராசா அருளிச் செய்தது என்று கூறப்பட்டுள்ளது. இந் நூலை சிவசிதம்பரஐயர் 1887 இல் சென்னையில் பதிப்பித்துள்ளார். அதன் பின் வைத்தியலிங்கதேசிகர் பருத்தித்துறை கலாநிதி இயந்திரசாலையில் (1916) பதிப்பித்துள்ளார். திருகோணமலை பிரதேசத்தைப் பொறுத்தவரை கைக்கெட்டிய ஆவணப்படுத்தப்பட்ட நூல்களில் இதுவே மூத்த பிள்ளை என்று கூறப்படுகின்றது.

18 ஆம் நூற்றாண்டில் சந்தானப் புலவர் ஒருவரால் பாடப்பட்டதாக கூறப்படும் 'திருக்கரசை புராணத்தை' திருகோணமலை அறிஞர் வே. அகிலேசபிள்ளை என்பார், 1891 வைகாசி மாதம் சுன்னாகம் சு.குமாரசாமி புலவரின் பொழிப்புரையோடு பதித்துள்ளார். இதன் இரண்டாம் பதிப்பு 1975 ஆம் ஆண்டு வெளிவந்தது.

பண்டிதராசர் காலத்தில் வாழ்ந்த கவிராசர் என்னும் புலவரால் இயற்றப்பட்ட 'கோணேசர் கல்வெட்டு', பு.பொ.வைத்தியலிங்க தேசிகர் என்பவரால் 1916 ஆம் ஆண்டு தட்சண கைலாயபுராணத்துடன் சேர்த்து பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. இதனை 'கோணேசர் சாசனம்' எனவும் 'திருகோணமலை கல்வெட்டு புராணம்' எனவும் குறிப்பிட்டுள்ளார்.

குளக்கோட்டன் மன்னன் கோணேசர் ஆலயம் பற்றியும் அதனை நிர்வாகம் செய்யும் சட்ட திட்டங்கள் பற்றியும் விரிவாகக் கூறியுள்ள விடயங்களே செப்பேட்டுப் பெரிய வளமைப் பத்தியிற் பொறித்து வைக்கப்பட்டிருந்தன. அந்த விடயங்களை தொகுத்தும் விரித்தும் கவிராசர் பாடியுள்ள பாடல்களும் உரைநடையுமே கோணேசரர் கல்வெட்டாகும்.

இக்கல்வெட்டு நூலை வல்லை க.சின்னத்தம்பிப்பிள்ளை (1887), வைத்தியலிங்கதேசிகர் (1916), அகிலேசபிள்ளை, அழகக்கோன் (1950) ஆகியோர் பதிப்பித்துள்ளனர். திருகோணமலை பிரதேசத்தின் ஆவணப்படுத்தல் முறைகளை ஒரு நேர் சீரான முறைக்கு கொண்டு வந்தவர்களாக குறிப்பிட்டுக்காட்டக் கூடியவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்களான திருகோணமலை அறிஞர்களான,

1. அகிலேசபிள்ளை (1853 - 1910)
2. தி.த.இ.கனகசுந்தரப்பிள்ளை (1863 - 1922)
3. பண்டிதர் த.த. சரவணமுத்துப்பிள்ளை (1867 - 1922)
4. எஸ்.இன்னாசித்தம்பி (1891)
5. மூதூர் புலவர் சாவையர்
6. தோப்பூர் குப்பைத் தம்பி புலவர் (1868 - 1922)
7. உமறு நெய்னாப்புலவர் (1907 - 1963)

ஆவர். இன்னும் பல அறிஞர்கள் இக்காலப்பகுதிக்குள் உள்ளடங்கியிருக்கின்ற போதும் எடுத்துக் கொண்ட ஆவணப்படுத்தல் முறைமைக்குள் சேராமையே அவர்கள் விடுபடுவதற்குரிய காரணங்களாகும்.

பழந்தமிழ் இலக்கியங்களில் பாண்டித்தியமும் சைவத் தமிழில் ஆழ்புலமையும் நிரம்பப் பெற்ற அகிலேசப்பிள்ளையவர்கள், குமாரவேலுப்பிள்ளை மற்றும் தையல்பாகப்பிள்ளை ஆகியோரிடம் இலக்கண இலக்கியங்களையும் ஆங்கிலத்தையும் கற்றுத் தேர்ந்து, ஆசிரியராகவும் மற்றும் அதிபராகவும் கடமையாற்றினார். இவ்வறிஞர் திருகோணமலைப் பிரதேசத்தின் பழந்தமிழ் ஏடுகளை நூலாக்கும் பேரார்வத்துடன் இரவு பகலாக தேடிச் சேர்த்து பதிப்பித்தமைக்கு மூலகாரணமாக அமைந்ததுஇ யாழ். நல்லூர் ஆறுமுகநாவலரஇ சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றோரின் வழிகாட்டல்களாகும்.

இவர் 'திருக்கரசைபுராணம்', 'சித்திரவேலாயுதர் காதல்', 'நரேந்திரன் சிங்கன் பள்ளு', 'கோணேசர் கல்வெட்டு', 'திருகோணமலைபுராணம்' என சுமார் 21 நூல்களை எழுதியும் பதிப்பித்தும் உள்ளார். (ஆதாரம் புலவர் வை.சோமாஸ்கந்தர் 'கோணேஷ்வரர்') இவர் இயற்றிய நூல்களில் பிரபல்யம் பெற்றிருப்பது 'திருகோணாசல வைபவம்' (1889) எனும் வசன நூல் மற்றும் 'கண்டி நாடகம்' என்னும் கூத்தும் (1887) ஆகும். இதன் மூலப் பிரதி அவரின் உறவினர்களிடம் இருந்த போதும் அச்சுவாகனம் ஏற்றப்படவில்லை.

அகிலேசபிள்ளையுடன் சேர்த்து மதிக்கப்படவேண்டிய இன்னோர் அறிஞர் தி.த. கனகசுந்தரம் பிள்ளையாவார் (1863-1922). இவா் யாழப்பாண அறிஞர்களான கதிரவேற்பிள்ளை, கணேசபண்டிதர் ஆகியோரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்று சென்னை செல்வநாயகர் மத்திய பாடசாலையிலும் பச்சையப்பன் கல்லூரியிலும் பயின்று பி.ஏ, பி.எல். பட்டத்தையும் பெற்றுக் கொண்டவர். தமிழ்இ ஆங்கிலம் மற்றும் சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்கவராக காணப்பட்ட இவர் சென்னை கிறிஸ்தவ கல்லூரியின் தமிழ் பேராசிரியராக கடமையாற்றி பல்வேறு தொண்டுகளை செய்துள்ளார். இவரின் பல்துறை சார்ந்த ஆற்றலை பின்வரும் துறைகளாக நோக்க முடியும்.

1. தமிழ் பேராசிரியர்
2. பதிப்பாசிரியர்
3. உரையாசிரியர்
4. மொழிபெயர்ப்பாளர்
5. சொற்களஞ்சிய ஆசான்

திருகோணமலை மண்ணில் கோணேசர் கலாசாரத்தின் அடியுறை தன்மையை வெளிக்கொண்டு வரவேண்டுமென்ற நோக்கில் இவர் இயற்றிய

1. திருகோணமலை முத்துக்குமாரசுவாமி வெண்பா
2. குயிற்பத்து

என்பன விளங்குகின்றன. சி. வை. தாமோதரப்பிள்ளை, ஆறுமுகநாவலரோடு ஒப்ப மதிக்கப்படும் அறிஞராக தி.த.க. விளக்கினார் என்பதனை அவரின் பணிப்பாற்றல் பணிகள் தெரியப்படுத்துகின்றன. இவரால் தொகுத்து பதிப்பிக்கப்பட்ட நூல்களாவன,

1. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் (உரையாசிரியர் - நச்சினார்கினியர்)
2. தொல்காப்பியம் சொல்லதிகாரம் (உரையாசிரியர் - சேனாவரையர்)
3. கம்பராமாயணம் (பாலகாண்டம்)
4. தமிழ் நாவலர் சரிதை
5. ஈழ மண்டல தேவாரம்
6. ஈழ மண்டல திருப்புகழ்

இவைஇவரின்குறிப்புரையுடனும்முகவுரையுடனும்காணப்பட்டநூல்களாகும். எஸ்.வையாபுரிப்பிள்ளை, டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர், அ.நாராயணசாமி ஐயர், ரி.செல்வகேசவராய முதலியார் ஆகிய அறிஞர்களுக்கு நூல்கள் தொகுக்க உதவினார். சென்னை அரசாங்கம் வெளியிட்ட 'தமிழ் லெக்ஸிகன்' என்ற பேரகராதியை உருவாக்குவதில் உதவி ஆசிரியராக கடமையாற்றியுள்ளார். ஆங்கில மொழியில் கம்பராமாயணத்தின் கிட்கிந்தா காண்டம் மற்றும் சுந்தர காண்டத்தை மொழிபெயர்ப்பு செய்துள்ளார். கட்டுரைச் சுருக்கம் கருதி இனி இடைக்கால நூல்களின் ஆவணக்காப்பை நோக்குவோம்.

## இடைக்காலம்

இடைக்காலமென என்னால் சுட்டிக்காட்டப்படுவது 19 ஆம் நூற்றாண்டுகால நவீன அல்லது மறுமலர்ச்சி இலக்கியங்கள் என்று குறிப்பிடப்படுகின்ற

1. மறுமலர்ச்சிக் கவிதைகள்
2. நாவல்
3. சிறுகதை
4. நவீனநாடகம்
5. பாரம்பரிய இசை
6. மெல்லிசை

7. நடனம்
8. சிற்றிதழ்கள்
9. விமர்சனம்
10. அகராதி
11. சமய நூல்கள்
12. வரலாற்று நூல்கள்
13. நாட்டாரியல்
14. ஏனையவை

ஆகிய நவீன வடிவங்களின் பிறப்பும் திருகோணமலைப் பிராந்தியத்தில் அவற்றின் ஆவணமுறை எவ்வாறு இருந்தது என்பது பற்றியும் நோக்குவதாகும்.

இக்காலப்பகுதியில் திருகோணமலைப் பிரதேசத்தில் எல்லாவகை இலக்கியங்களும் கலைகளும் ஏனைய நூல்களும் கணிசமான அளவு பிறப்பெடுத்தபோதிலும் இவற்றின் ஆக்கிகளாலோ நிறுவனமயப்படுத்தப்பட்ட அமைப்பினாலோ ஆவணப்படுத்தல் என்பது குறை போக்கும் தன்மை கொண்டதாகவே இக்காலப்பகுதியில் காணப்பட்டது என்று கூற முடியும்.

உதாரணமாக ஈழத்தின் மூத்த நாவல்கள் என்ற வரிசையில் எழுந்த 'ஊசோன் பாலந்தை கதை', 'மோகனாங்கி' என்னும் இரு நாவல்கள் திருகோணமலை அறிஞர்களான முறையே எஸ்.இன்னாச்சித்தம்பி பண்டிதர், சி.த.சரவணமுத்துப்பிள்ளை ஆகியோரால் படைக்கப்பட்டு அச்சு வாகனம் ஏறியுள்ளது.

எஸ். இன்னாச்சித்தம்பி என்பார் 'ஊசோன் பாலந்தை கதை' என்னும் நாவலை (1891) யூலை மாதத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். 'orzon and valentine' என்னும் போர்த்துகீச நெடுங்கதையை ஆதாரமாகக் கொண்டே இந்நாவல் எழுதப்பட்டுள்ளது. 'மேகவர்ணன்', 'தாமோதரன்', 'இரத்தினசிங்கம்' ஆகிய ஈழத்து நாவல்களைப் பதிப்பித்த எஸ் தம்பிமுத்துப் பிள்ளை என்பவரால் இந்நாவல் முதன் முதலாக சிறிய எழுத்தில் 90 பக்கம் கொண்டதாய் 1500 பிரதிகள் கொண்டதாய் பதிப்பிக்கப்பட்டிருந்தது.

இதன் இரண்டாவது பதிப்பு 1924 இல் அச்சுவேலியில் உள்ள சா.ஞானப்பிரகாச சுவாமி பரிசோதித்து பதிப்பித்துள்ளார். இதில் கவனத்தில் கொள்ளப்படவேண்டிய விடயமென்னவென்றால் அச்சுக்கூட வசதி இல்லாமை காரணமாகவே இந்நூல் யாழ். அச்சுவேலியில் பதிப்பிக்கப்பட்டது.

இதே போன்றே தமிழின் முதல் வரலாற்று நாவலான 'மோகனாங்கி' என்னும் நாவலை பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை 1895 இல் இந்தியாவில் வெளியிட்டார். வரலாற்றை அடிப்படையாகக் கொண்ட இந்த நாவவில் தஞ்சை திருச்சி நாவலர் பரம்பரையை பாத்திரமாகக் கொண்ட ஒரு வரலாற்று நாவலாகும்.

மேலும் சரவணத்துப்பிள்ளை அவர்கள் 'தத்தைவிடு தூது', 'முத்துகுமாரசுவாமி இரட்டை மணிமாலை', 'முத்துகுமாரசுவாமி ஊஞ்சல்', 'வாகைமாலை', 'பிரிவாற்றாமை', 'ஒரு சமரகவி', 'கதலாற்றாமை' ஆகிய நூல்களை இவர் 1892 இல் எழுதினார் என்றும் இவற்றில் 'தத்தைவிடு

தூது', 'இரட்டை மணிமாலை', 'முத்துகுமாரசுவாமி ஊஞ்சல்', 'வாகைமாலை' ஆகியன திருகோணமலைத் தலப்பெருமை பற்றி பாடுபவை என்றும் கூறப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் வ.சு.இராசரத்தினம், ந.பரமேஸ்வரி, க.அருள் சுப்பிரமணியம், எழிலோன் ஆகியோர் நாவல் இலக்கியத் துறையில் ஆர்வம் காட்டியமையால் எழுந்த நாவல்கள் அச்சுவடிவம் பெற்றவையாகவே வெளிக்கொண்டுவரப்பட்டன.

இது போலவே மறுமலர்ச்சிக் கவிதைகள், சிறுகதைகள் மற்றும் நாடக கலைகள் பற்றிய நோக்குகைகளில், சிறுகதைகளின் பிதாமகன் என்று குறிப்பிடப்படுகின்ற வ.அ.இராசரத்தினம் (1925-2001) எழுதிய 'தோணி' சிறுகதையே திருகோணமலைப் பிரதேசத்தில் அச்சுவாகனம் ஏறிய முதல் சிறுகதைத் தொகுதியாகும். 'தோணி' (1962) 15 சிறுகதைகள் கொண்ட தொகுதியாகவும் அதனைத் தொடர்ந்து 'ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது' (1996), 'கடலோரக் கவிதைகள்', 'கொட்டியாரக் கதைகள்' (1999), 'ஐந்திணைக் கதைகள்' (2000) ஆகிய ஐந்து சிறுகதைத் தொகுதி இவரால் பதிப்பித்து வெளியிடப்பட்டது.

இவரைத் தொடர்ந்து தருமு சிவராமுஇ ந.பாலேஸ்வரிஇ தி.அரியநாயகம்இ சி.விசுவலிங்கம்இ தா.பி.சுப்பிரமணியம்இ சித்தி அமரசிங்கம் போன்றவர்கள் இடைக்கால எழுத்தாளர்களாக இருந்தபோதிலும் இதில் பலருடைய படைப்புக்கள் அச்சு வடிவம் பெறாமல் இருக்கின்றது.

கவிதைத் துறையில் திருகோணமலையில் தருமு சிவராமு (1939-1997) தொடக்கம் இன்றுவரை மாவட்டத்தில் தமிழ்இ முஸ்லிம் கவிஞர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் அத்துறையில் நாட்டம் கொண்டவர்களாக இருந்த போதிலும், இக்கவிஞர்களின் அனைத்து ஆக்க வெளிப்பாடுகளும் அச்சிலேறியுள்ளது எனக் கூறமுடியாது.

நவீன கவிதைப் போக்குக்கு திருகோணமலையில் வித்திட்ட முன்னோடி என்ற வகையில், சிவராமு தனது மாணவப் பருவத்திலிருந்து எழுத முற்பட்டபோதும் அவரை இலக்கிய உலகுக்கு அறிமுகப்படுத்திய பெருமை சி.சு.செல்லப்பாவை ஆசிரியராகக் கொண்டு சென்னையில் வெளிவந்த எழுத்து சஞ்சிகையையே சாரும். திருகோணமலையில் பிறந்து 1972 ஆம் ஆண்டு தமிழகத்திற்கு புலம் பெயர்ந்து சென்றுவிட்ட தருமு சிவராமுவினது,

விமர்சன மீட்சிகள் -1996
விமர்சன ஊழல்கள் -1982
விமர்சனாஸ்ரமம் -1995
நட்சத்திரவாசி (நாடகம்) -1993
கைப்பிடியளவு கடல் (கவிதை) -1976
மேல் நோக்கிய பயணம் (கவிதை) -1980
கண்ணாடியுள்ளிருந்து (கவிதை)
லங்காபுரி ராஜா (குறுநாவல்) -1988

தமிழின் நவீனத்தவம் (விமர்சனம்) -1986
ஆயி (குறுநாவல்) -1990
படிமம்
தியானதாரா
ஸ்ரீலங்காவின் தேசியத்தற்கொலை (கட்டுரை) -1984

போன்ற படைப்புக்கள் மூலம் தமிழகத்திலே ஆவணத்தன்மை உள்ளது எனக் குறிப்பிட முடியும். இவை அனைத்தும் தமிழகப் பரப்பிலையே நூல் உரு கொண்டுள்ளது என்பது கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய விடயம். இவரோடு அண்டிய காலத்தைச் சேர்ந்த கிண்ணியா அண்ணல் (1930-1974) ஆக்கிய கவிதைகள் (1945-1964) 'அண்ணல் கவிதைகள்' என்ற தலைப்பில் 1964 ஆம் ஆண்டு கிண்ணியா முற்போக்கு மன்றத்தினர் வெளியிட்டுள்ளனர். இவரின் பின்னே கவிதைத் துறையை அலங்கரித்தது, திருகோணமலை கவிராயர் தா.சி. விஸ்வராஜன் (1930-1990) பல நூறு கவிதைகள், நையாண்டிக் கவிதைகள், அரசியல் கவிதைகள் என எழுதியபோதும் அவரின் மரணத்தின் பின்பே சோலை வெளியீடாக 'கயல்விழி' (1995) கவிதை நாடகம் அச்சுப்படுத்தப்பட்டது. இவரது ஆக்கங்கள் வீரகேசரி, சுதந்திரன், தினகரன், தினபதி, சிந்தாமணி உடா, குங்குமம் போன்ற பத்திரிகைகளிலும்இ சஞ்சிகைகளிலும் பெருமளவு வெளிவந்தபோதும் அவை கால வெள்ளத்துக்குள் அகப்பட்டு காணாமல் போனதென்றே சொல்ல வேண்டும்.

இவரைத் தொடர்ந்து எமது கவனத்திற்கு உள்ளாக்கப்படுகின்ற கவிஞர் தாமரைத் தீவான். 1956 ஆம் ஆண்டு முதல் இவர் எழுதி வந்தபோதும் 1992 ஆம் ஆண்டே கவிஞர் மைக்கல் கொலின் 'தாகம் கலை இலக்கிய வட்டத்'தின் மூலம் இவரது முதலாவது தொகுதியான கீறல் (1992) வெளிவந்தது. இதுவரை இவரது 10 க்கும் மேற்பட்ட நூல்கள் அச்சுவாகனம் ஏறியுள்ளன.

திருகோணமலை பிரதேசத்தின் நடுக்கால கவிஞர்களான ஈழவாணன், புரட்சிபாலன், எஸ்.அருளானந்தம், நிலாதமிழின் தாசன், மூதூர் முகைதீன், சி.சிவசேகரம், அஸ்ரப்பா நூர்தீன், சு.கௌரிதாசன், மைக்கல் கொலின் போன்றோரின் கவிதைகள் அச்சிலேறிய போதிலும், நடுக்காலமென என்னால் குறிப்பிடப்படும் 1960 முதல் 2000 ஆம் ஆண்டு வரையுள்ள காலப்பகுதியில் இத்துறையை அலங்கரித்துக் கொண்டிருந்த மலைமதிச் சந்திரசேகரம், க.கணேஷ்வரன், தம்பி தில்லை முகிலன், செ.நவசோதிராஜா, செல்வமணி வடிவேலு, கே.கே.மதிவதனன், சண்முகப்பிரியா, மா.வி.ஆனந்தன், துரைராஜா, போன்றவர்களின் கவிதைகள் இன்று வரை அச்சு வடிவமோ ஏனைய ஆவண வடிவங்களைப் பெறவில்லையென்றே கூற வேண்டும்.

இத்துறை தவிர ஏனைய துறைகளான சிற்றிதழ், நவீன நாடகம், பாரம்பரிய இசை, வரலாற்று நூல்கள் ஆகியவற்றின் ஆவணப்படுத்தல் முறை மிக மிக அருந்தலாகவேயுள்ளன. இருந்த போதிலும் சிற்றிதழ்கள் என்ற வகையில் திருகோணமலைப் பிரதேசத்தில் வெளிவந்த 'அல்லி' (1950), 'மாதர்மதி மாலிகை' (1930)இ 'எரிமலை' (1953) என சுமார் 10 க்கு மேற்பட்ட சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் வெளிவந்த போதும் தமது குறுகியகால இருப்போடு அவை மரணித்துப் போய்விட்டன.

நாடகத்துறையின் பதிவுத் தன்மையும் கலைத்துறை சார்ந்த பதிவுத்தன்மையும் மிக மிக ஏழ்மை நிலை பெற்றிருப்பதையே இப்பிரதேசத்தில் காண முடிகின்றது. பாரம்பரிய இசை வளர்ச்சி அங்கொன்றும் இங்கொன்றுமாக அடையாளப்படுத்தப்பட்டமைக்கு உதாரணமாக 1947 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தட்சண கானசபாவை குறிப்பிட முடியும். 12 ஆம் நூற்றாண்டிலிருந்து கோணேச்சரம் சார்ந்த இசை மரபொன்று வளர்ந்து வந்துள்ளதை கோணேசர் கல்வெட்டின் மூலம் அறிந்த போதும் முறையான விவரணங்களைப் பெற முடியாமல் உள்ளது என்பதே உண்மை.

தற்காலம் அல்லது நடைமுறைக்காலம் என்று என்னால் வரையறுத்து காட்டப்படுகின்ற 2000 ஆம் ஆண்டுக்கு பின்னுள்ள காலப்பகுதியில் திருகோணமலைப் பிரதேசத்தின் ஆவணப்படுத்தல் முறையில் ஒரு உயிரோட்டமான தன்மை பெறுவதினை காண முடிகின்றது. அதற்குரிய காரணமாகக் கூறக்கூடியவை நவீன தொழிநுட்ப வளர்ச்சியினை உள்வாங்கிக் கொண்டதன் காரணமாக இம்மாற்றம் நிகழ்ந்திருக்கலாம் என எண்ணுகின்றேன்.

ஆரம்ப இடைக்காலங்களில் அச்சுயந்திர வசதி பெரிதும் வளர்ச்சியடையாத ஒரு பகுதியாகவே இப்பிரதேசம் இருந்து வந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக திருகோணமலை பிரதேசத்தின் அச்சு வடிவ வெளியீடுகள் சான்று பகருகின்றன. ஆனால் தற்போதைய தொழிநுட்பம்சார் மாற்றம் அதற்கு மேலாக உலகமயமாக்கல் என்னும் கைங்கரியங்களுக்கு மத்தியில் நவீன வெளியீட்டுத்துறை புது மெருகும் புதிய வடிவமும் பெற்றிருக்கின்ற நிலையில் சகல துறைகளுக்குமான ஆவணப்பேணல் கணிசமான முன்னேற்றங்களை கண்டுள்ளமையை சகல துறைகளிலும் அவதானிக்கலாம்.

குறிப்பாகச் சொல்லப் போனால் திருகோணமலையை சார்ந்த விடயங்கள் நூல் வடிவில் காட்சி ஆவணப்படுத்தல், ஒலி ஆவணப்படுத்தல், குறியீடுகளும் சந்தேகங்களும் எனப் பரந்தளவில் பேணப்பட்டுவரும் ஒரு காத்திர நிலை பெற்றிருப்பதை தற்பொழுது அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இதற்குரிய காரணங்கள் புலப்பெயர்வின் தொடர்பாடல் விரிவாக்கமும் நவீன தொழினுட்ப மாற்றமுமேயாகும். உதாரணமாக திருகோணமலைசார் புள்ளி அல்லது தரவு சேமிப்பு என்ற அடிப்படையில் ஐரோப்பிய நாடுகளான டென்மார்க், இங்கிலாந்து, கனடா, ஜேர்மன் போன்ற நாடுகளில் வாழும் புத்திஜீவிகள் இதை மேற்கொண்டு வருவதை அண்மையில் (2012) வெளிவந்த டென்மார்க் சு.குமாரதுரையின் 'இலங்கை அரசியல் வரலாறு இழப்புகளும் பதிவுகளும்' கலாநிதி கனகசபாபதி சரவணபவனின் 'காலனித்துவ திருகோணமலை' (2012), 'வரலாற்று திருகோணமலை' (2003) மற்றும் 'ஜேர்மன்-தமிழ்இ தமிழ்-ஜேர்மன் அகராதி' (1992), 'டச்சு-தமிழ், தமிழ்-டச்சு அகராதி' (1997) ஆகியவை ஐரோப்பா மற்றும் ஏனைய நாடுகளில் சேமித்து வைத்த தரவுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை என்பது இங்கு நினைவூட்ட வேண்டிய விடயம். இருந்த போதிலும் உள்ளக ரீதியான ஆவணப்படுத்தல் என்பது மிகக் குறைவாகவே காணப்படுகின்றது, என்பதற்கு போர்காலப் பதிவுகள், அரசியல் பதிவுகள், தொல்பொருள்சார் வடிவங்கள், காட்சியாவணப்படுத்தல் இன்னும் வளர்தெடுக்கப்படவேண்டிய நிலையிலுள்ளமை தக்கசான்றாகும்.


தமிழ்மொழியும்
இலக்கியமும்

# தமிழில் பதிவாகும் சுவர்க் கவிதைகளும் அவற்றின் ஆவணப்படுத்தலும்

சஞ்சீவி சிவகுமார்

**பொழிப்பு:**

மனிதன் தன் உணர்வுகளான ஏக்கங்கள், சஞ்சலங்கள்,அடக்கமுடியாத ஆசைகள், மகிழ்ச்சிப் பூரிப்பு, பரபரப்பு, அறிவார்ந்த கருத்தியலை வெளிப்படுத்தும் அவா என்பவற்றை பதிவிக்கவும் வெளிப்படுத்தவும் பல்வேறு கலை இலக்கிய முன்னெடுப்புகளை நாடுகின்றான். அவன் தன் உணர்வுகளை வந்த இடத்திலே வந்த மாத்திரத்திலே பதிவிக்க முயலுகின்றான். இவ்வாறு அச்சு ஊடகங்களுக்கும் இலத்தினியல் ஊடகங்களுக்கும் வெளியில் முறைசார வெளியீடுகளாக அல்லது அனாமதேயப் பதிவுகளாக வெவ்வேறுபட்ட தளங்களான சுவர்கள், மதகுகள், பாடக் கொப்பிகளின் பின்புறம், வகுப்பறை, மலசலகூடச் சுவர்கள், விடுதிச் சுவர்கள், நூலகமேசைகள் எனப் பல்வேறு இடங்களிலும் எழுதப்படும் கவிதைகளை தொகுப்பதும் அவற்றின் வெளிப்படுத்தல் தன்மை, பாடுபொருள், உளவியல் தன்மை, சமூக நோக்கு, என்பவற்றை ஆய்வு செய்வது இவ்வாய்வின் நோக்கங்களாகும்.

இந்த நோக்கில் பல்வேறு இடங்களிலிருந்து திரட்டப்பட்ட சுவர்க் கவிதைகள் கொள்கை வெளிப்பாட்டு சுவர்க் கவிதைகள், காதலும் அழகுணர்சியும், காதல் தோல்வி, நட்பும் பிரிவும், நகைச்சுவையும் பரிகாசமும், போரும் அதன் விளைவுகளும், வாழ்வியல் முரண்பாடுகள், விளிப்புணர்வுக் கவிதைகள் ஆகிய பாடுபொருள் தலைப்புகளின் கீழ் நயங்காணப்பட்டன.

உணர்வுகளின் வடிகால்களாக அமைந்து மக்களின் பல்வேறுபட்ட வாழ்வியல் பண்புகள் மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றிய பதிவுகளாகவும் சமூகத்தின் உணர்வுகளை போலித்தனத்திற்கும் அழுத்தங்களுக்கும் வெளியில் நின்று சமூகத்தின் வெளிப்படைத்தன்மையான முகத்தைக் காட்டும் கண்ணாடியாகவும் சுவர்க் கவிதைகள் விளங்குகின்றன. தொடர்ச்சியான வெளிப்பாடுகளாக பதிவாகும் சுவர்க்கவிதைகளை ஆவணப்படுத்திவது நீண்ட இலக்கியத் தேடலும் முயற்சியுமாக அமையும். ஆயினும் இவை ஆவணப்படுத்தப் பட வேண்டியது அவசியமிக்காதாகும்.

## 1. அறிமுகம்

மனித உணர்வுகளின் வடிகால்களாக இலக்கியங்கள் பன்னெடுங் காலமாக இயங்கி வருகின்றன. தம் உணர்வுகளை வெளிப்படுத்த பல்வேறு கலை இலக்கிய முன்னெடுப்புகளை மனிதன் பயன்படுத்தி வந்துள்ளான். இத்தகைய உணர்வு வெளிப்பாடுகள் எழுத்தறிவு இல்லாத காலத்தில் வாய்மொழி இலக்கியங்களாகவும், நாட்டார் வழக்கியலாகவும் பரவி இருந்தன. இத்தகைய கலை இலக்கிய முயற்சிகளில் கவிதை அதன் கூரிய உணர்வு வெளிப்பாட்டு தன்மை காரணமாக முக்கியமுடையதாகப் பார்க்கப்படுகின்றது. தன்னிலை உணர்வுகளான ஏக்கங்கள்,

சஞ்சலங்கள், அடக்கமுடியாத ஆசைகள், மகிழ்ச்சிப் பூரிப்பு, பரபரப்பு, அறிவார்ந்த கருத்தியலை வெளிப்படுத்தும் அவா என மேல்லோங்கி நிற்கும் உணர்வு நிலைகளை கவிதை வெளிப்பாடுகளில் பெரிதும் தரிசிக்க முடியும்.

எழுத்தறிவு இல்லாத காலத்தில் வாய்மொழி இலக்கியங்கள் அவ்வப்போது மக்கள் தம் உணர்வுகளை வெளிப்படுத்தப் பாடப்பட்டன. எந்தவொரு தயாரிப்பும் முன் ஏற்பாடுகளுமின்றி இவை வெளிவந்தன. மனிதன் எழுத்தறிவைப் பெற்றபோது அவை ஏட்டில் பதிவுசெய்யப்பட்டன. எழுத்துருவாய்ச் சமைந்தன. இதன் காரணமாக இவை உடனடியான உணர்வுகளைப் பதிவு செய்யும் அல்லது வெளியிடும் நிலையில் இருந்து விலகின. இயல்பாக உணர்வை வெளியிடுதல் எனும் நிலையில் இருந்து திட்டமிட்டு கட்டமைக்கப் படும் இலக்கியமாக எழுத்திலக்கியம் மாறியது. இதனால் எழுத்திலக்கியம் அழுத்தம் திருத்தமான கட்டமைப்பும் நேர்த்தியும் கொண்டதாக அமைந்த போதிலும் அதில் செயற்கைத் தன்மையொன்று இழையோடியது தவிர்க்கமுடியாததாகியது. இதனால் உணர்வுகளின் வடிகால்களாக எழுத்திலக்கியம் முழுமையாக அமைந்துவிடமுடியாத நிலை தோன்றியது.

வாய்மொழி இலக்கியத்தின் தொடர்ச்சியாக, வந்த இடத்திலே வந்த வாகிலே கைவசப்பட்ட தளத்திலே தம் உள்ளத்து உணர்வுகளைப் பதிவுசெய்யும் மரபு இன்றுவரைத் தொடர்கிறது. இதுதான் உண்மையான உணர்வுகளின் வடிகால்களாக இருக்கக்கூடிய இலக்கியத்தின் இயங்குநிலை. கைவசப்பட்ட இடத்தில் அதாவது சுவரிலோ, மதகிலோ அல்லது மேசையிலோ இத்தகைய பதிவுகள் நடந்தேறுகின்றன. வாய்மொழி இலக்கியங்களில் காற்றில் கரைந்தவை தவிர செவிவழிச் சேமிப்புகளாக இருந்தவை பின் வந்த சந்ததியினரால் தேடிச் சேமிக்கப்பட்டன. நாட்டாரியல் எனும் ஒரு பெரும் தேடல் துறையாக அது வளர்ந்தது. இதேபோல் ஆக்கப்பட்ட இடத்திலே அழிந்து வறிதாகிப்போகும் இத்தகைய எழுத்திலக்கியங்களைத் தேடிச் சேமிப்பதும் பதிவு செய்து வைப்பதும் எமது தேவையாக நிற்கின்றது.

## 2. ஆய்வுப் பின்னணி

இவ்வாறு அங்கிங்கு என சுவர்கள், மதகுகள், பாடக் கொப்பிகளின் பின்புறம், வகுப்பறை, மலசலகூடச் சுவர்கள், விடுதிச் சுவர்கள், நூலகமேசைகள் எனப் பல்வேறு இடங்களிலும் எழுதப்படும் கவிதைகள் பொது நோக்கும் வசதியும் கருதி இவ் ஆய்வில் சுவர்க்கவிதைகள் எனப் பொதுத் தலைப்பில் வகைப்படுத்தப்படுகின்றன.

சுவர்க் கவிதைகள் எனும் எண்ணக்கரு பற்றி நோக்கும் போது இரண்டு விடயங்கள் எமது எண்ணங்களில் எழலாம்.

1. முதலாவது, சுவர்க்கவிதை எனும் கருத்துரு பன்னாட்டுப் புலத்தில் நோக்கும் போது நெதர்லாந்து நாட்டின் லெயிடின் நகரத்துச் சுவர்க் கவிதைகளை (Wall poems of Leiden) நமக்கு ஞாபகப் படுத்தலாம். 1992களில் சிறப்புத் திட்டமொன்றின் மூலம் இத்தகைய வரை கவிதைகளால் லெய்டின் நகரம் அலங்கரிக்கப்பட்டது. உருசிய கவிஞரான மரினா சுவரஜேவா (Marina Tsvetageva) அவர்களின் கவிதைகள் நகரச் சுவர்களில் அழகுற வரையப்பட்டன. 2005 ஆம் ஆண்டுவரை இவ்வாறு 101 கவிதைகள் எழுதப்பட்டன.[1]

2. இரண்டாவதாக, இத்தலைப்பு கவிஞர் காசி ஆனந்தனின் சுவர்க்கவிகள், தெருப்புலவன் ஆகிய கவிதைத்தொகுதிகள் குறித்து நினைவூட்டலாம். கவிஞர் காசி ஆனந்தனின் எழுச்சிக் கவிதைகளுக்கும் இங்கு பேசப்படும் சுவர்க்கவிதைகளுக்கு சிறு தொடர்பு காணப்படுகின்றது. ஆயினும் மேலே கூறப்பட்ட இரண்டு தளங்களுக்கும் அப்பால் இவ்வாய்வு அச்சு ஊடகங்களுக்கும் இலத்தினியல் ஊடகங்களுக்கும் வெளியில் முறைசார வெளியீடுகளாக அல்லது அனாமதேயப் பதிவுகளாக வெவ்வேறுபட்ட தளங்களை ஊடகமாகக் கொண்டு அமைகின்ற கவிதைகள் பற்றி ஆய்வு செய்கின்றது.

## 3. ஆய்வின் நோக்கங்கள்

இத்தகைய சுவர்கள், மதகுகள், பாடக் கொப்பிகளின் பின்புறம், வகுப்பறை, மலசலகூடச் சுவர்கள், விடுதிச் சுவர்கள், நூலக மேசைகள் எனப் பல்வேறு இடங்களிலும் எழுதப்படும் கவிதைகளை ஆவணப்படுத்தல் நோக்கில் தொகுத்துக் கூறுவது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். இத்தகைய கவிதைகளின் வெளிப்படுத்தல் தன்மை, பாடுபொருள், உளவியல் தன்மை, சமூக நோக்கு, என்பவற்றை ஆய்வு செய்வது இவ்வாய்வின் சிறப்பு நோக்கங்களாகும்.

## 4. முன்னாய்வு மற்றும் இலக்கிய மீளாய்வு

சுவர்கள், மதகுகள், பாடக் கொப்பிகளின் பின்புறம், வகுப்பறை, மலசலகூடச் சுவர்கள், விடுதிச் சுவர்கள், நூலகமேசைகள் என எழுதப்படும் இத்தகைய சுவர்க்கவிதைகள் பற்றிய முழுமையான ஆய்வு தமிழ்ச் சூழலில் முன்னர் மேற்கொள்ளப்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இக்கட்டுரையாளர் 1997 இல் இலங்கை, கிழக்குப் பல்கலைக் கழக தமிழ்ச்சங்க வெளியீடான "தழல்" சஞ்சிகையில் இத்தகைய சுவர்க் கவிதைகள் பற்றிய ஆய்வுக் குறிப்பொன்றைப் பதிவு செய்தார். தழல் சஞ்சிகைக்கு எழுதப்பட்ட விமர்சனக் குறிப்பொன்றில் கவிஞர் வாசுதேவன் இத்தகைய தொகுப்புகள் இன்னும் முழுமைப்படுத்தப்பட வேண்டிய தேவையைக் குறிப்பிடுகின்றார்.[2] ஆயினும் ஆங்கில இலக்கியச் சூழலில் இத்தகைய கவிதைகள் பற்றிய பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளதாகத் தெரிகின்றது. அதிலும் கழிப்பகங்களிலும் குழியலறைகளிலும் எழுதப்படும் வாசகங்கள் பற்றி பல ஆய்வுகள் ஆங்கிலத்தில் நடைபெற்றுள்ளன. இவை இலக்கிய ஆய்வுகள் என்பதை விட தூய உளவியல் ஆய்வுகளாகவே பொதுவாக அமைந்துள்ளன. அல்பிரெட் கின்சேய் (Alfred Kinsey) இத்தகைய ஆய்வுகளை 1950களில் முதன் முதலில் மேற்கொண்டார். இவர் ஏறக்குறைய 300 பொது மலசலகூடச் சுவர்களை இவ்வாய்வுக்காக மதிப்பீடு செய்தார். இவரது ஆய்வு முடிவுகளின் படி ஆண்களின் மலசல கூடங்களில் பொதுவாக பால் கிளர்ச்சியை வெளிப்படுத்தும் கவிதைகளையும் பெண்கள் பாவிக்கும் மலசல கூடங்களில் காதல் உணர்வுகளை வெளிப்படுத்தும் கவிதைகளையும் காணமுடிவதாகக் காட்டுவார்.[3] சிங்கள இலக்கியத்தில் இலங்கையின் வட கிழக்கு போர்ச் சூழலில் இராணுவ சிப்பாய்களால் பதுங்குக் குழிகளில் எழுதப்பட்ட கவிதைகள் திரட்டப்பட்டு 'பங்கர் கவிதைகள்' எனப் பதிவாகி உள்ளதை அறிய முடிகின்றது.

சுவர்க் கவிதைகள் பற்றிய இலக்கிய மீளாய்வில் முக்கியமாக பேசக்கூடிய கவிதையொன்று 1908 களில் எழுதப்பட்டது. வங்க தேசத்தின் இளம் புரட்சியாளரும், இந்திய விடுதலை இயக்கத்தில் மிக இளம் வயதில் புரட்சியில் ஈடுபட்டவருமான குதிராம் போஸ் (1889 - 1908)

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக மாஜிஸ்திரேட் கிங்க்ஸ்போர்ட் என்பவர் மீது வெடிகுண்டு வீசிய குற்றச்சாட்டில் கைதானார்.[4] இவர் தூக்கிலப்படுவதற்கு முன் சிறைச் சுவரில் கரியினால் தனது அம்மாவுக்கு எழுதியது இக்கவிதை.

அம்மா!
விடை கொடு அம்மா!
என் உயிரினும் உயிரான அம்மா.
சித்தியின் வயிற்றில்
மகனாக மறுபடியும் நான் பிறப்பேன்.
பிறந்தது நான் தானா?
என்பதை அறிய
குழந்தையின்
கழுத்தில் பார்
தூக்குக் கயிற்றின் தழும்பு இருக்கும்.

இத்தகைய வரலாற்று முக்கியமிக்க ஒருசில பதிவுகள் பற்றிப் பேசப்படுவது தவிர சுவர்க்கவிதைகள் பெரிதுபடுத்தப்படாத ஒன்றாகவே இருந்து வருகின்றன.

## 5. ஆய்வின் எல்லைப்படுத்தல்

இவ்வாவணப்படுத்தலில் எடுத்தாளப்பட்டுள்ள பெரும்பாலான சுவர்க்கவிதைகள் இலங்கையின் கிழக்கு மற்றும் வடக்கு மாகாணங்களில் குறித்த சில இடங்களில் எதேட்சையாக திரட்டப்பட்டவை. சில நோக்குகருதி பல்கலைக்கழக விடுதி மற்றும் நூலகம், வகுப்பறை என்பனவற்றில் தேடித் திரட்டப்பட்டவை. தனிமை, அழுத்தம், ஆதங்கம், மற்றும் மிகையான விடுதலைநிலை என்பனவே இவ்வாறான இயல்பான கவிதைகளை வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும் சூழல்நிலைகள் ஆகின்றன. ஆகவே காத்திரமான படைப்புகள் கிடைக்கக்கூடியதாகக் கருதப்படக்கூடிய இடங்களான, தமது உள்ளக் கிடக்கைகளை எழுதத் தூண்டும் மனவழுத்தம் நிறைந்த சிறைச்சாலைகள், அகதிமுகாம்கள், மற்றும் படைத்தலங்கள் முதலான இடங்களையும் உள்ளடக்கியதாக திரட்டப்பட்ட ஆக்கங்கள் இவ்வாய்வில் முழுமைபட உள்ளடக்கப்படவில்லை. இத்தகைய இடங்களில் தகவல்கள் திரட்டப்பட்டிருக்குமாயின் இன்னும் வலுவான படைப்புகள் கிடைத்திருக்கும்.

## 6. பகுப்பாய்வும் நயமும்

### 6.1 கொள்கை வெளிப்பாட்டு சுவர்க் கவிதைகள்

சுவர்க்கவிதைகளை ஒட்டு மொத்தமாக நோக்கும் போது அவை வாய்மொழி இலக்கியத்தின் தொடர்ச்சியாகவும், தம் உணர்வுகளை வந்தவாகிலே வெளிப்படுத்துவதும் பதிவுசெய்வதுமான இயல்புகளைக் கொண்டிருப்பதுவும் கண்கூடு. ஆயினும் சில சுவர்க்கவிதைகள் நோக்கம் கருதி சிறிது முன் திட்டம் கொண்டு எழுதப்பட்டவையாகவும் கொள்ளக் கூடியவை. இவை உணர்வு வெளிப்பட்டுக்குப் பதிலாகக் கொள்கை வெளிப்பாட்டைக் கொண்டமையும் தன்மையதாகக் காணப்படும். இத்தகைய சுவர்க்கவிதைகளை 70 - 80 களில் ஈழத்தின் தமிழ்ச் சூழல்களில்

பெரிதும் காணமுடிந்தது. தமிழ்த் தேசியம் சார்ந்தும் அரசியல் சார்ந்தும் இத்தகைய கவிதைகள் வடிக்கப்பட்டன.

"தமிழனைத் தமிழன் போற்றின்
தரணி தமிழைப் போற்றும்"

"உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு"

"ஆண்ட பரம்பரை
மீண்டும் ஒருமுறை
ஆள நினைப்பதில்
என்ன குறை"

முதலான வரிகள் இத்தகையவை. இதைத் தொடர்ந்துவந்த காலங்களில் தீவிரப் போக்கும் தமிழ்த் தேசிய உணர்வும் கொண்ட இளைஞர் குழுக்கள் தோற்றம் பெற்ற போதும் இத்தகைய உணர்ச்சிக் கவிதைகள் முக்கியத்துவம் பெற்றன. இத்தகைய கவிதைகள் சிறிய முன்னாயத்தத்துடன் வடிவமைக்கப்பட்டுப் பின் சுவர்க் கவிதைகளாகப் பதிவு செய்யப்பட்டன. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், நூலகங்கள், சுவர்கள், வீதிகள் எனப் பல்வேறு இடங்களிலும் மக்களைத் தம் கொள்கைகளின் பால் எழுச்சியூட்டுவதற்காக இவை பதிவுசெய்யப்பட்டன.

## 6.2 காதலும் அழகுணர்சியும்

பொதுவாகக் கட்டிளமைப் பருவத்தைக் கடக்கும் போது இளைஞர்களும் யுவதிகளும் தம் உள்ளத்து உணர்வுகளைப் பதிவிக்க இடம் தேடுகின்றனர். இயற்கையான உடல் உள உந்துதல்கள் வெளிப்பட முனையும் போது, அவற்றை வெளிப்படுத்தமுடியாதபடி சமூகக் கட்டுக் கோப்பும் தடைகளும் முன்னிற்கின்றன. இவை இரண்டினதும் அழுத்தங்களாக அவர்களின் பதிவுகளைக் காணலாம். அல்பிரெட் கின்சேய் மற்றும் பேராசிரியர் நிக் கல்சம் ஆகியோர்களது ஆய்வுகள் குறிப்பிடுவது போல ஆண்களினால் எழுதப்பட்டவை எனக் கருதப்படும் பல கவிதைகள் உடலின்பக் கிளர்ச்சி, அந்தரங்க உடல் கூறு முதலானவற்றைப் பற்றியதாகக் காணப்பட்டன. எழுதுவதன் மூலம் தமக்குள் ஒருவகைக் கிளர்ச்சியைத் உள்வாங்கிக் கொள்வது போன்ற முனைப்பே இத்தகைய பெரும்பலான கவிதைகளில் தெரிகின்றது. பொதுத் தளத்தில் பதிவுசெய்ய முடியாத அளவுக்குச் சமூகப் புழக்கத்தில் பயன்படுத்தக் கூச்சப்படும் சொல்லாடல்களே இவர்களின் பெரும்பாலான கவிதைகளில் காணப்படுகின்றன. இவ்வாறு எழுதுவதன் மூலம் தமக்குள் அடக்கி வைத்திருக்கும் வக்கிரத்தை வெளிப்படுத்துவது ஒருவகை உளக் கோளாறாகவே பார்க்கக் கூடியது.

இதற்கு முரணாக மென்மையான காதல் உணர்வும் அழகு வருணனையும் கொண்ட பல படைப்புகள் இத்தகைய சுவர்க் கவிதைகளில் காணக் கிடைக்கின்றன.

பல்கலைக் கழகப் படிப்பக மேசை ஒன்றில் பதிவாகி இருந்த இந்தக் கவிதை காதலையும் தான் கற்ற பௌதீகவியல் (இயற்பியல்) அறிவினையும் வெளிப்படுத்துவதாய் உள்ளது.

“காதல்
சக்திச் சொட்டு
Quantum.

எப்படி இந்த
ஒளிச்சொட்டு
இரத்தினத்தினுள் புகுந்து கொண்டது.

என் இதயத்தில்
இவள் நினைப்பு”

கதிர்ப்படைந்து ஒளிச்சொட்டு பரவுவது போலக் காதல் பரவுவதும், இரத்தினக் கல்லினுள் மீண்டும் மீண்டும் முழு அகத்தெறிப்படைவதும் வெளியேறாதவாறு உள்ளிருந்து அக்கல்லைத் துலங்கச் செய்வதுமான இயல்புகள் அழகுற ஒப்பீடு செய்யப்படுகின்றன.

இதே போலத் தன் உயிரினை அவளிடத்தில் தொலைத்துவிட்ட காதல் வெளிப்பாட்டை விபரிக்கும் மற்றொரு கவிதை. மதகு ஒன்றின் பின்புறம் எழுதப்பட்டிருந்தது.

“தேன்படு மலர்முகம்
பூந்துகில் இரு குடம்
ஏந்திய இளஞ் சிறு கொடி தானோ.

மான் விழி மருளியே
தேன் மொழி அருளித் தன்
ஊனிடை என் உயிர்
பதித்தாளே.”

அழகு சார்ந்த ஈர்ப்பையும் காதலையும் வெளிப்படுத்தும் இக்கவிதை சற்று மரபுவழி சார்ந்ததாக சந்த இசை கொண்டதாகவும் அமைந்துள்ளது. வரிகள் மிக இயல்பாகக் காணப்படுகின்றன.

காதலை பாடுபொருளாகக் கொண்ட மற்றொரு கவிதை பல்கலைக் கழகமொன்றின் ஆண்கள் விடுதி அறைச் சுவரில் எழுதப்பட்டிருந்தது.

“ காதல் -
பார்வையில்
பார்த்த போதே
இதயத்தில்
முடிந்த முற்றுப் ( .).”

கவிதை காதலின் வேகத்தை சுட்டிக் காட்டுகின்றது. கவிதையின் கட்டமைப்பு புள்ளியை கையாண்ட முறை கவர்ச்சியாக உள்ளது.

ஆண்டு எட்டு மாணவன் ஒருவனின் பாடக் கொப்பியில் பதிவாயிருந்ததாக கவிஞர் வாசுதேவனின் விமர்சனக் குறிப்பில் இப்படி ஒரு வருணிப்பு குறிப்பிடப்பட்டிருந்தது.

"வயல்
காற்றில் அசைவதைப் போல
உன் நடை
அழகு."

பெண்களின் படைப்புகள் எனக் கருதக் கூடிய பல காதல் கவிதைகள், காதல் தோல்வி மற்றும் காதல் சார்ந்த சிக்கல்களைப் பாடு பொருளாகக் கொண்டு காணப்பட்டன. முதன்முதலாகத் தோன்றும் காதல் வயப்பாட்டு நிலையைப் பெண்களின் கவிதைகளில் அரிதாகவே காண முடிகின்றது. தம் காதல் வயப்பாட்டைத் தமிழ்ப் பெண்கள் வெளிப்படுத்த மாட்டார்களோ என எண்ணத்தோன்றுகின்றது. ஆனாலும் காதல் சார்ந்து தாம் எதிர்கொண்ட சிக்கல்கள் குறித்த கவிதைப் பதிவுக்களை இவர்களின் பல கவிதைகளில் காணமுடிகின்றது.

இக்கவிதை பெண் ஒருவரின் குறிப்பேடு ஒன்றில் காணப்பட்டது.

"தெளிந்த நீராய் இருந்த என் மனம்- இன்று
சேற்று நீராய் மாறியது
பௌர்ணமி போல் இருந்த என் முகம் - இன்று
அமாவாசை போல் மாறியது
தினமும் புன்னகைக்கும் என் உதடு
புழுதி படிந்து போய்க் கிடக்கின்றது
ஒவ்வொரு நிமிடமும் உருகும் என் விழிகள் - இன்று
வெறித்துப் போய் இருக்கின்றது
இதை எல்லாம் செய்த நீ எனக்கு
எப்போது விடிவு தரப் போகின்றாய்".

காதலை சமூகத்திற்கு வெளிப்படுத்த முடியாமை, முடிவெடுப்பதிலுள்ள கலக்கம், காதல் வயப்பாட்டின் பின் காதலனாலும் ஏனையவர்களாலும் கொடுக்கப்படும் அழுத்தம் எனப் பல்வேறு நெருக்கடிகளின் வெளிப்பாடாக இக்கவிதை உள்ளது. திருமணம் தான் இதற்கு முடிவாகவும் விடிவாகவும் அமையும் என்பதை கவிதை கூறி நிற்கின்றது. இதே குழப்பத்தைக் காட்டுகின்ற மற்றொரு கவிதை. பாடக் கொப்பியொன்றின் பின் உள் அட்டையில் பதிவுசெய்யப்பட்டிருந்தது.

"உன் மௌனம் எனக்குத்
தெளிவாகப் புரிகின்றது.
உன் பேச்சு
என்னை மிகவும்
குழப்புகின்றது.
பேசாமல் இரு
நாம் பேசவேண்டியதை
நம் மௌனங்கள்
பேசிக் கொள்ளட்டும்."

காதலனின் காதல் மனதைப் புரிந்து கொண்ட அவளுக்கு அவனின் பேச்சுக்களில் இருக்கும் வன்மை எரிச்சலூட்டுகின்றது. 'பேசாமல் இரு நம் மௌனங்கள் பேசட்டும்' எனக் குமைகிறாள். வாய் திறந்து பேச முடியாவிட்டாலும் தன் ஆதங்கத்தை எழுதித் தணிப்பது ஆறுதல் தருமல்லவா?

பாடக் கொப்பி ஒன்றின் பின் புறம் திரட்டப்பட்ட மற்றொரு கவிதை முறையில்லாக் காதலைப் பற்றி இப்படிக் கூறுகின்றது. இக்கவிதையையும் எழுதியவர் ஒரு பெண்.

"இது நல்லதில்லை என
உணரும் அறிவு
என்னிடம் உண்டு.

ஆனால்
உன் ஈர்ப்பின் சக்தி
என் அறிவுத் திறனை
மீறிவிட்டதே!

மறக்க வேண்டியும் மறக்க முடியாமலும் தவிக்கும் காதல் உணர்வு அக்கவிதையில் பரவியிருந்தது. காதலைப் பாடும் மற்றொரு கவிதை இப்படி விரிகின்றது.

நட்சத்திரம்
சூரியனை விடப் பெரிதாயிருக்கலாம்.
பிரகாசமாயும் இருக்கலாம்
இருக்கட்டும்.
இந்த வானில்
எத்தனை நட்சத்திரங்களும்
வந்து போகட்டும்.
ஆனால்
அவள் மட்டுமே
என் நினைவு வானத்தின்
ஒற்றைச் சூரியன்
சொந்தக்காரி
அவள் வந்தால்
அத்தனை நட்சத்திரங்களும்
காணாமல் போயிடும்.

கவிதையை ஆளமாக நோக்கும் போது காதலில் வயபட்ட இளைஞனொருவன் அக்காதலில் விழுந்த பின் தன் காதலியை விட தகுதி, அழகு என்பனவற்றில் உயர்ந்த மற்றும் பல பெண்களைச் சந்திக்கின்றான். ஒப்பீட்டளவில் தன் காதலியைவிட உயர்வாய் இருக்கும் அவர்களின் நட்பினால் மனம் சஞ்சலம் கொள்ளுகின்றது. முற்காதலையும் தவிர்க்க முடியவில்லை. தன் காதலிதான் தன் நினைவு வானின் சொந்தக்காரி. அவளை விட்டுவிட்டு அலைபாயாதே எனத் தன் மனதைத் தானே அடக்குவது போல கவிதை தோன்றுகின்றது.

## 6.3 காதல் தோல்வி

காதல் தோல்விகள் மற்றும் காத்திருப்பு, பிரிவு பற்றிய கவிதைகள் சுவர்க்கவிதைகளில் அதிகம் பதிவாகின்றன. கீழ்வரும் கவிதை தனியார் கற்பித்தல் மையம் ஒன்றின் மேசையில் எழுதப்பட்டிருந்தது.

“கடற்கரை இருப்பது காதலுக்கா?
காதலி இருப்பது வேதனைக்கா?
அவள்
அடிக்கடி சிரிப்பது
பாவனைக்கா?”

‘நீடிப்பு’ என்ற தலைப்பில் இப்படி ஒரு பதிவு காதல் தோல்வியை விபரிக்கின்றது.

**நீடிப்பு**
“பொது மன்னிப்பு நாள்,
அவசர காலச் சட்டம்,
ஏன்
உனக்கு முடிவு சொல்ல
நான் தந்த கால அவகாசம்”

காதலுக்கு முடிவு சொல்ல கொடுத்த கால அவகாசம் முடிந்து விட்டது. இன்னும் பதில் இல்லை. மனம் பதைக்கின்றது. காலம் கடந்துவிட்ட பின்னாவது பதில் சொல்ல மாட்டாளா என எங்குகின்றான். காலங்கடந்து பார்க்கும் போது இக்கவிதையின் வரிகள் சில உடனே விளங்காமல் இருக்கலாம். இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களுக்கு மீளவும் வந்து சேர கொடுத்த பொது மன்னிப்புக் காலத்தை அரசு நீடிக்கின்றது. அவசர காலச் சட்டத்தை நீடிக்கின்றது. அது போல இந்தக் கால அவகசத்தையும் நீடித்து உன் முடிவை ஏற்கத்தயார் என்கின்றது இக்கவிதை.

அகநாநூறு தரும் தலைவன், தலைவி பிரிவு நிலை இக்காலத்திலும் இல்லாமல் இல்லை. தொழில் நிமித்தம் வெளிநாடுகளுக்கு சென்ற தம் கணவன்மாரின் பிரிவில் துயருற்றிருக்கும் பெண்கள் தம்முள் எழுப்பும் கேள்வியாக இக்கவிதை உள்ளது.

“மனைவி கட்டிலில்..
கணவனின்
காதல் பேச்சும் முத்தங்களும்
ஒலி பேசியில்…”

தொடர்புசாதன வசதிகள் எவ்வளவு தான் வளர்ந்தாலும் அவை உணர்வுகளையும் தேவைகளையும் முழுமைப்படுத்தி விட முடியாது. கணவனின் அணைப்பும் ஆதரவும் தொலைபேசி ஊடாகக் கூடாது. தன்னை அருகிருந்து பார்த்துக் கொள்ள கணவன் இல்லையே எனத் தவிக்கும் பெண்ணொருத்தியின் மன வேதனை அது.

### 6.4 நட்பும் பிரிவும்

காதலுக்கு நெருக்கமான மற்றொரு உணர்வாக நட்பு காணப்படுகின்றது. நட்பின் முக்கியத்துவத்தை பலரும் பலவாறு உணர்கின்றனர். அத்தகைய வெளிப்பாடு ஒன்றை பல்கலைக் கழக விடுதிச் சுவர் ஒன்றில் காணமுடிந்தது.

நண்பர்கள் என்ற சொல்
எழுதுகோல் கொண்டு
எழுதப்பட வேண்டிய
சொற்கள் அல்ல
உளி கொண்டு செதுக்கப்பட வேண்டிய
சொற்கள்.

காகிதத்தில் எழுதிக்
கசக்க வேண்டிய
சொற்களுமல்ல்
கல்லறை செல்லும் வரை
நினைவில்
சுமக்க வேண்டிய சொற்கள்.

பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் என்பவற்றில் ஒன்றாய்க் கற்றபின் ஏற்படும் பிரிவைப் பலரும் பெரிதாய் உணருகின்றனர். இத்தகைய பிரிவை மையப்படுத்திய குறிப்பொன்று. இதுவும் பல்கலைக் கழகமொன்றின் விடுதி அறைச் சுவரில் பதிவாகியிருந்தது.

“கண்ணீருடனும்
கவலையுடனும்
கனவுகள் தேடியவனாய்
உங்களை விட்டு
விடைபெறுகின்றேன்.”

இக்கவிதையில் :கனவுகள் தேடியவனாய்’ என்ற வார்த்தை முக்கியத்துவமுடையது. பட்டப் படிப்பை முடிந்த பின் தம் எதிர்காலம் பற்றிய பல்வேறு அழுத்தங்கள் இளைஞர்களுக்கு ஏற்படுகின்றன. வேலை தேடுவது, குடும்பத்துக்கு மேலும் சுமையாக இருக்க முடியாமை, குடும்பப் பாரம் சுமக்க வேண்டிய நிலை, எனப் பல்வேறு அழுத்தங்களுக்கு மத்தியில் அவர்களின் இந்தப் பிரிவும் நடக்கின்றது.

### 6.5 நகைச்சுவையும் பரிகாசமும்

கிண்டல், நகைச்சுவை மற்றும் பரிகாசத் தன்மை என்பவற்றின் வெளிப்பாடு சில சுவர்க் கவிதைகளில் முக்கியப்பட்டு நிற்கின்றன. சமூக சீர்மை கருத்துக்களைக் கூட நகைசுவையுடன் சொல்லும்பாணிகாணப்படுகின்றது. இக்கவிதை இலங்கையில்கல்முனைக்கும் மட்டக்களப்புக்கும் இடையில் உள்ள பாடசாலை ஒன்றின் மேசையில் எழுதப்பட்டிருந்தது.

“பரீட்சை!
காப்பியடித்த அவளை - நீ
காட்டிக் கொடுக்கவில்லை.
காரணம்
பிரமன்
ரதியைக் காப்பியடித்து
அவளைப் படைத்திருந்தது.”

முறைகேடு ஒன்றை மறைத்த பரீட்சை அதிகாரி ஒருவரை கிண்டல் பாணியுடன் சுட்டிக் காட்டுவதாக இக்கவிதை அமைகின்றது.

அழகும் இளமையும் ததும்பி நிற்கும் ஒரு இளம்பெண் தன் அழகை மறைக்க முயன்று தோற்றுப்போகின்றாள் போலும். இப்படி ஒரு பதிவு.

“என்னே அழகு கொழிப்ப
அதனை எங்கொளிப்ப- பெண்ணே!”

நகைச்சுவையும் எள்ளலும் கொண்ட மற்றொரு கவிதை இப்படி உள்ளது. நாட்டார் பாடல்களிலும் இத்தகைய எள்ளல் பாங்குடைய பல கவிதைகளைக் காணலாம்.

“மச்சாளின் தேக
மச்சங்களை எண்ண
மிச்ச நாள் ஆசை

ஓசை
கொட்டாமல்
குளியல் அறையினுள் எட்டிப்
பட்டேனே வாளிச் சமர்”.

எதிர்ப்பாலார் ஒருவரை ஒருவர் கிண்டல் செய்வதும் அத்தகைய கிண்டல்களில் பால்நிலைக் கருத்துக்கள் காணப்படுவதும் பல காலமாக இருந்து வருகின்றது. கல்முனை- அக்கரைப்பற்று பேருந்து ஒன்றின் இருக்கையில் இக்கவிதை எழுதப்பட்டிருந்தது.

“பெண்டுகள்
ஞானக் கருத்தை/குருத்தை
அறுக்கும்
வண்டுகள்.”

தென்னையின் குருத்தை வண்டுகள் அறுத்து அதை நாசப்படுத்துகின்றன. இதை நாம் கண்டிருக்கின்றோம். ஆண்களிடம் தளிர்விடும் ஞானக் குருத்துகளை இளம் பருவத்திலேயே அறுத்து ஞானம் பெறவிடாமல் பெண்கள் தடையாக இருந்து நாசமாக்குகிறார்களோ? இல்லை ஆண்களுக்கு ஞானத்தை வனைந்து (அறுந்து) பெண்கள் தான் போதிக்கின்றார்களோ தெரியவில்லை.

### 6.6 உள்நாட்டுப் போரும் அதன் விளைவுகளும்

கடந்த முப்பது வருட காலமாக நாட்டில் காணப்பட்ட போர்ச் சூழலும் அதன் பாதிப்புகளும் பல்வேறு மட்டங்களிலும் தாக்கம் செலுத்திய ஒன்றாகக் காணப்பட்டது. இது சார்ந்த பல பதிவுகளை சுவர்க் கவிதைகளின் ஊடு தரிசிக்கக் கிடைத்தது.

கல்முனைப் பாடசாலை ஒன்றின் வகுப்பறை மேசையொன்றில் இந்த வரிகள் எழுதப்பட்டிருந்தன.

“வீட்டில் நுளம்படி,
வகுப்பில் பிரம்படி,
வெளியில் அதிரடி”

சின்ன உள்ளங்களின் மன உளைச்சல் வரிகளில் படம்பிடித்துக் காட்டப்படுகின்றது. வீட்டினுள் நுளம்பு (தமிழ்நாட்டு வழக்கு கொசு) உறங்கும் நிம்மதியைப் பறிக்கின்றது. வகுப்பறையில் அசிரியரின் பிரம்பு மாணவர்களை பயமுறுத்துகின்றது. (தற்போது பிள்ளைநேயப் பாடசாலைகளில் ஆசிரியர் பிரம்பு எடுப்பதில்லை எனச் சொல்கிறார்கள்) வெளியில் அதிரடிப் படையைக் கண்டால் பயமாயிருக்கின்றது. இந்த அக உளைச்சல் சந்தவொலிப்புடன் வெளிவருகின்றது.

மட்டக்களப்பு, கொம்மாதுறையில் படிப்பதற்காகத் தங்கியிருந்த பல்கலைக் கழக மாணவன் ஒருவன் இரவு முழுவதும் தான் தங்கியிருக்கும் வீட்டின் வாசலில் இராணுவம் காவல் நிற்கும் ஒரு இரவில் தனது மன உளைச்சலை கோவை அட்டையில் இவ்வாறு பதிவு செய்கிறான்.

தனிமை, இரவு
தனி வீடு
சரக், சர்க்...
மாஞ்சருகுகள்
மணலோடு நொருங்கும்
மனம் மண்டையோட்டுக்குள்
Position ஆகும்.

இதயம்
விலா என்புகளுள்
தன்னை நுளைத்து
வெளியேற முயலும்
சுதந்திர நினைவுகள்
மனதுள் ஸ்தம்பிக்கும்
அவற்றுள் சில
மாரடைத்து
மரணித்துப் போகும்.

நுளம்புத் திரியின்
புகை வளையங்களுக்கு
Thrill காட்டிவரும்
நுளம்பின் சிணுசிணுப்பு
சினமூட்டும்
கண்கள்
அதே ஒற்றை வரியில்
மீண்டும் மீண்டும்
உளவு பார்க்கும்.

வெளியில் உள்ள பயமூட்டும் சூழல் மாணவனின் படிப்பைக் குழப்பி மனதைச் சஞ்சலப் படுத்துவதும் கற்றலைத் தொடர முடியாமல் மனஞ் சுழல படித்த வரிகளையே மீண்டும் மீண்டும் வாசித்துக் கொண்டிருக்கும் நிலையும் மிகத் துல்லியமாகக் காட்டப்பட்டுள்ளது. மற்றொரு கவிதை போர்ச் சூழலை இப்படிக் காட்டுகின்றது. இது தனியார் படிப்பக மேசை ஒன்றில் எழுதப்பட்டிருந்தது.

"ஆயுதமோ தாராளம்
ஆட்களுக்கே இங்கு பஞ்சம்"

இக்கவிதை இரண்டு வகையான பொருளை தருவதாக உள்ளது. ஆயுதங்கள் மலிந்த சூழலில் மனிதாபிமானம் நலிந்து விட்டது எனற பொருளையும் மற்றொரு வகையில் ஆயுதம் நிறையவே உள்ளது போராட வாருங்கள் என அழைப்பது போலவும் இக்கவிதை அமைந்துள்ளது. மற்றொரு கவிதை போரின் விளைவுகளையும் பாதிப்புகளையும் பற்றிப் பேசுகின்றது. 'எங்கள் அம்மா எங்கள் அப்பா' எனும் தலைப்பில் பல்கலைக் கழக விடுதி அறைச் சுவரில் எழுதப்பட்டிருந்தது.

**எங்கள் அம்மா, எங்கள் அப்பா**
"போருடைத்த வீடுகளை
புதுப்பிக்க முடியாது- ஆயினும்
குடிசைக்கு மண் சுமக்க
கூட இல்லை எங்கள் அம்மா
கூண்டுக்குள் எங்கள் அப்பா"

### 6.7 வாழ்வியல் முரண்பாடுகள்

வாழ்க்கையில் ஏற்படும் பொதுவான முரண்பாடுகளும் அதிருப்தி நிலையும் பல்வேறு கவிதைகளின் பாடுபொருளாகக் காணப்பட்டன. இதைத் தான் கவிதை கூறுகின்றது என தெளிவுபெற முடியாத பல்வேறு மனக்கவலைகள் கலந்த வெளிப்பாடாகவும் அதனைக் கூறலாம். இவ்வாய்வில் ஆராயப்பட்ட கவிதைகள் பொதுவாக பல்கலைக் கழகச் சூழலில் காணப்பட்டவை. ஆதலால் பரீட்சைத் தோல்வி, கற்றல் அழுத்தம், பொருளாதார நெருக்கடி என்பன இவற்றின் பின்னணிக் காரணிகளாக அமைந்திருக்கலாம். பல்கலைக் கழக விடுதி அறைச் சுவரில் காணப்பட்டது இக்கவிதை.

“விழித்து விழித்து
இரவுகள்
எரிந்து கொண்டிருந்தாலும்
வாழ்க்கை என்பது
என்னவோ
சோகங்கள்
தங்கும் சத்திரமாகி விட்டது.”

மற்றொரு கவிதை இதே வகையான வாழ்க்கையின் பாடினை விபரிக்கின்றது.

“சின்னச் சின்னக்
கேள்விகள்
விடை தெரியாத
தூரம்
தொலைவில்.”

பல்கலைக்கழக விரிவுரை மண்டபக் கதிரையொன்றில் (இது எழுதும் கை வைத்த கதிரை) பதிவாகி இருந்த மற்றொரு கவிதை விரிவுரையாளர்களின் அறிவுரையில் முரண்பாடடைந்த மாணவனின் கருத்தைப் போல தொணிக்கின்றது. இது ‘இமேஜ்’ எனத் தலைப்பிடப்பட்டிருந்தது.

**இமேஜ்**

“வேர்களின் விரிவுரைகள்
விழுதுகட்கு

‘நீங்கள்
தாங்கிக் கொண்டிருப்பது
தாவரத்தைத் தான்
தரணியை அல்ல.’

அப்படியாயின்
வேர்கள்.....?”

### 6.8 விளிப்புணர்வுக் கவிதைகள்

அநீதியைக்கண்டுவெகுண்டெழுதல், நற்பண்புகளைஎடுத்துக்கூறுதல், சமூகத்தில்மேலோங்கி நிற்கும் போலித்தனத்தைச் சுட்டிக்காட்டுதல் என்பனவும் இத்தகைய சுவர்கவிதைகளில் பாடு பொருளாய் அமைந்து நிற்கின்றன. அரச பண்ணை ஒன்றில் முகாமையாளர் தனது முறைகேடான

பாலினத் தேவைகளுக்கு தனது அதிகாரத்தை தவறாகப் பயன் படுத்துகின்றார். இதை அந்தப் பண்ணையின் வேலித் தகரம் சுலோகமாக ஏந்திக் கொண்டது. தமது எதிர்ப்பை வேறு வழி இன்றி சுவர்க் கவிதையாக வெளிப்படுத்தினர் பண்ணை வேலையாட்கள். அக்கவிதை இது.

"படுத்தவளுக்கு
பாகற்காய் பறிக்கும் வேலை
மறுத்தவளுக்கு
மண்வெட்டி பிடிக்கும் வேலை."

'படுத்தவள்' என்பது 'அவனது இச்சைக்கு இசைந்தவள்' என்பதன் பண்படா மொழிப்பிரயோகம் என்பதையும் இங்கு கவனிக்க. இத்தகைய பண்படா மொழி வழக்கு காரணமாக பல கவிதைகளின் பாடு பொருள் காத்திரமானதாகக் காணப்பட்ட போதிலும் அதனை பொதுவில் ஆவணப்படுத்துவது சங்கடமிக்கதாகின்றது. இவ்வாறு பொதுவில் ஆவணப்படுத்த தயங்கிய பல கவிதைகள் காணப்படுகின்றன.

இக்கட்டுரையாளனின் சின்னப்பருவத்து அனுபவம் ஒன்று. பள்ளிக்குப் போய்வரும் காலத்தில் கல்முனை நகரில் தினமும் சந்திக்கும் அந்த மனிதன். உயரமும் கம்பீரமும் மிக்க தோற்றம். இடையிடையே காரணமின்றிய புன்னகை. சிலவேளை வாய்விட்டும் சிரிப்பார். புத்திபேதமுடைய ஒருவராக நன்கு அறியப்பட்டவர். அவர் வீதியில் கடக்கும் போது ஒரு போத்தல் ஓடு அவரது காலில் ஆளமாகக் கீறி விடுகின்றது. குருதி பீறிடுகின்றது. குனிந்து போத்தல் ஓட்டைக் கையில் எடுத்த அவர்.

"குப்பியோடே நீ தப்பியோடு
குப்பைமேட்டுக்கு"

எனக் கூறிவிட்டு போத்தல் துண்டை ஓரமாக வீசி எறிந்து விட்டுச் செல்கிறார். அவரது இச்செயல் மற்றும் அதிலிருந்த மன்னிப்புத் தன்மை எனக்கு விசித்திரமாயிருந்தது. போத்தல் ஓட்டை ஒரு புறம் வீசிய நிதானம் முன்மாதிரியாய்ப்பட்டது. மனதில் அவரது செயல் ஆழமாய்ப் பதிந்தது. எனது 6 ஆம் வகுப்பு சமூகக் கல்வி கொப்பியின் அட்டையில் இதை முழுமைப்படுத்திப் பதிவு செய்திருந்தேன்.

"குப்பியோடெ நீ தப்பியோடு
குப்பை மேட்டுக்கு- உன்னால்
துப்புதே பார் கால் விரல்- துளிக்
குருதி ரோட்டுக்கு
தப்பு யார் மேல்
தண்டனை செய்யேன்

ஒப்புக் கொள்வாயா?
வேண்டுமென்றே வெண்மணலில்
புதைந்து நின்றாயா?
நாயும் நீயும் நானும் நண்பர்
யாவும் நம் சொந்தம்
தீயும் கூடப் பாயும் நீராய்
மாயம் - நல்லெண்ணம்"

எதையும் நல்லெண்ணம் கொண்டு பார்க்க வேண்டும், நேரே குற்றவாளியாக நின்றாலும் தீர விசாரிக்க வேண்டும் எனும் கருத்துக்களை இக்கவிதை தருகின்றது.

## 7. தொகுப்புரை

இத்தொகுப்பில் நோக்கப்பட்ட சுவர்க்கவிதைகள் காதல், மன உளைச்சல், இயற்கை இரசிப்பு, தன்நிலைப்பாடு, நகைச்சுவை அல்லது கிண்டல், நட்பும் பிரிவும், போரும் அதன் விளைவுகளும், வாழ்வியல் முரண்பாடுகள், விழிப்புணர்வுக்கவிதைகள், வெளிப்படையாகக் காட்டப்படமுடியாத எதிர்ப்பு அல்லது கோபம் எனப் பல்தரப்பட்ட பாடு பொருட்களைக் கொண்டு காணப்படுகின்றன. வெளிப்படுத்தல் தன்மையில் சமகாலக் கவிதைச் செல்நெறிகளின் தாக்கம் காணப்படுவதுடன் நாட்டுப்புறப் பாடல்களின் உறவும் காணப்படுகின்றது. இவற்றில் பல விதந்து நயங்கூற முடியாத அளவுக்கு விரச உணர்வினையும், பொதுத்தளத்தில் பதிவு செய்ய முடியாத அளவுக்கு தூசணை வார்த்தைகளைக் கொண்டதாகவும் காணப்பட்டன. சில திருக்குறள் முதலான நன்கு அறியப்பட்ட இலக்கியங்களின் சந்தங்களுக்கு அமையவும் எழுதப்பட்டிருந்தன. இவற்றுள் சில சொல்ல வந்த விடயத்தை எந்தவொரு மறைப்புமின்றிப் பச்சையாகக் கூறுவன. ஆயினும் அவற்றுள் அகப்பட்டுள்ள கருத்தியல் முக்கியத்துவம் கொடுத்துக் கருதத்தக்கவை. சில சமூகத்தில் மேலோங்கி நிற்கும் ஆதிக்கத் தன்மைக்கு எதிராகக் குரல் கொடுப்பவையாக இருந்தன. தமது மனதில் ஆழப் பதிந்த ஏக்கங்கள், சஞ்சலங்கள், அடக்கமுடியாத ஆசைகள், மகிழ்ச்சிப் பூரிப்பு, பரபரப்பு என விரிந்த உணர்வு நிலைப்பாடுகளைச் சுமந்து நிற்கின்றன. வந்த இடத்திலே வந்த வாகிலே பதிவு செய்கின்ற பதிவு செய்யப்படுகின்ற பண்பமைவு காரணமாக உணார்வுகளின் வடிகால்களாகவும் சமூகத்தின் வெளிப்படைத் தன்மையான முகமாகவும் கூடப் பார்க்கக் கூடியது. எனவே சுவர்க்கவிதைகள் பற்றிய மதிப்பீடுகளும் ஆவணப்படுத்தலும் அவசியம் மிக்கது என்பது தெளிவாகும்.

## 8. முடிவுரை

சுவர்க்கவிதைகள் தொடர்ந்து நடைப்பெற்றுக் கொண்டிருக்கும் ஒரு ஆக்கப்பதிவு முயற்சி. இதன் தேடலும் ஆவணப்படுத்தலும் சமூகத்தின் மற்றொரு வெளிப்படைத்தன்மையான முகத்தை நமக்குக் காட்டும். சமூகத்தின் உணர்வுகளை போலித்தனத்திற்கும் அழுத்தங்களுக்கும் வெளியில் நின்று காண்பதற்கு சுவர்க்கவிதைகள் சிறந்த ஊடகமாகும். ஆயினும் அவற்றை தேடுவதும் ஆவணப் படுத்துவதும் நூலகமொறிலோ அல்லது வாசிப்பறையிலோ இருந்து ஆற்றப்படக் கூடியது அல்ல. சுவர்க் கவிதைகள் ஒரே இடத்தில் குவிந்து கிடப்பனவுமல்ல. அங்கொன்று இங்கொன்றாகச் சிதறிக் கிடப்பவை. ஆகவே நீண்ட தேடல் முயற்சியில் பலரது பங்கேற்புடனேயே இது முழுமைபடச் சாத்தியமாகும்.

## அடிக்குறிப்புகள்

1. http://en.wikipedia.org/wiki/Wall_poems_in_Leiden பார்க்கப்பட்ட நாள் சனவரி 12,2013.
2. தினக்கதிர், "நமது நூலகம்", இலங்கை தமிழ் நாளிதழ், சனவரி 25-31,1998 பக்கம் 13
3. Nick Haslam (2012)> Psychology in the Bathroom, Palgrave Macmillan, pp 430-433 viewed at http://www.thepsychologist.org.uk/archive/archive_home.cfm?ArticleID=2076&editionID=214&volumeID=25
4. http://en.wikipedia.org/wiki/Khudiram_Bose, பார்க்கப்பட்ட நாள், பெப்ரவரி 25, 2013

## ஆதாரங்கள்

1. Brett Wolff> (2010) "The Writing on the stall :Graffiti, vandalism>and social Expression", Kaleidoscope: Vol.9>Article11.

# ஆவணப்படுத்தப்பட வேண்டிய – ஆவணப்படுத்தத் தவறிய – ஈழத்து ஆரம்பகால இலக்கிய முயற்சிகள்

செ.யோகராசா

## 1. ஆய்வு நோக்கங்கள்

அச்சில் வெளிவந்த, முற்பட்ட, ஈழத்து இலக்கிய முயற்சிகள் பலவும் வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகளைப் பேணுகின்ற வசதிகளின்மை, இருப்பனவற்றை தேடமுடியாத நிலைமை, ஆர்வமின்மை, சமூக நோக்குடைய இலக்கிய அமைப்புகளின்மை, விடயஞானமின்மை, பதிவுகளின்மை முதலான காரணங்களினால் அறியப்படாதுள்ளன; அறியப்பட்டவற்றின் முக்கியத்துவமும் அறியப்படாதுள்ளது. இத்தியாகப் படைப்புகள். சஞ்சிகைகளுள் - இக்கட்டுரையாளரது தேடல்களுக்கு அகப்பட்டுள்ளவற்றுள் இலக்கிய வகை அடிப்படையில் முக்கியமான சிலவற்றை அறிமுகம் செய்வதும் ஈழத்து இலக்கிய வளர்ச்சிப் பின்புலத்தில் இவற்றின் முக்கியத்துவத்தைப் புலப்படுத்துவதனூடாக, இவை ஆவணப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை உணரச்செய்வதுமே இவ் ஆய்வின் நோக்கங்களாகின்றன.

## 2. ஆய்வுமூலங்கள் :

மேற்கூறிய அடிப்படையில் பின்வரும் சஞ்சிகைகளும் படைப்புகளும் கவனத்திற்கு எடுக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| சஞ்சிகை | : | 'பாரதி, மாதர்மதி மாலிகை'. |
| கவிதை | : | 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி', 'தற்கால நாகரீக வேடிக்கைப் பாக்கள்' (3ம் பாகம்) |
| நாவல் | : | அனிச்சமலர் |
| நாட்டாரிலக்கியம் | : | பூசணியாள் கதை<br>பாஞ்சாலி சபதம் |
| ஆய்வு | : | 'தமிழ்ப்பாஷை' |
| விமர்சனக் கட்டுரை | : | 'பாரதியின் திறமை என்ன?' |
| சிறுகதை | : | 'சதிகாரி' |

## 3. சஞ்சிகை :

### 3.1. 'பாரதி'[1]

| | | | | |
|---|---|---|---|---|
| 3.1.1. அறிமுகம் | : | ஆசிரியர்கள் : நிர்வாக ஆசிரியர் | : | க.செபரத்தினம் |
| | | பதிப்பாசிரியர் | : | ம.நாகலிங்கம் |
| | | பிரசுரகர்த்தா | : | கு.த.குருமூர்த்தி |

காலம் : 1948 - 1950

முகவரி : நிர்வாக ஆசிரியர், பாரதி காரியாலயம்,
மண்டூர் EP

விலை (ஓரிதழ்) : 30 சதம் வருட சந்தா : நான்கு

கிடைத்துள்ளவை : 10 இதழ்கள்

3.1.2 முக்கியத்துவம்

3.1.2.1. நவீன கவிதை:

3.1.2.1.1. நவீனகவிதைஉருவாக்கம்: சமகாலத்தில்ஏலவேவெளிவந்துள்ளமறுமலர்ச்சி(1946-47) யே ஈழத்து நவீன கவிதையின் தோற்றத்திற்குக் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது என்ற கருத்து நிலவி வந்துள்ளது.[2] ஆயினும், ஒப்பிட்டு நோக்கில் அவதானிக்கும் போது மறுமலர்ச்சியில் வெளிவந்த சமூக நோக்குடைய கவிதைகள் முக்கியத்துவமுடையனவல்ல. மாறாக, பாரதியில் வெளிவந்துள்ளவை அதிக முக்கியத்துவம் பெறுபவை.

உ-ம் இதுவா பொங்கல் :
- கவி.ஜி.எம்.செல்வராஜ்

“ஏழைகளைக் கூப்பிட்டு, ஏசிப் பேசி
ஏலாத வேலைகளைச் செய்துவிட்டு
‘நாளை வா கூலிதர’ வென்று சொல்லி
நாட்டாண்மை காட்டியெந் நாளுந் தங்கள்
பேழையிலே நிரப்பிவிட்ட பணத்தைக்கொண்டு
பெருமையுடன் ஊரறியப் பொங்கலிட்டு
வாழையிலை வெட்டியதில் புக்கை கட்டி
வறியவர்க்கு வழங்குவதும் பொங்கலாமோ?”
.....................................

- ❒ மொழியுணர்ச்சிக் கவிதைப் போக்கின் ஆரம்பத்தையும் ‘பாரதி’யில் காணலாம்:
உ-ம் இன்னும் உறங்குவதா?
- பரமஹம்ச தாசன்

பல்லவி

இன்னும் உறங்குவதா? தமிழா நீ
இன்னும் உறங்குவதா?
என்ன மடமையடா, கன்னித்தமிழா, நீ (இன்னும்)

அனுபல்லவி

பொன்னின் இளங்காலை புலர்ந்துலகெங்குமே
பூரண சுதந்திர பேரிகை முழங்கையில் (இன்னும்)

சரணம்

அன்னிய மோகத்தால் தன்மானம் துறந்தாயோ?
அடிமைப் பிணியால் உன் ஆற்றலை மறந்தாயோ?
பன்னெடு நாளிடர்ப் பட்டது போதாதோ?
பைந்தமிழ்ப் பணிக் (கு) உடன் பாய்ந்தோடி வராமல்
(இன்னும்)

.............................................

3.1.2.1.2. வசன கவிதையின் ஆரம்பம் ஏற்கனவே 'ஈழகேசரி'யில் துளிர்விட்டிருப்பினும் அதன் தொடர்ச்சியாகவும் மட்டக்களப்பு பிரதேச முதன் முயற்சியாகவும் ஆன வசன கவிதை ஆரம்ப முயற்சி 'பாரதி'யில் வெளிப்படுகின்றது.

உ-ம் : 'கற்பனைக் காதலிக்குக் கலைக் கடிதம்'

-எஸ்.கே.ராஜ்[6]

"......................................
அம்புலி கண்டு அல்லலுற்றேன் என்றாய்
எங்கள் ஊர் சந்திரனுள் நீயே இருக்கின்றாய்
நினைக்காண நெருங்கி வந்தேன்
என்னைப் பார்க்க மனமில்லாது ஏன் முகிலுள்
மறைந்தாய்"

3.1.2.1.3. சமகாலச் சஞ்சிகைகளில் இடம்பெறாத கவிஞர்கள் சிலருக்குப் 'பாரதி' களமமைத்துள்ளது:- உ.ம்: பரமஹம்சதாசன் (மலையகம்), மூனா கானா (மட்டக்களப்பு) அன்புதாசன் (அனுராதபுரம்)

3.1.2.1.4. மட்டக்களப்பின் முன்னோடிக் கவிஞர் சிலரை இனங்காட்டியுள்ளது
உ-ம் : கவி.ஜி.எம்.செல்வராஜ்[3]

### 3.1.2.2 சிறுகதை:

3.1.2.2.1. பொருள் விரிவு : முஸ்லீம் மக்களது குடும்ப வாழ்க்கைப் பிரச்சினையை வெளிப்படுத்தும் சிறுகதை இடம்பெற்றுள்ளது.
(உ-ம் சதிகாரி)

- ❒ தொழிலாளரது மன உணர்வுகளைச் சிறப்பாக வெளிப்படுத்தும் சிறுகதை இடம் பெற்றுள்ளது (உ-ம் : புது யுகம்). ஒப்பீட்டு நோக்கில் இவை முதன் முயற்சிகளாம்.

3.1.2.2.2. இலங்கை மட்டத்திலே சிறுகதைப் போட்டி நடத்தி இளம் எழுத்தாளர்களை ஊக்குவித்துள்ளது:-
உ-ம் வ. ச. சேகர்

### 3.1.2.3. கட்டுரை/தகவல்:

3.1.2.3.1. சமகால ஈழத்துச் சமூக, அரசியல், இலக்கியப் போக்குகள் சார்ந்த கட்டுரைகளும் தகவல்களும் ஒப்பீட்டு நோக்கில் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

உ-ம் : இலக்கியக் கட்டுரை : 'இருபதாம் நூற்றாண்டுப் புலவர்களும் சமுதாயமும்' (சந்திரநாதன்)[4]

- ❒ சமூகச் சார்பான கட்டுரை : 'தீண்டாமையின் திரு நடனம்' (D.T.செல்வநாயகம்)[5]
- ❒ அரசியல் சார்பான கட்டுரைகள் : 'பேரறிஞன், பேனாப் புரட்சி வீரன் C.N.அண்ணாதுரை MA.'
  (எம்.எஸ்.பாலு, வந்தாறுமூலை)
- ❒ அரசியல் சார்பான தகவல் : 'மட்டுநகரில் கருஞ்சட்டை வீரர்கள்'[6]

### 3.1.2.4. ஆசிரியத் தலையங்கம் :

ஒப்பீட்டு நோக்கில் சமகால அரசியல், சமூகம், இலக்கியம் சார்ந்த விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற பல விடயங்கள் இடம்பெற்றுள்ளன.

உ-ம் : 'ஆசிய மாநாடு' (பிற்கால அணிசேரா நாடுகள் அமைப்பு உருவாக்க ஆரம்ப மாநாடு)
'பெப்ருவரி-4' (இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் உருவாக்கப்பட்ட சுதந்திரக்கொடி தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் பற்றி)

## 3.2. 'மாதர்மதிமாலிகை'[7]

3.2.1. அறிமுகம் : மாதர் மதிமாலிகை திருகோணமலை மாதர் ஐக்கிய சங்க வெளியீடு
வெளிவந்தவை : 04 இதழ்கள் (1927-1930)

3.2.2. முக்கியத்துவம்:

3.2.2.1. பெண்கள் அமைப்பினால் வெளியிடப்பட்ட முதற் சஞ்சிகை

3.2.2.2. பெண்கள் பிரச்சினைகள் தொடர்பாக, ஈழத்திலும் தமிழகத்திலும் இந்தியாவிலுள்ள அறிஞர்கள், அறிஞைகள் எழுதிய கட்டுரைகள் இடம்பெற்றிருப்பது காரணமாக பெண்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி ஏற்படும் வாய்ப்பு உருவாகியது.

உ-ம்: பெண்கள் மூளையில் போதிய அறிவில்லையா? - திருமகள் இரத்தின சுப்பிரமணியம்

3.2.2.3. அதே வேளையில் அறிவு வளர்ச்சிக்குகந்த கட்டுரைகளும் இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

உ-ம்: உலகத்தின் உற்பத்தி - இராஜராஜன்

3.2.2.4. சமகாலத்தில் திருகோணமலையில் (1919ல்) உருவாகிச் செயற்பட்ட மாதர் ஐக்கிய சங்கம் பற்றிய தகவல்கள் இடம்பெற்றிருப்பதும் பயன்தரக்கூடியதே[8].

## 4. கவிதை:

### 4.1. 'மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி'[9]:

4.1.1. அறிமுகம்:

நூல்: மேலைத்தேய மதுபான வேடிக்கைக் கும்மி

இயற்றியவர் : ஞானாம்பிகை

ஆண்டு : தரப்படவில்லை (எடுத்தாண்ட விடயம் முப்பதுகளிலே முதன்மை பெற்றிருந்தமையால் இந்நூல் இக்காலப்பகுதியில் வெளிவந்திருக்க வாய்ப்புள்ளது)

4.1.2. முக்கியத்துவம்:

4.1.2.1. இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பகாலக் கவிதாயினிகளுளொருவராக இவர் வெளிப்படுகின்றார்.

4.1.2.2. காலனித்துவ ஆட்சி எதிர்ப்புக் குரலாக இனங்காணப்படக்கூடிய பாடல்களாக இவை உள்ளன.

உ-ம் “விந்தை யிதன்றோ குடிகுடி கேடென்று
விள்ள விவரா சாட்சியிற் தள்ளாமல்
எந்தக் குறிச்சிக்கு மீற்றிற் குடிகுடி
என்றல்லோ செல்கிறார் பாருமடி”

### 4.2. ‘தற்கால நாகரீக வேடிக்கைப் பாக்கள்’ (மூன்றாம் பாகம்)

4.2.1. அறிமுகம்:

நூல் : ‘தற்கால நாகரீக வேடிக்கைப்பாக்கள்’[9A] (மூன்றாம் பாகம்)
இயற்றியவர் : மண்டைதீவு பிரமஸ்ரீ.சி.அகிலேசுவரசர்மா
வெளியீடு : கொக்குவில் சோதிடப்பிரகாச யந்திரசாலை,
2ம் பதிப்பு: 1933

4.2.2. முக்கியத்துவம் :

4.2.2.1. முப்பதுகளின் முக்கியமானதொரு கவிஞர் இவரென்பது மேலும் உறுதியாகின்றது.[10]

4.2.2.2. காலனித்துவ ஆட்சி எதிர்ப்புக் குரலாக இனங்காணப்படக்கூடிய பாடல்களாக இவை உள்ளன.

உ-ம்:

நாட்டிற் கள்ளை வேண்டாமென்று
தள்ளுகின்றார்
நாகரீக உலகில் குடித்துத்
துள்ளுகின்றார்
வீட்டிற் காசை அன்னியர் கையில்
கொட்டுகின்றார்
விறண்டிப் பெட்டிக் காகத் தீர்வை
கட்டுகின்றார்

## 5. நவீன காவியம் :

### 5.1.‘அறிமுகம்’ :– ‘சதாசிவ லீலா சரித்திரம்’[11]

எழுதியவர் : சு.பொன்னம்பலம்
ஆண்டு : 1929

கதைச் சுருக்கம் : யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வயித்திலிங்கர் மகனான சதாசிவன் கண்டியில் அரசசேவை புரிபவன். அங்குள்ள சிங்களவரான குலத்துங்க முதலியார் மகளான லீலாவைக் காதலிக்கின்றான் தனது பெற்றோரின் பலத்த எதிர்ப்பினைச் சமாளித்து இறுதியில் திருமணம் செய்துகொள்கின்றான்.

**5.2. முக்கியத்துவம் :**

5.2.1. தமிழர் - சிங்களவர் ஒற்றுமை பற்றிய ஈழத்தின் கதைசார்ந்த முதற் படைப்பு இதுவே.

5.2.2. பாடல் வெளிப்பாட்டு முறையானது நாட்டார் இலக்கிய வகை சார்ந்த கதைப்பாடல் மரபிற்கு அண்மித்ததாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எ-டு: "வண்ணார் பண்ணையிலே வாழுமந்த வயித்திலிங்கர்
சதாசிவனைப் பெற்றதாற் றரணியிற் புகளைக் கொண்டார் பிள்ளையைப் பெற்றதினால் பெருமை மிகவே கொண்டார் மன்னனைப் பெற்றதினால் மரியாதை கொண்டாரே
சங்கை யுடனிருந்து தன்னூரில் வாழுகிறார்
மங்களத் தோடிருந்து மதிப்பாக வாழுகிறார்
இப்படித் தானிருந்து இன்பாக வாழையிலே
காகிதம் மகனெழுதுங் கடுந் தினத்திற்கடுத்தநாள்
தனையன் எழுதிய தபால் வருந் தேதியிலே
தன்வீட்டிலே மிகவும் சந்தோஷந்தானே கொண்டு
எங்களுக்குவென்ன குறை இருக்கையிலெமது பிள்ளை
தம்பியிருக்கையிலே தாரணியிலேது குறை
பணக்காரர் குறைவுமில்லைப் பாக்கியத்தைப் பெற்றதினால்
புகளாற் குறைவுமில்லைப் புத்திரனையீன்ற தினால்
வாழ்விற் குறைவுமில்லை மகனுடை மேன்மையினால்
என்மகனைப் போலவே யாருக்குப் பிள்ளையுண்டு
அறிவிற் சிறந்தவண்டி ஆணழகு பெற்றவண்டி
குணத்திற் சிறந்தவண்டி குவலயம் ஆள்பவண்டி
என்றுமேயிருந்த விதம் ஏகபுத்திரன் புகளை
பேசியிருக்கையிலே பெற்ற மகன் புகளை
சங்கடப்படலையினைத் தபாற் காரனுந்திறந்து
வருகின்ற செய்தியை வயித்திலிங்கர் கண்டவுடன்
............................................"

5.3. முப்பதுகளலிலே கண்டியிலிருந்து வேறு இலக்கிய முயற்சிகள் இடம்பெற்றிருக்கலாமென்று ஊகிக்க வாய்ப்புள்ளது.

## 6. நாவல் :

**6.1. அறிமுகம் : 'அனிச்ச மலரின் காதல்'[12]**

எழுதியவர் : காரைநகர் வே.தில்லைநாதன்
எழுதப்பட்டது : 1942
வெளியிடப்பட்டது : 1953

**6.2. முக்கியத்துவம்**

6.2.1. சமகாலச் சமூகத்தில் முக்கியம் பெறுகின்றதொரு பிரச்சினையைப் பற்றி அதாவது பெண்ணுக்கு விருப்பமில்லாத திருமணத்தை பெற்றோர் செய்து வைப்பது பற்றி இந் நாவல் பேசுகின்றது!

6.2.2. மேற்கூறிய விதத்தில் யதார்த்த நோக்கிலான நாவலாகவும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. ஏனெனில் சமகாலத்தில் கற்பனைப்பாங்குடைய நாவல்களே பெருமளவில் வெளிவந்து கொண்டிருந்தன

6.2.3. நாவல் முக்கியப்படுத்துகின்ற பிரச்சினைக்கான தீர்வு$_3$ சட்டபூர்வமான விவாகரத்தைப் பெற்றுக்கொண்ட அனிச்சமலர் தான் விரும்பிய காதலனை மறுமணம் செய்வதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. மேற்கூறிய விருப்பமற்ற திருமணம் என்ற விடயமே முக்கியம் பெற்றிருப்பினும் சமகாலச் சீதன முறைமைகள், நீதிமன்ற விசாரணை முறைகள், முதலியன பற்றியும் நாவலூடாக அறிய முடிகின்றது.

6.2.4. காதற் திருமண ஆதரிப்பிற்கு பழந்தமிழிலக்கியக் காதற் கொள்கை உந்துசக்தியாக அமைந்திருப்பதும் பழந்தமிழிலக்கியச் செய்யுள்கள் மேற்கோளாக இடம்பெற்றிருப்பதும் நாவலாசிரியரது தமிழ்ப் பற்றினை வெளிப்படுத்தியமை காரணமாக, சமகால விமர்சகர்களால் இந்நூல் பாராட்டப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-ம்: பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை)

6.2.5. நாவல் வாசிப்பு நாட்டம் சமகாலத்தில் குன்றியிருந்ததாகவும் அதனால் நாவல்கள் வெளிவருவது குறைவாக இருந்ததாகவும் ஆன தகவல்களை நாவல் தெரியப்படுத்துவது கவனத்திற்குரியது. (நாற்பதுகளில் எழுதப்பட்ட நாவல் ஐம்பதுகளில் வெளிவந்தமைக்கான காரணம் அவையே).

## 7. ஆய்வு:

### 7.1. 'தமிழ்ப்பாஷை'[13]

7.1.1. அறிமுகம்

நூல் : தமிழ்ப் பாஷை

ஆசிரியர் : திருக்கோணமலை த.சரவணமுத்துப்பிள்ளை

அச்சுப்பதிவு : குகன் அச்சகம், தெல்லிப்பளை (முதற் பிரசுர விவரங்கள் தரப்படவில்லை)

நூலின் முதலுரு கட்டுரைத் தொடராக தமிழ்நாட்டிலிருந்து வெளிவந்த விவேக சிந்தாமணியில் வெளிவந்துள்ளது (ஆண்டு அறியுமாறில்லை)

7.1.2. முக்கியத்துவம்:

7.1.2.1. தமிழ் மொழி வரலாறு தொடர்பாகவும், தமிழ் இலக்கிய வரலாறு தொடர்பாகவும் சமகால தமிழக அறிஞர்கள் சிலரும் ஈழத்து அறிஞர்கள் சிலரும் கட்டுரைகளும் நூல்களும் வெளியிட்டு வந்த சூழலில் வெளிவந்த இந்நூல் (ஆண்டு தரப்படவில்லை)

உள்ளடக்கம் காரணமாக மட்டுமன்றி, ஆய்வாளரது அணுகுமுறை காரணமாகவும் முதன்மை பெற்றுள்ளது. அதாவது ஆய்வாளது அணுகுமுறையானது அறிவியற் பார்வை கொண்டதாக அமைந்துள்ளதென்பதே இங்கு வற்புறுத்தப்பட வேண்டிய விடயமாகின்றது. இவ்வழி நூலின் சில பகுதிகளை இங்கு எடுத்தாள்வது அவசியமானது.

உ-ம்:1 தமிழ்மொழியின் தோற்றம் பற்றிச் சிந்திப்போர் பலரும் கடவுளுடன் தொடர்புபடுத்திப் பேசுவதே வழக்கமாகும். தி.த.சரவணமுத்துப்பிள்ளை அது தொடர்பில் பல வினாக்களை எழுப்புகின்றார். அவ்விதத்தில் ஓரிடத்தில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்:

தமிழ், கடவுள் பேசும் பாஷையென்பாராயின் மறு பாஷைகள் கடவுட்குத் தெரியாதா? மறுபாஷைகள் பேசுவோரிடத்து கடவுள் பேச வேண்டுமாயின் தமிழிலேயா பேசுவார்? அல்லது அவரவரிடத்து அவரவர் பாஷையைப் பேசுவாராயின் தமிழைக் கடவுள் பேசினார் என்பதால் தமிழுக்கென்ன பயன்?.....

(பக்.2-3)

உ-ம்:2 தமிழ்ச் சங்கம் மூன்று இருந்ததென்பர் பலருள். தி.த.சரவணமுத்துப்பிள்ளையின் நோக்கு வித்தியாசமானது. அது தொடர்பில் அவர் கூறுவதாவது.

“உள்ளதை உள்ளபடி கூறல் தமிழ்ப்பண்டிதர் குணமின்மையின் உண்மையும் அவர் வாயில் வரும்பொழுது உண்மை நிறம் மாறிப் பொய்யாகின்றது. ஆகவே சங்கங்கள் பற்றிக் கூறியனவற்றுள் உண்மையெவ்வளவு பொய் புளுகு எவ்வளவெனக் கண்டுபிடிக்கத் தொடங்கல் பகீரப்பிரயத்தனமாகும். இச்சங்கங்கள் ஒவ்வொன்றும் பல்லாயிரம் வருடமிருந்ததாகவும் இச்சங்கங்களில் சிவன், சுப்பிரமணியர் முதலிய கடவுளர் அங்கத்துவராய் வீற்றிருந்தனரெனவும் இச்சங்கங்கட்குத் தெய்வீகமான சங்கப் பல கையொன்றிருந்ததாகவும் இவ்வித பலகதைகளைக் கூறுவதனால் உள்ள உண்மையும் மறைந்து போகின்றது”

(ப.10)

உ-ம்:3 தமிழ் இலக்கிய நூல் வகைகளுளொன்றாகக் கருதப்படும் புராணங்கள் தொடர்பாக, தி.த.சரவணமுத்துப்பிள்ளை கூறுவதாவது:

“பிற்கூற்றுப் புராணங்களின் காலமே தமிழுக்குக் கலிகாலம்! விருத்தாப்பியமடைந்த தமிழணங்கிற்குப் பஞ்சப்புலனும் இக்காலத்துக் கெட்டனபோலும். இப்புராணங்களே தமிழைப் பாழாக்கின பெரும் பேறுடையின. ஆலையில்லா வூருக்கு இலுப்பை பூ சர்க்கரை போலவும் தட்டிப் பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப் பிரசண்டனென்பது போலவும் காரிகை கற்று சொற்றொடர் கற்கப் பழகினோர் யாவரும் புராணம் எழுதத் தொடங்கின் தமிழ் என்னபாடுதான் படாது!”.......

(ப.16)

## 8. நாட்டாரிலக்கியம் :

### 8.1. அறிமுகம் :[14]

பூசணியாள் கதை: (1975)

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம், சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு

பாஞ்சாலி சபதம் (1975)

தொகுப்பாசிரியர் : அருள் செல்வநாயகம், சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு

### 8.2. முக்கியத்துவம்:

8.2.1. நாட்டாரிலக்கிய வகைகளுளொன்றான கதைப்பாடல்கள் பற்றுடே சகரிப்புகள் ஈழத்தில் அரிதாகவே நடைபெற்று வந்துள்ளன. இவ்விதத்தில் இவற்றின் வரவு மிகுந்த முக்கியமானதொன்று.

8.2.2. 'பூசணியாள் கதை' கண்டிய ராசனொருவன் உலாவந்த வேளையிலே மட்டக்களப்பிலே பூசணியாள் என்பவளைக் கண்டு காதல் வயப்படுவதும் அவள் அரசனின் காதலை ஏற்க மறுத்துத் தற்கொலை செய்வதும் பற்றியது. இவ்விதத்திலே கண்டி அரசு மட்டக்களப்பு தொடர்பு பற்றிய வாய்மொழி இலக்கிய ஆதாரங்களுளொன்றாக அமையக்கூடியது இது. (பாஞ்சாலி சபதம் மகாபாரதத்துடன் தொடர்புபட்டது)

8.2.3. மேற்கூறிய கதைப்பாடல்களின் வரவூடாக மட்டக்களப்பு நாட்டார் வழக்காறு சார்ந்ததொரு நடைமுறை தெரியவருகின்றது. அதாவது, சித்திரை வருடப்பிறப்பு முதலான கொண்டாட்டங்களின்போது வீடுகளிலே ஊஞ்சல் கட்டி ஆடுகின்றபோது இத்தகைய பாடல்கள் பாடப்பட்டு வந்துள்ளன[15] என்பதே அதுவாகும்.

8.2.4. ஆழ்ந்து சிந்திக்கின்றபோது, மட்டக்களப்பு பாரம்பரியக் கல்வி முறை சார்ந்த செவியேற்றக் கல்வி முறைக்குரிய ஊடகமாக வாய்மொழிப் பாடல்கள் விளங்கிவந்துள்ளனவென்பதும்[16] இவ்விதத்தில் கதைப்பாடல்களும் முக்கியமானவையென்பதும்[17] மனங்கொள்ளப்பட வேண்டியதொன்று. முற்குறிப்பிட்ட கதைப்பாடல்களுக்கும் இது பொருந்துவதே.

8.2.5. பன்முக ஆளுமைகள் கொண்டவரான மட்டக்களப்பு எழுத்தாளர் அருள் செல்வநாயகம் என்பவரது நாட்டாரிலக்கிய தேடல் முயற்சி பற்றியும் இவ்வழி அறிய முடிகின்றது.

## 9. சிறுகதை : 'சதிகாரி'[18]

9.1. அறிமுகம் : இது நூல் தொகுப்பன்று. தனியொரு சிறுகதையாகும். முற்குறிப்பிட்ட பாரதி சஞ்சிகையில் (இதழ்:10 பக்கம்:5-6) எம்.எம்.ஸாலிஹ் என்பவரால் எழுதப்பட்டுள்ளது.

9.2. முக்கியத்துவம்:

9.2.1. இக்கட்டுரையாளர் தேடலின்படி ஈழத்தில் முதன்முதலாக, சிறுகதை எழுதிய முஸ்லிம் எழுத்தாளர் இவராகின்றார்.

9.2.2. பிற்காலத்தில் கவிதைத்துறையில் பிரவேசித்து ஈழத்தின் முக்கிய கவிஞராக முகிழ்ந்த புரட்சிக்கமால் என்பவரே இச்சிறுகதை எழுத்தாளர் என்று அறிய முடிகின்றது. புரட்சிக் கமால் இரண்டு சிறுகதைகள் மட்டுமே எழுதியிருப்பதாகவும் தெரியவருகின்றது.[19] அவற்றுளொன்று, இதுவாகும்.

9.2.3. இச்சிறுகதையின் உள்ளடக்கம் புரட்சிகரமானது. அதாவது, பொருந்தா மணத்திற்குட்பட்டதொரு பெண் கணவனது கொடுமைகள் தாங்காது அவனைக் கொலை செய்வதாக அது அமைந்துள்ளது.

9.2.4. எழுத்தாளரது மொழி நடைப்பாங்கு தனித்துவமானது: கவனத்திற்குரியது. உ-ம்: "கத்தியிலிருந்து சொட்டிக் கொண்டிருக்கும் இரத்தத் துளிகளைக் கவனித்தாள். ஒவ்வொரு துளியிலும் ஒவ்வொரு காட்சிகள் நடனமாடின. முதல் துளியைப் பார்த்தாள். கோவலனின் அழகு மார்பிலே கண்ணகி இறுமாந்து கிடக்கின்றாள்... இரண்டாவது துளியைப்

பார்த்தாள்... அமராவதியின் கற்கண்டுக் கன்னத்தை அம்பிகாபதியின் தளிர்க்கரம் வருடிக் கொண்டிருக்கிறது. மூன்றாவது துளியைப் பார்த்தாள். லைலாவின் நுதலிலே மஜ்னுவின் அதரங்கள் இன்ப முத்திரையிடுகின்றன நான்காவது துளியைப் பார்த்தாள்.... சாஜகானின் இதயத்திற்குள் மும்தாஜ் கைகொட்டிச் சிரித்துக் கொண்டிருந்தாள்"

## 10. விமர்சனக் கட்டுரை : 'பாரதியின் திறமை என்ன?'

10.1 அறிமுகம் : எழுதியவர் : நாவற்குழியூர் நடராசன்

பாரதி நினைவுமலரில் இடம்பெற்றுள்ளது.

10.2 முக்கியத்துவம்

10.2.1. பாரதியியலைப் பொறுத்தவரையில் ஈழத்து ஆய்வாளரது பங்களிப்பு முக்கியமானதொன்று. பாரதி பற்றிய ஆய்வுப் போக்கிலே பலவிதங்களில் திருப்பு முனை ஏற்படுத்தியவர் பேராசிரியர் கைலாசபதி. (பாரதியியல் என்ற தொடரினை உருவாக்கியவரும் அவரே). பாரதியாரின் மேதைமையை ஆரம்பகாலத்தில் (1930 அளவில்) உணர்ந்தெழுதிய முன்னோடிகள் இருவருளொருவர் விபுலானந்த அடிகள். (கைலாசபதிகாலம் வரை) அன்னாரைத் தொடர்ந்து சென்ற ஈழத்தவர்கள் பலரும் பாரதியார் கவிதைகள் விமர்சன நோக்கில் அணுகினாரல்லர். இரசனை நோக்கில் அல்லது பலதுறை ஆளுமைப் பார்வையிலேயே அணுகி வந்துள்ளனர். இத்தகைய சூழலில் முதற்குறிப்பிட்ட கட்டுரை அவரது கவிதையொன்றை ("செந்தமிழ் நாடென்னும் போதினிலே") - விமர்சன நோக்கில் அணுக முற்பட்டுள்ளது. இவ்விதத்தில் ஆரம்ப முயற்சியாகவும் அமைகின்றது. உ-ம்: "தமிழ்நாட்டின் சிறப்பை இன்னும் சொல்லுகிறார். 'நல்ல காதல் புரியத் தெரிந்த கன்னியர்கள் - நிறைந்திருக்கிறார்களாம், தமிழ்நாட்டில். அதுதான் தமிழ் நாட்டிற்குச் சிறப்போ? இளங் கன்னியர்கள் எந்த நாட்டில் இல்லை? எந்த நாட்டுக் கன்னியர்களுக்குத்தான் காதல் புரியத் தெரியாது? எங்கெங்கும் கன்னியர்கள் இருக்கவே இருக்கிறார்கள். அவர்களும் காதல் புரிய நன்றாகத் தெரிந்துதானே இருக்கிறார்கள். காதல் புரியத் தெரியாத கன்னியர்களும் இருக்க முடியுமா எங்காவது? முடியாது. எனவே, காதல் புரியும் அரம்பையர் போல் இளங்கன்னியர் சூழ்ந்த தமிழ்நாடு என்று சொல்லுவதால் தமிழ் நாடு பெருமைப்படுவதற்கும் இடமிருக்கிறதா? இல்லையே...." (ப.24)

## 11. முடிவுரை:

11.1. தேடல்களுக்கான அவசியமானது சஞ்சிகை, கவிதை, நாவல், சிறுகதை, நவீன காவியம், ஆய்வு, விமர்சனம் எனப் பல்துறை சார்ந்துள்ளமை இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது.

11.2. ஈழத்து நவீன இலக்கிய வரலாறு என்பது, (i) நவீன இலக்கிய உருவாக்கத்தில் சஞ்சிகைகளின் பங்கு (ii) காலனித்துவ எதிர்ப்புப் போக்கு (iii) இன ஒற்றுமை நோக்கு (iv) விஞ்ஞான நோக்கிலான தமிழ்மொழி, தமிழ் இலக்கிய வரலாற்றுப் பார்வை (v) முஸ்லீம் சமூகம் சார்ந்த முதற் சிறுகதை (vi) கண்டன நோக்கிலான விமர்சனம் (vii) 'பெண்கள் இலக்கிய' முயற்சிகள் (viii) நாட்டாரியல் என பல்துறை சார்ந்தது ஆழமும் விரிவும் பெறக்கூடியதாகவிருக்கிறது என்பதும் இதுவரை கூறியவற்றிலிருந்து புலப்படுகின்றது.

11.3. இவை ஆவணப்படுத்தப்பட வேண்டிய முக்கியத்துவம் புலப்படுகின்றது.

11.4. இவ்வழியிலே அவசியமான தேடல்கள் என்ற விதத்திலே முக்கியமான சிலவற்றைக் குறிப்பிடலாம்:

உ-ம் (i)

மறுமலர்ச்சி, பாரதி காலத்துப் பிற சஞ்சிகைகள் : எரிமலை (திருகோணமலை), உதயன் (மட்டக்களப்பு)

உ-ம் (ii)

மட்டக்களப்புப் பிரதேச ஆரம்பகாலப் பத்திரிகை : கிழக்குத் தபால்

உ-ம் (iii)

முதற் பெண் சிறுகதையாசிரியர்கள்: பா. கதிராயித்தேவி, பத்மா துரைராஜா (மறுமலர்ச்சியில் எழுதியுள்ள இவர்கள் இலங்கையர் என்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. செங்கை ஆழியானின் 'மறுமலர்ச்சிக் கதைகள்' தொகுப்பிலே இவர்களது சிறுகதைகள் சேர்க்கப்படவில்லை).

11.5. ஈழத்து நவீன இலக்கிய வரலாறு முழுமைபெறுவது என்பது மேற்கூறிய பல துறைகளிலும் தேடல் நிகழ்கின்ற போதுதான் சாத்தியமாகும் என்பதற்கும் இவ் ஆய்வு சான்றாதாரமாகின்றது.

## அடிக்குறிப்புகள்

1. இது பற்றிய விரிவான விளக்கத்திற்கு, பார்க்க: யோகராசா செ.கலாநிதி. **ஈழத்து நவீன இலக்கிய உருவாக்கத்திற்கு மண்டூர்ப் பாரதியின் பங்களிப்பு** (2010), கலை, கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. பக் 1-21. கொழும்பிலிருந்து ஏற்கெனவே (1946) இன்னொரு பாரதியும் வெளிவந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது (ஈழத்திலிருந்து வெளிவந்த முதல்) முற்போக்குச் சஞ்சிகை என்பது கவனத்திற்குரியது.
2. சான்றாதாரத்திற்கு பின்வருந் தொகுப்பு நூலைப் பார்க்க: **மறுமலர்ச்சிக் கவிதைகள், தொகுப்பும் பதிப்பும்** : செல்லத்துரை சுதர்சன் (2000), அச்சிட்டோர் கிறிப்ஸ் பிறின்டேஸ்.
3. இக்கவிஞர் பற்றிய விவரம் எதையும் அறியமுடியவில்லை. உள்ளடக்கத்தினூடாக, மட்டக்களப்பு கவிஞரென ஊகிக்க முடிகின்றது.
4. யோகராசா செ. கலாநிதி. மட்டக்களப்புச் **சிறுகதை வரலாற்றிலே புரட்சிக்கமாலின் சிறுகதைகள்** (கட்டுரை), தேனகம், பிரதேச செயலக கலாசாரப் பேரவை, மண்முனை வடக்கு, மட்டக்களப்பு 2000, பக் 10-13
5. பிரபல எழுத்தாளர் அருள்செல்வநாயகம் ஆரம்ப நிலையில் இப்பெயரிலேயே எழுதியுள்ளார்.
6. தி.மு.க.சார்பான முதற் கூட்டம் மட்டக்களப்பில் இடம்பெற்றமை பற்றிய செய்தித்தலைப்பே இதுவாகும்.
7. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க: **ஈழத்துச் சிறு சஞ்சிகை வரலாற்றில் மாதர்மதி மாலிகை** (கட்டுரை), கலைக் குரல்கள், பதிப்பாசிரியர் வி.என.உதயச் சந்திரன், பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, மே 1999, பக் 104 - 108

8. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க : யோகராசா.செ.கலாநிதி. **ஈழத்துப் பெண்விடுதலைச் சிந்தனை வளர்ச்சியிலும் செயற்பாட்டிலும் திருகோணமலைப் பிரதேசம்** (கட்டுரை) ஞானம், மார்ச் 2004 பக். 50 - 58
9. சுருக்கமான விளக்கத்திற்குப் பார்க்க: யோகராசா. செ. பேராசிரியர். **சுதந்திரத்திற்கு முற்பட்ட கால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளிற் பெண்கள்,** (கட்டுரை), இலங்கைத் தமிழ் இலக்கியதில் பெண்கள் வெளியீடு : பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கல்வி அமைச்சு, வடமாகாணம் 2011 பக் 16 - 28

   9A. இது பற்றிய கட்டுரை இன்றுவரை எழுதப்படவில்லை.
10. ஈழகேசரிக் காலக் கவிஞர்களுள் முக்கியமானவர் 'இலங்கைத் தேசியம்' பற்றிய சில கவிதைகள் இவரால் ஈழகேசரியில் எழுதப்பட்டுள்ளன. பண்ணைப் பாலக் கும்மி என்றொரு நூலும் இவரால் வெளியிடப்பட்டுள்ளதாயினும் கட்டுரையாளர் பார்வைக்குக் கிடைக்கவில்லை. இவரது கவிதைகள் இன்றுவரை தொகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.
11. அமரர் திக்கவயல் தர்மகுலசிங்கம் தந்துதவிய இந்நூல் பற்றிய கட்டுரை இன்றுவரை எவராலும் எழுதப்படவில்லை.
12. விரிவான விளக்கத்திற்கு, பார்க்க : யோகராசா. செ. **அனிச்சமலரின் காதல் ஓர் ஈழத்து நாவல் பற்றிய சில குறிப்புகள்** (கட்டுரை), மல்லிகை 1984
13. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க : யோகராசா. செ. கலாநிதி. **தமிழ் மொழி, இலக்கிய வரலாற்று முன்னோடி: தி.த.சரவண முத்துப்பிள்ளை,** (கட்டுரை), தடம் 2002 சுவடு 3, கலைக்கலாசார மன்றம், வவுனியா வளாகம், யாழ்.ப.க., வவுனியா, ப 1-4

    யோகராசா. செ. கலாநிதி. **தி.த.சரவணமுத்துப் பிள்ளையின் தமிழ்ப் பாஷை** (கட்டுரை), கலைக்கேசரி, நவம்பர் 2010 கொழும்பு, பக் 54 - 56
14. இவை பற்றிய கட்டுரைகளெவையும் இதுவரை யாராலும் எழுதப்படவில்லை. இந்நூல்களைத் தந்துதவியர்: திருமதி அருள் செல்வநாயகம்
15. ஈழத்துப் பூதந்தேவனார் (1975) **ஈழத்து ஊஞ்சல் பாடல்கள்,** களுவாஞ்சிக்குடி, ப.110
16. பார்க்க : யோகராசா, **வாய்மொழி மரபுகளினடியாக மட்டக்களப்பு பாரம்பரியக்கல்வி முறை,** (கட்டுரை) வாய்மொழி மரபுகள் வரலாற்று மூலங்களாக - பதிப்பாசிரியர் : சித்திரலேகா மௌனகுரு, (2004) மொழித்துறை, கலை பண்பாட்டுப் பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை பக் 6 - 11)
17. மே. கு. நூ, ப. 6
18. விரிவான விளக்கத்திற்குப் பார்க்க : யோகராசா. செ. கலாநிதி. **மட்டக்களப்பு சிறுகதை வரலாற்றிலே புரட்சிக்கமாலின் சிறுகதை** (கட்டுரை), தேனகம், பிரதேச செயலக கலாசாரப் பேரவை, மண்முனை வடக்கு, மட்டக்களப்பு 2000 பக் 10 - 11
19. மற்றொரு சிறுகதையான 'மனிதன்' தினகரனில் வெளிவந்துள்ளதாக அறியப்படுகின்றது.


பாரதி
சர்வதாரி, மாசி,
30 சதம்.


மாதர்மதிமாலிகை.

※

மேலைத்தேய மதுபான

# வேடிக்கைக் கும்மி.

## விருத்தம்.

கெட்டகுண மனைத்துமுற்றிப் பழுத்தோர் தங்கள்
கேடுகளைச் சட்டைதொப்பி வேஷத் தாலும்
மெட்டான நடையாலும் நேர்மை யில்லா
விதமான செயலாலும் போலி யார்ந்த
தட்டான பேச்சாலும் மறைத்துக் கொண்டு
தமைத்தேச நன்மைசெயுந் தக்கோ ரென்று
கிட்டவிடு கின்றபுரு டரவை யாரும்
விளங்குதற்காய்க் கும்மியிதை விளம்பி னோமே.

## காப்பு. வெண்பா.

மான்மருகா வேன்முருகா வஞ்சிகுற வள்ளிபருன்
நான்மருதெய் வானை மணாளநீ—நாவில்வர
ஏதமின்றி யிம்மதுபா னக்கும்மி யான்சொல்லிப்
போதுதுதித் தேனுனடிப் போது.

வல்லபெரி யோரே மதுபான மென்பதைநாம்
எல்லைகடந் துண்ணி லிழிபழிவு—அல்லாமல்
எல்லையுட னுண்ணிலவை யெள்ளளவு மெம்மவருக்
கில்லையில்லை யென்பே னிசைந்து.

எல்லைகடந் துண்டக்கா லெல்லாம்நஞ் சேசோறு
மெல்லைகடந் துண்ணில்நஞ்சென் பாரிநின்—லெல்லைகடந்
துண்டுகெடுந் தேடுவது உண்பவர்மேற் குற்றமன்றி
உண்பொருண்மேற் குற்றமல வோர்.

## கும்மி.

சிந்தை யிதன்றோ குடிகுடி கேடென்று
சின்ன விவர சாட்சியார் தள்ளாமல்
எந்தக் குறிச்சிக்கு மீற்றிற் குடிகுடி
என்றல்லோ சொல்கிறார் பாருமடி. 1.

# சதாசிவலீலா சரித்திரம்.

---

தமிழர்க்குப்பெரியவராம் தயாபரச்சதாசிவனார்
பிறந்தாரியாழ்ப்பாணம் பெற்றதாய்தந்தையற்கு
சிறந்தபுகழோடு திரவியங்கள்பெற்றாரே
கல்விக்குமோரணியாம் கலைகள்பலகற்றபின்னர்
செல்வச்சிரஞ்சீவி சிறப்போடுவாழ்வதற்கு
நல்கினனெம்மரசன் நமக்யோப்பதவிதன்னை
நீதிபதியாகிடென்று நியமித்தானெம்மரசன்
அன்போடுதாள்பணிந்து அப்பதவிபெற்றுமவர்
சிங்காசனத்தேறிச் சிறப்போடுநீதிமுறை
செங்கோலரசனுக்குச் செய்துவருகின்றாரே
கண்டோர்களெல்லோரும் கைதொழுகின்றார்கள்
பார்த்தோர்களெல்லோரும் பயமுடன்நிற்பார்கள்
வந்தோர்களெல்லோரும் வணக்கமுடன்நிற்பார்கள்
எங்கும்சதாசிவற்கு இசைந்தபுகழ்பரவுகுதே
இலங்காபுரிமுழுதும் இவர்நாமம்பேசுகிறார்
சதாசிவப்பிரபுவவர் தமிழ்மணியென்றுசொல்வார்
மாதாபிதாவிற்கு வாய்த்தமகனென்றுசொல்வார்
நீதிபதியாக நியமித்தார்கடவுளென்பார்
பூமிக்குவாய்த்தவொரு புத்திரனுமிவனென்பார்
நாமத்தைச்சொன்னாலும் நமக்குண்டுசெல்வமென்பார்
கோபத்தைவென்றவொரு குலமகனிவனென்பார்
வாயினில்வந்தபடி வாழ்த்திவிடுகின்றார்கள்
பேச்சினில்வந்தபடி பெருமையைச்சொல்வார்கள்
மரியாதையிவ்வாறு மன்னவற்குச்செய்துவர
கண்டிமாநகரத்துக் களங்கமிலாச்சதாசிவனும்
கொண்டார்பலபேரைக் குறைவில்லாநேசருமாய்
சிங்களத்துரைமாரும் சிறப்புள்ளபறங்கியரும்
இங்கிலிஷ்காரர்களும் எம்மரியதமிழர்களும்
பெரியபதவிகளைப் பெற்றுமேவாழ்பவர்கள்
ஐசுவரியங்கள் அதிகமாய்க்கொண்டவர்கள்
கல்வியறிவிலே கனக்கவேதேர்ந்தவர்கள்


உ
சிவமயம்.
தற்கால நாகரீக
வேடிக்கைப்
பாக்கள்.
(மூன்றும்பாகம்.)
ஆக்கியோன்:
மண்டைதீவு
பிரமஸ்ரீ சி. அகிலேசுவரசர்மா.
கொக்குவில்
சோதிடப்பிரகாசயந்திரசாலை
2-ம் பதிப்பு.
1938.


அனிச்சமலரின்
காதல்
ஆக்கியோன்:
1953.
[ரூ. 1/25


திருக்கோணமலை
ந. சரவணமுத்துப்பிள்ளை B. A.
அவர்கள் இயற்றிய
தமிழ்ப் பாஷை
என்னும் சொற்பொழிவும்
திருக்கோணேசர் ஊஞ்சல்,
தத்தைவிடு தூது
முதலிய பல பாடல்களும்.

# ஈழத்தில் தோன்றிய சதக இலக்கியங்கள் – ஓர் ஆய்வு

ஜனகா சிவசுப்ரமணியம்

சதகம் என்ற சொல் வடமொழியில் இருந்தே தமிழுக்கு அறிமுகமாகியது. வடமொழியில் சதம் என்றால் நூறு எனப் பொருள்படும். சதம் என்ற சொல்லில் க என்ற எழுத்துக் கூடிச் சதகம் எனப் பெயர் பெற்றது. இவ்வாறு தகரம் கூடி வருதலை வடமொழி வல்லுணர்கள் 'கபிரத்தியயம்' என்று கூறுவர். நூறு எண்ணிக்கையை சதம் என அழைப்பர். நூறு எண்ணிக்கை கொண்டமைந்த பாடல்களைக் கொண்டதால் இவ் இலக்கியத்தை சதகம் என அழைத்தனர்.

நூல்களுக்கு பாடல்களின் எண்ணிக்கையைக் கொண்டு பெயர் சூட்டுவது தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் மரபாகும். அகநானூறு, புறநானூறு, கார் நாற்பது, போன்றன இவ்வாறே பெயர் பெற்றன. சதகம் என்ற சொல்லிற்கு என்றும் நிலைத்திருப்பது, இறுதி, போதிய, பல, நீண்ட, பூரணத்துவம், போன்ற பல கருத்துக்கள் காணப்படுகின்றன. சதகத்தினை சத்+அகம் எனப் பிரித்து சத என்றால் உண்மை எனப் பொருள் கொண்டு உண்மைப் பொருளாகிய இறைவனைத் தன்னகத்தே கொண்ட பாடல்களை சதகம் என அழைத்தனர். இதனால் ஆரம்ப காலப்பாடல்கள் தெய்வப் பாடல்களாகவே காணப்படுகின்றன.

தமிழில் சதகம் என்ற சொல் கி.பி ஒன்பதாம் நூற்றாண்டிலே அறிமுகமானது. சதகம் என்ற சொல் வடமொழித் தழுவலாகும். சதகம் என்ற இலக்கிய வடிவம் முதன்முதலில் வடமொழியிலேயே தோற்றம் பெற்றது. கி.பி 6ம் நூற்றாண்டில் பர்த்துஹரியால் எழுதப்பட்ட நீதிச்சதகம், வைராக்கிய சதகம் இரண்டுமே முதற் சதங்களாக கொள்ளப்படுகின்றன. சதக இலக்கியத்தின் ஆரம்பத்தினை வேதங்களில் காணலாம். ஆரம்ப கால பௌத்த இலக்கியங்களில் சதகம் என்ற சொல் அடிக்கடி பிரயோகிக்கப்படுகின்றது. சதுஸ் (சதகம்) என்ற நூலை கி.பி முதலாம் நூற்றாண்டில் வாழ்ந்த பௌத்த அறிஞர்கள் மாத்ரூ - சேதர் என்பவர் இயற்றியுள்ளார். இச்சதகம் புத்தரின் தோத்திர நூலாகக் காணப்படுகின்றது. இச்சதகத்தில் 400 பாடல்கள் காணப்படுகின்றமையால் முதலாவது சதகமாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

தமிழ் மொழியில் சதக இலக்கியத்தின் தோற்றம் பற்றி நோக்கும் போது சங்க கால இலக்கியத்திற்குப் பின் சங்கமருவிய காலத்தில் காவியங்கள் தோற்றம் பெறத் தொடங்கின அதனைத் தொடர்ந்து பல்லவர் காலத்தில் நாயன்மார்களும், ஆழ்வார்களும் இறைவன் புகழைப் பாசுரங்களாகப் பாடினர். இப்பாசுரங்கள் பதிகங்களாகப் பாடப்பட்டன. இம் மரபைப் பின்பற்றியும் இக்காலத்தில் இருந்த வடமொழிச் செல்வாக்கின் தாக்கத்தாலும் தமிழில் சதக இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெற்றன.

தமிழில் அம்மானை தெள்ளோனம், சாழல், பூவல்லி, போன்ற புதுவகையான இலக்கியங்களை அறிமுகப்படுத்திய மாணிக்கவாசகரே திருச்சதகத்தினையும் முதன் முதல்

அறிமுகப்படுத்தினார். மாணிக்கவாசகர் தமிழில் அறிமுகப்படுத்திய பின்னர் சில காலம் சதக இலக்கியம் தமிழில் தோன்றவில்லை. இறைவனைப் பற்றிப் பாடுகின்ற இலக்கிய வடிவம் என்ற சிந்தனையும், பாடலின் எண்ணிக்கையும், பாடலின் பொருள் பற்றிய தெளிவின்மையுமே காரணமாக இருந்திருக்கின்றது. மாணிக்கவாசகரின் திருச்சதகத்திற்குப் பின்னர் மூன்று நூற்று நூற்றாண்டின் பின்னே சதகம் தனி ஒரு இலக்கியமாகத் தோன்றியுள்ளது.

மாணிக்கவாசகரின் திருச்சதகத்தினை முதலாவது சதகமாகக் கொள்ளமுடியுமா? சதக இலக்கணம் கூறும் பாடலின் எண்ணிக்கையையும் பொருளுமே சதக அமைப்பினைக் கொண்டிருக்கின்றது. திருவாசகத்தின் ஒரு பகுதியாக திருச்சதகம் காணப்படுகின்றது. நூறு பாடல்களும் பத்துப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பிரிவுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு யாப்பில் பாடப்பட்டுள்ளது. திருச்சதகத்தின் அமைப்பு அந்தாதியின் சாயலை உடையது. இவ்வாறான காரணங்களால் திருச்சதகத்தை சதகம் எனக் கொள்ளமுடியாது என தமிழ்ச் சதக இலக்கியம் என்னும் நூலில் டாக்டர் சிவகாமி கூறுகின்றார். இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதல் மரபே ஆதலால், சகல இலக்கியம் தோன்றிய பின்பே இலக்கணம் தோன்றியுள்ளது. முதல் தோன்றிய வடிவம் ஆகையால் சீரான வடிவம் கிடைக்காமல் போயினும் எண்ணிக்கை அமைப்பில் வழுவாத முன்னோடியாக விளங்குகின்றார். வடமொழியில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய பொருட்களில் சதக இலக்கியங்கள் ஆரம்ப காலங்களில் படைக்கப்பட்டன. ஆனால் மாணிக்கவாசகர் பக்தி என்னும் புதிய வடிவத்தினைக் கொண்டு சதகம் பாடியுள்ளார். ஆன்மாவின் பக்தி அனுபவங்களை படிப்படியாகக் கூறும் இலக்கியமாக திருச்சதகம் அமைகின்றது. பிற்பட்ட காலத்தில் எழுந்த பல்வேறு வகையான சதக இலக்கியங்களுக்கு திருச்சதகமே முன்னோடியாக இருந்துள்ளது.

தமிழில் சதக இலக்கியம் தோன்றிய பின்னரே சதக இலக்கணம் வரையறுக்கப்பட்டுள்ளது. சரஸ்வதி மஹால் இலக்கண விளக்கப் பதிப்பில் "சமயமாம் மிகு பொருள் ஒன்றில் பாநூறு சதகமதே" என்ற அடியினைக் காணலாம். இக்குறிப்பு கி.பி 14ம் நூற்றாண்டைச் சார்ந்த குறிப்பாகும். இக்காலத்தில் தோற்றம் பெற்ற நவநீத பட்டியலில் சதகம் பற்றிய விளக்கத்தினைக் காணமுடியவில்லை. பதிப்பாசிரியரான தி.வை.கோபாலையர் "வெற்றி பொருந்திய மிகுதியாகப்ப பாடப்படும் ஒரு பொருள் மீது நூறு பாடல் யாப்பது சதகம்" என்று கூறுகின்றார். 16ம் நூற்றாண்டில் தோன்றிய பிரபந்த மரபியல் சதகத்திற்கு இலக்கணம் கூறும்போது பொருள், இடம், காலம், தொழில், என்னும் நான்கில் ஒன்றை கலித்துறையால் நூறு பாடல் கொண்டு பாடுவது சதகம் என்கிறது இதே நூற்றாண்டில் தோன்றிய இலக்கண விளக்கம்

"விளையும் ஒரு பொருள் மேல் ஒரு நூறு
தழைய உரைத்தல் சதகம் என்ப"

எனக் கூறுகின்றது. இக்கருத்தினை ஆதரிப்பதாக முத்துவீரியம் பிரபந்த தீபமும் அமைகின்றது. சதுர அகராதியில் 96 வகை சிற்றிலக்கியங்களில் ஒன்றாகச் சதகத்தினை வீரமாமுனிவர் சுட்டுகின்றார்.

சதகத்திற்கு இலக்கணம் கூறிய இலக்கணகாரர்கள் யாப்புப் பற்றி எந்த வரையறையும் கூறவில்லை. சதக இலக்கணத்தில் பாடலின் எண்ணிக்கை மட்டுமே வரையறை செய்யப்பட்டுள்ளது.

திருச்சதகத்திற்குப் பின்னர் கி.பி. 11 ஆம் நூற்றாண்டிலேயே ஆறைக்கிழார் என்பவரால் கார் மண்டலச் சதகம் பாடப்பட்டது. பக்தி என்ற பாடு பொருளில் இருந்து விடுபட்டு தனியொரு இலக்கியமாகவும் மண்டலத்தைப் பாடும் வரலாற்று நூலாக இச்சதகம் தோன்றியுள்ளது. இச்சதகத்தினை தொடர்ந்து 17 ஆம் நூற்றாண்டில் படிக்காசுப்புலவர் தான் வாழ்ந்த தொண்டைமண்டலத்தினைச் சிறப்பித்து தொண்டைமண்டலச் சதகத்தினையும் தண்டலை நீள் நெறிநாத் மீது தண்டலையார் சதகத்தினையும் பாடினார். பன்னிரண்டாம் நூற்றாண்டில் வரராமயோகி என்பவர் திருச்செந்தூர் சண்முகசதகம், திருக்குறுங்குடி, நம்பிசதகம், என்பவற்றைப் பாடினார். தமிழில் சதக இலக்கியங்கள் 17ம் நூற்றாண்டிலேயே அதிக வளர்ச்சி கண்டது 17ம், 18ம் நூற்றாண்டு சதக இலக்கியத்தின் பொற்காலம் என அழைக்கப்படுகின்றது. தமிழ் நாட்டில் ஏறத்தாள 300 ற்கு மேற்பட்ட சதக இலக்கியங்கள் தோன்றியுள்ளன. தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றது போல ஈழத்தில் சதக இலக்கியங்கள் செல்வாக்கு பெறவில்லை என்றே கூறலாம்.

சதக இலக்கியங்கள் தமக்கென தனியான பண்புகளைக் கொண்டுள்ளன. ஏனைய சிற்றிலக்கியங்களில் இருந்து வேறுபடுவதற்கு சதகங்களின் தனித் தன்மையே காரணமாக அமைந்துள்ளது. சதக இலக்கியத்தின் பாடல், மகுடம், அமைதல் கூறவந்த பொருளை கையாளும் விதம், முன்னோர் மொழிப் பொருளை ஏற்றல், இலகுவான மொழிநடை, வடமொழிச் சொற்களின் பாவனை, என்பன சதகங்களுக்கான தனிப் பண்புகளாகும். சதகங்கள் மக்களின் வாழ்வியலைச் சீர்மைப்படுத்துவதாகவும் கொள்கை, நோக்கம், பயன், மூன்றையும் வெளிப்படையாகக் கூறியிருப்பதனைக் காணலாம்.

பொதுவாக சதக இலக்கியங்களை ஆராயும் போது இறுக்கமான இலக்கண வரம்புகள் இல்லை. பாடலின் எண்ணிக்கை 100 எனக் கூறியிருப்பினும் நூற்றிற்கு மேற்பட்ட பாடல்களைக் கொண்டும் வரையறையற்ற பொருள், யாப்பு, போன்றவற்றைக் காணலாம். எடுத்துக் காட்டாக இவற்றைக் கூறலாம்.

| சதகம் | பாடல் | யாப்பு | பொருள் |
|---|---|---|---|
| எம்பிரான் சதகம் | 105 | விருத்தம் | பக்தி |
| அகதீசர் சதகம் | 102 | ஆசிரிய விருத்தம் | தத்துவம் |
| ஈழமண்டலச் சதகம் | 101 | விருத்தம் | வரலாறு |
| வையித்திய சதகம் | 101 | | மருத்துவம் |
| நன்மதி வெண்பா | 109 | வெண்பா | வாழ்வியல் |

இலக்கியம் கற்றறிந்த மக்களிடம் மட்டும் தேங்கிவிடாது அனைத்து மக்களிடமும் சென்றடைய வேண்டும் என்ற பொது நோக்கம் எல்லா சதகங்களிலும் காணப்பட்டுள்ளது.

வடமொழிச் செல்வாக்கு மக்களின் பேச்சு வழக்கில் அதிக செல்வாக்குப் பெற்ற பின்னரே சதக இலக்கியங்கள் அதிகளவில் தோற்றம் பெறத் தொடங்கியிருக்கின்றது. சதகங்களில் அதிகளவிலான வடமொழிச் சொற்களைக் காணலாம். உதாரணமாக அளப்பளீசுர போன்ற சொற்களையும் தமிழ் இலக்கண விதிப்படி வல்லெழுத்துக்கள் மிகுந்து வருதலைக் காணலாம்.

விகடகவி - விகடக்கவி என்றும்

தேச சூனியம் - தேசங்களின் சூனியம் என்றும்

கிரகசாரம் - கிரகச்சாரம் போன்ற சொற்களைக் எடுத்துக் காட்டலாம்.

சதகங்களுக்குரிய பண்பாக மகுடம் அமைதல் காணப்படுகின்றது. இப்பண்பினை பிற சிற்றிலக்கியங்களில் காணமுடியாது. சதக இலக்கியங்களில் 7 வகையாக மகுடம் அமைந்துள்ளது.

1. ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் நூலின் பெயர் மகுடமாக வரல் உதாரணமாக கார் மண்டலச் சதகம் - காராளர் மண்டலமே இவ்வாறே பிற மண்டலச் சதகங்களும் அம் மண்டலப் பெயரை ஈற்றடியில் மகுடமாகக் கொண்டுள்ளது.
2. ஒற்றைச் சொல்லின் மகுடம் அமைதலுக்கு எடுத்துக்காட்டாக சுமதி சதகம் - சுமதி எம்பிரனே என்றும்
3. அடுக்குத் தொடராக மகுடம் அமைதல்
   வடவேங்கட நாராயண சதகம் - நாராயணா நாராயணா எனவும்
   குரு நாதர் சதகம் - குருநாதனே குருநாதனே எனவும்
4. இறைபெயரினை மகுடமாக கொண்டவை
5. வள்ளலின் பெயரினையும் இறைபெயரினையும் மகுடமாகச் சூட்டல்
6. பாடலின் மூன்றாம் அடியில் மகுடம் அமைதல் எடுத்துக்காட்டாக செயங்கொண்டார் சதகத்தில் 3ம் அடியில் செயங்கொண்டாரே எனவும்
7. பழமொழியை மகுடமாகக் கொண்டமைந்த எடுத்துக்காட்டாக தண்டலையார் சதகம்

ஒரு சமூதாயத்தின் மரபுகள் காலம் காலமாக பேணப்பட்டு வரும் நம்பிக்கைகள் மக்களால் பின்பற்றப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள் போன்ற இலக்கிய அந்தஸ்து பெற வேண்டும் என்ற சிந்தனை சதக இலக்கியங்களில் காணப்படுகின்றன. அரசனை, இயற்கையினை முதன்மைப்படுத்திய மரபிலிருந்து விடுபட்டு மக்களின் வாழ்வியல் பாடல்களாக சதகப் பாடல்கள் அமைந்துள்ளன.

தமிழ்மொழியில் எழுந்த சதக இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை முறையையும் அம்மக்களின் உளப்பாங்கினையும், கலை கலாச்சாரத்தினையும், எடுத்துக்காட்டும் இலக்கியங்களாக அமைகின்றன. தமிழ் கூறும் நல்லுலகினை தமிழகம், ஈழம் என இரண்டாகப் பிரிக்கலாம். தமிழகத்தில் 300 இற்கு மேற்பட்ட சதகங்கள் தோன்றி நிலைபெற்றிருக்கின்ற போதிலும் ஈழத்தில் ஐந்து தமிழ் சதகங்கள் மட்டுமே இன்று அறியும் நிலையில் உள்ளன. தமிழகத்தைப் போன்று ஈழத்தில் சதகங்கள் செல்வாக்குப் பெறவில்லை ஆயினும் ஈழத்தில் ஐந்து சதகங்கள் மடடும் தான் தோன்றியிருக்கும் என்று கூறமுடியாது. ஈழத்தில் பல சதகங்கள் தோன்றியிருப்பினும் அவை பாதுகாப்பின்றி அவைபற்றிய தகவல்களை கிடைக்காது போயிருக்கலாம் என ஊகிக்க முடிகின்றது. இன்று எமக்குக் கிடைக்கும் சதகங்களாக பின்வரும் சதகங்கள் அமைகின்றன.

1. ம.க. வேற்பிள்ளையின் - ஈழமண்டலச் சதகம்
2. வே.கணபதிப்பிள்ளையின் - ஈழமண்டலச் சதகம்

3. பண்டிதர் க. வீரகத்தியின் - கருகம்பனையூர் இராஜ இராஜேஸ்வரி சதகம்
4. ஆர்னோலட் சதாசிவம் பிள்ளையின் - இயேசு நாதர் திருச்சதகம்
5. நவசிவாய தேசிகரின் - சந்நிதிக் கந்தர் சதகம்

என்பனவாகும்.

**I. ஈழமண்டலச் சதகம்**

ஈழத்தில் தோன்றிய சதக இலக்கியங்களுள் காலத்தால் முந்தியதாக ஈழமண்டலச் சதகத்தைக் கொள்ளலாம். இச்சதகம் ஈழத்தின் பெருமைகளையும், சிறப்புக்களையும் கூறுகின்றது. தமிழகத்தில் மண்டல வரலாறு கூறம் சதங்கங்களைப் போன்று இச்சதகமும் ஈழத்தின் ம.க.வேற்பிள்ளை என்பவர் பாடியுள்ளார். இவ் ஆசிரியர் சாலி வாகன சகாப்தம் தைமாதம் எட்டாம் திகதி மட்டுவில் என்னும் ஊரில் பிறந்தார். மரபுவழிக் கல்வி (திண்ணைப்பபள்ளி)யினூடாக மேற்கிளம்பிய இவர் மட்டுவில் சண்முகம் பிள்ளை ஆசிரியரிடம் ஆரம்பக் கல்வியைக் கற்றார். இக்கல்வியில் நிகண்டு, நெடுங்கணக்கு, நீதிநூல்கள், அகராதிகளைக் கற்றார். ம.க.வேற்பிள்ளையின் திறமையைக் கண்டு பெற்றோர் உயர்ந்த இலக்கண இலக்கியங்களை கற்க நல்லூர் காத்திகேய பண்டிதரிடம் மாணவராகச் சேர்ந்தனர். இவரிடம் கற்றுத் தெளிந்த பின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரிடம் கல்வி கற்றார். தான் கற்றுத் தெளிந்த பின்னர் ஈழத்தில் சில காலம் மாணவர்களுக்கு கல்வி கற்பித்தான். பின்னர் சிதம்பரம் சென்று சிதம்பரத்தில் உள்ள நாவலர் வித்தியாசாலையில் ஆசிரியராகவும், அதிபராகவும், பணியாற்றினார்.

இவ்வாறு இவர் இந்தியாவில் இருந்த காலத்தில் ஈழத்தின் சிறப்பை அறியாது சிலர் இகழ்ந்து பேசியதால் அதன் பெருமையினை அறிவிக்கும் பொருட்டு இந்தியாவில் இருந்து ஈழத்தின் மேல் பாடப்பட்ட சதகமே ஈழமண்டலச் சதகம் ஆகும்.

ஈழமண்டலச் சதகத்தில் ஆசிரியர் சைலோப நிஷத்து, சிவகாமம், தட்சணகைலாய மாண்மியம், வான்மீகம் முதலிய வடமொழி நூல்களை மேற்கோள் காட்டிஎழுதியுள்ளார். இந்நூலை எழுதுவதால் தனக்கு திருவருட்பேறும் வாசிப்போருக்கு ஈழமண்டலத்தின் சிறப்பினை அறியும் பொருட்டு செந்தமிழ் செய்யுள் நடையில் எழுதியுள்ளேன். எனக் கூறுகின்றார். இச் சதகத்தினை மட்டுவில் பகுதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் சந்திர மௌலீசரையும் சார்ந்த நாயகியாகிய இறைவியையும் முதன்மைப் படுத்தி எழுதியிருப்பதனால் இச்சதகத்தினை சந்திர மௌலீசர் சதகம் எனவும் அழைப்பர். இச்சதகத்தில் 101 பாடல்கள் உண்டு இப்பாடல்களை மூன்று பெரும் பிரிவாகப் பிரித்துப் புலவர் பாடியுள்ளார். அவையாவன.

1. பொதுப்பிரகரணம்
2. இலங்காபுரிப் பிரகரணம்
3. வீணாகாணப்புரப் பிரகரணம்

பொதுப்பிரகணத்தில் யாழ்ப்பாணம் இலங்கை இரண்டிற்கும் பொதுவான விடயங்களை எடுத்துக் கூறுகின்றார். இலங்காபுரிப் பிரகரணத்தில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய இடங்களில் உள்ள சிறப்பான விடயங்களைத் தொகுத்துக் கூறுகின்றார். வீணாகாணபுரப் பிரகணத்தில் யாழ்ப்பாணத்திற்கே உரிய விசேட தர்மங்களை தொகுத்துக் கூறுகின்றார். இவ்வாறு தான்

கூறவந்த விடயத்தை 3 பிரிவாகப்பிரித்து இலங்கையின் பொதுவான சிறப்பான விடயங்களை எடுத்துக் கூறுவதனை இங்கு காணமுடிகின்றது. இச்சதகத்தின் மகுடவாக்கியமாக

“சந்திர மௌலீசனே யைந்தொழில் விலாசனே
சந்திர புரதல வாசனே”

என்ற வரிகள் அமைகின்றது. இச்சதக தொடக்கத்தில் நேரிசை வெண்பா யாப்பில் சந்திர மௌலீசரை வணங்கி காப்புச் செய்யுள் பாடப்பட்டுள்ளது. இதனை அடுத்து தற்சிறப்புப்பாயிரம் பன்னிரு சீர்கழி நெடிலடயாசிரிய விருத்தத்தில் பாடப்பட்டுள்ளது.

பொதுப்பிரகரணத்தில் சைவ சித்தாந்த தத்துவம் பற்றிய கருத்துக்களை அதிகமாகக் கூறப்படுகின்றது. அதாவது பலதிறப்பட்ட பிராமணங்களுள் மேம்பட்ட பிரதியட்சம், அனுமானம், ஆப்தவாக்கியம் ஆகியவற்றின் சிறப்புக்களும் இலக்கணங்களும் பதி, பசு, பாசம் ஆகியவற்றின் இலக்கணங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகியவற்றின் சிறப்புக்களும் சாலோக, சாமீப, சாரூப, சாயுக்கிய முத்தி பற்றியும் விளக்கமாக உரைப்பதும் பக்க, சுபக்க, விபக்க லட்சணங்களையும் முறையாக உரைக்கும் சைவ சிந்ததாந்தங்களின் தலைவனாக சந்திர மௌலீச்சர் விளங்குகின்றார். அவர் விரும்பி உறையுமிடமாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளது. எனச் சதகத்தினைத் தொடங்குகின்றார். இதனைத் தொடர்ந்து சிவனின் 25 மூர்த்தங்கள் பற்றியும் விளக்கி மக்களுக்கு நன்மை செய்யும் இறைவனுக்கென்று பத்து வகையான மகோற்சவ தார்ப்பாரியம் காணப்படுகின்றது என்றும் மகோற்சவச் சிறப்புக்கள் பற்றி விளக்கி இவ்வாறான காலத்தில் மக்கள் விரதம் அனுட்டிக்க வேண்டும் என்றும் இவ்விரத காலத்தில் ஒருவேளை பகலில் மட்டும் உணவு உண்ண வேண்டும். இக்காலத்தில் காம உணர்வை தவிர்க்க வேண்டும். இது இலங்கை வாழ் மக்களின் முக்கிய கடமையென கூறப்பட்டுள்ளது.

ஆன்மாக்கள் பற்றியும் இவ் ஆன்மாக்களுக்கு 4 வர்ணப் பாகுபாடு உண்டு. அவர்களுக்கென தொழில் கடமைகள் உண்டு என வகுக்கப்பட்டுள்ளன.

பிராமணர்கள் ஆதிசைவர்கள் என்றும் இவர்களுக்கு ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேப்பித்தல், போன்ற 6 தொழில்களும் உடையவர்கள் என்றும் சத்தியரிகள் இஸ்ட தெய்வ ஆசிர்வாதத்தோடு மந்திரி ஆலோசனைப்படி செங்கோல் செலுத்த வேண்டும். அரச சின்னம் 21 ஐயும் மதிக்க வேண்டும் என்றும் மனு நீதியுடன் ஆட்சி செய்யும் நாடு, ஈழநாடு என்கின்றார்.

இவ்வாறான அரசர்கள் இருக்கும் நாட்டில் சிறந்த வணிகர்ககள் இருப்பார்கள் என்பதில் ஐயமில்லை. இவ்வணிகர்கள் வாங்கி பொருளை சிறிது இலாபம் வைத்து அயற்கடைப்பக்கம் போகா வண்ணம் இறுக்கப்பற்றி வயப்படுத்தி வைத்திருப்பர். அரைக் காசைக் கூட ஒருகோடி பொன் போல மதித்து நடக்கும் வணிகர்கள் நிறைந்த நாடு ஈழ நாடு எனக் கூறுகின்றார்.

இலங்கையின் சிறப்புப் பற்றிக் கூறுமிடத்து பதினெட்டு சக்தி பீடங்களில் முதற் சக்திபீடம் ஈழநாட்டில் உள்ளது. சிவனுக்கு சிறந்த ஈஸ்வரங்கள் 5 ஆம் நிறைந்த நாடு இலங்கை என்றும் நாயன்மார்களில் முதல்வரான சம்பந்தரால் பாடப்பட்ட திருக்கேதீஸ்வரம் இங்கு அமைந்துள்ளது

என்றும் இவ்வாலயத்துக்கு தேவர்கள் பூசிக்கும் சிறப்பும் மகாதுவட்டன் என்னும் தேவன் கேதீஸ்வரத்துக்கு வந்து தொண்டு செய்தான் என்றும் ஈழத்தின் சிறப்புக் கூற்படுகின்றது.

திருக்கோணேஸ்வரம் இத்தலத்தின் மூர்த்தி தலச் சிறப்பு கூறப்படுகின்றது. சிவாலயச் சிறப்பு மட்டுமன்றி சிவனொலி பாதமலை, இம்மலையைச் சூழ கம்பளை, வலவை, மகாவலிகங்கை, கல்லாறு ஆகிய 4 நதிகள் ஒடுகின்றது என்றும் இவ்விடங்களின் மாணிக்கமும் இரத்தினங்களும் உற்பத்தியாகின்றது. இவ்வாறு ஈழநாட்டின் மகுடம் போன்று சிவனொலிபாத மலை அமைகின்றது.

சிவனுக்கு மட்டுமன்றி சிவனின் மைந்தனாகிய முருகப் பெருமானுக்கும் ஈழத்தில் ஆலயங்கள் உண்டு. இவ்வாலயத்தில் சிறப்புமிக்கது கதிர்காமம். இம்மலையின் அடிவாரத்தில் மாணிக்க கங்கை ஒடுகின்றது. இவ் ஆலயத்தில் கப்புறாளைமார் பூசை செய்வர். கதிர்காமத்தினைத் தொடர்ந்து கந்தவனக் கடவை முருகன் ஆலயம் பற்றியும் இலங்காபுரிப் பிரகரணத்தில் கூறப்படுகின்றது.

ஈழமண்டலச் சதகத்தின் 3வது பகுதியாக வீணாகாணபுரப் பிரகரணம் காணப்படுகின்றது. இவ் பகுதியில் அமைந்துள்ள இங்கு செந்தமிழ் பேச்சு மொழியாக உள்ளது. இவ்வீணாகான புரத்தினையே யாழ்ப்பாணம் என அழைப்பர்.

இறைவனே மெய்மயங்கும் வண்ணம் வீணை வாசிக்கப்பட்டது மட்டுமன்றி 20 கைகளுக்குள் ஒன்றில் எப்பொழுதும் வீணை இருக்கும் ஆதலால் கந்தருவன் இவ்வீணையின் சிறப்பை அறிந்து இராவணன் இறக்கும் போது அவ் வீணை நிலத்தில் விழுந்தால் அவ் வீணையின் சத்தியானது இல்லாமல்ப் போய் விடும் என்பதை அறிந்த காந்தருவன் ராமனால் இராவணன் தோற்கடிக்கப்படும் சமயத்தில் வீணையைத் திருடி நகுலாசலத்தை அடைந்து அங்கிருந்து சிவனின் சிறப்பைப் பாடிய போது சிவன் மனம் மகிழ்ந்து இது உன்நாடேயாகும் இன்றிலிருந்து இந் நாடு வீனாகானபுரம் எனப் பெயர் பெறுக என வரம் கொடுத்தார் என்று இந்நூல் மூலம் அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் குடிகள் பரம்பிய வகை பற்றியும் ஆட்சி செய்த மன்னர்கள் பற்றிய சிறப்பும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் சிறப்புப் பெற்ற நகுலேஸ்வரமும் விஸ்ணுவை மூல நாயகனாகக் கொண்ட பொன்னாலை வரதராயப் பெருமாள் ஆலயம், சுழிபுரம் கடற்கரையில் உள்ள திருவடி நிலையும், கைலாச நாதர் ஆலயமும், சட்டநாதர் ஆலயமும் இராமனுடைய கோதண்ட வில்லினால் ஊன்றப் பெற்ற வில்லூன்றியும், யமுனாநதியும், நிலாவரை, சந்திரமௌலீசர் ஆலயமும், சாவகச்சேரி வாரிகனநாதர் ஆலயமும், வல்லிபுரநாதர் ஆலயமுமாக, 400 க்கும் மேற்பட்ட ஆலயங்களைக் கொண்ட இடமாக யாழ்ப்பாணம் அமைந்துள்ளது.

யாழ்ப்பாண வரலாற்றில் இராச கட்டளைமடம், தருமமடம், மாணபரணமடம், ஆனைக்குட்டி மடம், காரைதீவு சிவபுரிமடம், வரணி புதுமடம், காமர் புண்ணிய நாச்சி திருமடம், சாயரட்டை திருக் கட்டளை மடம், சங்கானை வடமடம், கோப்பாய் செவ்வாய் கிழமை மடம், பழமடம், என 10 மடங்குகள் இருந்துள்ளது.

இவ்வாறான சிறப்பு மிக்க யாழ்ப்பாணத்தில் ஞானப்பிரகாசர், தில்லைநாதர் தம்பிரான், போன்ற ஞானிகள் சின்னத்தம்பிப் புலவர், அரச கேசரி, சேனாதிராஜா, வரதபண்டிதர், மாதகல் மயில் வாகனப் புலவர், முதலிய வித்துவான்கள் வாழுகின்ற இடமாக யாழ்ப்பாணம் அமைகின்றது.

யாழ்ப்பாண மக்கள் சிவபூசை செய்வதில் சிறந்தவர் என்றும் இக்காலத்தில் மருந்தைக் கூட உண்ணமாட்டார்கள் இங்கு பஞ்சம் என்ற சொல்லே இல்லை. புராணப்படிப்பில் சிறந்தவர்கள் என்றும் இவர்கள் மத்தியில் பிரசங்கச் சிங்கமாகிய நாவலர் வாழ்ந்துள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணத்தின் சிறப்பினைக் கூறி முடிப்புரை விண்ணப்பத்துடன் ஈழமணடலச் சதகம் நிறைவு பெறுகின்றது. இந்நூலினை ஆய்வு செய்கின்றுபோது ஈழம் பற்றிய வரலாற்றினை எடுத்துக் கூறும் நூல் என்பது புலனாகின்றது.

## 2. வே. கணபதிப்பிள்ளையவர்களின் ஈழமண்டலச் சதகம்

யாழ்ப்பாணத்தில் உள்ள அல்வாயைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆரிய திராவிடரும் சோதிட கணித சித்தாந்தியுமான ஸ்ரீமத் வே. கணபதிப்பிள்ளை இவ் ஈழமண்டலச் சதகத்தினைப் பாடியுள்ளார். ம.க. வேற்பிள்ளை சதகம் படி 15 ஆண்டுகளின் பின்னே இச்சதகம் பாடப்பட்டுள்ளது. பண்டைக்காலத்துப் புலவர்கள் பாடிய தொண்டைமண்டலச் சதகம் பாண்டிமண்டலச் சதகம் முதலிய சதகங்களைப் போலப் பிற்காலத்து ஆராட்சியாளர்களுக்குப் பெரிதும் பயன்படுமாறு கட்டளைக் கலித்துறை யாப்பால் ஈழமண்டலத்தில் உள்ள விருத்தாத்தங்களைத் தொகுத்து சதகம் என்னும் நூலால் பாடியுள்ளேன். என்று சதகம் பாடியதன் நோக்கம் பற்றிக் கூறுகின்றார்.

இந்நூலானது சிறப்புப்பாயிரம், காப்பு, குருவணக்கம், அவையடக்கம் தவிர 102 பாடல்களைக் கொண்டு காணப்படுகின்றது. சிறப்புப்பாயிரத்தினை ம.முத்துக்குமார சுவாமிக்குருக்களும், ச. சுப்பிரமணியசாஸ்திரிகளும், நவீன கிருஸ்ண பாரதி கணேசையர், செந்தி நாத தேசிகர், ஆ. வேலாயுத சோதிடர், ஆகியோர் ஒவ்வொரு பாடல் பாடியுள்ளனர். குரு வணக்கத்திலே ஆறுமுகநாவலரையும் முத்துக்குமார சுவாமிக்குருக்களையும் போற்றி வணங்கியுள்ளார். அவையடக்கத்திலே

> “குறுமாமுனி சொற்ற பாவினுஞ் சொல்லுவர்
> குற்றமெனவுறுமா மொழிக் கச்சியப்பன் பயக்றலுரையும்
> பொய்யேதுறுமால் கொழுங் கடையேன் சொன்ன
> பாவின் றொடை பிழையே பெறுமாயினுங் கொண்டருள்வார்.
> பணடாய்ந்த பெரியவரே”

எனக் கூறுகின்றார். இச்சதக இலக்கியத்தின் மகுட வாக்கியமாக ஈழ நன் மண்டலமே” என அமைகின்றது.

இச்சதகத்தில் முதல் 18 பாடல்களும் ஈழமண்டலத்தின் சிறப்புக்களை எடுத்துக் கூறுகின்றது. சித்தர்களுள் சிறந்த சித்தரான திருமூலரால் சிவபூமி எனக் கூறப்பட்ட நாடு பாவகைகளில் அழகிய பாவான வெண்பா போன்றது. கழனி கங்கையில் ஊறுகின்ற புதுநீர்நாட்டிலே வலம் வருதல்

பயிர்கற் பச்சைப் பசேலன்ற காட்சி தந்து ஈழநாட்டின் வீதியெங்கும் சோறு மிஞ்சுமளவிற்கு வளம் கொண்டதும் தேவர்களுடைய அமுதம் போன்ற சொற்களைப் பேசுகின்ற மக்களும் வாழ்கின்ற மண்டலம் பிரமாவும், விஸ்ணுவும் அடிமுடி காணாத மலையாகிய கைலையங்கிரியைப் பெயர்த்த வீரம் பொருந்திய இராவணனால் ஆழப்பட்ட மண்டலம் என்று மண்டலத்தின் பெருமைகளைக் கூறி ஆறுகள், மலைகள், நிறுவனங்கள், தலங்கள், தீர்த்தங்கள், குடியேற்றங்கள், வீதிகள் வரணம், துறவிகள், புலவர்கள் என 10 ஆக வகைப்படுத்தி ஈழ மண்டலத்தின் சிறப்பினைப் பாடியுள்ளார்.

மலைகளின் சிறப்புப் பற்றிக் கூறும் போது சிவனொலிபாதமலை, கதிரமலை, கீரிமலை, மாணிக்க கங்கையைப் பற்றியும் தமிழ் வளர்த்த சங்கங்களாக ஆரிய திராவிடபாஷா அபிவிருத்திச் சங்கம், வித்தியாவிருத்தித் தருமாலயம் பற்றிய சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். அதிகளவான தலங்களைக் கொண்ட நாடாகும். மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், சமயகுரவர்களான சம்பந்தரும், சுந்தரரும் பாடிய திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் வேதங்கள் 4 என வகுத்த வேதியர்கள் பூசை செய்யும் முனீஸ்வரம், சிவன் சின் முத்திரையுடன் வீற்றிருக்கும் சட்டநாதர் கோயில், சாவகச்சேரி வாரியப்பர் கோயில், மட்டு நகர் சந்திர மௌலீசர் கோயில், நல்லூர் கந்தசுவாமி கோயில், சந்நிதி, கந்தவனக் கடவை, மாவிட்டபுரம், வல்லிபுரக் கோயில், பொன்னாலை வரதராயப் பெருமான் கோயில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயம் போன்ற அதிக ஆலயங்களைக் கொண்ட இத்தீவிலே அமிர்தகழி, கண்டகி, திருவடிநிலை, ஆகிய தீர்த்தங்களை மனிதரின் பாவங்களைப் போக்க வல்லது என்று ஈழநாட்டின் சிறப்பு இச்சதகத்தில் கூறப்படுகின்றது.

ஈழநாட்டிலே வந்தாரை வரவேற்று உணவூட்டும் குடியேற்றங்கள் பல காணப்படுகின்றது என்றும் ஊர்களின் சிறப்புக்கள் பற்றியும் இந்நூல் கூறுகின்றது. திடமான தோள்களை உடைய உழவர்கள் மிகுந்த புலோலியும் அயலவரைப் போல் நேசிக்கும் இனுவிலும் சோழநாடும், பண்பு நாடு சேர்ந்தது போல வேளாளர்களைக் கொண்ட திருநெல்வேலியும் கம்பன் கவிக்கு 16000 பசும் பொன் கொடுத்த முதலியாரைப் போன்ற இருபாலையும் தொண்டைநாட்டின் சாயலுடைய நெடுந்தீவு என்று ஈழத்தில் பிரசித்திப் பெற்ற ஊர்களைப் பற்றிய பதிவுகளைக் கொண்டுள்ளது.

ஈழத்திலே பிரதான நான்கு வர்ணத்தாரும் உண்டு என்றும் அவர்கள் தங்களுக்குரிய தொழில்களைச் செய்து வந்தனர் என்றும் இந்நாட்டில் சிறந்த துறைகளும் சித்தர்களும் வாழ்ந்துள்ளனர். வரணியிலே வாழ்ந்த சிவயோகியாகிய தில்லை நாகதம்பிரான், தன்னுயிர் போல் மண்ணுயிரையும் நினைக்கும் ஞானப்பிரகாசர், கடையிற்சுவாமிகள், தருமயோக சுவாமி, யோகர்சுவாமி, விபுலானந்த அடிகள், திருஞானசம்பந்த தேசிகர் முதலானோரின் சிறப்புக்கள் இந்நூலில் பதிவுகளாகியுள்ளன.

தமிழும் சைவமும் தழைத்தோங்கும் ஈழநாட்டிலே வாழ்ந்த புலவர்கள் பற்றிய விபரத்தினையும் இச் சதகத்தில் காணமுடிகின்றது. புலவர்களுள் தலையாயவரான ஈழத்துப் பூதன் தேவனார் பற்றியும் அரசகேசரி, நல்லூர் சேனாதிராசா முதலியார், முத்துக்குமார கவிராயர், ஆறுமுகநாவலர், சரவணமுத்துப் புலவர், மயில்வாகனப்புலவர், பீதாம்பரப்புலவர் வரதராசாபண்டிதர்,

சந்திரசேகரபண்டிதர், வில்லராஜ முதலியார், சின்னத்தம்பிப்புலவர், குமாரசுவாமி முதலியார் போன்ற பல புலவர்களின் சிறப்புக்களை இச்சதகம் கொண்டுள்ளது.

ஈழத்தில் காணப்படும் சிறப்புக்களை பதிவுசெய்யும் முயற்சியாக இச்சதகம் பாடப்பட்டுள்ளது. இச்சதக ஆசிரியர் ஈழநாட்டின் மேல் கொண்ட பற்றினை இச்சதகம் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. இதற்கு ஆதாரமாக இச்சதக இறுதியில் ஈழமண்டலத்தினை வாழ்த்தி வாழ்த்துப்பாடல் ஒன்று பாடியுள்ளார். இப்பண்பானது தமிழ்நாட்டுச் சதகங்களை அருகிச் செய்தமையைக் காணமுடிவதோடு சதகம் என்றால் பாடலின் எண்ணிக்கை கருத்தில் கொள்ளப்பட வேண்டும் என்ற கட்டுப்பாடு இந்நூலில் தெளிவாகத் தெரிகின்றது. சுருங்கச் சொல்லுவதில் பல விடயங்கள் விடுபட்டுப் போய்விட்டதோடு மட்டுமன்றி ஆசிரியர் கூறிய அனைத்து விடயங்களும் ஒருபாடல் வீதமே கூறியிருப்பதனைக் காணலாம். இதனால் பல விடயங்கள் விடுபட்டதுடன் கற்பனை வளத்திற்கு இடமேயில்லாமல் போய்விட்டது. இது போன்ற விடயங்களால் ஈழத்தில் சதகங்கள் செல்வாக்கினைப் பெறவில்லை என எண்ணத் தோன்றுகின்றது.

இச்சதக ஆசிரியர்பிறந்த ஆண்டு பற்றிய தகவல் தெரியவில்லை. 1930ம் ஆண்டு இறந்துள்ளார். எனவும் இவரது தந்தையின் பெயர் வேலாயுதர் எனவும் இவரது குரு தும்பளை முத்துக்குமார சுவாமிக்குருக்கள் எனவும் ஈழத்துக் கவிதைக் களஞ்சியம் கூறுகின்றது.

### கருகம்பனையூர் அருள்மிகு இராசஇராசேஸ்வரி சதகம்

ஈழ நாட்டின் வடபகுதியில் உள்ள மாநிலம் யாழ்ப்பாணம் உலகிலே இசைக்குப் பெயர் போன இடம் என இலங்கை வரலாறுகள் கூறுகின்றது. யாழின் வடகரையில் 4 பிரசித்தி பெற்ற துறைமுகங்கள் உண்டு. இவற்றில் ஒன்று காங்கேசன்துறைமுகம் ஆகும். இத்துறைமுகத்திற்கு மேற்குப் பக்கமாக இரண்டுமைல் தூரத்தில் நகுலேஸ்வரம் உண்டு. இவ்வாலயத்தில் யாழ் நோக்கிச் செல்லும் வீதியில் கூப்பிடு தூரத்தில் கருகம்பனையூர் அமைந்துள்ளது. இவ்வூரில் உள்ள ஆலயமே இராஜஇராஜேஸ்வரி ஆலயமாகும். இவ்வூரானது மிகவும் அழகியது. இக்கிராமத்தின் மூலைமுடுக்கெல்லாம் பச்சைப்பசேலென்ற கொடிமுந்திரிகைப் பந்தல், பந்தலிலே குலைகுலையாக முந்திரிப்பழங்கள் காய்த்துத் தொங்கும். வாழைக்குலைகளும் இளநீர் குலைகளும், மாங்கனிகளும் நிறைந்து தொங்கும் அழகிய சிறிய கிராமம். இக்கிராமத்தில் அமைந்திருக்கும் இராஜஇராஜேஸ்வரி ஆலயச்சூழலானது பாடாதவரையும் கவிபாடவைக்கும் அழகுமிகுந்தது. ஆலயத்தைச் சூழ பூக்களைச் சொரிந்த வண்ணம் கொன்றை கொழுத்தி தேமா மரங்கள் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. கொத்துக் கொத்தான பூக்களில் இருந்து நறுமணம் காற்றிலே பரவிநிற்கும் இவ்வாறான சிறப்புக் கொண்ட அன்னை மீது பண்டிதர். க. வீரகத்தி அவர்கள் 121 பாடல்களைக் கொண்டு சதகம் பாடியுள்ளார். பண்டிதர் அவர்கள் ஈழத்தில் இருந்து பாரதநாடு சென்றிருந்த வேளை சென்னையில் 31.01.1986ம் ஆண்டு இச் சதகத்தைப்பாடி ஈழம் வந்து ஆலயபரிபாலக சபையினரிடம் இச்சதகத்தை மீண்டும் ஒப்படைத்தார். இச்சதகம் இப்பரிபாலன சபையினரால் 31.01.1987 அச்சிட்டு வெளியிடப்பட்டது. இச் சதகத்தின் அமைப்புப்பற்றி ஆராயும்போது முதலாவதாக 22 அடியில் காப்புச் செய்யுள் பாடப்பட்டுள்ளது. இக்காப்புச் செய்யுள் தவிர 121 பாடல்கள் உண்டு. இப்பாடல்களை தலைப்பிட்டு ஒவ்வொரு தலைப்பின் கீழும் 11 பாடலாக வகுத்துப் பாடியுள்ளார்.

| பாடல் பகுதி | பாடல் எண்ணிக்கை |
|---|---|
| 1. கருணைப் பொழிவு | 11 பாடல் |
| 2. மஞ்சளும் குங்குமமும் | 11 பாடல் |
| 3. பதாம்புய மோகம் | 11 பாடல் |
| 4. ஞானப்பூஞ்சோலை | 11 பாடல் |
| 5. விலைவைக்கிறியே | 11 பாடல் |
| 6. குடமுழுக்காடும் தூதுகலம் | 22 பாடல் |
| 7. சுயவேதனையிலும் ஒரு சுகம் | 11 பாடல் |
| 8. வெண்சங்கே முழங்கு | 11 பாடல் |
| 9. புதிர்போல் மறைந்தாள் | 11 பாடல் |
| 10. கோயில் அனைத்தும் வலம் வருதல் | 11 பாடல் |

பக்தியைப் பாடுபொருளாகக் கொண்ட இச்சதகம் கற்பனை வளம் மிக்கதாகவும் காணப்படுகின்றது.

சைவசமயத்தின் முதல் வணக்கம் விநாயகருக்கே. அதேபோன்று இச்சதகமும் காப்புச் செய்யுளில் விநாயகருக்கே வணக்கம் கூறுகின்றார்.

இச்சதகத்தில் ஆலயச் சூழலில் அழகும் அன்னையின் அருட்கடாட்சச் சிறப்பும் விதந்து கூறப்படுகின்றது. இவ்விறைவி கேட்பவர்களுக்கு கேட்பதெல்லாம் கொடுப்பாள். நல்லனவற்றைக் கொடுத்து கற்றவர்கள் வீற்றிருக்கும் சபை முன்னே இருத்தி புரியாதவிடயங்களைப் புரிய வைப்பாள். இவள் ஏழைகளின் பங்காளி என்று இறைவியை வழிபடுவதால் ஏற்படும் நன்மைகளையும் இகழ்வதால் வரட்சி, மதிமருட்சி போன்ற தீயவை ஏற்படும் என்றும் கூறப்படுகின்றது. குறிப்பிட்ட 2010 ஆண்டுக்கு முன்னர் இவ்விடத்திற்கு சென்று தரிசிக்க முடியாத நிலைகாணப்பட்டது. இவ்விடத்தின் பழைய பண்புகளை இன்று காணமுடியவில்லை. ஆயினும் ஆலயச் சூழலையும் அவ்வூரைப்பற்றி அறியும் ஆதாரமாக இந்நூல் அமைந்துள்ளது. இவ்வூரில் வாழுகின்ற மக்கள் நல்லதைத் தவிர வேறெதுவும் செய்யமாட்டார்கள் என்று ஊர்மக்களின் பண்புகளும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது.

சப்த மாதராகிய பிராமி, மகேஸ்வரி, கௌமாரி, வைணவி, வராகி, மகேந்தரி, சாமுண்டி இவர்கள் குற்றேவல் செய்ய வீற்றிருக்கும் இராஜஇராஜேஸ்வரியை இந்துக்கள் மட்டுமன்றி கிறிஸ்தவர்களும் வந்து வணங்குகின்றனர். என்ற தகவலை இச்சதகத்தின் மூலம் அறிய முடிகின்றது. இவ்வாறான இறைவியை எல்லாப் பகுதிகளிலும் 11 பாடல் வீதம் சிறப்பித்து பண்டிதர் குடமுழுக்காடும் பகுதியில் 22 பாடல்கள் பாடுகின்றார். இப்பகுதியை அதிக கற்பனை வளத்துடன் பாடியுள்ளார்.

இவ்வாலயத்தில் நீலநிறவிழாக் கொடியுடன் கொடியேற்றம் ஆரம்பமாகும். அதன் பின்னர் திருமுழுக்காட்டி அரியாசனத்தில் அமரச் செய்து கருகம்பனையூரின் தலைசிறந்த தமிழ் மகனாகிய பார்வதி நாதசிவத்தின் கவிதை ஒலிக்க அன்னைக்கு அபிடேகம் நடைபெறும் என்று ஆலயத்தின் சிறப்பை எடுத்துக் கூறும் ஆசிரியர் அவ்வூர்மக்களையும் சிறப்பிக்கத்தவறவில்லை. அன்பும் அரவணைப்பும், கல்வி, வீரத்திலும் சிறந்தவர்கள் உபசாரப்பண்பு கொண்டவர்கள் என கூறுகின்றார்.

சூரியனைச் சுற்றிக் கோள்கள் சுழன்று வருவது போல எங்களுடைய எண்ணங்கள் அன்னையையே சுற்றிவர வேண்டும். எத்துணை துன்பங்கள் வரினும் இறைவழிபாடு ஒன்றே மகிழ்ச்சியைத் தரவல்லது. என்பது பண்டிதரின் முடிவாகும். இறுதிப்பாடலாக உன்அன்பர்கள் என்றுமே உயர்வதன்றித் தாழ்வதில்லை. இறைவியை சாகும் வரை சாரும் சார்பினர் செத்தும் சாகாதவரே. இவ்வாறான இறைவியை வாழ்த்துவோமாக என வாழ்த்தி நிறைவு செய்கின்றார்.

தமிழ்நாட்டுப் பக்திச் சதகங்கள் போன்று குறிப்பிட்ட பொருளைப் பாடுபொருளாகக் கொண்டு இலக்கியம் படைத்ததனால் சொல்லவந்த விடயத்தினைச் சிறப்பாகவும் உதாரணங்கள், அணிகள் மூலம் விளக்கி வரலாற்றுச் செய்திகளையும் எடுத்துக் கூறியுள்ளார். ஈழத்தில் தோன்றிய சதகங்களில் அதிக கற்பனைவளம் மிக்க சதகமாக இச்சதகம் காணப்படுகின்றது.

**யேசுநாதர் திருச்சதகம்**

ஈழத்து இலக்கிய வரலாற்றிலே சதக இலக்கியங்களுக்கென்று தனித்துவமான இடம் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. ஆயினும் தமிழ்நாட்டில் பல பொருண்மை கொண்டதாக இலக்கியங்கள் தோற்றம் பெற்றது போன்று ஈழத்தில் தோற்றம் பெறவில்லை. வடமொழியினைப் பின்பற்றி பக்தியும் வரலாறும் மட்டுமே ஈழத்துச் சதக இலக்கியங்களின் பாடுபொருளாக அமைந்துள்ளமையினைக் காணலாம்.

கிறிஸ்தவ மதத்தின் சிறப்பினையும் யேசுநாதரின் கருணைத்திறத்தையும் கொண்ட பக்தி சார்ந்த நூலாக யேசுநாதர் திருச்சதகம் அருணாசலம் சதாசிவம் பிள்ளையால் பாடப்பட்டுள்ளது. ஈழத்தில் தோன்றிய கிறிஸ்தவமதம் சார்ந்த சதக இலக்கியமாக யேசுநாதர் திருச்சதகம் சார்ந்த சதக இலக்கியமாக யேசுநாதர் திருச்சதகம் ஒன்றே காணப்படுகின்றது. இச்சதகத்திற்கு முன்னரோ பின்னரோ கிறிஸ்தவ மதம் சார்ந்த சதகம் தோன்றியதாக அறியமுடியவில்லை. இச்சதக ஆசிரியரான அ. சதாசிவம்பிள்ளை 1820ம் ஆண்டு மானிப்பாயில் உள்ள நவாலி என்னும் ஊரில் ஒரு வைதீக சைவக் குடும்பத்தில் பிறந்தவர். இவர் சைவராக இருந்த காரணத்தால் பல சைவ நூல்களைக் கற்றுத் தெளிந்தார். குறிப்பாக மாணிக்கவாசகரின் திருவாசகத்தைக் கற்று மனனஞ் செய்திருக்கின்றார் என்பதனை அறியமுடிகின்றது. மாணிக்கவாசகரது மொழிநடையை இவரது பாடல்களில் காணலாம்.

இவருடைய காலத்தில் வாழ்ந்த ஆறுமுகநாவலரைப் போன்றே சமயக்கல்வி, தமிழ்க்கல்வியில் அதிக ஆர்வம் காட்டியுள்ளார். ஆரம்பக்கல்வியை அக்காலத்தில் புகழ் பெற்ற வித்துவானாகிய சேனாதிராஜ முதலியாரிடம் கல்விகற்றுள்ளார். 1835 ஆம் ஆண்டு சதாசிவம்பிள்ளையின் 15வது வயதில் கிறிஸ்தவ மதத்தினைத்தழுவிக் கொண்டார். இதன்பின்னர் உயர்கல்வியை வட்டுக்கோட்டை மிசனறியில் கல்வி கற்றார். திருமுழுக்குப் பெற்றதன் பின்னர் ஆர்னோர்ட் சதாசிவம் பிள்ளை என்ற நாமம் பெற்றார்.

இவருடைய நூல்களில் அதிமுக்கிய நூலாக பாவலர் சரித்திரதீபகம் அமைந்துள்ளது. என அதிவணபேராயர் எஸ். ஜெபநேசன் கூறியுள்ளார். இவற்றினை விட பஞ்சராத்திரம், கீர்த்தனா சங்கிரதம், சுகமரணாபீஷ்டம், வெல்லை அந்தாதி, இல்லறநொண்டி, திருச்சதம், ஞான வெண்பா முதலிய நூல்களை ஆக்கியுள்ளார்.

இவரது முதலாவது படைப்பாக வெளிவந்த நூலே திருச்சதகம் ஆகும். இது 1844ம்ஆண்டு அவருடைய 24 வயதில் இயற்றப்பட்டு 1849ம் ஆண்டு வெளியிடப்பட்டது. வெளிவந்ததில் இருந்து அக்காலத்தில் இந்நூலுக்குச் சிறந்த மதிப்பு இருந்துள்ளது. என்பதனை அறியமுடிகின்றது. அவர் தமது நூலைத் திருச்சதகம் என்றே குறிப்பிட்டுள்ளார். ஆனால் பிற்கால இலக்கிய வரலாற்றாளர்கள் யேசுநாதரைப் பாடுபொருளாகக் கொண்டமையால் யேசுநாதர் திருச்சதகம் எனஅழைத்தனர். இச்சதகம் பெரும்பாலும் மாணிக்கவாசகர் சிவனையும் வேண்டுவது போல சதாசிவம் பிள்ளை யேசுவை முத்திப்பேறு அருளுமாறு வேண்டுகின்றார். இந்நூலில் கதிரவனின் வருகைக்காக ஏங்குகின்ற தாமரைக்கும், தாய் தந்தை இல்லாமையால் தாலாட்டுப் பெறாத குழந்தைக்கும், தாய்ப்பசுவின் முலையைத்தேடி அலையும் கன்றுக்கும், பாதுகாப்பில்லாத மங்கையங்களிற்கும் சுக்கானின்றி கடலில் அலையும் தோணிக்கும் தன்னை ஒப்பிட்டு எனக்கு அருள்பாலிப்பது உனக்கு கடினமோ என யேசுநாதரை நோக்கிப் புலம்புகின்றார். நீ என் உள்ளத்தில் புகுந்தால் என் அதர்மம் நீங்கிவிடும் நான் உன்னைச் சரணடைந்தமையால் முத்தியின்பம் பெறுவேன் என முடிக்கின்றார்.

இந்நூல் பண்டிதர்கள் மட்டுமே படிக்கக் கூடிய இலக்கியமாகக் காணப்படுகின்றது. இதனை இந்நூலின் சிறப்புப்பாயிரத்தில் கூறியுள்ளார். இந்நூல் கற்றவர்களுக்கு மட்டும் விளங்குமாகையால் வெல்வையந்தாதியை படைத்துள்ளேன் என வெல்வை அந்தாதிப் பாயிரத்தில் கூறுகின்றார். இந்நூல் ஆர்னோல்ட் சதாசிவம் பிள்ளையின் புலமைத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

**சந்நிதிக் கந்தர் சதகம்**

இச்சதகத்தினை நமச்சிவாயதேசிகர் இயற்றியுள்ளார். இவர் ஆலயத்திருமுன்றலில் நின்று வழிபாடு செய்யும் போது உணர்ச்சிவயப்பட்டு இச் சதகத்தைப் பாடத்தொடங்கினார். அருவி ஊற்றெடுத்து ஓடுவது போல 14 பாடல்களை ஒன்றன்பின் ஒன்றாகப் பாடினார். மீதிப் பாடல்கள் அத்தலத்தின் வேறுசூழலில் இருந்து பாடினார். என இச்சதகத்தின் பதிப்புரையில் கூறப்பட்டுள்ளது.

இச்சதகப் பாடலானது விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பமாகி 100 பாடல்களைக் கொண்டது. இப்பாடல்கள் அடியாரின் உடற்பசி தீர்ப்பதற்குச் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் கந்தர் அவர்களது உயிர்ப்பசியையும் நீக்குவதற்குத் திருவுளங்கொண்டுள்ளார் என்றும் முருகனின் சிறப்புக்களும் ஆலயச் சூழலின் தெய்வீகத்தன்மையும் கூறுகின்றது. கந்தபுராணத்தின் தன்மையும் சிறந்த சொல்லலங்காரமும் கொண்டு பாடப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக

> “உறுமா தவர்வந் துறைசந் நிதியைக்
> குறுகக் குறுகக் கொடுநோய் வினைகள்
> குறுகக் குறுகும் மகிழ்வுங் குணமும்
> வறுமைப் பிணியும் மயலும் கெடுமே”

இப்பாடலைக் கொள்ளலாம்.

குறிஞ்சிக் கிழவனான முருகன் மலையரசனின் மகளாகிய பார்வதிதேவிக்கு மகனாகி தெய்வயானை வள்ளியை மணம்செய்து காலில் கிண்கிணியும் கொள்ளை அழகுடனும்

இப்பூவுலத்தார்க்கு அருள் செய்வதற்காக சின்னக்கதிர்காகமமாகிய சந்நிதியில் திரு அவதாரம் செய்துள்ளார். பிரமா, விஸ்னு, உருத்திரன், ஆகிய மூவரும் முருகனின் பாதங்களை வணங்குபவர்கள். சிவனும் முருகனும் ஒருவரே. முருகனின் பாதங்களைவிட உயர்வானது எதுவுமில்லை. முருகனின் தோற்றப்பொலிவை இச்சதகம் சிறப்பாகக் கூறுவதோடு நக்கீரரை குகையில் இருந்து காப்பாற்றி பேரின்பம் அழித்த வரலாற்றையும் கூறுகின்றது. சந்நிதி முருகனை வணங்கினால் எருமையை வாகனமாகக் கொண்டுள்ள இயமனால் ஏற்படும் பயங்கள் நீங்கிவிடும். இம்முருகனே தமிழ்ச்சங்கத்தில் அகத்தியரோடு தமிழ்வளர்த்தவன். குழந்தை என நினைத்து நகையாடிய சூரனை அழித்தவன் என முருகனுடைய வரலாற்றுச் செய்திகளையும் இச்சதகத்தில் காணலாம். முருகபக்தர்கள் ஆகிய நக்கீரர், ஔவையார், இந்திரனின் மருமகனாகிய விறலன் போன்றவர்கள் பற்றிய செய்திகளும் உண்டு. இச்சந்நிதி முருகளை வழிபட்டால் உயிர்மலம் நீங்கும், முருகன் எம்முடன் விளையாடுவான்,முருகனது நடனமாடுகின்ற பாதங்களை வழிபட்டால் திருவருள் நிலை கிட்டும் என்கின்றார். இச்சதகமானது சந்நிதிமுருகனின் சிறப்புக்களையும் புராண இதிகாச சம்பவங்களையும் எடுத்துக் கூறுகின்றது.

தொன்மை வாய்ந்த இலக்கியப் பாரம்பரியத்தைக் கொண்ட தமிழ்மொழியில் உள்ள இலக்கியங்கள் காலத்துக்குக் காலம் பல மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தேய்மானங்களையும் கண்டுகொள்ள முடிகின்றது. சிற்றிலக்கிய கதைகளுள் ஒன்றாகிய சதக இலக்கியங்கள் தமிழ்மொழியில் மட்டுமன்றி வடமொழி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆகிய மொழிகளிலும் தோன்றியுள்ளது. தமிழ்நாட்டைப் போல பெருமளவில் ஈழத்தில் சதகங்கள் தோன்றவில்லை. வரலாறு, பக்தி ஆகிய இரு பொருண்மையிலே சதகங்கள் தோன்றியுள்ளன. ஆயினும் இச் சதக இலக்கியங்கள் பற்றிய எண்ணக்கரு மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்தே காணப்படுகின்றது. நூறு பாடலில் பாடவேண்டும் என்ற எண்வரையறை புலவர் தாம் கூற வந்த பொருளை விரிவாகக் கூறக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தாலும் பாடலின் எண்ணிக்கை அதிகம். இதனால் வாசகர்களும் ஒரு விடயத்தை அறிய 100 பாடலையும் விளங்கிக் கொள்ள வேண்டிய தேவை காணப்பட்டது. யாப்புக்களின் மாறுபாடு போன்றவையும் 19ம்நூற்றாண்டில் தமிழ் இலக்கியத்தில் வந்து கலந்து கொண்ட நவீன இலக்கியத்தாக்கமும் செல்வாக்கும் காரணமாகியது. இவ் நவீன வடிவங்கள் எளியநடை, இலகுதமிழில் சிறிய அளவில் காணப்பட்டதில் வாசகரின் நாட்டங்கள் சிறியஅளவில் திருப்திப்பட்டது. அதிக எண்ணிக்கையைக் கொண்ட சதகங்களைப் படித்துது விளங்கிக் கொள்வதில் நாட்டம் காட்டவில்லை. நவீன இலக்கிய வடிவங்களுள் குறுங்காவியம் என்னும் வடிவத்தினை நீலாவாணன், நந்தி, முருகையன் போன்றோரிடம் காணலாம். இந்த அமைப்பு சதகத்துடன் ஒத்துப்போகின்றது. இவ் நீண்ட குறுங்காவியம் போன்ற அமைப்புச் சதகங்கள் தோற்றுப் போவதற்குக் காரணமாகியது.

மேலும் தமிழில் எழுந்த பெரும்பாலான இலக்கியங்கள் பெண்களை முதன்மைப்படுத்தியும் விளித்துப்பாடுவதாக அமைந்துள்ளது. ஆனால் சதகங்கள் பெண்களை நினைப்பதே பாவம் என விரித்துக்கூறுவதால் பெண்கள் மத்தியில் செல்வாக்குப் பெறவில்லை.

இவ்விலக்கியங்கள் மக்களின் வாழ்வினைச் சீர்மைப்படுத்துவதாகவும் தமிழரின் வரலாற்று பூர்வமான இருப்பியல்களை எடுத்துக்காட்டும் சான்றுகளாகவும் இவ்வுலக, மறுவுலக வாழ்க்கைக்கு உதவும் கருத்துக்களைக் கொண்டிருந்த போதும் மக்களிடத்தில் தம் செல்வாக்கினை முற்றுமுழுக்க

இழந்து விட்டதென்றே கூறலாம். மரபுவழித் தழிழ்க் கல்விப் பாரம்பரியத்தில் குருகுலக்கல்வியிலும் திண்ணைப்பள்ளிகளிலும் சதக இலக்கியங்கள் மனனம் செய்யப்பட்டதுடன் கற்பிக்கவும் பட்டன. இன்றைய மறைவினை தேய்மானத்தினைத் தடுத்து மாணவர்கள் விரும்பிப் படிக்கும் படி செய்து மக்கள் இலக்கியமாக மாற்றுவதன் மூலம் எமது சமுதாயத்தின் இருப்பியல்புகளை நிலை நாட்ட முடியும்.

## ஆய்வுக்குத் துணைநின்ற நூல்கள்


1. கணபதிப்பிள்ளை. வே. ஈழமண்டலச்சதகம், வித்தியானுபாலன அச்சியந்திரசாலை 1928
2. செயராமன். ந.வீ, சதக இலக்கியங்கள், மாணிக்கவாசகர் பதிப்பகம் சென்னை, 9ம் பதிப்பு, 1978
3. மேலது, சிற்றிலக்கியச் செல்வம், மாணிக்கவாசகர் பதிப்பகம், சென்னை 1967
4. முத்துச்சண்முகர், சிற்றிலக்கிய தோற்றமும் வகையும், முத்துப்பதிப்பகம், மதுரை, 1979
5. வரதராசன்.மு., தமிழிலக்கிய வரலாறு, சாகித்திய அக்கடமி, சென்னை 3ம் பதிப்பு 1978
6. நமசிவாயதேசிகர், சந்நிதிக்கந்தர்சதகம், கட்டுவனூர் 1973.
7. வேற்பிள்ளை ம.க. ஈழமண்டலச்சதகம், வித்தியானுபாலன வெளியீடு சென்னை
8. வீரகத்தி .க. இராஜஇராஜேஸ்வரி சதகம், ஆலயத்திருப்பணி சபையினர், கருகம்பனையூர் 1987
9. சதாசிவம்பிள்ளை.ஆ. வெல்வை அந்தாதி, ஆர்னோல்ட் புத்தகநிலையம் (பதிப்பு) 2005.

# பொலநறுவை மாவட்டத் தமிழ் மக்களின் சிறுவர் விளையாட்டுப் பாடல்களும் ஆவணப்படுத்தலும்

எஸ்.வை. ஸ்ரீதர்

## அறிமுகம்

இலங்கையில் உள்ள இருபத்தைந்து மாவட்டங்களில் பொலநறுவை மாவட்டமும் ஒன்றாகும். இது 3293 சதுரகிலோமீற்றர் பரப்பை உடையது. இங்கு ஏழு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளும் 98 கிராமசேவகர் பிரிவுகளுங் காணப்படுகின்றன. இங்குமொத்தச் சனத்தொகை 359,197 ஆகும். மொத்தச் சனத்தொகையில் 90.3 வீதமானமக்கள் சிங்களவர்கள். 7.6 வீதமானமக்கள் முஸ்லிம்கள். 2.0 வீதமானமக்கள் தமிழர்கள். இம்மாவட்டத்தில் இந்தியத்தமிழர், பறங்கியர், மலாயர் போன்றோர் 0.1 வீதமாகவே காணப்படுகின்றனர். இந்தவகையில் பொலநறுவை மாவட்டத்தில் சிங்களமொழியே பெரும்பான்மையினரின் மொழியாகும். தமிழ் மொழியை 9.6 வீதமானமக்கள் பேசுகின்றனர். இங்குவாழும் 70 வீதத்திற்கும் அதிகமானோர் விவசாயிகளாவர். இவர்களில் பெரும்பான்மையானோர் கால்நடைகளையும் வளர்க்கின்றனர். இவர்களிடம் காலம் காலமாக நிலவிவந்த நாட்டாரியற் கூறுகளான நாட்டார்பாடல்கள், நாட்டார்கதைகள் பழமொழிகள், விடுகதைகள், நாட்டார் பழக்கவழக்கங்கள், பண்பாடுகள் எனப் பலதன்மைகள் அன்றுதொட்டு வழர்ந்து வந்திருக்கின்றன. இந்த நாட்டார் பாடல்களுள் ஒருவகையே **சிறுவர் விளையாட்டுப் பாடல்களாகும்.** இவற்றைச் சிறுவர்கள் விளையாடும் போது அறிவு, ஆற்றல், சிந்தனை, ஒழுக்கம், கூடிவாழும் மனோபாவம், இசை, மகிழ்ச்சி என்று இவ் விளையாட்டுக்கள் வழங்கும் கொடைகளோ மிகப்பல.

## தொன்மம்

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள தமிழ்க் கிராமங்களில் பழைய கிராமம் மன்னம்பிட்டியாகும். இங்குள்ள அரசினர் தமிழ் கலவன் பாடசாலை 1895 ஆம் ஆண்டு நிறுவப்பட்டுள்ளதற்கான சான்றுகள் இன்றும் இப்பாடசாலையில் உண்டு. இது இப்பகுதியில் அதிகமான தமிழ் மக்கள் வாழ்ந்தமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகும். இக்கிராமத்தைச் சுற்றி முருகபுரம், கட்டாமனை, சொறிவில், புதுவெளி, கறப்பளை, சவன்பிட்டி, கொலக்கனாவெளி, முத்துக்கல், தீவுச்சேனை, காண்டக்காடு எனப் பல தமிழ்க் கிராமங்கள் இருந்தன. ஆனால் இன்று மஹாவலி அபிவிருத்தித் திட்டம் காரணமாகவும் இப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்ற இன வன்முறைகள் காரணமாகவும் இன்று இப்பகுதியில் காணப்படும் தமிழ்க் கிராமங்கள் பின்வருமாறு. மன்னம்பிட்டி, சொறுவில், கறப்பளை, முத்துக்கல், தீவுச்சேனை என்பவற்றுடன் பலரும் விவசாயத்துக்காக அண்மைக்காலத்தில் குடியேறிய இடமாக ‘குடாப்பொக்குன’ யும் காணப்படுகின்றது.

மன்னம்பிட்டிக் கிராமத்தில் வாழ்ந்த இரண்டாம் தலைமுறையிர் என பி. பாஞ்சாலப்பிள்ளை, எஸ். மனுவற்பிள்ளை, வீ. வீரசிங்கம், வீ. ஆனந்தம், எம். வேல்முருகு, வீ. இரத்தினம் (வீரவாகு),

என். இராசிங்கம், ரி. பூபாலப்பிள்ளை, எஸ். செல்வநாயகம், எம். செல்லக்குமார், ஆர். கனகநாயகம், எஸ். அமராவதி, கே. கனகம்மா, ஏ. மாரியம்மா, ஏ. அன்னலெட்சுமி, கே. லெட்சுமிப்பிள்ளை, பி. தங்கம்மா, ஆர். பார்வதிஅம்மா, கே. செல்லம்மா எனப் பலரைக்குறிப்பிடலாம்.

மூன்றாம் தலைமுறையினராக இவர்களின் பிள்ளைகள் காணப்பட்டனர். அவர்களுள் பி. சிவசுப்பிரமணியம், எஸ். கர்ணன், ஆர். சந்திரன், எம். சந்திரபாலன், வீ. சௌந்தரராஜா, கே. கனகராசா, கே. இராசநாயகம், ஆர். மாணிக்கராஜா, வி. நந்தபாலன், கே. கருணாநிதி, கே. நமசிவாயம், ரி. யோகேந்திரன், வி. துரைராஜா, ரி. பவளேந்திரன், ஆர். உருத்திரராஜா ஆர். தேவராஜா, எம். கிருபானந்தராஜா, எஸ். பாஸ்கரன், வி. திருச்செல்வம், எஸ். பத்மநாதன், மற்றும் வீ. சரஸ்வதி, பி. பரமேஸ்வரி, வீ. சிவயோகமலர், ஆர் மல்லிகா, பி. யோகேஸ்வரி, ஆர். ராணி, ஆர். வள்ளியம்மை, கே. மாலா, ஆர். புனிதமலர், கே. சுகுணவேணி, ஆர். ரூபி, ஆர். தேவி, ஆர். யோகேஸ்வரி, ஆர். வேதவல்லி எனப்பலரை இனங்காட்டலாம். இவர்களில் பலர் இன்னும் எம்முடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றனர்.

மூன்றாம் தலைமுறையினரின் பிள்ளைகளான நான்காம் தலைமுறையினர் எஸ். வை. ஸ்ரீதர், எஸ். சில்வெஸ்ரர், எஸ். சங்கர், எஸ். சுதாகர், கே. கிருஸ்ணகுமார், கே. குலசூரி, ஆர். கண்ணன், எஸ். புவனேஸ்வரன், எஸ். சயந்தன், ஏ. பத்மநாதன், எஸ். கனகராஜா, எஸ். கோசசி, ஆர். பாஸ்கரன், மற்றும் எஸ். எஸ். சியாமளா, எஸ். நித்தியா, பி. கமலா, பி. மீனா, கே. வளர்மதி, கே. வதனா, எஸ். சயந்தினி, எஸ். நதியா, ஆர். பவானி, ஆர். ஸ்ரீதேவி, ஆர். அஸ்வினி எனப் பரம்பரை பரம்பரையாக மன்னம்பிட்டிக் கிராமத்தின் தொன்மத்தை நாம் வரையறுக்கலாம். இப்போது ஐந்தாவது தலைமுறையினரும் வந்துவிட்டனர். இதே போல் இப்பகுதியில் காணப்படும் ஏனைய தமிழ்க் கிராமங்களுக்கும் ஒரு தொன்மம் உண்டு.

இங்கு இரண்டாவது தலைமுறையினர் விளையாடிய சிறுவர் விளையாட்டுக்கள் என்று நாம் பின்வருவனவற்றைக் காட்டலாம். ஊஞ்சல் விளையாட்டு, கொத்து விளையாட்டு, பூப்பறித்தல் விளையாட்டு, ஆடு புலி விளையாட்டு, கிட்டிப்புள் விளையாட்டு, கிள்ளிக் கிள்ளிப் புராண்டி விளையாட்டு, சிறுவர் சிறுமியர் துள்ளி விளையாடும் விளையாட்டு, எவடம் எவடம் புங்கம் புளியடி விளையாட்டு, நரி விளையாட்டு, பாட்டன் குத்து விளையாட்டு, குசு(வாயு) விட்டால் விளையாடும் விளையாட்டு, ஆடு மறித்தல் விளையாட்டு, கண்ணாமூச்சி விளையாட்டு, மாடும் கொம்பற விளையாட்டு, ஆலா விளையாட்டு, வட்டக்காய் விளையாட்டு, ஆச்சி விளையாட்டு, வட்டக்கோடு விளையாட்டு, தண்ணிக்குட விளையாட்டு, உப்பு விளையாட்டு, ஆடா தோடா மல்லியரே விளையாட்டு, ஓணாயார் விளையாட்டு (ஓ நாயார் விளையாட்டு), பழவகை விளையாட்டு, நிற விளையாட்டு, கொம்பன் யானை விளையாட்டு, ஆலா வட்ட விளையாட்டு, ஏமாற்றும் விளையாட்டு, ஆண்டார் விளையாட்டு, கொட்டப்பாக்கன் விளையாட்டு, ஓர் அம்மா விளையாட்டு, சதுர விளையாட்டு, கோச்சி விளையாட்டு, கொசு அடித்து விளையாடும் விளையாட்டு, நெட்டி முறித்தல் விளையாட்டு என அன்றைய எமது முன்னோர்கள் எண்ணிறைந்த விளையாட்டுக்களை காலத்துக்குக் காலம் மாற்றி மாற்றி விளையாடியிருக்கிறார்கள். இவ் விளையாட்டுக்கள் அவர்களுக்கு ஓடுதல், தாவிப்பாய்தல், குதித்தல், தாண்டுதல், சொற்பயிற்சி, நாப்பயிற்சி, கணக்குப் பயிற்சி போன்ற பயிற்சிகளை வளர்ப்பவையாகவும், ஐம்புலன்களுக்கும் ஒருசேர இன்பமூட்டுவனவாகவும் அமைந்திருந்தன.

முதலாவது தலைமுறையினர் தமது முன்னோர்கள் பழக்கிய விளையாட்டுக்களை இரண்டாவது தலைமுறையினருக்குப் பழக்க அவர்கள் தாம் விளையாடியது மட்டுமல்லாது தமது பிள்ளைகளான மூன்றாவது தலைமுறையினருக்கும் இவ்விளையாட்டுக்களைப் பழக்கினர். ஆனால், இவர்கள் நான்காவது தலைமுறையினருக்குப் பழக்கியபோது அதனை விளையாடிய அவர்களில் பலர் இப்போது அந்த விளையாட்டுக்களையே மறந்தவர்களாக இருப்பதுடன் ஐந்தாவது தலைமுறையினரான தமது பிள்ளைகளுக்கு இதனைப் பழக்க முடியாதவர்களாகவும், ஒரு சிலர் பழக்கினாலும் அதனை விரும்பாதவர்களாக புதிய தலைமுறையினர் இருப்பது ஒரு வருந்தத்தக்க விடயமாகும்.

### 1. 'ஊஞ்சல்' விளையாட்டு

ஆரம்ப காலத்தில் சித்திரை, வைகாசி மாதங்களில் பொலநறுவை மாவட்டத் தமிழ்க் கிராமங்களில் ஊஞ்சல் கட்டப்படுவது வழக்கம். பெரியவர்களே இதில் பாடி ஆடுவார்கள். இந்தப் பாடல் மன்னம்பிட்டிக் கிராமத்துக்கே உரியதாக இருந்தாலும் ஆரம்பகாலத் தமிழ்க்கிராமங்கள் எல்லாவற்றிலும் எவ்வித வித்தியாசமும் இன்றி இப்பாடல் ஒன்றாகவே இருந்தது. அப்பாடல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| அம்பாவோ உம்பாவோ | ஏலேலோ - மேலேலோ | |
| அம்பாக் காரன் காசல்லவோ | ஏலேலோ - மேலேலோ | |
| காசும் இல்ல களஞ்சும் இல்ல | ஏலேலோ - மேலேலோ | |
| கடன் காரன் மகளல்லவோ | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| | | |
| செப்பத் திறந்து காசை எடடி | ஏலேலோ - மேலேலோ | |
| பெட்டியத் திறந்து சீப்பை எடடி | ஏலேலோ - மேலேலோ | |
| சமுக்க எண்ண பூசாதடி | ஏலேலோ - மேலேலோ | |
| சமுக்கக் கொண்ட கட்டாதடி | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| | | |
| சின்ன சின்ன வெத்திலையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| சின்ன மச்சான் நித்திரையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| பெரிய பெரிய வெத்திலையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| பெரிய மச்சான் நித்திரையாம் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| | | |
| குஞ்சி குஞ்சி வெத்திலையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| குஞ்சி மச்சான் நித்திரையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| பாதிப் பாதி வெத்திலையாம் | ஏலேலோ - மேலேலோ | |
| பாறி மச்சாள் நித்திரையாம் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| | | |
| அரக்கொத்து அரிசி ஆக்கிருக்காம் | ஏலேலோ - மேலேலோ | |
| கரப்பத்தான் பூச்சி சுண்டியிருக்காம் | ஏலேலோ - மேலேலோ | |
| வானத்தில றோட்டுப் போட்டு | ஏலேலோ - மேலேலோ | |
| வாறாண்டி உன் புருசன் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |

| | | |
|---|---|---|
| **கறுப்பிர வாசலிலே** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **கறுத்த நாயும் சங்கிலியும்** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **வெள்ளச்சீர வாசலிலே** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **வெள்ள நாயும் சங்கிலியும்** | **ஏலேலோ - மேலேலோ** | (அம்பாவோ) |

## 2. 'கொத்து' விளையாட்டு

பத்து வயது தொடக்கம் பதினேழு வயது வரை உள்ள இருபாலாரும் இவ்விளையாட்டை விளையாடுவார்கள். இவ்விளையாட்டில் ஈடுபடும் போது முதலில் எல்லோரும் வட்டமாகப் பின்னால் கைகள் இரண்டையும் வைத்துக் கொண்டு இருப்பார்கள். பின்னால் திரும்பிப் பார்க்கக்கூடாது. இருப்பவர்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட ஒருவர் வட்டத்துக்கு வெளியில் கையில் ஒரு கொத்தை எடுத்துக் கொண்டு இருப்பவர்களின் தலையில் அல்லது முதுகில் தட்டிக் கொண்டு பாடலைப் பாடிக்கொண்டு செல்வார். ஏனையவர்கள் பதில் சொல்வார்கள்.

பாடலைப் பாடிக்கொண்டு செல்பவர் இருக்கும் ஒருவரின் பின்னால் தனது கொத்தைப் போட்டுவிட்டு ஓட, கொத்து யாருக்குப் பின்னால் போடப்பட்டு இருக்கிறதோ அவர் எடுத்துக்கொண்டு கொத்து வைத்தவரைத் துரத்த அவர் ஓடிவந்து துரத்துபவரின் இடத்தில் இருந்தால் துரத்துபவர் முன்னவர் பாடிய பாடலைப் பாடிப்பாடி மற்றவர்களைச் சுற்றிச் சுற்றி வருவார். அதே நேரம் முன்பு ஓடி வந்து இருந்தவர் துரத்துபவரிடம் பிடிபட்டால் அவரே மீண்டும் பாடலைப் பாடி விளையாட வேண்டும். இந்த விளையாட்டை விளையாடுபவர்கள் தம்மைவிட ஓடமுடியாத ஒருவருக்குப் பின்னாலேயே கொத்தை வைப்பார்கள். சிலர் தமது ஓட்டத் திறமையைக் காட்டுவதற்காக ஓடக்கூடியவர்களுக்குப் பின்னாலேயே கொத்தை வைத்துவிட்டு எவ்வளவு தூரம் ஓட முடியுமோ அவ்வளவு தூரம் ஓடப் பின்னால் மற்றவர் விட்டுத் துரத்த ஏனையவர்கள் 'ஓடு'..... 'ஓடு' என்று 'கை' தட்டுவதும் 'அடி....அடி....., 'பிடிச்சிட்டான் ...... பிடிச்சிட்டான.....' என்று தமக்கு சார்பானவரின் பக்கம் ஆதரவாக இருப்பதும் உண்டு. பொதுவாக இந்த விளையாட்டில் நிதானமும், அவதானமும், ஓட்டமுமே முக்கியமானதாக இருக்கும்.

மன்னம்பிட்டிப் பகுதியின் இவ் விளையாட்டுக்கான பாடல் பின்வருமாறு பாடப்படுகின்றது. இப்பாடலைத் தனியே கொத்து வைத்திருப்பவர் மட்டும் பாடாமல் இருப்பவர்களும் சேர்ந்து ஆளுக்கு ஒரு அடியை மாறி மாறிப் பாடுவர். இந்தப் பாடல் அடிகள் எந்தவித மாறுதலுமின்றி இரண்டாம் மூன்றாம் நான்காம் தலைமுறை வரைப்பாடப்பட்டு வந்திருக்கின்றது.

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | **"கொத்து இருக்கா கொத்து?** |
| இருப்பவர்கள்: | **என்ன கொத்து?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **மாங்கொத்து** |
| இருப்பவர்கள்: | **போட்டுட்டுப் போங்க** |
| கொத்துடன் ஓடுபவர்: | வோத்தல் வோத்தல் |
| இருப்பவர்கள்: | கலக்கட்டி கலக்கட்டி |

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | வோத்தல் வோத்தல் |
| இருப்பவர்கள்: | கலக்கட்டி கலக்கட்டி |
| கொத்துடன் ஓடுபவர்: | பந்திருக்கா பந்து? |
| இருப்பவர்கள்: | என்ன பந்து? |
| கொத்துடன் ஓடுபவர்: | சீமியாப் பந்து." |

### 3 'பூப்பறித்தல்' விளையாட்டு

இந்த விளையாட்டை எத்தனை போரும் விளையாடலாம். பெரும்பாலும் பதினாறு வயதிற்குக் கீழ்ப்பட்ட இருபாலாரும் ஒன்று சேர்ந்தே இந்த விளையாட்டை விளையாடுகிறார்கள். விளையாட வந்திருப்பவர்களுள் உயரமாக இருக்கும் இருவர் தமக்குள்ளே கலந்துபேசி ஊசி, நூல் என்ற பெயர்களை வைத்துக் கொள்வார்கள். இது மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது. இவர்கள் இருவரும் தமது இரண்டு கைகளையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டு பின்வரும் பாடலைப் பாட ஏனையவர்கள் எத்தனை பேராக இருந்தாலும் சரி உயரம் கூடியவரில் இருந்து உயரம் குறைந்தவர் வரை ஒரு கோர்வையாக ஒருவரின் பின் ஆடையை ஒருவர் பிடித்துக்கொண்டு உயர்த்திய கைகளுக்குக் கீழாக உள்ளே வருவதும் போவதுமாக இருப்பார்கள்.

மன்னம்பிட்டி கிராமத்தில் இவ்விளையாட்டை விளையாடும் போது பின்வரும் பாடலை இவ்விளையாட்டுக்ககப் பாடுகின்றனர்.

| | |
|---|---|
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **ஒரு குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **ஒரு பூ பூத்து !** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **ரெண்டு குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **ரெண்டு பூ பூத்து !** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **மூன்று குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **மூன்று பூ பூத்து !** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **நான்கு குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **நான்கு பூ பூத்து !** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **ஐந்து குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **ஐந்து பூ பூத்து !** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள்: | **ஆறு குடம் தண்ணி வாத்து** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **ஆறு பூ பூத்து !** |

இவ்வாறு பாடிக்கொண்டே கையை உயர்த்திக் கொண்டு நிற்பவர்கள் இருவரும் விரும்பிய ஒருவரைப் பிடித்து இரண்டு கைக்குள்ளும் வைத்து அங்காலும் இங்காலும் என்று தமது கைகளை ஆட்டிக் கொண்டு இருப்பார்கள்.

அப்போது பிடி பட்டவரின் கட்சியைச் சேர்ந்தவர்கள் ஒன்று சேர்ந்து பின்வரும் பாடலை பிடித்து வைத்திருப்பவர்களைப் பார்த்துப் பாடுவார்கள்.

“போடி போடி சம்மந்தி
புத்தி கெட்ட சம்மந்தி
ஒரு கட்டுப் புல்லுத்தாறன்
என் மகளை விடடி ”

இதைக் கேட்டதும் பிடித்து வைத்திருப்பவர்கள்

“போடி போடி சம்மந்தி
புத்தி கெட்ட சம்மந்தி
ஒரு கட்டுப் புல்லுக்கு
உன் மகளை விடவா? ”

என்று பேரம் பேசுவதில் இழுபறிப் படுவாரகள். பேரம் பத்துக் கட்டுப் புல்லுக்கும் சிலவேளை போகும். பேரம் முடிந்ததும் குறிப்பட்டவரை வைத்திருக்கும் இருவரில் ஒருவர் இவரை வேறு ஒரு இடத்திற்கு அழைத்துக்கொண்டு போய் காதிற்குள் ‘ஊசியா?’, ‘நூலா?’ என்று கேட்பார். குறிப்பிட்டவர் எதைச் சொல்லுகின்றாரோ அவர் அந்தப் பெயரை உடையவர் பக்கம் போய்ச் சேர்வார். மறு முறை பிடி படுபவரை மற்றவர் கொண்டுப் போய் ‘ஊசியா?’, ‘நூலா?’ என்று கேட்பார். இப்படியாக யாருடைய பக்கம் விளையாடுபவர்களின் எண்ணிக்கை கூடுகின்றதோ அந்தப் பக்கம் வெற்றி பெற்றதாகக் கணிக்கப்படும்.

## 4. ‘ஆடு புலி’ விளையாட்டு

இந்த விளையாட்டைப் பெரும்பாலும் பதினாறு வயதிற்குக் குறைந்த சிறுவர் சிறுமியர்களே விளையாடுகின்றனர். இந்த விளையாட்டை விளையாடுவதற்கு குறைந்தது பதினைந்து சிறுவர் சிறுமிகளாவது இருத்தல் வேண்டும். முதலில் எல்லோரும் இரண்டு கைகளையும் பிடித்து பெரிய வட்டமாக நிற்க வேண்டும். இந்த வட்டத்துக்கு வெளியே ஒருவர் புலியாக இருப்பார். வட்டத்துக்குள்ளே ஒருவர் ஆடாக இருப்பார். புலி ஆட்டைப்பிடிக்க முயற்சி செய்யும். ஆடு புலியிடம் இருந்து தப்ப வழிபார்க்கும். இந்த வேளை வட்டமாக இருப்பவர்கள் தங்கள் பகுதிக்கே சிறப்பான இந்த விளையாட்டுப் பாடலைப் பாடிச் சுற்றிவருவார்கள்.

கீழேவரும் பாடல் மன்னம்பிட்டி, சொறிவில் பகுதியில் மட்டுமே பாடப்படும் பாடலாகும்.

“மாம்புலி செம்புலி மரம் புளியாம்
பதுங்கியிருப்பது கொடும்புலியாம்
பார்த்து இருப்பது வரிப்புலியாம்
மாம்புலி செம்புலி மரம் புலியாம்
பதுங்கியிருப்பது கொடும்புலியாம்”

வட்டமாகக் கையைப் பிடித்திருப்பவர்கள் இந்தப்பாடலை பாடும் போதே ஒருவரின் கையை விடுவித்துக் கொண்டு கஷ்டப்பட்டுப் புலி உள்ளே வரும். புலி உள்ளே வந்தால் ஆடு வெளியே ஓடும். பின்னர் புலியும் வெளியே வந்து ஆட்டைத் துரத்தும். ஆடு புலியிடம் அகப்பட்டால் ஆடாக

இருப்பவர் விளையாட்டில் இருந்து நீக்கப்பட கையைப் பிடித்துச் சுத்தி வருபர்களில் ஒருவர் ஆடாக வருவார். அவர் இருந்த இடத்துக்கு முன்பு ஆடாக இருந்தவர் போய் கைகளைப் பிடித்துக் கொள்ள விளையாட்டு மீண்டும் தொடரும். புலியாக இருப்பவரும் கூட பல முறை முயற்சி செய்தும் ஆட்டைப் பிடிக்க முடியாது போனால் இவரும் தமது பதவியை விட்டுக் கொடுப்பார்கள். வட்டமாக கைகோர்த்து இருப்பவர்கள் எப்போதும் ஆட்டின் பக்கமே சார்ந்து இருப்பார்கள். இதனால் இவ் விளையாட்டில் ஆடாக இருப்பவருக்குத்தான் அதிகமாக ஆதரவாளர்கள் இருப்பார்கள்.

## 5. 'கிட்டிப்புள்' விளையாட்டு

இவ்விளையாட்டைப் பெரும்பாலும் அன்று ஒன்பது வயதிற்கும் பதினேழு வயதிற்கும் இடைப்பட்ட சிறுவர்களே விளையாடியிருக்கிறார்கள். இவ்விளையாட்டுக்குக் குறைந்தது இரண்டு பேராவது இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் இரண்டு பக்கமும் சம எண்ணிக்கை உடையவர்களே பங்கு பற்றுவார்கள். இவ்விளையாட்டை பாடசாலையில் சிறுவர்களும், மாலை வேளைகளில் பெரியவர்களும் விளையாடுவார்கள்.

முதலில் இருவர் தலைவர்களாக இருந்து மற்றவர்களைப் பிரித்து எடுப்பார்கள். பின்னர் ஒரு உடன்பாட்டுக்கு வந்து ஒரு காசை மேலே எறிந்து அதன் மூலம் ஒரு பகுதியினர் பிடிப்பவர்களாகவும் மறு பகுதியினர் உத்துபவர்களாகவும் (கிண்டுதல்) இந்த விளையாட்டை ஆரம்பிப்பார்கள். குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையைத் தமது பாட்டத்திற்கான எண்ணிக்கையாகத் தீர்மானிப்பார்கள். சிறுவர்களாயின் நூறு (100) ஆகவும், பெரியவர்களாயின் ஐநூறாகவும் (500) வைத்துக்கொள்வது வழக்கம்.

இந்த நிலையில் ஒரு குழியில் "புள்ளை" (சிறிய தடி) வைத்து ஒரு தடியால் உத்தி விடுவார் ஒருவர். மறு தரப்பில் உள்ளவர்கள் அதனைப் பிடிப்பார்கள "புள்" நிலத்தில் விழ முதல் பிடி பட்டால் அதை உத்தியவர் போட்டியில் இருந்து நீக்கப்படுவார். மாறாக பிடிபடா விட்டால் உத்தும் இடத்தில் தனது கையில் உள்ள பெரிய தடியை குறுக்காக வைக்க மற்றவர்கள் "புள்ளை" எறிவார்கள். இது தடியில் பட்டால் அவர் போட்டியில் இருந்து நீக்கப்படுவார். இல்லையென்றால் மூன்று அடி அந்தப் "புள்ளின்" நுனியில் அடிக்கலாம். அவ்வாறு அடிக்கும் போது "புள்" மேலே கிழும்ப அதில் ஓங்கி ஓர் அடி அடிக்கலாம். இந்த வேளையில் "புள்" எவ்வளவு தூரத்துக்குப் போகின்றதோ அந்த இடத்தில் இருந்து புள்ளின் நுணியில் இரண்டாவது அடியை அடிப்பவர் தனது பலம் கொண்டு அடித்து அதனை வேறு ஒரு இடத்தில் விழச் செய்வார். பின்னர் விழுந்த இடத்துக்கு வந்த அவர் மீண்டும் புள்ளின் நுணியில் மூன்றாவது அடியை அடித்து அதனை வேறு ஒரு இடத்தில் விழச் செய்வார். அதன் பின்னர் அளக்கும் போது முன்பு விளையாடும் போது "குழி" உள்ள இடத்திற்கும் தற்போது அடித்த அடியில் "புள்" உள்ள இடத்திற்கும் இடைப்பட்ட தூரமே அளக்கப்படும். ஒரு எண்ணை அடித்தவரின் பக்கத் தலைவர் சொல்ல மற்றவர்கள் அதனை ஏற்றுக் கொண்டால் அவர் தொடர்ந்து விளையாடலாம். இல்லையென்றால் குறிப்பிட்ட எண் சரியா என்று பார்ப்பதற்கு அளப்பார்கள். 'புள்ளின்' நீளம் ஒன்றாக கணிக்கப்பட்டு அளக்கப்படும். அளக்கும் போது முன்பு குறிக்கப்பட்ட தொகை அங்கே இல்லாவிட்டால் அவர் போட்டியிலிருந்து நீக்கப்படுவார். இருந்தால் இவர் தொடர்ந்து வினையாடலாம். சொல்லப்பட்ட இடத்தை விட தொகை குறைவாக இருக்கலாம். ஆனால் கூடுதலாக இருக்கக் கூடாது.

இப்படி ஒரு பக்கத்திலுள்ள சகலரும் விளையாடி முன்பு பாட்டம்வைக்கக் குறிப்பிட்ட தொகையை எடுத்து விட்டால் உடனே 'பாட்டம்' 'பாட்டம்' என்று கத்திக் கொண்டு பாட்டம் அடிப்பார்கள். பாட்டம் அடிக்கும் போது முதலில் 'குழி' யைச் சுற்றி ஒரு வட்டம் இட்டு அதற்குள் முதலாவது பாட்டம் என்று எழுதி விட்டு மூன்று அடியை ஒருவர் அடிப்பார். இவ்வாறு எல்லோரும் அடித்து முடித்ததும் எதிர்த் தரப்பினர் 'குழி' உள்ள இடத்தை நோக்கி முன்பு அடித்துப் போன வழியாகப் பின்வரும் பாடல்களில் ஏதாவது ஒன்றை மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு ஓடி வருவார்கள். மூச்சுவிடாமல் பாடுகிறார்களா என்று பார்க்க எதிர்த்தரப்பினர் பலர் கூடவே ஓடுவார்கள். இப்படி ஏதாவது ஒரு பாடலை மூச்சுவிடாமல் பாடிக்கொண்டு 'குழி' இருக்கும் இடத்துக்குப் போக விட்டால் மீண்டும் அடித்தவர்கள் 'புள்ளில்' இரண்டு அடி அடிப்பார்கள். இப்போது இந்தத் தூரத்தைப் பாடிமுடித்து விடுவார்கள். முடியாவிட்டால் பாடியவர்கள் வெட்கத்துடன் விளையாட்டுத் தொடங்கிய இடத்துக்கு வருவார்கள். முன்பு 'பாட்டம்' எடுத்தவர்கள் பிடிப்பதற்குத் தயாராவர்கள்.

மன்னம்பிடி கிராமத்தில் சிறுவர்கள் பின்வரும் கிட்டிப் புள்ளுப் பாடல்களைப் பாடுகின்றனர்.

**"சடுகுடு மலயில ரெண்டான**
**சறுக்கி விழுந்தது கிளட்டான**
**தூக்கி விட்டது நான் தானே....**
**நான் தானே.... நான் தானே..... நான் தானே.... நான் தானே...."**

**"ஆலயிலே சோலயிலே**
**ஆலம் பாடிய சந்தையிலே**
**கிட்டிப் புள்ளும் பம்பரமும்**
**கிறிக்கியடிக்கப் பாலாறு ... பாலாறு ... பாலாறு..... பாலாறு......"**

**" குடு குடு செல்லா குப்பச் செல்லா**
**வேலிப் புறத்தி வெங்காயம்**
**வெட்டிப்பாத்தா சாராயம்**
**குடிச்சுப் பாத்தா வேப்பெண்ண .... வேப்பெண்ண..... வேப்பெண்ண....."**

**"கௌவடிக்க டிக்க டிக்க**
**கௌவடிக்க டிக்க டிக்க**
**கௌவடிக்க டிக்க டிக்க**
**கௌவடிக்க டிக்க டிக்க.... கௌவடிக்க டிக்க டிக்க......."**

**"வயலெல்லாம் நெல்லாச்சி**
**நெல்லெல்லாம் விளைஞ்சாச்சி**
**விளைஞ்சாச்சி.... விளைஞ்சாச்சி... விளைஞ்சாச்சி........"**

**" நரியே நரியே வாராயோ**
**நண்டு பிடிக்க வாராயோ**
**நல்ல பொல்லத் தேடாயோ**
**தேடாயோ.... தேடாயோ... தேடாயோ... தேடாயோ..."**

என்று பெரியவர்கள் பாடும் போது சிறுவர்கள் மிக இலேசாக பின்வரும் பாடலைப் பாடுகின்றனர். சில பெரியவர்களும் இந்தப் பாடலை பாடுவது வழக்கம்.

“ஈ ... ஈ ... ஈ ... ஈ ...
ஈ ... ஈ ... ஈ ... ஈ ...”

என்றும்

“ குடு ... குடு ... குடு ... குடு ...
குடு ... குடு ... குடு ... குடு ...”

என்றும் பாடி ஓடுவார்கள். இச் சின்னஞ் சிறியவர்களுக்கு இந்தப் பாடல்களின் அர்த்தங்கள் என்னவென்று தெரியவில்லை. பொதுவாக தமது கிராமத்து சூழ்நிலைகளுக்கு ஏற்ப அடுக்குச் சொற்களையும், மிக இனிமையான ஆனால், எளிமையான சொற்களையும் கொண்டு பாபடுவதற்கு ஏற்ப பாடல் இயற்றப்பட்டுள்ளது என்று தான் சொல்ல வேண்டும்.

இந்தக் கிட்டிப்புள்ளுப் பாடல்கள் மன்னம்பிட்டிக் கிராமத்துக்கே உரியதாக இருந்த போதிலும் ஆரம்ப காலத்தில் இந்தப்பாடல்களையே அயல்கிராமங்களிலும் பாடினர்.

**பயில் நிலை**

எடுத்துக்காட்டாக மேலே காட்டப்பட்டுள்ள அனைத்து விளையாட்டுக்களுக்கும் பொலநறுவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தாய்வீடாக இருந்தது மன்னம்பிட்டி கிராமமாகும். மன்னம்பிட்டி கிராமத்தைப் பொறுத்தவரையில் இவ்விளையாட்டை இரண்டாவது, மூன்றாவது பரம்பரையினர் முதலாவது பரம்பரையினரைப் போலவே விளையாட நான்காவது பரம்பரையினர் எப்போதாவது பல மாற்றங்களுடன் மறந்தும் மறக்காமலும் விளையாட ஐந்தாவது பரம்பரையினர் இவ் விளையாட்டை முற்றாகவே மறந்துவிட்டனர். இதற்குக் காரணம் கல்வி வளர்ச்சி, நவீன தகவல் தொடர்புச் சாதனங்களின் வருகையும் பெருக்கமும், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள், நகரமயமாதல், பழைய விளையாட்டுக்களின் சிறப்புக்களை அறிந்து அவற்றைப் புதியவர்களுக்குப் பழக்கக்கூடியவர்கள் இல்லாமை எனப் பலவற்றைக் குறிப்பிடலாம்.

ஏனைய தமிழ்க்கிராமங்கள் இன்னும் விவசாயக் கிராமங்களாகவும் நவீனத்துவத்தின் பாதிப்புக்கள் இன்னும் அதிகமாகப் போய்ச் சேராததனாலும் இம்மக்கள் இன்னும் பழைய தொன்மத்தை மதிப்பவர்களாகவும் அதைச் சிற்சில மாற்றங்களுடன் பின்பற்றுபவர்களாகவும் இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக இங்குள்ள எல்லாக் கிராமத்து **‘ஊஞ்சல்’** பாடல்களையும் எடுத்துப் பார்த்தால் மன்னம்பிட்டிக் கிராமத்து ஊஞ்சல் பாடலின் முதல் அடியும் மெட்டுமே அதிகம் காணப்படுகின்றது. மிகுதி தமது கிராமத்தில் காணப்படும் சின்னச் சின்ன ஊழல்களை அம்பலத்துக்கு கொண்டுவருவதாக தற்போது மாற்றப்பட்டுள்ளது மட்டுமன்றி ஐந்தாவது தலைமுறையினர் பாடலே இல்லாமல் ஊஞ்சல் ஆடுவதையும் சில வேளை சினிமாப்பாடல்களை முனுமுனுத்துக் கொண்டு ஊஞ்சல் ஆடுவதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. ‘சொறிவில்’ கிராமப்பாடல் பின்வருமாறு காணப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| அம்பாவோ உம்பாவோ | ஏலேலோ - மேலேலோ | |
| அம்பாக் காரன் காசல்லவோ | ஏலேலோ - மேலேலோ | |
| காசும் இல்ல களஞ்சும் இல்ல | ஏலேலோ - மேலேலோ | |
| கடன் காரன் மகளல்லவோ | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| செப்பை திறந்து ஊசை எடடி | ஏலேலோ - மேலேலோ | |
| ஊசிம் இல்ல நூலும் இல்ல | ஏலேலோ - மேலேலோ | |
| சின்னாச்சிற்ற குடுத்துட்டு வாடி | ஏலேலோ - மேலேலோ | |
| சின்னச் சட்டை தச்சிடுவாவு | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| பெரிய மாமி வீட்டினில | ஏலேலோ - மேலேலோ | |
| விருந்து வைக்கப் போறாவாம் | ஏலேலோ - மேலேலோ | |
| வட்டர் ஒயில் எண்ணயில | ஏலேலோ - மேலேலோ | |
| கருவாடு பொரிச்சிருக்காம் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| யாழ்பாணத்து வாத்தியாரு | ஏலேலோ - மேலேலோ | |
| வள்ளிட வீட்ட இருக்கிராம் | ஏலேலோ - மேலேலோ | |
| வள்ளிக்குத் தெரியாம | ஏலேலோ - மேலேலோ | |
| மகளோட கதைக்கிறாராம் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| ஓடிப்போன வெள்ளச்சி | ஏலேலோ - மேலேலோ | |
| காட்டுக்குள்ள கிடக்கிறாவாம் | ஏலேலோ - மேலேலோ | |
| ரோசமுள்ள பெரிய தம்பி | ஏலேலோ - மேலேலோ | |
| தூங்கிச் செத்துப் போனாராம் | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |
| வேலியோர மூலையில | ஏலேலோ - மேலேலோ | |
| பெரிய மச்சாள் பதுங்குறாவு | ஏலேலோ - மேலேலோ | |
| வேப்ப மர ஓரத்தில | ஏலேலோ - மேலேலோ | |
| வேலுப்பிள்ள தம்பி பதுங்குறாரு | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |

மேலுள்ள பாடலில் “வட்டர் ஒயில்” என்ற சொல் அண்மைக் காலத்தில் இப்பாடலில் சேர்ந்திருக்க வேண்டும். ஏனெனில் இப்பகுதியில் உள்ள மக்களை அரசு மஹாவலி அபிவிரத்தி திட்டத்தின் மூலமாக வேறு பகுதிகளில் குடியமர்த்தும் போது குடி பெயர்ந்து போபவர்களுக்கு நிவாரணமாக ஒரு வருடத்துக்கு பல்வேறு உணவுப் பொருட்கள் வழங்குவது வழக்கம். அவற்றுள் “வட்டர் ஒயில்” ரின்னும் அடங்கும். இந்தப் பகுதி மக்களுக்கு இந்த வட்டர் ஒயிலின் மணமே பிடிப்பில்லை. தமக்கு பிடிக்காதவற்றை பாடலில் பாடி தமது வெறுப்பைக் காட்டுவதே நோக்கமாக இருக்கின்றது.

“கறப்பளை” கிராம உஞ்சல் பாடலை எடுத்துக் கொண்டால் பாடலின் முதல் அடியை இடையிடையே பாடாமல் தொடர்ந்து பாடல் பாடப்பட்டுக் கொண்டே இருக்கும். இப்பாடலில் “மாம்புளி” என்பது “மாம்புள்ளி” என்பதன் திரிபாகும். அழகிலே மிகவும் சிறப்பானதை கிராமத்து பாசையில் இப்படி அழைப்பர்.

புகையிலைத் தோட்டம் செய்வதே இவர்களின் முக்கிய தொழிலாகும். முஸ்லிம் கிராமங்கள் சிலவற்றுக்கு முன் பகுதியில் இக் கிராமம் இருக்கிறது. அப்பகுதியால் போகும் முஸ்லிம் மக்களை கிண்டல் செய்யும் தன்மையும் இப்பாடலில் இளையோடி இருப்பதை காணலாம். அப்பாடல் பின்வருமாறு

| | |
|---|---|
| அம்பாவோ உம்பாவோ | ஏலேலோ - மேலேலோ |
| அம்பாக் காரன் காசல்லவோ | ஏலேலோ - மேலேலோ |
| காசும் இல்ல களஞ்சும் இல்ல | ஏலேலோ - மேலேலோ |
| காசுக் காறன் வரயுமில்ல | ஏலேலோ - மேலேலோ |
| தேத்தா மரத்தின் கீழே | ஏலேலோ - மேலேலோ |
| மாம்புளிச்சேவல் ஒன்று | ஏலேலோ - மேலேலோ |
| சிறகுத் தட்டி கூவுதம்மா | ஏலேலோ - மேலேலோ |
| என்னழகா பொன்னழகா | ஏலேலோ - மேலேலோ |
| என்னோட வரனும்டா | ஏலேலோ - மேலேலோ |
| பொயில தோட்டத்தில | ஏலேலோ - மேலேலோ |
| தண்ணியள்ளி இறைக்கையில | ஏலேலோ - மேலேலோ |
| சின்னத் தங்கம் போகையில | ஏலேலோ - மேலேலோ |
| மனசு கொஞ்சம் படபடக்கும் | ஏலேலோ - மேலேலோ |
| மொட்டத்தல காக்கா மாமன் | ஏலேலோ - மேலேலோ |
| பிட்டுத்தின்ன வாராரு | ஏலேலோ - மேலேலோ |
| மாமியிர வயித்தினிலே | ஏலேலோ - மேலேலோ |
| பூவும் பிஞ்சும் பிடிச்சிருக்காம் | ஏலேலோ - மேலேலோ |
| கேள்விட்ட மாமனாரு | ஏலேலோ - மேலேலோ |
| பையப் பைய முழுசுறாறாம் | ஏலேலோ - மேலேலோ |

முத்துக்கல் கிராமத்து ஊஞ்சள் பாடல் மன்னம்பிட்டி, கறப்பளை கிராமத்து ஊஞ்சல் பாடலை ஒத்திருந்த போதிலும் சில வேறுபாடுகளையும் காண முடிகின்றது. இறுதிப்பாடலில் இடி இடிக்கும் போது கிராமபுற மக்களின் சமய நம்பிக்கையை வெளிப்படுத்துவதையும் காணலாம்.

| | | |
|---|---|---|
| அம்பாவோ உம்பாவோ | ஏலேலோ - மேலேலோ | |
| அம்பாக் காரன் காசல்லவோ | ஏலேலோ - மேலேலோ | |
| காசும் இல்ல களஞ்சும் இல்ல | ஏலேலோ - மேலேலோ | |
| கடன் காரன் மகளல்லவோ | ஏலேலோ - மேலேலோ | (அம்பாவோ) |

| | | |
|---|---|---|
| **அன்னராணி மச்சாளுக்கு** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **மூண்டரை மாசமாமே** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **பாக்கப் போன வைத்தியரு** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **தங்கப் பிள்ள ஆச்சியாமே** | **ஏலேலோ - மேலேலோ** | **(அம்பாவோ)** |
| | | |
| **கோழியாணம் ஆக்கியிருக்காம்** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **கொழுக்கட்டை அவிச்சிருக்காம்** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **சோலைக்காட்டு மூலயில** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **சீனிக் காக்கா பதுங்கிறாராம்** | **ஏலேலோ - மேலேலோ** | **(அம்பாவோ)** |
| | | |
| **வானம் எல்லாம் கறுத்திருக்கு** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **இடியும் இங்கே இடிக்கிறது** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **ஆத்திக் கொப்பை எடுத்து வந்து** | **ஏலேலோ - மேலேலோ** | |
| **அடைக்களச் சாமிக்கு நேந்து வைப்போம்** | **ஏலேலோ - மேலேலோ** | **(அம்பாவோ)** |

குடாப்பொக்குண அண்மையில் உருவாக்கப்பட்ட ஒரு குடியேற்ற கிராமமாகும். இங்கு வாழ்வோர் முத்துக்கல், கறப்பளை, சொறுவில் போன்ற இடங்களில் இருந்தும் றொட்டவைக் கிராமத்தில் இருந்தும் புதிதாக குடியமர்த்தப்பட்டவர்கள். அதனால் இக்கிராமச் சிறுவர்கள் ஊஞ்சல் ஆடும் போது பெரும்பாலும் முத்துக்கல் கறப்பளை ஊஞ்சல் பாடல்களின் அடிகளை மாற்றிப் பாடுகின்றனர்.

## 'கொத்து' விளையாட்டு

மன்னம்பிட்டி கிராமத்தில் இந்த விளையாட்டுக்கு அழகான பாடல் இருந்தாலும் இப்போது சிறுவர்கள் பெரும்பாலும் விளையாடுவதில்லை. விளையாடினாலும் எந்தவிதமான பாடலும் இல்லாமல் தலையில் கொத்தால் அடித்துக்கொண்டு போகிறார்கள். சொறிவில் கிராமத்தில் இவ் விளையாட்டின் போது பாடப்படும் பாடலில், ஐந்தாவது தலைமுறையினர் சிங்களச் சொற்களையும் கலந்து பாடுகின்றனர். இதற்கான மூலகாரணம் இக்கிராமத்தில் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக வாழ்வதும் தமக்குள்ளே திருமணங்கள் முடித்துக் கொள்வதும், தமிழ்ப் பிள்ளைகள் சிங்களப் பாடசாலைகளுக்குச் சென்று கல்விகற்று வருவதுமே ஆகும்.

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | **"கொப்பற கொப்பற பிப்பிஞ்சா** |
| | **பஸ்ஸ வளன்ட தெசன்னா** |
| கொத்துடன் ஓடுபவர்: | **வோத்தல் வோத்தல்** |
| இருப்பவர்கள்: | **கலக்கடி கலக்கடி** |
| கொத்துடன் ஓடுபவர்: | **டக்கு..... டக்கு ....** |
| இருப்பவர்கள்: | **கந்தக் குட்டி .... சின்னக்குட்டி .....** |
| கொத்துடன் ஓடுபவர்: | **தென்னந் திரி.... திரி ..... பூமா பூமா** |
| கொத்துடன் ஓடுபவர்: | **ரங்கு ரங்கு** |
| இருப்பவர்கள்: | **சீமயா ரங்கு** |

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | **பொட்டி இருக்கு பொட்டி** |
| இருப்பவர்கள்: | **என்ன பொட்டி?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சீமெந்துப் பொட்டி** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சட்டியிருக்கு சட்டி** |
| இருப்பவர்கள்: | **என்ன சட்டி?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **கறிச்சட்டி** |
| கொத்துடன் ஓடுபவர்: | **பானயிருக்குப் பான** |
| இருப்பவர்கள்: | **என்ன பான?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சோத்துப் பான** |
| கொத்துடன் ஓடுபவர்: | **தென்னந் திரி ..... திரி ..... பூமா .... பூமா<br>இண்டைக்கும் திண்டுட்டு<br>நாளைக்கும் திண்டுட்டு<br>தலய வெட்டி<br>நாய்க்குப் போடு ......"** |

என்றதும் கொத்து யாருக்காவது போடப்படும். இப்பாடல் முதல் இரண்டு அடிகளும் சிங்களச் சொல்லால் ஆன பாடலாகும். இவ்விளையாட்டு சிங்களச் சிறார்களிடமும் பரவலாக விளையாடப்படுகின்ற ஒன்றாகும். இதன் விளக்கம் "கொத்துக் கொத்தாகப் பிப்பிஞ்சாக் காய் காய்த்திருக்கின்றது. பின்னால் பார்த்தால் அடிப்பேன்" என்பதாகும். சில வேளைகளில் இப்பாடலைப் பாடுபவர்கள் தங்களுக்கு ஏற்ற வகையில் அடிகளை மாற்றிப் பாடுவதும் உண்டு.

கறப்பளைக் கிராமத்தில் ஐந்தாவது தலைமுறையினர் இவ்விளையாட்டுப் பாடலை மறந்து மனம் போனபோக்கில் ஒரு நேரத்திற்கு ஒருவகையாகப் பாடிக்கொண்டு திரிகின்றனர். அப்பாடல் பின்வருமாறு.

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | **"கொத்திருக்கா கொத்து?** |
| இருப்பவர்கள்: | **என்ன கொத்து?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **மாங் கொத்து** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சாறியிருக்கு சாறி** |
| இருப்பவர்கள்: | **என்ன சாறி?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **பிளேன் சாறி** |
| இருப்பவர்கள்: | **போட்டுட்டுப் போங்க!** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சோடா இருக்குச் சோடா** |
| இருப்பவர்கள்: | **என்ன சோடா?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **பிளேன் சோடா** |
| இருப்பவர்கள்: | **போட்டுட்டுப் போங்க** |
| கொத்துடன் ஓடுபவர்: | **விஸ்கேற் இருக்கு விஸ்கேற்** |
| இருப்பவர்கள்: | **என்ன விஸ்கேற்?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **கிரீம் விஸ்கேற்** |
| இருப்பவர்கள்: | **போட்டுட்டுப் போங்க** |

| | |
|---|---|
| கொத்துடன் ஓடுபவர்: | **பொயில இருக்கு பொயில** |
| இருப்பவர்கள்: | **என்ன பொயில?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சுருட்டுப் பொயில."** |

மன்னம்பிட்டிப் பாடலில் கொத்து வைத்திருப்பவர் கேள்வி கேட்பார். ஆனால் சொறிவில், கறப்பளைப் பாடல்களில் கொத்து வைத்திருப்பவர் எந்தக் கேள்வியும் கேட்காமல் பாடலைப்பாட, இருப்பவர்களே கேள்வி கேட்பார்கள். ஆனால், குடாப்பொக்குண, முத்துக்கல் விளையாட்டுக்கள் மேலே காட்டிய பாடல்களில் இருந்து வேறுபட்ட அமைப்பை உடையதாகக் காணப்படுகின்றன. அப்பாடல் பின்வருமாறு,

| | |
|---|---|
| "கொத்துடன் ஓடுபவர்: | **வைக்கவா வைக்கவா**<br>**வாழிப் பூ மான்**<br>**தென்னந் திரி திரி**<br>**பூமான்.....பூமான்** |
| கொத்துடன் ஓடுபவர்: | **வோத்தல் வோத்தல்** |
| இருப்பவர்கள்: | **கலக்கட்டி கலக்கட்டி** |
| கொத்துடன் ஓடுபவர்: | **பந்து வருகுது பந்து** |
| இருப்பவர்கள்: | **என்ன பந்து?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **சீமியாப் பந்து** |
| கொத்துடன் ஓடுபவர்: | **கொத்து வருகுது கொத்து** |
| இருப்பவர்கள்: | **என்ன கொத்து?** |
| கொத்துடன் ஓடுபவர்: | **மாங் கொத்து** |
| இருப்பவர்கள்: | **போட்டுட்டுப் போங்க."** |

என அமைந்துள்ளது.

## 'பூப்பறித்தல்' விளையாட்டு

இன்றைய தலைமுறை மன்னம்பிட்டிக் கிராமத்தில் இவ்விளையாட்டை விளையாடுவதை நிறுத்திக் கொண்டாலும் ஏனைய கிராமங்களில் இந்த விளையாட்டு பல மாறுதல்களுடன் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாடப்படுவது ஒரு ஆறுதல்தரும் விடயமாகும். எடுத்துக்காட்டாக

கறப்பளை, முத்துக்கல், குடாப்பொகுன கிராமங்களில் இந்த விளையாட்டின் போது கையை உயரப்பிடித்துக் கொண்டு இருப்பவர்களுக்கு எந்தப்பெயரும் இல்லை. மேலும் கையைப் பிடித்துக் கொண்டு இருப்பவர்கள் பாட அதற்குப்பதிற் பாடலை உள்ளாலே போய்க் கொண்டிருப்பவர்கள் பாடுவார்கள். மேலும் பிடிபடுபவர் விளையாட்டில் இருந்து நீக்கப்படாமல் அவரை விட்டதும் அவர் தனது பழைய குழுவுடன் சேர்ந்து கொள்வார்.

முதலில் கையை உயர்த்திக் கொண்டு இருப்பவர்கள் பின்வருமாறு பாடுவார்கள். புகுந்து போபவர்கள் பதிலுக்குப் பாடும் பாடல் இதுதான்.

| | |
|---|---|
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பர்கள்: | **பாவட்டக் கொப்புக்கு கீழால யாரடி பூந்தது?** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **நாங்க தான் கொச்சிக்காப் பொண்டுகள்.** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பர்கள்: | **பாவட்டக் கொப்புக்கு கீழால யாரடி பூந்தது?** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **நாங்க தான் வெங்காயப் பொண்டுகள்.** |
| கையை உயர்த்திக் கொண்டு நிற்பர்கள்: | **பாவட்டக் கொப்புக்கு கீழால யாரடி பூந்தது?** |
| உள்ளே புகுந்து வருபவர்கள்: | **நாங்க தான் கொறுக்காப் பொண்டுகள்.** |

இந்த வேளையில் முதலில் பாடலைப் பாடியவர்கள் உயர்த்தியிருந்த கையை பதித்து ஒருவரைப் பிடித்துக் கொள்வார்கள். பின்பு தமது கைக்குள் ஒருவரை வைத்துக் கொண்டு பிடித்திருப்பவர்கள் தமது கையை அங்காலும், இங்காலும் ஆட்டி ஆட்டிப் பின்வருமாறு பாடுவார்கள்.

**"ஒரு குடம் தண்ணி வாத்து**
**ஒரு பூ பூத்து!**
**ரெண்டு குடம் தண்ணி வாத்து**
**ரெண்டு பூ பூத்து! "**

(இப்பாடல் பத்துக் குடம் வரைப் போகும்.)

இந்த வேளையில் பிடிபட்டவருடன் முதலில் கோர்வையாக வந்தவர்கள் பிடித்துக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து முழங்காலுக்குக் கீழே கையைக்காட்டி

**"இம்புட்டுப் புல்லுத்தாறன்**
**எம் மகளை விடடி சிறுக்கி"**

பிடித்துக் கொண்டிருப்பவர்கள் பதிலுக்கு

**"அதுக்கு மேல மல்லிக்கி"**

என்று பாடத் தொடர்ந்து பேரம் நடைபெறும். தொடர்ந்து பிடிபட்டவரின் கூட்டத்தார் தலைக்கு மேலே கையை உயர்தத்திக் காட்டியதும் ஒரு உடன்பாட்டுக்குப் பிடித்து வைத்திருப்பவர்கள் வந்ததும் பிடிப்பட்டவரை விட்டு விடுவார்கள். விட்டதும் விளையாட்டுத் தொடர்ந்து நடைபெறும். இதில் பிடிபட்டவர் பெரியவராக இருந்தால் அவர் உயரமாகக் கையைப் பிடிக்க முன்பு கையைப் பிடித்தவர் மற்றவர்களுடன் சேர்ந்து விளையாடுவார். பிடிபட்டவர் சிறியவராக இருந்தால் தொடர்ந்து விளையாடலாம். இப்பாடலில் வரும் 'பாவட்டம் கொப்பு' என்பது இப் பகுதியில் விசேடமாகக் காணப்படும் ஒரு மரமான பாவட்ட மரமாகும். அதன் கிளையை 'பாவட்டங் கொப்பு' என்பது வழக்கம். மேலும் இப்பாடலில் இடம்பெறும் கொச்சிக்காய், வெங்காயம் என்பவை இக்கிராம மக்களின் தோட்டத்தில் விளையும் பயிர்களாகும். அதே வேளை சிறுக்கி, மலிக்கி என்பது ஒருவருடன் ஒருவர் சண்டை பிடிக்கும் போது பெண்கள் பாவித்து ஏசும் சொற்களாகும்.

இங்கேயும் பேரம் பேசும் சண்டையே நடைபெறுவதால் இந்த வார்த்தையைப் பாவித்திருக்கலாம். மேலும் 'இம்புட்டு' என்பது இப்பகுதி மக்களின் பேச்சு வழக்குச் சொல்லாகும். இதன் பொருள் 'இந்த அளவு' என்பதாகும்.

### 'ஆடு புலி' விளையாட்டு

மன்னம்பிட்டி கிராமத்தில் பழையவர்களுக்கு இவ்விளையாட்டு தெரிந்திருந்தாலும் புதியவர்கள் இப்போது இவ்விளையாட்டை விளையாடுவதில்லை. சொறிவில் கிராமத்தில் மன்னம்பிட்டி கிராமத்து விளையாட்டு முறையையும் பாடலையும் பின்பற்றினாலும் இன்று இவ்விளையாட்டை விளையாடுபவர்களைக் காணமுடியவில்லை. இருப்பினும் கறப்பளை, முத்துக்கல், குடாப்பொக்குன ஆகிய கிராமங்களில் வழங்கும் பாடல்களும் விளையாட்டு முறையும் வேறுபாடற்றவை. இவ் விளையாட்டின் போது சிலர் வட்டமாக கையைப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள். வட்டத்துக்குள் நிற்பவர் 'பசுமாடு' வெளியில் நிற்பவர் 'புலி' என்று அழைக்கப்படுவர். இப்படி இருப்பதனால் இந்த விளையாட்டை 'மாடுபுலி' விளையாட்டு என்று தான் அழைக்க வேண்டும். ஆனால் இந்தக்கிராமத்துச் சிறுவர் சிறுமியர் 'ஆடுபுலியாட்டம்' என்றே அழைக்கின்றனர். முதலில் வட்டமாக இருப்பார்கள் பாடலைப் பாட, மிகுதிப் பாடலை புலிப் பாடும். புலி பாடும் பாடல் எப்போதும் வட்டமாக இருப்பவர்களைப் பார்த்துக் கேள்வி கேட்பது போல் அமைந்திருக்கும். இப்பாடல் தமது சூழ்நிலைக்கு ஏற்ப பாடப்பட்டதாகும்.

| | |
|---|---|
| புலி: | **சங்கிலி புங்கிலி கதவத்திற** |
| வட்டமாக இருப்பவர்கள்: | **ஏ மாட்டம் வேங்கப் புலி** |
| புலி: | **பசுமாட்டக் கண்டீங்களா?** |
| வட்டமாக இருப்பவர்கள்: | **கண்டோம்… கண்டோம்** |
| புலி: | **எத்தன வோத்தல் பால் கறக்கும்?** |
| வட்டமாக இருப்பவர்கள்: | **பத்து வோத்தல்… பத்து வோத்தல்** |
| புலி: | **புது வேலியா? பழய வேலியா?** |
| வட்டமாக இருப்பவர்கள்: | **புது வேலி…… புது வேலி** |
| புலி: | **உடையுமா? உடையாதா?** |
| வட்டமாக இருப்பவர்கள்: | **உடையும்…..உடையும்** |

என்று கேட்டுக் கொண்டு வட்டமாக கையைப்பிடித்துக் கொண்டு நிற்பவர்களின் கையைப் பிரித்துக் கொண்டு புலி உள்ளே பாய, பசுமாடு வெளியே பாய்ந்தோடும். பிடிபட்டால் வட்டமாக நிற்பவர்களில் (வேலியாக நிற்பவர்கள்) ஒருவர் புலியாகவும் இன்னுமொருவர் பசுமாடாகவும் மாற விளையாட்டுத் தொடர்ந்து நடைபெறும்.

### 'கிட்டிப்புள்' விளையாட்டு

மன்னம்பிட்டிக் கிராமத்தைப் பொறுத்தவரையில் இரண்டாம் மூன்றாம் தலைமுறையினரும் நான்காம் தலைமுறையில் ஒரு பகுதியினரும் இந்த விளையாட்டை எந்தவிதமான வேறுபாடுகளுமின்றிப் பாடிவிளையாடியிருக்கின்றார்கள். ஆனால், ஐந்தாவது தலைமுறையினரில் சிலர் இந்த விளையாட்டை விளையாடினாலும் அதற்கு அவர்களுடைய முன்னோர்கள் பாடிய

அருமையான பாடல்கள் அவர்களுக்குத் தெரியாது. இவ்வாறு இந்த விளையாட்டு இன்று தாய்க்கிராமத்திலேயே தேடுவாரற்றுப் போய்விட்டது.

சொறிவில் கிராமத்தைப் பொறுத்தவரையில், மன்னம்பிட்டிக் கிராமத்தில் இல்லாத புதிய பாடல்கள் பலவற்றை இவ்விளையாட்டின் போது பாடுவதைக் காணலாம். இங்கும் இரண்டாம் மூன்றாம் நான்காம் தலைமுறையினர் இவ்விளையாட்டைச் சிறந்த முறையில் விளையாடிப் பாடிய பாடல்களே இவையாகும். ஐந்தாம் தலைமுறையினர் இவ்விளையாட்டை கேள்விப்பட்டிருக்கிறார்கள். ஆனால், இப்போது இங்கு இவ்விளையாட்டை விளையாடுவது மிக மிக அரிகிக்கொண்டு வருகின்றதெனலாம்.

**"பதக்கட மண்ணாங் கட்டி**
**பாண்டியன் சின்னத்தம்பி**
**பாடட்டோ... பாடட்டோ... பாடட்டோ.... பாடட்டோ...."**

**"ஆலஞ் சருகு மடமடக்க**
**பண்டி நின்று ஊரழிக்க**
**பாலாறு... பாலாறு... பாலாறு... பாலாறு....."**

**" ஆகு மாம்பட்டை**
**தவால் ஓடிய தென்னம் பட்டை**
**பூமாதேவி... பட்டனோம்... பட்டனோம் ... பட்டனோம்...."**

**"ஈச்சி ஈச்சி தென்னம் மட்ட**
**இலைய முறிச்சிக் கட்டு**
**காசிக்கு ரெண்டு கட்டு**
**கவலக் கிழங்கிடோ... கவலக்கிழங்கிடோ...**
**கவலக்கிழங்கிடோ... ஓ... ஓ... ஓ..."**

**" புறாப் பறக்க**
**முட்டத் தெறிக்க**
**பட்டணோம்... பட்டணோம்... பட்டணோம்..."**

**" சின்னுக்கு ரெண்டடி**
**சோளம் புட்டடி**
**சொக்குட்டன்... சொக்குட்டன்... சொக்குட்டன்....."**

**" ஈக்கில தும்பில**
**பாக்குப் புறக்கிய**
**பதினா ரோல**
**விளினங்கிட்டி**
**பாடட்டோ... பாடட்டோ... பாடட்டோ......"**

கறப்பளை, முத்துக்கல் கிராமங்களில் தனித்துவமான கிட்டிப்புள் பாடல்கள் கிடைத்திருக்கின்ற போதிலும் மன்னம்பிட்டிப் பாடல்களும் இங்கே பாடப்படுவதைக் காணக்கூடியதாக இருக்கும் அதே வேளை ஐந்தாவது தலைமுறையினர் இன்றும் இக்கிராமங்களில் இவ்விளையாட்டை விளையாடிப் பாடுவதையும் காணலாம். எடுத்துக்காட்டாக கறப்பளைக் கிரமத்துப் பாடல்.

**“ கொக்குப் பறக்க**
**முட்டத் தெறிக்க**
**முட்டைக்கு காசு**
**கட்டியடி… கட்டியடி… கட்டியடி…”**

**“ ஈ·ச்சில தும்பில**
**பாக்குப் புறக்கிய**
**பதினாறு ஓல**
**முதிரங் கிட்டி**
**வேட்ட வாலி… பட்டணோம்… பட்டணோம்…”**

முத்துக்கல் கிராமத்துப் பாடல்

**“ கௌவடிக்க டிக்க டிக்க**
**காலுக்கு ரெண்டடிக்க**
**கோயிலுக்கு மணியடிக்க**
**சொக்குட்டான்… சொக்குட்டான்… சொக்குட்டான்….”**

**“ மாம் பட்ட மரப்பட்ட**
**வௌவால் ஓடிய தென்னம் பட்ட**
**பூம்பட்ட … புளியம் பட்ட**
**வேட்டவாலி… பட்டணோம்… பட்டணோம்…..”**

ஆனால் குடாப்பொக்குன சொறிவில், கறப்பளை, முத்துக்கல் போன்ற இடங்களில் இருந்தெல்லாம் போன மக்கள் ஒன்று கூடி இருக்கும் ஒரு குடியேற்றமாகும். இதனால் இந்த ஊர் கிட்டிப் புள்ளுப் பாடல் எல்லா ஊர்ப் பாடலும் சேர்ந்த ஒரு சேர்க்கையாகக் காணப்படுகிறது. மேலும் இங்குள்ளவர்களின் விளையாட்டு சிங்கள முறையிலும் பாடல் தமிழ் முறையிலும் இடம் பெறுவதையும் காணக்கூடியதாக உள்ளது. எடுத்துக்காட்டாக இங்கே கிடைத்த பாடல் ஒன்று.

**“ ஈ·ச்சல ஈ·ச்சல**
**தம்பல தம்பல**
**பாத்துப் புறக்கும்**
**பதினாறோல**
**மூங்கில் ஓல**
**முதிரம் பட்ட**
**வெங்காயோம்… வெங்காயோம்**
**வெட்டிப் பார்த்தாச் சாராயோம்**
**குடிச்சுப் பாத்தா வேப்பெண்ண… வேப்பெண்ண…. வேப்பெண்ண….”**

‘ஒரு பானைச்சோற்றுக்கு ஒரு சோறு பதமாகும்’ என்பது எமது முதுமொழி. இதற்கேற்ப மேலே காட்டிய முப்பத்தினான்கு சிறுவர் விளையாட்டுக்களில் ஐந்தினை எடுத்து தாய்கிராமமான மன்னம்பிட்டியில் அன்று இருந்த இவ்விளையாட்டு, இன்று பயில்நிலையில் இல்லாமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாடப்பட ஏனைய கிராமங்களில் பல மாறுதல்களுடன் இன்றும் இவ்விளையாட்டுக்கள் விளையாடப்பட்டாலும் இவை போதிய அளவிற்குப் பேணப் படவில்லை என்பதை நாம் இவ்விடத்தில் மனங்கொள்ள வேண்டும்.

## இன்றைய நிலை

ஓடுதல், தாவிப்பாய்தல், குதித்தல், தாண்டுதல், சொற்பயிற்சி, நாப்பயிற்சி, கணக்குப் போன்ற பயிற்சிகளை வளர்ப்பவையாகவும், ஐம்புலன்களுக்கும் ஒருசேர இன்பமூட்டுவனவாகவும் அமைந்திருக்கும் இவ்விளையாட்டுக்களை இன்று விளையாடுவது மிகக்குறைந்து வருவதுடன் பல சிறுவர்களுக்கு எமது பழைய விளையாட்டுக்கள் பலவற்றைப்பற்றியும் அவற்றின் உள்ளடக்கம், திறன் பற்றியம் தெரியாமல் இருப்பதுடன் எமது முதியவர்களும் தமக்குத் தெரிந்த விளையாட்டுக்களை சிறுவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கு முன்வராததனாலும் இந்த விளையாட்டுக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக விளையாடப்பட்டு மறக்கப்படும் நிலைக்கு வந்துவிட்டன. இச்சிறார்கள் தற்போது தமது பொழுதுபோக்காக கிறிக்கட் அடித்தலையும், தொலைக்காட்சியில் கார்ட்டூன் பார்த்தல் அல்லது படங்களைப் பார்த்தல் என்று தமது பொழுதைக் கழிக்கின்றார்கள்.

## பேறுகை

மேற்குறிப்பிட்ட நிலை தொடருமாகவிருந்தால் பொலநறுவை மாவட்டச் சிறுவர் விளையாட்டுப் பாடல்கள் எல்லாம் மறக்கப்பட்டோ அல்லது அழிந்தோ போய்விடும். இதனைக்காப்பாற்ற நாட்டுப்புற ஆய்வாளர்கள் முன்வந்து கள ஆய்வின் மூலம் அனைத்து கிராமங்களுக்கும் சென்று அவற்றைச் சரியாகத் தொகுக்கவேண்டும். பின்னர் அவற்றைப் பகுப்பாய்வு செய்து சிறு சிறு நூல்களாகவோ அல்லது இறுவட்டுக்களில் ஒளிப்படங்களாகவோ பதிவு செய்து இப்பகுதிப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர்கள், சிறார்கள் மற்றும் பெரியவர்களுக்கும் இவற்றை விநியோகிக்கலாம்.

மேலும் தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளாகவோ அல்லது தெருக்கூத்தாக ஆடியோ, நாடகமாக நடித்தோ இவற்றை இன்றைய சிறார்களின் மனதில் பதியும் வண்ணம் இவை பற்றிய பயிற்சிகள், போட்டிகள், விளக்கங்கள் போன்றவற்றைக் கொடுத்து இவற்றை அழிந்து போகாமல் பாதுகாக்க முடியும்.

# தமிழில் நூலடைவுகள் : அறிதலும் ஆவணப்படுத்தலும்

இரா. தமிழ்ச்செல்வன்

உலக மொழிகளிலுள்ள தொன்மை வாய்ந்த மொழிகளுள் முக்கியமான மொழியாக உள்ள தமிழில் கவிதைகள், புனைக்கதைகள், கட்டுரைகள், பயண நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், புலம்பெயர்வு நூல்கள், அகராதிகள் எனப் பல இலக்கிய வகைகளிலும் ஆண்டுதோறும் ஏராளமான இலக்கிய ஆக்கங்கள் வெளியாகின்றன. தமிழ்மொழி சார்ந்த இலக்கிய ஆய்வுகளும் பெருகியுள்ளன. அறிவியல், மருத்துவம், சோதிடம், பொறியியல் போன்ற பல்துறைசார் நூல்களும் தமிழில் வெளிவருகின்றன. பல்கிப் பெருகியுள்ள இலக்கிய ஆக்கங்களை, இலக்கிய ஆய்வுகளை, பயன்பாட்டுத் துறைசார் நூல்களை வகை தொகைப்படுத்துதல் என்பது முக்கியமான ஒன்றாகும். இதற்காக நூலடைவுகளை உருவாக்க வேண்டியது அவசியமான ஒன்றாகும். மேலும் நூலடைவுகளைக் கணினித் தொழில்நுட்ப உதவியுடன் எண்ணிம (Digital) முறையிலும் ஆவணப்படுத்த வேண்டும். இம்முறையே வாசகப் பயன்பாட்டிற்கு எளிமையாக இருக்கும். மேலும் ஆய்வுத் தேடலின் போது விரைவாகப் பணி முடிப்பதற்கும் பெரிதும் உதவியாக இருக்கும். அந்த வகையில் இக்கட்டுரை தமிழில் எழுந்த நூலடைவு முயற்சிகளையும், இன்றைய சூழலில் நூலடைவின் தேவையினையும், ஆவணப்படுத்துதலின் அவசியத்தையும் மையப்படுத்தி அமைகிறது.

## நூலடைவு – விளக்கம்

தமிழின் முதல் இலக்கண நூலாகக் கருதப்பெறும் தொல்காப்பியத்தில் நூல், தொகை ஆகிய இரண்டு சொற்களும் இடம்பெற்றுள்ளன.

“மரபு நிலை திரியா மாட்சிய ஆகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியும் என நுதலிய நெறியன” (தொல்காப்பியம் :1593)

மேற்கண்ட நூற்பாவின் மூலம் நூல் என்ற சொல்லாட்சி தொல்காப்பியர் காலத்திலேயே வழக்கிலிருந்துள்ளது என அறிய முடிகிறது. இந்நூற்பா மரபிலிருந்து திரியாத சிறப்போடு கூடிய முதல் நூல், வழி நூல் என்ற இரண்டு நூல்வகைகளைக் குறிப்பிடுகிறது. இதனைத் தொடர்ந்த,

“தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே” (தொல்காப்பியம் : 1597)

என்ற நூற்பா நூலில் உள்ளவற்றைத் தொகுத்து நூலாக்கல், விரித்து நூலாக்கல், தொகுத்தும் விரித்தும் நூலாக்கல், மொழிபெயர்த்தல் ஆகியனபற்றிக் குறிப்பிடுகிறது. மேற்கண்ட இவ்விரு

நூற்பாக்களின் மூலம் நூல், தொகை ஆகிய சொற்கள் தொல்காப்பியர் காலத்தில் புழக்கத்தில் இருந்துள்ளன என அறியலாம்.

நூல், தொகை என்ற இரு சொற்களின் இணைவில் உருவானதே 'நூற்றொகை' என்ற சொல்லாகும். முதலில் நூற்றொகை என்ற சொல்லாட்சியை மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை 1888 ஆம் ஆண்டு நூற்றொகை விளக்கம் என்ற தனது நூலின் தலைப்பில் கையாண்டுள்ளார். இதன் தொடர்ச்சியாக நூற்றொகை என்ற சொல்லாட்சி 1888 ஆம் ஆண்டிற்குப் பின் தொடர்ந்து வந்த தொகுப்பு நூல்களில் பயன்படுத்தப்பெற்றது. கிரேக்க மொழியின் அடிச்சொற்களான 'பிப்ளியன்', 'கிராபின்' என்பனவற்றிலிருந்து ஆங்கிலத்தில் உருவானதே 'பிப்ளியோகிரபி' (Bibliography) என்ற சொல்லாகும். நூற்றொகை என்ற சொல் ஆங்கிலத்தில் 'பிப்ளியோகிரபி' என்ற சொல்லின் பொருண்மையை ஒத்தாற் போல் தமிழில் உருவாக்கப் பெற்றதாகும். நூலைப் பற்றி எழுதுதல் என்ற பொருண்மை கொண்ட இச்சொல் 17 ஆம் நூற்றாண்டில் லூயி ஜேக்கப் என்பவரால் கையாளப்பெற்றதாக அன்னி தாமசு தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

நூற்றொகை என்ற சொல்லாட்சியே தற்போது நூலடைவு என்று வழங்கப்பெறுகிறது. நூலை அடைவு செய்தலைப் பல்வேறு பெயர்களில் தமிழில் குறிப்பிட்டாலும் இன்று நூலடைவு என்ற சொல்லாட்சியே நிலைத்துள்ளது. அதன் அடிப்படையில் நூலடைவு என்ற சொல்லே இக்கட்டுரையில் பயன்படுத்தப்பெற்றுள்ளது.

## தமிழின் தொடக்கக் காலத் தொகை நூல்கள்

நூலடைவுகள் பயன்பாட்டு அடிப்படையில் புத்தக வடிவில் 19 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப் பெற்றாலும் தமிழில் நூல்களை உருவாக்குவதும் அதனைத் தொகுப்பதும் மிகப்பழமையான ஒன்றாக இருந்துள்ளதைத் தொல்காப்பியத்திலிருந்தே அறியலாம். நூல்களை உருவாக்குவதும், அதனை ஓர் இலக்கியக் கூறுகளாகத் தொகுத்து வகைப்படுத்துவதும் தமிழின் தொன்மையான மரபு என்பதற்குச் செவ்வியல் இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று வகைப்படுத்தப் பெற்றுள்ள தொகை இலக்கியங்கள் முக்கியமான சான்றுகளாகும்.

வாய்மொழி, நாட்டுப்புறப் பாடல்களின் தொகுப்பே சங்க இலக்கியங்கள் என்று கூறுவர். அவ்வாறு தொகுக்கப்பெற்ற வாய்மொழி இலக்கியங்களைப் பகுத்துத் தொகை நூல்களாக உருவாக்கினார்கள். நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல்களாக வகுக்கப்பெற்றுள்ளன.

திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப் படை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, பட்டினப்பாலை, மலைபடுகடாம் அல்லது கூத்தராற்றுப்படை என்பனவற்றைப் பத்துப்பாட்டு நூல்களாக வகுத்தனர். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்கள் இரண்டினையும் இணைத்துப் பதினென் மேல்கணக்கு நூல்கள் என்று அழைத்தனர். அதேபோன்று நாலடியார், நாண்மணிக்கடிகை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை,

பழமொழி நானூறு, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைநிலை முதலான பதினெட்டு நூல்களைப் பதினென் கீழ்க்கணக்கு நூல்களாக அழைத்தனர். இவற்றின் மூலம் நூல்களைத் தொகுத்து வகைப்படுத்தும் மரபு சங்க காலத்திலிருந்தே தமிழில் வழக்கத்திலிருந்துள்ளதை அறியமுடிகிறது.

## தமிழில் நூலடைவுகள்

தமிழ்க் கையெழுத்துப் பிரதிகளுக்கு முக்கியத்துவமளித்து 'சீகன்பால்கு' உருவாக்கிய பட்டியலே தமிழின் முதல் நூற்றொகை (1709) என்று அ. தாமோதரன் அவர்களால் குறிக்கப் பெற்றுள்ளது (அன்னி தாமசு 1996 : 159). சைமன் காசிச் செட்டியாரின் தமிழ் மொழி நூற்பட்டியல் (1849), கே.கிராலின் தொகை (1853), ஜான் மர்டாக்கின் தமிழ் அச்சு நூல் பட்டியல் பற்றிய பட்டியல் (1865), ஜி. யு. போப், எல். டி பர்னெட் தொகுத்த பிரிட்டிஷ் கருவூலத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் நூல்கள் பற்றிய அட்டவணை (1909) போன்றன நூலடைவு வகையில் அமைந்த தொடக்கக் கால நூல்களாகும்.

சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகத் தமிழ்ச்சுவடிகள் அட்டவணை (1912), தமிழ் இலக்கிய அகராதி (1952), சாமிநாத ஐயர் நூல்நிலையச் சுவடிகளின் விளக்கம் (1962), சரசுவதி மகால் தமிழ் அச்சுப் புத்தக அகர வரிசைப் பட்டியல் (1964), தமிழ்நாட்டு குழந்தை நூற்றொகை (1965), தமிழ் நூல் விவர அட்டவணை (1961-1972), சிலப்பதிகார ஆய்வடங்கல் (1973), டாக்டர் மு.வ ஆய்வடங்கல் (1974), அ. தாமோதரன் அவர்களின் தமிழ் அகராதிகள் பற்றிய நூற்றொகை (1978), இந்திய தேசிய நூல் விவரப்பட்டியல் (1981), பாரதியார் நூற்பெயர் கோவை (1982), ச.சிவகாமி அவர்கள் தொகுத்த மொழிபெயர்ப்பு நூற்றொகை (1983), தமிழ் வாழ்க்கை வரலாற்று இலக்கியம் (1985) எனப் பல்வேறு வகைமாதிரி நூலடைவுப் பிரதிகளும் தமிழில் எழுந்துள்ளன.

நூலடைவுகளை உருவாக்குவதில் 1990 ஆம் ஆண்டு காலகட்டத்திற்குப் பின்னர் பெரும் முயற்சிகள் ஏதும் மேற்கொள்ளப் பெறவில்லை எனலாம். அங்கொன்றும், இங்கொன்றுமாய்ச் சிறு சிறு முயற்சிகள் நடந்தேறின. இலக்கண ஆய்வடங்கல் தொகுதி - 1 (1992), இலக்கண ஆய்வடங்கல் தொகுதி - 2 (1999), தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் (2001), தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம் (2004), கிறித்துவத் தமிழ்க் களஞ்சியம் (2009) எனச் சிறிய அளவில் நடந்தேறிய சில நூலடைவு முயற்சிகள் தவிர்த்துக் குறிப்பிடும்படியான நூலடைவு முயற்சிகள் ஏதும் தமிழில் நடைபெறவில்லை. குறிப்பாக ஆண்டுதோறும் தமிழில் வெளிவருகிற நூல்களுக்கான அடைவுகள் ஏதும் உருவாக்கப்படவில்லை.

நூலடைவுகளின் வழி அறியலாகும் செய்திகள்

ஜான் மர்டாக்கின் தமிழ் அச்சு நூல் பட்டியல் பற்றிய பட்டியல் (1865)

ஜான் மர்டாக் (John Murdoch) 1865 ஆம் ஆண்டு வரை அச்சில் வந்துள்ள தமிழ் நூல்களைத் திரட்டி, தமிழ் அச்சு நூல் பட்டியல் (Classified Catalogue of Tamil Printed Books with Introductory Notoces) என்ற நூலினை உருவாக்கினார். தனக்குக் கிடைத்த நூல்களைத் தொகுத்து அந்நூல்களைப் பற்றியச் சிறு குறிப்புரையையும் தந்துள்ளார். நூலடைவின் வகைமாதிரியில்

அமையப்பெற்ற இந்நூலில் மதம் சார்ந்த நூல்கள் - 1218, தத்துவம் - 50, அறிவியல் - 62, கலை - 6, இலக்கியம் - 152, மொழியியல் - 176, நிலவியல், வரலாறு - 12, பருவ இதழ்கள், பத்திரிகைகள் - 26 என மொத்தம் 1721 பதிவுகள் இடம் பெற்றுள்ளன. முன்னுரையில் ஆசிரியர் திரட்டியதாகக் குறிப்பிட்டுள்ள ஐரோப்பியர்களுக்கான தமிழ்ப் புத்தகங்கள் - 34 நூலின் உள்ளே இடம் பெறவில்லை. இத்தொகுப்பு நூலின் மூலம் 19 ஆம் நூற்றாண்டின் இடைக்காலம் வரை தமிழில் வெளிவந்த அச்சு நூல்கள், அக்காலத் தமிழ் இலக்கியப் போக்கு, வளர்ச்சி, வகை ஆகியவனவற்றை அறிந்து கொள்ளலாம். இத்தொகுப்பின் மூலம் மதம் தொடர்பான நூல்களே அதிகமாக வெளிவந்துள்ளதை அறிய முடிகிறது. இதன் மூலம் அச்சு நூல்கள் உருவான தொடக்கக்கால இலக்கியப் பரப்பைச் சமய நூல்களே அதிகமாக ஆக்கிரமித்திருந்தன என்பதனை அறிந்து கொள்ள முடிகிறது.

பிரிட்டிஷ் கருவூலத்தில் இடம் பெற்றுள்ள தமிழ் நூல்களை அட்டவணைப்படுத்திய ஜி.யு.போப், எல்.டி பர்னெட் ஆகியோர் பிரிட்டிஷ் கருவூலக நூலகத்தின் தமிழ் நூல் அட்டவணை (A Catalogue of the Tamil Books in the library of the British Museum) என்ற பெயரில் 1909 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டனர். இந்நூல் தமிழின் தொன்மையான நூல்களை அறிந்து கொள்ள பேருதவியாக அமைகிறது. நூலின் பெயர், ஆசிரியர் பெயர், வெளியான ஆண்டு, பதிப்பித்த இடம், பக்கங்கள், நூலகக் குறிப்பு எண் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இவ்வட்டவணை அமைந்துள்ளது.

## சிலப்பதிகார ஆய்வடங்கல் (1973)

இரா.காசிராசன் என்பவர் சிலப்பதிகாரம் குறித்து வெளிவந்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் (1973 ஆம் ஆண்டு வரை) ஆகியவற்றைத் தொகுத்துச் சிலப்பதிகார ஆய்வடங்கல் என்ற தலைப்பில் 1973 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டார். இந்நூல் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பதிப்பாக வெளிவந்தது. சிலப்பதிகாரம் பற்றி வெளிவந்துள்ள 80 நூல்கள், 252 கட்டுரைகள், பிற்சேர்க்கையாக 39 பதிவுகள், ஆங்கிலத்தில் சிலப்பதிகாரம் குறித்து வெளியான 27 பதிவுகள் ஆகியன இவ்வாய்வடங்கலில் இடம் பெற்றுள்ளன. மேலும் ஒவ்வொரு நூலின் ஆசிரியர் பெயர், முதல் பதிப்பு வெளியான ஆண்டு, பதிப்பக முகவரி, நூலின் விலை ஆகியவற்றுடன் நூல் கூறும் செய்தியினையும் சுருக்கமாகத் தந்துள்ளார். சிலப்பதிகார ஆய்வுப்பணியில் ஈடுபடுவோருக்கு இவ்வாய்வடங்கல் பெரிதும் வழிகாட்டியாக இருக்கும்.

## மொழிபெயர்ப்பு நூற்றொகை (1983)

தமிழிலிருந்து பிறமொழிகளுக்கும், பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் இடையே நிகழ்ந்த மொழிபெயர்ப்புப் பரிமாற்றங்கள் குறித்த விவரங்களைத் தொகுத்து ச.சிவகாமி அவர்கள் 1983 ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பு நூலடைவினை வெளியிட்டார். இதன் மூலம் பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்துள்ள நூல்களின் எண்ணிக்கை 4234 என்றும், தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றுள்ள நூல்களின் எண்ணிக்கை 730 என்றும் அறிய முடிகின்றன. இப்பகுப்பின் மூலம் ஆங்கிலத்திலிருந்தே தமிழுக்குப் பெரும்பாலான நூல்கள் வந்துள்ளன என்பதை அறிய முடிகின்றன. பிறமொழிகளிலிருந்து தமிழுக்கு வந்துள்ள 4234 நூல்களில் 1372 நூல்கள் ஆங்கிலம் வழி தமிழுக்கு மொழிபெயர்ப்பாகியுள்ளன. அதற்கு அடுத்த நிலையில் சமஸ்கிருத மொழியிலிருந்து 727 நூல்களும், இரஷ்ய மொழியிலிருந்து 275 நூல்களும் மொழிபெயர்ப்பின் மூலம் தமிழுக்கு

வந்துள்ளன. தமிழிலிருந்து பிறமொழிகளுக்குச் சென்றதிலும் ஆங்கிலமே முதல் இடம் வகிக்கிறது. தமிழ் மொழியிலிருந்து 306 படைப்புகள் ஆங்கிலத்திற்கு மொழிபெயர்ப்பாகியுள்ளன. அடுத்த நிலையில் மலையாளத்திற்கு 101 நூல்களும், தெலுங்கிற்கு 58 நூல்களும் மொழிபெயர்ப்பின் மூலம் சென்றுள்ளன. நூலின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பக முகவரி உள்ளிட்ட பொதுவான தகவலை உள்ளடக்கியதாக இந்நூலடைவினை ஆசிரியர் உருவாக்கியுள்ளார்.

## தமிழ் வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் (1985)

ச.சிவகாமி அவர்கள் தொகுத்தத் தமிழ் வாழ்க்கை வரலாற்றுக் களஞ்சியம் என்ற நூல் அச்சு நூல்களின் தொடக்கத்திலிருந்து 1970 ஆம் ஆண்டு வரை தமிழில் வெளிவந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள், தன் வரலாற்று நூல்கள், மொழிபெயர்ப்பின் வழி தமிழுக்கு வந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள், தன் வரலாற்று நூல்கள் ஆகியனபற்றிக் கூறுகிறது. நூல், ஆசிரியர் பெயர், வெளிவந்த ஆண்டு, பக்கங்கள், பதிப்பகம் பற்றிய விவரங்களுடன் அகர வரிசை அடிப்படையில் இப்பட்டியலை அமைத்துள்ளார் நூலாசிரியர். இந்நூலின் மூலம் தமிழில் வெளிவந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் - 1790, தன் வரலாற்று நூல்கள் - 44, மொழிபெயர்ப்பின் வழி தமிழுக்கு வந்த வாழ்க்கை வரலாற்று நூல்கள் - 261, தன் வரலாற்று நூல்கள் – 35 என அறிய முடிகிறது.

## இலக்கண ஆய்வடங்கல் இரு தொகுதிகள் (1992, 1999)

இலக்கண ஆய்வடங்கல் இரண்டு தொகுதிகளாக முறையே 1992, 1999 ஆம் ஆண்டுகளில் பேராசிரியர் பட்டாபிராமன் அவர்களின் முயற்சியால் வெளிவந்தன. இந்நூல்கள் தொடக்கத்திலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என இலக்கணம் தொடர்பாகத் தமிழில் வெளிவந்துள்ள கட்டுரைகளையும், கட்டுரைத் தலைப்பு, கட்டுரையாளர், கட்டுரை வெளிவந்த நூல், இதழ், வெளிவந்த ஆண்டு, கட்டுரை இடம் பெற்றுள்ள பக்கம் ஆகியக் குறிப்புகளுடன் அட்டவணைப்படுத்தியுள்ளன. கட்டுரையின் பொருள் பற்றிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் இடம் பெற்றுள்ள குறிப்பு இந்நூல்களின் சிறப்பாகும். இந் நூல்களில் இலக்கணம் தொடர்பாக இடம் பெற்றுள்ள பதிவுகளின் எண்ணிக்கை மொத்தம் 1528 ஆகும் (எழுத்து – 180, சொல் - 811, பொருள் - 309, யாப்பு - 164, அணி – 64).

பேராசிரியர் வெ.பழநியப்பன் அவர்கள் தமிழ்ப் புலவர்கள் (சங்ககாலம் முதல் 1970 ஆம் ஆண்டு வரை) பற்றிய விவரங்களைத் தொகுத்து 2001 ஆம் ஆண்டு தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம் என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். இந்நூலில் 5338 புலவர்கள் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளன. புலவர் பெயர், வாழ்ந்த ஊர், நூல்கள் பற்றிய விவரங்களை உள்ளடக்கியதாக இந்நூலை நூலாசிரியர் அமைத்துள்ளார்.

## தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம் (2004)

உலக மொழிகளிலிருந்து தமிழுக்கு வந்துள்ள நூல்கள் (1990 வரை) குறித்த அடைவு ஒன்றினைத் தொகுத்து 'தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம்' என்ற தலைப்பில் 2004 ஆம் ஆண்டு நூலாக வெளியிட்டுள்ளார் ந.முருகேச பாண்டியன். ஆய்வு நூலாக அமையப்பெற்ற இந்நூலில் மொழிபெயர்ப்புப் படைப்புகளின் மூலமொழிகள், மூலநூலாசிரியர்கள், தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள், பதிப்பு குறித்த தகவல்கள், பதிப்பகங்கள் பற்றிய குறிப்புகள்

ஆகியனவற்றைத் தொகுத்துத் தந்துள்ளார். இவ்வடைவின் மூலம் உலக மொழிகளிலிருந்து தமிழ் மொழிக்கு வந்துள்ள நூல்கள், எந்த இலக்கிய வகையில் அதிகமான நூல்கள் தமிழுக்கு மொழிபெயர்ப்பாகியுள்ளன, மொழிபெயர்ப்பு அரசியல் முதலானவற்றை அறிந்து கொள்ளலாம்.

## திறனாய்வு நூலடைவுகள் (Critical Bibliographies)

நூற் பெயர், ஆசிரியர் பெயர், மொழிபெயர்ப்பு நூலாக இருப்பின் மூலமொழி நூலின் பெயர், மூலமொழி நூலாசிரியர் பெயர், பதிப்பு, பதிப்பகக் குறிப்புகள் ஆகியவற்றுடன் நூலில் இடம் பெற்றுள்ள செய்திகளின் குறிப்புரை (Annotation) ஒன்றையும் இணைத்துத் தருவது திறனாய்வு நூலடைவில் அடங்கும்.

த.ஜெகதீசன், ச.முருகேசன் ஆகியோரின் திறனாய்வு நூலடைவுகள் அடைவு முயற்சிகளில் குறிப்பிடத்தகுந்தவைகளாகும். த.ஜெகதீசன், பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள நூல்களையும் (1983 - 2010), ச.முருகேசன் ஜேர்மன் மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள நூல்களையும் (1983 - 2011) தொகுத்துத் திறனாய்வு நூலடைவு ஆய்வினை மேற்கொண்டனர் (இவை இன்னும் நூல்களாக வெளிவரவில்லை). இவ்விரு நூலடைவுகளின் அடிப்படையில் பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள படைப்புகள் (1983 - 2010) 43 என்றும், ஜெர்மன் மொழியிலிருந்து தமிழுக்கு வந்துள்ள படைப்புகள் (1983 - 2011) 21 என்றும் அறிய முடிகின்றன. இவ்விரண்டும் நூலில் இடம் பெற்றுள்ள செய்திகளின் குறிப்புரையையும் உள்ளடக்கிய வகையில் அமைந்துள்ள திறனாய்வு நூலடைவுகள் என்பதால் நூல் குறித்த கூடுதல் தகவல்களையும் அறிந்து கொள்ளலாம்.

## நூலடைவுப் பணிகளில் தேக்கம்

தமிழ் ஆய்வுத் தளத்தில் நூலடைவுகளை உருவாக்குவதில் 1990 ஆம் ஆண்டிற்குப் பிறகு பெரிதும் தேக்கம் ஏற்பட்டது. சான்றாகத் தமிழிலிருந்து பிறமொழிகளுக்கும், பிறமொழிகளிலிருந்து தமிழுக்கும் இடையே நிகழ்ந்த மொழிபெயர்ப்புப் பரிமாற்றங்கள் குறித்த விவரங்களைத் தொகுத்து ச.சிவகாமி அவர்கள் 1983 ஆம் ஆண்டு மொழிபெயர்ப்பு நூலடைவினை வெளியிட்டுள்ளார். அதற்குப் பிறகு மொழிபெயர்ப்பு நூல்கள் குறித்த நூலடைவு முழுமையான அளவில் உருவாக்கப்பெறவில்லை. மொழிபெயர்ப்புத் துறையில் மட்டுமின்றி வேறு எந்தத் துறையிலும் குறிப்பிடும்படியான நூலடைவுகள் உருவாகவில்லை. இலக்கியத் தளத்தில் ஆண்டு தோறும் வெளிவருகிற நூல்கள் குறித்த விவரங்கள் அடங்கிய தொகுப்பு நூல்களும் தமிழில் உருவாக்கப்படவில்லை.

ஐரோப்பியர்களின் கல்வி முறையினால் சமூகத்தில் உருவான மாற்றமும், அச்சு ஊடக வருகையும் நூல்கள் உருவாக்கத்திற்கு அடிகோலின. இலக்கியம், தத்துவம், வரலாறு, மருத்துவம், பொறியியல், சட்டம் எனப் பல்வேறு துறைசார்ந்தும் நூல்கள் உருவாயின. பொதுவாகத் தமிழ்ச் சூழலில் இலக்கியம், தத்துவம் முதலான துறைகளில் அதிக அளவில் நூல்கள் எழுந்தன.

நூல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் அதனை முறைப்படுத்துவது அவசியமான ஒன்றாகும். அதற்கான வழிமுறைகளில் ஒன்றுதான் நூலடைவு என்பதாகும். நூல்கள் அதிகளவு

உருவானதன் பின்னணியில் நூல்களை வகைப்படுத்துதல் முக்கியத்துவமானது. நூலடைவு முயற்சிகள் ஆய்வுத் தளத்திலும் மிகவும் பயனுள்ளதாக அமையும். எளிமை, விரைவாகக் கண்டறிதல் என்ற பயன்பாட்டின் அடிப்படையில் நூல்களை வகைப்படுத்துதல் முக்கியமாகும்.

## இலக்கிய ஆக்கங்களை ஆவணப்படுத்தல்

ஆண்டிற்கு ஒரு முறை தமிழில் வெளிவரும் இலக்கிய ஆக்கங்களைப் பொருண்மை (subject), உள்ளீடு (Content) அடிப்படையில் வகைப்படுத்தி நூலடைவு செய்து நூலாக வெளியிட வேண்டும். எண்ணிம முறையிலும் ஆவணப்படுத்த வேண்டும். நூலின் பெயர், ஆசிரியர் பெயர், பதிப்பக முகவரி, பதிப்பித்த ஆண்டு பற்றிய குறிப்பு ஆகியவனவற்றைத் தொகுத்து அகர வரிசையில் நூலடைவினை உருவாக்க வேண்டும். எண்ணிம முறையிலான நூலடைவுப்பதிவு பயன்பாட்டு அடிப்படையில் உலகம் முழுமைக்கும் மிகவும் உதவியாக அமையும். ஆய்வுப் பரப்பில் மொழிபெயர்ப்பு, இலக்கணம், அறிவியல், இலக்கிய வகைமை எனத் துறை சார்ந்து திறனாய்வு நூலடைவினை உருவாக்க வேண்டும்.

இலக்கிய ஆக்கங்களை ஆண்டிற்கு ஒரு முறை அடைவு செய்வதன் மூலம் ஓர் ஆண்டின் முழுமையான இலக்கிய ஆக்கங்களின் நூலடைவினை உருவாக்கலாம். அந்த நூலடைவின் அடிப்படையில் எந்தத் துறையில் அதிகமான இலக்கிய ஆக்கங்கள் உருவாகின்றன என்பதையும், எந்தத் துறையில் குறைவாக ஆக்கங்கள் உருவாகின்றன என்பதையும் கண்டறிய இயலும். இதன் மூலம் சமூகப் போக்கினை அறிந்து அதற்கேற்ப நூல்களை உருவாக்க இயலும். மேலும் கவனம் பெறாத இலக்கிய வகைமைகளில் ஆக்கங்களைக் கொண்டுவருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

இன்றைய தமிழ்ச் சூழலில் வெளிவருகிற இலக்கிய ஆக்கங்களில் குழந்தை இலக்கியம் சார்ந்த நூல்கள் அதிகம் வெளிவருவதில்லை. குழந்தை இலக்கியம் எங்கு வளர்ந்துள்ளதோ அங்கு தான் மிகச் சிறந்த சமுதாயம் உருவாகும் என்பர். குழந்தை இலக்கிய நூல்கள் அதிகளவில் மேற்கத்திய நாடுகளில் வெளிவருகிற நிலையில் தமிழ்ச் சூழலில் அதிகம் கவனம் பெறாமல் உள்ளது. மொழிபெயர்ப்பிலும் குழந்தை இலக்கிய நூல்கள் அதிகம் பெயர்க்கப்படுவதில்லை. சமூகத்திற்குத் தேவையான ஆக்கங்களைக் கொணர நூலடைவுகள் ஆற்றுப்படுத்தும் என்பதில் ஐயமில்லை. ஆதலால் சமூகப் பயன்பாட்டில் முக்கியப் பங்கு வகிக்கும் நூல்கள் பற்றிய அடைவுகளை உருவாக்குதலும் ஆவணப்படுத்துதலும் மிகவும் அவசியமான ஒன்றாகும்.

இலக்கியம், இலக்கணம் என்பதனுள் மட்டும் அடங்கியுள்ள தமிழ்க் கல்விப் பரப்பைப் பிற மொழி இலக்கியங்களுடன் ஒப்பீடு செய்தல், மொழிபெயர்ப்பு என அடுத்த நிலைக்குக் கொண்டு செல்லவும், இலக்கிய மொழி என்ற ஒருமுக வளர்ச்சியிலிருந்து அறிவியல், வணிகம், சட்டம் முதலான துறைகளிலும் தமிழைக் கொண்டு செல்லும் பன்முக வளர்ச்சிக்குத் தமிழை மாற்றுவதும் இன்று முக்கியமான ஒன்றாகும். சமூகத்தில் இதற்கான தேவைகளை முன்னிறுத்தும் வகையில் இலக்கிய ஆக்கங்களை உருவாக்குவதும், மொழிபெயர்ப்பின் மூலம் தேவையான நூல்களைக் கொண்டு வருவதும் அவசியமாக உள்ளது. தமிழ்ப் பதிப்பகத் துறை இதற்கான விடயப் பரப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தம்மைத் தாமே சுயபரிசோதனை செய்து கொள்ள

வேண்டும். அவ்வாறான சுயத்தினை அறிந்து கொள்ள நூலடைவுகளின் ஆவணப்பதிவே உதவியாக இருக்கும்.

## நூலகத்திலிருக்கும் நூல்களை ஆவணப்படுத்தல்

நூல்களைச் சேகரித்து வைக்கும் பழக்கம் தமிழகத்தில் மன்னராட்சி காலங்களிலேயே இருந்து வந்துள்ளது. நூல்கள் பண்டைய காலத்தில் அரண்மனைகள், மடங்கள், கோயில்கள் முதலான இடங்களில் பாதுகாக்கப்பெற்றன. அரண்மனையில் பாதுகாக்கப்பெற்ற நூலகமே தமிழ்நாட்டில் உள்ள தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகமாகும். பிற்காலச் சோழர் காலத்தில் ஓலைச் சுவடிகளைச் சேகரித்து வைக்கும் இடத்தினைச் சரஸ்வதி பண்டாரம் என்று அழைத்துள்ளனர். பண்டாரம் என்ற சொல் கருவூலம் என்ற சொல்லிற்கு இணையாகப் பயன்படுத்தப்பெற்ற சொல்லாகும். கல்வி சார் மதிப்புமிகு ஓலைச் சுவடிகளைப் பாதுகாக்கும் இடமாதலால் அதனைச் சரஸ்வதி பண்டாரம் என்று பெயரிட்டு அழைத்துள்ளனர். இவ்வாறாகப் பல்வேறு இடங்களில் பாதுகாக்கப்பெற்ற நூ ல்களை நூலகம் என்ற ஓர் குடையின் கீழ் பாதுகாக்கலாயினர். இங்கிலாந்தில் கி.பி.1850 ஆம் ஆண்டு இயற்றப்பெற்ற பொதுநூலகச் சட்டத்தினால் நூலக இயக்கம் இங்கிலாந்தில் உருவானது. அதனைத் தொடர்ந்து அமெரிக்காவிலும் இக்கால கட்டத்திலேயே நூலக இயக்கம் உருவானது. நூலக இயக்கத்தின் தொடர்ச்சியாக 19 ஆம் நூற்றாண்டில் இவ்விரு நாடுகளும் நூலகருக்கான பயிற்சிகளையும் அளிக்கத் தொடங்கினர். நூலகம், நூலகருக்கான பயிற்சி முதலான செயல்முறைகள் நூலகத்தின் வளர்ச்சிக்கு வழிவகுத்தன. நூல்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் உருவாயின. நூலகத்திலிருக்கும் நூல்களை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தும் முயற்சிகளும் இன்று அதிகரித்து வருகின்றன.

நூலகத்தில் இடம் பெற்றுள்ள நூல்களை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தும் முயற்சிகள் ஒரளவு முறைப்படுத்தப்பட்டு வருவது ஆறுதலான விடயமாக உள்ளது. இருப்பினும் அதனை உலகம் முழுவதும் உள்ளோர் எளிமையாகப் பயன்படுத்தும் அடிப்படையில் உருவாக்க வேண்டும்.

## மின் நூல்கள் (E-books)

அச்சு ஊடகங்கள் வருகையினால் நூலாக்கங்கள் பெருகினாற் போல கணினி சார் மின் ஊடகங்களால் இன்று மின் நூல்களும் பெருகியுள்ளன. அமேசான் (Amazon) என்ற புத்தக நிறுவனம் இணையம் வழி அதிகமான மின் நூல்களை விற்பனை செய்து வருகிறது. கிண்டில் (Kindle) என்ற மென்பொருளின் மூலம் தெளிவான வடிவமைப்புடன் மின் நூல்களை அமேசான் விற்பனை செய்து வருகிறது. இதே போன்று தமிழில் கிழக்குப் பதிப்பகம் தமிழ் இலக்கிய ஆக்கங்களை மின் நூல்களாக உருமாற்றி தனது என்.ஹச்.எம் மின் - வாசிப்பு (NHM E-Reader) என்ற மென்பொருளின் மூலம் விற்பனையில் இறங்கியுள்ளது. தமிழ் ஆர்வலர்களும் தொன்மையான இலக்கிய உருவாக்கங்களை மின் வடிவில் நூல்களாக உருமாற்றி இணையம் வழி வெளியிட்டு வருகின்றனர். கட்டணமில்லா வகையில் இம்மின் நூல்களைத் தமிழ் ஆர்வலர்கள் உருவாக்கியிருப்பது சிறப்பாகும். சான்றாகத் தமிழ்ப் பண்பாட்டு நிறுவனம் (Tamil Heritage Fountation) ஏறக்குறைய 300 பண்டைய நூல்களை மின் நூல்களாக மாற்றி இணையத்தில் பதிவு செய்திருக்கிறார்கள். அவற்றினுள் மனையடி சாஸ்திரம் (1871), புதின வகையைச் சார்ந்த

ஆதியூர் அவதானி சரிதம் (1875), தந்தை பெரியாரின் குடி அரசு தொகுதிகள் ஆகியன அடங்கும். ஆயிரமாயிரம் அச்சுப் பிரதிகளைத் தேக்கி வைத்திருக்கும் நிலை, அச்சு நூல்களைப் பாதுகாக்க வேண்டுமே என்ற வாசகர்களின் அச்சம், கனத்த நூல்களை எடுத்துச்செல்ல இயலா நிலை முதலிய கூறுகளால் மின்நூல்கள் நாளைய நூலாக்கத் துறையில் முக்கியப் பங்கு வகிக்கக் கூடும். மின் நூல்களின் அதிகரிப்பு நூல்களை அடைவு செய்து ஆவணப்படுத்தும் வழிமுறையை எளிதாக்கும். இம்முயற்சிகள் பரவலாக இன்னும் பல ஆண்டுகள் ஆகும். தற்போது பரவலாகக் காணப்பெறுகிற அச்சு ஊடக நூலாக்கச் சூழலில் நூலடைவு முயற்சிகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

ஆய்வுப்பரப்பில்எளிமைக்கும், விரைவிற்கும் வித்திடுகிற நூலடைவுகள் சமூகப் பயன்பாட்டிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. சமூகச் சூழலில் எவ்விதமான நூல்கள் வாசிக்கப்பெறுகின்றன என்பதைக் கண்டறிந்து கொள்ளவும், சமூகத் தேவைக்கேற்ப அதை மாற்றிக் கொள்ளவும், ஆய்வு உலகை ஆற்றுப்படுத்துகிற அறிவுத் துறையாகவும் நூலடைவு அமைகிறது. ஆய்வுத் தளத்திலும், இலக்கியப் பரப்பிலும், சமூகப் பயன்பாட்டிலும் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் நூலடைவுகளை உருவாக்கவும், அதனை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தவும் அதிகளவில் முயற்சிகள் மேற்கொள்ளப்பெற வேண்டும்.

## பயன்பட்ட நூல்கள்


அன்னி தாமசு (1996), இருபதில் தமிழ் வளர்ச்சி, சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

இன்னாசி (2009), கிறித்துவத் தமிழ் களஞ்சியம், சென்னை: காவ்யா.

காசிராஜன்,இரா.(1973), சிலப்பதிகார ஆய்வடங்கல், திருவனந்தபுரம்: கேரளப் பல்கலைக்கழகம்.

கிருஷ்ணசாமி நாச்சிமுத்து (2009), "மொழிபெயர்ப்பு, பன்மொழியியல் (Translation and Multi Lingualism)", 5.12.2009 பயிற்சிப் பட்டறையில் வாசிக்கப்பட்ட கட்டுரை, ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், புதுதில்லி.

சிவகாமி,ச.(1985), தமிழ் வாழ்க்கை வரலாற்று இலக்கியம், சென்னை: உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சிவகாமி,ச.(1983), மொழிபெயர்ப்பு நூற்றொகை, சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

சுப்பிரமணியன்,ச.வே. (1998), தொல்காப்பியம் தெளிவுரை, சென்னை: மணிவாசகர் பதிப்பகம், பத்தாம் பதிப்பு (2009).

பட்டாபிராமன், துரை. (1992), இலக்கண ஆய்வடங்கல் எழுத்தும் சொல்லும் முதல் தொகுதி, சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பட்டாபிராமன், துரை. (1999), இலக்கண ஆய்வடங்கல் தொகுதி 2 (பொருள் – யாப்பு – அணி), சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

பழநியப்பன், வெ. (2001), தமிழ் புலவர் வரலாற்றுக் களஞ்சியம், சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

முருகேசபாண்டியன்,ந.(2000), "தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம்" 'தமிழ் இனி 2000' கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

முருகேசபாண்டியன், ந.(2004), தமிழ் மொழிபெயர்ப்பில் உலக இலக்கியம், சென்னை : தி பார்க்கர்.

முருகேசன்,ச. (2012), ஜெர்மன் – தமிழ் மொழிபெயர்ப்புகள் : திறனாய்வு நூலடைவு, ஆய்வு நிறைஞர் பட்ட ஆய்வேடு, புதுதில்லி: ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்.

ராமசந்திரன்,மு.(2011), நூலகவியல், சென்னை: தாமரை பப்ளிகேஷன்ஸ், இரண்டாம் பதிப்பு (2012).

ஜெகதீசன்,த. (2011), பிரெஞ்சு – தமிழ் மொழிபெயர்ப்புகள் : திறனாய்வு நூலடைவு, ஆய்வு நிறைஞர் பட்ட ஆய்வேடு, புதுதில்லி: ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம்.

Barnett, L.D., Pope,G.U. (1909), *A Catalogue of the Tamil Books in the library of the British Museum,* London : oxford University press

Murdoch John (1865), *Classified Catalogue of Tamil Printed Books with Introductory Notices,* Madras: The Christian Vernacular Education Society.

# இலங்கையில் சட்டங்களைத் தமிழ்மொழிமூலம் ஆவணப்படுத்தல்: மொழிக் கொள்கையினை முன்னிறுத்திய பார்வை

நவரத்னம் சிவகுமார்

தமிழ்மொழி பேசும் சமூகங்களைச் சார்ந்த பிரபல சட்ட வல்லுனர்களும், நீதிபதிகளும் தோன்றிய இலங்கையில், தமிழ் மொழி மூலம் சட்டங்களை ஆவணப்படுத்துவதில் குறைபாடுகள் தொடர்கின்றமை சுட்டிக்காட்டத்தக்கதொரு விடயமாகும். ஆவணப்படுத்தல் என்பதனை, ஒன்றைப் பற்றிய அறிவிற்குத் தேவையான ஆவணங்களைப் பெறுதல் அல்லது உருவாக்குதல், ஒழுங்கமைத்தல், பாதுகாத்தல், பகிர்தல் போன்ற செயற்பாடுகள் என அடையாளப்படுத்தலாம். இத்தகைய ஆவணப்படுத்தலானது பல வடிவங்களில் அமையலாம். உதாரணமாக நூல்கள், சாசனங்கள், ஒலிப்பதிவுகள், நிழற்படங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆவணப்படுத்தலானது சகல துறைகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். அந்தவகையில், சட்டம் சார்ந்த ஆவணப்படுத்தலும் அவசியமானதொன்றாகும். ஒரு நாட்டின் மொழிக்கொள்கையானது, அந்நாட்டு அரசின் வெளியீடுகள் எந்த மொழியில் இடம்பெறவேண்டும் என்பதனைத் தீர்மானிக்கவல்லது. மட்டுமன்றி, எந்த மொழி அல்லது மொழிகள் முன்னுரிமையையும், முக்கியத்துவத்தினையும் பெற வேண்டும் என்பதனையும் தீர்மானிக்கும். இலங்கையில் தமிழ் மொழி மூலம் சட்டங்களை ஆவணப்படுத்துவதில் இலங்கையின் மொழிக்கொள்கை குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது. தனிச் சிங்கள மொழிச் சட்டக் கொள்கையின் மூலமாக, தன்வயமாதல் உபாயமுறை பிரயோகிக்கப்பட்டதனால் இனங்களுக்கிடையே நம்பிக்கையற்ற மனப்பாங்குகளும், முரண்பாடுகளும் தோன்றியதுடன், இலங்கைவாழ் மக்களின் வரலாற்றில் பல கசப்பான அனுபவங்களும் ஏற்பட்டுவிட்டன. இதன் விளைவாக மொழி ரீதியான தேசியவாதத்தின் தோற்றத்திற்கான காத்திரமான தளம் உருப்பெற்றது. எவ்வாறாயினும், அரச கரும மொழியாக தமிழும் ஏற்கப்பட்ட பின்பும் தமிழ் மொழியில் சட்டங்களை ஆவணப்படுத்தலில் குறைபாடுகள் தொடர்கின்றமையானது, வேறும் சில காரணிகள் இந்நிலைபாட்டினைத் தோற்றுவிப்பதில் தாக்கம் செலுத்துகின்றனவா என்ற வினாவினை முன்னிறுத்துகிறது. இந்த வினாவிற்கான விடைதேடலின் அடிப்படையிலும், இலங்கையின் மொழிக்கொள்கையானது, தமிழ்மொழி மூலம் சட்டங்களை ஆவணப்படுத்துவதில் செலுத்தியுள்ள தாக்கத்தினை அறியும் வகையிலும் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## இலங்கையின் மொழிக் கொள்கை

இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டைச் சீர்குலைத்து, தேச நிர்மாணத்தைப் பாதித்த காரணிகளில் பிரதான பங்கினை மொழிக் கொள்கை பெற்றுக்கொண்டது. மொழிவழி ஒற்றுமையை நிலைநாட்ட முற்படும் போது, தாய்மொழியும், தொடர்பு மொழியும் ஒன்றாக அமையாதவிடத்து, எதிர்மறையான விளைவுகளைச் சந்திக்க நேரிடலாம். இலங்கை அத்தகைய விளைவுகளைச் சந்தித்துள்ளது.

பிரித்தானியர் இலங்கைத் தீவினை காலனித்துவத்திற்கு உட்படுத்தியிருந்த காலத்தில் அறிமுகப்படுத்திய கோல்புரூக் சீர்திருத்தத்துடன் ஆங்கிலம் அரச கரும மொழியாக்கப்பட்டது. இக் காலத்தில் ஆங்கிலமே அரச கரும மொழியாக இருந்தமையினால், அனைத்துச் சட்டவாக்கங்களும் ஆங்கிலத்திலேயே ஆக்கப்பட்டன. ஆங்கில மொழிப் பிரயோகத்துக்கு எதிராக சுதேசிகள் தமது சுயபாஷைகளை அங்கீகரிப்பதற்கான கோரிக்கைகளை முன்வைத்தனர். எனினும், 1956 ஆம் ஆண்டுவரை ஆங்கிலமே அரச கரும மொழியாகப் பிரயோகிக்கப்பட்டது. ஆனால், சுதந்திரத்திற்குப் பின் தேசிய மொழிகளாகவும், ஆட்சி மொழிகளாகவும் சிங்களமும், தமிழும் அங்கீகாரம் பெற்ற பின்னரே சிங்களத்திலும், தமிழிலும் சட்டவாக்கங்கள் நிகழத் தொடங்கியதை வரலாறு சுட்டிநிற்கின்றது.

இலங்கை சுதந்திரம் அடைந்த பின்பு அறிமுகப்படுத்திய அரச கரும மொழிச் சட்டத்தினையும், அச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் கொண்டுவரப்பட்ட ஏனைய சட்ட ஏற்பாடுகளையும், அரசியலமைப்புகளில் இடம்பெற்ற மொழி தொடர்பான ஏற்பாடுகளையும் விளங்கிக் கொள்கின்றபோதே இலங்கையின் மொழிக்கொள்கை பற்றியும், அதன் தற்காலப் போக்குப் பற்றியும் விளங்கிக்கொள்ளலாம். அவ்வகையில் பின்வரும் சட்ட ஏற்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட வேண்டும்.

- 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டம்
- 1958 ஆம் ஆண்டின் 28ஆம் இலக்க தமிழ் மொழி (விஷேடஏற்பாடுகள்) சட்டம்
- 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அத்தியாயம் III இல் இடம்பெறும் மொழி தொடர்பான ஏற்பாடுகள்
- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 12 (2) ஆம் சரத்தும் அத்தியாயம் IV இல் இடம்பெறும் மொழி தொடர்பான ஏற்பாடுகளும்
- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மீதான 13ஆம் திருத்தத்தின் உறுப்புரை - 2 (1987)
- 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் மீதான 16ஆம் திருத்தச் சட்டம் (1988)

## 1956 ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டம்

இலங்கையில் 1955 ஆம் ஆண்டு சுமார் 60 சதவீதம் (மூன்று வயதுக்கு மேற்பட்டோர்) சிங்கள மொழியை மட்டுமே பேசினர். 20 சதவீதத்துக்குச் சற்று மேற்பட்டோர், தமிழை மாத்திரம் பேசினர். எனினும் சிங்களவரின் சனத்தொகை 70 சதவீதமாக இருந்தது. தமிழ் பேசும் மக்களின் தொகை (இலங்கைத் தமிழர், இந்தியத் தமிழர், முஸ்லிம்கள்) 30 சதவீதமாக இருந்தது (குமாரி ஜயவர்த்தன 1995, ப.94). இத்தகைய காலகட்டத்திலேயே தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

தனிச் சிங்கள மொழிச் சட்டம் கொண்டுவரப்படுவதில், சிங்கள மகாசபையினுடைய பங்கு மிக முக்கியமானதொன்றாக அமைந்தது. 1940 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்கள மகாசபை பத்துக் கோரிக்கைகளை முன்வைத்து நாடு பூராகவும் பாரிய மக்கள் போராட்டம் ஒன்றை ஆரம்பித்தது. அவற்றுள், சிங்கள மொழியை அரச கரும மொழியாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் பிரதான கோரிக்கையாக அமைந்தது.

1952 ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில், மொழி தொடர்பான பிரச்சினை முக்கியம் பெறவில்லை. ஆயினும் ஜோன் கொத்தலாவல பிரதம மந்திரியாக இருந்த காலகட்டத்தில் (1953-1956) இப்பிரச்சினை முக்கியத்துவம் பெற்றது. இப்பிரச்சினை வேகமடையச் சிங்களம், தமிழ் ஆகிய இரண்டும் அரச கரும மொழிகளாக வேண்டும் என்ற முற்போக்குக் கோரிக்கையில் இருந்து விலகி, 'சிங்களம் மட்டும்' அரச கரும மொழியாக்க வேண்டும் என்ற மேலாதிக்க நிலைப்பாடு ஏற்பட்டது.

பௌத்த மகா சபையினுடைய ஆதரவினைப் பெறுவதன் மூலம் ஆட்சியதிகாரத்தினைப் பெறமுடியும் என்ற அடிப்படையில், அரசியல் வியூகத்தினை வகுத்தவர் பண்டாரநாயக்க அவர்கள். அவர் "சிங்களம் மட்டும்" என்பதனை அரசியல் துடுப்புச் சீட்டாகப் பயன்படுத்திப் பொதுத்தேர்தலில் பாரிய வெற்றியை ஈட்டிக்கொண்டார் (குமாரி ஜயவர்த்தன 1995).

இதன் விளைவாக 1956 ஆம் ஆண்டு யூன் மாதம் 15 ஆம் திகதி தனிச் சிங்கள மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்டது.

தனிச் சிங்கள மொழிச் சட்டத்தினுடைய குறுந்தலைப்பு பின்வருமாறு குறிப்பிட்டது.

1. இச்சட்டம் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டம் என அழைக்கப்படலாம். சிங்களமொழி இலங்கையின் ஒரே அரசகரும மொழியாகவிருத்தல்.
2. சிங்கள மொழி இலங்கையின் ஒரே அரசகருமமொழியாதல் வேண்டும்.

இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், சிங்களம் மட்டுமே அரச கரும மொழியாக மாறியது. எனவே, அம்மொழியில் பணியாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது. இதன்படி எல்லா அரச உத்தியோகத்தர்களும் சிங்கள மொழியில் பணியாற்ற வேண்டியவர் களாயினர். இத்தேவைக்கு இயைந்தொழுக முடியாதவர்களுக்கு ஓய்வு பெறுவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தனிச் சிங்கள மொழிச் சட்டத்தினை எதிர்த்து, தமிழ் பேசும் மக்களால், குறிப்பாக தமிழரசுக் கட்சியால் மேற்கொள்ளப்பட்ட பல மட்டத்திலான போராட்டங்களின் விளைவாக, பண்டாரநாயக்க அவர்களுக்கும், சமஸ்டிக் கட்சியின் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களுக்கும் இடையில் 1957 ஜீலை மாதத்தில் உடன்படிக்கை எட்டப்பட்டது. இவ்வுடன்படிக்கையில் காணப்பட்ட மொழி தொடர்பான முக்கிய ஏற்பாடுகளாக பின்வருவன அமைந்தன:

- சிறுபான்மை தேசியத்தின் மொழியாகிய தமிழ் மொழி உத்தியோக பூர்வ அரச மொழியாக அங்கிகாரம் பெறும்.
- தமிழ் மொழியை வடக்கு, கிழக்கு மாகாண ஆட்சி மொழியாக்குதல்,
- வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் மொழி பேசாதவர்களுக்கான, தேவையான விதிமுறைகளை ஏற்படுத்துதல்

- நாட்டின் எப்பாகத்திலும் தமிழ் மக்கள் தம் கருமங்களை அரசாங்கத்துடன் தமிழில் ஆற்றவும், தம் பிள்ளைகளுக்குத் தமிழ் மொழி மூலம் கல்வி புகட்டித் தமிழ்ப் பண்பாட்டில் வளர்வதற்கான உரிமையும் பாதுகாக்கப்படும் (விக்னேஸ்வரன் 2008).

ஆனால், பௌத்த பிக்குகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியினால் (ஜே.ஆர்.ஜயவர்த்தன தலைமையில்) முன்னெடுக்கப்பட்ட பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளால் 1958ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் பண்டாரநாயக்க - செல்வநாயகம் உடன்படிக்கை கிழித்தெறியப்பட்டது (Nira Wichkramasinghe 2006, p.272). 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தமிழ் மொழிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம் செப்டெம்பர் 4ஆம் திகதி அன்று அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் தமிழ் மொழி மூலம் கல்வி கற்கவும், அரசாங்க பொதுச்சேவைப் பரிட்சைகளுக்குத் தோற்றவும் சில இடங்களில் நிர்வாக மொழியாகத் தழிழைப் பாவிக்கவும் இந்தச் சட்டம் வழிகோலியது (விக்னேஸ்வரன் 2008). எவ்வாறாயினும், 1958 ஆம் ஆண்டின் தமிழ் மொழிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 1966 இல் கொண்டுவரப்பட்ட தமிழ் ஒழுங்கு விதிகள் (Tamil Regulation of 1966) என்பன தமிழ் மக்களுக்கு எந்தவித பயன்களையும் நல்கியிருக்கவில்லை (Wilson 1988, p.41) என்பதுடன் தமிழ் மொழிக்கான உரிய அந்தஸ்தினைப் பெற்றுக்கொடுக்கவும் இல்லை.

## 1972 ஆம் ஆண்டு யாப்பும் மொழிக் கொள்கையும்

'தனிச் சிங்கள மொழி' என்ற பிணி பீடித்திருந்த இலங்கைத் தீவில் அதற்கான முறையான நிவாரணி அறிமுகப்படுத்தப்படாத சூழ்நிலையிலே, 1972 ஆம் ஆண்டின் முதலாம் குடியரசு யாப்பு நடைமுறைக்கு வந்தது. இவ்யாப்பு சிங்களம் அரச கரும மொழி என்பதனை எடுத்துரைத்தது. சட்டங்களைவகைப்படுத்திப்பார்க்கின்றபோது, அரசியலமைப்பிற்கு உயரியநிலைகொடுக்கப்படுவது மரபு. அரசியலமைப்பானது அடிப்படைச்சட்டமாக அடையாளப்படுத்தப்படுகின்றது. உண்மையில், 1956 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள மொழிச் சட்டம் அடிப்படைச் சட்டமல்ல. அது, சோல்பரி யாப்பு நடைமுறையில் இருந்த காலத்தில், பாராளுமன்றம் இயற்றிய சாதாரண சட்டங்களில் ஒன்றாகும். அத்தகைய சட்டத்திற்கு மேலும் வலுக்கொடுப்பது போன்று, சிங்கள மொழியினை அரச கருமமொழியாக முதலாம் குடியரசு யாப்பின் உறுப்புரை 7 பின்வறுமாறு ஏற்பாடு செய்தது:

"இலங்கையின் அரசகருமமொழி 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகருமமொழிச் சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு சிங்கள மொழியாதல் வேண்டும்"

மேலும், உறுப்புரை 8 இல் தமிழ் மொழி தொடர்பான நிலைப்பாடு வெளிப்படுத்தப்பட்டது. உறுப்புரை 8(1) ஆனது, தமிழ் மொழியின் உபயோகம் 1958 ஆம் ஆண்டின், 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கிணங்கியிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டது. உறுப்புரை 8(2) ஆனது: 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டு அரசியலமைப்புத் தொடங்குவதற்கு நேர் முன்னர் வலுவுள்ளதாயிருந்துவந்த, தமிழ்மொழி உபயோகத்துக்கான எதுவேனும் ஒழுங்குவிதி அரசியலமைப்பின் ஏற்பாடொன்றாக, எவ்வகையாகவேனும் பொருள் கொள்ளப்படலாகாது.

ஆனால் 12 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் கீழ் இப்போதுள்ள எழுத்திலான சட்டமாகத் தொடர்ந்திருந்துவரும் துணைநிலைச் சட்டவாக்கமாகக் கொள்ளப்படுதல் வேண்டும் என ஏற்பாடு செய்தது.

மேற்படி, உறுப்புரை 8(2) ஆனது 1958 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கத் தமிழ்மொழி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் ஏற்பாடுகளை புறந்தள்ளுவதனைக் காணலாம். 1956 ஆம் ஆண்டில் தனிச் சிங்களமொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்பு, 1958 ஆம் ஆண்டில் தமிழ் மொழி விஷேட ஏற்பாடுகள் சட்டம் கொண்டுவரப்பட்டது. இச் சட்டம் தனிச் சிங்களமொழிச் சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் எனக்கூறப்பட்டது. ஆனால், அது முறையான செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்படவில்லை. இந்நிலைப்பாடு தொடர்ந்த காலத்திலேயே, உறுப்புரை 8(2) ஆனது தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தினுடைய வீச்செல்லையினைக் குறுகியதாக்கியது.

உறுப்புரை 9(1) எல்லாச் சட்டமும் சிங்கள மொழியிலேயே ஆக்கப்பட வேண்டும் என்றது. அவ்வாறு ஆக்கப்படும் சிங்கள மொழியினாலான சட்டங்களுக்குத் தமிழ் மொழிபெயர்ப்புக்கள் வைத்திருக்கப்பட வேண்டும் என உறுப்புரை 9 (2) குறிப்பிட்டது. உறுப்புரை 10 (3) ஆனது ஆங்கிலத்தில் அதுவரை காலமும் இருந்து வந்த சட்டங்களுக்கான அந்தஸ்தினை சிங்கள மொழியிலான சட்டங்களுக்கு அளித்தது.

உறுப்புரை 11 (1) ன் கீழ் நாடு பூராகவும் நீதிமன்ற மொழியாகச் சிங்களம் ஆக்கப்பட்டது. எனினும், வேண்டுமெனில் தேசியரசுப் பேரவை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வேற்று மொழிப் பாவிப்பை முதனிலை நீதிமன்றங்களில் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கலாம் என்றது. உறுப்புரை 11 (3) ஆனது வடக்கு கிழக்கில் நீதிமன்ற நடவடிக்கைகளின் போது தமிழ் மொழியைப் பிரயோகிக்க ஏற்பாடு செய்தது. அதன்படி வடக்கு கிழக்கு மாகாண நீதிமன்றங்களிலும் காதிக் கோட்டிலும் மன்றாவணங்கள் தமிழில் சமர்ப்பிக்கப்படுவதற்கும், சட்ட நடவடிக்கைகளில் தமிழில் பங்கு பற்றவும் முடியுமாயிற்று. அத்தகைய சந்தர்ப்பங்களில் சகல மன்றாவணங்களினதும் சிங்கள மொழிபெயர்ப்பு வழக்கேடுகளில் பதியப்பட்டிருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.

சகல மன்றாவணங்களினதும் சிங்கள மொழிபெயர்ப்பு வழக்கேடுகளில் பதியப்பட்டிருக்க வேண்டும் என்பதற்கு இணையாக, சிங்கள மொழியில் இடம்பெறுகின்ற வழக்குகள், அவை தொடர்பான மன்றாவணங்கள் தமிழ் மொழியிலும் பதியப்பட்டிருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்படவில்லை என்பதாகும். ஆக, சிங்களத்தின் ஆதிக்கத்தினையும், சிங்களத்தில் ஆவணப்படுத்தலினையும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளை அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பின் ஊடாக ஏற்பாடு செய்து கொடுத்திருந்தமையினைக் காணலாம். 1972 ஆம் ஆண்டு யாப்பு நடைமுறையில் இருந்த காலத்தில் காணப்பட்ட நிலைப்பாட்டினை உயர் நீதிமன்ற முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் (2008, ப.4) அவர்களுடைய வார்த்தையில் கூறுவதானால் 'நீதித்துறையில் சிங்கள மொழியே கொடி கட்டிப் பறக்கவிடப்பட்டிருந்தது'.

## 1978 ஆம் ஆண்டு யாப்பும் மொழிக்கொள்கையும்

1978 ஆம் ஆண்டு யாப்பின் கீழ் அரசகரும மொழியாக சிங்களமும், தமிழும் இருப்பதுடன் ஆங்கிலம் இணைப்பு மொழியாக உள்ளது. தேசிய மொழிகளாக சிங்களமும் தமிழும் திகழ்கின்றன.

அத்தியாயம் IV மொழி பற்றிக் குறிப்பிடுகின்றது. அவ் அத்தியாயத்தின் தற்போதைய ஏற்பாடுகள் 13வது, 16வது அரசியல் யாப்புத் திருத்தச் சட்டங்களினால் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. அதற்கமைவாக தற்போதய மொழி பற்றிய ஏற்பாடுகள் பின்வருமாறு:

18 (1) : இலங்கையின் உத்தியோகபூர்வ அரசமொழி சிங்களமாய் இருக்கும்

18 (2) : தமிழ் மொழியும் ஒரு உத்தியோகபூர்வ அரச மொழியாய் இருக்கும்

18 (3) : ஆங்கில மொழியே இணைப்பு மொழியாய் இருக்கும்

18 (4) : இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தப் பாராளுமன்றம் உரிய சட்டங்களை ஏற்பாடு செய்து கொடுக்கும்

19. இலங்கையின் தேசிய மொழிகள் சிங்களமும் தமிழும் ஆவன.

சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதும் நிர்வாக மொழியாக இருக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தவிர ஏனைய மாகாணங்களில் சகல பொதுப் பதிவேடுகளும் கொடுக்கல் வாங்கல்களும் அரச நிறுவனங்களில் சிங்களத்தில் பேணப்பட வேண்டும். ஆனாலும், குறித்த ஒரு அரசாங்க அதிபர் பிரிவில் சிங்கள அல்லது தமிழ் மொழி பேசும் சனத்தொகை சிறுபான்மையினராக உள்ளவிடத்து, சனாதிபதி பணிப்பில் இரு மொழிகளும் நிர்வாக மொழிகளாக கொள்ளப்பட வேண்டும் (செல்வகுணபாலன் 2012, ப.185).

அரசியலமைப்பின் உறுப்புரை 18 இன் ஏற்பாடுகளை ஆராய்கின்றபோது சிங்கள மொழிக்கு முக்கியத்துவமும், முன்னுரிமையும் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தோன்றுகின்றது. குறிப்பாக உறுப்புரை 18 உப விதி (1) இல் இலங்கையின் உத்தியோகபூர்வ அரசமொழி சிங்களம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை அடுத்து வருகின்ற உப விதி (2) இல் தமிழ் மொழியும் ஓர் உத்தியோகபூர்வ அரச மொழியாய் இருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆக, தமிழ் மொழி இரண்டாம் நிலைப்படுத்தப்பட்டுள்ளமையினைக் காணலாம். உறுப்புரை 19 இல் இரு மொழிகளும் தேசிய மொழிகள் என்று கூறியதைப் போல் உறுப்புரை 18ல் உப விதி (1) இல் சிங்களமும் தமிழும் இந் நாட்டின் உத்தியோக பூர்வ அரச மொழிகள் என்று கூறப்பட்டிருந்தால், இவ் விமர்சனத்திற்கான தளம் உருவாக்கப்பட்டிருக்காது. அத்துடன் உறுப்புரை 18 உபவிதி (2) இன் தேவையும் ஏற்பட்டிருக்காது. ஆகவே, இவ் ஏற்பாட்டினை உள்ளார்ந்த நோக்கம் கொண்டே புகுத்தியிருக்கின்றனர் என்ற முடிவுக்கு வரலாம்.

மேலும், இவ் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை (மொழி தொடர்பான) நடைமுறைப்படுத்தச் சட்டங்கள் பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட வேண்டும் என்று உறுப்புரை 18(4) கூறுகின்றது. ஆகவே, பெரும்பான்மையாக சிங்களவர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம், மொழி தொடர்பான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த ஆவண செய்ய வேண்டும். அவ்வாறு ஆவண செய்யாவிட்டால் தமிழ் மொழிக்கு உத்தியோக பூர்வ அரச மொழி அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது வெறும் அலங்கார ஏற்பாடாகவே அமையப்பெறும் (விக்னேஸ்வரன் 2008, ப.5-6).

தற்போதய யாப்பின் பிரகாரம் இலங்கையில் தமிழும் சட்டவாக்க மொழிகளுள் ஒன்றாகும். உறுப்புரை 23 சட்டவாக்க மொழி பற்றிக் குறிப்பிடுகின்றது. உறுப்புரை 23(1) இன் பிரகாரம்

எல்லாச் சட்டங்களும், துணைநிலைச் சட்டவாக்கங்களும் இரண்டு தேசிய மொழிகளிலும் சட்டமாக்கப்படுதலும் அல்லது இயற்றப்படுதலும் வெளியிடப்படுதலும் வேண்டும். அவை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பையும் கொண்டிருந்தல் வேண்டும். எவையேனும் இரண்டு உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை இருக்கும் சந்தர்ப்பத்தில் அரசகரும மொழி உரையே மேலோங்கி இருத்தல் வேண்டும். ஆனாலும், மாகாணசபை, உள்ளூராட்சி மன்றங்கள் போன்றவற்றின் சட்டங்கள் எந்த மொழியில் இயற்றப்பட்டதோ அந்த மொழிக்கே முன்னுரிமை வழுங்கப்படும் என்று உறுப்புரை 23(1) இன் இரண்டாம் புறவுரை கூறுகின்றது.

உறுப்புரை 23(2) ஆனது அரசியல் அமைப்புத் தொடங்கும் தேதிக்கு நேர்முன்னர் வலுவுடையனவாயிருந்த எல்லாச் சட்டங்களும், துணை நிலைச் சட்டங்களும் சட்டவாக்கங்களும் இயன்றளவு விரைவாகத் தேசிய மொழிகள் இரண்டிலும் அரச வர்த்த மானியில் (கசெற்றில்) வெளியிடப்படுதல் வேண்டும் என ஏற்பாடு செய்துள்ளது.

உறுப்புரை 23(4) ஆனது 1978ம் ஆண்டு அரசியல் யாப்பு வர முன் இருந்த சட்டங்கள் யாவற்றையும் இரு தேசிய மொழிகளிலும் வர்த்தமானிகளில் பிரசுரிக்கக் கட்டாயப்படுத்தியுள்ளது.

இலங்கையின் தேசிய மொழிகள் தமிழும் சிங்களமும் ஆகும். அரசியலமைப்பின் உறுப்புரை 19 இதனை சட்டரீதியாக வலியுறுத்தியுள்ளது. உறுப்புரை 23 சட்டவாக்க மொழிகளுள் தமிழும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதனையும், முன்னைய சட்டங்கள் அனைத்தும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பதனையும் குறிப்பிடுகின்றமை சிறப்பானதொரு விடயமே. எவ்வாறாயினும், அரசியல் அமைப்பு தொடங்குவதற்கு முன் இருந்த எல்லாச் சட்டங்களும், துணை நிலைச் சட்டங்களும் தேசிய மொழிகளில் ஒன்றான தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை. அவ்வாறு மொழிபெயர்ப்பதற்காக முழுமனதுடன் நடவடிக்கைகள் கடந்த காலங்களில் எடுக்கப்படவில்லை என்பதற்கான சான்றுகளாக இன்றும் ஆங்கிலத்திலும், சிங்கள மொழியிலும் மாத்திரம் காணப்படும் சட்டங்கள் விளங்குகின்றன. குறிப்பாக தண்டணைச் சட்டக்கோவை (Penal Code), குடியியல் நடபடிமுறைக்கோவை (Civil Procedure Code), குற்றவியல் நடபடி முறைக்கோவை (Criminal Procedure Code) போன்றனவற்றினை தமிழ் மொழியில் பெறுவதில் சிரமங்கள் இன்றுவரை காணப்படுகின்றன. இவ்வாறானதொரு குறைபாடு தொடர்வதனை வாசுதேவ நாணயக்கார அவர்களும் குறிப்பிட்டுள்ளார். இக் குறைபாட்டினை நிவர்த்தி செய்யும் வகையில், இதுவரை காலமும் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்படாத சட்டங்களை, மொழிபெயர்த்து வெளியிடுவதற்கான முயற்சிகளை தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் (வாசுதேச நாணயக்கார) அவர்கள் மேற்கொள்கின்றமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இம்முயற்சி பூரண வெற்றி அளிக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

## மொழிக் கொள்கை தவிர்ந்த ஏனைய காரணிகள்

சட்டங்களை தமிழ் மொழி மூலம் ஆவணப்படுத்தல் செயன்முறையில் குறைபாடுகள் தொடர்ந்தவண்ணமே உள்ளன. குறிப்பாக தண்டணைச் சட்டக்கோவை, குடியியல் நடபடிமுறைக் கோவை, குற்றவியல் நடபடி முறைக்கோவை, சான்றுக்கட்டளைச் சட்டம் போன்றனவற்றினை தமிழ் மொழியில் பெறுவதில் சிரமங்கள் காணப்படுகின்றன. மட்டுமன்றி இலங்கையர்களால்

ஆவணப்படுத்தப்பட்ட சட்ட நூல்கள், ஆவணங்கள் மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயே காணப்படுகின்றன. இத்தகையதொரு நிலைப்பாட்டினைத் தோற்றுவித்ததில் இலங்கையின் மொழிக்கொள்கை மாத்திரம் தாக்கம் செலுத்தவில்லை. மாறாக, வேறும் சில காரணிகளும் தாக்கம் செலுத்தியுள்ளமையினை அவதானிக்கலாம். அவற்றுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

- சட்டத்துறை ஆவணங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் தொடர்பான பிரச்சினைகள்
- சட்டத்துறையில் ஆங்கில மொழி செலுத்துகின்ற செல்வாக்கு

## சட்டத்துறை ஆவணங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் தொடர்பான பிரச்சினைகள்

மொழி பெயர்ப்பின் தேவையானது நாள்தோறும் வளர்ந்து பெருகிக் கொண்டிருக்கும் ஒரு காலத்தில் நாம் வாழ்கின்றோம். இலங்கையில் சட்டங்களை தமிழ் மொழி மூலம் ஆவணப்படுத்தும் நோக்கில் மொழிபெயர்ப்பினை மேற்கொள்பவர்களை ஒரு படைப்பாளிக்குச் சமமாக நோக்கப்பட வேண்டியுள்ளது. சட்டங்களை தமிழ் மொழி மூலம் ஆவணப்படுத்துவதற்கான அவசியமே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

செக் நாட்டு அறிஞர் ரோமன் யாகப்சன் (Roman Jacobson) என்பவர் மொழிபெயர்ப்பின் மொழியியல் கூறுகள் பற்றி 'On Linguistic Aspects of Translation' என்னும் நூலில் மொழிபெயர்ப்பை மூன்று விதமாக வகைப்புடுத்தியுள்ளார்.

- ஒரு மொழிக்குள் நிகழும் மொழிபெயர்ப்பு (Intra-Lingual Translation)
- இரு மொழிகளுக்குள் நிகழும் மொழிபெயர்ப்பு (Inter-Lingual Translation or Translation proper)
- இரு தேசங்களுக்குள் நிகழும் மொழிபெயர்ப்பு (Inter-Semiotic Translation)

தமிழ் மொழியில் ஆரம்ப காலப்பகுதியில் இடம்பெற்ற ஆக்கங்களை இக்கால மொழிநடையில் மாற்றியமைக்கும் போது அங்கு ஒரு மொழிக்குள் மொழிபெயர்ப்பு நிகழ்கின்றது. ஒரு குறிப்பிட்ட மொழியில் உள்ள ஆக்கங்களை பிறிதொரு மொழிக்குக் கொண்டுவரும்போது நிகழ்வது இரு மொழிகளுக்குள் நிகழும் மொழிபெயர்ப்பு. இதனை முறையான மொழிபெயர்ப்பு என்றும் ரோமன் யாகப்சன் குறிப்பிடுகின்றார். இலங்கையில் தமிழில் காணப்படுகின்ற பெரும்பாலான சட்டங்கள் இரு மொழிகளுக்குள் நிகழும் மொழிபெயர்ப்பு முறையினைப் பின்பற்றியவையாகும். சட்டமானது முதலில் ஆங்கிலத்தில் வரையப்பட்டு பின்பு சிங்களத்திற்கும், தமிழிற்கும் மொழிபெயர்க்கப்படுகின்றன். இதனால் இலங்கையில் தமிழ் மொழியில் காணப்படுகின்ற பெரும்பாலான சட்டங்கள் மொழிபெயர்க்கப்பட்டவையேயாகும். அவ்வகையில், சட்டங்களைத் தமிழ் மொழி மூலம் ஆவணப்படுத்தலில் மொழிபெயர்ப்பு முக்கியமானதொரு இடத்தினைப் பெறுகின்றது.

சுதந்திரத்திற்குப் பின் சிங்களத்திலும், தமிழிலும் சட்டவாக்கத்திற்கான தேவை ஏற்பட்டதுடன், அத்தேவையை நிறைவேற்றும் வகையில் சட்டவாக்கத்துக்கான அல்லது மொழிபெயர்ப்பிற்கான கலைச்சொற்களையும் மொழிநடையையும் உருவாக்க வேண்டிய அவசியம் நேர்ந்தது. சட்டமொழி பெயர்ப்பில் கலைச்சொல்லாக்கம் முக்கிய இடம்பெறுகின்றது. நுட்பமான பொருள் வேறுபாடு

உடைய ஆங்கிலச் சொற்களுக்கு சமமான தமிழ்ப் பதங்களைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமானது. இதனால் மொழிபெயர்ப்பாளன் குறிப்பிட்ட பிரச்சினைகளை எதிர்நோக்குகிறான். சட்டங்களை பொருள்கோடல் செய்வற்கு பின்பற்ற வேண்டிய விதிகள் காணப்படுகின்றன. பொருள் தெளிவற்ற சட்டங்களுக்கு தெளிவானதும், பொருத்தமானதுமான அர்த்தத்தினை நீதிமன்றங்கள் வழங்குவதற்கு இவ்விதிகள் பயன்படுகின்றன. தெளிவற்ற சட்டங்களுக்கு பொருள் கோடல் செய்ய விதிகள் காணப்படுகின்றன என்ற காரணத்தினால், சட்டமொழி பல்வேறு விளக்கங்களுக்கு இடமளிப்பதாக இருக்க முடியாது. அது குழப்பங்கள், மயக்கங்கள் இன்றி தெளிவானதாக, முடிந்தவரை முரண்பட்ட இரண்டு விளக்கங்களுக்கு இடம் அற்றதாக இருத்தல் வேண்டும். இத்தகைய சூழ்நிலையானது ஆங்கிலப் புலமையோ அல்லது சிங்களப் புலமையோ கொண்டவர்கள் ஆங்கில மொழியில் அல்லது சிங்கள மொழியில் காணப்படுகின்ற சட்டங்களை தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பதில் கடினத்தன்மையினை உருவாக்குகின்றது (எம்.ஏ.நுஃமான் 2000, ப.29-36). அதாவது, சட்ட மொழிபெயர்ப்பிற்கென சிறப்புத் தேர்ச்சி வேண்டப்படுகின்றது.

## சட்டத்துறையில் ஆங்கில மொழி செலுத்துகின்ற செல்வாக்கு

சட்டத்துறையில் ஆங்கில மொழி செலுத்துகின்ற வகிபங்கும் தமிழ் மொழியில் சட்டங்களை ஆவணப்படுத்துவதில் தாக்கத்தினைச் செலுத்தியுள்ளது. அரசியலமைப்பின் உறுப்புரை 24 ஆனது நீதிமன்றங்களில் மொழிப்பாவனை பற்றி எடுத்தியம்பியுள்ளது. உறுப்புரை 24(1) இன் கீழ் முழு இலங்கையிலும் சிங்களமும் தமிழும் நீதிமன்ற மொழிகளாக ஏற்கப்பட்டுள்ளன. ஆங்கிலத்தில் போதுமான தேர்ச்சியின்றி சட்டம் கற்பது கடினம் என்ற பொதுவான கருத்து நிலவுகின்றது. இலங்கைச் சட்டங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்ட மிகக் குறைந்த எண்ணிக்கையிலான தமிழ் மொழி மூலமான நூல்களே காணப்படுகின்றன. தமிழ்மொழி மூலம் சட்டங்களை ஆவணப்படுத்துவதில் தமிழ் மொழி பேசும் சட்டவல்லுனர்கள் போதிய ஆர்வம் காட்டாமை சுட்டிக்காட்டப்பட வேண்டிய ஒரு குறைபாடாகும். தமிழ் மொழி மூலம் சட்ட நூல்களையும், சட்ட ஆவணங்களையும் தேடிக் கற்க முற்படுகின்ற மாணவர்களுக்கு மிகக் குறைந்த எண்ணிக்கையிலேயான தமிழ் மொழி நூல்களே கிடைக்கப்பெறுகின்றன. தமிழ்மொழி பேசும் மாணவர்கள் பயன்படுத்துகின்ற பெரும்பாலான தமிழ் மொழியிலான நூல்கள் தமிழ்நாட்டு சட்டவல்லுனர்களால் எழுதப்பட்டவையாகும். இதனுடைய அர்த்தம் இலங்கையைச் சார்ந்த தமிழ் மொழி பேசும் சட்டத்தரணிகள், கல்விமான்கள், சட்ட வரைஞர்கள் எந்தவொரு நூலினையும் வெளியிடவில்லை என்பதல்ல. மாறாக, போதாமையே நிலவுகின்றது என்பதாகும்.

இலங்கையில் மொழிக் கொள்கையானது சட்டங்களை தமிழ் மொழியில் ஆவணப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய தாக்கத்தில் எதிர்மறையான தாக்கங்களும் அடங்கும். அதாவது, புறக்கணிப்பு, சம உரிமை மற்றும் முக்கியத்துவம் கொடாமை போன்ற வழிமுறைகளினூடாக எதிர்மறையான தாக்கங்கள் இடம்பெற வழி அமைக்கப்பட்டன. சிங்கள மொழியில் சிரமமின்றிப் பெறக்கூடிய சட்டங்களை தமிழ் மொழியில் அவ்வாறு பெற முடிவதில்லை. தமிழ் மொழிமூலம் போதிய வெளியீடுகள் இல்லாமையே இந்நிலைப்பாட்டிற்கான முக்கிய காரணமாகும். தமிழ் மொழியில் போதியளவான சட்ட ஆவணங்கள் மற்றும் நூல்கள் வெளிவராமைக்காக, இலங்கையின் மொழிக் கொள்கையில் தன்வயமாதல் அணுகுமுறையினைப் புகுத்தி, மொழி அடக்குமுறைக்குத் துணை நின்றவர்களை மாத்திரம் தவறு இழைத்தவர்களாக அடையாளப்படுத்திவிடமுடியாது. நான் அறிந்தவரையில் தமிழ் மொழியில் சட்ட நூல்கள் வெளிவரக்

கூடாது என்ற ஏற்பாடுகளைக் கொண்ட சட்டங்கள் இலங்கையில் கொண்டுவரப்படவில்லை. ஆகவே, சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் சட்ட நூல்களை வெளியிடுவதுபோல் தமிழ் மொழி மூலமும் வெளியிடுவதற்கான உரிமையும், சுதந்திரமும் காணப்படுகின்றன. அதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை. தமிழ் மொழியினை தாய் மொழியாகவும், பேச்சு மொழியாகவும் கொண்டுள்ள சட்ட வல்லுனர்கள், சட்டத்தரணிகள், கல்விமான்கள் தமிழ் மொழி மூலம் சட்டங்களை ஆவணப்படுத்துவதற்கு எடுத்துக்கொண்ட முற்சிகளில் போதாமை காணப்படுகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது. அதேவேளை தமிழ் மொழி மூலம் சட்ட நூல்களை வெளியிட்டு வரலாறு பேசும் பணிசெய்துள்ளவர்களை மறந்துவிடவும் முடியாது. ஆகவே, "சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" என்ற பாரதியின் அர்த்தமுள்ள கருத்தினை முன்னிறுத்தி, சட்டத்தரணிகள், கல்விமான்கள் மாத்திரமன்றி சட்ட மாணவர் அமைப்புக்களும் சட்டங்களை தமிழ் மொழியில் ஆவணப்படுத்துகின்ற முயற்சியில் ஈடுபட வேண்டும்.

## உசாத்துணைகள்

குமாரி ஜயவர்த்தன., 1995. *இலங்கையில் இன மற்றும் வகுப்பு முரண்பாடு.* குமரன் வெளியீட்டகம்: மெட்ராஸ்.

சிவகுமார். ந., 2012. *இலங்கையின் சமகால அரசியல் பிரச்சினைகள்.* பேராதனை: தகவல் நலன்புரி நிலையம்.

செல்வகுணபாலன். செ., 2012. *இலங்கைச் சட்டங்கள் ஓர் அறிமுகம்.* கொழும்பு-சென்னை: குமரன் புத்தக இல்லம்.

பூரணச்சந்திரன். கு., 2003. நவீன மொழிபெயர்ப்புக் கொள்கைகள். தஞ்சாவூர்: அகரம்.

நுஃமான், எம்.ஏ., 2000. *சட்டத்துறை ஆவணங்களைத் தமிழில் மொழி பெயர்த்தல்: சில பிரச்சினைகள்.* கலைப்பீடம். *பல்கலை. தொகுதி I*, இதழ் 1 *& 2, 2000.* கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம், பேராதனை.ப.27-41.

லயனல் குருகே., 2004. *இலங்கையின் தேசிய இனத்துவப் பிரச்சினைகளும் அதற்கான தீர்வுகளும்.* கொழும்பு: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

விக்னேஸ்வரன். க.வி., *சட்டமும் தமிழும்.* சட்ட மாணவர் தமிழ் மன்றம். *நீதி முரசு 2008.* கொழும்பு: இலங்கை சட்டக்கல்லூரி, சட்ட மாணவர் தமிழ் மன்றம்.ப.1-9.

Nira Wicramasinghe., 1995. *Ethnic Politics in Colonial Sri Lanka 1927-1947*. New Delhi: Vikas Publishing House Pvt.Ltd.

Neville Jayaweera., 1990. *Sri Lanka- Toward a multi-ethnic democratic society?*. Oslo: International Peace Research Institute.

Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka., 1987. *Constitution of Democratic Socialist Republic of Sri Lanka-1978*. Colombo: Government Printing Cooperation.

Ruana Rajepakse., 2008. *A Guide to Current Constitutional Issues in Sri Lanka*. Rajagiriya, Colombo: Citizens Trust.

Skanthakumar. B., 2008. *Language Rights in Sri Lanka: Enforcing Tamil as an Official Language*. Colombo, Sri Lanka: Law & Society Trust

The Constitution of the Socialist Democratic Republic of Sri Lanka 1972. Government Publication.

Wilson. A.J., 1988. *The Break-Up of Sri Lanka*. London: C.Hurst & Company.

# தமிழில் அச்சேறிய முதல் நூல்களும் அவற்றைக் கண்டுபிடித்த தனிநாயகம் அடிகளாரின் பெருமுயற்சியும்

அருட்திரு தமிழ் நேசன் அடிகளார்

## முன்னுரை

உலகத் தமிழ் அறிஞரான அருட்திரு சேவியர் ஸ்ரனிஸ்லோஸ் தனிநாயகம் அடிகளார் பன்முகத் தமிழ்ப் பணிகளை ஆற்றியவர். "தமிழ்ச் சூழலில் ஆவணப்படுத்தலும் பேணிப்பாதுகாத்தலும்" எனும் தொனிப் பொருளில் இன்று நாம் சிந்திக்கும்போது 1950களில் தனிநாயகம் அடிகளார் இது விடயத்தில் எடுத்த அரிய முயற்சிகளைப்பற்றி அறிந்திருப்பது முக்கியமாகும். தமிழில் அச்சேறிய முதல் நூல்கள் பற்றியும், மறைந்துகிடந்த அந்நூல்களை கண்டுபிடித்துத் தந்த அடிகளாரின் பெரும்பணி பற்றியும் இக்கட்டுரை ஆராய முற்படுகின்றது.

தமிழாரய்ச்சியின் வளர்ச்சியில் புதிய போக்குகளை உண்டாக்கிய பெருமைக்குரியவர்கள் பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்த அறிஞர்களேயாவர். ஏட்டுச் சுவடிகளில் இருந்த இலக்கிய இலக்கணப் பெருஞ்செல்வங்களை அனைவரும் அறியுமாறு செய்து புதிய ஆய்விற்குத் தடம் பதித்தவர்கள் இவர்களேயாவர். மேலை நாட்டார் வருகையினால் தோன்றிய அச்சியந்திர வசதிகளும் கல்வி மறுமலர்ச்சியும் புதிய நூலாக்கங்களுக்கு வழிவகுத்தன. ஆறுமுக நாவலர் (1822 - 1879), சி. வை. தாமோதரம்பிள்ளை (1832 - 1901), உ.வே. சாமிநாதையர் (1855 - 1942), வையாபுரிப்பிள்ளை (1891 - 1956) ஆகியோர் தமிழ்ப் பதிப்பு முன்னோடிகளாக விளங்கி தமிழுக்கு வளம் சேர்த்தனர்.[1]

உ. வே. சாமிநாத ஐயர் தமிழகமெங்கும் சுற்றித் திரிந்து கண்டெடுத்த பல தமிழ் இலக்கிய ஏட்டுச் சுவடிகளை ஒப்புநோக்கியபின் திருத்திய பதிப்புக்களை வெளியிட்டு தமிழ் மொழிக்கு புத்துயிர் அளித்தார். அவருடைய முயற்சி இல்லையேல் அரிய பல பழந்தமிழ் நூல்கள் இன்று நமக்குக் கிடைத்திருக்கமாட்டா. அதேபோன்றதொரு அரிய பணியைத்தான் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரும் மேற்கொண்டார். பதினாறாம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் தமிழகத்தில் சமயப் பணியாற்ற வந்த மேனாட்டு கிறிஸ்தவ அறிஞர் சிலர் இயற்றிய நூல்கள் - தமிழில் அச்சேறிய முதல் நூல்கள் - 400 ஆண்டுகளாக மறைந்து கிடந்த சூழ்நிலையில் தனிநாயகம் அடிகளார் அவற்றைத் தேடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டார்.[2]

ஐரோப்பிய அமெரிக்க நாடுகளுக்குச் சென்றபோதெல்லாம் அந்நாடுகளில் உள்ள நூலகங்களுக்குச் சென்று தமிழ் நூல்களைத் தேடுவதை வழக்கமாகக் கொண்டார். அம்முயற்சியில் அவர் வெற்றிபெற்று மறைந்து கிடந்த பல நூல்களைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.

போர்த்துக்கல் நாட்டு லிஸ்பன் நகரிலுள்ள தேசிய நூலகம், பெலம் நகரிலுள்ள இனவியல் அருங்காட்சியகம், கடல் கடந்த நாடுகளின் வரலாற்றுத் தொல்பொருள் காட்சியகம் (Arquivo

1 சுந்தரமூர்த்தி முனைவர் இ, அணிந்துரை, 'அகநானூறு' (மூலமும் உரையும்), நியூ செஞ்சரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2004, ப. XVIII

2 அந்தனி ஜான் அழகரசன், டாக்டர் வே, 'தனிநாயக அடிகளின் வாழ்வும், பணியும்', தங்கம் பதிப்பகம், 51, ஊரணி, மட்டுநகர், இலங்கை, 1984, ப.182

Historico do Ultramar), பிரான்சு நாட்டுப் பாரிஸ் நகரிலுள்ள தேசிய நூலகம், சொர்போன் பல்கலைக்கழக நூலகம், உரோமை நகரிலுள்ள மறைபரப்புப் பணி பேராய நூலகம், அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக்கழக நூலகம் போன்ற பல நூலகங்களுக்கு தனிநாயகம் அடிகளார் சென்று நூல்களைத் தேடினார்.[3]

யாராலும் அறியப்படாமல் மறைந்து ஒளிந்து கிடந்த - தமிழில் அச்சேறிய முதல் அரிய நூல்களை அடிகளார் தனது அரிய முயற்சி காரணமாகக் கண்டுபிடித்து தமிழ் உலகிற்கும் ஆய்வுலகிற்கும் அறிமுகப்படுத்தினார்.

## முதல் தமிழ் நூல்கள் எழுந்த பின்னணி

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் இருந்து இந்தியாவுக்கும், இலங்கைக்கும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்ப வந்த சமயத் துறவிகளின் கல்வித் திட்டத்தின் ஒரு பகுதி கல்வி நிறுவனங்களை அமைப்பதும் அச்சுக் கலையை அறிமுகம் செய்து வைப்பதாகவும் இருந்தது.

16ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த சமயத் துறவிகள், புனித பிரான்சிஸ் சவேரியாரைப் போன்றவர்கள் ஐரோப்பா, பாரிஸ், கொயிம்பரா, சாலமன்கா, உரோமை போன்ற பல்கலைக் கழகங்களில் பயின்று பட்டங்கள் பெற்ற மேதைகளாவர். இவர்கள் தங்கள் நாடுகளில் நடந்த கல்வி மறுமலர்ச்சியைக் கண்டவர்கள். இத்தகையவர்கள் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்தபோது ஐரோப்பாவில் தங்கள் காலத்தில் நிகழ்ந்துகொண்டிருந்த கல்வியில் புகுத்தப்பட்ட புதிய மாற்றங்களையும், யுக்திகளையும், புதிய முறைகளையும் இங்கும் அறிமுகம் செய்துவைத்தனர். சமயக் கல்வியையும் சமயம் சாராத கல்வியையும் பரப்ப அவர்கள் கையாண்ட முறைகளுள் ஒன்று - கல்வி நிறுவனங்களாகிய பாடசாலைகள், கல்லூரிகளை நிறுவியதாகும்.[4]

தமிழை அறிவியல் கண்கொண்டு படிக்கும் முறையைத் தொடக்கிவைத்த பெருமை வெளிநாட்டறிஞரும் கிறிஸ்தவத் தொண்டருமான கென்றிக் என்றிக்கஸ் அடிகளாரைச் சாரும். இவர் 1520 முதல் 1600 வரை வாழ்ந்தவர். தமிழில் நிறைய நூல்களை எழுதி அவற்றை அச்சுவாகனம் ஏற்றினார். இதனால் இவர் 'தமிழ் அச்சகத்தின் தந்தை' (The Father of the Tamil Press) எனப் போற்றப்படுகின்றார்.[5] இவர் 1560ஆம் ஆண்டிலேயே தமிழ் பல்கலைக்கழகம் இலங்கையில் உள்ள மன்னாரிலோ அல்லது தமிழ் நாட்டில் உள்ள புன்னக்காயலிலோ நிறுவப்படவேண்டுமெனக் குரல் கொடுத்திருந்தார். இத்தகைய சிறப்புமிக்க கிறிஸ்தவத் தொண்டர்களின் தமிழ்ப் பணி கல்வியைப் புகட்டும் புதிய முறைகளோடு மட்டும் நின்றுவிடவில்லை. கல்வியைப் பரப்ப சமூகத்தொடர்பு சாதனைங்களை (Mass media) பயன்படுத்தினார்கள். நாடக அரங்குகளையும், (Theatres) அச்சுப்பொறிகளையும் (Printed Words) பயன்படுத்தினார்கள்.

## அச்சு வாகனம் ஏறிய தமிழ்

மறையைப் பரப்பவும், எழுத்துக்கலையை வளர்க்கவும் கிறிஸ்தவ சமயத் தொண்டர்களுக்குத் துணைநின்ற சாதனம் அச்சுக் கலையாகும். இவர்களின் முதன்மையான நோக்கம் சமயப் பணியாய் இருந்தபடியால் இவர்கள் இந்தியாவின் அச்சுக்கலைக்கும், இலக்கியத்திற்கும் எழுத்துக் கலைக்கும் செய்த பணிகளை யாரும் குறைத்து மதிப்பிட முடியாது.

---

3 அமுதன் அடிகள், 'தனிநாயகம் அடிகளார்', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1993 ப.123

4 அந்தனி ஜான் அழகரசன், ப.182

5 Rajamanickam Rev. S. (S.J)., 'The First Oriental Scholar', De NobiliResearch Institute, St. Xavier's College, Tirunelveli, 1972, p172

இந்திய மொழிகளுள் முதல் அச்சுவாகனம் ஏறிய மொழி - தமிழ் ஆகும். இந்தியாவில் அச்சுக் கலையை அறிமுகம் செய்து வைத்தமை இந்திய சமூக, கல்வி வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாகும். 1566ஆம் ஆண்டு கத்தோலிக்க திருச்சபையின் ஒரு துறவற சபையாகிய இயேசு சபைக் குருக்கள் ஐரோப்பாவிலிருந்து கொண்டுவந்த இலத்தீன் எழுத்துக்களைக்கொண்டு கோவாவில் முதன் முதலாக அச்சகத்தை (Printing Press) நிறுவினார்கள். இக்காலத்தின் கோவா அச்சகம் இலத்தீனிலும், போர்த்துக்துக்கீசத்திலும்தான் அச்சேற்றி வந்தது.

இந்தியாவில் அச்சுப்பொறி அறிமுகம் செய்துவைப்பதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே, அதாவது 1554ஆம் ஆண்டில் லிஸ்பன் நகரில் முதல் தமிழ் நூல் (First Tamil Booklet) அச்சேறியது. இச்சிறு நூலின் (முக்கிய) தமிழ் மூலப்பிரதிகளை எடுத்துக்காட்ட உரோம எழுத்துக்களை உபயோகித்தார்கள். 1577ஆம் ஆண்டு கோவாவில் முதல் தமிழ் எழுத்துக்கள் அச்சுப்பொறி பெற்றன. ஆனால் திருப்தியாக அமையவில்லை. அதன்பின்னர் 1578இல் கொல்லத்தில் இரண்டாம் முறையாக, திருப்திகரமான வகையில் தமிழ் எழுத்துக்கள் அச்சுப்பொறி பெற்றன. 1578ஆம் ஆண்டு அக்டோபர் இருபதாம் நாள் கொல்லத்தில் செபங்களும், மறைக்கல்வியும் உள்ளடங்கிய ஒரு நூல் வெளியிடப்பட்டது. இச்சிறு நூல் பதினாறு பக்கங்கள் அடங்கிய 'தம்பிரான் வணக்கம்' என்ற சிறு நூலாகும். இந்நூல் மூலம் இந்திய இலங்கை மொழிகளுக்குள்ளே தமிழ் மொழி முதன் முதல் அச்சுவாகனம் ஏறிய மொழியாக விளங்கியது என தனிநாயகம் அடிகளார் குறிப்பிடுகின்றார்.[6]

## ஐரோப்பாக் கண்டத்திற்கு வெளியே முதல் அச்சு வாகனம் ஏறிய மொழி தமிழ்

அச்சு வாகனம் ஏறிய உலக மொழிகள் பலவற்றுள்ளும் முதல் அச்சு வாகனம் ஏறிய சிறப்பு தமிழுக்கே உண்டு என்பது தனிநாயகம் அடிகளாரின் முடிவாகும்.

> "தமிழ் நாட்டில் அச்சுக்கலை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டையும், நாளையும், ஏனைய உலக நாடுகளில் மொழிகள் அச்சுவாகனம் ஏறிய ஆண்டுகளையும் நாள்களையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது தமிழ் மொழி குறிப்பிடத்தக்க சிறப்பைப் பெறுகின்றது. சீன நாட்டில் 1584ஆம் ஆண்டில்தான் அச்சுக்கலை முதன் முதலாக ஐரோப்பியர்களால் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. யப்பான் நாட்டில் 1590ஆம் ஆண்டு அச்சுக்கலை முதன் முதலாக அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. பிலிப்பைன்ஸ் நாட்டில் 1593ஆம் ஆண்டில் அச்சுக்கலை அறிமுகமானது. புதிய உலகமாகிய அமெரிக்காவில் உள்ள பெருவில் ஸ்பானிய மொழியில் அச்சுக்கலை 1584ஆம் ஆண்டு அறிமுகமானது. ஆபிரிக்க மொழியில் முதன் முதலாக அச்சுக்கலை அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு 1624 ஆகும். ரசியா நாடு தன் முதல் நூலை 1563ஆம் ஆண்டு அச்சேற்றியது. கொன்ஸ்தாந்திநோபிள் தன் முதல் அச்சகத்தை 1727ஆம் ஆண்டில் நிறுவியது. கிரேக்க நாடு தன் முதல் அச்சகத்தை 1821ல் தொடங்கியது."[7]

16ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்திற்கு வெளியேயும், அதன் சுற்றுப்புறத்திலும் மேற்கத்திய முறைப்படி அச்சுவாகனம் ஏறிய நூல்களுள் மிகவும் பழமையான நூல்கள் தமிழ் நூல்களே.

6 அந்தனி ஜான் அழகரசன், ப.182

7 Thani Nayagam, X.S. The First Books printed Tamil ; Tamil Culture, Vol. VII, No. 3, Madras, July 1958, p 291

தமிழ் மொழி அச்சுவாகனம் ஏறிய ஆண்டுடன் ஏனைய நாட்டு மொழிகள் அச்சுவாகனம் ஏறிய ஆண்டை ஒப்பிட்டுப் பார்ப்பது மிகவும் சுவாரஸ்யமான விடயமாகும். மேலே தனிநாயகம் அடிகளார் குறிப்பிட்ட அதே விடயங்கள் 'First Tamil Book printed in 1554' என்ற இணையத்தளக் கட்டுரையில் பின்வரும் அட்டவணையாக இடம்பெற்றுள்ளது.[8]

| மொழி/நாடு | முதல் நூல் அச்சிடப்பட்ட ஆண்டு |
|---|---|
| தமிழ் ........................................................... | 1554 |
| சீனா ........................................................... | 1584 |
| பெரு (இஸ்பானிய மொழியில்) ............................ | 1584 |
| யப்பான் ........................................................ | 1590 |
| ஆபிரிக்கா ..................................................... | 1624 |
| ரஸ்யா ......................................................... | 1563 |
| கொண்ஸ்ரான்டிநோபிள் .................................... | 1727 |
| கிரேக்கம் ...................................................... | 1821 |

## 'தமிழ் மொழி இலக்கணக் கலை'

### (ஐரோப்பியத் தமிழ் அறிஞர் எழுதிய முதல் தமிழ் நூல்)

ஐரோப்பியர் ஒருவரால் தமிழ்த்துறையில் எழுதப்பெற்ற முதல் நூல்களாக 1. தமிழ் மொழி இலக்கணக் கலை, 2. தமிழ் அகராதி ஆகிய நூல்கள் கொள்ளப்படுகின்றன. 'முதல் ஐரோப்பியத் தமிழ் அறிஞர்' என்று போற்றப்படத்தக்க கென்றிக் கென்றிக்கஸ் அடிகளார் 1550ஆம் ஆண்டு இந்த இரண்டு நூல்களையும் எழுதியதாக அறியமுடிகிறது.[9] இவையிரண்டும் அச்சேறாத நூல்கள். இவற்றுள் அகராதி இதுவரை கிடைக்கப்பெறவில்லை. ஆனால் 'தமிழ்மொழி இலக்கணக் கலை' (Arte da Grammatica da Lingua Malar) என்னும் நூலை தனிநாயகம் அடிகளார் லிஸ்பன் தேசிய நூலகத்தில் 1954ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். கையெழுத்துப் படியில் 160 பக்க அளவில் போர்த்துக்கேய மொழியில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இலத்தீன் மொழியிலக்கண அடிப்படையில் தமிழை ஆராய்ந்த என்றிக்கஸ் அடிகளார் அவ்வடிப்படையிலேயே தமிழ் இலக்கண நூலை யாத்துள்ள பாங்கினைத் தனிநாயகம் அடிகளார் காட்டுகின்றார். தமிழ் எடுத்துக்காட்டுக்கள் தமிழ் எழுத்திலும், ஐரோப்பிய எழுத்திலும் எழுதப்பட்டுள்ளன.

என்றீக்கஸ் அடிகளார் புன்னைக்காயல் என்னும் ஊரையே தம் தலைமையிடமாகக் கொண்டிருந்தார். இந்நூலிலுள்ள பல எடுத்துக்காட்டுக்களில் புன்னைக்காயல் என்னும் ஊர் குறிப்பிடப்படுவதால் இந்நூல் புன்னைக்காயலில் எழுதப்பட்டதாக ஊகிக்க முடியும் என தனிநாயகம் அடிகளாரின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய அமுதன் அடிகளார் குறிப்பிடுகின்றார்.[10]

8 Vairam, 'First Tamil Book printed in 1554' Karka Nirka Block on Tamil Literature

9 Thaninayagam, X.S., Tamil Manuscripts in European Libraries; Tamil Culture, Vol.III, No. 3- 4, Oct.1954,p.220

என்றிக் என்றிக்கஸ் அடிகளார் தாம் சார்ந்த இயேசுசபைத் தலைவராகிய புனித இஞ்ஞாசியாருக்கு 6.11.1550 அன்று வ. உ. சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள புன்னைக்காயல் என்ற ஊரிலிருந்து எழுதிய மடலில் இதுபற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க ஐக்கிய நாட்டைச் சேர்ந்த ஜீன் ஹென் அம்மையார் (Jeanne Hein) இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சேற்றும் முயற்சியில் ஈடுபட்டதாக அறியமுடிகிறது.[11] அந்தப் பதிப்பு வெளியாகியதா என்பது பற்றி அறியமுடியவில்லை. இந்த அம்மையார் மதுரைத் தமிழ் மாநாட்டின்போது இவ்விலக்கண நூலைப்பற்றி வழங்கிய கட்டுரையில் தனிநாயகம் அடிகளார்தான் இந்த நூலைக் கண்டுபிடித்துத் தந்தவர் என்பதைக் குறிப்பிட்டுள்ளார்.[12]

## தமிழ் – போர்த்துக்கேய அகராதி

### (முதலில் அச்சேறிய தமிழ் அகராதி)

ஐந்தாம் தெ ப்ரேயென்சா (Antam De Proenca 1624 - 1666) என்னும் யேசுசபைத் துறவி இயற்றிய தமிழ் - போர்த்துக்கேய அகராதியின் கையெழுத்துப் படியைப் பாரீசிலுள்ள தேசிய நூலகத்தில் தனிநாயகம் அடிகளார் கண்டெடுத்தார்.[13]

இது 'தமிழ் - போர்த்துக்கேய அகராதி,' 'போர்த்துக்கேய - தமிழ் அகராதி' என இரு வேறு தலைப்புகளுடன் இரு நூல்களாகக் காணப்பட்டது. எனினும் இரண்டும் இணைந்த ஒரு நூல் கேரளத்திலுள்ள அம்பலக்காடு என்னும் ஊரில் 30.7.1679 அன்று அச்சிடப்பெற்றது என்பதை வத்திக்கான் நூலகத்தில் அந்நூலின் அச்சுப்பிரதிகளைக் கண்டபோது அடிகளார் உணர்ந்தார். போர்த்துக்கேய பொருள் விளக்கத்துடன்கூடிய இத்தமிழ் அகராதி மதுரை மறைப்பணிக் களத்தின் சமயத்தொண்டரும் யேசுசபையினருமாகிய அந்தாம் தெ பரோயன்சா அடிகளால் இயற்றப்பட்டது. இது 30.7.1679 அன்று அச்சிடுவோராகிய "இஞ்ஞாசி அய்ச்சாமணி" என்பரால் அம்பலக்காட்டிலுள்ள மலபார் மறைமாநிலத்தின் தமிழ் அச்சகத்தில் பதிக்கப்பெற்றது என போர்த்துக்கேய மொழியில் எழுதப்பட்ட குறிப்பு நூலின் முதல் பக்கத்தில் காணப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தில் "இஞ்ஞாசியோ புருனோ" (1579 - 1659) அடிகளால் ஒரு தமிழ் அகராதி தொகுக்கப்பட்டது என்னும் குறிப்பினை பரோயன்சா அடிகளார் தம் முன்னுரையில் தருகின்றார். அவ்வகராதி அச்சிடப்பட்டதா இல்லையா என்பதை நாம் அறியமுடியாதுள்ளது. அதன் கையெழுத்துப்படியும் கிடைக்கவில்லை.

ஆகவே நாம் அறிந்த அளவில் முதன் முதலில் அச்சேறிய தமிழ் அகராதி பரோயன்சா அடிகளார் எழுதியதே. இதனை ஒளிப்படம் எடுத்து ஒளிப்படங்களையே நூலாக அச்சிட்டு தனிநாயகம் அடிகளார் வெளியிட்டார்.[14]

பரோயன்சா அடிகளார் இறந்து பதின்மூன்று ஆண்டுகளுக்குப்பின், அதாவது 1679ஆம் ஆண்டில்தான் இந்த அகராதி அச்சிடப்பட்டிருக்கிறது. இஞ்ஞாசியோ புருனோ அடிகளாரால் முன்பு

---

10. அமுதன் அடிகள், 1993 ப.125

11 ஜீன் ஹென் அம்மையார், பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியன் (தூத்துக்குடி) அவர்களுக்கு 20.4.1979 அன்று எழுதிய மடல்.

12 Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies, p. 1 – 66

13 Thani Nayagam, X.S., Tamil Manuscripts in European Libraries; Tamil Culture, Vol.III, No. 3- 4, Oct.1954,p.223

14 Antao De Proenca's Tamil – Portguese Dictionary, A.D 1679 Prepared for publication by Xavier S. Thani Nayagam (Kuala Lumpur, 1966)

தொகுக்கப்பட்ட அகராதியிலிருந்தும், தாம் தமிழ் கற்க உதவியாக இருந்த தத்துவ போதகர் (1577 - 1656), மனுவேல் மாட்டின்ஸ் போன்ற இயேசுசபைத் துறவிகளின் நூல்களை ஆராய்ந்தும் திரட்டிய சொற்களைக் கொண்டு இந்த அகராதியை தொகுத்ததாகக் கூறும் ஆசிரியர், கென்றிக் கென்றிக்கஸ் அடிகளாரின் 'அடியார் வரலாறு' என்னும் நூலிலிருந்தும் தாம் சொற்களைத் தொகுத்திருப்பதாகத் தம் முன்னுரையில் தெளிவுபடுத்துகின்றார்.[15]

தனிநாயகம் அடிகளார் இந்த அகராதியை ஒளிப்படப் பதிப்பு முறையில் அச்சிட்டு 1966ஆம் ஆண்டு முதல் உலகத் தமிழ்மாநாட்டின்போது வெளியிட்டார். எனினும் இந்நூலை அறிமுகம் செய்து 1964ஆம் ஆண்டிலேயே ஒரு கட்டுரை[16] வெளியிட்டார். இந்த ஆய்வுக் கட்டுரையை 1964 ஆம் ஆண்டு டில்லியில் நடைபெற்ற உலகக் கீழ்த்திசை அறிஞர் மாநாட்டிலும் அடிகளார் படித்து வழங்கினார்.

## கார்த்தில்லா (Cartilha)

### ( உலகிலேயே தமிழில் அச்சேறிய முதல் நூல் )

தமிழில் அச்சேறிய முதல் நூல் என்ற பெருமையை இந்நூல் பெறுகின்றது. 38 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 1554ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பதினோராம் நாள் போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் அச்சிடப்பட்டது. இந்நூல் தமிழ் எழுத்துக்களைக்கொண்டு அச்சிடப்பெறாமல் தமிழ்ச் சொற்கள் ஐரோப்பிய எழுத்துக்களில் பெயர்த்தெழுதப்பெற்றதாக, சொல்லுக்கு சொல் போர்த்துக்கேய மொழிபெயர்ப்புடன் வெளியாகியது. போர்த்துக்கல் நாட்டின் லிஸ்பன் நகரில் உள்ள பெலம் என்ற இடத்தில் உள்ள இனவியல் அருங்காட்சியகத்தில் (Ethnological Museum of Doctor Leille de Vasconcellos at Belam, Lisbon) ஓர் இரும்புப் பெட்டியில் இந்நூல் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

ஒரு கிறிஸ்தவன் தன் மீட்புக்காக அறியவேண்டிய அனைத்தையும் சுருக்கமாகக் கூறும் நூலாக இது அமைந்துள்ளது. போர்த்துக்கல் மன்னராகிய மூன்றாம் அருளப்பரின் (King Dom John III) ஆணைப்படி இந்நூல் எழுதப்பட்டது. இதன் கையெழுத்துப்பிரதி போர்த்துக்கல் நாட்டு ஒப்போர்த்தோ நகராட்சி நூலகத்தில் இருப்பதாக தமக்குக் கூறப்பட்டதை தனிநாயகம் அடிகளார் தம் கட்டுரையில் குறிப்பிடுகின்றார்.[17]

புதினாறாம் நூற்றாண்டின் முற்பகுதியில் இலங்கையில் சமயப்பணியாற்றிய 'சுவாம் தெ வில்லா கோந்தே' என்னும் துறவியின் மேற்பார்வையுடன் இந்நூலை மூன்று தமிழர்கள் இயற்றியுள்ளனர். 'விசெந்த்தெ டி நாசரெத்' (Vicente De Nazareth), 'ஜோர்கே கார்வல்கோ' (Jorge Carvalho), 'தோமே டி குருஸ்' (Thome De Croos) ஆகியோரே அந்த மூன்று தமிழர்களும் ஆவர்.

---

15 Ibid. pd. 11 - 13

16 Thani Nayagam, X.S., Antao De Proenca's Tamil – Portguese Dictionary, A.D 1679 – An Introduction, Tamil Culture, Vol.XI, No. 2, Apr – June .1964,p.117 - 127

17 Thani Nayagam, X.S., The First Books printed in Tamil', Tamil Culture, Vol.VII, No. 3, July 1958, p.293



*Frontispicio da Cartilha de leitura e doutrina em lingua Tamul e Português, admirável specimen da aplicação das artes gráficas ao ensino das linguas*

PLATE I

Frontispiece of the *Cartilha* printed in Lisbon in 1554

16ஆம் நூற்றாண்டில் 'போர்த்துக்கல்லில் அச்சேறிய நூல்களின் ஆய்வடங்கல்' (Bibliografia Das Obras Impresas EmPortugal no Secolo XVI) என்னும் நூலில் தாம் கண்ட மற்றொரு செய்தியையும் தனிநாயகம் அடிகளார் தம் கட்டுரையில் தெரிவிக்கின்றார். 'புகழ்மிக்க அச்சுக்கலை' (Da Famosa Arte Da Imprissao) என்ற நூலை எழுதுவதற்காக குறிப்புகளை தேடிக்கொண்டிருந்த 'அமெரிக்கோ கோர்த்தஸ் பின்டோ' என்பவர் பெலம் இனவியல் அருங்காட்சியகத்தில் இயக்குனர் பேராசிரியர் 'மனுவேல் ஹேலெனோ' என்பவரைச் சந்தித்துப் பேசிக்கொண்டிரந்தபோது 'போர்த்துக்கேய நூல் ஆய்வடங்கல் (Bibliografia Lusitana) என்னும் தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ள ஓர் அரிய நூலைத் தாம் தேடிக்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். ஹேலெனோ தாம் இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்துப் பத்திரமாகப் பாதுகாத்துவரும் அரிய நூலை அவரிடம் காட்ட, அதுவே தாம் தேடிக்கொண்டிருந்த அரிய நூலாகிய 'கார்தில்லா' என்பதை பின்ட்டோ கண்டறிந்தார்.

தனிநாயகம் அடிகளார் யூன் மாதம் 1954ஆம் ஆண்டில் லிஸ்பனுக்குச் சென்று இந்நூலைப் பார்வையிட்டு இதன் சிறப்பை எடுத்துரைத்தார். The First Books printed in Tamil என்ற தனது கட்டுரையில் தனிநாயகம் அடிகளார் இந்நூல் பற்றிக் குறிப்பிடுகின்றார்.[18]

## தம்பிரான் வணக்கம்

**( இந்தியாவில் அச்சேறிய முதல் தமிழ் நூல் )**

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் தங்கள் வழிபாட்டின்போது பயன்படுத்தும் மந்திரங்களும், கத்தோலிக்க சமயப் போதனைகளின் சுருக்கமும் இந்நூலில் அடங்கியுள்ளன. கென்றிக் கென்றிக்கஸ் அடிகளாரும் புனித இராயப்பரின் மனுவேல் அடிகளாரும் (Manoel De S Padro) இணைந்து மொழிபெயர்த்த இந்நூல் 1578 ஆம் ஆண்டு கேரளத்தில் உள்ள கொல்லம் என்னும் ஊரில் அச்சாகியது. இச்சிறு நூல் 16 பக்கங்களைக் கொண்டது.

'கிறித்துவப் போதனை' (Doctrina Christam) என்பதுதான் மூலநூலின் பெயர். இதனை 'தம்பிரான் வணக்கம்' என்றே மொழிபெயர்ப்பாசிரியர் இருவரும் தமிழாக்கம் செய்துள்ளனர். இந்தியாவில் அச்சேறிய முதல் தமிழ் நூலாக நமக்குக் கிடைப்பது இதுதான். இதன் பிரதி ஒன்றே ஒன்றுதான் இப்போது கிடைக்கப்பெறுகிறது. இப்பிரதி அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக்கழக நூலகத்தில் உள்ளது. அதன் ஒளிப்படப் பிரதிகளை தனிநாயகம் அடிகளார் பெற்று அதுபற்றி ஆராய்ந்து தமிழ்ப் பண்பாடு ( Tamil Culture ) என்ற ஆங்கில இதழில் எழுதியபோதுதான் இந்நூல் பற்றிய செய்திகளை தமிழுலகம் அறிந்துகொண்டது.[19]

பின்னர் "கொல்லம் ஆயர் ஜெரோம் பெனாண்டஸ்" அவர்கள் இதனை ஒளிப்படம் எடுத்துப் பாதுகாத்தார். பின்னர் பாளையங்கோட்டை "இயேசு சபைக் குரு ச. இராசமாணிக்கம்" அடிகளார் இதனை வெளியிட்டுப் பாதுகாத்தார். அதன் மூலவடிவு சிதைதல்கூடாது என்ற நன்னோக்கம் காரணமாக வெளிப்படையான எழுத்துப் பிழைகளைக்கூடத் திருத்தாமல் இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது. ஆயினும் சொற்கள் பிரிக்கப்பெற்றுள்ளன. குறிலுக்கும் நெடிலுக்கும் வேற்றுமை காட்டப்பெற்றுள்ளது.[20]

இதில் அடங்கியுள்ளவை சிலுவை மந்திரம், பரலோக மந்திரம், அருள்நிறை மந்திரம், விசுவாச மந்திரம், மிகவும் இரக்கமுள்ள தாயே மந்திரம், பாவசங்கீர்த்தன மந்திரம், பத்துக்கட்டளை, திருச்சபைக் கட்டளை, கிறிஸ்தவர்கள் விசுவசிக்கத்தக்கவை பதினான்கு, தேவதிரவிய அனுமானங்கள், தலையான பாவங்கள், தலையான புண்ணியங்கள், இரக்கத்தின் நடபடிகள் பதினான்கு, உடல் பூதியங்கள், ஆன்மார்த்த புண்ணியங்கள், ஆன்ம சத்துருக்கள் இவை என்பது, இறுதியானவை நாலு எட்டுப்பாக்கியங்கள்.[21]

---

18 Thani Nayagam, Xavier S., The First Books printed in Tamil', p.258

19 Thaninayagam, X.S., The First Books Printed in Tamil' Op.Cit.pp.293 0 294

20 ரம்போலா மாஸ்கரேனஸ், கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்கள்' தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி, 1972. ப.4

21 மேலது




தம்பிரான் வணக்கத்தில் இடம்பெறும் முதல் இரு செபங்கள் எடுத்துக்காட்டுக்காக இங்கு தரப்படுகின்றன.

**சிலுவை மந்திரங்கள்**

“சுத்தமான குருசின் அடையாளத்தால் எங்கள் சத்துருக்கள் எங்கள்மேல் வராமல் காத்துக்கொள். எங்கள் தம்பிரானே பிதாசுதன் சுத்தமான இசுப்பீரித்து நாமத்தினாலே - ஆமேன்”

**பரலோக மந்திரம்**

“வானங்களில் இருக்கிற எங்கள் பிதாவே, உன்னுடைய நாமம் எல்லாற்குஞ் சுத்தமாக. உன்னுடைய விராச்சியம் வர. உன் மனதின்படி வானத்தில் வானவர்கள்

செய்யுமாப்போலே, பூமியிலும் எல்லாருஞ் செய்ய. அன்றன்றுள்ள எங்கள் அப்பம் எங்களுக்கு இன்றுதா. எங்கள் பிழை கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போலே நீயும் எங்கள் பாவக் கடன்களைப் பொறு. எங்களைத் தோஷத்துக்கு ஏதுவாக ஓட்டாதே. எங்களுக்கு பொல்லாங்கு வராமல் விலகு. - ஆமேன்”[22]

## கிரீத்தியானி வணக்கம்

இது வினாவிடை முறையில் அமைந்த கிறிஸ்தவ மதப் போதனைகள் அடங்கிய நூலாகும். 120 பக்கங்களைக் கொண்ட இந்நூல் 1579ஆம் ஆண்டு கொச்சினியில் அச்சிடப்பட்டது. இந்நூலின் ஒரு பிரதி பிரான்ஸ் நாட்டில் உள்ள சொர்போன் பல்கலைக்கழகத்தில் இருந்தது. பின் அது எப்படியோ அங்கிருந்து மறைந்துவிட்டது. அப்பிரதி சொர்போனில் இருந்தபோது எடுக்கப்பட்ட ஒளிப்படப் பிரதி தனிநாயகம் அடிகளார்க்குத் தூத்துக்குடி ஆயர் மேதகு ரோஜ் ஆண்டகையிடமிருந்து கிடைத்தது.[23] இந்தப் பிரதியினை அடிகளார் அமெரிக்க ஐக்கிய நாட்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குக் கடனாகக்கொடுக்க அவர்களும் அதன்பின் வேறு பலரும் அதை ஒளிப்படம் எடுத்து தங்கள் நூலகத்தில் இன்று பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கின்றனர். மறைந்துபோகும் ஆபத்தில் இருந்த இந்நூல் பாதுகாக்கப்படுவதற்குக் காரணம் தனிநாயகம் அடிகளாரின் முயற்சியாகும்.

வினாவிடை முறையில் அமைந்த இந்தச் சமயக் கல்வி நூலின் போர்த்துக்கேய மூலம் 1566ஆம் ஆண்டில் லிஸ்பன் நகரில் வெளியிடப்பட்டது. அந்நாளில் இது புகழ்பெற்ற நூலாகவும், பெரிதும் வழக்கிலிருந்த நூலாகவும் விளங்கியது. Doctrina Christiana என்னும் ஒரே பெயரைக்கொண்ட இரு நூல்கள் போர்த்துக்கேய மொழியில் இருந்தன என நாம் அறிகிறோம். ஆனால் பெயர் ஒன்றாயினும் ‘தம்பிரான் வணக்கம்’, ‘கிரிசித்தியானி வணக்கம்’ என இரு வேறு பெயர்களுடன் கென்றிக்கஸ் அடிகளார் இவற்றை மொழிபெயர்த்த காரணம் நமக்கு விளங்கவில்லை. ஒருவேளை அவை இரு வேறு நூல்கள் என்பதைச் சுட்டிக்காட்டவே இரு வகையாக மொழிபெயர்த்திருக்கலாம்.[24]

இந்நூலை எழுதிய கென்றிக்கஸ் அடிகளார் தென்பாண்டிக் கடற்கரையோரத்தில் வாழ்ந்த பரதவ மக்களிடையே பணியாற்றியவர். அவருடைய நூல்களை அவர் அச்சிட இம்மக்கள் பண உதவி செய்ததால் ‘கிறிஸ்தியானி வணக்கம்’ என்னும் இந்நூலை அம்மக்களுக்கு நன்கொடையாக வழங்குவதாக கென்றிக்கஸ் அடிகளார் தம் முன்னுரையில்[25] குறிப்பிடுகின்றார்.

இராசமாணிக்கம் அடிகளார் இந்நூலை ‘வணக்கம்’ என்ற பெயரில் மீள்பதிப்புச் செய்துள்ளார். மேலட்டையின் பின்வரும் முதல் பக்கத்தில் நூலைப்பற்றிய தமிழ் விளம்பரம் இருக்கிறது. அடுத்த பக்கத்தில் அதைப்பற்றிய போர்த்திக்கேய விளம்பரம் உள்ளது. இந்நூல் 12 அதிகாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு அதிகாரத் தலைப்பிலும் அவ்வதிகாரம் எப்பொருள் பற்றியது என்ற விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது.

22 மேலது

23 Thaninayagam, X.S., The First Books Printed in Tamil’ Op.Cit.pp.294 - 295

24 அமுதன் அடிகள், 1993 ப.130

25 இராசமாணிக்கம், ச., (பதிப்) வணக்கம்’ தூத்துக்குடி, 1963, ப6



CaPitulo Pr.meyro,que

quer dizer Christão.

Pello sinal.

முதல் அதிகாரத்தில் கிரித்தியானி என்பதன் விளக்கம் இடம்பெறுகின்றது. இரண்டாம் அதிகாரம் சிலுவை மந்திரம் பற்றியது. மூன்றாம் அதிகாரத்தில் பரலோக மந்திர விளக்கம், நான்காம் அதிகாரத்தில் அருள்நிறைந்த மந்திர விளக்கம். ஐந்தாம் அதிகாரத்தில் கிருபை தயாபர மந்திர விளக்கம். ஆறாம் அதிகாரத்தில் விசுவாச மந்திர விளக்கம். ஏழாம் அதிகாரம் விசுவாச மந்திரத்தின் பிரிவுகள் பற்றியது. எட்டாம் அதிகாரம் பத்துக்கற்பளை பற்றியது. ஒன்பதாம் அதிகாரம் திருச்சபைக் கட்டளை பற்றியது. பதினோராம் அதிகாரம் தேவதிரவிய அனுமானங்களைப் பற்றியது. பன்னிரெண்டாம் அதிகாரம் இரக்கத்தின் நடபடிகள், புண்ணியங்கள் எட்டுப் பாக்கியங்கள் ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது.

நூலின் அமைப்பை நோக்கும்போது ஆசான் சீடன் இருவருக்கும் இடையே நிகழும் வினாவிடையே இந்நூலின் அமைப்பாகும். வாத்தியாருக்கு 'வ' என்ற குறியீடு இடப்பட்டுள்ளது.

சீடனுக்கு ‘சீ’ என்ற எழுத்து இடப்பட்டுள்ளது. சீடன் ஆசானைப் ‘பாதிரியாரே’ என்று அழைக்கும் இடங்களும் இருக்கின்றன. ஒவ்வொரு செபமும் நிறுத்தற் குறியினால் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. செபங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டிய முறை பிறைக்கோட்டிற்குள் சுட்டிக்காட்டப்படுகின்றது.[26]

எடுத்துக்காட்டாக இரண்டாம் அதிகாரத்தின் முதல் பகுதி கீழே தரப்படுகின்றது

| | |
|---|---|
| வாத்தியார் | : பிள்ளாய் நீய் சொல்லு. கிரிசித்தியானியுடைய அடையாளம் எது? |
| சீஷன் | : சுத்தமான குருசு |
| வ | : அதேன்? |
| சீ | : நம்முடைய நாயன் இயேசுக் கிரிசித்துக் குருசிலே அறையுண்டு நம்மை மீண்டபடியினாலே. |
| வ | : ஆரை மீழுவார்கள்? |
| சீ | : அடிமைப்பட்டவர்களை |
| வ | : ஆனால் அடிமையாய் இருந்தோமா? |
| சீ | : ஓம் பாதிரியாரே |
| வ | : ஆற்கு? |
| சீ | : நாம் செய்த தோழ்சத்துக்கும் பேய்க்கும் (நம்முடைய நாயன் இசேசுக் கிரிசித்து நம்மை யெல்லாரையும் குருசிலே பாடுபட்டு மீண்ட சகாயத்துக்கு இன்னேரத்தில் பாதிரியார் அறிவு சொல்லலாம்) |
| வா | : கிரிசித்தியானிகள் தங்களுக்கு ஒரு இடுக்கண் வந்தநேரம் ஆருடைய நாமத்தை விசேஷமாகச் சொல்லி உதவிகேட்பார்கள்? |
| சீ | : இயேசு வென்ற திருநாமத்தை |

மூல நூலில் மெய்யெழுத்துக்கள்மீது புள்ளி இல்லை. வாக்கியத்தின் முடிவில் புள்ளியில்லை. எகர ஒகரங்களின் குறிலுக்கும் நெடிலுக்கும் வேறுபாடு இல்லை. ரகரத்திற்கும் நெடிலைச்சுட்டும் காலுக்கும் வேறுபாடு இல்லை. வடமொழி எழுத்தில் ‘ஷ’ ஒன்றே வருகிறது.[27]

## அடியார் வரலாறு (Flos Sanctorum)

### (தமிழ் மண்ணில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல்)

இது கத்தோலிக்க சமயத்தின் புனிதர்களுடைய வரலாறு பற்றிய நூலாகும். இந்நூல் 1586ஆம் ஆண்டு இந்தியாவில் உள்ள சிதம்பரனார் மாவட்டத்தில் உள்ள புன்னைக்காயலில் அச்சேற்றப்பட்டது. இதனால் தமிழ் மண்ணில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் என்ற பெருமை இந்நூலுக்கு உரியது. (தம்பிரான் வணக்கமும், கிரித்தியானி வணக்கமும் கேரளத்தில் உள்ள கொல்லத்திலும், கொச்சியிலும் அச்சானைவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.) இது 669 பக்கங்களைக் கொண்ட பெரிய நூலாகும்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்நூல் யாருடைய கண்ணுக்கும் அகப்படாமல் இருந்த சூழ்நிலையில் தனிநாயகம் அடிகளார் 1954ஆம் ஆண்டு யூன் மாதத்தில் வத்திக்கான்

---

26 ரம்போலா மாஸ்கரேனஸ், ப.7

27 மேலது

நூலகத்தில் இந்நூல் இருப்பதைக் கண்டுபிடித்து தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அறிஞர் பலர் பல ஆண்டுகளாகத் தேடிக்கொண்டிருந்த நூல் இது என்றும் இந்நூலைக் கண்டுபிடித்த முறையினையும், அதனால் தாம் அடைந்த அளவற்ற பெரும் மகிழ்ச்சியையும் 'ஒன்றே உலகம்' என்ற தன் நூலில் அடிகளார் விபரிக்கின்றார்.

> "வத்திக்கான் நூற்கூடத்தில் உள்ள பண்டை இந்திய நூல்கள் யாவற்றையும் ஆராய்ந்து செல்லும்பொழுது இஸ்பானிய முகவுரை உள்ளதும், 666 பக்கங்களைக் கொண்டதுமாகிய பெரிய நூல் ஒன்றையும் ஆராய்ந்தேன். அதுவே அறிஞர் பல ஆண்டுகளாகத்தேடிய Flos Sanctorum எனப்படும் 'திருத்தொண்டர் திருமலர்' என்னும் நூலென்று அகச்சான்றுகள் பலவற்றிலிருந்து துணிந்தேன். நான் ஐரோப்பாவுக்குப் பன்முறை சென்றதால் ஏற்பட்ட பொருட்செலவிற்கும், எடுத்த முயற்சிக்கும் இந்நூலொன்றைக் கண்டுகொண்டதே போதிய கைமாறாகும் என்று கருதுகிறேன். அப்பொழுது நான் அடைந்த மகிழ்ச்சியை ஆராய்ச்சியில் ஈடுபடுவோரே அறிவர்"[28]

என அவ்வரிய நூலைக் கண்டுபிடித்த முறையினையும் அதனால் தாம் அடைந்த அளவற்ற பெரும் மகிழ்ச்சியையும் தனிநாயகம் அடிகளார் குறிப்பிடுகின்றார்.

கென்றிக்கஸ் அடிகளாரே இந்த நூலையும் இயற்றியுள்ளார். அருட்திரு. டியேகோ தெல் ரொசாரியோ எழுதிய 'புனிதரின் பூச்செண்டு' என்னும் நூலிலிருந்தும் லூயிஜி லிப்போமானோ அடிகள் இயற்றிய 'பழங்காலப் புனிதர்கள் நூற்றறுபதின்மர் வரலாறு' என்னும் நூலிலிருந்தும், பல பகுதிகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துத் தமிழில் மொழிபெயர்த்து இந்நூலை கென்றிக்கஸ் அடிகளார் இயற்றியுள்ளார்.[29]

'அடியார் வரலாறு' என்றும், 'திருத்தொண்டர் திருமலர்' என்றும் பல பெயர்களால் குறிப்பிடப்படும் இந்நூலுக்கு கென்றிக்கஸ் அடிகளார் இட்ட தமிழ் பெயர் என்ன என்பதை நாம் அறிவதற்கில்லை. ஏனெனில் நூலின் பெயரைக் குறிக்கும் முகப்புப் பக்கங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. ஆசிரியர் ஸ்பானிஸ் மொழியில் எழுதியுள்ள முன்னுரையில் 'புனிதர்களின் வரலாறு' (La Vide De Santos) என்றே குறித்துள்ளார். எனினும் இந்நூல் பொதுவாக (Flos Sanctorum) என்னும் இலத்தின் பெயராலேயே குறிக்கப்பட்டு வந்துள்ளது.

இந்நூல் ***"அண்டிரீக்கு அடிகளார் இயற்றிய Flos Sanctorum என்ற அடியார் வரலாறு"*** என்னும் தலைப்பில் ச. இராசமாணிக்கம் அடிகளாரைப் பதிப்பாசிரியராகக்கொண்டு 1967ம் ஆண்டு தமிழ் இலக்கியக் கழகத்தினரால் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டுள்ளது.[30]

## முடிவுரை

மறைந்துகிடந்த இப்பழந்தமிழ் நூல்களை தனிநாயகம் அடிகளார் தேடிக் கண்டுபிடித்தார். அவர் இந்த முயற்சியில் ஈடுபடவில்லையென்றால் இவ்வரிய நூல்களை தமிழுலகம் இழந்திருக்கக்கூடும்.

---

28 தனிநாயகம் அடிகள், 'ஒன்றே உலகம்,' தே நொபிலி ஆராய்ச்சி நிலையம், சென்னை, 1974, பக். 129

29 அண்டிரீக்கு அடிகளார், 'அடியார் வரலாறு', இராசமாணிக்கம், ச, (பதிப்), தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1967

30 அமுதன் அடிகள், ப.132

முதன் முதலில் ஐரோப்பியர் ஒருவரால் தமிழ்த்துறையில் எழுதப்பெற்ற நூல், முதன் முதலில் தமிழ் மொழியில் அச்சேறிய நூல், முதன் முதலில் இந்தியாவில் அச்சேறிய தமிழ் நூல், முதன் முதலில் தமிழ் நாட்டில் அச்சேறிய தமிழ் நூல் போன்ற வரலாற்று முக்கியத்துவம் இந்நூல்களுக்கு உண்டு.

பதினாறாம் நூற்றாண்டின் தமிழ் நடை, அச்சுக்கலை, மேனாட்டு தமிழ் அறிஞர்களின் அரிய முயற்சிகள் போன்றவை பற்றிய பல உண்மைகளையும் தமிழுலகம் உணரத் தனிநாயகம் அடிகளாரின் முயற்சி பேருதவியாக அமைந்தது.

## உசாத்துணை நூல்கள்


அமுதன் அடிகள், 'தனிநாயகம் அடிகளார்,' உலகத் தமிழாய்ச்சி நிறுவனம், சென்னை, 1993

அண்டிறீக்கு அடிகளார், 'அடியார் வரலாறு', இராசமாணிக்கம், ச, (பதிப்), தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1967

அந்தனி ஜான் அழகரசன், டாக்டர் வே, 'தனிநாயக அடிகளின் வாழ்வும், பணியும்', தங்கம் பதிப்பகம், 51, ஊரணி, மட்டுநகர், இலங்கை, 1984

தனிநாயக அடிகள், 'ஒன்றே உலகம்,' தே நொபிலி ஆராய்ச்சி நிலையம், சென்னை, 1974

இராசமாணிக்கம், ச., (பதிப்) 'வணக்கம்' தமிழ் இலக்கியக் கழகம், தூத்துக்குடி, 1963.

சுந்தரமூர்த்தி முனைவர் இ, அணிந்துரை, 'அகநானூறு' (மூலமும் உரையும்), நியூ செஞ்சரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2004

ரம்போலா மாஸ்கரேனஸ், 'கிறிஸ்தவத் தமிழ் தொண்டர்கள்' தமிழ் இலக்கியக் கழகம், திருச்சிராப்பள்ளி, 1972.

Rajamanickam Rev. S. (S.J)., 'The First Oriental Scholar', De NobiliResearch Institute, St. Xavier's College, Tirunelveli, 1972,


## கட்டுரைகள்


Antao De Proenca's Tamil – Portguese Dictionary, A.D 1679 Prepared for publication by Xavier S. Thani Nayagam (Kuala Lumpur, 1966)

Thani Nayagam, Xavier S., 'Tamil Manuscripts in European Libraries', Tamil Culture, Vol.III. No. 3 – 4, Medras. Oct. 1954

Thani Nayagam, Xavier S., The First Books printed in Tamil', Tamil Culture, Vol.VII, No. 3, July 1958

Thani Nayagam, X.S., Antao De Proenca's Tamil – Portguese Dictionary, A.D 1679 – An Introduction, Tamil Culture, Vol.XI, No. 2, Apr – June .1964

# ஈழத்து இலக்கண வரலாறு

செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்,

**முகவுரை**

இலக்கணம் என்பதற்கும் பலர் பலவாறு விளக்கம் கொடுப்பர். வடமொழியில் இலக்கணம் என்ற சொல்லைக் குறிக்க வியாகரணம் பகுப்பாய்வு என்ற சொல்லே பயன்படுத்தப்படுகின்றது. ஆங்கிலத்தில் Grammar என்ற சொல்லே பயன்படுகிறது. இலக்கணம் என்பது இலக்கண விதிமுறைகளைக் கூறுவது எனக் கொள்ளலாம். இலக்கணம் என்பது இலக்கியத்திலிருந்து உருவாக்கம் பெறுகிறது. தமிழ்இலக்கண வரலாறு நீண்டபாரம்பரியமுடையது. அது போன்று ஈழத்திற்கு என ஒரு இலக்கண வரலாறும் இருக்கின்றது. உரை எழுதியும் பதிப்பித்தும் ஈழத்தவர் பங்காற்றியுள்ளனர். புதிய இலக்கணங்களை எழுதியும் ஆய்விலக்கண நூல்களை எழுதியும் பங்காற்றியுள்ளனர். ஈழத்து இலக்கிய வரலாறு இருப்பது போல ஈழத்து இலக்கண வரலாறும் இருக்கின்றது. ஈழத்து இலக்கணவரலாறு பற்றிய ஆய்வாக இக் கட்டுரை அமைகின்றது

## I. மரபு இலக்கணமும் நவீன இலக்கணமும்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்** அவர்கள் பன்முகப்பணி ஆற்றியவர். சமயப்பணி, தமிழ்ப்பணி ஆற்றியவர். பாடசாலைகளை நிறுவி அச்சியந்திரசாலைகளை அமைத்து பணியாற்றியவர். சைவப் பிள்ளைகளுக்கு உரிய பாடவிதானத்தை உருவாக்கியவர். தமிழ்மொழியை கற்பிக்கும் பொழுது இலக்கணக் கல்வியை கற்பிக்க வேண்டும் என்ற கொள்கையை உருவாக்கியவர். இந்தப் பின்னணியில் உருவானதே இலக்கணச் சுருக்கமும் இலக்கண வினாவிடை என்ற இரு நூல்களாகும். இலக்கணச்சுருக்கம், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடர்மொழியதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

எழுத்ததிகாரத்தில் எழுத்தியல், பதவியல், புணரியல் இடம்பெறுகின்றன. சொல்லதிகாரத்தில் பெயரியல், வினையியல், இடையியல், உயிரியல் என்ற பகுதிகள் இடம்பெறுகின்றன. தொடர்மொழியதிகாரத்தில் தொகைநிலைத்தொடரியல், தொகாநிலைத்தொடரியல், ஒழிபியல் என்ற விடயங்கள் அமைகின்றன. தொடர்மொழியதிகாரம் என்ற பகுதியில் தொல்காப்பியம், நன்னூல், சொல்லதிகாரத்தில் குறிப்பிட்டவற்றைக் கூறுவதாகவே அமைகின்றன. நவீன மொழியியலாளர்கள் குறிப்பிடும் வாக்கியம் பற்றிக் குறிப்பிடவில்லை. மரபு இலக்கணத்தைப் பின்பற்றியே தொடர்மொழியதிகாரம் அமைந்துள்ளது. இலக்கண வினாவிடை என்பது வினாக்களும் விடையுமாக அமைகின்றது. ஆறுமுகநாவலர் இவர்கள் இலக்கணம் எளிமையும் இலகுவாக மாணவர்கள் புரியும் வகையில் இவ்வினாவிடையை அமைத்திருக்கிறார். என்றே கொள்ளலாம்.

**சேர். பொன் இராமநாதன்** அவர்களின் பணிகள் பற்றிக் கூறும் பொழுது அவரின் இலக்கணப் பணி பற்றி பலர் பேசுவதில்லை. 1927ம் ஆண்டு செந்தமிழ் இலக்கணத்தை எழுதி வெளியிட்டார். நூல் எழுந்ததற்கான பின்னணியை சேர். பொன் இராமநாதன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். தமிழ் கற்கும் மாணவர்களின் தமிழ் இலக்கண நூல்ளை கல்லாது கைவிடுவதற்குரிய காரணம் அவற்றின் கடின சொல்நடையே என்று யாரும் அறிவர். இவ்வருத்தத்தை முற்றிலும் நீக்கி இலக்கண விதிகளின் இன்றியமையாச் சிறப்புக்களைத் தெளிவாக விளக்கும் பொருட்டு இந்நூல் இயற்றப்பட்டது எனக் கூறுகிறார். பேராசிரியர் அ.சண்முகதாஸ் சேர் பொன். இராமநாதன் எழுதிய நூல் பற்றிக் கூறும் பொழுது நாவலருடைய இலக்கணச் சுருக்கம் நன்னூலில் கூறிய இலக்கணங்களை ஓரளவு சுருக்கித் தருகின்றது. ஆனால் செந்தமிழ் இலக்கணமோ நன்னூலாருடைய எழுத்ததிகார சொல்லதிகாரச் சூத்திரங்களிலே உள்ளவற்றையும் உரைகளில் கூறப்பட்டனவற்றையும் விளக்கிக் கூறுகிறது. ஐந்நூற்றுக்கு மேற்பட்ட பாக்களை உடையது" எனக் கூறுவது குறிப்பிடத்தக்கதாகும். "க" என்ற ஒலி ka, ha, ga என்ற ஒலி வடிவினைக் குறிப்பதாக அமைகின்றது எனக் கூறுகிறார். சுட்டு வகைகள் அண்மை, சேய்மையைச் சுட்டுவதாகக் குறிப்பிடுவார். சூத்திரங்களை இலகுவாக உரை விளக்கியும் உதாரணங்களைக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

**சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர்** இலக்கணக் கல்வியும், வடமொழிப்புலமையும் நிரம்பியவர். 1897ஆம் ஆண்டில் இலக்கணச் சந்திரினை என்ற இலக்கண நூலை எழுதி வெளியிட்டார். கதிரவேற்பிள்ளையின் வேண்டுகோளுக்கிணங்க இந்நூலை எழுதியதாகத் தெரிகின்றது. 45 பக்கங்கள் கொண்ட சிறு நூல் என்றாலும் கதையானது இலக்கணச் சந்திரிகையின் உள்ளடக்கம் பின்வருமாறு அமையும். வடசொல் வேறுபாடு, எழுத்தொடுப்பாடு,உபசர்க்கக் கூறுபாடு, இடைச்சொற்கூறுபாடு, தத்திதாந்தப்பாகுபாடு, பெயர்ச்சொற்பாகுபாடு, உரிச்சொற்பாகுபாடு என்ற பகுப்பு முறையை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. குமாரசுவாமிப் புலவரது இலக்கண நூல்களுள் முதன்மையானது வினைப்பகுபத விளக்கமாகும். இந்நூல் 1913ஆம் ஆண்டில் வெளிவந்தது. மறுபதிப்பு 1967இல் வெளியானது. இவர் இந்நூலில் கையாண்ட இலக்கண ஆராய்ச்சி புதுமையானது. நன்னூலில் குறிப்பிட்ட பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு 23 பகுதிகளையும் விளக்கிக் காட்டுகிறார். தெரிநிலை வினைப் பகுதிகள் விகுதியோடு புணரும் போது நடந்தான், மடிந்தான் என இயல்பாக பல சொற்கள் விகாரப்பட்டு வரும்.

செல் - சோல்- முதல் நீண்டது
சா - செத்தான் - முதலில் உள்ள ஆகாரம் ஏகாரமாகியது
தா - தந்தான் - தனி நெடில் குறுகியது.

கா,சா,தா போன்ற ஒரே வடிவுடைய பகுதிகள் விகுதிகளோடு புணரும் போது பலவிதமாகவும் விகாரப்படும். வினைப்பகுபத விளக்கம் மரபு இலக்கணத்தின் வாயிலாக புதியனவற்றை அறிமுகப்படுத்துகின்றதைக் காணலாம்.

**மு. சிதம்பரப்பிள்ளை** அவர்கள் 1886ஆம் ஆண்டு தமிழ் வியாகரணம் என்ற நூலை எழுதி வெளியிட்டார். வடமொழியில் வசன இலக்கணம் காணப்படுகின்றது. சிதம்பரப்பிள்ளை வடமொழி மரபைப் பின்பற்றி தமிழிற்கு இலக்கணம் கூறுகிறார். எழுத்துக்களால் சொல்லும் சொற்களால் வசனமும் வசனங்களால் நூலும் பிறக்கும் என்கின்றார். வியாகரணத்தில் எழுத்திலக்கணம்,

சொல்லிலக்கணம், வசன இலக்கணம் என்ற மூன்றையும் குறிப்பிடுகின்றார். வசன இலக்கணம் பதினொரு பகுதிகளையும் கொண்டுள்ளது. வழாநிலை, பன்மை, ஒருமைப் பெயர், பிறநாமங்கள், சுட்டுப்பெயர்கள், வினைகள், வினைச்சார்புப் பெயர்கள், நிலை, சொன்னிலை, இணையெச்சம் என்பன பற்றிக் கூறப்பட்டுள்ளது. வசன இலக்கணத்தில் இவை உள்ளடக்கமாக அமைகின்றன. வசன இலக்கணம் கூறவேண்டிய கட்டாயம் இந்நூல் ஊடாக உணர்த்தப்படுகின்றது. வடமொழிமரபைப் பின்பற்றிச் செல்கின்றார். வழாநிலை, இணையெச்சம், என்பன வாக்கியத்தில் இடம்பெறுவனவாகும். மரபு இலக்கணம், சொல்லிலக்கணத்தில் குறிப்பிட்டவை. வசன இலக்கணம் முழுமையாக அமையாவிட்டாலும் அதற்குரிய அடித்தளம் இட்டதை நோக்கமுடிகின்றது.

**பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை** அவர்கள் தமிழ் வரலாற்றிலக்கணம் என்ற நூலை எழுதியுள்ளார். இந்நூலின் முதற்பதிப்பு 1982ஆம் ஆண்டு வெளிவந்தது. பின்னர் இந்நூல் பலமுறை பதிப்பிக்கப்பட்டது. பேராசிரியர் இலக்கணப் புலமையும் மொழியியல் சாசனப் புலமையும். பெற்றவர். கலாநிதிப்பட்டங்களை மொழியியலிலும், சாசனவியலிலும் மேற்கொண்டார். பழைய தமிழ் இலக்கணத்தை மொழியியல் பார்வையில் பார்க்கும் பார்வையாக இந்நூல் அமைகின்றது. பழைய இலக்கணம் வரலாற்று நூல்களின் அடிப்படையில் விளக்கப்படுகின்றது. தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் மொழியியல் நோக்கில் கூறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்நூல், முகவுரை, தமிழிற்பிறமொழி எழுத்தியல், சொல்லியல், பெயரியல், வினையியல், இடையியல், தொடரியல், சொற்பொருளியல் என ஒன்பது இயல்களாக அமைந்துள்ளது. மரபு இலக்கணம் தொடரியல், சொற்பொருளியல் எனப்பகுத்து சிறப்பாக ஆராயவில்லை. மொழியியல் வல்லுனராகையால் தொடரில் சொற்பொருளியல் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார். தமிழ்மொழியின் வரலாற்றிலக்கணத்தை ஆராய்ந்து கூறும் முதன் நூலாக இந்நூல் அமைகின்றது. உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படும் நூலாக விளங்குகின்றது.

**பேராசிரியர் அ.சண்முகதாஸ்** அவர்கள் மொழியியலில் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டவர். மரபு இலக்கணத்தைப் பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பலவருடங்களாக கற்பித்து வந்தவர். இப்பின்னணியில் தமிழ்மொழியின் இலக்கண இயல்புகள் என்ற நூலை எழுதி வெளியிட்டார்.

இந்நூல் 1982 இல் வெளிவந்தது. இந்நூல் பல முறை பதிப்பிக்கப்பட்டுள்ளது. மரபு இலக்கண அறிவும், மொழியியல் சார்ந்த அறிவும் இந்நூல் ஊடாகப் புலப்படுகின்றது. இலக்கணக் கல்விக்கு மொழியியலின் அறிவு கட்டாயமானது. மரபு இலக்கணத்தையும் நவீன மொழியின் இலக்கணத்தையும் இணைத்து செல்வதைக் காணலாம். நவீன இலக்கணம், எழுத்து, சொல், வாக்கியம், என்ற வகையில் அமைய வேண்டும். என்பதை இந்நூல் கோடு இட்டுக்காட்டுகின்றது. நவீன இலக்கணத்தின் முன்னோடி நூலாக இந்நூல் அமைகின்றது. அதனால் தான் இந்நூல் தமிழ்மொழியின் இயல்புகள் எனப் பெயர் பெற்றது எனலாம். மரபு இலக்கணம் தமிழ்மொழியின் விதிமுறைகளைக் கூறியது.

நவீன இலக்கணம் தமிழ்மொழியின் இயல்புகளைக் கூறுவது. மரபும் நவீனமும் இணைந்து செல்வதை இந்நூல் காட்டுகின்றது. உயர்கல்வி கற்கும் மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களும், ஆசிரியர்களும் வழிகாட்டி நூலாகவும் ஆய்வு நூலாகவும் இந்நூல் அமைகின்றது குறிப்பிடத்தக்கது. தமிழ் ஒரு திராவிட மொழி. இலக்கணம்: நமது மரபும் நவீன நோக்கும், தமிழ்

இலக்கணக் கோட்பாடுகளின் அடிப்படைகள், எழுத்துப்பற்றிய சிந்தனைகள், புணர்ச்சி விதிகளின் அடிப்படைகள், சொல்லும் சொற்பாகுபாடும், தமிழ் இலக்கண வகைமைகள், பண்பும் பணியும், தமிழ் வாக்கிய அமைப்பு, சொல்லும் பொருளும் என்ற தலைப்புகளைக் கொண்டு இந்நூல் உள்ளடக்கம் அமைகின்றது. இலக்கணம் திறனாய்வு நோக்கில் நோக்கப்படவேண்டும் என்பது இந்நூல் காட்டுகின்றது. இலக்கண ஆய்வாளர்களுக்கு முன்மாதிரியாக இந்நூல் அமைகின்றது.

**மரபு இலக்கணங்கள்** பண்டைக்கால, மற்றும் இடைக்கால தமிழின் அமைப்பையே விளக்கியுள்ளன. ஐரோப்பியரின் வருகையின் பின்னர் தமிழ்மொழியில் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. மொழியியல் சிந்தனை, இலக்கண ஆராய்ச்சி என்பவற்றாலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பேராசிரியர் எம்.ஏ. நுஃமான் அவர்கள் அடிப்படைத் தமிழ் இலக்கணம் என்ற நூலை 1999 இல் எழுதியுள்ளார். க.பொ.த உயர்தர வகுப்புக்குரிய புதிய இலக்கணம் பாடத்திட்டமாக அறிமுகமாகியது. அந்தப் பாடத்திட்டத்திற்கு அமைய நூல் எழுந்தது. உயர்தர மாணவர்களுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இந்நூல் பெரிதும் பயனுடையதாக அமைகின்றது. நவீன இலக்கணத்தை இந்நூல் தருகின்றது. இன்றைய மொழிக்கு உரிய இலக்கணமாக இந்நூல் அமைகின்றது. மொழியியல் அறிவும் இலக்கண அறிவும் இணைந்திருப்பதை இந்நூல் காட்டுகின்றது. இந்நூல் எழுத்தியல், சொல்லியல், தொரியல், புணரியல் என்ற பகுதிகளை உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது. நவீன இலக்கணம் எழுதுகின்றவர்களுக்கு முன்மாதிரியானது. இன்றைய மொழியின் இலக்கணத்தை எவ்வாறு நோக்கவேண்டும் என்பதை இந்நூல் காட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**க. வீரகத்தி அவர்கள்** பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து) என்ற நூலை எழுதினார். அது கையெழுத்துப் பிரதியாகவே இருந்தது. மு. கௌரிகாந்தன் 2011ஆம் ஆண்டு பதிப்பித்தார். பிற்கால இலக்கண மாற்றங்கள் (எழுத்து) என்ற நூலை எழுதுகின்ற பொழுது ஆசிரியர் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், பிரயோக விவேகம், இலக்கணக்கொத்து, தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம், அறுவகை இலக்கணம் என்ற இலக்கண நூல்களை ஆய்விற்கு மூலங்களாகக் கொள்கின்றார். தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு பிற்கால இலக்கண நூல்களில் எழுத்தில் ஏற்பட்ட மாற்றங்களைக் குறிப்பிடுவதாக இந்நூல் அமைகின்றது. பிற்கால இலக்கண நூல்களில் வீரசோழியம், நன்னூல், இலக்கணக் கொத்து, அறுவகை இலக்கணம் என்ற நூல்களே விரிவாகப் பார்க்கப்பட்டுள்ளன. ஆசிரியர் இந்நூலில் பிற்கால இலக்கண நூல்களில் காணப்படும் ஒற்றுமையையும் வேற்றுமையையும் காட்டுகின்றார். மொழிவழக்கு, வடமொழி மரபு, முன்னுள்ள இலக்கண நூல்களின் நூற்பாக்களையும் புரிந்து கொண்ட விதம், தருக்கவியல்துணிவு, உரைகளை விளங்கும் திறன், என்பவற்றினை இந்நூல் ஊடாகப் புரிந்து கொள்ளலாம். ஐந்து அத்தியாயங்களை இந்நூல் கொண்டுள்ளது. முதலாவது அத்தியாயம் இலக்கணநூல்கள் தோற்றம் பெறுவதற்கான சமூகப் பின்னணி எடுத்துக் காட்டப்படுகின்றது. பிற்கால இலக்கண நூல்கள், எழுத்தியல் தோற்றங்கள், முதலும் சார்பும், முதலும் ஈறும், போலியும் சந்தியக்கரமும், இடைநிலை மயக்கம், புணர்ச்சி இயல்பு, மொழிக்கோட்பாடு, பதவியல், என்ற உள்ளடக்கங்களைக் கொண்டு இந்நூல் உருவாக்கப்பட்டது.

**பண்டிதர் சச்சிதானந்தம்** அவர்கள் மஞ்சுகாசினியம் : இயங்கு தமிழியல் என்ற நூலை 2000 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டார். மஞ்சுகாசினியம் என்பது இயங்கு தமிழியலுக்கு அடையாக வந்தபெயர் ஆசிரியரின் மகள் சிறுகுழந்தைப் பருவத்தில் உலகைவிட்டு நீங்கினாள். அந்த செல்ல மகளின் பெயர்மஞ்சுகாசினி என்பது. ஆசிரியர் தனது மகளின் பெயரை அடையாக நூலின் பெயரை இடுவதைக் காணலாம். இயங்கு தமிழியல் என்பது நடைமுறைத் தமிழ் என்பதாகும். நவீனநோக்கில் மரபுத் தமிழ் இலக்கணத்தைப் பார்க்கும் பார்வையாக இந்நூல் அமைகின்றது. இக்காலப் பயன்பாட்டிலுள்ள சொற்களை உதாரணமாகப் பயன்படுத்துகின்றார். தொல்காப்பியத்தை அடிப்படையாகக் கொண்டு நவீனமொழியில் உதாரண விளக்கம் தருகிறான். அறிவியல் நோக்கில் அவரது பார்வை அமைகின்றது.

**க. முத்துத்தம்பிப்பிள்ளை** அவர்கள் நன்னூல் இலகுபோதம், நன்னூல் உதாரணவிளக்கம், புதிய இலகுபோத இலக்கணம் என்ற மூன்று நூல்களை இயற்றியுள்ளார். இலக்கணக் கல்வியை மாணவர்கள் இலகுவாக விளங்க வேண்டும் என்ற சிந்தனையின் விளைவாகத் தோன்றியதே நன்னூல் இலகுபோதம் என்பதாகும். இந்நூலின் அமைப்பும் உரையும் புதிய நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. அதன் அமைப்பானது வேறுபட்டது. ஏனைய நூல்களில் சூத்திரம் உரை அமையும், நன்னூல் இலகுபோதத்தில் அமைப்பதற்கு முன் ஒரு வினா அமையும் பின்னர் சூத்திரம் அமையும். அடுத்து பிரித்துச் சொற்கள் விளக்கப்படும். அடுத்து சூத்திரத்தின் பொருளும் விளக்கங்களும் அவற்றின் விடையும் அமையும். மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் உசாத்துணை நூலாக விளங்கியது.

**க. சொக்கலிங்கம், வாசுகி சொக்கலிங்கம்** ஆகிய இருவரும் இணைந்து ‘உரைநடைத் தெளிவு ஓர் அறிமுகம்’ என்ற நூலை 1999 இல் எழுதி வெளியிட்டனர். தமிழ்மொழியினை மக்கள் பொது இடங்களிலும், ஊடகங்களிலும், பிழையாகப் பயன்படுத்துவதைக் காண்கிறோம். வாக்கியப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஏற்படுகின்றன. அவற்றை எல்லாம் மனங்கொண்டு அவற்றைத் திருத்தும் முயற்சியில் உருவானதே உரைநடைத் தெளிவு என்பதாகும். வாக்கியத்திலே சொல்லொழுங்கு, எழுவாய் பயனிலை அமைய வேண்டிய முறை,எழுத்துக்களுக்கு ஒலியே அடிப்படை, ஆக்கச் சொற்கள், திரிசொற்கள், வேர்ச்சொற்கள், சொற்றொடர்களின் அமைப்பில் புணர்ச்சி பெறும் இடம். சொற்களில் இடைவெளி விடலும், குறியீடுகளும், வழுவமைதி எனப்படும் மயக்கம் மரபுபேணுதல், நடையியல் என்ற வகையில் நூலின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.

சொற்பிழைகள், வாக்கிய அமைப்புப் பிழைகள், புத்தாக்கச் சொல் மயக்கம் என்பன ஏற்படாவண்ணம் உரிய வழிமுறைகளைக் காட்டுகின்றனர். நாள்தோறும் பயன்படுத்தும் வாக்கியங்களில் ஏற்பட்டுவரும் பிழைகளைச் சுட்டிக் காட்டி அவற்றைத் திருத்திஅமைப்பதற்குரிய வழிவகைகளை ஆசிரியர்கள் காட்டுகின்றனர். இதனை வாக்கியத்திலே சொல்லொழுங்கு என்னும் இயலில் காணமுடியும். உ-ம் :- மன்னார் மாவட்டத்தில் மோசமான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. இவ்வாக்கியம் பிழையாக எழுதப்பட்டதைச் சுட்டிக்காட்டி திருத்தியமைப்பதைக் காணலாம். மன்னார் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றாக்குறை மோசமான எண்ணிக்கையில் நிலவுகின்றது என்பதாகும். எனத் திருத்தியமைக்கின்றனர். சொல், சொற்றொடர், இணைப்புச் சொற்கள் ஆகியவற்றின் அமைப்புக்களை மாற்றியுள்ளனர். அவற்றுடன் குறியீடுகளின் பயன்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளன. சொற்களின் இடைவெளி விடலும் குறியீடுகளும் என்ற தலைப்பு காட்டுகின்றது.

**பொ. செங்கதிர்ச்செல்வன்** தமிழ் இலக்கண வளர்ச்சிக்கு இலங்கை அறிஞர்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் 1997ஆம் ஆண்டில் முதுதத்துவமாணிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டார். நூல் உருவாக்கம் பெறவில்லை. இலக்கணப் பதிப்பு முயற்சியில் ஈடுபட்ட இலங்கை அறிஞர்கள், இலக்கண உரைசெய்த அறிஞர்கள், புதிய இலக்கணநூல்கள் இயற்றியவர்கள் என்ற பகுதிகள் உள்ளடக்கமாக அமைகின்றது. ஈழத்து இலக்கண முயற்சிகளை முன்னெடுப்பதாக இவ்வாய்வு அமைகின்றது குறிப்பிடத்தக்கது.

**செ. சிவசுப்பிரமணியம்** தமிழில் ஐந்திலக்கண மரபு என்ற நூலை 2006ஆம் ஆண்டில் எழுதி வெளியிட்டார். ஐந்திலக்கண மரபு நீண்டபாரம்பரியமுடையதாக இருந்துவந்தது. தொல்காப்பியம் முதல் தொன்னூல் விளக்கம் வரை ஐந்திலக்கண மரபு பாரம்பரியம் பேணப்பட்டு வந்துள்ளது. முதலில் ஐந்திலக்கண மரபு, ஐந்திலக்கண மரபு ஏன் பிற்காலத்தில் இல்லாமற் போனது என்ற விடயங்கள் கூறப்பட்டன. வீரசோழியமும், தொன்னூல் விளக்கமுமே விரிவாக ஆராயப்பட்டன. தொல்காப்பியம் கூறும் ஐந்திலக்கணங்களோடு இவ்விரு நூல்கள் கூறும் ஐந்திலக்கணங்கள் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளன.

**எஸ்.சந்திரசேகரம்** இலகுதமிழ் இலக்கணம் என்ற நூலை 2005ஆம் ஆண்டு எழுதிவெளியிட்டார். இந்நூல் இலக்கணத்தை எளிமைப்படுத்துவதாக அமைகின்றது. எழுத்திலக்கணம், சொல்லுறுப்பிலக்கணம், சொற்பொதுவிலக்கணம், சொற்பாகுபாட்டிலக்கணம், சொற்றொடரிலக்கணம், வாக்கியவிலக்கணம், அணியிலக்கணம் என்ற பகுதிகளை உள்ளடக்கியது. மரபையும் நவீனத்தையும் இணைப்பது போன்ற ஒரு முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரிகிறது.

**க.நாகலிங்கம்** செந்தமிழ் இலக்கண விளக்கம் என்ற பொருளில் ஐந்து இலக்கணங்களை 2000ஆம் ஆண்டுவெளியிட்டார். எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் என்பனவற்றின் உட்பிரிவுகளாக பின்வருவன அமைகின்றன. எழுத்தியல், பதவியல், புணரியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்பன எழுத்திலக்கணத்தில் உள்ளடங்கும் விடயங்களாகும். சொல்லிலக்கணத்தில் பெயர்ச்சொல்லியல், வினைச்சொல்லியல், தொடர்மொழியியல், பொதுவியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல் என்ற விடயங்கள் உள்ளடக்கமாக அமைகின்றன. தொல்காப்பியம், நன்னூல், என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கணம் கூறப்பட்டுள்ளதை நோக்கலாம். வினைபற்றிக் கூறும் பொழுது தெரிநிலை வினை, குறிப்பு வினை, பற்றித் தெளிவாக விளக்கவில்லை. மேலோட்டமான குறிப்பை மட்டுமே தருகிறார். விளக்கியிருந்தால் பயன்பாடுடையதாக இருக்கும் இன்றைய மொழியியலில் குறிப்புவினை பயன்படுவதில்லை. ஆனால் தொல்காப்பியர், நன்னூலார் அது பற்றிக் கூறிய கொள்கை என்ன என்பது தெளிவு பெறவேண்டிய விடயமாகும்.

## 2. அகப்பொருள் மரபும் புறப்பொருள் மரபும்

**பேராசிரியர். க. சிவத்தம்பி** அவர்கள் தொல்காப்பியமும் கவிதையும் என்ற பொருளில் நூலை இயற்றியுள்ளார். தொல்காப்பியத்தை எவ்வாறு நோக்க வேண்டும். பேராசிரியர் இது பற்றிக் கூறும் போது "தமிழில் எவ்வாறு விடயங்களை எடுத்துக் கூறுவது என்பதனை எடுத்துச் சொல்கின்ற ஒரு வழிநடத்து நூலாக அதனைப் பார்க்க வேண்டும். விதிமுறையான

விதிப்புக்களாகக் கூறாமல் இயங்குநிலை நியமங்களைக் கூறுவது என்ற முறைமையிலேயே கூறிச் செல்கிறது" என்று கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. இந்நூல் தமிழர் சிந்தனை மரபில் தொல்காப்பியப்பாவும் கவிதையும், பத்துப்பாட்டின் கவிதையியல், தமிழ்க்கவிதை வரலாற்றிலே தொல்காப்பியக் கவிதையில் சில வினாக்களும் சிக்கல்களும் என்ற விடயங்களை ஆராய்வதாக அமைகின்றது. தொல்காப்பியத்தை எவ்வாறு கற்க வேண்டும் எவ்வாறு ஆய்வு செய்ய வேண்டும் என்பதை திறனாய்வு நோக்கில் பார்க்கும் பார்வையாக அது அமைகின்றது. மாணவர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் பெரும் பயனுடையதாக இந்நூல் அமைகின்றது.

**கி. விசாகரூபன்** 2009 ஆம் ஆண்டு தமிழில் அகத்திணைக் கவிதை மரபு என்ற நூலை எழுதியுள்ளார். அகத்திணை மரபு பற்றி இலக்கணநூல்கள் குறிப்பிடுவதை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. தொல்காப்பியம், இறையனாரகப்பொருள், நம்பியகப்பொருள், ஆகிய இலக்கணங்கள் அகத்திணை மரபு பற்றி என்ன கூறுகின்றனர் எனக் கூறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியம் குறிப்பிடும் அகத்திணைக் கவிதை மரபின் அடிப்படைகள், அகத்திணைகள், இருவகைக் கைகோள்கள், அகத்திணை மரபில் பிரிவு நிமித்தங்கள், அகத்திணை மாந்தர் பெயர்சுட்டாப் பண்பு,அகத்திணை மரபில் பாடலுக்குரியோர், நாடகவழக்கும் உலகியல் வழக்கும், திணைப்பெயரும் திணைநிலைப் பெயரும், அகத்திணைக் கவிதை, வெளிப்பாட்டு முறைமை, அகத்திணைக் கவிதைக்கான யாப்பு என்ற உள்ளடக்கங்களைக் கொண்டு நூல் அமைகின்றது. அகத்திணை மரபு பற்றி அறியும் மாணவர்களுக்கு இந்நூல் பயனுடையதாக அமைகின்றது.

**நதீரா மரியசந்தனம்** 1998ஆம் ஆண்டு தொல்காப்பியம் புறத்திணையியல், இலக்கிய மரபு பற்றிய ஆய்வினை முதுதத்துவமாணிப்பட்டத்திற்காக மேற்கொண்டார். இவ்வாய்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சமர்ப்பிக்கப்பட்டது. தொல்காப்பியப் புறத்திணையியலில் எடுத்துக் கூறப்படும் செய்யுள் மரபும் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய பண்டைய நூல்களுடன் அதற்குள்ள இயைபும் காட்டப்படுகின்றது. தொல்காப்பியத்திலும் புறப்பொருள் வெண்பா மாலையிலும் புறத்திணை விளக்கப்பட்டுள்ள முறைமையும் அவற்றுக்கிடையிலான இயைபு இயைபின்மைகளும் விளக்கப்படுகின்றது.

## 3. யாப்பு இலக்கண நூல்கள்

### சி.வை. தாமோதரப்பிள்ளை

அவர்கள் 1881 ஆம் ஆண்டில் கட்டளைக் கலித்துறை யாப்பு நூலை ஆக்கியுள்ளார். இந்நூல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது. கட்டளைக்கலித்துறை யாப்புப் பற்றி முதலில் வீரசோழியம் குறிப்பிட்டது. யாப்பருங்கலக்காரிகை, நூற்பாக்கள், கட்டளைக்கலித்துறை யாப்பினால் அமைக்கப்பட்டன. வடமொழியில் காரிகை என்பது கட்டளைக்கலித்துறை யாப்பைக் குறித்தது. தமிழ் இலக்கண வரலாற்றில் முன்னர் தோன்றிய இலக்கண நூல்களைப் பின்பற்றி கட்டளைக்கலித்துறை யாப்பை சி.வை. தாமோதரப்பிள்ளை இயற்றியுள்ளார். பிற்பட்ட இலக்கண ஆசிரியர்கள் கூறிய சீர், தொடை, எழுத்து எண்ணிக்கை, இறுதிநிலை என்பவற்றை ஏற்றுக்கொண்டு சில விடயங்களைப் புதிதாகத்தருகிறார்.

**ச. ஜகநாதையர்** 1933 ஆம் ஆண்டில் பாட்டியல் வினாவிடை என்ற நூலை எழுதி வெளியிட்டுள்ளார். 48 பக்கங்கள் கொண்டது. முன்னர் தோன்றிய சிதம்பரப் பாட்டியல் வெண்பாப்பாட்டியலில் கூறப்பட்ட கருத்துக்களை உள்வாங்கி வினாவிடையாக அமைத்துள்ளார்.

**பேராசிரியர் செல்வநாயகம்** தமிழ் யாப்புப் பற்றிய அறிவினை பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் மேற்கொள்ள வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர். முதலில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களை “தமிழின் பா வடிவங்கள்: என்னும் ஆய்வினை கலாநிதிப்பட்ட ஆய்வாக மேற்கொள்ளும் படி பணித்தார். ஆய்வு நடைபெற்று வரும் வேளையில் ஆய்வினை இடைநிறுத்தி பேராசிரியர்அ. சண்முகதாஸ் அவர்களை மொழியியல் துறையில் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் எனப் பணித்தார். பேராசிரியர் செல்வநாயகத்தின் பணிப்பிற்கமைய 1968ஆம் ஆண்டு எடின்பறோப் கல்கலைக்கழகத்துக்குச் சென்றார். 1974ஆம் ஆண்டு தொடர்ந்து பா வடிவ ஆய்வினை மேற்கொண்டார். தட்டச்சு வடிவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன், க.கைலாசபதி ஆகியோரின் அணிந்துரை முகவுரைகளுடன் கையில் இருந்தது. உலகத் தமிழாராய்ந்த நிறுவனம் 1998 ஆம்ஆண்டு இந்நூலினைப் பதிப்பித்து வெளியிட்டது. சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு தொல்காப்பியம் எழுந்தது. தொல்காப்பியம், அகவற்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பா வடிவங்கள் பற்றிக் கூறுகின்றது. சங்க காலத்தில் அகவலும் அறநூற் காலத்தில் வெண்பாவும், பக்தி இயக்கத்தில் நான்கு வகைப்பாக்களும் பாவினங்களும் காப்பிய காலத்தில் விருத்தமும் கையாளப்பட்டன. பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் காலம் தோறும் மாறிவரும் பாவடிவங்கள் பற்றியும் பாவினங்கள் பற்றியும் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இலக்கிய வரலாற்று நோக்கில் பாக்களை ஆய்வுசெய்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்நூலில் வரலாறும் இலக்கியப் பின்னணியும், ஆசிரியப்பாவின் வளர்ச்சி நிலைகள்,வெண்பாவும் அதன் வளர்ச்சி நிலைகளும், கலிப்பாவும் அதன் வளர்ச்சி நிலைகளும் பாவினம் பிறந்தது பாவினங்களில் நாட்டுப் பாடற் செல்வாக்கு என்ற விடயங்கள் கூறப்படுகின்றன. யாப்பு பற்றி ஆய்வு செய்கின்றவர்களுக்கு எவ்வாறு யாப்பியனை ஆய்வு செய்யவேண்டும் என்ற நோக்கினை திறனாய்வு முறையில் நோக்கும் முறைமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயனுடையதாகும்.

**க.சச்சிதானந்தம்** 2002ஆம் ஆண்டு தமிழ் யாப்பியலின் அடிப்படை என்ற நூலை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். தமிழ் யாப்பு மரபினை ஆங்கில மொழியில் கூறியுள்ளார். பிறமொழியாளர்களும் இதனை விளங்கிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கில் எழுதியுள்ளார். யாப்பு வகைகள் பற்றி அவர் கூறும் விளக்கம் தெளிவானதாகவும் பொருத்தமானதாகவும் அமைகின்றது. அறிவியல் சிந்தனையுடன் இந்நூலை எழுதுகின்றார். இந்நூல் தமிழ்மொழியில் மொழிபெயர்த்தால் சிறப்புடையதாகப் பலரும் பயன்படுத்தக் கூடியதாக அமையும்.

**நா. சுப்பிரமணியம்** அவர்கள் தமிழ்யாப்பு வளர்ச்சி பற்றி 1985ஆம் ஆண்டு தனது கலாநிதிப்பட்ட ஆய்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் சமர்ப்பித்தார். கி.பி பதினோராம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி வரையான தமிழ்யாப்பு வரலாற்றைக் கருத்திற் கொண்ட ஆய்வாக அமைகின்றது. யாப்புத் தொடர்பாக நிலவிய கருத்து நிலைகளையும் வடிவநிலை, பயில்நிலை என்பவற்றில் ஏற்பட்ட வளர்ச்சி மாற்றம் என்பனவற்றையும் கண்டறியும் நோக்கிலே ஆய்வு அமைகின்றது.

**விசாகரூபன்** யாப்பிலக்கண மரபில் கலிப்பா என்ற சிறிய நூலை 2007ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார். இலக்கண நூல்கள் கலிப்பா பற்றி கூறியவற்றை வரலாற்று முறைப்படி கூறுகின்றது. கலிப்பா பிற்காலத்தில் மாற்றமுற்றதையும் இந் நூல் குறிப்பிடுகின்றது. கலிப்பா பொது அறிமுகம், கலிப்பா வகைகளும் அவற்றின் வடிவ அமைப்பும், தொல்காப்பியமும், கலிப்பாவும், கலிப்பாவும் பிற்கால மாற்றமும் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைகின்றது. கலிப்பா பற்றிக் கற்கும் மாணவர்களுக்கு உசாத்துணை நூலாக விளங்குகின்றது.

**ம. இரகுநாதன்** 2009ஆம் ஆண்டு தமிழ்ப்பா வடிவங்களை விளங்கிக் கொள்ளல் என்ற நூலை எழுதியுள்ளார். செய்யுளும் யாப்பும் ஓர் அறிமுகம்,செய்யுள் உறுப்புக்கள், பாவகைகள், வெண்பா- குறள் வெண்பா, நேரிசை வெண்பா, இன்னிசை வெண்பா, சிந்தியல் வெண்பா, பஃறொடை வெண்பா எனவும் ஆசிரியப்பா வகுப்பில் நேரிசை ஆசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, நிலைமண்டில் ஆசிரியப்பா, அடிமறி மண்டில ஆசிரியப்பா எனவும் கலிப்பா வகையில் வண்ணக ஒத்தாழிசை, அம்போதரங்க ஒத்தாழிசை, நேரிசை ஒத்தாழிசை, வெண்பா கலிப்பா, கலிவெண்பா, கொச்சக்கலிப்பா என்ற வகைகள் பற்றி விளக்கியுள்ளார். பாவினங்கள் பற்றியும் விளக்கப்பட்டுள்ளது. புதிய செய்யுட்கள் பற்றியும் இறுதியில் விளக்கப்பட்டுள்ளது. சிந்து கும்மி பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

பாவகைகளையும் பாவினங்களையும் விளக்கி அதற்கு உதாரணங்கள் காட்டி விளக்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. யாப்பினைக் கற்பதற்கு மாணவர்களுக்கு யாப்பினைப் புரிந்து கொள்ளவும் செய்யுள்களை அலகிட்டு அவற்றின் யாப்பமைதியினைக் கண்டு கொள்ளவும் இந்நூல் உதவுகின்றது.

## 4. ஒப்பீட்டு இலக்கண ஆய்வு

தமிழ்மொழியும் யப்பானிய மொழியும் இலக்கண ஒப்புமை என்ற நூலை தமிழ்மொழியில் தமிழாக்கம் செய்தவர்கள் அ. சண்முகதாஸ், மனோன்மணி சண்முகதாஸ் ஆவார். இந்நூல் 1990ஆம் ஆண்டு தமிழ்ச் சங்கத்தால் கொழும்பில் வெளியிடப்பட்டது. இந்நூலில் வகைநிலையான ஒப்புமை, யப்பானிய மொழியின் இடைச்சொல்லுடன் தமிழ்மொழி இடைச்சொல்லின் ஒப்புமை, யப்பானிய மொழியின் துணை வினைகளுடன் தமிழ்மொழியின் துணைவினைகளின் ஒப்பீடு அமைகின்றன. மொழி ஒப்பீட்டாய்வில் இந்நூல் குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

## முடிவுரை

ஈழத்திற்கு என ஒரு இலக்கண வரலாறு இருக்கின்றது. இவ்வரலாறு இதுவரை எழுதப்படவில்லை. கிடைத்த தகவல்களை மட்டும் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது. சில கிடைக்காதலால் விடுபட்டிருக்கலாம்.

# “கிழக்கிலங்கை கிறிஸ்தவ இதழ்கள்: – தொண்டன், வெட்டாப்பு என்பன குறித்த சிறப்பு ஆய்வு”

றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

## அறிமுகம்

இலங்கையில் தமிழில் இதழியலின் தோற்றம் பெரும்பாலும் மதம் சார்ந்திருந்தது. மதப் பரப்புதலுக்கான பிரதான ஊடகமாக கி.பி 19 ஆம் நூற்றாண்டில் கிறிஸ்தவ மிஷனரிமார் பத்திரிகைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். யாழ்ப்பாணத்தில் 1876 இல் வெளிவந்த ‘சத்தியவேத பாதுகாவலன்’ பத்திரிகையை இதற்கு உதாரணமாகக் கூற முடியும். தொடர்ந்து இந்துக்களும் முஸ்லிம்களும் தத்தம் மதப் பரப்புதலுக்காகப் பத்திரிகைகளைப் பயன்படுத்தத் தொடங்கினர். இந்துசாதனம், முஸ்லிம் நேசன் என்னும் பத்திரிகைகள் அத்தகையன.

இலங்கையில் வெளிவரும் இதழ்கள் குறித்த முழுமையான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் கிழக்கிலங்கையில் குறிப்பாக மட்டக்களப்பில் வெளிவரும் கத்தோலிக்க இதழ்கள் குறித்த விபரங்களை வெளிக்கொணருவது முக்கியமானதாக அமைகின்றது.

## நோக்கம்

கிறிஸ்தவ இதழ்கள் குறித்த முழுமையான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாத சூழலில் அவை குறித்த விபரங்களை வெளிக்கொணர்ந்து இவற்றை ஆவணப்படுத்தலுக்கு ஊக்குவிப்பதே இக் கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

கிறிஸ்தவம் என்னும் போது றோமன் கத்தோலிக்கம், கத்தோலிக்கமல்லாத ஏனைய கிறிஸ்தவ சபையினர் முதலான பல பிரிவினரையும் அப் பதம் குறிக்கும். கிழக்கிலங்கையில் இவர்களது இதழியல் பங்களிப்பு கணிசமானது. எனினும் ஆய்வு நோக்கமும் சுருக்கமும் கருதி கிழக்கிலங்கைக் கத்தோலிக்கத் திருச்சபையின் மாதாந்த வெளியீடுகளாக வெளிவரும் தொண்டன், வெட்டாப்பு ஆகிய இரு இதழ்களே இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

## விடயம்

இலங்கைக் கத்தோலிக்க திருச்சபையில் திருகோணமலை — மட்டக்களப்பு மறைமாவட்டமும் ஒன்றாக 1965 தொடக்கம் 2012 வரை இயங்கிவந்தது. (1893 தொடக்கம் 1964 வரை திருகோணமலை மறைமாவட்டத்தின் நிர்வாகத்தின் கீழேயே மட்டக்களப்பு இயங்கி வந்தது. 2012 ஜீலை 03 ஆம் திகதியின் பின்னர் திருகோணமலை மறைமாவட்டம் தனியாகவும் மட்டக்களப்பு மறைமாவட்டம் தனியாகவும் இயங்குகின்றன). இக் குறித்த காலத்துள் மட்டக்களப்பு ஆயரகத்தை பிரதான முகவரியாகக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் ‘தொண்டன்’ என்னும்

சஞ்சிகையும், ‘வெட்டாப்பு’ என்னும் பத்திரிகையுமே இங்கு கவனத்திற்கு உட்படுத்தப்படுகின்றன. இவ்விரு இதழ்களும் கத்தோலிக்க சமய விடயங்களுக்கு அப்பால் கலை, இலக்கியம், வரலாறு, சமூகம் எனப் பல்துறை சார்ந்த விடயங்களைத் தம்மகத்தே உள்ளடக்கி வெளிவருகின்றன. எனினும் இவை அமைப்பிலும், பொருளிலும், நோக்கத்திலும் ஒன்றிலிருந்து மற்றொன்று சற்று வேறுபட்ட போக்கினையுடையனவாக உள்ளன. எனவே அவற்றை தனித்தனியாக நோக்குவதன் மூலம் அவ்வவற்றின் தனித்துவங்களை அடையாளப்படுத்த முடியும்.

## தொண்டன்

1969 பெப்ரவரி தொடக்கம் இற்றைவரை இச் சஞ்சிகை வெளிவருகின்றது. சமய நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்ட இச் சஞ்சிகை கால ஓட்டத்தில் கலை - இலக்கிய விடயங்களையும் உள்ளடக்கி மட்டக்களப்பிலுள்ள சமூகத் தொடர்பு நிலைய வெளியீடாக (Social Communications Centre) மாதாந்தம் வெளிவந்து கொண்டிருக்கின்றது. இம் மறைமாவட்டத்தின் ஆயரால் சமூகத் தொடர்பு நிலையத்திற்கென நியமிக்கப்படும் இயக்குனர் (அவர் அருட்தந்தையாக இருப்பார்) இச் சஞ்சிகையின் பிரதான ஆசிரியராகப் பணியாற்றுவார். இதன் இணை ஆசிரியராக மிக நீண்ட காலமாக (சுமார் 30 வருடங்கள்) மலர்வேந்தன் பணியாற்றுகின்றார். சுமார் 30 பக்கங்களைக் கொண்டதாக இச் சஞ்சிகை அமைந்துள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கடந்த நான்கு தசாப்தங்களாக இச் சஞ்சிகை வெளிவருவது இதன் பெறுமதிக்குச் சான்றாகும்.

இதுவரை சுமார் நானூற்றுக்கு மேற்பட்ட சஞ்சிகைகள் வெளிவந்துள்ளன. பத்திரிகையாகவே இது ஆரம்பிக்கப்பட்டது. ஆறு பக்கங்களில் அமைந்திருந்த இப் பத்திரிகையின் அப்போதைய விலை 15 சதமாகும். இரு ஆண்டுகளின் பின் தற்போதுள்ள சஞ்சிகை வடிவத்திற்கு இது மாற்றப்பட்டது. பத்திரிகையாக வெளிவந்த ஆரம்ப காலத்தில் ‘கத்தோலிக்க மாத ஏடு’ என்ற பெயருடனேயே இது காணப்பட்டமை இதன் தோற்றத்திற்கான நோக்கத்தைத் தெளிவுபடுத்தும்.

திருமலை - மட்டுநகர் மேற்றிராசன (மறைமாவட்டம்) ஐக்கிய சங்கத்தின் 41 வது ஆண்டு விழாவில் (1968) கத்தோலிக்க பத்திரிகை ஒன்று ஆரம்பித்தல் வேண்டும் என எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைய இது ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரிகின்றது. அச்சங்கத்தின் வெளியீடாகவே இது முன்னர் இருந்தது. சங்கத்தின் செயலாளர் செ.அந்தோனிப்பிள்ளை மற்றும் உப செயலாளர் அன்ரனி செபமாலை ஆகியோரால் இது ஆரம்பத்தில் வெளியிடப்பட்டது. முதல் மூன்று இதழ்களும் இவர்களது பொறுப்பிலேயே வெளியிடப்பட்டன. அதன் பின்னர் மேற்றிராசனத்தின் (மறை மவாவட்டம்) துணை ஆயராக இருந்த அதி வண.வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை இதன் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1972 இல் யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் ஆயராகப் பொறுப்பேற்றுச் செல்லும் வரை இவரே இதன் ஆசிரியராக இருந்தார்.

இதன் பின் ஆயரகம் இதனை வெளியிடுவதில் முன்னின்றது. அருட்தந்தை ரெக்ஸ் ஜோசப் செபமாலை இதன் பொறுப்பினை ஏற்றுச் செயற்பட்டார். அதன் பின்னர் அருட்தந்தையர்களான அன்ரனி ஜான் அழகரசன் (1980 - 1981), ஏ.தேவதாசன் (1982 - 1983), சி.பி.இராஜேந்திரம் (1983 - 1988 வைகாசி), பி.ஜோசப் (1988 ஆனி - 1989 பங்குனி: மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் தற்போதைய ஆயர்), கிங்ஸ்லி றொபேட் (1989 ஏப்ரல் - 1994 தை), ஏ.தேவதாசன் (1994 பெப் -

2000 பங்குனி ), ஜே.ஏ.ஜி. இரட்ணகுமார் (2000 ஏப்ரல் - 2005), றொகான் பேணாட் (2006 - 2011), லெஸ்லி ஜெயகாந்தன் (2012 தொடக்கம் இற்றை வரை) ஆகியோர் இதன் ஆசிரியர்களாகக் காலத்துக்குகாலம் பணியாற்றி வந்துள்ளனர்.

ஆய்வு நோக்கம் கருதி இச் சஞ்சிகையின் வளர்ச்சி நிலைகளை அறிந்து கொள்வதற்கு 1969 - 1979 வரை, 1980 - 1990 வரை, 1991 - 1999 வரை, 2000 - இற்றை வரை என்னும் காலப் பகுப்புக்களாக்கி நோக்குவது பொருத்தமானது.

## 1969 – 1979 வரை:

இதன் முதலாவது இதழ் 01 ஆம் திகதி பெப்ரவரி மாதம் 1969 இல் வெளிவந்தது. அப்போது திருமலை - மட்டுநகர் மேற்றிராசனத்தின் ஆயராக இருந்த இக்னேசியஸ் கிளெனி ஆண்டகை அவர்களும், துணை ஆயராக இருந்த வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களும், மட்டக்களப்பு புனித மரியாள் உப ஆசனக் கோயில் பரிபாலகரும் மட்டக்களப்பு வட்டார முதல்வருமாக இருந்த அதி.வண.ஜோர்ஜ், ஈ.எல்.வம்பேக் அடிகளும் ஆசிச் செய்தியினை முதலாவது இதழுக்கு வழங்கியிருந்தார்கள். ‘தன் பெயருக்கு ஒப்ப அது எப்போதும் நற்தொண்டு செய்வதாக அது அறிவை ஊட்ட வேண்டும் எனவும் இறைவனுக்கும் அயலானுக்கும் தம்மை அர்ப்பணித்துத் தொண்டு செய்ய அது நம்மைத் தூண்ட வேண்டும்’ எனவும் ஆயர் அவர்களும், ‘கத்தோலிக்க மக்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் முன்னேற்றம் அடையவும் திருச்சபையின் அப்போஸ்தலிக்க பணியிலும் ஈடுபட்டு உழைக்கவும் கிறிஸ்து மனிதருக்கு உவந்தளித்த மீட்பின் நற்செய்தியை ஏனையோருக்கு அறிவிக்கவும் இவற்றிற்குத் தேவையான ஞான அறிவை அவர்கள் வளர்த்துக் கொள்ளவும் இவ் வெளியீடு உதவவேண்டும்’ என்றும் துணை ஆயரும் தத்தமது ஆசிச்செய்திகளில் குறிப்பிட்டுள்ளனர். அத்துடன் ‘திருமலை - மட்டுநகர் மேற்றிராசன மக்களின் ஆன்ம நலன்களை வளர்க்க உதவ வேண்டும்’ என்ற ஒரே நோக்குடன் இவ்விதழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக முதலாவது இதழில் அதன் ஆசிரியர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

முதலாவது இதழில் பண்டிதர் க.சந்திரசேகரனாரின் (கல்முனை) வாழ்த்துப்பா ஒன்றும் இடம் பெற்றுள்ளது. அதிலிருந்து சில பாடல்கள் வருமாறு:

‘பதியுவந்த நசரேய நாதனாரின்
பரலோக நெறி காட்டும் தொண்டா — நின்னைப்
பற்றோடு வரவேற்றுப் போற்றுகின்றோம்
பாரெங்கும் அன்புநெறி பரவவென்றே

மேயவரு சேவைபுரி செம்மல் பல்லோர்
ஆய்வுரைகள் அழகுதமிழ் மிளரத் தாங்கி
வேற்றுநெறி செல்வோரும் விரும்பியுண்ண
வீறுநடைக் கவிதை கதை பலவுங் கொண்டு’

என அது தொடர்கின்றது.

கத்தோலிக்க சமயநெறியினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டாலும், வாழ்த்துப் பாவில் குறிப்பிட்டதைப் போல இன்று பல்வேறு சமயத்தினராலும் போற்றப்படும் சஞ்சிகையாகவும் பல்வேறு அம்சங்களைத் தாங்கி சமூக - இலக்கிய நோக்கிலும் கருத்துக்களை வழங்கி வருவதாகவும் உள்ளமையைக் காணலாம்.

அருட்தந்தையர்கள் பலர் இவ்விதழில் பல ஆக்கங்களை எழுதியிருந்தனர்.

'இயேசு என்பவர் யார்?' என்ற தலைப்பில் அருட் திரு.வே.அன்ரனி ஜான் அடிகளின் கட்டுரை இடம்பெற்றது. இவர் தமிழ் இலக்கியத்தில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். பல்வேறு நூல்களையும் எழுதியவர். அன்ரனி ஜான் அழகரசன் எனத் தமிழ் உலகில் நன்கறியப்பட்டவர்.

'தாலாட்டு' என்னும் தலைப்பில் அருட் திரு.றெக்ஸ் ஜோசப் செபமாலை கவிதையினை எழுதியுள்ளார். அவ்வேளை பாப்பரசர் குருத்துவ கலாசாலையில் (உரோம்) அவர் கல்வி கற்றுக் கொண்டிருந்தார். அதிலிருந்து ஒரு பகுதி வருமாறு:

'ஆதி அந்தமற்ற அண்ணலே
அறியாமை யிருள் நீக்க வந்த அருட்சுடரே
அமலக்கன்னி வயிற்றுதித்த நிமலனே
அளவிலா அன்புக் கடலே கண்வளராய்'

ஐக்கிய சங்க விதிகள் குறித்த விபரங்களும் இவ்விதழில் உள்ளன. பின்னர் படிப்படியாக இச் சஞ்சிகை தன் உள்ளடக்கத்தை விசாலித்துக் கொண்டது.

கோயில் திருவிழாக்கள் பற்றிய அறிவித்தல்கள், குறுக்கெழுத்துப் போட்டி (1 ஆம் பரிசு 15 ரூபா, 2 ஆம் பரிசு 10 ரூபா) மகளிர் மன்றம், திருமறை அறிவு மன்றம், இளைஞர் இல்லம், பெற்றோர் மன்றம், சிறுவர் உலகம் முதலான பகுதிகள் சேர்க்கப்பட்டன.

கோயில் திருவிழாக்கள் பற்றிய பகுதியில் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத்திலுள்ள ஆலயங்களின் திருவிழாக்கள் பற்றிய விபரங்களும், மகளிர் மன்றத்தில் பெண்களுக்குப் பயன் தரக்கூடிய குறிப்புக்களும், திருமறை அறிவு மன்றத்தில் கத்தோலிக்க விசுவாசம் குறித்த விடயங்களும் குறிப்பாக க.பொ.த.(சா/த) மற்றும் (உ/த) கிறிஸ்தவ பாடத்திட்டத்திற்கமைவான விடயங்களும், இளைஞர் இல்லத்தில் இளைஞர்களுக்குத் தேவையான அறிவுரைகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விடயங்களும், பெற்றோர் மன்றத்தில் கத்தோலிக்க திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கை நடைமுறைகள் தொடர்பான விடயங்களும் எழுதப்பட்டன.

ஆரம்பத்தில் இப் பகுதிகளுக்கான ஆக்கங்களை பெரும்பாலும் அருட்தந்தையர்களே எழுதி வந்தனர். பின்னர் படிப்படியாக இந்நிலை மாற்றமடைந்தது. அவர்களுடன் பொது மக்களும் ஆக்க கர்த்தாக்களாக இடம்பெறும் வகையில் தொண்டனின் களம் விரிந்தது.

அருட்தந்தையர்களைப் பொறுத்தவரை பலர் இக் களத்தினை நன்கு பயன்படுத்திக் கொண்டனர். ஆக்க இலக்கிய கர்த்தாக்களாக அவர்கள் இனங்காணப்பட தொண்டன்

வழிவகுத்தது. தொண்டனில் கதாசிரியராக இடம்பிடித்த மூதூர் என்.சி.அருள்வரதன் பின்னாளில் அருட்குருவானார். அதன் பின்பும் கணிசமான ஆக்கங்களை (சிறுகதைகள், கவிதைகள்) எழுதினார் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் எழுத்தாளர் நிக்கலஸ் என்பவரின் மகனாவார். அருட்தந்தை ஏ.ஏ.நவரட்ணம் (வ.அ.இராசரத்தினத்தின் புதல்வர்) ஆக்க இலக்கியத்தில் மட்டுமன்றி சிந்தனைக்குரிய பல கட்டுரைகளையும் எழுதினார்.

எழுத்தாற்றல் மிக்க அருட்பணியாளர்களை அடையாளம் காட்டிய வகையில் தொண்டன் சிறப்பிடம் பெறுகின்றது.

இக் காலப் பகுதியில் சமயச் செய்திகளுடன் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என்பனவும் இச் சஞ்சிகையில் வெளிவந்தன. 1970 புரட்டாதி மாத இதழ் தொடக்கம் தொண்டனின் அமைப்பில் மாற்றம் கொண்டு வரப்பட்டது. பத்திரிகை என்ற வடிவத்திலிருந்து சஞ்சிகை அமைப்பில் இது வெளியிடப்பட்டது. சுமார் 15 – 18 பக்கங்களில் இது அமைந்தது. தொடர்கதைளாகவும் ஆக்கங்கள் இடம்பெறத் தொடங்கின.

## சிறுகதைகள்

ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவ சமய நெறியினை வலியுறுத்துவனவாகவே கதைகள் அமைந்திருந்தன. கதாபாத்திரங்களின் பெயர்களும் அவ்வாறே அமைந்திருந்தன. ஆக்கங்கள் பெரும்பாலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டமை குறிப்பிடத்தக்கது. பின்னர் இந்நிலையில் மாற்றம் கொண்டு வரப்பட்டது.

'செல்வந்தரின் செல்லப்பிள்ளை' (1970) என்னும் தலைப்பிலான கதையினை என். சி. அருள்வரதன் எழுதியிருந்தார். ஏழையாகவும் செல்வனாகவும் இருந்த இரு சிறுவர்கள் வளர்ந்த போது ஏழை பொறுப்புடன் கல்வி கற்று உத்தியோகம் (பொலிஸ்) பார்க்க செல்வந்தனோ பொறுப்பற்றுத் திரிந்து தீயபழக்கங்களால் அந்நண்பனாலேயே தண்டிக்கப்படுதலை இது கருவாகக் கொண்டது. பின்வரும் சிறுகதைகளும் இக்காலப் பகுதியில் வெளிவந்தன.

'சத்தியம்' - திருஞானதீபன் (திருமலை), 'நான் பாவி', 'காணிக்கை', 'இருளிலிருந்து' - ஜெயம் (தாண்டவன்வெளி): 'மாறாக இருந்தால்..', 'நீ உனக்காக அல்ல', 'போனால் போகட்டும்', 'கண்கள் உறங்கியபோதும்' - செல்வி.றெ.விலியம் (திருமலை): 'மாறியது நெஞ்சம்' - மரியகொறற்றி (மட்டக்களப்பு) 'திருப்பம்' - அ.இராசேந்திரம் (மூதூர்): 'அடிமைப் பெண்' - எல்.அலோசியஸ் (ஊர்காவற்றுறை): 'உண்மை நட்பு' - மேரி ஜெயமணி (இரத்தினபுரி): 'மனம் நொந்தால்' - சி.எ.செல்வராசா (காவத்தை): 'வாழ்வு', 'உள்ளங்கள் பலவிதம்' - என்.சி.அருள்வரதன் (மூதூர்): 'அவன் மாறி விட்டான்' - அமிர்தநதி தேவா: 'சேற்றில் மலர்ந்த செந்தாமரை' - அனஸ்டீன் பத்திநாதன் (பாலையூற்று), 'அன்னையின் பரிசு' - ஜே.ஜே.இம்மானுவேல் (குருமடம், திருச்சி). இக் கதைகள் யாவும் சமூகப் பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை.

ஜெயம் எழுதிய 'மன்னிப்பு', 'தேவநீதி' என்னும் கதைகளும், ஏ.நெல்சன் எழுதிய 'இறைவன் அளித்த பதில்' என்னும் கதையும் தொடர்கதைகளாக வெளிவந்தன.

## கவிதைகள்

கதைகளைப் போலவே கவிதைகளும் ஆரம்பத்தில் கிறிஸ்தவ நெறிமுறைகளுக்கேற்ற வகையிலான விடயங்களையே கருப்பொருளாகக் கொண்டமைந்திருந்தன. மிகக் குறைவான கவிதைகளே ஆரம்பத்தில் வெளிவந்தன.

திருமலை - மட்டுநகர் ஆயராகப் பணிபுரிந்த இக்னேஷியஸ் கிளெனி ஆண்டகையைப் பற்றி 'மனித தெய்வம்' என்னும் தலைப்பில் வாகரை வாணனன் எழுதிய கவிதையிலிருந்து சில பகுதிகள் வருமாறு:

'மனித தெய்வமொன்று — எங்கள்
மறைமாநிலத்தில்
புனித ஆட்சி செய்கிறது — அந்தப்
புதுமை சிறிது சொல்வேன்

வெள்ளைக் காரனவன் இது
வெறும் புகழ் மொழியல்ல
கள்ள மனம் கூட இவன்
கண்டால் தூய்மை யாகும்
……………..

பேராசையில்லை உலகப்
புகழாசையில்லை
ஊராசையில்லை இவனுக்கு
ஓராசை உண்டு

ஓராசை என்றேன் - அது
உலகெலாம் கிறிஸ்துவின்
பேரொலிக்க வேண்டும் - என்னும்
பேராசை தம்பி.'

என அக் கவிதை அமைகின்றது.

## கட்டுரைகள்

இக்காலப்பகுதியில் பலகட்டுரைகள் எழுதப்பட்டன. அதி. வண. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை இதன் ஆசிரியராக இருந்த காலத்தில் அவரால் இலக்கிய நயமும் இலக்கிய ஆராய்ச்சியும் மிக்க கட்டுரைகள் எழுதப்பட்டன. இலக்கிய மன்றம் என்ற பகுதியில் 'போர்த்துக்கேயர் காலத்தில் எழுந்த சந்தியாகுமயோர் அம்மானை', 'ஞானப் பள்ளு' ஆகிய இலங்கைத் தமிழ் இலக்கியங்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளையும் இவ்விலக்கியங்களின் சிறப்புக்களையும் விமர்சனத் திறனோடு அவர் எழுதியிருந்தார். இவ்விரு நூல்களையும் ஆய்வு செய்வோருக்கு இக் குறிப்புக்கள் என்றும் உதவுவன.

நூல் விமர்சனக் கட்டுரைகளும் இக் காலத்தில் எழுதப்பட்டன. உ-ம்: அருட்தந்தை. வே.அந்தனி ஜான் அடிகள் எழுதிய 'புரட்சிக் கிறிஸ்து' என்னும் நூல் பற்றி தயாளம் எழுதிய விமர்சனத்தைக் குறிப்பிடலாம்.

இது தவிர 'காந்திஜியும் கத்தோலிக்க மதமும்' - காமல் இக்னேஷியஸ்: 'காவிய வாழ்வு' - வாகரை வாணனன்: 'நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் தமிழ்த் தொண்டு' - எஸ். அடைக்கலமுத்து ஆகிய கட்டுரைகளும் எழுதப்பட்டன. 'ஹினிதுமையில் ஒரு நாள்' என்னும் தலைப்பில் ம.ஜோசப் கனகசிங்கம் என்பவரால் பயணக் கட்டுரையும் எழுதப்பட்டிருந்தது.

இலங்கை நாட்டின் அரசியல் தொடர்பான விடயங்களையும் அவற்றில் கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகளையும் தாங்கிய ஆசிரிய தலையங்கங்கள் இக் காலத்தில் எழுதப்பட்டிருந்தமையைக் காணலாம்.

உ-ம்: பொதுத்தேர்தலும் கத்தோலிக்கரும் (1970) என்னும் தலைப்பில் வாக்காளரின் கடமை குறித்துப் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

'தேசத்தின் அரசியல் சட்டத்தையும் இறைவழிபாடு, திருமணம், குடும்ப சீவியம், பிள்ளைகளின் கல்வி, நீதி நியாயமான சமூக வாழ்க்கை முதலிய விடயங்கள் சம்பந்தமான சட்டங்களையும் இயற்ற உரிமையுள்ளவர்களைத் தேர்வு செய்யும் சந்தர்ப்பங்களில் கத்தோலிக்கர் தம் வாக்குரிமையைப் பயன்படுத்தாது விடுதல் மிகப் பெரிய தவறாகும்.' என பாப்பரசர் 12 ஆம் பத்திநாதர் கூறியுள்ளார்.

எனவே கத்தோலிக்க வாக்காளர் தங்கள் வாக்குகளைப் பூரண சுயாதீனத்துடன் தங்கள் மனச்சான்றின் படியும் தகுதியுள்ள ஒருவருக்கே அளிக்க வேண்டும். ஆகவே சுயநலனிற்காக அல்லது சிறு சலுகைகளைப் பெறுவதற்காகத் தகுதியற்றவர்களுக்கு வாக்குகளை அளித்தல் பெருந் துரோகமாகும். தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களின் அடிப்படைக் கொள்கைகளை ஆராய்ந்து அறிதல் வேண்டும்' என அது குறிப்பிட்டுச் செல்கின்றது.

துணிச்சலுடன் அரசியல் விடயங்களை விமர்சிக்கும் பண்பினைத் தொண்டன் ஆசிரியத் தலையங்கங்களில் இன்றும் காணலாம்.

இலங்கையின் முதல் தமிழ் ஆயரான யாழ்.மேற்றிராசன ஆயர் ஜெரோம் எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகையின் மறைவின் போது (17 ஆடி 1972) தொண்டன் அவர் குறித்த செய்திகளை முகப்புச் செய்தியாக வெளியிட்டது (ஆவணி 1972).

இவ்வாறு ஆக்கபூர்வமான விடயங்கள் பல இக்கால கட்டத்தில் வெளிவந்தமையைக் காணலாம்.

## 1980 – 1990 வரை:

1980 கள் இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க காலமாகும். இலக்கியத்தில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையைப் போலவே தொண்டனிலும் பல முன்னேற்றகரமான உள்ளடக்க

மாற்றங்கள் உள்வாங்கப்பட்டன. குறிப்பாக அன்ரனி ஜான் அழகரசன் அடிகள் தொண்டன் ஆசிரியராகப் பணியேற்றதும் தமிழ் இலக்கியத்தையும் கிறிஸ்தவ சமயத்தையும் இணைக்கும் பாலமாக இவ்விதழ் விளங்கியதை அதனை வாசிக்கும் எவரும் புரிந்து கொள்வர்.

தனிநாயகம் அடிகள் குறித்து ஆசிரியத் தலையங்கத்தில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'உலகத் தமிழ் மகா நாட்டுக்கு வித்திட்ட கருப்பொருள் நீ
தூத்துக்குடியில் தமிழ் இலக்கியக் கழகத்தைத் தொடங்கி வைத்த தலைவன் நீ
ஆங்கிலத்தில் தமிழ்ப் பண்பாடு பற்றிய முத்திங்கள் இதழை முகிழ வைத்த முதல்வன் நீ
.......................................................................................
இளவேனில் காலத்தில் உன்னை மறந்தவர்களைக் கூட
இலையுதிர் காலத்தில் நீ மறந்ததில்லை
உனக்குப் பாலைவனமாக இருந்தவர்களுக்கும்
பசுஞ்சோலையாகி நிழல் தந்தவன் நீ
வசந்தம் முடிந்தாலும் பூ வேர்கள் மறைவதில்லை'

தொடர்ந்து 1983 இல் ஆசிரியராகப் பணியாற்றிய அருட்தந்தை சி.பி.இராஜேந்திரம் அடிகளும் தன் பணிக் காலத்தில் 'தொண்டனை' இலக்கிய அந்தஸ்த்திற்கு உயர்த்தினார். பக்கச் சார்பற்ற விமர்சனங்கள் இக்காலத்தில் ஆசிரியத் தலையங்கங்களில் மிகக் கூடுதலாக இடம்பிடித்தன. இலங்கையின் சமகால அரசியல் விடயங்களை அறிந்து கொள்ள இவை துணை புரிந்தன.

உ-ம்: 'இலங்கை நாட்டின் சுதந்திரம் கொண்டாடப்பட்டது.

ஆயுதம் ஏந்தாமலே சுதந்திரம் அடைந்த இலங்கை நாட்டில், இன்று ஓரினம் சுதந்திரத்திற்காக ஆயுதம் ஏந்திப் போராடுகிறது எனில், நாம் அடைந்தது சுதந்திரம் தானா என்று சிந்திக்கத் தோன்றுகிறது'

இவரது காலத்தில் மலர்வேந்தன் அவர்கள் இணை ஆசிரியராகக் கடமையாற்றத் தொடங்கினார். இற்றைவரை இப் பணியினைத் தொடரும் அவர் ஆசிரிய பீடத்தின் அத்தனை வேலைகளையும் தனியொருவராய்ப் பல வேளைகளில் சுமந்து தொண்டன் காலத் தொடர்ச்சியறா வண்ணம் வெளிவர உந்து சக்தியாயுள்ளார். இவரும் சிறந்த எழுத்தாளராகையால் கவிதை, கட்டுரை எனப் பல்வேறு ஆக்கங்களைத் தொண்டனில் எழுதி வருகின்றார். சில சந்தர்ப்பங்களில் ஆசிரியர் தலையங்கங்களும் எழுதப்பட்டதுண்டு.

உ-ம்: 'கிறிஸ்துவைக் காண விரும்பினான் ஏரோது: ஆனால் காணவில்லை, ஏன்?
கையில் வாளிருந்தது- கருத்தில் நஞ்சிருந்தது
எதிர்பார்த்த இடையர்கள் கண்டனர்
கையிலே வெறுமை. கருத்திலே வெண்மை'.

இக் காலத்தில் எழுதப்பட்ட ஆக்கங்களை வருமாறு தொகுத்துக் கூறலாம்.

## சிறுகதைகள்

'சுகுணா ஒரு சுடர் விளக்காகிறாள்', 'ஒரு பெண் விதவையாகிறாள் ஒரு பெண் அனாதையாகிறாள்' - எஸ்.பி.வைலற் சரோஜா, 'பாக்கியம் பாக்கியவதியானாள்', 'வேண்டாம் விபச்சாரம்' - முகில்வாணன், 'இவர்கள் இப்படித்தான்' - தேவா, 'அவளுக்கு ஏது சுதந்திரம்' - கோசலை மைந்தன், 'வழி பிறக்கும்' - ஆனந்தா ஏ.ஜி.இராஜேந்திரம், 'மோகனம் ஒன்று முகாரியாகிறது' - தமிழ்மணி, 'அரியஸ் ஆயிரம் ரூபா' - எஸ்.ஜெயராஜா, இலட்சியப் "வொன்று வாடுகிறது' - செல்வி.எச்.ஆர்.வார்க்கீஸ், 'அன்று நத்தார்', 'எது நியாயம்' - ராஜ், 'கலைஞன் துயர்' - வ.அ.இராசரத்தினம், 'நாமே உன்னதங்கள்' - சூ.யோ.பற்றிமாகரன், 'கோவில் உண்டியல்' - செ.குணரத்தினம், 'ஒரு மேடையில் இரு துருவங்கள்' - கோகிலா மகேந்திரன், 'ஒரு கொடியில் இரு மலர்கள்' - நிமாலினி சிவானந்தராஜா, 'ஆத்மாவின் ராகங்கள்' - ஜெ.டேவிட், 'உண்மைகள் உறங்குகின்றன' - என்.சி.அருள்வரதன், 'அதுகள் என்னை மறந்து போச்சு' - ரூபன் மரியாம்பிள்ளை, 'ஒரு கௌரவ சிறைப் பறவை' - ஜனகமகள் சிவஞானம், 'கனவுகள் கற்பனைகள்' - நவநீதன், 'அக்கரையில் ஓர் அழுகுரல்' - எச்.ஆர்.வர்க்கீஸ், 'சாகடிக்கப்படும் சத்தியங்கள்' - நிலாதமிழின்தாசன், 'தூவானம் விடவில்லை' - பீற்றர், 'நியதிகளை மீறும் நிச்சயங்கள்' - சௌமினி சாம்பசிவசர்மா, 'மரத்துப்போன இதயம்' - ஓ.கே.குணநாதன் ஆகியன குறிப்பிடத்தக்கன.

தொடர்கதைகளும் இக்காலப் பகுதியில் முக்கிய இடம்பிடித்திருந்தன. அன்புமணியின் 'வரலாற்றுச் சுவடு', நாவண்ணனின் 'பயணம் தொடர்கிறது', செ.குணரத்தினத்தின் 'சொந்தம் எப்போதும் தொடர் கதைதான்', கோகிலா மகேந்திரனின் 'சந்தனச் சிதறல்கள்' முதலானவற்றை இதற்கு உதாரணங்களாகக் கூறமுடியும்.

மேற்குறிப்பிட்டவற்றில் பெரும்பாலான கதைகள் இலங்கையின் இனக் கலவரம் பற்றியனவாகவும் தமிழ் மக்களின் அவல வாழ்க்கை தொடர்பானவையுமாகும்.

உதாரணமாக 'வரலாற்றுச் சுவடு' 1983 இல் இலங்கையில் ஏற்பட்ட இன வன்முறையை அடிப்படையாகக் கொண்டது. 'பயணம் தொடர்கிறது' தமிழரின் அறப்போராட்டத்தின் மையமாக விளங்கிய 1961 இன் சத்தியாக்கிரகப் போராட்டத்தைக் கருவாகக் கொண்டது.

நாவண்ணனின் (சூசைநாயகம்) 'பயணம் தொடர்கிறது' தொடர் கதை பின்னர் நூலுருப் பெற்றது. இவ்வாக்கம் முழு நாவலாக 20 மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்தது. 1988 இல் தொண்டன் வெளியீட்டுத் திட்டத்தின் முதல் வெளியீடாக இது வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

## கவிதைகள்

பின்வரும் கவிதைகள் இக் காலத்தில் எழுதப்பட்டவற்றுள் குறிப்பிடத்தக்கவை. 'இலக்கியச் சந்தை' - மலர்வேந்தன் (எஸ்.ஜேசுதாசன்), 'விடிவானம் சிரித்ததம்மா' - மட்டுநகர் முத்தழகு, 'ஆனந்தப் பூக்கள்', 'பூக்கப்போகும் புதிய அத்தியாயம்' - வாசுதேவன், 'சிலுவையிலே ஒரு சிவப்பு மலர்' (தொடராக வந்தது) - வாகரைவாணன், 'குயிலே' - அன்பு முகையதீன், தோல்வியும் வெற்றியும்' - எச்.எம்.பாரூக், 'சித்திரையே ஏது செய்வாய்' - நிலா தமிழின்தாசன், 'நான் - இலக்கியம் - சூழல்' — சாருமதி.

நிலாதமிழின் தாசனின் ‘சித்திரையே ஏது செய்வாய்’ (1987) என்னும் கவிதையிலிருந்து ஒரு பகுதி:

’பூத்துவரும் சித்திரையே எமது வாழ்வில்
புலர்வேதும் கொண்டு வரும் நோக்கமுண்டா
காத்திருந்து காத்திருந்து விடிவு தன்னைக்
காணாது கடுமிருளில் வாடுகின்றோம்

நேத்திரத்தைப் பறிகொடுத்தோன் நிலையில் நாமும்
நிகரில்லாச் சுதந்திரத்தை இழந்து நாளும்
நீச்சலிடுகின்றோமே குருதி நீரில்
நீ யெம்மை மீட்க எது கொண்டு வாராய்?

வீடிழந்து பொருளிழந்து வீதி நின்று
வேதனையில் வேகின்றோம் விதியே யென்று
கூடிழந்த குயிலானோம் கொடிய காக்கை
கொத்தியெமை விரட்டிடவே சிதறியோடி

நாடிழந்து உலகத்தத் தெருக்கள் மீது
நாதியற்று அலைகின்றோம் அகதியாகி
ஓடிழந்த ஆமையினம் உயிர்வாழாது
உலகத்தில் நாடிழந்தோம் நாமும/தே’

## மொழிபெயர்ப்புக்கள்

குறிப்பாக மலையாள ஆக்கங்கள் சிலவற்றை வீ.ஆனந்தன் மொழிபெயர்த்தளித்தார்.
உ-ம்: ‘முப்பது வெள்ளிக் காசுகள்’ - மலையாள மூலம்: ரிஷிஜோன்

## கட்டுரைகள்

‘விவிலியம் கூறும் காதல் கதைகள்’ - அருட்திரு.வே.அந்தனி ஜான், ‘கிறிஸ்தவத் தமிழ்ப் புலவர்கள்’, ‘திருச்செல்வர் காவியம்’ - எப்.எக்ஸ்.சி.நடராசா, ‘குழந்தையின் வளர்ச்சியில் உணர்ச்சிப் பின்னணி’ - சா.இ.கமலநாதன், ‘Father Xavier Thani Nayagam : Priest, Scholar and Patriot - A.Jeyaratnam Wilson, ‘பொங்கல் விழாவும் கிறிஸ்தவர்களும்’ - அருட்திரு.ஜெரோம் லம்பேட், ‘தமிழ் இலக்கியத்தில் சமயச் செல்வாக்கு’ - க.சொக்கலிங்கம், ‘மலையகத் தமிழர்களின் எதிர்காலம்’ - அருட்திரு.டி.சாமிநாதன், ‘இலங்கையில் சிறுபான்மையோர் பிரச்சினை - தோற்றமும் வளர்ச்சியும் - சி.வசந்தராசபிள்ளை, ‘தமிழின் விமர்சனக் கலையின் முன்னோடி - வ.வே.சு.ஐயர்’ - க.யோகநாதன் (சாருமதி) என்பன குறிப்பிடத்தக்கன.

இக்காலத்தில் விமர்சனக் கட்டுரைகளும் எழுதப்பட்டன. ஜோசப் பாலாவின் ‘உணராத உண்மைகள்’ என்னும் சிறுகதைத் தொகுதிக்கு அன்புமணியால் எழுதப்பட்ட விமர்சனத்தையும், கோகிலா மகேந்திரனின் ‘தூவானம் கவனம்’ என்னும் நாவலுக்கு அன்புமணியும், இராகு - கேது என்பவரும் தனித்தனியாக எழுதிய விமர்சனங்களையும் உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.

தொண்டனின் வரலாற்றில் இக்காலம் குறிப்பிடத்தக்கதோர் மைல் கல்லாகும். இலங்கையின் புகழ்பூத்த எழுத்தாளர்கள் பலருக்குத் தொண்டன் தன் களத்தினை அளித்திருந்தது. தொடர்ந்து வந்த காலங்களில் இப் பண்பு பின்பற்றப்பட்டதெனினும் 1980 - 1990 களும் போல இன்னறைய நிலை இல்லை. இக் குறிப்பிட்ட காலத்தில் இவ்விதழ் சுமார் 30 - 32 பக்கங்களில் வெளிவந்தமையும் குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

## 1991 – 1999 வரை

இக் குறிப்பிட்ட காலத்தில் சென்ற தசாப்தத்தில் எழுதியோர் தொடர்ந்து எழுதுவதைக் காணலாம். கிறிஸ்தவம் என்ற எல்லைக்குள் மட்டும் நின்று விடாது பரந்த நோக்கில் பல்வேறுபட்ட கருத்துக்களுக்குக் களமாகத் தொண்டன் செயற்பட்டதைக் காணலாம். இலங்கைத் தமிழரின் குரலாகவும் அதேவேளை நீதியின் குரலாகவும் பக்கச் சார்பின்றி நடுநிலைநின்று விமர்சிக்கும் ஆசிரியத்தலையங்களையும் ஆக்கங்களையும் தாங்கியபடி இது தொடர்ந்து வெளிவந்தது. இக்காலத்தில் வெளிவந்த ஆக்கங்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன.

### சிறுகதைகள்:

'விமோசனம்', 'கானல்' - ந.பார்த்தீபன், 'வார்த்தை தவறி விட்டாய்', 'நானே உலகின் ஒளி' - மலர்வேந்தன், 'உணர்வுகளின் இராகங்கள்' - என்.சி.அருள்வரதன், 'சிறுவனின் பரிசு' - வ.அ.இராசரத்தினம், 'ஓட்டை', 'உயிர்ப்பு' - செ.குணரத்தினம், 'விடுதலை', 'கர்வம்' – 'உன்னை அறிந்தால்', 'பிள்ளை மனம் பித்து', 'மண்ணும் மனையும்' – கண.மகேஸ்வரன், 'விசுவாசம் விண்ணைத் தொடும்' – மாசிலாமணி, 'போர்க்கால விதவைகள்' அ.ச.பாய்வா, 'தப்புக்கணக்கு' – வாசுகி, 'மெய்யாகும் பொய்மைகள்' - ஜெயம், 'ஊமை உறவுகள்', 'உறவுகளும் உணர்வுகளும்' – கிறிஸ்டி முருகுப்பிள்ளை, 'அப்பா வருவாரா?' – கிறிஸ்டி, 'பிராயச்சித்தம்' – நளாயினி, '(அ) நாகரிகம்' – ந.பார்த்திபன், 'வண்டியின அச்சாணி' – சி.சுதந்திரராஜா என்பன குறிப்பிடத்தக்கன.

தொடர்கதைகளாக மிருணாளினி தவராஜாவின் 'பாதை கொஞ்சம் மாறிப் போனால்', ந.பாலேஸ்வரியின் 'அமலா உனக்காக ஜெபிக்கிறேன்', ந.பார்த்தீபனின் 'ம(னி)தம் ஆகியனவும் எழுதப்பட்டன.

ம(னி)தம் தொடர்கதை – 39 அத்தியாயங்கள் தொடராக வந்தது. மதத்தின் பெயரால் தம்முள் போராட்டங்களை வளர்த்து மனிதத்தைக் கொன்று விடும் மனிதர்களின் நடவடிக்கைகளை கூறுவது: இஸ்லாம் – கிறிஸ்தவம் – இந்து கதாபாத்திரங்களை மையமாகக் கொண்டு எழுதப்பட்டது. வின்சன்ட் – ரஸீனா ஆகியோரின் காதலுக்குத் துணை போகும் கண்ணன் இறுதியில் மதவாதிகளால் அடித்துக் கொல்லப்படுகின்றான். ஆசிரியர் கதை முடிவில் இவ்வாறு கூறுகிறார்: "மனிதம் சிதைந்திருந்தது. மதம் மட்டும் எங்கும் வியாபித்திருந்தது."

மொழிபெயர்ப்பு சிறுகதையும் இக் காலத்தில் எழுதப்பட்டது. 'நசரேத்தில் ஒரு பொம்மை' - வீ.ஆனந்தன்: மலையாள மூலம் – போளி மணியாட்டு புனிதர்களின் வரலாற்றினை தொடராக மெற்றில்டா இராஜேந்திரம் எழுதினார். புனித நாட்டுப் பயணம் என்னும் பயணக் கட்டுரையினை அருட்தந்தை. பி.ஜோசப் எழுதியிருந்தார்.

விமர்சனக் கட்டுரைகளும் எழுதப்பட்டன. வாகரை வாணனின் 'சின்னச் சின்னப் பூக்கள்' என்னும் நூலிற்கு அன்புமணியாலும், கண்ணதாசனின் 'இயேசு காவியம்' என்னும் நூலிற்கு வாகரை வாணனாலும் விமர்சனங்கள் எழுதப்பட்டன. எஸ்.ஜெயராஜாவின் 'மீண்டும் பிறந்தால் மலரும் வாழ்வு' என்னும் வானொலி நாடக நூலுக்கு பால.சுகுமார் விமர்சனம் எழுதினார்.

## கவிதைகள்

'போர்வேலிக்குட்பட்ட பூமியிலே', 'கசிப்பு' - நிலாதமிழின்தாசன், 'தேவன் வருவாரா?' - பவானி வடிவேல், 'இரவல் தாய்நாடு' - சாருமதி, 'எங்கு வந்து நீ பிறப்பாய்?' - இ.ம.ஜெகதீசன் குரூஸ், 'சுதந்திரத்தை வென்றெடுப்பீர்', 'ஞானச் சூரியன்' - எம்.எல்.எம்.அன்சார், 'விண்ணிலிருந்து ஒரு வாழ்த்து' - செ.குணரத்தினம், 'தவணை கொடு', 'இது முடிவல்ல', 'புண்ணிய பூமி', 'இரு தாயும் ஒரு தேசமும்', 'மனித மேகங்கள்' - மூதூர் ஜெயராஜ் (அ.ச.பாய்வா), 'யுத்தம்' - கே.ஜே. வேலுப்பிள்ளை, 'செபித்துப் பார்' - பெனி யே.ச, ஆகியன குறிப்பிடத்தக்கன.

இக் கவிதைகளிற் பெரும்பாலானவை சம காலப்பிரச்சினைகளை மையமாகக் கொண்டவை. சில உதாரண வரிகளை நோக்கலாம்:

**தவணை கொடு** (மூதூர் ஜெயராஜ்)
'பாலனே
இந்தப் பூமிக்கு மட்டும் வந்துவிடாதே
உன்னைத் துண்டாட
'பைபிள்'களும்
'பைலா'வுமாய்க் காத்திருக்கிறார்கள்
எனத் தொடங்கி
இறுதியாய்ப் பாலனே
ஆயுதங்களிங்கே அரசாள்வதால்
'ஆசியத் தொழுவங்களில் மட்டும்
பிறந்துவிடாதே
'ஷெல்'மரியாதைகளால்
சின்னாபின்னமாக வாய்ப்புண்டு

எனவே தவணை கொடு
உனக்குமொரு 'பங்கர்' தயாராகும்
அதுவரை...'
என முடிகின்றது.

**இரவல் தாய்நாடு** (சாருமதி)
'தேசம் எங்கள் சொத்து
தெரிந்தவர்களுக்குத் தெரியும்
தேசத்திற்கு நாங்கள்
இரவல் சொத்து

**புண்ணிய பூமி** (அ.ச.பாய்வா)
எலும்புகளால் பல் துலக்கி
எச்சில்களால் முகந்துடைக்கும்
ஈழத்து விடியல்கள்
........................

துப்பாக்கியால்
புழுதியை உழுது
ரவைகளால் சமாதான
விதைகளை விதைப்பார் எம்
'காக்கி' உழவர்கள்'

இக் காலப்பகுதியில் (1996) வழக்காடு மன்றம் பகுதி ஆரம்பிக்கப்பட்டது. சில தலைப்புக்கள் கொடுக்கப்பட்டு ஆதரித்தும் மறுத்தும் வாதங்களை முன் வைக்க இடம் கொடுக்கப்பட்டதுடன் சிறந்த வாதங்களையுள்ளடக்கிய ஆக்கங்களுக்குப் பரிசும் வழங்கப்பட்டது. உதாரணத் தலைப்புக்கள் சில.

- இலங்கைத் தமிழரின் இன்றைய நிலைக்குக் காரணம் பேரினவாதம் / ஒற்றுமையீனம்
- திருச்சபையின் செயற்பாடுகளில் பொது நிலையினரின் ஈடுபாடு அதிகரித்துள்ளது/ குறைந்துள்ளது.

## கட்டுரைகள்:

'தெள்ளுதமிழ்க்காப்பியம்' - வாகரை வாணன், 'மட்டக்களப்பில் நாடக அரங்கு' - சி.மௌனகுரு, 'தொடர்பு சாதனமும் பெண்களும்' - சி.ஜெய்சங்கர், '20 ஆம் நூற்றாண்டின் சரித்திர இடப்பெயர்வு' (Operation Riverasa பற்றியது) – அருட்தந்தை ஏ.நவரத்தினம்: 'பெண்ணின் உருவாக்கம்' – அருந்ததி சபாநாதன், 'சமூக விழுமியங்களிலும் கலாசாரத்திலும் திரைப்படங்களின் தாக்கம்' - சுமைரா அன்வர், 'நூற்றாண்டு காணும் மறை மாவட்டம்' - எல்.அலெக்சாண்டர், 'நான் புரிந்து கொள்ளும் இயேசுவின் பிறப்பு' - அருட்தந்தை.பி.ஜோசப், 'விபுலானந்த அடிகளின் தமிழ்ப் பணி - சில குறிப்புக்கள்' - செ.யோகராசா, 'தொண்டன் ஆரம்பம் முதல் இன்று வரை - ஒரு கண்ணோட்டம்' - ஆனந்தா.ஏ.ஜி.இராஜேந்திரம், 'கீழைத்தேச மெய்யியல் கோட்பாடுகளும் சமயங்களும்' - ப.வே.இராமகிருஷ்ணன், 'கிழக்குத் திசையில் இயேசுவின் சுவடுகள் தேடி' - எப்.எக்ஸ்.டயஸ், 'பழந்தமிழின் முக்கிய பண்புக் கூறுகள்' - க.யோகநாதன், 'தேம்பாவணியிற் சிலுவைப்பாடுகள்' - வ.அ.இராசரத்தினம், 'கத்தோலிக்க திருச்சபையும் மலரும் நூற்றாண்டும்' - எஸ்.ஏ.இருதயநாதன், 'இன்டர்நெட்டில் ஈழத் தமிழ்' - ஆர்.சிவலிங்கம் (உதயணன்) என்பன குறிப்பிடத்தக்கன.

இக் குறிப்பிட்ட காலமும் சமயம் தொடர்பான விடயங்களுடன் சமகால அரசியல் மற்றும் சிந்தனைப் போக்குகளுக்கு முன்னுரிமையளிக்கும் ஆக்கங்களையும் தொண்டன் பிரசுரித்து வந்துள்ளமையை அறியலாம்.

## 2000 தொடக்கம் இற்றை வரை (2013 பெப்ரவரி)

### சிறுகதைகள்

'இயேசு வந்து விட்டார்' - செ.குணரத்தினம், 'வேட்டைவாளி' - சஞ்சீவி சிவகுமார், 'அவலத்துளிகள் ஓயுமா?' - வயலற் சரோஜா, 'கண்ணீரின் அர்த்தம் வேறு' - ரூபன், 'இரத்தத்தில் ஊறிய...' - என்.பார்த்திபன், 'அப்பா' - நெடுந்தீவு சுரேஷ், 'நானும் வாழ வேண்டும்' - ஆனந்தா.ஏ.ஜி.இராஜேந்திரம், 'திருப்பம்' எஸ்.அருளானந்தம், 'அவர்கள் விருப்பம்' - எஸ்.ஜெயராஜா, 'கலை தந்த சொந்தம் - ஆர்.தேவகுமாரி, 'சுனாமி தந்த கை' - டிஹாசி, 'ஏன் ராத்தா அழுகிறாய்' - சம்மாந்துறை மஸூறா என்பன குறிப்பிடத்தக்கன.'கனவிடைத் தோய்ந்து' அ.ச.பாய்வா. இது தொடராக வெளிவந்தது.

### கவிதைகள்

'சாவுக்கு ஒரு சவால்', 'எப்படி எப்படி', 'ஆழ்மனதின் கட்டளைகள்' - பெனி, 'வெளிச்ச இரவு' - ஏ.அமல்ராஜ், 'புது உலகம் படைக்க புறப்பட்டு வருக' - ஏ.எம்.முகைதீன், 'தொடரும் துன்பங்கள்' - கே.ஜே.வேலுப்பிள்ளை, 'பிறர்க்குதவி' - புரட்சிபாலன், 'என்கிராமமே' - சந்திரிக்கா, 'முந்தியும் இப்போதும் இனியும்' - தமிழ்ரட்ணா, 'மீண்டுமொரு காலம் வேண்டும்' - எஸ்.புருஷோத்தமன், 'ஒளி விளக்கே' - ஆலன், 'முற்றுகையில்' - அ.ச.பாய்வா, 'இன்னும் பல யேசுக்கள் - எப்.ஜே. திலீபன், 'இறைமகனே துணை புரிவார்' - என்.சி.அருள்வரதன், 'நாள் வரும்' - நிலாதமிழின் தாசன், 'கீழ்த்திசையில் தோன்றும் ஒளிச் சுடரே' - எப். ஜே. திலீபன், 'ஓர் மார்கழித் திங்களில், - வாகரை வாணன் ஆகியன குறிப்பிடத்தக்கன.

'ஈழத்தை அளந்த புனிதன்' - அ.ச.பாய்வா (தொடர் காவியம்) ஜோசப் வாஸ் முனிவர் பற்றியது. 23 தொடர்கள் வெளிவந்தது. பின்னர் நூலுருப் பெற்றது.

'அன்பின் அரசி அன்னை தெரேசா' - அ.இருதயநாதன் தொடர் காவியமாக வெளிவந்தது. குறும்பா தொடராக மலர்வேந்தனால் எழுதப்பட்டு வருகின்றது. கவிதைகளிலிருந்து சில உதாரண வரிகள் வருமாறு:

**இன்னும் பல யேசுக்கள்** (எப்.ஜே. திலீபன்)
'மனித உயிர்களுக்காய்
மரணித்த மாசில்லா
மாமைந்தன் கன்னிமரி
மடியினிலே அன்று

மனித உரிமைகளுக்காய்
மரணிக்கும் மாசில்லா
மைந்தர்கள் பலர்தம்
அன்னையர் மடிகளிலே'

**ஓர் மார்கழித் திங்களில்** (வாகரைவாணன்: தன் மகளின் இழப்புக் குறித்து)
'ஓர் மார்கழித் திங்களின்
உதய வேளையில்
உன் மீது மட்டடும் ஏன்
இருள் ஓடி வந்து
உட்கார்ந்து கொண்டது?

அரும்புகள் இதழ் விரிக்கும் அந்த
அழகிய காலைப் போதில்
அரும்பு நீ மட்டும் ஏன்
கருகிப் போனாய்'

## கட்டுரைகள்

'ஊடகம், சமூகம், பண்பாடு - ஒரு சமூக மானுடவியல் பார்வை' - ச.சசிதரன், 'ஜெனீவாவை நோக்கியுள்ள சமாதானப் பார்வை' - மலர் வேந்தன், 'இயேசு என் உள்ளத்துள் பிறக்க வேண்டும்' பிறைனர் செலர், 'வன்முறையற்ற தொடர்பாடலும் வன்முறையும்' - அ.இருதயநாதன், 'பண்பாட்டு மயமாக்கல் காலத்தின் கட்டாயம்' - வாகரைவாணன், 'மட்டக்களப்பிலே கிறிஸ்தவம்' - அருட்திரு.டி.சாமிநாதன், 'மட்டக்களப்பு மாநில நாட்டாரிலக்கியங்கள்' - எஸ்.எதிர்மன்னசிங்கம், 'தமிழர் பண்பாடும் கத்தோலிக்க திருச்சபையும்' - எஸ். ஜெயராஜா, 'மட்டக்களப்பின் புகழ் பூத்த தமிழறிஞர்கள்' - அன்புமணி, 'மட்டக்களப்புப் பிரதேசத்தில் பாஸ்கா நாடகங்கள்' - ஸ்ரான்லி பிரபாகரன், 'ஈழத்துப் புனைகதை வளர்ச்சியில் மட்டக்களப்பின் பங்களிப்பு' - றூபி வலன்ரீனா, 'மட்டக்களப்பு மாவட்டத்தில் மறைக் கல்விப் பணி' - செல்வராணி, 'மட்டக்களப்பு மாவட்டத்தில் கத்தோலிக்கரின் சமூகப் பொருளாதார அபிவிருத்திப் பணிகள்' - இரா.கன்னிமேரி, 'பூர்வீக மட்டக்களப்புப் பிரதேசம் - ஒரு வரலாற்றுக்கண்ணோட்டம்'- க.தங்கேஸ்வரி 'ஊடகம், சமூகம், பண்பாடு - ஒரு சமூக மானுடவியல் பார்வை' - ச.சசிதரன், 'ஜெனிவாவை நோக்கியுள்ள சமாதானப் பார்வை' - மலர்வேந்தன், 'தமிழில் கிறிஸ்தவ இலக்கியங்கள்' - றூபி வலன்ரீனா (2012 தொடக்கம் இது தொடராக வெளிவருகின்றது). என்பன குறிப்பிடத்தக்கன.

தொண்டன் இதழுக்காக எடுக்கப்பட்ட நேர்காணல்களும் குறிப்பிடத்தக்களவு பிரசுரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தற்போதைய தொண்டனின் விலை 30 ரூபாவாகும்.

## வெட்டாப்பு

1992 தொடக்கம் இப்பத்திரிகை வெளிவருகின்றது. இம் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி நடுநிலைய வெளியீடாக (Cathecatical Centre) மாதாந்தம் இது வெளிவருகின்றது. இம் மறைமாவட்டத்தின் ஆயரால் மறைக்கல்வி நடுநிலையத்திற்கென நியமிக்கப்படும் இயக்குனர் (இவர் அருட்தந்தையாக இருப்பார்) அதன் ஆசிரியராகப் பணியாற்றுவார். கத்தோலிக்க சமய விடயங்கள் தொடர்பான விடயங்கள் இதில் பெருமளவு இடம்பிடித்திருந்தாலும் சமூகம் சார்ந்த விடயங்களும் சிறுவர் பகுதி, இளைஞர் பகுதி, முதியோர் பகுதி என ஒவ்வோர் நிலையினருக்குமான விசேட தனித்துவமான விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளமை இப் பத்திரிகையின் சிறப்புக்களுள் ஒன்றாகும்.

### ஆசிரியர்கள்

அருட்தந்தையர்கள் இதன் ஆசிரயர்களாகச் செயற்பட்டுள்ளனர். அருட்தந்தையர்களான நோயல் இம்மானுவேல் (1992 - 1999), ஏ.ஏ.நவரட்ணம் (1999 இறுதிப் பகுதி தொடக்கம் 2001 ஆவணி வரை), பி.ஜோசப் (2001 புரட்டாதி - 2006 மாசி வரை), சி.அன்னதாஸ் (2006 பங்குனி - 2006 புரட்டாதி), ஜே.எஸ்.மொறாயஸ் (2007 மாசி - 2011 மார்), ரி.ஏ.ஜூலியன் (2011 - இற்றைவரை)

ஆய்வு வசதி கருதி 1992 - 1999 : 2000 தொடக்கம் இற்றை வரை என்ற காலப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டு நோக்கப்படுகின்றது.

### 1992 – 1999

இதன் முதலாவது இதழ் செப்டம்பர் 14 ஆம் திகதி 1992 இல் வெளிவந்தது. முதலாவது ஆசிரியர் அருட் தந்தை நோயல் இம்மானுவேல் ஆவார்.

இலங்கையில் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டம் தனித்து மலர்ந்து 100 வருடங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அதனைச் சிறப்பிப்பதற்காகவும் அது தொடர்பான செய்திகளை விசுவாசிகளுக்குக் கொடுப்பதற்காகவும் விவிலியப் பாதையில் அவர்களை வழி நடத்துவதற்காகவும் வெட்டாப்பு ஆரம்பிக்கப்பட்டது என்பதை முதலாவது இதழின் ஆசிரியர் தலையங்கத்திலிருந்து அறிய முடியும்.

மறைமாவட்டச் சரித்திரம், மறை மாவட்டச் செய்திகள், பங்குகளின் (Parish) வரலாறு, விவிலியச் செய்திகள், விழாக்கள் பற்றிய செய்திகள் என்பவற்றைத் தாங்கி இரு வாரங்களுக்கு ஒரு தடவை ஆரம்பத்தில் இது வெளிவந்தது.

தற்போது தொண்டனைப் போலவே இதுவும் மாத இதழாக வெளிவருகின்றது. ஆரம்ப வெட்டாப்பு இதழ் தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் தமிழ் மொழியில் மட்டுமே பிரசுரமானது.

மறைமாவட்டச் சரித்திரம் அருட்தந்தை டி.சாமிநாதன் அடிகளால் தொடராக எழுதப்பட்டது. 1993 தொடக்கம் இப் பத்திரிகை மாத வெளியீடாக வெளிவந்தது. வருடச் சந்தா 30 ரூபா. ஆரம்பத்தில் கல்லச்சுப் பிரதியாக வெளிவந்தது.

இக்கால கட்டத்தில் கட்டுரைகள், குறுங்கதைகள், மறை மாவட்டச் செய்திகள், கவிதைகள், மாணவர் பக்கம் முதலானவை எழுதப்பட்டன. குறிப்பாக கிறிஸ்தவ சமயம் தொடர்பான கட்டுரைகளும் திருச்சபைச் செய்திகளும் அதிகமான இடத்தினைப் பெற்றன. அத்துடன் பாப்பரசரின் சுற்றுமடல், ஆயரின் சுற்றுமடல், ஆலயச் செய்திகள் முதலானவை எழுதப்பட்டன.

கவிதைகள், கட்டுரைகள் முதலானவை ஆரம்பத்தில் கிறிஸ்தவக் கருப்பொருள்களை மட்டுமே தாங்கி வந்தன. பின்னர் படிப்படியாக இந்நிலைமை மாறியது. எனினும் தொண்டன் சஞ்சிகையோடு ஒப்பிடும்போது கத்தோலிக்க பத்திரிகையாகவே வெளிவருவது குறிப்பிடத்தக்கது.

மாணவர் பக்கம் என்னும் பகுதி க.பொ.த சா/த மற்றும் உ/தர மாணவர்களின் நன்மை கருதி கிறிஸ்தவ சமயப் பாடத்திட்டத்திற்கேற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்துடன் விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி, விவிலிய வினா விடை போட்டி ஆகியனவும் இடம்பெற்றுள்ளன. வெற்றி பெற்றோருக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன.

கேள்வியும் திருச்சபையின் பதிலும் என்னும் பகுதியும் ஒதுக்கப்பட்டிருந்தன. இப் பகுதியில் கிறிஸ்தவ விடயங்கள் பற்றிய வாசர்களின் வினாக்களுக்கு அருட்தந்தையர்களால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

## சிறுகதைகள்

கதைகளைப் பொறுத்தவரை ஒதுக்கப்பட்டுள்ள விடயப் பரப்பிற்குள் அதனோடு சம்பந்தமான குறுங்கதைகளே அதிகம் எழுதப்பட்டன. இவற்றைத் தவிர இக் காலத்தில் சிறுகதைகளுக்கான பிரத்தியேக இடம் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

'வாழ்வில் ஒரு வசந்தம்' - கே. திரேஸ்மேரி, 'தேடிவந்த தெய்வம்' - முத்தூரான் ச.சதீஸ்வரன், 'மனம் மாற்றிய மாதா' - எஸ். மோசஸ், 'ரிமோட் கன்றோல்' - எம்.ரூபன், 'அழகிய உள்ளம்' - அ.நிமலினி

## கவிதைகள்

கட்டுரைகளும் செய்திகளுமே மிகப் பெரும்பான்மையாக இடம்பெறுவதால் கதைகள், கவிதைகள் என்பன மிகச் சிலவாகவே உள்ளன. எனினும் அவையும் குறிப்பிடத்தக்கனவாகவே உள்ளன. சிலவற்றை நோக்கலாம்.

'இயேசு பாலனே நீ வருக' - கி.அ.கலாவதி, 'தூய நல் இதயம் கேட்போம்' - என். சி. அருள்வரதன், 'இவ் (100) ஆண்டில் நீ எதற்காக?' - ம.ஸ்ரனிஸ்லஸ் (பின்னாளில் அருட்குருவானார்), 'தோல்விகள் தொடர்கதைகளல்ல' - டிலீப் பிரான்சிஸ்.

**'இவ் (100) ஆண்டில் நீ எதற்காக?'** - (ம.ஸ்ரனிஸ்லஸ்)
'இயற்கையே இறைவன் என்றான்
ஆதி மனிதன்
இறைவன்தான் இமயம் என்றான்
இடை மனிதன்
மனிதனே மனுக் குலத்தின் ஆக்கம் என்றான்
நவீன மனிதன் - இது
விண்ணுக்கு இழுக்கோ? - அல்லது
மண்ணிற்கு இழப்போ?'

**'தோல்விகள் தொடர்கதைகள் அல்ல'** - (டிலீப் பிரான்சிஸ்)
'வா இளைஞனே

எழுந்து வா
இதுவரை நீ
கனவுகளில்
கலந்திருந்தது போதும்
கலைத்துவிடு'

## கட்டுரைகள்

கிறிஸ்தவ சமயம் தொடர்பான கட்டுரைகளே அதிக இடம் பிடித்திருந்தன.

உ-ம்:

'வேதாகமும் அடிப்படைச் சபைகளும்' - அருட்தந்தை.ஜே.ஐ.சந்திரா, 'கார்த்திகை 02 ஏன்?' - அருட்தந்தை.ஏ.ஏ.நவரத்தினம், 'ஆசாரத்துக்குரிய ஜோசப்வாஸ் அடிகள்' - ஜெயமணி லோறன்ஸ், 'நிறைவை நோக்கி 1893 - 1993: புதுப்பயணம் - போதகர் மு.ஜேசுராஜா'

இக் காலத்தில் இப் பத்திரிகை பல்வேறு செய்திகளைத் தாங்கி வந்தது. கத்தோலிக்க தலைமைப் பீடமான வத்திக்கானின் செய்திகளும் மறைமாவட்டச் செய்திகளும் அதிக இடம்பிடித்திருந்தாலும் சம கால சமூக - அரசியல் விடயங்கள் தொடரபான விடயங்களும் ஓரளவு எழுதப்பட்டன. அவை எண்ணிக்கையில் மிகக் குறைவே.

## 2000 தொடக்கம் இற்றை வரை

இக் காலம் 'வெட்டாப்பின்' வளர்ச்சியில் மிக முக்கிய காலமாகும். குறிப்பாக உள்ளடக்கத்தில் முன்னேற்றகரமான பல மாற்றங்கள் உள்வாங்கப்பட்டன. அருட்தந்தை ஏ. ஏ. நவரட்ணம் ஆசிரியராகப் பொறுப்பேற்றதும் இம் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இயல்பாகவே சிந்தனைத் தெளிவும், ஆக்கத்திறனும், இலக்கியப் பரிச்சயமும், தமிழார்வமும் வாய்க்கப் பெற்றிருந்த அவர் இத்தகைய மாற்றங்களைத் தனது காலத்தில் அறிமுகப்படுத்தினார். அப்போது அருட்தந்தையாக இருந்த பொ.ஜோசப் அடிகளின் (தற்போதைய ஆயர்) ஆலோசனையில் இவ்விடயங்கள் அறிமுகப்படுத்தப்பட்டமையும் நினைவிற் கொள்ளத்தக்கது.

2000ஆம்ஆண்டுஜூபிலிஆண்டாகநினைவுகூரப்பட்டமையால்கத்தோலிக்கதிருச்சபையின் புதிய சிந்தனைகள் தொடர்பான ஆக்கங்கள் வெளியிடப்பட்டன. வெட்டாப்பு தன் உள்ளடக்கத்தில் புதிய பல விடயங்களைச் சேர்த்துக் கொண்டது. குடும்பக் குவலயம், இளைஞர் இணையம், மழலை மஞ்சரி ஆகிய அம்சங்கள் சேர்க்கப்பட்டன. அப்போதைய ஆசிரிய குழு உறுப்பினர்களாக இருந்த அருட்தந்தை ம.ஸ்ரனிஸ்லஸ், திருமதி. றூபி வலன்ரீனா, திரு. ஆ. கி.பிரான்சிஸ், திருமதி.கமலா கமலநாதன் ஆகியோர் முறையே இளைஞர் இணையம், குடும்பக் குவலயம், மழலை மஞ்சரி, முதியோர் மூச்சு ஆகிய பகுதிகளைப் பொறுப்பேற்றதுடன் அவ்வப் பகுதிகளுக்கு தத்தம் ஆக்கங்களை எழுதியும் வந்தனர். ஏறத்தாழ ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆக்கங்கள் 2000 – 2006 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு பகுதியிலும் வெளிவந்தன. ஒவ்வோர் விடயமும் குறுங்கதைகளுடன் விளக்கப்பட்டமை இவற்றின் சிறப்பம்சமாகும். இதனால் அதிகளவிலான குறுங்கதைகளுக்கு இப் பத்திரிகைகளினாயிற்று. இவை அக் குறிப்பிட்ட காலத்தில் வாசகர்களால்

கவரப்பட்டதாக இருந்தன. இவற்றில் இளைஞர் இணையத்தில் வெளிவந்த ஆக்கங்கள் பின்னர் நூலுருப்பெற்றன.

குடும்பக் குவலயம், மழலை மஞ்சரி, இளைஞர் இணையம், முதியோர் மூச்சு முதலான பகுதிகளில் தற்போது முறையே மனோ கந்தசாமி, திருமதி.செபஸ்தியான் பிள்ளை, அருட்தந்தை நவரட்ணம், ஆனந்தா ஏ.ஜி.இராஜேந்திரா ஆகியோர் எழுதிவருகின்றனர். முற்கூறிய உத்தி இவற்றில் தொடர்ந்தும் பின்பற்றப்படுவதைக் காணலாம். 'கதையொன்றுடன்' என்னும் பகுதியில் சிந்தனைக்குகந்த குறுங்கதைகளையும் அறிவுரைகளையும் அருட்தந்தை ம.ஸ்ரஸ்ரனிஸ்லஸ் எழுதி வருகின்றார்.

இப் பத்திரிகையில் மாதம் ஒரு நாடு என்னும் பகுதியில் கத்தோலிக்க சமயம் வழங்கும் நாடுகள் பற்றிய அறிமுகம் மாதா மாதம் வெளிவருகின்றது. அத்துடன் நற்செய்தி அறிவிப்புப் பகுதி ஒன்றும் உள்ளது. அதில் திருச்சபை தொடர்பான விடயங்களும் வத்திக்கான் செய்திகள் என்னும் பகுதியில் வத்திக்கான் செய்திகளும் வெளிவருகின்றன. யார் இவர் என்னும் பகுதி புனிதர்களை அறிமுகம் செய்வதாக அமைகின்றது. மெற்றில்டா இப்பகுதிக்கு ஆக்கங்களை வழங்கி வருகின்றார்.

கத்தோலிக்க சமயப் பணியில் பொது நிலையினர் - பதிவும் பார்வையும் என்னும் பகுதி அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இப் பகுதியில் குருக்கள் துறவிகள் முதலானோரின் பணிகளுக்கு அப்பால் பொதுநிலையினராகவுள்ள கிறிஸ்தவர்களின் சமயப் பணி குறித்து நோக்கப்படுகின்றது. அந்த வகையில் இப் பகுதி முக்கியத்துவம் உடையதாக விளங்குகின்றது. இப் பகுதியில் ஆ.கி.பிரான்சிஸ் தொடராக எழுதி வருகின்றார். சில கட்டுரைகள் இங்கு உதாரணத்திற்காகத் தரப்படுகின்றன.

'அதிர்ச்சியூட்டும் நற்கருணைப் புதுமைகள்', 'குருத்துவம்' - அருட்தந்தை.கிளமன்ற் அன்னதாஸ், 'பொதுநிலையினரும் பணி வாழ்வும்' - யோ.பத்திநாதன், 'மரணமில்லாப் பெரு வாழ்வு' - அருட்தந்தை ஏ.ஏ.நவரட்ணம், 'திருச்சபையின் சமூகப் படிப்பினைகள்' - அருட்தந்தை டி.சாமிநாதன், 'உயிர்ப்பு தெய்வீக வாழ்வின் உதயம்' - அருட்தந்தை பிறைனர் செலர், 'கிறிஸ்தவ தலைமைத்துவம்', 'திருச்சபையின் சமூகப் படிப்பினைகள்' — அருட்தந்தை டி.சாமிநாதன், 'நற்கருணை இயேசுவின் வாழ்வின் பிரசன்னம்' - அருட்தந்தை ஜுட் ஜோன்சன், 'புதுவாழ்வுக்கு அழைக்கும் அருளின் காலம்' - அருட்தந்தை நோயல் இம்மானுவேல்.

மூலிகை வைத்தியம் என்னும் பகுதியில் அது தொடர்பான விடயங்களை அகத்தியா என்னும் பெயரில் அ.ச.பிரான்சிஸ் சேவியர் எழுதி வந்தார். உளவியல் தொடர்பான கட்டுரைகளும் எழுதப்படுகின்றன. இவற்றை ஸ்ரான்லி பிரபாகரன் எழுதி வருகின்றார். இவற்றை விட நேர்காணல் பகுதியும் இடம் பெற்றுள்ளது.

### கவிதைகள்

சில கவிதைகள் இங்கு உதாரணத்திற்காகத் தரப்படுகின்றன.

'உணர்வுகள் எங்கே? - தி.மதி, 'சுனாமிக்கு யார் பொறுப்பு?' - ஜி.கிறிஸ்டி 'விண்ணும்

மண்ணும்' - வயலட் சரோஜா, 'எங்கே மனிதம்?' - கே.ஏ.ஜெனிற்றா, 'தாகம்', 'ஒரு வரம்' - அ.ச.பாய்வா, 'மீண்டும் ஓர் வில் தோன்றாதோ மேகத்தில்' - அருட்தந்தை நோயல் இம்மானுவேல், 'சுனாமியின் தழும்புகள்' - ஏஞ்சல் அவுட்ஸ்கோன், 'கடமை' - பே.சுகுணா, 'மரணிக்காத நட்பு' - சி.சுமதி, 'மனு' - தி.மதி, 'இளைஞர் சமுதாயமே' - அருட்தந்தை மதுராங்கன் குரூஸ் என்பன குறிப்பிடத்தக்கன.

அன்னை மேரியின் கதை என்னும் தலைப்பில் வாகரை வாணன் கவிதைத் தொடர் எழுதினார்.

## சிறுகதைகள்

சில சிறுகதைகள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. 'அங்கலட்சணம்' - அ.ச.பாய்வா, 'மொட்டுக்கள் இதழ் விரித்தபோது' - கவிதா, 'ஆழிப் பேரலை அடங்கவில்லையே - எம்.ஜெயவதனி, 'பிரிந்த உறவுகள் இணைந்தன' - ஞா.மரியநாதன், 'எங்கே மனிதம்?' - ஜெனிற்றா, 'முப்பது வெள்ளிக் காசுகள்' - வாகரைவாணன்.

தற்போது சிறுவர்களுக்காகத் திருவிவிலியச் சித்திரத் தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவிலியக் கதைகளைச் சித்திரத் தொடராக ஆனந்தா ஏ.ஜி.இராஜேந்திரம் படைத்து வருகின்றார். இத் தொடருக்கான சித்திரங்களையும் அவரே வரைந்தளிப்பது இதன் சிறப்புக்களுள் குறிப்பிடத்தக்கதாகும். சிறுவர்களுக்கு மட்டுமன்றி வேதாகமத்தை அறிய விழையும் எல்லோர்க்கும் இப் பகுதி பயன்பாடுடையதாக அமைந்துள்ளது.

வெட்டாப்புப் பத்திரிகை தன் உள்ளடக்கத்திலும் உருவத்திலும் வாசகர்களை ஈர்க்கும் வகையிலுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பிரதியொன்றின் தற்போதைய விலை முப்பது ரூபாவாகும்.

## மதிப்பீடு:

மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலையம் மற்றும் மறைக்கல்வி நடுநிலையம் ஆகியவற்றில் பதவிவழி இயக்குனர்களாகப் பணிபுரியும் அருட்தந்தையர்கள் தத்தம் காலப் பகுதியில் சிறப்பாகப் பணியாற்றி இவற்றின் வளர்ச்சிக்குப் பெரும் துணை புரிந்துள்ளனர்.

தொண்டன், வெட்டாப்பு ஆகிய இவ்விரு இதழ்களையும் வெளிக் கொணருவதில் பதவி நிலைகளுக்கு அப்பால் அவ்விதழ்களில் இணையாசிரியர் நிலையில் முறையே தொழிற்படும் மலர்வேந்தன் மற்றும் போதகர். ரி.ரி.பிரான்சிஸ் ஆகியோரின் தன்னலமற்ற பணி நினைவு கூரத்தக்கது. இயக்குனர்களாகப் பணியாற்றுவோர் மாற்றலாகிச் சென்றாலும் தொடர்ந்து பல வருடங்களாக இவர்கள் இவ் வெளியீட்டிற்காகப் பணியாற்றி வருகின்றனர். குறிப்பாக மலர்வேந்தன் கடந்த முப்பது வருடங்களாக இப்பணியினைச் செவ்வனே ஆற்றி வருகின்றார். இத்துடன் சிறந்த ஆக்கங்களைப் படைத்தும் வருகின்றார்.

மிக முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய அம்சமும் ஒன்றுண்டு. அதாவது இவ்விரு இதழ்களும் அருட்தந்தையர்கள் பலரை ஆக்க இலக்கிய கர்த்தாக்களாக அடையாளங் காட்டியிருக்கின்றன.

சிறந்த கட்டுரையாளர்களாகவும் சீரிய சிந்தனைத் திறனுடையோராகவும் கூட பலர் வெளிப்பட்டிருக்கினறார்கள்.

இன மத பேதமற்ற எழுத்தாளர் பலரை அறிமுகப்படுத்தியும் முது பெரும் எழுத்தாளர்களுக்கும் களம் கொடுத்தும் புதிய சிந்தனைகளுக்கு வித்திட்ட வகைளிலும் சமகால சமூக அரசியல் நிலைகளைப் பதிவு செய்த வகையிலும் துணிவுடன் கருத்துக்களை முன்வைக்கும் வகையிலும் இவ்விரு இதழ்களின் பங்களிப்பு கணிசமானது. இனிவரும் காலங்களிலும் நடுநிலைதவறாது பக்கச் சார்பின்றி ஆக்கபூர்வமான எழுத்துக்களைத் தாங்கி இவை வெளிவர வேண்டும்.

கிழக்கிலங்கைக் கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றை அறிய விழைவோரால் தவிர்த்துச் செல்ல முடியாத மிக முக்கியமான ஆவணமாக வெட்டாப்பு அமைந்துள்ளது. ஆக்க இலக்கியங்களுக்குக் களம் பெரிதாக அமையாவிடினும் இடம்பெற்றுள்ள ஆக்கங்கள் பெறுமதிமிக்கவை. கிறிஸ்தவ சமயக் கருத்ததுக்களே இதில் அதிகம் உள்ளன. பத்திரிகை என்பதால் அதன் அளவு நோக்கம் ஆகியவற்றிற்கேற்ப இது உள்ளது.

தொண்டன் பரந்த களத்தினைத் தனதாக்கி தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கும் பங்களிப்பினை நல்கி வருகின்றது. சமய - சமூக - இலக்கிய வெளியீடு என்னும் தன் மகுட வாக்கிற்கேற்ப அது பணியாற்றுகின்றது.

மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் இவ்விரு இதழ்களும் இன்றைய சூழலில் மிகப் பெறுமதி மிக்கனவாக விளங்குதை அவதானிக்கலாம். மத எல்லைக்கு அப்பால் சமூகம், கலை, வரலாறு, அரசியல் முதலான பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதும், மத பேதமற்று சகலருக்கும் களம் அமைத்துக் கொடுத்துள்ளமையும் மிக முக்கியமான அம்சங்களாகும்.

கிறிஸ்தவ நெறி முறைகளின்றும் பிறழாது அதேவேளை சமூக இலக்கியப் பணிகளையும் தம்மகத்தே சரி பாகமாகக் கொண்டு நற்செய்திப் பணியையும் தமிழ்ப்பணியையும் ஆற்றி வரும் இவ்விரு இதழ்களும் இலங்கையின் இதழியல் வரலாற்றில் தமக்கெனத் தனித்துவங்களோடு பங்களிப்பினை நல்கி வருவது மறுத்தற்கரிய உண்மையாகும்.

## உசாத்துணை


வெட்டாப்பு : மட்டக்களப்பு மறைக்கல்வி நடுநிலைய வெளியீடு: இதழ்கள் 1992 – 2013 மாசி வரை

தொண்டன்: மட்டக்களப்பு சமூகத் தொடர்பு நிலைய வெனியீடு: இதழ்கள்: 1969 – 2013 மாசி வரை

# முதலாவது தொண்டன் இதழ்



# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு

மலர் 1 ★ 1-2-1969 ★ மட்டக்களப்பு ★ விலை 15 சதம் ★ இதழ் 1

## உலக சமாதானம் அவசியம் தேவை.

**பாப்பிறையின் அறைகூவல்.**

விஞ்ஞானத்தில், நாகரீகத்தில், பிற கலைகளில் எல்லாம் முன்னேறிவிட்டதாக மனித சமுதாயம் பெருமைப் பட்டுக் கொள்ளுகிறது. அதேவேளையில் உலகின் எப்பக்கம் திரும்பினும் போர், போர் ஆயத்தம், பஞ்சம், பசி, கொலை, கொள்ளை என்ற பயங்கர நிலையையே காண்கிறோம். இந்நிலை மாறி உலகில் நிரந்தர சமாதானம் வளரவேண்டும். விஞ்ஞானமும் பிறநுண்கலைகளும் இந்த நோக்கினிலேயே உழைக்க வேண்டும். தத்தம் மனப்போக்குகளை மாற்றி, அவற்றில், சாந்தி, நிம்மதி, சமாதானம் வளரச் செய்து, சமூகங்களும், நாடுகளும், அகிலஉலகமுமே இச்சமாதான வழியை நாடவேண்டும். இச் சமாதானம் இறைவனால் மட்டுமே தரமுடியும். எனவே இறைவன் வழி நாடி, சமாதானம் கண்டு மகிழ்வோம்.

திருமலை-மட்டுநகர் ஆயர்

திரு - மட். ஆயர்

தொண்டனே! வாழ்க! வருக!!!

# முதலாவது தொண்டன் இதழ் தொடர்ச்சி..

திருமலை - மட்டுநகர் மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் 41வது ஆண்டு விழா ஒரு நற் பயனை என்றும் விளைவித்துள்ளது. அதாவது ஒரு மேற்றிராசன வெளியீட்டைப் பிறப்பித்துள்ளது. இது நமது மேற்றிராசனத்திற்கு மிகவும் அவசியமான ஒன்றாக இருந்தது. இவ் வெளியீட்டின் நோக்கம் பணி புரிதலே. அதன் பெயர் "தொண்டன்" என்று இருப்பதால், இக் கருத்து நன்றாக விளங்குகின்றது. தன் பெயருக்கொப்ப அது எப்போதும் நற்தொண்டு செய்வதாக. அது அறிவை ஊட்டவேண்டும்; நாம் எவ்வாறு தொண்டு செய்யவேண்டுமென்று நமக்குக் காண்பிக்கவேண்டும். இறைவனுக்கும் நம் அயலாருக்கும் நம்மை அர்ப்பணித்துத் தொண்டு செய்ய அது நம்மைத் தூண்டவேண்டும்.

இவ் வெளியீடு நற்சித்தி எய்த வேண்டுமென்று ஆசிகூறி, அதையும் அதை நடத்த ஒத்துழைக்கும் அனைவரையும் அன்புடன் ஆசீர்வதிக்கின்றோம்.

✠ இக்னேஷியஸ் கிலெனி யே.ச.
திருமலை - மட்டுநகர் ஆயர்.

**தொண்டன் நேயர்கட்கு.**

உங்களிடமிருந்து தொண்டன் ஏராளமான கருத்துரை, கதை, பாடல்களை எதிர்பார்க்கிறான். அறிவுரைகள், கதைகள் கருத்துப் பொதிந்தனவாகவும், வாசிக்க இரசிக்க இலைந்த நடையிலும் 350 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் விரும்பத்தக்கது. இதழின் ஒரு பக்கம் தெளிவாக எழுதப்பட்டு அல்லது தட்டச்சிடப்பட்டு இருத்தல் மிகவும் நன்று.

நன்றி.

ஆசிரியர்.

முகவரி:
28/2, எல்லைத்தெரு, வடக்கு
மட்டக்களப்பு.

பண்டிதர். க. சந்திரசேகரன்
கல்முனை.

★

மதிதவழோர் விண்ணகத்து முகிலின் கூட்டம்
மல்குபனி நீர்தெளிப்ப மகிழ்ச்சி பொங்க
வண்டாரும் மணமல்லி கைப்பூ வெண்பொன்
குடைகவிப்ப மரபுதமிழ்ப் பண்பு நீங்கா,

விடுமுறையால் மலர்க்காவி பரந்து நீண்ட
விழிகளுக்கு மைதீட்டமயில்கள் ஆல
வியன்மட்டுக் களப்பகழிப் பாடும்மீன்கள்
மிழற்றினிய நாதவொலி வரவு சொல்ல,

சதுராடும் மங்கையரால் நிறைத டாகத்
தேதயங்கு மரைமலர்பொன் விளக்கந் தாங்க
தண்தேறல் பொழிகொன்றை மாலை சூட்ட
தகதகமின் காரிவர்ந்து பெத்த லேமாம்,

பதியுவந்த நசரேய நாத ஞானின்
பரலோக நெறிகாட்டும் தொண்டா!; நின்னை
பற்றோடு வரவேற்றுப் போற்று கின்றேம்
பாரெங்கு மன்புநெறி பரவ வென்றே.

ஆயர்சூழாம் புறங்காப்ப உண்மை ஞான
அருட்குரவர் புடைசூழக் காத்த எங்கை
அழகார்மெய்ஞ் ஞானப்பூங் கொத்தை யேந்தி
ஆசிசொல்லிக் கன்னியர்கள் முன்னே செல்ல,

தூயதிரு மலைமட்டு மேற்றி ராசனத்தின்
சோதிநாதன் யேசுபிரான் நெறியில் நின்று
தொல்புகழ்சேர் அறிவர்பலர் துறவோர் தங்கள்
திருமறையின் விளக்கங்கள் தெளியச் சொல்லி,

மேயவரு சேவைபுரி செம்மல் பல்லோர்
ஆய்வுரைகள் அழகுதமிழ் மிளிரத் தாங்கி
வேற்றுநெறி செல்வோரும் விரும்பி யுன்ன
விறுநடைக் கவிதை கதை பலவுங் கொண்டு,

ஒப்பதிலா தெம்நாப்பண் உயர்க ருத்தாம்
உணவுதர வருகின்றான் வனப்பு மிக்க
ஒப்பற்ற தொண்டனிவன் வருகை போற்றி
உள்ளமலர் குவித்தவன்றும் வாழ்த்து வோமே.

நம் மேற்றிராசனத்தின் ஞானத் தேவைகளை நன்குணர்ந்து ஒரு மாதாந்த பத்திரிகையை ஆரம்பித்து நடத்த நீங்கள் முன்வந்ததைக் குறித்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். நம் கத்தோலிக்க மக்கள் கிறீஸ்தவ வாழ்வின் முன்னேற்றம் அடையவேண்டும். அத்துடன் திருச்சபையின் அப்போஸ்தொலிக்க பணியிலும் ஈடுபட்டு உழைக்கவேண்டும். சிறப்பாக, கிறீஸ்துநாதர் மனிதருக்கு உவந்தளித்த மீட்பின் நற்செய்தியை இன்னும் அறியாதிருப்பவர்களுக்கு அறிவிக்கவேண்டும். இப்பொறுப்புக்களை அவர்கள் நன் குணர்ந்து செயலாற்றுவதற்கு அவர்களது ஞான அறிவை வளர்க்கவேண்டும்; அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். இப்பணியைப் புரிவதற்காகவே உங்கள் வெளியீடு "தொண்டன்" என்ற மிகவும் பொருத்தமுள்ள பெயரைத்தாங்கி வெளிவருகின்றது. 2வது வத்திக்கான் பொதுச்சங்கத்தின் படிப்பினைகளை நம் மக்கள் நன்கறிந்து நடைமுறையில் கடைப்பிடித்து வாழ "தொண்டன்" துணைபுரிவானென்று எதிர்பார்க்கின்றோம். நம் மேற்றிராசனத்தின் பங்குகளில் நடைபெறும் சிறந்த முயற்சிகளையும் அறியத்தந்து, நம் மக்களை ஐக்கியப்படுத்தி முன்னேற்றப் பாதையில் அவன் இட்டுச்செல்ல வேண்டுமென்றும் விரும்புகின்றோம். "தொண்டன்" தனது தொண்டைச் சிறப்புறச் செய்ய நம் மேற்றிராசனத்தின் குருவர்களும், துறவிகளும், பொதுமக்களும் அவனுக்கு ஆதரவளித்து, செய்திகள், கட்டுரைகள், கதைகள், கவிதைகள் வழங்கி உற்சாகப்படுத்தும்படி கேட்டுக்கொள்வதுடன், அவன் பல்லாண்டு நம் மேற்றிராசனத்தில் நற்தொண்டு செய்யவேண்டுமென்று நல்லாசி கூறி, அவனையும் அவனுக்குத் துணைபுரியும் அனைவரையும் அன்புடன் ஆசீர்வதிக்கின்றோம்.

✠ வ. தியோகுப்பிள்ளை
திருமலை-மட்டுநகர் துணை ஆயர்.

**அறுப்பு மிகுதி ......... ஆட்களோ சொற்பம்**

## சமீபத்திய தொண்டன் இதழ்



செப்டம்பர் 14, 1992
மலர் - 1
இதழ் - 1

September 14, 1992
Vol. 1,
No. 1,

# வெட்டாப்பு

இலங்கையில் திருமலை-மட்டுநகர் மறைமாவட்டம் தனித்து மலர்ந்து 100வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதைச்சிறப்பிக்க மறைமாவட்டம் தயாரா-கின்றது. "இரட்சணியத்தின் காலம்" எனும் கொள்கையுடன் ஒவ்வொரு விசுவாசியும் முழுமையான ஆன்ம மனமாற்றத்திற்கு ஆயத்தமாக வேண்டும். நூற்றாண்டைச்சிறப்பிக்க திட்டங்கள் வகுக்கவும் அவற்றைச்செயற்படுத்தவும் ஆரம்பக் கூட்டம் மட்டுநகரில் நடைபெற்றுச் செயல்படத் தொடங்கியது.

இது விடயமான செய்திகளை விசுவாசிகளுக்குக் கொடுக்கவும் விசு-வாசிகளை விவிலியப்பாதையில் வழிநடத்தவும் "வெட்டாப்பு" எனும் தலைப்பில் இந்த இதழ் உங்கள் கரங்களில் தவழ வருகின்றது. எமது மறை மாவட்டத்தை அறிந்து கொள்வோம், கிறிஸ்துவில் எமது பாதையைப்புதுப்பித்-துக்கொள்வோம். இதற்கு "வெட்டாப்பு" உங்களுக்கோர் விடிவிளக்காக அமையும் என நம்புகின்றோம். மறைமாவட்ட சரித்திரம், மறைமாவட்ட செய்திகள், பங்குகளின் வரலாறு, விவிலியச்செய்திகள் விளக்கங்கள், நகைச்சுவை போன்ற சிறப்பம்சங்கள் இரண்டு வாரங்கட்கொரு தடவை வெளிவரவிருக்கும் இந்த "வெட்டாப்பு" இதழில் இடம் பெறுமென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம். இந்த இதழைச்சிறப்பிக்கத் தேவையான ஆக்கங்களை வாசகர்களும் தந்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம். நூற்றாண்டைச் சிறப்பிக்க ஆயத்தமாகும் ஒவ்வொரு விசுவாசியையும் இறைவன் ஆசீர்வதிக்க வழிநடத்த வேண்டுமென இறைவனை வேண்டுகின்றோம்.

அருட்திரு. நோயல் இம்மானுவேல்.

************************************

# சமீபத்திய வெட்டாப்பு இதழ்



நம்பிக்கை ஆண்டு 2012 - 2013

# வெட்டாப்பு

VETTAPPU

மனிதர் முன் ஒளிர

மாத இதழ்

மாசி - 2013 ஆரம்பம் : புரட்டாதி - 14 - 1992 மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு. ஒளி - 21 கதிர் - 01 விலை - 30/=

## கிறிஸ்தவ ஒன்றிப்பு அருள்பணியாளர்களின் ஒன்றுகூடல்

வருடாந்தம் இடம்பெறும் கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை முன்னிட்டு (ஜனவரி 18-25) 2013ம் ஆண்டுக்கான மட்டக்களப்பு, கல்முனை அம்பாறை ஆகிய பிரதேசங்களில் பணிபுரியும் அருள்பணியாளர்களின் ஒன்றுகூடல் ஜனவரி 29ஆம் திகதி மட்/சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதான திருச்சபைகளான கத்தோலிக்க திருச்சபை, அமெரிக்கன் - சிலோன் திருச்சபை, அங்கிளிக்கன் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபை, இரட்சணியசேனை, தென் இந்திய திருச்சபை ஆகியன கலந்து கொண்டன. முறையே இத்திருச்சபைகளிலிருந்து ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை, அருட்தந்தையர்களான N. அனுகூலன்,தயாளன், J.W. யோகராஜா மற்றும் கெப்டன் சந்திரசேகரம், A.S. ரூபன் ஆகியோரும் பல அருள்பணியாளர்களும் மற்றும் பொதுநிலை பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

தமிழ், சிங்கள மொழிகளில் இடம்பெற்ற இந்நிகழ்வு வழிபாட்டுடன் ஆரம்பமாகி ஆசியுரைகளுடன், மட்டக்களப்பு கிறிஸ்தவ ஒன்றியத்தின் ஆண்டறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது.

2013ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் முன்னுரையை அருட்தந்தை D. சாமிநாதன் வழங்கி வைத்தார்.

மட்டக்களப்பில் சமாதானத்திற்கான இலங்கைச் சமயங்களின் பேரவைக்கூட்டம்

அர்ப்பண வாழ்வில் இணைந்த துறவியருக்கு ஒரு நாள் தியானம்

# சமீபத்திய வெட்டாப்பு இதழ் தொடர்ச்சி..



சமாதானத்துக்கான இலங்கைச் சமயங்களின் வருடாந்த பொதுக் கூட்டம் கடந்த மாதம் 30ஆம் திகதி ஆயரில்லம் சாள்ஸ் மண்டபத்தில் தலைவர் பேரருட்திரு ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. கூட்ட ஆரம்பத்திலேயே தலைவர் அவர்கள் சபைக்குப் புதிதாக வந்திருந்த மட்டக்களப்பு ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா அவர்களை மகிழ்வுடன் வரவேற்று அவர் ஒரு உபதலைவராக செயல்படுவார் என்றுரைத்தார். புதிய ஆயர் தனது உரையில் இப்பேரவை சிறப்புடன் செயலாற்றுவதற்குத் தன்னுடைய நல்லாசிகளை வழங்கினார். புதிய தலைவராக மௌலவி ஜனாப் அலியார் அவர்கள் இவ்வாண்டு செயல்படுவார் என்று தலைவர் பேரருட்திரு சுவாம்பிள்ளை ஆயர் அவர்கள் தெரிவித்தார்.

செயலராக திரு விஸ்ணுமூர்த்தி அவர்களும், துணைச்செயலராக திரு. அல்போன்ஸ்மேரி அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். பொருளாளராக ஜனாப் சாந்தி முகைதீன் அவர்களே மறுபடியும் தெரிவு செய்யப்பட்டார். உப பொருளாளராக திரு பாக்கியராஜா அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். சபைக்குத் தேவையான செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். செயற்குழுவில் பெண்களும் இடம்பெறல் வேண்டும் என்ற கோரிக்கைக் கேற்ப மூன்று சமயங்களிலுமிருந்து மூவர் தெரிவு செய்யப்பட்டனர். இளைஞர் சார்பில் மூவர், சிறகம் இளைஞர் ஒன்றியத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்டனர். அருட்தந்தை சாமிநாதன் அவர்கள் திட்ட ஒருங்கிணைப் பாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

ஈற்றில் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் கடந்த 12 ஆண்டுகளாக சமயங்களூடாக சமாதானத்திற்கு ஆற்றிய பணிகளுக்கு அருட்தந்தை சாமிநாதன் நன்றி கூறினார். திரு. கனேசு அவர்கள் செயலாளராக இருந்து கடந்த 09 ஆண்டுகளாக ஆற்றிய சேவைகள் அனைத்திற்கும் அருட்தந்தை ஜோசப்மேரி அவர்கள் நன்றி பகர்ந்தார். பின்னர் ஆயர் சுவாம்பிள்ளை அவர்கள் தனது தலைவர் பதவியில் இருந்து இளைப்பாறுவதையும் சபைக்கு அறிவித்து விடைபெற்றார். ஆயினும் அவர் கௌரவ தலைவர்களுள் ஒருவராக என்றும் இருப்பார் என்று திரு கனேசு அறிவித்தார்.

-அருட்தந்தை D. சாமிநாதன்.

மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் இறை பணியாற்றி வரும் துறவியருக்கான ஒரு நாள் தியானம் இம்மாதம் 2ம் திகதி தாண்டவன்வெளியில் ஏழைகளின் சிறிய சகோதரிகள் இல்ல (வயோதிபர் இல்லம்) சிற்றாலயத்தில் நடைபெற்றது. மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயருடன் இணைந்து மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை F.X. டயஸ் அவர்கள் இந்நிகழ்வுக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

ஆரம்ப வழிபாடாக நற்கருணை எழுந்தேற்றமும் நற்கருணை ஆசீரும் இடம்பெற்றது. தொடர்ந்து இயேசு சபைத் துறவி அருட்தந்தை யூஸ்டஸ் பெர்னாண்டோ அவர்கள் "தற்காலத்தில் இலங்கையில் அர்ப்பண வாழ்வுத் துறவிகளின் வாழ்க்கை முறை" என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தினார். நம்பிக்கை ஆண்டில் ஏற்பாடு செய்யப்பட்ட இத்தியானத்தில் அர்ப்பணவாழ்வு துறவிகளான குருக்கள், அருட்சகோதரர்கள், அருட்சகோதரிகள் பலர் பங்கு பற்றி பயனடைந்தனர். ஆயர் தனது மறையுரையில் அர்ப்பணத்தில் அழைக்கப்பட்ட துறவியர் அனைவரும் அழைப்புக் கேற்ப வாழ வேண்டுமென்றும், நமக்கு வழிகாட்டியான இயேசுவிடமே வாழ்க்கை பலத்தைப் பெற முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

## சான்று பகரும் கிறிஸ்தவராவோம் – திருத்தந்தை

இந்த விசுவாச ஆண்டில் விசுவாசம் எனும் கொடைக்கு மகிழ்ச்சியோடு சான்று பகர நாம் அனைவரும் செபிக்குமாறு திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் கேட்டுள்ளார். கடவுளை நம்பாத ஒருவர், அண்மையில் கிறிஸ்தவராக மாறிய ஒருவரிடம் கிறிஸ்து எந்த நாட்டில் பிறந்தார் என்று கேட்க, எனக்குத் தெரியாது என்றார். சரி எந்த வயதில் இறந்தார் என்று கேள்விகளை தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார். எல்லாவற்றுக்கும் தெரியாது, தெரியாது என்று பதில் சொல்லிக்கொண்டே இருந்தார் புதுக்கிறிஸ்தவர். கிறிஸ்தவ மதத்திற்கு மாறியிருக்கும் நீ அவரைப் பற்றிக் குறைவாகவே தெரிந்து வைத்திருக்கிறாய் என்றார். அதற்குப் புதுக்கிறிஸ்தவர் நீங்கள் சொல்வது சரியே. நான் கிறிஸ்துவை பற்றி அதிகமாகத் தெரிந்து கொள்ளாததற்கு வெட்கப்படுகிறேன். ஆனால் எனக்கு ஒன்று மட்டும் நிச்சயமாகத் தெரியும். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நான் குடிகாரனாக இருந்தேன். கடனாளியாக இருந்தேன். என் குடும்பம் சிதறுண்டு போயிருந்தது. நான் வீட்டுக்கு வருவதைக் கண்டு எனது மனைவியும் பிள்ளைகளும் பயந்து ஒளிந்து கொண்டனர். ஆனால் இப்பொழுதோ குடியை விட்டு விட்டேன். கடனை அடைத்து விட்டேன். என் வருகைக்காக எனது மனைவியும் பிள்ளைகளும் காத்திருக்கின்றனர். இதையெல்லாம் கிறிஸ்து தான் எனக்குச் செய்தார். இந்த அளவுக்குக் கிறிஸ்துவைப் பற்றி எனக்குத் தெரியும் என்றார்.

(தொடர் 12ம் பக்கம் பார்க்க...)

## குருக்களுக்கான வருடாந்த தியானம்

மட்டக்களப்பு மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெப்ரவரி 17 – 22 வரை கண்டி மொண்ட்பாளாவில் இத்தியானம் நடைபெறவிருக்கிறது.

குருக்களுக்கான இத்தியானத்தை அருட்தந்தை இம்மானுவல் பெர்னான்டோ OMI அவர்கள் நெறிப்படுத்த இருக்கிறார்.

சிறப்பாக இந்த நாட்களில் நமது குருக்களுக்காக செபிப்போம்.

## ஒரு வார்த்தை சொல்லும் என் ஊழியன் நலமடைவார். (லூக் 7:7)


நூலகவியல்

# இலங்கையின் உயர்கல்வித்துறையை சர்வதேசத்தரத்திற்கு உயர்த்துவதில் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பின் வகிபங்கு: ஒரு புதிய எண்ணக்கருவை நோக்கிய ஆய்வு

துரையப்பா பிரதீபன்

## அறிமுகம்

கைத்தொழில் புரட்சி உலகளவில் பல்வேறு தளங்களிலும் உண்டு பண்ணிய மாற்றங்களை விட, தகவல்துறைப் புரட்சியானது பன்மடங்கு மாற்றங்களை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றது. உலக ஒழுங்கைத் தீர்மானிக்கின்ற மாபெரும் சக்தியாக, மூலாதாரமாக அது தன்னை நிலைநிறுத்திவிட்டது. சமகாலப் பேசுபொருளான அறிவுச் சமூகத்தின் ஆய்வுகளுக்கான அடித்தளமாக விளங்குவதும், சர்வதேச அளவில் உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு இன்றியமையாததுமான தகவல்வளத்தரவுத் தளங்களின் (Data Bases for Information Resources) பயன்பாட்டுத்தன்மையை, இலங்கையின் உயர்கல்வித்துறையினைச் சர்வதேசத்தரத்திற்கு உயர்த்தும் செயற்றிட்டத்தில் உள்ளீர்ப்பதன் முக்கியத்துவத்தைப் புலப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

அறிவுச் சமூகத்தின் அதியுன்னத மையமான பல்கலைக்கழகங்களின் சர்வதேசத் தரவரிசைப்படுத்தல்களில், பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி வெளியீடுகள், குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தரவுத் தளங்கள், மேற்கோள்ச் சான்றுச் சுட்டிகளில் இடம்பெற்றிருத்தலின் (Databases & Citation Indices) இன்றியமையாமை மற்றும் தகவல் தரவுத் தளங்களுக்கான பெறுமதி என்பன முக்கிய இடம்பிடித்துள்ளன. அத்தகைய தரவரிசைப்படுத்தல்கள் பலவற்றைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தியதனூடாகப் பெறப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகங்களின் நிலையினை மதிப்பீடு செய்து, இலங்கையின் உயர்கல்வித்துறையினைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல் தொடர்பான தற்போதய செயற்றிட்டத்தில் நூலகத் தகவல் வளப்பரிமாற்ற சர்வதேச வலையமைப்பினூடான அறிவுப் பகிர்வின் அவசியத்தை வலியுறுத்துவதோடு, நாடுகளுக்கிடையில் கல்விசார் தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் செயற்பாட்டை இந்தியாவின் உயர்கல்விச் சூழலில் பயில் நிலையிலுள்ள INFONET முறைமையுடன் இணைந்து மேற்கொள்வதன் சாதகத் தன்மையினையும் ஆராய்கின்றது. அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்பதனடிப்படையில் இலங்கையால் தனித்து நின்று முகங்கொடுத்துச் சர்வதேசத்தோடு போட்டிபோட்டு உயர்கல்வித்துறையைச் சர்வதேசமயப்படுத்துதல் திட்டத்தில் நூலகத் தகவல் வளங்களைக், குறிப்பாக ஆராய்ச்சி மற்றும் அறிவியல்சார் தகவல் தரவு மூலங்களைத் தேசிய மற்றும் சர்வதேசத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய வகையில் சர்வதேசத்துடன் பகிரும் செயற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளனவா என்பதும் நோக்கப்படுகிறது.

அண்மைக்காலம் வரை இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் உள்ளக ஆய்வுத்தேவைக்கு மிகவும் அடிப்படையான ஆராய்ச்சி இணையத் தகவல் வளங்கள் இல்லாமையும் அவற்றினை உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு பயன்படுத்தச் சிறந்த திட்டமிடல்கள் எவையும் மேற்கொள்ளப்படாமையும் சுட்டிக்காட்டப்படுகின்றன. இக்குறைபாடுகளை நிவர்த்திசெய்யப் புதிய எண்ணக்கருவை உள்வாங்குவதன் மூலம் ஒப்பீட்டளவில், மிகக் குறைந்த செலவில் தீர்வுகாண்பதற்கான சிபார்சுகள் முன்வைக்கப்படுகின்றன.

## ஆய்வுப்பிரச்சினை

சர்வதேசப் பல்கலைக்கழகத் தரவரிசைப்படுத்தல்களை ஆய்வுக்குட்படுத்துவதினூடாக தேசிய பல்கலைக்கழகங்களை மேம்படுத்துவதற்கான திட்டங்கள் தொடர்பில் இதுவரை எந்தவொரு ஆய்வுகளும் இலங்கையில் மேற்கொள்ளப்படவில்லை என்பது ஆய்வுப் பிரச்சினை. மேலும் இது தொடர்பில் இலங்கைப் பல்கலைக்கழகங்களை அதன் தூரநோக்கின் அடிப்படையில் சர்வதேச தரத்திற்கு உயர்த்துவதில் நூலகத் தகவல் வளங்களின் வகிபாகம் மற்றும் மேம்பாடு தொடர்பில் பொருத்தமான திட்டங்கள் உள்ளீர்க்கப்படாமை ஆய்வுப்பிரச்சினையின் பிரதான அங்கமாக அவதானிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் **“இலங்கையின் உயர்கல்வித்துறையைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துவதில் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பின் வகிபங்கு”** எனும் தலைப்பில் ஒரு புதிய எண்ணக்கருவை உள்ளீர்ப்பது தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. மேலும் தொடர்ச்சியாக இதுபற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டியதன் நியாயப்பாடும் தெளிவுபடுத்தப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

நூலகத் தகவல்வளங்களின் வகிபங்கை முன்நிறுத்தி, இலங்கை உயர்கல்வித்துறையின் சர்வதேசத் தரத்திலான மேம்படுத்தலுக்குத் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பு ஒன்றை உருவாக்குவதன் மூலம் மிகக் குறைந்த செலவில் தீர்வுகாண்பதற்கான கருத்திட்டச் செயற்பாட்டுக்கு அடித்தளம் ஒன்றினை ஏற்படுத்தல்.

## ஆய்வின் வரையறைகள்

இங்கு நூலகத் தகவல் வளங்கள் என்பது அச்சிடப்படாத, (Non Printed) ஆராய்ச்சி இணையத் தகவல்வளங்கள் மற்றும் ஆவணங்கள் மட்டுமே ஆய்வாளரால் கவனத்திற் கொள்ளப்படுகிறது. எனவே அச்சிடப்பட்ட தகவல் வளங்கள் மற்றும் ஆவணங்கள் ஆய்வில் கவனத்திற்கொள்ளப்படவில்லை.

## ஆய்வுமுறையியல்

பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவகச் சர்வதேசத் தரவரிசைப்படுத்தல் முறைகள் *(பார்க்க - பிற்சேர்க்கை அட்டவணை-1)* பலவற்றைப் பகுப்பாய்வுக்குட்படுத்தியதனூடாகப் பெறப்பட்ட முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு இலங்கைப் பல்கலைக்கழகங்களின் நிலையினை மதிப்பீடு செய்து, இலங்கையின் உயர்கல்வித்துறையினைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல் தொடர்பான தற்போதைய செயற்றிட்டத்தின் இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கான தற்போதய திட்டமிடல்கள் சர்வதேச தரவரிசைப்படுத்தல்களில் சாதகமான

நிலையினை உண்டுபண்ணக்கூடிய நிலையில் உள்ளனவா? என்பதை ஒப்பீட்டாய்வுக்குட்படுத்தி உபாயங்களை முன்வைக்கும் வழிமுறைகளை ஆராய்ந்துள்ளது.

## இலங்கைப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேசமயப்படுத்தலின் பின்னணி

ஒரு நாட்டின் தேசியப் பல்கலைக்கழகங்களை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல் எனும் கருப்பொருளானது உலகமயமாதல் செயற்பாட்டின் செல்வாக்கினால் முக்கியத்துவம் பெறத்தொடங்கிவிட்டது. இதனடிப்படையில் ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களை உலகமயமாதல் நடவடிக்கைகளிற்கு ஏற்றாற் போல் விரும்பியோ விரும்பாமலோ மேம்படுத்தி, மீளுருவாக்கம் செய்தல் என்பது தவிர்க்க முடியாத செயற்பாடாக திணிக்கப்பட்டுவிட்டது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இதில் அடிப்படையான தாக்கத்தை பல்வேறு நிலைகளில் ஏற்படுத்தியுள்ளமை கண்கூடு. ஒரு நாட்டின் கல்விச் சேவைகளின் மத்தியஸ்தானமாக உயர்கல்வி நிறுவனங்கள் இருக்கின்ற அதேவேளை தற்போதைய உலகளாவிய காலக்கிரமத்திற்கேற்ப ஏற்பட்ட மாற்றங்களின் அடிப்படையில் பொருளாதார ரீதியாக இலாபத்தை ஈட்டிக்கொடுக்கின்ற நிறுவனமாகவும் மாறிவிட்டது. அதனால் பல்கலைக்கழகங்கள் இன்று பாரம்பரிய மரபுகளில் இருந்து விடுபட்டு வளர்முக நாடுகளின் சந்தைப்படுத்தல் எனும் மாயவலையில் சிக்கி, தவிர்க்கமுடியாத நிலையில், காலவோட்டத்தோடு கலக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிகழ்வாகப் பல்கலைக்கழகங்களைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல் எனும் மேலாதிக்கச் சிந்தனை முக்கியத்துவம் பெற்றுவிட்டது. இலங்கையின் உயர்கல்வித் துறையிலும் இது ஊடுருவியுள்ளதை தற்போது உயர்கல்வித்துறை சார்ந்து முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தெட்டத்தெளிவாக விளக்குகின்றன. எனவே கல்வியினூடான, கல்விக்கான இந்தப் போட்டிச் சந்தையில் பயணிக்கவேண்டிய பாதையினை தெரிவுசெய்வதைத் தவிர வேறுதெரிவுகள் எதுவும் இலங்கைப் பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்களுக்கு இருந்திருக்கவில்லை என்றே கூறலாம். இந்தப் பின்னணியிலேயே இன்று இலங்கையின் உயர்கல்வித்துறையும் பல்கலைக்கழகங்களைச் சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் நடவடிக்கையில் காலடி எடுத்து வைத்துக் களம் இறங்கியுள்ளது. எனினும் தெரிவுசெய்த பாதையின் இலக்கினை அடைதலுக்கான திட்டமிடல்களில் உள்ளீர்க்கப்படவேண்டிய அடிப்படையான முக்கிய விடயங்களுக்கு சரியான இடம் கொடுக்கப்படாமை இங்கு அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

## இலங்கையின் உயர்கல்வித்துறை மேம்பாட்டுச் செயற்றிட்டம்

இலங்கை உயர்கல்வி அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் இணைந்து இலங்கையின் உயர்கல்வித்துறையைச் சர்வதேசமயப்படுத்தல் அல்லது சர்வதேசத் தரத்திற்கு உயர்த்துதல் எனும் செயற்றிட்டத்தை "ஆகக் குறைந்த செலவில் பயன்வாய்ந்ததும் தரம்வாய்ந்ததுமான ஆசியாவின் கல்விமையம் ஆக்குவோம்" எனும் தூரநோக்கின் அடிப்படையில் ஆரம்பித்துள்ளது. அதற்காக உயர்கல்வி அமைச்சு எதிர்பார்க்கும் பிரதான இலக்குகளான:-

- தேர்ந்தெடுக்கப்பட்ட 07 பல்கலைக்கழகங்களை (பேராதனை, கொழும்பு, மொறட்டுவ, யாழ்பாணம், றுஹுணு, ஸ்ரீ ஜயவர்த்தனபுர, மற்றும் களனி) சர்வதேச தரப்படுத்துகையில் முதல் 1000 க்குள் கொண்டுவருதல்.
- 10,000 வெளிநாட்டு மாணவர்களை உயர்கல்விக்காக இந்நாட்டிற்கு அழைத்தல்.

மேலும் இந்தச் செயற்றிட்டத்தின் முக்கிய குறிக்கோள்களான:-

- சகல உயர்கல்வி நிறுவகங்களுக்குமான உலகளாவிய தோற்றத்தை முன்னேற்றகரமாக்கல்
- திறமைவாய்ந்த ஆராய்ச்சிகள் மற்றும் வெளியீடுகள்
- முன்னேற்றகரமாக்கப்பட்ட உலகளாவிய தொடர்புகள் மற்றும் பரிமாற்றங்கள்

என்பவற்றின் வெற்றியைத் தற்போதுள்ள திட்டமிடல்களின் மூலம் அடையமுடியாது. எனவே மேற்படி இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கான தீர்க்கமான திட்டமிடல்கள் மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமானதும் சாதகமானதுமான எண்ணக்கருக்கள், கட்டமைப்புக்கள் உள்ளீர்க்கப்படவேண்டும்.

## இலங்கை உயர்கல்வித்துறை மேம்பாடும் சவால்களும்

“அறிவின் மாற்றம் நாட்டின் மாற்றம்” என்ற திடசங்கற்பத்துடன் இலங்கையின் உயர்கல்வித்துறை பயணித்துக்கொண்டிருக்கையில் பல்வேறுபட்ட சவால்கள் அதன் பயணத்தில் பாரிய தாக்கத்தை உண்டுபண்ணும் நிலைமை அவதானிக்கக்கப்பட்டது. குறிப்பாக புவியியல்சார், பொருளாதார, நிதியியல் காரணிகளோடு ஒப்பிடுகையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடு என்பதனடிப்படையில் இலங்கையால் தனித்துநின்று முகம்கொடுத்துச் சர்வதேசத்தோடு போட்டிபோட்டு உயர்கல்வித்துறையைச் சர்வதேசமயப்படுத்துதல் திட்டத்தில் வெற்றிபெறக்கூடிய செயற்திறன் மற்றும் வினைத்திறன் சார்ந்த சவால்கள், உயர்கல்வித்துறையை மேம்படுத்தல் என்பதற்கு, சர்வதேசம் வகித்திருக்கின்ற வரையறையை ஒப்பிட்டுப் பார்க்கையில், பெரும் அச்சுறுத்தலாகவே இருக்கின்றது. அதாவது தற்போது தகவல்வளம் சார்பாக உலகளவில் ஏற்பட்டிருக்கும் பாரிய போட்டிச் சந்தை, ஆராய்ச்சிக்கான அதன் தேவைப்பாடு, சர்வதேச பல்கலைக்கழகத் தரப்படுத்தல்களில் ஆராய்ச்சி வெளியீடுகள் குறிப்பிட்டு சொல்லக்கூடிய தரவுத் தளங்கள் மற்றும் சுட்டிகளில் இடம்பெற்றிருத்தலின் (Citation Indices & Citation Databases) இன்றியமையாமை மற்றும் தகவல் தரவுத் தளங்களுக்கான பெறுமதி என்பவற்றோடு ஒப்பிடும்போது ஒரு அபிவிருத்தியடைந்துவரும் சிறிய நாடு என்பதனடிப்படையில் இலங்கையால் சர்வதேசத்தோடு போட்டிபோட்டு உயர்கல்வித்துறையைச் சர்வதேசமயப்படுத்துதல் சவாலானதொரு விடயமாகவே காணப்படும்.

மேலும் சாதகமான வழிமுறைகள் என்பதை தனித்து நின்று இலங்கையினால் மேற்கொள்ளமுடியாது. காரணம் சர்வதேச அளவில் தகவல்வளத் தரவுத் தளங்களின் பெறுமதி, இலங்கையின் பொருளாதாரநிலை மற்றும் நிதியொதுக்கீடுகளோடு ஒப்பிடுகையில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென்பது சந்தேகமே.

## இலங்கை உயர்கல்வித்துறை மேம்பாடும் சாதகங்களும்

நிர்வாகக் கட்டமைப்பு சார்பாக திட்டமிடல், ஒழுங்கமைத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் செயற்பாடுகளில் இலங்கையின் உயர்கல்வித்துறையை இலகுவாக முகாமைசெய்யக்கூடிய சாதகமான காரணிகள் இலங்கையின் உயர்கல்வித்துறையின் மேம்பாடு சார்பான வெற்றிக்கு பலம் சேஉப்பதாய் பாஉக்கப்படுகிறது. இந்நிலையில் சர்வதேச நாடுகளுடன் உடன்படிக்கைகளை மேற்கொண்டு, கூட்டு நடவடிக்கைகள் (Collaboration) மற்றும் வளப்பகிர்வு (Resource Sharing) மூலம் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பு செயற்திட்டங்களை ஏற்படுத்துவதன்

மூலமாக உயர்கல்வித்துறை மேம்படுத்தலில் உள்ள சவால்களை சாதனைகளாக மாற்றம் செய்யக்கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இதனை எமது அண்டைய நாடான இந்தியாவுடன் ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மிகப்பொருத்தமானதாகவும் சாதகமானதாகவும் பார்க்கப்படுகிறது. இதற்கான காரணங்கள்,

- இந்தியாவின் 05 உயர்கல்வி நிறுவனங்கள் வெபோமெற்றிக்ஸ் (Webometrics) தரவரிசையில் முதல் 1000 இற்குள் இடம்பெற்றுள்ளமை.
- இந்தியாவின் உயர்கல்விச் சூழலில் பயில்நிலையிலுள்ள INFONET இன் சேவைகள். மேலும் இந்தியாவின் உயர்கல்வித்துறையில் இதன் செல்வாக்கு.
- இந்திய உயர்கல்வி நிறுவகங்களின் நிதி வளங்கள் பகிரப்பட்டும் ஒருங்கிணைக்கப்பட்டும் ஒரு கட்டமைப்பின் கீழ் மிகக் குறைந்த செலவில் உச்சப்பயனை ஆய்வுத் தேவைகளுக்காகப் பயன்படுத்தும் செயற்றிறன்மிக்க நடைமுறை வெற்றி.
- பல மில்லியன் ரூபாய் பெறுமதிவாய்ந்த 20 இற்கும் மேற்பட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான தகவல்வளத் தரவுத் தளங்களை *(பார்க்க - பிற்சேர்க்கை அட்டவணை-3)* 1000 இற்கும் மேற்பட்ட உயர்கல்வி நிறுவகங்கள் அனுபவிக்கக்கூடியதாக உள்ளமை.
- INFLIBNET என்ற விசேட கட்டமைப்பினூடான INFONET இன் சேவைகள் இந்திய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஆளுகைக்குள் உள்ளமையால் இலங்கையின் உயர்கல்வித்துறை அமைச்சும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் இந்தியாவுடன் அணுகுமுறைகள், அமுல்படுத்தல்கள் மற்றும் உடன்படிக்கைகளை மேற்கொள்வதற்கு இலகுவானதாக அமையும்.

## பல்கலைக்கழகத் தரவரிசைப்படுத்தல்கள்

உலகப் பல்கலைக்கழகத் தரவரிசைப்படுத்தலின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்கையில் 1983 ஆம் ஆண்டு முதலாவது தரவரிசை முறை அறிமுகப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. சீனாவில் உள்ள சங்காய் ஜியாஓ ரொங்க் பல்கலைக்கழகத்தின் உயர்கல்வி நிறுவகம் (The Institute of Higher Education of Shanghai Jiao Tong University) உலகிலே முதன்முதலாக பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலை 1983 இல் வெளியிட்டு தடம் பதித்தது. அதனைத் தொடர்ந்து பல்வேறுபட்ட அமைப்புகளும் நாடுகளும் தேசிய ரீதியாகவும், சர்வதேச ரீதியாகவும் பல்கலைக்கழகங்களை தரவரிசைப்படுத்துவதற்காக பல முறைகளையும் வரையறைகளையும் அறிமுகம் செய்தன. பொதுவாக அந்த முறைகளும் வரையறைகளும் தரவரிசைப்படுத்தல்கள் அமைப்பினது நோக்கங்களைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்து காணப்பட்டாலும் பக்கச்சார்புத் தன்மை, அனுகூலம் மற்றும் பிரதிகூலம் என்பவற்றைக் கொண்டுள்ளமை அறியப்பட்டுள்ளது. குறிப்பாக மேற்குலக நாடுகளின் செல்வாக்கு இதில் கணிசமாக உள்ளது. எவ்வாறெனினும் பல்கலைக்கழகங்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கான நோக்கங்களைப் பிரதானப்படுத்தி அறிமுகப்படுத்தப்பட்ட தரவரிசைப்படுத்தல்கள் இன்று பல்வேறு கோணங்களில் பயன்பாடுமிக்கதாகவும் முக்கியத்துவம் பெற்றதாகவும் விளங்கிக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக ஒரு நாட்டின் உயர்கல்வித்துறை மீதான நிதியொதுக்கீட்டை தீர்மானிக்கும் காரணியாகவும், பல்கலைக்கழகத் தெரிவை சர்வதேச அளவில் இனங்காண்பதில் ஒரு வழிகாட்டியாகவும் பல்வேறு படிநிலைகளில் இதன் முக்கியத்துவத்தைக் கொள்ளலாம்.

## சர்வதேசமயப்படுத்தலில் நூலகத் தகவல் வளங்களின் பங்கும் இலங்கையும்

சர்வதேசத் தரவரிசை முறைகளை ஆய்வுக்குட்படுத்தியதனூடாக பெறப்பட்ட முடிவுகளின்படி பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல்களில், நூலகத் தகவல் வளங்களின் பங்களிப்பு நேரடியாகவும் மறைமுகமாகவும் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றது. இன்று தரப்படுத்தல்கள் யாவும் தகவலைத் தளமாகக் கொண்டதாகவே பார்க்கப்படுகிறது. எனவே உயர்கல்வித்துறை மேம்பாட்டு நடவடிக்கைகளில் நூலகத் தகவல்வளங்களின் மீது கூடிய அக்கறை செலுத்தப்படவேண்டியுள்ளது. ஒரு பல்கலைக்கழகத்தைத் தரப்படுத்தலுக்கு உட்படுத்துகையில் பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

1. Science Citation Index Expanded (SCIE)/ Social Science Citation Index (SSCI) / Arts and Humanities Citation Index (A&HCI) முதலிய தரவுத் தளங்களில் பட்டியலிடப்பட்டுள்ள ஆய்விதழ்களில் வெளியாகியுள்ள ஆய்வுக் கட்டுரைகள் மற்றும் ஏனைய வெளியீடுகளின் எண்ணிக்கை. (15%)
2. SCOPUS/SciVerse தரவுத்தளத்தில் பட்டியலிடப்பட்டுள்ள ஆய்விதழ்களில் வெளியாகியுள்ள ஆய்வுக் கட்டுரைகள், ஏனைய வெளியீடுகளின் எண்ணிக்கை. (5%)
3. மேற்படி இரண்டு தரவுத்தளங்களின் தரவுகளின்படி ஏனைய நாட்டிலுள்ள ஆய்வாளர்களோடு இணைந்து மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் (International Research Collaboration) எண்ணிக்கை.(5%)
4. மேலுள்ள தரவுத் தளங்களின் தரவின்படி ஒவ்வொரு பல்கலைக்கழகத்திற்கும் கிடைத்துள்ள மேற்கோள் சான்றுகளின் (Number of Citations) எண்ணிக்கை.(20%)
5. Nature, Science முதலான ஆய்விதழ்களில் வெளியான ஆய்வுக்கட்டுரைகளின் எண்ணிக்கை. (10%)
6. ஒவ்வொரு பல்கலைக்கழகங்களினதும் இணையத்தளங்களில் உள்ள தகவல்வளங்கள், ஆவணங்கள் முதலானவற்றிற்கு சர்வதேச அளவிலான கேள்வி மற்றும் அதன் பிரபல்யம். (10%)
7. ஏனைய காரணிகளின் செல்வாக்கு (35%) மட்டுமே

மேற்படி பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்படுத்தலின் போதான, புள்ளி மதிப்பீட்டு ஒதுக்க வீதத்தில் நூலகத் தகவல் வளத்தின் செல்வாக்கு ஏறத்தாழ 65 வீதமாக (1-6வரையான காரணிகள்) காணப்படுகின்ற அதேவேளை, ஏனைய அனைத்துக் காரணிகளும் 35 வீதமான செல்வாக்கை மாத்திரமே கொண்டுள்ளன. இதன் மூலம் பல்கலைக்கழக தரவரிசைப்படுத்தல்களில் நூலகத் தகவல் வளத்தின் செல்வாக்கு கணிசமான இடத்தைப் பிடித்துள்ளது தெளிவுபடுத்தப்படுகிறது. எனவே ஒவ்வொரு பல்கலைக்கழகமும் சர்வதேச மேம்பாடு பற்றிய திட்டமிடல்களை மேற்கொள்கையில், மேற்குறிப்பிடப்பட்டுள்ள தரவுத் தளங்கள், மேற்கோள் சான்றுச் சுட்டிகள் மற்றும் சர்வதேசப் பிரபல்யம் வாய்ந்த ஆய்விதழ்கள் போன்றவற்றில் சந்தாதாரர்களாக இருந்து தத்தமது பல்கலைக்கழக தேவைகளை நிறைவு செய்யக்கூடிய தகைமையினைக் கொண்டிருக்க வேண்டும்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள தரவுத் தளங்கள் எதுவும் இல்லாமல் இருப்பதோடு உள்ளக ஆய்வுத் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய

இணையத் தகவல் மூலங்களைப் பயன்படுத்துவதற்குக் கூட சரியான திட்டமிடல்கள் எதுவும் இற்றைவரை மேற்கொள்ளப்படவில்லை. குறிப்பாக உலகளவில் ஆராய்ச்சித் துறைக்கு மிகவும் முதன்மையான தகவல்வளத் தரவுத் தளங்களாக இருக்கின்ற SciVerse, MathSciNet, Web of Science, Scopus போன்றவற்றிற்கு இலங்கையிலுள்ள எந்தவொரு பல்கலைக்கழகமும் சந்தாதாரர்களாக இல்லாமை ஆய்வுகளுக்கான தகவல்வளம் தொடர்பாக பற்றாக்குறையினை காண்பிக்கின்றது. மேலும் வெளிநாட்டு மாணவர்களை இலங்கைப் பல்கலைக்கழகங்களில் உள்ளீர்க்கும் செயற்றிட்டத்திற்கும் இது பாரிய சவாலாக அமையும். ஏனெனில் வெளிநாட்டு மாணவர்கள் வேறுநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களைத் தங்களின் உயர்கல்விக்காக தெரிவு செய்கையில் இணையத் தகவல்வள மூலங்களின் கிடைப்பனவு, ஆராய்ச்சித் தேவைகளுக்காக அவற்றை பயன்படுத்தக்கூடிய தன்மை என்பவற்றைத் தெளிவாக ஆராய்ந்து, அறிந்த பின்னரே தங்களின் பல்கலைக்கழகத் தெரிவை மேற்கொள்கின்றனர். மேலும் ஆய்வுக் கற்கைகளிற்கு பேராசிரியர்களை தெரிவுசெய்வதற்கு Web of Science, Scopus, Google Scholar Author Profile மற்றும் Researcher ID முதலான மேற்கோள்ச் சான்றுச் தரவுத் தளங்களை பயன்படுத்துகின்றனர். இதைவிட ஒரு ஆய்வாளர் தனது ஆய்வின் போக்கினை அறிந்து கொள்வதற்கும் எதிர்கால ஆய்வுகளைத் திட்டமிடுவதற்கும் மேற்படி தகவல்வளங்கள் முக்கியமானவை. இதேபோன்று உயர்கல்வி நிறுவனங்களும் தங்கள் நிறுவகத்தின் ஆய்வுகளிற்கு உலகளவில் ஏற்பட்டிருக்கின்ற கேள்வித் தன்மையை மதிப்பிட்டு ஆய்வுத்திட்டங்களை எதிர்கால முன்னேற்றப் பாதையை நோக்கி நகர்த்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்வதற்கும் மேற்படி தகவல் வளங்கள் முக்கியமானதாக இருக்கும்.

Web of Science எனப்படும் மேற்கோள்ச் சான்று தரவுத் தளத்தை மூலமாகக்கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஆய்வுக் கட்டுரை வெளியீட்டு முயற்சிகள் மிகக்குறைந்த பதிவுகளையே காட்டுகின்றன *(பார்க்க - பிற்சேர்க்கை அட்டவணை-4).* எனவே இவற்றினைக் கவனத்தில் ஏற்றுப் பல்கலைக்கழக மேம்படுத்தல் செயற்பாட்டில் நூலகத் தகவல் வளங்களிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியதன் நியாயப்பாடு தெளிவாகின்றது. ஆராய்ச்சிகளுக்கு அடிப்படைத் தேவையான தகவல் வளங்களிற்கு நிலவும் தேவைகளை தேசிய மற்றும் சர்வதேச அளவில் பூர்த்தி செய்யக்கூடிய நடைமுறைக்குச் சாதகமான வழிமுறைகள் கண்டறியப்பட்டு பயன்பாட்டிற்கு உரியதாக அமுலாக்கம் செய்தல் காலத்தின் கட்டாயமும் உயர்கல்வித்துறையின் இன்றியமையாத் தேவையுமாக உணரப்பட்டுள்ளது.

## பல்கலைக்கழகத் தரவரிசைப்படுத்தல்களில் இலங்கையின் இடம்

உலக பல்கலைக்கழகங்களின் தரவரிசைகள் பலவற்றை ஆய்வுக்குட்படுத்திய போது எடுக்கப்பட்ட முடிவுகளின்படி இலங்கைப் பல்கலைக்கழகங்களின் நிலை மிகவும் கீழ்நிலையில் அல்லது அதன் தரவரிசைகளில் இடம்பிடிக்க முடியாத நிலையில் இருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அண்மைய அதாவது 2012 தரப்படுத்தல் வெளியீடுகளின் படி ஸ்பெயினில் இருந்து வெளியிடப்படுகின்ற சைமாகோ நிறுவக தரவரிசையில் (Scimago Institutions Rankings) பேராதனை மற்றும் கொழும்புப் பல்கலைக்கழகங்கள் மாத்திரம் முறையே **2,388 வது** மற்றும் **2,809 வது** இடங்களை பிடித்துள்ள அதேவேளை துருக்கி நாட்டிலிருந்து வெளியாகின்ற

கல்வி வெளியீட்டு தரவரிசையில் (University Ranking by Academic performance) பேராதனைப் பல்கலைக்கழகம் மட்டும் இடம்பெற்று **1,466 வது** இடத்தில் உள்ளது. ஆக ஸ்பெயினின் மற்றுமொரு தரவரிசையான வெவோமெற்றிக்ஸ் (Webometrics) இல் மட்டும் இலங்கையின் அனைத்துப் பல்கலைக்கழகங்களும் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயம். என்றாலும் வெவோமெற்றிக்ஸ் தரவரிசையில் இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகத்தாலும் முதல் 1000 க்குள் இடம் பிடிக்க முடியவில்லை. மேலும் இங்கு குறிப்பிடப்படவேண்டிய முக்கிய விடயம் யாதெனில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மூன்று தரப்படுத்தல்களை தவிர ஏனைய ஆறு தரப்படுத்தல்களும் உலகில் முதல் நிலைக்கு வருகின்ற 500 பல்கலைக்கழகங்களின் பெயர்களை மாத்திரமே வெளியிடுகின்றன. இது இலங்கைப் பல்கலைக்கழகங்களுக்கு சவாலான விடயமே. தற்போதைய நிலையில் இலங்கையின் உயர்கல்வி சார்பாக வெவோமெற்றிக்ஸ் (Webometrics) தரவரிசை மட்டுமே சாதகமானதும், பல்கலைக்கழக மேம்படுத்தல் செயற்றிட்டத்தின் பொருட்டு பின்பற்றக்கூடியதுமான தன்மையினை கொண்டுள்ளது. இதனாலேயே இலங்கையும் வெவோமெற்றிக்ஸ் (Webometrics) தரவரிசைப்படுத்தலை மையப்படுத்தியதாக உயர்கல்வித்துறையின் செயற்றிட்டங்களை முடுக்கிவிட்டுள்ளது.

## வெவோமெற்றிக்ஸ் (Webometrics) தரவரிசையும் உயர்கல்வி மேம்பாடும்

இலங்கையில் உயர்கல்வித்துறையைச் சர்வதேசமயப்படுத்தல் எனும் செயற்றிட்டத்தின் வெற்றிக்கு வெவோமெற்றிக்ஸ் (Webometrics) எனும் உலகப் பல்கலைக்கழகங்களின் தரவரிசைப்பட்டியலை இலங்கை ஒரு கருவியாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளது. இதன்படி தேசிய அளவில் முதல் 07 இடங்களை பிடித்த பல்கலைக்கழகங்கள் தெரிவுசெய்யப்பட்டு சர்வதேசமயப்படுத்தல் திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது *(பார்க்க-பிற்சேர்க்கை அட்டவணை-2).*

## முடிவுரை

இலங்கையின் உயர்கல்வி முறைமையை தற்கால உலகிற்கு ஏற்றவாறு, அர்த்தமுள்ள நோக்குடன் மீள்சீரமைப்புச் செய்துகொண்டிருக்கும் இவ்வேளையில் பல்வேறுபட்ட சவால்கள் நிறைந்த பாதையைக் கடக்கவேண்டியுள்ளது. எனவே ‘‘குறைந்த செலவில் பயன்மிகுந்ததும் தரம் வாய்ந்ததுமான கல்வி மையம் ஆக்குவோம்’’ என்ற தூரநோக்கின் அடியொற்றிய பயணத்தை சிறந்த முறையில் திட்டமிட்டு, இலங்கையின் உயர்கல்வித்துறையை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தும் செயற்றிட்டத்தில் நூலகத் தகவல்வளப் பரிமாற்ற சர்வதேச வலையமைப்பொன்றினை இந்தியாவுடன் இணைந்து மேற்கொள்ளல் மிகச்சிறந்த சாதகமான விளைவுகளை கொடுக்கும். மேலும் இது குறுகிய காலத்தில் உயர்கல்வித்துறை வளர்ச்சிக்கு வலிமை சேர்க்கும் என்பது ஆய்வாளரின் கருத்து. இக்கருத்திற்கு செயல்வடிவம் கொடுத்து அமுல்படுத்த வேண்டிய கடமை உயர்கல்வித்துறையோடு தொடர்புபட்ட அனைத்து இலங்கையரையும் சாரும்.

## நன்றி தெரிவிப்பு

மொழிச்செம்மையாக்கத்திற்கு ஆதரவினை நல்கிய ஊவா வெல்லஸ்ஸப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. மா. ரூபவதனன் அவர்களிற்கு எனது நன்றிகள்.

## உசாத்துணை


1. Aguillo, I., Bar-Ilan, J., Levene, M. and Ortega, J.L. (2009). Comparing university rankings. *Proceedings of ISSI 2009* (Birger Larsen & Jacqueline Leta, eds.). BIREME/PAHO/WHO and Federal University of Rio de Janeiro, p. 97-107.
2. Buela-Casal, G., Gutierrez-Martinez, O., Bermudez-Sanchez, M. P. and Vadillo-Munoz, O. (2007). Comparative study of international academic rankings of universities. *Scientometrics*, 71(3), 349-365.
3. Deem, R., Mok, KH and Lucas, L. (2008).Transforming Higher Education in Whose Image? Exploring the Concept of the `World-Class' University in Europe and Asia.*Higher Education Policy*, 21(1), 83-97.
4. Hazelkorn, E. (2009). The problem with university rankings. *Science and Development Network* (11 March 2009). http://www.scidev.net/en/science-and-innovationpolicy/education/opinions/the-problem-with-university-rankings.html
5. Ministry of Higher Education (2012), Review of Activities.
6. Ngok, KL. and Guo, WQ. (2008). The quest for world class universities in China: critical reflections. *Policy Futures in Education*, 6(5), 545-557.
7. Ortega, J.L. and Aguillo, I.F. (2009). Mapping world-class universities on the web. *Information Processing & Management*, 45, 272-279.
8. Pratheepan, T. "Research productivity of Sri Lanka Universities during ( 1999-2010) based on theWoS Databse: A scientometric study." *ICULA - 2012, Contributing of the academic librarians toward a knowledge society.* Proc. of International Conference, University Librarians Association, Sri Lanka, 16th & 17th August, 2011. 288 – 29
9. Satyanarayan, M .(2005). INFLIBNET: its activities in Library Automation, *IASLIC Bulletin,* 50(2), 110.
10. The National Commission on Libraries and Information Science (NCLIS), USA(1975). National Programme Document.
11. UGC-INFONET Digital Library Consortium: A Compendium for member Institutions (2008). Ahmedabad: INFLIBNET Centre, 1.
12. Van Parijs, P. (2009). European higher education under the spell of university rankings. *Ethical Perspectives*, 16(2), 189-206.
13. Van Raan, A.F.J. (2005). Fatal attraction: conceptual and methodological problems in the rankings of universities by bibliometric methods. *Scientometrics*, 62(1), 133-143.
14. http://www.inflibnet.ac.in/econ/
15. http://www.webometrics.
16. http://www.arwu.org
17. http://www.topuniversities.com
18. http://www.cwts.nl/ranking
19. http://ranking.heeact.edu.tw
20. http://www.scimagoir.com

## பிற்சேர்க்கைகள்

### அட்டவணை-1 ஆய்வுக்குட்படுத்தப்பட்ட சர்வதேசத் தரவரிசைகள்

| இல | தரவரிசையின் பெயர் | வெளியீட்டாளர் | வெளியிடும் நாடு |
|---|---|---|---|
| 1 | Academic Ranking of World Universities | Shanghai Jiao Tong University | China |
| 2 | THE-QS World University Rankings | QS Quacquarelli Symonds Ltd. | England |
| 3 | Webometrics | Cybermetrics Lab | Spain |
| 4 | HEEACT | Higher Education and Accreditation Cojuncil | Taiwan |
| 5 | Leiden Ranking | Leiden University | Netherland |
| 6 | Scimago Institutions Rankings | SCImago Research Group | Spain |
| 7 | University Ranking by Academic performance | Informatics Institute of Middle East Technical University | Turkey |
| 8 | The New Global Ranking of World Universities | RatER | Russia |
| 9 | 4icu.org University Web Ranking | 4 International Colleges & Universities | Australia |

### அட்டவணை-2
### Webometrics Ranking of Sri Lankan Universities in World level from 2011-2012

| இல | பல்கலைக்கழகங்களின் பெயர் | 2011 | 2012 | 2013 |
|---|---|---|---|---|
| 1 | கொழும்புப் பல்கலைக்கழகம் | 2690 | 1447 | 1883 |
| 2 | பேராதனைப் பல்கலைக்கழகம் | 2615 | 1909 | 2711 |
| 3 | றுஹுணப் பல்கலைக்கழகம் | 2552 | 5071 | 2618 |
| 4 | களனிப் பல்கலைக்கழகம் | 6104 | 4434 | 3430 |
| 5 | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | 6068 | 3078 | 3198 |
| 6 | மொரட்டுவப் பல்கலைக்கழகம் | 2324 | 2794 | 1970 |
| 7 | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | 9096 | 7940 | 5976 |

### அட்டவணை-3
### INFLIBNET என்ற விசேட கட்டமைப்பினூடான INFONET இன் சேவைகள்

| இல | தரவுத் தளங்கள் | வலைத்தள முகவரி |
|---|---|---|
| 1 | American Institute of Physics | http://www.aip.org |
| 2 | American Physical Society (APS) | http://www.aps.org |

|  |  |  |
|---|---|---|
| 3 | Annual Reviews | http://arjournals.annualreviews.org |
| 4 | Cambridge University Press | http://uk.cambridge.org |
| 5 | Emerald Publishing | http://www.emeraldinsight.com |
| 6 | HeinOnline | http://home.heinonline.org |
| 7 | Institute of Physics | http://www.iop.org/EJ |
| 8 | J-STOR | http://www.jstor.org |
| 9 | Manupatra | http://www.manupatra.com |
| 10 | MathSciNet | http://www.ams.org/mathscinet |
| 11 | Nature Journal | http://www.nature.com |
| 12 | Oxford University Press | http://www.oxfordjournals.org |
| 13 | Portland Press | http://www.portlandpress.com |
| 14 | WOS | http://www.isi.com |
| 15 | Science Direct | http://www.sciencedirect.com |
| 16 | Project Euclid ( 30 titles) | http://projecteuclid.org |
| 17 | Royal Society of Chemistry | http://www.rsc.org |
| 18 | SciFinder Scholar | http://www.cas.org |
| 19 | Springer | http://www.springerlink.com |
| 20 | Taylor and Francis | http://www.informaworld.com |
| 21 | Westlaw India | http://www.westlawindia.com |

**அட்டவணை–4**

**இலங்கைப் பல்கலைக்கழகங்களின் ஆய்வுக் கட்டுரை வெளியீட்டு முயற்சிகள்**

(Source-*Web of Sci*ence)

| Rank | Name of The Universities | 1999 | 2000 | 2001 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | Univ Pera | 38 | 50 | 38 | 48 | 68 | 74 | 88 | 67 | 86 | 137 | 117 | 115 | **926** |
| 2 | Univ Colo | 34 | 30 | 23 | 40 | 45 | 39 | 50 | 39 | 40 | 69 | 76 | 70 | **555** |
| 3 | Univ Kela | 8 | 11 | 13 | 18 | 26 | 8 | 20 | 26 | 22 | 38 | 40 | 44 | **274** |
| 4 | Univ Ruhu | 5 | 10 | 12 | 15 | 17 | 10 | 14 | 18 | 14 | 25 | 35 | 26 | **201** |
| 5 | Univ Sri J | 5 | 9 | 10 | 13 | 14 | 6 | 10 | 12 | 17 | 28 | 25 | 12 | **161** |
| 6 | Univ Mor | 6 | 1 | 3 | 3 | 13 | 11 | 9 | 14 | 13 | 20 | 24 | 13 | **130** |
| 7 | Univ Jaff | 7 | 3 | 5 | 2 | 2 | 4 | 2 | 9 | 6 | 6 | 5 | 9 | **60** |

# யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் ஓர் வரலாற்று ஆய்வு

க.ஜெயதீஸ்வரன்

## அறிமுகம்

இலங்கை வரலாற்றில் பண்டு தொட்டு தனித்துவமான பிராந்தியமாக அடையாளப்படுத்தப்பட்டு வரும் வடஇலங்கைக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்திற்கு நீண்டதொரு கல்விப்பாரம்பரியம் உண்டு. பண்பாட்டு அடிப்படையில் இலங்கையின் ஏனைய வட்டாரங்களில் இருந்து தனிப்போக்குடன் வளர்ந்த யாழ்ப்பாணம் ஐரோப்பியர் ஆட்சியில் மேலும் அது தனிப்போக்குடன் வளர்ந்தமைக்கு அக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கல்வி முறைகள் முக்கிய காரணங்களாக அமைந்தன. 16ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் திண்ணைப்பாடசாலைகள் ஊடாக வளர்க்கப்பட்ட இக்கல்விப்பாரம் பரியம், போத்துக்கேயர் ஆட்சியில் இருந்து கோறளைப் பாடசாலைகள், கிறிஸ்தவப் பாடசாலைகள், மிசனரிப் பாடசாலைகள் மற்றும் சைவ தமிழ்க் கலவன் பாடசாலைகள் என்பவற்றின் ஊடாக மேலும் புத்துயிர் பெற்றன. இக்கல்விப் பாரம்பரியம்தான் காலப்போக்கில் இலங்கையின் நிர்வாகப் பணிகளில் தமிழர்கள் மேலாதிக்கம் பெறுவதற்கும், யாழ்ப்பாணத்தின் பொருளாதாரம் ‘மணியோடர் பொருளாதாரம்’ என்ற சிறப்பு பெயரால் அழைக்கப்படவும் காரணமாக இருந்தது. இக்கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமாகவும், குறியீடாகவும் இன்றுவரை நிலைத்திருக்கும் நினைவுச் சின்னங்களில் ஒன்றே யாழ்ப்பாண பொது நூலகமாகும். இந்நூலகம் இலங்கையில் மட்டுமன்றி தென்னாசியாவில் உள்ள தலைசிறந்த நூலகங்களில் ஒன்று என்ற பெருமைக்கு உரியது.

## யாழ் பொது நூலகம் தோன்றிய வரலாற்றுப் பின்னணி

சர்வதேச அளவில் யாழ்ப்பாணத்தை அடையாளப்படுத்திக் கொள்வதில் யாழ் பொதுசன நூலகத்திற்கு முக்கிய இடம் உண்டு. இதன் வெளிப்பாடு இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் உணரப்பட்டாலும் அதன் தோற்றத்திற்கு நீண்டகால வரலாற்றுப் பின்புலம் இருந்ததை இவ்விடத்தில் சிறப்பாக நோக்கத்தக்கது. முதன்முதலாக யாழ்ப்பாண மக்களது நூலகப்பாவனை பற்றிய தகவல்கள் யாழ்ப்பாணத்தரசர் கால வரலாறு பற்றிக் கூற எழுந்த பிற்கால இலக்கியங்களில் காணப்படுகிறது. அவற்றினடிப்படையில் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட ஆரம்பகால நூல்நிலையமாக கி.பி.13 ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாணத்தரசர்களால் நாயன்மார்கட்டுக் குளத்திற்கருகில் அமைக்கப்பட்ட “சரஸ்வதி மகால்” எனும் நூல்நிலையம் குறிப்பிடப்படுகின்றது. இதற்கு முன் யாழ்ப்பாணத்தில் நூலகம் அமைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் எவையும் இதுவரை கிடைக்கப் பெறாததன் காரணத்தால் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்ட ஆரம்பகால நூல்நிலையமாக “சரஸ்வதி மகால்” நூல்நிலையத்தை அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

சரஸ்வதி மகால் நூலகம் தொடர்பாக நோக்கும்போது யாழ்ப்பாணத்தை ஆட்சிபுரிந்த சிங்கை ஆரியச்சக்கரவர்த்தி அறிவியல் துறைகளை வளர்க்கவும், பாதுகாக்கவும் தமிழ்ச்சங்கம் ஒன்றை

அமைத்து உள்ளூர் அறிஞர்கள் மற்றும் தமிழ் நாட்டு அறிஞர்கள் என்போரை வரவழைத்து நூல்கள் படைக்க வழிவகுத்ததுடன் இச்சங்கத்திற்கென சங்குவேலி எனும் கிராமத்தின் வயல்நிலங்களை தானமாக வழங்கியிருந்தான். இச்சங்கத்தில் இயற்றப்பட நூல்கள் அனைத்தும் சரஸ்வதி மகாலயம் எனும் நூல் நிலையத்தில் பாதுகாக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது. யாழ்ப்பாணத்தரசர் வரிசையில் ஆட்சிபுரிந்த செகராசசேகர மன்னன் காலத்தில் சோதிட, வைத்திய நூல்கள் பெருமளவு தோற்றம் பெற்றதுடன் வடமொழி நூல்கள் பலவும் மொழிபெயர்க்கப்பட்டு இந் நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டதுடன் அறிவியல் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றியிருந்தான். இவை பற்றி பேராசிரியர் கணபதிப்பிள்ளை குறிப்பிடுவது சுட்டிக்காட்டத்தக்கது. ஆனால் வட இலங்கை மீது படையெடுத்து வந்த தென்னிலங்கை ஆட்சியாளனால் அந் நூல்நிலையம் தீயிடப்பட்டு அழிக்கப்பட்டதாகவும் அப்போது அதில் பாதுகாக்கப்பட்ட நூல்கள் அனைத்தும் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

செகராசசேகரனுக்குப்பின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற பரராசசேகரன் அழிந்து போயிருந்த சரஸ்வதி மகால் நூல் நிலையத்தை புனரமைத்ததுடன் இந்தியாவிலிருந்து வடமொழி, தமிழ்மொழி நூல்களை வருவித்து பலரும் படித்துப் பயன் பெறுவதற்கு உதவி புரிந்தான். இவ்வரலாற்று ஆதாரங்களை நோக்கும்போது யாழ்ப்பாணத்தவரது நூலகப் பாவனை யாழ்ப்பாண அரசர் காலத்திலிருந்து தொடங்கியதையும் அறிவியல் சார்ந்த ஆவணங்கள் நூலகத்தின் மூலம் பாதுகாத்து பயன்படுத்தி வந்ததையும் காணமுடிகிறது..

யாழ்ப்பாண அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து இப்பிரதேசத்தில் ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரது ஆதிக்கம் இடம் பெறுவதனைக் காணலாம். இவர்கள் வரிசையில் முதலில் வருகைதந்த போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதப்பரப்புரை, கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்க நூல்களை பயன்படுத்தினாலும் அவற்றை தாம் அமைத்திருந்த தேவாலயங்களிலும், கோவிற்பற்றுப் பாடசாலைகளிலும் பாதுகாத்தே பயன்படுத்தி வந்தனர். இச்செயற்பாடுகள் ஐரோப்பியர் ஆட்சியில் நூலகங்கள் தோற்றம் பெறுவதற்கு முன்னோடியாக அல்லது தொடக்ககால நூலகங்களாக அமைந்தன. இவர்களை தொடர்ந்து அதிகாரத்தை கைப்பற்றிய ஒல்லாந்தரும் தமது புரட்டஸ்தாந்து மதத்தை பரப்பவும், கல்விப் பணியை முன்னெடுக்கவும் நூல்களைப் பயன்படுத்தியிருந்தாலும் அவற்றை புரட்டஸ்தாந்து தேவாலயத்திலும், கோவிற்பற்றுப் பாடசாலைகளிலுமே பாதுகாத்து வந்தனர். ஒல்லாந்தர் நூல்களது பயன்பாடு மற்றும் தேவைகருதி கொழும்பில் ஹாலந்து அச்சுக்கூடத்தை நிறுவி நூல்களை பதிப்பித்து வந்தமை முக்கிய விடையமாகும்.

ஒல்லாந்தரைத் தொடர்ந்து அதிகாரத்தை கைப்பற்றிய ஆங்கிலேயர் இலங்கை முழுவதிலும் தமது அதிகாரத்தை ஏற்படுத்தியிருந்தாலும். சுதேசிகளது கல்வி மற்றும் ஏனைய நலன்களில் பெரிதும் அக்கறை செலுத்தவில்லை எனலாம். ஆனால் இவர்கள் காலத்தில் மதப்பரப்புரைகளுக்காக பல்வேறு மிஷனரி அமைப்பினர் வருகைதந்ததுடன் மதப்பணியுடன் மக்கள் நலன்சார் பல பணிகளையும் முன்னெடுத்து வந்ததைக் காணலாம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை இவர்களது பணி அளப்பரியதாகவே காணப்படுவதுடன் இவர்களில் குறிப்பிடத்தக்க மிஷனரி அமைப்பாக அமெரிக்க மிஷனரியினர் குறிப்பிடப்படுகின்றனர். தமது மதப்பணியை

முன்னெடுக்கும்போது அதற்கான கருவியாக கல்விப்பணியை முன்னெடுத்து வந்தனர். அதற்காக குடாநாட்டின் பல பகுதிகளிலும் பாடசாலைகளை நிறுவி கல்விப்பணியை முன்னெடுத்து அதனூடாக மதப்பரப்புரைகளை மேற்கொண்டு வந்தனர். அந்தவகையில் அவர்களால் 1823 ஆம் ஆண்டு வட்டுக்கோட்டையில் ஓர் உயர்தரப்பாடசாலை நிறுவப்பட்டதுடன் அப்பாடசாலையில் ஓர் நூலகமும் அமைக்கப்பட்டு மாணவரது கல்வி வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. இந் நூல்நிலையத்தில் யாழ்ப்பாணத்தின் அறிவியல் பொக்கிசங்கள் பேணப்பட்ட ஓலைச்சுவடிகள் பல பகுதிகளிலும் இருந்து சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. யாழ்மண்ணின் அறிவியல் பொக்கிஷங்களைப் பேணும் வகையில் இக்காலத்தில் அங்கிலிக்கன் மிஷனைச்சேர்ந்த ஜோசப் நைட் என்பவரால் நல்லூரில் சேகரிக்கப்பட்டிருந்த ஓலைச்சுவடிகளை அவரது மறைவின்பின் பொறுப்பேற்று வட்டுக்கோட்டை செமினரி நூல்நிலையத்தில் பாதுகாத்து வந்தனர். மிஷனரியினர் தமது கல்விப் பணியை முன்னெடுப்பதற்காக மேலைத்தேய அறிவியல் நூல்களை வருவித்ததுடன் யாழ்ப்பாணத்தில் அச்சகத்தை நிறுவி பல நூல்களை பதிப்பித்தும் வந்தனர். இந்நூல்களில் பெருமளவானவை வட்டுக்கோட்டை செமினரி நூல்நிலையத்தில் பாதுகாக்கப்பட்டு மாணவரது கல்வி மற்றும் அறிவியல் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தப்பட்டன. இவர்களது நூல்நிலையப் பயன்பாட்டைத் தொடர்ந்து பாடசாலைகளில் நூல்நிலையப் பயன்பாடு பற்றிய எண்ணக்கரு வளர்ச்சியடையத் தொடங்கியது. இவ்வகையில் ஐரோப்பியர் காலத்தில் அமைக்கப்பட்ட நூலகமாக வட்டுக்கோட்டை செமினரி நூல்நிலையம் திகழ்வதுடன் யாழ்மக்களது அறிவியல் பொக்கிசங்களை பேணிப்பாதுகாத்ததோடு அவர்களது அறிவியல் வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றி வந்தது குறிப்பிடத்தக்கது.

இக்காலப் பகுதியில் மிஷனரியினரது மதப்பரப்புரைகளை எதிர்த்து இந்துக்கள் செயற்படத் தொடங்கியதன் விளைவாக அவர்களும் தமக்கென பாடசாலைகளை நிறுவியதுடன் நூல்களைப் பதிப்பித்தும் வந்தனர். இவர்களில் ஆறுமுகநாவலர் மற்றும் இந்துப் பெரியாரது பணி குறிப்பிடத்தக்கது. அவர்களுள் ஆறுமுகநாவலர் பல பாடசாலைகளை நிறுவியதுடன் 'வித்யானுபாலன யந்திரசாலை' எனும் அச்சகத்தை நிறுவி பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டும் வந்தார். எனினும் இவர்கள் நூலகம் அமைப்பது தொடர்பாக சிந்தித்திருக்கவில்லை. நூல்கள் அனைத்தும் பாடசாலைகளிலும் கோயில்களிலுமே பாதுகாக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டுவந்தன.

கிறிஸ்தவ மிஷனரி அமைப்புக்களது கல்விப்பணி மற்றும் இந்துமத ஆதரவாளர்களது கல்விப்பணி என்பவற்றின் மூலம் அறிவியல்ரீதியில் வளர்ச்சியடைந்து வந்த யாழ்ப்பாணத்தவர் தமது அறிவியல் துறைசார் தேவைகளை நிவர்த்திசெய்யும் வகையில் பிற்பட நூலகம் அமைக்கும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கினர். அவ்வரிசையில் நீதிமன்றக் காரியதரிசியாக இருந்த கிறீனியர் 1842 ஆம் ஆண்டில் பொதுமக்கள் ஒன்றியம் எனும் பெயரில் ஓர் நூலகத்தை ஆரம்பித்திருந்தார். அதன்பின்பாக நீதிமன்றச் சட்டத்தரணிகள் தமது உபயோகத்திற்காக சட்ட நூலகம் ஒன்றை அமைத்திருந்தனர். இதன் தொடர்ச்சியே நீதிமன்றக் காரியதரிசியாக இருந்த திரு க.மு. செல்லப்பா அவர்களது எண்ணத்தில் யாழ்மக்களது பயன்பாட்டிற்கென ஓர் நூலகம் அமைக்க வேண்டும் என்ற கருத்து உருவாகி அது செயல்வடிவம் பெறத்தொடங்கியது. அவர் ஆரம்பித்துவைத்த பணியின் வளர்ச்சியே இன்று நாம் காணும் யாழ் பொதுசன நூல்நிலையமாகத் திகழ்கின்றது.

தற்போது புதுப் பொலிவுடனும் பல்வேறு சிறப்புக்களுடனும் விளங்கும் யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் வரலாற்றை பின்னகர்த்திச் செல்லும்போது அதன் தோற்றம் வளர்ச்சி என்பவற்றை அறியமுடிகின்றது. யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் தோற்றத்திற்கு மூலகர்த்தாவாக விளங்கியவர் முன்னால் நீதிமன்றச் செயலாளர் அமரர் க.மு. செல்லப்பா ஆவார். அவரது உள்ளத்தில் இவ் எண்ணக்கரு தோற்றம் பெறுவதற்கு மூலகாரணமாய் அமைந்தது நீதிமன்றச் செயலாளராய் இருந்த கு.ஊ. கிறீனியர் என்பவரால் 1842 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த பொதுமக்கள் ஒன்றியம் என்ற நூலகத்தின் செயற்பாடாகும். இந்நூலகப் பாவனையை அறிந்துகொண்ட செல்லப்பா யாழ்மக்களது அறிவியல் தாகத்தை தீர்க்கும் வகையில் பொது நூலகம் ஒன்று அமைக்கவேண்டும் என்பதில் தீவிரமாக அக்கறை செலுத்திவந்தார்.

செல்லப்பாவின் எண்ணத்திற்கு ஊக்கம் வழுங்கும் வகையில் 09.06.1934 ஆம் ஆண்டு யாழ் மத்திய கல்லூரியில் மாவட்ட நீதிபதி சி.குமாரசாமி அவர்களால் பொதுக்கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அக்கூட்டத்தில் நூலகம் அமைப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டு அப்பணியை மேற்கொள்ளவதற்காக 27 உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. அச்சபை யாழ்ப்பாணம் மத்திய இலவச தமிழ்நூற் கழகம் என்ற பெயரால் அழைக்கப்பட்டது. அதன் தலைவராக மாவட்ட நீதவான் திரு. சி.குமாரசாமி அவர்களும் செயலாளராக க.மு.செல்லப்பா அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். அக்கூட்டத்தில் செல்லப்பா அவர்கள் தமிழ்ப் பிள்ளைகளது உயர் கல்விக்கு வசதிசெய்வதை அழுத்தமாகப்பேசி அதற்குதவியாக கிராமங்கள் தோறும் வாசிகசாலைகள் தோற்றம்பெற வேண்டும் என்றும் அவை மத்திய நிலையத்துடன் இணைக்கப்பட்டு செயல்பட வேண்டுமெனவும் அதற்காக அங்கத்தவர்கள் மாதாந்தம் 25 சதமாவது கொடுத்துதவுதல் வேண்டுமென்றும் உருக்கமாக வேண்டுகோள் விடுத்தார். அச்சந்தர்ப்பத்திலேயே அங்கத்தவர்களால் 160 ரூபா சேகரிக்கப்பட்டு வழங்கப்பட்டதுடன் அப்பணம் தளபாடக் கொள்வனவிற்குப் பயன்படுத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் மத்திய இலவச தமிழ்நூற் கழகத்தினரது அயராத முயற்சியின் காரணத்தால் 01.08.1934 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டடத்தில் நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. நூலகம் இயங்க ஆரம்பித்தபோது கௌரவ நூலகர் ஒருவரையும், பொறுப்பாளர் ஒருவரையும் உத்தியோகஸ்தர்களாகக் கொண்டிருந்ததுடன் 844 நூல்களையும், 30 சஞ்சிகைகளையும் தன்வசம் வைத்திருந்து மக்களுக்கு சேவையாற்றிவந்தது. இவ்வேளையில் ஏறத்தாழ 50 வாசகர்கள் நூலகசேவையை தினசரி பயன்படுத்திவந்தனர். காலப்போக்கில் வாசகர்களது தொகை அதிகரித்து வந்ததைத் தொடர்ந்து நூலகத்தில் இடநெருக்கடி ஏற்படத்தொடங்கியது. இச்சந்தர்ப்பத்தில் நூலக வளர்ச்சியில் முதலாவது திருப்புமுனை ஏற்படத்தொடங்கியது.

இக்காலப்பகுதியில் யாழ்நகரசபையினர் பொது நூலகம் ஒன்றை அமைக்கவேண்டும் என்ற எண்ணக்கருவை கொண்டிருந்ததனால் அப்போது இயங்கிவந்த மத்திய இலவச தமிழ்நூற் கழகத்தை பொறுப்பெடுப்பதில் விருப்புக்கொண்டிருந்தனர். அதற்கேற்றாற்போல் நூலகத்தினரும் இந் நூலகத்தை யாழ்நகரசபை பொறுப்பெடுத்து நடாத்த வேண்டுமென நிர்வாகசபைக் கூட்டங்களின் போது முன்மொழிந்து வந்தனர். இது தொடர்பாக இரு சபையினர்க்குமிடையில்

இடம் பெற்ற கருத்துப் பரிமாற்றத்தின் முடிவாக யாழ் நகரசபை பொறுப்பெடுக்கத் தீர்மானித்தது. அதற்கமைய 01.01.1935 ஆம் ஆண்டில் யாழ் நகரசபையிடம் கையளிக்கும் நிகழ்வு கோலாகலமாக இடம்பெற்றது. இன் நிகழ்வின்போது வரலாற்று அறிஞர் இராசநாயகம் முதலியார், நூலக முகாமையாளர் புறொக்ரர், செயலாளர் செல்லப்பா ஆகியோர் உத்தியோகபூர்வமாக நகரசபைத் தலைவர் நல்லையா அவர்களிடம் கையளித்தனர். இக்காலப் பகுதியில் நகரசபை அலுவலகம் கச்சேரியில் இயங்கிவந்தது. நூலகம் தனது சேவையை தொடர்ந்து வழங்கிவந்த காலத்தில் நூலகத்தில் நூல்களது எண்ணிக்கை அதிகரித்த அதேவேளை வாசகர்களது பாவனையும் அதிகரித்துவந்ததனால் அவற்றை நிவர்த்தி செய்யும் வகையில் நகரசபையால் பிரதான வீதியிலிருந்த கட்டடத்திற்கு இடம்மாற்றப்பட்டது. இக்கட்டடத்தில் இடவசதி போதுமானதாக இருந்தாலும் அதன் அமைவிடம் அமைதிக்கு குந்தகமாக இருந்ததனால் பறங்கித் தெருச்சந்தியில் அமைந்திருந்த விசாலமான கடைக்கு இடம் மாற்றப்பட்டது. அங்கும் வாசகர்களது வருகை அதிகரித்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட இடநெருக்கடி காரணமாக வாடிவீட்டிற்கு தெற்குப்புறமாக அமைந்திருந்த மழவராயர் மனையின் மேல்மாடியை வாடகைக்குப் பெற்று அக்கட்டடத்தில் 1936 ஆம் ஆண்டில் நூலகத்தை நிறுவினார்கள். இக்கட்டடத்தில் இயங்கிவந்த நூலகம் சற்று விரிவாக்கம் செய்யப்பட்டு வாசகர்களுக்கு தனது சேவையை வழங்கிவந்தது.

இக்காலத்தில் நூலகராகப் பணியாற்றிய இராசரத்தினம் இளைப்பாறிச்செல்ல 01.02.1947 ஆம் ஆண்டில் திரு.சு. நாகரத்தினம் நூலகராகப் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார். இவரது முயற்சியின் பயனாக வண. ஐசாக்தம்பையா அவர்களது நூல்கள் நூலகத்திற்காகப் பெறப்பட்டன. நூலகத்தின் நூல்கள் பெருகியது போல வாசகர் தொகையும் பெருகத் தொடங்கியது. நூலக வளர்ச்சிக்கு மிகவும் உந்துசக்தியாக இருந்துவந்த நகரசபை மாநகரசபையாக தரமுயர்த்தப்பட்டது. இதன் முதலாவது முதல்வராக திரு. சாம். ஏ. சபாபதி அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இவர் இதுவரை காலமும் சேவையாற்றிவந்த இன் நூலகம் யாழ்ப்பாணத்தில் சிறந்த நூலகமாக வளர வேண்டுமென எண்ணங் கொண்டிருந்தார். அவரது எண்ணம் செயல் வடிவம் பெறவேண்டுமென பலரும் விரும்பியதுடன் அதற்காக பணியாற்றி வந்தனர். அவர்களுள் வண. பிதா. லோங் அவர்களது பணி குறிப்பிடத்தக்கது. நூலகம் அமைப்பது தொடர்பாக 16.06.1952 ஆம் ஆண்டில் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டு கலந்துரையாடினர். அதற்கமைய யாழ்ப்பாணத்தில் விசாலமான நூல்நிலையம் அமைப்பது உறுதியென முடிவெடுத்தனர். அப்பணியை முன்னெடுத்துச் செல்வதற்கு யாழ்ப்பாண மத்திய நூலகசபை எனும் அமைப்பு பரிபாலிக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக திரு.சாம்.ஏ.சபாபதி அவர்களும் உபதலைவராக வண. பிதா. லோங் அடிகளும் தெரிவு செய்யப்பட்டனர். நூலகம் அமைப்பதில் தீவிரமாகச் செயற்பட்டுவந்த லோங் அடிகள் அப்பணியை ஆரம்பிப்பதற்காக இந்தியாவின் துறைசார் நிபுணர்களது உதவியை நாடினார். அந்தவகையில் டெல்கிப் பல்கலைக்கழக நூலகராக இருந்த கலாநிதி ஏஸ். ஆர். இரங்கநாதனையும் கட்டடக்கலைஞர் திரு. நரசிம்மனையும் யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்தார். திரு. நரசிம்மன் திராவிடக் கட்டடக்கலைப் பாணியுடன் இன்று பொழிவுறும் நூலகத்தின் மாதிரியை தனது கைவண்ணத்தில் வரைந்து வழங்கினார். நூலகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான ஆலோசனைகள் கலாநிதி. எஸ்.ஆர்.இரங்கநாதனிடமிருந்து பெறப்பட்டன. நூலகம் அமைப்பதற்கான இடம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்ட நகர்நிர்மாண நிபுணர் வீரசிங்கா முனியப்பர் கோயிலின் முன்னால் உள்ள முற்றவெளியை சிபார்சு செய்து வழங்கியதைத் தொடர்ந்து 29.05.1952 ஆம் ஆண்டில் நூலகம் அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

நூலகம் அமைப்பதற்கு பெருமளவு நிதி அவசியமாக இருந்ததனால் ஒருபகுதி நிதியை களியாட்டங்கள் மூலமும் நன்கொடைகள் மூலமும் பெறமுடியும் என மாநகரசபை தீர்மானித்தது. அவ்வாறு பெறப்படும் நிதிகள் அனைத்தும் “யாழ்ப்பாண மத்திய நூல்நிலைய நிதி” என்ற பெயரின் கீழ் கொண்டுவரப்பட்டு வருமான வரிவிலக்கும் பெற்றிருந்தது. அதற்கமைய யாழ்ப்பாணம் கண்டிராத வகையில் 1952, 1954, 1959, 1963 ஆகிய ஆண்டுகளில் கலை விழாக்கள், அதிர்ஷ்டலாபச்சீட்டிழுப்புக்கள் நடாத்தப்பட்டு நிதி சேகரிக்கப்பட்டது. மேலும் அமெரிக்க தூதுவர், இந்திய உயர்ஸ்தானிகர், ஆசிய அபிவிருத்தி வங்கி என்போரும் நிதி உதவி வழங்கி கட்டடப்பணி விரைவுபட ஊக்கமளித்தனர்.

நூலகத்திற்கான கட்டடப் பணிகள் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வந்தாலும் கட்டடப் பணிகள் நிறைவுறும் முன்பாக அக்கட்டடம் 1958 ஆம் ஆண்டிலிருந்து “யாழ்ப்பாணப் பொதுசன நூல் நிலையம்” என பொதுமக்களால் அழைக்கப்பட்டு வந்தது. இதற்குக் காரணம் அதனது உருவாக்கத்தில் பொதுமக்களது பங்களிப்பு முக்கிய இடம் பெற்றிருந்தமையாகும். இக்காலப்பகுதியில் வாடகைவீட்டில் இயங்கிவந்த நூலகம் நூல்களின் அதிகரிப்பினாலும் வாசகரது வருகை அதிகரிப்பினாலும் இடப்பற்றாக்குறையை சந்தித்ததுடன் சிறப்பான சேவையையும் வழங்கமுடியாமல் இயங்கிவந்தது. இதன்காரணமாக யாழ் பொதுசன நூல்நிலையத்தின் கட்டடப் பணிகள் பூரணப்படுத்தப்படாமல் கீழ்த்தளம் மட்டும் பூரணப்படுத்தப்பட்ட நிலையில் 11.10.1959 ஆம் ஆண்டு நகரபிதாவாக இருந்த அல்பிரட் த. துரையப்பா அவர்களால் பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. நூலகம் இயங்கிவந்த காலத்தில் இதற்கென பழமைவாய்ந்த அரிய நூல்கள் பல கோப்பாய் வன்னிய சிங்கம், வவுனியா பண்டிதர் இராசையனார் நினைவாகவும் பெறப்பட்டதுடன் முதலியார் குலசபாநாதனிடமிருந்து பல அரிய நூல்கள் விலைக்குப் பெறப்பட்டு மக்களது பயன்பாட்டிற்காகப் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

நூலகம் சிறப்பாக இயங்கிவந்த இக்காலகட்டத்தில் நூலகர் திரு. நாகரட்ணம் நிர்வாகரீதியில் பல முன்னேற்றகரமான செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தார். இச்சந்தர்ப்பத்தில் நூலகத்துறையில் முது விஞ்ஞானமானிப் பட்டம் பெற்ற திரு.வே.இ. பாக்கியநாதன் 28.04.1964 ஆம் ஆண்டு நூலகராகப் பொறுப்பேற்றார். இவரது காலத்தில் நூலகத்தின் ஒழுங்கு முறைகள், அமைப்பு முறைகள் அனைத்தும் முறைப்படி பட்டியலாக்கப்பட்டு ஒரு சிறந்த நிர்வாக நடைமுறை ஏற்படுத்தப்பட்டதுடன் பல அரிய ஏடுகளைச் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டு பல ஏடுகளைச் சேகரித்து வந்தார். சிறுவர் நூலகம் அமைப்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர் அமெரிக்க தகவல் நூலகத்தை இந் நூலகத்துடன் இணைக்கவும் பெருமுயற்சி எடுத்துவந்தார். அதற்கமைய 1967 ஆம் ஆண்டில் அமெரிக்க நூலகம் யாழ் பொதுசன நூலகத்துடன் இணைக்கப்பட்டது.

இக்காலப் பகுதியில் கட்டடப்பணி திராவிடக் கட்டக்கலை மரபுடன் சிறப்பாக முழுமைப்படுத்தப்பட்டது. கட்டடப்பணிமுழுமை அடைவதற்காகபொறியியலாளர் இ. வைத்தியநாதன் அயராது உழைத்ததுடன் நகரபிதா எஸ்.சீ. மகாதேவன் முதல் பதவிவகித்த நகரபிதாக்கள் அனைவரது பங்களிப்புக்களும் முக்கியமாக அமைந்தன. நூலகக் கட்டடம் முழுமையடைந்திருந்த போது 2 மாடிகளைக் கொண்டதுடன் 15910 சதுர அடி விஸ்தீரணத்தையும் கொண்டமைந்திருந்தது.

இக்கட்டடத்தின் தரைத்தளத்தில் இரவல் வழங்கும் பகுதி, பத்திரிகைகள்,சஞ்சிகைகள் பகுதி, சிறுவர் நூலகம் போன்றனவும் முதலாம் தளத்தில் உசாத்துணைப்பிரிவு, கேட்போர் கூடம், அலுவலகம் போன்றனவும் அதற்கு மேல் தளத்தில் கலைமண்டபமும் அமைந்திருந்தன. விசாலமாக அமைக்கப்பட்டிருந்த நூலகம் தனது சேவையை தினமும் காலை 7.30 தொடக்கம் இரவு 8.00 மணிவரையும் வழங்கி யாழ் மக்களது கல்வி மற்றும் அறிவியல் துறைசார் வளர்ச்சிக்கு அளப்பெரும் பங்காற்றி வந்தது.

யாழ் மக்களுக்கு சிறப்பான சேவையாற்றி வந்த நூலகத்தில் இதுவரை காலமும் நூலகராகப் பதவிவகித்த திரு.வே.இ.பாக்கியநாதன் 1968 ஆம் ஆண்டு விரிவுரையாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து சிறிது காலம் பணியாற்றிய திரு. நாகரட்ணம் 1976 ஆம் ஆண்டு இளைப்பாறிச் சென்றார். அவரின்பின் செல்வி. செல்வலட்சுமி சிறிது காலம் பொறுப்பேற்று பணியாற்றிவந்தார். அவரின் பின் இளைப்பாறிய அதிபர் திரு.சி. சிவபாதசுந்தரம் அவர்கள் நூலகராக நியமிக்கப்பட்டிருந்தார். இவர் காலத்தில் திரு. எஸ். எஸ். சபாரட்ணம் அவர்கள் நூலகராக இடமாற்றம் பெற்றுவந்து பணியாற்றியதுடன் இவர் சிவபாதசுந்தரனாரின் ஆலோசனையுடன் நூலகம் வளர்ச்சியுற தன்னாலான உதவிகளை வழங்கிவந்தார். சிறிது காலத்தின் பின் சிவபாதசுந்தரனார் சேவையைப் பூர்த்திசெய்யவும் திரு. சபாரத்தினம் இடமாற்றம் பெறவும் திருமதி. ரூபாவதி நடராசா அவர்கள் 1981 ஆம் ஆண்டு கொழும்பு பொதுசன நூலகத்திலிருந்து இடமாற்றம் பெற்றுவந்து நூலகராகப் பொறுப்பேற்று சேவையாற்றி வந்தார். இவரது காலத்திலேயே நூலகம் எரிக்கப்பட்ட கோரமான நிகழ்வு நடந்தேறியது. அதன் பின்பாக அழிக்கப்பட்ட நூலகத்தை மீள இயங்கவைக்கவும் கிளை நூலகங்கள் அமைப்பதிலும் அவரது பணி அளப்பரியதாகவே இருந்தது.

## நூலகத்தின் மீள் எழுச்சியும்

தென் ஆசிய நாடுகளில் அமைக்கப்பட்டிருந்த மிகச்சிறந்த நூலகங்களில் ஒன்றான யாழ் பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31 ஆம் திகதி நள்ளிரவு நடந்த துன்பியல் நிகழ்வால் அந்நூலகத்தில் காலாகாலமாகப் பேணிப்பாதுகாக்கப்பட்ட 97000 மேற்பட்ட அரிய பல நூல்கள் எரிந்து நாசமாகின. இந்நிகழவால் தாவீதுஅடிகள் அதிர்ச்சியடைந்து மாரடைப்பால் உயிரிழந்தமை இந்நூலகத்தின்பால் தமிழ் மக்கள் கொண்டிருந்த அதீத ஈடுபாட்டிற்கு ஒரு சான்றாகும். இதனால் நூலகத்தின் பெருமைகளை அறிந்த அனைவருமே கவலையுற்றிருந்தனர். நூலகம் அழிக்கப்பட்ட சம்பவத்தை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பண்பாட்டுப் படுகொலை என அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்.

இத்துன்பியல் நிகழ்வால் யாழ்ப்பாணத்தவரது அறிவியல் வளர்ச்சி நிலை அழிந்து போகவில்லை. அதனை மேலும் வளர்க்கும் வகையில் நூலகம் மீண்டும் மீளமைக்கப்பட வேண்டும் என்ற கருத்து வலுவடைந்து வந்தது. அதற்கேற்றாற் போல் மாநகர சபையின் விசேட ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம், பேராசிரியர் கு.நேசையா போன்றோர் நூலகத்தை மீள அமைப்பதில் பெருவிருப்புடன் செயற்பட்டு வந்தனர். அக்காலத்தில் மாநகரசபை முதல்வராகப் பணியாற்றிவந்ததிரு. ராசாவிஸ்வநாதன் அவர்களும் நூலக மீள் உருவாக்கத்திற்கு தனது ஆதரவை வழங்கிவந்தார். நூலகம் எரிக்கப்பட்ட செய்தி பல நாடுகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

நூலகம் மீளமைப்பிற்காக புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்தவர்கள் மற்றும் உள்ளூர் வாசிகள் தமது பங்களிப்பை வழங்க முன்வந்தனர். இவ்வாறு நூலகம் மீள இயங்கவைப்பதற்கு ஏற்பட்ட ஆதரவின் காரணமாக 03.07.1981 ஆம் ஆண்டு நகரசபை மண்டபத்தில் பத்திரிகைப்பகுதி, சிறுவர் பகுதி என்பன நகரசபை முதல்வரால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

நூலகம் மீள ஆரம்பிக்கும் திட்டத்தில் எரிந்த கட்டடத்தின் வடக்குப்பக்கப் பிரிவுகள் திருத்தியமைக்கப்பட்டு இடைக்கால ஏற்பாடாக வாசிகசாலை, உடனுதவும் பகுதி, சிறுவர் பகுதி, என்பன ஆரம்பிக்கப்பட்டன. அதேவேளை இரண்டாவது கட்டடப் பணிக்கான அடிக்கல் மாநகர சபை முதல்வர் திரு.இராசா விஸ்வநாதன் அவர்களால் 02.07.1982 ஆம் ஆண்டு இடப்பட்டு ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதேநேரம் அழிந்த கட்டடம் திருத்தப்பட்டுவந்த வகையில் அக்கட்டடத்தில் இரவல் வழங்கும் சேவையும் 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. நூலகம் மீள இயங்கிவந்த காலப்பகுதியில் நூலகப்பாவனை தொடர்பாக ஏற்பட்ட சிறப்பான மாற்றமாக இதுவரை காலமும் யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட மக்கள் மட்டும் அங்கத்தவர்களாக தம்மை பதிவுசெய்யலாம் என்ற நிலையில் மாற்றம் ஏற்பட்டு 1984 ஆம் ஆண்டு முதல் குடாநாட்டு மக்கள் அனைவரும் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ளலாம் என அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இரண்டாம் கட்ட கட்டடப் பணிகள் எரிந்த நூலகத்தின் பின்புறமாக முனியப்பர் கோயில் முன்பாக எரிந்த பழைய கட்டடத்துடன் இணைந்த வகையில் நிர்மாணிக்கப்பட்டு வந்தது. இக் கட்டடம் 04.06.1984 ஆம் ஆண்டு அப்போதய எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கம் அவர்களால் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

அழிக்கப்பட்ட இடத்திலிருந்து தனது சேவையை யாழ் மக்களுக்கு மீண்டும் வழங்கிவந்த நூலகம் தனது சிறப்பான சேவையை அவ் இடத்தில் வழங்கமுடியாத இக்கட்டான சூழ்நிலைக்கு மீண்டும் தள்ளப்பட்டது. 1985 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யாழ் கோடடைப்பகுதி யுத்த பிரதேசமானமையால் பொதுமக்கள் நலன்கருதியும் நூலகப் பாதுகாப்புக் கருதியும் நூலகத்தை பாதுகாப்பான இடத்திற்கு மாற்ற வேண்டிய தேவை ஏற்பட்டது. இக்காலத்தில் யாழ் மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் நூலகத்தை இடம்மாற்றுவதில் பெரும் பணியாற்றினார். அவரது பணியின் மூலம் யுத்தபிரதேசத்திலிருந்த நூலகம் நாவலர் இந்துக்கலாச்சார மண்டபத்திற்கு மாற்றப்பட்டு இயங்க ஆரம்பித்தது.

இதுவரை காலமும் யாழ்நகரில் அமைந்திருந்து மக்களுக்கு தனது சேவையை வழங்கிவந்த நூலகம் நல்லூர்ப் பகுதிக்கு மாறியதனால் வாசகர் அதன் சேவையைப் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர். நூலகம் நகரிலிருந்து சற்று தொலைவில் அமைந்திருந்தமையால் போக்குவரத்து வசதியின்மை காரணமாக வாசகர் நூலக சேவையை பெறமுடியாது சிரமப்பட்டனர். இதனால் நூலக ஆலோசனைக் குழுவினர் மாநகர ஆணையாளருக்கு நூலகசேவையினை பரவலாக்கம் செய்வதன் அவசியத்தை வலியுறுத்தி கிளை நூலகம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென சிபாரிசு செய்தனர்.

அதற்கமைய முதலாவது கிளை நூலகமான சுண்டுக்குளி கிளை நூலகம் 23.03.1985 ஆம் ஆண்டு வை.எம்.சீ.ஏ அமைப்பினரது கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இதுவரை காலமும்

அவர்களது பொறுப்பின்கீழ் இயங்கிவந்த நூலகமும் மாநகரசபையினரது கிளை நூலகத்துடன் இணைக்கப்பட்டு அப்பிரதேச மக்களுக்கு சேவையை வழங்கிவந்தது. இரண்டாவது கிளை நூலகம் நல்லூர் இந்து விடுதிக்கட்டடத்திற்கு முன்பாக இருந்த தனியார் கட்டடத்தில் 24.04.1985 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. பின்பு அதற்கான கட்டடம் மாநகரசபை அலுவலகத்தின் பின்புறத்தில் அமைக்கப்பட்டு 12.10.1988 ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டது. மற்றொரு கிளை நூலகமான முஸ்லிம் கிளை நூலகம் முஸ்லிம் வட்டாரத்தில் அமைந்திருந்த தனியார் கட்டடத்தில் 23.03.1985 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. குருநகர் மக்களது நலன்கருதி குருநகர் கடற்கரை வீதியில் 1986 ஆம் ஆண்டில் மற்றொரு கிளை நூலகம் திறக்கப்பட்டது. யாழ் மக்களுக்கென கலாச்சார நூலகம் அமைக்கப்பட வேண்டும் என பலரும் விரும்பியதைத் தொடர்ந்து நாவலர் கலாச்சார மண்டபத்தில் 09.06.1986 ஆம் ஆண்டு கலாச்சார நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. வண்ணார்ப் பண்ணை மக்களுக்காக 30.05.1985 ஆம் ஆண்டு ஐயனார் கோயில் வீதியில் ஓர் கிளை நூலகம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அதற்கான நிரந்தரக்கட்டடம் வண்ணை காமாட்சி அம்பாள் ஆலயவீதிக்கருகில் நிர்மாணிக்கப்பட்டு 12.07.1988 ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காக திறக்கப்பட்டது. இவ்வாறு யாழ் மக்களது அறிவியல் வளர்ச்சிக்கு தோள்கொடுத்து வந்த பொதுசன நூலகம் அவர்களது நலனில் அக்கறை செலுத்திவந்ததற்கு எடுத்துக்காட்டாக அவர்களது பிரதேசங்களிலேயே சேவையை வழங்கும் வகையில் கிளை நூலகங்களாகப் பரிணமித்து சேவையாற்றி வந்தமையைக் காணலாம்.

யாழ் மக்களுக்கு பல வழிகளிலும் சேவையாற்றி வந்த நூலக வரலாற்றில் இதுவரை காலமும் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் நூலக அபிவிருத்திக்காக அயராது உழைத்துவந்த நூலகர் திருமதி. ரூபாவதி நடராசா 1989 ஆம் ஆண்டு இளைப்பாறிச் சென்றார். அவரின் பின் திருமதி.மங்கையர்க்கரசி நித்தியரட்ணம் சிறிது காலமும் அவரின் பின் செல்வி. சுலோசனா ரகுநாதனும் நூலகப் பணியை முன்னெடுத்து வந்தனர். இக்காலத்தில் நூலக சேவையை விருத்தி செய்வதற்கு நிரந்தர நூலகர் தேவையானதால் முன்னால் பிரதம நூலகராகப் பணியாற்றிய கலாநிதி. வே.இ.பாக்கியநாதன் மீளநியமிக்கப்பட்டு நூலகப்பணி முன்னெடுக்கப்பட்டு வந்தது. சிறிது காலம் பணியாற்றிய கலாநிதி.வே.இ.பாக்கியநாதன் வெளிநாட்டிற்குப் பயணமாக அவரது பணியை செல்வி.சுலோசனா பொறுப்பேற்று முன்னெடுத்து வந்தார். சிறிது காலத்தின் பின் அவரும் வெளிநாடு பயணமாக நூலகர் இல்லாமல் நூலக சேவைகள் இடம்பெற்று வந்தன. இவ்வேளையில் 1990 ஆம் ஆண்டு திரு.எஸ்.தனபாலசிங்கம் நூலகப் பொறுப்பை ஏற்று தனது சேவையை வழங்கிவந்தார்.

யாழ் குடாநாட்டினைப் பொறுத்தவரை 1992 ஆம் ஆண்டிற்கும் 1995 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதி போர் மேகம் சூழ்ந்திருந்த காலப்பகுதியாக விளங்கியது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளிலும் நூலகம் தனது சேவையை யாழ் மக்களுக்கு தொடர்ந்து வழங்கிவந்தது. ஆனால் 1995 ஆம் ஆண்டு ஏற்பட்ட குடாநாடு தழுவிய இடப்பெயர்வின் போது நூலக ஊழியர்களும் வெளியேற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டதன் காரணத்தால் நூலக சேவைகள் முற்றாக நிறுத்தப்பட்டது. இக்காலப் பகுதியில் 85000 நூல்கள் கொண்டதாக நூற்சேர்க்கைப் பகுதி வளர்ச்சியடைந்திருந்தது. 1996 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்தவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பி விட்டுச்சென்ற நூலகங்களைப் பார்வையிட்டபோது அவை சேதமுற்றுக் காணப்பட்டன

அவற்றுள் கிளை நூலகங்களான சுண்டுக்குளி கிளை நூலகமும் மூர்வீதியில் அமைந்திருந்த கிளைநூலகமும் பெரும் சேதத்திற்கு உட்பட்டிருந்தன. அவற்றிலிருந்த தளபாடங்கள், நூல்கள் சேதமாக்கப்பட்டிருந்ததுடன் களவாடப்பட்டுமிருந்தன. நூல்களைப் பொறுத்தவரை 29000 நூல்கள் இழக்கப்பட்டிருந்தமை தெரியவந்ததுடன் அவற்றில் பெருமளவானவை உசாத்துணை நூல்கள் எனவும் கண்டறியப்பட்டன.

யாழ் குடாநாடு முழுவதையும் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்திருந்த இலங்கை அரசு அப்பகுதியில் பல அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கத் தொடங்கியது. இக்காலத்தில் யாழ் பொதுசன நூல்நிலையம் புனரமைக்கப்பட வேண்டுமென அப்போதய ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயகா குமாரதுங்க பணிப்புரை வழங்கியதுடன் தற்காலிகமாகச் செயற்படவைக்க சிபார்சு செய்தார். அதன் காரணத்தால் தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம் திருத்தியமைக்கப்பட்டு அக்கட்டடத்தில் தற்காலிகமாக 1998 ஆம் ஆண்டு நூலகம் மக்கள் பாவனைக்காகத் திறந்துவைக்கப்பட்டது. இக் காலத்தில் நூலகத்திற்கென பல அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள், வெளிநாடுகள் நிதி வழங்கியும் நூல்களை அன்பளிப்பாக வழங்கியும் உதவிபுரிந்து வந்தன. இதேவேளை யாழ் நூலகப் புனர்நிர்மாணப் பணிகளுக்கென ஜனாதிபதியால் நூலகக் குழு ஒன்று அமைக்கப்பட்டு புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இதன் பிரகாரம் முழுமையாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட யாழ் பொதுசன நூல்நிலையம் 23.02.2004 ஆம் ஆண்டு மீண்டும் மக்கள் பாவனைக்காகத் திறக்கப்பட்டு இன்றுவரை தனது சேவையை மக்களுக்கு வழங்கிவருவதுடன் மக்கள் மனங்களிலும் பெரும் செல்வாக்குப் பெற்றுத்திகழ்கின்றது.

### யாழ் பொதுசன நூல்நிலையத்தின் தற்போதைய நிலையும் அதன் சேவைகளும்

யாழ் மக்களுக்கு பல இன்னல்கள் மத்தியில் சேவையை வழங்கிவந்த நூலகமானது தனது சேவையை தொடர்ந்து வழங்கும் வகையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டடத்தில் 2004 ஆம் ஆண்டிலிருந்து வழங்கி வருகின்றது. புனரமைக்கப்பட்ட கட்டடமானது இன்று புதுப்பொலிவு பெற்றுத் திகழ்ந்தாலும் அது ஆரம்பத்தில் எவ்வாறு அமைக்கப்பட்டிருந்ததோ அதேபோல் அக்கட்டடத்தின் கலையம்சம் எதுவும் மாறாதவகையில் புனரமைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் நூலகராகப் பணியாற்றிய திரு.எஸ்.தனபாலசிங்கம் 30.07.2011 ஆம் ஆண்டு ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து அன்றிலிருந்து திருமதி. எம்.இ.கருணாகரன் நூலகராக பொறுப்பேற்று இன்றுவரை சிறந்த சேவையாற்றி வருவதைக் காணலாம். இன்று இந்நூலகமானது காலத்தின் வளர்ச்சிக்கேற்பவும் அறிவியல் துறைகளின் விரிவாக்கத்திற்கேற்பவும் ஒரே கட்டமைப்பின் கீழ் பலவேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு தனது சேவையை யாழ் மக்களுக்கு ஆற்றிவருவதைக் காணலாம்.

அவ்வகையில் அதன்பகுதிகளாக உடமைகள் பாதுகாப்பிடம், நூல்கள் பாதுகாப்பிடம், காட்சிக்கூடம், நூல் இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, வாசிகசாலைப் பகுதி, கேட்போர்கூடம், வலது குறைந்தோருக்கான பகுதி, நூற் களஞ்சியப் பகுதி, உடனுதவும் பகுதி, விசேட சேர்க்கைப் பகுதி, கட்புல செவிப்புல பகுதி, படிப்போர்கூடம், நிர்வாகஸ்தர் பகுதி, கலைக்கூடம், பருவவெளியீட்டுப் பகுதி, உசாத்துணைப் பகுதி, சுவடிகள் காப்பகம், கணிணிக்கூடம், என்பன பிரிக்கப்பட்டு பல்வேறு வகையினருக்கும் தனது சேவையை வழங்கிவருகின்றது.

யாழ் மக்களது கல்வி மற்றும் அறிவியல் துறைசார் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றி வரும் பொதுசன நூல்நிலையம் தற்போது பல மொழிகளில் அமைந்த பல் துறைசார் நூல்கள் என 230145 நூல்களை தன்வசம் கொண்டு மக்களுக்குப் பணியாற்றிவருவது குறிப்பிடத்தக்கது. தற்போது இந்நூலகத்தில் 17596 வாசகர்கள் தம்மை அங்கத்தவராகப் பதிவுசெய்து பயனடைந்து வருவதைக் காணலாம். இன்று நாள் ஒன்றிற்கு சராசரியாக 350இற்கு மேற்பட்ட வாசகர்கள் நூலகத்தை பயன்படுத்தி வருவதாகக் குறிப்பிடப்படுவதுடன் அவர்களில் பெருமளவானவர்கள் பத்திரிகை, சஞ்சிகை வாசிப்பிற்காக வருகை தருபவர்களாகக் கூறப்படுகின்றனர்.

யாழ் மக்களுக்கு சிறப்பான சேவை வழங்கிவரும் பொதுசன நூலகம் தனது சேவையை மேலும் விஸ்தரிக்கும் வகையில் எதிர்காலத் திட்டங்களை வகுத்திருப்பதைக் காணலாம். அவை நடமாடும் நூலகசேவை, புத்தகம் எழுதுதல், புத்தகக் கண்காட்சி நடாத்துதல், பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி நடாத்துதல், பாடசாலை மாணவரை நூலகத்திற்கு வரவழைத்தல், கதை சொல்லல், கருத்தரங்கு நடாத்துதல், நூல்விமர்சனம், பயிற்சி வகுப்புக்கள் நடாத்துதல் என வகுக்கப்பட்டுள்ளன. இன்று யாழ்ப்பாணத்திற்கு வருவோர் யாழ் பொதுசன நூலகத்தை தமிழ் மக்களின் அறிவியல் மரபுரிமைச் சின்னமாகப் பார்க்கின்றனர். அவ்வாறு பார்ப்பதற்கு தமிழர் பண்பாட்டின் எழுச்சி, வீழ்ச்சி, மறுமலர்ச்சி என்பன இந்நூலகத்துடன் இரண்டறக்கலந்திருப்பது காரணமாகக் கருதலாம். அதுதான் உண்மையும் கூட.

## உசாத்துணை நூல்கள்


1. குலரத்தினம், க.சி. யாழ்ப்பாண நூல்நிலையம் ஓர் ஆவணம், மித்திரா வெளியீடு, 1997
2. குலரத்தினம், க.சி. யாழ்ப்பாணப் பொதுநூலகம், நூலகவியல் மலர் 2 இதழ் 3, அயோத்தி நூலகசேவை, ஆணைக்கோட்டை, யாழ்ப்பாணம், 1987.
3. வித்துவான் கணேசையர், சி. ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம், யாழ்ப்பாணம், 1939.
4. மனோன்மணி.ச, யாழ்ப்பாணத்தில் நூலக வளர்ச்சி, நூலகவியல் மலர் 2, இதழ் 2, அயோத்தி நூலகசேவை ஆணைக்கோட்டை, 1986.
5. சண்முகநாதன். நா, எழில்மிகு யாழ்ப்பாணம், குடிநல சுகாதார வாரமலர், யாழ்ப்பாண மாநகரசபை வெளியீடு, 1968
6. நீலவண்ணன். மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது, வரதர் வெளியீடு, 1981
7. குலரத்தினம், க. சி. பொன்விழாப் பொலிவு காணும் பொதுசன நூலகம், நூலகத் திறப்புவிழா மலர், 1984.
8. வேலுப்பிள்ளை, சி.டி. அமெரிக்க இலங்கைமிஷன் சரித்திரம், அமெரிக்க இலங்கைமிஷன் அச்சகம், தெல்லிப்பளை, 1922.
9. ஜெபநேசன். எஸ். இலங்கைத் தமிழர் சிந்தனை வளர்ச்சியில் அமெரிக்கமிஷன், குமரன் புத்தக இல்லம், கொழும்பு,2009.
10. செல்வராசா, என், யாழ் பொதுசன நூலகம் ஓர் வரலாற்றுத் தொகுப்பு.
11. www.Jaffna library.lk

# நூல்தேட்டம் : ஓர் மதிப்பீட்டு ஆய்வு

அனிதா கிருஸ்னசாமி

கல்பனா சந்திரசேகர்

## அறிமுகம்

நூல்கள் அறிவுத் தேடலுக்கான கருவூலங்களாக விளங்குவதுடன் மட்டுமல்லாது, ஒரு இனத்தின் பண்பாடு, மற்றும் கலாச்சார விழுமியங்களை வெளிப்படுத்தும் சாதனங்களாகவும் திகழ்கின்றன. அத்தகைய சாதனங்களை பேணிப் பாதுகாத்து, அடுத்த தலைமுறைக்குக் கையளிப்பதன் மூலமே ஒரு சமூகத்தின் இருப்பு தக்கவைத்துக்கொள்ளப்படுகிறது. பண்டைக் காலத்தில் கோயில்களும் மடாலயங்களும் இப்பணியைச் செவ்வனே செய்துவந்தன. தற்காலத்தில், உலகெங்கிலும் இயங்கிவரும் நூலகங்களும் ஆவணக்காப்பகங்களும் இத்தேவையை நிறைவு செய்கின்றன. ஆயினும், ஒரு நாட்டின் அல்லது இனத்தின் அடையாளத்தை இல்லாமல் செய்யும் நோக்குடன் காலத்துக்கு காலம் மேற்கொள்ளப்பட்ட நூலக அழிப்புக்கள் தொடர்பான வரலாறுகளும் உண்டு (ஜவாத், 1988 செல்வராஜா, 2001).

பெரும்பாலான உலக நாடுகள், தத்தம் தேசிய இனங்களின் அறிவுத்தேட்டத்தை பாதுகாத்துக் கொள்ளவும், ஆவணப்படுத்தவும் அதிகாரபூர்வமான நிறுவனங்களை நிறுவி, அதற்கான சட்டப் பாதுகாப்பையும் வழங்கியுள்ளன. இதன்மூலம் நூல்களையும் ஏனைய சாதனங்களையும் ஆண்டாண்டு காலமாக பேணிவருகின்றன. இலங்கையில் இதன் பொருட்டு உருவாக்கப்பட்டவையே தேசிய நூலகமும், இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையும் ஆகும். இலங்கை தேசிய நூலக ஆவணவாக்கல் சபையின் வெளியீடான *இலங்கை தேசிய நூல்விபரப்பட்டியல்,* இலங்கையிலிருந்து வெளிவருகின்ற மும்மொழி சார்ந்த நூல்களின் விபரங்களை உள்ளடக்கிய வருடாந்த வெளியீடாக விளங்குகிறது. இவ்வெளியீடானது, குறித்த காலப்பகுதியில் வெளியிடப்படாமை, இலங்கையில் வெளிவந்த அனைத்து நூல்களின் விபரங்களையும் உள்ளடக்காமை, பரவலாக விநியோகிக்கப்படாமை போன்ற குறைபாடுகளைக் கொண்டிருந்தமையினால், *பிரித்தானிய தேசிய நூல்விபரப்பட்டியல்,* மற்றும் *இந்திய தேசிய நூல்விபரப்பட்டியல்களுக்கு இணையான* வரவேற்பைப் பெறவில்லை. ஆயினும், எச்.ஏ குணதிலக்கவின் *'A bibliography of Ceylon: a systematic guide to the literature on the land, people, history and culture published in the Western languages from the 16th century to the present day'* என்ற, ஆங்கில நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல் 1970-1983 காலப்பகுதியில் ஐந்து தொகுதிகள் வெளிவந்து, சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உசாத்துணை நூலாக இன்றும் திகழ்கின்றது (செல்வராஜா, 2010).

ஈழத்து தமிழ் நூல்களைப் பொறுத்தவரையில், காலத்துக்கு காலம் சில ஆவணவாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதை அறியமுடிகிறது. இச்செயற்பாட்டில் தம்மை ஈடுபடுத்திக்

கொண்டவர்களுள், கு.ஓ.ஊ.நடராஜா, கனக.செந்திநாதன், சில்லையூர் செல்வராஜன், செங்கை ஆழியான், மற்றும் நா.சுப்பிரமணியன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் (Jeyabalan, 2005). மேலும், இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்களின் நூல்களை *சுவடி ஆற்றுப்படை* எனும் தலைப்பில் அல்ஹாஜ் எஸ்.எச்.எம்.ஜெமீல் அவர்கள் தொகுத்து 1994-2000 காலப்பகுதியில் வெளியிட்டுள்ளார் (புன்னியாமீன், 2006). இதைவிட, இலங்கை நூலகச் சங்கத்தினால் நடாத்தப்படும் 3 வருட நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறியின் பகுதித் தேவையை நிறைவு செய்யும்பொருட்டு மாணவர்களினால் சமர்ப்பிக்கப்படும் நூல்விபரப்பட்டியல்கள் பல ஈழத்து தமிழ் நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல்களாகக் காணப்படுகின்றன. இவற்றுள் பெரும்பாலானவை கையெழுத்துப்பிரதிகளாக இலங்கை நூலகச் சங்கத்தின் கோவைகளில் தூங்குகின்றன. மேற்குறிப்பிட்ட முயற்சிகள் எவையும், நூல்விபரப்பட்டியலொன்றின் வினைத்திறன்மிக்க பயன்பாட்டை உறுதிப்படுத்தவில்லை.

இன்றைய யதார்த்த நிலையை நோக்குகையில், ஈழத்து தமிழ் நூல்களில் பெரும்பாலானவை இலங்கைக்கு வெளியே தமிழகத்திலும், புலம்பெயர்நாடுகளிலுமே அச்சிட்டு வெளியிடப்படுகின்றன. ஒரு நாட்டில் வெளியிடப்படும் ஈழத்து தமிழ் நூலொன்றினைப் பற்றிய தகவலை இன்னொரு நாட்டிலுள்ள வாசகர் பெற்றுக்கொள்வது மிகவும் கடினமான காரியமாகவுள்ளது. மேலும், இந்நூல்கள் அந்நாடுகளின் தேசிய நூல்விபரப்பட்டியல்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதையும் எழுத்தாளர்களும் வெளியீட்டாளர்களும் உறுதிப்படுத்திக் கொள்வதில்லை. புலம்பெயர்நாடுகளில் மட்டுமல்லாது, இலங்கையிலும் இந்நிலைமையே காணப்படுகிறது. அச்சக வெளியீட்டாளர் சட்டமூலத்துக்கமைய சுவடிகள் காப்பகத்துக்குத் தமது நூல்களின் பிரதியொன்றை அனுப்பிவைக்கத் தமிழ்ப் பிரதேச அச்சகங்களோ, வெளியீட்டாளர்களோ, அல்லது எழுத்தாளர்களோ முனைப்புக்காட்டாமை, மற்றும் தமிழ் நூல்களின் ஆவணவாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக தேசிய நூலக ஆவணவாக்கல் சபையில் நிலவும் ஆளணிப் பற்றாக்குறை என்பன முக்கிய காரணங்களாக உள்ளன.

இந்நிலையில், சர்வதேச ரீதியில் ஈழத்துத் தமிழ் நூல்களுக்கான ஒரு தொகுப்பு முயற்சியாக ***நூல் தேட்டம்*** எனும் இந்நூல்விபரப்பட்டியல் விளங்குகின்றது. இலங்கையிலும், தமிழகத்திலும், மற்றும் புலம்பெயர்நாடுகளிலும் வெளியிடப்பட்ட ஈழத்து எழுத்தாளர்களின் நூல்களை ஆவணப்படுத்துவது ஒரு வரலாற்று தேவையாகும். ஏனெனில், இன்றைய பதிவுகளே நாளைய வரலாற்றாசிரியர்களுக்கு ஆதாரங்களாக விளங்கப்போகின்றன. ஏனைய நூல்விபரப்பட்டியல்களிலிருந்து வேறுபட்டு, ஒரு இனத்தின் வெளியீடுகளை ஆவணப்படுத்தும் இந்நூல்விபரப்பட்டியல் தொடர்பான மதிப்பீடாக இவ்வாய்வு அமைகிறது.

## நூல் தேட்டத்தின் வரலாறு

யாழ்ப்பாணத்திலிருந்து காலாண்டு இதழாக நூல் தேட்டத்தினை வெளியிடும் முயற்சிகள் திரு. என்.செல்வராஜா அவர்களினால் 1990களில் ஆரம்பிக்கப்பட்டது. 50 நூல்களுக்கான பதிவுகளுடன் ஏப்ரல் 1990இலும், பின்னர் அதன் தொடர்ச்சியாக 51 - 112 வரையான தொடரிலக்கமிடப்பட்ட 62 நூல்களுக்கான பதிவுகளுடன் ஜூலை 1990இலும் சிறுசஞ்சிகை உருவில் நூல்தேட்டம் இரண்டு இதழ்கள் வெளிவந்தன. இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் நிலவிய

அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக ஏற்பட்ட உள்ளக இடப்பெயர்வு, மற்றும் புலம்பெயர்வு போன்றவற்றினால் இப்பணி சிறிதுகாலம் தடைப்பட்டிருந்தது. பின்னர் புலம்பெயர்ந்து லண்டனில் வாழ்ந்தபோது, மீண்டும் நூல் தேட்டத்தை வெளியிடும் பணியைத் தொடர திரு.என்.செல்வராஜா அவர்கள் பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். லண்டனில், பிரித்தானிய தபால் திணைக்களத்தில் முழுநேரத்தொழிலொன்றை வாழ்வாதாரத்திற்காக மேற்கொண்டபடி, தனது இனத்திற்கான இப்பணியை தொடர முனைந்தார். இதற்காக பல்வேறு நாடுகளுக்கும் பெரும் பணச்செலவுக்குரிய பயணங்களை மேற்கொள்ளவேண்டியிருந்தது. பல தனிப்பட்டவர்களின் சேகரிப்புக்களைத் தேடிச்சென்று பார்வையிட வேண்டியிருந்தது. இதனையெல்லாம் தனது வாழ்வாதாரத்திற்கான பணியிலிருந்து பெற்றுக்கொண்ட வருமானத்தின் ஒரு பகுதியை பயன்படுத்தியே நிறைவேற்றிக் கொண்டார். அவரது கடின உழைப்பின் பயனாக, நூல் தேட்டத்தின் முதலாவது தொகுதி (1000 நூல்களுக்கான பதிவுகளுடன்) புதிய வடிவில் ஜூன் 2002இல் வெளிவந்தது (செல்வராஜா, 2010). இதுவரையில், எட்டு தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியிலும் 1000 நூல்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாவது தொகுதி மே 2004லும், மூன்றாவது தொகுதி ஓகஸ்ட் 2005இலும், நான்காவது தொகுதி டிசம்பர் 2006இலும், ஐந்தாவது தொகுதி ஜூலை 2008இலும், ஆறாவது, ஏழாவது தொகுதிகள் மே 2011இலும், எட்டாவது தொகுதி ஜனவரி 2013இலும் வெளிவந்துள்ளன. இதுவரையில், அச்சில் மாத்திரம் வெளிவந்து கொண்டிருந்த நூல் தேட்டமானது, ஒன்பதாவது தொகுதியிலிருந்து இணையத்தளத்திலும் வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை தவிர, 2007இல் *மலேசிய சிங்கப்பூர் நூல்தேட்டம்* ஒன்றினையும், 2009இல் ஈழத்தமிழரின் ஆங்கில நூல்களுக்கான நூல்விபரப்பட்டியல் ஒன்றையும் திரு.என்.செல்வராஜா அவர்கள் தொகுத்து வெளியிட்டிருந்தார் (செல்வராஜா, 2010).

## நூல் தேட்டம் – மதிப்பீடு

அறிவுத் தேட்டத்தை ஆவணப்படுத்தி, தகவல்த் தேடலுக்கு துணைபுரியும் செயற்பாடுகள், அறிவுசார் துறைகளின் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதனவாக உள்ளன. அந்த வகையில், நூல்விபரப்பட்டியல்கள் தகவல் தேடலுக்கான உசாத்துணைச் சாதனமாக மட்டுமல்லாது, அறிவுத் தேட்டத்தை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் வல்லமை படைத்தவையாகவும் காணப்படுகின்றன. ***நூல் தேட்டம்*** எனும் இந்நூல்விபரப்பட்டியலானது, இலங்கையிலும் புலம்பெயர்நாடுகளிலும் வெளியிடப்பட்ட ஈழத்து தமிழ் ஆவணங்களின் விபரங்களை உள்ளடக்கிய ஒரு வெளியீடாக திகழ்கிறது. இந்நூல்விபரப்பட்டியலானது, உசாத்துணை சாதனமொன்றின் மதிப்பீட்டுக் கருவிகளான பின்வரும் பிரமாணங்களுக்கமைய மதிப்பீடு செய்யப்படுகிறது.

## அதிகாரவுடைமை (authoritative)

இந்நூல்விபரப்பட்டியலானது ஒரு தனிமனித முயற்சியாகவே இன்றுவரை தொடர்கிறது. இப்பணியில் கடந்த பல வருடங்களாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள திரு.என்.செல்வராஜா அவர்கள் நூலகவியல் துறையில் நிறைந்த அனுபவமிக்கவர் என்பதோடு, வெளியீட்டுத் துறையிலும் நன்கு பரிச்சயமானவர். 1985இல், ஈவ்லின் இரத்தினம் பல்லினப்பண்பாட்டு நிறுவன நூலகராகவிருந்த காலப்பகுதியில், *அயோத்தி நூலக சேவைகள்* எனும் நிறுவனத்தை யாழ்ப்பாணத்தில் ஸ்தாபித்து, அந்நிறுவனத்தினூடாக நூலகவியல் துறைசார்ந்த பல நூல்களை வெளியிட்டும், நூலக கருத்தரங்குகள், மற்றும் கண்காட்சிகளை நடாத்தியும் வந்துள்ளார். இதன்மூலம், இலங்கையின் வடக்கு, கிழக்கு, மலையகப் பகுதிகளிலிருந்து நூலகவியல்

துறையிலும், நூலியல் துறையிலும் அக்கறை கொண்ட பலரை இந்நிறுவனம் ஒரு குடையின் கீழ் ஒருங்கிணைத்தது. இதனால், *அயோத்தி நூலக சேவைகள்* போர்ச்சூழலிலும் சக்திமிக்கதொரு நூலக அமைப்பாக தேசிய ரீதியில் வளர்ச்சிகண்டது. 1985 - 1991 காலப்பகுதியில், *நூலகவியல்* எனும் காலாண்டு சஞ்சிகையையும் வெளியிட்டு வந்துள்ளது. இதுவே, இலங்கையில் வெளிவந்த நூலகவியல் சார்ந்த முதலாவது தமிழ் சஞ்சிகையாகும். தற்போது, இந்நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தில் தனது பணியை தொடர்கிறது (செல்வராஜா, 2005).

நூல் தேட்டம் எனும் இந்நூல்விபரப்பட்டியலும், இந்நிறுவனத்தினால் இலங்கையின் வெளியீட்டுத் துறையில் தமிழ் நூல்களுக்கான வெளியீட்டு நிறுவனங்களுள் முக்கிய இடத்தை பெற்றுள்ள *குமரன் புத்தக இல்லம்* எனும் வெளியீட்டாளருடன் இணைந்து வெளியிடப்படுகிறது. எனவே, அதிகாரபூர்வமான ஓர் உசாத்துணைச் சாதனமாக இது ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதே. எனினும், திரு.என்.செல்வராஜா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் இப்பணி, மேலும் பன்னெடுங் காலத்திற்குத் தொடருவதற்கான காத்திரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியது இன்றியமையாததாகும். இலங்கையிலும், தமிழகத்திலும், மற்றும் புலம்பெயர்நாடுகளிலும் வெளியிடப்படும் ஈழத்து எழுத்தாளர்களின் நூல்கள் அனைத்தும் ஆவணக்காப்பகமொன்றில் சேகரிக்கப்பட்டு, பின்னர் இச்சேகரிப்புக்கள் அனைத்தும் ஈழத்துத் தமிழ்த் தேசிய நூல்விபரப்பட்டியலாக, காலத்துக்குகாலம் வெளியிடப்படுவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## நோக்கம் (purpose)

இந்நூல்விபரப்பட்டியலினுடைய முக்கிய நோக்கம் ஈழத்துத் தமிழ்ப் பண்பாடு, கலாச்சாரம், பொருளாதாரம், சமயம், சமூகம், வரலாறு, மற்றும் ஏனைய துறைசார்ந்த வெளியீடுகளை ஆவணப்படுத்துவதும், அவை தொடர்பான தேடலை மேற்கொள்பவர்களுக்கு உசாத்துணைச் சாதனமாக விளங்குவதுமாகுமென இதன் ஆசிரியரினால் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, பிரதேச ரீதியாக குறித்த இனம் சார்ந்த, மொழி சார்ந்த வெளியீடுகளை ஆவணப்படுத்தும் பாரிய முயற்சியாகவும், இச்சமூகம் சார்ந்த வரலாற்று பதிவுகளை அடுத்த தலைமுறைக்கு கையளிக்கும் செயற்பாடாகவுமே நோக்கப்பட வேண்டியதாகும். நிறுவன ரீதியான நிதியுதவிகள், ஆதரவுகள் எதுவுமின்றி, தனிமனித முயற்சியால் வெளிக்கொணரப்படும் இந்நூல்விபரப்பட்டியலானது, உரிய வாசகர்களைச் சரியான முறையில் சென்றடையவில்லை என்பது ஒரு குறைபாடாகவே காணப்படுகிறது. இருப்பினும், இலங்கையின் தமிழர் தாயகப் பிரதேசங்களிலுள்ள பொதுசன நூலகங்கள், நூற்கொள்வனவின்போது தமிழ் நூல்களைத் தெரிவுசெய்வதற்கான கருவியாக (book selection tool) நூல்தேட்டத்தினைப் பயன்படுத்தி வருகின்றன.

## வியாபகத் தன்மை (coverage)

இந்நூல்விபரப்பட்டியலில், அதிகளவில் தனிநூல்களே (monographs) இடம்பெற்றுள்ளன. இவைதவிர, தனிநூலாக கருதப்படக்கூடிய சிறப்பு மலர்களும், சில கல்வெட்டுக்களும், ஞாபகார்த்த மலர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆனால் சஞ்சிகைகள், துண்டுப்பிரசுரங்கள், வரைபடங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஒலி-ஒளிப் பதிவுநாடாக்கள், இறுவட்டுக்கள் என்பன சேர்த்துக் கொள்ளப்படவில்லை. விடயரீதியாக நோக்குகையில், சகல துறைசார்ந்த ஆவணங்களும் உள்வாங்கப்பட்டுள்ளன. ஆனால், மொழிரீதியில் ஆங்கில நூல்கள் சேர்த்துக் கொள்ளப்படாமை ஒரு குறைபாடே.

நூலியல் பதிவைப் பொறுத்தவரையில், அடிப்படை நூலியல் விபரங்களும், நூல் பற்றிய அறிமுகக் குறிப்பும் தெளிவாகத் தரப்பட்டுள்ளன. பிரதான பகுதியில், நூல் பற்றிய தகவல் மூன்று பகுதிகளாகத் தரப்பட்டுள்ளன. முதற்பகுதியில் நூலின் தலைப்பு விபரம், அந்நூலின் ஆக்கத்துக்கு அதிகாரபூர்வமாக உரித்துடையோர் விபரம், பதிப்பு விபரம், வெளியீட்டு விபரம், அச்சு விபரம் என்பன தரப்பட்டுள்ளன. நூலியல் பதிவின் இரண்டாவது பகுதியாக அமைவது நூலின் பௌதீகத் தகவல்களாகும். மூன்றாவது பகுதி, நூல் பற்றிய சுருக்கக் குறிப்பாகும். இவற்றுக்கு மேலதிகமாக, இலங்கை தொடர்பான பன்னாட்டவரின் தமிழ்ப்படைப்புக்களும், முன்னைய பதிவுகளுக்கான மேலதிக தகவல்களும் பின்னிணைப்பாக நூல் தேட்டத்தின் இரண்டாவது தொகுதியிலிருந்து இடம்பெறுகின்றன. நூலியல் பதிவுகளின் ஒழுங்கமைப்பில் சர்வதேச நூற்பட்டியலாக்க விதிமுறைகள் முறையாக பின்பற்றப்பட்டுள்ளதை அவதானிக்கமுடிகிறது. ஒரு நூலகவியலாளரினால் தொகுக்கப்பட்ட நூல்விபரப்பட்டியல் என்பதை இது அடையாளம் காட்டுகிறது.

## நம்பகத்தன்மை (reliability)

இங்கு நம்பகத்தன்மை என்பது பதிவு செய்யப்பட்ட தகவல்களின் துல்லியத்தன்மையையே (accuracy) குறித்து நிற்கின்றது. இந்நூல்விபரப்பட்டியலில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு ஆவணமும் முழுமையாக ஆராயப்பட்டே பதிவிற்குள்ளாக்கப்பட்டுள்ளதை, துல்லியமான தகவல்களை கொண்ட நூலியல் பதிவுகள் உணர்த்துகின்றன. மேலும், இனவேறுபாடுகளையும் பிரதேச வேறுபாடுகளையும் கருத்தில் கொள்ளாது, பக்கச்சார்பற்ற முறையில் நூல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வரவேற்கப்பட வேண்டியதொன்றே. இங்கு, ஆவணவாக்கம் முதன்மைப்படுத்தப்படுவதனால், பதிவு செய்யப்பட்ட நூல்கள் எவ்வித தரக்கட்டுப்பாட்டுக்கும் உட்படுத்தப்படவில்லை.

## உடனடித் தகவல் வழங்கல் (up-to-date information)

நூல் தேட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல் சாதனங்கள் எவ்வித கால எல்லைக்குள்ளும் வரையறுக்கப்படவில்லை. கிடைக்கப்பெற்ற ஆவணங்களின் அடிப்படையிலேயே பதிவுகள் மேற்கொள்ளப்பட்டமையினால், கால ஒழுங்கு பேணப்படவில்லை. அதாவது, பதிவுக்குட் படுத்தப்பட்டிருக்கும் ஒரு நூலின் ஒன்றிற்கு மேற்பட்ட தொகுதிகள் வெளிவந்திருப்பின், பின்னைய தொகுதிகளின் விபரங்கள் நூல் தேட்டத்தின் முன்னைய தொகுதிகளிலும், முன்னைய வெளியீடுகள் பற்றிய விபரங்கள் நூல் தேட்டத்தின் பின்னைய தொகுதிகளிலும் இடம்பெற்றுள்ளன (புன்னியாமீன், 2006). இதற்குப் பதிலாக, ஈழத்தமிழர்களின் நூல்களை ஆவணப்படுத்தும் இப்பெரும் பணியில், உலகெங்கிலும் பரந்து வாழும் ஈழத்தமிழரின் நூல்களைத் தேடிப்பெற்று, அவற்றுக்கான முதன்மைப் பதிவுகளை வழங்குவதே நூல் தேட்டத்தின் இலக்காகும் என்று இதன் ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

## முடிவுரை

இறுதியாக, நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பாரிய பணியினை தனியொருவரால் மேற்கொள்ள முடியுமென்பதை செயலில் காட்டியுள்ளார் திரு.என்.செல்வராஜா அவர்கள். இந்நூல்விபரப்பட்டியல், ஈழத்தமிழருக்கான ஒரு தேசிய நூல்விபரப்பட்டியலின் தேவையை உணர்த்தி நிற்கின்றது. விடய ரீதியான (subject bibliography) அல்லது குறித்த ஒரு நபரினால் எழுதப்பட்ட ஆக்கங்கள் தொடர்பான (author bibliography) அல்லது நாடொன்றின் வெளியீடுகள் பற்றிய (national bibliography) நூல்விபரப்பட்டியல்களிலிருந்து வேறுபட்டு, ஓர் இனத்தின் அறிவுத்

தேட்டத்தை ஆவணப்படுத்தி, இன ரீதியான நூல்விபரப்பட்டியலாக (ethnic bibliography) நூல் தேட்டம் விளங்குகின்றது. எனவே, நூல் தேட்டமானது ஈழத்தமிழ் சமூகத்தின் பொதுச் சொத்தாகக் கருதப்பட்டு, அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு ஈழத்து தமிழ்ச் சமூகம் முன்வரவேண்டும். எதிர்காலத்தில், இம்முயற்சியானது நிறுவனமயப்படுத்தப்பட்டதாக மாற்றம்பெற்று, நூலுருவிலான, மற்றும் நூலுருவற்ற தகவல் சாதனங்களின் விபரங்களையும் உள்ளடக்கி, தமிழ் மொழி மட்டுமல்லாது ஈழத்தமிழரின் ஏனைய மொழி சார்ந்த வெளியீடுகளையும் ஆவணப்படுத்தக் கூடியதாக இப்பணி விரிவடையவேண்டும்.

***'எமக்கான வரலாற்றை நாமே எழுதி வைப்போம்'***

## உசாத்துணை நூல்கள்


1. Goonetileke, H.A.I. (1983). A bibliography of Ceylon: a systematic guide to the literature on the land, people, history and culture published in the Western languages from the 16th century to the present day (volume 5). [Switzerland]: Inter Documentation. vii, 563-952p.

2. Jeyabalan, T. (comp.). (2005). **Nool thettam: information booklet**. London: Ayothy Library Services. 47p.

3. ஜவாத், ஏ.எஸ். (1988). 'எரித்தது யார்?' (அலெக்சாந்திரியா நூலக எரிப்புத் தொடர்பான கட்டுரை). நூலகவியல், **4(2): 12-18.**

4. புன்னியாமீன், பீ.எம். (2006). **நூல்தேட்டம்:** இலங்கையின் தேசிய இலக்கிய நீரோட்டத்தில் சங்கமிக்க வேண்டியதொரு பெருநதி. ஐல: செல்வராஜா, என். *நூல் தேட்டம் (தொகுதி 4).* ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள். ப.viii-xxvi.

5. செல்வராஜா, என். (2005). **நூலியல் பதிவுகள்.** உடத்தலவின்னை: சிந்தனை வட்டம் ரூ அயோத்தி நூலக சேவைகள் (UK). 104ப.

6. செல்வராஜா, என். (2010). ஈழத்தமிழரின் நூல்களை ஆவணப்படுத்துவதில் நூல்தேட்டத்தின் பங்களிப்பும் அது எதிர்கொள்ளும் சவால்களும். பொல்கொல்லை: சிந்தனை வட்டம். 21ப.

7. செல்வராஜா, என். (2011). **நூல் தேட்டம் (தொகுதி 7).** கொழும்பு: அயோத்தி நூலக சேவைகள் (UK) & குமரன் புத்தக இல்லம். xviii, 506ப.

8. செல்வராஜா, என். (தொ.ஆ). (2001). யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு. ஐக்கிய இராச்சியம்: அயோத்தி நூலக சேவைகள். 128ப.

# வடமொழி நூல்களில் கிரந்த வரிவடிவத்திலுள்ள நூல்களை ஆவணப்படுத்துதல் – யாழ் பல்கலைக்கழக நூலகத்தை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

லதா உமாசங்கர்

## அறிமுகம்

உலகிலுள்ள இலக்கியவளம் பெற்ற தொன்மையான மொழிகளுள் சம்ஸ்கிருதம் மிக முக்கியத்துவமுடையது. இச்சம்ஸ்கிருதத்தை வடமொழியென அழைக்கும் மரபு தென்னிந்தியாவில் உண்டு. வடமொழியானது பல வளங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. சமயக் கருத்துக்கள் பல நிரம்பிய நூல்களும் சாஸ்திரங்களும் இம்மொழியில் வெளிவந்துள்ளன. அறிவியல் மொழியாக இம்மொழியை உலகெங்கிலும் அறிஞர்கள் பலர் விருப்புடன் கற்றும் போற்றியும் வருகின்றனர். இம் மொழியோடு தொடர்புபடாத விடயங்கள் உலகில் பெரும்பாலும் இல்லையென்றே கூறலாம். இம்மொழியின் பழமையே இதனை உலகின் பல பாகங்களிலும் பலர் விரும்பிக் கற்பதற்குக் காரணமாகின்றது. சம்ஸ்கிருத மொழியில் தோன்றியதும் அச்சேறியதுமான நூல்கள் பல. இவை எண்ணிலடங்காது. இது பற்றி பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

“பெரும்பாலான இந்திய நூல்கள் எல்லாவற்றிற்கும் அடிப்படையாக விளங்கும் வடமொழியில் இதுவரை இயற்றப்பட்ட நூல்களின் பரப்பை இன்னும் ஒருவரும் சரிவர மட்டிட்டுக் கூறவில்லை. அச்சில் வராது ஏட்டுச்சுவடி வடிவில் கீழ்நாட்டிலும் மேல்நாட்டிலும் உள்ள புத்தக நிலையங்களில் இன்றும் காணப்படும் நூல்கள் எண்ணிலடங்கா. முக்கியமான வடமொழி நூல்களின் பரப்பை ஆராயும் போது இந்நூல்கள் பல்வேறு துறைகளைப் பற்றியனவையாய்ப் பல்வகைப் பண்பு வாய்ந்தவையாய் விளங்குவதைக் காண்கின்றோம்.” இக் கருத்து இந்த ஆய்வுக்கு அடிப்படையாக அமைந்து விளங்குகின்றது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணத்து கல்விப்புலத்தின் மையமாக விளங்கும் உயர்கல்வி நிறுவனம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகும். இப்பல்கலைக்கழகம் சைவப்பெருவள்ளலார் சேர்.பொன் இராமநாதனின் சிந்தனையில் 1921ம் ஆண்டு உருவான பரமேஸ்வராக் கல்லூரியை அடித்தளமாகக் கொண்டு 1974ல் உருவானது. இப்பல்கலைக்கழகத்தில் இப்பெருவள்ளலாரின் நூற்தொகுப்புக்களையும் காலத்திற்குக் காலம் கொள்வனவு செய்யப்பட்டவையும் அறிஞர்களின் பங்களிப்புக்களிலும் நன்கொடைகளிலும் ஒன்றுசேர்க்கப்பட்ட நூல்களையும் கொண்டு வித்தியானந்தன் நூல்நிலையம் எனும் யாழ் பல்கலைக்கழக நூலகம் விளங்குகின்றது.

யாழ் பல்கலைக்கழக பிரதான நூலகத்தில் சம்ஸ்கிருத மொழியில் பல நூல்கள் காணப்படுகின்றன. சம்ஸ்கிருத மொழியின் வரிவடிவம் மூன்று நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இதனை லிபி என்றும் அழைப்பர். ஒன்று தேவநாகரி லிபி வரிவடிவம். மற்றையது

கிரந்த லிபி வரிவடிவம். மூன்றாவது ரோமன் லிபி வரிவடிவம். இதனை விட தமிழிலும் இலக்கமிடப்பட்ட வரிவடிவப் பயன்பாடும், சிங்கள வரிவடிவத்தை அவ்வாறே பயன்படுத்தும் பயன்பாடும் இருந்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கிரந்த லிபி என்பது எவ்வாறு இன்றைய நிலையை எய்தியது என்பதை A.L பசாம் தனது "The wonder that was India" எனும் நூலில் குறிப்பிடுகின்றார். இவ்வரிவடிவம் பல்லவர் காலத்தில் தமிழ்நாட்டில் தோற்றம் பெற்றமையால் "பல்லவ கிரந்தம்" என அழைக்கப்படுகின்றது. இக்கிரந்த லிபியின் பயன்பாடு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் சம்ஸ்கிருத மொழியை பிரதிநிதித்துவப்படுத்தும் முறையில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வரலாறு மற்றும் சம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சித் துறையில் உள்ளவர்கள் மத்தியில் பெரும்பாலும் தேவநாகரி வரிவடிவமே செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது. பல அரிய மூல நூல்கள் கிரந்த வரிவடிவத்தில் உள்ள போதும் அவை பற்றிய முழுமையான தகவல்கள் ஆராய்ச்சியாளர்களைச் சென்றடையாததால் கால ஒட்டத்தில் அவற்றிலுள்ள விடயங்கள் அறியப்படாமலேயே அழிந்து போய் விடும் என்ற அச்சமே மேலோங்கி நிற்கின்றது. எனவே இதை வெளிக்கொணரும் ஓர் முயற்சியே இவ்வாய்வின் முக்கிய நோக்கமாகும். மேலும் இலங்கையரின் பங்களிப்பில் உருவான நூல்கள் அழிந்து போய்விடாமல் அவற்றை ஆவணப்படுத்த வேண்டியது எமது தலையாய கடமையாகும். இதன் ஓர் அங்கமாக யாழ் பல்கலைக்கழக நூலகத்தில் பேணப்பட்டு வருகின்ற கிரந்த வரிவடிவத்தில் உள்ள நூல்களை ஆவணப்படுத்தலே இவ்வாய்வின் குறிக்கோளாக அமைகின்றது. இந்நூல்களைப் பகுப்பாய்வு செய்தல் ஆய்வின் முதற்படியும் முக்கியமுமான படியுமாகும்.

## ஆய்வுமுறையியல்

யாழ் பல்கலைக்கழக நூலகத்திலுள்ள கிரந்த வரிவடிவத்திலுள்ள வடமொழி நூல்கள் 158 இவ்வாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் பேணப்படுகின்றனவும் 31.02.2012 வரை உள்ளீர்க்கப்பட்டவையுமான கிரந்த லிபியில் காணப்படும் நூல்கள் மட்டுமே இங்கு கருத்தில் கொள்ளப்பட்டது.

நூல்வடிவம் பெற்று பதிப்பிக்கப்பட்ட நூல்களின் முகப்பு பக்கத்தில் உள்ள குறிப்புக்கள், மற்றும் உள்ளடக்கம் என்பன பின்வரும் நூல் விபரங்களுக்கு அமைவாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. அவையாவன.

1. நூலின் தலைப்பு
2. பகுப்பாக்க இலக்கம் மற்றும் அழைப்பு எண்
3. ஆசிரியர் விபரம்
    - நூலாசிரியர்
    - மொழிபெயர்ப்பாசிரியர்
    - உரையாசிரியர்
    - தொகுப்பாசிரியர்
    - பதிப்பாசிரியர்
    - பரிசோதகர்

4. பதிப்பு விபரம்
    பதிப்பாசிரியர்
    பதிப்பு ஆண்டு
    முதற்பதிப்பு ஆண்டு
5. வெளியீட்டு விபரம்
    வெளியீட்டாளர் பெயர்
    வெளியிட்ட ஆண்டு
    வெளியிட்ட இடம்
6. அச்சக விபரம்
    அச்சகத்தின் பெயர்
    அச்சிடப்பட்ட நாடு நகரம்
7. பயன்படுத்தப்பட்ட வரிவடிவம்
8. பாடத்தலைப்பும் உள்ளடக்கமும்

போன்ற விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. இதிலிருந்து இந்நூல்கள் எந்தெந்த அச்சகங்களில் எவ்வெவ் காலங்களில் பதிப்பிக்கப்பட்டன எனும் விபரமும் நவீன இலத்திரனியல் (Digital) முறையில் எத்தனை நூல்களும் பழைய அச்சுப்பதிப்பு முறையில் எத்தனை நூல்களும் பதிப்பிக்கப்பட்டன எனும் விபரங்களும் உள்ளடக்கங்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டது.

### பெறுபேறுகளும் முடிவுகளும்

மேற்குறிப்பிட்ட நூல்விபரங்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தபோது பெறப்பட்ட முடிவுகள் பின்வருமாறு காணப்பட்டன.

### நூலின் தலைப்பு

நூலின் தலைப்பு அநேகமான நூல்களில் சம்ஸ்கிருத கிரந்த லிபியில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. சில நூல்களில் மாத்திரம் இம் முகப்பு அட்டைகள் தமிழ், சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டுள்ளது. உ+ம் சைவசந்நியாச பத்ததி

### பகுப்பாக்க இலக்கம் மற்றும் அழைப்பு எண்

நூலக பகுப்பாக்க இலக்கம் ஓர் ஒழுங்கமைக்கப்படாத தன்மையில் நூலின் மூலத்தன்மை, அல்லது நூலின் தலைப்பு அல்லது நூலாசிரியரின் பெயர் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

உதாரணம்

| | |
|---|---|
| ஸ்ரீமாக புராண ரத்தினம் | 232.4<br>SKA |
| கார்த்திக மாஹாத்மிய கண்டம் | 232.4<br>SKA |

இவ்விரண்டு நூல்களும் வடமொழி ஸ்காந்த மஹாபுராணத்தின் உட்பகுதியில் விளங்கும் நூலின் பகுதியாகும். இந்நூல்கள் இந்து புராண நூல்களாகக் கருதப்பட்டு 232.4 எனும்

பகுப்பெண்ணும் மூல நூலான ஸ்காந்த மஹாபுராணத்தை கருத்திற்கொண்டு SKA எனும் அழைப்பெண்ணும் குறிக்கப்பட்டுள்ளது. அதே தன்மையுடைய இன்னுமொரு நூல் ஸ்ரீமத் தஷிணகைலாச மாஹாத்மியம். இதற்கு $\frac{954}{\text{DAK}}$ என்ற அழைப்பு எண் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் ஸ்காந்த மஹாபுராணத்தின் உத்தரகாண்டத்தின் ஒரு பகுதியாக இடம் பெறும் நூலாகும். இந்நூல் 22 அத்தியாயங்களைக் கொண்டது. இலங்கையின் சிறப்பைக் கூறும் தன்மையில் இலங்கையில் காணப்படும் திருத்தலங்களின் வரலாற்றை கூறும் நூலாக அமைந்து விளங்குகின்றது. இந்நூல் இந்து புராண நூலாகக் கருதப்படாமல் ஓர் தென்னாசிய வரலாற்று நூலாகக் கருதப்பட்டு 954 என்னும் பகுப்பாக்க எண் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நூலின் தலைப்பே அழைப்பெண்ணின் பகுதியாக கருதி DAK எனக் குறிக்கப்பட்டுள்ளது. எனவே பகுப்பாக்கம் செய்வதில் ஓர் சீரான தரம், ஒழுங்கமைவு பேணப்படவில்லை என்பது புலப்படுகின்றது.

### ஆசிரியர் விபரம்

தொன்று தொட்டு பேணப்பட்டு வரும் மரபில் வாய்மொழி மற்றும் மரபு வழி நூல்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஆசிரியர் விபரமானது நூலாசிரியர், பதிப்பாசிரியர், மொழிபெயர்ப்பாசிரியர், தொகுப்பாசிரியர் எனும் தலைப்புக்களில் காணப்படுகின்றன. எனினும் விசேடமாக இந்நூல்களில் பரிசோதகர் என்னும் பதமும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

பரிசோதகர் என்னும் பதம் பதிப்பிக்கப்பட்ட நூல்விடயம் சம்பந்தமான பல்வேறு புலமையும் அறிவுமுடைய ஒருவரைக் குறித்து நிற்கின்றது. அவர் அந்நூலைப் பரிசீலித்த பின்பே நூல் பதிப்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது.

கிரந்த லிபியில் உள்ள வடமொழி நூல்களின் உருவாக்கத்தில் பெரும் பங்களிப்பு செய்த இலக்கிய கர்த்தாக்களில் யாழ்ப்பாணத்து சமஸ்கிருத நூலாசிரியர் சுவாமி ஞானப்பிரகாச தேசிகர் முக்கியமானவர். அத்துடன் சமஸ்கிருத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த யாழ்ப்பாணவர் வரிசையில் காசிவாசி செந்தில்நாதையர், சிவப்பிரகாச பண்டிதர், அ. அருணாசல சாஸ்திரிகள், க. சாம்பசிவ சிவாச்சாரியார் மற்றும் சிவசங்கர பண்டிதர் போன்றோர் மிகவும் பிரபலமாக இருந்துள்ளார்கள். வடமொழி கிரந்த லிபி நூல்களின் உருவாக்கத்தில் பரிசோதகர்களின் பங்களிப்பு மிகவும் காத்திரமானதாகக் காணப்படுகின்றது. அவர்களுள் தாதாச்சாரியார், வைத்தியேஸ்வர சாஸ்திரி, ராஜா சாஸ்திரி, ராமச்சந்திர சாஸ்திரி, துளசிலிங்கம், வெங்கடாசல சாஸ்திரி, ராஜபாணி வாதர், ராம சாஸ்திரி மற்றும் நாராயண சாஸ்திரி போன்றோர் முக்கியமானவராக விளங்கியதை அவதானிக்க முடிந்தது.

### பதிப்பு விபரம்

பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்ட நூல்கள் யாவும் பதிப்பிக்கப்பட்ட நூலுருவமான நூல்களேயாகும். இந்நூல்கள் பழைமையான அச்சக மரபில் இருந்து இன்றைய கணனி வடிவம் வரையாக காணப்படுகின்றன. 1871 ஆண்டு முதலாக ஒன்று சேர்க்கப்பட்ட எழுத்துத் தொகுப்பு முறையில் அச்சிடப்பட்ட பதிப்புக்கள் பல்வேறு முன்னேற்றத் தன்மைகளை காலத்திற்குக் காலம்

பெற்று வந்துள்ளமையை இங்கு அவதானிக்க முடிந்தது. அத்தன்மை 2000 ஆம் ஆண்டு வரையாக பேணப்பட அதன் பின்னர் கணினி வடிவப்பதிப்பில் இந்நூல்கள் வந்துள்ளமையைக் காண முடிந்தது. இம்மரபின் மாற்றத்தில் பதிப்பகத்தின் சிறப்பு முக்கியத்துவம் இழந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.




நூலகத்திலுள்ள நூல்கள் 158 உம் எவ்வெவ் ஆண்டுகளில் பதிப்பிக்கப்பட்டன என்பதை மேலேயுள்ள வரைவு காட்டுகின்றது. இங்கு 1871 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட நூல்கள் காணப்படுகின்றன. இதற்கு மேலதிகமாக ஆண்டுகள் குறிப்பிடப்படாத 42 நூல்களும் உள்ளமை கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சமாகும். மேலும் இதை நோக்கும் போது 1901 இல் இருந்து 1930 வரையான காலப்பகுதியில் கூடுதலான நூல்கள் வெளிவந்துள்ளமை புலப்படுகின்றது.

## அச்சக விபரம்

சமஸ்கிருத கிரந்த லிபி நூல்கள் இலங்கையிலும் இந்தியாவிலும் குறிப்பாக தென் இந்தியாவிலும் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளதை அவதானிக்க முடிகின்றது. ஆரம்ப காலத்தில் இருந்து 2000ஆம் ஆண்டுவரை பதிப்பிக்கப்பட்ட பழமையான நூல்களில் அநேகமானவை பழமையான அச்சுப்பதிப்பு முறையிலும் அதன் பின்னர் வந்த நூல்கள் கணினிப் பதிப்பிலும் வெளிவந்துள்ளதை அவதானிக்க முடிந்தது. இலங்கையில் இருந்த கலாநிதி அச்சகம், விநாயசுந்தராலய அச்சகம், சாரதா அச்சகம் என்பன கிரந்த லிபியில் அமைந்த நூல்களைப் பதிப்பிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளதை அவதானிக்க முடிந்தது.

## பயன்படுத்தப்பட்ட வரிவடிவம்

இங்கு காணப்பட்ட நூல்களில் பெரும்பாலானவை முழுவதும் கிரந்த லிபியில் எழுதப்பட்டுள்ள மூல நூல்களாகும். சில நூல்கள் தமிழிலும் கிரந்த லிபியிலும் ஆக்கப்படனவாகவும் மற்றும் சில

நூல்கள் முழுவதும் கிரந்த லிபியில் அமைந்துள்ள போதும் அவற்றின் தலைப்பு முன்னுரை போன்றவை தமிழிலும் எழுதப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனைப் பின்வரும் அட்டவணை விளக்குகின்றது.

| **நூல்கள்** | **எண்ணிக்கை** |
|---|---|
| தமிழ் உரையுடன் கூடிய கிரந்த லிபியில் உள்ள நூல்கள் | 22 |
| சம்ஸ்கிருத உரையுடன் கூடிய கிரந்த லிபியில் உள்ள நூல்கள் | 22 |
| கிரந்த லிபியில் உள்ள சம்ஸ்கிருத மூல நூலையும் அதற்கு சம்ஸ்கிருத மொழியில் இருந்த உரையையும் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட நூல்கள் | 11 |
| கிரந்த லிபியில் உள்ள மூல நூல்கள் | 114 |

### பாடத் தலைப்பும் உள்ளடக்கமும்

ஒன்று தொகுக்கப்பட்ட நூல்களை அவற்றின் விடயப்பரப்பு பற்றி பகுப்பாய்வு செய்தபோது அவற்றை 09 பெரும் பாடத்தலைப்புகளின் கீழ் உள்ளடக்க முடிந்தது. அதன் விபரம் பின்வரும் வரைபு மூலம் தரப்படுகின்றது




இதனடிப்படையில் கிரந்தலிபியில் உள்ள நூல்களில் பெரும்பாலானவை (31%) ஆகமக்கிரியை சார்ந்த நூல்களாக காணப்படுகின்றன. அதைத் தொடர்ந்து முறையே தத்துவம் (21%) மற்றும் வைதீகக் கிரியை (16%) சார்ந்த நூல்கள் அதிகளவு காணப்படுவதை அவதானிக்க முடிகிறது. கிரந்த

லிபியில் இலக்கிய நூல்கள் உள்ள போதும் இலக்கண நூல்கள் எதுவும் இங்கு காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

## முடிவுரை

இவ்வாய்வின் மூலம் நாம் பின்வரும் விடயங்களை அறிய முடிகின்றது. தென்னிந்தியாவினைப் போன்று இலங்கையிலும் சம்ஸ்கிருத கிரந்த லிபி வடிவத்தில் பதிப்பிக்கும் அச்சகங்கள் இருந்துள்ளன. ஆக்க இலக்கிய கர்த்தாக்கள் தமது நூல்களை கிரந்த லிபி வடிவத்தில் எழுதிப் பதிப்பித்துள்ளனர். சமுதாயத் தேவைக்கு ஏற்ப சம்ஸ்கிருத மொழியோடு தமிழ் மொழியை அறிந்த புலமையாளர்கள் விளங்கியுள்ளனர். சம்ஸ்கிருதமறிந்த புலமையாளர்கள் சமுதாயத்திற்கு சம்ஸ்கிருத மொழிப் புலத்திலிருந்த விடயங்களை வெளிப்படுத்துவதற்கு தமிழ் மொழிபெயர்ப்பு முயற்சிகளையும் உரையெழுதும் பண்பினையும் உத்தியாகக் கையாண்டுள்ளனர்.

தத்துவ நூல் வளத்திற்கும் சிவாகமக் கிரியை மற்றும் வைதிகக் கிரியை வரலாற்று மரபுகளுக்கும் ஈழ நாட்டவரின் பங்களிப்பு முக்கியத்துவமானதாக இருந்துள்ளது. ஈழநாட்டவரின் பங்களிப்பில் திருநெல்வேலி சுவாமி ஞானப்பிரகாச தேசிகரின் ஆக்கங்கள் முக்கியத்துவமுடையவையாகும். கிரந்தலிபியில் உள்ள சம்ஸ்கிருத மொழி நூல்களையும் உரைகளையும் தமிழில் மொழிபெயர்ப்பதில் காசி வாசி செந்திநாதையர் சங்கரபண்டிதர், சிவப்பிரகாச பண்டிதர் ஆகியோர் முக்கியமானவர்களாகத் திகழ்ந்தார்கள். சம்ஸ்கிருத உரைகளோடு கூடிய நூல்களை பதிப்பிப்பதில் முக்கிய பங்கு சித்தங்கேணி அம்பலவாண நாவலருக்குரியதாகும். சிவாகமக் கிரியை மரபில் தொகுப்பு நூல்களாக உருவாக்கிய சிறப்பு அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்களுக்குரியதாகும். இலங்கையில் கலாநிதி அச்சகம், சாரதா அச்சகம், விநாயக சுந்தராலய அச்சகம் ஆகியனவே சம்ஸ்கிருத கிரந்த லிபி நூல்களைப் பதிப்புச் செய்தமை பற்றி அறிய முடிகின்றது.

இவ்விபரங்களின் அடிப்படையில் இலங்கையிலும் தென்னிந்தியாவிற்கு நிகராக கிரந்தலிபி நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை நோக்கும் போது கிரந்தலிபி பயன்பாட்டில் தென்னிந்தியர்களுக்குச் சமமாக இலங்கையரின் பங்களிப்பும் உள்ளதை அறிய முடிகின்றது நூற்றாண்டு காலம் கடந்த பார்வையில் கிரந்த லிபியில் உள்ள நூல்களை மீள்பதிப்புச் செய்ய எந்தவித முயற்சியும் எடுக்கப்படவில்லை. கிரந்தலிபியைப் பதிப்பிப்பதற்குரிய நவீன சாதனங்கள் அண்மைக்காலத்தில் காணப்பட்டாலும் பழமையான நூல்களைப் பேணிப்பாதுகாக்காவிடில் அவற்றை மீள்பதிப்புச் செய்ய முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு நாம் ஆளாக நேரிடும். கால ஓட்டத்தில் இவ்வரிய நூல்கள் தகுந்த பராமரிப்பு இல்லையேல் அழிந்துவிடக்கூடும். எனவே இவற்றை ஆவணப்படுத்த வேண்டியது இன்றியமையாதது. இதன் முதற்படியாக பல்கலைக்கழக நூல் நிலையத்தில் உள்ள கிரந்த லிபியில் உள்ள நூல்களின் சுருக்க நூல்விபரப்பட்டியல் (Annotated Bibliography) தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஏனைய நூலகங்களில் காணப்படும் கிரந்தலிபியில் உள்ள நூல்களை குறிப்பாக எம்மவர்களின் பங்களிப்பில் உருவான நூல்களின் நூல்விபரப்பட்டியலை உருவாக்குதலும் அரிய நூல்களை இலத்திரனியல் மயப்படுத்துவதும் செய்யப்படவேண்டிய காலத்தின் கடமைகளாகும். இது மேலும் பல புதிய வரலாற்றுக் கண்டுபிடிப்புகளுக்கும் ஆய்வுகளுக்கும் வழிசமைக்கும் என்பது திண்ணம்.

## உசாத்துணை நூல்கள்


1. கைலாசநாதக்குருக்கள், சா. (1962). வடமொழி இலக்கிய வரலாறு (பாகம் I ):வைதிக இலக்கியம். கொழும்பு: கலாநிலையம்.

2. சிவசாமி,வி. (1989). சம்ஸ்கிருத இலக்கியச் சிந்தனைகள். யாழ்ப்பாணம்: நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ். vii, 183ப.

3. Basham,A.L. (1954). The wonder that was India. London: Messrs Sidgwick and Jackson. vii, xx, 701 p. (Translated (in tamil) by S. Velauthapillai and Maheswary Balakitinan; reprinted and published by the Government of Ceylon in 1963).

# இலங்கையின் பொதுநூலக முறைமை

மைதிலி விசாகரூபன்

## முன்னுரை

தகவலை அறிந்து கொள்வது என்பது இன்றைய மனிதர் ஒவ்வொருவரதும் அடிப்படை உரிமை ஆகும். இன்றைய காலகட்டத்திலே தகவல் பல்வேறு நிலைகளில் பரிமாற்றம் செய்யப்பட்டாலும் தகவலை வழங்கும் மையங்களாகச் செயற்படுபவை நூலகங்கள் ஆகும். இவை பொது நூலகங்கள், கல்வி நிறுவன நூலகங்கள், சிறப்பு நூலகங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் அறிவைப் பெறுவதற்கும் பெருக்குவதற்குமான உள்ளூர் நுழைவாயில்களாகப் பொது நூலகங்கள் செயற்பட வேண்டியவையாக உள்ளன. நாட்டில் வாழ்கின்ற ஒவ்வொரு தனிநபரும் தமது வாழ்நாள் முழுமைக்குமான கல்வியைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளுடன் பொது நூலகங்கள் இருக்க வேண்டுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றன. பொதுநூலக சேவை தொடர்பாகத் தெளிவான நியமங்களை யுனெஸ்கோ வரையறை செய்துள்ளது.[1] இந்நியமங்கள் பொதுநூலக சேவைக்கான ஒரு பொதுமையான நியமங்களாக உள்ளன. இந்த நியமங்களை எல்லா நாடுகளிலும் பின்பற்றுவதில் நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகின்றன. குறிப்பாக இலங்கை போன்ற வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் இவை பொருத்தமற்றனவாக உள்ளன. இதனால் ஒவ்வொரு நாடுகளும் தத்தமது சூழ்நிலைக்கேற்ப பொருத்தமான பொதுநூலக நியமங்களை உருவாக்கிச் செயற்படுகின்றன.

இவ் ஆய்வானது இலங்கையின் பொதுநூலக முறையை விளங்கிக் கொள்ளுதலையும், பொது நூலகங்கள் வறிய தகவல் அமைப்புக்களாக உள்ளமைக்கான காரணங்களை அறிதலையும், இத்தகைய பின்னணியில் இலங்கையில் பொதுநூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிமுறைகளை ஆராய்தலையும், கருத்துக்களை முன்வைத்தலையும் அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## பொதுநூலக முறை

இந்நாட்டிற்கான பொதுநூலக சேவை உள்ளூராட்சி அமைச்சினூடாகவே ஒழுங்கமைக்கப் படுகின்றது. உள்ளூராட்சி அமைச்சின் கீழ் இயங்கும் உள்ளூராட்சி மன்றங்களே இவற்றை நேரடியாகக் கட்டுப்படுத்துகின்றன. எண்ணிக்கை அடிப்படையில் மொத்தம் தொளாயிரத்து ஐம்பத்தி ஐந்து பொதுநூலகங்கள் நாடு முழுவதிலும் பரந்து காணப்படுகின்றன.[2] உள்ளூராட்சி நிர்வாகம் உள்ளூராட்சி மன்றங்களினூடாக நடத்தப்படுகின்றது. மாநகர சபைகள், நகரசபைகள், பிரதேச சபைகள் என இம் மன்றங்கள் சில பிரமாணங்களின் அடிப்படையில் பகுக்கப்பட்டுள்ளன. இலங்கையென்ற ஒரே நாட்டிற்குரிய உள்ளூராட்சிப் பிரிவுகளாக இவை உள்ளபோதிலும் தத்தமக்கெனத் தனியான நியமத் துணை விதிகளை (Standard by – Law) உருவாக்கிச் செயற்படுகின்றன.

## பொதுநூலக சேவைக்கான துணைவிதிகள்

உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய துணை விதிகளின் ஒரு உபபிரிவாகவே பொதுநூலக சேவைக்கான நியமங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. 1952 ஆம் ஆண்டின் ஆறாம் இலக்க உள்ளூர் அதிகாரசபை நியமத் துணைவிதிகள் சட்டத்தின் பகுதி 17 இல் நகரசபைகளால் அமைக்கப்படும் பொது நூலகங்களுக்கான நியமங்கள் கூறப்பட்டுள்ளன.[3] இவ்வாறே 1987 ஆம் ஆண்டின் பதினைந்தாம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 36வது பிரிவிலே பிரதேச சபைப் பொது நூலகங்களுக்கான நியமங்கள் கூறப்பட்டுள்ளன.[4] இத்தகைய நியமத் துணைவிதிகள் வெவ்வேறாக உள்ள போதும் அடிப்படையில் குறிப்படத்தக்க வேறுபாடுகளைக் கொண்டிருக்க வில்லை. இவை பொதுநூலகங்களின் சேவை முறைகளைக் குறிப்பிட்டுள்ளனவே தவிர அவற்றிற்குரிய நிதி பற்றிக் குறிப்பிடவில்லை.

## தற்போதைய உள்ளூராட்சி நிலைமைகளும் நூலக சேவையும்

இலங்கையின் பொதுநூலக சேவையை மதிப்பீடு செய்வதானால் நாட்டின் ஒவ்வொரு பிரதேசங்களிலும் நூலகங்களை அமைத்துப் பராமரித்து வரும் உள்ளூராட்சி நிர்வாக அமைப்பின் தற்போதைய நிலையை மதிப்பீடு செய்ய வேண்டிய இன்றியமையாமை காணப்படுகின்றது.

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை அவனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வது என்ற பிரதான கோட்பாட்டுடனேயே உள்ளூராட்சி நிர்வாகம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

a) அவ்வப்போது ஏற்படுத்தப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு மாற்றங்கள். (உதாரணமாக 1980 இல் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தோற்றம் 1983 இல் கிராமோதய மண்டலங்களின் உருவாக்கம். 1988 இல் பட்டினசபை, கிராமசபை என்பன நீக்கம் செய்யப்பட்டுப் பிரதேச சபைகள் உருவாக்கப்பட்டமை).
b) உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய பிரத்தியேகமான கடமைகளை வேறு துறைகளுக்கு மாற்றியமைத்தமை.
c) நாட்டின் போர்ச் சூழலும் அதன் விளைவுகளும்.
d) மாகாணசபைகளின் உருவாக்கம். இதனால் உள்ளூராட்சி மன்றங்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாத நிலை போன்ற பல காரணங்களால் உள்ளூராட்சி முறை நலிவடைந்துள்ளது.[5]

## பிரச்சினைகள்:

பின்வருவன போன்ற அடிப்படையான குறைபாடுகளால் அனேகமான உள்ளூராட்சி மன்றப் பொதுநூலகங்கள் பெயரளவிலே இயங்கி வருகின்றன.

### i. சட்டரீதியான ஒழுங்கமைப்பு இன்மை

பொதுநூலகங்களை அமைத்துச் சேவை வழங்குவதற்குத் தெளிவான சட்ட அங்கீகாரம் அவசியமானது என்பது யுனெஸ்கோவின் கோட்பாடாகும்.[6] பெருகி வரும் தகவற் சவால்களுக்கேற்ப பொருத்தமான சாதனங்களைக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் பொதுநூலகங்களுக்கு உள்ளது. இதனால் தொடர்ச்சியான செலவு காணப்படும். அதேவேளை முற்றிலும் இலவசமான

சேவையை வழங்கவும் வேண்டும். இவ்வாறான தன்மைகள் காரணமாக ஒரு நாட்டின் பொது நூலக சேவையானது தெளிவான சட்டரீதியான வரையறைகளையும், பாதுகாப்பையும் உடையதாக இருப்பது அவசியம். எனினும் இந்நாட்டில் அவ்வாறான தன்மை காணப்படவில்லை. உள்ளூராட்சி மன்றங்களுக்காக இயற்றப்படுகின்ற நியமத்துணை விதிகளின் அடிப்படையிலேயே பொதுநூலக சேவை வழங்கப்படுகின்றது. இவற்றிலும் சில குறைபாடுகளை இனங்காண முடிகிறது. இந் நியமத் துணைவிதிகள் உள்ளூராட்சி மன்றங்களின் தன்மைக்கு ஏற்பவும், நூலகங்கள் அமைகின்ற பிரதேசத்திற்கு ஏற்பவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இவ்வாறு தனித்தனியாகக் காணப்படுகின்ற துணைவிதிகள் யாவும் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டு அரசாங்கத்தின் செய்தி இதழில் (Government Gazette) வெளியிடப்பட்ட பின்னரே அவை அங்கீகாரம் பெற்றவையாகக் கருதப்படும்.

தற்போதைய பயன்பாட்டிலுள்ள நூலகத் துணைவிதிகள் பலவும் இத்தகைய சட்ட நடைமுறைக்கு உட்படாதவையாக உள்ளன. நாட்டின் இனமுரண்பாட்டுச் சூழல், துறைசார் அனுபவமும் தகைமையும் உள்ள நபர்கள் அரிதாக உள்ளமை போன்ற காரணங்களால் உள்ளூராட்சி மன்றத் துணைவிதிகளில் அதிகமானவை முறைப்படியான அங்கீகாரம் பெறாமல் உள்ளன.[7]

## ii. நூலகநிதி பற்றிய வரையறை இன்மை:

பொதுநூலக சேவை என்பது பொதுநிதியிலிருந்து (Public Fund) நடத்தப்பட வேண்டிய ஒரு சேவை ஆகும்.[8] பொது நிதியைக் கையாள்வது என்பது சட்ட திட்டங்களுக்குட்பட்டது. தற்போதைய பயன்பாட்டிலுள்ள நூலகத் துணைவிதிகளில் நூலக நிதி பற்றிய தெளிவான வரையறையைக் காணமுடியாதுள்ளது. உள்ளூராட்சி அமைப்புக்களின் கீழ் பராமரிக்கப்படுகின்ற ஏனைய நிறுவனங்களைப் போலவே பொது நூலகங்களும் அதன் சேவையும் கருதப்படுகின்றது. இத்தகைய நடைமுறை பொதுநூலகங்களின் அபிவிருத்தி நோக்கிய செயற்பாடுகளுக்குப் போதுமானதாக இல்லை.

iii. (a) உள்ளூராட்சி அமைப்புக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள சமூகக் கடமைகள் பலவாகும். மனிதனொருவன் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையான முழுமையான காலப் பகுதிக்கும் தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர், வீடமைப்பு, சுகாதாரம், வீதி பரிபாலனம் முதலான பல்வேறு சேவைகளையும் செய்யவேண்டிய நிலையிலேயே இவை உள்ளன. நாடுமுழுமையிலும் தற்போது உள்ள பொதுநூலகங்கள் அதிகளவில் அடிப்படை வசதிகள் குறைந்த கிராமங்களிலேயே உள்ளன.




இந்நிலையில் கிராமமக்களின் வாழ்வாதார சேவைகளுக்கே இவை முன்னுரிமை வழங்குகின்றன. நூலக சேவை வழங்குவதிலும் பார்க்க மக்களுக்கு ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதிலேயே ஆர்வம் செலுத்துகின்றன.

(ஆதாரம் : Directory of Libraries in Sri Lanka – 2010)

(b) ஆரம்ப காலத்தில் அமைக்கப்பட்ட உள்ளூராட்சி அமைப்புக்கள் தமது சேவைகளைப் பொதுமக்களுக்கு வழங்கத் தேவையான நிதியை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டன. ஆனால் தற்போதைய உள்ளூராட்சி மன்றங்கள் சுய உழைப்பிலேயே பெரிதும் தங்கியுள்ளன. நிதி விடயத்தில் இவை பெருமளவு நெருக்கடியை எதிர்நோக்கியவாறு உள்ளன. இவை வியாபார ஸ்தாபனங்களைப் போலச் செயற்படுவதாகவே மதிப்பிடப்படுகின்றன. இதனால் வழங்கப்படும் சேவைக்குரிய வருமானத்தை உள்ளூராட்சி மன்றங்களே தேடிக்கொள்ள வேண்டியுள்ளதனால் வரிவிதித்தலில் ஈடுபடுகின்றன. வழங்கப்படும் சேவைகளுக்குக் கட்டணம் அறவிடுகின்றன.[9] பொதுநூலக சேவை முற்றிலும் இலவசமாக வழங்கப்பட வேண்டியது. இலாப நோக்கமற்றது. அதிக செலவுடையது. இத்தகைய காரணங்களாலும் சிறப்பான தகவற்சேவையை வழங்க முடியாத நிலை காணப்படுகின்றது.

(c) அரசியல் தலையீடு

பொதுநூலக சேவையானது அரசியல், சமயம், இனவாதம் முதலான சக்திகளின் தலையீட்டினால் பாதிப்படையாத வகையில் கட்டியெழுப்பப்படுதல் இன்றியமையாதது. எனினும் இங்கு இவற்றின் தாக்கம் தவிர்க்க முடியாதவாறு காணப்படுகின்றது.

ஏறத்தாழ எட்டு வருடங்களுக்கு மேலாக நூலகர் நியமனம் இடம்பெறவில்லை. நாட்டின் யுத்த சூழ்நிலை இதற்குப் பிரதான காரணமாக இருந்துள்ளது. பின்னர் அண்மைக்காலங்களில் இடம் பெற்ற நியமனங்களின் போதும் தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் நோக்கில் நூலகவியல் கல்வித் தகைமையுடையோருக்கு முன்னுரிமை வழங்காமல் அரசியல் கட்சிகள் சார்ந்த நியமனங்கள் இடம் பெற்றுள்ளன.[10] உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தொழிலாளர் தரத்திலுள்ளோர் பதவியுயர்த்தப்படும் போது நூலகப் பணியாளர்களாக நியமிக்கப்படும் சூழலும் உள்ளது.

## iv) நூலகர் நியமனங்கள்

நூலகர் சேவையில் உள்ளவர்களுக்கான சம்பளத் தொகுதியும் அதன் அளவுத்திட்டமும் 1989 ஆண்டில்தான் வரையறை செய்யப்பட்டது.[11] அதுகாலவரை இலங்கையின் நூலக சேவையில் உள்ளவர்களுக்கான சம்பளம் வரையறை செய்யப்படவில்லை. இதனால் நூலகர் சேவையில் இணைந்து கொள்வதற்கான ஆர்வமின்மை காணப்பட்டது. குறைந்த சம்பளம் காரணமாகப் பலர் இச்சேவையிலிருந்து விலகினர். நூலகர் பயிற்சி பெறாதவர்கள் நூலகங்களை நிர்வகிக்கும் தன்மை காணப்பட்டது.[12] தற்போது இத்தன்மையில் படிப்படியாக நல்ல மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

அங்கீகரிக்கப்பட்ட நூலகர் வெற்றிடங்கள் நிரப்பப்படாமையால் பலர் தற்காலிக அடிப்படையில் கடமை புரிகின்றனர். உள்ளூராட்சி மன்றங்களின் தலைமைத்துவம் தமது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றும் முகமாக நூலகர் வெற்றிடங்களை நிரப்பும் போது நூலகவியல் தேர்ச்சியை முதன்மைப்படுத்தாது தவிர்ப்பதனாலும், உள்ளூராட்சி மன்றங்களில் பணிபுரியும் தொழிலாளர் தரத்தில் உள்ளோர் பதவியுயர்வு பெற்று நூலகப் பணியாளர் நியமனம் பெறுவதனாலும் எனப் பல வழிகளில் நூலகர் நியமனங்களின்போது பல்வேறு குறைபாடுகள் இடம்பெறுகின்றன.

## பொதுநூலக அபிவிருத்திக்குரிய தேவைகள்

- **நிதி ஏற்பாடு**

பொதுநூலகம் ஒன்றை ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து பராமரிக்கவும், நூல்களைக் கொள்வனவு செய்யவும், நூலகர்களுக்குச் சம்பளம் வழங்கவும் போதுமான அளவு நிதிவசதிகள் இல்லாதபோது பொதுநூலக சேவையை ஆரம்பிக்கக் கூடாது என யுனெஸ்கோ குறிப்பிடுகிறது.[13]

இக்கருத்தை இலங்கையும் ஏற்று நடக்குமாயின் மிகக் குறைந்தளவு பொதுநூலகங்களே நாட்டில் காணப்படும். நிதியைக் கருதி இவற்றை ஆரம்பிக்காமல் விடுவதிலும் பார்க்கப் பொதுநூலகங்களுக்கான நிதி பெறும் மூலங்களை (Source of Finance) உருவாக்கி பொது நூலக சேவையை அபிவிருத்தி செய்தல் வேண்டும். ஏனெனில் சமூகத்திற்கு பொதுநூ லகங்கள் ஏற்படுத்தக் கூடிய நல்ல விளைவுகள் அதிகமானவை.

- **சட்ட உருவாக்கம்**

பொதுமக்களிடமிருந்து அறவிடப்படும் வரி நாட்டு மக்களின் பொது வசதிகளை மேம்படுத்தப் பயன்படுகிறது. சனநாயக நாடுகளில் வரி அறவீடு (Taxation) என்பது சட்டத்தினாலன்றி வேறு வகையால் நடைமுறைப்படுத்தப்பட முடியாது. பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெறாத உப விதிகளைப் பயன்படுத்திப் பொதுநூலக அபிவிருத்திக்கான வரி விதிப்பதும் சட்டத்திற்கு முரண்பாடானது.

இந்தியாவிலே பொதுநூலகங்கள் தொடர்பான சட்டம் இயற்றப்பட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டின் சென்னைப் பொதுநூலகச் சட்டம் மூலம் தமிழ்நாட்டின் பொதுநூலக சேவை ஒழுங்கமைக்கப்படுகின்றது. வீட்டுவரி அல்லது சொத்து வரிகளில் ஒரு ரூபாவுக்கு பத்து பைசா வீதம் பொதுநூலக சேவைக்குரிய வரி அறவிடப்பட்டு நூலகநிதி (Library Fund) உருவாக்கப்படுகிறது. இந்த வரிவிதிப்பு விகிதத்தில் மாற்றம் செய்ய இச் சட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது.[14] இத்தகைய முன்னுதாரணங்களைக் கொண்டு இலங்கையில் இத்தகைய சட்டத்தினை இயற்றிக் கொள்வதன் மூலம் பொதுநூலக சேவை அபிவிருத்திப் பாதையை நோக்கி நகர்த்தப்படும்.

## நூலகவியல் கல்வியை விருத்தி செய்தல்

நூலகம் பற்றிய கொள்கைகள், நடைமுறைகள் அவற்றின் நிர்வாகம் முதலானவை சார்ந்த அறிவை வழங்கும் கல்வியாக நூலகவியல் கல்வி அமைந்துள்ளது. நூலகங்களின் சிறந்த சேவைக்கு இக்கல்வியறிவு மிகவும் அவசியமானது. பொதுநூலக சேவை மூலம் நாட்டில் தகுந்த பயன்களையும் அபிவிருத்தி நோக்கிய மாற்றங்களையும் ஏற்படுத்த வேண்டுமாயின் இக்கல்வி முறையை நன்கு திட்டமிட வேண்டும்.

இக்கல்விக்கான நிரந்தர விரிவுரையாளர்கள் இல்லை. நூலகவியல் கற்பித்தலில் ஈடுபட்டுள்ளவர்களில் 97 சதவீதமானவர்கள் பகுதி நேர விரிவுரையாளர்களாக உள்ளனர்.[15] 94 சதவீதமானவர்கள் கற்பித்தல் அனுபவம் அற்றவர்கள்.[16] கற்கை நெறிகளை நடாத்துவதில் நிதிப் பற்றாக்குறை உள்ளது.[17] பெரும்பாலானவை பகுதிநேரக் கற்கை நெறிகளாகவே உள்ளன. இக் கல்விமுறை தேவையான அடிப்படை வசதிகள் இல்லாமலே நடாத்தப்படுகின்றன.

பாடத்திட்டங்களிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது.[18] இவ்வாறான பிரச்சினைகளால் நூலகவியல் துறைசார்ந்த மனிதவள உருவாக்கத்தில் பின்னடைவு காணப்படுகின்றது. இது இலங்கையின் நூலக சேவையைப் பெரிதும் பாதிப்படையச் செய்துள்ளது. நூலகவியல் துறைசார்ந்த வெளியீடுகளும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.[19]

## முடிவுரை

பொதுநூலக சேவையை வழங்குகின்ற உள்ளூராட்சி மன்றங்கள் வலுவற்ற தன்மையுடனும், இலாபமற்ற நிலையிலுமே இயங்குகின்றன. அதனால் உள்ளூராட்சி மன்றப் பொதுநூலகங் களினால் நல்ல தகவற் சேவையை வழங்க முடியவில்லை. பொதுநூலகங்கள் தமக்கெனத் தனியான சட்ட அங்கீகாரம் இல்லாமலும் நிதியைப் பெற்றுக் கொள்வதற்குரிய வழிமுறைகளை உருவாக்கிக் கொள்ளாமலும் இருப்பதனால் இவை உள்ளூராட்சி மன்றங்களில் ஏற்படுகின்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும், ஏற்ற இறக்கங்களுக்கும் ஈடுகொடுக்க வேண்டியனவாக உள்ளன. அரசியல் மாற்றங்கள் இவற்றில் நேரடியான தாக்க விளைவுகளை உண்டு பண்ணுகின்றன. எனவே நூலகநிதி (Library fund) மற்றும் சேவை என்பன தொடர்பாகத் தெளிவான நியமங்களும் சட்டமும் இலங்கையினுடைய பொதுநூலகங்களில் தகவற் சேவைக்குரிய உடனடித் தேவைகளாக உள்ளன.

பொதுவாக நூலக அபிவிருத்தி என்பது பின்வரும் இரண்டு நிலைகளிலும் ஏற்படுத்தப்பட வேண்டியதாக உள்ளது.

i. நூலகத்தின் பௌதீக வளத்தைப் பெருக்குதல்.
ii. பௌதீக வளங்களை நன்கு பயன்படுத்தும் வகையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் மனித வளத்தைப் பெருக்குதல். அதாவது நூலகங்களை உருவாக்குதல்.

எனவே நூலகக் கல்வியும் நூலக அபிவிருத்தியும் ஒன்றில் மற்றொன்று தங்கியிருக்கும் நிலை உள்ளமையினால் இவையிரண்டும் வளர்த்தெடுக்கப்பட வேண்டியது இலங்கையின் வளமான பொதுநூலக சேவைக்கு இன்றியமையாதது.

## அடிக்குறிப்புகள்

1. பொதுநூலகங்கள் தொடர்பான யுனெஸ்கோ கொள்கை விளக்கம் - Manifesto of public libraries. pp. 1 – 4.
2. Directory of Libraries in Sri Lanka – 2010: (Public, University, Research and Technical Libraries.- Colombo: National Library and documentation service board, pp. 1- 30.
3. The Local Authorities (Standard by – Law) Act. No: 6 of 1952. Part xvii, pp 23 – 25.
4. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம், பிரிவு 36. பக். 57 - 59.
5. பிரதீபன், நடேசபிள்ளை. 2006 “இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் அமைப்புகளும் தொழிற்பாடும்” அரசறிவியல் சிறப்புக்கலைமாணி தேர்வின் பொருட்டு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல் துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை. யாழ்ப்பாணம். பக். 20 - 24

6. பொதுநூலகங்கள் தொடர்பான யுனெஸ்கோ கொள்கை விளக்கம் - Manifesto of public libraries pp. 09.
7. எஸ்.தனபாலசிங்கம் என்பவரிடம் ஆய்வாளர் 04.06.2010 அன்று நடத்திய நேர்காணலின் போது பெற்ற கருத்து. (தகவலாளர் முகவரி மாநகரசபைப் பொதுநூலகம் - யாழ்ப்பாணம், வயது 63, தொழில்: நூலகர், கல்வித்தகுதி: B.A,.Dip. in Lib.Sc.)
8. பொதுநூலக நியமங்கள் - Manifesto of public libraries p.10.
9. அ.வெ.மணிவாசகர் என்பவரிடம் ஆய்வாளர் 28.08.2010 அன்று நடத்திய நேர்காணலின் போது பெற்ற கருத்து. (தகவலாளர் முகவரி - அரசறிவியல் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், வயது: 58, கல்வித்தகுதி: Ph.D. தொழில் - பேராசிரியர்).
10. எஸ்.தனபாலசிங்கம் என்பவரிடம் ஆய்வாளர் 04.06.2010 அன்று நடத்திய நேர்காணலின் போது பெற்ற கருத்து. (தகவலாளர் முகவரி மாநகரசபைப் பொதுநூலகம் - யாழ்ப்பாணம், வயது 63, தொழில் நூலகர், கல்வித்தகுதி B.A., Dip. in Lib.Sc.)
11. (Public Administration circular No:47/89.- colombo: Ministry of Public administration, 1989. pp. 5-6).
12. எஸ்.தனபாலசிங்கம் என்பவரிடம் ஆய்வாளர் 04.06.2010 அன்று நடத்திய நேர்காணலின் போது பெற்ற கருத்து. (தகவலாளர் முகவரி மாநகரசபைப் பொதுநூலகம் - யாழ்ப்பாணம், வயது 63, தொழில் நூலகர், கல்வித்தகுதி B.A., Dip. in Lib.Sc.)
13. பொது நூலகங்கள் தொடர்பான யுனெஸ்கோ கொள்கை விளக்கம் - Manifesto of public libraries p. 12.
14. The Madras Public Library Act, 1948 Madras act xxiv of 1948) section – 12.
15. Wijetunge, Prdeepa and Jonathan Willson. "A descriptive survey of library and information science education professional in Sri lanka." In: Asian Libraries Vol 7. No. 11. 1998.- MCB University Press, P 316, 317 http://www/emerald insight.com. Accessed on 15.08.2009.
16. Wijetunge, Prdeepa and Jonathan Willson. "A descriptive survey of library and information science education professional in Sri lanka." In: Asian Libraries Vol 7. No. 11. 1998.- MCB University Press, P. 320. http://www/emerald insight.com. Accessed on 15.08.2009.
17. Wijetunge, Prdeepa. "Financial Sustenance of South Asian library school.: A case study of National Institute of Library and Information Science of Sri lanka in retrospect" In: DESIDOC Bulletin of Information Technology, vol. 27, No. 2, March. pp. 27, 28. http://www/dane.prairie.com. Accessed on 12.05.2009.
18. Wijetunge, Prdeepa and Jonathan Willson. "Perception of LIS education and Training in Sri Lanka" In: south Asian Libraries and Information Networks (SALIN). P. 12.
19. Patra, Swapan Kumar and Prakash chard. "Library and Information Science Research in SAARC and ASIAN Countries as reflected to LISA" In: Annals of Library and Information Studies. Vol. 56, March 2009. PP. 45 – 46.


பண்பாடு

# கலைப்பண்பாட்டு நினைவுகளும் ஆவணப்படுத்தலும்

எஸ். எதிர்மன்னசிங்கம்

இக் கட்டுரையில் தமிழ் மக்களுடைய கலைப் பண்பாட்டுக் கோலங்களின் மூல வேர்களையும், அதன் சிறப்பம்சங்கள் பற்றியும் பிரதானமாக எடுத்து நோக்கப்படும். ஆங்காங்கே யாழ்ப்பாணத் தமிழ் மக்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களது பண்பாட்டுப் பாரம்பரியம் எடுத்துக்காட்டப்படும்.

கிழக்கு வாழ் தமிழ் மக்களுடைய பாரம்பரிய கலைகள் மிகவும் சிறப்புமிக்கவை. இவை கட்டாயம் ஆவணப்படுத்தப்பட வேண்டும். ஏனெனில் அதிகமான கலையம்சங்கள் இன்று அருகி வழக்கொழிந்து போயுள்ளன. எதிர்கால சந்ததியினரும், ஆய்வுகளை மேற்கொள்வோரும் இவை பற்றித் தெரிந்து கொள்வதற்காக ஆவணப்படுத்தல் அவசியமாகின்றது. பாரம்பரியக் கலைகள் எனும் போது கூத்து, (வடமோடி, தென்மோடி) விலாசம், பறை மேளக்கூத்து, குரவைக்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன் கூத்து, மலையகத்தமிழரின் காமன் கூத்து, கொம்பு முறிப்பு, கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், கிராமியக் கவிகள், அம்மன் காவியம், எண்ணெய்ச் சிந்து ஆகிய சகலதும் பிரதானமானவை. இவற்றுள் இன்று துணங்கைக்கூத்து முற்றாக அழிந்துவிட்டது. குரவைக்கூத்து, பறை மேளக்கூத்து, மகுடிக்கூத்து, வசந்தன் கூத்து ஆகியவை அருகிப்போயுள்ளன. ஆங்காங்கே பாடசாலைக் கலை நிகழ்ச்சிகளில் மட்டுமே இடம்பெறுகின்றன. இவை பற்றித் தனித்தனியே விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

இவை போன்று தமிழ் மக்களுடைய பண்பாட்டுப் பாரம்பரியங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். அவற்றுள் சேர நாட்டுப்பண்பாடு, இந்து சமயப்பண்பாடு, சமய சமரசப்பண்பாடு, சாதிப்பண்பாடு, தொழிற்பண்பாடு, ஒழுக்கமுறைப் பண்பாடு, நாட்டுப்பாடல் பண்பாடு, வடசேரி, தென்சேரிப் பண்பாடு, சமூக பொருளாதாரப் பண்பாடு, சட்டதிட்டப் பண்பாடு, கலை கலாச்சார, மொழி இலக்கிய பண்பாடுகளின் சிறப்புக்கள் பற்றியும், தமிழகத் தொடர்பு, இஸ்லாமியர், சிங்களவர், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முதலானோருடைய தொடர்புகளால் பண்பாட்டில் ஏற்பட்ட மாறுதல்கள் யாவை என்பதனையும் கட்டுரையில் கீழே பார்க்கலாம்.

முதலில் தமிழ் மக்களது கலைகள் பற்றிப் பார்க்குமிடத்து கூத்தினை எடுத்துக்கொள்ளலாம். கூத்து மிகப்பழமையான மரபுக்கலையாக உள்ளது. வடமோடிக்கூத்து, தென்மோடிக்கூத்து, விலாசம் என மூன்று வகையான கூத்துக்கள் உள்ளன.

## வடமோடிக் கூத்து :

வடமோடிக்கூத்துப் பற்றிப் பார்ப்பதற்கு முன்னர் பொதுவாகக் கூத்து பற்றி பண்டைய இலக்கிய இலக்கணங்களில் என்ன சொல்லப்பட்டுள்ளதென்பதை நோக்கலாம். தொல்காப்பியர் “இருவகைக்

கூத்தின் இலக்கணம் அறிந்து" எனக் குறிப்பிட்டுள்ளதற்கு, உரையாசிரியரும், அடியார்க்கு நல்லாரும் இரு வகையான அகக்கூத்தென உரை எழுதியுள்ளனர். உரையாசிரியர் மேலும் தேசி - மார்க்கம் என்றார். அடியார்க்கு நல்லாரோ பல மாதிரியான இருவகைக் கூத்துக்கள் பற்றிக் கூறியுள்ளார்.

| | | |
|---|---|---|
| வசைக்கூத்து | - | புகழ்க்கூத்து |
| வேத்தியல் | - | பொதுவியல் |
| வரிக்கூத்து | - | வரிசாந்திக்கூத்து |
| சாந்திக்கூத்து | - | வினோதக்கூத்து |
| ஆரியம் | - | தமிழ் |
| அகக்கூத்து | - | புறக்கூத்து |

எனப் பதினாறு வகையான கூத்துக்கள் பற்றிய விளக்கங்களைத் தந்துள்ளார். இவற்றுள் இன்று எஞ்சியிருப்பவை ஆரியம், தமிழ் என்ற இருவகைக்கூத்துக்கள் மட்டுமே. இவைதான் காலப்போக்கில் வடமோடி, தென்மோடி என அழைக்கப்பட்டன. மோடி என்பது பகுப்பு, வகை, விதம், பாணி (style) எனப் பொருள்கொள்ளலாம். யாழ்ப்பாணத்தில் இதனை கருநாடகம், நாடகம் எனவும் மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு எனவும் அழைப்பர்.

இனி வடமோடிக்கூத்தினைப் பற்றி நோக்குமிடத்து கூத்தில் பிரதானமானவர் அண்ணாவியார் ஆவார். இவரே கூத்தினைப் பழக்கி நெறிப்படுத்துபவர். இவர் கூத்துக்களைப் பாடியவராகவும், பல கூத்துக்கள் ஆடிய அனுபவமுள்ளவராகவும், நல்ல குரல் வளம் உள்ளவராகவும் விளங்குவார். கூத்தைப் பழக்கும் முன்னர் ஆடுவதற்கு விருப்பமானவர்களை அழைத்து 'சட்டம்' கொடுக்கும் நிகழ்வு இடம்பெறும். சட்டம் என்பது ஓலைச்சட்டம், பனைஓலையில் கூத்துப் பாடல்கள் எழுதப்பட்டிருக்கும். அதனை தொடர்ந்து குரல் வளத்திற்கும், ஆளுமைக்கும் ஏற்ப நடிகர்களிடம் பாத்திரங்கள் கொடுக்கப்படும். பின்னர் பழக்குதல், சதங்கை அணிதல், அடுக்குப்பார்த்தல் (ஒத்திகை), அரங்கேற்றுதல் என்பன இடம்பெறும்.

வடமோடிக்கூத்தில் ஆட்டம், பாட்டு, தாளம், உடை, ஒப்பனை என்பன பிரதானமாக இடம்பெறும். உடையைக் 'கரப்பு உடுப்பு' என அழைப்பர். கிரீடம், கதை, வில், அம்பு, வாள் முதலானவற்றைக் கொண்டு கூத்தர்கள் கலரியில் வருவர். வரவுத்தாளம், கொலுத்தாளம் என்பன மிகச் சிறப்பாகவிருக்கும். தாளங்கள் ஈரடி, நாலடி, எட்டடி, வீசாணம் (பாம்பு போல் வளைந்தாடுதல்), குத்தி மிதித்தல், துள்ளி மிதித்தல் என பல வகையான ஆட்டங்கள் இடம்பெறும். அரசர்கள் வடமோடியில் கொலுவரும் போது:

'தக திகதா தெய்யாத் தெய் தெய்ய
தாத் தெய்யத்தோம் - திகதிக தா'

எனத் தொடங்கி தகததிங்கணதோம் எனக் கடைசித்தாளம் இரண்டு அல்லது மூன்று தரம் இறுக்கி அடிக்கப்பட்டவுடன் முடிவுபெறும்.

பெண் கூத்தர்களுக்குரிய தாளம்:

'தத்திமித் திமி தெய்ய திமித் திமி
தாகிட சுந்தரி தோம் தததிங்கிணா'

என ஆரம்பித்து பின்னர் திந்தாரத் தில்லானா என்பது வரைக்கும் அதிகம் மாற்றமில்லை. நாலடி போடுதலுக்குப் பதிலாகப் பெண்களுக்கு 'குந்துதல்' என்ற நடன நிலை சேர்க்கப்பட்டுள்ளது. பின்னர்

'தா திந் தத் தோ தீந் தத் தோ தீந்தோம்
தந் தகதா திந் தகதெய் தந்தகதா திந்தக தெய்'

என தாளம் முடிவு பெறும்.

### தென் மோடிக்கூத்து :

தென்மோடிக்கூத்து வடமோடியினின்றும் ஆட்டம், பாட்டம், தாளம், ஒப்பனை, உடை சகலவற்றிலும் வேறுபட்டுள்ளது. ஆட்டம் சிரமமும், நுணுக்கமுமானது. தென்மோடித் தாளத்தைப் பார்க்கின் :

'ததித் தளாதக ததெய்ய தகமி தாதிமித்தித் தெய்யே
ததித் தளாதக ததெய்ய திமிதக தாதிமித்தித் தெய்யே'

எனத் தொடங்கிய இம்முதற் பகுதி சுமார் 8-12 முறை திரும்பத்திரும்பப் படிக்கப்படும் போது கூத்தர் கலரி முகப்பில் நின்றவாறே ஏற்றபடி ஆடுதல் நியதி. பின்னர் அரங்கினுள் இறங்கி ஆடும் போது,

தச்சோந்திமி தந்தரிகிட தமிதக
தா தெய்யதா தளங்கு ததிங்கிண'

எனத் தொடர்ந்து சென்று 'தகதக தகதக தகதக (முன்னடை) தாதெய்யா தளங்கு ததிங்கிண' என்பதுடன் முடிவடையும். கட்டியகாரன், தலையாரி, சேவகன், தொழிலாளி, குமாரத்தி, முனிவர் ஆகிய கூத்தர் ஒவ்வொருவருக்கும் வேறுபட்ட தாளங்களையும், ஆட்டங்களையும் கொண்டு அமையும். அரச கன்னியர் முதலானவர்களுடைய வரவின் போது: 'ததித் தளாதக' என்ற பொதுத்தாளக்கட்டு பெரும்பாலும் அப்படியே இடம்பெறும். மேலும் அவர்கள் ஆடவேண்டிய நுணுக்கமான ஆடல்களுக்குரிய தாளக்கட்டுகளும் சில மேலதிகமாகச் சேர்க்கப்படுகின்றன. வீரர்களுக்குரிய துரிதமான ஆட்டங்கள் பிரட்டி மிதித்தல், துள்ளிமிதித்தல், குத்தி மிதித்தல் முதலானவை பொதுத்தாளக் கட்டுக்குரிய ஆட்டங்களின் போதும், கொச்சக முடிவிலும், தருக்கள் (பாட்டுக்கள்) படிக்கும் போதும் பொருத்தம் நோக்கி இடம்பெறும். இவ்வாறான தென்மோடிக்குரிய பலவகை நுணுக்கம் வாய்ந்த தாளக்கட்டுக்களும், ஆட்டங்களுமே கூத்தர்களை களைப்படையச் செய்கின்றன.

இனி இருவகைக் கூத்துக்களிலும் படிக்கப்படும் மெட்டு (ராகம்) வேறுபாடு கொண்டவையாக உள்ளன. வடமோடிக்கூத்தில் விருத்தங்களை அதிகம் நீட்டி இசைக்காது படிப்பதும், தென்மோடியில் அதனை நீண்ட ஓசை புறப்பட இழுத்துப் பாடுவதும் வழக்கமாக உள்ளது. வசனங்களும்

அவ்வாறே தென்மோடியில் நீண்ட ஓசையுடன் பேசப்படும். உடை, ஒப்பனை இரண்டிலும் இரு கூத்துக்களிடையேயும் அதிக வேறுபாடுகள் உண்டு. இவ்வாறான பாரம்பரிய மரபுக்கூத்துக்கள் கட்டாயம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

## குரவைக்கூத்து :

தமிழர் வாழ்வில் மிகப் பழங்காலந் தொட்டே இடம்பெற்று வந்துள்ளவொரு கலையே குரவைக்கூத்தாகும். இது பற்றி சங்கப் பாடல்களிலும், சிலப்பதிகாரம், குன்றக்குரவை, ஆச்சியர் குரவை போன்ற பகுதிகளிலும் பரவலாகப் பேசப்பட்டுள்ளது. கிழக்கிலங்கையில் கிராமங்கள் தோறும் இடம்பெறும் சமய விழாக்கள், கல்யாண வீடுகள், சாமத்திய வீடுகள் (பூப்பு நீராட்டல்) முதலான நிகழ்வுகளில் குரவை ஒலி எழுப்பும் செயல் இன்றும் இடம்பெறுகின்றது. சங்க இலக்கியங்களில் காணப்படும் குரவை வேறுபட்டது.

'வாங்கமைப் பழுறிய நறவுண்டு
வேங்கை முன்றிற் குரவையுங் கண்டே' - *நற்றிணை - 276*

இது ஒரு கூத்து வகையைச் சார்ந்ததாக அப்பொழுது விளங்கியது. நல்ல முற்றிய கள்ளைக் குடித்துவிட்டு முற்றத்தில் உள்ள வேங்கை மரநிழலில் ஆண்களும், பெண்களும் சேர்ந்து கை கோர்த்து கூத்தாக ஆடினர். மலைபடுகடாம், திருமுருகாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, புறநானூறு ஆகிய இலக்கியங்களில் குரவை பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. தமிழ் அகராதி குரவை பற்றிக் கூறும் போது குரவை முல்லை அல்லது குறிஞ்சி நில மகளிர் தம்முட் கைகோர்த்தாடும் கூத்து வகை என்றும், பெண்டிர் விசேட காலங்களில் நாவாற் குளறி எழுப்பும் மகிழ்ச்சி ஒலியே குரவையொலியாகும் எனவும் விளங்குகின்றது. ஆனால் இன்று கை கோர்த்தாடுதல், பாடுதல் முதலானவை மங்கி மறைந்து இன்னொலி மட்டுமே கிராமப்புறங்களில் வழங்குகின்றது.

சங்க இலக்கியங்களிற் காணப்படுவதையும் விடச் சிலப்பதிகாரத்திலேயே அதிகம் குறிப்புக்கள் இடம்பெறுகின்றன.

'குரவையென்ப எழுவர் மங்கையர்
செற்றிலை மண்டிலக் கடகக் கைகோத்து
அற்றிலைக் கொப்ப நின்றவாகும்.'

இதன் பிரகாரம் ஏழு பெண்கள் சேர்ந்து இவ்வாடலையும், ஒலியையும் செய்வர். கண்ணகி வழிபாட்டுடன் குரவை தொடர்புபட்டது. சடங்குகளின் போது குரவை போடுதல் சிறப்பாக இடம்பெறும். கந்தசட்டி விரதம் தொடங்கி மூன்று நாளில் வள்ளியம்மை திருமணம் நடைபெறும் போது இதனை குரவைத்திருநாள் என்றும், கல்யாணப்படிப்பு என்றும் அழைப்பர்.

குரவையிடும் போது பெண்கள் வலக்கையினை முன் மடித்து உயர்த்தி தம் மேல் உதட்டிற்கும், மூக்கிற்கும் இடையில் வலது உள்ளங்கையை வளைத்துப் பிடித்துக்கொள்வர். இடக்கையினை மடித்து வயிற்றோடு வைத்துக் கொண்டு மேலே உயர்ந்து இருக்கும் வலக்கையினைத் தாங்கிப்

பிடித்துக் கொள்வர். சில வேளைகளில் இடக்கையால் அருகே நிற்கும் பெண்ணின் தோளைப் பிடித்துக் கொள்வதும் உண்டு. வாயிதழ் இரண்டையும் குவித்து நாவிளிம்புகளை மேலே நோக்கி வளைத்து நாநுனியால் நுனி அண்ணத்தையும் குவிந்திருக்கும் இதழ்களின் உட்புறத்தையும் வாயின் உள்ளிருந்து வரும் காற்றின் வேகத்தோடு இணைய வருடும் போது ஒரு வகையான ஒலி தோன்றும். இவ் ஓசையே குரவையொலி ஆகும். கிழக்கில் வாழும் முஸ்லீம் மக்களிடையேயும் குரவை போடும் பழக்கம் உள்ளது. காட்டில் வாழும் குறவர்கள்கள் குடித்து மகிழ்ச்சியிலிருக்கும் போது குரவையிடுதலைக் காணலாம். அவர்கள் தலையில் கலசம், வில், அம்பு என்பவற்றை வைத்துக் கொண்டு ஆடுவர். இச்சந்தர்ப்பத்தில் ஆண் பெண் இருபாலாரும் சேர்ந்து குரவையொலி எழுப்புவர். இவ்வாறான குரவை இன்று வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கின்றது. எனவே கட்டாயம் இவை ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

### பறை மேளக்கூத்து :

கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் களுதாவளை என்னும் கிராமத்தில் பறை மேளம் அடிக்கும் வகுப்பினரால் மாத்திரமே இக்கூத்து ஆடப்பட்டு வருகின்றது. மிகப் பழமையான இக்கலையாடல் வேடம் அணிந்த இருவர் தமது பறைகளை அடித்து பல்வேறு தாளங்களுக்கேற்ப உடலை அசைத்து ஆடுதலே பறைமேளக் கூத்தாகும். சிங்கள மக்களுடைய கண்டிய நடனத்திற்கும் இக்கூத்தின் ஆட்ட முறைகளுக்கும் இடையே சில நெருங்கிய ஒருமைப்பாடுள்ளது. கோயில் முன்றலில் சமதள அரங்கில் மக்கள் சூழ்ந்திருக்க இக்கூத்து நடைபெறும். இராச வரவு, மந்திரி வரவு, கோணங்கி வரவு என அவரவர்க்குரிய வரவுத்தாளங்களைப் பறையில் எழுப்பி அவ்வோசைக்குத் தகுந்ததாக ஆடுவர். இதில் கதையம்சம் இராது. கதை இல்லாததாலும், ஒரு சமூகத்தினருக்கு மட்டுமே உரித்தாக இருப்பதாலும் ஏனைய சமுகத்தவர் இக்கூத்தை ஆடவில்லை. இன்று பல்கலைக்கழக மட்டத்திலும் மாணவர்களால் இப் பறைமேளக்கூத்து ஆடப்பட்டு வருகின்றது. களுதாவளை கிராமத்திலும் தற்போது இக்கூத்து ஆடப்படுவதில்லை. எனவே வழக்கொழிந்து போகும் இக்கலையாடல் கட்டாயம் ஆவணப்படுத்தப்பட வேண்டும்.

இக்கூத்து கிராமத்திற்கு கிராமம், பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபட்டதாக உள்ளது. சித்திரை வருடப்பிறப்புக் கொண்டாட்டங்களின் போது, கிராம மக்களால் பொதுவான இடங்களில் சமதள அரங்கில் நகைச்சுவை கொண்ட நிகழ்வாக நடைபெறும். மகுடிக்கூத்தில் ஒண்டிப்புலி என்று குறவர் தலைமகள் மலையாள தேசத்தில் இருந்து தனது மனைவி காமாட்சியுடன் கடல் கடந்து தனது கூட்டத்தாருடன் மட்டக்களப்பிற்கு வந்து மட்டக்களப்பு மந்திரவாதிகளுடன் பந்தயமிட்டு இறுதியில் வெற்றி பெறுவதாகக் கூத்து அமையும். மகுடிக்கூத்தின் இடையிடையே மலையாளத்தான் மந்திரமா? மட்டக்களப்பான் மந்திரமா? சிறந்தது எனப் பார்ப்போம் எனப் பந்தயம் பிடித்து நடிப்பர். மகுடி என்ற சொல்லுக்கு பல கருத்துக்கள் உண்டு. மந்திரங்களைக் காட்டும் விளையாட்டு என்ற அர்த்தமும் உண்டு. மட்டக்களப்பு மந்திரத்திற்குப் பெயர் பெற்றது என்ற கருத்தும் உண்டு. நாடகப் பாணியில் மகுடிக்கூத்து நடைபெறும். மூன்று வகையான மகுடிக்கூத்துக்கள் இப் பிரதேசங்களில் இடம்பெறுகின்றன. அவை ஒவ்வொன்றையும் தனித்தனியாக நோக்குவதாயின் கட்டுரை மேலும் விரிவடையுமெனக் கருதி ஏனைய கலையம்சங்கள் பற்றிப் பார்க்கலாம்.

### வசந்தன் கூத்து :

அடுத்த சிறப்புள்ள ஒரு கலையான வசந்தன் கூத்தினைப் பார்க்கையில் இது கண்ணகி வழிபாடு கோயிற் சடங்குகளுடன் தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. மதுரையை எரித்த

பின்னரும் சினம் (கோபம்) தணியாத கண்ணகியை குளிர்விப்பதற்காக இடையர் சேரி மக்கள் இவ் வசந்தன் கூத்தை ஆடி மகிழ்வித்ததாக அறியக்கிடக்கின்றது.

வசந்தன் என்ற சொல்லிற்கு 'நிறைந்த இன்பம்' என் பொருள். வசந்தன் கூத்து பன்னிருவர் வட்டமாக நின்று கோல் (தடி) கொண்டு தாள அமைதி பிசகாது பாடலுக்கு ஏற்றவாறு ஆடப்படும். மத்தளம், சல்லரி ஆகிய வாத்தியங்கள் இசைக்கேற்றவாறு அடிக்கப்படும். வெவ்வேறான சந்தங்கள் கொண்ட பாடல்கள் வெவ்வேறு பெயருடன் பாடப்படும். ஆடல்களின் செயலால் அப்பாடல்கள் பெயர்பெறுகின்றன. எடுத்துக்காட்டாக பிள்ளையார் வசந்தன், முயிற்று வசந்தன், குயில் வசந்தன், விதைப்பு வசந்தன், அறுவடை வசந்தன், அனுமார் வசந்தன் என்பவற்றைக் குறிப்பிடலாம். வசந்தன் கவிகளைப் பற்றி விபுலானந்த அடிகள் குறிப்பிடும் போது 'சங்க காலத்து ஒழுக்கங்களும், ஆடல் பாடலும் ஈழநாட்டிலே இன்னும் நிலவுகின்றன எனக் கூறியுள்ளார்.

வசந்தன் கூத்துக்களில் இடம்பெறுகின்ற தருக்கள் (பாட்டு), உடையணியும் முறை, காலில் சதங்கை அணிதல் போன்றவற்றைப் பார்க்குமிடத்து தென்மோடிக்கூத்து வகையைச் சார்ந்துள்ளதைக் கண்டுகொள்ள முடிகின்றது. வசந்தன் கவிகளின் சிறப்பு பற்றி திரு.வ.ஞானமாணிக்கம் என்பவர் கட்டுரை ஒன்றிலே மிகச் சிறப்பாக எழுதியுள்ளார். வசந்தன் பாடல்களுள் 'நரேந்திர சிங்கன் பள்ளு, இராசசிங்கன் பள்ளு' தலைப்பிலுள்ளவை தாம் எழுந்த காலப் பகுதியை ஓரளவு காட்டுவனவாகவுள்ளன. கி.பி 1739 முதல் 1761 வரை கண்டியை ஆட்சிசெய்த நரேந்திரசிங்கன் என்னும் அரசன் மீது பாடப்பட்டதே 'கண்டிராசன் பள்ளு'. இராசசிங்கன் பள்ளு 1739ஆம் ஆண்டு தொடக்கம் 1747ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியைப் பற்றியதாக இருக்கின்றது. எமக்கு கிடக்கின்ற 'வசந்தன் கவிகள்' யாவும் 1940இல் திரு.தி.சதாசிவ ஐயர் அவர்களால் தொகுக்கப்பட்டு 'வசந்தன் கவித்திரட்டு' என்னும் நூலாக வெளியிடப்பட்டுள்ளது. இவ் வசந்தன் கவிகளைப் பாடுவதில் காரைதீவு கயிலாயப் பிள்ளையார் என்னும் அண்ணாவியார் மிகவும் சிறந்து விளங்கினார். அக்காலத்தில் விதைக்கப்பட்ட நெல்லினங்கள் பற்றிய தகவல்களை இக்கவிகள் மூலம் நாம் அறிந்து கொள்ளமுடிகின்றது.

'பச்சைப் பெருமாள் கறுப்பன் பானைமுகன் - செழும்
பன்றிக் கூதன் வெள்ளைவாலன் பச்சை சம்பா
மெச்சியே பலரும் விரும்பும் வெள்ளை வாணன் - இந்த
மேதினி எல்லாம் புகழும் முத்துச்சம்பா'

எனப் பாடல் அமைந்துள்ளது. வசந்தன் கூத்தை ஆடுபவர்கள் அணிகின்ற உடைகள், ஒப்பனை என்பன பார்ப்பதற்கு மிகவும் அழகாகவிருக்கும். முஸ்லீம் மக்களிடையே காணப்படும் பாரம்பரிய 'களிகம்பு' என்னும் ஆட்டமும் இதனை போன்றதே. களிகம்பினைப் பழக்குபவரை முஸ்லீம்கள் அண்ணாவியாரென்றே அழைக்கின்றனர்.

## கொம்பு முறிப்பு (கொம்பு விளையாட்டு)

ஆவணப்படுத்தப்பட வேண்டிய கலைகளுள் கொம்பு முறிப்பு மிக முக்கியமானதாகும். ஏனெனில் இன்று இக்கலையம்சம் முற்றாக அருகிப் போயுள்ளது. கண்ணகி அம்மன் சடங்குகள்

நடைபெறும் காலங்களில் இக்கலையாடல் இடம்பெறும். நீதி தவறிய பாண்டிய மன்னனைப் பழிவாங்க மதுரையை எரித்த கண்ணகி கோபம் தணியாதவளாகக் காணப்பட்டபோது அவளைக் குளிர்விப்பதற்காக இடையர் குல இளைஞர் ஒரு காதல் கலந்த விளையாட்டை விளையாடினர். அவ்விளையாட்டே கொம்பு விளையாட்டு.

கொம்பு விளையாட்டு ஒரு கிராமத்தில் தொடங்குவதற்கு முன்னர் அக்கிராம மக்கள் இரு பிரிவாகப் பிரிவர். இதனை வடசேரி, தென்சேரி என அழைப்பர். வடசேரியைக் கோவலன் கட்சி (சுவாமி கட்சி) எனவும் தென்சேரியை கண்ணகி கட்சி (அம்மன் கட்சி) எனவும் அழைப்பர். கிராமத்து மக்களுக்கு அம்மை, சின்னமுத்து, வைசூரி, கண்நோய் முதலான கொடிய நோய்கள் வராமல் காப்பதற்காகவும், மழைவளமும், செல்வமும் வேண்டியே இவ் விளையாட்டைச் செய்தனர். இவ்விளையாட்டின் சிறப்பம்சமாக போர்த்தேங்காய் உடைத்தல், கொம்பு முறித்தல், கொம்புத் தட்டு எடுத்தல், தேர்க்கல்யாணம், குளுத்தி பாடுதல் என்பன இடம்பெறும்.

கொம்புவிளையாட்டில் முதலில் முறிக்கப்படும் கொம்பு ‘கொழு கொம்பு’ அல்லது விளையாட்டுக் கொம்பு என்று கூறப்படும். இதனை தொடர்ந்து கூடாரக் கொம்பு எனும் நால்வகை நிகழ்ச்சிகள் நடைபெறும். இக்கொம்புகள் நன்கு உறுதியான கரையாக்கு மரத்தினால் ஆனவை. ‘கருவீரம்’ என்றும் ‘வெட்சி’ எனவும் இம்மரம் இலக்கியப்பெயர் பெறும். வடசேரிக் கொம்பு 90 பாகை வளைவுடையதாகவும் தென்சேரி அதிலும் சற்று ஒடுங்கியதாகவும் இருக்க வேண்டும். இரு சேரிக் கொம்புகளையும் அணைத்துக் கட்டும் கம்புகளை ‘பில்லி’ என அழைப்பர். பில்லி கட்டப்பட்ட கொம்பே விளையாட்டிற்குத் தகுதியானது. ஒரு மரத்தில் பூட்டிய அரிப்பு (சிறுவட்டம்) எனப்படுவதான கயிற்றில் தென்சேரியான் கொம்பு தொடுக்கப்படும். அக் கொம்பிற் கொழுவிய வடசேரிக் கொம்பிலே இன்னுமொரு அரிப்பினை பிணைத்து அதிலே பெரிய வடமொன்றை மாட்டுவர். அவ்வடத்தைப் பிடித்து பலர் (இரு பிரிவாக உள்ளோர்) இழுக்கும் போது : இரண்டிலொரு கொம்பு முறியும். உடனே வெற்றியீட்டிய பிரிவினர் தமது சேரியின் பெயரைக்கூறி வெற்றியென ஆடிப்பாடி மகிழ்ச்சியடைவர்.

கொம்பு முறிக்கப்பட்ட பின்னர் பல சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெறும். இரு சேரியாரும் (பிரிவு) அலங்கரிக்கப்பட்ட பூம்பந்தர்களில் தத்தமது கொம்புகளை வைத்து ஊர்வலமாக எடுத்துச் செல்வர். அத்தோடு அலங்கரிக்கப்பட்ட கண்ணகையம்மன் சிலையையும் கொண்டு செல்வர். இச் சந்தர்ப்பத்தில் உடுக்குச் சிந்து ஊர்சுற்று காவியம் என்பன பழக்கப்படும். அத்தோடு வசந்தன் கூத்து, கும்மி முதலான ஆடல்களையும் செய்வர். இதில் கோலம் புனைவோர் வேடன், குறவன், போர்வீரன், முடி மன்னன், ஆண்டி, விகடன், முனிவர் முதலான வேடம் அணிந்தோரும் உடன் செல்வர். சிங்கள மக்களுடைய கலை வடிவங்களிலும் இது காணப்படுகின்றது. இதனைக் குருநாகலில் கண்டெடுக்கப்பட்ட ஏட்டுப்பிரதிகள் மூலம் அறியமுடிகிறது. பத்தினித்தெய்வம் சம்பந்தமான இலக்கியங்களிலும் இவை காணப்படுகின்றது. சிங்கள மக்கள் இதைப் ‘பொல் கெலிய’. (போர்த்தேங்காய்) எனவும் அங்கெலிய (கொம்பு முறித்தல்) எனவும் அழைப்பர். கொம்பு முறிப்பு நடைபெறும் போது பாடப்படும் பாடல்கள் மிகவும் சுவை ததும்பியவையாகும். எடுத்துக்காட்டாக

‘வடசேரியான் கொம்பு எங்கே யெங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே
செம்பரப் பற்றைக்கு கீழே கீழே’ எனவும்
‘வடசேரியான் கொம்பு எங்கே யெங்கே
வண்ணான்ட சாடிக்குள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கே யெங்கே
சித்திரத் தேருக்கு மேலே மேலே’ எனவும் பாடுவர்.

இந்தளவு சிறப்புக்கள் உள்ள பாரம்பரிய கலையாடலான ‘கொம்புமுறிப்பு’ கட்டாயம் ஆவணப்படுத்தப்பட்டு எதிர்காலச் சந்ததியினர் இது பற்றி அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். மற்றும் உள்ள கலைகளான கரகம், கும்மி, கோலாட்டம் என்பன இன்று கிராமங்களில் மட்டுமல்லாது பாடசாலை நிகழ்ச்சிகளிலும், பொது விழாக்களிலும் இடம்பெற்றுவருகின்றன.

### கரகம் :

கிராமத்தில் நோய், பஞ்சம் வந்த போது மாரியம்மனை மனதில் நிறுத்தி ஏழு பேர் அல்லது ஒன்பது பேர் அலங்கரிக்கப்பட்ட கரகத்தை தலை மீது வைத்து பாடலுக்கு அமைவாக ஆடுவர். வேப்பம் இலை, மலர் மாலைகள் என்பன கரகத்தை அலங்கரிக்கும். தலையிலிருந்து கீழே விழாதபடி மிகச் சிறப்பாக ஆடுவர். ஆடும் போது படிக்கப்படும் பாடல்கள் மிகவும் சிறப்பாகவும், இனிமையாகவும் உள்ளன. மட்டக்களப்பு மாநிலத்தில் பழுகாமம், கோட்டைக்கல்லாறு, எருவில் போன்ற கிராமங்களில் பிரபல்யம் பெற்றுள்ளன.

### காவடி :

இக் கலையாடல் சமயச் சடங்குகளுடன் தொடர்புடையது. காவடிச்சிந்துப் பாடல்கள் மிகவும் இனிமையும், உணர்ச்சியும் உள்ளவையாகும். பலவகையான காவடி ஆட்டங்கள் உள்ளன. பாற் காவடி, முள்காவடி, பன்னீர்க் காவடி, சந்தனக்காவடி, புஷ்பக்காவடி என வெவ்வேறு வகையாக உள்ளன. தற்பொழுது பெருமளவு எல்லோரையும் பரவசத்தில் திகைக்கச் செய்வதாகப் பறவைக் காவடி உள்ளது.

### கும்மி :

கும்மி நிகழ்ச்சி தொடங்கும் போது ஒரு குத்துவிளக்கையோ, கிருஷ்ணன் சிலையையோ நடுவில் வைத்து அதனைச் சுற்றிச் சுற்றிப் பெண்கள் பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் கைகளில் தாளம் தட்டிக் கொண்டும் ஆடுவர். ஆடல் எளிதாயினும் ஆடல்களுக்கான நடைகளும் நிலைகளும், உடல் நெளிவுகளும் இயற்கை எழில் நிரம்பிக் காணப்படும். வசந்தகால விளையாட்டான இது தமிழ் நாட்டில் மாவிளக்கேற்றி விரதம் அனுட்டிக்கும் காலங்களிலும் இடம்பெறும்.

நாம் ஒரு மனிதனது பிறப்பு தொடக்கம் மரணம் வரை பண்பாட்டுக் கோலங்களை அவதானிக்கலாம். குழந்தை பிறந்த பின்னர் மருங்கைச் செலவு, மொட்டையடித்தல், காதுகுத்தல், அரைநாண் பூட்டுதல், பல்லுக்கொழுக்கட்டை சொரிதல், பிறந்த நாள் கொண்டாடுதல், பெண் குழந்தையாயிருந்தால் சாமத்தியம் (பூப்பு நீராடல்), கேட்டுப் போதல், நிச்சயம் பண்ணல், திருமணம் செய்தல், அம்மி மிதித்தல், மெட்டி போடல், அருந்ததி காட்டல், மாலை மாற்றல்,

கலத்தில் போடல், கால் மாறுதல், மாப்பிள்ளைச் சோறு என ஒன்றன் பின் ஒன்றாக இடம்பெறும். இதே போன்றுதான் ஒருவரின் மரணம் நிகழ்ந்த பின்னர் உறவினர்களுக்கும், சுற்றத்தவர்கள், நண்பர்கள் முதலானோர்க்குத் தெரியப்படுத்தல், கூரைமுடி வைத்தல், வெள்ளை கட்டுதல், பறை அடித்தல், சவ அடக்கத்திற்கான கிரியைகள் செய்தல், வாய்க்கரிசி போடல், கால் கழுவுதல், பாடை கட்டுதல், அடக்கம் செய்தல், கொள்ளிக்குடம் உடைத்தல், வீட்டில் மாத்துக் கொடுத்தல், கண் விழித்தல், வைகுந்த அம்மானை படித்தல், ஐந்தில் கல்லை வைத்தல், எட்டுச் செலவு, முப்பத்தோராம் நாள் கிரியைகள், ஆண்டுத்திவசம், மாளயம் என ஒழுங்கு முறையில் இவை யாவும் நடைபெறும். இவ்வாறான பாரம்பரிய சம்பிரதாயச் சடங்குகளை நினைவில் நிறுத்துவதோடு ஆவணப்படுத்தவும் வேண்டும்.

முக்கியமாக சாதிப் பண்பாட்டினைப் பற்றிப் பூரணமாக அறிந்து கொள்ள வேண்டுமாயின் குளக்கல்வெட்டு, பெரிய கல்வெட்டு, பங்குகூறும் கல்வெட்டு, நாதன் கல்வெட்டு, போடி கல்வெட்டு, சீர்பாதகுல வரலாறு, முக்குவர் வன்னிமை, திருபடைக் களஞ்சியம் முதலானவற்றை நன்றாக ஆராய வேண்டும். சமய பண்பாடு பற்றிப் பார்க்கும் போது முக்கியமாக கிழக்கில் கண்ணகி வழிபாடு, வதனமார் வழிபாடு, முருக வழிபாடு ஆகியவற்றோடு சிறுதெய்வ வழிபாடும் உள்ளது. சமயச் சடங்குகளில் சர்க்கரை அமுது, தண்ணீர்ச் சோற்றுப்பள்ளயம், வயிரவர் மடை என்பனவும் முக்கிய இடம்பெறுகின்றன.

ஒழுக்கமுறை பண்பாட்டைப் பார்க்கும் போது சில தனித்துவ அனுட்டானங்களும், நடையுடை பாவனைகள் என்பவற்றையும் கடைப்பிடிக்கின்றனர். சகுனம் பார்த்தல், சாத்திரம் கேட்டல், கண்ணூறு, நாவூறு கழித்தல் முதலானவையெல்லாம் நம் பண்பாட்டு பாரம்பரியத்தில் உண்டு. சட்டதிட்டப் பண்பாடுகளுக்கு முக்குவச்சட்டம், தேசவழமைச்சட்டம், மருமக்கள் வழி உரிமைகளும் சீதன முறை வழக்கங்களும் உள்ளன. உரோமச்சட்டமும் எமக்கு பல வழிகளிலும் உதவுகின்றது. மாந்திரீகம், வசியம், வைத்தியம், மனையடி சாத்திரம் முதலானவையும் பாரம்பரியப் பண்பாட்டின் நாடிகளாக உள்ளன. வாய்மொழி இலக்கியங்கள் தாராளமாக உள்ளன. கண்ணகி அம்மன் காவியம், எண்ணெய்ச்சிந்து, குளுத்திப்பாடல்கள், தோத்திரம், பிரார்த்தனை ஆகியவையெல்லாம் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் சிறப்பிடம் பெறுகின்றன.

கிழக்கிலங்கை மக்களின் சீதன முறைகள் ஏனைய பிரதேசப் பாரம்பரியங்களிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. பெண்ணுக்குத் தனியாகவன்றி மாப்பிள்ளைக்கும் சேர்த்து சீதனம் கொடுக்கப்படுகின்றது. பிள்ளைகள் இல்லாமல் மனைவி இருந்தால் சீதனம் முழுவதும் மாப்பிள்ளைக்கும், பிள்ளைகள் பெற்று மனைவி இருந்தால் சீதனச்சொத்து பிள்ளைகளுக்கும் சேரும். கணவனும், மனைவியும் திருமணமுறிவு ஏற்படும் போது சீதனச்சொத்து இரண்டாகப் பிரிக்கப்படுகின்றது. திருமணத்திற்குப் பின்னர் ஆறு மாதம் சோறு கொடுக்கும் வழக்கமும், முதற் பிரசவம் பார்த்தலும், சீதனக்காணியை முதன் முதல் விதைத்து வெட்டிக் கொடுத்தலும் தனிப்பட்ட பண்பாட்டுப் பாரம்பரியமாகும். இது முக்குவ வழமைகளில் மிகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கிழக்கு வாழ் இஸ்லாமிய சகோதரர்களிடமும் இது பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மருமகள் கர்ப்பிணியாக இருக்கும் போது மாமியார் வீட்டார், மச்சாள்மார் கர்ப்பிணிப் பெண்ணுக்கு கொழுக்கட்டை அவித்துக் கொண்டுபோதல் மரபு வழிப் பண்பாட்டுப் பாரம்பரியமாகும்.

நகர்ப்புறங்களில் இன்றைய நாகரிகச்சூழலில் மாறிக்கொண்டு போனாலும், கிராமப்புறங்களில் இன்றும் இவை நடைமுறையிலுள்ளது. கண்ணூறு, நாவூறு, காற்றணவு பார்க்கும் பழக்கம் இன்றும் நம் தாய்மாரிடம் உண்டு. குழந்தையை மாலை நேரத்தில் வெளியில் கொண்டு செல்லமாட்டார்கள். பேய், பிசாசுகளின் பார்வை ஏற்படலாம், பட்சிகளின் எச்சம் படலாமெனவும் கூறுவர். காற்றணவு ஏற்படாமல் குதிரை லாடம் போன்ற இரும்புத்துண்டு ஒன்றை நெருப்பிலே காச்சி, நீரில் அதனைத் தோய்க்கும் போது அந்நீர் குழந்தையின் முகத்திலே சீறியடிக்கும் போது ஏற்படும் உணர்வு அல்லது ஒலியினால் அந்த காற்றணவு இல்லாமல் போகும் என நம்பிக்கை கொண்டுள்ளனர். இரும்பினை அடுப்பிற்குள் போடும் போது கண்சிரட்டை, செங்கல்துண்டு, முச்சந்தி மண், கூரைக்கங்கில், காய்ந்த மிளகாய், உப்புக்கல் என்பவற்றையும் சேர்த்து அடுப்பிற்குள் போடுவர்.

எமது கலை பண்பாட்டுப் பாரம்பரியத்தில் இரு வேறுபட்ட முக்கிய அம்சங்கள் உள்ளன. ஒன்று வாழ்வியல் சடங்குகள், மற்றயது வழிபாட்டுச் சடங்குகள் என்பவையே. இதுவரை வாழ்வியல் சம்பந்தப்பட்ட சடங்குகள் பற்றி ஆராய்ந்தோம். இனி வழிபாட்டுச் சடங்குகள் பற்றிப் பார்க்கலாம்.

வழிபாட்டுச் சடங்குகளை இரு பிரிவாக நோக்கலாம். ஒன்று வீடுகளில் நடைபெறும் சடங்குகள் மற்றையது கோயில்களில் நடைபெறும் சடங்குகள். வீடுகளில் மக்களால் செய்யப்படும் சடங்குகள் நடைபெறுகிறது. வீடுகளிலே வயிரவர் பந்தல் இருக்கும். காலையில் சர்க்கரை அமுது, தண்ணீர்ச்சோற்றுப்பள்ளயம் செய்து மாலையில் வயிரவருக்கு சடங்கு நடைபெறும். காலையில் நடைபெறும் சர்க்கரையமுதிற்கு கன்னிமார் என மூன்று அல்லது ஐந்து இளம் பெண்களை அழைத்து அவர்களைப் பூசை முகத்தில் இருத்தி அவர்களுக்கு முன்பாக வெள்ளைச் சேலை விரித்து எல்லா வகையான உணவுவகைகளையும், சர்க்கரை அமுது, தண்ணீர்ச்சோறு, பாணக்கம் முதலானவற்றை படைத்துப் பூசை செய்து பூசை நிறைவு பெற்றதும் வீட்டிற்கு அனுப்புவர். கன்னிமார் வெள்ளைப்பாவாடை சட்டை அணிந்து முக்காடு இட்டு மிக அழகாகத் தோற்றம் அளிப்பர். மாலையில் வயிரவருக்கு றொட்டியும் சுட்டு, மொந்தன் வாழைப்பழமும், கரும்பு முதலான பூசைப் பொருட்களும் வைத்து, கஞ்சா கலந்த சில றொட்டிகளும் சுட்டு வைத்து வயிரவர் காவியம் படித்து பூசை செய்து முடிப்பர். பூசாரி ஒருவர் வந்து மந்திரம் படித்து இப்பூசையினைச் செய்வார்.

இனி கோயில்களில் நடைபெறும் சடங்குகளை நோக்கும் போது, கண்ணகி அம்மன் கோயில்கள், மாரியம்மன் கோயில்கள், திரௌபதி அம்மன் கோயில்கள், வயிரவர் கோயில்கள், நாகதம்பிரான், வதனமார், காளியம்மன் முதலான கோயில்களில் வருடந்தோறும் இச்சடங்குகள் நடைபெறுகின்றன.

கிழக்கிலங்கையில்வைகாசிமாதம்என்றாலேகோயிற்சடங்குகள்களைகட்டத்தொடங்கிவிடும். வைகாசி மாதம் பூரணை தினத்தில் அம்மன் குளிர்த்தி நடைபெறும். ஆரம்பகாலத்தில் எல்லாக் கோயில்களிலும் தெய்வம் ஆடிக் கட்டுச்சொல்லிப் பலி கொடுத்து, மந்திரம் சொல்லிப் பூசைகள் (சடங்கு) நடைபெறும். பூசை செய்பவர் பூசாரி அல்லது கட்டாடி என அழைக்கப்படுவார். பூசை நடைபெறும் போது தெய்வம் உருவேறி பேயாட்டம் ஆடுவார். அச்சமயத்தில் பக்தர்கள் தமது

குறைகளை சொல்லிக்கட்டு கேட்பர். தெய்வம் கட்டுச் சொல்லும். அத்தருணத்தில் அவர்களால் பாவிக்கப்படும் சொற்கள் விசேடமானவை. ஆசான், குஞ்சான், சாமி, மலையேறிவிட்டது போன்ற வார்த்தைகள் உபயோகிக்கப்படும். தெய்வங்கள் கோயிலுக்குள் ஓடிச்சென்று சாட்டைக்கயிற்றைக் கொண்டு வந்து திடகாத்திரமான இளைஞர்களிடம் கொடுத்து சாட்டை அடிக்கும் படி கூறும். சாட்டை அடிக்க வேண்டும். அப்பொழுது அத்தெய்வங்களுக்குச் சந்தோஷம் ஏற்பட்டால் உள்ளே சென்று கூடையில் உள்ள பழங்கள், வெற்றிலை, கரும்பு முதலானவற்றைக் கொண்டு வந்து சாட்டை அடித்தவருக்கு கொடுத்து மகிழ்ச்சியடையும்.

சில கோயில்களில் 'பலி கொடுக்கும்' வழக்கமும் இருந்தன. கோழி, ஆடு முதலானவற்றை தலை அறுத்து கொடுப்பது, நரபலி கொடுக்கும் முறையும் சில கோயில்களில் நடைமுறையிலிருந்தது. பூசாரி தனது கையைக் கத்தியால் கீறி இரத்தத்தை தெய்வம் குடிப்பதற்கு கொடுப்பார். தற்பொழுது இந்நிகழ்ச்சியெல்லாம் சட்டத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. சடங்குகள் நடக்கும் போது அம்மன் காவியம் படிக்கப்படும். இருவர் சேர்ந்து உடுக்கு அடித்துப் பாடும் போது கேட்பதற்கு மிக இனிமையாகவும் பரவசமாகவும் இருக்கும். இவ்விதம் வாழ்வியல் சடங்குகளும், வழிபாட்டுச் சடங்குகளும் சமயவழிபாட்டில் மக்கள் கொண்டுள்ள பற்றினையும், நம்பிக்கையினையும் பறை சாற்றி நிற்கின்றன. வருடந்தோறும் சடங்கு செய்யாவிட்டால் நோய், துன்பம் ஏற்படும் என மக்கள் ஆழமாக நம்பினர். இவையெல்லாம் எமது பண்பாட்டுப் பாரம்பரியத்தின் சிறப்பினையும், மேன்மையையும் எடுத்துக் காட்டுகின்றன. எனவே இவற்றை நினைவிலிருத்தி ஆவணப்படுத்த வேண்டியது மிக அவசியமானது.

இதுவரை ஆராயப்பட்ட கலை பண்பாட்டுப் பாரம்பரியங்களின் சிறப்பியல்புகள் மக்கள் வாழ்வில் எந்தளவு இடம்பிடித்திருந்தது என்பதையும் அவற்றின் முக்கியத்துவத்தினையும் ஓரளவு கண்டுகொள்ளமுடிந்தது. இவை எதிர்கால சந்ததியினருக்கும் ஆய்வாளர்களுக்கும் உதவும் வகையில் நினைவில் இருத்துவதோடு அவற்றின் முக்கியத்துவம் கருதி ஆவணப்படுத்தி வைக்க வேண்டிய முயற்சிகளும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. பேராசிரியர் வித்தியானந்தன்.சு, தென்மோடிக்கூத்து அலங்காரரூபன் நாடகம் பக்.03, இலங்கைக் கழகத் தமிழ் நாடக்குழு - 1962

2. பூபாலப்பிள்ளை.செ, மட்டக்களப்பு நாட்டுக்கூத்து கலைப்பூங்கா பக். 65, இலங்கை சாகித்திய மண்டலம் கொழும்பு - 1963 சித்திரை

3. கந்தையா.வீ.சி, தென்மோடி வடமோடி நாடகங்கள் பக். 144, தினமதி ஆண்டு மலர் - 1972

4. கந்தையா.வீ.சி, அனுவுத்திர நாடகம் முன்னுரை பக். 07, மட்டக்களப்பு பிரதேச கலாமன்றம் - 1969

5. பெரியதம்பிப்பிள்ளை.ஏ, இராம நாடகம் அணிந்துரை பக். 05, முட். பிரதேச கலாமன்றம் - 1969

6. கந்தையா.வீ.சி மட்டக்களப்பு தமிழகம் நாட்டுக்கூத்துக்கள் பக். 64. ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீடு மன்றம் யாழ். - 1964

7. சற்குணம்.ம, கொம்பு விளையாட்டு பக். 121. தினமதி ஆண்டு மலர் - 1972

8. கந்தையா.வீ.சி, மட் தமிழகம் கொம்பு விளையாட்டு பக். 183, ஈழகேசரி பொன்னையா நினைவு வெளியீடு மன்றம், யாழ். - 1964

9. பூபாலப்பிள்ளை.செ, கண்ணகி வழிபாடும் கொம்பு விளையாட்டும், வீரகேசரி - 17.04.1949

10. விபுலானந்த அடிகளார் வசந்தன் கவி. ஸ்ரீ லங்கா பக். 21. - 1953

11. கந்தையா.வீ.சி, மட் தமிழகம் வசந்தன் ஆடல் பக். 198, ஈழகேசரி பொ.நி.வெ 1964

12. ஞானமாணிக்கம்.வ., வசந்தன் இலக்கியம், ஸ்ரீலங்கா - 1961

13. சதாசிவ ஐயர்.தி. மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு . மட். தெற்கு தமிழாசிரியர் சங்கம். - 1940

14. நடராசா எவ்.எக்ஸ்.சி குரவை ஸ்ரீ லங்கா பக். 10-13 - 1954

15. Tamil Lexicon vol – 2 part 2 . University of Madras pages 12. 1917

16. மௌனகுரு.சி, பழையதும் புதியதும், பக் 70-72

17. Ragavan,M.D The Kuravai - an ancient folks custom of the eastern province of Ceylon pg 26. Ceylon today 1960

18. குணதிலக. எம். எச்., Sokuri of SriLanka - 1976

19. சரச்சந்திரா. எ. ஆர்., The Folk Drama of Ceylon - 1966

20. கந்தையா. வீ. சி, கண்ணகி வழக்குரை பக். 115. - 1968

# யாழ்ப்பாணப்பிரதேசத்தில் பன்னத்தொழிலாளரின் மொழியும் பண்பாடும்

சுவர்ணியா சோமசுந்தரம்

## 1. அறிமுகம்

வரலாறு பற்றிய கருத்துநிலை இன்று மாற்றம் கண்டுள்ளது. ஆளும் வர்க்கத்தினர்க்கு அனுசரணையான வரலாற்றுப்பார்வை மறைந்து வரலாற்றின் உருவாக்கத்திற்கு காரண மாயிருந்த தொழிலாளர்களின் வரலாறு பற்றி பேசும் நிலை உருவாகியுள்ளது.

பண்டைத்தமிழர் பூமியை நானிலம் என சிறப்பித்தனர். இந்த நான்கு நிலங்களின் குறியீடாக குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என்னும் மரங்களே இருந்தன. எனவே தொன்று தொட்டு தமிழர் தம் பண்பாட்டிலே நிலமும் அந்நிலத்தில் நிறைந்து நின்ற மரங்களுமே செல்வாக்குப்பெற்றன. வரலாறு படைத்துள்ளன. அதுபோல் யாழ் மாவட்டம் என்றவுடன் மக்களது ஞாபகங்களில் நிழலாடுவது பனைமரமே. பண்டைய மன்னர்கள் பனம் பூவைச் சூடினார்கள் எனவும் அவர்தம் கொடிகளிலே பனை மரத்தை குறியீடாகப்பொறித்தனர் என்ற செய்தியும் உண்டு. எனவே ஈழத்தமிழரின் பண்பாட்டு வரலாறு எழுதும் போது பனை மரம் முக்கியம் பெறவேண்டிய ஒன்றாகும்.

யாழ்ப்பாணப் பிரதேசத்தில் பனைமரம் செறிந்து காணப்பட்டமையால் பண்டைக்காலத்தில் பன்னத்தொழிலாளர்களும் செறிவாகவே காணப்பட்டார்கள். ஆனால் இன்றைய நாகரிக வாழ்வினால் இவர்களின் தேவை குறைந்து போக அத்தொழிலில் ஈடுபட்டோரும் மருவியே போனார்கள். பன்னத் தொழிற்குழுவினர் குடிசைத்தொழில் மூலம் பல கைப்பணிப் பொருட்களை உற்பத்தி செய்தனர். அவர்தம் கலை அம்சங்களும் கலைச்சொற்களும் அந்தப்பொருட்களிலே நிறைந்திருந்தன. தூய்மை மகிழ்வு ஆரோக்கியம் என்பனவும் இணைந்திருந்தன. கனி இருக்க காய் கவர்வது போன்று நம்மவர் சுயபொருளாதார உற்பத்திப்பொருட்களைக் கைவிட்டு நவீன பிரதி பிளாஸ்ரிக் பாவனைப்பொருட்களை வாங்கினர். பொருளாதார வளர்ச்சியால் குடிசைத்தொழிலும் தொழிற்பொருட்களும் பெறுமதியற்றுப்போயின. இது காலத்தின் மாறுதல். எனவே பன்னத்தொழிலாளரின் உற்பத்திப்பொருட்கள் பற்றியும் அதன் பயன்பாடு பற்றியும் பேசவும் உணர்த்தவும் வேண்டிய தேவையினாலும் கடமைப்பாட்டினாலும் இவ்வாய்வுக்கட்டுரையை மேற்கொண்டுள்ளேன்.

## 2. பன்னத்தொழிலாளரின் வரலாறு

வரலாறு என்பது தொன்மை பற்றிய பார்வை, தொன்மை தொடர்பான பார்வை என பல பொருள்படும். இது இலக்கியம் சார்ந்தோ கட்டடம் சார்ந்தோ கலை சார்ந்தோ காணப்படும். ஆனால் என்னுடைய வரலாற்றுப்பார்வை தொளிலாளர் சார்ந்ததாக அமைந்துள்ளது. பன்னத் தொளிலாளரின் வரலாறு பற்றி அறிவதற்கு பனை சம்பந்தப்பட்ட நூல்களும் தொழிலாளர்களிடம் நேர்காணல் மூலம் பெறப்பட்ட தகவல்களுமே உதவியுள்ளன.

இலங்கையிலே வடக்கு கிழக்கு மாகாணங்களில் இணையில்லாத இயற்கைச்செல்வமாக பனைவளம் கருதப்படுகிறது. வறண்டபகுதிகளான மணல்தரை கடற்கரை, சுண்ணாம்புக் கற்பாறை முதலான இடங்களில் நன்கு வளரக்கூடியது. ஏனைய பொருளாதாரப் பயிர்களைப்போல நீர்ப்பாசனம் உரமிடுதல் பாதுகாத்தல் முதலான எம்முயற்சியும் அவசியமற்றதாகக் கருதப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலே பனைவளம் விசாலித்துள்ள இடங்களாக பச்சிலைப்பள்ளி, வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்கு, வடமராட்சி, தென்மராட்சி, தீவுக்கூட்டம் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கையில் அரசாங்கம் பனை அபிவிருத்தி சபையை 1978 ஆம் ஆண்டு ஆரம்பித்தவுடன் யாழ்ப்பாணத்திலே பனையின் பரம்பலுக்கு தனிப்பட்ட பெரியோர் பலரும் சனசமூக நிறுவனங்களும் பாடசாலைகளும் உதவியுள்ளன. இச்செயற்திட்டத்தை ஊக்கிவிக்கும் பொருட்டு மில்க்வைற் நிறுவனத்தினர் பனம் விதைகளை சேகரித்துக்கொடுத்தவர்க்கு 'பனைவளம் பெருக்கிய பண்பாளர்' என்ற பட்டமும் சான்றிதழும் வழங்கி கௌரவித்தமையை மில்க்வைற் செய்தியில் காணமுடிந்தது.

பன்னத்தொழிலாளரின் வரலாற்றைக்காண்பதற்கு முன்பு பனை மரத்தின் பரம்பலை அறிதல் அவசியமானதொன்று. பனை மரத்தின் தோற்றம் தொடர்பான புராணக்கதை ஒன்றுள்ளது. சம்பந்தர் தேவாரத்திலும் பனைமரம் பேசப்படு பொருளாயுள்ளமை கருத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

## பனை மரத்தின் தோற்றம் பற்றிய புராணக்கதை

ஆதியிலே பிரம்மா உலகத்தைப் படைக்கும்போது லட்சக்கணக்கான விருட்சங்களைச் சிருஷ்டித்தாராம். ஆனால் உண்ண உணவும், இருக்க வீடும், படுக்கப்பாய் போன்ற மனிதனின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும் மரத்தை சிருஷ்டிக்கவில்லை என்று மக்கள் கருதியதனால் சிவனிடம் முறையிட்டார்களாம். உடனே சிவன் பனைமரத்தை சிருஷ்டிக்க பிரம்மாவுக்கு உத்தரவிட்டாராம். என்னும் இக்கதை தற்காலத்தே ஏற்றுக்கொள்ளமுடியாத அசாத்தியமான ஒன்றாக இருப்பினும் ஆதிமனிதனிடம் கடவுள் நம்பிக்கையும் கற்பனை ஆற்றலும் சிறந்திருந்தமையைக் காணமுடிகிறது.

மனிதனிடம் ஆண் பெண் என்ற பால் வேறுபாடு இருப்பதைப்போல் இயற்கையிடமும் சில குறிப்புகளைக்கொண்டு ஆண்மரம், பெண்மரம் எனச்சுட்டினர். இவ்வேறுபாட்டினை தாவரவியலாளரும் வெளிப்படுத்தியுள்ளனர். சம்பந்தரும் ஒருவருடைய வளவிலே ஆண்பனைகள் நிறைந்திருப்பதனைக் கண்ணுற்று அவற்றை பெண்பனைகளாக மாற்றியதாக வரலாறு உண்டு. அன்றைய சமூகத்தின் முக்கிய பொருளாதாரத்தினைப் பூர்த்தி செய்யக்கூடிய ஒன்றாக பெண்பனை இருந்துள்ளது. என்னும் தத்துவம் இக்கதையினூடாக வெளிக்கிளம்புவதனைக்காண முடிகிறது.

பனையின் வரலாற்றை ஆராய்ந்த தாவரவியலாளர்களும் வரலாற்று ஆசிரியர்களும் அது தோன்றிய காலத்தை கணிப்பிட்டு கூறமுடியாத அளவிற்கு இது ஒரு தொன்மை வாய்ந்த மரம் என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

முதலில் ஆபிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு இம்மரத்தின் வித்து கொண்டு செல்லப்பட்டதாகவும் அதன்பின்பே ஏனைய நாடுகளுக்கும் பரந்ததாகவும் வரலாறு கூறுகிறது. இம்மரத்தின் பரம்பலுக்கான காரணங்களை ஆய்வாளர்கள் குறிப்பிடவும் தவறவில்லை.

- கண்ட நகர்வு அல்லது நாடுகளின் நகர்வு.
- நாடோடி வர்த்தகர்களின் பிரயாணம்.
- புத்த சமயப் பரம்பல்.
- சோழப் படையெடுப்பு.

முதலான காரணங்களைச் சுட்டிக்காட்டியுள்ளமை சிந்தனைக்குரியது. இவ்வாறு பனையின் பரம்பலும் அதனைத்தொடர்ந்து பன்னத்தொழிலாளர்களின் தொழிலும் ஆரம்பமாயின எனலாம். மரத்திலிருந்து ஓலையைப்பெற்று அவ்வோலையின் கீழே மழை படாது நிற்கக்கற்றவன் குடைசெய்து கொண்டான். ஆற்றில் இருந்த நீரை பனை ஓலையின் மூலம் கோலி அள்ளக்கற்றவன் பட்டையைச்செய்து கொண்டான். தரையிலே மணலோ புழுதியோ படாது ஓலையின் மீது உறங்கியவன் அதன் ஈர்க்கு அண்டாது இருப்பதற்காக ஈர்க்கினைக்குத்தி எடுத்தான். சிதறிய ஓலைகளை ஒன்றாக அடுக்கி பாய் செய்து கொண்டான். இவ்வாறு ஒவ்வொரு பொருளும் அவன் கற்பனைக்கு ஏற்ப ஓலையாலேயே உற்பத்தி செய்யப்பட்டன. 'சித்திரமும் கைப்பழக்கம்' என்பது போன்று பனை ஓலையின் மூலம் கலை நுட்பம் வாய்ந்த பொருட்களை உருவாக்கினர்.

இத்தொழிலாளர்கள் தம்மளவில் பூரணமாகவே இருக்கிறார்கள் என்பதனை நேர்காணலின் மூலம் அறியமுடிந்தது. 'தன்தன் தொழிலை இழப்பவன் சாதியில் எளியன்' எனக்கூறி தமது தொழில் முறைமையை அவர்கள் போற்றினார்கள். ஆயினும் இத்தொழிலானது தமது பொருளாதாரத் தேவையை ஈடுசெய்யாது என்று குறிப்பிட்டார்கள். இதன் காரணமாக இத்தொழிலை ஒரு பகுதி நேரத்தொழிலாகவே செய்து வருகின்றார்கள்.

கைத்தொழில் ஒன்றைக்கற்றுக்கொள், கவலை உனக்கில்லை ஒத்துக்கொள். என்று கூறி தமது குறுகிய சூழலில் உள்ள நிறைவான வாழ்வை வாழ்க்கை முறைமையை வெளிப்படுத்தினார்கள்.

## 3. பன்னத்தொழிலாளரின் பண்பாடு

சமூகபண்பாட்டைத் தீர்மானிப்பதில் அதன் பொருளாதாரக் காரணிகளே பெரும்பங்கு வகிக்கின்றமையால் பன்னத்தொழிலை தமது பொருளாதார வாழ்வாதாரமாகக் கொண்ட அடிநிலைச்சமூகம் ஈழத்துத்தமிழ் சமூகபண்பாட்டு வரலாற்றில் மிகுந்த கவனத்திற்குரியவர்களாக கருதப்படுகிறார்கள். தொழிலாளர்களின் பண்பாடு பற்றி சிந்திக்கும் முன் பண்பாடு பற்றிய அறிஞர்களின் கருத்து நிலைகளைக் காண்போம்.

மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும் மரபுகளும் சேர்ந்த ஒரு தொகுதியே பண்பாடாகும் என்று பேரா.எஸ்.சிவலிங்கராஜா அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம் தனது சமூகவரலாற்றின் வளர்ச்சியின் அடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகப் பொருட்கள் ஆத்மார்த்தக் கருத்துக்கள் மத நடைமுறைகள் சமூகப்பெறுமானங்கள் ஆகியவற்றின் தொகுதியாக அமையும் அதேவேளை ஒரு கூட்டத்தினரின்

தொழில் நுட்ப வளர்ச்சி உற்பத்தி முறைமை உற்பத்தி உறவுகள் கல்வி விஞ்ஞானம் இலக்கியம் கலைகள் நம்பிக்கைகள் ஆகியவற்றின் தொகுதியாகவும் அமைந்துள்ளது என்கிறார் பேரா. கா.சிவத்தம்பி.

மனிதன் சமூகத்தின் உறுப்பு என்ற நிலையில் அறிவு நம்பிக்கை கலை ஒழுக்க நெறிகள் சட்டம் பழக்கம் ஆற்றல் முதலியவை அடங்கப்பெற்ற ஒருவகை வாழ்க்கை முறையின் முழுமைத்தொகுதியாகவும் கருதப்படுகிறது. என்கிறார் பக்த வத்சலபாரதி.

இவர்களின் கருத்துக்களின் மூலம் பண்பாடு தொடர்பான ஒரு பொதுமையான கருத்தாடலைக்காண முடிந்தது. பன்னத்தொழிலாளரின் பண்பாட்டை பொருள்சார் பண்பாடு பொருள்சாராப் பண்பாடு என இருவகையாகப் பிரித்து நோக்குவோம்.

❖ **பொருள்சார் பண்பாடு**

பொருள்சார் பண்பாட்டினுள் வீடுகள், கருவிகள், ஆடை, அணிகலன்கள் போன்றவற்றை உள்ளடக்குவர். நாகரிக சமூகத்தின் பின்னாடி அவன் தொன்மையையும் பழைமையையும் ஆராய்கின்றபோது புழங்கு பொருட்களே அவனது வரலாற்றுக்குச் சான்றாக அமைகின்றன. பன்னத்தொழிலாளரின் பன்னவேலைப் பொருட்கள் நீண்ட ஆயுட்பலம் அற்றவையாயினும் பண்பாடு சார்ந்த செய்தியைத்தரத் தவறவில்லை எனலாம்.

புத்திஜீவிகளாகிய நாம் மனிதனின் பொருட்கலை வரலாறு பற்றி பேசும்போது நீண்ட நாள் உழைக்கக்கூடிய பாவனைப்பொருட்களைப் பற்றியே பேசுகிறோம். அவற்றினையே தொல்பொருட்சாலைகளிலும் வைத்துப்பேணுகிறோம். இக்கலை உருவாக்கத்திற்கும் இதனோடிணைந்து உற்பத்தியான கலைகளைப்பற்றியும் அதன் பெறுமதி பற்றியும் பேசவும் பேணவும் தவறிவிடுகிறோம் என்பது ஒரு குறையாகவே உள்ளது.

பன்னத்தொழில் உற்பத்தியாளர் விற்பனையாளர்கள் அடைமொழிப்பாவனையாளர்கள் என்று குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு ஓர் பொருளின் அடைமொழியைக் கொண்டே பொருட்களை வேறுபிரித்துக்காட்டுகிறார்கள். இப்பொருட்கள் யாவும் இல்லத்தரசிகளாலே உருவாக்கப்பட்டமையினால் இல்லம் சார்ந்த பொருட்களாகவே அதிகம் காணப்படுகின்றன. யாழ்.சமூகத்துப்பெண்களின் கைத்திறனையும் கற்பனையையும் பொறுமையையும் இப்பொருட்கள் பறைசாற்றி நிற்பதனைக்காணலாம்.

**பெட்டியின் வகைப்பாடு**

| | | |
|---|---|---|
| அடுக்குப்பெட்டி | கொட்டப்பெட்டி | கொத்து நீத்துப்பெட்டி |
| மூடல்பெட்டி | ஐந்தறைப்பெட்டி | ஈர்க்கு முடிச்சு நீத்துப்பெட்டி |
| சாயப்பெட்டி | கைப்பெட்டி | ஒரு மூலை நீத்துப்பெட்டி |
| அர்ச்சனைப்பெட்டி | கிலுக்காம்பெட்டி | இரு மூலை நீத்துப்பெட்டி |
| வட்டப்பெட்டி | நீத்துப்பெட்டி | தட்டுப்பெட்டி |
| பிராமணப்பெட்டி | முடிச்சு நீத்துப்பெட்டி | துலைப்பெட்டி |
| வேள்விப்பெடட்டி | மடிப்பு நீத்துப்பெட்டி | மூன்று மூலை நீத்துப்பெட்டி |

- **சுளகு** இதனை குல்லம், முறம், பிடிப்பு முதலான சொற்களால் அழைப்பர். சுளகினைப்பிடிப்பு என்று சின்னமடு கிராமத்தவர் பயன்படுத்துவர்.

**பாய்**

| |
|---|
| ஊர் ஈர்க்குச்சுளகு |
| குருத்தீர்க்குச் சுளகு |
| நரம்புச்சுளகு |
| காவோலைச்சுளகு |
| சிறிச்சுளகு |
| தட்டுச்சுளகு |

| |
|---|
| முழு ஓலைப்பாய் |
| தடுக்குப்பாய் |
| சோத்துப்பாய் |
| புந்திப்பாய் |
| களப்பாய் |
| சிற்பப்பாய் |

- **கூடை**

| | |
|---|---|
| நெல்லுக்கூடை | கழிவுகாகிதக்கூடை |
| ஓட்டுக்கூடை | போத்தல் கூடை |
| கொத்தடிக்கூடை | சில்லுக்கூடை |
| இறைகூடை | கேக்கூடை |
| எறகூடை | உல்லாசப்பயணக்கூடை |
| சந்தைக்கூடை | அர்ச்சனைக்கூடை |

**கடகம்**

| |
|---|
| நார்க்கடகம் |
| ஓலைக்கடகம் |
| லொறிக்கடகம் |
| எரு ஏத்தும் கடகம் |
| பிணிக்கடகம் |
| கண்டவேலிக்கடகம் |
| ஊர்க்கடகம் |

இவர்களின் தொழில் நுட்பம் சார்ந்த வாழ்வியல் பற்றி சிந்திக்கின்றபோது அவர்கள் தம் தொழிலுக்காகக் கையாண்ட மூலப்பொருள் கருவி தொழில்திறன் வாழ்வியல் முறைமை முதலானவை உள்ளடங்கியிருப்பதைக்காணலாம்.

பனை ஓலையில் பொருட்கள் செய்வதற்கு குருத்தோலை, சாரோலை, ஈர்க்கு, சந்தகம் (சிறு கத்தி), வாரடை(சிறு அளவுகருவி) முதலானவை போதுமாக இருந்தது. பனை சார்ந்த தொழிலில் ஈடுபடும் ஆண்கள் பனை ஏறுதல், ஓலையை வெட்டுதல், நார் போன்ற பொருட்களை சேகரித்தல், கயிறுதிரித்தல். சுளகு, கடகம் முதலானவற்றிற்கு மட்டை கட்டுதல், தும்பினைப் பக்குவப்படுத்தி வகைப்படுத்தல் முதலானவற்றைச் செய்வர். பெண்கள் ஓலைகளைப் பதப்படுத்தல் வார்ந்து எடுத்தல், சாயம் காய்ச்சுதல், சாயம் ஏற்றுதல், கலைப்பொருட்களைச் செய்தல் முதலான வேலைகளைச் செய்வர்.

## தொழில்நுட்பப்பயன்பாடும் வாழ்வியலும்
## மூலப்பொருள்

பன்னத்தொழில் செய்பவர்களில் பெரும்பாலானோர் அனுபவ அறிவு மிக்கவர்களாகவும் ஒரு சிலர் மட்டும் பயிற்சி அறிவு பெற்றவர்களாகவும் உள்ளனர். பனை ஓலையினால் பொருட்கள் செய்வதற்கு குருத்தோலை, சாரோலை, ஈர்க்கு, சந்தகம் (சிறுகத்தி), வாரடை (சிறு அளவுகருவி) முதலான பொருட்கள் இருந்தால் போதுமானது.

### கருவி

பன்னப்பொருள் உற்பத்திக்கு சந்தகமும் வாரடையுமே பிரதானமானவை. இவற்றின் உதவியின்றி ஓலைப்பொருட்களைச் சீராகச் செய்ய முடியாது. சுந்தகம் என்னும் கத்தியானது அரைவட்ட வடிவானதாகவும் தட்டையானதாகவும் ஓலைகளை நறுக்க சற்றுக்கூர்மை யானதாகவும் இருக்கும். கீழ்ப்பகுதி அதிலிருந்து நீண்டு வந்து கீழ்முனை நன்கு கூர்மை யானதாக பெரிய ஊசிபோல் காணப்படும். இது இரும்பினால் ஆனகருவி.

கட்டுதல் அல்லது வாரடை என்னும் அளவு கருவியானது இரும்பினாலோ தகட்டினாலோ ஓலையினாலோ ஆனதாக இருக்கும். இதன் அமைப்பு அடைப்பற்ற நீண்ட அம்புக்குறி வடிவினதானது. இதன் மேற்பகுதியில் போடப்பட்டுள்ள அளவு பிரமாணத்திற்கு ஏற்ப ஓலையை அதனுள் வைத்து ஒரே சீராக வார்ந்து எடுப்பார்கள்.

### சாயம் போடுதல்

பன்னத்தொழிற்குழுவினர் தமது உற்பத்திப் பொருட்களை அழகுற உருவாக்குவதற்கு ஓலையிலே நிறம் ஏற்றுவர். இதனை சாயம் போடுதல் என்றழைப்பர். ஒரு பெரிய பானையில் தண்ணீர் கொதிக்கவைத்து கொதித்தவுடன் சிறிது மஞ்சள் அரைத்துத்தண்ணீரில் போடுவர். சிறிதளவு உப்பும் போடுவர். பின் கடையில் வாங்கிய சாயப்பவுடரை எந்த வண்ணம் தேவையோ அந்த வண்ணப்பவுடரை வெந்நீரிலே கலந்து விடுவர். அதன் பின்பு ஓலையினை சாயத்தில் அமுக்கி சாயம் நன்கு படிந்த பின்னர் எடுத்து உலரவிடுவர். இதே போன்றே ஈர்க்கிலும் சாயம் ஏற்றுவர். சாயம் ஏற்றப்பட்ட ஓலையை சாயோலை எனவும் ஈர்க்கினை பவுடர் ஈர்க்கு எனவும் அழைத்தனர்.

இவற்றால் உருவாக்கப்பட்ட பொருட்கள் கண்கவர் பொருட்களாகவே காட்சி தருவன. அலங்காரப் பொருட்களும் பூ வேலைப்பாடுகளும் பூங்கொத்துக்களும் நாகசடமும் பூச்சாடிகளும் இன்னோரன்ன பொருட்களும் இந்த மூலப்பொருள் கொண்டு உற்பத்தியானவையே எனலாம்.

**தொழிலாளர்களின் வாழ்விடச்சூழலும் வீடும்**

பன்னத்தொழிலாளரின் வாழ்விடச்சூழலையும் இல்லிட அமைவினையும் அவதானித்தபோது நகர்ப்புறங்களுக்கு அப்பாலும் கிராமியச்சூழலிலும் வாழ்ந்தார்கள். இவர்களின் இருப்பிடம் நாடிச்சென்றபோது "என்ன அலுவலா வந்தனியலாச்சி..?" என்ற வினாவோடு வரவேற்றனர். அவர்கள் தமது சமையல் வேலையில் ஈடுபட்ட போதும் இடையிடையே சலிக்காது நமக்கான தகவல்களைத் தந்தனர். தமது ஒருநாள் பொழுதினைக் குடும்பத்திலுள்ள அனைவருமே எம்மோடு கழித்தனர். எமது தாகம் தீர இனிய பானம் தந்தும் எமது தேடல் அறிவுக்கேற்ற தகவல்களையும் தந்தனர். எமக்கான தகவல்களைப் பெறக்கூடிய ஏனைய இடங்களையும் காட்டி உதவினர். இவர்களின் இவ்வாறான செயல் சங்ககால ஆற்றுப்படை வாழ்வியலை இரை மீட்கச்செய்தது.

இத்தொழிலின் மூலம் குறைந்தளவு வருமானத்தைப் பெற்றுக்கொள்வதனால் பொருளாதார நிலையில் பின் தங்கியவர்களாகவும் சமூக நிலையில் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இவர்கள் வசிக்கும் வீடுகள் மண்ணினால் ஆனதாகவும் ஓலையினால் வேயப்பட்டதாகவும் அமைந்திருந்தது. சிலர் நான்கு பக்கமும் சிறிய குந்தினாலும் மேற்பகுதி வெளியாகவும் அமைக்கப்பட்ட குடிலை "மால்" என அழைத்தனர். தலைமாலானது வீட்டிற்கு முக்கியமானது எனவும் நம்பினர். எத்தனையோ வருடங்களாக இவர்கள் இந்தக்குடில்களிலே வாழ்வதற்கான காரணத்தைக்கேட்ட போது பொருளாதார வளமின்மையும் சொந்த நிலமின்மையும் தெரிய வந்தது. மக்களுக்காக வாழ்ந்த பெரிய மனிதர் பெயர்களிலே நீண்ட நிலப்பரப்புக்கள் இருப்பதனால் இவர்கள் தமக்கான உறுதியான வீட்டினை அமைத்துக்கொள்ள முடியாத துர்ப்பாக்கிய நிலையில் இருப்பதனை அறியமுடிந்தது.

❖ **பொருள்சாராப் பண்பாடு**

பொருள்சாராப் பண்பாடு மனிதவாழ்விலே இரண்டறக்கலந்துள்ளது. பேசும்மொழி, செய்யும்தொழில், மனிதநடத்தைக்கான விழுமியங்கள், மனப்போக்குகள், கொள்கைகள், வழக்கங்கள், அறநெறிகள் போன்றவை இதனுள் உள்ளடங்குகின்றன. மொழி என்பதனைத் தனியே ஆராயவேண்டி இருப்பதனால் அது பற்றி பின்பு நோக்குவோம்.

**தொழில்**

பன்னத்தொழிலாளரின் தொழில் தனியே பன்னப்பொருட்களை இளைப்பதன்று. மரம் ஏறுதல், மேசன்தொழில் செய்தல், மீன்பிடித்தல், கழிவகற்றல், தெருச்சுத்திகரிப்புச் செய்தல் என இன்னோரன்ன தொழில்களில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறான தொழில் மூலம் பெறும் வருமானம் அன்றாடம் சாப்பிடவும் குடிக்கவுமாகச் செலவாகிறது. சிறுகச்சிறுக சேகரித்த பணத்தையும் வியாபாரிகளின் ஏமாற்றுச்செயலினால் சிறுபொருளிற்கு பெருந்தொகைப்பணத்தைக் கொடுத்து ஏமாந்து போகிறார்கள் என்பது அவர்களின் உரையாடலில் இருந்து தெரியவந்தது. காலங்காலமாக ஏமாளிகளாகவும் வாழ்க்கை பற்றிய நோக்கு அற்றவர்களாகவும் பெரும்பான்மையானவர்கள் வாழ்கிறார்கள் என்பது கவலைக்குரிய விடயமே.

**வாழ்க்கை நோக்கு பற்றிய கருத்தாடல்**

பழமொழிகள் ஒரு நாட்டின் பழம் பெரும் செல்வமாகக் கருதப்படுகிறது. இவை பட்டறிவின் பயனாக மக்களால் படைக்கப்பட்டவை. எதுகை, மோனை, ஓசை. சொல்நயம், சுவை, ஆழ்ந்தகருத்துக்கள் முதலியவை நிரம்பிய சொற்றொடர்களே இவை.

- ”காவோலை விழக்குருத்தோலை சிரிக்கிறது”-என்பது வாழ்வியல் பருவநிலைகளோடு இணைந்து மக்களுக்கு அறிவுரை கூறுவதாக அமைந்துள்ளது.
- ”கற்பகதருவைச்சார்ந்த காகமும் அமிர்தம் உண்ணும்” -என்பது சமூகத்தோடு இணைந்தால் பயனடையலாம் என்றும் தமது தொழிலின் மேன்மையைப் புலப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என்றனர்.
- ”காகம் இருக்க பனம்பழம் விழுந்தாற்போல” - என்பது மக்களின் நொண்டிச்சாட்டினைக் கேலிபண்ணுவதாக அமைந்துள்ளது.
- ”பனை வாழ்ந்தாலும் நூறுவருடம் இறந்தாலும் நூறுவருடம்” - என்பது பனை இறக்கும் முன்பும் நீண்ட பயன் தரவல்லது அதேபோல் இறந்த பின்பும் நீண்ட பயன் தரவல்லது என்கிறார்கள்.

**உணவுப் பண்பாடு**

பனையினால் கிடைக்கும் உணவுகள் பல. பனையின் மூலம் நேரடியாகக் கிடைக்கும் உணவு குடிநீர்களாக சீக்காய், நுங்கு, பதநீர், பனம்பழம் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

- நுங்கு - பானமாகக்குடிப்பர் அல்லது வேர்க்குரு போட்ட இடத்தில் பூசுவர்.
- சீக்காய் - நுங்கின் இறுகிய பதநீர் உண்பதனால் உடல் குளிர்மை பெறும்.
- பதநீர் - உடலுக்கு உற்சாகத்தையும் ஊட்டச்சத்தையும் தரவல்லது.
- பனம்பழம் - தோல் நீக்கி உண்பர் அல்லது வேகவைத்து தோல் நீக்கி உண்பர். தோல்நீக்கிய சாற்றினை காயவைத்து பனாட்டாக உண்பர். தோல்நீக்கிய இச்சாற்றினை மாவோடு பிசைந்து பணியாரமாகச் சுட்டு உண்பர்.

இவை பனை வாழும்போது கிடைக்கும் உணவுகள். பனை இறந்ததன்பின் கிடைக்கும் உணவுகளும் பல உள்ளன.

| | |
|---|---|
| ஒடியற்கூழ் | புழுக்கொடியல் சோயா லட்டு |
| இனிப்புக்கூழ் | புழுக்கொடியல் இட்லி |
| ஒடியற்பிட்டு | புழுக்கொடியல் உப்புமா |
| ஒடியல்தோசை | பனங்களித்தோசை |
| புழுக்கொடியல்மா அல்வா | பனங்களிப்பாயாசம் |
| புழுக்கொடியல் பான் கேக் | பனங்களித்தொதல் |
| புழுக்கொடியல் கேசரி | பனங்கட்டி கேக் |
| புழுக்கொடியல் லட்டு | பனங்கட்டி வட்டிலப்பம் |
| புழுக்கொடியல் பன்சிகேக் | பனம் புடிங் |
| புழுக்கொடியல் வடை | சீக்காய் நுங்குத்தோசி |
| புழுக்கொடியல் பயற்றம் லட்டு | சீக்காய் நுங்கு அல்வா |

யாழ்ப்பாணத்தில் முன்பு வெளிவந்த மில்க்வைற் செய்தியில் கிடைத்த தகவல் ஒன்று பனையின் பயனை வெளிப்படுத்துவதாக உள்ளது.

‘அரிய மருந்தாகவும் உணவாகவும் பயன்தரும் பனை ஆயிரம் ஆண்டுகள் ஈவதில் குறைவில்லாதது. ஊயிர்ச்சத்தும் ஊட்டச்சத்தும் உள்ள பனை ஊருக்கு லட்சுமி போலச்செல்வந்தருவது.’ என்று லட்சுமியாக வரவேற்றிருக்கிறார்கள் என்பது புலப்படுகிறது.

பன்னத்தொழிலாளரின் பண்பாடு பற்றிப் பேசும்போது அவர்களது வாழ்வியல் முறையை ஒட்டுமொத்தமாக உள்ளடக்குவதனைக் காணலாம். ஆனால் பண்பாடு என்னும் பதம் நல்லனவற்றைப் பேசுவதாகவும் அறநெறிகளையும் விழுமியங்களையும் பேணுவதாகவும் மரபுபற்றி பறை சாற்றுவதுமாக இருப்பதனால் மனித வாழ்வின் ஒருபகுதியையே இவ்வியலில் பார்க்கமுடிந்துள்ளது. மறுபகுதி பிரச்சினையும் தீர்வும் என்னும் பகுதியில் பேசப்படவுள்ளது.

## 4. பன்னத்தொழிலாளரின் மொழி

மொழி என்பது ஓர் ஊடகம். மனிதனின் நாகரிக வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு அரும்பெரும் ஆக்கம் என்பர். ஆதிமனிதன் தன் கருத்தை மற்றொருவனுக்குத் தெரிவிக்க ஏதோ ஒருவகையில் ஒலியை எழுப்பினான். நாளடைவில் தான் எழுப்பும் ஒவ்வொரு வகையான ஒலிக்கும் ஒவ்வொரு பொருளையும் அவன் முடிவு செய்து கொண்டான். இதன் மூலமாகப் பேச்சுமொழி ஏற்பட்டதென்பர். தன் எதிரில் இல்லாதவனுக்கும் பிற்காலத்தில் உள்ளவனுக்குமாக எழுத்து மொழியைத் தோற்றுவித்தான் என்பர். சைகையையும் மொழியாகவே குறிப்பிடுவர். இது குறிப்பிட்ட கருத்துக்களை மட்டுமே உணர்த்த உதவும். தூரத்திலிருந்தும் ஒளி இல்லாத இரவு நேரத்திலும் சைகைகளைப்பிறர் அறிய முடியாத துர்ப்பாக்கிய நிலை உள்ளது. இவற்றுள் பேச்சுமொழியே உயிர்த்துடிப்பும் அழகும் நிறைந்தது. பன்னத்தொழிலாளரின் பேச்சுமொழி பற்றி ஆராய்வோம்.

மொழியால் இனம் அமைவதும் நாகரிகம் அல்லது பண்பாடு அமைவதும். நாடு அமைவதும் நாட்டின் அமைப்புக்குத் துணையாக இருப்பதும் உலகம் அறிந்த உண்மைகள். உலகில் இன்று 1500 மொழிகள் உள்ளன. மொழியியலாளர்கள் இவற்றை மொழிக்குடும்பங்களாகப் பிரித்துள்ளனர். திராவிட மொழிக்குடும்ப மொழிகளாக தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலியன உள்ளடங்கியிருப்பதனைக் காணலாம். இவற்றுள் நான் தமிழ்மொழி பற்றியும் அம்மொழியைப் பேச்சுமொழியாகக் கொண்ட யாழ். சமூகத்திலே உள்ள பன்னத் தொழிலாளர்க்கும் சமூகத்துக்குமான ஊடாட்டத்தினை மொழியும் சமூகமும் என்னும் தலைப்பின் கீழ் ஆராயமுயற்சித்துள்ளேன்.

பேச்சுமொழியானது ஒவ்வொரு தனிமனிதனதும் எண்ணத்தின் பிரதிபலிப்பாக அமைந்துள்ளது. எனவே இம்மொழி இடத்திற்கிடம் காலத்திற்குக்காலம் வயது, பால் வகுப்பு, வருவாய், தொழிற்கல்வி முதலானவற்றின் தன்மைக்கு ஏற்ப மாறுபடுகிறது. நாடு, சாதி, வட்டாரம், துறை போன்ற பன்முக வெளிப்பாட்டுத்தன்மைகளையும் கொண்டு ஒட்டு மொத்த தமிழ்ச்சமுதாயத்தினதும் குறியீடாக விளங்குகிறது.

தமிழ்மொழி உலகமொழிகளில் இரண்டாயிரம் ஆண்டுகால இடைவிடாத இலக்கியப் பாரம்பரியத்தைக்கொண்டு இன்றளவும் வாழும் மொழியாக விளங்குவதோடு நாடு, சாதி, வட்டாரம், துறை போன்ற பன்முக வெளிப்பாட்டுத்தன்மைகளையும் கொண்டு ஒட்டுமொத்த தமிழ்ச்சமுதாயத்தினதும் குறியீடாக விளங்குகிறது. மொழியை அதன் அமைப்பு சார்ந்தும் பண்பாடு சார்ந்தும் அணுகும்போது சமுதாயத்தின் வரலாறாக அமைவதனை அவதானிக்க முடிகிறது. வட்டார வழக்கு, சாதியவழக்கு, சமயவழக்கு முதலியன மொழிவழக்குகளின் சமுதாயத்தன்மையை வெளிப்படுத்துகின்றன.

ஒரு தனிமனிதன் கேட்போரின் சமூக ஏற்றத்தாழ்வுக்கு தகுந்தபடியும் பேசும் தருணத்திற்கு தகுந்தபடியும் தன்னுடைய மொழிநடையையும் மொழி அமைப்பையும் மாற்றிக்கொள்கின்றான். மொழி மனிதனுக்கு மனிதன், வீட்டுக்குவீடு, குலத்துக்குக்குலம், இடத்துக்கு இடம் வேறுபடுவதனை அவதானிக்க முடிகிறது. முகம்தெரியாத மனிதரோடு உரையாடும்போது நாகரிகமாகப்பேசிக் கொள்கிறார்கள். ஓரே வீட்டைச்சேர்ந்தோரும் ஓரே குலத்தைச் சேர்ந்தோரும் உறவுக்காரராக இருப்பதனால் தமது இலகுவான மொழியைப் பயன்படுத்துகிறார்கள்.

(உ-ம்) எடி பிள்ளை இஞ்சை வா (பேச்சு வடிவம்)
மகளே இங்கு வா (திருந்திய வடிவம்)
இதே வடிவத்தை உயர்ந்த படித்த சமூகத்திடம் இன்னொரு வடிவில் காணலாம்.
இஞ்ச வாருமப்பா அல்லது come here.

தற்கால மொழி வழக்கிலே அம்மா, அப்பா, டாடி என்பன பின்னிலை ஒட்டுக்களாக அமைவதனையும் அவதானிக்க முடிகிறது.

அடிநிலை மக்களின் பேச்சுமொழியில் கெட்டவார்த்தைகளும் இடக்கரடக்கற்ச்சொற்களும் கொச்சைச் சொற்களுமே நிறைந்திருக்கும். இவர்கள் எம்மோடு உரையாடும்போது நாகரிகமான மொழியிலேயே உரையாடினார்கள். கெட்ட வார்த்தைகளையோ சொற்களையோ தவறிக்கூட பயன்படுத்தவில்லை. அவ்வாறான வார்த்தைகளோ சொற்களோ கடுமையானவையாம். தாம் தொழிலில் ஈடுபடும் போதே அம்மொழியை பயன்படுத்துவதாகச் சொன்னார்கள். அதற்கான காரணத்தை வினவியபோது வேலையை விரைவாக முடிப்பதற்கும் ஏனையவரை அதட்டி வேலை வாங்கவும் உபயோகிப்பதாயும் கூறினார்கள்.

பன்னத்தொழிலாளர்கள் பயன்படுத்தும் தொழிற்ச்சொற்களே இடத்துக்கிடம் வேறுபடுவதனை அவதானிக்க முடிந்தது.

- கட்டுதல் அல்லது கட்டளை- சின்னமடுக்கிராமத்தவர்
- ஓலைகட்டுதல் அல்லது இரும்புக்கட்டுதல்- வல்வெட்டித்துறை
- வார் அடுக்கி- சாவகச்சேரி

இவ்வாறு ஒரு பொருளையே இடத்துக்கிடம் வெவ்வேறு விதமாக குறிப்பிட்டிருந்தனர்.

கரணவாய் என்ற பிரதேசத்தைச் சேர்ந்தோர் “நெருப்பு” என்பதனை நொருப்பு என்றும் கயிறு என்பதனை கொடி என்றும் அழைத்தனர். சின்னமடு கிராமத்தவர் சுளகு என்பதனை “பிடிப்பு” எனவும் அழைத்தனர்.

மொழி வேறுபாட்டின் தன்மையை இவர்களின் பேச்சுமொழியிலிருந்து கண்டு கொள்ளமுடிந்தது.

மொழி வளர்ச்சியடையினும் மொழியிலே சொற்தவறுகள் வழுக்கள் தோன்றுவதோடு தமிழின் புராதன கலைச்சொற்கள் அழிந்தும் அருகியும் வருவதனை அவதானிக்க முடிந்தது. ஒரு மொழியில் பல்லாயிரக்கணக்கான சொற்கள் இருக்கும். இவை அனைத்தையும் ஒருவர் அறிந்து

கொள்வதென்பது இயலாத காரியம் இவ்வாறு நாம் அறியாத அறிந்தும் அற்றுப்போன சொற்களை பன்னத்தொழிலாளரின் தொழில் ரீதியான சொற்களாக சேகரித்துள்ளேன் 130க்கு மேற்பட்ட சொற்பட்டியல் உண்டு. அவை அனைத்தையும் இச்சிறு கட்டுரையில் குறிப்பிட முடியாமையினால் சிறு தகவலை மட்டும் தரவிரும்புகிறேன்.

சாதாரணமாக பனை என்னும் போது எமக்குத்தெரிந்தது ஒரு பனையே. இதனை ஓலைப்பனை கூந்தல்ப்பனை, ஈரப்பனை, சொக்கப்பனை, ஆமரம், கறுப்பி என்றும் இவற்றைப்பொதுவாக ஆண்பனை, பெண்பனை என்ற இருவகைப்பாட்டிற்குள்ளும் உள்ளடக்குவர்.

பனை, ஓலை என்பதையே நாமறிவோம் ஆனால் இவர்கள் குருத்தோலை, சார்வோலை, காவோலை, முற்றலோலை, கூலையோலை என 16 வகையான ஓலைப்பாகுபாடுகளை குறிப்பிட்டு அதன் தன்மைக்கேற்ப வகைப்படுத்தியுள்ளனர்.

பனை ஓலையால் செய்யப்பட்ட பொருட்களும் அடைமொழியைப்பெற்று வேறு பிரிவதனை முதலிலே கண்டோம். அவற்றின் வெளிப்படுத்தல் வகைமையைக் காண்போம்.

வடிவம் - சிறிச்சுளகு, தட்டுச்சுளகு
ஊடகம் - ஊர்ஈர்க்குச்சுளகு, குருத்தீர்க்குச்சுளகு
நிறம் - சாயப்பெட்டி
சடங்கு - வேள்விப்பெட்டி
ஜாதி - பிராமணப்பெட்டி

ஓலையால் செய்யப்படும் பன்னவேலைப்பொருட்களுக்கு வாழைப்பூ முடிச்சு, கண்ணிமுடிச்சு போன்றவற்றையும் இருதயப்பின்னல், சாடிப்பின்னல், தெறிப்பின்னல், டைமன்பின்னல் வெட்டுப்பின்னல், முறுக்குப்பின்னல், ஒற்றைப்பின்னல், பட்டின்பின்னல் முதலான பின்னல் வகைகளையும் கையாண்டனர். இப்பின்னல்கள்கூட அடைமொழிகளைத்தாங்கி நிற்பதனை அவதானிக்க முடிகிறது.

வாட்டுதல் என்ற சொல்லை பொதுவாக வெயிலில் வாட அல்லது உலர விடுதல் என்றே எண்ணுவோம் ஆனால் பன்னத்தொழிலில் வாட்டுதல் என்ற பதம் பனை மட்டையைப் பிளப்பதை அல்லது கிழிப்பதை குறிக்கின்றது.

ஓடுதல் என்ற சொல்லை நாம் பொதுவாக ஓடினேன் அல்லது ஓடியது என்றே பயன்படுத்துவோம் ஆனால் இவர்கள் இடியப்பத்தட்டுச் செய்வதற்காக வளையம் கட்டியபின் நாரினால் பின்னுவதனை ஓடுதல்

துலா இறைப்பு- துலாவின் உதவிகொண்டு கிணற்றினை இறைத்தமையை இவ்வாறு சுட்டினர்.
அடுக்கக்கூடாது- ஒன்றோடு இன்னொன்றை சேர்க்கக்கூடாது என்பதைக்குறிக்கிறது.
பணிய இருத்தல்- கீழே தரையில் உட்கார்வதனைக்குறிக்கும்.

முதலான சொல் வழக்குகள் பண்பாட்டின் வெளிப்பாடுகளாக இருப்பதனைக் காணமுடிகிறது. இவ்வாறு ஒரு சொல் பல இடங்கில் பல பொருளிலும் ஓரே பொருளில் பல இடங்களில் பல

சொற்களிலும் பயன்படுத்தப்படுவதோடு தொழிலின் தன்மையை தொழில்சார்ந்த வாழ்க்கையை வாழ்வோரின் தன்மையை வெளிப்படுத்துவதாகவும் ஒரு பண்பாட்டின் ஆக்கச்சுட்டியாகவும் வெளிப்படுகிறது.

## 5. பன்னத்தொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினையும் தீர்வும்

தொழில் என்பது பொருளீட்டலுடன் தொடர்புடையது. "பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்னும் கூற்று பொருளீட்டலின் தேவையை சான்றுபகர்ந்து நிற்பதனைக்காணலாம். மனிதவாழ்விற்கு பொருள் அத்தியாவசியமானது இப்பொருளை ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு வழியாகப்பெறுகிறார்கள். ஓர் மனிதனின் பூரணமான வாழ்விற்கு சமூகத்தின் பலதொழிற்குழுவினரதும் பங்கு இன்றியமையாதது. "சேற்றில் நாம் கால்வைக்காது விட்டால் சோற்றில் நீர் கைவைக்க மாட்டீர்" என்னும் கூற்று வாழ்க்கையின் உண்மையை வெளிப்படுத்துகிறது. மனிதன் நாகரிக வாழ்க்கையை சந்திக்க முன்பு குறிப்பாக யாழ் பிரதேசத்தில் பன்னவேலைப்பொருட்களே மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிணைந்து பல தொழிலுக்கும் அடிப்படையாக விளங்கியுள்ளது எனலாம். இயற்கையோடு இணைந்த வாழ்வியலில் கலைநுட்பம் வாய்ந்த பொருட்களை உருவாக்கியுள்ளனர். இவர்களின் கலை வாழ்வில் ஏற்பட்ட சிக்கல்கள் என்ன? அவற்றுக்கான தீர்வுகள் என்ன என்பதனைப்பார்ப்போம்.

➢ மூலப்பொருளைப் பெறுவதிலுள்ள சிக்கல்கள்.

பன்ன வேலைப்பொருளிற்கு மூலப்பொருளான பனை ஓலையைப் பெறுவதிலுள்ள சிக்கல்களாக இரண்டு விடயங்களை இனங்காண முடிந்தது.

- சொந்தக்காணியில் மரம் இல்லாமை.
- பனை மரத்தின் அழிவு.

இவற்றுள் முதலாவது சிக்கலை நோக்கின் அவரவர் குடியிருப்பிலுள்ள காணிகளிலோ அல்லது வளவுகளிலோ பனைமரம் இல்லாதுபோக அடுத்தவரிடம் சென்று ஓலையை இரப்பதா என்ற எண்ணத்தாலும் பன்னப்பொருளை உருவாக்குவதற்கான ஈர்க்கினைப்பெற நகர்ப்பகுதி தெருக்கடைகளை நாடிச்செல்ல வேண்டிய தேவை இருப்பதனாலும் இவற்றை பணம் கொடுத்து வாங்க வேண்டி இருப்பதனாலும் தம் பாரம்பரிய கைத்தொழிலில் அதிகளவு நாட்டம் செலுத்தாது இருப்பதனை அவதானிக்க முடிந்தது.

மக்கள் தம் தேவைக்குத் தென்னங்கன்றுகளை நட்டுப்பயன் பெறுவது போல பனம் விதைகளையும் நட்டுப்பயன் அடையலாம். "மரம் நடுவோம் பயன் பெறுவோம்" என்ற வாசகத்தின் கீழ் ஒவ்வொரு மக்களும் தமது தமது சொந்தக்காணிகளிலும் வளவுகளிலும் பனம் விதைகளை நாட்டவேண்டும். அல்லது பொது வளவுகளில் இருந்து பனை ஓலையைப்பெறக்கூடிய வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும்.

இரண்டாவது சிக்கலான பனை மரத்தின் அழிவு பற்றி ஆராய்ந்தபோது நமது அரசியல், சமூக, பொருளாதாரத் தேவைகளை அவதானிக்க முடிந்தது. இம்மரத்தின் அழிவு என்பது இயற்கையால் நிகழ்ந்த ஒன்றல்ல செயற்கையாக நிகழ்ந்த விடயங்களே அதிகம் பேசப்பட்டது. இயற்கை மரங்களின் அழிவு என்பது காடழிப்பாலும் கட்டடத்தேவை தளபாடத்தேவை முதலானவற்றாலே நிகழ்ந்து வந்தது. ஆனால் அரசியல் குளப்பங்களாலும் போர்ச்சூழலாலும் யாழ் குடாவிலே

மக்கள் மட்டுமல்ல கால்நடைகள், இயற்கை மரங்கள் முதலானவையும் அழிவுக்கு உள்ளாயின ஊனமுற்றன மறைந்துபோயின எனலாம். குறிப்பாக நாம் போர்ச்சூழலை மையப்படுத்தும்போது குண்டுமாரியினாலும் செல்தாக்குதல்களினாலும் ஒரு பகுதி பனைமரங்கள் அழிவுக்குள்ளாயின. இன்னொரு பகுதி இராணுவத்தினால் தமது பாதுகாப்பு அரண்களுக்காகத் தறிக்கப்பட்டன. இவ்வாறான செயற்பாட்டினைத்தடுக்க வேண்டுமானால் பனை மரத்தின் முக்கியத்துவத்தினையும் அதன் தேவையினையும் மக்கள் உணர வேண்டும். பாதுகாக்கவேண்டும். அப்பொழுதுதான் ஆதிக்க சமூகம் நம் பொருட்களில் கைவைக்கத் தயக்கம் கொள்ளும்.

- பொருளாதார வளம் போதாமை

ஓர் கலை உருவாக்கத்திற்கும் சமூகப்பொருளாதாரத்திற்கும் இடையே அறாத்தொடர்பு உள்ளது. கலையை உருவாக்கவோ உருவாக்கிய கலையை விற்பனை செய்யவோ அக்கலையைக்கொண்டு வாழ்க்கைச்சக்கரத்தை நகர்த்திச்செல்வதற்குப் பொருள் முக்கியபங்கு வகிக்கின்றது.

பன்னத்தொழிலாளரின் பொருளாதாரச்சிக்கலை ஆராய்ந்தபோது உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறாமை தெரியவந்தது. நாளுக்கு நாள் பொருட்களின் விலை அதிகரிப்பினால் அடித்தள மக்கள் வாழ்வியலிலும் தொழிலைத்தேர்ந்து எடுப்பதிலும் பல சிக்கல்களை எதிர்கொள்கிறார்கள். சமூகக்கட்டமைப்பில் கூலித்தொழிலாளர்களும் கைத்தொழிலாளர்களும் வலியர்களால் அடக்கப்பட்டே வாழ்கிறார்கள். தம்வாழ்வியல் தேவையைப்பூர்த்தி செய்யத்தக்கதான ஊதியத்தைப்பெற முடியாது போக வேறு தொழிலை நாடவேண்டிய தேவை பன்னத்தொழிற் குழுமத்தினர்க்கும் ஏற்பட்டது. இதனால் சிறிதளவாகவே செயற்பட்டு நாளடைவில் அவையும் மறைந்து போவதைக் காணமுடிகிறது.

தற்காலத்திலே பன்னத்தொழிலாளி ஒரு பனை ஓலையை 100 ரூபாவிற்கு பெறுகிறான். அதனை சிறகரிந்து விரித்து காயவைத்தபின் சுருக்கிக்கட்டி வைப்பார்கள். பின்பு அவ்வோலையை குத்தி ஈர்க்கு அடவியன் இரண்டையும் பிரித்தெடுப்பார்கள். அதன்பின் கிடைத்த நடு ஓலையை தேவையைப்பொறுத்து வரவைத்துத் தகுந்த அளவாக வார்ந்து எடுத்தபின் தாம் செய்யப்போகும் பொருளை வடிவமைப்பார்கள்.

கடகத்தொழிலாளி பெறும் ஊதியத்தை அவதானித்த போது.

- ஒரு ஓலையில் இரண்டு நார்க்கடகம் செய்வார்கள். நார்க்கடகம் ஒன்றின் விலை 300 ரூபா.
- ஒரு ஓலையில் 5 ஓலைக்கடகம் செய்வார்கள். ஓலைக்கடகம் ஒன்றின் விலை 90 ரூபா

ஒரு நார்க்கடகம் செய்வதற்குப் பன்னத்தொழிலாளி ஒருவன் தன்னுடைய இருநாள் பொழுதினை செலவு செய்கின்றான். சாதாரண ஒரு கூலித்தொழிலாளிக்கு ஒருநாள் சம்பளம் 500 ரூபாய். கொடுக்கும் யாழ். சமூகம் இத்தொழிலாளர்களின் உழைப்புக்கேற்ற ஊதியத்தைக்கொடுக்க மறுக்கிறது. கூலித்தொழிலாளியின் சம்பளத்தின் அரைப்பங்கை வழங்கினால் கூட ஒரு நார்க்கடகத்தின் விலை 500 ரூபா ஆகும். இவ்வாறான கருத்து நிலைகளை நடைமுறைப்படுத்த பனை அபிவிருத்தி சபையானது பொறுப்புடன் செயற்பட வேண்டும்.

➢ சமூகமாற்றத்தால் விளைந்த கௌரவச்சிக்கல்.

மாற்றம் என்பதே சமூகத்தினுடைய மாறாத விதி என்பர். அபிவிருத்தியை நோக்கி சமூகம் நகர்ந்து கொண்டிருக்கும் போது நல்ல விடயங்கள் பலதை உள்வாங்கும் அதேவேளை சமூகத்திலுள்ள நல்ல விடயங்களைக் கவனிக்காதும் விட்டுவிடுகிறது. அதாவது சமூகஅபிவிருத்தி வேண்டப்பட்ட ஒன்றாக இருக்கிறபோதும் சமூகமரபு மீறப்படாத பாரம்பரிய தொழில்களை அனுசரிப்பதான அபிவிருத்தி நடவடிக்கையாக இருக்க வேண்டும். யாழ் சமூகத்தைப் பொறுத்தவரை வர்க்கவேறுபாடு முதன்மையானதாக இருப்பதனால் மேல்வர்க்கத்தில் உள்ளோரும் பொருள்வசதி படைத்தோரும் ஏதோ ஒரு வகையில் சமுகத்தின் மேல்நிலையை எட்டிவிடுகின்றனர். ஆனால் கீழ்வர்க்கத்தில் உள்ளோரினால் அந்நிலையை எட்டிட முடியவில்லை. காரணம் காலம் காலமாக அடிமைப்பட்டிருப்பதனாலும் வாழ்க்கை பற்றிய நோக்கோ சிந்தனையோ தெளிவானதாக இல்லாமையுமாகும். சமூகத்தின் மீது அக்கறையுள்ள ஜீவன்கள் இவர்களின் வாழ்வியலில் மாற்றத்தை உண்டுபண்ண வேண்டும். சமூகவளர்ச்சி என்பது தனிப்பட்ட குழுமங்களின் வளர்ச்சியல்ல. ஒட்டுமொத்த சமூகத்தினதும் வளர்ச்சி என்பதைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

➢ பதிலீட்டுப்பொருட்களின் உற்பத்தி

வளர்முகநாடுகளிலே பொருட்களின் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவது யாவரும் அறிந்ததே. உற்பத்திமுறையானது இன்னொரு பொருளுக்கு ஈடாக பதிலீட்டுப்பொருட்களாக உருவாக்கப்படுகிறது. விளம்பரத்தின்போது தரமானதாகவும் நீண்ட பாவனைக்கு உட்படுத்தக்கூடியதாகவும் அப்பொருட்களால் விளையும் நன்மை மட்டுமே பேசப்படும். நம்மவரும் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்ற கருத்து நிலையில் புதுமையான கவர்ச்சியான பொருட்களையே அதிகம் நுகர்கிறார்கள். இப்பொருட்களால் விளையும் எதிர்விளைவினை எண்ணுவதில்லை. பிளாஸ்ரிக்பொருள் உற்பத்தியும் சந்தைப்படுத்தலும் பாவனையும் பன்னத்தொழிலாளர்க்குப்பெரும் சவாலாகவே அமைந்துள்ளது.

பன்னத்தொழிலாளர்களின் பிரச்சினைகளாக நான் இனம் கண்டவற்றில் அதாவது தொழில்சார்ந்த பிரச்சினை தவிர்ந்த வாழ்வியல் பிரச்சினைகள் அதிகம் எனக்குறிப்பிடலாம். சமூக நலன்விரும்பிகளும் புலமையாளர்களும் அவர்களது மொழி பண்பாடு பற்றி பேசுவதைக்காட்டிலும் அவர்களது வாழ்வியல் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கான செயற்பாடுகளில் அக்கறை காட்டுவது விரும்பத்தக்கதும் வரவேற்கத்தக்கதுமாகும்.

## முடிவுரை

யாழ்ப்பாணப்பிரதேசத்தில் பன்னத்தொழிலாளரின் மொழியும் பண்பாடும் என்னும் ஆய்வுக்கட்டுரை விரிவான கட்டுரையாக அமையவேண்டியது, ஆனால் இவ்வாண்டு விழாக்குழுவினரின் அறிவுறுத்தல்களுக்கமைய மிகவும் சுருக்கமாகவும் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய தகவல்களை மாத்திரம் உள்ளடக்கியதாகவும் அமைந்துள்ளது. தொழிலாளரின் மொழி பண்பாடு சமூகத்தின் மொழி பண்பாடாக குறிப்பிடப்படுவதால் தொழிலாளர்களின் வளர்ச்சியும் பேணுகையும் முக்கியமான ஒன்றாக விளங்குவதனைக் காணமுடிகிறது.

# மருமக்க(ள்) தாயமும் தாய்வழி முதுசொமும்

எஸ். கோபாலசிங்கம்

உலகின் பல்வேறு சமூகங்களின் குடும்ப உறவுமுறைகள் தொடர்பாக அறிவியல் ரீதியான கற்கை நெறிகளை ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொண்ட தலைசிறந்த சமூகவியலாளர்களான மோர்கன் மற்றும் ஏஞ்சல் போன்றோர் மிகவும் முற்பட்ட காலம்முதலே உலகில் தாய்வழி மரபுகள் தோற்றம்பெற்றதெனவும் அவற்றிலிருந்தே சமூக அல்லது குடும்பத் தலைமைத்துவம் உருவான தெனவும் கருதுகின்றனர். தாய்வழி மரபானது (Matrilineal System) பழமையான சமூகங்களின் நீண்டகாலப் பண்பாட்டினை அடியொற்றிவந்த பேணுகையாகும். இத்தாய்வழி மரபின் சிறப்பியல்பாக அமைவதே இந்திய நாட்டில் சேரநாடு என அறியப்பட்ட கேரளத்தின் மருமக்க(ள்) தாயமும் ஈழத்தே பண்டைய மட்டக்களப்புத் தேசம் மற்றும் புத்தளப் பிரதேசம் என்பவற்றின் தாய்வழி முதுசொமும் ஆகும். இதில் மருமக்கள் தாயம் என்பது மருமக்கள்வழி சொத்துரிமை எனப் பொருள்படும். அதேபோல் தாய்வழி முதுசொம் என்பது தாய்வழிப் பழமையான சொத்துரிமை எனப் பொருள்படும். இவை இரண்டுமே ஒரே அர்த்தப்பாட்டினைக் கொண்டவையாகும். தாய்வழி முதுசொத்தை சட்டவாக்கமாகக் கொண்டமைந்த முக்குவ தேசவழமைச் சட்டம் முழுக்க முழுக்க சேரத்தின் மருமக்கள் தாயச் சட்டத்தையே அடியொற்றியதாகும்.

கேரள சமூக வரலாறு தொடர்பாக முக்கிய ஆய்வுகளை மேற்கொண்ட பேராசிரியர் எல்.கே.பாலரெத்தினம், பேராசிரியர் எல்.ஏ.கிருஷ்ண ஐயர் போன்ற சமூகவியலாளர்கள் தாய்வழி மரபுகளின் முக்கியத்துவம்மிக்க மருமக்க(ள்)தாயம் நீண்டகாலம் முதலே சேரநாடு எனப்பட்ட கேரளத்தின் பண்டைய சமூகங்களின் பேணுகையில் இருந்துவந்துள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். சென்னை மாநில சட்ட நிருவாகக் குழுவின் உறுப்பினராகப் பணியாற்றி அதன்பின்னர் கேரளம் - திருவனந்தபுரத்தில் சட்டத் தொழில்புரிந்த சட்டமேதை பத்மநாபமேனன் 1908ல் திருவாங்கூர் மருமக்க(ள்)தாய விசாரணக் குழுவின் உறுப்பினராக அன்றைய ஆங்கில அரசால் நியமிக்கப்பட்டபோது அவர்மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையில் கேரளத்தின் தாய்வழி மரபான இம் முறைமை ஏலவே நீண்டகால நடைமுறையிலிருந்தாலும் சேரமான் ஆட்சிக்காலத்துக்குப் பிற்பட்டே சிறப்பான நடைமுறைக்கு உட்பட்டிருப்பதாக தனது கொச்சி ராஜ்சிய சரிதம் எனும் நூலில் (Kochi Rajya charitham - 1912) குறிப்பிடுகின்றார். இக்காலம் இலங்கையில் கலிங்க மாகோனின் ஆட்சிக்காலமான கி.பி 13ஆம் நூற்றாண்டைக் குறிப்பதாக அமையும்.

பண்டைய மட்டக்களப்புத் தேசம் மற்றும் புத்தளப் பிரதேசத்தைப் பொறுத்தவரை அவற்றின் சமூகப் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள் சேரத்தின் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பது அறியப்பட்டதாகும். ஆதாரப்படுத்தப்பட்ட மட்டக்களப்பின் வரலாற்றில் கி.மு 3ஆம் நூற்றாண்டு, கி.பி 2ஆம் நூற்றாண்டு, கி.பி 5ஆம் நூற்றாண்டு, கி.பி 6ஆம் நூற்றாண்டு, கி.பி 10ஆம்

நூற்றாண்டு, கி.பி 11ஆம் நூற்றாண்டு மற்றும் கி.பி 13ஆம் நூற்றாண்டு ஆகியவற்றில் சேரத்திற்கும் மட்டக்களப்பிற்கும் இருந்த தொடர்புகளை மட்டக்களப்பின் வரலாற்று ஆவணங்கள்மூலம் நம்மால் தெரிந்துகொள்ளமுடியும். முக்குவர், பணிக்கர், நாயர், மழவர் போன்றோர் சேரநாட்டிலிருந்து இங்குவந்தவர்களில் முக்கிய சாதியினராகின்றனர். இச்சமூகங்களின் பிணைப்பே சேரத்தின் தாய்வழி மரபுகளை இங்கு வலுவோடு வளர்த்தெடுக்க முக்கிய காரணங்களாயமைந்தன. பண்டைக் காலம்முதலே சேரத்திற்கும் கலிங்கத்திற்கும் இருந்த இறுக்கமான தொடர்பும் மட்டக்களப்பையும் சேரநாட்டையும் இணைக்க பெருமளவு உதவியுள்ளமையை இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டும். மட்டக்களப்புத் தேசம் மலையர் குக நாடு என அழைக்கப்பட்டதன் அர்த்தப்பாடு இதன்மூலம் வெளிப்படவே செய்யும். மலையர் என்பது மலைநாட்டினரான சேரத்துக் குடிகளையும் குகர் என்பது கலிங்கக் குடிகளையும் அடையாளப்படுத்துவதாக அமையும்.

கேரளத்தில் மரபுவழியாக விவசாயத்தை மேற்கொண்டிருந்த நிலவுடைமைச் சமூகமாக நாயர் சமூகம் அடையாளப்படுத்தப்படுவதைப்போன்றே மட்டக்களப்புத் தேசத்திலும் புத்தளப் பிரதேசத்திலும் நிலவுடமைச் சமூகமாக முக்குக சமூகம் அடையாளப்படுத்தப்படுகின்றது. எனினும் கேரளத்து சமூகத்தளத்தில் காராளர்களான நாயர்கள் ஒரேயினத்தை அடியொற்றிவந்த தனிச் சமூகமாக அடையாளப்படுத்தப்படுவதைப்போன்று இலங்கையில் முக்குக சமூகம் அடையாளப்படுத்தப்படவில்லை. கேரள சமூக ஆய்வுகளில் நாகர் இனத்தின் வேளாண் தொழிலை மேற்கொண்டிருந்த பிரிவினரே நாயர் சமூகமென ஐயத்துக்கிடமின்றி வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

முடிவுறுத்தப்பட்ட மட்டக்களப்பின் சமூக வரலாற்று ஆய்வுகளின்படி மட்டக்களப்பின் முக்குக சமூகமானது பண்டைய கலிங்கத்தினதும் முத்தமிழ் நாடுகளான சேர சோழ பாண்டிய நாடுகளினதும் மரபுவழிச் சமூகங்களது ஒருங்கிணைப்பாகவே கொள்ளப்படுகின்றது. இதில் பண்டைய ஈழத்தில் நிலைகொண்டிருந்த இயக்கர், நாகருடன் கலிங்கத்தின் மரபுவழி சார்ந்த கலிங்கர் மற்றும் கங்கர் சமூகங்களும் சோழநாட்டின் வன்னியச் சமூகமான படையாட்சியரும் சேரத்தின் முக்குவர், பணிக்கர், நாயர் மற்றும் மழவர் சமூகங்களும் காலத்துக்குகாலம் இணைந்து பிணைப்புற்றிருப்பது ஆய்வுகளில் நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

கி.பி 1811 தொடக்கம் 1820 வரையும் இலங்கையின் பிரதம நீதியரசராகப் பணியாற்றிய சேர் அலக்சாந்தர் ஜோன்ஸ்ரன் அவர்களது முக்குகர் தொடர்பிலான கருத்துக்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. தலைசிறந்த சட்ட மேதையான இவர் 1800க்கு சற்று முன்னும் பின்னும் கேரளத்தையும் உள்ளடக்கியிருந்த சென்னை மாநிலத்தில் ஆங்கில அரசின் முக்கிய நீதித்துறை அலுவலராகப் பணியாற்றி அதன் பின்னர் இலங்கைக்கு வந்தவர். இலங்கையின் தேசவழமைச் சட்டங்கள் மற்றும் வழக்காறுகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொண்டவர். இவர் தனது Ceylon Native Laws and Customs எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“முக்குகர்கள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பெரும்பான்மையான நிலங்களுக்கு சொந்தக்காரர்களாக இருந்ததோடு அப்பிரதேசத்தின் ஆட்சி நிருவாகத்தையும் படிப்படியாக தம்மிடம் வசப்படுத்தினர். முக்குகரே ஆசியாவின் எந்தப் பகுதியிலும் இல்லாத வகையில் முதலாவது சுதேசியக் குடிகளாக ஐரோப்பிய அரசாங்கம் ஒன்றினால் அதிகாரமளிக்கப்பட்டு தமது

சொந்தநாட்டு அரசாங்கத்தின் சட்டவாக்கசபையின் உறுப்பினராகவும் ஆகினர். அப்பிரதேச முக்குகக் குடும்பங்களின் எல்லாத் தலைவர்களும் தமது பிரதேச அரசின் உறுப்பினர்களாகவிருந்து அச்சபையை நிருவகித்தனர்."

Mutkuvars not only became proprietors of almost all the lands in the province, but they gradually acquired the complete Government of the Province. The Mutkuvars may be considered the first native in any part of Asia who were authorized by a European Government, to become members of a legislative assembly for the Government of their Own Country infact it consisted of a provincial Council of which all the heads Mutkuva families of the district were members of the Government of their own province.

- Sir Alexandar Jhonstan- (Chief Justice 1811- 1820)

இலங்கையின் வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் முக்குகர் குறித்த தனது இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும் ஆய்வு நூலில்,

"கிழக்கு மாகாணத்திலே நிலமும் வேளாண்மையும் முக்குகரின் வாழ்க்கைக்கு ஆதாரமாகியுள்ளன. முக்குகரே மட்டக்களப்பில் நில உடமையாளராகவிருந்து ஆதிக்கம் செலுத்தியமை அவர்களது வாழ்வு முறைகளையும் வழமைகளையும் மேம்படுத்தி அவர்களையே ஏனையோரும் பின்பற்றுவதற்கு வழிவகுத்தது. இதனால் முக்குகரின் சாதியமைப்பு தனித்துவம் மிக்கதாக விளங்கியது. இதனுடன் இணைந்ததாக அரசியல் பொருளாதாரம் மற்றும் சமூக ஆதிக்கம் இவர்களை முதன்மைப்படுத்தியிருந்தது. "எனக் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்க நாட்டின் பிறின்ஸ்ரன் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானப் பேராசிரியரான கலாநிதி மார்க் விற்றாகர் (Prof. Mark P. Whitakar) அவரது ஆய்வு நூலான East Coast Sri Lankan Tamil Temple எனும் நூலில் போர்த்துக்கேயர் மட்டக்களப்பை தங்கள் அதிகாரத்திற்கு உட்படுத்தியபோது இங்கு மேலாண்மைச் சமூகமாகவிருந்த முக்குக சமூகத்தின் தலைவர்களான போடிமாரே நிலவுடமையாளர்களாக இருந்தனரெனவும் கிழக்கின் கரையோரப் பிரதேசத்தின் பெருமளவு நிலபுலங்கள் அவர்கள் வசமேயிருந்ததெனவும் அதன்பின்னர் ஆங்கில அரசின் காலத்திலேயே அதிகளவு காணிகள் ஏனையோருக்கு வழங்கப்பட்டதாகவும் 1870 முதல் 1921 வரையான காலப்பகுதியில்மட்டும் 32406 ஏக்கர் அரச காணி ஏனைய தனியாருக்கு நெற்செய்கையின்பொருட்டு பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பதாகவும் அன்றைய அரசு ஆவணங்களைச் சான்றுபடுத்திக் குறிப்பிடுகின்றார்.

## மருமக்க(ள்)தாயச் சட்டமும் முக்குகச் சட்டமும்:

மருமக்க(ள்) தாயச் சட்டமும் முக்குகச் சட்டமும் பெரும்பாலும் சொத்துடமை சார்ந்த சமூகச் சட்டமாகவே அமைகின்றது. சொத்துரிமை வகை, சீதனமாகக் கொடுக்கப்படுகின்ற வகை, காணி ஆட்சிப்படுத்தல் மற்றும் கையாளல் வகை, காணி நன்கொடை வகை, காணி ஒற்றி பிடிக்கின்ற வகை, தொண்டூழியம் புரிபவர்களுக்கு செய்கையின்பொருட்டு காணி வழங்கல் வகை, வட்டி அறவீட்டு வகை, தேசவழமைத் திருமணம் என அவற்றின் பாகுபாடு அமையும். முக்குகச்

சட்டத்தில் தாய்வழிச் சோம், தாய்வழிமுதுசொம், தேட்டம் என்பவற்றிற்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற வியாக்கியானம் முழுக்க முழுக்க மருமக்க(ள்) தாயத்தை ஒத்திருப்பதை அவதானிக்கமுடியும். தாய்வழி முதுசொக் காணிகள் மட்டக்களப்புப் பிரதேசத்தில் பரவணி முதுசம், பரவணிக் காணி, முக்குக முதுசம், முக்குகக் காணி என அழைக்கப்பட்டதைப்போன்று கேரளத்தில் இது தராவத்து, தாயக் காணி, நாயர் காணி, மருமக்க காணி, நாடுகாணி போன்ற பெயர்களால் அழைக்கப்பட்டுள்ளமை தெரிகின்றது. தரா என்பது பரம்பரைக் காணியையும் வத்து என்பது அதில் பெறப்படும் விளைச்சலையும் குறிப்பதாக அமையும். எனினும் பின்னர் அச் சொத்துக்களே தராவத்து என்ற பெயருக்கு உரியதாயிற்று.

மருமக்க(ள்) தாயமும் தராவத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டவை. தென்னிந்தியாவுக்கு வருகைதந்த வெளிநாட்டறிஞர்கள் இதனை கேரளாவின் சமூகப் பாரம்பரியம் மிக்க தனித்துவமான தன்மைகள் எனக் குறிப்பிட்டனர். ஆங்கிலேயரான புச்சன் பிரான்சிஸ் (Buchen Francis) தனது பிரயாணக் குறிப்புகளில் (A Journey from Madras through Mysore,Canara and Malabar -1803) இதுபற்றி விரிவாக விளக்கியுள்ளார்.

முசாகா காவியத்தை எழுதிய அத்துல கி.பி 11ஆம் நூற்றாண்டில் முசாகா அரச வம்சத்தினரும் சொத்துடமையில் மருமக்க(ள்) தாய நடைமுறையினையே பின்பற்றியதாகக் குறிப்பிடுகின்றார். கேரளத்தின் மத்தியகாலம் முதல் அங்குள்ள சில முக்கிய சமூகங்களும் இம்மரபினை பின்பற்றியுள்ளமை ஆய்வுகளில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. கேரள இந்துக் குடும்பங்களில் சமூகப் பிணைப்புற்ற முஸ்லிம்களும் லக்ஷ தீவுகளில் குடியேறிய கேரள மக்களும் மருமக்க(ள்) தாய நடைமுறைகளையே பின்பற்றினர். கேரளத்தை அண்டிய தென்காசி போன்ற பாண்டிநாட்டு எல்லைப் பகுதிகளிலும் இந்நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதையும் காணலாம். இப்பகுதிகள் காலத்துக்குக்காலம் சேரநாட்டுடன் இணைந்திருந்தமையே இதற்கான காரணமாகும். திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடிய திரிகூட ராசப்ப கவிராயருக்கு கொல்லம் ஆண்டான 1717 தை மாதம் 11ஆம் நாள் மதுரை மன்னர் சிறி விஜயரங்க சொக்கநாத நாயக்கரால் செப்புப் பட்டயம் எழுதி வழங்கப்பட்ட நிலக்கொடையான குற்றாலம் மேலைச் செம்பக்கா பகுதியின் கருப்புக் காட்டைச் சேர்ந்த ஊத்துமேடு எனும் நன்செய் புன்செய் நிலங்கள் இராசப்ப கவிராயரின் மறைவுக்குப் பின்னர் அவரது மனைவி மற்றும் மக்கள் வழியில் சேராமல் மருமக்க(ள்) தாய நடைமுறைக்கு அமைவாக அவரது தாய்வழியில் பெண்ணடி முதுசொமாக மாறியிருப்பது இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாகும். இது முழுக்கமுழுக்க முக்குகச் சட்டத்தின் தாய்வழி முதுசொத்திலுள்ள உரிமைவகை முதலாம் பிரிவில் சொல்லப்படுகின்ற, ‘ஒரு தலைமைக்காரனுக்கு ராசாக்களால் கிடைத்திருக்கின்ற உறுதி ஒப்பந்தங்களும் முதுசமான ஊர்க்காணி உடைமைகளும் அந்தத் தலைமைக்காரனுக்குப் பிற்காலம் அவன் சகோதரங்களுக்கும் மருமக்களுக்கும் தாய்வழி முதுசொமாய்ச் சேரும்’ எனும் சட்டப் பிரிவினுக்கு உட்பட்டிருப்பதைக் காணலாம்.

கேரளத்தின் மருமக்க(ள்) தாயச் சட்டத்திலும் மட்டக்களப்பின் முக்குகச் சட்டத்திலும் நடப்புக் காலத்தேயிருக்கும் பரம்பரைச் சொத்துப்போக அக்காலத்தே பெறப்பட்ட அல்லது தேடப்பட்ட சொத்து தேட்டம் என்ற பெயரினைப் பெறும். அது பின்னர் மட்டக்களப்பில் மாதாவழி முதுசொமாகவும் கேரளத்தில் தாயக் காணியாகவும் மாறும். பராமரிப்பு முறை ஆரம்பத்தில் தாயிலிருந்து மூத்த

மகனுக்கும் அதன் பின்னர் அடுத்த மகனுக்கும் செல்லும். பின்னர் வயது முறைக்கேற்ப பெண்மக்களின் மகன்மாருக்கு தாய்வழி மாமா மருமகன் எனக் கைமாறும். இதன் முக்கியத்துவம் என்னவெனில் தாய்வழிச் சொத்துக்களின் பராமரிப்பு உரிமையானது சகோதரிகளைச் சார்ந்தே பெண்வழியாக அமையும் என்பதே. “ஆண்வழி நின்றுபோம் பெண்வழி இருந்துபோம்” எனும் மட்டக்களப்பின் முதுமொழியானது இதன் அர்த்தப்பாட்டை விளக்கிநிற்கும். தாய்வழிச் சொத்துக்கள் மாமன் மருமகன் வழியில் நின்றாலும் அது பெண்வழியிலேயே நிலையாக இருக்கும் என்பதுவே அதன் வெளிப்பாடாகும். இதனாலேயே கேரளத்திலும் மட்டக்களப்பிலும் திருமணமான பெண் கணவன் வீடு செல்லாமல் தாய்வீட்டில் தங்கும் நிலை உருவானது எனலாம்.

மருமக்க(ள்) தாயத்தைப் பொறுத்தவரை தராவத்தம்மா எனும் பெண்வழித் தலைமைத்துவமே முன்னர் நடைமுறையில் இருந்ததாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். பெருமாள்களின் ஆட்சிக் காலத்தே ஏற்பட்ட சோழர்தம் ஆதிக்கத் தன்மையின் விளைவாகவே ஆண்பராமரிப்பு தலைமைத்துவம் மருமக்க(ள்) தாயத்துள் ஊடுருவியதாக பேராசிரியர் இளம்குளம் குஞ்சன்பிள்ளை (Studies in Kerala History) கருதும் வேளையில் கேரளத்தின் தாய்வழி மரபின் தொடர்ச்சியாகவே சமூகத் தலைமைத்துவம் அல்லது குடும்பத் தலைமைத்துவத்தைக் கொள்ளவேண்டுமென கே.பி.பத்மநாபமேனன் (History of Kerala) குறிப்பிடுவார். எனினும் பண்டைய கேரள மரபுவழிச் சமூகங்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட எழுச்சியின் புதிய பரிணாமம் அல்லது மாறுதலின் உந்துதலே கி.பி 9ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து தனித்தன்மைமிக்க இவ்வழக்காற்றினுக்கு வித்திட்டிருக்க வேண்டுமேயன்றி வேறு எக்காரணமும் அமையமுடியாதென்பது கே.எஸ்.மத்தியூ போன்ற (Societies in Medieval Malabar) புதிய தலைமுறை ஆய்வாளர்களின் முடிவாகத் தெரிகின்றது.

மிக நீண்ட காலமாக நாயர் சமூகத்தினுக்குரிய தராவத்து எனும் பரம்பரைச் சொத்துக்களின் பராமரிப்பும் தலைமைப் பொறுப்பும் குடும்பத்தில் மூத்த பெண்ணிடமே ஒப்படைக்கும் வழக்கம் இருந்துவந்தது. அவர் தராவத்தம்மா என்னும் பெயராலேயே அழைக்கப்பட்டிருந்தார். காலப்போக்கில் ஏற்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் அச்சொத்துக்களை பாதுகாத்து பராமரிக்கவேண்டிய பாரிய பொறுப்புக்கள் காரணமாக தராவத்தம்மாவுடன் தராவத்துக்காரன் எனும் ஆண் தலைமைத்துவமும் உருவானது. இது வயதுமூப்பின் அடிப்படையில் தாய்மாமன் மற்றும் சகோதரி வழி மருமகன் எனும் உறவுமுறைக்குள் வருவதாக அமைந்தது.

கி.பி 4ஆம் நூற்றாண்டு வாக்கில் குடியேறி விரிவாக்கம் பெற்று நாயர் சமூகப் பெண்களை சம்பந்த முறைத் திருமணம் செய்து ஒருபுறம் தந்தைவழிப் பேணுகையை முதன்மைப்படுத்தியும் மறுபுறம் மருமக்க(ள்) தாயப் பயன்களை அனுபவித்தும் வாழ்ந்த நம்பூதிரிப் பிராமணர்களின் செல்வாக்கு தாய்வழி மருமக்க(ள்) தாயத்துள் ஊடுருவிய தன்மையினையும் அதன்மூலம் உணரப்பட்ட வேறுபாட்டின் முக்கியத்துவத்தையும் இங்கு கவனத்தில் கொள்ளுவது அவசியமானதாகும். பிரமாஸ்வம் எனப்படும் பிராமணர்களுக்கு உரித்தாகக் கொள்ளப்பட்ட காணிகளின் சொந்தக்காரர்களாக மாறிய நம்பூதிரிகள் தங்களது சொத்துக்கள் தங்கள் சமூகத்திலிருந்து சிதறுண்டுபோகாமல் தடுப்பதற்காக தங்களது சொத்துக்களுக்கு தந்தைவழி வாரிசு உரிமைகொண்ட மூத்த புதல்வர்களை நம்பூதிரிச் சமூகத்தில் முறையான திருமண

பந்தத்திற்கு உட்படுத்தினர். இளைய புதல்வர்களை சம்பந்தமுறை எனும் பெயரில் நாயர் சமூகப் பெண்களை தாரமாய்க்கொள்ள அனுமதித்தனர். நாயர் சமூகத்தில் பிறக்கும் தங்களது பிள்ளைகளை மருமக்க(ள்) தாய நடைமுறைக்கு உட்படுத்துவதன்மூலம் மனைவியையும் மக்களையும் பராமரிக்கும் பெரும் பொறுப்பிலிருந்து விடுபடும் வாய்ப்பினையும் உழையாதிருந்து உண்டுகளிக்கும் வாழ்வையும் அவர்கள் பெற்றனர். இதில் முக்கியப்படுத்தத்தக்க அம்சம் யாதெனில் நம்பூதிரிகளுக்குரிய பிரமாஸ்வம் எனும் பரம்பரைச் சொத்தின் பலன்களை அவர்களது நாயர் சமூக மனைவி மக்கள் அனுபவிக்க மறுக்கப்பட்டமையே ஆகும். அத்தோடு நம்பூதிரிகளை மணம்முடித்த நம்பூதிரிப் பெண்கள் கணவன் வீட்டில் வாழும் உரிமையினைக்கொண்டிருக்க நம்பூதிரிகளை மணம்முடித்த நாயர் பெண்களுக்கு அவ்வுரிமை மறுக்கப்பட்டு தொடர்ந்தும் தாய்வீட்டிலேயே வாழவேண்டியவர்களாயினர். அத்தோடு அவர்களது பிள்ளைகளும் நம்பூதிரி ஈற்றுப்பெயர் மறுக்கப்பட்டு நாயர் ஈற்றுப் பெயரினையே கொண்டவர்களாயினர்.

மட்டக்களப்புத் தேசத்தைப் பொறுத்தவரை இங்குள்ள சமூகக்கட்டமைப்பு அதுபோன்ற வாழ்க்கை முறைக்கு வழியமைக்கவில்லையென்றே கூறவேண்டும். இங்கு திருமண பந்தமென்பது பெரும்பாலும் குறிப்பிட்ட சமூகம் சார்ந்தே அமைந்திருந்தது. கி.பி 13ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்த காலத்தே அது மேலும் வலுப்பெறலானது. ஒவ்வோர் சமூகத்திலும் கலிங்க மாகோன் வகுத்த ஏழு குடிமுறைகள் சீரானதும் அறிவுபூர்வமானதுமான ஒரு சமூகக் கட்டமைப்பை தோற்றுவிக்க வழிவகுத்தது. ஒரு சமூகம் அதனது குடிமுறைக்குள் ஒத்த குடியில் திருமணம் செய்யலாகாது எனும் நியதியானது ஒரு முக்கிய சமூக நெறிமுறையாகக் கொள்ளப்பட்டது. இதனால் கேரளத்தில் நாயர் சமூகத் திருமணங்களின்போது அடிக்கடி சிக்கல்களைத் தோற்றுவித்த மருமக்க(ள்) தாய நடைமுறைகள் மட்டக்களப்புத் தேசத்தில் முக்குகச் சட்ட நெறிமுறைகளால் சீராகவும் வலுவாகவும் வளர்ச்சிபெற வாய்ப்பாக அமைந்திருந்தது.

மட்டக்களப்புத் தேசத்தில் வெல்லசை, விந்தனைப் பிரிவுகள் உட்பட்ட மன்னன்பிட்டி தொடக்கம் கட்டாமம் வரையும் திருகோணமலைப் பிரதேசத்தில் கொட்டியாரப்பற்று, தம்பலகாமம் பற்று, கட்டுக்குளம் பற்றிலும் புத்தளத்தின் எல்லா ஏழு பற்றுக்களிலும் தாய்வழி வழக்காறுகளை முதன்மைப்படுத்திய முக்குகச் சட்டம் குறித்து ஆங்கில ஆட்சிக் காலத்தில் இலங்கையின் உயர்நீதிமன்ற வழக்குரைஞராகக் கடமையாற்றிய சி.பிரிட்டோ (Mukkuvas Law _C.Britto – 1876), சட்ட வல்லுநர் எஸ்.டபிள்யூ. தம்பையா (Laws and Customs of Tamils of Ceylon ), கலாநிதி டெனிஸ் மக் கில்வரி (Mukkuva Vannikai – Dr.Dennis B Mc Gilwary), இந்திய சட்டவறிஞர் முனைவர் எஸ். பாவேந்தன் (கீழைத்தேய மரபுவழிச் சட்டங்கள்) ஆகியோர் வெகுவாக ஆராய்ந்தனர்.

இச்சட்டம் குறித்து கவனம்செலுத்திய சி.பிரிட்டோ, மாதாவழி முதுசொம் தவிர்ந்த ஏனைய அனைத்தும் பண்டைய ரோமன் டச்சுச் சட்டத்தில் தென்படுவதாகவும் தெற்கு ஒல்லாந்தில் காணப்படும் வாரிசு சொத்துடைமையினை இது ஒத்திருப்பதாகவும் கண்டறிந்தார். கணவன் மனைவியிடத்தே நேரடி வாரிசுகள் இல்லாதிருக்கின்றபோது அவர்களது சொத்துடைமைகள் எவ்வாறு பங்கிடப்படல்வேண்டுமென இச்சட்டம் கூறும் வியாக்கியானங்களும் வரையறைகளும் வியந்து நோக்கத்தக்கவையாகவுள்ளதாக அவர் குறிப்பிடுகின்றார். மேலும் இச் சட்ட நடைமுறைகள் தொடர்பில் ஆய்வினை மேற்கொண்ட இலங்கையின் அன்றைய பிரதம நீதியரசர்

சேர் அலக்சாந்தர் ஜோன்ஸ்ரன் மூத்தோர் கூடம் எனும் சமூகப் பெரியோர்கள் மூலமே இச்சட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டதாக குறிப்பிடுவதும் கவனத்தில் கொள்ளத்தக்கதாகும். இதுவே மட்டக்களப்பிலும் புத்தளப் பிரதேசத்திலும் முத்திர கூடம் என அழைக்கப்பட்டது.

தமிழக சட்டவறிஞர் முனைவர் எஸ். பாவேந்தன் கீழைத்தேய மரபுவழிச் சட்டங்கள் தொடர்பான ஆய்வில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“பாரம்பரியம்மிக்க மரபுவழிச் சமூகங்களுக்குரிய வழக்காறுகளின் அடிப்படையில் அச்சமூகங்களை நிலையான ஒரு கட்டுக்கோப்புக்குள் வைத்துப் பேணுவதற்கு நீண்டகால அனுபவ நெறிப்படுத்துகையில் உருவானவையே தேசிய மரபுவழிச் சட்டங்கள் ஆகும். தேசியச் சமூகம் என்பது (National Community) பல்வேறு அர்த்தப்பாட்டைக் கொண்டிருப்பினும் மிகமுக்கியமாக அது மூன்று அம்சங்களை உள்ளடக்கியதாக அமையும்.

01. தேசிய மரபுரிமை சார்ந்த சமூகக் கட்டமைப்பு
02. பிரதேசத்துக்குரியதான சிறப்புக்குறித்த வழக்காறுகளின் முக்கியத்துவம்
03. மேற்படி இரண்டிற்குமான பேணுகையும் பாதுகாப்பும்

ஈழத்தில் சிங்களவர்களுக்கு தனிச் சமூகச் சட்டங்கள் இருந்ததைப்போல தமிழர்வாழ் பிரதேசங்களில் இத்தன்மைகொண்ட இருவித சட்டங்கள் ஒரு நீண்டகாலப் பகுதியில் நடைமுறையிலிருந்ததுவும் அந்நாட்டைக் கைப்பற்றி ஆட்சிசெய்த போர்த்துக்கேயரும் பின்வந்த டச்சுக்காரரும் தங்கள் நிருவாகமுறைக்குள் அவற்றைப் புகுத்தியதும் அங்கு வாழ்ந்த தமிழர்கள் தேசிய பாரம்பரியம்மிக்க பண்டைய சமூகத்தினர் என்பதனை வெளிக்காட்டுகின்றது. யாழ்ப்பாணத்தில் பேணப்பட்ட சட்டம் யாழ்ப்பாண தேசவழமைச் சட்டம் எனப் பெயர்பெற கிழக்கு மற்றும் வடமேற்குப் பிரதேசங்களில் பேணப்பட்ட சட்டம் முக்குகச் சட்டம் என்ற சமூகப் பெயரினைப் பெறுகின்றது.

முக்குகச் சட்டம் பெரும்பாலும் நில உடமைகள், பங்கீடுகள், பராபரிப்புகள், செய்கைகள், கொடுக்கல் வாங்கல்கள், உடமைமாற்றம், பணிகளுக்கான கூலிகள், பிணக்குகளைத் தீர்த்தல், குடியியல் தண்டனைகள் என்பவற்றைச் சார்ந்தே அமைகின்றது. இச்சட்டங்களின் தேடலின் ஊடே கட்டுக்கோப்பும் அரவணைப்பும் தாய்வழி இன உணர்வின் இறுக்கமும்கொண்ட ஒரு பண்பட்ட சமூகத்தன்மை நாகரீக மிடுக்குடன் வெளிப்படுகின்றது. யாழ்ப்பாண மேல்மட்டத்தினராகக் கருதப்பட்ட பல வேளாளர்களை போர்த்துக்கேயர் தங்கள் நிருவாகத்தில் முக்கிய பதவிகளில் சேர்த்துக்கொண்டதைப்போல மட்டக்களப்பில் மேல்மட்டத்தினராக அன்றிருந்த முக்குகர்களைச் சேர்த்துக்கொண்டமைக்கு எதுவித சான்றுகளும் கிட்டவில்லை. சுதந்திர வேட்கைமிக்க மட்டக்களப்பின் முக்குகப் போடிகளை நம்பகத்தன்மை அற்றவர்கள் எனக் கருதியதும் இதற்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கலாம். மேலும் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தங்களுக்குச் சார்பான பலருக்கு தொம் முதலி பட்டத்தை வழங்கிய நிலையில் மட்டக்களப்பில் ஒருவரேனும் போர்த்துக்கேயருக்கு சார்பாக இப்பட்டத்தைப் பெறவில்லை என்பது தெரியவருகின்றது.” இவ்வாறு பாவேந்தன் முக்குகச் சட்டம்பற்றி விளக்கிச் செல்கின்றார்.

## கேரளத்துக்கும் மட்டக்களப்புக்கும் உரியதான போடி முறைமை:

காணி உடமையாளர்களான கேரளத்தின் நாயர் சமூகத்திலும் மட்டக்களப்பின் முக்குக சமூகத்திலும் ஏற்பட்ட போடி முறைமை குறித்தும் இங்கு கவனம்கொள்வது இதில் முக்கியமானதாகும். போடி முறைமையானது மருமக்க(ள்)தாய நெறிமுறைகளை அடியொற்றிவந்த ஒரு தலைமைத்துவ சிறப்பம்சமாகவே ஆய்வாளர்களால் குறிப்பிடப்படுகின்றது. பண்டைய சேரநாட்டிலிருந்தே மட்டக்களப்புக்கு இது அறிமுகமாகியிருக்கவேண்டுமென்பது ஒரு பொதுவான கருத்தாகவும் உள்ளது. நிலவுடமையாளரைக் குறிக்கும் போக்தா என்ற மலையாளச் சொல்லே திரிந்து போடியானதென பேராசிரியர் வேலுப்பிள்ளை போன்றவர்கள் கருதுவர். கேரளத்தின் நாடுடையார், நாடுவழி, ஊரலர் எனும் ஊர்ப்போடி, போடிவாள் அல்லது போடுவாள், போடி போன்ற தலைமைத்துவங்களைப் போன்றே மட்டக்களப்பின் உடையார், ஊர்ப்போடி, போடிகள், போடி என்ற தலைமைத்துவ அமைப்பு விளங்குகின்றது. கேரளத்தில் போடுவாள், போடி எனப் பெயருக்குப் பின்னால் வரும் ஈற்றுப் பெயரினை ஒத்ததாகவே மட்டக்களப்பிலும் பெயருக்குப் பின்னால் போடிகள், போடி என்ற ஈற்றுப் பெயரும் அமைகின்றது.

கேரளத்தை ஒட்டியதாக பெருமளவு விவசாய நிலங்களைக் கொண்டுள்ள திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் தென்மதுரைப் பிரதேசங்களில் அன்றைய காலகட்டத்தே இதற்கான அடையாளங்கள் தென்படவே செய்கின்றன. அப்பிரதேசங்களில் போடியென்பது கௌரவத்துக்குரிய பெயராக மாத்திரமன்றி விருதுக்குரிய பெயராகவும் குறிப்பிடப்படுகின்றது. நாயக்கர் ஆட்சிக் காலத்தே போடி என்பது விருதுக்குரிய பெயராக விளங்கியிருப்பதை தமிழகத்தின் இன்றைய தேனி மாவட்டத்திலுள்ள பெருமளவு விவசாய நிலங்களைக் கொண்டுள்ள போடிநாயக்கன் ஊர் வரலாறு நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. மதுரையில் திருமலை நாயக்கரது ஆட்சிக் காலத்தே பாண்டி நாட்டின் சில எல்லைக் கிராமங்களில் இரவு வேளையில் புலியொன்றுவந்து கால்நடைகளைக் கொன்று தின்பதோடு மக்களையும் தொல்லைக்குள்ளாக்கி வந்தது. உயிருக்கு அஞ்சிய அப்பகுதி மக்கள் மாலைபட்டதும் அயல்கிராமங்களுக்குச் சென்று தஞ்சமடைவது வழக்கமாகியிருந்தது. இதனால் சிலர் மதுரைக்குச்சென்று திருமலை நாயக்கரிடம் முறையிட்டனர். மன்னர் தனது படைவீரர்களில் துணிச்சல்மிக்க வீரன் ஒருவனை அம்மக்களுடன் அனுப்பிவைத்தான். அவன் அம்மக்களுக்கு பாதுகாப்பளித்ததோடு அப்புலியுடன் பொருது அதனைக் கொன்றான். மன்னர் அவனுக்கு போடிநாயக்கன் எனும் விருதளித்து அப்பகுதிக்கு போடிநாயக்கனூர் எனும் நாமம் சூட்டி அவனைப் பாழையக் காரனாகவும் நியமித்தார். இது சுமார் முன்னூறு ஆண்டுகால வரலாறாகும்.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை போடி எனும் பெயர்ச்சிறப்பு இன்றுவரை மதிப்புடனேயே கருதப்படுகின்றது. அரை நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம்வரை போடி என்ற ஈற்றுப் பெயரைக்கொண்டு தங்கள் பிள்ளைகளுக்குப் பெயரிடுதலை இப்பிரதேச விவசாயப் பெருங்குடியினர் ஒரு பெருமையாகவே கொண்டிருந்தனர். மட்டக்களப்புப் பிரதேசத்தின் மிக நீண்டகால நிலவுடமைச் சமூகமாக விளங்கிய முக்குகர் சமூகத்தினையே இப்பெயர் குறிப்பதாக அன்று அமைந்திருப்பினும் பிற்பட்ட காலத்தே நில உடமையாளர்களாக விளங்கிய ஏனையவர்களும் இப்பெயர்ச் சிறப்புக்கு உரியவர்களாயினர்.

கேரளத்தைப் பொறுத்தவரை போடியென்ற ஈற்றுப்பெயர் இல்லாதுபோக, பிராமணர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு பின்னர் ஆட்சியாளர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட சாதீயப் பெயரை ஈற்றுப்பெயராக வைக்கும் தன்மையே காரணமாயிற்று. இதன்காரணமாக நாயர், நம்பூதிரி, மேனன், பணிக்கர், பிள்ளை, நாடார், நம்பியார், ஐயர் போன்ற சாதீய ஈற்றுப் பெயர்கள் இடம்பெறலாயின. எனினும் ஆலய நிருவாகக் கட்டமைப்பினூடாக அவற்றின் அகப்புறச் செயல்பாடுகளுக்கு உரியவர்களாக விளங்கிய அகப் போடிவாள் மற்றும் புறப் போடிவாளும் திருவிதாங்கூர் மன்னன் (1729 - 1758) மார்த்தாண்ட வர்மனால் பழிதீர்க்கும் நோக்குடன் பதவியொழிக்கப்பட்ட திருவனந்தபுரம் பத்மநாபா ஆலயத்தில் நிருவாகப் பொறுப்பிலிருந்த போடிமாரும் பிற்பட்ட காலத்திலும் போடிமாரின் சிறப்புக் குறித்து அறியச் சான்றாகவுள்ளனர். ஆலய நிருவாகத்திலிருந்த போடிமார் யோகத்தில் போடிமார் என அழைக்கப்பட்டனர். யோகம் என்பது ஆலய நிருவாகத்தைக் குறிப்பதாக அமையும். இதுகுறித்து பேராசிரியர் ரி.கே.கெங்காதரன் தனது Evalution of the Kerala History and Culture எனும் நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

கேரளத்தின் நிலவுடமையாளர்களான இப்போடிமார் பற்றியும் அவர்களது செயல்பாடுகள் பற்றியும் வெளிநாட்டுப் பயணிகள் தங்களது குறிப்புகளில் விரிவாக எழுதியிருக்கின்றனர். 17ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கேரளத்தில் தங்கியிருந்த போர்த்துக்கல் நாட்டவரான டுறேற் பார்போசா (Durate Barbosa) என்பவர் தனது A Description of the Cast of Africa and Malabar - எனும் நூலில் இதுகுறித்துப் பல முக்கிய தகவல்களைத் தந்துள்ளார். அவர் தங்கியிருந்த காலத்தே கேரளத்தில் இருவித போடியமைப்பு தோற்றம் பெற்றிருந்ததையும் மன்னப்போடி - புலப்போடி எனும் உயர்வு தாழ்வு குறித்த அவற்றின் தோற்றப்பாடு பற்றியும் அவர் விரிவாக ஆராய்ந்தார். நிலவுடமையாளர்களான நாயர்ப் போடிமரின் காணிகளில் தாழ்ந்த சாதியினர் கூலிகளாகப் பணிபுரிவர். இவர்கள் நாயர் சமூகப் பெண்களுடன் பழகுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டிருந்தது. அது பெரும் தண்டனைக்குரிய குற்றமாகவும் கருதப்பட்டது. எனினும் சில சந்தர்ப்பங்களில் தடைகளையும்மீறி தவறுகள் நடந்துவிடுவதுமுண்டு. இது அறியப்படும்போது வரும் கார்த்திகை நட்சத்திர நாளில் ஊரலர் எனும் ஊர்ப்போடியார் தலைமையில் மக்கள்கூடி அவர்களுக்கான தண்டனையை நிறைவேற்றுவர். குறித்த தாழ்ந்தசாதி ஆண்மகனை ஒரு கம்பத்தில் கட்டி எல்லோரும் பார்க்கும்படியாக ஊர்ச்சந்தியில் தொங்கவிடுவர். பின்னர் ஊரைச்சுற்றி அவனைக் கொண்டுவருவர். அதன்பின்னர் அவனையும் குறித்த பெண்ணையும் ஊரின் எல்லையில் நிறுத்தி அப்பெண்ணுக்கு தடியால் அடித்தோ அல்லது கற்களால் எறிந்தோ ஊரைவிட்டு அவ்விருவரையும் விரட்டிவிடுவர்.

இதில் கவனத்தில் கொள்ளப்படத்தக்க முக்கிய அம்சம் யாதெனில் அப்பெண்ணுக்குப் பிறக்கும் வாரிசுகள் மருமக்க(ள்) தாயச் சட்டப்பிரகாரம் தாய்வழிச் சொத்துக்கு உரித்துடையவர் என்பதே. இதில் நாயர் சமூகத்தினர் பொதுவாக உயர்வுநிலை குறித்த மன்னப்போடி என அழைக்கப்பட இவர்கள் தங்களது தந்தைவழித் தொடர்பால் தாழ்ந்தநிலையுடைய புலப்போடி என அழைக்கப்பட்டு தாய்வழிச் சொத்தான தராவத்துக்கு உரித்துடையவராயினர். மன்னப்போடி - புலப்போடி அமைப்பின் செயல்பாடானது மனிதாபிமானத்துக்கும் சமூகப் பண்பாட்டுக்கும் அப்பாற்பட்ட நடைமுறையாகப் பலராலும் கருதப்பட்டமையால் கோட்டயம் மன்னராகவிருந்த கேரளவர்மனால் 1696ல் இந்நடைமுறை முற்றாக ஒழிக்கப்பட்டதாக கேரளவரலாறு பதிவுசெய்துள்ளது.

மட்டக்களப்புத் தேசத்தின் பாரம்பரியம்மிக்க மரபுவழிப்பட்ட வரலாற்றியலில் போடிமார் மிக்க மதிப்புடையவர்களாவே வாழ்ந்துவந்துள்ளனர். கேரளத்தில் பிராமணர்களால் தோற்றுவிக்கப்பட்ட மனிதாபிமானமற்ற சமுதாயக் கட்டமைப்பு மட்டக்களப்பில் தோற்றம்பெறவில்லை. நிலவுடமையாளர்களாகவும் போடிமாராகவும் விளங்கிய முக்குக சமூகத்தினர் ஏனைய சமூகங்களையும் தங்களுடன் அணைத்துக்கொண்டே வாழ்ந்துவந்துள்ளனர். மட்டக்களப்புப் போடிகல்வெட்டு குறிப்பிடும் கி.பி 1520ல் கண்டி அரசால் மாருதசேனன் என நாமம் சூட்டப்பட்ட கண்ணாப்போடி மன்னன்பிட்டி தொடக்கம் மாணிக்ககங்கைவரை தன்னாட்சி நிறுவிச் செயல்பட்டதையும் மட்டக்களப்பில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் கால்பதித்தபோது அவர்களை முழுமூச்சாக எதிர்த்து உயிரிழந்தும் சிறைசென்றும் சொத்திழப்புக்களுக்கு உள்ளாகியும் தங்கள் தனித்துவத்தை நிலைநிறுத்திக்கொண்ட போடிமார் குறித்த தகவல்களையும் மட்டக்களப்பு வரலாறு பதிவுசெய்தேயுள்ளது. கி.பி 1530 தொடக்கம் 1542 வரையான காலப்பகுதியில் கிறிஸ்தவப் பாதிரியார் சைமாவோ கோயம்பரா அவரது தலைமைக்கு எழுதிய கடிதங்கள் போடிமாரின் சிறப்பினை முன்னிறுத்துவதைக் காணலாம். கி.பி 1675ல் இலங்கையின் ஒல்லாந்த ஆளுனர் தனது நாட்டு அரசுக்கு அனுப்பிய அறிக்கையில் "மட்டக்களப்பின் தலைவர்கள் (போடிகள்) மூர்க்கத்தனம் மிக்கவர்களாகவும் நம்பகத் தன்மை அற்றவர்களாகவும் இருக்கின்றனர் எனவும் ஒல்லாந்தக் கம்பனிகளுக்கு தொடர்ந்தும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துபவர்களாகவேயுள்ளனர்" எனவும் குறிப்பிட்டிருப்பது மட்டக்களப்பில் அவர்கள் அதிகார நிலைக்குவந்து முப்பத்தைந்து ஆண்டுகளைக் கடந்தும் ஒரு தனித்துவமான ஆட்சியை தங்களால் நிலைநிறுத்தமுடியாமலிருந்ததை மெய்ப்பிப்பதாக அமைந்தது. இதன்காரணமாகவேதான் ஒல்லாந்தர் தங்களது ஆட்சியை செவ்வனே கொண்டுசெல்ல உள் நிருவாகச் செயல்பாடுகளில் போடிமாரிடம் நிருவாகத்தைப் பகிர்ந்தளித்து தங்கள் மேலாதிக்கத்தை நிலைநிறுத்தினர். இதன் பிரதிபலனாக தலைமைப்போடி மற்றும் ஊர்ப்போடி முறைமை மட்டக்களப்பில் அறிமுகமானதுடன் முக்குகச் சட்டமும் சமுதாயச் சட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஒல்லாந்தரிடமிருந்து மட்டக்களப்பை ஆங்கிலேயர் கைப்பற்றியபோதும் போடிமாரின் பாரிய எதிர்ப்புக்கு முகம்கொடுக்கவேண்டிய நிலையே தென்பட்டது. இதன் காரணமாகவே அவர்கள் நிலமைப் போடிகளையும் வன்னியனார் மற்றும் உடையார்களையும் நியமித்து தாய்வழி முதுசொத்தை முன்னிலைப்படுத்திய முக்குகச் சட்டத்தையும் கி.பி 19ஆம் நூற்றாண்டின் மத்திய பகுதிவரை குடியில் விசாரணைகளில் ஏற்றுக்கொண்டனர்.

மட்டக்களப்புப் பிரதேசத்தின் பாரம்பரிய நிலவுடமை பற்றிய ஆய்வினை மேற்கொண்ட பொருளியல் ஆசான் குமாரவேலு தம்பையா தேரோட்டம் எனும் கொக்கட்டிச்சோலை தன்தோன்றீச்சர கும்பாபிஷேக மலரில் (1998) பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வன்னிமையென்ற சுதந்திரச் சிற்றரசுகள் செழிப்புற்றிருந்த காலப்பகுதியில் தோற்று விக்கப்பட்ட நிலவுடமை முறையும் அதன் கட்டமைப்பு வளர்ச்சியும் மட்டக்களப்புப் பிரதேசத்தின் நீண்ட மரபுகளுக்கும் வழக்காறுகளுக்கும் காரணமாயமைந்திருந்தன. இத்தகைய பின்னணியில் தோற்றுவிக்கப்பட்டு விருத்தியடைந்த இப்பிரதேசத்தின் மானியமுறைப் பொருளாதாரமானது பாரம்பரிய மானிய அமைப்பு முறையை ஒத்ததாகவும் நிலமே பிரதான பொருளாதார மூலமாக பயன்படுத்தப்பட்டும் வந்துள்ளது. எனினும் ஏனைய மானிய முறையில் காணமுடியாத

நில உடமையையும் அதன் ஒழுங்குபடுத்தல்களையும் அவற்றினால் உருவான சமூக விழுமியங்களையும் அடியொற்றிய போடியார் முறை இப்பிரதேசங்களில் தனித்துவம்மிக்கதாகத் தென்பட்டது. இம்முறைமையானது இப்பிரதேசத்திற்கேயுரிய பாரம்பரிய வழக்காறுகளின் உயர்நிலைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்படுகின்றது. ஏனைய பாரம்பரிய தமிழ்ப் பிரதேசங்களில் நிலப் பிரபுத்துவ முறையும் அதனோடியைந்த மானியமுறைப் பண்புகளும் காணப்படுகின்ற நிலையில் மட்டக்களப்புப் பிரதேசத்தே இப்போடியார் முறை உருவாக்கிய மானியமுறையின் வழக்காறுகள் சமூகப் பெறுமானங்களையும் பொருளியல் விருத்தியையும் அடியொற்றியவையாக இருந்தமை குறிப்பிடத்தக்கதாகின்றது. சான்றாக ஏனைய மானிய முறைப் பொருளாதாரங்களில் ஊழியம் அடிமை முறையாக அல்லது கீழ்நிலைப் படுத்தப்பட்ட சாதாரண கூலித் தொழிலாளர்களால் பயன்படுத்தப்பட்டதைக் காணக்கூடிய நிலையில் மட்டக்களப்புப் பிரதேசப் போடிமார் மரபுமுறையின் கீழ் இவ்வாறு கூலித் தொழிலாளர்களைப் பயன்படுத்தப்பட்ட ஊழியமானது அவர்களைச் சாதாரண கூலித் தொழிலாளர்கள் என்பதைவிட மனித நேயம்மிக்க மனித உழைப்பினையும் இப்போடிமாரால் தோற்றுவிக்கப்பட்டிருந்தது என்பதனை மிக முக்கியமாகக் குறிப்பிட்டேயாகவேண்டும். இதனடிப்படையில் பார்க்கின்றபோது, பொதுவாக மட்டக்களப்பின் நிலவுடமையாளர்களாக வாழ்ந்த முக்குகப் போடிமார் மிக்க கண்ணியம் மிக்கவர்களாகவும் மனிதாபிமானம் கொண்டவர்களாகவும் அனைவரையும் சமமாக வழிநடாத்தி தங்களை நிலைநிறுத்திக்கொண்டவர்கள் என்பதனையும் நம்மால் அறிந்துகொள்ளமுடிகின்றது." இவ்வாறு குமாரவேலு தம்பையா அவர்கள் குறிப்பிடுகின்றார்.

## கேரளத்தின் பணியாளரும் மட்டக்களப்பின் முல்லைக்காரரும்:

மருமக்க(ள்)தாய நடைமுறைகளில் பணியாளர் முக்கியத்துவம் பெறுவதைப்போன்றே தாய்வழி முதுசொம் நடைமுறைகளில் முல்லைக்காரர்கள் முக்கியத்துவம் பெறுகின்றனர்.இது குறித்தும் சற்றுப் பார்ப்பது இங்கு பொருத்தமானதாகும்.

வயல்சார்ந்தநிலப்பகுதி மருதமெனவும்காடுசார்ந்தநிலப்பகுதிமுல்லையெனவும்பெயர்பெறும். மருதநில மக்கள் வேளாண் தொழில் சார்ந்தும் முல்லை நில மக்கள் கால்நடை வளர்ப்புச் சார்ந்தும் வாழ்ந்தவர்கள். மருதநில மக்களின் விவசாயச் செயல்பாடுகளுக்கு துணைநின்றவர்கள் முல்லை நிலத்தவராவர். இச்செயல்பாடுகள் புதிய கற்காலம் முதலே விரிவுபட்டுள்ளதாக தமிழக வரலாறுகள் தெளிவுபடுத்தும். உழவுக்கான ஏரும் அதனை இழுப்பதற்கான எருதும் முல்லை நிலத்தவரிடமேயிருந்தது. காலப்போக்கில் விவசாயப் பணியாளர்களாக முல்லைக்காரர்கள் மாறக் காரணமாயமைந்தது அவர்களிடமிருந்த இவையிரண்டுமாகும். இவர்கள் அன்று நிலத்தை உழுது பண்படுத்திக் கொடுப்பதற்கான கூலியினை நெல்லாகவோ அன்றேல் பிற தானியங்களாகவோ பெற்றுக்கொண்டனர். பிற்பட்ட காலங்களில் விளைச்சலின்பின் கூலிகொடுக்கும் முறைமையும் அறிமுகமானது. இது விளைச்சலில் குறிப்பிட்ட பங்குவீதமாகவும் அமைந்தது. படிப்படியாக வேளாண் மக்களிடத்தே நிலவுடமையாளர்கள் உருவானபோது புதிய கூலிமுறையும் அறிமுகமானது. பணியாளர்கள் தங்களது உழைப்பின் திறமையால் தங்களை வளர்த்துக்கொள்ளவும் இது வழிகோலியது. காலப்போக்கில் நிலவுடமையாளர்களான போடிமார் தங்களது பணியாளர்களுக்கு தங்கள் வயலில் ஒரு பகுதியை கூலிக்காகச் செய்கைபண்ணும் முறையினைக் கொண்டுவந்தனர். கேரளத்தில் இது பணியாளர் விருத்தி என அழைக்கப்பட

மட்டக்களப்பில் முல்லைக்காரன் வயல் அல்லது முல்லை வயல் என சங்ககாலச் சிறப்பால் அழைக்கப்படலாயிற்று. பணியாளர் விருத்தி என்பது பணியாளருக்கு இனாமாக வழங்கப்படும் வயல் என்ற அர்த்தத்தை உடையதாகும். பணியாளர் அல்லது முல்லைக்காரர்கள் போடிமாருக்கு மிக்க நெருக்கமுடையவராகவும் நம்பிக்கைக்கு உரியவராகவும் விளங்கினர். விவசாய நிலங்களை சிறப்பாக பராபரிக்கும் பொறுப்புடன் கூலியாட்களைக்கொண்டு வயல் வேலைகளை செவ்வனே மேற்கொள்ளும் கடமையும் அவர்களுக்கிருந்தது. மட்டக்களப்பில் உடமையாளரின் காணிகள் போடி வயல் என அழைக்கப்படுவதைப்போன்று கேரளத்தில் இக்காணிகள் நாயர் காணி என அழைக்கப்படுவதைக் காணலாம்.

## முடிவுரை:

கி.பி 17ம் நூற்றாண்டுவரை சிறப்பாகப் பேணப்பட்டுவந்த மருமக்க(ள்)தாய செயல்பாடுகளும் முக்குகச்சட்ட நெறிமுறைகளும் அதன்பின்னர் ஐரோப்பிய ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு செயல்பாட்டுக்குவந்த வரி அறவீடுகள், பொருளாதாரக் கொள்கைகள், மிசனறிக் கல்வி முறைகள் மற்றும் சமூக சட்டதிட்டங்கள் என்பவற்றால் படிப்படியாகத் தளர்ச்சி நிலைக்குத் தள்ளப்பட்டன. கேரளத்தைப் பொறுத்தவரை நாயர் சமூகத்தில் ஏற்பட்ட புதிய நடைமுறைக் கல்வி எழுச்சியும் அரசுத் தொழில்துறை வருமானமும் சுய உழைப்பு வருவாய் எனும் புதிய பாதைக்குள் அவர்களை இட்டுச்சென்றது. மருமக்கள்தாய தராவத்து மூலம் கிடைக்கின்ற வருமானத்திலும் பல மடங்கு வருமானத்தை சுயஉழைப்பு அவர்களுக்கு ஈட்டிக்கொடுக்க தராவத்தின்பால் அவர்களுக்கிருந்த அக்கறை படிப்படியாக விடுபடலானது.

கி.பி 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்முதலே மருமக்கள் தாயத்துக்குட்பட்ட காணிகளின் உரிமைப் பிரச்சனைகள் பரவலாக எழத்தொடங்கின. புதிய நடைமுறைகள் மற்றும் சமூகச் சீர்திருத்தங்கள் என்பவற்றின்பால் தங்களை வெகுவாக இணைத்துக்கொண்ட கேரளத்து மக்கள் அதிலும் குறிப்பாக நாயர் சமூகத்தினர் கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டு சுயவருமான வாழ்க்கை முறைக்கு மாறியபின்னர் தாய்வழிச் சொத்துக்களின் பராமரிப்பாளர்களாக இருந்தவர்களின் வாரிசுகள் காலப்போக்கில் அக்காணிகளைக் கையகப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட பிரச்சனைகளின் பிரதிபலிப்பு நீதிமன்றங்களில் எதிரொலித்தது . முதலில் திருவாங்கூர் அரசு இதற்கு தீர்வுகாணும் நோக்கில் 1912ல் முதலாவது நாயர் சட்டமூலத்தை (1st Nayar Act – 1912) உருவாக்கியது. அதன்மூலம் மருமக்கள்தாய மரபுகளுக்கு ஏற்றவகையில் பெறப்படும் வருமானமனைத்தும் உரியவர்களுக்கு சென்றடைய வழிபிறந்தது. பின்னர் 1920ல் நிறைவேற்றப்பட்ட கொச்சி நாயர் சட்டமூலம் (Kochi Nayar Regulation Act – 1920) மருமக்க(ள்) தாய சொத்துக்களின் பராமரிப்பாளர்களான தராவத்துக்காரர்களின் ஆதிக்கப்போக்கை பெருமளவு கட்டுப்படுத்துவதாக அமைந்திருந்தது. எனினும் இதில் மென்மேலும் பிரச்சனைகள் நீண்டுகொண்டு சென்றதால் சென்னை சட்ட நிர்ணய சபையில் 1933ல் நிறைவேற்றப்பட்ட மருமக்க(ள்)தாய சட்டமூலத்தின்படி (Marumakkathayam Act – 1933) தராவத்து எனப்படும் தாய்வழிச் சொத்துக்கள் அனைத்தும் உரியவர்கள் அனைவருக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என வலியுறுத்தியது. இதனைத் தொடர்ந்து ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக நடைமுறையிலிருந்த தாய்வழி மரபான மருமக்கள்தாயச் செயல்பாடுகள் கேரளத்திலிருந்து

படிப்படியாக விடுபடலாயிற்று. எனினும் தாயக்காணி என்ற பெயரில் கேரளத்துக் கிராமப்புறங்களில் இன்றும் அழைக்கப்படுகின்ற வயல்காணிகள் இன்னும்கூட மருமக்கள்தாயத்தின் சிறப்பினை பறைசாற்றுபவையாகவேயுள்ளன.

மட்டக்களப்பைப் பொறுத்தவரை ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம் முதலே முக்குகச் சட்டமானது எல்லாநிலையிலும் வலுவிழக்கலானது. இதன்பிரதிபலிப்பாக தாய்வழி மாமன் மருமக்கள் என தாய்வழி முதுசொச் சொத்துக்களின் பராமரிப்பாளர்களாக இருந்தவர்களின் வாரிசுகளான தந்தைவழியினர் அச் சொத்துக்களின் பராமரிப்பாளர்களாக மாறியதோடு அவற்றின் உரிமையாளர்களாகத் தங்களை நிலைப்படுத்த முற்பட்டனர். இதன் பிரதிபலிப்பாக 1845 தொடக்கம் 1916 வரையான காலப்பகுதியில் மட்டக்களப்பு உயர் நீதிமன்றம் பன்னிரெண்டு வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இதன்போது மாவட்ட நீதிபதி எச்.ஓ கிறேடி (H.O.Grady), மேலதிக மாவட்ட நீதிபதி சி.காய் (C.Hai), மேலதிக மாவட்ட நீதிபதி V.KNW (A.Murray) போன்றோர் நீதிபதிகளாகப் பணிபுரிந்துள்ளனர். அனைத்து வழக்குகளும் இதில் முக்குகச் சட்டத்திற்கு அமைவாகவே தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். இதில் பிற்பட்ட மூன்று வழக்குகள் முக்கியத்துவம் பெறுவனவாகும். தாய்வழிச் சொத்துக்களின் பராமரிப்பாளர்களாகவிருந்த நிலமை வேலாப்போடியும் நிலமை கமலப்போடியும் மரணமடைந்தபின்னர் அவர்களது சகோதரிகளுக்குச் செல்லவேண்டிய வயல் நிலங்களையும் தோட்டங்களையும் இரு நிலமைப் போடிகளின் பிள்ளைகளும் கையகப்படுத்தியதால் அவர்களுக்கு எதிராக 10236- 29.10.1845ஆம் இலக்கமும் 16384 -27.02.1871ஆம் இலக்கமும் கொண்ட இரு வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. இவற்றில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் அச்சொத்துக்களின் பெறுமதி எதிரிகளிடமிருந்து வழக்காளிகளுக்கு பணமாக வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதி வழக்காக மட்டக்களப்பு இலுப்பையடிச்சேனை என்னும் இடத்திலுள்ள தாய்வழிக் காணி தொடர்பில் 07.02.1916ல் மட்டக்களப்பு உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட 4260ம் இலக்க வழக்கு அமைகின்றது. இதில் அளிக்கப்பட்ட தீர்ப்பும் முக்குகச் சட்டத்தை அடியொற்றியதாகவே அமைந்திருந்தது.

மட்டக்களப்புத் தேசத்தில் மிகநீண்ட காலமாக வழக்கிலிருந்த தாய்வழி முதுசொம் நடைமுறைகளின் எச்சத்தை 1990ல் நம்மால் அவதானிக்கமுடிந்தது. நீண்ட காலத்திற்கு முன்னர் பராமரிப்பாளரின் வாரிசுகளிடம் கைமாறிப்போயிருந்த கோவில்போரதீவு தென்கண்டம் - வெளிப்பற்று தாய்வழிக் காணியொன்று 1990ல் உரித்துடைய சகோதரியின் பெண்மக்களுக்கு வட்டவிதானையார் மற்றும் ஊர்ப் பெரியவர்களால் சமாதானமான முறையில் சமமாகப் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளமை மட்டக்களப்பில் தாய்வழிப் பாரம்பரியத்தை தொடர்ந்தும் நிலை நிறுத்துவதாகவே அமைந்திருந்தது.

## உசாத்துணை நூல்கள்


1. Alexandar Jhonstan, Ceylon Native Laws and Customs
2. Ayapan. A, Social Revolution in a Kerala History
3. Barbosa Durate, A Description of the Cast of Africa and Malabar

4. Buchan Francis, A Journey from Madras through Mysore, Canara and Malabar
5. Britto.C, Mukkuvas Law
6. Dennis B Mc Gilvary, Mukkuvar Vannimai
7. Alexandar Jhonstan, Ceylon Native Laws and Customs
8. Elamkulam Kunchanpllai, Studies in Kerala History
9. Gangatharan.T.K, Evolution of Kerala History and Culture
10. Innes.C.A, Malabar
11. Krishna Iyer. L. A, Kerala and her people
12. Krishna Iyer. K. V, A History of Kerala
13. Mathew.K.S, Societies in Medival Malabar
14. Padmanabamenan.K.P, History of Kerala
15. Mark P. Whitakar, East Coast Sri Lankan Tamil Temple
16. Thambiah. S. W, Laws and Customs of Tamils
17. இளம்குளம் குஞ்சன்பிள்ளை, சேரசாம்ராஜ்ஜியம் ஒன்பதும் பத்தும் நூற்றாண்டுகளில் (மலையாளம்)
18. ஷாஷகான்.ஏ.என்.எம், புத்தளம் வரலாறும் மரபுகளும்
19. சிவசண்முகம்.ஞா, மட்டக்களப்பு குகன்குல முக்குகர் வரலாறும் மரபுகளும்
20. தம்பையா குமாரவேலு, தேரோட்டம் (தான்தோன்றீச்சர கும்பாபிஷேக மலர் -1998)
21. பத்மநாதன்.சி, இலங்கைத் தமிழர் தேச வழமைகளும் சமூக வழமைகளும்
22. பாவேந்தன்.எஸ், கீழைத்தேய மரபுவழிச் சட்டங்கள்
23. வெல்லவூர்க் கோபால், மட்டக்களப்பு வரலாறு ஒரு அறிமுகம் (திருத்திய 3ம் பதிப்பு)
24. வெல்லவூர்க் கோபால், மலையாள நாடும் மட்டக்களப்பும்
25. வெல்லவூர்க் கோபால், தமிழக வன்னியரும் ஈழத்து வன்னியரும்

# கிறிஸ்தவத்தின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்திய பன்முகத் தாக்கம்

மேரி வினிஃபிரீடா சந்திரசேகர்

இலங்கை நாட்டைத் தம்வசப்படுத்திக் கொண்ட ஐரோப்பிய நாட்டவர்களான போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்றோர் இலங்கையில் தமது ஆட்சியை உறுதியுடன் நிலைநாட்டிக் கொள்வதற்கெனப் பல ஊடகங்களைக் கையாண்டார்கள். அவ்வாறு அவர்களால் கையாளப்பட்ட ஊடகங்களுள் மதத்தைப் பரப்புதல் என்னும் விடயம் சிறப்பிடம் பிடித்தது. அதற்கென அவர்கள் ஐரோப்பாவில் நிலவிய அரசியல் நடைமுறைகளை இலங்கையில் புகுத்த முற்பட்டனர். ஐரோப்பாவில் மன்னர் எந்த மதத்தைப் பின்பற்றுகிறானோ, அதனையே மக்களும் பின்பற்ற வேண்டும் என்ற நிலை காணப்பட்டது. எனவே இலங்கையிலும் மதத்தைப் பரப்புவதில் ஆர்வத்துடன் செயற்பட்ட அவர்கள், ஆட்சியாளர்களை மதம் மாற்றுவதன் மூலம் மக்களை தம் மதத்தில் இணைக்கலாம் எனும் தந்திர நோக்குடன் செயற்பட்டனர்.

மதத்தைப் பரப்புதலை மட்டுமே நோக்காகக் கொண்டிராத இவர்கள் இலங்கை நாட்டைப் பிடித்தல், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், இலாபத்தைப் பெற்றுக்கொள்ளுதல் என்னும் பெரும் எதிர்பார்ப்புக்களுடனும் இருந்துள்ளனர். இவர்களின் வருகை இலங்கைவாழ் தமிழ் மக்களின் வாழ்வில் பன்முக ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. சமயம் மட்டுமன்றி சமூகத்தின் ஏனைய துறைகளிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஆய்வினூடாக அறியலாம்.

இவ் ஆய்வில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னரான இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கை பின்னணியை ஆய்வு செய்வதன் மூலம், கிறிஸ்தவத்தின் வருகைக்கு பின்னரான மாற்றங்களையும், வளர்ச்சி, தளர்ச்சி நிலைகளையும் தெளிவாக நோக்கக் கூடியதாயிருக்கும்.

முஸ்லீம்களின் வியாபாரக் கப்பல்களைக் கைப்பற்றும் நோக்குடன் லோறொன்சோ டி அல்மெய்டா தலைமையில் வந்த போத்துக்கேயக் குழுவினர் எதிர்பாராத விதமாகப் புயலில் சிக்கி இலங்கையின் காலித்துறைமுகத்தை அடைந்துள்ளனர். வியாபார நோக்கம் கருதி எதிர்பாராத விதமான இக்குழுவின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் ஒரு சில அம்சங்களில் மாற்றங்களையும் ஏற்படுத்தியுள்ளன. குறிப்பாக இலங்கை மக்களிடையே கத்தோலிக்க மறை இவர்களின் வருகையின் பின்னரே பரப்பப்பட்டுள்ளது.

தொடர்ந்து போத்துக்கேயருக்குப் போட்டியாக ஒல்லாந்தர் கீழைத்தேய வர்த்தகத்தை கைப்பற்றுவதற்கென இலங்கைக்கு வருகை தந்தனர். இவர்களால் இலங்கையில் புரட்டஸ்தாந்து மதம் பரப்பப்பட்டது. இக்காலப் பகுதியில் மதம் மாறியவர்கள் பல சலுகைகளையும் பெற்றுக் கொண்டனர். பொருளாதார ரீதியிலும் பாரிய மாற்றத்தினை இவர்கள் ஏற்படுத்தியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் ஒல்லாந்தரின் ஆட்சியைத் தொடர்ந்து பிரித்தானியர் இலங்கை முழுவதையும் தமது ஆளுகையின் கீழ் கொண்டு வந்தனர். இக்காலப்பகுதியில் மக்களுக்கு "மதச்சுதந்திரம்" வழங்கப்பட்டிருந்தது. ஆங்கிலக் கல்வியையும், அரச பதவிகளையும் பெறுவதில் ஆர்வங்கொண்ட மக்கள் அதற்கென மதம் மாறினர். இவர்களின் ஆட்சிக்காலத்திலும் இலங்கைத்தமிழ் மக்கள் வாழ்வில் பல்துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது தெளிவு.

## 1. கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னர் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பின்னணி.

இலங்கையில் சிங்களவர், தமிழர் என இரு பிரிவினர்களைக் காணக்கூடியதாக இருப்பதுடன், அவர்களின் பூர்வீகத்தை ஆய்வு செய்கையில் அவர்கள் உண்மையில் இலங்கையைத் தமது பூர்வீகமாகக் கொண்டவர்களெனக் கூறமுடியாது. இலங்கைவாழ் சிங்கள மக்களின் மூதாதையர் கி.மு.6 ஆம் நூற்றாண்டில் வட இந்தியாவிலிருந்து விஜயன் தலைமையில் வந்து குடியேறியவர்களாவர்.[1] தமிழர் தென்னிந்தியாவிலிருந்து அவ்வப்போது வந்தவர்கள், படையெடுப்பாளர்கள் போன்றோரின் வழித்தோன்றல்களாவார்.[2] இத்தகைய பூர்வீக வரலாற்றைக் கொண்ட இலங்கை வாழ் மக்களின் சமூக, சமய, பண்பாட்டுப் பின்னணிகள் எவ்வாறு இலங்கையில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் காணப்பட்டதென்பதைத் தொடர்ந்து நோக்குவோம்.

### 1.1. சமூகம்

இலங்கையில் இயக்கர், நாகர் என்ற இரு பிரிவினர் ஆட்சி செய்துள்ளனர். இதில் நாகர் என்பவர் மங்கோலிய இனத்தைச் சேர்ந்த திபேத் தேவவர்ம குலத்தவர்களாகவும், கி.மு 400 ஆம் ஆண்டளவில் மத்திய ஆசியாவிலிருந்து வந்து இந்தியாவில் குடியேறியவர்கள். ஆரிய குடியேற்றம் அதிகரிக்கத் தொடங்கவே இவர்கள் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் வந்து குடியேறினார்கள். இலங்கையில் மத்தியிலும், தெற்கிலும் வசித்த இயக்கர் ஆரியரின் வருகைக்கு முன்னர் இலங்கைக்கு வருகைத் தந்தனர்.[3]

அக்கால சமூகத்தில் சாதி அமைப்பு முறை இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட விடயமாகும். காலந்தோறும் ஏற்பட்டு வந்த பல்வேறு விதமான நெருக்கடிகளின் போதெல்லாம் இந்து மதம் சாதியை கைவிடுவது போல காட்டிக் கொண்டாலும், அது தற்காலிக ஏற்பாடாகவே இருந்து வந்துள்ளது. அக்காலத்தில் சாதியமைப்பு அந்தஸ்தை காப்பாற்றும் தளமாகவே காணப்பட்டது. சமயமும் சாதி அந்தஸ்தை காப்பாற்றும் தளமாக இருந்துள்ளதுடன் சாதிக்கொரு திருவிழாக்கள் வழிபாடுகளிலும் காணப்பட்டன.[4]

---

1 புஸ்பரத்தினம், P., (2004), *இலங்கையர்கள் பற்றிய கல்வி* (Sri Lankan Studies) வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், ப. 03.

2 மேலது, ப. 03.

3 குகபாலன், கா., (2000), *இலங்கை பழங்குடிகள்* (வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு) பரணன் அசோசியேட்ஸ் பிறைவேட் லிமிடெட், கொழும்பு, ப. 24.

4 இரகுநாதன்., ம, (2006), "யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் ஈழத்து தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல்", *யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்*, கரிகணண் பிரின்டேர்ஸ், இல 424, காங்கேசன்துறைச் சாலை யாழ்ப்பாணம், ப. 88.

இக்காலத்தில் விவசாயமும், கைத்தொழிலும் வளர்ச்சியடைய ஆரிய சக்கரவர்த்திகள் உதவினர். விவசாயமே பெரும்பான்மை மக்களின் தொழிலாக இருந்துள்ளது. இதன்போது உணவுப் பொருட்கள், தானியங்கள் என்பவற்றையே உற்பத்தியாக்கினர். இவ்வாறான ஒரு சமூகப்பின்னணியே கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இலங்கையில் நிலவியது.

## 1.2. சமயம்

இந்து, பௌத்த மதங்களுக்கே இலங்கையில் தொன்மையான வரலாறு உண்டு. இலங்கையின் ஆதிமக்களான இயக்கர் "இயற்கை" வழிபாட்டையும் நாகர் "நாக" வழிபாட்டையும், சிவ வழிபாட்டையும் கொண்டிருந்தனர்.[5] கி.மு 6 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.மு 3 ஆம் நூற்றாண்டு வரையுமான காலப்பகுதியில் இலங்கை மக்களின் ஒரு குறிப்பிட்ட பகுதியினரிடையே இந்து மத நம்பிக்கை இருந்துள்ளது.[6] இந்துக்களின் வழிபாட்டு முறையில் இயற்கை வழிபாட்டுமுறை அக்காலப்பகுதியில் காணப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்துக்களிடையே இரு விதமான வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. அவை ஆகம வழிபாட்டு முறை, கிராமிய வழிபாட்டு முறை எனலாம்.

கி.மு. 6 ஆம் நூற்றாண்டு ஒரு முக்கிய காலப்பகுதியாகும். இக்காலத்தில் இந்தியாவில் வைதீக மதத்துக்கு எதிராக புத்தரும், மகாவீரரும் செய்த புரட்சியால் பௌத்த, சமண மதங்கள் தோன்றின. கி.மு. 3 ஆம் நூற்றாண்டில் போர் நடவடிக்கை மூலம் கலிங்க நாட்டை வெற்றி கொண்ட அசோகச்சக்கரவர்த்தி பௌத்தத்தை பின்பற்றினார். அத்துடன் அம்மதத்தை உலக நாடுகளுக்கு பரப்பும் முயற்சிகளிலும் ஈடுபட்ட இவர், இதற்கென தூதுக்குழுக்களை அனுப்பினார். மகிந்த தலைமையில் இலங்கைக்கு வருகை தந்த தூதுக்குழுவை இலங்கை மன்னன் வரவேற்றது மட்டுமல்லாது தானும் அம்மதத்தை பின்பற்றினான். இப்பின்னணியில் குறுகிய காலத்தில் செல்வாக்குடைய மதமாக பௌத்தம் திகழ்ந்தது.

## 1.3. கல்வி

கிறிஸ்தவத்தின் வருகைக்குமுன் இலங்கையின் கல்விநிலையை நோக்கின், இங்கு குரு, சிஷ்ய முறையிலான கல்விநிலையே காணப்பட்டது. கிராமங்கள் தோறும் பாடசாலைகள் காணப்பட்டன.[7] இப்பாடசாலைகள் கிராமத்து பெரிய மனிதன் வீட்டுத் திண்ணைகள், கோயில் மண்டபங்கள் என்பவற்றில் நடைபெறுவதுண்டு. இவ்வாறு திண்ணைகளில் நடைபெற்று வந்த இப்பள்ளிக்கூடங்கள் "திண்ணைப்பள்ளிக்கூடம்" என்றழைக்கப்பெற்றன. அக்காலத்தில் காகிதம், பேனா, பென்சில், புத்தகங்களுக்கான வசதிகள் காணப்படாமையினால் மாணவர்கள் தரையில் மணலைப் பரப்பி கைவிரலினாலேயே எழுதினர். எழுத்துக்களைக் கற்றவர்கள் ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, வாய்ப்பாடு முதலியவற்றை மனப்பாடம் செய்வார். இதன் பின் திவாகரம், நிகண்டு, நன்நூல், சின்நூல் ஆகிய நூல்களை மனப்பாடம் செய்வதுடன் ஏடுகளில் எழுத்தாணியால் எழுதிப்பழகுவர்.[8]

---

5 குணராசா, க., (1996), *ஈழத்தவர் வரலாறு* (கி. பி.5ம் நூற்றாண்டிலிருந்து கி. பி 1621 ஆம் ஆண்டு வரை), பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, ப. 18.

6 மேலது, பக். 18-19.

7 வெங்கடசாமி சீனி., (2003), *19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,* அன்னை இல்லம், சென்னை, ப. 75.

8 மேலது, பக். 75- 78.

இக்காலப்பகுதியில் திண்ணைப் பள்ளிக்கூடம் மட்டுமல்லாது குருகுலப் பள்ளிக்கூடங்கள், கோயில் மடப்பள்ளிக்கூடங்கள், இராப் பள்ளிக்கூடங்கள், நிலாப்பள்ளிக்கூடங்கள், மரநிழல் பள்ளிக்கூடங்கள் என பலவிதமான ஒழுங்கமைப்புக்கள் ஏட்டுக்கல்வியை வழங்கி வந்தன. அதுமட்டுமல்லாது இலக்கியக்கல்வி, மருத்துவக்கல்வி, சோதிடக்கல்வி, என்றவாறு ஏட்டுக்கல்வியில் சிறப்பார்ந்த துறைகள் அவற்றிற்குரிய வல்லுனர்களிடம் கற்கும் மரபு காணப்பட்டது.[9]

திண்ணைக் கல்விக்கூடங்களில் மனப்பாடம் செய்யும் முறையே அதிகம் பின்பற்றப்பட்டு வந்தது. அக்காலத்தில் இவ்வாறான திண்ணைப் பள்ளிக்கூடங்களில் பெண்கள் படித்ததற்கான சான்றுகள் இல்லை. “குருகுல” கல்வியானது ஒரு குருவின் கீழ் இயங்கியது. இம்முறையில் மாணவர்கள் மருத்துவம், நடனம், இசை, இசைக்கருவிகளை இயக்குதல் போன்ற பயிற்சிகளையும் பெற்றுக்கொண்டனர். சீடர்கள் குருவுடன் இருந்து, அவருக்குப் பணிவிடை புரிந்து அவர்களிடமிருந்து பாடங்களைக் கற்றனர்.[10] நிலாப்பள்ளிக்கூடங்களிலும் மாணவர்கள் கல்வி பயின்றுள்ளனர். நிலவின் பிரகாசமான ஒளியில் நடாத்தப்பட்ட இப்பாடசாலைகளில் இருவிதமான கற்பித்தல் முறைகள் காணப்பட்டன. அவை சிறந்த இலக்கியங்களை விளங்கப்படுத்துதல், உடற் கலைகளை கற்பித்தல் என்பனவாகும். இக்காலப் பகுதியில் பெண் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. பெண்கள் வீட்டு வேலைகளை செய்பவர்களாகவே காணப்பட்டார்கள் குடும்ப உறுப்பினர்களின் தேவைகள் சிலவற்றை நிவர்த்தி செய்ய கை வைத்தியம் அல்லது மருத்துவிச்சி மரபுசார் கல்வி வழங்கப்பட்டுள்ளது. குடும்பத்தை பாதுகாத்தல், பராமரித்தல் என்னும் விடயங்களை முக்கியத்துவப்படுத்தும் நோக்கில் அனுபவக் கல்வியே ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு வழங்கப்பட்டது.[11]

## 1.4. பண்பாடு

பண்பாடானது மக்களனைவரும் கூட்டாக சேர்ந்து செயற்படும் போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இது அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்கநெறிகள், சட்டம், வழக்கம் முதலியவற்றின் தொகுதியாகவும் காணப்படுகின்றது.[12]

கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த இயக்கரும், நாகரும் ‘ஈழு’ என்ற நிறைவற்ற மொழியை பேசி வந்தனர். நாகரின் மொழியும் தமிழாகவே இருந்திருக்க வேண்டுமென்று சிலர் ஊகிக்கின்றனர். யாழ்ப்பாணத்தை ஆண்ட அரசர்களும் தமிழை வளர்க்க பேரார்வம் காட்டி வந்தனர். யாழ்ப்பாண அரசு நிலைத்திருந்த அறுநூறு ஆண்டு காலத்தில் தமிழ் நன்கு வளர்க்கப்பட்டது.[13] எனவே இக்காலப்பகுதியிலும் தமிழ் மொழி பயன்பாட்டில் இருந்துள்ளது எனலாம்.

---

9 சபா ஜெயராசா, (2000) *யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வி*, போஸ்கோ பதிப்பகம், நல்லூர், ப. 22.

10 Anton Mathias, (1992), *The Catholic Church in Jaffna*, (1875-1925) Good Shepherd Center , Ealalai, P. 53.

11 கணபதிப்பிள்ளை, க., (1962), *ஈழத்து வாழ்வும் வளமும்*, சித்ரா பிரிண்டேர் கிராபி, மெட்ராஸ், பக். 53-56.

12 பத்தவத்சல பாரதி, (1990), *பண்பாட்டு மானிடவியல்*, மாணிக்கவாசகர் ஆப் செட் பிரிண்டர்ஸ், சென்னை, பக். 51-52.

13 கந்தவனம், வி., (2002), *பொன்விழா மலர்: யாழ் மாநகராட்சி மன்றம்* ( 1949-1999), போஸ்கோ பதிப்பகம், நல்லூர், பக். 4- 5.

இலங்கைத் தமிழ் மக்களின் உணவுப் பழக்கவழக்கத்தை நோக்குவோமாயின் இவர்கள் அரிசிச்சோற்றையே பெரும்பாலும் உண்டு வருவர். நாட்டிலே ஆங்காங்கே வளரும் சாமை, தினை, குரக்கன், சோளம் முதலிய சிறு தானியங்களையும் அவர்கள் உண்டு வந்தனர். ஆரம்ப காலத்தில் அரிசிச்சோறு முதன்மையான உணவாக இருந்திருப்பினும் தினைச்சோறு, வரகுச்சோறு முதலியவற்றையே உண்டு வந்தனர். இவற்றை விடவும் பனை ஒடியல் பிட்டு, பனை ஒடியல் கூழ், பனங்காய், பனாட்டு, குரக்கன் பிட்டு, தோசை, இட்டலி என்பவற்றையும் உணவாகக் கொண்டனர். பழஞ்சோறு காலை உணவாக இருந்தது. பால் அல்லது மோர் குடிக்கும் பழக்கமும் காணப்பட்டது. இக்காலப்பகுதியில் மரக்கறி உணவையே அதிகமாக உண்ணும் வழக்கம் காணப்பட்டது.

மக்களின் பண்பாட்டு அம்சங்களில் முக்கியமான ஒன்றாகத் திகழ்வது வாழ்க்கைப் பழக்கவழக்கங்களாகும். இந்த வகையில் ஆண்கள் கன்னக்குடுமி முடிந்து வந்தனர். ஒரு ஆண் திருமணம் முடிக்கும்போது சீதனம் வழங்கும் முறையும், பெண் சீதனம் கொடுத்து மணம் செய்யும் முறையும் காணப்பட்டது.

கலை அம்சங்களை நோக்குகையில் அக்காலத்தில் நாட்டுக்கூத்துக்கலை சிறப்புற்றுத் திகழ்ந்தது. இந்நாட்டுக் கூத்தானது கோயில் நேர்த்திக் கடனுக்காக ஆடப்பட்டவையாகக் காணப்பட்டது. அரங்கேற்றப் பருவத்தில் கோயில்களுக்கு அருகில் கொட்டகை அமைத்து, அதில் களரி கட்டுவர். கொட்டகை வட்டமாக அமைந்திருக்கும். இக் கொட்டகைகள் நான்கு புறமும் திறந்திருக்கும். எனவே பார்வையாளர் கொட்டகையை சுற்றி இருந்து பார்க்க இலகுவாக அமைந்திருக்கும். கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இவ்வாறான பண்பாட்டு பின்னணியையே நிலவியது.

## 2. கிறிஸ்தவத்தின் வருகைக்கு பின் இலங்கை தமிழ் மக்களின் வாழ்க்கை

### 2.1. இலங்கையில் போத்துக்கேயரின் ஆளுகை (கி. பி 1505– 1658)

1498 இல் வஸ்கொடகாமா தலைமையில் கப்பற்படைகள் இந்தியாவின் கள்ளிக்கோட்டையை அடைந்தன. இவர்கள் இந்தியாவில் தம் நிலையை உறுதிப்படுத்தினர். இந்தியாவில் இராஜ பிரதிநிதியாக நியமனம் பெற்ற லொறன்சோ டி அல்மெயிடா முஸ்லீம்களின் வியாபாரக் கப்பல்களை கைப்பற்றும் நோக்குடன் அனுப்பப்பட்டார். அவர் சென்ற படகு புயலில் சிக்கி எதிர்பாராத விதமாய் 1505 இல் இலங்கையின் காலித்துறைமுகத்தை வந்தடைந்தது.[14] இவர்களின் வருகையின் பின்னர் இலங்கைத் தமிழ் மக்கள் வாழ்வில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

போத்துக்கேயர் வர்த்தக நோக்கம் கருதி இலங்கையில் தமது ஆட்சியை உறுதியுடன் நிலைநாட்ட முயன்றனர். எனவே இலகுவான வழிமுறைகளை அதற்கென பயன்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டினர். இலங்கையில் தமது மறையை பரப்பினால் இலங்கையின் ஆட்சியுரிமையை தம்வசப்படுத்திக்கொள்ள முடியும் என்ற நோக்குடன் மறைபரப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள் என்பதில் கருத்து வேறுபாடில்லை.

14 கிருஷ்ணராசா, செ., (2002), *இலங்கை வரலாறு- பாகம் II*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், யாழ்ப்பாணம், பக். 60- 62.

## 2.2. சமயம்

இலங்கையில் போத்துக்கேயரின் வருகையுடன் கத்தோலிக்க மறை பரப்பப்பட்டது. இம் மறைசார் உண்மைகளை மக்களிடையே எடுத்துச் செல்வதற்கென மிஷனரிமாரும் இலங்கைக்கு வரவழைக்கப்பட்டிருந்தனர். அந்த வகையில் பிரான்சிஸ்கன், இயேசு சபை, டொமினிக்கன், அகுஸ்தினர், போன்ற சபையினர் இலங்கையில் மறை பணியாற்றுவதற்கென வரவழைக்கப்பட்டனர். போத்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் யாழ்ப்பாணம் 32 கோவிற்பற்றுக்களாக பிரிக்கப்பட்டு இருந்ததுடன், அக்காலத்தில் நாற்பது அல்லது ஐம்பது குருக்கள் பணியாற்றியுள்ளனர்.[15] கிறிஸ்தவம் என்பது ஐரோப்பியம், ஐரோப்பியம் என்பது கிறிஸ்தவம் எனும் கருத்து வலுப்பெற்றிருந்தது. ஒருவன் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொள்வதாயின் ஐரோப்பியத்தை முற்றாக ஏற்க வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது. அவ்வாறான செயற்பாடுகள் இலங்கைத் தமிழ் மக்களின் மறையையோ, அவர்களின் பண்பாட்டு அம்சங்களையோ மதித்ததாக கூற முடியாதிருந்தது.

## 2.3. கல்வி

போத்துக்கேயரின் வருகையின் போது இலங்கையில் பாரம்பரிய கல்வி முறையே நிலவியது. ஆண்களுக்கான கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டது. இலங்கையில் போத்துக்கேயரின் ஆட்சி நிலவிய காலப்பகுதியில் இக்கல்விமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டன. உயர் இலக்கிய இலக்கண, சமயக் கல்வி போன்றன கற்பிக்கப்பட்டன. எனவே இவர்களின் வருகையின் பின்னர் உயர் கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப் பெற்றது. கத்தோலிக்க மறைசார் கல்விக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டது. புதிய இலக்கிய, இலக்கண, சைவசமயம் சார் நூல்கள் தோன்ற வாய்ப்பில்லை.[16] மிஷனரிமார் கத்தோலிக்க மறையைப் பரப்ப கல்வியை ஊடகமாக பயன்படுத்திக் கொண்டனர். இக்காலத்தில் மறை பரப்பு செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கென பிரான்சிஸ்கன் சபை, இயேசு சபை, டொமினிக்கன் சபை, அகஸ்டினர் சபை என்பன இலங்கைக்கு வரவழைக்கப்பட்டனர்.

1543 இல் பிரான்சிஸ்கன் சபையினர் கோட்டை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் "கோயிற் பற்று" பாடசாலைகளை தோற்றுவித்தனர். இதில் மிஷனரிமார் எழுத்து, வாசிப்பு, போத்துக்கேய பண்பாடு, கத்தோலிக்க நெறி முறைகள் என்பவற்றை கற்பித்தனர். தலை சிறந்த மாணவர்களை கத்தோலிக்க மடாலயங்களுக்கு அனுப்பி மதகுருமார்களாக்கினர்.[17] செபம் செய்தல், மத அறிவு குறித்த வினா விடை என்பன சுதேச மொழியிலும் கிறிஸ்தவ சமய கீதங்கள், கீர்த்தனைகள், ஸ்தோத்திர பாடல், வாசிப்பு, எழுத்து போன்ற விடயங்கள் எழுத்தறிவூட்டும் நோக்குடன் பிரான்சிஸ்கன் சபையினர் கையாண்டனர். இவர்களால் பயன்படுத்தப்பட்ட கற்றல், கற்பித்தல் முறைகளுள் வினா, விடை கற்பித்தல் முறை இன்று வரையிலும் பயன்பாட்டில் உள்ளது.

---

15 குலேந்திரன், (1959), *தென்னிந்திய திருச்சபை: யாழ்ப்பாண ஆதினக் கைந்நூல்*, அமெரிக்க சிலோன் மிஷன் பிரஸ், மானிப்பாய், இலங்கை, பக். 3- 4.

16 சிவலிங்கராஜா, எஸ்., (2001), *ஈழத்து தமிழ் இலக்கிய செல்நெறி,* உயர் கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம், ப. 61.

17 ஜெபநேசன், எஸ்., (1983), *அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்*, திருமகள் பிரஸ், சுன்னாகம், இலங்கை, ப. 21.

இயேசு சபையினரால் ஆரம்ப பாடசாலைகள் நடாத்தப்பட்டன. இங்கு நெடுங்கணக்கு வாசிப்பு, எழுத்து, பாட்டு, நற்பழக்கவழக்கம், கிறிஸ்தவ கோட்பாடுகள் என்பனவும் கற்பிக்கப்பட்டன. சுதேச மொழி மட்டுமன்றி இலத்தின், போத்துக்கேயம் போன்ற மொழிகள் கல்விக்கெனப் பயன்படுத்தப்பட்டன. நாடகத்தின் மூலம் (Role play) பாடசாலைகளில் கற்பிக்கும் முறையை அறிமுகப்படுத்தினர்.

பிரான்சிஸ்கன் சபையினர் உயர் கல்வியான கல்லூரிக் கல்வியை அளித்துள்ளனர். இக்கல்வி விசேட விதமாக மத குருமாராக வரவிருப்போருக்கு வழங்கப்பட்டது. இயேசு சபையினரும் உயர் கல்வியை புகட்டினர். அது ஆரம்ப, இடைநிலை, உயர்நிலை ஆகிய மூன்று பகுதிகளாக இயங்கின. மிஷனரிமார் இளவரசர்களுக்கான கல்வியைப் புகட்டும் முறையிலும் விசேட அக்கறை செலுத்தியுள்ளனர் இக்கல்வி ஐரோப்பிய அரச குடும்பத்து குழந்தைகளுக்கு வழங்கப்பட்ட கல்வியை ஒத்திருந்தது.[18] இவ்வாறு கல்வி நிலையில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டதை அவதானிக்கலாம்.

## 2.4. இலக்கியம்

போத்துக்கேயர் 1621 இல் ஈழத்தில் தமிழ் பேசும் பகுதிகளில் பெரும் பகுதியான யாழ்ப்பாணத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.[19] இவர்கள் மறையைப் பரப்பும் நோக்குடன் செயற்பட்டதால் இக்காலப் பகுதியில் எழுந்த இலக்கியங்கள் கத்தோலிக்க மறை சார் இலக்கியங்களாகவே அமைந்துள்ளன. ஏற்கனவே மக்களின் பயன்பாட்டிலிருந்த இலக்கிய வடிவங்களுக்கு கத்தோலிக்க மறை சார் கருத்துக்களை புகுத்தி கிறிஸ்தவத் தமிழ் இலக்கியங்களைத் தோற்றுவித்துள்ளனர். மக்களால் வரவேற்கப்படும் இலக்கிய வடிவங்களான பள்ளு, அம்மானை, நாட்டுக்கூத்து என்பவற்றைப் பயன்படுத்தி கத்தோலிக்க மறை சார் இலக்கியங்களை தோற்றுவித்தனர். குறிப்பாக இக்காலப்பகுதியிலேதான் கத்தோலிக்க சமயத்தைப் புகழ்ந்து இயேசு நாதரைப் பட்டுடைத்தலைவராகக் கொண்டமையப் பெற்ற ஞானப்பள்ளுப் பிரபந்தம் தோற்றம் பெற்றுள்ளது.

1647இல் பேதுறு புலவரால் “சந்தியோகுமையார் அம்மானை” என்ற கிறிஸ்தவ அம்மானை இலக்கியம் தோற்றம் பெற்றது. இது சாதாரண மக்களுக்கும் விளங்கும் வகையில் பாடப்பட்டது.[20] அத்துடன் “ஞானானந்த புராணம்” என்னும் இலக்கியமும் கிறிஸ்தவ மத விளக்கமாக அமைந்துள்ளதுடன் “திருச்செல்வர் காவியம்” என்னும் இலக்கியமும் இக்காலத்தில் தோற்றம் பெற்றுள்ளது. இது கீழைத்தேய வாசனை கொண்ட ஓர் கதையமைப்பையும், கதாபாத்திரங்களையும் கத்தோலிக்க புனிதர் பட்டியலில் இருந்து தெரிந்து மக்கள் வாழ்வுடன் இணைந்து இழையோடும் காப்பியமாக இக்காப்பியம் காணப்படுகிறது. கத்தோலிக்க மறையைப் பரப்பும் நோக்குடன் நாட்டுக் கூத்துக்கள் பெருமளவில் கையாளப்பட்டுள்ளன.

---

18 தொன் பீற்றர்., (1969), “போர்த்துக்கேய மிஷனரிமார் கல்வி துறையில் ஆற்றிய பணி”, *இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர்- பாகம்- I*, அரசாங்க அச்சகம், கொழும்பு, பக். 329- 331.

19 சிவலிங்கராஜா, எஸ்., பக். 60- 61.

20 மேலது, பக். 70- 74.

## 2.5. பொருளாதாரம்

போத்துக்கேயர் வருகை வர்த்தக நோக்கம் கருதியதாகவே இருந்தது. லோறென்சோ டி அல்மெய்டா கோட்டை இராசதானிக்கு அரசனாயிருந்த தர்ம பராக்கிரமபாகுவுடன் வியாபார உடன்படிக்கை செய்துகொண்டார். அவர்களிடையே பொருளாதார ரீதியிலான ஒப்பந்தம் ஒன்றும் காணப்பட்டது. அதாவது வருடா வருடம் அவர்களுக்கு அரசன் கறுவா பண்டத்தை தருவதாகவும், இவர்கள் கோட்டை அரசு துறைமுகம் என்பவற்றை பாதுகாப்பதாகவும் உறுதியளித்தனர்.[21] இலங்கையில் ஆரம்ப காலத்தில் விவசாயமே முக்கியத்துவம் பெற்றிருந்தது. போத்துக்கேயர் இலங்கையில் அதிகம் விளையக்கூடிய பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர். இலங்கை அரசுக்குரிய இலாபம் வர்த்தகப் பொருட்களால் கிடைக்கப்பெற்றது.[22]

## 2.6. பண்பாடு

கருத்துப் பரிமாற்றத்தில் முக்கிய இடம் வகிப்பது "மொழி" ஆகும். போத்துக்கேயரின் வருகையின் பின்னர் போத்துக்கேய மொழிச்சொற்கள் மக்களின் பயன்பாட்டில் காணப்பட்டது. விறாந்தை, யன்னல், கொரடா, சாவி போன்ற இன்னோரன்ன சொற்கள் இலங்கைத் தமிழர் பயன்படுத்தினர். மக்களின் பழக்கவழக்கம், உணவு, உடை, வழிபாட்டுமுறை, வாழ்க்கைத்தரம், என்பன மாற்றப்பட்டன. இக்காலத்தில் சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டதுடன், சாதிக்கட்டுப்பாட்டு கொடுமைகள் குறைவடைந்தது எனலாம். நாடகக்கலை, கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்பனவும் வளர்ச்சி கண்டன.[23]

# 3. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கைத் தமிழரின் வாழ்வு.

## 3.1. ஒல்லாந்தரின் இலங்கை வருகை (கி. பி. 1658– 1796)

போர்த்துக்கேயருக்கு போட்டியாக கீழைத்தேய வர்த்தகத்தை தம்வசப்படுத்தும் நோக்கில் ஒல்லாந்தர் இலங்கைக்கு விஜயம் செய்தனர். இவர்களின் வருகையினால் இலங்கைத் தமிழ் மக்களின் சமூகத்தில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இவர்கள் புரட்டஸ்தாந்து மறையைப் பரப்ப கல்வியை ஊடகமாகப் பயன்படுத்திக் கொண்டனர்.

## 3.2. சமயம்

ஒல்லாந்தரும் மக்களை புரட்டஸ்தாந்து மறையில் இணைக்கும் நோக்குடன் செயற்பட்டனர். இவர்கள் யாழ்ப்பாணம் முழுவதையும் 32 கோயில் பற்றுக்களாகப் பிரித்தனர். இராச கட்டளைகளுக்குப் பயந்து ஞாயிறு தோறும் ஆயிரக்கணக்கானோர் ஆராதனைகளுக்கு வந்தனர்.[24] இவர்கள் ஆன்மீக ஆர்வத்துடன் மறையைப் பரப்பாது, முதலாளித்துவப் பொருளாதார வாழ்வைக் கட்டியெழுப்பும் நோக்குடனேயே செயற்பட்டனர்.

இக்காலத்தில் போர்த்துக்கேயரின் கத்தேலிக்க மதத்தை பின்பற்ற தடைவிதிக்கப்பட்டதால் கத்தோலிக்கம் அழியும் நிலைக்கு உள்ளாகியது. ஆயினும் சைவ சமயத்தவர்கள் தங்கள்

---

21 கிருஷ்ணராசா, செ., பக். 62- 63.

22 ஜெயசீலன், J. E., (1997), *யாழ்ப்பாண திருச்சபை வரவாறு,* வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், பக். 14- 15.

23 புஸ்பரட்ணம், P., பக். 23-24.

24 வேலுப்பிள்ளை, சி. டி., (1984), *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்,* திருமகள் அழுத்தகம், சுன்னாகம், பக் 24- 27.

சமய ஆச்சாரங்களை கைக்கொண்டொழுகுவதற்கு தடைகள் இருக்கவில்லை.[25]அனைத்துச் சலுகைகளும் புரட்டஸ்தாந்து மதத்தைப் பின்பற்றியவர்களுக்கு வழங்கப்பட்டதால் அநேகர் அம்மறையைத் தழுவிக் கொண்டனர்.

## 3.3. கல்வி

ஒல்லாந்தர் புரட்டஸ்தாந்து மதத்தை பரப்ப கல்வியை ஊடகமாகப் பயன்படுத்தினர். ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் கல்வியும் அவற்றோடு இணைந்த நிறுவனங்களும், மக்களின் வாழ்க்கை நலன்களும் ஒன்றோடு மற்றொன்று பின்னிப் பிணைந்து இருந்தன.[26] மாணவர்கள் உயர்கல்வியைக் கற்கும் வாய்ப்பை பெற்றது மட்டுமல்லாது, மதப்பிரச்சாரம் மேலோங்கிக் காணப்பட்டது. இவர்களின் கல்வி நிறுவனங்களின் அடிக்கல்லாக 'பாடசாலைச் சபை' 1663 இல் அமைந்தது. இச்சபை அக்காலப்பகுதியில் கல்வி, திருமண விடயங்களைக் கவனித்தது.[27]

இக்காலப் பகுதியில் கோயில்பற்றுப் பாடசாலைகளை நிறுவி சுதேசிகளை ஆசிரியர்களாக நியமித்தனர். சுதேசிகளுக்கு குறைந்த சம்பளம் வழங்கி இலாபத்தைப் பெற்றுக் கொள்வதும் இவர்களின் நோக்கங்களில் ஒன்றாகும். இப்பாடசாலைகளில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் கற்பிக்கப்பட்டன. இங்கு எழுத்து, வாசிப்பு, கிறிஸ்தவக் கோட்பாடுகள் என்பன தெளிவாக கற்பிக்கப்பட்டன. கட்டாயக் கல்வி முறை இக்காலப் பகுதியில் காணப்பட்டது. அதுமட்டுமல்லாது செமினரிக் கல்வியும் இக்காலப் பின்னணியில் வழங்கப்பட்டது. இதில் கிரேக்கம், லத்தின் ஆகிய மொழிகள் போதிக்கப்பட்டன. செமினரிகளில் கல்வி பயின்றவர்கள் லெய்டன் (Leyden) பல்கலைக் கழகத்திற்கு செல்ல வாய்ப்பு கிடைத்தது மட்டுமல்லாது, அரசாங்க உத்தியோகமும் வழங்கப்பட்டது.

ஆண், பெண் இருபாலாருக்குமான அனாதை இல்லங்களும் இவர்களால் நிறுவப்பட்டன. ஆண்களுக்கு வர்த்தகமும், பெண்களுக்கு தையல், பின்னல், நூல் நூற்றல் போன்ற சுயதொழில் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் பெண்கள் அடிப்படைக் கல்வியை கற்க வேண்டும் என பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பி வைக்குமாறு பெற்றோர் வேண்டப்பட்டனர். இக்காலத்தில் கட்டாயக் கல்வி முறையும், பாடசாலைக்கு சமூகமளிக்காதவர்கள் குற்றப்பணம் அறவிட வேண்டும் என்ற சட்டமும் காணப்பட்டுள்ளது. இதனால் பெரும் தொகையான பெண்கள் பாடசாலைக்குச் சென்றனர். பொதுவாகப் பெண் கல்வியில் தோத்திர பாடல், வேத வினாவிடை என்பன இடம் பெற்றன.[28] அடிமைகளும் கல்வி கற்க வேண்டும் என்னும் நோக்குடன், இக்காலப்பகுதியில் அவர்களுக்கான கல்வி வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்தனர்.

## 3.4. இலக்கியம்

இக்காலப்பகுதியில் தமிழ், சிங்கள மொழிகளில் இலக்கியங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்தில் சைவ சமயம் சார் இலக்கியங்கள் தோன்றவில்லை. ஆயினும்

25 நடராசா, க. செ., (1982), *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி,* திருமகள் அச்சகம், சுன்னாகம், இலங்கை, பக். 28- 29.

26 கிருஷ்ணராசா, செ., பக். 242- 243.

27 மொத்தாவு, S.A.W., (1969), "ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிலை", *இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழா மலர்- பாகம்- I*, அரசாங்க அச்சகம், கொழும்பு, ப. 353.

28 மேலது, ப. 359.

ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தில் சைவ சமயம் சார் இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன. சோதிடம், வைத்தியம் சார் இலக்கியங்களும் தோற்றம் பெற்றள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. இவற்றுள் அமுதாகாரம், சந்தான தீபிகை போன்ற நூல்கள் முக்கியமானவை. வரலாறு சார் நூல்களுள்யாழ்ப்பாணவைபவமாலைஎன்னும்நூல்இக்காலப்பகுதியில்தோற்றம்பெற்றுள்ளது.[29] அத்துடன் பள்ளு, குறவஞ்சி போன்ற நாடக இலக்கியங்களும் தோற்றம் பெற்றுள்ளன.

## 3.5. பொருளாதாரம்

இவர்கள் சிக்கன பொருளாதார முறையைக் கையாண்டார்கள். இம்முறைப்படி குறைந்த செலவில் நிறைந்த வருமானத்தைப் பெற்றுக் கொண்டார்கள். இவர்கள் இலங்கையில் இருந்து கறுவாவை எடுத்துச் சென்றதுடன், பாக்கு, யானைகள், சிப்பிகள் முதலியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தனர்.[30] ஏற்றுமதி வர்த்தக முறை இக்காலப் பகுதியில் பெரும் வளர்ச்சி கண்டது. கோப்பி, ஏலம், மிளகு, தென்னை போன்றவற்றின் உற்பத்தியை அதிகரித்து பெருந்தோட்ட பயிர்ச் செய்கை முறையையும் உருவாக்கினர். சதுப்பு நிலங்களைத் திருத்தி அவற்றை நெல் நிலங்களாக்கினர். அத்துடன் வரி விதிக்கும் முறையும் காணப்பட்டது. அதில் அதிகளவான இலாபத்தைப் பெற்றுக் கொண்டனர்.[31]

## 4. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வுப் பின்னணி

## 4.1. பிரித்தானியரின் இலங்கைக்கான வருகை. (கி. பி. 1796– 1948)

இலங்கை 1796 இல் ஒல்லாந்தரின் ஆட்சியிலிருந்து விடுபட்டு பிரித்தானியரின் முடியாட்சிக்கு உட்பட்டது. இவர்களின் ஆளுகையின் போதும் இலங்கையில் அரசியல், சமுக, சமய, பண்பாட்டு ரீதியிலும் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. இக்காலத்தில் ஆங்கிலக் கல்வியும் அரச பதவியும் சமுக அந்தஸ்த்தைக் கொடுக்கும் கருவிகளாகத் திகழ்ந்தன. சைவ சமயத்தவரும் கிறிஸ்தவத்திற்கு மாறி, ஆங்கிலம் கற்று அரசப் பதவிகளைப் பெற்று மேலைத்தேய கலாச்சாரத்தில் கவர்ச்சி கொண்டோராய்த் திகழ்ந்தனர்.[32]

## 4.2. சமயம்

இக்காலப்பகுதியில் அனைத்து மக்களுக்கும் 'மதச்சுதந்திரம்' வழங்கப்பட்டது. மக்கள் பகிரங்கமாக வழிபாடுகளை மேற்கொண்டார்கள். 17 ஆம், 18 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்டது போல் 19 ஆம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவ மிஷனரிமார்களின் மதமாற்ற முயற்சிகள் தீவிரமடைந்தது. இக்காலத்தில் கத்தோலிக்க, புரட்டஸ்தாந்து மிஷனரிமார்களுடன் அமெரிக்க, வெஸ்லியன் மிஷனரிமாரும் மதப்பிரச்சார பணிகளில் ஈடுபட்டனர்.[33]

---

29 சிவலிங்கராஜா, எஸ்., பக். 253- 254.

30 கிருஷ்ணராசா, செ., பக். 253- 254.

31 கணபதிப்பிள்ளை, க., பக். 29- 30.

32 இரகுநாதன், ம.,(1997), "ஈழத்து தமிழ் புனைக்கதைகளின் முக்கிய போக்குகள்" *ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு*, தமிழ்த் துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, ப. 02.

33 மௌனகுரு, சி, சித்திரலேகா, மௌ, எங்ஃமான், (1979), *இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்*, சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், பக். 7- 8.

இக்காலக்கட்டத்தில் கிறிஸ்தவ மதம், ஆங்கிலக் கல்வி, உயர் பதவிகள் என்பன ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தன. அதனால் ஆங்கிலக் கல்வி, உயர் பதவிகளை நாடுவோர் கிறிஸ்தவர்களாவது இயல்பாயிற்று. இக்காலத்தில் மிஷனரிமார் உரைநடையைப் பயன்படுத்தி சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் அச்சு கூடங்களை நிறுவி சமய தேவைக்கென பத்திரிகைகள், துண்டு பிரசுரங்கள் முதலியவற்றை வெளியிட்டனர். இவ்வாறு பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலும் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் பன்முகத் துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை பார்க்கலாம்.

## 4.3. கல்வி

கல்வி வளர்ச்சியை நோக்கின் இக்காலப்பகுதியில் ஆங்கிலக் கல்வியே அதிகளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. பிரித்தானியரும் மேலைநாட்டு முறைப்படி பாடசாலைகளையும், கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் அமைத்தனர்.[34] 1834 ஆம் ஆண்டு 'பாடசாலை ஆணைக்குழு' பாடசாலைக் கல்வியை மேற்பார்வை செய்யும் முறையை அறிமுகம் செய்தது. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் அதிகளவு பாடசாலைகள் காணப்பட்டமையால் கல்வி வாய்ப்புக்கள் அதிகமாக தமிழருக்குக் கிடைத்துள்ளன.[35]

அமெரிக்க, மெதடிஸ்த, அங்கிலிக்கன், வெஸ்லியன் மிஷன்கள் இக்காலத்தில் கல்விப் பணியில் ஈடுபட்டனர். அச்சு வசதி, வசனநடை வளர்ச்சி, பத்திரிகைத் தோற்றம் என்பவற்றையும் இக்காலத்தில் பார்க்கலாம். 20 ஆம் நூற்றாண்டில் நாவல், சிறுகதை வளர்ச்சிக்கும் ஏற்ற சூழலை இக்காலம் ஏற்படுத்திக் கொடுத்தது எனலாம்.[36]

கோயில்பற்றுப் பாடசாலைகளில் சுயமொழிக் கல்வியே வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் மேல்நிலைப் பாடசாலைகளும், மிஷனரிப் பாடசாலைகளும் இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்றுள்ளன. ஆங்கிலக் கல்வியைக் கற்பிப்பது, மாணவர்களை அக்கடமிக்கு ஆயத்தம் செய்வதும் இப்பாடசாலைகளின் முக்கிய நோக்கங்களாகும்.

பிரித்தானியரின் ஆட்சி இலங்கையில் நிலவிய காலப்பகுதியில் அமெரிக்க மிஷனின் கல்விப் பணியும் சிறப்புற்றது. இவர்கள் ஆரம்பப் பாடசாலைகளை கிராமங்களில் நிர்வகித்தனர். சாதி, சமய வேறுபாடின்றி அனைவரும் இப்பள்ளிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.[37] இவர்களின் கல்வி முயற்சியில் பெண்கல்வியும் சிறப்பிடம் பெறுகின்றது. 1824 இல் பெண்களுக்கென உடுவில் மகளிர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.[38] இம்மிஷனரிமாரால் தோற்றுவிக்கப்பட்ட இப் பாடசாலையே ஆசியாவில் முதன்முதல் தோன்றிய பெண்கள் விடுதிப் பாடசாலையாகும். இதில் ஏழை மாணவர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டது.

1823 இல் வட்டுக்கோட்டைச் செமினரி ஆரம்பிக்கப்பட்டது. இக் கல்லூரி தமிழ் உரைநடை வளர்ச்சியிலும், பத்திரிகை வளர்ச்சியிலும் தீவிர கவனத்தைச் செலுத்தியது. இக்கல்லூரி தமிழ்மொழியின் சமயச் சார்பினை நீக்கி அதனை மதச் சார்பற்ற மொழியாக்கியது. இச்

34 வெங்கடசாமி, சீனி., (2003), *19ம் நூற்றாண்டு தமிழ் இலக்கியம்*, அன்னை இல்லம், சென்னை, பக். 82- 84.

35 திலகரட்ணம், இ., (2005), "பாரம்பரியம் ஒரு மீள் பார்வை" *கலைமுகம்: கலை இலக்கிய சமூக இதழ்,* திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், பக். 55- 56.

36 மௌனகுரு, சி, சித்திரலேகா, மௌ, எங்ஃமான், பக். 10- 12.

37 ஜெபநேசன், எஸ்., பக். 26- 27.

38 மேலது, ப. 32.

செமினரியில் கற்ற மாணவர்கள் தமிழ் மொழிக்கு தொண்டாற்றினர்.[39] இக்காலப் பகுதியில் அகராதி பணியையும் அமெரிக்கன் மிஷனரிமார் மேற்கொண்டனர். தமிழ் - தமிழ் அகராதிகள், ஆங்கில - தமிழ் அகராதிகளையும் தோற்றுவித்துள்ளனர்.

## 4.4. இலக்கியம்

17 ஆம் நூற்றாண்டு முதலாக ஈழத்தில் நாடகங்கள் சிறப்பிடம் பெறத் தொடங்கின. போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் ஆட்சிக் காலத்தை விடவும் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் சமயத்தின் தாக்கம் இலக்கியத்தில் அதிக இடம் பிடித்திருந்தது.[40]

இக்காலத்தில் உலகியல் சார் இலக்கியங்கள், இலக்கண நூல்கள் தோற்றம் பெற்றுள்ளன. அச்சு இயந்திர சாலைகளும் நிறுவப்பட்டன. இவ் அச்சகங்களின் உதவியுடன் பல நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் வெளியிடப்பட்டன. மேலைத்தேய கல்வி முறை காரணமாக மேலைத்தேய இலக்கியங்களும் தமிழிற்கு வளம் சேர்த்துள்ளன. இக்காலத்தில் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சிலர் ஆங்கில மொழியைப் பயின்று அம்மொழியில் தமிழர் தம் நாகரிகம், பண்பாடு, இலக்கியம் முதலியவற்றை விளக்க முற்பட்டனர்.[41] இவர்களின் காலத்தில் நவீன நாடகமுறை தோற்றம் பெற்றதால் கூத்து பின்தங்கிய நிலையடைந்தது. படித்தவர்கள் கூத்தினை புறக்கணித்தார்கள். இந்நிலையில் நாட்டுக் கூத்தின் இடத்தை நவீன நாடகம் பிடித்தது. இக்காலத்தில் நாடகத்தில் மேலைத்தேய அமைப்பு முறை பின்பற்றப்பட்டுள்ளது.

## 4.5. பொருளாதாரம்

பிரித்தானியருடன் இலங்கையில் வரலாற்றில் புது அத்தியாயம் ஒன்று ஆரம்பிக்கின்றது. அவர்கள் புகுத்திய பொருளாதார அமைப்பினாலும், நவீன நாகரிகத்தினாலும் இலங்கையின் பழைய மரபுகள் மறையத் தொடங்கின. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்தில் இலங்கை முழுவதும் செய்திப் போக்குவரத்துக்கள் பெருகி நாடு முழுவதும் ஒரே நிர்வாக அமைப்பு பெற்றது. மானிய முறைகள் பொருட்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியும், மக்களின் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தியும் இருந்த அனைத்து தடைகளும் நீக்கப்பட்டன. இதன் வழியாக பிரித்தானியர் இலங்கையில் முதலீடு செய்ய வாய்ப்புக் கிடைத்தது. தொழில் முனைவோருக்கு நிலம் மிகுதியாக வழங்கப்பட்டது. கி.பி.1830 ஆம் ஆண்டு முதல் பணப்பயிர்களை விளைவிக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.[42]

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பொருளாதார அமைப்பின் பெருந்தோட்ட பயிர் செய்கை முக்கியத்துவம் பெற்றது. இதனால் நாட்டுக்கு பல நன்மைகள் கிடைத்தன. உள்நாட்டு வர்த்தகமும், வெளிநாட்டு வர்த்தகமும் அதிகரித்தது. தேயிலை, கோப்பி, இறப்பர் போன்றன தோட்டங்களில்

39 மேலது, பக். 36- 43.

40 நடராசா, F. X. C., (1970), *ஈழத்து தமிழ் நூல் வரலாறு,* குமரன் அச்சகம், கொழும்பு, பக். 19- 20.

41 மேலது, பக். 24- 26

42 பாலுசாமி, நா., (1987), *வாழ்வியல் களஞ்சியம் தொகுதி - 4,* தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ப. 285.

பயிரிடப்பட்டன. இத் தோட்டங்களில் வேலை செய்வதற்கு சிங்களவர் விரும்பாததால் இந்தியாவில் இருந்து தமிழ்த் தொழிலாளிகளை இலங்கைக்கு பிரித்தானிய அரசு வரவழைத்தது.[43]

தோட்டத் தொழில் பெருக்கத்தினால் போக்குவரத்து, வங்கி, துறைமுகம் போன்ற துறைகள் வளர்ச்சிக் கண்டன. இக்காலப்பகுதியில் இராசகாரிய முறை, ஏகபோக உரிமை என்பன ஒழிக்கப் பட்டமையால் தனியார்துறை முன்னேறியதுடன் முதலாளித்துவ சமுதாயத்தைத் தோற்றுவித்தது. மானியமுறை நீங்கி புதிய சமுதாயமுறை தோன்றியது.[44] இவ்வாறு பிரித்தானியரின் ஆட்சிக்காலத்தில் இலங்கை தமிழ்ச்சமூகத்தில் ஏற்பட்ட சில மாற்றங்களை நோக்கலாம்.

## முடிவுரை

இவ் ஆய்வில் கிறிஸ்தவத்தின் வருகைக்கு முன் இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வியல் அம்சங்களை ஆய்வு செய்து தெளிவுபடுத்துவதன் மூலம், கிறிஸ்தவத்தின் வருகையின் பின் ஏற்பட்ட மாற்றங்களை தெளிவாக நோக்கக் கூடியதாய் இருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். ஆய்வில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் குறித்த தெளிவான விளக்கங்களும், அவர்களின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் ஏற்படுத்திய மாற்றங்களையும் ஒப்பிட்டு நோக்கக் கூடியதாய் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

கிறிஸ்தவத்தின் வருகையின் பின் இலங்கைத் தமிழ் மக்களிடையே தீவிரம் அடைந்திருந்த சாதிய முரண்பாடுகள் சிறிதளவு தளர்வடைந்தது. இக்காலப்பகுதியில் சாதாரண மக்களுக்கும் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் நாட்டுக்கூத்து, நாடகம் போன்ற இலக்கிய வடிவங்கள் மிஷனரிமாருக்கு சமயம் பரப்பும் நடவடிக்கைகளில் பெரிதும் துணை நின்றன எனலாம். கல்வித்துறையிலும் பாரிய மாற்றங்களை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. குறிப்பாக ஆண், பெண் இருபாலாருக்குமான கல்வி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன. இலக்கியத்தில் செய்யுள் நடை இலக்கியப்போக்கு மாறி, வசனநடை இலக்கியங்கள் தோற்றம் பெற்றமையால் இலக்கியத்தில் இலகுவான போக்கு தோன்றியது.

பொருளாதாரத் துறையை நோக்கின் ஆரம்பத்தில் காணப்பட்ட நிலப்பிரபுத்துவ பொருளாதாரக் கொள்கைகள் கிறிஸ்தவத்தின் வருகையுடன் வர்த்தக பொருளாதாரக் கொள்கைகளாக மாற்றப்பட்டன. இது போன்ற வளர்ச்சி நிலைகள் காணப்பட்டதுடன், சில பாதகங்களையும் நோக்கக்கூடியதாயுள்ளது. இக்காலப்பகுதியில் சமயக் கல்விக்கே அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டமையால் ஏனையதுறைசார் கல்வியில் பாரிய வளர்ச்சிக் காணப்பட்டது என கூற முடியாதுள்ளது. ஐரோப்பியர்களின் குடிவகைகளின் பாவனை சில சமுகச் சீர்கேடுகளை ஏற்படுத்த வாய்ப்பாய் இருந்திருக்கலாம். பொருளாதார துறையில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டதால் வேளாண்மை பாதிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் இது போன்ற

---

43 நாகராஜன், எஸ்., (1989), *அயல் நாடுகளில் தமிழர்*, சர்மாஸ் ஸான்டோரியம் அச்சகம், புதுக்கோட்டை, ப. 48.

44 நாகேந்திரன், ச., (1968), "கோல்புறுக் கமறன் சீர்திருத்தங்கள்", *இளங்கதிர்*, தமிழ் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, ப. 48.

இன்னோரன்ன பாதக நிலைகளும் ஏற்பட்டிருப்பினும் கிறிஸ்தவத்தின் வருகை இலங்கைத் தமிழ் மக்களின் வாழ்வில் பல்வேறு அம்சங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளதென்பது மறுப்பதற்கில்லை.

## உசாத்துணை நூல்கள்


1. இரகுநாதன்.,ம, "யாழ்ப்பாணத்தில் சாதியும் மதமும் ஈழத்து தமிழ் நாவல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு தேடல்", *யாழ்ப்பாணம் மொழியும் வாழ்வும்*, கரிகணண் பிரின்டேர்ஸ், இல 424, காங்கேசன் துறைச்சாலை யாழ்ப்பாணம், 2006.
2. இரகுநாதன், ம., "ஈழத்து தமிழ் புனைக்கதைகளின் முக்கிய போக்குகள்" *ஈழத்து தமிழிலக்கிய வரலாற்றுக் கருத்தரங்கு*, தமிழ்த் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை, 1997.
3. கணபதிப்பிள்ளை, க., *ஈழத்து வாழ்வும் வளமும்,* சித்ரா பிரிண்டேர் கிராபி, மெட்ராஸ், 1962.
4. கந்தவனம், வி., *பொன்விழா மலர் : யாழ் மாநகராட்சி மன்றம்* ( 1949-1999), போஸ்கோ பதிப்பகம், நல்லூர், 2002.
5. கிருஷ்ணராசா, செ., *இலங்கை வரலாறு - பாகம் II*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், யாழ்ப்பாணம், 2002.
6. குலேந்திரன்., *தென்னிந்திய திருச்சபை: யாழ்ப்பாண ஆதினக் கைந்நூல்*, அமெரிக்க சிலோன் மிஷன் பிரஸ், மானிப்பாய், இலங்கை, 1959.
7. குகபாலன், கா., *இலங்கை பழங்குடிகள்* (வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு) பரணன் அசோசியேட்ஸ் பிறைவேட் லிமிடெட், கொழும்பு, 2000.
8. குணராசா, க., *ஈழத்தவர் வரலாறு* (கி. பி 5ம் நூற்றாண்டிலிருந்து கி. பி 1621 ஆம் ஆண்டு வரை), பூபாலசிங்கம் பதிப்பகம், கொழும்பு, 1996.
9. சபா ஜெயராசா, யாழ்ப்பாணத்து மரபு வழிக் கல்வி, போஸ்கோ பதிப்பகம், நல்லூர், 2000.
10. சிவலிங்கராஜா, எஸ்., *ஈழத்து தமிழ் இலக்கிய செல்நெறி,* உயர் கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம், 2001.
11. திலகரட்ணம், "பாரம்பரியம் ஒரு மீள் பார்வை" *கலைமுகம் : கலை இலக்கிய சமுக இதழ்*, திருமறைக் கலாமன்றம், யாழ்ப்பாணம், 2005.
12. தொன் பீற்றர்., "போர்த்துக்கேய மிஷனரிமார் கல்வி துறையில் ஆற்றிய பணி", *இலங்கையில் கல்வி நூற்றாண்டு விழா மலர் - பாகம்- I*, அரசாங்க அச்சகம், கொழும்பு, 1969.
13. நடராசா, க. செ., *ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி,* திருமகள் அச்சகம், சுன்னாகம், இலங்கை, 1982.
14. நடராசா, F. X. C., *ஈழத்து தமிழ் நூல் வரலாறு,* குமரன் அச்சகம், கொழும்பு, 1970.
15. நாகராஜன், எஸ்., *அயல் நாடுகளில் தமிழர்,* சர்மாஸ் ஸான்டோரியம் அச்சகம், புதுக்கோட்டை, 1989.
16. நாகேந்திரன், ச., "கோல்புறுக் கமறன் சீர்திருத்தங்கள்", *இளங்கதிர்,* தமிழ் சங்கம் இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை, 1968.

17. பத்தவத்சல பாரதி, *பண்பாட்டு மானிடவியல்,* மாணிக்கவாசகர் ஆப் செட் பிரிண்டர்ஸ், சென்னை, 1990.

18. புஸ்பரத்தினம், P., *இலங்கையர்கள் பற்றிய கல்வி* (Sri Lankan Studies) வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், 2004.

19. மொத்தாவு, S.A.W., "ஒல்லாந்தர் காலத்தில் கல்வி நிலை", *இலங்கையின் கல்வி நூற்றாண்டு விழா மலர் - பாகம் -I*, அரசாங்க அச்சகம், கொழும்பு, 1969.

20. மௌனகுரு, சி, சித்திரலேகா, மௌ, எங்ஃமான், *இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியம்,* சித்திரா அச்சகம், யாழ்ப்பாணம், 1979.

21. வெங்கடசாமி சீனி., *19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,* அன்னை இல்லம், சென்னை, 2003.

22. வேலுப்பிள்ளை, சி. டி., *அமெரிக்க இலங்கை மிஷன் சரித்திரம்*, திருமகள் அழுத்தகம், சுன்னாகம், 1984.

23. ஜெபநேசன், எஸ்., *அமெரிக்க மிஷனும் இலங்கையில் தமிழ் வளர்ச்சியும்*, திருமகள் பிரஸ், சுன்னாகம், இலங்கை, 1983.

24. ஜெயசீலன், J. E., *யாழ்ப்பாண திருச்சபை வரவாறு*, வளன் ஆச்சிரமம், யாழ்ப்பாணம், 1997.

25. Anton Mathias, (1992), *The Catholic Church in Jaffna*, (1875-1925) Good Shepherd Center , Ealalai, P. 53.

# ஆவணப்படுத்தலின் அத்தியாவசியத்தை அவாவிநிற்கும் உடப்புக் கிராமத்தின் தனித்துவம் மிக்க சித்திரைச் செவ்வாய்ச் சடங்கு நிகழ்ச்சியும் அதன்போது பாடப்படும் பாடல்களும்

தேவகுமாரி சுந்தர்ராஜன்

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தின் தென்மேற்கே, ஒல்லாந்தர் வெட்டுவாய்க்காலுக்கும் இந்து சமுத்திரத்திற்கும் இடையே அமைந்துள்ள ஒரு தமிழ்க் கிராமமே 'உடப்பு'. கொழும்பு நகரத்திலிருந்து கிட்டத்தட்ட எழுபத்திஐந்து கிலோமீற்றர் வடக்கே அமையப்பெற்றுள்ளது. இக்கிராம மக்கள் அண்மைக் காலம் வரை தமக்கெனத் தனியான பாரம் பரிய, பண்பாட்டம்சங்களைக் கொண்டவர்களாக இருந்தனர். இவற்றைப் பிரதிபலிப்பனவாக பல நாட்டாரியற் கூறுகள் இவர்களிடத்தில் பயின்று வருகின்றன. இன்றையகாலச் சூழ்நிலையில் இக்கிராமத்திற்கென்றே தனித்துவமாக விளங்கி வந்த பல அம்சங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுவருவதுடன் பல நாட்டாரியற் கூறுகளும் மறைந்து வருகின்ற தன்மையினையும் காணமுடிகிறது. அந்தவகையில் இக்கிராமத்தின் தொன்மையையும் தனித்துவத்தையும் பறை சாற்றும் ஒரு சமயச்சடங்கு சார்ந்த கும்மி நிகழ்ச்சியாகவே சித்திரைச் செவ்வாயும் அந்நிகழ்வின் போது படிக்கப்படும் பாடல்களும் உள்ளன. இக்கிராமத்தில் மக்கள் குடியேறிய காலத்திலிருந்து இச் சடங்குநிகழ்ச்சி இடம்பெற்று வருகின்றது. இதன்போது பாடப்படும் பாடல்கள் இக்கிராமமக்களின் பூர்வீகம், அவர்களுடைய பாரம்பரியப் பழக்கவழக்கங்கள், சமயநம்பிக்கைகள், வழிபாடுகள் போன்ற இன்னோரன்ன அம்சங்களையும் புலப்படுத்துகின்றன. நவீன நாகரிகத்தின் தாக்கம் காரணமாக அண்மைக்காலமாக இச்சடங்கு நிகழ்ச்சியிலும் அதன்போது பாடப்படும் பாடல் களிலும் பலமாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையினை அவதானிக்க முடிகின்றது. அதுமட்டுமன்றி இக்கிராமத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் தொழில், கல்வி இன்னும் பல்வேறு காரணங் களினால் இக்கிராமத்தைவிட்டு இடம்பெயர்ந்து வேறு இடங்களிலும் குறிப்பாக வேறு நாடுகளில் குடியேறிவருகின்றனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் எதிர்காலத்தில் இச்சடங்குநிகழ்ச்சியும் அதன்போது பாடப்படும் பாடல்களும் முற்றாக மறைந்து போகக்கூடிய சந்தர்ப்பமும் உருவாகலாம். அவ்வாறான வேளையில் இம்மக்கள் தொடர்பான பல தகவல்கள் அவர்களது சந்தியின ரால் மட்டுமன்றி யாராலும் அறிந்துகொள்ள முடியாத அபாயம் ஏற்படும். எனவே இந்நிகழ்ச்சி தொடர்பான தகவல்களும் அதன்போது பாடப்படும் பாடல்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டியமை இன்றியமையாதது. இதனைப் புலப்படுத்துவதாகவே இவ்வாய்வு அமைகின்றது.

இலங்கையின் வடமேற்குக் கரையோரத்திலுள்ள தமிழ்க் கிராமங்கள் அந்நியர் வருகையால் மதம் மாற்றப்பட்ட வேளையிலும்கூட அதிலிருந்து தப்பித்துத் தமது பாரம்பரியக் கலை கலாசாரத்தைப் பேணிவரும் ஒரு தனித்தமிழ்க் கிராமமே உடப்புக் கிராமமாகும். இக்கிராமத்தில் வசிக்கும் மக்களில் 90 சதவீதமான மக்கள் இற்றைக்கு கிட்டத்தட்ட நாநூற்றி இருபது வருடங்களுக்கு முன்பு பல்வேறு காரணங்களினாலும் இந்தியாவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களாக உள்ளனர். இவ்விடப்பெயர்வு விஜயநகர நாயக்கர்காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். அவ்வாறு வந்தவர்கள் கற்பிட்டி வழியாகப் புத்தளம் வந்து அங்கிருந்து முந்தல் வந்து இறுதியாக குடிநீர் வசதி, தொழில் வசதி போன்ற காரணங்களினால் உடப்பிலேயே தங்கிவிட்டனர். இன்றும் இவர்களாற் கட்டப்பட்ட

ஆலயங்கள் கற்பிட்டி, புத்தளம், முந்தல் போன்ற இடங்களில் உள்ளமையும் மேற்குறிப்பிட்ட இடங்களில் இவர்களின் பெயர்களில் பல தென்னந் தோட்டங்களும் உள்ளமையும் இதற்குச் சான்று பகர்கின்றன. மேலும் பாண்டிய மன்னர்களின் படையெடுப்பின்போது வந்த படைவீரர்களிற் பலர் திரும்பிச் செல்லாது இக் கரையோரங்களில் தங்கிவிட்டனர் என்றும் அறியமுடிகின்றது.

இங்குள்ள மக்களின் தொழில்களாக அரசசேவை, வர்த்தகம், மீன்பிடி, இறால்வளர்ப்பு, விவசாயம் போன்றன காணப்படுகின்றன. இக்கிராமத்தில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவம் ஆகிய சமூகங்களைச் சேர்ந்தவர்கள் மிகவும் அன்னியோன்யமாக வாழ்ந்துவருகின்றனர். இம்மதங்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களும் இங்கு காணப்படுகின்றன. இருப்பினும் இந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களே பெரும்பான்மையினராக வாழ்கின்றனர்.

இக்கிராம மக்களுடைய பாரம்பரியமான பண்பாட்டு அம்சங்களையும் சமய நம்பிக்கை களையும் இங்கு காணப்படும் நாட்டாரியற் கூறுகள் நன்கு பிரதிபலிக்கின்றன. அந்தவகையில் இங்கு கிடைக்கப்பெற்ற நாட்டாரியற் கூறுகளில் மிக முக்கிய அம்சமாகிய நாட்டாரிலக்கியங்களை கீழ்வருமாறு வகைப்படுத்தி நோக்கலாம்.

1. பாடல்கள்
2. கதைகள்
3. கதைப்பாடல்கள்
4. விடுகதைகள்
5. பழமொழிகள்

நாட்டார் பாடல்கள் தம் இயல்புக்கேற்ப **வாய்மொழிப்பாடல்கள், பாமரர் பாடல்கள், எழுதாக்கவிதைகள்** எனப் பல்வேறு பெயர்களைப் பெறுகின்றன. இவை நாட்டுப்புறங்களின் பிறப்பு முதல் இறப்பு வரையிலான வாழ்க்கையின் ஒவ்வொரு கட்ட நிகழ்வையும் வெளிப்படுத்து வனவாக உள்ளன. அவர்கள் வாழ்வில் ஏற்படும் இன்பத்தின் குதூகலிப்பையும் துன்பத்தின் அவலத்தையும் இப்பாடல்களின் மூலம் கண்டுகொள்ளலாம். எந்தவிதக் கட்டுப்பாட்டுக்குள்ளும் அடங்காமல் வாய்வழியாக வாழ்ந்துவரும் நாட்டார் பாடல்களை வகைப்படுத்துவதென்பது சற்றுச் சிரமமான காரியமே.

உடப்புக்கிராம நாட்டார் பாடல்களை ஆராய முற்படும்பொழுது அவற்றை கீழ்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. வழிபாடு தொடர்பான பாடல்கள்
2. விளையாட்டுப் பாடல்கள்
3. தொழிற் பாடல்கள்
4. தாலாட்டுப் பாடல்கள்
5. ஒப்பாரிப் பாடல்கள்
6. காதற் பாடல்கள்

இக்கிராமத்தில் வாழும் மக்களில் ஒரு பகுதியினர் இந்தியாவில் இராமநாதபுர மாவட்டத்தில் இராமேஸ்வரத்திலிருந்து இடம்பெயர்ந்து பல இன்னல்களில் மத்தியில் இலங்கையை அடைந்துள்ளனர். அதன் பிறகு மன்னார் தொடக்கம் முந்தல்வரை இவர்களது இடப்பெயர்வும்

குடிப்பெயர்வும் இடம்பெற்றுள்ளன. இவ்வாறு பல துன்பங்களையும் அனுபவித்த இம் மக்களிடம் அவர்களுடைய வழிபாட்டம்சங்கள் ஒவ்வொரு கட்டத்திலும் வலுவடைந்து வந்துள்ளன. அதனால் வழிபாடு தொடர்பான பாடல்கள், கதைப்பாடல்கள் என்பன அதிக செல்வாக்குச் செலுத்துகின்ற நாட்டாரிலக்கியப் பிரிவுகளாக உள்ளன. இவை பெரும்பாலும் மாற்றமின்றியும் திரிபுகளின்றியும் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. இனிவரும் காலங்களிலும் அவ்வாறு எந்தவித மாற்றமுமின்றி வழங்கிவருமென எதிர்பார்க்க முடியாதுள்ளது. இதற்கு ஏதுவாகப் பல்வேறு காரணங்களை அவதானிக்கலாம்.

மாரியம்மன், காளியம்மன், திரௌபதையம்மன் வழிபாடுகள் இக்கிராம மக்களிடத்தில் ஆதியிலிருந்தே முக்கியத்துவம் பெற்றுவரும் கிராமிய வழிபாடுகளாக இருந்துள்ளன, இருந்து வருகின்றன. எனினும் வெளிமாவட்டங்களுடன் ஏற்பட்ட தொடர்புகள் ஏனைய ஆலயக் குருக்களுடன் ஏற்பட்ட தொடர்புகள் என்பன காரணமாக திரௌபதையம்மன் ஆலயம் இன்று ஆகமவிதிப்படி பார்த்தசாரதி சமேத ருக்மணி, சத்தியபாமா ஆலயமாக 108 அடி இராஜ கோபுரத்துடன் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டாரியற் கலைகள், கிராமியத் தெய்வ வழிபாடுகள் போன்றவற்றை பாரம்பரிய முறைப்படி நிகழ்த்தி வந்த பெரியோர்களிற் பலர் மறைந்துவிட அவர்களின் சந்ததியினர் அவற்றில் ஈடுபடுகின்ற நிலை அருகி வருகின்றது. அதற்கு ஏற்கவே குறிப்பிடப்பட்டுள்ளமை போல வெளியுலகத் தொடர்பு, நாகரிகத் தாக்கம், கல்வி, தொழில் போன்ற இன்னோரன்ன அம்சங்கள் காரணங்களாக அமைகின்றன.

உடப்புக்கிராம மக்களது சமய நம்பிக்கையானது ஆகமவிதிப்படி அமைந்த வழிபாட்டம் சங்களை விட கிராமிய வழிபாட்டம்சங்களுக்கே முக்கியத்துவம் கொடுப்பதாக இருக்கின்றது. இவ்வகையில் ஆலயம் சாராத சமயச் சடங்குகளும் இவர்களால் கொண்டாடப்படுகின்றன. "சித்திரைச் செவ்வாய்" என்கிற கும்மி சார்ந்த சடங்கும் மாரியம்மனிடம் வேண்டுதல் செய்தற் பொருட்டு நிகழ்த்தப்பட்டாலும் இது ஆலயம் சாராத ஒரு நிகழ்ச்சியாகவே உள்ளது.

பொதுவாக நோக்குகின்ற பொழுது கும்மியும் அதன்போது பாடப்படும் பாடல்களும் கொண்டாட்டம் சார்ந்தவையாகவே உள்ளன. உடப்புக் கிராமத்தைப் பொறுத்தவரை சமயச் சடங்கு சார்ந்த ஒருவழிபாட்டு நிகழ்வாகவே 'சித்திரைச்செவ்வாய்' சடங்கு நிகழ்ச்சி அமைந்துள்ளது. சமயச் சடங்குகள், சமூக விழாக்கள் என்பவற்றில் கும்மி என்பது கும்மி கொட்டுதல், கொம்மி கொட்டுதல், கொப்பி கொட்டுதல் என இடத்திற்கு இடம் வித்தியாசமான பெயர்களால் அழைக்கப்படுகின்றது. அதுவே உடப்புக் கிராமத்தில் 'சித்திரைச் செவ்வாய்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

அமங்கலிகள் அல்லாத குறிப்பாக இளமையும் துடிதுடிப்பும் வேகமும் நிறைந்த கன்னியர்கள் ஒன்றுகூடி ஒரு பொருளைத் தெய்வமாகப் பாவனை செய்தோ அல்லது மலர்க்கூடை பலகாரத் தட்டு என்பவற்றில் ஒன்றை மத்தியில் வைத்து கைதட்டுதலால் உண்டாகும் ஒலியுடன் கை வளையலும் கால் வளையலும் சேர்ந்தொலிக்க ஒருவர் முன்பாட்டுப் பாட மற்றவர்கள் பின்பாட்டுப் பாடிக்கொண்டு சுற்றிச்சுற்றி வந்து குனிந்து நிமிர்ந்து கைகொட்டி ஆடும் ஆட்டமே கும்மி என்பர். அவ்வேளை பாடப்படும் பாடல்களே கும்மிப் பாடல்களாகும்.

ஒயில்கும்மி போல் சிலவற்றைத் தவிர பெண்களாலேயே சிறப்பாக ஆடப்படுகின்ற இக்கும்மி ஆட்டமானது பெண் தெய்வ வழிபாட்டிலேயே முக்கிய இடம்பெறுகின்றது. பொங்கல், பெண் பருவமெய்திய சடங்கு நிகழ்ச்சி, மாவிளக்கேற்றல், பெண்கள் விரதமிருத்தல், மழை வேண்டல்,

முளைப்பயிரிடல் போன்ற சமய சமூகச் சடங்குகளிலும் கொண்டாட்டங்களிலும் கும்மி கொட்டி ஆடிப்பாடுகின்றனர். உடப்புக் கிராமத்திலும் சித்திரைச்செவ்வாய் நிகழ்வானது பெண்தெய்வ மாகிய மாரியம்மனுக்காக பெண்களாலேயே நிகழ்த்தப்படுவதை அவதானிக்கலாம். எனினும் இச்சடங்கின் போது ஆண்கள் தம்மாலான முழு உதவிகளையும் நல்குவதோடு பெண்கள் கும்மி கொட்டி களைப்படையும் பொழுது அவர்களது களைப்பைப் போக்கும் விதத்தில் அவர்களும் சேர்ந்து கொட்டுவதையும் அவதானிக்கலாம்.

சித்திரைமாதம் பொதுவாக வெப்பம் அதிகமான ஒரு காலப்பகுதியாகும். எனவே அக்காலத்தில் அம்மை போன்ற நோய்களும் வறட்சி போன்றனவும் ஏற்படுவது இயற்கை. ஆனால் ஆரம்ப கால மக்கள் அவற்றைக்கண்டு பயந்து அவையெல்லாம் பெண்தெய்வமாகிய மாரியம்மனால் தான் ஏற்படுகின்றன என்று எண்ணி அவற்றைப் போக்கியருளும்படி அவளிடம் வேண்டும் முகமாக இச்சடங்கினை நிகழ்த்தி வந்துள்ளனர். (மேலும் அவற்றைப் போக்கும் முகமாக ஆலயங்களிலும் பூசை வழிபாடுகள் போன்றவற்றையும் நிகழ்த்தியுள்ளனர்.) அது இக்கிராம மக்களால் இன்றுவரையும் வழிவழியாக நிகழ்த்தப்பட்டு வருகின்றது. இன்றளவும் இக்கிராமத்தில் இந்நோய்கள் குறைவாக உள்ளமைக்கு இச்சடங்கே முக்கிய காரணம் என்ற ஆழமான நம்பிக்கை இங்கு வாழும் மக்களிடம் வேரூன்றி இருப்பதை அறியலாம். எனவே இச்சடங்கில் பாடப்படும் பாடல்கள் யாவும் மாரியம்மனை வேண்டுவதாகவும் அவள் புகழ் பாடுவனவாகவுமே உள்ளன.

இச் "சித்திரைச் செவ்வாய்" சடங்கினை நிகழ்த்துபவர்கள் சித்திரை மாதத்தில் வரும் நல்ல நாளோடு கூடிய ஒரு செவ்வாய்க்கிழமையில் இச்சடங்கிற்கான ஆரம்பத்தினை மேற்கொள்ளுவர். நியமிக்கப்பட்ட நாளிற்கு ஒரு கிழமைக்கு முன்பிருந்தே வீடு, வளவைக் கழுவிப் பெருக்கி சுத்தம் செய்து தினமும் நீராடி மச்சம் மாமிசம் தவிர்த்து விரதமிருப்பர். நியமிக்கப்பட்ட நாள் வந்ததும் அன்றும் வீடு கழுவி வளவெல்லாம் கூட்டிப்பெருக்கித் துப்பரவு செய்து யாவரும் நீராடித் தூய்மையடைவர். பின்பு வீட்டிலுள்ள சுவாமியறையில் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும் மூன்று சுமங்கலிப் பெண்களும் பருவமெய்தாத குறிப்பாகப் பத்துவயதுக் குட்பட்ட பேதைப் பெண்களும் சேர்ந்து சிறு சட்டிகள் (மண்) எடுத்து இதில் நன்கு இடித்துத் தூள் செய்யப்பட்ட சாணத்தை நிரப்பி இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமான முளைப்பதித்தலுக்கான ஒழுங்குகளைச் செய்வர். இச்சடங்கின்போது பாடப்படும் கீழ் வரும் பாடல் இதனை நன்கு விளக்குகின்றது.

" செவ்வாயில் எருவெடுத்து சிவந்த சித்திர கோலமிட்டு!
கோலமிட்டு குலவையிட்டு (குரவையிட்டு)குங்குமத்தால் நீராட்டி!
நீராட்டி துகிலுடுத்தி நீலவர்ண பொட்டுமிட்டு!
பொட்டுடனே பூமணக்க பூமணக்க பளபளக்க"......

முளைப்பதித்த அன்றும் முளைப்பாக்களைச் சுற்றிச் 'செவ்வாய்' (கும்மி) கொட்டும் வேளைகளில் இப்பாடல் பிரதானமாக இடம்பெறும். முளைப்பதிப்பதற்கான நவதானியங்கள் வீடு வீடாகச் சென்றே பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு நவதானியங்களைப் பெறச் சென்றவர்கள் ஒவ்வொருவரது வீட்டு முற்றத்திலும் நின்று கீழ்வரும் பாடலைப் பாடுவர்.

"கடல சிறு பயறு கானம் மணிப் பயறு
தங்க முத்து நாச்சியர்க்கு எங்கும் சிறு பயறு"

இதனைக் கேட்ட வீட்டிலுள்ளவர்கள் தம்மிடமுள்ள நவதானியங்களையோ அல்லது தம்மால் இயன்ற அளவு பணத்தையோ கொடுத்துதவுவர். இவ்வாறு வீட்டு முற்றத்தில் நின்று

பாடப்படும் இப்பாடலானது "நாம் இச் சடங்கினை இன்றிலிருந்து மாரியம்மனுக்கு நிகழ்த்த எண்ணியுள்ளோம். எனவே, ஊரிலுள்ளவர்களாகிய நீங்களும் இதற்கு உதவி செய்து ஒத்துழையுங்கள். அப்பொழுதுதான் ஊரவர்களாகிய எமக்கு அன்னை அருள் பாலிப்பாள்" என்னும் தொனிப்பொருளைக் கொண்டதாக அமைவதை உணரலாம். மேலும் ஊர்மக்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்படும் இச் சமயம்சார் சடங்கு நிகழ்ச்சிக்காக பொது மக்களை எந்தவித நெருக்கடிகளுக்குள்ளும் உள்ளாக்காமல் அவரவரிடத்தில் கிடைக்கக்கூடிய நவதானியங்களைப் பெற்று அதனையே முளையிடப் பயன்படுத்தியுள்ளனர். ஆரம்பகாலங்களில் மக்களுடைய பொருளாதார நிலையும் இதற்குக் காரணமாக அமைந்திருக்கலாம். அத்துடன் இச்சடங்கு நிகழ்ச்சியானது இம்மக்களிடையே சமூக ஒற்றுமையை மேம்படுத்துவதாகவும் அமைகின்றது. ஆனால் இன்று இவ்வாறு வீடுவீடாகச் சென்று பாடி நவதானியங்கள் பெறும் நிகழ்ச்சியைக் காணமுடியாது. இச்சடங்கினை நிகழ்த்துபவர்கள் இச்சடங்கில் கலந்துகொள்ளும் ஒவ்வொருவரிடமுமிருந்து ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்று அதன் மூலம் இச்சடங்கிற்குத் தேவையான செலவுகளைச் செய்கின்றனர். எனவே, நவதானியங்கள் இன்று கடையிலேயே வாங்கப்படுகின்றன. இதன்பின்பு வீட்டில் சுவாமியறையில் விளக்கேற்றி தூபதீபம் காட்டி முன்பு சாணம் நிரப்பி ஒழுங்கு செய்யப்பட்ட சட்டிகளில் மூன்று சுமங்கலிப் பெண்களினதும் வழிகாட்டுதலில் பருவவயதை அடையாத சிறு பெண்கள் நவதானியங்களை முளைக்க வைப்பர். இவ்வாறு நவதானியங்களை முளைக்க வைத்த சட்டிகளை "முழைப்பா" என்பர். அவ்வாறு முளைக்கவைத்த நவதானியங்களுக்கு அச்சிறு பெண்கள் தாம் நீராடி ஈரக்கூந்தலினாலேயே நீர்தெளிப்பர்.

நவதானியங்களை முளைக்கவைத்தலென்பது அனேகமான சமயச் சடங்குகளில் காணபபடுகின்றது. இது பயிர்வளம் சிறக்க வேண்டும், அவ்வாறாயின் நன்கு மழைபெய்ய வேண்டும், அதன்மூலம் கிராமம் சிறக்க வேண்டும், நாடு நலம்பெறவேண்டும் போன்ற உள்ளார்ந்த பல அர்த்தங்களை எமக்குப் புலப்படுத்துகின்றது. எனவே சமூகக் கூட்டுறவைப் பேணும் இச்சடங்கில் சுயநலம் தவிர்த்துப் பொதுநலம் பேணப்படுவதை உணரலாம். அதன் மூலம் இம் மக்கள் உயர்ந்த சிந்தனையுடையவர்களாக வாழ்ந்து வந்துள்ளமை புலனாகின்றது.

இந்தியாவில் இராமநாதபுரத்தில் காணப்படும் முளைப்பாரிச் சடங்கு ஒயிற்கும்மி போன்றவற்றில் இவ்வாறு நவதானியங்கள் முழைக்க வைத்தல் முக்கிய இடம் பெறுகின்றது. முளைப்பாரிச் சடங்கில் நவதானியங்களை முளைக்க வைப்பதற்கு மண்பானையின் அடிப்பகுதி அல்லது பல்வேறு உலோகப் பாத்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இவை இச்சடங்கில் கலந்துகொள்பவர்களின் தரத்தை காட்டுவனவாக அமைகின்றன. ஆனால் சித்திரைச் செவ்வாய்ச் சடங்கில் அவ்வாறு அல்ல. அந்தஸ்து பேதம் தெரியாதபடி மண்சட்டிகளே பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு முளைப்பதித்த நாளிலிருந்து அம்முளைப்பாக்களுக்கு பருவ வயதை எட்டாத அச்சிறு பெண்கள் ஒரு நாள் விட்டு ஒரு நாள் தமது ஈரக்கூந்தலால் நீர்தெளித்து வருவர். முளைக்கவைத்த நவதானியங்களின் மென்மையான முளைகள் உடைந்துவிடாதிருக்கவே கூந்தலால் நீர் தெளித்தனர் போலும். அதற்கான நீரை ஏற்கனவே கோயிற் கிணற்றிலிருந்து கொண்டு வந்து வைத்திருப்பார்கள். ஆனால் இன்று சிறுமிகள் ஈரக்கூந்தலால் நீர்தெளிக்கும் வழக்கமோ ஆலயக் கிணற்றிலிருந்து நீர் எடுத்துக்கொண்டுவரும் வழக்கமோ இல்லை. இவை இன்று மறைந்துவிட்டன.

முளைப்பதியவைத்து மூன்றாவது நாளிலிருந்து நீர்தெளிக்கும் ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் வீட்டின் முற்றத்தில் சிறு நாற்காலியில் சுத்தமான வெள்ளைத்துணி விரித்து அதில் முளைப்பாக்களை வைத்து சிறுமிகளும் பெண்களும் ஒன்றுகூடிப் பாடிக்கொண்டே அம்முளைப்பாக்களைச் சுற்றிச் சுற்றி வந்து கும்மி கொட்டுவார்கள். அவ்வாறு கொட்டும்பொழுது விநாயகர் துதியுடன் ஆரம்பிப்பர். பின்பும் மாரியம்மன் புகழ் பாடும் பலபாடல்களைப் பாடிக்கொண்டே செவ்வாய் (கும்மி) கொட்டுவர். கீழ்வரும் பாடற்பகுதியை உதாரணமாக நோக்கலாம்.

“ஓராம் நாள் முளை எழுந்து ஓங்கி வளருமாம் மாரிமுள(ளை)
ஈராம் நாள் முளை எழுந்து இரட்டணம் கொட்டுமாம் மாரி முள
மூணாம்(மூன்றாம்) நாள் முளை எழுந்துமுத்தம் கொடுக்குமாம் மாரிமுள
நான்காம் நாள் முளை எழுந்து நையாண்டி கொட்டுமாம் மாரிமுள
அஞ்சாம்(ஐந்தாம்) நாள் முளைஎழுந்து கொஞ்சி விளையாடுமாம் மாரிமுள
ஆறாம் நாள் முளை எழுந்து அடுக்கிவிளையாடுமாம் மாரிமுள
ஏழாம் நாள் முளை எழுந்து ஏளனம் செய்யுமாம் மாரிமுள
எட்டாம் நாள் முளை எழுந்து எட்டிப்படருமாம் மாரிமுள
ஒன்பதாம் நாள் முளை எழுந்து ஒய்யாரங்கொட்டுமாம் மாரிமுள
பத்தாம் நாள் முளை எழுந்து பற்றிப்படருமாம் மாரிமுளை”

முதன்முறையாகக் கொட்டும் பொழுது சிறிதுநேரம் கொட்டுவர். தொடர்ந்துவரும் நாட்களில் கொட்டும் நேரத்தை அதிகரித்துக்கொண்டு செல்லுவர். குறிப்பிடப்பட்டுள்ள பாடலில் நவதானியங்கள் முளைக்கவைத்த நாள்முதல் அதன் வளர்ச்சி பற்றிக் கூறப்பட்டுள்ளது. நவதானியங்கள் முளைக்க வைக்கப்படும் பொழுது மிகவும் தூய்மையுடனும் பயபக்தியுடனும் முளைக்க வைக்கப்படவேண்டும், அதேபோல் தூய்மையோடும் பயபக்தியோடும் பராமரிக்கப்பட வேண்டும் இல்லையாயின் அவை நன்கு முளைத்து வளரமாட்டா என்பது கிராமமக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையாகும். அவை நன்கு வளரவில்லையாயின் அம்மனை வேண்டிய திலும் முளைப்பதிய வைத்ததிலும் ஏதோ குறைகள் உள்ளன என்று ஆளுக்காள் கிசுகிசுப்பதை நாம் இன்றும் அவதானிக்கலாம்.

முளைக்க வைத்த நவதானியங்கள் நன்கு வளருமானால் அன்னை எம்மீது அருள்பாலித்துள் ளாள், அவளுடைய அருற்திறமே இவ்வாறு வளர்ந்து பெருகுகின்றது எனக் கூறிக் குதூகலிப்பர். அதுமட்டுமன்றி இவ்வாண்டு மழைவளம் பெருகிப் பயிர்கள் செழித்து வளரும் என்றும் திருமணமாகாத கன்னிப்பெண்களுக்கு நல்ல மணவாளன் கிடைப்பான் என்றும் அதீத நம்பிக்கையுடையவர்களாக இருக்கின்றனர்.

இவ்வாறு ஒருநாள் விட்டு ஒருநாள் முளைப்பாக்களுக்கு நீர்விட்டுப் பராமரிப்பதுடன் அவற்றைச் சுற்றி செவ்வாய் (கும்மி கொட்டுதல்) கொட்டுவர். முன்னைய காலங்களில் ஒரு செவ்வாய்க் கிழமையில் ஆரம்பித்து அடுத்த செவ்வாய்க்கிழமை மாலை இறுதி விழாவுக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதன்கிழமை இறுதிவிழா கொண்டாடப்படும். (ஆனால் இன்று இச்சடங்கு நிகழ்ச்சி பதினொரு நாட்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.) இச்சடங்கு நிகழ்த்தப்படும் வீடுகள் அன்று மாலை வாழை மரங்கள் நாட்டப்பட்டு இளநீர்க்குலைகள் தொங்க விடப்பட்டு மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூணும். இவ்வலங்காரத்தில் வேப்பிலைக் கொப்புகள் முக்கிய இடம் பிடிப்பதனை அவதானிக்கலாம். காரணம் அம்மனுக்கு

மிகவும் உகந்ததாக வேப்பிலை காணப்படுகின்றமையாகும். விஞ்ஞான ரீதியாக நோக்குகின்ற பொழுது வேப்பிலை பல மருத்துவக்குணங்களைக் கொண்டுள்ளமை புலனாகின்றது. அத்துடன் பலவர்ணச் சேலைகளும் இவ்வலங்காரத்திற்குப் பயன்படுத்தப்படும். அலங்கரிக்கப்பட்ட வீட்டு முற்றத்தில் நியமிக்கப்பட்ட இடத்தில் மேடை போன்று அமைத்து அதன்மேல் தூய்மையான வெள்ளைத்துணி விரித்து அதன்மேல் மத்தியில் மாரியம்மனாகப் பாவனை செய்து கும்பமொன்றை வைப்பர். பின்பு அதுவரையும் சிறுபெண்களால் நீர்தெளித்துப் பராமரிக்கப்பட்டு வந்த முளைப்பாக்கள் அன்றும் அவர்களால் நீர்தெளிக்கப்பட்டதன் பிற்பாடு மாரியம்மனாகப் பாவனைசெய்து வைக்கப்பட்டிருக்கும் கும்பத்தைச்சூழ வைக்கப்படும். இந்த மேடையின் நான்கு மூலைகளிலும் ஒவ்வொரு உரல் வைக்கப்பட்டு, அவற்றில் தென்னம்பூ வைக்கப்படும். தனலட்சுமியை வரவேற்பதற்காகத்தான் இவ்வாறு விரிந்த தென்னம்பூ வைக்கப்படுவதாக இம்மக்கள் கூறுகின்றனர். அம்மனுடைய கும்பத்தின் தென்கிழக்கில் மூன்று நான்கு யார் தொலைவில் "செங்கற்பிட்டியர்" எனச் சாணத்தினால் பிள்ளையார் பிடித்து குன்றுமணியால் அலங்கரித்து எருக்கிலையில் வைத்து படையல்செய்து சுமங்கலிப்பெண்கள் அவரைச் சோறு உண்ணும்படிப் பாடி வழிபடுவர். அவ்வம்சமானது இச்சடங்குநிகழ்ச்சியை தொடங்கும்முகமாக நிகழ்த்தப்படும் விநாயக வழிபாடாகக் கொள்ளலாம். இவ்வேளையில் கீழ்வரும் பாடல் பாடப்படுகின்றது.

"யானை வரும் யானை அசைந்து வரும் யானை
பள்ளத்தைக் கண்டால் பதுங்கி வரும் யானை
கும்பத்தைக் கண்டால் குலைந்து வரும் யானை
யானை வந்து இறங்கவே அல்லி அக்கா நடக்கவே
செல்வம் பொலியவே மதுரை கொண்ட ஐயனார்
குதிரையிலே வாரார் மணவாளப் பெண்களெல்லாம்
குறட்டையைத் துறந்து குரவை இடுங்கோ
தஞ்சாவூரிலே சாணி எடுக்கப்போகையிலே
மதுரை கொண்ட ஐயநார் குதிரையிலே வாரார்
மணவாளப் பெண்களெல்லாம் குறட்டையைத் துறந்து
குலவை (குரவையை) இடுங்கோ"

எனப் பாடிக் கொண்டே பிள்ளையாரை உபசரிக்கின்றனர். சிறு பெண்கள் முளைப்பாக்களுக்கு நீர்த்தெளிக்கும் போதும் வாவரசிகள்(வாழ்வரசிகள்) என்று செல்லப்படுகின்ற சுமங்கலிப் பெண்கள் இப்பாடலைப்பாடிக் குரவையிடுகின்றனர். இவற்றின் மூலம் இங்குவாழும் மக்கள் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பிள்ளையார் வழிபாட்டை மறப்பதில்லை என்பதை அறியமுடிகின்றது. அதுமட்டுமன்றி இப்பாடல் இம்மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பதற்குச் சான்று பகர்வதாயும் அமைகின்றது. இந்தியாவில் தமது மூதாதையரால் நிகழ்த்தப்பட்ட சித்திரைச் செவ்வாய்ச் சடங்கினை இம்மக்கள் இங்கு வந்ததன் பிற்பாடும் நிகழ்த்துகின்றார்கள் என்பதையும் அங்கு அச்சடங்கின் போது பாடப்பட்ட பாடல்களையே இங்கு வந்ததன் பிற்பாடும் எந்தவித மாற்றமும்மின்றி இச்சடங்கு நிகழ்ச்சிகளின் போது அப்படியே பாடி வருகின்றனர் என்பதையும் ஊகித்தறியலாம். மேலும் இளங்கன்னியரும் திருமணமான பெண்களும் வீட்டில் வெறுமனே முடங்கிக் கிடந்து பொழுதை வீணே கழித்து நோய்நொடி துன்பங்களைத் தேடிக்கொள்ளாது விரைந்தெழுந்து நீராடி சுறுசுறுப்பாக வந்து இவ்விழாவில்

கலந்து கொண்டு நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். அதுமட்டுமன்றி எப்பொழுதும் அவ்வாறிருக்கப் பழகிக்கொள்ளுங்கள் என்னும் அறிவுறுத்தலையும் கூட இப்பாடலிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளலாம்.

"செங்கற்பிட்டியாரே சோறு தின்னும்
ஆலை இலையிலே சோறு தின்னும்
அத்தி இலையிலையிலே சோறு தின்னும்
புங்க இலையிலே சோறு தின்னும்
புளிய இலையிலே சோறு தின்னும்"

எனப் பாடிக்கொண்டே பிள்ளையாரைச் சோறு தின்னும்படி வேண்டுகின்றனர். இப்பிள்ளையார் வழிபாட்டின் பின்பே முன்பு குறிப்பிட்ட மாரியம்மன் கும்பமும் ஏனைய முளைப்பாக்களும் மேடையில் கொண்டு வந்து வைக்கப்படுகின்றன. இப்பொழுது இம்மேடைக்குப் பதிலாக திருமணத்தின்போது பயன்படுத்தப்படும் 'மணவறை' யும் பயன்படுத்தப்படுகின்றது. இதனை நாம் அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் இடையிலான மக்களுடைய பொருளாதார வேறுபாட்டினைச் சித்திரிக்கின்ற ஓர் அம்சமாகவும் காணலாம் அல்லது நாகரிகத்தின் தாக்கத்தால் ஏற்பட்ட மாற்றமாகவும் காணலாம்.

ஏற்கனவே நாம் பார்த்ததுபோல விழாவுக்கு முதல்நாள் மாலை அந்நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் பெண்களின் வீடுகளில் மட்டுமன்றி கிராமத்திலுள்ள அனைவரது வீடுகளிலும் அரியல் பொரியலுடன் சமைத்து உண்டு மகிழ்வதுடன் அவ்வாறு சமைக்கப்பட்ட உணவினைப் பனையோலைப் பெட்டிகளில் எடுத்துக்கொண்டு சென்று அம்மனுக்காக அமைக்கப்பட்டிருக்கும் மேடையில் அம்மனுக்குப் படையல் செய்வர். அன்றைய காலங்களில் இரவில் சமைக்கப்படும் உணவு அடுத்தநாள் மதியம்வரை பழுதாகாமல் இருப்பதற்காகவும் அந்தஸ்துபேதம் தெரியாது இருப்பதற்காகவும் பனையோலைப் பெட்டிகளைப் பயன்படுத்தினர். இவை இம்மக்கள் சிறந்த பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டவர்களாக இருந்துள்ளார்கள் என்பதைப் புலப்படுத்து கின்றது. இன்றைய காலகட்டத்தில் பனையோலைப் பெட்டிகளுக்குப் பதிலாக வேறு பாத்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். இவை மக்களுக்கு ஆரோக்கிய கோளாறுகளை உண்டு பண்ணுகின்றன. மேலும் அரிசி மாவினால் 'செவ்வாய்' என்னும் விசேட பலகாரம் செய்யப்படு கின்றது. மிகச் சிறிது அதனிலும் சற்றுப் பெரியது அதனிலும் சற்றுப் பெரியது என ஏழுவித மாகச் செய்யப்பட்டு அம்மனுக்குப் படையல் செய்யப்படும். இவ்வாறு எல்லா ஏற்பாடுகளும் நிறைவு பெற மாலை ஆறு, ஏழு மணியாகும். அதன் பிறகு இம் மேடையைச் சுற்றிச் சுற்றி வந்து செவ்வாய் (கும்மி) கொட்டத் தொடங்குவர். முதலில் சிறு பெண்கள் செவ்வாய் கொட்டும்படிப் பணிக்கப்படுவர். பின்பு இச்சிறு பெண்கள் உள்வட்டமாகவும் இளங்கன்னியர் அவர்களுக்கு அடுத்த வெளி வட்டமாகவும் திருமணமான பெண்கள் அதற்கு அடுத்த வெளி வட்டமாகவும் வந்து கும்மி கொட்டுவர். கொட்டுபவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க நிகழ்ச்சி களைகட்டத் தொடங்கும். பெண்கள் கும்மி கொட்டுதலால் உண்டாகும் ஒலியுடன் அவர்களுடைய கால்கொலிசுகளும் கைவளையல்களும் சேர்ந்து இசையமைக்கும். அதனுடன் ஆணாயினும் பெண்ணாயினும் ஒருவர் முன்பாட்டுப்பாடச் செவ்வாய் (கும்மி) கொட்டுபவர்கள் பின்பாட்டுப்பாடுவர். உதாரணமாக ஒரு பாடலில் கீழ்வருமாறு சிலவரிகளை நோக்கலாம்.

"முன் பாட்டாளர் : ஓராம் நாள் கரகமம்மா
பின் பாட்டாளர் : ஆமா, ஆமா

முன் பாட்டாளர் : ஒயிலான மாரிகும்பம்
பின் பாட்டாளர் : ஆமா, ஆமா
முன் பாட்டாளா : ஈராம் நாள் கரகமம்மா
பின் பாட்டாளர் : ஆமா, ஆமா
முன் பாட்டாளர் : ஈஸ்வரியாள் மாரிகும்பம்
பின் பாட்டாளர் : ஆமா, ஆமா
பின் பாட்டாளர் : ஆமா, ஆமா"

இச்சந்தர்ப்பத்தில் இந்நிகழ்வானது பார்ப்பதற்கும் கேட்பதற்கும் மிகவும் ரம்யமானதாகவும் தூப தீப சாம்பிராணி வாசனையுடன் பக்திப்பரவசத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும். இவ்வாறு விடியும்வரை சளைக்காது பயபக்தியோடு செவ்வாய் கொட்டுவர். இவ்வேளையில் இவர்கள் தாமாக இயற்றிய பாடல்களைப் பாடுவதோடு, மாரியம்மன் தாலாட்டு மின்னலொளியாள் குறம், திரௌபதை குறம் போன்றவற்றிலிருந்தும் பொருத்தமான பகுதிகளை எடுத்துத் தமது கிராமச் சூழ்நிலைக்கு எற்றவிதமாக சில மாற்றங்களைச் செய்து பாடுவதும் உண்டு. கீழ்வருமாறு சில உதாரணங்களை நோக்குவோம்.

"கூடையிலே சாம்பல் வாரிக் கூ கூவடி அம்மே
கொள்ளப் போரார் என்கணவர் கூ கூவடி அம்மே
தாடையிலே சாம்பல் வாரிக் கூ கூவடி அம்மே
தலைமயிரைப் பிடித்திழுத்தீர் கூ கூவடி அம்மே"
"வாடியென்றும் போடியென்றும் வழிமறித்து என்னை
வம்பு தும்பு சொல்ல வந்திர் மன்னர்களே போம் போம்
நூற்றொருவர் வீதியிலே வேற்று மைந்தர் உண்டோ
நுட்பமறியாமல் என்னை சொற்பமென்று மதித்தீர்"

இவை குற இலக்கியத்தில் வரும் பாடற்பகுதிகளாகும்.

இச்சடங்கின் போது அதுநாள் வரையும் தூய்மையாக இருந்த மக்கள் இறுதிநாளில் அசைவ உணவுப் பொருட்களையும் படையலில் சேர்த்துக்கொள்ளுவதை அவதானிக்கலாம். இதனை கீழ்வரும் பாடற் பகுதியும் சித்திரிக்கின்றது.

"வெள்ளை விளாம்பழமும் காயோடையும் பூவோடையும்
முட்ட முருங்கக்காய் முகிழ் அழியாக் கத்தரிக்காய்
கத்தரிக்காய் இரண்டு துண்டு கருவாடு மூணு துண்டு"

இச்சடங்கு நிகழ்ச்சியின் இறுதிநாளில் மாரியம்மனுடன் காளியம்மனும் வழிபடப்படுகின்றாள். அதனால்தான் அசைவ உணவும் படைக்கப்படுகின்றது போலும். மாரியம்மன் காளியம்மன் ஆகிய தெய்வங்கள் கிராமியத் தெய்வங்களே. கிராமியத் தெய்வங்களுக்கு அசைவ உணவு படைப்பது அக்கால இயல்பாக இருந்துள்ளமை நோக்கத்தக்கது

ஆரம்பகாலங்களில் இந்நிகழ்வுகளில் கலந்துகொள்ளுபவர்கள் சிறுமிகளாக இருப்பின் ஒரேவித ஒரே நிறமுடைய நீட்டப் பாவாடை சட்டையையும் இளம் பெண்களாக இருப்பின் ஒரேவித ஒரே நிறமுடைய பாவாடை தாவணியையும் பெண்களாயின் ஒரே நிறமுடைய சேலையையும்

தேர்ந்தெடுத்து உடுத்துவர். இது அவர்களிடத்தில் பிரிவினையையோ அந்தஸ்து பேதத்தையோ ஏற்படுத்தவில்லை. அவர்களது சிறந்த பண்பாட்டினைப் பிரதிபலித்தது. ஆனால் இன்று இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் பெண்கள் சிறு சிறு குழுக்களாகப் பிரிந்து விலையுயர்ந்த ஆடைகளைத் தெரிவு செய்கின்றனர். இது அவர்களின் அந்தஸ்து பேதத்தையும் பொருளாதார நிலையையும் சித்திரிப்பதோடு பொருளாதார வசதி குறைந்தவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளாதிருப்பதற்கும் அல்லது அவர்களைக் கடன்பட வைப்பதற்கும் ஏதுவாகின்றது.

இவ்வாறு விடியும்வரை சளைக்காது கும்மி கொட்டுவர். விடிந்தபின்பு கிராம மக்களிற் பலர் நோய்வாய்ப்பட்ட பொழுதோ அல்லது தமக்கு ஏற்பட்ட இக்கட்டான பொழுதுகளிலோ வேண்டிக்கொண்டவாறு நீராடித் தூய்மையாக அங்கு வந்து பொங்கல் செய்து படைத்தோ பூசைத் தட்டுக் கொடுத்தோ தமது வேண்டுதல்களை நிறைவேற்றுவார்கள். காலை ஒன்பது மணியளவில் தீட்சை பெற்ற ஒருவரோ கோயில் அர்ச்சகரோ அம்மனுக்குப் பூசை வழிபாடுகளை நிகழ்த்திய பிறகு இறுதிக் கொட்டுக் கொட்டுவர். அவ்வேளையில் கீழ்வருவன போன்ற பாடற்பகுதிகளைப் பாடுவர்.

“வேதான வேதக்காறியே தெண்டியம்மா!
வேத முக்காடு போட்டு வருவாயே மாரித்தாயி”

இதன் பிறகு சிறுமியர் முளைப்பாக்களைத் தூக்கிக் கொள்ள மாரியம்மன் கும்பம் தூக்குவதாக வேண்டிக்கொண்டவர் மாரியம்மன் கும்பத்தைத் தூக்கிக்கொள்ள எல்லோரும் காளியம்மன் ஆலயத்தை நோக்கிச் செல்லுவர். இடைநடுவில் வரும் கோயில்களின் முன்பாக கும்பம் முளைப்பா என்பவற்றை வைத்து சிறிது நேரம் கும்மிகொட்டி இறைவழிபாடு நிகழ்த்திய பிற்பாடு காளியம்மன் கோயில் முற்றவெளியை அடைவர். இவ்வாறு கிராமத்தின் பலபகுதிகளிலிருந்தும் வரும் எல்லாக் கும்பங்களையும் முளைப்பாக்களையும் ஒருங்கே வைத்து அவற்றைச் சுற்றி எல்லோரும் ஒன்றிணைந்து பெரிய வட்டமாகக் கும்மி கொட்டுவர். அவ்வேளையில் பாடப்படும் பாடல்களின் இனிமையுடன் விதம்விதமான ஆடையாபரணங்களுடன் முல்லை, மல்லிகை, கனகாம்பரம் போன்ற மலர்ச்சரங்களைக் கூந்தலிற் சூடிப் பெண்கள் கும்மி கொட்டும் அழகு கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். பிறகு அவற்றை எடுத்துச் சென்று அருகிலுள்ள கடற்கரையில் வைத்து கும்மி கொட்டி வழிபடுவர். இறுதியாக

“வாடாமல் வசங்கால் வளர்த்தேனம்மா முளையே (முளையை)!
வைகையாற்றின் கரைதனிலே போராயம்மா முளையே!
சிந்தாமல் சிதறாமல் வளர்த்தேனம்மா முளையே!
தீர்த்தயாத்திரை கரைதனிலே போராயம்மா முளையே!”

என்று பாடி இறுதிக்கொட்டுக் கொட்டி யாவற்றையும் எடுத்துச் சென்று கடலிலே விட்டு கடலிலே நீராடிவிட்டு வந்து தாம் அம்மனுக்குப் படைத்த உணவினை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து அனைவரும் அவ்வுணவினை உண்டு மகிழ்வர். மாலையில் ஆலயம் சென்று அர்ச்சனை செய்து வழிபடுவர். இப்பாடலின் மூலமும் இம் மக்களின் பூர்வீகம் இந்தியா என்பது புலனாகின்றது. இங்கு பாடப்படும் பாடல்களை அவதானிக்கும் பொழுது அவற்றில் எழுத்துவழக்குச் சொற்களுடன் பேச்சுவழக்குச் சொற்களும் கலந்து வருவதைக் காணலாம். கடல் சாணி மூணாம் முள வாடாம வசங்காம முட்ட போன்ற பேச்சுவழக்குச் சொற்களை உதாரணங்களாக நோக்கலாம். பாடல்கள் இல்லாது இந்நிகழ்ச்சி இல்லை என்னும் அளவுக்கு இதில் பாடல்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.

அனைத்து விடயங்களையும் தொகுத்து நோக்குகின்ற பொழுது பத்து வருடங்களுக்கு முன்பு இச்சடங்கு நிகழ்ச்சியில் இருந்த சில அம்சங்கள் முற்றாக மறைந்துவிட்டதோடு மேலும் சில அம்சங்களில் மாற்றமேற்பட்டு வருகின்றமையை அறியமுடிகின்றது. அதுமட்டுமன்றி ஆரம்பத்தி லேயே நாம் அவதானித்த இன்னும் பல காரணங்களினாலும் இச்சடங்கு நிகழ்ச்சியும் அதற்குரிய பாடல்களும் இன்னும் சில பல ஆண்டுகளில் முற்றாக அழிந்துவிடக்கூடிய சூழ்நிலையை உருவாக்கலாம். எனவே இம்மக்களின் தொன்மையை பாரம்பரியத்தை பண்பாட்டு விழுமியங்களை நம்பிக்கைகளை பூர்வீகத்தை என இன்னோரன்ன அம்சங்களையும் அவற்றில் ஏற்பட்டுவரும் சிதைவுகளை மாற்றங்களை வெளிப்படுத்துகின்றதும் இலங்கையில் வேறு எந்தப் பாகத்திலும் காணமுடியாத இக்கிராமத்தினரிடம் மட்டுமே காணப்படுகின்றமையினால் தனித்தும் மிக்கதாக அடையாளங் காணப்படுகின்றதுமாகிய இச்சடங்கு நிகழ்ச்சியும் அதன்போது பாடப்படும் பாடல்களும் தேடித் தொகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டுமென்பதை இவ்வாய்வு எமக்கு நன்கு புலப்படுத்துகின்றது.

## சான்றாதாரம்


1. ஆய்வாளர் நேரில் அவதானித்தவை.
2. ஆய்வாளர் விடயமறிந்தவர்களுடன் நேரடியாக உரையாடியதன் மூலம் பெற்றுக் கொண்ட தகவல்கள்.
3. கலைக்களஞ்சியம், 1956, தொகுதி 03, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை.
4. கலைக்களஞ்சியம், 1959, தொகுதி 06, தமிழ் வளர்ச்சிக்கழக வெளியீடு, சென்னை.
5. குணசேகரன் கே.ஏ., 1992, நாட்டுப்புற நடனங்களும் பாடல்களும், சென்னை.
6. கோதண்டராமன், மா., 1995, வடார்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள், சென்னை.
7. கோதண்டராமன், மா., 1995, நாட்டுப்புறவியலும்பண்பாடும், தேன்மழைப்பதிப்பகம், சென்னை.
8. சக்திவேல் சு., 1992 நாட்டாரியல் ஆய்வு
9. சக்திவேல் சு., 1992 நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
10. சாரல்நாடன் 1993 மலையக வாய்மொழி இலக்கியம், தேசிய கலைஇலக்கிய பேரவையுடன் இணைந்து சவுத்ஏசியன் புக்ஸ், சென்னை.
11. சின்னப்பபாரதி கு, 1993, யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.
12. சொக்கலிங்கம், பூசாரிசி., 1929, ஸ்ரீதிரௌபதாதேவி மான்மியம் திருமகள் அச்சகம், சுன்னாகம்.
13. ஷாஜஹான், ஏ.என்.எம்., 1992, புத்தளம் வரலாறும் மரபுகளும், கொழும்பு.
14. பெருமாள், அ.ந., 1987, நாட்டுப்புறவியற் சிந்தனைகள், ஐந்திணைப்பதிப்பகம்.
15. முன்னால் அதிபரும் வில்லிசைக்கலைஞரும் வடமேல்மாகாண கலாசார ஒன்றிய உறுப்பினருமான சோமாஸ்கந்தரிடம் பெற்றுக்கொண்ட தகவல்கள்.
16. மைதிலி வளவன்., 1994 நாட்டுப்புற இலக்கியம், மதுரை.
17. லூர்து, தே., 1990, நாட்டார் வழக்காறுகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
18. வானமாமலை, நா., (தொகுப்பாசிரியர்) 1977, தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள், நியு செஞ்சரி புக் ஹவுஸ், சென்னை.
19. வாழ்வியற் களஞ்சியம், 1992, தொகுதி 12, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
20. Nilakanta Sastri,K.A , 1972, The Pandiyan Kingdom, Swathi Publication, Madras

# ஈழத்தில் திரௌபதை வழிபாட்டின் பரவல் சமூக, பண்பாட்டியல் ஆய்வு

பா. சுமன்

மகாபாரத இதிகாசக் கதை, சங்க இலக்கியம், சிலப்பதிகாரம், பல்லவர் காலப் பக்தி இலக்கியங்கள் என்பவற்றில் பரவலாக கையாளப்பட்டு, பின்னாளில் தமிழ்ச் சூழலுக்கு ஏற்ற கதையாக மாற்றம் பெற்று, தமிழ்ச் சூழலுக்குரிய ஒரு பனுவலாக நிலைபெற்றது. பெருந்தேவனார், வில்லிபுத்தூராழ்வார், நல்லாப்பிள்ளை முதலானோர்களினதும், அவர்களைத் தொடர்ந்தோர் களினதும் முயற்சிகளே அதனைத் தமிழ்ச் சூழலுக்கு உரித்தான பனுவலாக மாற்றியமைத்தது. பொதுவாகக் கூறின், வட இந்தியக் கதை மரபைத் தன்மயப்படுத்திக் கொள்ளும் நிகழ்வொன்று தமிழ்ச் சூழலில் நடந்தேறியுள்ளது எனலாம்.

தமிழ்ச் சூழலுக்கு உரிய கதையாக மாற்றம் பெற்ற பாரதக் கதையின் நிலைப்பினை ஒரு பனுவலாக மாத்திரம் குறுக்கிவிட முடியாதுள்ளது. அது பல நிலைகளில் தமிழ்ச் சூழலில், தமிழ்ப் பண்பாட்டுடன் கலந்து விட்டது. தமிழ்ச் சூழலில் பாரதத்தின் நிலைப்பினைக் கீழ்வருமாறு வகைப்படுத்தலாம் :

1. ஓர் இதிகாசப் பனுவலாக அதன் நிலைபேறு
2. நிகழ்த்து கலைகள் (பிரசங்கம் நிகழ்த்துதல், கூத்துக்கள்)
3. நாட்டார் வழிபாடு (திரௌபதையம்மன், பஞ்ச பாண்டவர்கள், அரவான் வழிபாடு)
4. நாட்டார் இலக்கியங்கள் (உதாரணம் : பாரத அம்மானை)
5. மகாபாரதக் கதைக் கூறுகள் செவ்வியல் மற்றும் புனைவு இலக்கியங்களில் இணைதல்

இவ்வகைப்படுத்தலானது மகாபாரதம் தமிழ்ச் சூழலில் வேரூன்றுவதற்கு அக்கதை, தொன்மக் கதையாடலாகத் தமிழ்ச் சூழலில் வழங்கப்பட்டு, வழிபாடு, நிகழ்த்துகலை, நாட்டார் இலக்கியம் என வெகுசன பண்பாட்டுக் கதை மரபாகப் பயில் நிலையில் விளங்குவதே காரணம் என்பதனையும் வெளிப்படுத்தி நிற்கின்றது.

இவற்றுள் மகாபாரத இதிகாசத்தின் கதாநாயகியாக சித்திரிக்கப்பட்ட திரௌபதையைத் தெய்வ நிலைக்கு ஏற்றி வழிபடும் நிலைமை தமிழகத்திலும் ஈழத்திலும் பரவலாகக் காணப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் செங்கல்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, தென் ஆர்க்காடு, மதுரை, இராமநாதபுரம், வட ஆர்க்காடு முதலான மாவட்டங்களில் திரௌபதைக்கு வழிபாடு இயற்றப்படுகிறது.

ஈழத்தைப் பொறுத்தவரையில் திரௌபதையம்மன் ஆலயங்கள் மட்டக்களப்பு, அம்பாறை, புத்தளம் ஆகிய பிரதேசங்களில் நிலைப்பெற்றுள்ளன. மேற்குறித்த பிரதேசங்களில் நிலைப்பெற்றுள்ள எட்டு ஆலயங்கள் இதுவரை அறியப்பட்டுள்ளன. அவையாவன :

1. மட்டக்களப்பு மாவட்டம்

- ❖ திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ புதுநகர் திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ கற்குடா (மகிழவெட்டுவான்) திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ கல்லடித்தெரு (பாஞ்சாலிபுரம்) திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ மட்டிக்கழி திரௌபதாதேவி ஆலயம்

2. அம்பாறை மாவட்டம்

- ❖ பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

3. புத்தளம் மாவட்டம்

- ❖ முந்தல் திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ உடப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

மேற்படி ஆலயங்களின் வரலாறுகளை மீட்டுருவாக்கம் செய்யும் போது, ஈழத்தில் திரௌபதை வழிபாட்டின் பரவுகையை அடையாளப்படுத்த முடிகிறது. அந்தவகையில், ஈழத்தில் திரௌபதையம்மன் வழிபாட்டின் பரவலானது இருவேறு அடிப்படைகளில் இடம்பெற்றுள்ளமை புலனாகின்றது. அவ்விரு அடிப்படைகளும் கீழ்வருமாறு :

1. இந்தியாவினின்றும் வந்தவர்களால் (இடப்பெயர்ச்சி, யாத்திரை) தோற்றுவிக்கப்பட்டன
2. ஈழத்தில் மேற்குறித்த அடிப்படையில் திரௌபதையம்மன் ஆலயங்கள் நிலைபெற்ற பின்னர், அவ்வாறு நிலைபெற்ற திரௌபதையம்மன் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய பகுதிகளில் அவ்வழிபாடு மேலும் பரவலடைந்தமை

இவற்றுள் இந்தியாவினின்றும் வந்தவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களாக கீழ்வருவன விளங்குகின்றன:

- ❖ முந்தல் திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ உடப்பு திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயம்
- ❖ திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம்

மேற்படி கடத்துகையை நிரூபணம் செய்யக்கூடிய சான்றுகள் பல கிடைக்கின்றன. அவற்றை அடிப்படையாகக் கொண்டு அதன் பரவுகையை அடையாளப்படுத்துவதாகவும் ஈழத்தில் அவ்வழிபாடு நிலைபெற்று, சமூகச் சூழலோடு இணைந்து வளர்ந்தவற்றையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

## பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் இந்தியாவிலிருந்து வந்த ‘தாதன்’ என்பவனால் தோற்றுவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இதனை நிரூபணம் செய்யக்கூடிய சான்றாதாரமாக

எமக்குக் கிடைப்பது 'தாதன் கல்வெட்டு' ஆகும். இந்தக் கல்வெட்டுப் பிரதியானது 1998 ஆம் ஆண்டு F.X.C. நடராஜா பதிப்பித்த 'மட்டக்களப்பு மான்மியம்' எனும் நூலிலும், 2005 ஆம் ஆண்டு வித்துவான் சா.இ.கமலநாதன், திருமதி கமலா கமலநாதன் ஆகியோர் இணைந்து பதிப்பித்த 'மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' என்ற நூலிலும் காணப்படுகின்றது. இந்த இரு நூல்களும் ஏட்டுப் பிரதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. இதனை மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் என்னும் நூலில் அதன் பதிப்பாசிரியர்கள் பின்வருமாறு குறிப்பிடுவதிலிருந்து புரிந்துகொள்ள முடியும் :

"பழைய இலக்கியச் சுவடிகளைத் தேடிச் சேகரிக்கும் பணியிலே நாம் ஈடுபட்டிருந்த போது, மட்டக்களப்பு வரலாறு சம்பந்தமான இரண்டு சுவடிகளும், பல கையெழுத்துப் பிரதிகளும் எமக்குக் கிடைத்தன. இவற்றை ஒப்பிட்டு ஆராய்ந்த போது, பெரும்பாலும் இரண்டு வழியேடுகளையே இவை ஆதாரமாகக் கொண்டிருந்தமை எமக்கு விளங்கியது. இவற்றுள் கல்முனை, பாண்டிருப்பிலிருந்து கிடைத்த இரண்டு ஓலைச் சுவடிகளும், மகிழடித்தீவில் இருந்து கிடைத்த கையெழுத்துப் பிரதியுமே ஓரளவு பிழைகள் குறைந்தவை ஆகவும், விடயங்கள் கூடியனவாகவும் காணப்பட்டன. ஏனைய கையெழுத்துப் பிரதிகள் யாவும், இவற்றுள் ஒன்றினையே படியெடுத்து இருந்தன. எனவே அவற்றை நீக்கி விட்டோம். ஏற்கனவே அச்சுப் பிரதியாக வெளிவந்துள்ள, இலக்கியக் கலாநிதி மகாவித்துவான் அமரர் எவ்.எக்ஸ்.சி.நடராசா அவர்களின் **மட்டக்களப்பு மான்மியம்** என்னும் நூலும் இவைகளில் ஒன்றையே தழுவி அச்சிடப்பட்டது போலத் தென்பட்டதால், எமது ஒப்பீட்டுப் பணிக்கு இதனையும் சேர்த்துக் கொண்டோம்." (கமலநாதன், சா.இ.கமலா கமலநாதன் (ப.ஆ) : 2005 : முன்னுரை).

ஆயினும், தாதன் கல்வெட்டு கல்லில் பொறிக்கப்பட்டிருந்ததா என்பது பற்றி அறியுமாறில்லை. அக்கல்வெட்டுக் குறிக்கும் செய்திகளின் அடிப்படையில் ஆலயத் தோற்றம் தொடர்பான செய்தியினையும் அறியமுடிகின்றது. ஆலயத் தோற்றம் தொடர்பாக அக்கல்வெட்டுக் குறிக்கும் செய்தி பின்வருமாறு :

*எதிர்மன்னசிங்கன் என்பவன் மட்டக்களப்பை ஆட்சி செய்து வந்த வேளை வைணவ மதத்தைப் பரப்பும் நோக்கத்தோடு, பாரதக் கதையை ஏட்டில் வரைந்து எடுத்துக்கொண்டு, காவியுடை தரித்த மண்டலதாரியாய் வில்லில் சிறந்தவனான அருச்சுனன் செய்த தவத்தை இங்குள்ளோருக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு தாதன் என்பவன் இங்கு வந்தான். அவன் முதலில் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமியை தரிசித்து வருகையில் அங்குள்ளோர் இவனைப் பற்றிய செய்தியை எதிர்மன்னசிங்க வன்னியனுக்கு அறியப்படுத்தினர். பின்னர் எதிர்மன்னசிங்க வன்னியன் அவனை வரவழைத்து அவனது ஊர், பெயர், குலம், இங்கு வந்ததன் காரணம் என்பன பற்றி விசாரித்த போது, அவன் தான் கொங்கு நாட்டில் இருந்து வருவதாகவும், தான் கோவேசியர் குலத்தில் பிறந்ததாகவும் கூறி, பின் தான் வங்கம், காலிங்கம், மலையாளம், மத்திபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று பாரதம் என்னும் மதத்தையும் அதன் அருமைகளையும் அங்கு காட்டிவிட்டு, இங்குள்ளோருக்கும் அம்மரபைக் காட்ட வந்துள்ளேன் எனக் கூறியதாகக் குறிக்கப்பட்டுள்ளது.*

மேலும், மன்னனும் இதனைக் கேட்டு மகிழ்ந்து மகாபாரத நிகழ்ச்சியை நிகழ்த்திக் காட்ட கடலருகே வனம் சேர்ந்த ஓர் இடத்தை அவன் விரும்பியபடியே வழங்க, அவன் பாண்டவர்களாக

ஐவரை நிறுத்தி தீ வளர்த்து அதில் பாய்ந்து அம்மரபினை நிகழ்த்திக் காட்டியதாகவும், அவன் வேண்டியதன் நிமித்தம் கோயில் ஒன்றினை மன்னன் எடுப்பித்து வருடாவருடம் அச்சடங்கினை நிகழ்த்தி வந்ததாகவும் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

இக்கல்வெட்டு தவிர்த்து மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் எனும் நூலில், சரித்திர நிகழ்வுகள் சில வசன நடையில் எழுதப்பட்டுள்ளன. அதில் 'எதிர்மன்ன சிங்கன் சரித்திரம்', 'தாதன் வரவு' ஆகிய தலைப்புக்களில் பல செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை குறிப்பிடும் செய்திகளும் மேற்குறித்த செய்தியை விரிவாக விளக்குவதாகவே அமைந்துள்ளன. அவ்வுரைநடைப் பகுதிகள் இங்கு முழுவதுமாகத் தரப்படுகின்றன.

எதிர்மன்ன சிங்கன் சரித்திரம் என்னும் தலைப்பில் "மாருதசேனனுடைய புத்திரன் எதிர்மன்ன சிங்கன் மட்டக்களப்புக்கு அரசுக்கு வந்தபோது, வர்த்தகசாலைகளும், வைத்தியசாலைகளும் மட்டக்களப்பு உன்னாசகிரி, போர்முனை நாடு, மண்முனை, கோறளைநாடு, இவைகளியற்றி வைத்து, முன்னவர்களாலியற்றிய ஏரிகளைச் செப்பனிட்டுக் கழனிகளில் செந்நெல் விளையும்படி செய்வித்துத் தானிய சங்கமொன்று ஏற்படுத்திக் கல்விச் சாலைகள் பல திக்குகளிலுமுண்டாக்கிச் சிவாலயங்களைச் செப்பனிட்டு, ஆறுகாலப் பூசை புரிவித்துத் திக்கதிகாரிகள் வைத்து அரசு புரிந்தான்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (கமலநாதன், சா.இ., கமலா கமலநாதன் (ப.ஆ) : 2005 : ப.43).

அதனை அடுத்து இடம்பெற்றுள்ள 'தாதன் வரவு' எனும் தலைப்பில் கீழ்க்காணுமாறு உரைநடைப் பகுதி தொடர்ந்து செல்கின்றது:

"அவ்வேளை வடநாட்டுக் கொங்கு நகரிலுள்ள தாதன் என்றொருவன் விட்டிணு மதத்தைப் போதிப்பதற்காகத் துபாபர உக முடிவில், அத்தினாபுரியை அரசு செய்த குருகுலத்ததிபரான நாகர் குலத்துத் துரியோதனனாதிகள் பாண்டுவின் குலத்துத் தர்மருக்கும் தம்பிமாருக்கும் செய்த அபராதங்களை, மகாபாரதத்தோடு சேர்த்துப் புலவர்களால் பாடிய இதிகாசத்தை மடலில் வரைந்து எடுத்துக்கொண்டு, காவிக மண்டலதாரியாய் வேடம் பூண்டு, கொங்கு நாடு விட்டு இலங்கை, மட்டக்களப்புக்கு வந்து, நாகர்முனைத் திருக்கோயிலைக் கண்டு தரிசனை செய்து மகாபாரத இதிகாசத்தை அவ்வாலயத்தில் போதித்தனன். அதையறிந்த திக்கதிபரொருவர் எதிர்மன்ன சிங்க நிருபனுக்கு அறிவித்தனர். எதிர்மன்னசிங்க நிருபன் திருக்கோயிலுக்குச் சென்று தாதனைக் கண்டு உம்முடைய குலம், கோத்திரம், நாமம், சுயநாடு இவைகளை அறிவியும் எனக் கூறினன். தாதனும் அரசனை நோக்கி அரசே என்குலம் வசியன். என் நாமம் தாதன். என்னுடைய கோத்திரம் விட்டிணு. என்னுடைய சுய நாடு கோங்கு நகர். நான் பாண்டவர் குலத்துத் தர்மாதிகளுக்கு நாகர் குலத்துத் துரியோதனாதிகள் செய்த தீமைகளைக் காண்பிக்கும்படி வந்தேன் என்று கூறினன். எதிர்மன்ன சிங்க நிருபனும் அதனை அறிவிக்கும்படி தாதனை வேண்டினான்.

தாதனும் அரசனை நோக்கி அரசே, பஞ்சபாண்டவர்களைத் துரியோதனாதிகள் சகுனி என்பவனைத் துணைக்கொண்டு இந்திரப்பிரதித்தத்தை அத்தினாபுரத்தோடு சேர்த்து அரசாளக் கருதி சகோதர உரிமை கொண்டாடி விருந்துக்கழைத்துச் சூதாடி வெற்றி கொண்டு இந்திரப்பிரசித்தத்தை அத்தினாபுரத்தோடு சேர்த்துப் பஞ்சபாண்டவர்களை வனவாசம் போகும்படி

திட்டம் செய்து துரியோதனனுடன் பிறந்தவனாகிய துச்சனன் என்பவன் பாஞ்சாலனுடைய புத்திரி துரோபதியினுடைய உடைத்துகிலை உரியப் பஞ்சபாண்டவர்கள் முன்பாக துரோபதையின் மயிரைப்பிடித்து வந்து துயிலைக் களைய, விதுரன் அதைத் தடுக்க பஞ்சபாண்டவர் தங்கள் இந்தப் பிரசித்த நாட்டை இழந்து காட்டிற் சென்றதும், பின்பு பாண்டவர்கள் துரியோதனாதியரைக் கொன்றதும், அரவானைக் களப்பலி செய்ததும், பார்த்தன் சிவனிடத்தில் பாசுபதம் பெற்றதும், பெற்றபின்பு அக்கினி குளித்து மீண்டு இந்திரப்பிரசித்தம், அத்திபுரம் இவைகளை அரசு செய்ததும் காண்பிக்க வேண்டும். அதற்கு சமுத்திரக் கரையருகும் வடவால் நிறைந்த இடமும் அதற்கு அப்பால் வனமுமிருக்கும் இடத்தில் தான் காண்பிக்க வேண்டும் என்று வேண்டினான்.

அரசனும் சம்மதமுற்றுத் திருக்கோவிலிலிருந்து கடலருகாய் வரும் போது தாதன் வேண்டியபடியிருந்த அந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறு பேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீ வளர்த்து அதிலிறங்கி மீண்டு காட்டினான். அரசனும் மகிழ்ந்து அந்த இடத்தில் ஆலயமுண்டாக்கிப் பாண்டுருப்புமுனை என நாமஞ்சாற்றி அதனைப் பரிபாலிக்க திட்டமும் தீட்டி தமது இருப்பிடம் சென்றான்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது (கமலநாதன், சா.இ., கமலா கமலநாதன் ப.ஆ : 2005 : பக். 43 - 44).

இச்செய்திகள், இவ்வாலயம் இந்தியாவிலிருந்து வந்த தாதனால் மட்டக்களப்பை ஆட்சி செய்த எதிர்மன்னசிங்க வன்னியன் காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது எனத் தெரிவிக்கின்றன.

தாதன் கல்வெட்டு, மட்டக்களப்பு பூர்வ சரித்திரம் ஆகியவை தாதன் கொங்கு நாட்டில் இருந்து வந்தவன் எனக் குறிக்கின்றமை மிகுந்த கவனத்திற்குரியதாகிறது. மேற்படி கொங்கு நாடு இப்போது சேலம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் அடங்கியிருக்கின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட சேலம், கோயம்புத்தூர் மாவட்டங்களில் ஆய்வுகளை நிகழ்த்திய இரா. சீனிவாசன் (சீனிவாசன், இரா. : 1961) அல்ஃஹில்த்பெய்தல் (Hiltebeitel, Alf. : 1988) ஆகியோர் பல திரௌபதையம்மன் ஆலயங்கள் மேற்படி பகுதிகளில் நிலைபெற்றுள்ளமையினை எடுத்துக்காட்டுகின்றனர். எனவே, தாதன் என்பவனும் மேற்படி பகுதியில் நிலவிய திரௌபதை வழிபாட்டை பாண்டிருப்பில் அறிமுகம் செய்திருக்க வாய்ப்புண்டு.

ஆய்வின் பொருட்டு வயது, பால், கல்வி, தொழில் அடிப்படையில் அடுக்கமைவு மாதிரிகளாக திரௌபதையம்மனை வழிபடுவோர் தெரிவுசெய்யப்பட்டு, இவ்வாலயத் தோற்றம் தொடர்பில் வினவப்பட்ட போது, ஒரு சிலர் தோற்றம் தொடர்பில் அறிந்திருக்கவில்லை எனக் குறிப்பிட்டனர். ஆயினும், பெரும்பாலானோர் குறிப்பாக மூத்தோர்கள் இவ்வாலயம் இந்தியாவினின்றும் வருகை தந்த தாதன் என்பவனால் உருவாக்கப்பட்டது என்றே குறிப்பிட்டனர். இத்தோற்றக் கதைக்கு எதிர்மாறான எவ்விதமான கருத்துக்களும் பதிவாகவில்லை. எனவே, மக்களிடத்தில் வாய்மொழி மரபில் வழங்கப்பட்டுவரும் தாதன் தொடர்பிலான கதையும் இவ்வாலயம் இந்தியாவிலிருந்து வந்த தாதன் என்பவனாலேயே தோற்றுவிக்கப்பட்டது என்பதனையே அழுத்தமாகக் குறிப்பிடுகின்றது எனலாம்.

இவ்வாறு தாதனால் தோற்றுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயத்தின் தோற்றக் காலத்தினைத் திட்டவட்டமாகக் குறிப்பிடக்கூடிய சான்றாதாரங்களைக்

காணமுடியாதுள்ளது. எனவேதான், ஆலயத் தோற்றக் காலத்தை அண்ணளவாகவே மதிப்பீடு செய்யவேண்டியுள்ளது. அதனை மதிப்பீடு செய்வதற்கு எமக்குக் கிடைக்கும் சான்றாதாரமாக விளங்குவது 'தாதன் கல்வெட்டு' ஆகும். இந்தக் கல்வெட்டுப் பிரதியானது 'மட்டக்களப்பு மான்மியம்','மட்டக்களப்பு பூர்வ சரித்திரம்' ஆகிய நூல்களில் இடம்பெற்றிருந்தமையும் அவ்விரு நூல்களும் ஏட்டுப் பிரதிகளையே அடிப்படையாகக் கொண்டிருந்தமையும் முன்னர் குறிக்கப்பட்டது.

இவை ஏட்டுப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதனால், அவ்வேட்டுப் பிரதிகள் குறிக்கும் வரிவடிவங்கள், மொழிநடையை அடிப்படையாகக் கொண்டு அவ்வேட்டுப் பிரதியின் காலத்தைக் கணித்து, அதன் மூலம் ஆலயம் தோற்றம் பெற்றிருக்கக்கூடிய கால எல்லையினைத் தீர்மானிக்க முடியாதுள்ளது. காரணம், அவை பல்வேறு காலங்களில் படியெடுக்கப்பட்டிருக்கலாம். எனவே, அவை குறிக்கும் வரிவடிவங்கள், மொழிநடையை அடிப்படையாகக் கொண்டு ஆலயத் தோற்றக் காலத்தை அடையாளப்படுத்த முடியாது. மேலும், இதனை முதன்மை ஏடு எனக் கொண்டாலும், அவ்வேடு ஆலயம் தோற்றம் பெற்ற பல காலங்களுக்குப் பின்னரும் எழுதப்பட்டிருக்கலாம். மேற்காட்டிய பிரச்சினைகள் காணப்படுகின்ற போதிலும், அக்கல்வெட்டு குறிக்கும் செய்திகளின் அடிப்படையில் ஆலயத் தோற்றக் காலத்தினை அண்ணளவாக மதிப்பீடு செய்ய முடிகிறது. அந்தவகையில், எதிர்மன்னசிங்கன் என்பவன் மட்டக்களப்பை ஆட்சி செய்த வேளை இந்தியாவினின்றும் வந்த தாதன் என்பவனால் இவ்வாலயம் தோற்றம் பெற்றதாக அக்கல்வெட்டுப் பகுதி குறிப்பிடுகின்றமை நோக்கத்தக்கது.

மேற்படி கருத்துக்கு வலுச்சேர்ப்பதாகவே மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தில் காணப்படும் 'எதிர்மன்னசிங்கன் சரித்திரம்', 'தாதன் வரவு' ஆகிய தலைப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள செய்திகளும் விளங்குகின்றன.

இந்நிலையில், எதிர்மன்னசிங்க மன்னன் மட்டக்களப்பை ஆண்ட காலப்பகுதியை மட்டக்களப்பு பூர்வ சரித்திரத்தின் கீழ்வரும் பாடலில் இருந்து தெளிந்து கொள்ள முடிகிறது :

"கார் தொலைப் பானென விலங்கைக்
கனகமுடி மன்ன ரெல்லாங் களித்துவாழ்ந்த
சீரிலங்கும் மட்டமெனுங் களப்பு நாட்டைச்
**சிறந்தகலி பிறந்துநாலா யிரத்தறுநூற்று நாற்பதாண்டில்**
பார் செழிக்க முடிபுனைநடதான் தோப்பாவைப்
பண்ட தாக்கிப் பருதிகுலன் பரவணியாய்
தேரனிடம் வலந்திரிந்து செங்கோ லோச்சும்
திறலரசர் மரபனென்னும் எதிர்மன்ன சிங்கன்தானே"
(கமலநாதன், சா.இ., கமலா கமலநாதன் (ப.ஆ) : 2005 : ப. 43).

இதிலிருந்து எதிர்மன்ன சிங்கன் கலியாண்டு 4640 இல் ஆட்சிக்கு வந்தான் என்பது புலனாகின்றது. தற்போதைய ஆண்டின் படி இது கி.பி 1538 ஆம் ஆண்டு ஆகும். அதே நூலில் "எதிர்மன்னசிங்கன் நாற்பத்து நான்கு வருடம் மட்டக்களப்பை அரசு புரிந்து தேகவியோகமாக,

மத்திய நாட்டுக்குக் கீழ் மட்டக்களப்பு இருந்தது'' என்றும் குறிக்கப்பட்டுள்ளது (கமலநாதன், சா.இ., கமலா கமலநாதன் (ப.ஆ) : 2005 : ப. 44). இதிலிருந்து எதிர்மன்னசிங்கன் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்பது புலனாகின்றது. அவ்வாறெனின், அவனது ஆட்சிக்காலம் கி.பி 1538 – 1582 வரையானதாகும்.

இது இவ்வாறிருக்க, எதிர்மன்னசிங்க வன்னியன் காலத்தில் பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் தோற்றுவிக்கப்பட்ட செய்தியைத் தரும் தாதன் கல்வெட்டிலே அக்கோவிலுக்குக் கண்டி மன்னனாகிய விமலதர்மசூரியன் வயல் நிலங்கள், வெள்ளிக் களஞ்சியம் முதலான கொடைகளை வழங்கிய செய்தி குறிக்கப்பட்டுள்ளது. அச்செய்தியைக் குறிக்கும் கல்வெட்டுப்பகுதி பின்வருமாறு :

''மாயவன்றன் கருணைதனை யுண்மையென்று
விமலதருமனெனும் வேந்தன் மனமகிழ்ந்து
கமல விழிக்கண்ணன் கருணைதங்கு மிப்பதிக்கு
வேண்டும் வயல்நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
[1]தூண்டுதும்பிக் கோடுடனே சோதியெழ யீந்து மன்னன்
கண்டி நகர்சென்றார் காசினியோர் தாமறிப்
பண்டுமுறை என்றென்றும் பார்'' (தாதன் கல்வெட்டு : 66 – 72)

இலங்கை வரலாற்றில் முதலாம் விமலதர்மசூரிய மன்னனின் ஆட்சிக் காலம் கி.பி 1594 – 1604 வரையான காலப்பகுதியாகும். இதனடிப்படையில் நோக்கின், பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் விமலதர்மசூரிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் அல்லது அவனது ஆட்சிக் காலத்திற்கு முன்னர் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது புலனாகிறது. எவ்வாறாயினும், இவ்வாலயம் நானூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைமை வாய்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

## உடப்புத் திரௌபதையம்மன் ஆலயம்

உடப்புத் திரௌபதையம்மன் ஆலயமானது, தமிழகத்தின் இராமநாதபுர மாவட்டம் சேதுக்கரை, கரையூர், தனுஷ்கோடி ஆகிய பகுதிகளில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்ந்து வந்து, உடப்பில் வாழ்ந்த மக்களால் தோற்றுவிக்கப்பட்டது எனக் கூறப்படுகிறது. இதனை நிரூபணம் செய்யும் சான்றுகளாக அவர்களது குடிப்பெயர்வு குறித்த செய்திகளும், இப்பிரதேசத்தில் நிலவும் கர்ணபரம்பரைக் கதைகளும், அங்கு வாழ்ந்த முன்னோர்கள் எழுதிவைத்த குறிப்புகளும் விளங்குகின்றன.

உடப்பில் வாழ்ந்த செம்பலிங்க முதலியார் (1871 – 1945) என்பார் எழுதிவைத்த குறிப்புகளில், அங்கு வாழும் மக்கள் எங்கிருந்து வந்தவர்கள் என்பது பற்றியும், அவர்களது குல மரபுகள் பற்றியும், அங்கு நிலைபெற்றுள்ள கோயில்களின் வரலாறுகள் பற்றியும் பல தகவல்கள் உண்டு. அவரது குறிப்பொன்றில் கீழ்க்கண்டவாறு காணப்படுகின்றது :

1 இவ்வரி தூண்டு திகிரி தந்தம் சோதியெழயீந்து மன்னன் என்றே மட்டக்களப்பு மான்மியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

‘‘1664 – துருக்கி ஆட்சியின் போது 16ஆம் நூற்றாண்டில் மதுரை மங்கம்மா ராணிக்கும் ராமநாதபுரம் ராசாவுக்குமிடையே போர் மூண்ட நேரம் மதமாற்றத்திற்குப் பயந்து 18 குடும்பங்கள் 12 வள்ளங்களில் வந்து கற்பிட்டி ஆனவாசல் தொடக்கம் கரையாகுடி வரை குடியிருந்தனர்’’ (வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன் (இ.ஆ) : 1997 : ப. 02).

மேலும், அவரது மகன் சேதுபதி என்பார் எழுதிவைத்துள்ள குறிப்பொன்றில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளமையும் நோக்கத்தக்கது :

‘‘1654 – மொகலாய ஆட்சியின் போது ராமநாதபுரம் பாஸ்கர சேதுபதி மன்னரினதும் அவரின் சிற்றரசனான தொண்டமானின் ஆட்சியின் போது மதமாற்றம் நடைபெற்ற போது ராமேஸ்வரத்தை சேர்ந்த அக்காமடம், தங்கச்சிமடத்தைச் சேர்ந்தோர் மதமாற்றத்திற்கு உட்படலாயினர். சேதுக்கரை, தனுஷ்கோடியைச் சேர்ந்தோர் மதமாற்றத்திற்குட்படாது வெளியேறினார்கள்’’ (வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன் (இ.ஆ) : 1997 : ப. 02).

இவ்விரு குறிப்புக்களையும் ஒருசேர நோக்கும் போது, உடப்பில் வாழும் மக்கள் சேதுக்கரை, தனுஷ்கோடி ஆகிய பகுதிகளில் இருந்து உள்நாட்டுப் போரினாலும், மதமாற்ற நடவடிக்கைகளாலும் இடம்பெயர்ந்து வந்துள்ளனர் என்பதனைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆயினும், இருவரது குறிப்புகளிலும் மக்கள் இடம்பெயர்ந்ததாகக் குறிப்பிடப்படும் ஆண்டுகளில் வேறுபாடு காணப்படுகிறது.

இந்நிலையில், உடப்பில் வாழும் மக்கள் மேற்படி பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதற்குச் சான்று பகர்வனவாக அப்பகுதியில் வழங்கிய முன்னோர்களின் பெயர்களும் காணப்படுகின்றன. இதனை,

‘‘இங்கு வந்த முன்னோர்களது பெயர்கள் ‘சேது’ என்னும் சொல்லை அடியாகக் கொண்டு ‘சேதுராமன்’, ‘சேதுராமாய்’, ‘சேதுராமு’, ‘சேதுபதி’ என்று அமைந்துள்ளது. இவர்கள் சேது அணையைக் காவல் செய்த பரம்பரையில் வந்தவர்களாகக் கருதுகிறார்கள்.’’ என்றும் ‘‘முத்து என்னும் சொல்லை அடியாகக் கொண்டு விளங்கும் ‘அம்மமுத்து’, ‘கமலமுத்து’, ‘முத்துராக்காய்’, ‘முத்துராமாய்’, ‘முத்துவைரன்’, ‘முத்துராமன்’ என்னும் பெயர்களும் சேதுக்கரை, கரையூர் போன்ற கிராமங்களில் நிலவியதாக அறிகிறோம்’’ எனவும் நடராஜா குறிப்பதில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

மேலும் அவர், ‘‘உடப்பில் பல குலத்தவர்கள் வாழ்கின்றார்கள். இங்கு குலங்களை ‘புரம்’ எனக் கூறுவர். இங்கு வழங்கும் அம்பலக்காரர் புரம், அழகப்பர் புரம், சின்னடப்பன் புரம், சின்னாண்டி புரம் போன்ற குலப்பெயர்கள் முன்னைய காலங்களில் சேதுக்கரை, கரையூர்ப் பிரதேசங்களில் காணப்பட்டதாகக் கூறுகின்றனர்’’ எனவும், ‘‘ஆண்டிமுனை பூசாரி குடும்பத்தைச் சேர்ந்த திருக்கணபதி என்பவர் 1950ஆம் ஆண்டளவில் தனது 28ஆவது வயதில் தென்னிந்தியா சென்ற போது சேதுக்கரை, கரையூர்க் கிராமங்களுக்குச் சென்றுள்ளார். ஒருவர் உடப்பில் இருந்து வந்துள்ளார் என்று கேள்விப்பட்டு அவ்வூர்ப் பெரியவர்கள் இவரைக் கண்டு உரையாடி உள்ளனர். தமது முன்னோர்களில் சிலர் இங்கிருந்த உடப்பிற்குச் சென்று குடியேறி உள்ளதாயும்

கூறி உள்ளனர். திருக்கணபதி அவர்கள் சேதுக்கரையில் 'காமண்டிக் கூத்து' ஒன்றையும் பார்த்துள்ளார். அவர்கள் சிவபெருமான் காமனை எரித்த கதையை கூத்தாக ஆடியுள்ளனர். இக்கூத்து உடப்பு காளியம்மன் கோயிலுக்கு அருகில் மடம் இருக்கின்ற இடத்தில் ஆடப்பட்டுள்ளது.'' என்றும் குறிக்கின்றார் (வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன் (இ.ஆ) : 1997 : ப. 02).

மேற்கூறிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது, அவர்கள் சேதுக்கரை, கரையூர் போன்ற கிராமங்களில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் என்பதனைத் துணிய முடிகிறது. செம்பலிங்க முதலியார், சேதுபதி ஆகியோரின் குறிப்புக்களின் வழி, அம்மக்கள் பதினேழாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் இலங்கைக்கு வந்துள்ளனர் எனத் தெரியவருகிறது.

இவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்குமிடத்து, தமிழகத்தில் ஏற்பட்ட மதமாற்றம், உள்நாட்டு போர் என்பனவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழகத்தை விட்டு வெளியேறியுள்ளனர் என்பதனைத் தெளிந்துகொள்ள முடிகிறது. அம்மக்களில் ஒரு குழுவினர் இலங்கையில் உடப்புப் பகுதிக்கு இடம்பெயர்ந்து வந்துள்ளனர். அம்மக்கள் தாம் தமிழகத்தில் உள்ளபோது வழிபட்டு வந்த மாரியம்மன், காளியம்மன், திரௌபதையம்மன் ஆகிய தெய்வங்களையும் இங்கும் வழிபடலாயினர். அதனடிப்படையிலேயே உடப்பிலும் திரௌபதையம்மன் ஆலயம் தோற்றம் பெற்றுள்ளது.

## முந்தல் திரௌபதையம்மன் ஆலயம்

புத்தளம் மாவட்டத்தில் அமைந்துள்ள முந்தல் கிராமத்தில் மிக நீண்ட காலமாக தமிழ் மக்கள் வாழ்ந்து வருவதாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பிற்பட்ட காலத்தில் தமிழகத்திலிருந்து வந்து, புத்தளத்தில் குடியேறிய மக்கள், புத்தளத்தில் மதமாற்ற நடவடிக்கைகள் வெகுவாக மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக முந்தல் பகுதிக்கு குடியேறி, அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுடன் சேர்ந்து வாழத் தலைப்பட்டதாகக் கூறப்படுகிறது.

மேற்படி வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட முந்தல் கிராமத்தில் திரௌபதையம்மன் ஆலயம் ஒன்று நிலைபெற்றுள்ளது. இவ்வாலய தோற்றம் குறித்து வீரசொக்கன் பின்வருமாறு குறிப்பிடுகின்றார் :

''இவ்வாலயத்தின் ஆதிவரலாற்றை ஆராயுமிடத்து முதன் முதலாக இங்கு வாழ்ந்த சைவப் பெருமக்கள் மீனாட்சி அம்மனுக்குக் கோயில் கட்டி வழிபட்டு வந்தனர். பின்பு இந்தியாவில் உள்ள இராமநாதபுரத்திலிருந்து வந்து முந்தலில் குடியேறிய சிதம்பரப் பூசாரியார், நொன்டிப் பூசாரியார் ஆகிய இருவரும் இம்மீனாட்சியம்மன் கோயிலைப் புனருத்தாரணம் செய்து இவ்வூர் மக்களோடு சேர்ந்து விழாவெடுத்து வழிபட்டு வந்தனர். அந்நாளில் புத்தளத்தில் வாழ்ந்த காளிமுத்து பெரியார் என்பவர் புத்தளத்தில் திரௌபதைதேவிக்கு கோயில் கட்டி வழிபட்டு வந்தார். அவரை வறுமை பிடித்துக் கொண்டதால் புத்தளத்தை விட்டு தொழிலுக்காக முந்தலில் குடியேறினர்.

பிற்பகுதியில் கவனிப்பாரற்றுக் கிடந்த முந்தல் மீனாட்சி அம்மன் கோயிலில் இவ்வூர் மக்களின் உதவியுடன் காளிமுத்து பெரியார் திரௌபதை அம்மன் வழிபாட்டை மேலோங்கச் செய்து

திரௌபதி அம்மனுக்கு விழாவெடுத்து வந்தார். இவ்வாறு தோன்றியதே திரௌபதையம்மன் ஆலயமாகும்'' (வீரசொக்கன் : 1997 : ப. 32).

மேற்படிக் கூற்றானது தமிழகத்திலிருந்து புத்தளம் பகுதிக்கு இடம்பெயர்ந்தவர்களால் திரௌபதை வழிபாடு மேற்கொள்ளப்பட்டது என்பதனையும் பின்னர் அவ்வழிபாடு முந்தல் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டது என்பதனையும் குறித்து நிற்கின்றது.

இது இவ்வாறிருக்க, தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்து தற்போது உடப்பில் வாழும் மக்கள் முதலில் தங்கி வாழ்ந்த இடமாக இப்பகுதி விளங்கிய காரணத்தினால், முந்தல் (முந்தல் : முன் தங்கிய இடம்) எனப் பெயர் பெற்றதாகப் பலர் விவாதிக்கின்றனர். இக்கருத்திற்கு மாறாக நடராஜா பின்வருமாறு குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது :

''எந்தக் குழுவினரும் தமது பிரதேசங்களுக்கு தாம் வாழும் போதே பெயரிடுவது வழக்கம். இன்னுமொரு பிரதேசத்தில் குடியேறிய பின் தாம் முன்பு வாழ்ந்த பிரதேசத்திற்கு பெயரிடுவது இல்லை'' (வஸ்தியாம்பிள்ளை சிவலோகதாசன் (இ.ஆ) : 1997 : ப. 02).

எவ்வாறாயினும், முந்தலில் வதியும் மக்களில் பலர் தமிழகத்திலிருந்து வந்தவர்களே என்பதனைப் பலரும் ஏற்றுக் கொள்கின்றனர். இக்கருத்தினையும், ஆலயத் தோற்றம் பற்றி வீரசொக்கன் குறிப்பிடும் கருத்தினையும் நோக்கின், முந்தல் திரௌபதையம்மன் ஆலயம், தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களால் உருவாக்கப்பட்டது என்பதில் கருத்து வேறுபாடில்லை. மேற்குறிப்பிடப்பட்ட கருத்தாக்கங்களின் அடிப்படையில் புத்தளம் பிரதேசத்தில் திரௌபதையம்மன் வழிபாட்டின் பரவுகை தமிழகத்திலிருந்து வந்த மக்களால் ஏற்படுத்தப்பட்டதென்பது புலனாகிறது.

## திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயம்

திருப்பழுகாமம் திரௌபதையம்மன் ஆலயமானது இந்தியாவிலிருந்து கதிர்காமத் தலத்தைத் தரிசிக்க வந்த அடியார் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்டதாகக் நம்பப்படுகிறது. ''சில நூற்றாண்டுகளுக்கு முன் இந்தியாவினின்றும் கதிர்காமம் வந்த வழியில் அடியார் ஒருவர் இக்கிராமத்தில் சில பகல் தங்கியிருந்தார். இக்கிராமத்தில் வாழும் மக்கட்குக் கோயில் இல்லாத குறையைக் கண்ட அவர், தாம் கொண்டு வந்த பாண்டவர் சிலைகளை முறைப்படி ஸ்தாபித்து ஆலயம் எடுத்து வணங்குமாறு மக்களை வேண்டித் தம் பிரயாணத்தைத் தொடர்ந்தார். அவர் சென்ற பின்னர் மக்கள் மண்ணால் ஆலயம் அமைத்து அவர் அறிவுறுத்தியபடி பூசைகளையும் பயபக்தியோடு செய்து வந்தனர்'' என வீ.சி.கந்தையா மட்டக்களப்புச் சைவக் கோயில்கள் எனும் நூலில் குறிப்பிடுவதன் வாயிலாக இவ்வாலயமும் இந்தியாவினின்றும் வந்தோரால் தோற்றுவிக்கப்பட்டது என்பது புலனாகிறது. (கந்தையா, வீ.சி. : 1964 : ப. 320).

இவ்வாறு திரௌபதையம்மன் வழிபாடானது புத்தளம், கிழக்கிலங்கைப் பகுதிகளில் நிலைபெற்றிருக்க, தமிழகத்திலிருந்து பெருந்தோட்டத் துறையில் தொழில்புரிய வரவழைக்கப்பட்டு பெருந்தோட்டப் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவளித் தமிழர்களிடத்தில் அவ்வழிபாட்டு மரபு நிலைகொள்ளாமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதொன்றாகும்.

இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் வதியும் இந்திய வம்சாவளித் தமிழர்கள் தமிழகத்திலிருந்து பெருந்தோட்டத் துறையில் தொழில்புரிய வரவழைக்கப்பட்டவர்கள். அம்மக்கள் தமது சடங்கு முறைகளையும், கலைகளையும், வழிபாட்டு மரபுகளையும், நம்பிக்கைகளையும் தொடர்ந்தும் தாம் வாழும் மலையகப் பகுதிகளிலும் பின்பற்றலாயினர். அம்மக்களிடத்தே வழங்கிவரும் கலைகளில் காமன் கூத்து, பொன்னர் - சங்கர் கூத்து, அருச்சுனன் தபசு என்பன இன்றளவும் பயிலப்பட்டு வரும் கலைகளாகும்.

இவற்றுள் அருச்சுனன் தபசானது, தமிழகத்தில் திரௌபதையம்மன் ஆலயச் சடங்குகளிலும், அது தவிர்த்து பிற கோயில் விழாக்களிலும், சமுதாய விழாக்களிலும் நிகழ்த்தப்படுகின்றது. இப்பின்னணியில் நிகழ்த்தப்படுகின்ற அருச்சுனன் தபசு, தமிழகத்திலிருந்து வருகை தந்த இலங்கை வாழ் மலையகத் தமிழர்களிடத்தே இன்றளவும் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கலையாக வழக்கில் உள்ளது. தமிழகத்திலோ திரௌபதையம்மன் ஆலய சடங்கோடு தொடர்புபட்ட வகையில் பெரும்பாலும் நிகழ்த்தப்பெறுகின்ற அருச்சுனன் தபசு மலையகத் தமிழரிடத்தில் நிலைபெற, அதனோடு இணைந்திருந்த திரௌபதை அம்மன் வழிபாட்டு மரபு மலையகத்தில் நிலைபெறாமைக்கான காரணங்கள் ஆராயப்பட வேண்டியவை.

## நாட்டார் வழிபாடு நிகழ்த்தப்படும் ஆலயங்களில் உப தெய்வமாக திரௌபதை

ஈழத்தில் திரௌபதை அம்மன் வழிபாட்டின் பரம்பல் மேலே எடுத்து விளக்கப்பட்டது. அதனடிப்படையில் ஈழத்தில் நிலைபெற்றுள்ள எட்டு ஆலயங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கும் மேலாக, கிழக்கிலங்கையில் நாட்டார் வழிபாட்டு மரபில் வழிபாடு நிகழ்த்தப்படும் சில ஆலயங்களில் திரௌபதை உப தெய்வமாக நாட்டார் ஒழுகலாற்றில் குறிப்பிடுவதாயின் 'திரௌபதை பந்தல்' அமைக்கப்பட்டு வழிபாடு மேற்கொள்ளப்படுகிறது வணங்கப்படுவதனையும் அவதானிக்க முடிகிறது. எடுத்துக்காட்டாக, மட். புன்னைச்சோலை காளியம்மன் ஆலயம், மட். ஆரையம்பதி பேச்சியம்மன் ஆலயம் போன்றவற்றில் காணப்படும் திரௌபதையம்மன் பந்தல்களைக் குறிப்பிட முடியும்.

## மட். புன்னைச்சோலை காளியம்மன் ஆலயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள புன்னைச்சோலை காளியம்மன் ஆலயத்தில் பிரதான தெய்வமாக காளியம்மன் வணங்கப்பட, பிள்ளையார், ஆஞ்சனேயர், வதனமார், பேச்சியம்மன், காடேறி, நாககன்னி, பெரியதம்பிரான், வீரபத்திரர், நரசிங்க வைரவர், நீலாசோதயன், பிரத்தியங்கிரி காளி, சிங்கநாத வைரவர், கம்பநாச்சி, மாரியம்மன், புள்ளிக்காரன், பத்தினியம்மன், திரௌபதி முதலான தெய்வங்கள் உப தெய்வங்களாக நிலைபெற்று வழிபடப்படுகின்றன. இங்கு உப தெய்வமாகிய நிலைபெற்றுள்ள திரௌபதைக்கும் வருடச் சடங்கின் போது மடை பரவப்பட்டு பூசையும் மேற்கொள்ளப்படுகின்றது.

## மட். ஆரையம்பதி பேச்சியம்மன் ஆலயம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள ஆரையம்பதி பேச்சியம்மன் ஆலயத்தில் பிரதான தெய்வமாக பேச்சியம்மன் நிலைபெற்றிருக்க, கிருஷ்ணர், வைரவர், காத்தவராயரன், நரசிங்கர், திரௌபதை முதலான தெய்வங்கள் உப தெய்வங்களாக நிலைபெற்று வழிபடப்படுகின்றன. உப தெய்வமாகிய திரௌபதைக்கு இங்கும் வருடச் சடங்கின் போது மடை பரவப்பட்டு பூசையும் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனடிப்படையில் நோக்கும்போது, புத்தளம் பகுதியில் நிலைபெற்றுள்ள இரு ஆலயங்களும் தமிழகத்திலிருந்து வந்து குடியேறிய மக்கட் குழுமத்தால் தோற்றுவிக்கப்பட்டனவென்பது தெளிவாகின்றது. இவ்வாறே, கிழக்கிலங்கையில் நிலைபெற்றுள்ள ஆறு திரௌபதையம்மன் ஆலயங்களில் இரு திரௌபதையம்மன் ஆலயங்களின் பரவல் இந்தியாவோடு தொடர்புடையவை என்பதும் ஏனைய நான்கு ஆலயங்களும் இப்பிரதேசத்தில் தோற்றம் பெற்ற திரௌபதையம்மன் ஆலயங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்பட்ட காலத்தில் தோற்றம் பெற்றவை என்பதனையும் வரலாற்றுத் தகவல்கள் நிரூபணம் செய்கின்றன.

ஈழத்தில் திரௌபதை வழிபாடானது தமிழகத்திலிருந்து பரவியிருப்பினும், அது இருவேறு தளங்களினூடு பரவியுள்ளமையினை அவதானிக்க முடிகிறது. அதாவது, புத்தளம் பகுதியில் திரௌபதை வழிபாடானது தமிழகத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களினூடு பரவலடைந்தது. கிழக்கிலங்கையில் பாண்டிருப்புத் திரௌபதையம்மன் ஆலயம் தமிழகத்தினின்றும் வந்த தாதன் என்பவனால் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு இருவேறு பிரதேசங்களிலும் இருவேறு அடிப்படையில் திரௌபதை வழிபாடு பரவியமையே, இரு பிரதேசங்களிலும் நிகழ்த்தப்படும் திரௌபதையம்மன் சடங்கில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் காணப்படக் காரணமாயின. இதனைப் புரிந்துகொள்ள தமிழகம், கிழக்கிலங்கை, புத்தளம் பகுதிகளில் நிகழ்த்தப்படும் திரௌபதையம்மன் சடங்கு தொடர்பிலான நுண்ணாய்வுகள் அவசியமாகின்றன.

ஈழத்தில் திரௌபதை வழிபாடு குறித்த சில ஆய்வுகள் வெளிவந்துள்ளன. ஆயினும், அவை திரௌபதையம்மனின் சடங்காசார நிகழ்த்துதல்களையே அடிப்படையாகக் கொண்டுள்ளன. மாறாக, அவ்வாய்வுகள் ஈழத்திற்குத் திரௌபதை வழிபாடு கடத்தப்பட்ட பின்னணியினை ஆராய்வதாக அமையவில்லை. இந்நிலையில், இவ்வாய்வு மேற்படி வழிபாட்டு மரபின் கடத்துகையை அடையாளப்படுத்துவதாக அமைந்துள்ளது. ஆயினும், மேற்படி கடத்துகையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகள் மேலும் விரிவடையும் சந்தர்ப்பத்தில், ஈழத்தில் திரௌபதை வழிபாட்டை மேற்கொள்ளும் குழுமங்களுடன் தொடர்புபட்ட பல செய்திகள் வெளிவர வாய்ப்புண்டு.

## உசாத்துணை நூற்பட்டியல்


கந்தையா, வீ. சி. (1964) மட்டக்களப்புச் சைவக் கோயில்கள், கொழும்பு: இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கமலநாதன், சா. இ., கமலா கமலநாதன் (ப.ஆ) (2005) மட்டக்களப்பு பூர்வசரித்திரம், கொழும்பு – சென்னை : குமரன் புத்தக இல்லம்.

சிவலோகதாசன், வ. (இ.ஆ) (1997) உடப்பூர் வரலாறும் மரபுகளும், உடப்பு திரௌபதையம்மன் ஆலய இந்து பரிபாலன சபையின் வெளியீடு.

சீனிவாசன், இரா. (1975) சக்தி வழிபாடு, நாகர்கோவில் : ஜெயகுமாரி ஸ்டோர்ஸ்.

நடராசா, F.X.C. (ப.ஆ) (1998) மட்டக்களப்பு மான்மியம், மட்டக்களப்பு : மட்டக்களப்பு கலாசாரப் பேரவையின் வெளியீடு.

மயிலை சீனி. வேங்கடசாமி. (2004) கொங்கு நாடும் துளுநாடும், சென்னை : வசந்தா பதிப்பகம்.

வீரசொக்கன்.உடப்பு ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாற்று நூல், உடப்பு: இளம்தாரகை வட்டம்.

Hiltebeitel, Alf. (1988) **The Cult of Draupadi,** Chicago : The University of Chicago.

# யாழ்ப்பாண மக்களின் பாரம்பரிய உணவு முறைகளும் ஆரோக்கிய வாழ்வும் – மருத்துவ ரீதியான ஆய்வு

விவியன் சத்தியசீசலன்

## அறிமுகவுரை

யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியத்தில் பாரம்பரியமான வைத்திய முறைகள் அவர்களுடைய உணவுப் பழக்கவழக்கங்களிலும், வாழ்க்கை நெறிமுறைகளலும் கணிசமான பங்கினை வகித்துள்ளதை எவரும் மறுப்பதற்கில்லை. ஆங்கில வைத்திய முறைகள் பெரும்பாலும் மக்களை ஈர்த்து கொண்டதை மறுப்பதற்கில்லை. அதேவேளை இயற்கையோடு இணைந்தான பழமை வாய்ந்ததுமான வைத்தியமுறைகளின் பலன்களையும், ஆரோக்கியத்தையும் முற்றாக மக்கள் மறந்துவிடவில்லை.

அதேபோல் கர்ப்பகாலங்கள், பாலூட்டும் காலங்கள், பூப்பெய்தும் காலங்கள், முதியோர் பராயங்கள் போன்றவற்றுள் ஆரோக்கியமான உணவுப்பழக்கவழக்கங்கள் மூலம் அவர்களைப் பராமரித்துள்ளனர். எமது மூதாதையர் கையாண்ட பழக்கவழக்கங்கள் அனைத்தையும் மூடத்தனமானவை என எண்ணுதல் தவறாகும். விஞ்ஞானரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய பழக்கங்களும் அவர்களால் கையாளப்பட்டு உள்ளதை எவரும் மறக்க முடியாது. எமது பாரம்பரிய உணவுப் பழக்கவழக்கவழக்கம், சமூகப்பின்னணி கொண்டதாக அமைவதைக் காணலாம். எந்நாட்டிலும் சமூகத்தின் தேவைகட்கு அமைய அடிப்படையான வளங்கள் உள்ளன. ஆனால் எமது நாட்டில் அண்மைக்காலமாக மேலை நாட்டு கலாசாரம் அவை தொடர்பான விளம்பரங்கள் உயர்வடைந்தமையை காணலாம். இதனால் குழந்தைகள் உட்பட மூத்தோர் வரை சுவையூட்டிய உணவுகட்கு அடிமையாகிவிட்டோம். இந்நிலை தொடருமாயின் நாம் நடுத்தர வயதை அடையும் முன்பே நீண்டகால நோயாளி ஆகி உயிரை பணயம் வைக்கும் நிலை உருவாகும். எனவே நாம் எமது நாட்டின் தட்ப வெட்ப நிலைக்கேற்ப இயற்கையான உணவுமுறைகளைப் பின்பற்றுவோமாயின் மேற்கூறிய பாதக நிலையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். பெரும்பாலும் எமது பாரம்பரிய உணவுகளில் அதிகளவான தானியங்கள், அதாவது சோளம், வரகு, தினை, கம்பு, பாசிப்பயறு ஆகியன முக்கிய இடம் வகித்துள்ளன. அதேபோன்று அதிகளவில் நார்ப் பொருட்கள் அடங்கிய உணவுகளை தினசரி அவர்கள் உணவில் சேர்த்துள்ளார்கள். உதாரணமாக சாமை, குரக்கன், கீரைகள், ஒடியல்மா என்பன அடங்கி உள்ளன.

உணவுகளைத் தயாரிப்பது கூட ஓர் வகையான உடற்பயிற்சி முறையாக பாரம்பரிய முறைகளிலிருந்தது குறிப்பிடத்தக்கது. தற்காலத்தில் பெரும்பாலானவர்கள் செயற்கை உணவுகளை (fast foods, redimate foods) போன்றவற்றை பயன்படுத்துகின்றனர்.

‘‘உடம்பும் இரும்பும் இருக்கக் கெடும் ’’ என்பது அனுபவமொழி. எனவே உடற்பயிற்சி, உடல் உழைப்பு ஆகியன அத்தியாவசியமானதாகும். இதனால் தீராத வியாதிகள் எம்மை அணுகாது இருப்பதோடு நாம் ஆரோக்கியமாக வாழ உடல் உழைப்பு அத்தியாவசியமான ஒன்றாகும்.

உணவுகள் தயாரிக்கும் போது அம்மியில் அரைத்தல், உரலில் இடித்தல், ஆட்டுக்கல்லில் அரைத்தல் என்பன உடற்பயிற்சிகளாகவும் அமைகின்றன. எனவே பாரம்பரிய உணவுகள், தயாரிப்பு முறைகள், வாழ்க்கை நெறிகள் என்பன மருத்துவரீதியில் ஏற்புடையனவே. அடுப்பில் சமைப்பதில் கூட ஆரோக்கியம் உள்ளது. சிலவகை உணவுகளை தயாரிக்க சிலவகையான விறகுகளையும் பயன்படுத்தியுள்ளனர். இதனால் சுற்றாடலும் தூய்மையாக்கப்படுகின்றது.

## பொதுவானநோக்கு

யாழ்ப்பாண மக்களிடையே பாரம்பரிய உணவுமுறைகளை இனம்கண்டு அவற்றினை மருத்துவரீதியாக விளக்கி இன்றைய சமுதாயமும் பயனடையச் செய்தல்.

## பிரத்தியேகநோக்குகள்

- ❖ கர்ப்பகால, பாலூட்டும்கால, பூப்பெய்தும், மூத்தோர் பருவங்களில் பாரம்பரியமானதும் மருத்துவ முக்கியத்துவமுடையதுமான உணவுப்பழக்கங்களை கூடுதலாக பின்பற்றும் பிரதேசங்களை இனம்காணல்.
- ❖ அப்பிரதேசவாசிகளில் பாரம்பரியமான உணவுப்பழக்கங்களை பின்பற்றுவோரை தெரிவுசெய்து அவர்களிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தகவல்களை சேகரித்தல்.
- ❖ கிராமவாசிகளிடமிருந்து பெறப்பட்ட தகவல்களையும் சித்த மருத்துவத்துவ பாடவிதான நூல்களில் குறித்த பருவகாலத்தில் பயன்படுத்துபவற்றையும் இனம்காணல்.
- ❖ பாரம்பரிய உணவுப் பழக்கங்களினை மருத்துவரீதியாக இனம்கண்டுகொள்ளல்.
- ❖ இன்றைய இளைய சந்ததியினரிடையே இவ்வுணவுப் பழக்கங்கள் சம்பந்தமான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை இனம்காணல்.

பாரம்பரிய உணவுமுறைகள் கீழ்வரும் முக்கிய பராயங்களின் கீழ் ஆராயப்படது.

1. பூப்பெய்தும் காலம்
2. கர்ப்ப காலம்
3. பாலூட்டும் காலம்
4. மூத்தோர் பராமரிப்பு

## செய்முறையியல்

எமது யாழ்பல்கலைகழக சித்த மருத்துவக்குணப் பாடப்பிரிவால் நடத்தப்படும் மூலிகைகள் இனம்காணல் பற்றிய வெளிக்கள செயற்திட்டத்தில் கீழ்வரும் பிரதேசங்களில் கீழ்வரும் உணவுப்பழக்கங்களை பின்பற்றும் அனுபவசாலிகள் இனம்காணப்பட்டனர்.

01. இனம்கண்டுகொண்ட பிரதேசங்களாவன

| இலக்கம் | பிரதேசம் |
|---|---|
| 1 | மட்டுவில் |
| 2 | சில்லாலை |
| 3 | துணவி |

| | |
|---|---|
| 4 | புங்குடுதீவு |
| 5 | அல்லாரை |
| 6 | அளவெட்டி |
| 7 | பருத்தித்துறை |
| 8 | உடுப்பிட்டி |

02. மேற்படி 8 பிரதேசங்களிலும் முறையே கர்ப்பகால, பாலூட்டும்கால, பூப்பெய்தும்கால, மூத்தோர் பருவங்களில் பயன்படுத்தும் பாரம்பரிய உணவு முறைகளை கொடுத்தவர்களின் விபரம் எண்ணிக்கையில்.

| இலக்கம் | பிரதேசம் | எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|---|
| | | பூப்பெய்தும்காலம் | கர்ப்பகாலம் | பாலூட்டும்காலம் | மூத்தோர் பருவம் |
| 1 | மட்டுவில் | 3 | 9 | 6 | 2 |
| 2 | சில்லாலை | 1 | 4 | 4 | 1 |
| 3 | துணவி | 1 | 7 | 5 | 2 |
| 4 | புங்குடுதீவு | 2 | 4 | 4 | - |
| 5 | அல்லாரை | - | 4 | 2 | 2 |
| 6 | அளவெட்டி | 3 | 4 | 3 | 2 |
| 7 | பருத்தித்துறை | 3 | 5 | 4 | 1 |
| 8 | உடுப்பிட்டி | 2 | 6 | 4 | - |

மொத்தம் - 100

மேற்படி தகவல்கள் நேரடி கலந்துரையாடலிலும், வினாக்கொத்துக்களில் திரட்டப்பட்டும் பட்டியற்படுத்தப்பட்டது.

தகவல்களைத் திரட்டியதன் அடிப்படையில் மொத்தமாக தகவல் திரட்டிய 100 பேரில் பலர் பாலூட்டும்காலம், கர்ப்பகாலங்களில் உள்ள பாரம்பரிய உணவுப்பழக்கம் பற்றியும், சிலர் பூப்பெய்தும் காலம் பற்றியும் ஒருசிலர் முதியோர் பற்றிய பாரம்பரிய உணவு முறைகளையும் குறிப்பிட்டுள்ளனர்.

மேற்கூறிய விபரங்களிலிருந்து சேகரிக்கப்பட்டவற்றுள் சித்தமருத்துவ பாடவிதான நூல்கள் அடிப்படையிலும், விஞ்ஞானரீதியிலும், மருத்துவரீதியிலும் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான பாரம்பரிய உணவுப்பழக்கங்கள் நிரைப்படுத்தப்படுகின்றன.

## பாரம்பரிய உணவுப்பழக்கங்கள்

### 01. பூப்பெய்தும் காலம்

(1) உட்களி - 1 உளுந்து

2 சிவப்புப் பச்சை அரிசி (உடன்அரிசி)

(2) அடை
(3) நல்லெண்ணெய்
(4) கத்தரிப்பிஞ்சு – நல்லெண்ணெய் பொரியல் (எண்ணெய் கத்தரிக்காய் பிரயோகம்)
(5) வேப்பம் குருத்து பயன்பாடு
(6) பழைய நெல் பயன்பாடு
(7) சீரகம் அவித்த நீர்
(8) இலைப்பிட்டு பயன்பாடு
(9) வேப்பங்குருத்து, மஞ்சள்-1, கத்தரி பிஞ்சு என்பன இடித்த சாற்றுக்கு நல்லெண்ணெய் விட்டு குடிக்கக்கொடுத்தல்.
(10) முட்டையுடன் நல்லெண்ணெய் சேர்த்து கொடுத்தபின் 50 மில்லி வெறும் கோப்பிப்பானம் அருந்தக்கொடுத்தல்.
(11) கத்தரிக்காய் பால்கறியுடன் நல்லெண்ணெய் சேர்த்துக் கொடுத்தல்
(12) வறுத்த உள்ளியுடன் பனங்கட்டி கொடுத்தல் (வலி நீங்க)

**02. கர்ப்பகாலம்**

(1) ஊறுகாய் - நாரத்தை, மாங்காய்
(2) நாரத்தைப்பானம்
(3) இலகு ஆகார இலைக்கஞ்சி பிரயோகம்
(4) எள்ளுப்பாகு பிரயோகம்
(5) பசுவின் உடன் பாலுடன் மிளகு சேர்த்து பயன்படுத்தல்
(6) சிவப்புப் பச்சை அரிசி சேர் பலகாரங்கள்
1. முறுக்கு
2. பால் ரொட்டி
3. பயிற்றம் உருண்டை
4. பருத்திதுறை வடை
(7) கர்ப்ப கால சத்துமா
(8) உள்ளி வெந்தயம் அவித்த நீர்
கர்ப்பகாலத்தில் பயன்படுத்திய உணவுமுறைகள் கர்ப்பவதிக்கு மட்டுமினறி வயிற்றிலுள்ள சிசுவுக்கும் மகப்பேற்றின் பின் தாயின் ஆரோக்கியத்துக்கும், பால்சுரப்பினை அதிகரிப்பதற்கும் உதவிபுரியும்.
கர்ப்பகாலத்திலும், பாலூட்டும்காலத்திலும் பனங்கட்டி சேர் கூழ் பிரயோகம்.
(9) பசுப்பாலுடன் குங்குமப்பூ சேர்த்து பயன்படுத்தல்
(10) காய சரக்குகள் பிரயோகம்
காயம் என்பது சித்தமருத்துவ ரீதியில் பலவிதமாக கூறப்பட்டபோதும் அது கர்ப்பாசயத்தை புண்படாமல் பாதுகாக்கவும் குழந்தை பிறந்தபின்பும் கர்ப்பாசயம் இலகுவில் பழையநிலை அடையவும் உதவும். இது 2 வகைப்படும்.
காயம் 1
காயம் 2
(11) வளைகாப்பு

(12) குழந்தை பிரசவித்தபின் குழந்தையையும், தாயையும் நோய்கிருமிகளில் இருந்து பாதுகாக்கவும், நோய் எதிர்ப்புசக்தியை வழங்கவும், பாற்சுரப்பை அதிகரிக்கவுமான மூலிகைக் குளியல் முறைகள்.

(13) மூலிகை சூப் பிரயோகம்

வடகம் - வேப்பம்பூ, வாழைப்பூ

(14) வெள்ளரிக்காய் தயிர் பச்சடி

(15) பழரச பிரயோகம்

(16) இலைப்பிட்டு (பொருத்துமான்கொடி, விடத்தல்)

பிரசவித்தபின் காய பிரயோகம் பயன்படுத்தும்போது முதல் 5 நாட்கள், பின்பு 5-40 நாட்கள் வரையிலும் மேற்படி பிரயோகம் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

பிரசவத்தின்பின் எல்லோரது கவனமும் சேயின் பக்கம் திரும்பும். ஆனால் எமது பாரம்பரியமுறைகளில் தாய்க்கும் சேய்க்கும் சேர்த்து ஆரோக்கிய முறைகள் பயன்படுத்தியமை தெளிவாக உள்ளது. அவ்வகையில் பிரசவித்த தாய்க்கு கொடுக்கும் காயச்சரக்கு கறிக்கு பயன்படும் சரக்குகள் மூலிகை பட்டை குளியல்முறை தாய்ப்பால் சுரப்பிற்கான மேலதிக மூலிகை உணவு முறைகள். அத்துடன குழந்தை பராமரிப்பில், குழந்தைக்கு பாலுண்ணும்பருவம், பாலும் அன்னம் உண்ணும் பருவம், அன்னம் உண்ணும் பருவம் என தெளிவாக பிரிக்கப்பட்டுள்ளது. அவ்வகையில் பாலுண்ணும்பருவம் முதல் 6 மாதமாகவும், 6-18 மாதம் வரை பாலும் அன்னமும் உண்ணும் பருவமாகவும் கூறி உள்ளனர். அத்துடன் பல் முளைக்கும் போது பல்கொளுக்கட்டை அவிக்கும் பண்பாடு, எண்ணை குளியல், பாற்கஞ்சி பிரயோகம், பொரியரிசிமா, கொத்தமல்லி அவித்த நீர் பிரயோகம் என்பன மேற்கொள்ளப்படுகின்றன.

## 03.மூத்தோர்கால பராமரிப்பு

(1) ஒடியல் பிட்டு

(2) ஒடியல் கூழ்

(3) இலைப்பிட்டு

(4) காய்ப்பிட்டு

(5) புழுக்கொடியல் சேர் சத்துமா

(6) இலைக்கஞ்சி

(7) கொக்கான் பாழைக்களி

(8) கற்றாளை கறி

(9) கற்றாளை சூப்

(10) நுங்கு, பதநீர் பாவனை

(11) பனங்கட்டி கூழ்

(12) பழரசம்

(13) பன்னம்பிட்டுப் பிரயேகம்

ஆகியவை குறிப்பிடப்பட வேண்டியவை.

**[1]** எண்ணெய் கத்தரிக்காய்

செய்முறை :-

¼ கிலோகிராம் பிஞ்சுக் கத்தரிக்காயினை சிறிதாக ஒரே அளலில் எடுத்து முழுதும் வெட்டாமல் நாலுபாகமாக கீறி அரைத்து அதனுடன் சீரகம், உள்ளி, உப்பு, மஞ்சள்தூள் கலவையை உள்ளே வைத்து சிறிதுநேரம் ஊறவிட்டு வானலியில் 4 கரண்டி நல்லெண்ணெய் ஊற்றி கடுகு, உளுத்தம் பருப்பு வெடிக்கு சப்தம் வந்ததும் 25 கிராம் வெட்டிய வெங்காயம், கறிவேப்பிலை போட்டு வதக்கி கத்தரிக்காயையும் போட்டு சிறுதணலில் மூடி வைத்து வதக்கவும்.

**[2]** தீவகப் பிரதேசத்தில் (வேலணை) கடின உழைப்புடையவர்கள் உடல்வலியை போக்கும்முகமாக பன்னம்பிட்டு பிரயோகம் இருந்து வந்துள்ளது

இது நோய் நிவாரணியாக இருந்து வந்துள்ளது.

சிவப்புப் பச்சை அரிசியுடன் பன்னம் இலைகளை கழுவி எடுத்து சிறிதாக அரிந்து சேர்த்து இடித்து அவற்றில் பாதியை பிட்டாக அவிக்கலாம். மிகுதியை கால் வீக்கம், வலி உள்ள இடங்களில் பத்தாக கட்டலாம். இது தாபிதமகற்றியாகவும், வலிநீக்கியாகவும் தொழிற்படும். இதனை wealth of India எனும் நூல் விபரிக்கின்றது.

**[3]** சில்லாலை பிரதேசத்தில் கொக்கான் பாலைக் களி :

சிவப்புப் பச்சை அரிசியுடன் கெக்கான்பாலை இலைகளை கழுவி எடுத்து சிறிதாக அரிந்து இடித்து பின்னர் அதனுள் 3ம் பால் சிறிதளவு உப்பு சேர்த்து களியாக கிண்டி எடுத்துக் கொள்ளப்படும். இது கடின உழைப்பாளிகட்கு ஏற்படும் மென்மையான தசைவலி, இடுப்பு, வயிற்றுவலி என்பவற்றை போக்கும்.

அத்துடன் இது தசைகளை வலுவடைய செய்வதால் வலியை போக்கும். சிவப்புப் பச்சை அரிசியில் போலிக்கமிலம் இருப்பதாலும், உடலுக்குத் தேவையான விற்றமின், கனியுப்புகளும் கிடைக்கின்றது. இரத்தத்தை விருத்தியடையச் செய்யும். கொக்கான்பாலை இலைகட்கு இசிவகற்றி செய்கை உண்டு.

**[4]** ஒடியல்பிட்டு

ஒடியல்மாவினை தயாரித்து அதனை பிட்டு மாவாக பாவிக்கலாம். இதனுடன் கத்தரிக்காய், வெங்காயம், பச்சைமிளகாய் என்பன சேர்த்து வெங்காயத்தை சிறிதாக வெட்டி அவித்து இறக்கி அதனுடன் தேங்காய்ப்பூ கலக்க வேண்டும். பின்னர் அவித்தெடுக்கப்படும்.

**[5]** ஒடியல்கூழ்

ஒடியல் மாவினை எடுத்து நீர்விட்டு கரைத்து தெளிவெடுத்து சிரங்கை அரிசி சேர்த்து கூழாக காய்ச்சி, பழப்புளி நீர் விட்டு கரைத்து செத்தல் மிளகாய், உள்ளி, மிளகு, நற்சீரகம், மல்லி, தேங்காய் சொட்டு தேவையான அளவு கலந்து அரைத்து நீர்புளி கரைசலுடன் முருங்கையிலை இறுதியாக சேர்க்க வேண்டும்.

**[6]** இலைப்பிட்டு

விடத்தல், சிறுகுறிஞ்சா அல்லது பொருத்துமான கொடியிலைகளை சிவப்புப் பச்சை அரிசி மாவுடன் சேர்த்து பிட்டு தயாரிக்கலாம்.

**[7]** தூதுவளை சூப்

வெண்ணை, தூதுவளை, வெங்காயம், தக்காளி, சீரகம், ஓமம், துவரம்பருப்பு, தேங்காய் துருவல், உள்ளி, மல்லி, உப்பு, வெங்காயம்

முதலில் மல்லியை அரைத்து தேங்காய்ப்பால், தூதுவளை என்பவற்றை சேர்த்து வேகவிடவும். பின்னர் ஏனையவற்றை சேர்த்து கிளறி விடவும்.

**[8]** மொசுமொசுட்டை அடை

மொசுமொசுட்டை இலை, மிளகு, வெங்காயம், உப்பு, அரிசி ஊறவைத்து மாவாக்கி மொசுமொசுட்டை இலைகளை வெங்காயம் சேர்த்து அரைத்து உப்பு, மிளகு, சேர்த்து தோசை போல் தயாரிக்கலாம்.

**[9]** எள்ளுப்பாகு

எள்ளு - 1 கிலோ

உழுத்தம்மா -1 சுண்டு

பனங்கட்டி

நற்சீரகம்

எள்ளு, மிளகு, நற்சீரகம், உளுத்தம்மா இவற்றை நன்றாக இடித்து பனங்கட்டியுடனும் சேர்த்து இடித்து எடுக்க வேண்டும்.

**[10]** கருப்பணிக்கஞ்சி

சிவப்புப்பச்சரிசி -1கிலோ

பயறு -2சிரங்கை

வடித்த கருப்பணி - 3போத்தல்

அரிசியை வேகவைத்து பயறு சேர்த்து வெந்து வரும்போது கருப்பணி சேர்த்து வேகவைத்து எடுத்தல்.

**[11]** வேப்பம்பூ வடகம்

பூக்களை சேகரித்து வறுத்து இடித்து பனை வெல்லம் சேர்த்து உண்ணலாம். இது இரத்தத்தை சுத்திகரிக்கும்.

**[12]** வேப்பம்பூ பொடி

வேப்பம்பூ - 1பிடி

செத்தல்மிளகாய் - 8

மிளகு $-\frac{1}{2}$ கரண்டி

உளுந்து – 25 கிராம்
கடலைபருப்பு – 10 கிராம்
உப்பு
பசுநெய் - சிறிதளவு

வேப்பம்பூவினை வறுக்கவும், பின்னர் மிளகாய், மிளகு, கடலைருப்பு, உளுந்து இவைகளை நெய்யில் தனியே வறுக்கவும். மிளகாய், கடலைபருப்பினை பொடியாக்கவும். பின் உளுந்து, மிளகை பொடியாக்கவும். இதனை கலந்து வைத்துகொள்க. பின்னர் சாதத்துடன் சாப்பிடலாம். பூச்சி, பித்தம் அகலும். இரத்தம் சுத்தியாகும்.

**[13]** வரகரிசிக்கஞ்சி

வரகு புழுங்கலரிசி – 50 கிராம்
நீர் - 4 கப்
வெந்தயம் - ¼ தேக்கரண்டி
உள்ளி – 3பல்லு
உப்பு – தேவையான அளவு

வரகு புழுங்கலரிசியை நன்றாக கழுவி, உமி நீக்கி நீரை கொதிக்கவைத்து அதில் சேர்க்கவும். அரிசி அவிந்து வரும்போது வெந்தயம், வெட்டிய உள்ளி என்பவற்றை சேர்த்து அவியவிடவும். அடுப்பிலிருந்து இறக்கும் போது உப்பைச் சேர்க்கவும். முதியோருக்கு சிறந்த இலகுவில் சமிபாடடையக்கூடிய கஞ்சி ஆகும்.

**[14]** சோற்றுக் கற்றாழைக் கறி :

சோற்றுக் கற்றாழை, தேங்காய் ஒரு மூடி, காய்ந்த மிளகாய் 4, கடலைபருப்பு 100 கிராம், மஞ்சள் பொடி, உப்பு, சின்னவெங்காயம், தக்காளி 4, கடுகு, கறிவேப்பிலை, மல்லித்தழை, பசுநெய் 20 கிராம், சோம்பு, மிளகு.

தேங்காயைதுருவி சோம்பு வைத்து அரைக்கவும். வெங்காயத்தை பொடியாக அரியவும். தக்காளியை நீளத்தில் அரியவும். துருவிய ஒரு மூடி தேங்காயை வெந்நீர் விட்டுபிழிந்துவைக்கவும். வாணலியில் நெய்யை ஊற்றி கடுகு. மிளகாய், கிள்ளிபோட்டு, கடலை பருப்பு போட்டு வறுத்து, வதக்கி, வெங்காயம், தக்காளி, கறிவேப்பிலை, மல்லித்தழை போட்டு வதக்கி, மல்லித் தூள், உப்பு, தேங்காய், சோம்பு அரைத்தவிழுது இவற்றைக் கரைத்து, ஊற்றித் தாளிக்கவும். சோற்றுக் கற்றாழையை வெட்டி சுளையாக எடுத்து 7 முறை அலசி, அந்தத் துண்டுகளை போட்டு வேகவிடவும். பத்து நிமிடம் வேகவிட்டு இறக்கவும். மிளகு தூளை துவிக் கிளறவும். தேங்காய்பாலைஊற்றவும்.

இதன் பயன் : உடலுக்கு குளிர்ச்சி, பெண்களின் உடல் உஸ்ணத்தை தணித்து, வெள்ளை நோயைக் குணப்படுத்தும்.

**[15]** வேப்பம் பூ பொடி :

காய்ந்த மல்லி, வேப்பம்பூ ஒருகைப்பிடி, தனியா ஒருகைப்பிடி, மிளகாய் 5, மிளகு அரை ஸ்பூன், பெருவெங்காயம் ஒருதுண்டு, உப்பு.

மேலே கூறியுள்ள பொருட்களை நன்கு காய வைத்து பொடியாக அரைக்கவும்.

இந்தப் பொடியை சாதத்தில் கலந்து நல்லெண்ணை விட்டுப் பிசைந்து சாப்பிட வேண்டும்.
இதன் பயன் : இவ்வாறு சாப்பிட வயிற்றில் உள்ள பூச்சிகள் வெளியேறி குடல் சுத்தமாகும். சர்க்கரை நோய் உள்ளவர்கள் இந்தப் பொடியில் தினமும் ஒரு ஸ்பூன் சாப்பிட்டால் நல்லபலன் கிடைக்கும்.

**[16]** சுண்டைக்காய் வற்றல்

புளிக்காத கெட்டித்தயிர் அரைலீட்டர், சுண்டைக்காய் தேவையானஅளவு, மிளகு 20 கிராம், மஞ்சள் பொடி, உப்புதேவையானஅளவு.

காய்களை முழுதாகக் கழுவி லேசாகத் தட்டி தயிரில் போடவும். மிளகு தூளை போடவும். நன்றாக கலந்து ஒரு பகல், ஒரு இரவு ஊறவிடவும். உப்பை போடவும். மறுநாள் காயப்போடவும். இரவு மறுபடி காய்களை தயிரில் ஊறவிடவும். மறுநாள் காயப்போடவும். நன்றாக கலகலவென்று காய்ந்ததும் பாட்டிலில் வைக்கவும். இக் காய் வற்றலை போட்டு வற்றல் குழம்பு வைக்கவும், வறுத்து மோர் சாதம், தண்ணீர் சாதம் இவற்றுக்கு தொட்டுச் சாப்பிடலாம். வற்றலை பொடியாகச் செய்து நெய் விட்டு சூடான சாதத்தில் போட்டுச் சாப்பிடலாம்.

இதன் பயன் : வறட்டிருமல், சுரம், வயிற்றில் உள்ளபூச்சிகள், ஆஸ்துமா குணமாகும். பிரசவமான பெண்ணுக்கு இது ஒரு பத்தியக் குழம்பு.

**[17]**முருங்கைப் பிஞ்சு சூப்

முருங்கைப் பிஞ்சு 30, தக்காளி 4, எலுமிச்சைபழம் 2, மஞ்சள் பொடி ஒரு ஸ்பூன், சீரகம், கடுகு ஒரு ஸ்பூன், தேங்காய் கீற்று 1, துவரம் பருப்பு 100 கிராம், கடலைப்பருப்பு ஒரு ஸ்பூன்,பசும்நெய் 20 கிராம், கறிவேப்பிலை, மல்லித்தழை, உப்பு, பூண்டு 8 பல், காய்ந்தமிளகாய் 4.

முருங்கைப் பிஞ்சுகளை விரல் நீளத்தில் அரிந்து, தண்ணீர் அளவாக வைத்து வேகவிடவும். பிஞ்சுகள் வெந்த தண்ணீரை ஆறவைத்து அதில் சீரகம், மிளகு, பூண்டு, கறிவேப்பிலை, மல்லித்தழை இவைகளை வைத்து அம்மியில் ஒன்றிரண்டாக உடைக்கவும். கடலைப் பருப்பை நெய்யில் வறுத்து கடுகை போட்டு வெடித்ததும் மிளகாயைக் கிள்ளிப் போடவும். பிஞ்சுகள் வெந்த தண்ணீரை ஊற்றி ரசம் தாளிக்கவும். உப்பைப் போடவும். எலுமிச்சைச் சாற்றை ஊற்றவும். தக்காளியை நீளத்தில் அரிந்து வாணலியில் போட்டு வதக்கி ரசத்தை ஊற்ற வேண்டும். துவரம் பருப்பை வேக வைத்து கடையவும், தேங்காயை மசிய அரைத்து பருப்பில் போட்டு, முருங்கை பிஞ்சுகளை சிறிது சிறிதாக நீரை ஊற்றி கரைத்து வடிகட்டி, கரைசலையும் பருப்பு, தேங்காய் விழுது இவற்றையும் ரசம் தாளிக்கும் முன்பே ஆயத்தமாக வைத்திருந்து ரசம் இறக்கும் தறுவாயில் ஊற்றிக் கலக்கவும். இறக்கி வைத்து 1 டம்ளர் பால் ஊற்றவும்.

இதன் பயன் : ஆண்களுக்கு தாதுவை விருத்தி செய்யும். எலும்புகள், நரம்புகள் வலுவடையும், சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்கு நல்லது. எலும்பு முறிவு ஏற்பட்டிருக்கும் நோயாளிகளுக்கு தொடர்ந்து கொடுத்துவரவும். இதுபோல் 21 அல்லது 48 நாள் கொடுத்துவரவும். சாதாரணமாக அனைவரும் அடிக்கடி அதாவது வாரத்தில் இரண்டு மூன்றுதரம் சாப்பிடலாம்.

**[18]** கோவைக்காய் பொரியல்

கடுகு1 ஸ்பூன், கடலைபருப்பு 4 ஸ்பூன், கோவைக்காய் கால் கிலோ, துவரம் பருப்பு 25கிராம், தேங்காய் துருவல் கால்மூடி, சின்னவெங்காயம் அரிந்தது, மஞ்சள் பொடி அரை ஸ்பூன், கறிவேப்பிலை, மல்லித்தழை 1 கொத்து, கெட்டிதயிர் 1 கப், உப்பு, நல்லெண்ணெய் 20 கிராம், தக்காளி 2.

கோவைக்காயைநீரில் அலசி நீளத்தில் சிறியதாக அரிய வேண்டும். பருப்பை வேகவைத்துக் கொள்ள வேண்டும். காயை உப்பு, மஞ்சள், ஆகியவற்றுடன் வேக வைக்க வேண்டும். வாணலியில் எண்ணை ஊற்றிக் கடலைப் பருப்பை போட்டு சிவந்ததும் கடுகு, வெங்காயம் போட்டு வதக்க வேண்டும். பிறகு தக்காளியை நீளத்தில் அரிந்து போட்டு வதக்க வேண்டும். மல்லியை தட்டிப்போட்டு, கறிவேப்பிலை போட்டு வதக்கி வெந்த காயை போட்டுப் பருப்பையும் போட்டுக் கிளறி இறக்கி தயிர் ஊற்றி கலக்கி வைக்கவும்.

இதன் பயன் : பித்த தோஸங்கள் மாறும். இதன் காய்கள் கசப்பு சுவையுடையது. தினம் காலை நேரத்தில் பொரியலாகவோ கூட்டாகவோ சாப்பிட்டுவர சிறுநீரில் உள்ள இனிப்பை மாற்றி சிறுநீரகங்களுக்கு பலத்தைக் கொடுக்கும்.

**[19]** முசுமுசுக்கை இலை அடை

6 கைப்பியளவு முசுமுசுக்கை இலை, மிளகு அரை ஸ்பூன், வெங்காயம் பொடியாக நறுக்கியது கால் கப், உப்பு, புளுங்கல் அரிசி 100 கிலோ.

அதிகாலையில் அரிசியை சுத்தம் செய்து ஊற வைக்கவும். இலைகளை அலசிக் கொள்ளவும். வெங்காயத்தை தோலுரித்து, பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அரிசியை அம்மியில் வைத்து ரவை பதத்தில் அரைக்கும் போதே இலைகளையும் வைத்து அரைக்கவும். மிளகு, உப்பு இவற்றையும் அரைக்கவும். அரைத்த விழுதுடன் வெங்காயத்தைப் போடவும். மாவில் ஊற்றி தோசை மாவு பதத்திற்கு சற்று கெட்டியாக வைத்துக்கொண்டு தோசை கல்லில் ஒவ்வொன்றாக ஊற்றிச் சாபப்பிட வேண்டும். மூன்று நாள் சாப்பிட சளித்தொல்லை இருக்காது. சிறியவர், பெரியவர் யாரேனும் பயமின்றி, பத்தியமின்றி சாப்பிடலாம். இரண்டொரு தரம் வயிற்றுப் போக்கு போனால் சளி வெளியேறிவிடும்.

**[20]** ஆதொண்டைக்காய் மோர் வற்றல் (காத்தோட்டிக் காய்)

ஆதொண்டைக்காய், புளித்தமோர், உப்பு, மிளகுதூள் 20 கிராம், மஞ்சள் பொடி, வெந்தயம் 10 கிராம், பெருங்காயம் ஒரு துண்டு.

ஒரு சாடியில் மோரை ஊற்றி, உப்பு, மிளகு தூள், போட்டு ஆதொண்டைக்காய் அரித்து போடவேண்டும். மஞ்சள் பொடி, வெந்தயம், பெருங்காயம் இவற்றை வறுத்து பொடி செய்து போடவும். ஒருநாள் இரவுபகல் ஊறவிடவும். மறுநாள் வெயிலில் ஒரு பொலித்தீன் பேப்பரில் மோர் நீரை வடியவிட்டு காயப்போட்டு நன்கு காய்ந்ததும் ஒரு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும். மோர் சுண்டி ஈரப்பதம் இன்றி காய்ந்த பிறகு பாட்டிலில் வைத்துக் கொள்ளவும்.

இதன் பயன் : ரத்த அழுத்தத்துக்கு, சர்க்கரை நோய்க்கு உகந்தது.

## கர்ப்பகால உணவு

குழந்தை பிரசவித்த பெண்களின் பத்திய உணவில் மஞ்சள் சரக்கு அரைத்துக் கொடுப்பதன் மூலம் கர்பாசயத்துக்கு வலுவைக் கொடுப்பதோடு கர்பாசய கழிவுகளை வெளியேற்றி தாய்ப்பாலை அதிகம் சுரக்க செய்யும். கொத்தமல்லி, சீரகம், மிளகு, தேங்காய்ச்சொட்டு, சிறியளவு மஞ்சள் என்பவற்றை அம்மியிலிட்டு அரைத்து பின்னர் அதனை போதியளவு நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி சிறுக நறுக்கிய கத்தரிப் பிஞ்சுகளை இட்டு நன்கு வதங்கி வரும்போது அரைத்த சரக்குகளையும் தேவையான அளவு உப்பும் போட வேண்டும். சிறு இஞ்சித்துண்டு, வெங்காயம், உள்ளி என்பன தட்டிப்போட்டு இறக்கி சாற்றைக் குடிக்கக் கொடுப்பர். மிகுதியை உண்ணக்கொடுப்பார்கள்.

காயம் கொடுக்கும் வழக்கம் உண்டு. மஞ்சள் 1 துண்டு, $\frac{1}{2}$ சிரங்கை நற்சீரகம், வேர்க்கொம்பு (சிறிதளவு) என்பவற்றை பசுந்தாக அரைத்து பனங்கட்டியுடன் சேர்த்து உருட்டி கொடுப்பர். உடலை பொன்மயமாக்கி, நாற்றத்தை போக்கும் மஞ்சளால் புருடவசியமும், பசியும் உண்டாகும். தலைவலி, கபரோகம், வீக்கம், கடிவிடம் நீங்கும்.

இது சுற்றுப்புற சூழலில் உள்ள கிருமிகளை அகற்றுகின்றது. கப்பு மஞ்சள், கறி மஞ்சள் என இரு வகைகள் உண்டு. இவற்றின் கிழங்கை உலர்த்தி நல்லெண்ணெய்யில் பாகம் செய்தால் அது கப்பு மஞ்சள், சாணபாலில் வைப்பின் கறி மஞ்சள் என நூல்கள் கூறுகின்றன.

வெள்ளை சாரணை வேர்துண்டு, இஞ்சி சிறுதுண்டு, உள்ளி – 2 பல், பனங்கட்டி - சிறிதளவு, மஞ்சள் - ஒருதுண்டு.

உள்ளி, இஞ்சி இரண்டையும் சுட்டு தோல் நீக்கி வெள்ளைசாரணை வேர், மஞ்சளுடன் சேர்த்து பட்டுப் போல் அரைத்து 2.5 கிராம் உருண்டைகளாக உருட்டி பனங்கட்டியுடன் சேர்த்து 4 அல்லது 5 உருண்டை கொடுப்பார்கள்.

இது குழந்தை பிறந்தபின்பு 3 நாள் முதல் 5 நாட்களுக்கு தொடர்ச்சியாக கொடுக்கப்படும்.

பிரசவித்த பெண்களுக்கு சரக்கு அரைத்துக்கொடுக்கும் வழக்கம் உண்டு. இது கற்பாசயத்துக்கு வலுவைக் கொடுப்பதுடன், கற்பாசய கழிவுகளை வெளியேற்றுவதுடன் தாய்ப்பாலையும் அதிகம் சுரக்கச்செய்யும்.

கொத்தமல்லி - 25 கிராம் , நற்சீரகம் - 12.5 கிராம, மிளகு சிறிதளவு, தேங்காய்ச்சொட்டு - சிறுதுண்டு, மஞ்சள் - சிறுதுண்டு இவற்றை எடுத்து அம்மியிலிட்டு நன்றாக பட்டுப்போல் அரைத்து எடுத்து வைத்துக்கொண்டு வாணலியில் போதியளவு நல்லெண்ணெய் விட்டு சூடாக்கி சிறுக நறுக்கிய கத்தரிப் பிஞ்சுகளை போட்டு வெந்துவரும் வேளையில் உப்பும் சேர்க்கவும். சிறு இஞ்சித்துண்டு, வெங்காயம், உள்ளி என்பவற்றையும் இட்டு இறக்கி வைத்து குடிக்கக் கொடுப்பர். மிகுதியை சோற்றுடன் உண்ணக் கொடுப்பர். இது குழந்தை பிறந்த 3ஆவது நாளிலிருந்து 30 நாட்கள் வரை தினமும் கொடுப்பர்.

100 கிராம் கொத்தமல்லியில் உள்ள சத்து

100 கிராம் நற்சீரகத்தில் உள்ள சத்து

எனவே சரக்கை பாவித்து கறிசமைத்து பிரசவித்த பெண்கட்கு கொடுக்கும் போது தாயானவள் இழந்த குருதியை, உடல் வலிமையை மீள உற்பத்தி செய்ய இது உதவும். உள்ளியை கூடுதலாக காயச்சரக்கில் பாவிப்பதனால் தாய்ப்பால் சுரப்பு அதிகரிக்கும். உள்ளியில் கந்தகசத்து இருப்பதால் அது அழுகலகற்றி செய்கை உடையது. பிரசவத்துக்கு பின் புண்பாடுகளை ஆற்றும் ஓர் உணவாகும் பெரும்பாலும் காய சரக்கை பூப்பெய்த, பிரசவித்த பெண்களுக்கு கொடுக்கும் போது நல்லெண்ணெய் பிரதானமாக பயன்படும். இதில் "லினோலிக் அமிலம்", உயிர் சத்து A என்பன உண்டு. கொத்தமல்லி, சீரகத்தில் உள்ள உயிர் சத்து A அகத்துறிஞ்சலிலும் இது உதவுகின்றது. அவர்கள் இக்காலங்களில் தண்ணீர் பருகுவதை தவிர்ப்பதும் சிறந்த பலனை கொடுக்கும்.

சாரய ஊறல் என்ற பயன்பாடு ஓர்சில பிரதேச கிராம மக்களிடம் இன்றும் பழக்கத்தில் உள்ளது. இந்த காயசரக்குகளைப் பற்றி எமது சித்த மருத்துவ நூல்களில் கூறாவிடினும் அது மரபு வழியாக வந்த பாரம்பரிய முறையாக இன்றும் ஒரு சில மக்களிடம் வழக்கத்தில் உள்ளது.

| | **சாராய ஊறல் 1** | **சாராய ஊறல் 2** | |
|---|---|---|---|
| **சேரும் சரக்கு** | சாதிக்காய் | சுக்கு | |
| | கராம்பு | மிளகு | வால்மிளகு |
| | ஏலம் | திப்பிலி | மாயாக்காய் |
| | கறுவா | கடுக்காய் | அதிவிடயம் |
| | திப்பிலி | நெல்லி | சிற்றரத்தை |
| | வெந்தயம் | தான்றி | |
| | சீரகம் | நற்சீரகம் | |
| | இலவங்கம் | பெருஞ்சீரகம் | |
| | உள்ளி | வாய்விடங்கம் | |
| | கோட்டம் | கடுகுரோனி | |
| | மதுரம் | வெண்கோட்டம் | |
| | மல்லி | அக்கிரகாரம் | |
| | சிறுநாகம்பூ | கராம்பு | |
| | குங்குமப்பூ | ஏலம் | |
| | வால்மிளகு | கறுவா | |
| | கற்கடகசிங்கி | இலவங்கம் | |
| | சிறுதேக்கு | சாதிக்காய் | |
| | ஓமம் | லலுவாசி | |
| | மிளகு | திப்பிலி மூலம் | |
| | வாய்விடங்கம் லலுவாசி | குரோசாணி ஓமம் | |
| | | மஞ்சள் | |
| | | மதுரம், மல்லி | |

கர்ப்பமுற்ற பெண்களின் மனநிலை நல்ல நிலையில் இருத்தல் வேண்டும் என்ற கருத்தினடிப்படையில் வளைகாப்பு நிகழ்ச்சி நடாத்தப்படுகிறது.

கர்ப்பமுற்ற பெண்களுக்கு 'அஞ்சுபஞ்சவம்' காப்பு இடுதல் என்ற பழக்கமும் மக்களிடையே காணப்பட்டது. வேப்பங்காப்பிற்கு பிறகு அஞ்சுபஞ்சவம் காப்பு (ஜம்பொன்) என்ற காப்பைப் போடுவார்கள். இக்காப்பில் ஐவகை உலோகங்களும் கலந்திருக்கும். அவையாவன தங்கம், வெள்ளி, இரும்பு, செம்பு, பித்தளை. இந்த ஐந்து உலோகங்களும் கர்ப்பமுற்ற பெண்களின் உடலிற்கு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கொடுக்கும். கர்ப்பமுற்ற பெண்ணுக்கு வசம்பு வைத்துக் கட்டும் பழக்கம் காணப்படுகின்றது. வசம்பு பொதுவாக "பிள்ளைவளர்ப்பான்" என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. குழந்தைகளுக்கு எந்தநோய் வந்தாலும், நோய் வராமல் காக்கவும் வசம்பு பயன்படுகின்றது. வசம்பிற்கு கிருமிநாசினி மருத்துவத்தன்மை உண்டு. கருவிலிருக்கும் குழந்தையை நோய் தாக்குவதைத் தவிர்க்கவும் தாயை நோயிலிருந்து பாதுகாக்கவுமே தாய்க்கு வசம்பு கட்டப்படுகின்றது.

## முடிவும் கலந்துரையாடலும்

01. கஞ்சி, இலைக்கஞ்சி பிரயோகங்களில் இலை வகை, அரிசி, பயறு முதலானவைகளை சேர்த்துக்கொள்கின்றார்கள். இது ஓர் நிறையுணவாக அமைகின்றது. முழுத்தானியத்தை வேகவைத்து உண்பது சிறப்பம்சம். பாசிப்பயறை கோதுடன் சேர்கின்றோம். இலை வகைகளில் உயிர்ச் சத்துக்கள், கனியுப்புக்கள், நார்ச் சத்து அனைத்தும் அடங்குகின்றன.

02. எமது உணவில் இரு வகை நார்ப் பொருட்கள் அடங்குகின்றன.

    (1) மிக மென்மையான, உறிஞ்சும் தன்மையுடைய நார். அதாவது தானியத்தை வெளியுறையாக மூடியுள்ள தவிட்டுப்பகுதி. தானியத்தை சுத்திகரிக்கும்போது இவ் உறை தவிடாக அகற்றப்படும்.

    (2) கரடுமுரடான வகை நார் (coarse fibre) - காய்கறி, இலைக்கீரை, பழவகை, பனங்கிழங்கு, ஒடியல் ஆகியவை உதாரணம். எமது நாளாந்த உணவுகளில் இவை அடங்குதல் முக்கியம். இவை சரிவர எமக்கு கிடைப்பின் அதிகூடியளவு கலோரிகள் உள்ளெடுப்பதை தடுக்கலாம், கட்டுப்படுத்தலாம். உடற்பருமன், மலச்சிக்கல், தொற்றா நோய்கள் என்ற பேச்சுக்கு இடமில்லை.

" அற்றால் அளவறிந்து உண்க,
அஃதுடம்பு பெற்றான் நெடிதுய்க்கு மாறு" - திருக்குறள் 943

கருத்துரை - முன்னுண்டது அற்ற பின் உண்பதனையும் அளவாக உண்ண வேண்டும். அதுவே பெறுவதற்கரிய இந்த மானிட யாக்கையை காப்பாற்றும் வழி.

புலியூர்க் கேசிகன்.

ஆகவேதான் பெரும்பாலான பாரம்பரிய உணவுகளில் தானியவகைகள் கோதுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடதக்கது ஆகும்.

எம் உணவிலடங்கும் நார்ப்பொருட்கள் யாவும் இறுக்கமான கட்டமைப்பு கொண்டதாக இருப்பதை காணலாம். இதனால் உண்ணும் உணவு எது ஆயினும் மனிதனிலுள்ள நார்ப் பொருட்கள் சமிபாடு அடையா. இவற்றை நாம் போசணை கூறாக கருதுவதில்லை.

தாவர உணவில் உள்ள போசணைக்கூறுகள் யாவும் தடித்த நுண்மூடிக்குள் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இவை வாயில் மெல்லல், வயிற்றின் அமிலம் என்பவற்றால் உடைக்கப்படும். எனினும் மனிதன் உணவை பதப்படுத்தி உண்ணப்பழகியதால் , உணவில் உள்ள நார்மூடிகள் அகற்றப்பட்டு விடுகின்றன. இதுவே இன்றைய பிரச்சினைகளுக்கு காரணமாய் அமைகின்றது. அவ்வாறான பதப்படுத்திய உணவுகள் தற்போது ''சுத்திகரிக்கப்பட்ட காபோவைதரேற்றுகள்'' என அமைந்து விடுகின்றன. அனுசேப முறையில் நோக்கினால் இந்நார்கள் தாவரங்களின் உணவைப் பெறுவதற்கு பொறுப்பாக உள்ளன. இயற்கையில் காணும் எல்லா இனிப்புணவும் அதாவது பழங்கள், கிழங்குகளை மென்றுதான் உண்ணவேண்டும். ஏனெனில் அவற்றுள் நார்ப்பொருட்கள் உள்ளன.

- வாயினதும் வாயில் இருந்து சிறுகுடலுக்கு செல்லும் குழாயினதும் அசையும் நிலை.
- சிறகுடலும் வயிறும் பருத்தல்.
- திரவவிழைய பித்தப்பைகளில் (plasma choleocystolunin) இரத்த குளுக்கோசு நிலை உயர்தல்.
- இதனால் இன்சுலின் அதிகமாக சுரத்தல்.

மேலும்

- நார்கள் வாய், சிறுகுடலுக்கு செல்லும் குழாய்களினது அசைவை கூட்டும்.
- தவிட்டுடன் கூடிய அரிசி, குரக்கன், சோளம், திணை முதலியவற்றால் தயாரித்த உணவுகளை விழுங்க அதிகம் முயற்சிக்க வேண்டும்.
- நார் அதன் நிறையின் பன்மடங்கு நிறையுள்ள நீரை உறிஞ்சி உணவை பருமனாக்கும்.

முழுக்கோதுமை, தவிடுநீக்கிய அரிசி, தினை, வரகு, குரக்கன் முதலியவற்றுள் நார் இருப்பதால் மெல்ல அதிக நேரம் எடுக்கும். நார்கள் அடங்கிய எனைய உணவுகளுடன் காபோவைதரேற்று அடங்கிய உணவுகளை சேர்த்து உண்ணும் போது உட்கொள்ளும் விதத்தில் மாற்றம் ஏற்படும். நார்களுக்கு முக்கியமாக நான்கு செயற்பாடுகள் உள்ளன.

அ. இது உள்ளெடுக்கும் சக்திகளை கட்டுப்படுத்தும்

ஆ. காபோவைதரேற்று உறிஞ்சலையும், இன்சுலின் சுரப்பை கட்டுப்படுத்தும்.

இ. கொலஸ்ரோலில் உள்ள நீர்ப்பாய (serum) அளவை குறைக்கும்.

ஈ. முக்கியமாக பெருங்குடலின் சுகவாழ்வு ஏற்படுத்தி செயற்பாட்டை ஆளும் முக்கிய உணவுக் காரணி ஆகும்.

எனவே அன்றைய உணவு முறைகளில் நாரின் முக்கியத்தை உணர்ந்து அதற்கேற்ப கேழ்வரகுகூழ், ஒடியல்கூழ், கம்பரிசிகஞ்சி, தினைமா, வரகுகஞ்சி போன்ற நார்த் தன்மையான உணவு முறைகள் போதியளவு இடம்பெற்றுள்ளன.

நாரற்ற சமைத்த உணவுகளை எடுப்பதால் மலச்சிக்கல் உருவாகும். இதனால் சிரமத்தின் பின் சிறிதளவு மலம் வெளியேறும். இதனால் பெருங்குடலின் செயற்பாடு தடைப்படுவதால் உணவுக்கழிவு கீழ்நோக்கி அசைதல் மந்தமாகும். சிலவேளை பல நாள் வரை நீடிக்கும். பெருங்குடலில் பித்தப்பொருட்கள் நீண்ட நேரம் இருப்பின் புற்றுநோய் வர ஏதுவாகும். (Ref. ‘Diet and health’ Dr.P.T.De Silva P.7)

03. நல்லெண்ணெய் பாவனை அதிகளவில் உள்ளது. அதில் உயிர்ச்சத்து ஏ உண்டு. இதனால் கண்பார்வை பாதுகாக்கப்படுவதுடன் பலநோய்கள் ஏற்படாது தடுக்கப்படுகின்றது. இதில் முக்கிய கொழுப்பமிலமான linolic acid உண்டு. இது கர்ப்பப்பை வளர்ச்சிக்கு அவசியம்.

04. எமது பாரம்பரிய உணவுகளான கூழ், களி, கஞ்சி, புழுக்கொடியல் சேர்த்த சத்துமா என்பன மூத்தோர் உண்பதற்கு இலகுவான உணவுகளாகும். அவை இலகுவில் சமிபாடடையும். சத்துணவாகவும் அமையும்.

05. குங்குமப்பூ உண்பதால் இரத்தம் சுத்திகரிக்கப்படுகின்றது. பிரசவத்தின் பின்னர் கர்ப்பப்பையில் ஏற்படும் இரத்த போக்கினை நீக்க உதவும். ஆனால் 3 ஆம் மாதத்தின் பின்பே பயன்படுத்த வேண்டும். ஒரு வகையில் இது தாய், சேய் ஆரோக்கியத்தை பேணுவதிலும் உதவும். அத்துடன் பிரசவத்தையும் இலகுவாக்கும்.

06. பிரசவித்த பெண்களில் சரக்குக்கு பயன்படும் மரக்கறியில் முருங்கை பிஞ்சு, வாழை பிஞ்சு, அவரை பிஞ்சு, வெந்தயம், பெருங்காயம், உள்ளி என்பன அதிகம் இடம்பெறுகின்றன. முருங்கை பிஞ்சில் உயிர்ச்சத்து ஏ, கல்சியம் அதிகளவு உண்டு. எனவே பாலூட்டும் தாய்மாருக்கு பால் வழியாக கல்சியம் அதிகளவு குழந்தைக்கு செல்வதால் அதை ஈடுசெய்ய இது அவசியம்.

07. பூப்பெய்தும் காலம், கர்ப்ப காலத்தில் சிறுகுறிஞ்சா, விடத்தல், பொருத்துமான்கொடி என்பவற்றை சிவப்புப் பச்சை அரிசியுடன் அவித்து உண்ணும் வழக்கம் உண்டு. சிவப்புப் பச்சை அரிசியில் போமிக்கமிலம் இருப்பது குறிப்பிடதக்கது. இலை வகைகளை சேர்த்து இடிக்கும் போது மேலதிக குளுக்கோசும், கொழுப்பும் அகத்துறிஞ்சப்படுவது தடுக்கப்படும். ஆகவே இலை வகை உணவு மருத்துவரீதியில் ஏற்புடையதாகும்.

08. இன்றைய க.பொ.த சாதாரண தர, உயர்தர பாட விதானங்களில் மூலிகைகளை இனங்காணல், பாவனை, பயிர்ச்செய்கை என்பன செயன்முறை ரீதியாக உள்ளடக்கப்பட்டு அவர்கட்கு இயற்கை வாழ்வியலின் ஆரோக்கியத்தை கற்கைநெறிமூலம் முன்னெடுக்கச் செய்தல்.

09. பாடசாலைகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் மேற்படி உணவு முறைகளை தயாரித்து வழங்க ஏற்பாடு செய்தல்.

10. விதவைப் பெண்களுக்கு மேற்படி உணவுத் தயாரிப்பு முறைகளை விளக்கி அவர்கள் மூலம் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி தயாரித்து விநியோகித்தல். இதனால் அவர்கட்கு வருமானம் கிடைப்பதுடன் இயற்கை வளங்களான உணவு முறைகளும் மக்கள் மத்தியில் பிரபல்யமடையும்.

ஆரோக்கிய வாழ்வின் ரகசியம் இயற்கையான, எளிமையான வாழ்வியல் முறையே (simple life) ஆகும். எமது சமூக அமைப்பில் ஆடம்பரம் அதிகரிக்கும் போது நோய்கள் எம்மை தாக்குவது மலிந்திருப்பதை காணலாம்.

## உசாத்துணைநூல்கள்


01. Robert K. Murray, David A . Bender, Kathlean M .Botham, Peter .J. Kennelly, Viketor W. Rodwell, P.Anthony Well, Harper's illustrated Bio Chemistry, 28th edition, MC Graw- Hill companies, China

02. Malaiyarasari Sivaraaya, nadaraaya sivaraaya, Nutritive Value of food Items,; First edition, Health education maknals production unit Department of community medicine, faculty of Medicine, University of Jaffna, Sri Lanka, June 2006

03. The wealth of India, Raw materials Volume 1.A, 1985-National institude of scine communication & information resources CSIR, New Delhi, India,2003

04. கோ.அர்ச்சுணன், மருத்துவத்தில் காய் கனிகள், நீயூ செஞ்சுரி புக் கவுஸ் பிரைவேட் லிமிட்டெட்

ISBN 978-955-4918-00-9

9 789554 918009

Rs. 2000/=

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 011 2330195